த பா நி (க வெ) வரிசை எண—313

பொருளாதாரச் சிந்தனை வரலாறு

(படடபபடிபபிறகுரியது)

ஆசாயா
அ குழநதை பி ஏ (ஆனாஸ்),
தவிப பேராசிரியா, பொருளாதாரததுறை
மாநிலக கலலூரி, செனனை

தமிழநாடடுப பாடநூல
நிறுவனம

First Edition — April, 1972
T.N.T.B.S. (C.P.) No. 313

© Tamil Nadu Text Book Society

HISTORY OF ECONOMIC THOUGHT

A. KULANDAI

Net Price Rs. 7-25
(No discount)

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of Books and literature in regional languages at the University level, of Government of India in the Ministry of Education and Social Welfare.'

Printed by:
ANURADHA ACCHAGAM,
146, T. H. Road, Madras-21.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினோராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.) 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன 'பொருளாதாரச் சிந்தனை வரலாறு' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 313ஆவது வெளியீடாகும். இதுவரை 348 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநிலமொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முன்னுரை

பொருளாதாரச் சிந்தனை வரலாறு என்னும் இந் நூல், கிரேக்க நாட்டுத் தத்துவமேதையான பிளேடோவின் சிந்தனையில் தொடங்கி, இந் நூற்றுண்டின் தலை சிறந்த பொருளாதார அறிஞராக மதிக்கப்படும் ஜான் மேனார்டு கெயின்ஸின் கருத்துகளோடு முடிவடைகிறது. இவர்களிருவருக்குமிடையே எத்தனையோ அறிஞர்கள் அவரவர்கள் காலத்திற்கும் சூழ்நிலைக்குமேற்பப் பல்வேறு பொருளாதாரக் கருத்துகளை வெளியிட்டுள்ளனர். அவைகளனைத்தும் கடல் அலைகள் போல் ஒன்றோடொன்று மோதியும் பின்னியும் வளர்ச்சி பெற்றுள்ளன. அவற்றுள் நடைமுறைக்கொவ்வாத கருத்துகளும் உள்ளன. உலகின் போக்கினையே மாற்றியமைந்த சீரிய சிந்தனைகளும் ஒளிவிடுகின்றன. இவ்வாறாக, தன்மையிலும் செல்வாக்கிலும் மாறுபட்ட அக் கருத்துகளிடையே ஓரளவு ஒருமைப்பாட்டை நாம் காணலாம்.

அரசியலிலும் அறநெறியிலும் சிதறிக் காணப்பட்ட பொருளாதாரச் சிந்தனை என்னும் விதைகள், நாளடைவில் இயற்கை நெறியில் முளைத்து, தத்துவ இயலில் வளர்ந்து, உளவியலில் ஊக்கம் பெற்று, பொது நல நெறியிலும் அறிவியல் முறையிலும் விரிந்து, தருக்க ரீதியிலும் மனிதாபிமானத்திலும் முதிர்ச்சி பெற்று நல்ல பலன் தந்து வருகின்றன. இவைகளனைத்தையும் தெளிவாகவும் முறையாகவும் புரிந்துகொள்வது கடினம். எனவே, இதனை எளிதாக்கும் வகையில் ஒவ்வொரு பொருளாதாரச் சிந்தனைக் குழுவினரையும் தனித்தனியாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்குமுள்ள தொடர்பினை எடுத்துக்காட்ட முயன்றுள்ளேன். எனது இம் முயற்சி முதல் முயற்சியாதலால், எந்த அளவுக்கு அது வெற்றி பெருமென்பதை மதிப்பிடும் பொறுப்பை ஆசிரிய-மாணவ உலகிற்கே விட்டுவிடுகிறேன். இந் நூலில் இந்தியப் பொருளாதாரச் சிந்தனையையும் இறுதிப் பிரிவில் போதுமான அளவுக்கு விளக்கியுள்ளேன்.

இந் நூலை எழுதுவதற்கு நான் பயன்படுத்திய ஆங்கிலநூல்கள் பல. அவற்றையெல்லாம் இங்குக் குறிப்பிட இயலாத நிலையில், அவையனைத்திற்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன் என்று மட்டும் கூறிவிடுகிறேன்.

அ. குழந்தை

பொருளடக்கம்

தோற்றுவாய் பக்கம்

1. பொருளாதாரச் சிந்தனை வரலாற்றின் இயல்பும் முக்கியத்துவமும் ... 1

முதல் பிரிவு

பொருளாதார அறிவியல் தோன்றுமுன் இருந்த சிந்தனை ... 6

2. பண்டைக்காலக் கிரேக்க நாட்டுப் பொருளாதாரச் சிந்தனை ... 8
3. பண்டைக்கால ரோமானியச் சிந்தனை ... 24
4. இடைக்காலச் சிந்தனை ... 33
5. வணிக வாதம் ... 52
6. இயற்கை வாதம் ... 77

இரண்டாம் பிரிவு

பொருளாதார அறிவியல் வளர்ச்சி ... 98

7. ஆடம் ஸ்மித் ... 99
8. பயன்வழிக் கொள்கை ... 124
9. தாமஸ் ராபர்ட் மால்தஸ் ... 134
10. டேவிட் ரிக்கார்டோ ... 157
11. தொன்மைப் பொருளாதார மரபினர் ... 177
12. வருங்கால இன்பநோக்குடையோர் ... 200

மூன்றும் பிரிவு

தொன்மைப் பொருளாதார எதிர்ப்பு நூல்கள் ... 215

13. சுதந்திரவாத மறுப்பினர் ... 217
14. சிஸ்மாண்டி ... 227
15. சோஷியலிச வாதம்—இளம் பருவம் ... 241

16	கூட்டுச்சங்க சோஷியலிஸ்டுகள்	2ᴣ4
17	தேசியவாதம்	ˍ81
8	வரலாற்றுப்பாத்தக் குழுவினர்	298

நான்காம் பிரிவு

தொன்மைப் பொருளாதாரப் புனர்விளக்கம்		302
19	ஜே எஸ் மில்	303

ஐந்தாம் பிரிவு

சோஷியலிசவாதம்- புதிய பருவம்		324
20	அரசுசார் சோஷியலிசம்	32›
21	அறிவியல் சோஷியலிசம்	332
22	நவ-மார்க்ஸிசம்	360

ஆறும் பிரிவு

தொன்மைப் பொருளாதார மறுபரிசீலனை		376
23	இறுதிநிலைவாதம்	377

ஏழாம் பிரிவு

நவீனப் பொருளாதாரம்		395
24	தொன்மைப் பொருளாதார மறுமலர்ச்சி	397
25	நலப் பொருளாதாரம்	415
26	அமைப்புவாதப் பொருளாதாரம்	426
27	புதுப் பொருளாதாரம்	441

எட்டாம் பிரிவு

இந்தியப் பொருளாதாரச் சிந்தனை		464
28	பழங்காலச் சிந்தனை	465
29	இந்தியப் பொருளாதாரத் தோற்றம்	475
30.	காந்தியப் பொருளாதாரம்	488
Bibliography		498
கலைச்சொற்கள்		499

தோற்றுவாய்

1. பொருளாதாரச் சிந்தனை வரலாற்றின் இயல்பும் முக்கியத்துவமும்

மனிதன் உலகில் தோன்றிய நாளிலிருந்து அவனுடன் பொருளாதாரப் பிரச்சினைகளும் முளைத்துவிட்டன. எதை உண்பது? எப்படி உடுத்துவது? எங்கு உறைவது? என்ற பிரச்சினைகள்தாம் அவனது அடிப்படைப் பிரச்சினைகளாகும். இப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளில் அவன் அடைந்துள்ள முன்னேற்றமே, நாகரிக வாழ்வின் இலக்காகும். மனித வரலாறு தொடங்கிய காலத்திலிருந்தே பொருளாதாரச் சிந்தனை வரலாறும் தொடங்கிவிட்டது. அப்படியிருந்தும், ஆடம் ஸ்மித் காலம்வரை பொருளாதார அறிஞர் எவரும் இவ்வுலகில் தோன்றவில்லை என நினைக்கும்போது, அது வியப்பாக இருக்கிறது.

1766-ல் 'நாடுகளின் செல்வம்' என்னும் நூலின் வழியாகப் பொருளாதார இயலின் தந்தையெனப் போற்றப்பட்டு வருகிறார் ஆடம் ஸ்மித். அவருக்கு முன்பு எத்தனையோ தத்துவ ஞானிகள் இவ்வுலகில் தோன்றியுள்ளனர்; ஆயிரக்கணக்கான அரசியல் மேதைகள் இவ்வுலக அரங்கை அமைத்துள்ளனர்; கலைஞர்கள் என்றும், விஞ்ஞானிகள் என்றும் எத்தனையோபேர் மதிக்கப்பட்டுள்ளனர்; வரலாற்று அறிஞர்கள் பலர் உதயமாகியுள்ளனர். ஆனால், பொருளாதார மேதை என்று யாருமே தோன்றாதது வியப்பாக இருக்கலாம்; ஆனால் உண்மை.

18ஆம் நூற்றாண்டுவரை மக்களின் வாழ்க்கைமுறை அவரவர்களின் பரம்பரைப் பழக்கவழக்கங்களால்தாம் நிர்ணயிக்கப்பட்டது. தந்தையின் தொழிலைத்தான் மகன் செய்யவேண்டுமென்ற நம்பிக்கை இருந்துவந்தது. இதனால் பொருளாதார அறிவியல் தோன்றுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. ஒவ்வொரு மனிதனும் தனக்கு ஆதாயமான தொழிலைச் செய்தால்

தான் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்து, 'அங்காடி அமைப்பு' (market system) என்று ஒன்று தோன்றும். ஆனால், 18ஆம் நூற்றாண்டுவரை அப்படியில்லை. சந்தை என்ற பெயரில் பல இடங்களில் பொருள்கள் வாங்கப்பட்டதும், விற்கப்பட்டதும் உண்மைதான். ஆனால் 'சந்தை முறை' என்னும் பொருளாதார அமைப்பு அக் காலத்தில் தோன்றவில்லை. இலாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கம்தான் சந்தை அமைப்பை உருவாக்கு கிறது. ஆனால், பண்டைக்காலத்திலும், இடைக்காலத்திலும் இலாபம் பெறுவதற்காகத் தொழிலைச் செய்வது இழிவானதாய் மட்டுமன்றி, பாவச்செயலாயும் கருதப்பட்டது. ஒவ்வொருவரும் தத்தம் சமூக நிலையை அப்படியே பேணவேண்டுமென்றும், அதை உயர்த்தப் பாடுபடக்கூடாதென்றும் நம்பப்பட்ட காலம் அது. எனவே, அக்காலத்திய பொருளாதார உலகம் எவ்வித இயக்கமு மின்றி நிலையானதாய் அமைந்துவிட்டது. மறுமலர்ச்சி என்றும் சமயப்புரட்சி என்றும் தோன்றி, அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே ஒவ்வொரு அரசும் தத்தம் செல்வாக்கையும் அதிகாரத் தையும் விரிவாக்க எண்ணின. மக்களின் பொருளாதார நடவடிக் கைகள் விரிவாயின அதன் பின்னர்த்தான் பழங்காலக் கருத்துகள் மாறி, ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்தமான தொழிலைச் செய்ய முற்பட்டனர். பணம் திரட்டுவது பாவச் செயலன்று என்ற எண்ணம் தோன்றியது. எனவே, அதுவரை நிலையாயிருந்த பொருளாதார உலகம் வேகமாகச் சுழல ஆரம்பித்தது. அச் சுழலின் தன்மையையும், வேகத்தையும் மட்டுமின்றி அதன் விளைவுகளையும் ஆராயும் சூழ்நிலை ஏற்பட்டது. அதன்பின்னர்த்தான் பொருளாதார ஆய்விற்கும் பொருளாதார அறிஞர்கள் தோன்றுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது ஆடம் ஸ்மித் 14 அல்லது 15ஆம் நூற்றாண்டில் தோன்றியிருந்தால் உண்மையில் அவர் ஒரு பெரிய தத்துவ மேதையாக விளங்கியிருக்கக்கூடும். ஆனால், நிச்சயமாகப் பொருளா தார அறிஞராக அவர் புகழ்பெற்றிருக்க முடியாது எனச் சில அறிஞர்கள் கருதுவர்.

இவ்வாறாகப் பொருளாதார அறிவியல் வரலாறு 200 ஆண்டு களுக்கு முற்பட்டதெனினும், சிந்தனை வரலாறு மனிதவரலாற்றைப் போல் பழமையானதாகும். பண்டைக்காலத்திலும், இடைக்காலத் திலும் எத்தனையோ அறிஞர்களும் மேதைகளும் பொருளாதாரக் கருத்துகளை ஆராய்ந்தனர்; எனினும், அவர்களது ஆய்வு அறிவியல் ரீதியில் அமையாமல் அரசியல், ஒழுக்கநெறி ஆகிய வற்றின் அடிப்படையில் தோன்றியது. சான்றாக, பிளேட்டோவின் 'குடியரசில்' இலட்சிய அரசை உருவாக்கும் குறிக்கோள்தான் முக்கி யமாக அமைந்தது. அதை உருவாக்கும் எண்ணத்தோடுதான் 'வேலைப்பகுப்பை' அவர் விளக்கினார். அதேபோல் இடைக்காலத்திய

மேதையாக விளங்கிய தாமஸ் அக்வினஸ், அமர வாழ்வை அடைவதுதான் மனிதனின் குறிக்கோள் என நம்பினார். இந் நம்பிக்கையின் அடிப்படையில்தான் பணத்தைப்பற்றியும், வட்டியைப்பற்றியும் அவர் விவாதித்தார். அவரது விவாதம் தற்காலத்திற்குப் பொருந்தாதெனினும், இடைக்காலத்திற்குப் பொருத்தமானதாய் அமைந்தது. இவ்வாருகப் பொருளாதாரச் சிந்தனை நீண்ட கால வரலாருகும். அது, பொருளாதார அறிவியல் வரலாற்றைவிட விரிவானது

பொருளாதாரச் சிந்தனை வரலாறு, பொருளாதார வரலாற்ருேடு நெருங்கிய தொடர்புடையது. ஒரு சமுதாயத்திலுள்ள விவசாயம், தொழில்கள், போக்குவரத்து ஆகியவைபோன்ற பல்வேறு பொருளாதாரத் துறைகளையும், அவைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் பற்றிய ஆய்வே, பொருளாதார வரலாறு எனப்படும். இப் பொருளாதார வரலாறு மக்களின் கருத்துகளையும், கொள்கைகளையும் நிர்ணயிக்கவல்லது. பொருளாதார அமைப்பிற்கேற்பவே மக்களது சிந்தனை அமையும்; அதேசமயம் மக்களது எண்ணத்திற்கேற்பப் பொருளாதார அமைப்புமுறைகளை மாற்றவும் இயலும். எனவே, பொருளாதார வரலாற்றிற்கும், சிந்தனை வரலாற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது வெளிப்படை. இடம், பொருள், காலம் ஆகிய மூவகைச் சூழ்நிலைகளுக்குமேற்ப மக்களின் கருத்துகள் மாறுவதை நாம் அறிவோம். அச் சூழ்நிலையை விளக்குவதுதான் பொருளாதார வரலாறெனின், அவ் வரலாற்றின் பிரதிபலிப்பே சிந்தனை வரலாருகும்.

இதுவரை பொருளாதாரச் சிந்தனை வரலாற்றின் தன்மையைச் சுருக்கமாகக் கண்டோம். இனி, அவ் வரலாற்றைப் படிப்பதால் என்ன பயன்? என மாணவர்கள் வினவலாம். இதற்கு விடை அளிப்பது கடினமன்று.

இன்றைய பொருளாதாரக் கருத்துகளும், கொள்கைகளும் முற்றிலும் புதுமையானவையல்ல என்பதை நாம் அறிந்துகொள்வதற்குச் சிந்தனை வரலாறு துணைசெய்கிறது. சான்ருக, சமதர்மம், பணம், வட்டி ஆகியவைபற்றிய எண்ணங்கள் பழங்காலத்திலிருந்தே உருவாகிச் சூழ்நிலைக்கேற்ப மாறிமாறி வந்துள்ளன. இக் கருத்துகளனைத்தும் சமுதாயத்தின் கவனத்தை என்றும் கவர்ந்து வந்துள்ளன. எனவே, அவை அனைத்தும் முற்றிலும் புதிதானவையல்ல.

மேற்கூறிய விளக்கத்திலிருந்து பிறிதோர் உண்மையை நாம் காண்கின்ருேம். அதாவது, பொருளாதாரக் கருத்துகளையும், கொள்கைகளையும் அவை உருவான காலத்தைக் கொண்டு எடைபோடுவோமாயின், அவை அனைத்தும் சரியானவையாகவே

புலப்படும். இன்று தவறான கருத்துகளாக நாம் கருதுவது, ஒரு வேளை பழங்காலத்தில் சரியானவையாய் இருந்திருக்கக்கூடும். சான்றாக, இடைக்கால அறிஞர்கள் வட்டி வாங்குவதைத் தவறான தெனக் கருதினார்கள். இன்று அவ்வாறு நாம் எண்ணுவதில்லை. ஏனெனில், கடன்கொடுக்கும் பணத்திற்கு ஆக்கச்சக்தி இருப்பதாக நாம் அறிவோம். ஆனால், இடைக்காலத்தவர் உற்றார், உறவினர், நண்பர்களின் துயரைப் போக்கத்தான் கடன் கொடுத்து உதவினர். கடன் வாங்கித் தொழில் நடத்திச் சம்பாதிக்கும் பழக்கமில்லாத பழங்காலத்திலும், இடைக்காலத்திலும் வட்டி வாங்குவது இழிவான தாகக் கருதப்பட்டதில் வியப்பொன்றுமில்லை.

மேலும், இன்று எத்தனையோ பொருளாதாரக் கோட்பாடு களிலும், கொள்கைகளிலும் கருத்துவேறுபாடுகள் இருப்பதை நாம் அறிவோம். கொள்கைகள் என்பது கருத்துகளின் பிரதிபலிப்பே யாகும். பொருளாதாரக் கருத்துகளை நடைமுறையில் அமுல் படுத்துவதுதான் கொள்கை எனப்படும். எனவே, கருத்து களுக்கும், கொள்கைகளுக்கும் நிலையான தொடர்புள்ளதை நாம் புறக்கணிக்க இயலாது. இம் முறையில் காணும்போது, பழங்காலக் கொள்கைகளில் பல இன்றும் புத்துயிர் பெற்றுள்ளதை நாம் அறிவோம். சான்றாக, வணிகவாதிகளின் கொள்கைகளில் சில வற்றை, ஜான் மேனார்டு கெயின்ஸ் உலகப் பொருளாதார மந்தத் தின்போது வலியுறுத்தினார். எனவே, பொருளாதாரக் கருத்து களும், கொள்கைகளும் என்றும் மடிவதில்லை; மக்கிப்போவதுமில்லை. பல்வகையான உழைப்பைப்பற்றி அரிஸ்டாடில் கொண்டிருந்த எண்ணங்கள், இடைக்காலத்தவர் கடுவட்டி வாங்கும் பழக்கத்தைக் கண்டித்தமுறை, பிறநாட்டு வணிகம்பற்றி வணிகவாதிகள் கொண்டிருந்த கொள்கை, இயற்கைவாதிகள் உழவுத் தொழிலைப் போற்றியதன் நோக்கம், ரிக்கார்டோவின் குத்தகைக் கொள்கை ஆகியவையும் அவற்றிலிருந்து தோன்றிய பொருளாதாரக் கொள்கைகளும் இன்றும் நம்மோடு இருந்து வருகின்றன. எனவே, பொருளாதாரக் கொள்கைகளை நாம் வகுக்கும்போது கடந்த காலத்தில் அக் கொள்கைகள் எவ்வாறு அமுலாயின, அதனால் ஏற்பட்ட விளைவுகள் யாவை என்பதைப் புறக்கணிக்க இயலாது. சுருக்கமாகக் கூறவேண்டுமாயின், நாம் கொள்கைகளை வகுப் பதற்குப் பொருளாதாரச் சிந்தனை வரலாறு நமக்கு வழிகாட்டியாக அமைகிறது. எனவே, எந்தப் பொருளாதாரக் கருத்தும், கொள் கையும் முற்றிலும் சரியானவையென்றோ அல்லது தவறானவை என்றோ கூறமுடியாது. ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு நாட்டிற்குப் பொருந்தாத கொள்கை பிறிதொரு சந்தர்ப்பத்தில் வேறொரு நாட் டிற்குப் பொருத்தமானவையாயிருக்கக் கூடும்.

பொருளாதார அறிவியல் இன்று பல கிளைகளாக முளைத்து வளருவதை நாம் அறிவோம். அக் கிளைகளின் தன்மையை நாம் அறிய வேண்டுமாயின், பொருளாதார அறிவியலின் தன்மையையும் அதற்கும், பிற சமூக இயல்களுக்கும் உள்ள தொடர்பினையும் நன்கு உணர வேண்டும். ஒரு காலத்தில் அரசியலுக்கும் நெறியியலுக்கும் அடிமைப்பட்டிருந்த பொருளாதார இயல் இன்று சுதந்திரம் பெற்றுத் தன்னிச்சையாக ஓங்கி வளர்வதாகச் சிலர் கூறுவர். எனினும், பொருளாதார இயல் பிற சமூக இயல்களிலிருந்து முற்றிலும் பிரிந்துவிடவில்லை என்பதை நாம் உணரவேண்டும். சான்றாக, சில சமயங்களில் அழகுக்காக வென்று பண்டங்களை நாம் வாங்குகிறோம். அப்போது பொருளாதார இயல் அழகுக் கலையோடு (aesthetics) தொடர்புடையதாகிறது. வீண்செலவு செய்வது பொருளாதார இயலுக்குப் புறம்பானது மட்டுமன்று; அது தவறானதும்கூட. அப்போது அறநெறி இயலோடு, பொருளாதாரம் கலந்து விடுகிறது. பல சமயங்களில் பொருளாதார நடவடிக்கைகள், அரசியல் குறிக்கோளோடு மோதுவதும் உண்டு. இவ்வாறாக, பிற சமூக இயலைப் பொருளாதார அறிஞர்கள் புறக்கணிக்க இயலாதவராகின்றனர். எப்போது பொருளாதார இயல் பிற இயல்களுடன் இணைகின்றது, அல்லது பிணக்கத்தை உண்டு பண்ணுகிறது என்பதை அறிய விரும்பும் மாணவனுக்குப் பொருளாதாரச் சிந்தனை வரலாறு துணைசெய்யும்.

நவீனப் பொருளாதாரக் கோட்பாடுகளை முறையாகவும் முழுமையாகவும் அறிந்துகொள்வதற்குப் பொருளாதாரச் சிந்தனை வரலாறு பேருதவியாக அமைகிறது. ஒவ்வொரு கோட்பாடும் எந்தச் சூழ்நிலையில் உருவாகி, எப்படியெப்படி மாறுதல் அடைந்துள்ளது என்பதை அறிந்துகொள்ள விரும்புவோருக்குச் சிந்தனை வரலாறே வழிகாட்டியாக உள்ளது

இறுதியாக, பொருளாதார அறிவியல் என்பது வேறு; பொருளாதார அறிஞர்கள் வேறு என்ற பாகுபாடு முக்கியமானதாகும். இப் பாகுபாட்டைப் புரிந்துகொள்ளப் பொருளாதாரச் சிந்தனை வரலாறு துணைசெய்கிறது. பொருளாதார அறிவியலைப் பற்றியும், அவ் வியலின் தத்துவங்களைப் பற்றியும் வெவ்வேறு அபிப்பிராயங்கள் இருக்கக்கூடும். அம் மாறுபட்ட அபிப்பிராயங்கள் தோன்றக் காரணம், பொருளாதார இயலின் குறையல்ல; மாறாக, பொருளாதார அறிஞர்கள் வெவ்வேறு ஆய்வுமுறைகளைப் பின்பற்றி, மாறுபட்ட தத்துவங்களோடும், குறிக்கோளோடும் பொருளாதார இயலை ஆய்வதே முக்கியக் காரணமாகும்.

முதல் பிரிவு

பொருளாதார அறிவியல் தோன்றுமுன் இருந்த சிந்தனை

பண்டைக்காலப் பொருளாதாரக் கருத்துகள் அனைத்தும் அறிவியல் ரீதியில் வளரவில்லை. கிரேக்க நாட்டுப் பேரறிஞர்களான பிளேடோவும், அரிஸ்டாடிலும் பொருளாதாரக் கருத்துகளைப் பொதுவாகவே விவாதித்தனர். அரசியல், நெறியியல், சமூக நியதி ஆகியவற்றின் அடிப்படையில்தான் அவர்களது சிந்தனை வளர்ந்தது. பிளேடோ வரைந்த 'குடியரசு' என்ற நூலில் இலட்சிய அரசை உருவாக்கும் குறிக்கோளோடுதான் பொருளாதாரக் கருத்துகளை அவர் ஆராய்ந்தார். அரிஸ்டாடிலின் கருத்துகளோ, பண்டைக்கால கிரேக்க சமுதாயத்தின் எண்ண அலைகளைப் பிரதிபலிப்பதாக அமைந்தது

ரோமானிய சமுதாயம் பண்டைக் காலத்தில் அடிமை முறையை ஆணிவேராகக்கொண்டது. எனவே, பல்வேறு தொழில்களின் ஆக்கச் சக்தியைப் புறக்கணித்த ரோமானிய அறிஞர்கள், அத் தொழில்களின் அந்தஸ்தை யொட்டித்தான் அவற்றை எடைபோட்டனர். ரோமானியத் தத்துவ மேதைகள் தனியார் சொத்துரிமையை வலியுறுத்தினர். சட்ட நிபுணர்களோ சட்டயியலுக்கு அடிக்கல் நாட்டினர். பொருளாதார அறிவியல் தோன்றுவதற்கு அவர்கள் எவரும் வழிகாட்டவில்லை.

இடைக்காலம் முழுவதும் கத்தோலிக்கச் சமய போதனைதான் ஐரோப்பாவையே ஆட்டிவைத்தது எனலாம். ஐரோப்பியர் அனைவரும் கத்தோலிக்க மத போதனைகளையே தம் வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்தும் சித்தாந்தங்களாக மதித்தனர். இவ்வுலக வாழ்க்கை துயரக்கடலாக இருப்பினும், இறந்தபின் அமர வாழ்வு கிடைக்குமென நம்பி மனநிறைவு கொண்டனர். மறுவுலக வாழ்வையே குறிக்கோளாகக் கொண்டு பொருளாதாரக் கருத்து

களைக் கிறித்துவச் சமயத்தவர் போதித்தனர். எனவே, இடைக் காலத்தில் பொருளாதாரச் சிந்தனை, அறிவியல் ரீதியில் வளரமுடிய வில்லை.

இடைக்காலத்தை அடுத்த காலம் வணிகவாதக் காலமாகும் நிலமானிய முறை ஒழிந்து, கத்தோலிக்க சமயத்தின் செல்வாக்கு மங்கிய காலம் இது. இக் காலத்தில்தான் சமயப்புரட்சியும் மறு மலர்ச்சியும் தோன்றின. நவீனப் பேரரசுகள் ஏற்பட்ட காலமும், இதுதான். அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதும் இக்காலத்தில் தான். இக் காரணங்களால் உலக வாணிபம் விரிவடைந்தது. வாணிபத்தை விரிவாக்கிய நாடுகள் செல்வத்தைப் பெருக்கிச் செருக்குற்றன. இந்நிலையில் ஐரோப்பிய நாட்டவர் அனைவரும் அயல்நாட்டு வாணிபத்தில் ஏற்றுமதியைப் பெருக்கி, இறக்குமதி யைக் குறைத்துப் பொன்னையும், வெள்ளியையும் பெருக்கப் பிரயா சைப்பட்டனர். இப் பிரயாசையின் பிரதிபலிப்பாகத் தோன்றியது தான் வணிகவாதம். இவ் வணிகவாதம் சுமார் கி.பி. 1450 முதல் 1750 வரை செல்வாக்குப் பெற்றிருந்தது. இக் காலத்தையே பொருளாதாரச் சிந்தனை வரலாற்றின் தொடக்கக்காலமாகக் கருது வர் சிலர்.

18ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஃபிரான்ஸ் நாட்டில் வணிக வாதத்திற்கு எதிராக இயற்கை வாதம் தோன்றியது. டாக்டர் குவெஸ்னேயின் தலைமையில் தோன்றிய இயற்கைவாதிகள் இயற்கை நியதியையும் விதிகளையும் ஆதாரமாகக் கொண்டு பொரு ளாதாரக் கருத்துகளையும் கொள்கைகளையும் வகுத்தனர். விவசாயத் தொழிலை உயர்த்தி, வணிகத்தையும்,பிறதொழில்களையும் பயனற்றவையென வாதித்தனர். பொருளாதார அமைப்பை அறிவியல் ரீதியில் விளக்கிய பெருமை இயற்கைவாதிகளையே சேரும். இவர்களைப் பொருளாதார இயலின் தந்தையர் என்று கூடச் சிலர் பாராட்டுவர். ஆனால், இயற்கைவாதிகளைப் பொரு ளாதார இயலின் முன்னோடிகளாகக் கருதுவதே மரபு.

2. பண்டைக்காலக் கிரேக்கநாட்டுப் பொருளாதாரச் சிந்தனை

பொருளாதாரக் கருத்துகளைத் திட்டவட்டமாக முதன்முதலில் வெளியிட்டவர்கள் கிரேக்க அறிஞர்களே. பொருளாதாரச் சிந்தனை வரலாறு கிரேக்கநாட்டில்தான் தோன்றியது எனலாம். பொருளாதாரக் கோட்பாடு என்றுவகையில் அக் கருத்துகள் அமையவில்லை; எனினும், பொருளாதாரக் கருத்துகளாகவே அவை மலர்ந்தன. பழங்காலச் சிந்தனை வளர்ச்சிக்கு ஏதன்ஸ் மாநகரம் தான் சிறப்பிடமாக இருந்தது. எனினும், பொருளாதாரக் கருத்துகள் அங்குக் கோட்பாட்டு வடிவில் உருவாகவில்லை. பல துறைகளில் கிரேக்க நாடு வழிகாட்டியாக இருந்தபோதிலும், பொருளாதாரக் கோட்பாட்டளவில் அந் நாடு மிளிர்ந்தது என்று சொல்வதற்கில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, பண்டைக்காலத்தில் அரசுதான் முழுமையானதொரு நிறுவனமாகக் கருதப்பட்டது. தனி மனிதனுக்கும், குடிமகனுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லாதிருந்தது. அரசியலும், சமயமும் இணைக்கப்பட்டிருந்தன. ஒழுக்க இயலும், அரசியலும் ஒன்றோடொன்று பின்னிக் கிடந்தன. பொருளாதாரத் துறையை அறவே ஒதுக்கிப் புறக்கணிக்க முடியவில்லை. ஒழுக்க இயலின் ஓர் அங்கமாக அது கருதப்பட்டது.

கிரேக்கநாட்டு அறிஞர்கள் பொருளாதாரத்தை ஒழுக்க இயலின் பணிப்பெண்ணாகவே கருதினர். எனவே, பொருளாதாரம் தனிப்பட்டதோர் அறிவியலாக வளர்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. பொருளாதாரக் கருத்துகள் அரசியல், ஒழுக்க இயல் ஆகியவற்றின் கண்ணோட்டத்திலிருந்தே வெளித்தோன்றின.

பொருளாதாரக் கோட்பாடு தோன்றாததற்கு மற்றொரு காரணம் உண்டு. பண்டைக்காலக் கிரேக்க நாட்டில் மக்கள் பல இனங்களாகப் பாகுபடுத்தப்பட்டனர். ஏதன்ஸ் மாநகரத்தில் கூட இப் பாகுபாடு இருந்தது. அரசாட்சியின் அமைப்பே அடிமை

களின் அடித்தளத்தில் உருவாகியிருந்தது. அடிமைகள் இல்லையேல் பண்டைக்கால அரசே இல்லையெனலாம். சாதாரண வேலையை இழிவாகக் கருதிய கிரேக்கர்கள் அவ் வேலையைச் செய்வதற்கென அடிமைகளை அமர்த்தினர். வேலை என்பது அடிமைகளின் சின்னம் எனக் கருதப்பட்ட போதிலும், வேளாண்மைமட்டும் போற்றற்குரிய தொழிலாக மதிக்கப்பட்டது.

பிளேட்டோ (Plato)

கிரேக்க நாட்டுப் பொருளாதாரச் சிந்தனைகளைக் கோவையாகத் தொகுத்தளித்தவரே பிளேட்டோதான். அவர் வரைந்த நூல்களில் 'குடியரசு', (The Republic) 'அரசியல் மேதை', (The Statesman), 'நியதிகள்' (The Laws) ஆகிய மூன்றும் முக்கியமானவை. இந் நூல்களின் தலைப்புகளைக்கொண்டே பிளேட்டோ அரசியலில்தான் அதிக அக்கறை கொண்டிருந்தார் என அறிந்து கொள்ளலாம். அரசியல் அமைப்பையும், நியதியையும் வலியுறுத்தும் வேளையில்தான் பொருளாதாரக் கருத்துகள் அங்குமிங்குமாக ஆராயப்பட்டன. எனவே, ஒழுக்கம், அரசியல் ஆகியவற்றின் உட்பிரிவாகவே பொருளாதாரக் கொள்கைகள் கருதப்பட்டன. குடியரசு என்னும் நூல் அரசியல் வேதாந்தமாகும். இந் நூலில் தான் பிளேட்டோவின் பொருளாதாரக் கருத்துகள் அதிகமாக உள்ளன. நியதிகள் என்ற நூலிலும் அவரது கருத்துகளை ஓரளவு காணலாம்.

அரசின் தோற்றம்—பொருளாதார விளக்கம்

இலட்சிய அரசை உருவாக்குவதே பிளேட்டோவின் குறிக்கோளாகும். அவ்வரசு எவ்வாறு தோன்றியது என்பதை விளக்கும் போது, பொருளாதாரக் காரணங்களையே காட்டுகிறார் பிளேட்டோ. அரசு தோன்றுவதற்கு மூலகாரணமே பொருளாதாரம்தான் என்பதைப் பிளேட்டோ பின்வருமாறு வலியுறுத்துகிறார். 'மனிதனுக்குப் பல தேவைகள் உள்ளன. எந்த மனிதனும் தன் தேவைகளனைத்தையும் தானே நிறைவுசெய்ய முடியாது. எனவே, மனிதனின் தேவைகளை நிறைவேற்றும் அவசியத்தால்தான் அரசு தோன்றுகிறது.' மனிதனுக்குப் பல தேவைகள் இருக்கின்ற காரணத்தால் அவற்றை நிறைவு செய்வதற்குப் பலர் தேவைப் படுகின்றனர். ஒவ்வொரு தேவையையும் நிறைவு செய்யப் பிறர் உதவியை நாடும்போது, அனைவரும் ஒருவரையொருவர் சார்ந்து வாழவேண்டியுள்ளது. இவ்வாறு ஒன்றாக வாழும் மக்களைக் கொண்டதே அரசு என்கிறார் பிளேட்டோ. அரசு தோன்றியதற்குப் பிற எந்தக் காரணத்தையும் கற்பனைகூடச் செய்ய இயலாதென் கிறார் பிளேட்டோ. இவ் விளக்கம் பொருளாதார ஆய்வு வளர்ச்சிக்கு

முக்கியமானவொரு வழிகாட்டியாக அமைகிறதென்றால், மிகை யாகாது. பிளேட்டோவின் அரசியல் சிந்தனையே பொருளாதார விளக்கத்தை ஆதாரமாகக் கொண்டதெனலாம்.

வேலைப் பகுப்பு (Division of Labour)

மனிதனின் அடிப்படைத் தேவைகளை ஆராய்ந்த பின்னர், வேலைப் பகுப்பை விளக்க முற்படுகிறார் பிளேட்டோ. உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றுமே மனிதனின் அடிப்படைத் தேவைகள். இவ் வடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்ய உழவன், நெசவாளி, கட்டடத் தொழிலாளி ஆகிய மூன்று பேராவது வேண்டும். உழவர்களுக்கு உதவிபுரியத் தச்சர்களும், கொல்லர்களும் தேவை. உற்பத்தியான பண்டங்களைப் பரிவர்த்தனை செய்வதற்கு வணிகர் அவசியம். எந்த நாடும் சுய நிறைவுள்ளதாக இருப்பதில்லை. எனவே, பிறநாட்டு வணிகம் இன்றியமையாததாகிறது. இதற்கு மாலுமிகளும், பிறநாட்டுடன் வர்த்தகத் தொடர்பு கொள்வோரும் தோன்றுகின்றனர். இவ்வாறாக, ஒவ்வொரு பணியையும் மேற்கொள்வதற்கு, அப் பணியிலேயே தேர்ச்சிபெற்ற பலர் நாட்டிற்குத் தேவைப்படுகின்றனர். ஒவ்வொருவரும் ஏதாவதொரு வேலையில் மட்டுமே இயல்பான நாட்டமும், திறமையும் கொண்டவராக இருக்கமுடியும் என்பது பிளேட்டோவின் நம்பிக்கை. எனவே, அவ் வேலையை மட்டுமே அவரவர் செய்வது நல்லது என்பதை வலியுறுத்துகிறார். இவ்வாறாக, வேலைப் பகுப்பு இரண்டு முக்கியமான காரணங்களுக்காக விளக்கப்படுகிறது. ஒன்று, மனிதனுக்கு மனிதன் திறமையிலும் நாட்டத்திலும் வேறுபாடு உள்ளவன். எல்லோருக்கும் ஒரேவிதமான திறனை இயற்கை என்றுமே கொடுப்பதில்லை. இரண்டாவது, தன் இயல்புக்கேற்ற தொழிலைமட்டும் ஒருவன் உரிய நேரத்தில் செய்தால் மிக எளிதாகப் பண்டங்களை உற்பத்திசெய்ய முடியும்; அதோடு, தரமான பண்டங்களை உற்பத்தி செய்வதற்கும் வாய்ப்பு உண்டு என்கிறார் பிளேட்டோ. வேலைப் பகுப்பின் தன்மையைப் பொறுத்தே அங்காடியின் அளவு அமையும் என்பதும், வேலைப்பகுப்பு முறையாக நடைபெறவேண்டுமாயின், நகரம் பெரியதாக இருக்க வேண்டுமென்பதும் பிளேட்டோவின் எண்ணம். பிளேட்டோவின் 'குடியரசு' நூலை நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், கிரேக்க நாட்டிலிருந்த சமூகப்பாகுபாட்டினை ஆதரித்துப் பேசும் வகையில் தான் வேலைப்பகுப்புக் கொள்கையை பிளேட்டோ வலியுறுத்தினார் என்பது தெளிவாகும்.

சமூகக் கண்ணோட்டம்

வேலைப்பகுப்பின் நலன்களை விளக்கும்போது, தனிமனிதனை விடச் சமூகம்தான் முக்கியமென்ற எண்ணத்தில் பிளேட்டோ

வர்ணிக்கிறார். சமூக அமைப்பும் ஒற்றுமையுமே பிளேட்டோவின் கவனத்தைக் கவர்ந்தன. இருப்பினும், தனிமனிதனின் அக்கறைகளைப் பிளேட்டோ புறக்கணித்துவிடவில்லை. தனிமனிதன் அரசின் குடிமகனாகவே கருதப்பட்டான். எந்தக் குடிமகனும் அரசின் துணையால்தான் முன்னேற்றம் காண முடியும் என்பது பிளேட்டோவின் நம்பிக்கை. தான் முன்னேற்றம் அடைவதன் வாயிலாக அரசையும் முன்னேற்றுவதே குடிமகனின் கடமை என்கிறார் பிளேட்டோ. எனவே, மனிதனின் குறிக்கோள் அரசின் முன்னேற்றம்தான் என்று அடித்துக்கூறி, தனிமனிதனைவிட அரசே முக்கியமானதென்பதை பிளேட்டோ வலியுறுத்துகிறார். அரசின் வாயிலாகத்தான் மனிதன் நாகரிகமடைய முடியும் என்பது பிளேட்டோவின் கருத்து. இதை விளக்குவதற்கு இது தகுந்த இடமன்று.

மக்கள்தொகையும் வாரிசுரிமையும்

பிளேட்டோ காணும் இலட்சிய சமுதாயத்தில் மக்கள்தொகை ஒழுங்குபடுத்தப்படும் வழிவகைகளையும், வாரிசுரிமைச் சட்டதிட்டங்களையும் நாம் காணலாம். அவர் கூறும் திட்டங்களும், வழிவகைகளும் வியப்புக்குரியன. சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட அளவு நிலம் இருக்கவேண்டும். குடும்பத்திலுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் நிலத்தைப் பிரித்துக்கொடுக்கக் கூடாது. மாறாக, ஒரு பிள்ளைக்குமட்டுமே நிலத்தைக் கொடுக்கவேண்டும் பிள்ளைகளே இல்லாத குடும்பத்தினர் யாரையாவது தத்துப்பிள்ளையாக்கி அப் பிள்ளைக்குமட்டும் நிலச்சொத்தை வழங்க வேண்டும். ஆண்பிள்ளை இல்லாத பெற்றோர், தம் பெண் குழந்தைக்குத் திருமணம் செய்து வைத்து, மருமகனுக்கே நிலத்தை எழுதி வைக்கவேண்டும். இவ்வாறாக, குடும்ப நிலமனைத்தும் பங்கிடப்பட்டுச் சிதறாமலிருப்பதற்கு ஒரு மகனுக்கே அந் நிலமனைத்தையும் வழங்குவதுதான் சிறந்ததெனப் பிளேட்டோ கருதினார். பெற்றோர்கள் தங்கள் இச்சைப்படி நிலத்தைப் பகிர்ந்தளிக்கும் வழக்கம் கிரேக்க நாட்டில் இருந்து வந்தது. அப் பழக்க வழக்கங்களையெல்லாம் கண்டிக்கும் வகையில் பிளேட்டோவின் வாரிசுரிமைத் திட்டம் அமைந்தது. பிளேட்டோவின் இத் திட்டப்படி, இலத்தீன் அமெரிக்காவில் மூத்த மகனுக்கே குடும்பச் சொத்துச் சேரும் வகையில் இன்று சட்டம் இருப்பது குறிப்பிடத் தக்கது.

குடும்ப நிலமனைத்தும் ஒரு மகனுக்கே சென்றுவிட்டால் மற்றவர்கள் கதி என்னாவது என்பதை ஆயும் நிலையில் பிளேட்டோ மக்கள்தொகையை ஒழுங்குபடுத்தும் பிரச்சினையில் ஈடுபடுகிறார். சமுதாய நிலையைப் பேணிக்காப்பதற்கு மக்கள்தொகையை ஒழுங்குபடுத்துதல் அவசியம். பிளேட்டோவின் இலட்சிய அரசில் 5040 குடிமக்கள்தான் இருக்கவேண்டும். மக்கள்தொகை

5040-க்குக் குறைவாக இருந்தால், குழந்தை பெறும் பெற்றோர் களுக்குப் பரிசுகள் வழங்கி மக்களின் தொகையைப் பெருக்க வேண்டும் அதிகமாக இருந்தால் அதிகப்படியாக உள்ள மக்களைக் குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பவேண்டும் இவ்வாறாக, அரசின் மக்கள் தொகை பெருகாமலும், குறையாமலும் இருப்பதற்கான வழிவகை களைப் பிளேட்டோ கூறுகிறார் அரசின் மக்கள்தொகை ஏன் 5040 ஆக இருக்கவேண்டும் என்று பிளேட்டோ விரும்பினார்? இதற்கு விளக்கம் தருவது கடினம் மக்கள் ஒருவரையொருவர் நன்கு தெரிந்துகொண்டிருக்க வேண்டுமென்பதற்காக இருக்கலாம் மிகப் பெரிய அரசாயிருந்தால் இது கடினம் அல்லது அரசின் நிர்வாகக் காரியங்களுக்கு 5040 குடிமக்கள் இருந்ததலே சிறந்ததெனப் பிளேட்டோ விரும்பியிருக்கலாம் ஏனெனில், இந்த 5040 எண்ணைப் பத்துவரை எந்த எண்ணாலும் வகுக்க முடியும்

பிளேட்டோவின் பொதுவுடைமை

இலட்சிய அரசை உருவாக்கிய பிளேட்டோ பொதுவுடைமைக்கு முக்கியத்துவம் தந்து அதை ஆதரித்துப் பேசுவது குறிப்பிடத் தக்கது பிளேட்டோ வகுத்த பொதுவுடைமையின் அம்சங்களை அறிந்துகொள்ள வேண்டுமாயின், அதை எதற்காக வகுத்தார்? யாருக்காக உருவாக்கினார்? என்பதைத் தெரிந்துகொள்ளல் அவசியம் அரசானது விரிவடையும்போது வேலைப்பகுப்பு எவ்வாறு அமுலாக்கப்பட்டுப் பல பணியாளர்களைத் தோற்றுவிக்கிறது என்பதை ஏற்கெனவே கண்டோம் அவ்வாறு விரிவடையும்போது அரசு முதிர்ச்சியடைந்துவிட்டதெனக் கொள்ளலாம் முதிர்ச்சி பெற்றுள்ள அரசை முறையாக ஆட்சிசெய்வதற்கு ஆட்சியாளர் தேவை இவர்கள் நாட்டை ஆள்வதையன்றி வேறெந்தத் தொழிலையும் செய்யக்கூடாது ஏனெனில் எந்த மனிதனும் பல காரியங்களை முறையாகச் செய்து சிறப்புப்பெற இயலாது எனவே ஆட்சியாளர்களை மிகக் கவனத்துடன் தேர்ந்தெடுக்க வேண்டும் அவர்களுக்குச் சிறந்த கல்வியையும் கொடுக்க வேண்டும் முரணான சில பண்புகளை அவர்கள் கொள்ள வேண்டும் பகைவர்க ளிடம் பகைமையும், நண்பர்களிடம் சாந்தமும் உள்ளவர்களாயிருத் தல் அவசியம் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, பிறர் பொருள் களுக்கு ஆசைப்படாதவர்களாய்த் துறவற வாழ்க்கையை மேற் கொள்ளவேண்டும் அவ்வாறின்றி, தங்களுக்கெனச் சொந்த நிலம் வீடு, சொத்து என்று அவர்கள் விரும்பினால், தங்கள் சொத்தைப் பற்றித்தான் கவலைகொள்வார்களேயன்றி நாட்டின் நல்லாட்சியைப் பற்றி அக்கறைகொள்ளமாட்டார்கள் குடிமக்களின் நண்பர்களாக இருப்பதற்குப் பதிலாக அவர்களின் விரோதிகளாகவும் கொடுங் கோலராகவும் ஆகிவிடலாம்

எனவே, பொதுவுடைமை என்பது ஆட்சியாளர்களுக்கு மட்டும் தீட்டப்பட்ட கொள்கையாகும். இவர்கள் மிகக் கட்டுப் பாட்டுடன் வாழவேண்டும் போர்வீரர்களைப்போல் முகாமில் வாழ்வது சிறந்தது. எனவே, இதை முகாம் பொதுவுடைமை என்று கூறலாம். பிளேட்டோவின் குடியரசை முறையாகப் படித்தால் ஆட்சியாளர்களுக்கு மட்டுமே பொதுவுடைமையை நிர்ணயித்துள்ளார் என்பது புலனாகும். ஆட்சியாளர்கள் பொது வுடைமைத் தத்துவத்தைக் கைவிட்டுவிட்டால் அவர்கள் இல்லறத் தார்களாயும் சாதாரண விவசாயிகளாயும் மாறிவிடுவர் என்கிறார் பிளேட்டோ.

அடுத்து, பிளேட்டோ எந்த நோக்கத்திற்காக ஆட்சியாளர்க ளுக்குப் பொதுவுடைமையை வலியுறுத்தினார் என்பதை ஆயு மிடத்து, ஏனைய பொதுவுடைமைவாதிகளின் குறிக்கோளிலிருந்து பிளேட்டோ முற்றிலும் வேறுபட்டவர் என்பது தெரியவரும். சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளையும் அநீதிகளையும் நீக்கும் பொருட்டே பொதுவுடைமைக் கூக்குரல் எழுகிறது என்பதை நாம் அறிவோம். ஆனால், பிளேட்டோவோ இதற்காகப் பொதுவுடை மையை வகுக்கவில்லை. ஆட்சியாளர்கள் பொதுவுடைமைத் தத்து வத்தில் வாழ்ந்தால்தான் ஆட்சிப்பொறுப்பைச் சிறப்பாக ஏற்க முடியும். ஆட்சி செய்வது ஒரு பெரும் கலை; புனிதமானது; எனவே, உலக ஆசாபாசங்களையெல்லாம் துறந்து துறவிகள் போல் இக்கலையை வளர்க்கவேண்டும். இதிலிருந்து பிளேட்டோவின் பொதுவுடைமை அரசியல் நோக்கத்திற்காக நீதியின் அடிப்படை யில் வலியுறுத்தப்படுகிறது என்பது தெளிவு. பிற பொதுவுடைமை வாதிகளோ, பொருளாதார நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள். பிளேட்டோ கூறும் பொதுவுடைமை ரோமன் கத்தோலிக்கக் குருக்கள் கடைப்பிடிக்கவேண்டிய துறவறத்தை ஒத்துள்ளது. பிளேட்டோவின் குறிக்கோள், அனைவருக்கும் சம வுரிமையையும் வாய்ப்பையும் அளிப்பதன்று; மாறாக, ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் சிறந்த குடிமக்களுக்குக் கட்டுப்பாடுகளையும் ஒழுங்கையும் அமுல்படுத்துவதாகும்.

'குடியரசு' கூறும் போதனைகளுக்குத் துணையாகவே 'நியதிகள்' என்னும் நூலை வடித்தார் பிளேட்டோ. ஆனால், இவ்விரண்டு நூல் களுக்கும் வேறுபாடு உண்டு. தம் இளமைத் துடிப்புடன் பிளேட்டோ குடியரசைப் புனைந்தார். ஆனால் நியதிகளையோ வாலிப முறுக்கு நலிந்த முதுபெருங் கிழப்பருவத்தில் வரைந்தார். எனினும், இந் நூலிலும் பிளேட்டோ தம் பழைய கொள்கைகளையே வலியுறுத்துகிறார். 'நண்பர்கள் என்றால் எல்லாவற்றையும் பொது வாக அனுபவிக்கவேண்டும்' என்ற பழமொழிக்கேற்ப அரசு

அமையவேண்டும் என்கிறார். பிளேடோவின் பொதுவுடைமைக் கொள்கையை மேலும் விரிவாக ஆராய இது தகுந்த இடமன்று.

வருமான ஏற்றத்தாழ்வுகள்

செல்வம் சேர்த்துவைக்கும் பழக்கத்தை கிரேக்க அறிஞர்கள் வெறுத்தனர். ஆனால் வறுமையைப் போற்றவில்லை. அளவுக்கு மிஞ்சிச் செல்வம் திரட்டுவதோ, வறுமையில் உழல்வதோ தீமையையே பயக்கும் என வலியுறுத்தினர். செல்வக்கொழிப்பும் வறுமை வாட்டமுமின்றி நடுத்தரமாக வாழ்வதையே விரும்பினர். அளவுக்கு மிஞ்சிச் செல்வம் திரட்டினால் கெடுதலே விளையும் என்பதைப் பிளேடோ வலியுறுத்தினார். செல்வம் சேரச்சேர மனிதனின் திறமை குன்றும் என்று பிளேடோ வாதாடினார். உரையாடலின் வாயிலாக இக் கருத்தைப் பின்வருமாறு விளக்குகிறார் பிளேடோ:

'மனிதனின் கைத்திறன் நலிந்துபோக இரண்டு காரணங்கள் உள்ளன.'

'அவை யாவை?'

'செல்வமும் வறுமையும்தாம் என்று சொல்வேன்.'

'எப்படி?'

'ஒரு குயவன் பணக்காரனாகிவிட்டால், அவன் கஷ்டப்பட்டுத் தன் வேலையைச் செய்வானா?'

'நிச்சயமாக இல்லை.'

'தன் வேலையில் அக்கறைகொள்ளாது அவன் சோம்பலைத்தான் வளர்ப்பான்.'

'அதன் விளைவாக அவன் மோசமான குயவனாகி விடுவான்.'

'மாறாக, அவனிடம் பணமே இல்லையென்றால், மண்பாண்டம் செய்யத் தேவையான கருவிகளைக்கூட அவனால் வாங்க இயலாது. அப்போது அவனாலும் திறமையாக வேலைசெய்ய முடியாது; தன் மகனுக்கும் அக் கலையை நன்றாகச் சொல்லித்தர முடியாது.

மிதமிஞ்சிய செல்வம் கேட்டைத்தான் விளைவிக்கும் என்பதற்கு பிறிதொரு விளக்கத்தையும் தருகிறார் பிளேடோ. இது ஒழுக்கத் தொடர்புடையதாகும். கொழுத்த பணமுடையோர் நிம்மதியாய் வாழமுடியாது. ஏனெனில், அவர்கள் நெறியான வாழ்க்கையைக் கடைப்பிடிக்க முடியாது. பணத்தைத் தவறான வழிகளில்தாம் சம்பாதிப்பர்; அல்லது கேடான முறையில்தாம் செலவிடுவர் என்று கூறுகிறார் பிளேடோ. இது உண்மைதானா என்பதை ஆராய இது இடமன்று.

கட்டுப்பாடுகள்

தன் 'நியதிகள்' என்னும் நூலில் பிளேடோ பல்வேறு கட்டுப்பாடுகளை வலியுறுத்துகிறார். அவைகளில் சில சமூகக் கட்டுப்பாடுகள்; வேறுபல பொருளாதாரக் கட்டுப்பாடுகள். சமூகக் கட்டுப்பாடுகளில், குடிமகன் எவனும் கைத்தொழில் செய்யக்கூடாது என்பது முக்கியம். குடிமை என்பதே ஒரு கலை என்றும் இக் கலையோடு எந்தத்தொழிலும் கலக்கக்கூடாது என்றும் பிளேடோ கருதினார்.

கிரேக்கத்திலிருந்த பொருளாதாரக் கட்டுப்பாடுகள், கிழக்கத்திய நாடுகளில் அமுலாக்கப்பட்ட கட்டுப்பாடுகளையும் ஒழுங்குகளையும் நினைவுபடுத்துகின்றன. வியாபாரிகள் பயன்படுத்திய தராசு, படிக்கல், அளவுகோல் முதலியன சரியானவைதாமா என்பதைப் பார்வையிட மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். பொதுமக்கள் வியாபாரிகளால் ஏமாற்றப்பட்டுக் கஷ்டமடையக்கூடாது என்பதே இக் கட்டுப்பாட்டின் நோக்கம். விற்பனைப் பொருள்களையும், ஏற்றுமதிச் சரக்குகளையும் சரிபார்ப்பதற்கும் மேற்பார்வையாளர்கள் அமர்த்தப்பட்டனர். ஏழைகளுக்கு மலிவாகக் கிடைக்கவேண்டுமென்பதற்காக உப்பின் விலை ஒழுங்குபடுத்தப்பட்டது; மக்களின் உணவுப்பொருளான கோதுமை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படாமல் தடுக்கப்பட்டது. அன்றாட உபயோகத்திற்காக மட்டும்தான் பொன்னையும் வெள்ளியையும் மக்கள் வைத்திருக்கலாமேயன்றி, அவற்றை இருப்பாக வைத்துக் கொள்ளக்கூடாது. ஒரு நாட்டின் நாணயம் அந் நாட்டில்மட்டும் தான் புழங்கவேண்டும்; வெளிநாட்டவருக்கு அது பயனற்றதாயிருக்கவேண்டும். நாட்டிற்குத் தேவையில்லாத போகப் பொருள்களை இறக்குமதி செய்யக்கூடாது. நகரங்களனைத்தும் கூடுமானவரை நாட்டின் உட்பகுதியில்தான் அமையவேண்டும். கடற்கரையோரம் அமைந்தால் மக்களின் சுகாதாரம் கெட்டுவிடும். இவ்வகைக் கட்டுப்பாடுகளையெல்லாம் பிளேடோ வலியுறுத்தியதன் நோக்கம், மக்கள் தூய்மையான எளிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதேயாகும். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற முதுமொழிக்கேற்ப, இருப்பதைக் கொண்டு மனநிறைவு அடைவதே சிறந்ததென பிளேடோ கருதினார். எனவே தாம் மிதமிஞ்சிய செல்வத்தையும், வறுமையையும் கண்டித்து மக்கள் சாதாரண நடுத்தர வாழ்வையே மேற்கொள்ளவேண்டுமென அவர் விரும்பினார். பிளேடோவின் பொருளாதாரக் கருத்துகள் அனைத்தும் அரசியல், ஒழுக்கவியல் கண்ணோட்டத்திலிருந்து வழங்கப்பட்டவை என்பதை நாம் நினைவில் கொண்டால், இக் கட்டுப்பாடுகளின் முக்கியத்துவத்தை நாம் உணரமுடியும்.

அரிஸ்டாடில் (Aristotle)

பண்டைக்காலக் கிரேக்க அறிஞர்களில் தலைசிறந்தவர் அரிஸ்டாடில். பிளேட்டோவின் மாணவர்; எனினும் குருவுக்கு மிஞ்சிய சீடராக உயர்ந்தார். பிளேட்டோ இலட்சியவாதி; உயர்ந்த குடும்பத்தில் தோன்றியவர். அரிஸ்டாடில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். உலகிற்கும், நடைமுறைக்குமேற்பச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர். பல அறிவியல்களுக்கு ஊருணியாய்ச் சிறப்புப் பெற்றவர். எதையும் நுணுக்கமாய் ஆராயும் திறமைபெற்றவர். பண்டைக்காலத்தில் பொருளாதார அறிவியல் என்ற தனிப்பிரிவை ஏற்படுத்த வழிகோலியவர்களில் எவருமே அரிஸ்டாடிலுக்கு இணையாகமுடியாது. இவர் வரைந்த நூல்களில் 'அரசியல்' (Politics) 'ஒழுக்க இயல்' (Ethics) ஆகிய இரண்டும் உலகம் போற்றும் படைப்புகளாகும். இந் நூல்களில் அரசியல் கண்ணோட்டத்திலிருந்தே பல்வேறு காரியங்களை ஆய்கிறார் அரிஸ்டாடில். அவருடைய அரசியல் கருத்துகளையும் கொள்கைகளையும் ஆராய இது ஏற்ற இடமில்லை எனினும், 'மனிதன் இயல்பிலேயே அரசியல் பிராணி' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். இதன் வாயிலாக அரசியல் அரங்கில் அழியாப் புகழுடன் இன்றும் திகழ்கிறார் என்பதை நாம் மறக்க இயலாது. பொருளாதாரத் தொடர்புடைய அனைத்தையும் தருக்கரீதியில் விளக்கிய பெருமை அரிஸ்டாடிலுக்கு உண்டு. இனி, அவரது கருத்துகளையும், கொள்கைகளையும் ஆராய்வோம்.

பொதுவுடைமைக்கு எதிரான வாதம்

தமது அரசியலின் இரண்டாவது நூலில் தனியார் சொத்துரிமை, பொது உடைமை, குடும்ப நிர்வாகம் ஆகியவைபற்றி விரிவாக ஆய்கிறார் அரிஸ்டாடில். சொத்துரிமையை ஆதரித்தும், பொதுவுடைமையைக் கண்டித்தும் இவர் பேசுவது பிளேட்டோவின் கருத்துகளைத் தகர்த்தெறிவதாயுள்ளது. பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பொதுவுடைமையை ஆய்வதன்மூலம் பொருளாதார அறிஞர்களின் பாராட்டிற்குரியவரானார் அரிஸ்டாடில்.

பொதுவுடைமையைப் பொறுத்தவரை பிளேட்டோவிற்கும் அரிஸ்டாடிலுக்குமுள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்குமுள்ளதைப் போன்றது. ஆட்சியாளர்களுக்குச் சொத்து, மனைவி மக்கள் எல்லோருமே பொதுவுடைமையாக இருக்கவேண்டுமென பிளேட்டோ கனவுகண்டார். மனைவி மக்களைப் பொதுவுடைமையாகக் கொள்வது கேலிக் கூத்தாகிவிடுமென அரிஸ்டாடில் வாதாடுகிறார். இவ் வாதத்தை இங்கு ஆராய அவசியமுமில்லை, அவசரமுமில்லை. ஆனால், நாட்டின் சொத்து பொதுவுடைமையாகக்கூடாது

என்பதற்கு அவர் கொடுக்கும் விளக்கம் எக் காலத்திற்கும் பொருந்தும். 'தங்கள் சொந்தச் சொத்தின் மீது மக்கள் அதிக அக்கறை கொள்வர்; பொதுச்சொத்திலோ அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை' என்கிறார் அரிஸ்டாடில்.

மேலும், பொதுவுடைமை அமைப்பு, முறையாகச் செயல்பட முடியாதென்பதற்கு அரிஸ்டாடில் கொடுக்கும் விளக்கம் நடைமுறைக்கேற்றதாய் உள்ளது. பொதுவுடைமை என்றாலே தனியுடைமை, தனி மனிதனின் சுதந்திரம் என்பதற்கு மாறானது. எனவே, மனிதனின் இயல்பான உணர்வுகளுக்கும், குணங்களுக்கும் ஒவ்வாததாகிறது. சம உரிமையை அடிப்படையாகக்கொண்ட பொதுவுடைமை அமைப்பில் மக்களுக்குள் பூசல்களும், சண்டை சச்சரவுகளும் தோன்றுவது இயல்பு. அதிகமாகப் பாடுபட்டு உழைத்துக் குறைந்த ஊதியம் பெறுவோருக்கும், மிகக் குறைவாக உழைத்து அதிக ஊதியம் பெறுவோருக்கும் இடையில் மனக்கசப்பும், பொறாமையும் ஏற்பட்டால் தகராறுதான் விளையும். எனவே, பொதுவுடைமையில் மக்கள் ஒற்றுமையாய் வாழ்வது இயலாது. பொதுச் சொத்து என்று இருந்தால், அற்பக் காரணங்களுக்கெல்லாம் தகராறு முளைக்கும். எனவே, தனியார் சொத்துரிமையே மேலானது—சிறப்பானதுஎன்கிறார் அரிஸ்டாடில். சொத்துரிமையினால் கிடைக்கும் பொருளாதார நலன்கள் பல. மக்களின் இயற்கை உணர்விற்கு ஏற்றதாயுள்ளதோடுஊக்கத்தையும், உற்சாகத்தையும் அது வழங்குகிறது. 'ஒருவன் தன்னைத்தானே நேசிப்பது வியர்த்தமானதன்று' என்று அரிஸ்டாடில் கூறுகிறார். பொதுச் சொத்து என்று இருந்தாலே அது தனி மனிதனின் சுதந்திர உணர்வை நசுக்கிவிடும் என அரிஸ்டாடில் கூறுவது இன்றும் உண்மை.

தனியார் சொத்துரிமை இருந்ததென்றால் சொத்துடையோர், தம் சுய நலத்திற்காக மட்டுமே அதைப் பயன்படுத்துவர், பொது நன்மையைப்பற்றி எள்ளளவும் கவலைப்படமாட்டார்கள் என்பது பொதுவுடைமை வாதிகளின் வாதம். இவ் வாதத்திற்குப் பதிலளிக்கும் வகையில் அரிஸ்டாடில் கூறுவது: 'இத் தீமைகளனைத்தும் சொத்துரிமையால் ஏற்பட்டதல்ல; மனிதப் பண்புகளில் காணப்படும் குறைகளால்தான் இத் தவறுகள் ஏற்படுகின்றன. எனவே, இக் குறைகளை அகற்றாமல் சொத்துரிமையை அழிப்பதால் பயன் ஏதுமில்லை. சொத்துரிமை இருந்தால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. எனவே, விவேகமான சட்டங்களின் வாயிலாக இத் தீமையை நீக்கிவிட்டால், தனியார் சொத்துரிமையைப்போல் சிறந்த அமைப்பு வேறு ஏதுமில்லை.'

அரிஸ்டாட்டில், பிளேட்டோவின் பொதுவுடைமைத் தத்துவத்தைக் குறைகூறிய போதிலும், தனியார் சொத்துரிமையைத் தீவிரமாக்க விரும்பவில்லை என்பது தெளிவு. அக்காலத்திய கிரேக்கர்கள் எதற்கெடுத்தாலும் தனியுரிமை, சுதந்திரம் என்று பேசிவந்ததை அரிஸ்டாட்டில் வன்மையாகக் கண்டித்தார். எனவே, தீவிரமான தனியுடைமையையும் பொதுவுடைமையையும் விரும்பாத அரிஸ்டாட்டில் நடுநாயகமான ஓர் இலட்சிய வழியை விரும்பினார். சொத்தென்பதும் தனியுடைமையாக இருக்கவேண்டும், ஆனால் அதைப் பொது நலத்திற்காக உபயோகிக்க வேண்டும். இதுவே அவர் கண்ட இலட்சிய அமைப்பு. சொத்து வைத்திருப்பவர்கள் அதை வீணாக்காமல் தங்கள் சுய நலத்திற்காக மட்டும் அவற்றைப் பயன்படுத்தாமல் பிறர் நன்மைக்காகவும் பயன்படுத்த வேண்டும். இவ்வுயர்ந்த எண்ணத்தை அவர்கள் வளர்ப்பார்களாயின், சமுதாயம் முன்னேற்றமடையும். சொத்துக்கள் சமமாகப் பிரிக்கப்பட வேண்டியதில்லை, மக்களின் தேவை சமமாக நிறைவு பெற வேண்டும். இதுவே அரிஸ்டாட்டில் கண்ட முடிவு.

அரசின் தோற்றம்

அரசின் தோற்றம்பற்றி அரிஸ்டாட்டில் தரும் விளக்கம் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டது. குடும்ப நிருவாகமே பொருளாதாரத்திற்கு ஆதாரமென அவர் கூறுவதால் அதைச் சுருக்கமாக ஆராய்வது அவசியம். ஆணும், பெண்ணும் தனித்து வாழ இயலாத காரணத்தால் குடும்பம் தோன்றுகிறது. எனவே, 'அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இயல்பாகத் தோன்றிய ஐக்கியமே குடும்பம்' என அவர் விளக்குகிறார். பல குடும்பங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழவேண்டிய நிலையில் கிராமம் உருவாகிறது. பல கிராமங்கள் ஒன்றுபட்டு ஐக்கிய வாழ்வை மேற்கொள்ளும் நிலையில் அரசு தோன்றுகிறது. எனவே இயல்பான குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவதால், அரசும் இயல்பானதாகிறது எனக்கிறார் அரிஸ்டாட்டில். அரசின்றி எவரும் நல்வாழ்வு வாழ முடியாது என்பது அவர் கருத்து. அரசு என்பது, குடும்பம், கிராமம் ஆகியவற்றின் முழு வளர்ச்சியே என்று கூறி, தருக்க ரீதியில் முதற்கண் குடும்பப் பொருளாதாரத்தை ஆராயத் தொடங்குகிறார் அரிஸ்டாட்டில். குடும்பம் என்றால் மூன்று உறவு முறைகள் இருப்பதை மனதில் கொள்ளவேண்டும். முதலாவது அடிமை, கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள் முதலிய உறவு முறைகளே அவை. குடும்பப் பொருளாதாரத்தில் நான்காவது பகுதி நிதி திரட்டும் கலையாகும். குடும்பத்திற்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுப்பது நிதிக்கலை எனப்படும். வசதியைப் பயன்படுத்துவது குடும்பப் பொருளாதாரப் பணியாகும்.

அடிமைகளின் அவசியம்

முதலாளிக்கும், அடிமைக்குமுள்ள உறவை விளக்குகின்றபகுதியில் அடிமைகள் அவசியம் இருக்கவேண்டுமென வாதாடுகிறார் அரிஸ்டாடில். ஆளையிடுவோரும், அடிமைகளும் இருப்பது அவசியமானது மட்டுமன்று நன்மையானதும் ஆகும் என்கிறார். இயற்கையிலேயே வேறெதற்கும் உதவாத, மற்றவர்கள் சொல்வதைக் கேட்டே நடக்கவேண்டிய மனித உருவங்கள் உள்ளன. சாதாரண குடிமகனுக்கும், அடிமை வாழ்விற்கெனப் பிறந்த மனிதப் பிறவிகளுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. இவ் வேறுபாடு ஆத்மாவிற்கும், உடலுக்கும் உள்ளதைப் போன்றது; அல்லது மனிதனுக்கும், மிருகத்திற்கும் உள்ளதை ஒத்தது. இயற்கையிலேயே மிகத் தாழ்வானவர்கள் அடிமைகள். எனவே, அடிமைகளாகவே வாழ்வது அவர்களுக்கு நன்மையே. அடிமை வாழ்விற்கென்றே சிலர் பிறக்கிறார்கள் என்று அரிஸ்டாடில் கூறுவது வியத்தமானது. எனவேதான் அடிமைகளை இயல்பான அடிமைகள், சட்டப்பூர்வமான அடிமைகள் என்று இரு பிரிவாகப் பிரிக்கிறார். போரில் தோற்றவர்கள் வென்றவர்களின் அடிமைகளாகக் கருதப்பட்ட மரபையொட்டி அவர்களை சட்டப்பூர்வமான அடிமைகள் என்கிறார். அடிமைத் தளை இல்லாவிட்டால் அவ்வடிமைகளின் நிலை இன்னும் மோசமாக இருக்குமென வாதாடுகிறார். இவ் வாதமனைத்தும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றனவேயன்றி, நியாயமானவை அல்ல என்பது கிரேயின் கருத்து.

குடும்ப நிருவாகம்

குடும்ப நிருவாகத்தைப்பற்றி எழுதும்போதுதான் அரிஸ்டாடில் பல பொருளாதாரக் கருத்துகளைக் கோர்வையாகவும், தெளிவாகவும் தருகிறார். அரசியலுடனோ, ஒழுக்க இயலுடனோ கலக்காமல் இக் கருத்துகளைத் தனியாகக் கொடுப்பது போற்றற்குரியது. குடும்பத்திற்கு வேண்டிய செல்வத்தைச் சேகரிப்பது குடும்ப நிருவாகத்தின் (பொருளாதாரத்தின்) ஓர் அம்சம் என்று கூறுகிறார். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை அடைவது அவ்வம்சத்தின் ஒரு பகுதி. அப் பொருள்களைச் செல்வமெனக் கொள்ளலாம். செல்வம் என்பது இயல்பான செல்வமென்றும், போலியான செல்வமென்றும் இருவகைப்படும். இயற்கையின் வாயிலாகக் கிடைக்கும் செல்வமனைத்தும் இயல்பானதெனப்படும். எனவே, இச் செல்வத்திற்கு ஒரு வரையறை உண்டு. இதை வேண்டியபோது பெருக்க முடிந்தாலும் அளவுக்கு மீறி அடைய முடியாது. அதற்கு ஓர் எல்லையுண்டு. இயற்கையின் வாயிலாகக் கிடைக்கும் சொத்துமட்டுமே இயல்பானதென்றும், இவ்வகைச் செல்வத்தை விவசாயி, மீனவன், வேட்டைக்காரன், நாடோடி

முதலாளிகளே மட்டுமே பெறுவர் என்றும் அரிஸ்டாடில் கூறுகிறார். இயற்கை வாதிகளின் அறிவுக்கு முன்னோடியாக இருப்பது குறிப்பிடத் தக்கது. இவ்வகை உண்மையான செல்வத்தை வேண்டிய அளவுக்குமட்டுமே குடும்பத்தினரும், நாட்டவரும் பெற வேண்டும் என்பது அரிஸ்டாடிலின் முடிவு. இவ்வகையில் திரட்டும் செல்வமும், நிதியுமே குடும்பப் பொருளாதாரத்தைச்சேர்ந்ததாகும்.

இயல்பான—உண்மையான செல்வத்திற்கு மாறாக வேறொரு வகைச் செல்வம் அல்லது நிதி இருப்பதாக அரிஸ்டாடில் கூறுகிறார். இயற்கையாலன்றிப் பிற வழிகளில் அடையும் செல்வம் அவ்வகையில் சேரும். இச் செல்வத்திற்கு வரம்போ, எல்லையோ கிடையாது. இச் செல்வத்தைப் போலிச் செல்வமென அழைக்கிறார் அரிஸ்டாடில். உண்மையான செல்வத்திற்கும், போலிச் செல்வத்திற்கு முள்ள வேறுபாடு, பண்டங்களின் பயன் மதிப்பிற்கும் (value-in use) பரிவர்த்தனை மதிப்பிற்கும் (value in exchange) உள்ள வேறுபாட்டின் அடிப்படையில் அமைகிறது. எந்தப் பண்டத்திற்கும் இரு வகைப் பயன்கள் உண்டு. ஒரு பேனாவை எடுத்துக்கொண்டால், அது எழுதுவதற்கு உதவுகிறது. இது அப் பேனாவின் பயன் மதிப்பாகும். இயல்பான மதிப்பும் கூட. ஆனால் அப் பேனாவைக் கொடுத்து, அதற்குப் பதிலாக இரண்டு அல்லது மூன்று புத்தகங்களைப் பெறலாம். இது பேனாவின் பரிவர்த்தனை மதிப்பைக் காட்டுகிறது. இம் மதிப்பு இயல்பானதன்று. எனவே, பழைய பண்ட மாற்று நிலையில் இயல்பான பயன் மதிப்பு மட்டுமே முக்கியமானதாகக் கருதப்பட்டது. சில்லறை வியாபாரம் தொடங்கியவுடன் 'தேவையைப் பூர்த்தி செய்வது' என்ற நிலை மறைந்து, இலாபமடைய வேண்டும் என்ற ஆவல் தொடங்கிவிட்டது. பணம் புழக்கத்திற்கு வந்தபின் இந்த ஆவல் மேலும் அதிகரித்துவிட்டது. செல்வம் சம்பாதிப்பதும், திரட்டுவதும் முக்கியமாகிவிட்டன. உண்மையான தேவையைப் பூர்த்தி செய்கின்ற நிலை மறைந்து வாணிகத்தின் வாயிலாக நிதி திரட்டும் நிலை ஏற்பட்டவுடன் தீமையும், கெடுதல்களும் முளைத்துவிட்டன. வாணிகத்தின் வாயிலாகச் செல்வம் திரட்டுவது போலியான நிதியில் அடங்கும் என்கிறார் அரிஸ்டாடில். வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களை இயற்கையின் வாயிலாகப் பெறுவது குடும்பப் பொருளாதாரத்தைச் சார்ந்தது. எனவே, நல்லது, போற்றற்குரியது. பணம் திரட்டும் நோக்கத்தோடு வணிகத்தின் வாயிலாகச் செல்வம் திரட்டுவது போலியானது. எனவே கெட்டது, வெறுக்கத்தக்கது. இதனால் ஒருவர் நன்கு வாழ்வது பிறர் துன்பத்தில் முடியும். இதற்குச் சான்றாக வட்டி வாங்குவதைக் கொள்ளலாம்.

இவ்வாறு பாகுபடுத்தியபின், விவசாயம், தேனீ வளர்ப்பு, கால்நடைப் பராமரிப்பு முதலிய தொழில்களின் வாயிலாக அடையும்

செல்வத்தை இயல்பானதெனக் கூறி குடும்பப் பொருளாதாரத்தில் சேர்க்கிறார் அரிஸ்டாடில். போலியாகச் சேர்க்கும் நிதியில், வியாபாரம், வட்டிக்கடை முதலியவற்றின் வாயிலாகச் சம்பாதிக்கும் செல்வத்தை உள்ளடக்குகிறார். இவ்விரண்டிற்குமிடைப்பட்ட நிலையில் மூன்றாவது வகை நிதி இருப்பதாக அரிஸ்டாடில் குறிப்பிடுகிறார். இப் பிரிவில் சுரங்கத் தொழில், மரத்தொழில் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் செல்வத்தைக் குறிப்பிடுகிறார்.

மதிப்பீட்டுக் கொள்கை

கிரேக்க அறிஞர்கள் மதிப்பீட்டைப்பற்றி விவரமாக ஒன்றும் கூறவில்லை. அவர்கள் கூறியதெல்லாம் மிகச் சொற்பமே. அதுவும் கூட நீதி, நியாயம் என்ற அடிப்படையில் கூறப்பட்டவையேயன்றி, பொருளாதார அடிப்படையிலல்ல. ஒரு பண்டத்தின் மதிப்பு அதன் பயன்பாட்டுத் தன்மையைப் பொறுத்தது என்பது அரிஸ்டாடிலின் கருத்து. அவரது பண்டமாற்றுக் கொள்கையைப் பின் வருமாறு விளக்கலாம்: தம்மிடமுள்ள வெவ்வேறு பண்டங்களை இருவர் பரிவர்த்தனை செய்த பின், பரிவர்த்தனைக்கு முன் எவ்வளவு மதிப்புடைய பண்டங்களை வைத்திருந்தனரோ அதே மதிப்புடையதைத் தான் இப்போதும் கொண்டிருக்க வேண்டும். ஒருவருக்குக் குறைவாகவும், மற்றொருவருக்கு அதிகமாகவும் இருக்கக் கூடாது. அவ்வாறு பரிவர்த்தனை செய்யும்போது இருவரின் விருப்பமும் ஒரேமாதிரி இருக்கவேண்டும். விருப்பத்தைக் கொண்டுதான் அப் பண்டங்களின் மதிப்பு அளவிடப்படும். எனவே பண்டமாற்றின் வழியாக எவருக்கும் இலாபமோ, இழப்போ ஏற்படக்கூடாது. பொருள்களின் மதிப்பை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே பணம் கண்டுபிடிக்கப்பட்டது. உதாரணமாக, எத்தனைச் செருப்புகள் ஒரு சட்டைக்குச் சமம், அல்லது ஒரு நாற்காலிக்குச் சமம் என்பதைப் பணத்தைக்கொண்டு அளவிடமுடியும். பணம் இயல்பாகத் தோன்றியதல்ல; அது செயற்கைச் சட்டத்தால் தோன்றியது. எனவே, பணத்திற்கு இன்றுள்ள மதிப்பு நாளை இருப்பதில்லை. எனினும், மற்ற பண்டங்களின் மதிப்பைவிடப் பணத்தின் மதிப்பு நிலையானதாக உள்ளது. இவ்வாறாக, பணத்தின் தன்மையை அரிஸ்டாடில் விளக்கும்போது, அதன் பணிகளைப் பற்றி அவர் அறிந்திருந்தார் என எண்ணத் தோன்றுகிறது. பரிவர்த்தனை மதிப்பை ஆயத்தொடங்கிய முதல் அறிஞர் அரிஸ்டாடில் தான்; எனினும் அவரது ஆய்வு நியாயத்தின் அடிப்படையில் ஆரம்பமாகியது. நியாயவிலை என்னும் கருத்தே அரிஸ்டாடிலின் விளக்கத்திற்கு அடிப்படை. அதே அடிப்படையில்தான் இடைக்கால அறிஞர்களும் மதிப்பை விளக்க முற்பட்டனர். தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் காலத்தில்

தான் அறிவியல் ரீதியில் பணத்தின் மதிப்பு ஆராயப்பட்டது. அதுவரை அரிஸ்டாட்டிலின் கருத்தே நிலைத்திருந்தது என்றே கூறலாம்.

பணமும் வட்டியும்

கிரேக்க அறிஞர்கள் பணத்தைப் பற்றியும், வட்டியைப் பற்றியும் கூறிய கருத்துகள் முக்கியமானவை. பணத்தின் அவசியம் பற்றியும், பரிவர்த்தனைச் சாதனமாக அது புரியும் பணியைப் பற்றியும் அரிஸ்டாட்டில் தெளிவாக விளக்கியுள்ளார். வணிகம் வளர்ந்து விரிவடையும்போது பணத்தின் பிரயோகம் இன்றியமையாததாகி விட்டது. வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்களைப் பரிவர்த்தனை செய்வதில் மக்கள் பல தொல்லைகளை அடைந்தனர். அப்பொருள்களையெல்லாம் ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குத் தூக்கிச் செல்வதும் கடினம், அனுப்புவதும் எளிதல்ல. எனவே, பண்டங்களைத் தூக்கிச் செல்வதற்குப் பதிலாக, பரிவர்த்தனை செய்வதற்கு எளிதான, பளுவில்லாத வெள்ளியைக்கொண்டு பொருள்களை வாங்குவதும், விற்பதும் எளிதெனக் கண்டனர். வெள்ளியைப் பணமாக ஏற்ற பின்னர், அதற்கு ஓர் எடையும் அளவும் தந்து உருவமும் தந்தனர். இவ்வாறாக, எடைபோட்டுப் பணத்தின் மதிப்பை அறிந்துகொள்வதிலிருந்த சிக்கல்கள் மறைந்தன. பண்டங்களின் மதிப்பை அளவிடுவதற்கு மட்டுமின்றி, பிற்காலப் பயனுக்கெனச் சேர்த்து வைப்பதற்கும் பணம் ஏதுவானது என்பதையும் அரிஸ்டாட்டில் விளக்கியுள்ளார்.

ஆனால் அவரது சிந்தனை முழுவதும் உண்மையானதென்றோ, நிறைவானதென்றோகொள்வதற்கில்லை. பணத்தைப் பரிவர்த்தனைச் சாதனமாகவே கருதினார் அரிஸ்டாட்டில். எனவே, கடனாகப் பெறும் பணத்திற்கு ஆக்க சக்தி இல்லையென அனுமானித்து விட்டார். பணம் தரிசு நிலத்தைப் போன்றதென்றும், குட்டிபோட முடியாதென்றும் கூறினார். எனவே கடனாகக்கொடுக்கும் பணத்திற்கு வட்டி வாங்குவது அநீதி என்று முடிவு கட்டுகிறார் அரிஸ்டாட்டிலின் இக்கருத்துத்தான் பல நூற்றாண்டுகள்வரை செல்வாக்குப் பெற்றிருந்தது. நவீன காலமாகிய இன்று கடனாகப் பெற்ற பணத்தை முதலீடு செய்து இலாபம் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் நாம் வட்டியை நியாயமானதெனக் கருதுகிறோம். ஆனால் பண்டைக்காலத்தில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக எவரும் கடன்தரவில்லை. அப்பழக்கமும் கிடையாது. கஷ்டப்படுகிறவர்களுக்குக் கொடுத்து உதவத்தான் கடன் தரப்பட்டது. எனவே வட்டி வாங்குவதை அநியாயமாக அரிஸ்டாட்டில் கருதியது நியாயம்தான். அன்றிருந்த பொருளாதாரச் சூழ்நிலை

இன்றும் இருக்குமேயானால் நாமும் அவ்வாறுதான் கருதுவோம் என்று பல அறிஞர்கள் நினைப்பர்.

பல்வேறு தொழில்கள்

பண்டைக்காலக் கிரேக்க அறிஞர்கள் ஒருசில தொழில்களை நல்ல தொழில்களாகவும், வேறுசிலவற்றை அவசியமான, ஆனால் வெறுப்பூட்டும் தொழில்களாகவும் கருதினர். பயிர்த் தொழிலையே சிறந்த தொழிலாக எண்ணினர். மனிதனுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பயிர்த்தொழில்தான் கொடுக்கிறதென்றும், அத் தொழில் இயற்கைத்தொழில் என்றும் அரிஸ்டாடில் கூறுகிறார். அடுத்து, கால்நடைப் பராமரிப்புத் தொழிலும் இயற்கையானது, அதன் வழியாக வருவாய் பெருவது நியாயமானது என வாதாடு கிறார். வியாபாரம், வட்டிக்குக் கடன்கொடுத்தல், கூலிக்காக உழைத்தல் ஆகிய அனைத்தும் இயற்கைக்கு மாறானவை என்பதும், அவற்றிலிருந்து பெறும் வருவாய் கீழ்த்தரமானதென்பதும் அரிஸ்டாடிலின் முடிவு.

முடிவுரை

பொருளாதாரச் சிந்தனை வரலாறு ஐரோப்பாவில், குறிப்பாகக் கிரேக்க நாட்டில் ஆரம்பித்ததெனலாம். எனினும் கிரேக்க அறிஞர் களில் பலர் தத்துவ மேதைகள். எனவே, நீதி, நியாயம் என்ற அடிப்படையில்தான் அவர்களின் சிந்தனை செயல்பட்டது. மனிதன் மகிழ்ச்சியுடன் வாழவேண்டுமாயின், அவன் நல்லவனாக இருக்கவேண்டும், தன் ஆத்மாவைப்பற்றியே அக்கறைகொள்ள வேண்டுமென்றும் விரும்பினர். நல்வாழ்விற்கும் நிறைவான வாழ்க்கைக்கும் அரசு இன்றியமையாததென நம்பினர். எனவே, அரசியல் கண்ணோட்டமும், ஒழுக்க நெறியின் அடிப்படையுமே அவர்களின் பொருளாதாரக் கருத்துகளுக்கு மெருகுகொடுத்தன. அக்காலத்தியப் பொருளாதாரச் சூழ்நிலைக்கு அக் கருத்துகள் ஏற்றதாயும் தோன்றின. எனவே, பொருளாதாரக் கருத்துகள் சரியானவையா தவறானவையா என்பதை அக் கருத்துகள் நிலவிய சூழ்நிலையைக்கொண்டுதான் முடிவுசெய்யவேண்டும்.

3. பண்டைக்கால ரோமானியச் சிந்தனை

நவீனக குடியாடசியின அமைபபிறகு விததிடடவாகள கிரேக காகளே இலககியம, கலை, தததுவம ஆகிய அனைததிறகுமே கிரேகக நாடுதான அடிததளம அமைததுத தநதது ஆனால ரோமோ அவவாறிலலை அதனுடைய வரலாறே போரும வெறறி முழககமுமதான போரில் பல நாடுகளை வெனறு பேரரசினை நிறுவிய பெருமை ரோமுககு உணடு பேரரசை உருவாககி ஆடசி செயததன வழியாகச சடடததையும, ஒழுஙகையும ஏறபடுததிய பெருமை ரோமானியாகளைச சேரும பணடைககாலததிய நகரஙகள, சாலைகள, கபபலகள கோடடைகள மடடுமினறி, விளையாடடு அரஙகஙகளையும, நினைவுச சினனஙகளையும கடடிப பெருமை பெறறவாகள ரோமானியா சிறபஙகளையும சிலைகளையும வடிதது அழியாப புகழை அடைநதவாகள தததுவ இயலுககோ அலலது வேறெநத அறிவியலுககோ எநதவிததததிலும துணைசெய தவாகள எனறு கருதமுடியாது அவாகள கூறிய பொருளாதாரக கருததுகள கிரேககச சிநதனையின பிரதிபலிபபேயனறி மூல மானவை எனறு கூற முடியாது கிரேகக நாடு, குறிபபாக ஏதெனஸ மாநகரம உலகப புகழபெறற அறிஞாகளை உருவாககித தநதது அவவறிஞாகளின தததுவம பினனால தோனறிய அறிஞா களின பொருளாதாரக கருததுகளைச சிததரிகக உதவியது ரோமோ அரசியலவாதிகளையும, வீராகளையும தீராகளையும உலகிறகுத தநதுளளது அவாகள உருவாககிய நிறுவனஙகள பிற காலததிய சடட அமைபபையும, அரசியல சிததாநததததையும மெருகுபடுதத உதவியுளளன

ரோமப பேரரசானது வீழசசியுறும சமயததிலதான ரோமானிய அறிஞாகள தம பொருளாதாரக கருததுகளை வெளியிடடனா எனவே, அவாகளின கருததுகள ரோமப பேரரசின வீழசசி நிலையைப பிரதிபலிபபதாகவே அமைநதுளளன மேலும உலக வாழவில் அககறைகொணடிருநத ரோமானிய அறிஞாகளதான

பொருளாதாரக் கருத்துகளை வெளியிட்டனர். பொருளாதாரச் சிந்தனை வளர்ச்சிக்கு உதவிய ரோமானியர்களைத் தத்துவ மேதைகள், விவசாய அறிஞர்கள், சட்ட நிபுணர்கள் என மூவகையாகப் பிரித்து ஆய்வது மரபுமட்டுமல்ல; வசதியானதும் கூட.

தத்துவ மேதைகள்

ரோமானியத் தத்துவ மேதைகளில் சிசரோ, செனகா, பிளினி ஆகிய மூவரும் ஆடம்பர வாழ்க்கையைக் கண்டித்தனர்; எளிமையாக வாழ்வதே இனிமை என்றனர்; சொத்தை நல்வழியில் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்தினர். எனவே, இவர்களைப் பொருளாதார அறிஞர்கள் என்று கூறுவதைவிட அறநெறி ஆசிரியர்களென அழைப்பதே நன்று. கிரேக்க மேதைகளைப்போல் அவ்வளவு அறநெறியாளர்கள் அல்ல இவர்கள். எனினும், பொருளாதாரத் தத்துவ அடிப்படையில் இல்லாமல் ஒழுக்க நெறியின் கண்கொண்டே பொருளாதார உலகைக் கண்டனர். சான்றாக, 'தான் விரும்பும் எதையும் மனிதன் நல்வழியில்தான் அடையவேண்டுமேயன்றி, குறுக்கு வழியிலோ மோசடி செய்தோ அடையக்கூடாது' என சிசரோ கூறுகிறார். 'தவறானவை அனைத்தும் விவேகமானவை அல்ல' என்பது அவர் கருத்து. அக்காலத்திய ரோமானியர் ஆடம்பர வாழ்க்கையையும், அதை அளிக்கக்கூடிய செல்வத்தையும் நாடித்திரிந்தனர் இப் போக்கைச் சிசரோ கண்டித்தது மட்டுமன்றி, சாதாரண வாழ்வே சிறந்ததென்றும் அறிவுரை செய்தார். விவசாயத்தைமட்டும் செய்து வந்த பழங்காலச் சமுதாயத்தை ஏற்றிப் போற்றினார். அக்காலம் திரும்பிவந்தால் எவ்வளவு நன்றாயிருக்குமென இசைபாடினார். தாம் எழுதிய 'தொழில்கள்' என்னும் நூலில் சிசரோ பயிர்த் தொழிலைப் புகழ்ந்து ஏனைய பல தொழில்களை நிந்தித்துள்ளார்.

வாழ்க்கை வசதிகளைத் தேடி மக்கள் பல்வேறு தொழில்களைப் புரிகின்றனர். அவற்றுள் எவை நல்ல தொழில், எவை இழிவான தொழில் என்பதைப் பாகுபடுத்திக் காட்டுகிறார் சிசரோ. வரி வசூலித்தல், கடும் வட்டிக்குக் கடன் கொடுத்தல் ஆகிய தொழில்களை இழி தொழில்களென ஒதுக்கிவிடுகிறார். கலைத் திறமையற்ற உடல் உழைப்பைச் சார்ந்த தொழில்களையும் பழித்துப் பேசுகிறார். அத்தொழில் புரிவோரை கூலிக்கு மாரடிப்போர் எனக் கூறுகிறார். சில்லரை வியாபாரமும் இழிவானதே; ஏனெனில் பொய்பித்தலாட்டமின்றி இத்தொழிலில் இலாபம் பெற இயலாது. தொழிற்சாலைகளுள் நடக்கும் வேலைகளையும், கண்ணியமற்ற தொழில்களாகக் கருதுகிறார். மீன் விற்பவர்கள், கசாப்புக் கடைக்காரர்கள், சமையற்காரர்கள், கூத்தாடிகள் ஆகிய அனைவரும் இழிதொழில் புரிபவர்களே என்பது ரோமானிய அறிஞர்களின் கருத்து

மாறாக, மருததுவததொழில, கட்டடததொழில, ஆசிரியத தொழில ஆகியவை உயாநதவையாகக கருதபபடுகினறன ஏனெனில, இவையனைததும சமுதாயததிறகுப பெரும பயனும, அறிவும அளிபபவை பிறநாடுகளிலிருநது பொருளகளை இறககுமதி செயது, அவறறைப பொய பிததலாட்டமினறி மககளுககு விறறால, மொதத வியாபாரத தொழில இழிவானதலல இவ வியாபாரிகள அனைவரும தாஙகள ஈட்டிய செலவம போதுமெனத திருபதி கொணடு கடறகரை நகரஙகளைவிட்டு உளநாட்டிலுளள நகரபபுறங களில வாழவது சிறநததெனச கூறுகிறா எலலாத தொழிலகளையும விட வேளாணமைத தொழிலே தலைசிறநதது அதைவிட இலாபம தரும தொழிலோ மனமகிழவு தரும வேலையோ வேறு ஏதுமிலலை எனவே, சுதநதிர மனபபானமையுளள மககளுககு இதுவே பிடிதத மான தொழில என சிசரோ கூறுகிறா

வேளாணமைத தொழிலை வானளாவப புகழநததறகுக காரணம உணடு ரோமாபுரிப பேரரசின ஆரமபக காலததில சிறு பணணைகளில நடநத விவசாயமே முககியத தொழிலாக இருநதது சமுதாயம எநதப பாகுபாடுமினறி ஒறறுமையாய மனமகிழவுடன வாழநதது வியாபாரமோ வாததகமோ அவவளவு பிரபலியமாக இலலை ஆனால பல நாடுகளைப பிடிதது ரோமப பேரரசு விரிவடைநத பின பொருளாதார வாழவே மாறிவிட்டது சிறு பணணைகள பெரும பணணைகளாக மாறின வியாபாரம விரிவடைநதது கடன கொடுககும பழககமும அதிகமாகிவிட்டது பெரு நிலககிழாா, பெரு வியாபாரிகள, வட்டிககடைககாரா ஆகியோா கொழுதத பணககாராகளாகிவிட்டனா ஏழை, பணக காரன எனற பாகுபாடு சமுதாயததைப பிரிததுப பாழாககிவிட்டது எனவேதான சிசரோவும, ஏனைய அறிஞாகளும சாதாரண, எளிமை யான வாழககையை மககளுககுப போதிததனா ''பணப பேராசை தான தீசசெயலகளைத தோறறுவிககினறன எனறு கருதினா ''வட்டி வாஙகும தொழில எபபடி? எனக கேட்ட ஒருவருககு ''கொலை செயயும தொழில எபபடி? எனச சுட்சசுட்டப பதிலளித தாா சிசரோ

செனகாவின பொருளாதாரக கருததுகள அவவளவு முககிய மானவையலல 'பணமே எலலாத தீமைகளுககும ஆணிவோ பொருமையும பேராசையும அநீதியின ஊறறு என இவா கூறியது உணமையிலேயே நனமை பயககககூடியவையெனறாலும, இவா கூறியது சொநதக கருததனறு எனினும, இவா கூறிய கருதது களில் முககியமானதொன்று உணடு இயறகை அனனை எலலா இடஙகளுககும ஒரேமாதிரியான வளததையோ, செலவததையோ வாரிவழஙகவிலலை உலகின எலலாப பகுதிகளிலும நமககு

வேண்டிய எல்லாப்பொருள்களும் கிடைப்பதில்லை. எனவே, உலகின் பல பகுதிகளிலும் வாழும் மக்கள் ஒருவரோடொருவர் உறவுகொண்டு தத்தம் தேவைகளை நிறைவுசெய்துகொள்ள வேண்டும் என்கிறார்.

இப்போது, பிளினி அவர்களின் சுவையான கருத்துகளைப் பார்ப்போம். இக் கருத்துகளை 'இயற்கை வரலாறு' என்னும் குழப்பமான நூலில் அவர் தருகிறார். பணத்தையும், தங்கத்தையும் அவர் பழித்துப் பேசுவது வாசகர்களுக்குச் சுவையானதாகத் தோன்றினும், உண்மைக்குப் புறம்பானது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. 'முதன்முதலாக எவன் தங்கநகை அணிந்து கொண்டானோ அவன்தான் சமுதாயத்திற்கே பெருந்தீங்கு செய்தவன்' என்று அவர் கூறுவது ரூஸோவை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. 'தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது சமுதாயத்தின் அழிவிற்குத்தான்' என்று அடித்துக்கூறி, தங்கத்தை வெறுத்துத் தள்ளுகிறார். எளிமையான பண்டமாற்றுமுறை இருந்தகாலம் எவ்வளவு மகிழ்ச்சியானது என்று பண்டமாற்று முறையை அவர் போற்றிப் பேசுவது முற்போக்கானதாயில்லாவிட்டாலுங்கூட அக்காலத்திய ரோமாபுரி மக்களின் பொன்னாசையை விரட்டுவதற்கு ஏதுவாயிருந்தது.

தங்கத்தை இவ்வளவு தூரம் கண்டனம் செய்த பிளினி, அது பிரபலியமடைந்ததன் காரணங்களைச் சுவைபட எழுதியிருப்பது விநோதம்தான். 'நெருப்பில் இட்டுச் சுட்டாலும் தங்கத்தின் குணம் மாறுவதில்லை ; தங்கம் எளிதில் தேய்ந்து போகாது ; உருக்கி உருவம் செய்வதற்கு இதைவிடச் சிறந்த உலோகம் வேறு ஏதுமில்லை ; துருப்பிடிக்காது' என்றெல்லாம் தங்கத்தின் பண்புகளைப் போற்றுகிறார்.

அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகின்ற பிளினியின் பிறிதொரு கருத்து, பண்ணையின் அளவுபற்றியதாகும். 'பெரும் பண்ணையைப் புகழ்ந்துபாடு ; ஆனால் சிறுபண்ணையையே சாகுபடி செய்' என்பது வெர்ஜிலின் பொன்மொழியாகும். இப் பொன்மொழிக்குப் பரிந்துரை கூறுகிறார் பிளினி. இத்தாலி அழிவுற்றதற்குக் காரணம், அந் நாட்டிலிருந்த பெரும் பண்ணைகள்தான் என்று அழுத்தம் திருத்தமாக அவர் கூறியிருப்பது சிறுபண்ணை முறையை அவர் எவ்வளவு தூரம் வரவேற்றார்என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

ரோமாபுரித் தத்துவமேதைகளின் கருத்துகளை ஆராயும்போது, பணத்தின் உண்மையான இயல்பினை அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதையே சுட்டிக் காட்டுகின்றன. இருப்பதைக் கொண்டு மனிதன் திருப்தியடையவேண்டும் என்ற அடிப்படைத் தத்துவத்தில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இது,

பண்டைக்கால இந்தியர்கள் விதியின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை நினைவுபடுத்துகிறது. இதை ரோமாபுரி அறிஞர்களில் ஒருவரான மார்க்ஸ் அவ்ரேலியஸ் பின்வருமாறு கூறுகிருர்; 'செய்கின்ற தொழிலிலேயே திருப்தி அடை. அந்தத் தொழிலைச் செய்வதற்குத் தான் நீ பிறந்துள்ளாய் என்று நம்பி அதைப் போற்றி வள. மற்றவற்றைப் பற்றிக் கவலைப்படாதே. உன் உடல், ஆத்மா ஆகியவற்றைக் கடவுள் தான் காப்பாற்றுகிருர்.' இக் கருத்தினை ஆராயும்போது, மனிதன் தன் ஆசாபாசங்களை வெல்வதில் தான் ஆனந்தமடைய முடியுமேதவிர, உலக இன்பத்திலன்று என்ற முடிவிற்கே இவ்வறிஞர்கள் வந்தனர் என்று தோன்றுகிறது. இம் முடிவு, தான் செய்யும் காரியங்களுக்கு மனிதன் பொருப்பல்ல என்பதையும், எவ்விதத்திலும் தன் சூழ்நிலையை அவன் மாற்றக்கூடாது என்பதையும் வலியுறுத்துகிறது.

விவசாய அறிஞர்கள்

விவசாய அறிஞர்களில் காட்டோ, வர்ரோ, கொலுமெல்லா ஆகிய மூவரும் முக்கியமானவர்கள். பிளினியும் விவசாயத்தைப் பற்றிய கருத்துகளை வெளியிட்டுள்ளார். பழங்காலத்திய வேளாண்மை எவ்வளவு உன்னத நிலையிலிருந்தது என்பதை விரிவாகக் கூறியதைத்தவிர, வேறொன்றும் இவர்கள் சாதித்துவிடவில்லை. எனவே, இவர்களைப் பற்றிச் சுருக்கமாக இங்கு குறிப்பிட்டாலே போதும். விவசாயத் தொழிலைப் பற்றி விவரமாக ஆராய்ந்த பெருமை இவர்களுக்குண்டு. குறிப்பாகச் சாகுபடி முறையைப்பற்றி மிகத் தெளிவாக இவர்கள் வருணித்துள்ளனர். எனினும் விவசாயப் பொருளாதாரத்தை இவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. ஒரு பண்ணை எவ்வாறு சுயநிறைவுள்ளதாக இருக்க வேண்டும். எப்படி நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினைகளே இவர்களுக்கு முக்கியமானவையாக இருந்தன. இவர்கள் விவசாயத்தை இலாபம் கருதி நடத்தும் தொழிலாக எடைபோடவில்லை. எனவே, அரிஸ்டாடில் கூறியதைப்போல் இத் தொழிலை உயர்வானதென்றும், இயல்பானதென்றும் கருதினர். வணிக ஆதிகத்திலிருந்து ரோமப் பேரரசை மீட்கும் நோக்கத்தோடுதான் விவசாயம் வானளாவப் புகழப்பட்டது. பின்னல், பிரான்ஸ் நாட்டில் தோன்றிய இயற்கைவாதிகளுக்கு முன்னோடிகளாக இவர்கள் தோன்றினுர்கள் என்ருல் மிகையாகாது.

இவ்வெழுத்தாளர்கள், அடிமைமுறையை இழிவாகப் பேசியது ஒரு பெரும் சாதனையாகும். அடிமைத்தொழிலைப் பேணிக்காக்க வேண்டுமென்று வலியுறுத்திய கிரேக்க நாட்டு அறிஞர்களுக்கு நேர்மாருன கருத்தை இவர்கள் வெளியிட்டனர். "வாழ்க்கையில் எவ்வித நம்பிக்கையுமில்லாதவர்களைப் போன்று, திருத்தப்பட

முடியாத அடிமைகளை வைத்து வேளாண்மை செய்வது மிக மட்டமான செயல்'' என்று பிளினி கூறுகிறார். வேளாண்மைத் தொழில் செய்யும் குடிமக்கள் தான் சமுதாயத்தில் தலை சிறந்தவர்கள் என்பது காட்டோவின் கருத்து. எவனொருவன் வாரிசின் மூலமாகத் தான் அடைந்த சொத்தை விருத்தி செய்து தன் பிள்ளைகளுக்கு விட்டுச் செல்கிறானோ அவன்தான் சமுதாயத்தின் பரோபகாரியாவான் என்று காட்டோ கூறினார். இக் கூற்றை அக் காலத்திய ரோமானியர் புகழ்ந்து பாராட்டினர். எனினும், மரங்களை வெட்டும் வழிவகைகள், முட்டைக்கோசின் மருந்துகள், உப்புக்கண்டம் தயாரிக்கும் முறை ஆகியவற்றைப்பற்றித்தான் இவர்கள் விவரமாக ஆராய்ந்தனர். எனவே, விவசாயச் சாகுபடி முறையைத்தான் இவர்கள் விளக்கிக் கூறினர் என்றே சொல்ல வேண்டும்.

சட்ட நிபுணர்கள்

நீதித்துறைக்கு ரோமானியர் செய்திருக்கும் சேவை மகத்தானது; உலகப் புகழ் பெற்றது. எனினும், இதைப்பற்றி நாம் விவரமாக ஆராயவேண்டிய அவசியமில்லை. நாகரிக உலகிற்கு ரோமானியச் சட்ட திட்டங்கள்தான் அடித்தளம் எனலாம். ரோமானியர் சட்டங்களை இயற்கைச் சட்டங்கள் என்றும், மனிதனால் இயற்றப்படும் சட்டங்கள் என்றும் பாகுபடுத்தினர். இப் பாகுபாட்டை இடைக்காலத்தவரும் நவீன உலகத்தவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதோடு, ரோமானியக் குடிமக்களுக்கெனத் தனிச் சட்டமும், எல்லா நாட்டவருக்கும் பொதுவான பன்னாட்டுச் சட்டமும் அவர்களால் இயற்றப்பட்டன.

சொத்துரிமையும் ஒப்பந்த உரிமையும்

சொத்துரிமையும், ஒப்பந்த உரிமையும் இன்றும் பிரபலமான பொருளாதாரப் பிரச்சனைகளாகும். இவ்வுரிமைகளைப் பற்றிய தெளிவான விளக்கத்தை ரோமானியர் தந்துள்ளனர். இவ் விளக்கம் பின்னால் தோன்றிய பொருளாதார அறிஞர்களின் சிந்தனைக்குப் பெரிதும் உதவியதெனலாம். மனிதனின் தனி உரிமைக் கோட்பாட்டிற்கு இவ் விளக்கம் அடித்தளமாக அமைந்ததென்றால் மிகையாகாது. மனிதன் தன்னிடமுள்ள எதையும் பிறருக்குத் தீங்கு ஏற்படாத வண்ணம் எவ்வகையிலும் பயன்படுத்தலாம்; சொத்துரிமை என்பது தன் சொத்தை அனுபவிக்கும் உரிமையைமட்டும் குறிப்பிடுவதல்ல; அச் சொத்தைப் பிறருக்கு வழங்கவும், உபயோகிக்கவும், வீணாக்கவும் கூட மனிதனுக்குள்ள உரிமையைப் புலப்படுத்துகிறது இவ்வாறான சொத்துரிமை விளக்கத்திற்கு இன்றைய உலகம் ரோமாபுரி அறிஞர்களுக்கே கடமைப் பட்டிருக்கிறது. அதேபோல் ஒருவரோடொருவர் பண சம்பந்த

மாகவோ அலலது வியாபாரத தொடாபாலோ ஒபபநதம செயயும பழககவழககததைச சடடபபூாவமாககி, ஒபபநதததை மீறுபவன தணடனை பெறும நிலையை ஏறபடுததிக கொடுததவாகளும ரோமானியாகளதான இவவிருவகைச சடட திடடஙகளும இனறளவும முககியமானவையாகக கருதபபடுகினறன மேலும, இச சடட திடடஙகள ரோமானியா எநத அளவிறகு வணிகததை அக காலததிலேயே முககியமானதாககொணடு விரிவடையச செயதிருநதனா எனபதை நமககுப புலபபடுததுகினறன வியாபாரம பெரிய அளவில் மடடுமினறி, பிற நாடுகளோடும நடைபெறறலதானே ஒபபநதச சடடஙகளுககு வாயபபும வலிமையும இருககும கிரேகக அறிஞாகள சொததுரிமைககு வரமபு வேணடுமென வாதாடியதாக நாம கணடோம ஆனால ரோமானிய நிபுணாகளோ தனிமனிதனுககுளள சொததில வரமபே இருககக கூடாதென வாதாடி, கடடுபபாடிலலாத தனியுரிமைக கோடபாடடை வலியுறுததினா கிரேகக அறிஞாகளின சொததுரிமைக கருததை இடைககாலததவா ஏறறுககொணடனா, ஆனால இனறைய முதலாளிததுவ அமைபபிலுளள சடட திடடஙகளும, நிறுவனஙகளும ரோமானியச சடட திடடஙகளை ஆதாரமாககொணடவை எனவே, நாகரிக உலகின சடட திடடஙகளனைததும ரோமாபுரிச சடட திடடஙகளின மீது வரையபபடடவை எனலாம இககருததை ஆஙகிலப பொருளாதார மேதை திரு ஆலபிரட மாாஷல தன "பொருளாதாரத தததுவஙகள எனனும நூலில பினவருமாறு விளககுகிறாா, "இனறையப பொருளாதார அமைபபில பல நலல அம்சஙகளும, தீய அமசஙகளும உளளன இபபொருளாதார அமைபபுத தோனறுவதறகு ரோமானியாகள தான காரணம எனலாம ' எனவே, நவீனப பொருளாதாரக கருததுககளைச சித்தரிதத வேலையில ரோமானியச சடட நிபுணாகளுககும பஙகு உண்டு

பணடததின மதிபபு

ரோமானிய அறிஞர்கள பணடததின மதிபபைபபறறித தெளிவாக ஒனறும விளககவில்லை எனினும நடைமுறைககேறற விதததில பண்டங்களின மதிபபு அமைய வேணடுமென விருமபினா பனனிரண்டு அடடவணைச சடடங்கள (The laws of the twelve tables) ரோமானியச் சடடங்களில முககியமானவை இச சடடஙகள, சநதையின நிலைமைக்கேறபப பணடங்களின விலைகள மாறுவதை வலியுறுததுகினறன மககளின விருபபபபடி விலை அமையக கூடாது எனறும், தனிபபடடவாகளுககு ஒரு பண்டம எவவளவு பயன் தருகிறது எனற அடிபபடையிலும விலை நிாணயமாகக் கூடாது எனறும் பவுலஸ் கூறுகிறாா பணடஙகளின விலைகள் எலலோருககும் ஒரே மாதிரியாக இருககவேணடுமெனபதே அவரது கொள்கை

ஆனால் நாளடைவில் பரிவர்த்தனை விரிவடைந்து, வணிகம் பெருகிய காலம் வந்தவுடன் ரோமானியர் நியாய விலையைப் பற்றிச் சிந்திக்கலாயினர். டயகிளிஸியன் என்னும் மன்னர் வழக்க மாக ஏற்படும் உற்பத்திச் செலவைக் கொண்டு பண்டங்களின் நியாய விலையை நிர்ணயிக்க முயன்றார் என அறிகிறோம். எனவே, நியாய விலை என்பது வழக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தாகக் கருதினர். எனினும், பண்டத்தின் பயனை அவர்கள் முற்றிலும் புறக்கணித்து விடவில்லை. சான்றாக, "வெங்கலச் சிலை போன்ற பொருள்களின் மதிப்பு, மனிதனின் விருப்பத்தைப் பொருத்தது" என சிசரோ கூறுகிறார். எனவே, பொருள்களின் மதிப்பு அவற்றிற்கான விருப்பத்தைப் பொருத்தது என்பதும், மனிதனின் விருப்பத்தைக் கட்டுப்படுத்தினால்தான் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்பதும் அவரது கருத்து. "சில சமயம் நாம் கொடுக்கும் விலையைக் காட்டிலும் சில பண்டங் களின் மதிப்பு அதிகமாயிருக்கிறது" என செனகா குறிப்பிடுகிறார். இதிலிருந்து பண்டத்தின் பயனுக்கும் விலைக்குமுள்ள தொடர்பினை ரோமானியர் அறிந்திருந்தனர் என்பது தெளிவாகிறது.

தொழில், வணிகக் கட்டுப்பாடுகள்

தனியார் சொத்துரிமைக்கும், ஒப்பந்த உரிமைக்கும் ரோமானயச் சட்டம் பாதுகாப்பு அளித்தது என்பதை முன்னர்க் கண்டோம். எனவே, பொருளாதார நடவடிக்கைகளில் ரோமானிய அரசு தலையிடவே இல்லை என்று சொல்வதற்கில்லை. பண நெருக்கடி ஏற்பட்டபோதெல்லாம் அரசு ஒரு பொது வங்கியை ஏற்படுத்தியது. தனியார் வங்கிகளின் பண வசதி இல்லாமையை ஈடு செய்வதற்கு அவ் வங்கி வழி செய்தது. கடன்பட்டோருக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் பல்வேறு சட்டங்கள் இயற்றப் பட்டன. பொருளாதார' நெருக்கடிக் காலத்தில் விலைவாசிகளை ஏற்றுவதற்காகத்தானியங்களைப்பதுக்கிய வியாபாரிகள் தண்டிக்கப் பட்டனர். தங்களிடமுள்ள தானியங்களையெல்லாம் சந்தைக்குக் கொண்டு வரும்படி வியாபாரிகள் தூண்டப்பட்டனர். ரோம் நகரச் சந்தையில் விற்கப்பட்ட பண்டங்களைச் சரிபார்ப்பதற்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். சந்தையில் மோசடி செய்த வியாபாரிகளின் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பிற நாட்டவர், இத்தாலிய நாட்டு வியாபாரிகளோடு போட்டியிடா வண்ணம் அரசாங்கம் அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வந்தது. தங்கம், வெள்ளி ஆகியவற்றின் ஏற்றுமதி தடுக்கப்பட்டன. எண்ணெய் வியாபாரமே அக் காலத்தில் முக்கியமானதாக இருந்தது. எனவே எண்ணெய் விலைவாசிகளை அரசாங்கம் ஒழுங்குபடுத்தியது. ரோம் நகரில் இருந்த போக்குவரத்து ஒழுங்கு

வேடிக்கையானது மட்டுமல்ல; விவேகமானதும்கூட. ரோம் நகரின் வீதிகளில் மாலையிலும் இரவிலும் மட்டுமே பாரவண்டிகள் செல்லலாம். இக் கட்டுப்பாடுகளை இன்றும் நாம் முக்கிய நகரங்களில் காணலாம். எனவே, பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட்டு ஒழுங்குபடுத்தும் முறை அக்காலத்திலேயே பயனுள்ளதாகக் கருதப்பட்டது. ஒரு வேளை, வணிகவாதிகளின் கட்டுப்பாட்டுக் குறைகளனைத்தும் ரோமானியரின் சட்ட திட்டங்களின் பிரதிபலிப்பாயிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் பின்னால் தோன்றிய வணிகவாதிகளும் பொருளாதாரக் கட்டுப்பாட்டினையே மையமாகக் கொண்டனர்.

முடிவுரை

பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் ரோமானியரின் பங்கு மிகக் குறைவு. சட்ட திட்டங்களை வழங்கி நவீன சமுதாயத்திற்கு வழி காட்டினார்களேயன்றி, பொருளாதாரக் கருத்துகளுக்கு அவர்கள் முன்னோடிகளாக இருந்தனர் என்று கூறமுடியாது. எனினும், அவர்கள் சேவையை நாம் புறக்கணிக்கவும் முடியாது. படை பலத்தின் பெருமையையும் அரசியல் முக்கியத்துவத்தையும் ஆதாரமாகக் கொண்டே அவர்கள் சிந்தனை சுழன்றது. ரோமப் பேரரசின் பெருமை காரணமாக ரோமானிய அறிஞர்கள் எழுதிய ஏடுகள் உலகெங்கும் பரவின. அவர்கள் நூல்களைப் பின்னால் ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து நாட்டவர் தழுவித் துருவிப் படித்தனர். அந் நூல்களை இவர்கள் போற்றியதும், ஏற்றியதும் என்றும் மறக்க ஒண்ணாததாகும். பொருளாதாரக் கொள்கை எதையும் ரோமானியர் உருவாக்கவில்லை; எனினும், பொருளாதாரச் சிந்தனை வரலாற்றுக் கோர்வையைப் புரிந்து கொள்வதற்கு அவர்கள் கருத்துகளும், ஏடுகளும் முக்கியமானவையாகும். சான்றாக, வேலைப் பகுப்பை எடுத்துக்கொண்டால், இதனை முழுமையாக ஆய்ந்து விளக்கிய பெருமை ஆடம் ஸ்மித்தையே சாரும். ஆனால், இவ் விளக்கத்தில் ஆடம் ஸ்மித்துக்கு முன்னோடியாக டேவிட் ஹியூம் இருந்தார் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஹியூம் அவர்கள் ரோமானிய அறிஞர்களுக்குக் குறிப்பாகச் சிசிரோ அவர்களின் கருத்துக்குத்தான் பெரிதும் கடமைப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். எனினும், பழங்கால ரோமானிய, கிரேக்க அறிஞர்கள் இருந்திராவிட்டால் வேலைப்பகுப்பு என்ற கருத்தே பொருளாதாரத்தில் புகுந்திருக்க முடியாது என்றும் சொல்வதற்கில்லை.

சுருங்கக்கூறின், பொருளாதாரச் சிந்தனை வரலாற்றிற்கு ரோமானியர் செய்த சேவை, சட்டவியல் வளர்வதற்குத் துணை செய்தது எனலாம். பொருளாதாரத் தொடர்புடைய எக்கோட்பாட்டையும் அவர்கள் முறையாகக் கூறியதாகச் சொல்ல முடியாது

4. இடைக்காலச் சிந்தனை

இடைக்காலம் என்பது எது என்பதில் வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்துவேறுபாடு இன்றும் ஓரளவு இருந்துவருகிறது. எனினும், 5ஆம் நூற்றாண்டில் ரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்த காலம்தொட்டு இடைக்காலம் தொடங்கியதெனலாம். 15ஆம் நூற்றாண்டின்போது கான்ஸ்டான்டிநோபிள் வீழ்ச்சியடைந்து, அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டவுடன் இடைக்காலம் முடிவுற்றது. எனவே, இடைக்காலம் என்பது ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளைக் குறிப்பிடுவதாகக் கொள்வோம்.

இடைக்காலத்தில் வழக்கிலிருந்த பொருளாதாரக் கருத்துகளைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறுவது கடினம். இன்றையப் பொருளாதார அமைப்பையும் வளர்ச்சி வேகத்தையும் கொண்டு இடைக்காலத்தை நோக்குவோமாயின், அது எவ்வித மாறுதலுமில்லாத மந்த காலம் என்றே தோன்றும். இன்றைய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை எண்ணி இடைக்காலத்தை நோக்கினால், அது கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிறைந்த நிலையான காலமாகவே காட்சியளிக்கும். எனவே, உண்மையான கண்ணோட்டத்திலிருந்து இடைக்காலத்தை நோக்குவதே சிறந்தது. அவ்வாறு நோக்கினால் தான் அக் காலத்திய சமூக அமைப்பையும் பொருளாதாரக் கருத்துகளையும் இயல்பான வழியில் காணமுடியும்.

இடைக்காலப் பொருளாதாரக் கருத்துகளை அறிந்துகொள்ள வேண்டுமாயின், அக் காலத்திய சமூக அமைப்பைத் தெரிந்துகொள்ளல் அவசியம். அச் சமூக அமைப்பு இரண்டு முக்கிய அம்சங்களைக் கொண்டது. அக் காலத்தில் நிலமானிய முறையே (feudal system) செல்வாக்குப் பெற்றிருந்தது. இம் முறை மக்களின் வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்தியது எனலாம். நிலப்பிரபுக்கள் என்றும் அடிமைகள் என்றும் சமுதாயம் இருகூறாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நிலப் பிரபுக்கள் அடிமைகளைக்கொண்டு தம் நிலத்தைச் சாகுபடி செய்து வந்தனர். பின்னர், அடிமைகளுக்குத்

தட்டுப்பாடு ஏற்பட்டு அடிமை முறையே படிப்படியாக மறைந்தது. இந் நிலையில் நிலப்பிரபுக்கள் தங்கள் நிலத்தைக் குத்தகைதாரர்களுக்குப் பிரித்துக் கொடுத்து, குத்தகை பெற்றுவந்தனர். பேரரசு வீழ்ச்சியடைந்த நிலையில் அரசுப் பொறுப்பை நிலப்பிரபுக்களே பெற்றனர். அவர்களின் பண்ணைதான் பொருளாதார, அரசியல் அமைப்பின் அடித்தளமாக அமைந்தது. இவ்வாறாக, இடைக்காலச் சமுதாயம் பல மாறுதல்களுக்குட்பட்டு இறுதியில் நிலமானிய முறையில் முடிந்தது.

நிலமானிய முறையில் ஒவ்வொருவரின் சமூக நிலையும் கடமைகளும் வரையறுக்கப்பட்டிருந்தன. எனவே, சமூகப் பாகுபாட்டின் அடித் தளத்தில்தான் இடைக்காலச் சமுதாயம் அமைந்தது. சமூகப் பாகுபாடு இருந்தபோதிலும் ஒருவரையொருவர் சார்ந்து வாழ வேண்டிய அவசியமும் இருந்தது. ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய பொருளாதாரக் கடமைகளும் வரையறுக்கப்பட்டிருந்தன. எனவே, பல்வேறு இனத்தவர் ஒருவரோடு மற்றொருவர் பின்னி, ஒரு கூட்டமைப்பைப்போல் சமுதாயம் ஒன்றுபட்டிருந்தது. மக்களிடையே இருந்த சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அனைவரும் உணர்ந்திருந்ததோடுமட்டுமன்றி; அவற்றை அப்படியே ஏற்றும் கொண்டனர். ஒவ்வொருவனுடைய சமூக நிலைமட்டுமன்றி, அவனது கடமைகள், உரிமைகள் அனைத்தும் திட்டவட்டமாக நிர்ணயிக்கப் பட்டிருந்தன. இவ்வாறாக, இடைக்காலச் சமுதாயம் குறிப்பிட்டதொரு நிலையைக் கொண்டு நிலைத்திருந்தது இயல்பான பொருளாதாரமே இடைக்காலச் சமுதாயத்தின் சிறப்பியல்பாகும். வணிகம் ஓரளவிற்றுத்தானிருந்ததேயன்றி, பெரிய அளவில் நடைபெறவில்லை; சிறு சிறு கிராமங்களில்தான் மக்கள் வாழ்ந்தனர்; எனினும் அக் கிராமங்களனைத்தும் தம் தேவைகளைத் தாமே நிறைவு செய்வதாயிருந்தன. அமெரிக்கா கண்டுபிடிக்கப்படும்வரை பணப் புழக்கம் அதிகமாயிருந்தது என்று சொல்வதற்கில்லை. எனவே, பரிவர்த்தனை அனைத்தும் பணத்தினால் செய்யப்படவில்லை. இவ்வாறாக, இடைக்கால மக்கள் தத்தம் சமூக நிலையினை ஏற்றுக்கொண்டு, சமுதாயத்திற்குத் தாம் செய்யவேண்டிய பணிகளையும் கடமைகளையும் தவறாமல் செய்துவந்தனர்.

இடைக்கால மக்களை ஒன்றாகப் பிணைத்து வைத்திருந்த பிரிதோர் அம்சம் மதமாகும். கத்தோலிக்கத் திருச்சபை (Church) ஐரோப்பா முழுவதும் முழு ஆதிக்கம் செலுத்தியது. இவ்வுலக வாழ்க்கை நிரந்தரமானதன்று; மறுவுலக வாழ்வே மனிதனுக்கு மீட்பையும் நிறைவையும் கொடுக்கும் வாழ்க்கை. அம் மறு உலக வாழ்வை அடைய மக்கள் இவ்வுலகில் தங்களைப் புனிதப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று திருச்சபை போதித்து வந்தது. இப்

போதனையின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கை முறைகளை யெல்லாம் சீர்படுத்தி ஒழுங்குபடுத்தியது. மோட்சத்தை அடைவது தான் மனிதனின் ஒரே குறிக்கோளாக இருக்கவேண்டுமென்று போதித்துவந்த திருச்சபை இவ்வுலக வாழ்வைப்பற்றி மக்கள் அதிக அக்கறை காட்டலாகாது என்றும் உபதேசித்தது. அடுத்து, திருச்சபை என்பது குறிப்பிட்டதோர் இனத்தவருக்குமட்டும் உரிய தன்று. எல்லா நாட்டவருக்கும் இனத்தவருக்கும் பொதுவானது. எனவே, எல்லா இனத்தவரும் திருச்சபை அங்கத்தினர்களாகி, அதன்மீது முழு நம்பிக்கைக் கொண்டவர்களாய் வாழ்ந்தனர். பின்னுல் தோன்றிய வணிக வாதிகளின் கருத்துக்கும் நம்பிக்கைக் கும் மாருக, இடைக்காலத்தவர் அனைவரும் இனவேறுபாடின்றி, எல்லாரும் சகோதரர்களாக வாழ்ந்தனரென்ருல், அதற்குத் திருச் சபையின் போதனையே காரணமாகும். இதனுல் ஐரோப்பா முழு வதும் ஒருவித ஒற்றுமை உணர்ச்சி உண்டாயிற்று. தேசிய அடிப் படையிலன்றி உலக அடிப்படையில் அமைந்த திருச்சபையின் போதனைக்கு எதிராக, வணிகவாதிகள் தேசிய அடிப்படையை வலி யுறுத்தியது இடைக்காலம் முடிந்த பின்னர்தான். இடைக்காலத்தில் கல்விகற்றிருந்தோர் ஒருசிலரே. அவர்களில் பெரும்பாலானோர் கிருத்துவத் சமயத்தவர். அனைவருமே இலத்தீன் மொழியைப் பயின் றனர். இலத்தீன் மொழிதான் கற்றவர்கள் அனைவருக்கும் பொது மொழி. எனவே, கற்றவர்கள் எங்கு கூடிஞலும் இலத்தீன் மொழி யில்தான் ஒருவரோடொருவர் உறவாடினர். இதனுல் படித்தவர்க ளிடையே ஒற்றுமை உணர்வு வளர்ந்தது.

ரோமப்பேரரசு சரிவடைந்தபின், திருச்சபைதான் மாபெரும் உலக அமைப்பாக விளங்கியது. மதவாழ்க்கையில் மட்டுமன்றி, இவ்வுலகக் காரியங்களிலும் அதன் அதிகாரம் வலுத்தது. இடைக் காலப் பொருளாதார அமைப்பில் திருச்சபைதான் நடுநாயகமாக விளங்கியது என்ருல் மிகையாகாது. அதன். சொத்து விரிவடைந் தது மட்டுமன்றி, ஐரோப்பாவிலேயே அதிக நிலம் திருச்சபைக்குச் சொந்தமானது. ஏனைய நிலப்பிரபுக்கள் சிதைந்து, அவர்களின் அதிகாரம் குறிப்பிட்ட பகுதிகளுக்குமட்டும் உரியதாயிருந்த நிலை யில் திருச்சபைதான் எல்லா இனத்தவருக்கும் பொதுவான மதக் கோட்பாட்டின் வழியாக ஐரோப்பாவெங்கும் ஒற்றுமையுணர்ச்சியை ஏற்படுத்தி, ஆதிக்கம் செலுத்திவந்தது.

இடைக்காலம் முழுவதும் திருச்சபையின் செல்வாக்கே ஓங்கி யிருந்ததின் விளைவாக, மனிதனின் ஆன்மீக நல்வாழ்வே முக்கிய மானதாகவும், பொருளாதார வாழ்க்கை துச்சமென்றும் மக்கள் நம்பினர்.

புனித தாமஸ் அக்வினஸ் (1225—1274)

(St. Thomas Aquinas)

பொருளாதாரக் கருத்துகள் எவ்வாறு இடைக்காலத்தில் இருந்தன என்பதை விளக்குவதற்கு மேற்கூறிய இரண்டு அம்சங்களே போதுமானவை. இடைக்காலப் பொருளாதாரக் கருத்துகளைக்கூறிய பல அறிஞர்களின் பிரதிநிதியாக புனித தாமஸ் அக்வினஸ் விளங்கினுர். அக்வினஸ் பல அரிய நூல்களை எழுதினுரெனினும், 'வேத இயல்பின் சாரம்' என்னும் நூலே நம் ஆய்விற்கு முக்கியமானது. இந் நூலின் வழியாக இடைக்காலச் சிந்தனையையே அவர் உருவாக்கினுர். இடைக்காலம் முழுவதும் அக்வினஸ் அவர்கள்தான் அறிவுச் சிகரமாக ஆட்சிபுரிந்தார். வேத இயலை அறிவியல்களுக்கெல்லாம் மேலான அறிவியலாகச் செய்த பெருமை அவருக்குண்டு.

அக்வினஸின் கருத்துகளனைத்தும், அரிஸ்டாடிலின் கொள்கையினையும் கிருத்துவ மதப் போதனையையும் ஆதாரமாகக் கொண்டவை. கிருத்துவ மதப் போதனை என்பது பைபிளில் காணப்படுவது மட்டுமன்று; பழங்காலக் கிருதுவக் குருக்களின் நூல்களிலும் காணப்படுவதாகும். எனவே, அரிஸ்டாடிலின் நூல்கள், பைபிள், கிருத்துவ மறைக் குருக்களின் நூல்கள் ஆகிய மூவகை ஆதாரங்களிலிருந்தும் அக்வினஸ் மேற்கோள் காட்டுகின்றுர். எனவே, அம் மூன்று ஆதாரங்களையும் சமமாக மதித்தார் என எண்ணத் தோன்றுகிறது. அக்வினஸ் கிருத்துவ மதப் போதனைகளையும் அரிஸ்டாடிலின் கொள்கைகளையும் இணைத்து ஒன்றுபடுத்த முயன்றுர் என்பது சில அறிஞர்களின் கருத்து. இடைக்காலப் பொருளாதாரக் கருத்துகளை உருவாக்குவதில் அரிஸ்டாடிலின் செல்வாக்கே அதிகமாகக் காணப்பட்டது. பணத்தின் பணிகள், கடுவட்டி வாங்குவதன் கொடுமை, பரிவர்த்தனையின் தன்மை, நீதியின் இயல்பு ஆகியவை பற்றிய அரிஸ்டாடிலின் கருத்துகளை அக்வினஸ் அப்படியே ஏற்றுக்கொண்டு, கிருத்துவ மதப் போதனைகளை ஆதாரமாகக் கொண்டு அக் கருத்துகளை மேலும் வலியுறுத்தினுர்.

எனினும், கிருத்துவப் போதனையே அக்வினஸின் எண்ணத்தைச் சித்தரித்தது. பழங்காலக் கிரேக்க நாட்டு அறிஞர்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் நேர்மாருன போதனையாக கிருத்துவப் போதனை அமைந்தபோது, மதப் போதனையையே அக்வினஸ் வலியுறுத்தினுர். இதற்குச் சான்ருக மூன்று முக்கிய கருத்துகளை எடுத்துக்கொள்வோம். முதலாவதாக, கிருத்துவ மதத்தின் போத

னைப்படி எல்லா மக்களும் இறைவனின் பிள்ளைகளாவர்; எனவே, எல்லாரும் சகோதரர்கள். இப் போதனை கிரேக்க அறிஞர்களின் கொள்கைக்கு முற்றிலும் மாறுனது. மக்களிடையேயுள்ள இயல்பு, திறன் அடிப்படையில் சமுதாயத்தைப் பாகுபடுத்தினர் கிரேக்க அறிஞர்கள். அவ்வடிப்படையில் அடிமை வாழ்வையும் வலியுறுத்தினர். ஆனால், அக்வினஸ் அரிஸ்டாடிலின் அடிமை மோகத்தை அப்படியே ஏற்றுக்கொண்டார்; எனினும் கிருத்துவ மதப் போதனையை விட்டுவிடவில்லை. குடிமகன், அடிமை என்று யாராயிருந்தாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் என்றும் அழியாத ஆன்மா ஒன்று உண்டு. எனவே, எல்லா மனிதர்களும் கடவுளுக்கு முன்பு சமமானவர்கள் மட்டுமல்ல, சகோதரர்களும் ஆவர் என்று வலியுறுத்தினர் அக்வினஸ். அவ்வாறாயின், செல்வந்தர்கள் ஏழைகளுக்குத் தருமம் செய்வது புண்ணியம்மட்டுமல்ல, மோட்சத்திற்குச் செல்லும் வழியுமாகுமென்று கூறினர்.

இரண்டாவது, இவ்வுலக வாழ்க்கை மறுவாழ்விற்குரிய மார்க்கம் என்பது கிருத்துவப் போதனை. மறு உலக வாழ்வான மோட்ச வாழ்வே மக்களின் குறிக்கோள். எனவே, அக் குறிக்கோளை அடைய மக்கள் அனைவரும் தத்தம் வாழ்வைப் புனிதமாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வுலக வாழ்வு நிலையானதல்ல என்றுல், இவ்வுலகக் காரியங்களனைத்தும் முக்கியமல்ல என்றுகிறது. எனவே, எதை உண்பது, உடுத்துவது, எவ்விடம் உறங்குவது என்பதைப்பற்றியெல்லாம் மனிதன் கவலைப்படக்கூடாது. 'வானிலுள்ள பறவைகளைக் காட்டி, அப் பறவைகள் எதை உண்பது, உடுத்துவது என்பதைப்பற்றியெல்லாம் கவலை கொள்வதில்லை. மனிதன் பறவையைக் காட்டிலும் உயர்ந்தவன்; ஒன்றுக்கும் உதவாத பறவைகளையே இறைவன் கட்டிக்காத்து வரும்போது, ஆன்மாவுடன் கூடிய மனிதனை எவ்வளவு தூரம் அவர் பாதுகாப்பார்' என்று ஏசு கூறியதை நினைவுபடுத்திக்கொள்வது நன்று எனவே, மறு உலக வாழ்வுதான் மனிதனின் இடைவிடாத கவலையாயிருக்க வேண்டுமென்பது, கிருத்துவ மதத்தின் சாரம். இவ்விடத்தில் அக்வினஸ் அவர்களின் கருத்தை நினைவுபடுத்தல் நன்று. அடிமைகூட மோட்சத்தை அடைய முடியும் என்று அவர் கூறுகிருர். எனவே, அடிமையும் உயர்குடி மகனும் இறைவனின் படைப்பில் ஒருவரே என்கிறது. இருந்தபோதிலும் இவ்வுலகில் ஏழையாகவோ, பணக்காரனுகவோ, அல்லது உயர்குடிமகனுகவோ, அடிமையாகவோ வாழ்வது இறைவனின் சித்தம் என்கிருர் அக்வினஸ்.

மூன்றுவதாக, வேலை செய்வது அடிமையின் கடமை; எனவே, கீழ்த்தரமானது என்பது கிரேக்க அறிஞர்களின் கருத்து, ஆனல், கிருத்துவ மதமோ வேலை செய்வது மனிதனின் கடமை; புனித

மானதென ஏற்றிப் புகழ்ந்தது. ஒவ்வொருவனும் வேலை செய்ய வேண்டும் என்று பைபிள் வலியுறுத்துகிறது. 'வேலை செய்யாத எவனும் சாப்பிடக்கூடாது' என்று புனித பால் கூறுகிறார். ஏசுவைப் பின்பற்றிய சீடர்கள் அனைவரும் சாதாரண வேலை செய்துவந்தவர்களே. வேலைசெய்ய வேண்டுமென்பது இறைவனின் சட்டம். வனப்பு மிகுந்த தோட்டத்திலிருந்து ஆதாமை விரட்டியடித்த இறைவன், அவனுக்குக் கொடுத்த தண்டனையே வேலைதான். 'உன் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு நீ உணவைத் தேடவேண்டும்' என்றுதான் இறைவன் கூறினார். எனவே, மனிதன் மோட்ச வாழ்வை அடைவதற்குக் கடினமான உழைப்பு அவசியம் என்றே கிருத்துவ சமயம் போதனை செய்தது. வேலையின் மகத்துவத்தை மட்டுமன்றி அதன் உயர்வையும் இன்றியமையாத் தன்மையையும் வலியுறுத்துகிறது கிறித்துவ மதம்.

மேற்கூறிய மூன்று கருத்துகளிலும் கிருத்துவ மதப் போதனைக்கும் கிரேக்க அறிஞர்களின் கொள்கைக்குமுள்ள வேறுபாடுகள் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகின்றன. இருந்தபோதிலும், அரசியல், ஒழுக்க இயல் ஆகியவற்றின் கண்ணோட்டத்திலிருந்து எவ்வாறு பொருளாதாரக் கருத்துகளைக் கிரேக்க அறிஞர்கள் கண்டார்களோ, அதேபோன்றுதான் இடைக்காலத்தில் அக்வினஸ் ஒழுக்க வாழ்வின் அடிப்படையில் பொருளாதாரக் கருத்துகளை விளக்கினார். கிரேக்க நாட்டவருக்கு அரசியலும் ஒழுக்க இயலும் முக்கியமானதாயிருந்ததைப்போன்று அக்வினஸுக்குப் புனித வாழ்வே குறிக்கோளாக இருந்தது. மேலும், இடைக்கால மக்களின் நல்வாழ்விற்குத் திருச்சபையே வழிகாட்டியாகக் கருதப்பட்டது. இடைக்காலப் பொருளாதார வாழ்வில் கெடுபிடி வட்டி எவரும் வாங்கக்கூடாதென்பதும், நியாய விலைக்கே பொருள்கள் விற்கவும் வாங்கவும் வேண்டுமென்பதும்தான் முக்கியமான அம்சங்களாய் விளங்கின. நியாயம் என்ற அடிப்படையில்தான் இவ்விரு அம்சங்களும் ஆராயப்பட்டன. மக்கள் அனைவரும் சகோதரர்களென்றால், ஒருவரையொருவர் மதித்து ஒவ்வொருவரின் உரிமையையும் பாதுகாப்பதுதானே நியாயம். சுருங்கக் கூறுவதாயின், ஒவ்வொருவரும் நியாயமாக நடந்து கொள்ளவேண்டும். எக் காரணத்தைக் கொண்டும், எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒருவரையொருவர் ஏமாற்றக்கூடாது. இதுதான் அக்வினஸ் அவர்களின் போதனைக்கும் கருத்துக்கும் ஆணிவேர். இடைக்காலம் முழுவதும் இவ்வெண்ணமே சிறப்புப்பெற்று விளங்கியது. எனவே, கிருத்துவப் பரம்பரை நம்பிக்கையையும் பழக்க வழக்கங்களையும் அரிஸ்டாடிலின் கொள்கைகளோடு இணைத்துப் பின்னியதோடு அவை அனைத்தையுமே தெளிவாக விளக்கி, முழுமைபடுத்தினார் அக்வினஸ்.

சொத்துரிமை

சொத்துரிமையைப் பற்றிய இடைக்காலக் கருத்தினை அக்வின ஸின் நூலில் காணலாம். தனியார் சொத்துரிமையை அக்வினஸ் வலியுறுத்தினுரா அல்லது பொதுவுடைமையின் சிறப்பை எடுத்துக் கூறினுராவென்ருல், இக் கேள்விக்கு விடை கூறுவது கடினம். ஜெருசலேம் நகரத்துப் பழங்காலத் திருச்சபையின் போதனை யையும் மதகுருக்களின் நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பார்த்தால், பொதுவுடைமைதான் ஓரளவிற்குச் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பது தெளிவாகும். சொத்து வைத்திருப்பது மனிதனின் ஆன் மீக வாழ்விற்குத் தடையாக இருக்கும் என்பதை ஏசுவின் போதனை யில் காணலாம். 'ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழை யலாம்; ஆனுல் பணக்காரனைப் பரலோகம் நுழைவது கடினம்' இப் பொன்மொழிக்குப் பலரும்பலவிதமாகப்பொருள் கொடுப்பர். ஆனுல் உண்மைப் பொருள் எதுவெனில், பணக்காரர்களுக்கு எச்சரிக்கை அளிக்கத்தான் ஏசு விரும்பினுரேயன்றி, பணமே கூடாதென்ரே அல்லது பணக்காரனைப் பாவி என்ரே அவர் கூறவில்லை. எது எவ்வாறிருப்பினும், பொதுவுடைமைக்கு ஆதரவாக ஏசு எந்தப் போதனையும் செய்யவில்லை. ஜெருசலேமில் வாழ்ந்த பழங் கிருத்து வர்கள் எல்லாச் சொத்தையும் பொதுவாகத்தான் அனுபவித் தார்கள் என்பது உண்மை. என்ருலும், தனிப்பட்டவர்கள் தம் சொத்தை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டுமென்றுதான் திருச்சபை போதித்தது என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உள்ளன.

எனவே, அக்வினஸின் போதனைக்கும் பழங்காலக் குருக்களின் போதனைக்கும் முரண்பாடு இல்லை என்றே சொல்லவேண்டும். அரிஸ்டாடிலைப் போன்றே அக்வினஸும் 'சொத்துரிமை என்பது மனிதனுக்கு இயல்பானது' என்கிருர். இயற்கை விதியை ஆதார மாகக்கொண்டு தனி மனிதனின் சொத்துரிமைக்கு விளக்கம் தருகிருர். எல்லாச் சொத்துக்களுமே அனைவருக்கும் பொதுவாக இருக்கவேண்டுமென்பதை இயற்கை விதி வலியுறுத்துவதில்லை என்கிருர். இவ்வாருக, சொத்துரிமை என்பது இயல்பானதென் பதை எண்பித்துவிட்டு, அவ்வுரிமை இரண்டுவகைப்படு மென்கிருர் அக்வினஸ். ஒன்று, சொத்தைப் பெறுவதற்குள்ள உரிமை, அரிஸ் டாடிலின் வாதத்தையொட்டியே சொத்தை அடையும் உரிமையை அக்வினஸ் வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது. தனியார் சொத் துரிமை இருந்தால்தான் அச் சொத்துக்கள் நன்ருகப் பாதுகாக்கப் படும்; அதனுல் எல்லோரும் திருப்தி அடைவர் என்பது அக்வின ஸின் வாதம். மேலும், சொத்து பொதுவானதாக இருந்தால் அடிக்கடி சச்சரவு ஏற்படுமென்றும் கூறுகிருர். இரண்டாவது

உரிமை சொத்தைப் பயன்படுத்துவதைப் பொறுத்தது. சொத்தைத் தன்னிச்சைப்படிப் பயன்படுத்த எவனுக்கும் உரிமை கிடையாது; எல்லாருக்கும் பயனளிக்கும் வகையில்தான் அதைப் பயன்படுத்தவேண்டும் என்கிறார் அக்வினஸ். எனவே, அரிஸ்டாடில் கூறியதைப்போன்றே அக்வினஸும் 'தனி நபரே சொத்துக்கு உரிமை பெற்றவர்; ஆனால், அதன் பயன் எல்லாருக்கும் உண்டு' என்று கூறுகிறார். எனவே, தனியுரிமையை வரம்பின்றி வலியுறுத்திய ரோமானியர்களைப் பின்பற்றாமல், நிபந்தனையுடன் கூடிய சொத்துரிமையை வலியுறுத்திய அரிஸ்டாடிலையே அக்வினஸ் பின்பற்றினார். சொத்து வைத்திருப்பது நல்லதெனக் கூறவில்லை. அதனை நல்ல வழியில் பயன்படுத்தினால்தான் சொத்துரிமை சிறந்ததாகும் என்பது அக்வினஸின் கருத்து. இக்கருத்தை எவ்வளவு தூரம் வலியுறுத்தினாரென்றால், நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தேவைப்படும் அளவு திருடுவதை அனுமதிக்கலாமென்கிறார். பசி எடுப்பது இயற்கை விதி; பசித்தவனுக்குப் புசிக்கக் கொடுக்க வேண்டியது மக்கள் சட்டம். எனவே, இயற்கை விதியை மக்கள் இயற்றும் சட்டம் மதிக்க வேண்டுமென்பது அக்வினஸின் வாதம். இதிலிருந்து ஓர் உண்மை புலப்படுகிறது. அதாவது, வேண்டிய அளவிற்குமேல் சொத்துள்ளவர்கள் ஏழைமக்களைப் பராமரிக்க வேண்டும். இது இயற்கை விதி. ஏழைமக்களின் பராமரிப்புக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளாத அந்நாளில் சொத்துரிமையை அனுபவிப்போர் இரக்கமுடையவராய் ஏழை மக்களுக்கு உதவவேண்டுமென வலியுறுத்தப்பட்டதில் வியப்பொன்றுமில்லை.

மேற்கூறிய தத்துவங்களை அடிப்படையாகக்கொண்டே இவ்வுலகப் பொருளாதாரக் காரியங்களை எடைபோடுகிறார் அக்வினஸ். இவ்வுலகில் மனிதன் செய்யும் காரியங்கள், அவனது நிலைமை அனைத்தையும் மறுஉலக வாழ்விற்கு ஏற்றவையா என்றுதான் கணித்துப்பார்க்கிறார். செல்வம் சேகரிப்பது நல்லதா என்றால், ஒழுக்கமான வாழ்விற்கு உகந்ததாயிருந்தால் நல்லது என்கிறார். அதேபோன்றுதான் வறுமையும். உலக ஆசாபாசங்களிலிருந்து விடுவித்து, மனிதனைப் புனிதமான வாழ்வு நடத்த உதவுமென்றால் வறுமையும் நல்லதுதான் என்கிறார். எனவே, செல்வமோ, வறுமையோ அது எதுவாயிருந்தாலும் நல்லதென்றோ கெட்டதென்றோ சொல்வதற்கில்லை. அவற்றை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம். நல்வாழ்விற்கும் புனித நடத்தைக்கும் பயன்படுத்தினால் அவை நல்லவை; மாறாகப் பயன்படுத்தினால் தீயவை. இதுவே அக்வினஸின் முடிவு.

வியாபாரம்

சொத்தைப் பற்றிய விளக்கத்திலிருந்து வியாபாரம் நல்லதா கெட்டதாவென்பதை எளிதாக அறிந்து கொள்ளலாம் என்று அக்வினஸ் கூறுகிறார். வியாபாரத்தை நல்லதென்றோ, இயல்பானதென்றோ கூறமுடியாது என்பது அவரின் கருத்து. எனினும், 'வியாபாரம் என்பது இயல்பானதல்ல' என்கிறார். இது அரிஸ்டாடிலின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது. தன் குடும்பத்தைப் பராமரிக்கவும் சமுதாயத்தின் நலனுக்கென்றும் செய்யப்படும் வியாபாரத்தை மட்டும் நியாயமானதாகக்கொள்கிறார் அக்வினஸ். அவ்வாறு நடைபெறும் வியாபாரத்தில் கிடைக்கும் இலாபத்தை வியாபாரியின் முயற்சிக்கும் உழைப்பிற்கும் தரப்படும் வெகுமதியாகவே கருதவேண்டும் என்கிறார். மேலும், வியாபாரத்தில் கைமாறும் பொருள்கள் அல்லது பரிவர்த்தனையாகும் பண்டங்களின் மதிப்பு ஒன்றுக்கொன்று சமமாயிருத்தல் அவசியம் என்பதை வலியுறுத்துகிறார். இக் கருத்து ஏற்கெனவே அரிஸ்டாடில் அவர்களால் நீதியைப்பற்றிய விளக்கத்தில் கொடுக்கப்பட்டது என்பதை மனதில் கொள்வது நன்று.

நியாயவிலை

வியாபாரமோ, பரிவர்த்தனையோ தவிர்க்கப்பட முடியாததெனின், சொத்துரிமை தனிப்பட்டோருக்கு வேண்டுமெனின், பரிவர்த்தனை செய்வதெப்படி என்ற கேள்வி எழுவது நியாயமே. இக் கேள்விக்குப் பின்வருமாறு விடைதருகிறார் அக்வினஸ். ஒருவரோடொருவர் பொருளாதார உறவுகொள்ளும்போது 'நீதி', 'நியாயம்' என்ற அடிப்படையான தத்துவம் பேணப்படவேண்டும். நியாயமும் சமத்துவமும் ஒன்றோடொன்று இணைந்தவை எனவே, சமமான வழியில் பரிவர்த்தனை செய்வதே நியாயமானதாகும். பரிவர்த்தனை செய்யப்படும் பண்டங்கள் சமமானவைதானா என்பதை அளவிடுவதற்கே பணம் உதவுகிறது. எனவே, பணம் என்பது பண்டங்களின் மதிப்பை அளவிடும் சாதனமாகும். பண்டத்தின்மதிப்பைவிட, விலை அதிகமாகவோ, குறைவாகவோ இருந்தால் நியாயம்புறக்கணிக்கப்பட்டுவிட்டதென்று பொருள். எனவே, அதிக விலைக்கு விற்பதும் குறைந்த விலைக்கு வாங்குவதும் அநீதியாகும். இக் கருத்தை வலியுறுத்தும் வகையில் அக்வினஸ் கூறுவது குறிப்பிடத்தக்கது. 'அதிக விலைக்குப் பண்டத்தை விற்க வேண்டுமென்பதற்காகத் தவறான வழியை மேற்கொள்வது பாவச் செயலாகும்; ஏனெனில், அவ்வாறு செய்பவன் மற்றவனை ஏமாற்றுகிறான்; இழப்படையச் செய்கிறான்.'

நியாயவிலை என்றாலென்ன? எந்த அடிப்படையில் நியாயவிலை நிர்ணயமாகிறது? இக் கேள்விகளுக்குகந்த விடையை

எவருமே இடைக்காலத்தில் கொடுத்ததில்லை. ஓரளவிற்கு இதற்கு விளக்கம் கொடுக்க முயன்றவர் ஆல்பர்டஸ் மாகுஸ் என்பவர். அரிஸ்டாடிலைப் பின்பற்றும் முறையில், சம அளவு உழைப்பை யுடைய அல்லது செலவைக்கொண்ட பண்டங்களே பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும் என்றார் மாகுஸ். அக்வினஸ்கூட ஏதோ ஒருவகை உற்பத்திச் செலவை எண்ணியே நியாயவிலை பற்றிக் கூறியதாகத் தெரியவருகிறது. உற்பத்திச் செலவு என்பதும் நியாயமானதாக இருக்கவேண்டும் என்று அக்வினஸ் வலியுறுத்து கிறார். அதாவது, பண்டங்களை உற்பத்தி செய்வோர் தாமும் தம் குடும்பமும் வாழ்வதற்குத் தேவையான விலையே நியாயவிலை என்கிறார். பொதுவாகக் கூறவேண்டுமாயின், பழக்க வழக்கப்படி எந்தப் பொருள் எந்த விலைக்கு விற்கப்பட்டதோ அதுவே நியாய விலையாகும். வேறுவிதத்தில் கூறுவதென்றால், வியாபாரத்தின் வழியாக ஒருவன் செல்வனாகக்கூடாது என்ற அடிப்படையில் தான் நியாயவிலை என்ற கருத்தை விளக்க முற்படுகிறார் அக்வினஸ். ஒவ்வொருவரும் தத்தமக்கு இறைவன் அளித்துள்ள சமூக மதிப்பை அப்படியே பேணவேண்டுமென்றே இடைக் காலத்தவர் எண்ணினர். ரோமாபுரிச் சட்டத்தின் விளைவாலும் மனித இயல்பின் காரணத்தாலும் அதிக விலைக்குப் பண்டங்களை விற்கும் மனப்பான்மை வியாபாரிகளிடையே இருந்து வந்தது. எனவே, அக்வினஸ் மனிதனால் இயற்றப்படும் சட்டங்களைவிட இறைவன் தந்துள்ள சட்டங்கள் சிறந்தவை மட்டுமன்று; வலு வானவை என்பதை வலியுறுத்துகிறார். மனிதன் தன் இயல்பினால் காரியங்களைச் செய்யும்போது சுயநலமுடையவனாகிறான்; சுயநலம் என்பது பெரும்பாலும் தீயவழிக்கே இழுத்துச்செல்லும் வலிமை யுடையது என்பது அக்வினஸின் நம்பிக்கை. இந்த நம்பிக்கை யை ஆடம் ஸ்மித்தின் கொள்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இடைக்காலச் சிந்தனைக்கும் நவீனகால எண்ணத்திற்குமுள்ள வேறுபாடு தெளிவாகும். எனினும், இடைக்காலப் பொருளாதார, சமூகச் சூழ்நிலையை நாம் புறக்கணித்துவிடக்கூடாது. இடைக் காலச் சமுதாயம் ஒழுக்கத்தையே சிரமேற்கொண்டு ஒழுகிய சமுதாயம். அதோடு, முன்னேற்றமில்லாத இயற்கைப் பொருளா தார அமைப்பைக் கொண்டது. போக்குவரத்து வசதியற்று, உள்ளூர்ச் சந்தையிலே, ஏதோ பெயருக்கு வியாபாரம் செய்த சமுதாயம். எனவே, தேவை சக்திகளையும் விநியோகச் சக்திகளை யும் அடிப்படையாகக் கொண்ட நவீனப் பொருளாதார விளக்கத் திற்கு அச் சமுதாயத்தில் வாய்ப்பு இல்லை; அவசியமுமில்லை. எனவே, பழக்கவழக்கப்படி எல்லாரும் எதை நியாயவிலை எனக் கருதினார்களோ அதுவே ஒப்புக்கொள்ளப்பட்டதில் வியப்பில்லை.

அப்படியிருந்தும், நாளடைவில் வியாபாரம் பெருகியது. திருச்சபையும் 'நியாய விலை' என்ற கருத்தை விடாப்பிடியாகக் கொள்ளவில்லை. அங்காடியின் நிலைமைக்கேற்ப விலைவாசிகள் நியாயவிலையைவிட ஏற்றமடைந்ததையும் இறங்கியதையும் அக்வினஸ்கூட தவருகக் கருதவில்லை; வியாபாரியின் இலாப இழப்புகளை உணர்ந்து ஓரளவிற்கு அதிகவிலை பெறுவது நியாயம் தான் என அக்வினஸ் ஒப்புக்கொள்கிருர். கையிலுள்ள பொருளை விற்பதால் வியாபாரிக்கு அதிக இழப்போ அல்லது வாங்குவோருக்கு அதிகப் பயனே கிடைத்தால் அதிகவிலை பெறுவதோ கொடுப்பதோ தவறில்லை என்கிருர். எனினும், விலை ஏற்றுவது ஒரு வரம்பிற்குட்பட்டதாக இருக்க வேண்டுமென்கிருர்.

அடுத்து, குறைபாடுடைய பண்டத்தை வியாபாரி விற்பது நியாயமா என்பதையும் அக்வினஸ் விளக்குகிருர். பண்டத்தில் குறைபாடு இருப்பது தெரிந்தும் அக் குறையை மறைத்து வியாபாரி விற்ருல் அது தவருனது என்கிருர். வியாபாரிக்கே குறை இருப்பது தெரியாமல் விற்றுவிட்டால் அது தவறல்ல. எனினும், அப் பண்டத்தை வாங்கியவர், வாங்கியபின் அக் குறையைக் கண்டுபிடித்து வியாபாரிக்குத் தெரிவித்தால் அதனைத் திரும்பப் பெறவேண்டுமென்கிருர் அக்வினஸ். இவ் விளக்கத்திற்கு அக்வினஸ் தரும் சான்றுகள் சாதாரணமானவையெனினும் சிந்திக்க வேண்டியவை. 'உடல்நலமில்லாத குதிரையை நல்ல குதிரையென விற்பது தவறு. ஏனெனில், குதிரையிலுள்ள குறைபாடு வெளிப்படையானதல்ல; வாங்குபவனுக்குத் தெரியாது; விற்பவனுக்கு மட்டும்தான் தெரியும். ஆனல் 'கண் இல்லாத குதிரையை விற்கும்போது வாங்குபவனுக்கும் குதிரையின் குறைபாடு தெரிந்துவிடுகிறது; எனவே, அதைக் குறைந்த விலைக்குத்தான் விற்கவேண்டும்' என்கிருர் அக்வினஸ். மேலும், பண்டத்தின் எடையைக் குறைத்தோ அல்லது அளவைக் குறைத்தோ விற்பது மோசடியாகும் என்றும் கூறுகிருர். அக்வினஸின் கொள்கையைச் சுருக்கமாகக் கூறுவதென்ருல் பின் வருமாறு கூறலாம்: 'மற்றவன் உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென நீ விரும்புவாயோ அதேபோல் நீ மற்றவனிடம் நடந்து கொள்.' இதுதான் அக்வினஸ் கொள்கையின் சாரம். இந்தச் சாரத்தை இன்றும் எல்லாரும் ஏற்றுக் கொள்வர்.

கடுவட்டிக்குத் தடை

இடைக்காலப் பொருளாதாரக் கொள்கைகளால் கடுவட்டி வாங்குவதற்கு விதிக்கபட்ட தடை முக்கியமானதாகும். இது நியாய விலையின் வாதமாகவே விளக்கப்பட்டது. இடைக்கால அறிஞர்களின் வாதப்படி, வட்டி வாங்குவது என்பது வெறும்

வட்டியைமட்டும் குறிப்பிடுவதாக இல்லை. வியாபாரத்தில் மோசடி செய்தாலும், நியாயவிலைக்குமேல் விற்றாலும் கடுவட்டி வாங்குவதற்குச் சமமாகவே கருதப்பட்டது. இடைக்கால அறிஞர்களின் கருத்தும் அரிஸ்டாடிலின் கொள்கையும் இவ்விஷயத்தில் ஒன்றுதான். அரிஸ்டாடிலின் கொள்கைப்படி பணம் வெறும் பரிவர்த்தனை சாதனமாக, தரிசு நிலத்தைப் போன்றதாகக் கருதப்பட்டது. எனவே, வட்டி வாங்குவதை அவர் வன்மையாகக் கண்டித்தார். பணத்தைக் கடனாகக் கொடுத்து மேலும் பணம் சம்பாதிப்பதை ஈனச் செயலாகவே கருதினார். அதேபோன்று, கடுவட்டி வாங்குவதற்குப் பல்வேறு தடைகளைத் திருச்சபை விதித்தது. இதற்குப் பல சான்றுகளைப் பைபிளிலிருந்து கொடுக்க முடியும். கிருத்துவர்கள் வட்டிக்காகக் கடன் கொடுக்கக்கூடாது; அதோடு, கடன் கொடுத்த பணம் திரும்பி வருமா என்றும் கவலைப் படக்கூடாது என்ற விதிமுறைகளை பைபிளில் காணலாம். கிருத்துவர்கள் எதையும் எதிர்பார்க்காமல்தான் கடன் கொடுக்க வேண்டுமென்பது ஏசுவின் கொள்கை. இக் கொள்கையை லூக்காஸ் எழுதிய புனித மொழிகளில் நாம் காண்கிறோம்: 'உன் மீது அன்பு செலுத்துபவர்கள்மீது நீ அன்பு கொண்டால் என்ன பயன்? பாவிகள்கூடத் தங்களை தேசிப்பவர்களை நேசிக்கிறார்களே! உனக்கு நன்மை செய்பவர்களுக்கு நீயும் நல்லது செய்தால் யாது பயன்? பாவிகளும் அவ்வாறுதானே செய்கிறார்கள்! உன் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள் என எதிர்பார்த்து நீ கடன் கொடுப்பதால் பயன் என்ன? பாவிகளும் அவ்வாறு தானே கொடுக்கிறார்கள்! மாறாக, நீ உன் விரோதிகளை நேசிக்க வேண்டும்; அவர்களுக்குத்தான் கடன் கொடுக்க வேண்டும்; கொடுத்த கடனைத் திரும்ப எதிர்பார்க்கக் கூடாது. அப்போது தான் இரக்கமும் தயாள குணமும் உள்ள இறைவனுக்கு உண்மையான பிள்ளையாய் இருக்க முடியும். உனக்குப் பரலோகத்தில் அதிக வெகுமதி கிடைக்கும்.' (லூக்காஸ்: VI-31-35).

கடுவட்டி வாங்குவதைப்பற்றித் திருச்சபைச் சட்டம் என்ன சொல்கிறது என்பதை ஆராயுமுன், இரண்டு முக்கியமான உண்மைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஒன்று, வட்டி வாங்கும் பழக்கத்தைத் திருச்சபை முதலில் அவ்வளவு வன்மையாகக்கண்டிக்கவில்லை பின்னர்தான் அதைக் கண்டிக்கத் தொடங்கியது. வட்டி வாங்கும் பிரச்சினை முதன்முதலில் எழுந்த போது துறவிகள் மட்டுமே கடுவட்டி வாங்கக் கூடாதெனக் கூறப் பட்டது. பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் எவருமே கடுவட்டி வாங்கக்கூடாதெனத் தடை விதிக்கப்பட்டது. இரண்டாவதாக, கடுவட்டி வாங்குவது பாவச் செயலாகக் கருதப்பட்ட அக் காலத்

தியச் சூழ்நிலையை நாம் மறந்துவிடக் கூடாது. தொழில் முயற்சியோ, வளர்ச்சியோ அவ்வளவாக இல்லாத அக் காலத்தில் வாழ்க்கையில் துன்பப்பட்டவர்களுக்குத்தான் கடன் கொடுக்கப் பட்டது. உதாரணமாக, தீ விபத்தால் அல்லது பெருவெள்ளத் தால் அல்லது பருவமழை தவறியதால் விளைச்சல் பாதிக்கப்பட்டு வாழ்க்கை நடத்துவதற்கே துன்பப்பட்ட மக்களுக்குத்தான் கடன் கொடுக்கப்பட்டது. மேலும், தெரிந்தவர்கள் அவதிப்படும்போதே கடன் தரப்பட்டது. இடைக்காலத்திய மக்கள், பொருள் உற் பத்திக் காரணங்களுக்காகக் கடன் கொடுத்ததே கிடையாது. நண்பர்களின் கஷ்டம் போக்கத்தான் கடனுதவி செய்தனர். இத் தகைய நிலையில் கடுவட்டி வாங்குவது அநீதியாகவும் இயற்கைக்கு மாறானதாகவும் கருதப்பட்டதில் வியப்பில்லை. அவ்வாறு வட்டி வாங்குவது 'பிறர் துன்பத்தைத் தன் நலனுக்குப் பயன்படுத்து வதை ஒத்தது.' இக் கருத்தை ஷேக்ஸ்பியரும் தான் வடித்த 'வெனிஸ் நகர வணிகன்' என்னும் நூலில் வெளியிட்டுள்ளார். ஒப்பந்தப்படிப் பணத்தைத் திருப்பித்தர முடியாத நிலையில் அந்தோனியோ அவதிப்படும்போது, கடன் கொடுத்த சைலக் வட்டியும் முதலும் உடனடியாக வேண்டும் என வாக்குவாதம் செய்தான். அப்போது 'நண்பனிடமிருந்து ஒருவன் வட்டிப்பணம் வாங்குவது நட்புக்கு அழகாகுமோ?' என அந்தோனியோ கூறி னார். எனவே, ஷேக்ஸ்பியர் காலத்திலும் நண்பனிடமிருந்து வட்டி வாங்குவது தவறானதாகவே கருதப்பட்டதெனலாம்.

இடைக்காலத்தில்கடுவட்டி வாங்குவதற்குத் தடை இருந்ததற்கு அடிப்படையாக பைபிள் சட்டமும் அரிஸ்டாடிலின் கொள்கையும் அமைந்தன. பணத்திற்கு எவ்வித உற்பத்தித் தன்மையும் கிடை யாது என்பதை அரிஸ்டாடில் வலியுறுத்தியுள்ளார். ஏழைகள் பெருந்துயரில் வாடும்போது அவர்களிடமிருந்து கடுவட்டி வாங்கு வது, அவர்களை மேலும் கசக்கிப் பிழிவதைப் போன்றது; எனவே, கடுவட்டி வாங்குவதை அக்வினஸ் வன்மையாகக் கண்டித்தார். தனது வாதத் திறமையின்மூலம், கடுவட்டி வாங்குவதை நியாயத் திற்கு எதிராக இழைக்கப்படும் தீமையாக அக்வினஸ் எண்பிக்கிறார். அவரது வாதம் வருமாறு: பண்டங்கள் இரு வகைப்படும். ஒன்று, நுகரும்போது சிலவகைப் பண்டங்களின் பயன் அழிந்துவிடுகிறது. எனவே, பயனும் நுகர்ச்சியும் பிரிக்கப்பட முடியாதவை. இப் பண்டங்களின் பயனும் நுகர்ச்சியும் ஏக காலத்தில் அனுபவிக்கப் படுகின்றன. இவற்றை நுகர்வதில்தான் பயன் ஏற்படுகின்றது. பண்டங்களும் அழிந்துவிடுகின்றன. மதுபானத்தையும் உணவுப் பொருள்களையும் இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். ரொட்டிக் கடைக்காரன் ரொட்டியை விற்கும்போது அதன் பயனைமட்டும்

விற்பதில்லை, விற்கவும் முடியாது. ரொட்டியையும் அதன் பயனையும் விற்கிறான். எனவே ரொட்டியை விற்றபின் அதை மறுபடியும் பெறுவதற்குக் கடைக்காரனுக்கு உரிமை இல்லை. மாறாக, இரண்டாவது வகைப் பண்டங்களில் நுகர்வும் பயனும் பிரிக்கப்படக் கூடியவை யாகும். ஒரு வீட்டை வாடகைக்கு எடுப்பவன் அதன் பயனை மட்டுமே வாங்குகிறான்; வீட்டை வாங்குவதில்லை. எனவே, வீட்டை இடித்துவிடக்கூடிய அல்லது அழித்துவிடக் கூடிய உரிமை அவனுக்கில்லை. அதைப் பயன்படுத்தி வாழக்கூடிய உரிமை மட்டும் தான் உண்டு. எனவே, வீட்டைப் பொறுத்தமட்டில் அதனை விற்கவும் முடியும்; அதே சமயம் அதன் பயனைமட்டும் விற்கவும் கூடும். ஆனால் ரொட்டி அப்படியல்ல. இவ் விருவகைப் பண்டங்களின் வேறுபாடுகளை மனதில் கொண்டு பணத்தை முதல்வகைப் பண்டங்களில்தான் சேர்க்க வேண்டுமென்கிறார் அக்வினஸ். இன்றைய பொருளாதார அறிஞர்களைக் கேட்டால், பணத்தை இரண்டாவது வகைப் பண்டங்களில்தான் சேர்க்க வேண்டுமென்பர். அக்வினஸின் கருத்து, அரிஸ்டாடில் பணத்தை விளக்கிய முறையை அடிப்படையாகக் கொண்டது. பரிவர்த்தனை செய்யப்படும் சாதனமாகவே பணம் கருதப்பட்டது அரிஸ்டாடிலால். பணத்தின் தன்மை கைவிட்டு மாறுவதுதான். எனவே, அதன் பயனே அதனை கைவிட்டு விடுவதில்தான் உள்ளது. ரொட்டியை விற்கும் ஒருவன் ரொட்டிக்கென்று ஒரு விலையும் கேட்க முடியாது. அதே போன்று, பணத்தை விற்கும்போது அதன் பயனுக்கென்று தனி விலை பெறக் கூடாது. கடனாகக் கொடுக்கும் பணத்தின் நியாயமான விலை அதனைத் திரும்பப் பெறுவதுதான். அதன் பயனிற்கென்று தனியாகக் கட்டணம் கேட்பது கரண்டலுக்குச் சமம். அவ்வாறு வட்டி வாங்கினால் என்ன தவறு என்று கேட்கலாம். பணத்தின் பயனை அதிலிருந்து பிரிக்க இயலாததால் பயனுக்கெனத் தனிக் கட்டணம் பெறுவது இல்லாத ஒன்றை விற்பதற்குச் சமமாகும். அல்லது ஒரே பொருளுக்கு இரண்டு தடவைகள் விலை பெறுவதற்குரிய குற்றமாகும். கடன் கொடுப்பவன் நீண்ட நாட்கள் கழித்துத்தானே கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறப்போகிறான்; எனவே, காலம் கடந்து திரும்பப் பெறுவதற்குரிய கட்டணமாக வட்டியைக் கருதலாமே எனக் கேட்கலாம். இதற்கு விடை தரும் வகையில் ‘காலம் என்பது கடவுளுடையதாகும்; அதை எந்த மனிதனும் சொந்தம் கொண்டாடவோ விற்கவோ முடியாது’ என அக்வினஸ் கூறுகிறார்.

கடு வட்டி பற்றிய அக்வினஸின் விளக்கம் அரிஸ்டாடிலின் கொள்கையை ஆதாரமாகக் கொண்டதெனக் கண்டோம். பொருள்களைக் கைமாற்றிக்கொள்ள ஏதுவான சாதனமே பணம் என்றார் அரிஸ்டாடில். எனவே, கடன் கொடுத்தலைப் பண உரிமை மாற்றமாகவே இடைக்காலத்தவர் கருதினர். பணத்தைப் பயனுள்ள

வகையில் பயன்படுத்த முடியுமென அவர்கள் நம்பினர். இருந்த போதிலும், தொழிலாளிகளின்றி, பணம் மட்டும் தனியாக எதையும் விளைவிக்க முடியாதென்று அவர்கள் கருதினர். எனவே, கடன் பட்டவன் துன்பப்பட்டு உழைத்துத்தான் கடனைத் திருப்பித் தர இயலும். அவ்வாருயின் கடன்காரனின் உழைப்புத்தான் ஆக்கத்தை உடையதாகிறது; பணமல்ல. இதனுல் வட்டி வாங்குவது கடனாளியின் உழைப்பின் ஒரு பகுதியைப் பெறுவதற்கு ஒப்பாகும். எந்த வழியிலிருந்து பார்த்தாலும் வட்டி வாங்குவது அநீதிதான் என்பது அக்வினஸின் அசைக்க முடியாத நம்பிக்கை.

திருச்சபையின் சட்டமும் ஒழுங்கும் எவ்வளவுதான் நிலையானதாக இருந்தாலும், பொருளாதார வளர்ச்சி ஏற்பட ஏற்பட வட்டி வாங்கும் பழக்கமும் அதிகரித்துக்கொண்டே சென்றது. இந் நிலையில் ஆட்சியாளர்களால் வட்டி வாங்கும் பழக்கத்தைத் தடைசெய்ய முடியவில்லை. எனவே வட்டி வாங்கும் பழக்கத்தை ஒழுங்கு படுத்த முயன்றனர். 14 ஆம் நூற்ருண்டில் வட்டிக்கு உச்சவரம்பை நிர்ணயிக்கும் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. பின்னர், 15, 16ஆம் நூற்ருண்டுகளில் புதிய நாடுகளையும் விஞ்ஞானக் கருவிகளையும் கண்டுபிடித்ததின் விளைவாக, பணத்தை முதலீடு செய்து இலாபம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. அந் நிலையில் திருச்சபைச் சட்டங்களும் அரிஸ்டாடிலின் கொள்கைகளும் ஏட்டுச் சுரைக்காயாயின. திருச்சபைக்கு விரோதமாகப் புரட்சியில் ஈடுபட்ட மார்டின் லூத்தர் வட்டி வாங்குவது பாவச்செயலன்று என்று வாதாடினுர். அரிஸ்டாடிலின் கொள்கையை உதவாக்கரையாக்கினுர். பணத்தை இலாபம் தரும் வகையில் பயன்படுத்த முடியுமெனக் கூறினுர். எனவே, பழங்காலக் கருத்தும் இடைக்கால எண்ணமும் சூரியனைக் கண்ட பனிபோல் விரைவாக மங்கி மறைந்தன.

தொழில் பாகுபாடு

இடக்காலக் கருத்துகளை வெளியிட்ட அக்வினஸின் விளக்கத்தில் தொழில் பாகுபடும் முக்கியமானதாகும். 'மனிதன் சமூகப் பிராணி' என்பது அரிஸ்டாடிலின் கொள்கை. இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அக்வினஸ் தொழில் பாகுபாட்டை விளக்கியுள்ளார். மக்கள் ஒன்ருக இணைந்து சமுதாயமாக வாழ வேண்டுமாயின், அவர்கள் பல்வேறு தொழில்களைச் செய்து ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும். எனவே, பல்வேறு தொழில்கள் சமுதாயத்திற்கு அவசியம். ஆனுல் எல்லாத் தொழில்களும் கௌரவமானவையா? இக்கேள்விக்குரிய பதிலை முழுமையாக ஆராய்வதற்குப் பதிலாக, அதிலுள்ள முக்கியமானதோர் பகுதியை மட்டும் பார்ப்போம். ஒரு தொழில் கௌரவமானதா என்பது, அத் தொழில் எந்த அளவிற்குச் சமுதாயத்திற்குப் பய

னுள்ளது என்பதைப் பொறுத்தது. தனி மனிதன் பெறும் இலாபம் சமுதாய நலனுக்கு முற்றிலும் முரணானதென்பது அக்வினஸின் நம்பிக்கை. எனவே, இலாபம் மட்டும் குறிக்கோளாகக் கொண்ட தொழில்களனைத்தும் சமுதாயத்திற்கு ஆபத்தானவை மட்டுமல்ல; அபத்தமானவையுங்கூட. இவ்விளக்கத்தைக் கொண்டு வியாபாரத் தொழிலை ஆய்கிறார் அக்வினஸ். வியாபாரியைக் கடவுள் விரும்ப மாட்டார் என்ற கருத்தே முதன் முதலில் நிலவி வந்தது. ஆனால் அக்வினஸ் காலத்தில் வியாபாரம் செய்வது பாவச்செயல் என்ற கருத்து மறைந்து விட்டது. எனினும், வியாபாரத்தில் பொய், மோசடி மூலம் பாவம் செய்வதற்குப் பல வாய்ப்புகள் இருப்பதால், தன் ஆன்மாவைத் தூய்மையாக வைத்துக்கொள்ள விரும்பும் எவனும் இத்தொழிலை மேற்கொள்ளமாட்டான். வியாபாரி என்றால் யார்? பின்னர் அதிக விலைக்கு விற்க வேண்டுமென்ற நோக்கத்தோடு முன்னதாகவே பொருள்களை வாங்கி வைப்பவன்தானே வியாபாரி. எனவே, 'நீதி', 'நியாயம்' அனைத்தையும் புறக்கணிக்கும் ஒருவன் எவ்வாறு நீதிமானாக இருக்கமுடியும்? இருந்தபோதிலும், அதிக விலைக்குப் பொருள்களை விற்க வேண்டிய சூழ்நிலையும் கட்டாயமும் ஏற்படலாமல்லவா? வாங்கிய பொருளை வியாபாரி மேம்பாடடையச் செய்தால், அல்லது திருத்தி அமைத்தால் அப்பொருளின் விலை உயரலாம். இடமாற்றத்தாலோ கால மாற்றத்தாலோ விலை ஏறலாம். போக்கு வரத்திலுள்ள தொல்லைகளாலும் ஆபத்தாலும் விலை உயரலாம். இந் நிலையில், இயல்பான பரிவர்த்தனைக்கும் இயல்பற்ற பரிவர்த்தனைக்குமுள்ள வேறுபாட்டினை எடுத்துக் காட்டிய அரிஸ்டாடிலைப் போன்று, அக்வினசும் விளக்குகிறார். ஆனால் இவ் விளக்கம் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததல்ல; சொல்லப்போனால் அபாயமானதுமாகும். இயல்பற்ற பரிவர்த்தனையால் வாழ்க்கைத் தேவையை நிறைவுபடுத்த முடியாது; அதனால் இலாபம் மட்டுமே அதிகரிக்கும். எனவே, இத்தகைய பரிவர்த்தனை கௌரவமானதல்ல. கௌரவமானதாயில்லாவிட்டாலும் பாவமானது என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் வியாபாரி பெறும் இலாபம் முக்கியமானதல்ல; அந்த இலாபத்தை அவன் எவ்வாறு பயன்படுத்துகிறான் என்பதுதான் முக்கியம். எனவே, அக்வினஸின் கருத்துப்படி, பொது நலனை முன்னிட்டு ஒருவன் வியாபாரம் செய்யலாம். அப்போது அவன் பெறும் இலாபத்தை அவனது முயற்சிக்குக் கிடைக்கும் ஊதியமாகவே கருதவேண்டும். ஏனெனில் இலாபம் மட்டுமே அவனது குறிக்கோளல்ல.

இறுதியாக, அக்வினஸ் கூறியுள்ள பிறிதொரு கருத்தும் முக்கியமாகும். ஒரு நாடு தனக்கு வேண்டிய பொருள்களை இரு வழிகளில் பெறலாம். இயல்பான முயற்சியால் அடையலாம்; வணிகத்தின் வழியாகவும் பெறலாம். இயல்பான முயற்சியால்

அடைவதே சிறந்ததென்பது அக்வினஸின் கருத்து. ஆனால், எந்த நாடும் தனக்கு வேண்டியதனைத்தையும் இயல்பாகவே பெறுவது கடினம். வேறுவிதமாகக் கூறின், எந்த நாடும் தன்னிறைவுள்ள நாடாக இருக்கமுடியாது. எனவே, பிறநாட்டு வணிகம் இன்றியமையாததாகிறது. வணிகரின்றி எந்த நாடும் முழுமையான வாழ்வைப் பெறமுடியாது. அவ்வாறாயின், இலட்சியநாடு வணிகரைத் தம் தேவைக்கேற்பமட்டும் பயன்படுத்தவேண்டும். மிதமிஞ்சி வணிகர்கள் இருப்பது ஒருநாட்டின் இலட்சிய வாழ்வைக் குலைத்துவிடும்.

ஒரேஸ்மே (1320—1382)

இடைக்காலப் பொருளாதாரக் கருத்துகளை ஆயும்போது நிகொலஸ் ஒரேஸ்மே எழுதிய கட்டுரையின் அம்சங்களை ஆராய்வது அவசியம். இன்றேல் நம் ஆய்வு முழுமை பெறாது. ஒரேஸ்மே, அக்வினஸுக்குப்பின் 100 ஆண்டுகள் கழித்துத் தோன்றியவர். அக்வினஸின் கருத்துகளனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொண்டு, பணம்பற்றிய புதுமையான விளக்கத்தைத் தந்தவர் ஒரேஸ்மே. இவர் வரைந்த நூலையும், தந்த விளக்கத்தையும் வானளாவப் புகழ்வோர் உண்டு. அறிவியல் ரீதியில் வெறுப்பின்றிப் பணத்தின் தன்மையை ஆராய்ந்த பெருமை இவருக்குண்டு. உண்மையில் இவர் வரைந்த நூல் பணக்கொள்கையைப்பற்றியதன்று; மாறாக, நாணய அமைப்பை மாற்றியமைக்கும் உரிமை எந்த அரசனுக்கும் கிடையாது என்றுதான் வாதிக்கிறது. பிறரைப் போலவே இவரும் முதற்கண் பண்டமாற்று முறையைப்பற்றியும் அம் முறையில் தோன்றும் சிக்கல்களைப்பற்றியும் விளக்குகிறார். அச் சிக்கல்களை நீக்குவதற்குத்தான் பணம் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறுகிறார். இதிலிருந்து பணம் உண்மையான செல்வம் அன்று; அது வெறும் பரிவர்த்தனைச் சாதனமே என்ற முடிவுக்கு வருகிறார். எவ்வளவுதான் ஒருவனிடம் பணமிருந்தாலும் அப்பணத்தைக் கொண்டு தான்விரும்பும் பண்டங்களை வாங்கமுடியவில்லையென்றால், பணத்தால் எவ்விதப் பயனுமில்லை என்பது இவர்து கருத்து. எனவே, மனிதனின் தேவையை நிறைவுசெய்யும் பொருள்கள்தாம் உண்மையான செல்வமேயன்றி, அப்பொருள்களின் பரிவர்த்தனைக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட பணம் உண்மையான செல்வமல்ல என்றுரைக்கிறார்.

ஒரேஸ்மே கூறிய கருத்துகளில் முக்கியமானவை இரண்டு. மக்கள் செய்யும் பரிவர்த்தனை பெரிய அளவிலும் சிறிய அளவிலும்

இருக்கலாம். எனவே, அவ்விருவகைப் பரிவர்த்தனைகளைச் செய்வதற்கு இரண்டு உலோகங்களில் நாணயத்தை வெளியிடுவதே நன்று. சான்றாக, சிறு பரிவர்த்தனைகளை வெள்ளி நாணயத்தின் வழியாகவும், பெருமளவுப் பரிவர்த்தனைகளைத் தங்க நாணயத்தின் மூலமும் செய்வது வசதியாயிருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். அவ்வாறு இரு உலோக நாணயங்களும் புழக்கத்திற்கு வந்தால், அவ்விரண்டிற்குமிடையே குறிப்பிட்ட மாற்று விகிதம் இருக்கவேண்டும். அம் மாற்று விகிதத்தை நாணயத்தை வெளியிடும் அதிகாரிகள் நிர்ணயிப்பர். இவ்வதிகார பூர்வமான மாற்று விகிதத்தில்தான் பொன்னும் வெள்ளியும் அங்காடியில் பரிமாற்றப்பட வேண்டும். அங்காடியில் வேறொரு விகிதத்தில் அவை பரிமாறப்பட்டால் சிக்கல்கள் எழும். அவ்வாறு எழக்கூடிய சிக்கல்களையெல்லாம் ஒரேஸ்மே நன்குணர்ந்து விளக்குகிறார். 'அங்காடியில் அதிக மதிப்புள்ள உலோக நாணயம், குறைந்த மதிப்புள்ள நாணயத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டிவிடும்' என்ற கிரெஷாம் விதியை ஒரேஸ்மே நன்கறிந்திருந்தார். எனவே, அரசன் தன்னிச்சைப்படி இம் மாற்று விகிதத்தை நிர்ணயிக்கவோ அல்லது மாற்றவோ கூடாதென வலியுறுத்துகிறார். அவ்வாறு மன்னன் தன்னிச்சைப்படி மாற்றினால், பல முறைகேடுகள் ஏற்படும். பொன்னுக்கு அதிக மதிப்புள்ளபோது, மக்கள் வெள்ளியைக் கொடுத்துப் பொன்னை வாங்குவர். அதனால் பொன்னுக்கும் வெள்ளிக்குமுள்ள மாற்றுவிகிதம் மாறுபடும். அவ்வாறு மாறுபட்டால் பொன்னைக்கொண்டு, வெள்ளியை வாங்கும் பழக்கம் தோன்றும். எனவே, இவ்விரு உலோகங்களின் மாற்று விகிதம் நிலையானதாயும், அங்காடி விகிதத்திற்கும் அதிகாரப் பூர்வமான விகிதத்திற்கும் வேறுபாடு இல்லாமலும் இருக்கவேண்டுமென்பது ஒரேஸ்மேயின் கருத்து.

இரண்டாவது முக்கியக் கருத்து, அரசன் எந்த அளவுக்கு நாணயத் துறையில் தலையிடலாம் என்பதைப் பொறுத்தது. இத்துறையில் பல உண்மைகளை அவர் புலப்படுத்துகிறார். எல்லோரும் நாணயத்தை அச்சிட்டு வெளியிட முடியாது. சமுதாயத்தின் சார்பாக அரசனே நாணய வெளியீட்டிற்கு வகை செய்ய வேண்டும். அவ்வாறு அரசன் செய்யும்போது பொதுமக்களின் பிரதிநிதியாகத்தான் செய்கிறான். எனவே, அவன் வெளியிடும் நாணயம் முழுவதும் அவனுக்கே சொந்தமாகாது. 'நாணயத்தை மாற்றுவதற்கும் திருத்துவதற்கும், அதன் தரத்தைக் குறைப்பதற்கும் உள்ள வழிவகைகளை ஆராயும்போது, இக் கொள்கை முக்கியமானதாகிறது. நாணயத்தின தரத்தைக் குறைப்பதை ஒரேஸ்மே மிக வன்மையாகக் கண்டிக்கிறார். அவ்வாறு நாணயத்தின் தரத்தைக் குறைக்கும் எந்த அரசனும் நாணயமற்றவனாகிறான்.

பொன்னுலாகாத நாணயத்தைப் பொன் நாணயம் என்று உறுதி கூறுவானாகில், அவனைக் காட்டிலும் இழிந்தவன் யார்? இத்தகைய ஈனச் செயல்கள்மூலம் அவனுக்கு இலாபம் கிடைத்தால், அது முறைகேட்டின் விளைவே என்கிறார் ஒரேஸ்மே.

பணத்தை மாற்றுதல், கடுவட்டி வாங்குதல், நாணயத்தின் தரத்தைக் குறைத்தல் ஆகிய அனைத்துமே அரிஸ்டாடில், அக்வினஸ் ஆகியோர் கருத்துப்படி ஒரே தன்மை வாய்ந்தவை. அதாவது, இவையனைத்தும் நீதிக்கும் நியாயத்திற்கும் புறம்பானவை. இவையனைத்தும் இழிவானவை. நாணயத்தின் தரத்தைக் குறைப்பதன்மூலம் எதேச்சாதிகாரம்தான் தலைவிரித்தாடும் என்று ஒரேஸ்மே கூறுவதால், இக் கருத்து அரசியல் சாக்கடைக்கு அவரை இழுத்துச்செல்கிறது. நேர்வழியை விட்டு விலகியபின், அதற்கு முடிவுதான் ஏது? நாணயத்தின் தரத்தைக் குறைப்பது அடிக்கடி நிகழும். மக்களிடமிருக்கும் செல்வமனைத்தும் மன்னவனிடம் போய்ச் சேரும் இதனால் மக்களெல்லாம் மன்னனின் அடிமைகள் என்ற நிலை ஏற்படும். இவ்வாறாக நாணயத்தின் தரத்தைக் குறைப்பதால் ஏற்படும் கேடுகளையெல்லாம் நன்குணர்ந்தவராகவே காணப்படுகிறார் ஒரேஸ்மே. 14ஆம் நூற்றாண்டிலேயே பணப் பிரச்சினைகள் பலவற்றைத் தெளிவாகவும் அறிவியல் ரீதியிலும் ஆராய்ந்த பெருமை அவருக்கு என்றும் உண்டு

முடிவுரை

இடைக் காலத்தில் மேம்பட்டிருந்த திருச்சபையின் போதனைகளும் கொள்கைகளும் வாணிபம் விரிவடையத் தொடங்கியதும் மங்கி, வலுவிழந்து விட்டன. சமயச் சீர்திருத்தம் வலுவடைந்தபோது, பொருளாதாரக் கண்ணோட்டமும் ஆய்வும் ஒரு புது யுகத்திற்கே மக்களை இழுத்துச் சென்றது. வணிகத்தின் வாயிலாகப் பலர் பெரும் புள்ளிகளாகவும் செல்வர்களாகவும் வளர்ந்தனர். இலாபத்தைத் தேடுவதையும் பொருளாதார மேம்பாடு அடைவதையும் சமயச்சீர்திருத்தவாதிகள் தூண்டிவிட்டனர். நிலமானியமுறை அமுலில் இருந்தவரை திருச்சபையின சட்டங்களும் போதனைகளும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் நிலமானிய முறை ஒழிந்து வல்லரசுகள் தோன்றியவுடன் திருச்சபையின் செல்வாக்கு, ஒளியைக் கண்ட இருள்போல் மாயமாய் மறைந்தது. பொருளாதார நடவடிக்கைகள், ஒழுக்க ரீதியிலும், அரசியல் கண்ணோட்டத்திலும் ஆராயும் நிலை மறைந்து, அறிவியல் ரீதியிலும் தருக்க முறையிலும் சிந்திக்கப்பட்டன. இச் சூழ்நிலை மாற்றத்தின் பிரதிபலிப்பாகவே வணிகவாதம் தோன்றியதனலாம்

5. வணிக வாதம்

(Mercantilism)

வணிகவாதம் என்ற சொல் புதிரான சொல். எனவே, அதற்கு முறையான விளக்கம் கிடையாது. இச் சொல்லை முதன்முதலாகப் பிரெஞ்சு நாட்டு இயற்கை வாதிகள் (Physiocrals) பயன்படுத்தினர். பின்னர், உலகப் புகழ்பெற்ற 'நாடுகளின் செல்வம்' என்ற நூலில், திரு. ஆடம் ஸ்மித், வணிகவாதத்தை மிகக்கடுமையாகத் தாக்கியதன் மூலம் இச் சொல் பொருளாதார இயலில் புகுந்து இன்று பெருகிய வழக்குடையதாகி விட்டது. வணிகவாதம் ஒரே ஒரு அறிஞரின் கருத்தோ அல்லது ஒரு நாட்டின் தனிக்கொள்கையோ அன்று. பொருளாதார நிபுணர்களால் புனையப்பட்டது மன்று; குறிப்பிட்டதொரு காலத்தின் கருத்துமன்று. சுமார் கி.பி. 1450 முதல் 1750 வரை இங்கிலாந்து, ஹாலந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளில் வாழ்ந்த தொழிலதிபர்கள், வணிகப் பெருமக்கள், உயர்தர அதிகார வர்க்கத்தினர் ஆகியோர் தத்தம் நாடுகள் வளமும் பலமும் செல்வாக்கும் பெற வகுத்த வழிவகைகளே வணிக வாதமாகும். காலத்திற்கும் சூழ்நிலைக்குமேற்ப நாட்டிற்கு நாடு வணிகவாதக் கொள்கையும் வழிவகைகளும் மாறிக்கொண்டே வந்துள்ளன. மேலும், வணிகவாதம் நாட்டுக்கு நாடு வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்பட்டது. பிரான்ஸில் அது கால்பர்ட்டிஸம் (Calbertism) என்றும், ஜெர்மனியில் காமரிலிஸம் (Cameralism) என்றும், இங்கிலாந்தில் மெர்க்கன்டிலிஸம் என்றும் மேற்கொள்ளப்பட்டது.

வணிகவாதச் சிந்தனை வளரக் காரணங்கள்

வணிக வாதத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டுமாயின், அது தோன்றியதற்குரிய சூழ்நிலைகளையும் காரணங்களையும் அறிதல் அவசியம். 15ஆம் நூற்றுண்டின் இறுதியில் ஐரோப்பாவின் பொருளாதார வாழ்க்கையில், சிறப்பாக வாணிபம் நடந்த முறையில் ஒரு புரட்சியே உருவாகிவிட்டதெனக் கூறலாம். இவ்வாறு திடீரென வாழ்க்கைமுறையை மாற்றி அமைத்ததற்குப் பல

காரணங்கள் இருப்பினும், அவற்றுள் மிக முக்கியமானவை வருமாறு :

மறுமலர்ச்சியும் மதப்புரட்சியும்

16ஆம் நூற்றண்டில் உச்சநிலையை அடைந்த அறிவியல் விழிப்புணர்ச்சி, மனிதனின் கண்ணேட்டத்திலும் சிந்திக்கும் முறையிலும் அடிப்படையான மாறுதலைப் பிரதிபலித்தது. 14ஆம் நூற்றண்டில் இத்தாலியின் வடபகுதியில் பழங்காலக் கலை, இலக்கியம், கிரேக்க-ரோமானிய நாகரிகம்ஆகியவற்றின்மீதுள்ள நாட்டம் மறுபிறப்பு எடுத்தது. கிரேக்க,ரோமானியநூல்களின் சுவைநயமும், கவிதைத்திறமும் முழுமையானவாழ்வுபற்றியகருத்துகளும்மக்களின் மனதைக் கவர்ந்தன. இதன்விளைவாக, மக்களின் மனப்பான்மை சமயச் சார்பற்று உலகியல்புடையதா மாறிற்று. மறு உலக வாழ்வில் அவ்வளவாக அக்கறை கொள்ளாது, இவ்வுலக வாழ்வே முக்கியமென மக்கள் கருதினர். இவ்வுலக வாழ்க்கையில் பல இன்பங்களை அடையலாம் என்ற ஆர்வம் பொங்கியது. இவ்வுலகம்பற்றிய அக்கறையின் விளைவாகத் தோன்றிய புதிய கண்டுபிடிப்புகள்—கடிகாரம், உருப்பெருக்கி (Microscope), தொலைநோக்கி (telescope), காற்று அழுத்தமானி (Barometer)—இயற்பொருள் சார்ந்த உலகினைப்பற்றிய படிப்பிற்குப் பெருந்துணை செய்தன. இதனல் நவீன விஞ்ஞான அறிவியலுக்கு நிரந்தரமான அடிக்கல் நாட்டப்பட்டது.

அதேசமயம், மார்டின் லூத்தர் (Martin luther) போப்பாண்டவரின் அதிகாரம் நலிவுறும் வண்ணம் மதப்புரட்சியில் ஈடுபட்டார். புதியதொரு மதத்தை ஏற்படுத்தி, கத்தோலிக்க மதத்தின் நம்பிக்கைகளைத் தகர்த்தெரிந்தார். மதம் என்பது கடவுளுக்கும் தனிப்பட்ட மனிதனுக்குமுள்ள தொடர்பு என்று கூறித் தனிமனிதனுக்கு முக்கியத்துவம் தந்தார். போப்பாண்டவரின் அதிகாரத்திற்கும் போதனைகளுக்கும் சவால்விட்டார். செல்வம் திரட்டும் செயல் பாவச்செயலல்ல என்றும், வியாபாரத்திலும் வாணிகத்திலும் ஈடுபடுவது சமூக நன்மைக்கே என்றும் கூறி பெருவாரியான மக்களின் மனதைக் கவர்ந்தார்.

அரசியல் சிந்தனை

மக்களின் முன்னேற்றத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அரசியல் சிந்தனையும் உருவானது. அரசியல் வளர்ச்சிக்கும் வணிகவாதத்தின் அடிப்படைக்குமுள்ள தொடர்பை விளக்கியவர்களில் இருவர் முக்கியமானவர்கள். 'அரசன்' (The Prince) என்னும் நூல் எழுதிய மெக்கியவல்லி ஒருவர். ஒழுக்க நெறிகளை உதறித்தள்ளி அறிவியல் ரீதியில் அரசியல் கருத்துகளை ஆய்ந்தார். மேலும், அக் காலத்திற்கு வலிமைமிக்க அரசனே தேவை

எனக் கருதிய மெக்கியவல்லி, வல்லரசினை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதையும் தம் நூலில் விளக்கினுர். அவ்வாறு வல்லரசு ஏற்படுத்த வேண்டுமாயின், நியாயம், மனச்சாட்சி, நேர்மை என்பதையெல்லாம் விட்டொழிக்க வேண்டுமென வலியுறுத்தினுர். இரண்டாவது எழுத்தாளர் ஜீன் போடின் (Gean bodin) ஆவர். இவர் அரசியல் கருத்தாற்றல்களை ஆராயும் போக்கில் இறைமைக் (Sovereignty) கருத்தின் சிறப்பை எடுத்துரைத்தார். இவ்வாருக, வலுவான அரசினை உருவாக்கும் எண்ணம் அரசியல் சிந்தனையாளர்களிடம் வேரூன்றியிருந்தது. வணிகவாதிகளும் எவ்வாறு வலுமிக்க அரசினை உருவாக்குவது என்றவழிவகைகளில்தான் கண்ணும் கருத்துமாயிருந்தனர். ஜெர்மன் அறிஞர் ஸ்மாலர் (Schmoller) கூறுவதுபோல், 'வல்லரசு உண்டாக்க வழிகற்பிக்கும் அரசியல் சித்தாந்தத்தைப் பொருளாதாரத் துறையில் நிறைவேற்றுவதே வணிகவாதமாகும்.'

புதிய இடங்களைக் கண்டுபிடித்தல்

15ஆம் நூற்ருண்டின் இறுதியிலும் 16ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த பேரறிஞர்கள் இவ்வுலகைப் பற்றித் தாமே ஆராயத் தொடங்கிய அதே சமயத்தில், துணிகர வீரம் படைத்தோர் இவ்வுலகில் பல ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டு, புதிய உலகையும் கிழக்கு நாடுகளுக்குச் செல்லப் புதிய கடல் வழிகளையும் கண்டுபிடித்தனர்.

அமெரிக்காவைக் கண்டுபிடித்தவுடன் ஸ்பானியர்கள், மெக்ஸிகோவையும் பெருவையும் தம்வசமாக்கினர். அங்கிருந்த சுரங்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட தங்கமும் வெள்ளியும் ஸ்பெயின் நாட்டில் வந்து குவிந்தன. இதனுல் ஸ்பெயின் நாட்டின் வலிமை நூற்ருண்டுகளுக்குமேல் நிலைத்திருந்தது. அரசின் வலிமைக்குத் தங்கமும் வெள்ளியுமே ஆதாரம் என்ற தவருன கருத்தை வணிகவாதிகள் மேற்கொண்டதில் வியப்பில்லை.

1498ஆம் ஆண்டல் வாஸ்கோ-டி-காமா நன்னம்பிக்கைமுனை வழியாக இந்தியாவிற்குப் புதிய வழியைக் கண்டுபிடித்தார். இதன்விளைவாக போர்ச்சுக்கல் நாட்டிற்கு வலிமையும் செழிப்பும் ஏற்பட்டு, வெனிஸுக்குப் பதிலாக லிஸ்பன் வணிகத் தலைநகராயிற்று

மக்கள்தொகைப் பெருக்கம்

ஐரோப்பியப் பொருளாதார வாழ்க்கையைத் துரிதமாக்கியப் பிரிதொரு காரணி, மக்கள்தொகை வளர்ச்சியாகும். 1300-ல் மேற்கு ஐரோப்பாவின் மக்கள் தொகை சுமார் 53 மில்லியன் எனத் தெரிகிறது. அடுத்துவந்த 150 ஆண்டுகள்வரை இம் மக்கள்

தொகை பெருகியிருக்கமுடியாது. ஏனெனில் பெருங்கொள்ளை நோயாலும் (Black death) இதர நோய்களாலும் பெருவாரியான மக்கள் மடிந்தனர். எனவே, 1600-ல் மக்கள்தொகை 70 மில்லியனாக அதிகரித்ததென்றால், இவ்வதிகரிப்பு 1450ஆம் ஆண்டிற்குப் பின்னரே ஏற்பட்டதெனலாம்.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டன. நாட்டுப்புறங்களிலிருந்து நகரங்களில் வந்து பலர் குடியேறியதால், தொழிலகங்களுக்கு வேண்டிய தொழிலாளர் கிடைத்தனர்; கப்பல் போக்குவரத்துத்துறையில் பலர் புகுந்தனர்; படையில் பலர் சேர்ந்தனர். குடியேற்ற நாடுகளில் பலர் சென்று குடியேறினர். மேலும், நுகர்வுப் பண்டங்களுக்கும் போகப் பொருள்களுக்கும் தேவை அதிகரித்தது. இப் பொருள்களை உற்பத்தி செய்தோருக்கும் விற்பனை செய்தோருக்கும் கிடைத்த இலாபம் உயர்ந்தது. இலாபம் உயர்ந்ததால் சேமிப்பும், சேமிப்பினால் முதலும் அதிகரித்தன.

வர்த்தக வகுப்பினர் உயர்வு

புதிய முதலாளித்துவ வகுப்பினர் சக்திவாய்ந்த செல்வாக்கான நிலைக்கு உயர்ந்தது, அக் காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாறுதல்களுள் ஒன்றாகும். வாணிப முதலாளிகள் கிழக்கத்திய நாடுகளிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் புதுப்புதுப் பொருள்களை இறக்குமதி செய்து விற்க ஆரம்பித்தனர். தொழில் நிருவாகிகளான முதலாளிகள் புத்தம் புதிய உற்பத்திமுறைகளைத் தம் தொழில்களில் புகுத்தினர், வர்த்தக முதலாளிகள் மிகப்பெரிய நபர்களாகக் கருதப்பட்டனர். முதலீடு செய்து தொழில் நடத்துவோராய் மட்டுமன்றி, அரசர்களுக்கும் இளவரசர்களுக்கும் கடன் கொடுப்போராயும் அவர்களுக்கு ஆலோசகராயும் பெயர் பெற்றனர். இதனால் அரசர்கள் வணிகரைச் சார்ந்தோராயும் வணிகர்கள் தம் தொழில் பாதுகாப்பிற்காக அரசர்களைச் சார்ந்தோராயும் விளங்கினர்.

தேசிய அரசுகளின் தோற்றம்

17ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார விரிவும், அதனுடன் தோன்றிய செல்வாக்குமிக்க வர்த்தக முதலாளிகள் நிலைமையும் எவ்வளவு முக்கியமானவையோ, அதுபோன்றே அரசியல் துறையில் தோன்றிய சக்திவாய்ந்த தேசிய அரசுகளும் முக்கியமானவை ஏறக்குறைய 1450ஆம் ஆண்டுவரை 'இங்கிலாந்து', 'ஃபிரான்ஸ்', 'ஸ்பெயின்' என்னும் சொற்களுக்கு அரசியல் பொருள் ஏதுமில்லை. அவை நிலப்பரப்பு, மொழி ஆகியவை சார்ந்த பொருளில்தான் பயன்படுத்தப்பட்டன. நார்மானிய

வெற்றிக்குப்பின் (Norman conquest) இங்கிலாந்திலும் ஃபிரான்ஸி லும் மன்னர்கள் ஆட்சி செய்துவந்தபோதிலும், குடிமக்களின் முழுப்பற்றுதலையும் பெறக்கூடிய அளவிற்கு அவர்களிடம் அதி காரம் இல்லை.

இடைக்காலத்தின் இறுதியில் எண்ணிலடங்கா நிலமானியப் பிரபுக்களிடையே அதிகாரம் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர் களுடைய அதிகாரத்திற்குரிய ஆதாரம் சிறிது சிறிதாகக் கலைக்கப் பட்டுவிட்டது. நிலையாக வளர்ச்சிபெற்றுவந்த வாணிபம் பண அளிப்பை அதிகரித்தது. அதனால் நகரங்கள் வளர்ச்சியும் விரிவும் அடைந்தன. நிலமானிய முறையிலும் பணப்புழக்கம் புகுந்து விட்டது. நிலப்பிரபுக்களும் பண்ணையாட்களும் தத்தம் பணிகளை யும் தொண்டுகளையும் ஒருவருக்கொருவர் செய்வதற்குப் பதிலாக ஒப்பந்தமுறையில் பணம் செலுத்தும் நிலை ஏற்பட்டது. நில மானியப் பிரபுக்களிடமிருந்து குதிரை வீரர்களை நிலமானியத் தண்டலாகப் பெற்று, அரசர்கள் படை திரட்டியமுறை மறைந்து, அவர்களிடமிருந்து வரி வசூலித்துப் படைபலத்தைப் பெற முடிந்தது. இவ்வாறுக நிலமானிய முறை சிதைந்து, மறைந் தது. அதற்குப் பதிலாக, சக்திவாய்ந்த தேசிய அரசுகள் எழுந் தன. இங்கிலாந்து, ஒரு வலுவான தேசிய அரசாக உருவெடுக்க ஏழாம் ஹென்றியின் உறுதியும் விடாமுயற்சியும் அவசியமாயின. அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எட்டாம் ஹென்ரியும், எலிஸபெத் ராணியும் இங்கிலாந்தை வலுவான ஒரே நாடாக அமைத்தனர்.

ஸ்பெயின் நாடும் நிலமானிய முறையால் சிதறுண்டிருந்தது. ஆனல் 1469ஆம் ஆண்டில் ஆரகானைச் சேர்ந்த ஃபெர்டினண் டிற்கும் காஸ்டீலைச் சேர்ந்த இசபெல்லாவிற்கும் நடந்த திருமணத் தால், அவ்விரு நிலமானிய அரசுகளும் உடனடியாக இணைந்தன.

அதுபோன்றே ஃபிரான்ஸ் நாடும் நூறுண்டுப் போர் நடத்தி, ஆங்கிலேயர்களின் உரிமையிலிருந்து விடுதலை பெற்றது. பின்னர், 11ஆம் லூயி தன் கூர்மையான அறிவாலும் சதிகளினுலும் ஃபிரான்ஸ் நாட்டை ஒருங்கிணைத்துத் தன் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவந்தார்.

இவ்வாறு ஏற்பட்ட தேசிய அரசுகளின் விளைவாக நிலமானியப் பிரபுக்கள் அடிபணிந்து, அரச சபையின் உறுப்பினர்களாக மாறினர். மேலும், தேசிய அரசுகளுக்கும் கத்தோலிக்கத் திருச் சபைக்கும் பூசல்கள் ஏற்பட்டன. இதுவரை, சமய அதிகாரமும், இவ்வுலகைச் சார்ந்த அதிகாரமும் திருச்சபைக்கே இருந்து வந்தது. திருச்சபைக்குச் சொந்தமான நிலங்களுக்கு வரி இல்லா மலிருந்தது. தேசிய அரசுகளின் மன்னர்களோ, அந் நிலங்களுக்

கெல்லாம் வரிவிதிக்கும் அதிகாரத்தைப் பலவந்தமாய்ப் பயன் படுத்தினர். இவ்வுலகைச் சார்ந்த அதிகாரங்களனைத்தும் தமக்கே உரியதென வாதாடினர். இவ்வாறு தோன்றிய பூசலில் மன்னர் களுக்கே வெற்றி கிட்டியது. இதனால் திருச்சபைக்கு இருந்துவந்த அதிகாரம் முடிவுற்றது.

வணிக வாதத்தின் முக்கிய அம்சங்களும் கொள்கைகளும்

அரசின் வலிமை : மேற்கு ஐரோப்பாவில் தோன்றிய புதிய அரசுகளனைத்தும் தத்தம் செல்வம், எல்லை, மக்கள் தொகை முதலியவற்றை விரிவுபடுத்த வேண்டுமென விரும்பின. இக் குறிக்கோள்களோடுதான் தத்தம் தேசியக் கொள்கைகளை நிருண யம்செய்தன. எனவே, சாத்தியமான எல்லா வழிகளையும் மேற் கொண்டு தமது தேசிய வலிமையை அதிகரிப்பதுதான் வணிக வாதிகளின் தலையாய குறிக்கோளாக இருந்ததில் வியப்பில்லை. தேசிய வலிமையை எவ்வாறு அதிகரிப்பது? ஒரு நாட்டின் வலிமைக்குப் படைபலம் முக்கியம். எனவே, பெரிய காலாட் படைக்கு வேண்டிய ஆட்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு வேண்டிய பயிற்சியை அளிப்பது, வணிகவாதிகளின் முக்கிய வழிகளில் ஒன்று. இதைவிடக் கப்பற்படைதான் அவர்களுக்கு முக்கியமானதாகத் தோன்றியது. ஏனெனில் வெளிநாட்டுச் சுரங்கங்களிலிருந்து தங்கமும் வெள்ளியும் கடல்வழியாகவே வர வேண்டுமாதலால், அவற்றைப் பாதுகாப்பாக, ஏற்றிவருவது அவசியம். மேலும் வெளிநாடுகளுக்குத் தேவையான பொருள் களை ஏற்றிச் செல்வதற்கு வணிகக் கப்பல்களும் அவசியம். நிற்க, பெருகிவரும்மக்கள் குடியேறுவதற்குக் குடியேற்றநாடுகள் தேவை. குடியேற்ற நாடுகள் இருந்தால்தான் தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களைப் பெறமுடியும். இவையனைத்தும் முறையாக நடைபெற செல்வம் தேவை. செல்வத்திற்கெல்லாம் செல்வம் பொன்னும் வெள்ளியுமே. இப் பொன்னையும் வெள்ளியையும் திரட் டிக்குவித்த ஸ்பெயினும் போர்ச்சுக்கலும் செல்வத்தில் திளைத்துப் பேரரசுகள் நிறுவிச் செருக்குற்றிருந்தன. இதனால் பொன்னும் வெள்ளியுமே போருக்கும் வெற்றிக்கும் அவசியமானவை என்னும் எண்ணம் ஐரோப்பா முழுவதும் பரவியது. எனவே, ஒரு நாட்டின் வலிமை அந்நாட்டிலுள்ள பொன், வெள்ளி ஆகியவற் றின் அளவால் நிருணயிக்கப்படுகிறதென வணிகவாதிகள் கருதினர்.

பொன்னுக்கும் வெள்ளிக்கும் முக்கியத்துவம் ஏன்?

பொன்னுக்கும் வெள்ளிக்கும் எல்லாவற்றையும்விட முக்கியத் துவம் கொடுத்ததற்கு 'செல்வம்' என்ற சொல்லின் பொருளில் ஏற்பட்ட குழப்பம் மட்டுமன்றி, இதர காரணங்

களும் உண்டு. பொன்னும் வெள்ளியும் அழியாமல் நீடித்திருக்கக் கூடியவை. அதோடு, சேகரித்து வைப்பதற்கு அல்லது முடக்கி வைப்பதற்கு வசதியானவை. செல்வம் பெருகச் சேமிப்பு அவசியமெனத் திடமாக நம்பினர்; ஆனால், சேமிப்பையும் முடக்குதலையும் வணிகவாதிகள் ஒன்றெனக் கருதியதால், பொன்னும் வெள்ளியுமே அவர்கள் சிந்தனையில் முக்கியமானவைகளாகத்தோன்றின. எல்லாவற்றையும்விட, பணத்தைக் கொண்டு போருக்கு வேண்டிய படைவீரர்களையும் படைக்கருவிகளையும் வாங்க முடியும். எனவே, எப்போதும் போர் நடத்திக் கொண்டோ அல்லது போருக்குத்தயார் செய்துகொண்டோ இருந்த நாடுகளுக்குப் பணம்தான் முக்கியமானதாகத்தோன்றியது. தேசிய அரசுகளுக்கு இப்போர் சர்வசாதாரணமாயிருந்த காலம்அது. 1494ஆம்ஆண்டுமுதல் 1559 ஆம் ஆண்டு வரை ஐரோப்பாவில் ஆண்டுதோறும் போர் நடந்தது. 7ஆம் நூற்றாண்டிலோ, ஏழு ஆண்டுகள் மட்டும்தான் போரின்றி அமைதி நிலவியது. இப் போர்களில் தம் நாடு வெற்றிபெற வேண்டுமென்றும், அவ் வெற்றிக்கு அவசியமான பொன்னையும் வெள்ளியையும் திரட்ட வேண்டுமென்றும் வணிகவாதிகள் விரும்பியதில் வியப்பில்லை.

எனவே, மற்ற எல்லாவற்றையும்விடப் பொன்னும் வெள்ளியும் தான் செல்வத்தின் இலக்குகளென வணிகவாதிகள் கருதினர். 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த ஆங்கில வணிகவாதிகளில் ஒருவரான திரு. கிளமென்ட் ஆம்ஸ்டிராங் (Clement armstrong), 'ஏராளமான வணிகர்களையும், வியாபாரச் சரக்குகளையும்விட, ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் கொண்டிருப்பதே ஒரு நாட்டிற்குப் பயன் தருவது' என வலியுறுத்திக் கூறியுள்ளார். ஃபிரான்ஸ் நாட்டு வணிகவாதியான மான்ஷிரடீன் (Montchretier), 'பொன்னாலும் வெள்ளியாலும்தான் நாம் வாழ்கிறோமேயன்றி, மூலப்பொருள்களில் நாம் செய்யும் வாணிபத்தாலல்ல' என்று கூறினார். 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கு'மென்பார்கள். இதையொட்டியே கொலம்பஸ் அவர்கள், 'தங்கம் எவ்வளவு அற்புதமானது! அதுமட்டுமிருந்தால் ஆன்மாவைக்கூடப் பரலோகம் சேர்த்துவிடலாம்' என வியந்தார்.

வாணிபநிலைக் கோட்பாடு

இவ்வளவு மாயச்சக்தி வாய்ந்த பொன்னையும் வெள்ளியையும் அடைவதெப்படி? இவ் வினாவிற்கு வணிகவாதிகள் வாதப் பொருத்தமான விடையைக் கண்டனர். 'பொன்னும் வெள்ளியும் பெருகவேண்டுமாயின், உள்நாட்டிலேயே இச் சுரங்கங்கள் இருக்கின்றனவா என்று தேடிப்பார்க்கவேண்டும். இல்லையெனில் இக் கனிவளமிக்க நாடுகளைக் கைப்பற்றி அவற்றைக் குடியேற்ற

நாடுகளாக்க வேண்டும். அங்கிருந்து பொன்னும் வெள்ளியும் இறக்குமதி செய்யப்படவேண்டும். இது முடியவில்லையானால், பிற நாடுகளுக்கு ஏற்றுமதியைப்பெருக்கி இறக்குமதியை எவ்வளவு தூரம் குறைக்கமுடியுமோ அவ்வளவு தூரம் குறைக்கவேண்டும். அதிகப்படியான ஏற்றுமதிக்கு ஈடாகப் பொன்னையும் வெள்ளியையும் பெற்று நாட்டின் செல்வத்தைப் பெருக்கலாம்' இதுவே வணிகவாதிகளின் சித்தாந்தமாகும்.

சாதகமான வாணிப நிலைமை அடைவதுதான் வணிகவாதிகளின் முக்கியமான கொள்கை. இக் கொள்கையை விவரிக்கும் முறையில், அதிக மதிப்புடைய பொருள்களை ஏற்றுமதி செய்தல் நன்று என வாதாடினர். அதாவது, விலையுயர்ந்த பொருள்களை ஏராளமாக ஏற்றுமதி செய்யவேண்டும்; மூலப்பொருள் எதையும் ஏற்றுமதி செய்யக்கூடாது என்று கூறினர். இறக்குமதியில் இதற்கு நேர்மாறான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் விலையுயர்ந்த போகப் பொருள்களை இறக்குமதி செய்தல் கூடாது; கூடுமானவரை மூலப் பொருள்களையே இறக்குமதி செய்தல் வேண்டும்.

'அயல் நாட்டிலிருந்து எவ்வளவு பொன் பெறமுடியுமோ அவ்வளவு பெற முயலவேண்டும். அயல்நாட்டிற்கு எவ்வளவு குறைவாகக் கொடுக்க முடியுமோ, அவ்வளவு குறைவாகக் கொடுக்க வேண்டும்;' இதுவே வணிகவாதிகளின் விதி. இவ் விதி, வாணிபம் செய்யப்படும் கண்கூடான பொருள்களுக்கு மட்டுமின்றி. கண்ணுக்குப் புலனாகாத இனங்களுக்கும் (Invisible items) பொருந்தும். கட்டண வருவாய், இன்சூரன்ஸ் கட்டணம், வெளிநாட்டுத் தூதரகச் செலவு, படைச் செலவு ஆகியவை போன்ற புலனாகா இனங்கள் அக் காலத்திலேயே அறியப்பட்டிருந்தன. எனவே, ஒரு நாட்டின் வணிக மிச்சத்தைக் கணக்கிடும் போது, இவற்றையும் சேர்க்கவேண்டுமென்பதை நுட்பமான ஒரு சில வணிகவாதிகள் அறிந்திருந்தனர்.

கட்டுப்பாட்டின் அவசியம்

பொருள் உற்பத்திக்கு நேரடியாக உதவாத படை வீரர்களையும் கப்பலோட்டிகளையும் பெரும் எண்ணிக்கையில் அதிகரிக்கவும், அவர்களைப் பராமரிக்கவும் வேண்டுமாயின், துப்பாக்கி, பீரங்கி, வெடிமருந்து, கப்பல்கள், துணிமணிகள், உணவுப் பொருள்கள் முதலியன தொடர்ந்து நிலையாக உற்பத்தி செய்யப்படவேண்டும். இவற்றை நிச்சயமாகப் பெறுவதற்குச் சிறந்த வழி என்ன?

இவையனைத்தும் தற்செயலாகக் கிடைக்கமாட்டா; இதற்குத் தனிமனிதனின் முயற்சி அவசியம். எனவே, தனி நபர்களின் நட-

வடிக்கைகளை அரசு ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தவும்வேண்டும். தேசிய வலிமையே மக்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும். நாட்டின் நலனுக்காகவே அவர்கள் வாழவேண்டும். இவ் வகையில் அரசு தலையிடக்கூடாத அல்லது தலையிட முடியாத காரியம் ஒன்றுமே கிடையாது. இடைக்காலத்திலெல்லாம் கைவினைஞர்களின் உற்பத்திமுறைகளையும், அவர்கள் உற்பத்திசெய்த பொருள்களின் தரத்தையும்'கில்டுகள்'மேற்பார்வையிட்டு ஒழுங்குபடுத்தின. தாம் விரும்பும் தொழிலைச் செய்வதற்குக்கூட உரிமையில்லாமலிருந்தது. தலைமுறை தலைமுறையாகத் தம் முன்னோர்கள் செய்து வந்த தொழிலையே எல்லாரும் மேற்கொண்டனர். பொருமையின் காரணத்தால் வியாபாரம்கூட வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டது. எனவே, பொருளாதாரச் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் வணிகவாதிகளுக்கு மட்டும் தோன்றியதாகக் கருதக் கூடாது ; இது பரம்பரைப் பழக்கத்திற்கும் ஒத்திருந்தது.

வணிக வாதத்தின் சாரத்தைக் கூறுவதாயின், தேசிய வலிமையை அடையும் குறிக்கோளுக்கு முதலிடம் கொடுத்து, அக் குறிக்கோளை அடைவதற்குத் தேவையான செல்வத்தைப் பெருக்கும் வகையில் பொருளாதார வாழ்வை ஒழுங்குபடுத்தும் கொள்கையே வணிகவாதம் எனலாம்.

இதுவரை, வணிக வாதத்தின் பொதுக் குணங்களையும் கொள்கைகளையும் கண்டோம். இப்போது, வணிகவாதப் பேரறிஞர்களான சர் தாமஸ் மன், அந்தோனியோ-செர்ரா (Antonio Serra), மான்ஷிரடீன், பிலிப் வான் ஹார்னிக் (Philip Von Hornick) ஆகியோர் வணிகவாதக் கருத்துகளைத் தங்கள் நூற்கள்மூலம் எவ்வாறு விளக்குகின்றனர் என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

சர் தாமஸ் மன் (1571–1641)

ஆங்கில வணிகவாதிகளில் தலைசிறந்தவர் தாமஸ் மன், ஓரளவிற்கு முழுமையான வணிக வாதத்தை வகுத்தவர். இவர், இலண்டனைச் சேர்ந்த பெரிய வணிகர், கற்றறிந்தவர், செல்வமிக்கவர். 1613ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சொந்தமான கப்பலொன்று ஏராளமான தங்கக்கட்டிகளை இங்கிலாந்திலிருந்து எடுத்துச் சென்றது கண்டுபிடிக்கப்பட்டது. இதைப் பல வணிகவாதிகள் கண்டித்தனரெனினும், தாமஸ் மன் அக் கம்பெனிக்கு ஆதரவாக வாதாடினர் :

“நம் நாட்டுச் செல்வத்தை அதிகரிப்பதற்குரிய பொதுவழி, நமது ஏற்றுமதியைப் பெருக்கி, இறக்குமதியைக் குறைப்பதுதான். அவ் வழியில் நம்மால் முடிந்த அளவு ஏற்றுமதி செய்து செல்வத்தை ஈட்டிவிட்டோம் என்று வைத்துக்கொண்டால், மேலும் செல்வம்

பெற பிறிதொரு வழி உண்டு. அதாவது, நம் பணத்தைக் கொண்டு கிழக்கிந்தியத் தீவுகளில் வாசனைப் பொருள்களை மலிவாக வாங்கி, அவற்றை இத்தாலியிலோ அல்லது துருக்கியிலோ அதிக விலைக்கு விற்பதன்மூலம் கிடைக்கும் இலாபம் நமக்கு நிகர வருமானமாகும் என்றார். மேலும், 'பணம் வியாபாரத்தைப் பெருக்கும்; வியாபாரம் பணத்தை அதிகரிக்கும்!' என்றும் வாதாடி, கம்பெனிக்கு வெற்றி தேடித் தந்தார். இதனால் 1615ஆம் ஆண்டு அக் கம்பெனியின் இயக்குநர்களில் ஒருவராக நியமனம் பெற்றார். இவர், தம் மகளின் அறிவு வளர்ச்சிக்காக 1630-ல் ஒரு நூல் எழுதினார். அதை அவர் மகன் 1664-ல் வெளியிட்டார். 'பிற நாட்டு வணிகமூலம் இங்கிலாந்தின் செல்வப் பெருக்கம் அல்லது சாதகமான வணிக நிலையே நம் செல்வத்துக்கு ஆதாரம்' என்பதே அந் நூலின் நீண்ட தலைப்பு. இந் நூலில் தாமஸ் மன் பன்னிரண்டு வழிவகைகளைக் கூறி, வணிக வாதத்தின் சாரத்தைத் தருகிறார். அவை வருமாறு:

(1) எந்த நிலத்தையும் தரிசாக விடக்கூடாது. தரிசு நிலங்களை விளைச்சல் நிலங்களாக மாற்றி, அதில் சணல், புகையிலை போன்ற இறக்குமதிப் பொருள்களைப் பயிரிடல் வேண்டும்.

(2) அயல் நாட்டுப் பொருள்களின் மீதுள்ள மோகத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

(3) தாயகத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் உள்நாட்டிலேயே தயாரிக்க வேண்டும்.

(4) பிற நாட்டவருக்கு என்னென்ன பொருள்கள் தேவை என்பதையறிந்து, அப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டும். அவர்களின் தேவைக்கேற்ப விலையை நிருணயம் செய்யவேண்டும்.

(5) ஏற்றுமதிப் பொருள்களைச் சொந்த நாட்டுக் கப்பல்களில் அனுப்பவேண்டும். அப்போது, கப்பல் கட்டணம் மிச்சமாகும்; வணிக இலாபமும் நமக்கே கிடைக்கும்.

(6) நாட்டைச் சுற்றியுள்ள கடலில் மீன்பிடிக்கும் தொழிலைப் பெருக்க வேண்டும். இதனால் உணவுப் பற்றாக்குறை ஓரளவு குறையும்; மாலுமிகளின் தேர்ச்சிக்கும் இது வழிசெய்யும்.

(7) தாயகத்திற்குத் தேவையில்லாத பொருள்களை இறக்குமதி செய்து, அவற்றை வெளிநாடுகளில் விற்கவேண்டும். இது, வணிகர்களின் இலாபத்தை விரிவாக்கும்.

(8) நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்; ஆடம்பர வாழ்க்கைக்கு உள்நாட்டுப் பொருள்களையே உபயோகிக்க வேண்டும்.

(9) இந்திய நாட்டில் மிளகு வாங்கி, பாரிஸில் விற்றால், அண்டை நாடுகளோடு வியாபாரம் செய்து பெறும் இலாபத்தைக் காட்டிலும் அதிக இலாபம் கிடைக்கும். எனவே, தூர நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொள்ளவேண்டும்.

(10) சிலவகை வாணிபத்திற்குத் தங்க ஏற்றுமதி அவசியமாகும். எனவே, தங்கத்தை ஏற்றுமதி செய்யத் தயங்கவேண்டியதில்லை.

(11) வெல்வெட்டு, பட்டு போன்ற கைத்தொழில் பொருள்களுக்கு ஏற்றுமதி வரி விதிக்கக்கூடாது. அப்போதுதான் அத்தொழில்கள் வளர்ச்சியடையும்; அதன்மூலம் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும்.

(12) கிடைக்கக்கூடிய எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திச செல்வத்துட் செல்வமான பொன்னை அடையப் பாடுபட வேண்டும்.

மேற்கூறிய வழிவகைகள் அரசைவளப்படுத்த மிகவும்உதவின. நாட்டின் சிக்கல்கள் அனைத்திலும் கவனம் செலுத்தி அவர் கூறிய ஆலோசனைகள் அந் நாளில் பெரிதும் போற்றப்பட்டன.

மற்ற வணிகவாதிகளைப் போலவே 'மன்'னும் சோம்பலைக் கண்டிக்கிறார். அந் நாள்களில் டச்சுக்காரர்கள இடைவிடாது உழைத்தனர்; எனவே, அவர்களே ஐரோப்பாவில் நல்ல உழைப்பாளிகள எனச் சான்றிதழ் தருகிறார்.

அந்தோனியோ செர்ரா (1580—1650)

இவர் ஓர் இத்தாலிய வணிகர் ஆவர். தங்கச் சுரங்கமே இல்லாத நாட்டில், தங்கமும் வெள்ளியும ஏராளமாகக் கிடைக்க வழிவகைகளைக் கூறி ஒரு கட்டுரை எழுதினார். விவசாயத்தை விடத் தொழில்களை விரும்பத்தக்கதென்றார். ஏனெனில் தொழில்கள்தாம் பயனுடையனவை. மேலும் அதிக இலாபம் தரக்கூடியவை; மேலும தொழிலில் பொருளின் உற்பத்தியை எவ்வளவு வேண்டுமானாலும் பெருக்கலாம். பொன்னும வெள்ளியும் ஏராளமாகப் பெறுவதற்குரிய வழி வகைகளில் ஒரு சில வருமாறு: குடிமக்கள் விடாமுயற்சியோடு உழைக்கவேண்டும்; உள்நாட்டிலும் வெளிநாட்டிலும வணிகத்தை வளர்ப்பதில் விருப்பமுள்ளவர்களாக இருக்கவேண்டும்; வெளிநாட்டுப் பொருள்களிலேயே அதிக வணிகம் நடத்தவேண்டும். அரசு வகுக்கவேண்டிய சட்டங்

களைப் பற்றியோ அல்லது வணிகத்தை ஒழுங்குபடுத்த வேண்டிய வழிவகைகளைப் பற்றியோ செர்ரா ஒன்றும் குறிப்பிடவில்லை. தன் சிறு நூலின் பிற்பகுதியில் நேபில்ஸ் வறுமையில் வாடுவதேன்? வெனிஸ் நகரம் செல்வப் பொலிவுடன் திகழ்வதேன்? என்ற வினாக்களுக்கு விடைகாணும் முயற்சியில் ஈடுபடுகிறார்.

வான் ஹார்னிக் (1638 –1712)

வான் ஹார்னிக் ஒரு ஜெர்மானிய வணிகவாதி. இவர் வியன்னாவில் சட்டம் பயின்று வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். 1638-ல் மனம் இருந்தால் எல்லா நாடுகளையும்விட ஆஸ்திரியா செல்வாக்கான நாடாக முடியும் என்ற நூலை எழுதினார். ஆஸ்திரியா பிற நாடுகளைச் சார்ந்து வாழாமல் சுய நிறைவுள்ளதாக இருக்கவேண்டுமென வலியுறுத்தினார். எந்த நாடுமே பொன்னையும் வெள்ளியையும் கொண்டுதான் வல்லரசாக விளங்கமுடியும். இதற்காக சர் தாமஸ்மன் கூறிய வழிவகைகளையொத்த உபாயங்களையே தருகிறார். மூலப்பொருள்களைக் காட்டிலும் முடிவுப்பொருள்கள் பன்மடங்கு விலை மதிப்புடையவை. எனவே, தன்னிடமுள்ள மூலப்பொருள்களைவிட உள்நாட்டுப் பொருள்கள் கிராக்கியாயிருந்தால்கூட பிற நாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்யக்கூடாது.

மான்ஷிரடீன் (1576—1621)

ஃபிரான்ஸ் நாட்டு வணிகவாதிகளில் முக்கியமானவர் மான்ஷிரடீன் இவர் 1615ஆம் ஆண்டில் தம் அரசியல் பொருளாதாரக்கொள்கைகளை அரசனுக்குச் சமர்ப்பித்தார் இந் நூல் நவீன பொருளாதாரக் கருத்துடையதன்று. (தலைப்பு கவர்ச்சியானதாயும் நவீனமாயும் இருக்கிறது) இந் நூலில் ஃபிரெஞ்சு வணிகம், தொழில், கப்பல் துறை, அரசனின் முக்கியக்கடமைகள் ஆகியவற்றைச் சித்தரிக்கிறார். இவர் ஆய்ந்த தொழில்களில் வேளாண்மை முதலிடம் பெற்றிருப்பது வியக்கத் தகுந்தது மட்டுமன்று; வணிக வாதத்திற்கே மாறானது. செல்வம் திரட்டவேண்டுமாயின், மக்கள் ஓயாமல், சலியாமல் தேனீக்கள்போல் சுறுசுறுப்பாய் உழைக்க வேண்டுமென வலியுறுத்தும் இவர் சோம்பலை மிகவும் கண்டிக்கிறார் வேலையற்ற மனமே சாத்தானின் பட்டறை இல்லம் சோம்பல் ஆடவரின் வீரத்தினையும், மகளிரின் கற்பையும் அது பாழ்படுத்திவிடும். மனிதனின் மகிழ்ச்சிக்குச் செல்வமே ஆதாரமாயின், உழைப்பே செல்வத்திற்கு அடிப்படை என்று உழைப்பிற்கு அவர் ஏற்றம் தந்தார்.

வணிக வாதச் செயல்முறை

அரசின் வளமைக் கோட்பாட்டிலிருந்தும், அதிலிருந்து பெறப்பட்ட சாதகமான வாணிப நிலைக்கோட்பாட்டிலிருந்தும் வணிக வாதத்தின் செயல்முறைகள் புலனாகின்றன.

கட்டுப்பாடு

பொன்னும் வெள்ளியும் இடைவிடாமல் வந்துகொண்டேயிருக்க வாணிபம்தான் முக்கியமான வழி என்று கருதினால், தன்னியல்பாகவே அதை விட்டுவிடக்கூடாது. அதை அரசு மேற்பார்வையிட வேண்டும்; கட்டுப்படுத்தவும் வேண்டும். சில்லரையான காரியம் என்றுகூடப் பாராமல் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் இறக்குமதியைக் குறைப்பதற்குமான எல்லா வழிவகைகளையும் அரசு தேடவேண்டும். வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால் எந்தெந்தப் பயிர்களைச் சாகுபடி செய்வது, எப்படிச் செய்வது என்பதிலெல்லாம் அரசு அக்கறை கொள்ள வேண்டும். தொழில்களை எடுத்துக்கொண்டால் எந்தெந்தத் தொழில்களை எங்கெங்கு ஆரம்பிப்பது என்பதை அரசு நிருணயிக்க வேண்டும். உற்பத்தியாகும் பொருள்களின் அளவு, எண்ணிக்கை, தரம், விலை ஆகியவையும் அரசால் தீர்மானிக்கப்பட வேண்டியவை. வியாபாரத் துறையில் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் கொண்டுவர அரசிற்கு உரிமையுண்டு. என்னென்ன பொருள்களை மக்கள் வாங்கி நுகரலாம் என்பதைக்கூட அரசே நிருணயம் செய்யும். ஏற்றுமதியை அதிகரிக்க மானியம் வழங்கல், போக்குவரத்துக் கட்டணங்களைக் குறைத்தல் போன்ற வழிவகைகளை அரசு கடைப்பிடிக்க வேண்டும். இறக்குமதியைக் குறைக்கவோ அல்லது தடுக்கவோ அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சாதகமான வாணிப நிலையை அடையும் நோக்கத்தோடு வட்டி விகிதத்தையும் கூலியையும் நிருணயிக்க அரசுக்கு உரிமையுண்டு. சுருங்கக்கூறின், பொருளாதாரத்துறையில் அரசு தலையிடக்கூடாத செயலே இருக்கக்கூடாது. இவ்வாறாகத் தம் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கமே தகுதியான கருவியென வணிக வாதிகள் கருதினர்.

வணிக வாதத்தைச் செயல்படுத்தும் முறையில் நாட்டிற்கு நாடு வேறுபாடு இருந்ததென முன்னர் குறிப்பிட்டோம். இப்போது அந்த வேறுபாட்டைச் சிறிது ஆய்வோம்.

பொன், வெள்ளிபற்றுக்கோட்பாடு

(Bullionism)

பொன்னையும் வெள்ளியையும் ஏற்றுமதி செய்யக்கூடாதென்ற கோட்பாடு பழமையானதும் விளக்கமில்லாததுமாகும். பொன்னும் வெள்ளியும் நாட்டிற்கு வந்து குவிந்தால், அவற்றைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டுமென்ற கொள்கையையே நாம் பொன், வெள்ளிப் பற்றுக் கோட்பாடு என்கிறோம்.

பொன், வெள்ளி ஆகியவற்றின் ஏற்றுமதியில் இடைக்காலத்திலேயே கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 16, 17ஆம் நூற்றாண்டுகளில்தான் அவை வழக்கிற்கு வந்தன. அமெரிக்காவிலிருந்து ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் பெற்ற ஸ்பெயின் நாடுதான் இக் கட்டுப்பாடுகளைத் தீவிரமாகப் பல ஆண்டுகள் வரை மேற்கொண்டிருந்தது. பொன்னையும் வெள்ளியையும் ஏற்றுமதி செய்தோருக்கு மரண தண்டனை விதித்தது அவர்களைக் காட்டிக்கொடுப்போருக்கு வெகுமதி வழங்கியது. பிற நாட்டவர் இவற்றை வாங்கக்கூடாதெனச் சட்டம் பிறப்பித்தது. ஆனால், பெருகிவந்த தம் மக்களுக்கும் தம் குடியேற்ற நாட்டவருக்கும் வேண்டிய இன்றியமையாத பொருள்களைக்கூட வேண்டிய அளவு உற்பத்திசெய்ய முடியாதிருந்தது. எனவே, ஸ்பெயின் நாட்டு மக்கள் தமக்கு வேண்டிய பொருள்களை இறக்குமதி செய்தனர். பொன்னையும் வெள்ளியையும் பிறநாட்டவருக்குக் கள்ளத்தனமாக அனுப்பினர். இதனால் அதிகாரிகள் லஞ்சம் வாங்குவது சர்வசாதாரணமாகிவிட்டது. இந் நிலையில் இவ்வுலோக ஏற்றுமதியை அரசு அங்கீகரித்து, அவற்றிற்கு ஓர் உச்சவரம்பைக் கொண்டு வந்தது. இங்கிலாந்திலும் ஹாலந்திலும் இக் கட்டுப்பாடுகள் 16ஆம் நூற்றாண்டிலேயே ஒழிக்கப்பட்டுவிட்டன. எனவே, இச் செயல்முறை ஸ்பெயின் நாட்டின் சோகக்கதையாகிவிட்டது.

வாணிபச் சர்வாதீனம்

வணிகவாதத் திட்டங்களில் வாணிபச் சர்வாதீனத் திட்டமே மிக முக்கியமானதாகும். வணிகவாதத்தை அமுலாக்கிய நாடுகள், தாம் வியாபாரம் செய்யும் பகுதியில் பிற நாடுகள் நுழையக்கூடாது என்பதே இச் சர்வாதீனத்தின் சாரம். கிழக்கிந்திய நாடுகளோடு, தான்மட்டுமே வியாபாரம் செய்ய வேண்டுமென்ற கொள்கையை 16ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கல் கொண்டிருந்தது. மேலும், இந்த வியாபாரத்தைப் போர்ச்சுக்கல் அரசர் தனது ஏக உரிமையாக ஆக்கிக்கொண்டார்.

அடுத்து, தம் குடியேற்ற நாடுகளோடு மட்டுமே வாணிபம் செய்ய வேண்டுமென ஸ்பெயின் விரும்பியது. ஸ்பெயின் நாட்டுப் பெரு வணிகர்கள் தம் வியாபாரச் சரக்குகளைக் குடியேற்ற நாட்டிலுள்ள தம் பதிலாளுக்கு அனுப்பி, அங்கிருந்து வாசனைப் பொருள்களையும் பிற பண்டங்களையும் அதே கப்பலில் வரவழைத்தனர். ஆனால், இவ் வியாபாரம் அனைத்தும் அரசருக்குச் சொந்தமான கப்பல்களில்தான் நடைபெற்றது. எனவே, வணிகர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும் கட்டுப்படுத்தவும் அரசருக்கு எளிதாயிற்று. மேலும் இவ் வியாபாரம் எந்தெந்தத் துறைமுகங்களின் வழியாக நடைபெற வேண்டுமென்பதை அரசரே தீர்மானித்தார். இவ் வியாபாரம் பாதுகாப்புடன் நடைபெற வேண்டுமென்பதற்காக 1560 ஆம் ஆண்டிற்குப் பின்னர் புதியதொரு திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி எல்லாச் சரக்குக் கப்பல்களும் கூட்டமாக வருடத்திற்கு இரு முறை மட்டுமே சரக்குகளை ஏற்றிச் சென்றன. அவற்றுடன் போர்க் கப்பல்களும் அனுப்பப்பட்டன.

ஆனால், 17 ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டின் பொருளாதாரம் நலிந்து விட்டது. குடியேற்ற நாட்டு மக்களுக்கு அது வேண்டிய பொருள்களை வழங்க இயலவில்லை. எனவே, இம்முறை கைவிடப்பட்டது. குடியேற்ற நாடுகளுடன் நடந்த வியாபாரத்தைப் பிற நாட்டு வணிகர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

டச்சு வணிகவாதக் கொள்கை கிழக்கிந்தியக் கம்பெனியின் சர்வாதீனத்தின் வாயிலாகச் செயல்பட்டது. கிழக்கிந்தியத் தீவுகளில் வியாபாரம் செய்துவந்த அந்நிய வியாபாரிகளைக் கம்பெனியின் அதிகாரிகள் வெளியேற்றினர்.

நேர்முக வாணிபக் கட்டுப்பாடு

தமது வர்த்தகச் சர்வாதீனங்களின் வழியாகப் பல நாடுகள் தமக்குத் தேவையான பண்டங்களைத் தம் பேரரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்தே வாங்கின. இதர நாடுகளுக்குத் தேவையான பொருள்களை மலிவாக வாங்கி அதிக விலைக்கு விற்றுத் தம் வாணிப நிலையைச் சாதகமாக்கிக் கொண்டன. அதோடு, ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் பல கட்டுபாடுகளைப் புகுத்தின. எல்லா நாடுகளுமே இவ் வழிவகைகளை மேற்கொண்டன. எனினும், இங்கிலாந்தில்தான் இது சிறப்பாகவும் நிலையாகவும் இருந்தது.

பல பிரிட்டிஷ் தொழில்கள் அயல்நாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாப்புப் பெற்றன. அவை முன்னரே செலுத்தியிருந்த வரிகள் திருப்பி அளிக்கப்பட்டன. ஏற்றுமதியைப் பாதிக்கக்கூடிய இறக்குமதிப் பொருள்களின்மீது கடுமையான வரிகள் விதிக்கப்பட்டன. ஒவ்வொரு கட்டுப்பாடும் ஏதாவதொரு தொழிலுக்கு ஊக்கமளிப்பதாகவே அமைந்தது.

கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள் (The Navigation Acts)

உள் நாட்டுக் கப்பல் தொழிலை விருத்தி செய்வதற்காகப் பல நாடுகள் நாவாய்ச் சட்டங்களைக் கொண்டுவந்தன. இவையனைத்தும் சாதகமான வாணிபநிலைக் கோட்பாட்டிற்குப் பொருத்தமானவையாய் அமைந்தன. ஒரு நாட்டின் படைபலத்திற்கு மட்டுமன்றி, பொருளாதார வலிமைக்கும் கப்பல் துறை முக்கியமானதாகும். எனவே, வணிகவாதக் கொள்கையில் கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள் ஏராளமாக உள்ளன. தேசிய வலிமைக்கான இத்தகைய செயலில் முழுக் கவனம் செலுத்திய நாடு இங்கிலாந்துதான். நாற்புறமும் கடலால் சூழப்பட்ட நாடு பழங்காலத்திலிருந்தே இதில் கவனம் செலுத்தியதில் வியப்பொன்றுமில்லை.

கடல் வழியாக நடக்கும் எந்த வாணிபமும் அயல் நாட்டுக் கப்பல்களில் நடைபெறக்கூடாது என்ற முறையில் இச்சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. மேலும் இங்கிலாந்திற்கு வேண்டிய கப்பல்களை அந் நாட்டு மக்களே கட்டவேண்டும்; கூடுமானவரை அவர்களே அவற்றிற்கு மாலுமிகளாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இதற்கு நேர்மாறான கொள்கையைக் கடைப்பிடித்தனர் டச்சுக்காரர்கள். தங்களுக்கு மிக முக்கியமாக இருந்த கிழக்கிந்திய வாணிபத்தில் மட்டும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி ஏனையவற்றில் கடும் போட்டியை வளர்த்தனர். அக்காலத்தில் பீரங்கிகளுடன் கூடிய பெருங்கப்பல்களே வழக்கில் இருந்தன. ஆனால், டச்சுக்காரர்களோ எளிதாகச் செல்லக்கூடிய சிறு கப்பல்களைப் பேரளவில் அமைத்தனர். பிறநாட்டு மாலுமிகளைக் குறைந்த ஊதியம் கொடுத்து வேலைக்கமர்த்தினர். இதனால் கப்பல் போக்குவரத்துச் செலவு மலிவாயிற்று. ஐரோப்பாவின் கப்பல்கட்டும் நாடாக ஹாலந்து சிறந்து விளங்கியது.

உள்நாட்டுத் தொழில் கட்டுப்பாடு

உள் நாட்டுத் தொழிலை ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தவும் வேண்டுமென ஃபிரெஞ்சு வணிகவாதிகள் வலியுறுத்தினர். 14-ஆம் லூயிக்கு அமைச்சராக இருந்து புகழ்பெற்ற கால்பெர்ட் இக்கொள்கையை வலுவாக்கி விரிவுபடுத்தினார். எனவே, கால்பர்டிஸம் என்றால் பிரான்ஸ் நாட்டு வணிகவாதம் என்றாகிவிட்டது. பொருள்களை உற்பத்தி செய்வோருக்கு ஊக்கமளிக்கவும், உற்பத்தியின் எல்லாப் பகுதிகளையும் ஒழுங்குபடுத்தவுமே இக் கட்டுப்பாடுகள் அவசியமாயின. பல தொழில்கள் அரசுத் தொழில்களாக ஆக்கப்பட்டன. இவ்வாறு செய்தது அத் தொழில்களுக்குப் பெருமையும் பகட்டும் அளித்தது; மேலும், அத் தொழில்கள் உற்பத்தி செய்த

பண்டங்களை அரசரே வாங்குவார் என்ற உத்திரவாதமும் கொடுத்தது. இவ்வகைத் தொழிலுக்குச் சிறந்த சான்றாக காபெலின்ஸ் திரைச்சீலைத் தொழில் (Gobelins' tapestry) விளங்கியது.

மேலும், 17ஆம் நூற்றாண்டில் வரிச்சலுகையும் பணமானியமும் தரப்பட்டுப் பல தொழில்கள் வளர்க்கப்பட்டன. ஃபிரான்ஸ் நாட்டில் இன்றும் புகழ்பெற்றுள்ள கச்சாப்பட்டு, பட்டுத்துணி உற்பத்தி செய்யப்படும் தொழில்கள் அக் காலத்தில் அரசாங்க நிதிகளைக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டன.

எல்லாத் தொழில்களையும் அரசே ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற கொள்கையை கால்பெர்ட் மிகத் தீவிரமாக அமுலாக்கினார். பல்வேறுவிதமானதொழில்களுக்கும்ஒரேவிதமானகட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தார். இக் கட்டுப்பாடுகளையெல்லாம் சட்டங்களாக்கி, அவற்றைச் செயல்படுத்த மேற்பார்வையாளர்களை நியமித்தார்.

இங்கிலாந்தும் ஏறக்குறைய இதேபோன்ற கொள்கையைப் பின்பற்றியது. எலிசபெத் ராணியின் ஆட்சிக் காலத்தில் தொழில் சம்பந்தப்பட்ட சட்டங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, கைவினைஞர் சட்டம் (Statute of Artificers) என்னும் தேசியச் சட்டம் 1563-ல் அமுலாக்கப்பட்டது. கில்டுமுறை சீர்குலைந்ததாலும், அத் தொழில்கள் கிராமப்புறத்திற்குப் பரவியதாலும் ஏராளமான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு வேறு தொழில்செய்யப் பயிற்சி கொடுப்பது, விவசாயத்திற்கு வேண்டிய தொழிலாளிகள் கிடைக்க வழி செய்வது, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது ஆகிய முக்கியமான குறிக்கோள்களை அச் சட்டம் வலியுறுத்தியது. இதற்காகத் தொழில் செய்ய முன்வருவோர் ஏழு ஆண்டுகள் பயிற்சிபெற வேண்டுமென்றும், எல்லாத் தொழிலுக்கும் ஒரேமாதிரியான பயிற்சிதான் இருக்க வேண்டுமென்றும், எவ்விதத் தொழிலும் செய்யாதோர் கட்டாயம் பயிர்த் தொழிலில் ஈடுபட வேண்டுமென்றும் சட்டம் கோரியது.

இவை தவிர, இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் தரமானவையாயிருக்க வேண்டுமென்பதற்காக அவற்றின் தரத்தைப் பரிசீலிக்கவும் பேணவும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். தரம் குறைந்த பொருள்களை உற்பத்தி செய்வோருக்குத் தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

ஹாலந்து நாட்டிலும் ஸ்பெயின் நாட்டிலும் இருந்த தொழிற் கொள்கைகள் இங்கிலாந்தில் அல்லது ஃபிரான்ஸில் இருந்ததைப் போல் அவ்வளவு முக்கியம் வாய்ந்ததன்று.

சில பொருளாதாரக் கோட்பாடுகள்

மக்கள் தொகை கூலி வீதம்

வணிகவாதிகள் நெருக்கடியை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு மக்கள்தொகை பெருகவேண்டுமென விரும்பியதில்லை. எனினும், போர்ப்படை வலுவானதாகவும், உற்பத்திப் பொருள்கள் பெருமளவிலும் இருக்க வேண்டுமென்பதற்காக அதிக மக்கள் நாட்டில் இருப்பது நல்லதெனக் கருதினர். உழைப்பே மிக முக்கிய உற்பத்திக் காரணியாய் இருந்த காலம் அது. செல்வ உற்பத்திக்கு நிலம் தாயாகவும் உழைப்பு தந்தையாகவும் மதிக்கப்பட்டன. எனவே, வேண்டிய அளவு மக்கள் தொகையைப் பெருக்குவதற்காகத் திருமணம் செய்வோருக்கும் குழந்தை பெறுவோருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. திருமணம் செய்யாதோருக்குத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. மக்கள் தொகைக்கும் உழைப்பிற்கும் அவர்கள் கொடுத்த மதிப்பை அறியக் கீழ்வரும் கூற்றுகள் உதவும்.

'மக்களே நாட்டின் செல்வமும் வலிமையும் ஆவர்' என்பது நிக்கோலஸ் பார்போனின் (Nicholas barbon) கருத்து.

'உழைப்பாளர் அதிகமுள்ள நாடுதான் செல்வமிக்க நாடாகுமன்றோ?' என ஜோசையா டக்கர் (Gosiah tuker) வியந்தார்.

உழைப்பாளிகளின் எண்ணிக்கை மட்டுமல்லாமல், அவர்களின் அறிவும் விடாமுயற்சியும் முக்கியம் என வலியுறுத்தினர். 'மக்கள்தாம் ஒருநாட்டின் செல்வமும் வலிமையும்' என்று கருதிய வணிகவாதிகள் ஊதியம்பற்றிக் கொண்ட கருத்தின்படி சாதகமான வாணிபநிலை ஏற்படவேண்டுமாயின், அயல் நாட்டாரைவிடக் குறைந்தவிலையில் பொருள்களை விற்கவேண்டும்; எனவே, உற்பத்திச் செலவில் பெரும்பங்கு வகிக்கும் கூலி குறைவாயிருக்க வேண்டுமென வாதாடினர்.

வட்டி

வட்டியைப்பற்றிவணிகவாதிகள்பல்வேறுகருத்துகளைக்கொண்டிருந்தனர். ஏழை எளியவர்களின் பணத்தையும் வணிகர்கள் கடனாக வாங்கி, வியாபாரத்தில் முதலீடு செய்து இலாபம் ஈட்டினர் என்பதால், சர் தாமஸ்மன் வட்டி வாங்குவது நியாயமெனக் கூறினார் வட்டிவிகிதம் குறைவாயிருக்க வேண்டுமென்றுதான் பெரும்பாலான வணிகவாதிகள் கருதினர். வட்டி அதிகமாயிருந்தால் வேண்டிய அளவிற்கு முதலீடு செய்ய முடியாது. எனவே, அதிக அளவுப் பணமும் குறைந்த விகிதமுமே சிறந்ததெனக் கருதினர்.

தொழில்களின் ஏற்றத் தாழ்வுகள்

செல்வம் திரட்டுவதையே குறிக்கோளாவும், அச் செல்வத்தினுள் பொன்னையும் வெள்ளியையுமே சிறந்த செல்வமாகவும் கருதிய வணிக வாதிகள், இக்குறிக்கோளைக் கொண்டே பல்வேறு தொழில்களின் இன்றியமையாமையை எடைபோட்டனர். பொன்னையும் வெள்ளியையும் திரட்டிக் குவிக்க வாணிகமே உதவுவதால் அதற்கே சிறப்பிடம் தந்தனர்.

அடுத்தபடியாக, பெருமளவில் கைத்தொழில் பொருள்கள் மலிவாக உற்பத்தி செய்யப்பட்டால்தான் அவற்றை ஏற்றுமதி செய்து பொன்னையும் வெள்ளியையும் பெற முடியும். எனவே, வணிகத்திற்கடுத்தபடியாகக் கைத்தொழிலை மதித்தனர்.

இறுதியாக வருவது உழவுத் தொழில் அக்காலத்தில் ஒரு சில நாடுகளே தொழில்துறையில் முன்னேற்றமடைந்திருந்தன. பல நாடுகள் விவசாய நாடுகளாகவும், விவசாயப் பொருள்களை வேண்டிய அளவு உற்பத்தி செய்யும் நாடுகளாகவும் இருந்தன. எனவே, விவசாயப் பண்டங்களுக்கு வெளிநாடுகளில் அவ்வளவாகக் கிராக்கியில்லை. அவை வியாபாரப் பண்டங்களாகவோ, பொன்னையும் வெள்ளியையும் கவரக்கூடியவையாகவோ இல்லாதிருந்தன. எனவே, உழவுத்தொழிலையும் உழவனையும் வணிகவாதிகள் உயர்வாகக் கருதவில்லை. வணிகன்தான் நாட்டின் முதுகெலும்பு; நாட்டிற்கு வளமும் ஏற்றமும் தரும் சக்தி பெற்றவன் என அவர்கள் கருதினர்.

பழங்காலத்திலும் இடைக்காலத்திலும் ஏற்றம் பெற்றிருந்த பயிர்த்தொழில் இப்போது புறக்கணிக்கப்பட்டதும், பழிக்கப்பட்ட வாணிபம் ஏற்றம் பெற்றதும் காலச்சூழ்நிலையால் ஏற்பட்ட விளைவே எனலாம். வறியவனே புகழுக்குரியவன் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த மேற்கு ஐரோப்பிய மக்கள், செல்வமிக்க நாடே ஏற்றம்பெற்ற நாடு என்றும் செல்வம் திரட்டும் வணிகனே புகழுக்குரியவன் எனவும் நம்பியது காலத்தின் கோலத்தால் ஏற்பட்ட விளைவேயாகும்.

வணிகவாதத்தின் குறைபாடுகள்

வணிகவாதிகளின் குறைபாடுகளில் முக்கியமானவற்றைச் சிறிது ஆராய்வோம் முதன் முதலாகப் பொன்னையும் வெள்ளியையுமே நாட்டின் செல்வமாகக் கருதினர். அவற்றைக் கைப்பற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்த வணிகவாதிகளை, பின்னால் தோன்றிய பொருளாதார அறிஞர்களில் சிலர் 'தொட்டதெல்லாம் பொனனுகவேண்டுமென விரும்பிய மைதாஸ் மன்னன் போன்ற மேதைகளே,' என்று பழித்தனர். பொன்னும் வெள்ளியும் செல்வ

மல்ல, அவை செல்வத்தின் சின்னங்களே என்பதை வணிக வாதிகள் அறியவில்லை. ஒரு நாட்டில் எவ்வளவுதான் பொன்னும் வெள்ளியும் குவிந்திருந்தாலும் அந் நாட்டு மக்களுக்கு வேண்டிய அவசியப் பொருள்கள்கூட இல்லையெனின், யாது பயன்? எனவே, மக்களுக்குத் தேவையான பொருள்களும், அவற்றை உற்பத்தி செய்வதற்கு அவசியமான சாதனங்களும்தான் ஒரு நாட்டின் செல்வமேயன்றி, பொன்னும் வெள்ளியுமல்ல என்பதை ஆடம் ஸ்மித் சுட்டிக் காட்டுகிறார்.

அடுத்து, அயல்நாட்டு வாணிகமே சிறந்த பொருளாதாரம் என்றும், வணிக மிச்சமே நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் வழி என்றும் கருதினர். தான் உற்பத்திசெய்கிற பொருள்களையெல்லாம் ஏற்றுமதி என்ற பெயரால் பிற நாடுகளுக்கு அனுப்பிவிட்டால் அந் நாட்டு மக்களின் கதி என்ன ஆவது? வயிற்றைக் கட்டிக் கொண்டு காற்றைப் புசித்து மகிழ்ந்திருக்க முடியுமா? நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுதான் பொருளாதாரக் குறிக்கோளாயின், வணிகவாதம் இக்குறிக்கோளை அடையத் தவறி விட்டதெனலாம். மேலும், பன்னாட்டு வாணிபத்தின்மூலம் கிடைக்கும் வருவாய், சிறப்புத் தேர்ச்சியின் (Specialisation) வழியாகக் கிடைக்கும் பலன்களைச் சார்ந்ததேயன்றி, பொன்னும் வெள்ளியும் வந்து குவிவதையல்ல என்பதை அவர்கள் உணரவில்லை ஒரு நாடு இறக்குமதி செய்யும் பொருள்களைத் தானே உற்பத்தி செய்வதை விட, அவற்றைப் பிற நாடுகளிடமிருந்து மலிவாகப் பெறுவதன் மூலமே அடைய முடியும். எனவே, சுய தேவையைப் பூர்த்தி செய்வதைக் காட்டிலும் பிற நாடுகளோடு வாணிபம் செய்தால் அந் நாட்டின் உண்மை வருவாய் அதிகரிக்கிறது என்பது ஸ்மித்தின் வாதம்.

உற்பத்திச் செலவு குறைவாயிருக்க வேண்டுமென்பதற்காக, கூலி குறைவாயிருக்க வேண்டுமென்றும், கூலி குறைவாயிருக்க வேண்டுமாயின் மக்கள் தொகை அதிகமாயிருக்க வேண்டுமென்றும் கோரினர். இது, அவர்களின் வணிக மிச்சக் கோட்பாட்டிற்குப் பொருத்தமானதெனினும் உண்மைக்குப் புறம்பானதாகும். மக்கள் தொகைப் பெருக்கத்தால் நாட்டிற்கு நன்மையே ஏற்படும் என்பது வாதத்திற்குரியது. அடுத்து, உழைப்பாளிகளின் திறமை அதிகமாயிருப்பின், உயர்ந்த கூலியைக் கொடுத்து உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும். கூலி குறைவாயிருந்தால்தான் தொழிலாளிகள் உற்சாகமாய் உழைப்பர் என்ற நம்பிக்கை மூட நம்பிக்கையே. வணிகவாதிகளின் கூலிக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதாகவே வைத்துக்கொள்வோம். அப்போது, பெருவாரியான மக்கள் உண்ணப் போதுமான உணவின்றி, இருக்கத் தகுந்த உறைவிடமின்றி

வறுமையில் உழலும்போது, அந் நாடுமட்டும் எவ்வாறு செல்வமிக்க நாடாக இருக்க முடியும்? இவ் வினாவிற்கு வணிகவாதிகள் மிக எளிமையாக விடையளித்தனர். ஒரு நாட்டின் செல்வத்திற்கும் அந் நாட்டு மக்களின் நலனுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதுதான் சரியான வணிக வாதம். ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் கொண்ட நாடுதான் செல்வமிக்க நாடேயன்றி, வளமான வாழ்வைக்கொண்ட மக்களையுடைய நாடல்ல. பொன், வெள்ளி ஆகியவற்றின் முக்கியத்துவத்தில் வெறியும்,வணிக மிச்சத்தால்தான் அவற்றை அடைய முடியுமென்ற அசைக்க முடியாத நம்பிக்கையும், வறுமையில் இருந்தால்தான் மக்கள் சுறுசுறுப்பாக உழைப்பர் என்ற விசித்திரமான எண்ணமும் கொண்ட ஒருவன் 'மக்களின் வறுமைதான் நாட்டின் செல்வம்' என்று கருதுவான். செல்வத்தின் தன்மைபற்றிய இத்தகைய குறுகிய மனப்பான்மையின் காரணத்தால் வணிகவாதிகள் விந்தையான முடிவிற்கு வந்தனர் என எல்ஸ்வர்த் நினைக்கிறார்.

வணிக வாதமும் பொருளாதாரமும்

வணிக வாதத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் வகையில் ஆடம் ஸ்மித் தனது உலகப் புகழ்பெற்ற நூலின் நான்கில் ஒரு பகுதியைச் செலவிட்டார். வணிகவாதிகளின் கோட்பாடுகள் அனைத்தையும் வன்மையாகக் கண்டித்தார். அவர்களைப் பொன்னுசைப் பித்தர்களெனப் பழித்தார். இப் பழிப்பானது ஒரு திரைச் சீலைபோல் வணிக வாதத்தை மூடி மறைத்தது. அண்மையில் வணிக வாதத்தின் உண்மை இயல்பையும், சிறப்பான கொள்கையையும் ஜே. எம். கெயின்ஸ் (J. M Keyons) தனது நூல்களில் சுட்டிக்காட்டி, வணிக வாதத்திற்குப் புத்துயிர் அளித்துள்ளார். பல செயல்களில் ஆடம் ஸ்மித்தினுடைய கருத்துகள்தாம் தவறானவையேயன்றி, வணிக வாதிகளின் கருத்துகள் அல்ல என்று கூறுகிறார். நவீனப் பொருளாதாரம் என அழைக்கப்படும் அவருடைய பொருளாதாரத்திற்கும் வணிகவாதிகளின் அடிப்படைத் தத்துவங்களுக்கும் பல பொருத்தங்கள் உள்ளன. அவற்றில் சில வருமாறு:

உற்பத்தியாகி விற்பனை செய்ய முடியாத பண்டங்கள் நாட்டில் பெருகிவிட்டால் வணிகவாதிகள் மனம் கலங்குவர். தேங்கிக் கிடக்கும் பண்டங்கள் என்றாலே அஞ்சுவர். கெயின்ஸ் பிரபு அதையே வலுவான தேவையின்மை என்று குறிப்பிட்டார். பொன்னும் வெள்ளியும் ஒரு நாட்டில் பெருகினால், பணப்புழக்கம் அதிகமாகும்; அதனால் தொழில் செய்வோருக்கு அதிக ஊதியம் கிட்டும்; உழைப்பிற்கு ஊக்கமளிக்கும்; வருமானம் பெருகும்; விற்பனையும் அதிகமாகும். வணிகவாதிகளில் பலர் இதை நன்கு அறிந்திருந்தனர்.

மேலும், வேலையின்மை அதிகமாயும், முதலீடு செய்வதற்குரிய ஊக்கம் குறைவாயுமிருக்கும்போது வட்டி விகிதத்தைக் குறைப்பது முதலீட்டையும் வேலை வாய்ப்பையும் அதிகரிக்கத் தூண்டும் என்பதை வணிகவாதிகள் அறிந்திருந்தனர். 1668ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் வட்டிவிகிதம் பற்றிய வாதம் பிறந்தது. அச்சமயம், இங்கிலாந்தை விட ஹாலந்துதான் கப்பல் தொழிலில் புகழ்பெற்று விளங்கியது. மேலும் இங்கிலாந்தில் இருந்த வட்டி விகிதத்தில் பாதி அளவே ஹாலந்தில் இருந்தது. எனவே, வட்டி விகிதத்தைக் குறைத்தால் ஒரு வேளை ஆங்கிலக் கப்பல் தொழிலும் வாணிபமும் விரிவடையக்கூடும் என ஒருசிலர் நம்பினர். சான்றாக, சர் ஜோசையா சைல்ட் (Sir Josiah Child) என்பவர், 'ஹாலந்து நாட்டு வட்டி விகிதத்தைப்போல் நமது வட்டியைக் குறைத்தாலொழிய வாணிபத்தில் அவர்களுக்கு இணையாக நம்மால் புகழ்பெற முடியாது' என்று ஆவேசமாகக் கூறினார். எனவே, பண அளிப்பிற்கும் வட்டி விகிதத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பினை எல்லா வணிக வாதிகளுமே அறிந்திருந்தனர். அத் தொடர்பிற்குக் காரணம் என்ன என்பதைக் கூர்மையான அறிவுடைய ஒரு சிலர் மட்டுமே தெரிந்திருந்தனர். இவ்வாறு பணம் மலிவாகக் கிடைக்கும் நிலையை 'மலிவான பணம்' (Cheap money) என்று கெயின்ஸ் கூறினார்.

அடுத்து, நவீனப் பொருளாதாரக் கருத்துகளில் 'சேமிப்பு', 'முதலீடு', 'வருமானப் பெருக்கம்', 'முழு வேலை வாய்ப்பு' ஆகியவை முக்கியமானவை இவற்றின் சிறப்பை வணிகவாதிகள் உணர்ந்திருந்தார்கள். இவை எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

இவ்வாறாகக் கெயின்ஸ் பிரபு, வணிகவாதிகளுக்கு அளவுக்கு மிஞ்சிய முக்கியத்துவம் தருகிறார். இருப்பினும், மலிவான பணக் கொள்கை வணிகவாதக் கொள்கையாயிருந்தாலும் சரி, புதுப் பொருளாதாரக் கொள்கையாயிருந்தாலும் சரி, ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது: பெருமளவு வேலையின்மை நிலவும் காலத்திற்கு மட்டுமே இக் கொள்கை பொருத்தமானதாகும். எல்லாத் தொழிலாளிகளுக்குமே வேலையிலிருக்கும்போது பண அளிப்பை அதிகரிப்பதன் வழியாக வட்டியைக் குறைத்தால், அது வேலை வாய்ப்பைப் பாதிக்காது; விலைவாசிகளைத்தான் பாதிக்கும்.

நவீன வணிக வாதம் (Neo-Mercantilism)

வணிகவாதிகள், தேசியப்பற்றுடையோராவர். தங்களது கருத்துகளையும் கொள்கைகளையும் தத்தம் நாட்டு வளத்திற்காகப் பயன்படுத்தினர். உலகமனைத்திற்கும் பொதுவாக இருக்கவேண்டிய பொருளாதாரக் கொள்கைகளை விடுத்து, ஏனைய நாடுகளைப்பற்றி

அக்கறை கொள்ளாது, சொந்த நாட்டு வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தனர்.

இவ்விதக் கண்ணோட்டமும் தேசியப்பற்றோடு கூடிய வணிக வாதக்கொள்கைகளும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பல நாடுகளில் புகுந்துவிட்டன. பெரும் பொருளாதார மந்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் சில அதிலிருந்து விடுதலை பெற்றுப் பொருளாதாரச் சீரமைப்பை மேற்கொள்ளும் முறையில் வணிக வாதக் கொள்கைகளையே மேற்கொண்டன. பொருளாதாரப் பொது விதிமுறைகளையெல்லாம் கைவிட்டு, தம் நாட்டிற்கு நன்மை தரக்கூடிய பலசட்டங்களை இயற்றியுள்ளன. அச் சட்டங்கள் காலத்திற்கும் சூழ்நிலைக்குமேற்ப மாற்றி அமைக்கப்படுகின்றன. சான்றாக, பொருளாதார மந்தத்தாலும்,உலகப் போராலும் ஏற்பட்ட பணச்சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் பல்வேறு வணிகவாதக் கொள்கைகளைக் கடைப்பிடித்தன. நாட்டிலுள்ள பொன்னைப் பேணிக்காத்தல், பொருளாதார நடவடிக்கைகளைப் பெருவாரியாகக் கட்டுப்படுத்தல், பொருள்களுக்கு விலை நிருணயம் செய்தல், உற்பத்தியாளருக்குப் பண உதவி செய்தல் ஆகிய வழிவகைகளை மேற்கொண்டுள்ளன. ஒரு வேளை வணிகவாத காலத்திலிருந்த சூழ்நிலைகள் மறுபடியும் தோன்றியுள்ளனவோ என்று எண்ணத்தோன்றுகிறது. ஓரளவிற்கு இவ்வெண்ணம் உண்மை சார்ந்ததொன்றே. ஏனெனில் அக்காலத்தில் போர்கள்மலிந்திருந்தன; இன்றும் அவை மறைந்து விடவில்லை, அன்று தொழில் துறையிலும் பணத்துறையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன; இன்றும் அம் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அன்று விலைவாசிகள் நிலையின்றி இருந்தன; இன்றும் நிலையாயுள்ளனவென்று சொல்வதற்கில்லை. அன்று தங்கத்தைப் பெருக்க நாடுகளுக்கிடையே போட்டி இருந்தது; இன்றும் அப் போட்டி மறைந்து விடவில்லை. அன்று வலிமைமிக்க அரசை வணிகவாதிகள் விரும்பினர்; இன்றும் நாம் அதையே நாடுகிறோம். எனவே நாம் கையாளும் வழிவகைகளும் வணிகவாத வழிவகைகளே. "நாம் எல்லாருமே வணிக வாதிகள் தாம்" என்ற கூற்றிலும் உண்மையுள்ளது.

ஆனால், தற்போதுள்ள நவீன வணிக வாதத்திற்கும் 17 ஆம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பாவிலிருந்த வணிகவாதத்திற்கும் முக்கியமான வேறுபாடுகள் உண்டு. தற்போதையப் பொருளாதாரக் கொள்கைகள் நாட்டு மக்களின் பொதுக் கண்ணோட்டத்திலிருந்து உருவானவை; சமூக நலன்களை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் தற்காலிகமான கொள்கைகள்; சமூகத் திட்டத்தின் வழியாகத் தோன்றியவை. பழைய வணிகவாதக் கொள்கையினருக்கோ எவ்விதத் திட்டமும் கிடையாது. அக்கொள்கைகள் நிரந்தரமானவை. எப்படி அமையவேண்டுமெனக் கருதினார்களோ

அப்படி அமைக்கப்பட்டவை. மேலும், நவீன வணிகவாதக் கொள்கைகள், வாணிபம், தொழில், விலைவாசிகள் பற்றிய திட்ட வட்டமான புள்ளி விவரங்களை ஆதாரமாகக்கொண்டு செயல் படுபவை. பழைய வணிகவாத நாடுகளுக்கோ இவ் வகைப் புள்ளி விவரங்கள் கிடையா. அல்லது அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரியாது.

வணிகவாதமும் பின்தங்கிய நாடுகளும்

சற்று முன்னர், வணிகவாதக் கொள்கைகள் இன்றும் பல நாடுகளில் பின்பற்றப்படுகின்றனவென்று கண்டோம். இப்போது, வணிகவாதக் கோட்பாடுகளும் கொள்கைகளும் எவ்வளவு தூரம் பின்தங்கிய நாடுகளுக்குப் பொருத்தமானவை என்பதை ஆய் வோம்.

வணிகவாதிகளின் குறிக்கோள் தம் நாட்டை வலிமைமிக்க நாடாக்குவதாகும். இதற்கு, செல்வப் பெருக்கொன்றே வழி எனக் கருதினர். இன்றைய பின் தங்கிய நாடுகளும் பொருளாதார வலி மையை நாடுகின்றன. அப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேசிய வருவாயை உயர்த்துவதே வழியாகப்படுகிறது. நாட்டின் வலிமை யைச் செல்வத்தால் பெருக்க நினைத்த வணிகவாதிகள் மேற் கொண்ட வழிவகைகளில் பலபின்தங்கிய நாடுகளுக்கும் பொருந்தும். அவை வருமாறு : வேளாண்மைத் தொழில் மக்களின் வாழ்விற்கும், தொழில்களுக்கு வேண்டிய பல மூலப் பொருள்களை அளிப்பதற்குமே தகுந்தவை; நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதல்ல. பொருளாதார வளர்ச்சிக்கு விரிவாக்கக் கூடிய வாணிபமும் கைத்தொழில்களுமே முக்கியமானவை. உற்பத்திக்காரணிகளில் மிக முக்கியமானது உழைப்பு. எனவே உழைப் பாளிகள் அனைவரும் ஏதாவதொரு தொழிலில் பயன்படுத்தப்பட வேண்டும். வேலையின்மையைப் போக்க, செலவினத்தையும் முத லீட்டையும் அதிகரிக்க வேண்டும். பாம்பரைப் பற்றுடைய நாட் டுப்புற மக்களைத் தொழில் துறையில் ஈடுபடுத்த வேண்டும். பொது வாக மக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறுவது நல்லது தான்; ஆனால் திறம் படைத்த, நுட்ப அறிவுடைய மக்களை நாம் இழந்துவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். தொழில் முயல் வோரே நாட்டிற்குப் பெரும் பணி புரிவோர். ஒரு விவசாய நாடு தொழில் வளமிக்க நாடாக வேண்டுமாயின், அது தொழில் முயல் வோரின் கையில்தானிருக்கிறது. சாதகமான வாணிப நிலை வேண்டுமாயின், பிற நாட்டானுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்ய வேண்டும்; அவனிடமிருந்து வரும் இறக்குமதியைக் குறைக்க வேண்டும். இறக்குமதியைக் குறைக்க வேண்டுமாயின் இறக்குமதி வரி விதிப்பதே நல்லது; இறக்குமதியை முற்றிலும் விலக்குவது கள்ளக்கடத்தலைத் தூண்டும். பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடல் அவசியம். அரசின் தலையீடின்றித் தனி மனிதனின்

நோக்கமும் சமுதாயத்தின் குறிக்கோளும் இணைய முடியாது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான நிறுவனங்களை அரசு தொடங்க வேண்டும். வெளி நாட்டு அங்காடியை விரிவுபடுத்த வேண்டும். அயல் நாட்டுச் செலாவணியைக் கட்டுப்படுத்தல் அவசியம். தரமான ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வாணிபத்தையும் தொழிலையும் விரிவுபடுத்துவோருக்குப் பண உதவியும் சலுகைகளும் தர வேண்டும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அந் நாட்டவரின் புத்தமைப்புக்களிலும் புதிய கண்டுபிடிப்புகளிலுமே உள்ளது. வணிகவாத காலத்தில் புத்தமைப்புக்களும் புதிய கண்டுபிடிப்புக்களும் ஏராளமாயிருந்தன என்பது குறிப்பிடத் தக்கது

மேற்கூறிய வழிவகைகள் அனைத்தும் பொதுவானவை. அவற்றுள் எவையெவை பின்தங்கிய நாட்டிற்குப் பொருத்தமானவை என்பது அந் நாட்டின் இயற்கைவளம், பொருளாதார, சமூக அரசியல், கலாச்சார சூழ்நிலைகளைப் பொருத்தது. பின்தங்கிய நாடுகள் அனைத்தும் ஒரே தன்மையுடையனவல்ல. அவற்றுள் பல அந்நிய ஆதிக்கத்திலிருந்து அண்மையில் விடுதலை பெற்றவையாயிருக்கலாம். ஒருவேளை வணிகவாத நாடுகளால் சுரண்டப்பட்டுப் பாதிக்கப்பட்டவையாயுமிருக்கலாம்

இந் நாடுகளுக்கிடையே மாறுதல்கள்

வணிகவாதத்தை அமுலாக்கிய மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் தற்போதுள்ள பின்தங்கிய நாடுகளுக்குமுள்ள வேறுபாடுகளை மறந்துவிடக்கூடாது. அவ் வேறுபாடுகளில் முக்கியமானவை பின்வருமாறு :

இன்றுள்ளதைப் போல் நாட்டிற்கு நாடு கடன் கொடுத்து உதவும் பழக்கம் வணிகவாத காலத்தில் அவ்வளவாகக் கிடையாது. தொழில் நுட்ப வளர்ச்சி கொண்ட நாடுகளிலிருந்து தொழில் நுட்ப அறிவை இன்று பெற முடிகிறது ; இப் பழக்கம் அன்று கிடையாது காரணம், வணிகவாத நாடுகளில் சில தாமே இதை வளர்க்கக் காரணமாயிருந்தன. பின்தங்கிய நாடுகளில் இன்றுள்ளதைவிட வணிகவாத நாடுகளில் வேலையின்மை அதிகமாயிருந்தது; இன்றுள்ளதைப்போல் தொழிற்சங்க அமைப்பு அன்றில்லை. உழைப்பாளிகள் இடம்விட்டு இடம் மாறி வேலை செய்யும் வாய்ப்பு அவ்வளவாக அன்றில்லை. காரணம், போக்கு வரத்துச் சாதனங்கள் இன்றுள்ளதப்போல் அன்று கிடையாது. பொருளாதார முன்னேற்றத்திற்குச் சாதகமான கல்விவசதி இன்றுள்ளதைப்போல் அன்று இல்லை பின்தங்கிய நாடுகளில் இன்றுள்ளதைப்போல் இங்கிலாந்திலும் ஹாலந்திலும் அன்று பெரும் எண்ணிக்கையில் விவசாயிகள் கிடையாது. சுருங்கக் கூறின், வணிகவாத நாடுகளுக்கு அன்றிருந்ததைக்காட்டிலும் பின்தங்கிய நாடுகளுக்கு இன்று முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளும் வசதிகளும் ஏராளமாக உள்ளன.

6. இயற்கை வாதம்

(Physiocracy)

18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த சில அறிஞர்கள் ஒரு புதிய பொருளாதார அமைப்பைத் தோற்று வித்தனர். அவ்வமைப்பு நவீனப் பொருளாதார இயலுக்கு அடிப் படையாக இருந்து வருகிறது. இதை இயற்கை வாதம் என்று கூறுவது மரபு. இயற்கையின் அமைப்பிலும் விதிகளிலும் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் விளைவாக அவர்களை இயற்கை வாதி களெனப் பின்னால் தோன்றிய அறிஞர்கள் அழைத்தனர். ஆனால், அவர்களோ தங்களைப் பொருளாதார அறிஞர்கள் என்றே கருதினர். அவர்கள் வகுத்த அமைப்பிலும் தொகுத்த விதிகளிலும் விவசாயத் தொழிலே சிறந்ததாகக் கருதப்பட்டதால், ஆடம் ஸ்மித் அவ் வமைப்பை 'விவசாய அமைப்பு' என்றும், அவர்களை 'விவசாயப் பொருளாதார அறிஞர்கள்' என்றும் குறிப்பிட்டார்.

சூழ்நிலைகள்

16, 17 ஆம் நூற்றாண்டுகளில் பிரான்ஸ் நாட்டின் பொருளா தார நிலை மிக மோசமாக இருந்தது. பதினைந்தாம் லூயி, பதினாறும் லூயி ஆட்சியின் போது அந் நாட்டின் சூழ்நிலை பொது மக்களுக்கு அருவறுப்பை ஏற்படுத்தியது. இவ்விரு மன்னர்களும் ஏதேச்சாதி காரமாக ஆட்சி புரிந்தனர். 'நான் அரசன் மட்டுமல்ல அரசும் நான்தான்' என்ற கொள்கையைச் செயல்படுத்தியவர். 15ஆம் லூயிஆடம்பர வாழ்க்கையில் மோகம் கொண்டு வருமானம் போதாமல் கடன் வாங்கியும் முறையின்றிச் செலவு செய்தார். அதோடு, பொதுமக்களிடமிருந்தும், ஏழைக்குடியானவரிடமிருந்தும் வரியென்றும் தீர்வையென்றும் கெடுபிடியாக வசூலித்த பணம் அரசபோக வாழ்க்கைக்காகச் செலவிடப்பட்டது. பிரபுக்களும் பெருநிலக்கிழார்களும் வரி கொடுக்க வேண்டியதில்லை என்ற விதியும் இருந்தது. எனவே, குடியானவர்களும் பொது மக்களும் அல்லல் பட்டனர். நிலத்திற்கோ அல்லது நிலத்தில் சாகுபடி செய்த குடியானவர்களுக்கோ மதிப்பில்லை.

வணிக வாதிகளின் செல்வாக்கோ ஓங்கியிருந்தது. வணிக வாதக் கொள்கைகளைத் தீவிரமாக நிறைவேற்றிய மந்திரி கால்பர்ட் காலமான பின்னரும் தொழிலுக்கும் வாணிபத்திற்குமே செல்வாக்கும் மதிப்பும் இருந்தன. தொழிலையும் வாணிபத்தையும் ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தவும் ஏராளமான விதிகள் சட்டப் புத்தகத்தில் புகுத்தப்பட்டன. பொருளாதார நடவடிக்கைகளுக்கெல்லாம் இச் சட்டங்களே கட்டுக்கோப்பாக இருந்தன. எல்லாவற்றிலும் அரசாங்கம் தலையிட்டது. இத் தலையீட்டின் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. எதிர்ப்பும் மூண்டது. 'அரசன் ஆண்டவனின் பிரதிநிதி' என்ற கொள்கையைப் பல அரசியல் ஞானிகள் வன்மையாகக் கண்டிக்க முற்பட்டனர். இயற்கையின் நியதிப்படியே அரசாங்கச் சட்டங்கள் அமையவேண்டும்; சமூக நீதியை இயற்கை நியதிக்குப் பொருத்தமாக அமைக்கவேண்டுமென அவர்கள் வற்புறுத்தினர். இயற்கைவாதிகளின் எண்ணத்திற்கு இக் கருத்து ஒத்திருந்தது. எனவே, இயற்கை நியதிப்படி பயிர்த்தொழிலே நாட்டின் செல்வத்திற்கும் செல்வ வளர்ச்சிக்கும் ஆதாரமென அவர்கள் வாதாடினர். வரப்பு உயர்ந்தால்தான் நாடு உயரமுடியுமென்றனர். குடியானவர்கள் ஏழ்மையிலிருந்தால் அரசும் அரசனும் ஏழ்மையில்தான் இருக்கமுடியுமென வாதாடினர்.

முக்கிய இயற்கை வாதிகளும் நூல்களும்

இயற்கைவாதிகளில் குவெஸ்னே (Quesnay), மிராபோ (Mirabeau), கூர்னே (Gournay), து பாண்ட் (Du-Pont), மெர்ஸியர் (Mercier), துர்கோ (Turgor) ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களில் குவெஸ்னேதான் தலைவராகவும் குருவாகவும் மதிக்கப்பட்டார். வணிகவாதிகள் போல் பல நாட்டையும் காலத்தையும் சேர்ந்தவர்களல்லர். அவர்களைப் போல் பலவிதமான கருத்துகளையும் கொள்கைகளையும் உடையவர்கள் அல்லர்; எல்லா இயற்கைவாதிகளும் பிரான்ஸ் நாட்டில் ஒரே காலத்தில் வாழ்ந்த மேதைகள்; குருவின் கொள்கைகளையே வலியுறுத்தியவர்கள்; புதிய வழியில் சிந்திக்கவும், தங்களது சிந்தனையை நயம்பட எடுத்துரைக்கவும் ஆற்றல் பெற்றவர்கள்; பல நூல்கள் கற்ற அறிஞர்கள்; தத்துவ ஞானிகள்; இலட்சியவாதிகள். ஆனால், வணிக வாதிகள் போல் உலக அறிவும் தொழில் நடத்தும் அனுபவமும் பெற்றவர்களல்லர். இயற்கைவாதிகளிடம் ஒரு பொதுக் கொள்கை இருந்தது. அதை வகுத்தவர் குவெஸ்னே. எனவே, குருவின் கருத்துகளும் கொள்கைகளும்தான் முக்கியம்.

டாக்டர் குவெஸ்னே 1694ஆம் ஆண்டில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். முதல் 17 ஆண்டுகள் பாரிஸ் நகரத்திற்கு அருகாமையிலுள்ள தனது குடும்பப் பண்ணையில் வாழ்ந்தார்.

25 வயதிற்குள் தாமாகவே கற்று, ரணச் சிகிச்சை நிபுணரானார். 1755-ல் சமஸ்தான மருத்துவராக 15ஆம் லூயியால் நியமிக்கப்பட்டார். பண்ணையார் மகன் என்ற முறையில் பயிர்த் தொழிலில் இவருக்கு இயல்பான ஆர்வம் இருந்தது. ‘உழவர்கள்’, ‘தானியங்கள்’ என்ற தலைப்பின் கீழ் அக்காலத்திய கலைக் களஞ்சியத்திற்கும் வேறு சில பத்திரிகைகளுக்கும் பல கட்டுரைகள் எழுதிப் புகழ் பெற்றார். 1758ல் தனது புகழ்பெற்ற ‘பொருளாதாரப் பட்டியல்’ (Economic Table) என்னும் நூலை வெளியிட்டார் இந் நூல் வெளியானதும் இவரது சீடர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சீனாய் மலையில் மோசஸ் கொண்டுவந்த பத்துக் கட்டளைக் கற்பலகையைக் கண்ட இஸ்ராயேல் மக்களைக் காட்டிலும் அதிக ஆனந்தம் கொண்டனர் என்று கானன் வர்ணிக்கிறார். நாகரிக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத சாதனங்கள் மூன்று; அவற்றில் ஒன்று எழுத்துக்கலை; பிரிதொன்று பணம்; மூன்றாவது ‘பொருளாதாரப் பட்டியல்’ ஆகும் என மிரபோ புகழ் பாடினார். குவெஸ்னே எழுதிய நூல்கள் சிலவே. எனினும் தம் சீடர்களிடம் அவர் கொண்டிருந்த செல்வாக்கு மகத்தானது.

இயற்கைவாதிகளில் அடுத்து முக்கியமானவர் துர்கோ. இவர் இயற்கைவாதக் கலைஞர்; கற்றதைச் செயலாற்றிய தீரர். 1766ல் ‘பொருள் உற்பத்தி, விநியோகம் பற்றிய சிந்தனைகள்’ (Reflections on production and distribution) என்னும் நூலை வெளியிட்டார். துர்கோ பிரான்ஸிலுள்ள லிமோஜஸ் மாவட்டத்தின் தண்டல்நாயகராக மூன்றாண்டுகள் பணியாற்றினார். தடையிலா வணிகத்தை ஏற்படுத்துவதற்காக வணிகவாதக் கட்டுப்பாடுகளையும் விதிகளையும் தளர்த்தி வெற்றி கண்டார். எனவே, மன்னர் அவரை நிதியமைச்சராக நியமித்தார். வணிக வாதத்தைச் செயல்படுத்த அமைச்சர் கால்பார்ட் வாய்த்தாரென்றால், இயற்கை வாதத்திற்கு அமைச்சர் துர்கோ கிடைத்தார்.

குவெஸ்னேயும் துர்கோவும் எழுதிய இவ்விரு நூல்களின் அடிப்படைக் கருத்துகளும் கொள்கைகளுமே இயற்கைவாதத் கருத்துகளில் இயற்கை விதிகள், நிகர வருமானம், செல்வ ஓட்டம் ஆகியவை முக்கியமானவை. பொருளாதாரக் கொள்கைகளில் கட்டுப்பாடில்லாத சர்வதேச வாணிபம், தலையிடாக் கொள்கை, ஒற்றைவரித் திட்டம் முதலியன சிறப்பானவை.

இயற்கைவாதிகளின் கோட்பாடுகள்

இயற்கை விதிகள்

இயற்கைவாதிகளின் கோட்பாடுகளும் கொள்கைகளும் ‘இயற்கை முறைமை’ (Natural order) என்னும் நம்பிக்கையின்

விளைவுகள் எனலாம். இயற்கைவாதம், இயற்கை முறைமை பற்றிய அறிவியல் என்றுகூடச் சொல்லலாம். இவ்வியற்கை முறைமை என்பதற்குச் சரியான விளக்கம்கூற இயலாது. இவ்வுலகம் முழுவதும் இயற்கை அரசியின் ஆட்சிக்கு அடங்கி நடக்கிறது. மண்ணுலகும் விண்ணுலகும் அவ்வாறு ஆட்சி செய்யப்படுவதற்குச் சில இயற்கை விதிகள் உள்ளன. இவ் விதிகள் இல்லையேல் உலகம் ஒழுங்குமுறையற்றதாகிவிடும். எனவே. இயற்கை விதிகள் என்பன மனிதனால் ஏற்படுத்தப்பட்டவையன்று; அவை இறைவனால் கொடுக்கப்பட்ட நியதி. இவ்விதிகள் மனித சமுதாயத்தையும் கட்டுப்படுத்துகின்றன. இவ்விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் மனித சமுதாயம் உயர்வும், நிறைவும் பெற்று மகிழ்ச்சியாய் இருக்க முடியும். மக்கள் இயற்றும் சட்டங்களோ இயற்கை விதிகள்போல் ஒன்றுக்கொன்று பொருத்தமானவையல்ல; முரண்பட்டவை. இம்முரண்பாட்டை நீக்குவதே நீதிமன்றங்களின் வேலை. இவ்வியற்கை விதிகளை அறிந்து, அவைகளுக்கு உட்பட்டு நடப்பதே மனிதனின் கடமை. இவ்வாறாக, இயற்கை விதிகள் இறைவன் வகுத்த, என்றும் அழியாத, யாரும் மீறக்கூடாத விதிகள் என்று சிறப்பித்தனர். அதோடு, நாட்டில் இயற்றப்படும் சட்டங்களும் அவற்றையொட்டியே இருக்க வேண்டும் என்றும் கூறினர். எனவேதான் இந்த அறிஞர்களுக்கு இயற்கை வாதிகள் என்ற பெயர் வந்தது.

இயற்கை விதிகள் கண்ணுக்குப் புலப்படாதவை. கல்லிலோ ஏட்டிலோ பொறிக்கப்படாதவை. அவ்வாறாயின் அவற்றை எவ்வாறு அறிந்துகொள்வது? இவ்வாறு மயங்குவோருக்கு இயற்கை வாதிகள் பின்வருமாறு விடை அளித்தனர். 'இறைவனை நாம் பார்ப்பதில்லை; எனினும், ஆழ்ந்து சிந்திப்போமானால் நமது உள்ளம் அவனைத் தெரிந்துகொள்ளும்; அறிவு அவனது பண்புகளைப் புலப்படுத்தும். அதுபோன்றே, இயற்கை விதிகள் கண்ணுக்குப் புலப்படவில்லையென்றாலும் அவற்றை மனிதன் அறிந்துகொள்ள முடியும். அவனது உள்ளம் அவ் விதிகள் என்னவென்பதைக் கூறும். பகுத்தறிவு அவற்றின் தன்மையைப் புலப்படுத்தும்.' இதனால்தான் 'இது இயற்கைக்கு விரோதம்', 'இது கடவுளுக்கே ஏற்காது' என்றபேச்சு, நடைமுறையில் இருந்து வருகிறது. எனவே, தனது அனுபவத்தினாலும் கூர்மையான அறிவினாலும் இயற்கை விதிகள் என்னவென்பதை மனிதன் கண்டுகொள்ளலாம்.

சுருங்கக்கூறின், இயற்கை விதிகள்தாம் சிறந்த விதிகள். ஏனெனில் அவை மனிதனால் இயற்றப்பட்டவையன்று. இயற்கை அமைப்பிற்கு காரணகர்த்தாவாகிய இறைவனால்

அமைக்கப்பட்டவை. எனவே, அவ் விதிகளைக் கடைப்பிடித்து நடந்தால் மட்டுமே மனிதன் துன்பமின்றி இன்பமாய் வாழமுடியும். இதுவே இயற்கைவாதிகளின் கொள்கை. இக் கொள்கையில் பெரும் குறை ஒன்று உண்டு. இயற்கை விதிகள் என்று அடித்துப் பேசிய இப் பேரறிஞர்கள் அவ் விதிகளைத் தெளிவாகவோ வரையறுத்தோ கூறவில்லை. தத்துவ ரீதியில் அவற்றை வலியுறுத்தினார்களேயன்றி, நடைமுறைக்குகந்த வழியில் அதனைப் புலப்படுத்தவில்லை. ஒரு வேளை விஞ்ஞானம் வளர்ச்சியுற்றிருந்திருந்தால் அவர்களது விளக்கம் வேறாக இருந்திருக்கலாம்.

எல்லா மக்களுக்கும் தன்னல உணர்ச்சி இயற்கையானது; அடிப்படையானது. ஒருவனுக்கு எது சிறந்தது என்பதை அவன் தான் அறியமுடியும். ஏனெனில் அவன் இயற்கையான தன்னல உணர்ச்சியால் தூண்டப்படுகிறான். எனவே, இயற்கை விதிகளுக்கு மாறாகத் தன்னல உணர்ச்சி வெளிப்படுவதில்லை. இயற்கை விதிகளில் தன்னல உணர்ச்சியும் ஒன்று. அவ்வாறாயின், மனிதன் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையிலும் அரசாங்கம் தலையிடாமல் இருப்பதே சிறந்தது. தனிமனிதனின் சுதந்திரமே சிறந்த, நடைமுறைக்கேற்ற அடிப்படையான கொள்கையாகும். இவ்வாறாக, வணிகவாதிகள் விரும்பிய அரசாங்கக் கட்டுப்பாடும், ஒழுங்கு முறையும் இயற்கைக்கு மாறானவை என்பதை இவர்கள் வலியுறுத்தினர். எல்லா நடவடிக்கைகளும் எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி, நடைபெறுமானால் தனிமனிதனுக்கு மட்டுமன்றி, மனித சமுதாயத்திற்கும் நல்லது. இதுவே இயற்கை வாதிகளின் தலையிடாக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தது. தன்னலமும் சொத்துரிமையும் மனிதனின் இயல்பான பண்புகள். எனவே, சட்டங்கள் அனைத்தும் இவ்விரண்டு பண்புகளையும் பேணிக் காக்கவேண்டும். இத்தகைய சமூகத் தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு, பிரான்ஸ் நாட்டின் பொருளாதார நோய்க்குக் காரணம் என்ன என்பதை இயற்கைவாதிகள் அறிய முயன்றனர். குடியானவரின் வறுமையே இந் நோய்க்கு முக்கியக் காரணம் என்ற முடிவிற்கு வந்தனர். விவசாயப் பொருள் உற்பத்தி அதிகரித்து, பயிர்த்தொழில் செழிப்பு ஏற்பட்டால்தான் நாடு முன்னேற முடியும் என்ற முடிவோடு, இத்தொழிலுக்கு ஏற்றம் தந்தனர்.

நிகர உற்பத்தி (Net product)

இயற்கை வாதிகள் உழவுத் தொழிலைப் போற்றிய முறை, திருக்குறளில் 'உழவு' என்ற அதிகாரத்தைக் கண்முன் கொண்டு வருகிறது.

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழன்றும் உழவே தலை."

பல தொழில்களைச் செய்து திரிந்தாலும் முடிவில் உழவுத் தொழிலையே உலகம் சார்ந்து நிற்கிறது. எனவே, எவ்வளவு துன்பம் வந்தாலும் உழவுத் தொழிலே மேலானது என்பது இக் குறளின் பொருள். இப் பொருளில்தான் இயற்கை வாதிகளும் உழவுத் தொழிலைப் போற்றினர்.

உழவுத் தொழிலில், பிற தொழில்களைக் காட்டிலும் பலன் அதிகமாகக் கிடைக்கிறது. ஒரு கலம் நெல் விதைத்தால் இருபது கலம் நெல் கிடைக்கிறது. உழவுத் தொழிலில் மொத்த விளைச்சலி லிருந்து சாகுபடிச் செலவைக் கழித்துப் பார்த்தால் கணிசமான அளவு நிகரப் பொருள் உற்பத்தி கிடைக்கும். மொத்தச் செலவைக் காட்டிலும் வருமானம் அதிகம் கிடைக்கும் தொழில் உழவுத் தொழில் தான். இவ்வாறு உழவுத் தொழிலில், வான் பொய்யாதிருக்குமாயின் கிடைக்கும் நிகர உற்பத்திதான் பொருளாதாரத்திற்கு ஆதார மாகும்; நாடு வளம்பெற்று முன்னேறுவதும் இதனால்தான் என இயற்கை வாதிகள் கூறினர். "நிகர உற்பத்தியின் அளவைப் பொருத்தே நாட்டு மக்களின் செழிப்பம் அமையும்" என்று டுபாண்ட் கூறுகிறார். சாகுபடி செய்யப்படும் நிலம்தான் இதரப் பொருள்களின் உற்பத்திக்குக் காரணி என்று பிரிதொரு இயற்கை வாதி கூறுகின்றார். இவ்வாறு உழவுத் தொழிலில் மட்டும் நிகர உற்பத்தி கிடைப்பதற்குக் காரணம், மனிதனுடன் இயற்கையும் கூடி உழைக்கிறது என்றனர். இயற்கையின் கருணையால் ஒன்றுக்குப் பல மடங்கு விளைச்சல் கிடைக்கிறது. பிற தொழில்கள் எதிலும் இவ்வாறு நிகரப் பொருள் உற்பத்தி கிடைக்காது. எனவே, உழவுத்தொழில் செய்வோர் மட்டுமே ஆக்க உழைப்பு (Productive labour) உடையோர். பிற உழைப்பனைத்தும் ஆக்கமில்லா உழைப்பு (Unproductive labour) ஆகும் என்ற முடிவிற்கு வந்தனர். கைத்தொழிலிலோ அல்லது வணிகத் தொழிலிலோ இந்த நிகர உற்பத்தி கிடையாது. கைத்தொழிலில் பொருளின் தன்மை அல்லது உருவம் மாறமுடியுமே தவிர புதிதாகப் பொருளை உற்பத்தி செய்ய இயலாது. திறம் பெற்ற கைத்தொழிலாளி ஒருவன் களிமண்ணைப் பிசைந்து அழகான விநாயகர் உருவம் செய்தால், பயன்படுத்திய களிமண்ணின் அளவுக்கு நிகராகத்தான் விநாயகர் உருவம் இருக்க முடியும். நெசவாளி ஒருவன், நூல்வாங்கி சில நாள்கள் தறியில் அமர்ந்து துணிநெய்தால் நூலின் உருவம் துணியாக மாறுகிறது. அவ்வளவுதான். எனவே, அத்துணியின் மதிப்பு நூலின் விலைக்கும் அவன் உழைத்த நாளின் கூலிக்கும் சமமாக இருக்குமேயன்றி, ஒருக் காலும் அதிகமாயிராது என இயற்கை வாதிகள் கருதினர். நிற்க,

நெசவாளி நெய்வதற்கு வேண்டிய நூலையும் உயிர் வாழ்வதற்கு அவசியமான உணவையும் உழவனே கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வாருக, கைத்தொழில்களனைத்தும் உழவுத் தொழிலைச் சார்ந்துள்ளன. உழவுத் தொழிலோ தனக்கு வேண்டிய கச்சாப் பொருள்களைத் தானே விளைவித்துக்கொள்கிறது; உழவருக்கு வேண்டிய உணவுப்பொருளையும்தானே வழங்குகிறது. வணிகத் தொழிலும் நிகர உற்பத்தியைச் செய்ய இயலாது. 10 மீட்டர் துணியை 50 நாள்கள் கடையில் வைத்திருந்தால் அது 11 மீட்டராக அதிகரிப்பதில்லை. எனவே, நிகர உற்பத்தி என்பது உழவுத் தொழிலுக்கே உரித்தானது. பிற தொழில்களிலெல்லாம் கருணைவடிவமான இயற்கை அன்னை மனிதனோடு ஒத்துழைப்பதில்லை. மனிதனே பொருள்களைப் புதிதாகப் படைக்கும் ஆற்றலற்றவன். எனவே, உழவுத் தொழிலில் ஈடுபடும் உழைப்பே ஆக்க உழைப்பு என்பது இயற்கை வாதிகளின் வாதம்.

இவ் வாதத்தை நாம் ஏற்றுக்கொள்வதாயிருந்தால், ஆசிரியர், அரசாங்க ஊழியர், வழக்குரைஞர், நீதிபதி, எழுத்தர், நடிகர், மருத்துவர், பாடகர் போன்றவர்களும் யாதொரு உற்பத்தியும் செய்வதில்லையாதலால், அவர்களின் உழைப்பும் ஆக்கமற்றதே என்ற முடிவிற்கே வரவேண்டியுள்ளது. உற்பத்தி என்ருல் சடப் பொருள் ஆக்கம் என்றே இயற்கைவாதிகள் பொருள் கொண்டனர். இதை அடிப்படையாகக்கொண்டுதான் நிகர உற்பத்தி, அதுவும் சடப்பொருள் நிகர உற்பத்தி தரும் தொழில்கள்தான் ஆக்கத் தொழில் என்றும், மற்றவை ஆக்கமில்லாதவை என்றும் பாகுபடுத்தினர். இப் பாகுபாட்டை இயற்கை வாதிகளுக்குப் பின்ருல் தோன்றிய பொருளாதார அறிஞர்களும் ஏற்றுக்கொண்டனர். எனவே, பல ஆண்டுகள் பொருளாதார அறிஞர்கள் நம்பிவந்த இப் பாகுபாடு இயற்கை வாதிகள் தந்த எரிச்சலூட்டும் மரபுரிமை என்று கிரே கூறுகிருர். ஆனுல் தற்காலத்தில் இப் பாகுபாட்டை எவரும் ஒப்புக்கொள்வதில்லை.

இயற்கைவாதிகள் கைத்தொழிலையும் வணிகத் தொழிலையும் ஆக்கமில்லா உழைப்பு என்று கருதிளுலும், அவற்றை வெறுக்கவில்லை. சமுதாயத்திற்கு அவசியமான பொருள்களையும் பணிகளையும் செய்து மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றனர்; எனினும் உபரியாக ஒன்றும் உற்பத்தி செய்ய இயலாததால் ஆக்கமில்லாத் தொழிலாளராகின்றனர். மேலும், விவசாயத்தைக் காட்டிலும் பிற தொழில்களிலும் வணிகத்திலும்தான் அதிக இலாபம் கிடைக்கிறது. இதனை இயற்கை வாதிகள் அறிந்திருந்தனர். எனினும் இவை இலாபமே தவிர நிகர உற்பத்தியாகாது என்று வாதாடினர்.

விவசாயப் பொருள்களின் விலைவாசிகள் அங்காடி நிலைமையைப் பொருத்து உழவர்களுக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ அமையலாம். விலை மிகத் தாழ்ந்தால் நிகர உற்பத்தியே இல்லாமல் போய்விடலாம். எனவே, இயற்கைவாதிகள் நியாயமான விலை இருந்தால், கட்டாயம் உழவுத் தொழிலுக்கு உபரி கிடைக்கும் என நியாய விலைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். உற்பத்திச் செலவுக்குச் சமமாக விலை இறங்கிவிட்டால் உபரி கிடைக்காது; அப்போது இயற்கை விதியை நாம் அழித்துவிட்டோம் அல்லது மீறிவிட்டோம் என்று பொருள் என்பது அவர்களின் எண்ணம்.

இயற்கை அமைப்பிலும் விதிகளிலும் கொண்ட நம்பிக்கையின் காரணத்தால் இயற்கை ஒத்துழைக்கும் உழவுத் தொழிலே சிறந்ததென்றனர். இயற்கை எல்லாத் தொழில்களிலுமே வெவ்வேறு வகையில் ஒத்துழைக்கிறது. இயற்கைவாதிகள் கூறுவதுபோல் உழவுத் தொழிலில் மட்டுமே இயற்கை ஒத்துழைப்பதாகவும், அதன் காரணத்தால் உபரி உற்பத்தி கிடைப்பதாகவும் கொண்டால், உபரி உற்பத்திக்குக் காரணம் இயற்கையேயன்றி, உழவர்களல்லர் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது. அவ்வாறாயின் உழவர்களுக்கும் பிற தொழிலாளிகளுக்கும் வேறுபாடு இருக்க முடியாது என்று நாம் கூறலாம். இயற்கைவாதிகளின் காலத்தையும் நோக்கத்தையும் எண்ணிப் பார்த்தால் அவர்களின் தொழில் பாகுபாடு தவறானது ஆனால் பொறுத்துக்கொள்ளக் கூடியதே எனலாம். வணிகத்திற்கும் கைத்தொழிலுக்கும் முக்கியத்துவம் கொடுத்த வணிகவாதிகள் உழவரை உதவாக்கரையாக ஆக்கினர். இக் கருத்தை முறியடிப்பதற்காகத் தோன்றிய இயற்கைவாதிகள் உழவரைப் போற்றி, பிறரைப் பயனற்றவர்களாக்கியதில் வியப்பில்லை எனச் சில அறிஞர்கள் கருதுவர்.

எப்படித்தான் குற்றம் காண முயன்றாலும், உழவுத் தொழிலுக்கும் பிற தொழில்களுக்கும் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. உணவு தானியங்கள் விளையவில்லையெனின் மக்கள் கதி என்னவது? உழவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதே இயற்கைவாதிகளின் நோக்கம். 'மக்களின் செல்வத்திற்கு மட்டுமன்றி, நாட்டின் செல்வத்திற்கும் உழவுத் தொழிலே ஊருணி' என்றார் டாக்டர் குவெஸ்னே. உழவுத் தொழிலுக்குச் சாதகமாயிருப்பவையனைத்தும் அரசாங்கத்திற்கும் சாதகமாயிருக்கும் என்பது அவர்கள் கருத்து. ஒருவேளை இயற்கைவாதிகளில் பலர் நிலக்கிழார்களாக இருந்ததால் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்து உபரி உற்பத்தி என்ற கருத்தை வலியுறுத்தினர் போலும். எது எவ்வாறிருப்பினும், 'உபரி' என்ற கருத்து பொருளாதார ஆய்விற்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியுள்ளது.

செல்வ ஓட்டம் (Circulation of wealth)

சமுதாயத்தில் செல்வம் எவ்வாறு பங்கிடப்படுகிறதென்பதை ஆராய்ந்த பெருமை இயற்கைவாதிகளையே சேரும். செல்வம் எவ்வாறு உற்பத்தியாகி, ஒரு வகுப்பினரிடமிருந்து பிறிதொரு வகுப்பினருக்குச் செல்கிறது, ஏன் அது அவ்வாறு செல்கிறது என்பதை ஆராய இயற்கைவாதிகளுக்கு ஆர்வம் அதிகம். ஹார்வி என்னும் மருத்துவ மேதை மனித உடலின் இரத்த ஓட்டம் பற்றி முதன் முறையாக எழுதிய நூல் வெளிவந்தது. நூலை டாக்டர் குவெஸ்னே ஆர்வமுடன் படித்ததும், புதியதொரு பொருளாதாரக் கருத்து தோன்றியது. அக்கருத்தையே 'பொருளாதாரப் பட்டியல்' என்னும் நூலில் வெளியிட்டார். மனித உடலியலுக்கும் சமூக இயலுக்கும் ஒரு ஒற்றுமையை உணர்ந்தார். உடலுக்கு இரத்த ஓட்டம் முக்கியம்; அதுபோன்று சமுதாயத்திற்குச் செல்வ ஓட்டம் முக்கியமானது. இரத்தம் ஓர் உறுப்பிற்கு அதிகமாக ஓடித் தேங்கிவிட்டால் உடலுக்கே ஆபத்து; செல்வமும் ஒரு வகுப்பினரிடம் அதிகமாகத் தேங்கிக் கிடந்தால் சமுதாயத்திற்கே கேடு. இரத்தம் ஏதாவதொரு உறுப்புக்குச் சரிவரச் செல்லவில்லையெனின், அந்த உறுப்பு பாதிக்கப்பட்டு உடலுக்கும் தீமை விளைகிறது; செல்வமும் ஏதாவதொரு வகுப்பினருக்கு வேண்டிய அளவு வராவிட்டால் அவ்வகுப்பினர்மட்டுமன்றி, சமுதாயமும் பாதிக்கப்படுகிறது. இவ்வுண்மையைக் கண்ட டாக்டர் குவெஸ்னே சமுதாயத்தை மூன்று வகுப்பினராகப் பிரித்தார். (1) ஆக்க உழைப்பாளிகள்—உழவர்களைக் குறிப்பிடுகிறது. ஒருவேளை இயற்கையோடு ஒத்துழைக்கும் அல்லது இயற்கையைப் பெரும்பாலும் நம்பி வாழும் பிறரையும் குறிப்பிடலாம். (2) நிலக்கிழார்—நிலம் வைத்திருப்போரையும் சமூகத்தில் உயர்தரக் குடிமக்களையும் கொண்டது. (3) ஆக்கமில்லா உழைப்பாளிகள்—வணிகர், கைத்தொழில் புரிவோர், வீட்டுப் பணியாட்கள், இதரத் தொழில் புரிவோரைக் குறிக்கிறது.

ஆக்க உழைப்பாளிகளான உழவர்கள்தாம் நாட்டின் செல்வப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். ஆண்டொன்றுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் மதிப்பு ரூ. 5 கோடி என வைத்துக்கொள்வோம். இதில் ரூ. 2 கோடி மதிப்புள்ள பொருள்கள் அவர்களுக்கே தேவைப்படுகிறது. அதாவது தங்கள் குடும்பத்திற்கு வேண்டிய சாப்பாட்டிற்கு, இதர குடும்பச் செலவிற்கு, கால் நடைகளைப் பராமரிப்பதற்கு, அடுத்த ஆண்டிற்கான விதைவித்துக்களுக்கு போன்ற செலவினங்களுக்கு ரூ. 2 கோடி மதிப்புள்ள பொருள்களைத் தாங்களே வைத்துக்கொள்கிறார்கள். இப்பொருள்கள் உற்பத்தியாளர்களுக்கே தேவைப்

படுவதால், அவை மற்ற வகுப்பினருக்குச் செல்வதில்லை எஞ்சியுள்ள ரூ 2 கோடி மதிப்புள்ள பொருள்கள் என்ன ஆகிறதெனப் பார்ப்போம்

உழவர்கள் தங்களுக்கு வேண்டிய விவசாயக் கருவிகள், துணிமணிகள், வீடுகள் ஆகியவற்றைத் தாங்களே செய்துகொள்வதில்லை எனவே, இவைகளை உற்பத்தி செய்து அளிக்கும் கைத்தொழிலாளர்களுக்கு ரூ 1 கோடி மதிப்புள்ள பொருள்களைக் கொடுக்கின்றனர் எனவே, உழவரிடமிருந்து நேரடியாக ரூ 1 கோடி ஆக்கமில்லா உழைப்பாளிகளுக்குச் செல்கிறது

இப்போது எஞ்சியுள்ளது ரூ 2 கோடி, இந்த ரூ 2 கோடியை உழவர்கள் குத்தகையாக நிலக்கிழாருக்குச் செலுத்துகிறார்கள் நிலக்கிழார்கள் இந்த ரூ 2 கோடியை என்ன செய்கின்றார்கள் என்று பார்ப்போம் தங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களுக்கென்று ரூ 1 கோடியை உழவருக்கே கொடுத்துவிடுகின்றனர் உணவுப்பொருள்கள் மட்டுமன்றி, துணிமணிகள், வீடு, வீட்டுச் சாமான்கள் என்று எத்தனையோ பொருள்கள் நிலக்கிழாருக்குக் தேவைப்படுகின்றன இவற்றை உற்பத்தி செய்து அளிக்கும் கைத்தொழிலாளர்களுக்கு எஞ்சிய ரூ 1 கோடி சென்று விடுகிறது இவ்வாறு நிலக்கிழார் குத்தகையாகப் பெற்ற ரூ 2 கோடியில் ரூ 1 கோடி உழவருக்கும் எஞ்சிய ரூ 1 கோடி கைத்தொழிலாளருக்கும் சென்றுவிடுவதன் மூலம் அவர்களுடைய கணக்குத் தீர்கிறது

ஆக்கமில்லா உழைப்பாளிகளின் கணக்கைப் பார்ப்போம் இவர்களுக்கு ரூ 2 கோடி வந்து சேர்ந்துள்ளது அதாவது, உழவரிடமிருந்து நேரடியாக ரூ 1 கோடியும், உழவரிடமிருந்து நிலக்கிழாருக்குச்சென்ற ரூ 2 கோடியில் ரூ 1 கோடியும் ஆக ரூ 2 கோடி வருமானம் இதை இவர்கள் என்ன செய்கிறார்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் கச்சாப் பொருள்களையும் இவர்கள் தாங்களே உற்பத்தி செய்வது கிடையாது அவற்றை உழவரிடமிருந்தே பெற வேண்டியுள்ளது எனவே அவற்றைப் பெறுவதற்கு ரூ 2 கோடியையும் உழவருக்கே கொடுத்துவிடுகின்றனர் இவ்வாறுக் கடைசியில் ரூ 5 கோடி விளைச்சலின் மதிப்பும் உழவரிடமே சேர்ந்துவிடுகிறது இது, இரத்தம் எல்லா உறுப்புகளுக்கும் சென்று கடைசியில் இருதயத்திற்கே வந்துவிடுவதுபோல ஆகுமென்றார் குவெஸ்னே எனவே உடலின் இருதயம் போன்று சமுதாயத்திலுள்ள உழவர்கள் இவ்வாறு தொடக்கத்தில் கிடைத்த ரூ 5 கோடி விளைச்சலின் மதிப்பும் உழவருக்கே திரும்பி விடுகிறது அதில் தங்கள் குடும்பச் செலவுக்கென ரூ 2 கோடி போக மீதி ரூ 3 கோடியை மறுபடியும் விவசாயத்தில் முதலீடு

செய்கிறார்கள். ரூ. 5 கோடி விளைச்சல் கிடைக்கிறது. இதில் உபரியாகக் கிடைத்த ரூ. 2 கோடியைக் குத்தகையென்று நிலக்கிழாருக்குக் கொடுக்கின்றனர். மறுபடியும் முதலில் விளக்கியது போல் செல்வம் பல வகுப்பினரிடையே கை மாறுகிறது. இதை விளக்குவதற்கு ஒரு சிறு வரைபடம் உதவலாம்.



இந்த விதமான செல்வ ஓட்டத்தைப்பற்றி முதன்முதலாக ஆராய்ந்தவர்கள் இயற்கைவாதிகள் எனக் குறிப்பிட்டோம். இவ்வாராய்ச்சியே தற்காலத்தில் 'தேசிய வருமானக் கணக்கு ஆராய்ச்சி' என மிக நுட்பமான முறைகளைக் கையாண்டு, மிக முன்னேற்றம் அடைந்திருக்கிறது. எனினும், தேசிய வருமானக் கணக்கு ஆய்வு இயற்கைவாதிகள் கருதியதுபோல் இவ்வளவு எளிமையானதல்ல. சமுதாயத்தை மூன்று வகுப்பினராக குவெஸ்னே பாகுபடுத்தினார். நிலக்கிழார் சமுதாயத்தில் உயர்ந்த குடிமக்களாகக் கருதப்பட்டனர். நாட்டின் மொத்தச் செல்வத்தில் ஐந்தில் இரண்டு பங்கை இவர்கள் அடைகின்றனர். ஆனால், என்ன பணி செய்கின்றனர்? பொருளாக்கத்திற்கு எந்த விதத்திலும் உதவாத இவர்களை, இயற்கைவாதிகள், ஆக்கமற்றவர்கள் என்று கருதவில்லை.

மாறாக, அவர்களுக்கு அளவுக்கு மிஞ்சிய மரியாதையும் அந்தஸ்தும் கொடுத்தனர். காரணம், அவர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள். சொத்துரிமை என்பது இயற்கை நியதியின் முக்கியமான அம்சம். ஏன் அவர்கள் மட்டும் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டுமென்பதற்கு, இயற்கைவாதிகள் தந்த விளக்கம் வருமாறு:

சொத்துரிமை

தனியார் சொத்துரிமை என்றும் ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்திருக்கிறது. தனியார் சொத்துரிமை எப்படித் தோன்றியது, ஏன் அது தொடர்ந்து இருக்கவேண்டுமென்பதற்கு இயற்கைவாதிகள் சிறந்த விளக்கம் தந்துள்ளனர். சமுதாயம் சீரான பொருளாதார அமைப்புடையதாக இருக்கவேண்டுமானால், சொத்துரிமைக்குப் பாதுகாப்பு அவசியம் என்று குவெஸ்னே கருதினார். எல்லாச் சமூக அமைப்புகளுக்கும் ஆதாரம் சொத்துரிமைதான் என்பதை இயற்கைவாதிகள் வலியுறுத்தினர். சொத்துரிமை தோன்றியதற்கும் நிலைத்து இருப்பதற்கும் அவர்கள் கூறும் விளக்கம் வருமாறு :

கடலிலுள்ள மீன்கள் அனைத்தும் மீனவருடையஉடைமையல்ல. எவ்வளவு மீன்களை அவர்கள் தம் உழைப்பால் பிடிக்கின்றனரோ அவை மட்டுமே அவர்களின் உடைமைகள். அதுபோன்று நில மனைத்தும் சமுதாயத்திலுள்ள மக்களுக்கு உரிமையானதன்று. தன் உழைப்பால் எவவளவு நிலத்தை மனிதன் சாகுபடிக்குக் கொண்டு வருகின்றானோ அதுமட்டுமே அவனது உடைமை. காடு மேடாகப் பயனற்றுக் கிடந்த நிலத்தை மனிதன் பாடுபட்டுச் செப்பனிட்டுத் திருத்தியமைத்தால், அது அவனுக்கு உடைமையாகிறது. இல்லை யேல் அவ்வாறு செப்பனிட்டவரின் வாரிசு என்ற முறையில் அதைத் தனதாக்கிக்கொள்கின்றான். இவ்வாறு தனக்கு உரிமை யாகாது என்ற நிலை இருந்திருக்குமாயின், எவருமே நிலத்தைச் சீர் திருத்த முன்வந்திருக்கமாட்டார்கள். எல்லா நிலமுமே தரிசு நிலமாகவேஇருந்திருக்கும். இதனால்சமூகத்திற்குஎந்தவிதப்பயனும் கிட்டியிருக்காது. இவ்வாறு சொத்துரிமையை வற்புறுத்திய இயற்கைவாதிகள் அவ்வுரிமை புதுமையானதென்றும் கருதினர்.

இயற்கைவாதிகள் ஃபிரெஞ்சுப் புரட்சிக்குச் சிறிது முந்திய காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அச் சமயம் தங்கள் நிலச்சொத்துரிமையைக் காப்பாற்றிக்கொள்வதற்கென்று பிரபுக்கள் வழிதேடிக்கொண்டிருந்தனர். இயற்கைவாதிகள் அவ் வழியைத் தத்துவ முறையில் காட்டினர். சொத்துரிமை மனிதனின் உடன் பிறப்பு; புனிதமானது; தெய்வீகமானது என்றெல்லாம் கூறினர். எனவே, பிரபுக்கள் அவர்களைத் தெய்வமெனப் பாராட்டினர்.

நிலப்பிரபுக்களுக்கு வழிகாட்டிய இயற்கைவாதிகள் அவர்களின் கடமைகளையும் உணர்த்தினர். நிலச்சுவான்கள் தரிசு நிலத்தையெல்லாம் திருத்தி அமைத்துச் சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டும்; அதோடு தங்கள் வருவாயில் கணிசமான பகுதியை நிலச்சீர்திருத்தத்திற்காகப் பயன்படுத்தவேண்டும். நிகர உற்பத்தியைக் காட்டிலும் அதிகமான குத்தகையை உழவனிடமிருந்து பெறக்கூடாது. ஏழை விவசாயிகளையும் உழவர்களையும் பராமரிப்பது அவர்கள் கடமை. எல்லாவற்றிற்கும் மேலாக வரிச்சுமை முழுவதையும் தாங்களே சுமக்கவேண்டும். இவ்வாறு, நிலப்பிரபுக்களுக்குப் பக்கபலமாக இருந்த இயற்கைவாதிகள் அவர்கள் சமூகத்திற்குச் செய்யவேண்டிய தொண்டுகளையும் வற்புறுத்தினர்.

நடைமுறைக் கொள்கைகள்

இதுவரை இயற்கைவாதிகளின் பொதுத் தத்துவத்தையும் நம்பிக்கையையும் ஆய்ந்தோம். ஆனால், அவர்களின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளே மிக முக்கியமானவை. அவற்றுள் முக்கியமானவை வர்த்தகம், அரசாங்கத்தின் கடமைகள், வரிமுறை ஆகியவை பற்றியது.

தடையிலா வாணிபம்

கைத்தொழிலையும் வாணிபத்தையும் ஆக்கமில்லாத் தொழில்கள் என இயற்கைவாதிகள் கருதினர் என்று முன்பு கண்டோம். அவ்வாறாயின், வாணிபத்தை அவர்கள் கட்டுப்படுத்தும் கொள்கைகளை வகுப்பர் என எதிர்பார்க்கலாம். ஆனால், இயற்கைவாதிகள் வாணிபத்தை வெறுக்கவுமில்லை; கட்டுப்படுத்த விரும்பவுமில்லை; மாறாக, அதன் போக்கிலேயே அது நடைபெறவேண்டுமென்றுதான் விரும்பினர். ஒரு நாடு தனக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் தானே உற்பத்திசெய்ய இயலாது. அதேபோல் தான் உற்பத்திசெய்த பொருள்கள் அனைத்தையும் தானே நுகரவும் முடியாது. எனவே, பிறநாட்டு வாணிபம் அவசியமானது. அது தடையின்றி நடைபெற்றால்தான் நியாயமானதாகவும், இயற்கை விதிக்கு ஒத்ததாகவும் இருக்குமென்று இயற்கைவாதிகள் கருதினர். எனவே, அயல்நாட்டு வாணிபத்திலிருக்கும் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட்டுச் சுதந்திரமாக அது நடைபெற விட்டுவிடுவதுதான் சிறந்தது என்றனர். தலையிடாக் கொள்கையை விரும்பிய இயற்கைவாதிகள், வாணிபத்திலும் அக்கொள்கையை வற்புறுத்தியது வியப்பன்று. அடுத்து, வணிகவாதிகளைப்போல் குறுகிய தேசப்பற்றும் பித்துமின்றி, உலகமனைத்தும் ஒன்றே என்ற நம்பிக்கையில் ஊறியவர்கள் கட்டுப்பாட்டையோ ஒழுங்குமுறைகளையோ விரும்பியிருக்க முடியாது. வணிகவாதிகளின் கொள்கை

களை முறியடிக்கவேண்டுமென்று தோன்றியவர்கள், இயற்கை வாதிகள். அவர்களின் 'வாணிப மிச்சக்கொள்கையை, தவறெனக் காட்டி, தடையிலா வாணிபமே ஒவ்வொரு நாட்டிற்கும் இயல் பான நிலையை ஏற்படுத்தும் என்று கூறினர்.

எனினும், தொன்மைப் பொருளாதார நிபுணர்களைப்போல் தடையிலா வாணிபம் எல்லா நாடுகளுக்கும் எவ்வாறு அனுகூல மாயிருக்கும் என்பதை இயற்கைவாதிகள் உணரவில்லை. உலகம் முழுவதும் ஒன்றே என்ற தத்துவத்தின் அடிப்படையில்தான் சுதந்திர வாணிபத்தை இயற்கைவாதிகள் விரும்பினர். காரணம் எதுவாயிருந்தாலும், தடையிலா வாணிபத்தை இயற்கைவாதிகளைப் போல் எவருமே வற்புறுத்தியதில்லை என்று கூறலாம். இக் கொள்கையை ஃபிரெஞ்சு நாட்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, 1760 முதல் 1780 வரை பல இறக்குமதி வரிகளை நீக்கியது. 1763, 1766-ம் ஆண்டுச்சட்டங்கள் தானிய வாணிபத்தைச் சுதந்திர வாணிபமாக்கின. ஆனால், இயற்கைவாதிகளின் செல் வாக்கை இயற்கையே கண்டித்தது. நான்காண்டுகள் பருவ மழை தவறியதால் பஞ்சம் ஏற்பட்டது, எனவே, இயற்கைவாதிகளின் கொள்கைக்கு மாறாக, அரசாங்கம் தானிய வரியை விதிக்க நேரிட்டது.

அரசாங்கத்தின் கடமைகள்

இயற்கைவாதிகளில் முழு நம்பிக்கைகொண்ட இயற்கை வாதிகள் மனிதர் இயற்றும் சட்டங்களை விரும்பவில்லை. எனவே, அரசாங்கம் தனது சட்ட திட்டங்களையெல்லாம் குறைத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் விரும்பினர். சட்டங்களைக் குறைப்பதே சட்ட மன்றத்தின் சிறந்த அலுவல் என்றும் கருதினர். புதிய எந்தச் சட்டமும் இயற்கைவாதியின் பிரதிபலிப்பாகத்தான் இருக்க வேண்டும். எந்த மனிதராலும் முற்றிலும் புதிய சட்டத்தை உருவாக்க முடியாது. முன்னரே உள்ள இயற்கைச் சட்டங்களைத் தான் சமூகத்திற்கேற்ப உருவாக்க முடியும். எல்லாச் சட்டங்களும் இறைவனின் இயற்கைச் சட்டங்களுக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும். இவ்வாறு இயற்கைவாதிகள் கருதியதால், குழப்பத்தை அவர்கள் விரும்பினர் என்று கருத முடியாது. அவர்களின் கொள்கை 'குறைந்தபட்ச சட்டமும் நிறைந்த அதிகாரமும்' ஆகும். அதிகாரமனைத்தும் அரசன் கையில் குவிந்திருக்க வேண்டு மென விரும்பினர். எனவே, இயற்கை விதிகளில் நல்லறிவும், முழுமையான நம்பிக்கையும் கொண்டவனே அரசனாக இருக்க வேண்டும். இயற்கை விதிகளை மக்களுக்கு எடுத்துணர்த்தும் இறை வனின் பிரதிநிதியாக அரசன் இருக்கவேண்டும். அவ்வாறாயின், அரசனின் கடமைகள்தான் என்ன? இயற்கை விதிகளை மக்கள்

கடைப்பிடித்தொழுகச் செய்வதே மன்னனின் தலையாய கடமை. அவ்வாருயின், தனிமனிதனின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடக்கூடாது என்ற முடிவிற்கு இயற்கைவாதிகள் வந்தனர். இம் முடிவையே பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை என்பர். இக் கொள்கை வணிகவாதிகளின் கொள்கைக்கு நேர்மாருனது என்பது தெளிவு. இயற்கைவாதிகளின் காள்கைப்படி அரசாங்கத்தின் கடமைகள் மிகச் சில: உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டி, சொத்துரிமைக்குப் பாதுகாப்பளித்தலும், பிற நாட்டவரின் ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைக் காப்பதுமே அரசின் முக்கிய கடமைகளாகும். அதோடு, இயற்கை விதிகள்பற்றிய கல்வி அறிவை மக்களுக்கு ஊட்டவேண்டும். பயிர்த்தொழில் செழிப்புடன் வளர்வதற்கு வேண்டிய திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு, அரசின் கடமைகளுக்கு, இயற்கைவாதிகள். ஒரு திட்டவட்டமான வரம்பை ஏற்படுத்தினர் தனி மனிதனின் பொருளாதார முயற்சியில் அரசாங்கம் எவ்விதத்திலும் தலையிடக்கூடாதென்ற கொள்கையை முதன்முதலில் வகுத்தவர்கள் இயற்கைவாதிகளே. பின்னர்தான் ஆடம் ஸ்மித் இக் கொள்கையை மேலும் வற்புறுத்திஞர்.

ஒற்றை வரித்திட்டம்

இயற்கைவாதிகளின் கொள்கைகளில் முக்கியமானதாகக் கருதப்படுவது ஒற்றை வரித்திட்டம். அரசாங்கத்தின் பணிகளில், விவசாய முன்னேற்றத்திற்கான பொதுவேலைப் பணியும் ஒன்று எனக் கண்டோம். அப் பணியைச் செய்வதற்கு அரசாங்கத்திற்குப் பணம் தேவை. யாரிடமிருந்து எந்த வகையில் இப் பணத்தைப் பெறுவது? இயற்கைவாதிகளின் கொள்கைகளையும், தத்துவங்களையும் முறையாகத் தெரிந்திருந்தால், இவ் விஞவிற்கு விடை காண்பது எளிது. உழவு மட்டுமே ஆக்கத் தொழில்; அது ஒன்றே நிகர உற்பத்தி செய்யும் தொழில். பிற தொழில்களெல்லாம் ஆக்கமற்ற தொழில்கள். கைத்தொழிலாளரும் வணிகரும் தத்தம் வேலைக்கு வெகுமதியாக, பிழைப்புக்கு வேண்டிய கூலிமட்டுமே பெறுவர் என்று இயற்கைவாதிகள் கருதினர். எனவே, அவர்கள் மீது வரி விதித்தால், அவர்களுடைய பிழைப்புக் கூலிக்குக்கூட ஆபத்து அவர்கள் வேலைசெய்ய முன் வரமாட்டார்கள். உழவர் மீது வரி விதித்தால், அது முதலின்மீது போடப்பட்ட வரியாக அமையும். அடுத்த ஆண்டு சாகுபடிக்கென்று வைத்துள்ள பொருளை அரசாங்கம் வரியாக எடுத்துக்கொண்டால் சாகுபடிச் செலவு குறைந்து விளைச்சலும் பாதிக்கப்படும். எனவே, நிகர உற்பத்தியை அனுபவிக்கும் நிலக்கிழார் மீது வரி விதிப்பதே சிறந்தது. நிகர உற்பத்தியின்மீது விதிக்கப்படும் வரிதான் பொருள் உற்பத்தியைப்

பாதிக்காது. அடுத்து, எத்தனை சதவிகித நிகர உற்பத்தியை வரியாக அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும்? சுமார் 30 சதவிகித நிகர உற்பத்தியை வரியாகக் கொள்வதுமேல் என்றனர் இயற்கைவாதிகள். வருவாயில் 30 சதவிகித வரி என்றால் இன்றுகூட எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆனால், இயற்கைவாதிகள் இதற்கு மிக எளிதான அல்லது சிறுபிள்ளைத்தனமான விளக்கம் தந்தனர். நிலக்கிழார் தங்களது நிலத்தின் மதிப்பு 30 சதவிகிதம் குறைந்துவிட்டது, அல்லது 30 சதவிகித நிலமானது தங்களுக்குச் சொந்தமல்ல, அரசாங்கத்திற்குச் சொந்தமென நினைத்துக்கொண்டால், வரிச் சுமை பளுவாகத் தெரியாது என்றனர்.

இவ்வாறு, நிலத்தின் மீது, அதுவும் நிகர உற்பத்தியின் மீது நேரடியாக ஒரு வரியை மட்டுமே விதிக்க வேண்டுமென இயற்கைவாதிகள் வற்புறுத்தினர். இது, வணிகவாதக் கொள்கைக்கு முற்றிலும் மாறானது என்பதைக் கவனித்தல் வேண்டும். ஃபிரஞ்சு நாட்டில் கால்பர்ட் வணிகவாதக் கொள்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தியதன் விளைவாக, ஃபிரெஞ்சு மக்கள் எண்ணற்ற வரிகளால் சொல்லமுடியாத அளவிற்குத் துயர்பட்டனர். அவர்களுக்கு விடுதலை அளிக்கும் நோக்கத்தோடு ஒரே ஒரு வரியைமட்டும் இயற்கைவாதிகள் விரும்பியதில் வியப்பில்லை. வரிக்கொள்கையே நாட்டு மக்களின் வறுமைக்கும் துன்பத்திற்கும் காரணமென அவர்கள் கருதினர். ஆனால், வருமான ஏற்றத்தாழ்வுதான் காரணம் என்பது இக் காலக் கருத்து.

அடுத்து, ஒரே ஒரு வரியிலிருந்து வரும் வருமானம் அரசாங்கத்திற்குப் போதுமா என்று கேட்கலாம். அரசாங்கம் வருமானத்திற்கேற்பச் செலவைச் சரிசெய்துகொள்ள வேண்டுமேயன்றி, செலவிற்கேற்ப வருவாயை அதிகரிக்கக்கூடாது என்பதே அவர்களின் விளக்கம். ஒரே ஒரு வரியிருந்தால்தான், வசூலிப்பதற்கும் எளிது; வசூல் செய்யும் செலவும் குறைவாயிருக்கும். அதோடு, நேரடி வரியாக இருப்பதனால் எவரும் வரியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. இவ்வுண்மைகளையெல்லாம் அக் காலத்திலேயே இயற்கைவாதிகள் நன்கு உணர்ந்து இருந்தனர். இயற்கைவாதிகளின் ஒற்றைவரித் திட்டத்திற்கு ஆதாரம் உழவுத் தொழில் ஒன்றே நிகர உற்பத்தி செய்யும் தொழில் என்ற நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை தவறானதென்றால், அவர்கள் வரிக் கொள்கையும் தவறானதாகத்தான் இருக்க முடியும். எல்லாத் தொழில்களிலுமே நிகர உற்பத்தி உண்டு என்பதே தற்காலக் கருத்து. எனவே, தற்போது விதவிதமான வரிகள் பலப்பல நோக்கங்களோடு வெவ்வேறு வழிகளில் விதிக்கப்படுகின்றன. என்றாலும், ஒற்றை வரித்திட்டமானது அண்மைக்காலத்தில் அமெரிக்கப் பொருளாதார அறிஞரான ஹென்றி ஜார்ஜ் (Henry

George) அவர்களால் வற்புறுத்தப்பட்டது. எனினும், இக் கொள்கையை எவரும் ஒப்புக்கொள்வதில்லை. ஆடம்ஸ்மித் வகுத்துள்ள வரிக்கொள்கை விதிகளே இன்றும் அடிப்படையாகக் கருதப்படுகின்றன.

மதிப்புரை

பொருளாதார அறிவியல் வளர்ச்சியில் இயற்கைவாதிகள் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்களே பொருளாதார இயலின் தந்தையர் எனக் கருதுவோரும் உளர். இவர்களுக்கு முன், வாணிபம், தொழில், உழவு ஆகியவற்றைப்பற்றி ஏராளமான கட்டுரைகள் எழுதப்பட்டன. ஆனால், பொருளாதாரச் செயல்களை ஆராய்ந்து அவற்றை ஓர் அறிவியல் சட்ட வரம்புக்குள் அமைத்த பெருமை இயற்கைவாதிகளையே சேரும்.

இயற்கைவாதம், வணிகவாதத்திற்கு எதிராகத் தோன்றிய புரட்சி எனக்கருதலாம். வணிகவாதம் செயல்பட்ட காரணத்தால் ஃபிரான்ஸ் நாட்டில் ஏராளமான கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் இடம்பெற்று உழவுத்தொழிலை ஒன்றுக்கும் உதவாக்கரைத் தொழிலாக ஆக்கியது. உழவுக்கு உயர்வு தரும் நோக்கத்தோடு இயற்கைவாதிகள், வணிகவாதிகளின் கொள்கைகளனைத்தையும் வன்மையாகக் கண்டித்தனர். வணிகவாதிகள் பொன்னையும் வெள்ளியையும் செல்வமாகக் கருதி, அவற்றை அடைவதற்கு வெளிநாட்டு வாணிபத்தை வழிமுறையாகக் கருதினர். இயற்கைவாதிகளோ நாட்டின் ஆக்க சக்தியைச் செல்வமாகக்கொண்டு, அதனைப் பெருக்குவதற்கு உழவுத்தொழிலிலுள்ள உபரி உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றனர். வணிகவாதிகள் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தையும் அரசாங்கங்கள் ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்த வேண்டுமென்றனர். இயற்கைவாதிகளோ தனிமனிதனின் சுதந்திரத்தை வற்புறுத்தி தலையிடாக் கொள்கைக்குச் சிறப்பிடம் தந்தனர். ஏதாவதோர் இரும்புக் கம்பி வளைந்திருந்தால், அதனை நேராக ஆக்குவதற்கு எதிர்ப்புறமாக அக் கம்பியை வளைப்பது மரபு. அதேபோன்று, வணிகவாதக் கொள்கைகளைக் கண்டிப்பதற்காக அதற்கு நேர்மாறான கொள்கைகளை அளவுக்கு மீறி வலியுறுத்திவிட்டனர் இயற்கைவாதிகள் எனச் சிலர் நினைப்பர்.

எனினும், அவர்கள் விளக்கிய இயற்கை விதிகளிலிருந்து தோன்றிய தன்னலப் பண்பு, அதைப் பேணுவதற்கேற்ற சுதந்திரச் சூழ்நிலை, அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டிய தலையிடாக் கொள்கை, அவர்கள் தொகுத்த பொருளாதாரப் பட்டியல், அது விளக்கும் செல்வத்தின் ஓட்டம் ஆகியவை பொருளாதாரப் பட்டறையில் இன்றும் பயன்படுத்தப்படும் ஆராய்ச்சிக் கருவி

களாகும். ஆக்கமில்லா உழைப்பு என்னும் பாகுபாடு, உழவுத் தொழிலில்மட்டும் ஏற்படும் நிகர உற்பத்தி, ஒற்றை வரித்திட்டம் ஆகிய எல்லாக் கருத்துகளும் தவறானவையென்பதை இப்போது எல்லாரும் அறிவர். இக் குறைபாடுகளை நீக்கிவிட்டால், பொருளாதார இயல் தோன்றுவதற்கும் வளர்வதற்கும் இயற்கைவாதிகள் பெரும் சேவை செய்துள்ளனர் எனலாம். இயற்கைவாதிகள் தாம் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் ஒரு புது முறையைப் புகுத்தி, ஒரு யுகத்தையே ஏற்படுத்தினார்கள் எனலாம்.

இயற்கை வாதமும் நவீனப் பொருளாதார இயலும்

இயற்கை வாதத்தை நவீனப் பொருளாதாரத்தோடு ஒப்பிட்டுப் பேசுவது வழக்கமாகிவிட்டது. குவெஸ்னேயின் கருத்துகளும் கொள்கைகளும் நவீனப் பொருளாதார ஆய்விற்கு எவ்வளவு தூரம் துணை செய்துள்ளன என்பது விவாதத்துக்குரியது. எனினும், அவரது 'பொருளாதாரப் பட்டியல்' பல நவீன கருத்துகளையும் ஆய்வுமுறைகளையும் புலப்படுத்துகின்றன. தன்னலத்தை ஆதாரமாகக்கொண்டு தலையிடாக்கொள்கையை வலியுறுத்திய இயற்கைவாதிகள் நிறைவுப் போட்டியுள்ள (Perfect competition) பொருளாதார அமைப்பைத் தோற்றுவிக்க வழிகாட்டிகளாக இருந்தனர் என்பதை ஆல்பிரட் மார்ஷல் வலியுறுத்துகிறார். 'தன்னலம் என்பது பொது நலத்தின் பணியாள்' என்று குவெஸ்னே கூறியதே இதற்கு ஆதாரமாக அமைகிறது. முதல் ஆக்கக் கோட்பாட்டிற்கும் வித்திட்டவர் குவெஸ்னேதான் என்று சும்பீட்டர் (Schumpetre) கூறுகிறார். உழவுத் தொழிலுக்கு மலிவான முதல் தேவை என்பது குவெஸ்னேயின் கருத்து. மேலும், பயிர்த் தொழிலுக்குப் பலவிதமான முதலீடு அவசியம் என்பதையும், அவர் உணர்ந்திருந்தார். நிலத்தைச் சீர்படுத்தி, அதற்கு வேண்டிய கால்வாய்கள், கட்டிடங்கள், வேலி முதலியன அமைப்பதற்குத் தேவைப்படும் மூலதனத்தை ஆரம்ப முதலீடு என்றார். கால்நடைகளைப் பராமரிக்கவும், விதை வித்துக்கள் வாங்கவும், கூலி கொடுக்கவும் தேவைப்படும் பணத்தை வருடாந்தர முதலீடு என்று குறிப்பிட்டார். இவ்வாறு, முதலீட்டை வெவ்வேறு இனங்களாகப் பாகுபடுத்தியது முழுமையானதாக இல்லாவிட்டாலும் முதன் முறையானது என்று கூறலாம்.

நவீனப் பொருளாதார ஆய்வுமுறைகளில் நான்கு விதத்தில் பொருளாதாரப் பட்டியலின் ஒப்புமையை நாம் காண முடியும். (1) பட்டியலுக்கும் வால்ராஸின் பொதுச் சமநிலை ஆய்விற்கும் (Walrasian general Equilebrium System) ஒற்றுமை உண்டு. பொருளாதாரச் சம நிலையின் இயல்பைப் பொருளாதாரப் பட்டியல் தான் முதன்முறையாக ஆயத் துணிந்தது என்கிறார் சும்பீட்டர்.

ஒரு விதத்தில் இது உண்மை. சமுதாயத்தை மூன்று வகுப்பின ராகப் பிரித்து, ஒவ்வொரு வகுப்பினரும் மற்ற இரு வகுப்பினரையும் சார்ந்தே வாழ வேண்டிய அவசியத்தைப் பட்டியல் உணர்த்து கிறது. இதில் ஏதாவதொரு வகுப்பினரின் வருவாயோ செலவோ மாறியதென்றால், அது மற்ற வகுப்பினரின்வருமானத்தையும் செல வீட்டையும் பாதிக்கும். இம் மூன்று வகுப்பினரிடையே ஏற்படும் பரிவார்த்தனையின்வாயிலாகச்சமுதாயம் சமநிலையை எய்துகிறதென லாம். (2) கெயின்ஸ்பிரபுவின் ஆய்விற்கும் பொருளாதாரப்பட்டியல் ஆய்விற்குமுள்ள ஒற்றுமையை மிகைப்படுத்தாமல் பார்க்க வேண்டும். கெயின்ஸ் நாட்டின் மொத்த வருமானம், மொத்தச் சேமிப்பு, மொத்தச் செலவீடு என்று எல்லாவற்றையும் மொத்த மாக ஆராய்ந்தார். இவ்வாய்வில் ஒன்றையொன்று எவ்வாறு சார்ந்திருக்கிறதென்பதையும் விளக்கினார். இவற்றில் ஏதாவ தொன்று பாதிக்கப்பட்டால் அதனால் மற்றவையும் பாதிக்கப்படு மென்றார். அதேபோன்றுதான் குவெஸ்னேயும் தனது பொருளா தாரப் பட்டியலைப் புனைந்துள்ளார். ஆனால், மொத்தச் சமநிலை பாதிக்கப்படுவதற்கு அரசாங்கத்தின் தவறான கொள்கைகளும், நிலக்கிழாரின் முறைகேடான செலவீடும்தான் காரணம் என்பது குவெஸ்னேயின் கருத்து. மாறாக, கெயின்ஸ் பொருளாதார அமைப்பிலுள்ள அம்சமே இதற்குக் காரணம் என்றார். உற்பத்திக் குறைந்துவிடக்கூடாது என்பதுதான் குவெஸ்னேயின் கவலை; கெயின்ஸ் வேலை வாய்ப்புக் குறையக்கூடாது என்பதில்தான் அக்கறைகொண்டிருந்தார். இவ்விருவகை வேறுபாடுகளையும் மனதில் கொண்டு பார்க்கும்போது, குவெஸ்னேயின் பட்டியலில் ஒரு வகுப்பினரின் செலவீடு மற்றொரு வகுப்பினரின் வருவாயாகத் தோன்றுவதற்கும், கெயின்ஸின் வருமானப்பெருக்கி (Income multiplier) என்பதற்கும் ஒரு விதத்தில் ஒற்றுமையுண்டு. எனினும், கெயின்ஸ் பிரபுவின் ஆய்வில் வருமானம் உயர்ந்து கொண்டே போவதையும் குவெஸ்னேயின் பட்டியலில் வருமானம் மாறாமல் அப்படியே இருப்பதையும் காண்கின்றோம். (3) பொருளா தார நடவடிக்கைகள் எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும் இயல் புடையவைஎன்னும் நவீன ஆய்வையும்இயற்கைவாதிகளின்ஆய்வு ஒத்திருக்கிறதெனலாம். குவெஸ்னேயின் செல்வஓட்ட ஆய்வு, வருமானம் கைமாறிக்கொண்டே இருக்கிறது என்பதைப் புலப் படுத்துகிறது. எனவே, பொருளாதார உலகம் நிலையானதன்று; அப்போதும் மாறும் இயல்புடையது என்ற நவீன ஆய்வை இது ஒத் திருக்கிறதென்பர். எனினும், பொருளாதாரப் பட்டியல் ஆய்வுமாறாத் தன்மையுடையதாகவே இருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. (4) நவீன ஆய்வு முறைகளில் லியோன்டிஃப் அவர் களின் செலவீடு உற்பத்தி முறை (Leontief input-output system)

முக்கியமானதொன்றாகும். பொருளாதாரப் பட்டியலின் ஆய்வையும் இவ்வழியில் சுலபமாக அமைக்கமுடியும். மூன்று தொழில்களின் அமைப்பு வடிவத்தில் பொருளாதாரப் பட்டியலை லியோன்டிஃப் முறையில் அமைத்துக் காட்டுவர் சிலர்.

இயற்கைவாதமும் பின்தங்கிய நாடுகளும்

இயற்கைவாதம் வலியுறுத்தும் கொள்கைகள் பின்தங்கிய நாடுகளுக்கு எவ்வளவு தூரம் பொருத்தமானவை என்பதை இப்போது ஆராய்வோம். பின்தங்கிய நாடுகளின் குறிக்கோள், பொருளாதார முன்னேற்றம்தான் என்று அனுமானித்துக் கொண்டால் அதற்கு இயற்கைவாதிகள் வகுத்த வழிவகைகள் யாவை? எல்லாத் தொழில்களுக்கும் ஆதாரமாக இருப்பது உழவுத்தொழில் என்றும் இத்தொழிலின் முன்னேற்றத்தைப் பொறுத்தே பிற தொழில்களின் வளர்ச்சி அமையும் என்றும் இயற்கைவாதிகள் வலியுறுத்தினர். இது ஓரளவிற்கு உண்மை. இன்றைய முன்னேற்ற நாடுகளில் சில விவசாயத் தொழிலில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய பின்னர்தான் தொழிற்புரட்சியில் ஈடுபட்டன. தொழிற்புரட்சியின் அடிப்படை பசுமைப் புரட்சியில்தான் உள்ளது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. இவ்வகையில் முன்னேறிய நாடுகளில் இங்கிலாந்தும் அமெரிக்காவும் குறிப்பிடத்தக்கவை.

எனினும், முன்னேறியுள்ள நாடுகளனைத்தும் பயிர்த் தொழிலை ஆதாரமாகக் கொண்டுதான் முன்னேற்றம் அடைந்துள்ளன என்று சொல்வதற்கில்லை. எல்லாத் தொழில்களையும் ஓரே காலத்தில் முன்னேற்றிய நாடுகளும் உள்ளன.

பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்ட இயற்கைவாதிகள், அதற்கு மூலதன வளர்ச்சிதான் இன்றியமையாதது என்பதை அறிந்திருந்தனர். எனவே, புதுப்புது முதலீட்டின் வழியாகப் பயிர்த்தொழிலில் கிடைக்கக்கூடிய நிகர உற்பத்தியைப் பெருக்கவேண்டுமெனக் கருதினர். நிகர உற்பத்திதான் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைப் புலப்படுத்தும் கருவி என்று கொண்டனர். பயிர்த்தொழிலில் மட்டுமன்றி, எல்லாத் தொழில்களிலுமே நிகர உற்பத்தி உண்டு என்று கருதப்படும் இந்நாளிலும் அதனைப் பெருக்குவதே முக்கியக் குறிக்கோளாக உள்ளது. நிகர உற்பத்தி பெருகினால்தான் நாட்டின் நிகர வருமானம் அதிகரிக்க முடியும். உழவுத் தொழிலில் நிகர உற்பத்தியை அதிகரிக்க எண்ணிய குவெஸ்னே சிறுபான்மை சிறு பண்ணைகளை விடப் பெரிய பண்ணைகளே சிறந்ததெனக் கூறுகிறார். பெரிய பண்ணைகளில்தான் அதிக முதலீடு செய்து விளைச்சலைப் பெருக்கக் கூடிய உயர்தர முறைகளைப் புகுத்த முடியும். இதற்கு மாறாக, பண்ணைகள் சிறியதாயிருந்தால் முதலீடு செய்வதற்கோ, விஞ்

ஞான முறையை மேற்கொள்வதற்கோ இயலாது. இதிலிருந்து, பின்தங்கிய நாடுகளுக்குப் பசுமைப் புரட்சியின் அவசியம் புலனுகிறது எனலாம்.

நிகர உற்பத்தியை வருமானமாகப் பெறும் நிலக்கிழார் அவ் வருமானத்தைச் செலவிடும் முறைகளைப் பொருத்தே, அடுத்த ஆண்டிற்கான உற்பத்தி அளவு நிருணயமாகும் என்பதை குவெஸ்னே உணர்ந்திருந்தார். இந்த வருமானம் நிலக்கிழாருக்கு எஞ்சிய வருமானமாகும். அதாவது, சேமிப்பை நிருணயிக்கக் கூடியதாகும். மற்ற இரு வகுப்பினரின் வருமானமும் பிழைப்பிற்குப் போதுமான அளவாகவே உள்ளது. எனவே, சேமிக்கும் திறன் அவர்களுக்குக் கிடையாது. சேமிக்கும் திறனுடைய நிலக்கிழார் எவ்வளவிற்கெவ்வளவு தங்கள் வருவாயை முதலீடு செய்கின்றனரோ, அவ்வளவிற்கவ்வளவு நாட்டின் விளைச்சல் பெருகும்; சேமிப்பும் உயரும். எனவே, சேமிக்கும் திறனுடையோர் செய்யும் முதலீட்டைப் பொருத்தே நாட்டின் பொருளாதார வளர்ச்சி அமையமுடியும் என்பதை அறிய வருகிறோம். வருவாயில் எவ்வளவைச் சேமித்து முதலீடு செய்வது, எவ்வளவை நுகர்வுப் பொருளுக்காகச் செலவிடுவது என்ற தீர்மானமே முக்கியமானது.

மேலும், ஆக்க உழைப்பு ஆக்கமில்லா உழைப்பு என்னும் தவருன பாகுபாட்டின் அடிப்படையில் ஒரு பேருண்மையை உணர்த்துகிருர் குவெஸ்னே. ஆக்கமுள்ள உழைப்பாளிகளுக்கு வருவாயாக அமைவதால், இவ் வருவாயை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவிற்கவ்வளவு நல்லது என்கிருர். இது சிறிது சர்ச்சைக்குரியதாகும். பயிர்த்தொழிலில் கிடைக்கும் வருவாயைப் பிற தொழில்களுக்குப் பயன்படுத்துவதையும் குவெஸ்னே கண்டித்தார். விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலை இருந்தால் தான் உழவர்களின் வருவாய் உயர்ந்து, நிகர உற்பத்தி பெருகி, நாடு வளம்பெற முடியும் என்ற உண்மையைப் பின்தங்கிய நாடுகள் சிந்திக்கவேண்டும். இயற்கைவாதிகளின் ஏனைய கொள்கைகளை விட இக் கொள்கையே பின்தங்கிய நாடுகளுக்கு வழிகாட்டியாக அமையலாம். பிறதொழில்களை ஆக்கமற்றவை என்று இயற்கைவாதிகள் கருதினர். ஆனுல், எல்லாத் தொழில்களுமே ஆக்கமுடையவை என்று கருதும் நாம் அத் தொழில்களின் நிகர உற்பத்தியினை அதிகரிப்பதன் வாயிலாகப் பொருளாதார வளர்ச்சியை எய்த முடியும் என்ற முடிவிற்கு வருகிறோம்.

இரண்டாம் பிரிவு

பொருளாதார அறிவியல் வளர்ச்சி

பொருளாதார இயலின் தந்தையெனப் போற்றப்படும் ஆடம் ஸ்மித் 1776-ல் வெளியிட்ட 'நாடுகளின் செல்வம்' என்ற நூலின் வாயிலாகப் பொருளாதார அறிவியலுக்கு அடிக்கல் நாட்டினார். அவரது காலத்தில் பென்தம் என்னும் பேரறிஞர் பயன்வழிக் கொள்கையினை வகுத்தார். ஆடம் ஸ்மித்துக்குப் பின் ஆங்கில நாட்டில் தோன்றிய பொருளாதாரப் பேரறிஞர்களான மால்தஸும் ரிக்கார்டோவும் ஸ்மித்தின் நூலுக்குத் துணைநூல் எழுதினர். இம் மூவரின் நூல்களையும் சேர்த்துத் தொன்மைப் பொருளாதாரம் எனக் கூறுவர். இவர்கள் உருவாக்கிய பொருளாதாரத்தைச் சுதந்திர வாதப் பொருளாதாரம் என்றழைப்பர் சிலர்; முதலாளித்துவப் பொருளாதாரம் என்று கூறுவர் வேறு சிலர்; தன்னலப் பொருளாதாரம் என்று கருதுவர் வேறு பலர்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்துகளையும் கொள்கைகளையும் விளக்கியோரும் விரிவுபடுத்தியோரும் பலர். அவர்கள் அனைவரையும் தொன்மைப் பொருளாதார மரபினர் என்றழைப்பது மரபு. அவர்களில் ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் மில், மெக்கல்லக், சீனியர் ஆகியோரும், ஃபிரெஞ்சு நாட்டு அறிஞரான ஜே. பி. சே., அமெரிக்க அறிஞரான கேரி, ஜெர்மனியைச் சேர்ந்த வான் தூனன் ஆகியோரும் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஆடம் ஸ்மித்தின் நூல் வருங்காலத்தைப்பற்றிய இன்ப நோக்கும் துன்ப நோக்கும் கலந்தது என்பர். இதில் துன்ப நோக்கோடு பொருளாதார ஆய்வை மேற்கொண்டனர் மால்தஸும் ரிக்கார்டோவும். துன்ப நோக்குப் பொருளாதாரம்தான் முதலில் மலர்ந்தது. எனினும் இன்ப நோக்குடன் பொருளாதார இயலை ஆய்ந்தனர் பலர். அவர்களில் அமெரிக்க நாட்டறிஞரான கேரியும் ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பாஸ்டியட்டும் குறிப்பிடத்தக்கவர்கள்.

7. ஆடம் ஸ்மித் (1723-1790)

(Adam Smith)

பொருளாதார இயலின் தந்தையென்றும், தொன்மைப் பொருளாதாரத்தை (Classical economics) நிறுவியவரென்றும் மதிக்கப்படும் ஆடம் ஸ்மித், ஸ்காட்லாந்திலுள்ள கிர்க்கால்டி என்னும் ஊரில் 1723-ல் பிறந்தார். பிறப்பதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பே தன் தந்தையைப் பறிகொடுத்தார். நான்கு வயதில் நரிக்குறவர் இவரைத் திருடிக்கொண்டு போய்விட்டனர். அவரது தாய்மாமன் அரும்பாடுபட்டு அவர்களிடமிருந்து இவரை மீட்டுவந்தார். சொந்த ஊரிலேயே தனது பள்ளிப் படிப்பை முடித்து விட்டு, 14 வயதில் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அக் காலத்தில் இப் பல்கலைக் கழகம் பெரும் புகழுடன் விளங்கியது. அங்கு மிகச் சிறந்த பேராசிரியராயும், தத்துவ மேதையாயும் விளங்கிய பிரான்ஸிஸ் ஹட்சிசன் (Francis Hutchison) என்பவரின் மாணவரானார். ஹட்சிசனின் கருத்துகள் ஆடம் ஸ்மித்தைப் பெரிதும் கவர்ந்தன. உலகப் புகழ்பெற்ற தத்துவ மேதையான டேவிட் ஹியூமின் (David Hume) நூல்கள் ஸ்மித்தின் உள்ளத்தைக் கவர்ந்தன. கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற பின், தன் திறமைக்காகப் பரிசுச் சம்பளம் அளிக்கப்பெற்று, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். தம் ஊருக்கே செல்லாது, ஆறு ஆண்டுகள் தொடர்ந்து தம் விருப்பப்படி கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களையும், இத்தாலிய, பிரெஞ்சு நூல்களையும் கற்றார். 'ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் அவரைக் கவரவில்லை. அங்கிருந்த பேராசிரியர்கள் முறையாகப் பாடம் சொல்லிக் கொடுக்கவில்லை; கற்பதற்கு வழியும் காட்டவில்லை,' என்று ஸ்மித் வருத்தப்பட்டார். அதோடு, பல்கலைக் கழக அதிகாரிகள் ஆங்கிலேய மாணவர்களைப் போல் ஸ்காட்லாந்து மாணவர்களைப் பரிவுடன் கண்காணிக்கவில்லை. அக் காலத்தில் பாதிரியாராக விரும்பும் மாணவர்களுக்கே பெரும்பாலும் பரிசுச் சம்பளம் கொடுக்கப்பட்டது. ஸ்மித் இதற்கு விதிவிலக்கல்ல. எனினும், பாதிரியாராக மனமின்றி, யாதொரு பட்டமும் பெறாமல் ஸ்மித் சொந்த ஊருக்கே திரும்பினார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின், எடின்பரோ பல்கலைக் கழகத்தில் ஆங்கில ஆசிரியராகத் தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். அதன்பின், தாம் கற்ற தாய்ப் பல்கலைக்கழகமான கிளாஸ்கோவில் ஓராண்டு தருக்கநூல் ஆசிரியராகிப் பின்னர் தத்துவப் பேராசிரியரானார். அவருடைய சொற்பொழிவுகள், மாணவர்களின் மனங்களை மிகவும் கவர்ந்தன. அவருடைய புகழ் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயும் சென்றது. அவரது சொற்பொழிவைக் கேட்க அந் நாட்டுப் பிரபுக்கள் கூட வந்தனர். பேராசிரியராக எவ்வளவு புகழ்பெற்றார் என்பதற்கு ஒரு சிறு சான்று பேசும்போது சில சொற்களை விநோதமாக உச்சரிப்பார்; அவ்வாறே மாணவர்களும் உச்சரிக்க விரும்பினர். மேதைக்குரிய சில குறைகளும் ஸ்மித்திடம் இருந்தன. அவற்றில் முக்கியமானது மறதி, ஒரு நாள் தேயிலைப் பானமென, ரொட்டித் துண்டையும் வெண்ணெயையும் கலந்து சாப்பிட்டுவிட்டு, தேயிலை சுவையாக இல்லையே என வியந்தார். மாலையில் உலாவப்போகும் போது தனக்குள்ளேயே பேசிக்கொள்வார். அவ்வாறு செல்லும் போது, தோல் பதனிட வெட்டப்பட்ட பள்ளங்களில் விழுந்து எழுவதுமுண்டு. போர் வீரர்கள் தம் துப்பாக்கியைத் தோளில் சாய்த்துச் செல்வதுபோல் தன் கைத்தடியையும் தோளில் சாய்த்துச்செல்வார்.

தத்துவப் பேராசிரியாக இருந்த சமயம் 1759-ல் ஒழுக்க நெறிபற்றிய தனது சொற்பொழிவின் கைப்பிரதியை ஒரு நூலாக வெளியிட்டார். 'ஒழுக்க உணர்வின் கோட்பாடு' (Theory of Moral Sentiment) என்பது அதன் தலைப்பு. கருத்துகளுக்கும் எளிய இனிய நடைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய இந் நூலை ஆங்கிலேயர்கள் மட்டுமன்றி, இதர ஐரோப்பிய மக்களும் விரும்பிப் படித்தனர். இந் நூல் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உருவாக்கியது. அப்போது நிதியமைச்சராக இருந்த சார்லஸ் டவுன்செண்ட் (Charles Townshend) இந்நூலை விரும்பிப் படித்தார். பக்லோ பிரபுவான ஸ்டீபனுக்கு ஆடம் ஸ்மித்தே ஆசிரியராக வேண்டுமென்று டவுன்சென்ட் விரும்பினார். அக்காலத்தில் பல நாடுகள் சுற்றிக் கற்பதே பிரபுக்களின் வழக்கம். எனவே, உயர்ந்த சம்பளமும், பயணப்படியும், வாழ் நாள் முழுவதும் ஆண்டொன்றுக்கு 300 பவுன் ஓய்வுச் சம்பளமும் தருவதாக ஒப்பந்தம் செய்து ஆடம் ஸ்மித்தை ஸ்டீபனுக்கு ஆசிரியராக்கி, ஐரோப்பாவிற்கு அனுப்பிவைத்தார். பல ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிவிட்டு 1765 ஆம் ஆண்டு டிசம்பரில் இருவரும் பாரிஸ் மாநகரை அடைந்தனர். அங்கு டேவிட் ஹியூமையும் இயற்கை வாதிகளையும் சந்தித்து அளவளாவும் வாய்ப்பு ஸ்மித்துக்குக் கிடைத்தது. 1766-ல் தம் பணியை முடித்துக்கொண்டு இரு

வரும் இங்கிலாந்து திரும்பினர். பின்னர் எடின்பரோவின் சுங்க அதிகாரியாக நியமனம் பெற்ருர். தடையிலா வாணிபத்தை ஒரு குறிக்கோளாகக் கொண்டு தம் புகழ்பெற்ற நூலை எழுதிய ஸ்மித் சுங்க அதிகாரியாகப் பணியாற்றியது விந்தையே. திருமணமே செய்துகொள்ளாமல், எவ்விதக் குடும்பக்கவலையுமின்றி அன்பு மிகுந்த தன் தாயுடன் இன்பமாக வாழ்ந்தார். பொருளாதார அறிஞர்களில் டேவிட் ரிக்கார்டோ, கெயின்ஸ் பிரபு ஆகிய இருவரைத் தவிர வேறு எவரும் இவ்வளவு செல்வாக்கோடு வாழ்ந்ததில்லை.

இவர் எழுதிய மாபெரும் நூல், "நாடுகளின் செல்வ இயல்பையும் காரணங்களையும் பற்றிய ஆராய்ச்சி" (An Enguiry into the Nature and Causes of the wealth of Nations) என்னும் நீண்ட தலைப்பையுடையது. இந்நூலை 'நாடுகளின் செல்வம்' எனச் சுருக்கமாக அழைப்பது வழக்கமாகி விட்டது. இந்நூலைப் பல ஆண்டுகளாக எழுதி, செப்பனிட்டு 1776-ல் வெளியிட்டார். நூல் வெளிவந்தவுடன் அமோகமான வெற்றி கிடைத்தது. முதல் பதிப்பு ஆறு மாதங்களில் விற்பனையாகி விட்டது. ஆசிரியர் தன் வாழ்நாளில் 5 பதிப்புக்களை வெளியிட்டார். இந்நூல் பல ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலின் சுதந்திர வாதம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் போற்றப்பட்டது. ஆசிரியரின் பொருளாதாரக் கொள்கைகள், அறிஞர்களின் மனத்தைக் கொள்ளை கொண்டன. இவ்வளவு சிறப்பினைக் கொண்ட நூலை எழுவதற்கு ஆடம் ஸ்மித்துக்குப் பல அரிய வாய்ப்புகள் கிடைத்தன.

ஆடம் ஸ்மித்தின் சிந்தனையை உருவாக்கிய காரணிகளும் வாய்ப்புகளும்.

வணிகவாத காலத்தின் இறுதியில் இங்கிலாந்தில் தோன்றிய வணிகவாதிகள் எரிச்சலூட்டும் சுங்கக்கட்டுப்பாடுகளை எதிர்த்து, வாணிப சுதந்திரம் ஓரளவிற்காகிலும் வேண்டுமென வாதாடினர். அவர்களில் குறிப்பிடத்தக்கோர் வில்லியம் பெட்டி (William Petty), டட்லி, நார்த் (Dudley North), ஜோஸையா சைல்ட் (Josiah Child) கான்டிலன் (Cantillon) முதலியோர். இவர்களுடைய கருத்துகளை ஆடம் ஸ்மித் அறிந்து அவற்றைத் தம் நூலில் சேர்த்துள்ளார்.

ஃபிரான்ஸ் நாட்டிற்குச் சென்றிருந்தபோது இயற்கைவாதிகளைச் சந்தித்தார் எனக் கண்டோம். அவர்களின் தலைவர்களான டாக்டர் குவெஸ்னேவும் துர்கோவும் ஸ்மித்தின் நண்பர்களாயினர். அவர்களின் இயற்கைவிதி, தன்னலம், செல்வச் சுழல் ஆகிய கருத்துகளை ஸ்மித் போற்றினுர். ஆனல் ஸ்மித்தும் இதே போன்ற கருத்துகளைக் கொண்டிருந்தார். எனவே, இயற்கை

வாதக் கருத்துகளை எவ்வளவு தூரம் ஏற்றுக்கொண்டார் என்பது சர்ச்சைக்குரியது.

இவர் பிரான்ஸிஸ் ஹட்சிசனின் மாணவராக இருந்த வாய்ப்பு மிகப் பெருமையானதாகும். 'என்றும் மறக்கமுடியாத ஹட்சிசன்' என்று தம் மாணவர்களால் புகழப்பட்ட ஹட்சிசன் 'தொழில் சுதந்திரம்' என்ற கொள்கையை வலியுறுத்தி வந்தார். இதுவே, ஆடம் ஸ்மித்தின் நூலில் தலையிடாக்கொள்கையாக உருவெடுத்தது. தன்னலமே பொதுநலத்திற்கு ஆதாரம் என்ற கருத்தையுடையவர் ஹட்சிசன். பெரும்பாலான மக்கள் பெருமளவு நன்மையை அடையும் வழியில் அரசின் கொள்கைகள் அமைய வேண்டுமென வாதித்தவர். டேவிட் ஹியூம் அவர்கள் அக்காலத்தில் அறிஞர்களிலெல்லாம் தலைசிறந்தவர், மிகப்பெரிய தத்துவ மேதை வரலாற்று நிபுணர். அவர் எழுதிய நூல்களைப் படிக்கவும் அவருடன் நட்புக்கொள்ளவும் கிடைத்த வாய்ப்பு பெரும் பேராகும். ஹியூம் எழுதிய பல பொருளாதாரக் கட்டுரைகளில் உழைப்பின் சிறப்பும் பணத்தின் இயல்பும் விரிவாக்கப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் தம் நூலில் ஸ்மித் பயன்படுத்தியுள்ளார்.

கிளாஸ்கோவிலும் எடின்பரோவிலும் இருந்த பல சங்கங்களில் ஸ்மித் உறுப்பினராயிருந்தார். அவைகள் ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களிலும் விவாதங்களிலும் பங்குகொண்டு வணிகரின் கருத்துகளையும், பல பிரபுக்களின் எண்ணங்களையும் ஸ்மித் அறிந்துகொண்டார். அதோடு, பக்லோபிரபுவோடு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லக் கிடைத்த வாய்ப்பையும் குறிப்பிடவேண்டும். இந்த வாய்ப்பை மாணவனாக இருந்த ஸ்டீபனைக் காட்டிலும் ஆசிரியரான ஸ்மித்தே நல்லமுறையில் பயன்படுத்திக்கொண்டார் எனலாம். இப் பயணத்தில்தான் தம் நூலை எழுத ஸ்மித்திற்கு ஓய்வுநேரம் கிடைத்தது. மேலும், சென்ற நாடுகளின் பொருளாதாரச் சூழ்நிலைகளையெல்லாம் புரிந்துகொள்ளவும் முடிந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, இங்கிலாந்தில் அப்போதிருந்த பொருளாதாரச் சூழ்நிலை ஸ்மித்தின் சிந்தனையைச் செப்பனிட்டது. அக்காலத்தில் இங்கிலாந்து நாட்டுத் தொழிலதிபர்கள் புதுப்புது உற்பத்திச் சாதனங்களைக் கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்தினர். பெருமளவில் உற்பத்திக்கு அது வகைசெய்ததுடன், தொழில் புரட்சி ஏற்படுவதற்கும் ஏதுவாயிருந்தது. உழைப்பாளிகள் இடம் விட்டு இடம் பெயரவும், தம் விருப்பப்படித் தொழில் புரியவும் உரிமை வேண்டுமென்பதை எல்லாரும் அறிந்திருந்தனர். தொழிலதிபர்கள் தம் மூலதனத்தைப் பெருக்கி, தொழிலை விரிவுபடுத்திவந்தனர். இவையனைத்தும் ஸ்மித்தின் மனதைக் கவர்ந்தன. குடியேற்ற நாடுகள் தாய்நாட்டின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை

பெறத் துடித்துக்கொண்டிருந்தன. இதனையும் ஸ்மித் கண்கூடாகக் கண்டார். 1776-ல் அமெரிக்கா சுதந்திரம் பெற்றது. அதே ஆண்டில்தான் ஸ்மித்தின் நூலும் வெளிவந்தது.

நாடுகளின் செல்வம்

பொருளாதார இயலின் ஆதிநூல் எனப் புகழ்பெற்ற இது ஒரு பெரிய பேரரசிற்கே பொருந்தும் நூல். பொருளாதார மாணவர்களை மட்டுமன்றி, எல்லாருடைய சிந்தனையையும் தூண்டும் நூல். கவிதை நடையில் கதைசொல்லுவதுபோல் பேருண்மைகளை உணர்த்தும் நூல். எனினும், ஏனைய தொன்மை நூல்களைப்போன்றே இதுவும் எல்லாராலும் புகழப்படுகிறதே யன்றி, ஒருசிலரே இதனைக் கற்கின்றனர். உலகப்பொருளாதாரக் கண்ணோட்டத்தில் வரையப்பட்டு, முந்தைய பொருளாதாரக் கொள்கைகளையெல்லாம் சிதறடித்த இந்நூல் ஐந்து பிரிவுகளையும் 32 அதிகாரங்களையும் கொண்டது. முதல் இரண்டு பிரிவுகள், நாட்டின் செல்வ உற்பத்தி, பரிவர்த்தனை, பகிர்வு ஆகியவற்றின் கோட்பாடுகளைச் சித்தரிக்கிறது. இவ்விரண்டு பகுதிகளும்தான் பொருளாதாரத் தந்துவத்தின் கருவூலம் ஆகும். மூன்றாவது பகுதியில் ஐரோப்பியநாடுகளின் பொருளாதார வரலாறு தீட்டப் படுகிறது. நான்காவது பகுதியில் வணிகவாதமும் இயற்கைவாத மும் ஆராயப்படுகிறது. இப்பகுதி, மொத்த நூலில் கால்பகுதிக்கு மேற்பட்டது. இதிலுள்ள 9-ல் 8 அதிகாரங்கள் வணிகவாதத்தைக் கடுமையாகத் தாக்கப் பயன்படுகின்றன. ஒன்பதாவது அதிகா ரத்தில் இயற்கைவாத ஆய்வு இடம்பெறுகிறது. ஐந்தாவதுபகுதி அரசாங்க நிதி இயலைப் புகட்டுகிறது.

உழைப்பின் சிறப்பு

ஒரு நாட்டின் செல்வத்தின் பிறப்பிடம் வாணிபமே என்றனர் வணிகவாதிகள். இயற்கைவாதிகளோ, விவசாயம்தான் செல்வத் தின் பிறப்பிடம் என்று வாதித்தனர். ஆனால், இவ்விரு கருத்து களையும் பொய்ப்பிக்கும் முறையில், மனித உழைப்பே நாட்டுச் செல்வத்தின் ஊற்றென ஆடம்ஸ்மித் வலியுறுத்துகிறார். தமது நூலின் தொடக்க உரையிலேயே இதனைக்கூறி, உழைப்பின் சிறப் பையும் உயர்வையும் புகழ்கிறார். ஒரு நாட்டிற்கு வேண்டிய அவசியப்பொருள்களும் வசதிப்பொருள்களும் அந்நாட்டு மக்களின் உழைப்பிலிருந்தே பிறக்கின்றன என்பது அவரது அசைக்கமுடியாத நம்பிக்கை. இதனால் உழைப்பைத்தவிர பிற உற்பத்திக் காரணி களை அவர் உணரவில்லை என்றும் கூறுவதற்கில்லை. ஏனெனில், தம் பகிர்வுக் கோட்பாட்டில் நிலம், உழைப்பு, முதல் என்னும் மூன்று காரணிகளை ஆராய்கிறார். எனினும், இம் மூன்று காரணி களும் சேர்ந்துதான் உற்பத்திக்கு உதவுகின்றன என்பதை அவர்

வலியுறுத்தவில்லை. இப் பணியை முறைப்படிச் செய்தவர் ஃபிரெஞ்சுப் பொருளாதார நிபுணரான ஜே. பி. சே. என்பவர்.

உழைப்பின் பகுப்பு (Division labour)

எந்தத்தொழிலையயும் வெவ்வேறு பகுதிகளாகப் பிரித்து, எவரும் கற்று எளிதில் திறமையடையக்கூடிய சிறுசிறு வேலைக ளாக்கினால், உற்பத்தி ஆயிரம மடங்கு பெருகும் என்பது ஆடம் ஸ்மித் கண்ட உண்மை. இதனை விளக்குவதற்குத்தான் உலகப் புகழ்பெற்ற சான்றைத் தருகிறார். அவர் காலத்தில் இருந்த குண்டூசிசெய்யும் தொழிலே அச் சான்றாகும். இத் தொழிலில் பயிற்சி இல்லாத ஒருவன் ஒரு குண்டூசியாவது ஒரு நாளில் செய்யமுடியுமா என்பது ஐயமே. நிச்சயமாக அவனால் 20 குண்டூசிகள் செய்ய இயலாது. ஆனால் வேலைப் பகுப்புடைய அத்தொழிலில் ஒருவன் கம்பியை இழுக்கிறான். மற்றொருவன் நீட்டுகிறான். மூன்றாமவன் வெட்டுகிறான். நான்காமவன் கூருக்குகிறான். ஐந்தாவது நபர் தலை யைப் பற்றவைக்க இடம் செய்கிறான்; மற்றொருவன் தலையைப் பற்றவைக்கிறான்; இன்னும் தலைசெய்ய ஓர் ஆள்; மெருகு கொடுக்க ஒருவன்; தாளில் குத்தி விற்பனைக்குத் தயார்செய்வது பிரிதொருவன் வேலை. இப்படித் தொழிலைப் பிரித்து, ஒவ்வொரு வேலையையும் ஒருவனே செய்யும்படி செய்யாவிட்டால், ஒருவன் ஒருநாள் முழுவதும் உழைத்தாலும் 10 குண்டூசிகள்கூடச் செய்ய இயலாது. அப்படியே முடிந்தாலும் அக் குண்டூசிகள் வெண்மை, அழகு, கூர்மையின்றி ஒன்றுக்கொன்று வேறுபட்டதாயிருக்கும். ஆனால் மேற்கூறிய உழைப்புப் பகுப்பை மேற்கொணட ஆலையில் 10 அல்லது 15 பேர் சுமார் 12 ராத்தல் குண்டூசிகள் செய்கின் றனர்.

மேற்கூறிய சான்றிலிருந்து வேலைப்பகுப்பினால் உற்பத்தி அதிகமாகிறது என்பது தெளிவு. வேலைப்பகுப்பில் மூன்றுவித நன்மைகள் உள்ளன. முதலாவது, ஒவ்வொரு தொழிலாளியின் கைத்திறனும் அதிகமாகிறது. இரண்டாவது ஒரு வேலைப்பகுதியி லிருந்து பிரிதொரு பகுதிக்கு மாறுவதால் ஏற்படும் நேரம் மிச்ச மாகிறது. மூன்றாவது, ஒரே வேலையைச் செய்வதால், அதைச் செய்வதற்கேற்ற எந்திரத்தைக் கண்டுபிடிக்கத் தூண்டுகிறது

மேற்கூறிய வேலைப் பகுப்பு முறை புகுத்தப்படவேண்டுமாயின், அதற்கு இரண்டு நிபந்தனைகள் அவசியம். வேலைப்பகுப்பால் அதிக அளவுப் பண்டங்கள் உற்பத்தியாகின்றன. ஆனால், அப் பண்டங்களை வாங்க ஆள்கள் தேவை. அல்லது அப்பண்டத்திற்கு அங்காடி தேவை. அதுவும் பெரிய அங்காடியாக இருக்க வேண்டும். அங்காடியின் விரிவைப் போக்குவரத்து வசதிகளும், பரிவர்த்தனை செய்யக்கூடிய வாய்ப்பும் நிருணயிக்கின்றன. அங்காடி

யின் விரிவிற்கேற்ப வேலைப் பாகுபாடும் அதிகமாயிருக்கும். இரண்டாவதாக, வேலைப் பகுப்பை ஏற்படுத்தவேண்டுமாயின் உற்பத்தியாகுமிடம் பெரியதாயிருக்கவேண்டும். இதற்கு மூலதனம் தேவை. மூலதனமின்றி பெரிய அளவில் நிறுவனங்களை அமைத்து உற்பத்தி செய்ய இயலாது.

ஆக்க உழைப்பு, ஆக்கமில்லா உழைப்பு (Productive and unproductive labour)

ஆடம்ஸ்மித் அவர்கள் உழைப்பை ஆக்கம் தரும் உழைப்பு என்றும் ஆக்கம் தரா உழைப்பு என்றும் பாகுபடுத்தியுள்ளார். இப் பாகுபாடு இயற்கைவாதிகளின் தொடர்பால் ஏற்பட்ட தொற்று நோய். இயற்கைவாதிகள் பயிர்த்தொழில் செய்வோரின் உழைப்பே ஆக்கம் தரும் உழைப்பு என்றனர். ஆனால், ஆடம் ஸ்மித்தின் பாகுபாடு வேறுவிதமானது. கண்ணுக்குப் புலனாகக் கூடியதாயும் நிலையான மதிப்பையுடையதாயுமுள்ள பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படும் உழைப்பே ஆக்கம் தரும் உழைப்பு. ஏனைய உழைப்பனைத்தும் ஆக்கமில்லாதவை. தச்சன் நாற்காலி செய்கின்றான். அந் நாற்காலி கண்ணுக்குப் புலனாகிறது; விலை மதிப்பும் உடையது. எனவே, அவன் உழைப்பு ஆக்கம் தரும் உழைப்பாகும். ஆனால், வீட்டில் வேலை செய்யும் பணியாட்களின் உழைப்பால் பண்டங்கள் உற்பத்தி ஆவதில்லை. எனவே, அவர்களின் உழைப்பு ஆக்கமற்றது. உழைப்பு உருவமாக மாற வேண்டும்; இல்லையேல் அது பயன்தரா உழைப்பாகும். இதற்கு ஸ்மித் தரும் சான்று நயமானதெனினும், பொருளாதாரத் தத்துவத்திற்குப் புறம்பானது. 'ஒருவன் ஆயிரம் கைத்தொழிலாளரை அமர்த்தி வேலை வாங்கினால், பெரிய பணக்காரனாகிறான். அவனே ஆயிரம் பணியாட்களை அமர்த்திக்கொண்டால் வறியவனாகின்.' இவ்வாறு கூறிவிட்டு, சமூகத்தில் யார் யார் ஆக்கமில்லா உழைப்பாளர் என்று வரையறை செய்கிறார். 'மிகவும் மதிப்புக்குரியவர்கள் உழைப்பும், இழிவான தொழில் புரியும் பணியாளர்களின் உழைப்பைப் போன்று ஆக்கமற்றதாகும். ஏனெனில், அவர்கள் உழைப்பு, விற்கப்படும் பண்டமாக உருவெடுப்பதில்லை. மன்னர், நீதிபதிகள், படைவீரர், நாவாய்வீரர் யாவரும் ஆக்கமில்லா உழைப்பாளிகளே. இந்தக் குழுவில் பாதிரிமார்களும், கூத்தாடிகளும், வக்கீல்களும், நாடகக் கலைஞரும், இலக்கிய மேதைகளும், டப்பாப் பாடகரும், சில உயர்ந்த நிலையினரும், சில தாழ்ந்த கோமாளித் தொழிலாளரும் ஒன்றாக நிற்பது ஒரு வியப்பே' இப் பாகுபாட்டை நவீனப் பொருளாதாரம் ஏற்றுக்கொள்வதில்லை.

மூலதனத்தின் முக்கியத்துவம்

ஒரு நாட்டின் செல்வத்தை உருவாக்குவதற்கு மூலதனமே

முக்கியம். அது ஒரு சுனை போன்றது என்கிறார் ஸ்மித். பொருளாக்கத்திற்கு மூலதனம்தான் முதலில் தேவைப்படுகிறது. வேலைக்கமர்த்தப்படும் உழைப்பாளிகளின் எண்ணிக்கையும் மூலதனத்தால்தான் நிருணயிக்கப்படுகிறது. மூலதனத்தின் அளவிற்கேற்பத்தான் ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி அமையும். இவ்வுண்மையை ஜே. எஸ். மில் (J. S. Mill) அவர்களும் வலியுறுத்துகின்றார். இம் மூலதனம் உருவாக சேமிப்பு அவசியம். மனிதனின் தன்னல உணர்வே சேமிப்பைத் தூண்டுகிறது. ஒவ்வொரு மனிதனும் தன் எதிர்காலத்திற்கென்று சேமிப்பதன் மூலமே மூலதனம் பெருகுகிறது. தன்னலமே பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதாரம்; தன்னலமே பொது நலத்தைப் பேணுகிறது என்ற பொதுவான கருத்தை ஸ்மித் தனது கோட்பாடுகளிலெல்லாம் வலியுறுத்துகிறார். எனவே, சிக்கனமாக வாழும் ஒருவன் பொது நன்மைக்குப் பாடுபடும் பரோபகாரி; ஊதாரித்தனமாக வாழும் ஒருவன் பொது மக்களின் விரோதி ஆவான் என்கிறார். தன்னலமே சமுதாயத்தின் உயிர் மூச்சாக விளங்குகிறது.

உழைப்பே செல்வத்தின் தாய் என்று ஓரிடத்தில் விளக்கி விட்டு, இப்போது மூலதனமே செல்வ வளர்ச்சிக்கு ஆதாரம் என்று கூறுவது முன்னுக்குப் பின் முரணானது. இம் முரண்பாட்டை நீக்கும் வழியில் எல்லா உற்பத்திக் காரணிகளுமே உற்பத்திக்கு இன்றியமையாதவை என நவீனப் பொருளாதாரம் வலியுறுத்துகிறது.

முதலீடு

அடுத்து, மூலதனத்தை எவ் வகையில் முதலீடு செய்வது என்பதை ஸ்மித் விளக்குகிறார். மூலதனத்தை எந்தெந்த முறைகளில் பயன்படுத்தினால் சமுதாயத்திற்குப் பயனுள்ளதாயிருக்கும் என்பதே பிரச்சினை. மூலதனத்தை எவ்வாறு பயன்படுத்தினால், அது பாதுகாப்பாக இருக்கும்? எத் துறையில் முதலீடு செய்தால் பயனுள்ள உழைப்பாளிகளுக்கு வேலை வாய்ப்பு அதிகமாகக் கிடைக்கும்? இவ்விரு வினாக்களின் அடிப்படையில் விவசாயமே எல்லாவற்றிற்கும் மேலானது என்று கருதுகிறார் ஸ்மித் இதற்கு ஸ்மித் கொடுக்கும் விளக்கம் இயற்கைவாதிகளின் கருத்தை நினைவுபடுத்துகிறது அதாவது, வேளாண்மையில் இயற்கையே பெருமளவு ஒத்துழைக்கிறது. அடுத்து, கைத்தொழில்களிலும், பின்னர் உள்நாட்டு வணிகத்திலும் இறுதியாகப் பிறநாட்டு வணிகத்திலும் முதலீடு செய்வது சிறந்தது. வேலை வாய்ப்புக் கிடைப்பதை எண்ணிப் பார்த்தால் இம் முறையே சிறந்ததெனப்படும். இது, நவீனக் கருத்துக்கு முற்றிலும் ஒவ்வாதது என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டங்களின் மதிப்பு

பண்டங்களின் மதிப்பை விளக்குவதற்கு ஒரு பண்டத்தின் பயன் மதிப்பிற்கும் (value-in-use) பரிவர்த்தனை மதிப்பிற்கும் (value in exchange) உள்ள வேறுபாட்டைக் கூறுகிறார். ஒரு பண்டம், அதனைப் பயன்படுத்துவோருக்கு அளிக்கும் திருப்தியை பயன் மதிப்பு என்கிறார். அப் பண்டத்தைக் கொண்டு வேறு பண்டம் எவ்வளவு பெற முடியுமோ அதனைப் பரிவர்த்தனை மதிப்பு எனக் கூறுகிறார்.

இவ்வாறு மதிப்பைப் பயன் மதிப்பு என்றும் பரிவர்த்தனை மதிப்பு என்றும் பாகுபடுத்தியதால் சிக்கல் ஏற்படுவதை ஸ்மித் உணர்ந்தார். தாகத்தால் தவிப்பவனுக்கு ஒரு குவளைத் தண்ணீர் உயிர்போன்ற பயன் மதிப்புடையது. ஆனால் அதற்கு விலையோ கிடையாது. அதைக்கொண்டு வேறு ஏதாவது பொருளை வாங்க முடியுமா? முடியாது. ஆனால் ஒரு வைரக் கல்லை எடுத்துக்கொள்வோம். அது விரலிலோ, காதிலோ இல்லா விட்டால் உயிரா போய்விடும்? இல்லை. ஆனால் அதற்கு உயர்ந்த விலை. அல்லது அதைக் கொடுத்தால், யாருமே அதற் கீடான வேறு பொருளைக் கொடுக்க முன்வருவர். என்ன இது! மிக்க பயன்மதிப்புடைய குடிநீருக்கு பரிவர்த்தனை மதிப்பு கிடை யாது; பயன் மதிப்பே இல்லாத வைரக் கல்லுக்கு எவ்வளவு பரிவர்த்தனை மதிப்பு உண்டு என வியந்தார் ஆடம் ஸ்மித். இதையே ஸ்மித்தின் 'மதிப்பு முரண்பாடு' (Paradox of value) என்று கூறுகிறோம்.

இம்முரண்பாட்டின் காரணத்தால் பயன்பாடு என்ற கருத் தையே அவர் உதறித் தள்ளிவிட்டார்.

மதிப்பு நிருணயம்—முரண்பாடான கோட்பாடு உழைப்பின் மதிப்புக் கோட்பாடு (Labour theory of value)

பரிவர்த்தனை மதிப்பை எவ்வாறு அளவிடுவது? இக்கேள் விக்கு நியாயவாதத்தின் அடிப்படையில் ஸ்மித் விடைகாண முற்படுகிறார். அவரது நூலிலுள்ள புதிரான பகுதிகளில் இதுவும் ஒன்று. நிலத்தையும் மூலதனத்தையும் மனிதன் தன் உடைமை களாக்காத ஆரம்பகால சமுதாயத்தில் உழைப்பே மதிப்பை அள விடும் அளவுகோல். பிற சாதனங்கள் ஒன்றுமில்லாமல் மனிதன் வேட்டையாடி வயிறுவளர்த்த காலத்தில் அவனது உழைப்பே பரிவர்த்தனை மதிப்பை நிருணயித்தது. உழைப்பே செல்வத்தின் தாயெனக் கருதிய ஸ்மித்திற்கு அதுவே நிருணயிப்பதாயும் அதன் அளவு கோலாயும் இருந்தது. சான்றாக ஒருவனுக்கு ஒரு மானைப் பிடிக்க 8 மணி நேரம் ஆகிறது என்று வைத்துக்கொள்வோம். அதே ஒரு மணிநேரத்தில் அவன் 16 முயல்களைப் பிடிக்க முடியு

மென்றால், ஒரு மானுக்கு 16 முயல்களைக் கொடுக்கவும் வாங்கவும் சம்மதிப்பான். இவ்வாறாக, ஒரு பொருளின் மதிப்பு அப் பொருளை அடையச் செலவு செய்யும் நேரத்தைப் பொருத்திருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் ஒரு பொருளை வாங்கும்போது, அதனை வாங்காமல், தானே உற்பத்தி செய்திருந்தால் எத்தனை மணி நேரம் உழைத்திருக்கவேண்டும் எனக் கணக்கிட்டு, அதன்படி மதிப்புப் போடுகிறான். பொன்னையும் வெள்ளியையும் கொண்டு பொருள்களின் மதிப்பை அளவிடுதல் வசதியாக இருக்கலாம். ஆனால் அவற்றின் மதிப்பு மாறிக்கொண்டேயிருக்குமாதலால், பண்டங்களின் மதிப்பு நியாயமற்றதாகிவிடும். எல்லா இடங்களுக்கும் நிலையான உழைப்பே மதிப்பிடும் சிறந்த சாதனம் என்றார் ஆடம் ஸ்மித்.

எந்த மனிதனுக்கும் தனக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் செய்யும் திறமையோ, பழக்கமோ இருக்க முடியாது எனவே, தன் திறமையை வைத்துப் பண்டங்களின் மதிப்பை அளவிடுதல் என்பது இயலாத காரியம். மேலும் 'ஒரு மணி நேர உழைப்பு' என்பதை ஒரு அளவுகோலாகக் கொள்ளல் வேண்டும். ஆனால் ஒரு மணி நேரத்தில் திறமை மிக்க தொழிலாளி ஒருவன் செய்யும் வேலையும் திறமையற்றவன் செய்யும் வேலையும் எப்படி ஒன்றாகிவிடும்? மேலும், திறமைமிக்க ஒருவன் மகிழ்ச்சியாக இருக்கும்போது செய்யும் வேலையும், சோம்பலாக இருக்கும்போது செய்யும் வேலையும் எவ்வாறு ஒன்றாகமுடியும்? இவ்வாறு, ஒரு மணிநேர உழைப்பு என்னும் அளவுகோல் பொதுவானதாக இருக்கமுடியாது என்பதை ஸ்மித் உணர்ந்தார். ஆனால் அக் குறையை நீக்க வழி கண்டவர். இக் குறையை ஓரளவிற்கு நீக்க முற்பட்டவர் கார்ல் மார்க் (Karl Marx).

(ii) உற்பத்திச் செலவுக் கோட்பாடு (Theory of cost of produtcion)

தற்காலத்தில் உழைப்பைக் கொண்டு எப் பொருளையும் உற்பத்தி செய்வதில்லை. வெறும் கை முழம் போடாது. நிலம், கருவிகள், சாதனங்கள் விதவிதமாகப் பயன்படுகின்றன. அக்காலத்தில் மனிதனுக்கு வேண்டிய அளவிற்குமேல் நிலம் இருந்தது. ஆனால் தற்காலத்தில் அது ஒருசிலரிடமே உள்ளது. எனவே, நிலக்கிழார் உற்பத்தியில் ஒரு பகுதியை குத்தகை என்ற பெயரில் எடுத்துக்கொள்கிறார். அதேபோல் முதலாளிகளும் வட்டி என்ற பெயரில் பிரிதொரு பகுதிக்கு உரிமையுள்ளவராகின்றனர். எனவே, உழைப்பிற்குக் கூலி, நிலத்திற்குக் குத்தகை, மூலதனத்திற்கு வட்டி என்று செலவு ஏற்படுகிறது. இம் மூன்றும் சேர்ந்தே உற்பத்திச் செலவாகும். இச் செலவே பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பை நிருணயிக்கிறது என்கிறார்.

இவ்விரண்டு கோட்பாடுகளில் முந்தியது சோஷியலிஸ்டுகளின் (Socialists) குறிக்கோளுக்கு ஏற்றதாகிவிட்டது. ஆனால் பிந்தியதையே பெரும்பான்மையான பொருளாதார அறிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

நேர்மை விலை, அங்காடி விலை (Natural and Market Price)

நடைமுறையில் விலை எவ்வாறு நிர்ணயமாகிறது என்பதையும் ஸ்மித் விளக்க முற்படுகிறார். ஒவ்வொரு சமுதாயத்திலும் சாதாரண அல்லது சராசரிக் கூலி, இலாபம் அல்லது வட்டி, குத்தகை விகிதம் என இருக்கும். இப்படியுள்ள சாதாரண விகிதத்தை இயல்பான விகிதமென ஸ்மித் கூறுகிறார். இதற்குச் சமமாகவே (இயல்பான கூலி+வட்டி+குத்தகை) இயல்பான விலை இருக்கும். வேறுவிதமாகக் கூறுவதாயின், நாம் மேலே கூறியுள்ள உற்பத்திச் செலவு தான் நேர்மை விலையை நிருணயிக்கிறது. அங்காடிவிலை அளிப்புச் சக்தியாலும்தேவைச் சக்தியாலும் நிருணயிக்கப்படுகிறது. அளிப்பு, தேவையைவிட அதிகமாக இருந்தால் அங்காடிவிலை இயல்பான விலையைக் காட்டிலும் குறைவாகவும், குறைவாக இருந்தால் உயர்வாகவும் இருக்கும். எனினும், இயல்பான விலையை ஒத்தே அங்காடி விலை ஏறும் அல்லது இறங்கும்.

சான்றாக, சர்க்கரைமீது மக்களுக்கு முன்பைவிட அதிக நாட்டம் எனக்கொள்வோம். சர்க்கரை விலை உடனடியாக ஏறும். ஏனெனில், அதிகரித்துள்ளதேவைக்கேற்பஉடனடியாகச்சர்க்கரை உற்பத்தியைப் பெருக்கமுடியாது. சர்க்கரை உற்பத்தி செய்வோருக்கும் அதிக இலாபம் கிட்டும். இந்த விலையை அங்காடிவிலை எனக்கொள்ளலாம். ஆனால் நாளடைவில் கரும்பு சாகுபடி அதிகரித்து, சர்க்கரை உற்பத்தியும் பெருகினால் அதன் விலைஉற்பத்திச் செலவிற்குச் சமமாகலாம். இது இயல்பான விலை எனப்படும்.

இயல்பான விலையையும் அங்காடி விலையையும் முழுமையாகப் பின்னால்வந்த ஆல்பிரட் மார்ஷல் (Alfred Marshall) விளக்கியுள்ளார். கால அம்சத்தைப் (time element) பயன்படுத்தி இவ்விளக்கத்தைச் செம்மைப்படுத்தினார்.

வருமானப் பகிர்வு (Diotriubution)

இயல்பான விலை உற்பத்திச்செலவால் நிருணயிக்கப்படுகிறதெனக் கண்டோம். அவ்வாறாயின், உற்பத்திச் செலவில் அடங்கும் கூலி, வாரம் (குத்தகை) இலாபம் ஆகியவை நிருணயமாவதெப்படி? இதற்குரிய விளக்கத்தை ஸ்மித் பின்வருமாறு கொடுக்கிறார்.

கூலி

உழைப்பே பரிவர்த்தனை மதிப்பை அளவிடும் ஆரம்பகாலச் சமுதாயத்தில், உழைப்பினால் தோன்றிய உற்பத்தி முழுவதும் தொழிலாளிக்கே உரிமையானது' என்கிறார் ஸ்மித். இவ்வாறு கூறுவது பின்னால் தோன்றிய (சோஷியலிக்) கோட்பாட்டிற்கு ஆதாரம்போல் தோன்றுகிறது. நிலமும் மூலதனமும் மக்களின் உடைமைகளாகிய தற்காலத்திற்கு இவ் விளக்கம் ஏற்றதன்று. எனவே, கூலிவீதம் முதலாளி, தொழிலாளிகளின் பேரம்பேசும் சக்தியைப் பொருத்து அமையும். தொழிலாளர்கள் கூடுமான வரை அதிகக் கூலிவேண்டுமென விரும்புவர். ஆனால் முதலாளி களோ முடிந்தவரை குறைந்த கூலியையே கொடுக்க முன்வருவர். எனவே, இவர்களுக்குள் ஏற்படும் ஒப்புந்தப்படி கூலி அமையும். ஆனால் அந்த ஒப்பந்தத்தில் முதலாளிகளே சாதகமான நிலையில் இருப்பர். ஏனெனில் அவர்கள் ஒரு சிலரே. எனவே, அவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் தீர்மானம் செய்வது எளிது. தொழிலாளிகளோ பலர். அவர்களால் எளிதில் ஒன்று சேரவும் முடியாது; அப்படியே சேர்த்தாலும் பயனில்லை. இருந்தபோதி லும் தொழிலாளிகளின் பிழைப்பிற்கு வேண்டிய அளவு கூலி நிருணயமாகும். இதற்கும் குறைவான கூலியைத் தொழிலாளர்ஏற்க மாட்டார்கள். இவ் விளக்கத்திலிருந்து பிழைப்பு மட்டக்கூலிக் கோட் பாடு (Suhsitince theory of wages) புலனாகிறது.

அடுத்து, தொழிலாளர்களுக்குச் சாதகமான நிலை இருந்தால் கூலி எவ்வாறு நிருணமாகும் என்ற விளக்கத்தில், கூலிநிதிக் கோட் பாட்டிற்கு (Wage fund theory) வித்திடுகிறார். கூலிக்கென ஒதுக்கப்படும் நிதியைக் காட்டிலும் உழைப்பாளிகளுக்கேற்படும் தேவை அதிகமாயிருக்க முடியாது. எனவே, உழைப்போரின் தேவை கூலி நிதியால் நிருணமாகிறது. கூலிநிதி ஒரு நாட்டின் செல்வ வளர்ச்சியைப் பொருத்து அமையும். எனவே, செல்வம் வளர்ந்துகொண்டேயிருக்கும் காட்டில்தான் கூலி உயர்வாக இருக்கும் என்ற முடிவிற்கு வருகிறார்.

இவ்வாறு கூலியைப்பற்றிப் பேசும்போது பின்னால் தோன்றிய பல கோட்பாடுகளுக்கான ஆதாரத்தை ஸ்மித் தருகிறார்.

வேலைக்கேற்பக் கூலி மாறுபடுவதற்கான விளக்கம் போற்றத் தக்கது. பிடித்தமான வேலை பிடித்தமற்ற வேலை, அவ்வேலையை எளிதாகக் கற்றுக்கொள்ள முடியுமா என்பது, அது நிரந்தரமான வேலையா அல்லது தாற்காலிகமானதா, பொறுப்பான வேலையா அல்லது பொறுப்பற்றதா, வேலையில் வெற்றிபெற வாய்ப்பு உண்டா இல்லையா என்பவற்றைச் சார்ந்தே கூலி மாறுபடும் என்கிறார்.

இலாபம் (வட்டி)

கூலியைப் போன்றே இலாபமும் ஒரு நாட்டின் செல்வ அதிகரிப்பைப் பொருத்தது என்கிறார். ஆனால் கூலியும் இலாபமும் நேர்மாறான திசையில் செல்லும். மூலதனம் மிகுந்தால் இலாபம் குறைந்துவிடும். இந்த இலாப விகிதத்தை நடப்பிலுள்ள வட்டிவிகிதம் புலப்படுத்தும். வட்டிவிகிதம் உயர்ந்தால் இலாப வாய்ப்பு அதிகம் என்று பொருள். பொதுவாக, இலாபம் அதிகரித்தால் கூலி அதிகரிக்கும் என்று கூறி, இதற்கு விதிவிலக்கும் தருகிறார். புதிய குடியேற்ற நாடுகளில் இலாபமும் கூலியும் ஒரே சமயத்தில் அதிகமாயிருக்கலாம்.

குத்தகை (Rent)

குத்தகைதாரர் நிலக்கிழாருக்குக் கொடுக்கும் உற்பத்திப்பங்கே குத்தகை. பெரும்பாலும், நிலக்கிழார் சர்வாதீன நிலையிடிருப்பதால் உற்பத்தியில் பெரும் பகுதியைக் குத்தகையாக எடுத்துக்கொள்கிறார். இது சர்வாதீன விலையைப் போன்றது என்கிறார். நில அபிவிருத்தி செய்த நிலக்கிழார் அதிகக் குத்தகை கேட்பது நியாயம். ஆனால் அபிவிருத்தி செய்யாதவர்கள் கேட்கும்போது, வேறு வழியின்றி அதிகக் குத்தகை கொடுக்கவேண்டியுள்ளது என்கிறார். இக் குத்தகை நிலத்தின் வளத்திற்கும் இட அமைப்பிற்கும் ஏற்ப மாறும் என்று ஸ்மித் கூறுவது நவீனக்கோட்பாட்டை நினைவுபடுத்துகிறது.

இயற்கைப் பண்பும் நன்மைக் குணமும் (Naturalism and optimism)

மனித உள்ளத்தில் வேரூன்றிக் கிடக்கும் இயற்கைப் பண்புகள் தன்னலமும், பொருள் திரட்டும் ஆசையுமாக வெளிப்படுகின்றன என்பது ஆடம் ஸ்மித் கண்ட உண்மை. இவ்விரண்டு பண்புகளும் மக்களைப் பொருள் உற்பத்தியில் தீவிரமாக முனைய வைக்கின்றன. உற்பத்திப் பெருகும் வழிகளாகிய வேலைப் பகுப்பு, பண்டமாற்று, பணம் என்னும் சாதனம், மூலதனப் பெருக்க முதலியன இவ்விரண்டு இயற்கைப் பண்புகளின் விளைவுகளே. இத் தன்னல அடிப்படையில் எல்லாம் நடைபெற்றால், சமூகம் முன்னேறும், நன்மை அடையும் என்பதைத் தம் நூல் முழுவதும் புலப்படுத்துகிறார். தன்னலத்தையும் பொது நலத்தையும் கண்ணுக்குப் புலனாகாத (தெய்வீக) கரம் (Invisible hand) ஒன்று பிணைப்பதையும் வலியுறுத்துகிறார். இதனை விரிவாக இங்கு ஆராய்வோம்.

எவையெல்லாம் இயற்கையானவையோ, அவையெல்லாம் நியாயமானவை, நன்மையானவை என்பதை 18ஆம் நூற்றாண்டின் தத்துவம். ஆடம்ஸ்மித் இத் தத்துவத்தில் அசைக்க முடியாத

நம்பிக்கை உடையவர். பொருளாதார நடவடிக்கைகளும் சாதனங்களும் இயல்பானவை என்பதைத் தம் நூல் முழுதுவம் நிரூபிக்கிறார். எனவே, அவையனைத்தும் நன்மையானவை என்ற முடிவிற்கும் வருகிறார்.

முதலாவதாக, வேலைப் பகுப்பை எடுத்துக்கொள்வோம். இது மனிதனின் அறிவுக் கூர்மையால் ஏற்பட்டதன்று. மாறாக, தன்னிடமுள்ள ஒன்றைக்கொடுத்துப் பிறரிடமுள்ள மற்றொன்றைப் பெறுவதில் மக்களுக்குத் தனி ஆர்வம் இயற்கையாகவே உண்டு என்பதும், இந்த ஆர்வம், ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு பொருள் உற்பத்தியில் ஈடுபடுத்துகிறது என்பதும், ஸ்மித்தின் அசைக்க முடியாத நம்பிக்கை. ஒருவருக்கொருவர் கூட்டுறவு முறையில் உதவி செய்து கொள்வதே இதன் நோக்கம். பயன் கருதாமல் யாரும் உதவுவதில்லை. பிறருக்கு உதவ வேண்டுமென்பதற்காக உழவன் பயிர் செய்வதில்லை; நெசவாளி துணி நெய்வதில்லை. சொந்த நலனை முன்னிட்டே அவர்கள் தத்தம் தொழில்களைச் செய்கின்றனர். இதுவே வேலைப்பகுப்பின் அடிப்படை; பண்டமாற்றுக்கும் காரணம்.

அடுத்து பணத்தின் தோற்றத்தைக் கவனிப்போம் பண்டமாற்றில் ஏற்பட்ட சிக்கல்களையெல்லாம் உணர்ந்த ஒவ்வொரு விவேகியும், இச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு என்ன வழி என்பதைச் சிந்தித்தான். யாருமே வேண்டாமென்று சொல்லமுடியாத ஒரு பண்டத்தைப் பண்டமாற்றிற்குச் சாதனமாக்கினால் நன்று என்பது தோன்றியது. இச் சிந்தனை ஏற்பட்டதற்குக் காரணமே தன்னலம்தான். பண்டமாற்றுச் சிக்கலிலிருந்து தப்பிப்பது எப்படி என்ற உள்ளுணர்வே பணம் தோன்றக் காரணமாயிருந்தது. பணம் தோன்றிய பின்னரே அரசு தலையிட்டு அதன் உருவம், எடை, கலவை முதலியவற்றைத் தீர்மானித்தது.

மூன்றாவதாக மூலதனத்தின் வளர்ச்சியைப் பார்ப்போம். மூலதனம் அதிகரிக்க அதிகரிக்க வேலைக்கமர்த்தப்படும் தொழிலாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எந்திரங்கள், சாதனங்கள் ஆகியவையும் அதிகரிக்கும்; வேலைப் பகுப்பும் விரிவடையும் என்பதை முன்னரே பார்த்தோம். மூலதனம் பெருக, சேமிப்பு அவசியம் என்பதும் நமக்குத் தெரியும். சேமிப்பு எவ்வாறு தூண்டப்படுகிறது ? ஒவ்வொரு மனிதனும் தன் வருவாயில் ஒரு பகுதியை மிச்சம்பண்ணி, தன் நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறான். இவ் விருப்பம் இயல்பானது. எனவே தான், பிறந்த நாளிலிருந்து சாகும் வரை இவ் விருப்பம் அவனைவிட்டு மறைவதில்லை. இவ்வாறு ஆயிரக்கணக்கானவர் விரும்பிச் சேமிக்கும்போது மூலதனம் இயல்பாகவே

பெருகுகிறது என்கிறார் ஸ்மித். எனவே, மூலதனப் பெருக்கமும் மனித இயல்பின் விளைவே.

நான்காவது, அளிப்பு-தேவைக் கோட்பாட்டிலும் இக் கருத்தை ஸ்மித் வலியுறுத்துகிறார். வேலைப் பகுப்பினை ஆதாரமாகக் கொண்ட சமுதாயத்தில் எவ்வாறு பொருள்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன? எவ்வாறு உற்பத்திப் பொருள்கள் தேவைக்கேற்பக் கூடுகின்றன அல்லது குறைகின்றன? நாம் முன்னரே, பார்த்தது போல் தேவை நிலைமைக்கேற்ப, அளிப்பு இயல்பாகவே சரிப்படுத்தப்படுகிறது. தேவையைவிட அளிப்பு அதிகமானால் அங்காடிவிலை இயல்பான விலையைக் காட்டிலும் இறங்கி விடுகிறது. அளிப்பு தேவையைக் காட்டிலும் குறைந்தால் அங்காடி விலை ஏறுகிறது. தேவையும் அளிப்பும் ஒன்றுக்கொன்று சமமாக இருந்தால் மட்டுமே அங்காடிவிலை ஏறக்குறைய இயல்பு விலைக்குச் சமமாகிறது. தேவைக்கேற்ப அளிப்பு அமைவதும் தன்னலத்தை ஆதாரமாகக்கொண்டது. தேவையைக் காட்டிலும் அளிப்பு அதிகமாகி அங்காடி விலை தாழ்ந்தால், உற்பத்தியாளர் பாதிக்கப்படுகிறார். எனவே, உற்பத்தியைக் குறைக்கிறார் அல்லது உற்பத்திக் காரணிகளின் விலையைக் குறைக்கிறார். கூலி குறையலாம் அல்லது குத்தகை குறையலாம். கூலி குறைந்தால் அத் தொழிலில் வேலை செய்வோரில் சிலர் வேறு தொழில்களுக்குச் செல்வர்; குத்தகைக் குறைந்தால் அப்பொருளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்ட நிலம் வேறு பொருள்களுக்காகப் பயன் படுத்தப்படுப்படும். இவ்வாறாக, அப்பொருளின் உற்பத்தி அளவு குறைந்து தேவைக்கு ஈடாகிறது.

இவ்வாறு, தேவைக்கேற்பச் சரியாகும் அளிப்புக் கோட்பாட்டை வேறு இரண்டு விதங்களிலும் பயன்படுத்துகிறார் ஸ்மித்.

ஒன்று, தொழிலாளிகளின் எண்ணிக்கை அவர்களுக்குள்ள தேவையைப் பொருத்து அமைகிறது என்பது. தேவையைக் காட்டிலும் தொழிலாளர் அதிகமாயிருந்தால் கூலி குறையும். கூலி குறைந்தால், உணவின்றிப் பலர் மடிவர். உழைப்பாளர் எண்ணிக்கைக் குறையும் என்று கூறுகிறார். இங்கு பிறபொருள்களைப் போலவே மக்கள் தொகையும் தேவைக்கேற்பக் குறையும் அல்லது கூடும் என்று ஸ்மித் கூறுவது, பின்னால் தோன்றிய மால்தஸின் கோட்பாட்டிற்கு வழி செய்கிறதெனலாம்.

இரண்டாவது, பணத்தின் அளிப்பும் தேவையும் எவ்வாறு இயல்பாகவே சமமாகிறது என்பது. இங்குதான் வணிகவாதிகளின் கோட்பாட்டைத் தகர்த்தெறிகிறார். பொன்னும் வெள்ளியும் செல்வமல்ல; அவை பரிவர்த்தனைச் சாதனமே என்பதைக் காண்பித்துவிட்டு, பிறபண்டங்களைப் போலவே பொன்னும் வெள்ளியும்,

அவைகளுக்குள்ள தேவைக்கேற்பக் குவியும் அல்லது குறையும் என்கிறார். தேவைக்கு மேல் பொன் குவிந்துவிட்டால் விலைவாசிகள் ஏறும். அதனால் அந்த நாட்டிலிருந்து எவரும் பொருள்களை வாங்கமாட்டார்கள். மாறாக, அந்த நாட்டிற்கு அயல் நாட்டுப் பொருள்கள் இறக்குமதியாகி, பொன் வெளியேறிவிடும் என்கிறார். இதற்கு ஸ்பெயின் நாட்டுச் சோகக்கதையை சுவைபடக் கூறுகிறார்.

பல்வேறு துறைகளில் முதலீடு எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விளக்கும்போதும் தம், நம்பிக்கையை ஸ்மித் கைவிடவில்லை. ஒவ்வொரு முதலாளியும் எந்தத் தொழிலில் முதலீடு செய்தால் இலாபம் அதிகமாயிருக்குமோ அந்தத் தொழிலில்தான் முதலீடு செய்வான். அவனது நோக்கம் பொருளீட்டும் தன்னலத்தை மையமாகக்கொண்டது. தேவை அதிகமாயுள்ள பொருள்களை உற்பத்தி செய்தால்தான் இலாபம் பெருகும். எனவே முதலாளிகளின் தன்னலநோக்கம் பொதுமக்களின் நலனைப்பேண உதவுகிறது என்று கூறுகிறார் ஸ்மித்.

ஆடம் ஸ்மித் நூல் வெளியாகி 200 ஆண்டுகள் நிறைவுறப் போகின்றன. எனினும், தன்னலமே பொருளாதார நடவடிக்கைகளுக்கு இன்றும் ஆதாரமாக உள்ளது. ஆனால், இயற்கைப் பண்புடைய அனைத்துமே நன்மை பயக்கக்கூடியதென ஸ்மித் கருதினார். நாம் அவ்வாறு நினைப்பதில்லை. ஏதேனும் ஒன்று இயற்கையாகவே தோன்றியுள்ளது என்பதைக் காண்பிப்பது ஓர் இயல். அது நன்மையானதா என்பதைச் சித்தரிப்பது பிரிதோர் இயல். இயல்பானவையனைத்தும் நன்மையானவையாயிருக்க வேண்டியதில்லை. தீயனவாகவும் இருக்கக்கூடும். இதனை ஸ்மித் அவர்களே தமது நூலில் ஓரளவு உணர்த்துகிறார். பகிர்வுப் பகுதியில் நிலக்கிழார்களும் தொழிலதிபர்களும், 'விதைக்காமலேயே அறுவடைசெய்ய விரும்புகின்றனர்' என்று கூறுவதே இதற்குச் சான்று. மேலும், இலாபம் உயர்ந்தால் கூலி குறையும் என்பதை விளக்குவதன் மூலம் தொழிலாளர்-முதலாளிகளுக்கிடையே பூசல்கள் உண்டாகக்கூடும் என்பது புலனாகிறது.

தலையிடாக்கொள்கை

தன்னலமும் பொருள் திரட்டும் ஆர்வமும் மக்களின் பண்புகளில் இயற்கையானவை. இவ்வியற்கைப் பண்புகளால் தூண்டப்பட்டுத் தத்தம் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு, நாட்டின் செல்வத்தை மக்கள் நிச்சயமாகப் பெருக்குவர். எனவே, அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடாமல் இருப்பதே சிறந்தது என்ற முடிவிற்கு ஸ்மித் வருகிறார். அவ்வாறாயின் அரசாங்கத்தின் பணி என்ன? மக்கள் சுயமாகவே

வேலைசெய்வதற்குரிய தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்துவது மட்டும் தான். அதற்குமேல் எதுவும் செய்யக்கூடாது. இச்சூழ்நிலையை எவ்வாறு அமைப்பது என்ற கேள்விக்கும் ஸ்மித் விடை தருகிறார். மக்கள் தாங்களாகவே செய்ய முடியாத காரியங்களை அரசு செய்து தரவேண்டும். நாட்டைப் பாதுகாப்பது, நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலவச் செய்வது, நீதிமன்றங்களை அமைத்துச் சட்டதிட்டங்களைப் பேணுவது ஆகியவை மட்டும் அரசாங்கத்தின் கடமைகள். இவற்றைத் தவிர, மக்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் சில பணிகளை மேற்கொள்வது நன்று. மாபெரும் நீர்ப் பாசனத் திட்டங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் அமைத்தல், தந்தி, தபால் நிலையங்களை அமைத்து நடத்தல், மருத்துவ நிலையங்கள் அமைத்தல், கல்விவசதி ஏற்படுத்தல், வேண்டிய அளவு பணம் வெளியிடுதல், வங்கிகளை நிறுவிக் கண்காணித்தல் ஆகிய கடமைகளையும் செய்தால் போதும்.

பொருளாதாரத் துறையில் அரசாங்கம் தலையிட்டால் நாடு சீர்குலையும் என்பதை வலியுறுத்துகிறார். அரசாங்கத்தைப் பற்றி அவர் கொண்டிருந்த எண்ணங்கள் சிந்தனையைத் தூண்டும். அரசாங்கம் எத்தனையோ விதங்களில் தவறுதல் செய்யக்கூடும். வீண் செலவு செய்வதிலும், சாதனங்களைப் பாழாக்குவதிலும் அரசாங்கத்தை யாரும் மிஞ்சமுடியாது. எனவே, பொருளாதாரத் துறைகளில் அரசாங்கத் தலையீட்டை விரும்பலாகாது. மேலும், தலைநகரிலிருந்து வெகு தொலைவிலுள்ள தொழிற்சாலைகளுக்கு என்னென்ன தேவை என்பதை அரசாங்கம் உணரமுடியாது. அதோடு, அவைகளின் சில்லரை விஷயங்களிலெல்லாம் அக்கறை கொள்ள முடியாது. இறுதியாக, அரசாங்கப் பணம் என்றாலே அதிகாரிகள் வீணாகச் செலவு செய்வர்; அரசாங்க வேலைகளைப் பொறுப்புடன் செய்யமாட்டார்கள். அரசாங்க அலுவலகங்களில் வீண்காலதாமதம், தவறுகள், சிவப்பு நாடா முறை, வேண்டியவர்களுக்கு நன்மை செய்தல் ஆகியவை மலிந்துவிட்டன. இவற்றையெல்லாம் கூறி, விசித்திரமான கருத்தையும் தெரிவிக்கிறார். அரசாங்க அதிகாரிகளுக்கு அரசாங்கமே சம்பளம் கொடுக்கக்கூடாது; அதற்குப்பதிலாக, அவர்கள் செய்யும் பணிகளுக்கேற்ப, அப் பணிகளால் பயனடையும் பொதுமக்களே கொடுக்கவேண்டும் என்கிறார். ஸ்மித் பெரிய சுங்க அதிகாரியாகப் பணியாற்றினார் என்பதை இங்கு நினைவுபடுத்தல் நன்று.

அயல் நாட்டு வாணிபம் - தடையிலா வாணிபம்.

இங்குதான் வணிகவாதிகளுக்கெதிராகத் தடையிலா சுயேச்சை வாணிபம் வேண்டும்; அரசாங்கக் கட்டுப்பாடோ பாதுகாப்போ இருக்கக்கூடாது என்ற வாதம் ஆணித்தரமாகக் காணப்படுகிறது

இவ் வாதமே அக் காலத்திய அரசியல் வாதிகளையும், அறிஞர்களையும், வணிகப் பெருமக்களையும் கவர்ந்தது. செல்வம் என்பது பணமே; அதாவது, பொன்னும் வெள்ளியுமே'. இதுவே வணிக வாதிகளின் சித்தாந்தம். இதனை ஆடம் ஸ்மித் வன்மையாகக் கண்டிக்கிறார். மற்றபொருள்களைப்போன்றே பொன்னும் வெள்ளியும் ஒரு நாட்டிற்குத் தேவைப்படும். பொன்னும் வெள்ளியும் சாதாரண வணிக முறையிலேயே கிடைத்துவிடும். அதுமட்டுமல்ல. பொன்னையும் வெள்ளியையும் வெளியே செல்லாமல் ஒரு நாட்டில் கட்டிக்காக்க முடியாது. தங்கமே நீடித்து நிற்கக்கூடிய செல்வம் என்ற கருத்தையும் ஸ்மித் புறக்கணிக்கிறார். மதுவை விட பண்ட பாத்திரங்கள் நீடித்து நிற்கக்கூடியவை என்றாலும், தேவைப் படும் அளவிற்கே அவற்றை உற்பத்திசெய்வோம். அதுபோன்று, தேவைப்படும் அளவுக்கே பொன்னையும் வெள்ளியையும் ஒரு நாட்டில் சேர்த்து வைக்கலாம். வேண்டிய அளவிற்கு மேல் சேர்த்துவைத்தால், அவற்றின் மதிப்புகுறையும். மதிப்பு மிகுந்த நாடுகளுக்கு அது வெளியேறிச் செல்லும். அவ்வாறு வெளியேறுவதை எந்தச் சக்தியாலும் தடுக்கமுடியாது. இவ்வாறு வணிகவாதக் கொள்கைகளை ஸ்மித் அளவுக்கு மீறிக்கண்டிக்கிறார்.

மற்றப் பொருள்களைப் போலவே பொன்னும் ஒரு பொருள் என்று ஸ்மித் வாதிக்கிறார். ஆனால் ஒரு பொருள் சர்வதேச நாணயச் செலாவணியாக ஆகிவிட்டதென்றால், அதைக்கொண்டு எப் பொருளையும் வாங்கி, விற்கலாம். அப்போது அதற்குச் சிறப்பான சில தன்மைகள் ஏற்பட்டுவிடும். எனவே, சட்டி, பானைகள் போன்று பொன்னும் ஒரு பொருளல்ல.

அயல் நாட்டு வணிகம் பொன்னையும் வெள்ளியையும் சேர்ப்பதற்கல்ல என்றால் வேறு எதற்கு? இவ் வினாவிற்குரிய விடையே தடையிலா வணிகவாதத்தின் சாரமாகும்.

இயற்கையன்னை எல்லா நாடுகளுக்கும் ஒரேவிதமான வளங்களையும் வசதிகளையும் அளிக்கவில்லை. நாட்டிற்கு நாடு வளங்களிலும் வசதிகளிலும் வேறுபாடுகள் உள்ளன. அவற்றிற்கேற்ப ஒவ்வொரு நாடும் பொருள்களை உற்பத்தி செய்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் எல்லாப் பொருள்களும் மலிவாகக் கிடைக்கும். அறிவாளியான குடும்பத் தலைவன், தனக்குவேண்டிய பொருளை அதிகம் செலவழித்து தானே உற்பத்தி செய்வதற்குப் பதிலாக அதை மலிவாகப் பிறரிடமிருந்து தான் வாங்குவான். வீட்டிற்குப் பொருத்தமான இவ்வுண்மை நாட்டிற்கும் பொருந்தும் இதுவே தடையிலா வணிகத்திற்கு மிகப் பொருத்தமான வாதம். உள்நாட்டு வணிகத்தின் விரிவே அயல் நாட்டு வணிகம். வட்டார வேலைப்

பகுப்பின் (territorial division of labour) அடிப்படையில் இது விளக்கப்படுகிறது.

அடுத்து, வணிகக் கட்டுப்பாடு, இறக்குமதி வரி ஆகியவற்றின் மூலம் அயல் நாட்டு வணிக மிச்சத்தை அடைய முற்பட்டனர் வணிக வாதிகள். ஆனால் கட்டுப்பாடு, இறக்குமதி வரி ஆகிய இரண்டும் ஒரு நாட்டின் இயற்கை வசதிகள் மிக்க தொழில்களை வளரவிடாமல் வசதி குறைந்தவற்றை வளர்க்கக் காரணமாக இருக்கும். அப்போது, அதிகச் செலவில்தான் சில பொருள்கள் உற்பத்தியாகும் என்று ஸ்மித் எண்பிக்கிறார். ஆங்கில நாடு தனக்கு வசதிநிறைந்த இரும்பு, எஃகுத் தொழிலை வளர்க்காமல், மிக்க செலவில் திராட்சைத் தோட்டம் போடத் தொடங்கினால் அந் நாட்டிற்கும் நல்ல பயனளிக்காது; திராட்சைக்குப் புகழ்பெற்ற பிரெஞ்சு நாட்டுக்கும் நல்லதல்ல.

கட்டுப்பாடில்லாத சர்வதேச வணிகத்தைப்பற்றி இவ்வளவு தீவிரமாகக் கூறிவிட்டு, சில சந்தர்ப்பங்களில் தொழில் பாதுகாப்பு அவசியமாகலாம் என்று கூறுகிறார்.

நாட்டின் பாதுகாப்புத் தொழில்கள் உள்நாட்டிலேயே வளர வேண்டும். பாதுகாப்புக்குத் தேவையான போர்க்கருவிகளுக்கு பிறநாட்டினை நம்பியிருப்பது ஆபத்து. எனவேதான் இங்கிலாந்தின் நாவாய்ச்சட்டத்தைப் போற்றினார். 'நாட்டின் செல்வத்தைவிட பாதுகாப்பே முக்கியம்' என்பது அவரது கூற்று.

உள்நாட்டில் உற்பத்தியாகும் ஒரு பொருளுக்கு ஆயத்தீர்வை (excise duty) விதித்தால், இறக்குமதியாகும் அப் பொருளுக்கு அதே அளவு தீர்வை விதிக்கவேண்டும். அப்போதுதான் உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருளுக்கும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி யாகும் பொருளுக்கும் ஒரே விலை இருக்கும். இல்லையேல் உள் நாட்டுத் தொழில், வரிச்சுமை தாங்காமல் அழிய நேரிடும்.

நம்நாட்டுச் சரக்குகளுக்கு அயல்நாடொன்று சுங்க வரி (customs duty) விதித்தால், நாமும் அந்நாட்டுப் பண்டங்களுக்கு இறக்குமதி வரி விதிக்க வேண்டும்.

இறுதியாக, திடீரென இறக்குமதி வரிகளை நீக்கி, அதனால் பலர் வேலையை இழக்கும்படி விட்டுவிடக்கூடாது. எனவே, சுங்க வரிகளைப் படிப்படியாகத்தான் நீக்கவேண்டும். இந்த வாதம் தற்காலத்திற்கும் பொருத்தமானதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

பொதுநிதி இயல் (Public Finance)

தன் பணிகளை நிறைவேற்ற அரசாங்கத்திற்குப் பணம் தேவை. பல்வேறு வழிகளில் இப் பணத்தைப் பெற முடிந்தபோதிலும்

வரியின் வழியாகப் பெறுவதே சிறந்தது. எனவே, வரி விதிப்போர் பின்பற்ற வேண்டிய முறையில் ஸ்மித் நான்கு விதிகளை வகுத்துள்ளார். இந் நான்கு விதிகளும் இன்றைய நிதி இயலிலும் சிறப்பிடம் பெறுகின்றன.

(1) சக்தி விதி (canon of ability): ஒவ்வொரு குடிமகனும் தன் சக்திக்கேற்ப அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும். இதிலிருந்து, வருமானம் உயர உயர வரி விகிதமும் ஏறவேண்டும் என்பது புலனாகிறது.

(2) தெளிவு விதி (canon of certainty): குடிமகன் செலுத்த வேண்டிய வரி எவ்வளவென்று திட்டவட்டமாக வரையறுக்கப் பட்டிருக்க வேண்டும். அவ்வாறின்றி நினைத்தபடி வரி விதித்தால் மக்களிடையே சம்பாதிக்கும் ஊக்கம் குன்றிவிடும்.

(3) வசதி விதி (canon of convenience): ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோருக்கு வசதியான நேரத்தில் வசதியான வகையில் விதிக்கப்படல் வேண்டும்.

(4) சிக்கன விதி (canon of economy): மக்களிடமிருந்து வரி அதிகமாக வசூலாகி அரசாங்கத்திற்கு அரைக்கால்வாசி வந்தால் பயனில்லை வசூலாகும் தொகையில் சிறிதளவே வசூலிக்க ஏற்படும் செலவாக இருக்கவேண்டும்

துவரை ஸ்மித்தினுடைய முக்கியமான கோட்பாடுகளைக் கண்டோம். முழுமையாக அவரது கருத்துகளை அறிதல் அரிது

ஆடம் ஸ்மித்தின் குறைகள்

தலைசிறந்த ஸ்மித்தின் நூலில் குறைகள் மலிந்துள்ளன. இந் நூலை பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தவரும் பிரான்ஸ் நாட்டுப் பொருளாதார அறிஞருமான ஜே. பி. ஸே. இந் நூலை 'முறை கேடானது' என்றார். ஆம். இந்நூலில் ஒழுங்குமுறை இல்லை. ஆடம் ஸ்மித் ஒரு கருத்தை விளக்கும்போது வேறு எதையோ எழுதிக்கொண்டு போகிறார். மேலும், முக்கியமான சிலபகுதிகளைப் பார்க்குமிடத்து, ஸ்மித் குழப்பமுள்ளவராகவே காணப்படுகிறார். ஒரே அத்தியாயத்தில், ஏன் ஒரே பக்கத்தில்கூட முரணான கருத்துக்களை வெளியிடுகிறார்.

ஆடம் ஸ்மித்தின் வலுக்குறைவு எங்குள்ளது என்பதை அவருடைய நிபந்தனையாளர் குறிப்பிடுகின்றனர், முதலாவதாக, செல்வம் பற்றிக் கொண்டுள்ள கருத்து மிகக் குறுகிய நோக்கமுடையது எனக் கூறப்படுகிறது. ஆரம்ப நிலையிலிருந்து செல்வத்தைப் பண்டமாற்று மதிப்புடன் இணைத்தே பேசுகிறார்.

இரண்டாவதாக, ஸ்மித் பெருமளவில் தனிநபர் வாதியாகத் திகழ்வதாகவும் குறைகூறப்படுகிறது. தன்னல நோக்கம் கொண்ட மக்களைக் கொண்டதே சமுதாயம் எனக் கருதுகிறார். இதன் விளைவாக அரசாங்கத்தின் இன்றியமையாமையை இவர் உணரத் தவறியுள்ளார். அரசாங்கமே காப்புக்கடவுள் என நினைப்போர், அரசாங்கத்தின் காப்புக்கடமைகளை இவர் உணரவில்லை எனக் குறை கூறுவர். இது நியாயமாகாது. ஆடம் ஸ்மித் நூல் வெளியிட்டது தொழிற்புரட்சிக்கு முன்பு. அரசாங்கம் காப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து தொழிற்புரட்சிக்குப் பின்னர் தோன்றியது. இறுதியாக, ஸ்மித் இலட்சிய வாதியாக இல்லாமல் உலகியல் வாதியாகத் திகழ்வதாகவும் கூறுவர். இது, முதலில் கூறிய குறைகளால் ஏற்பட்ட முடிவு

சிந்தனையின் செல்வாக்கு

எவ்வளவுதான் குறைகூறியபோதிலும், பொருளாதார எண்ண வளர்ச்சி வரலாற்றில் ஆடம் ஸ்மித்தே தலை சிறந்தவர். பொருளாதாரக் காட்டில் வழிதேடிச் செல்பவராக இருந்தாலும், வழிவகுத்துக் கொடுத்தவர் இவரே. எண்ணத்தில் மட்டுமன்றி நடைமுறையிலும் இவர் செல்வாக்கு மிகுந்தவர்.

19ஆம் நூற்றாண்டின் பொருளாதாரச் சிந்தனைகளைத்தும் இவர் விதைத்த வித்தின் வளர்ச்சியேயாகும். இவரது கருத்துக்களை ஏற்றோரும் எதிர்த்தோரும் இவருடைய நூலில்தான் தொடக்கம் காண்கின்றனர். முந்தியவர்கள் இவரது நூலின் குறைகளைத் திருத்தி அமைத்து, நூலையும் விரிவுபடுத்தினர். பிந்தியோர் இவரது கோட்பாடுகளையெல்லாம் வன்மையாகக் கண்டித்துள்ளனர். ஆனால், எல்லாருமே அரசியல் பொருளாதாரம் ஆரம்பமானதே ஸ்மித்தின் வழியாகத்தான் என்று ஒப்புக்கொள்கின்றனர். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இவரது சிந்தனைச் சுடர் விளக்கே ஒளிவீசியது. அவரது சுதந்திரவாதக் கொள்கை அரசியல் உலகிற்கு விழிப்பூட்டியது. பிரெஞ்சுப் புரட்சி சுதந்திர வாதக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தது. வணிகவாதிகளின் செல்வாக்கால் இங்கிலாந்தில் இருந்த கைவினைஞர் சட்டம் (Statute of artficers) ஒன்றன்பின் ஒன்றாகக் களைத்தெறியப்பட்டது. 'நாடுகளின் செல்வம்' வெளியானபோது பிட் மாணவராயிருந்தார். அப்போதே, தான் ஸ்மித்தின் மாணவன் என்று பெருமைபட்டுக் கொள்வார். இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக உயர்ந்த பின், ஸ்மித்தின் கொள்கைகளை அமுலாக்க முற்பட்டார். 1786-ல் பிரான்ஸ் நாட்டோடு தடையிலா வாணிப ஒப்பந்தம் செய்தார். 1787ஆம் ஆண்டில் ஸ்மித் இலண்டன் சென்றிருந்தபோது, பிட் பலமுறை அவரைச் சந்தித்து நிதி சம்பந்தமான ஆலோசனைகள்

கேட்டார். இருவரும் ஒருமுறை பேசிக்கொண்டிருந்தபோது, 'பிட் என்ன அற்புதமான மனிதர்! என் கருத்துகளை என்னை விடத் தெளிவாகப் புரிந்துகொள்கிறார்' என்று வியந்ததாகச் சொல் கிறார்கள். ஒருநாள் பிரபுக்கள் சபையில் வந்து பேசுமாறு ஸ்மித்துக்கு அழைப்பு விடுத்தார் பிட். அவ்வழைப்பை ஏற்று அச் சபையில் நுழையும்போது, அமைச்சர்கள் உள்பட எல்லாப் பிர புக்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். இதைக்கண்டு ஆடம் ஸ்மித் 'பெருங்குடி மக்களே, அமருங்கள்' என்றார். பிரபுக்களோ, 'நாங்களெல்லாம் உங்களுக்கு மாணவர்கள்; நீங்கள் அமரும்வரை நாங்கள் நின்றுகொண்டுதான் இருப்போம்' என்றனர். இவ்வாறு, அரசமரியாதை கிடைக்குமளவிற்கு ஸ்மித் தின் செல்வாக்கு ஓங்கியிருந்தது.

கிறித்துவ மதநூலைத் தவிர, வேறெந்த நூலும் இவ்வளவு மாறுதல்களை ஏற்படுத்தியதில்லை என்று பேராசிரியர் கிராவ்ஸ் (Prof. Kraus) கூறினார். இங்கிலாந்தில் அமுலிலிருந்த தானியச் சட்டங்களை நீக்க மான்செஸ்டரில் ஒரு இயக்கமே தோன்றியது. இவ்வியக்கமும் ஸ்மித்தின் செல்வாக்கையே பிரதி பலித்தது. ஸ்மித்தின் நூல் வெளியானதிலிருந்து தலையிடாக் கொள்கை, தடையிலா வாணிபம் இவ்விரண்டுமே எங்கும் விவாதிக்கப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் இங்கிலாந்து தடையிலா வாணிபக் கொள்கையை அமுலாக்கியது. ஆடம் ஸ்மித் காலத்தில் அரசியல்வாதிகளின் சிந்தனையைத் தட்டி எழுப்பிய நூல் அவர் மறைந்த பின்னர் ஆட்சிக் கொள்கைக் குரிய மறை நூலாகப் பிரகாசித்தது என்றால் மிகையாகாது. உலகப் போர் நடக்கும்வரை ஸ்மித்தின் சுதந்திர வாணிபக்கொடியே உலகெங்கும் பட்டொளிவீசிப் பறந்தது.

மதிப்புரை

ஆடம்ஸ்மித்தின் நூல் வெளியானபோது, அதைப்பற்றி எழுந்த பல கருத்துகளை இங்கு குறிப்பிடவேண்டும். 'நாடுகளின் செல்வம் பொருளாதார இயலின் ஆதி நூல் மட்டுமல்ல; அந்தமும் இதுவே' எனப் புகழ்ந்தார் மெஹான் பிரபு (Lord Mohan) ஜே. பி. ஸே. கூறுவது : 'ஆடம் ஸ்மித்தைப் படிக்கும் முறையில் படித்தால், அதற்குமுன் பொருளாதார நூலே இருந்ததில்லை என்பது உனக்குத் தெரியும்.' 'எல்லாப் பொருளாதாரச் சிந்தனைக் கருத்துகளுக்கும் கருவூலம் இதுவே' என்று அலெக்சாண்டர் கிரே (Alexander gray) புகழ்பாடுகிறார். புகழ்ச்சியோடு இகழ்ச்சி யையும் சம்பாதித்துள்ளார் ஆடம் ஸ்மித். 'பொருளாதாரம் செல்வத்தைப் பற்றிய அறிவியல்' என்ற சொற்களைக் கேட்டுச் சீறிய மத குருக்களும், இலக்கிய மேதைகளும் பலர். ஜான்

ரஸ்கின் என்ற இலக்கிய மேதை பொருளாதார இயலை மட்டுமன்றி, அதனை உருவாக்கிய ஸ்மித்தையும் பின்வருமாறு இழித்துரைத்துள்ளார். 'உன்னைப் படைத்த கடவுளை நீ மறக்கலாம்; அவருடைய கட்டளைகளை மீறலாம். அண்டை வீட்டாரின் செல்வத்தை விரும்பலாம் என்ற நாத்திகக் கொள்கைகளைப் போதித்த உயர்குடியில் பிறவாத ஸ்காட்லாந்தின் உன்மத்தன்.'

இம் மதிப்புரைகள் அனைத்துமே மித மிஞ்சியவை; எனினும், பொதுவாக இலக்கிய நூல்களுக்கும் சிறப்பாகப் பொருளாதார நூல்களுக்கும் 'நாடுகளின் செல்வம்' ஒரு தொன்மை நூல் என்றால், மிகையாகாது. இப் புகழுக்குக் காரணம்தான் என்ன? முதற்கண், இந் நூலின் இலக்கிய நயம். அக் காலத்திய முக்கியமான பிரச்சினைகளையெல்லாம் விளக்கமாகவும் ஆதாரங்களுடனும் நயம்பட விவரித்தது. அன்றையப் பொருளாதாரக் கொள்கைகள் தவறானவை என்பதை எல்லாரும் உணரும்படித் தூண்டியது. எல்லாவற்றிற்கும் மேலாக, அக் காலத்தில் பொருளாதாரச் சூழ்நிலையே இந் நூலைப் புகழ்பெற்றதாக்கியது. தொழில் துறையில் ஏற்பட்ட புரட்சியான மாறுதல்கள், வணிக நிலைமையின் மாற்றம், குடியேற்ற நாடுகளின் சுதந்திரப்புரட்சி ஆகிய சூழ்நிலைக்கெல்லாம் இந் நூலில் முறையான விளக்கம் இருந்தது. மக்களின் சிந்தனையைத் தூண்டி நூலின் முடிவுகளை ஏற்கும்படி செய்தது. எனவே, காலத்திற்கேற்ற கோலத்துடன் விளங்கியதே இந்நூலின் வெற்றிக்கு உண்மையான காரணம்.

எது எவ்வாறாயினும், 'நாடுகளின் செல்வம்' கொண்டுள்ள கருத்துகள் ஆடம் ஸ்மித்தின் சொந்தக் கருத்துகளா? இவ் வினாவிற்கு விடை அளிப்பது எளிது. ஆடம் ஸ்மித்தே பொருளாதாரச் சிந்தனையாளர்களில் முதல்வர் என்று கூறுவது தவறு. அது போன்றே 'ஆடம் ஸ்மித் என்றால் பொருளாதாரம்; பொருளாதாரம் என்றால் ஆடம் ஸ்மித்' என்று போற்றுவதும் வெறும் புகழ்ச்சி. பல நூற்றாண்டுகளாகப் பொருளாதாரக் கருத்துகள் விவாதிக்கப்பட்டுள்ளனவென்பதை நாம் அறிவோம். அக் கருத்துகளையே ஸ்மித் கடன் வாங்கித் தம் நூலை எழுதியுள்ளார். அவற்றில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை வருமாறு: உலோகப் பற்றுடையோரின் வாதத்திற்கு எதிராகக் கணை தொடுத்தவர் தாமஸ் மன். அவ் வாதமே இந் நூலில் விளக்கப்படுகிறது; உழைப்பே மதிப்பின் அளவு கோல் என்ற கருத்தினை வில்லியம் பெட்டி அவர்களின் நூலில் காணலாம். வேலைப்பகுப்பு என்னும் சித்தாந்தத்தை பண்டைக்காலக் கிரேக்கப் பேரறிஞரான பிளேட்டா புனைந்துள்ளார்; 'தன்னலம்' என்ற கோட்பாட்டை டேவிட் ஹியூம், டக்கர் (Tucker) ஆகியோரின் நூல்களில் காணலாம்; குறைந்த

வட்டி விகிதத்தின் அனுகூலங்களை சைல்டு நூலில் பார்க்கலாம்; புதுமையானவை, பிரம்மிக்கத்தக்கவை என்று போற்றப்பட்ட ஸ்மித்தின் வரிவிதிகளை ஜெர்மன் வணிகவாதியான ஜுஸ்டி (justı) அவர்களின் நூலில் வரிக்கு வரி அப்படியே பொறிக்கப் பட்டிருப்பதை அறியலாம்; மேலும், இயற்கைவாதிகளின் கருத் துகளையும் ஸ்மித் தம் நூலில் சேர்த்துள்ளார்; இது, தற்போது தெள்ளத் தெளிவாகிவிட்டது. 'நுகர்ச்சியே உற்பத்தியின் குறிக் கோள்' என்று நுகர்விற்கு ஏற்றம் தந்துள்ளார் ஸ்மித். இதனை இயற்கைவாதிகளே வலியுறுத்தினர். இரண்டாவதாக, இயற்கை வாதிகளின் செல்வச் சுழல் ஆய்வே ஸ்மித்தின் பகிர்வுப் பகுதிக்கு ஆதாரமாய் அமைந்தது. இயற்கைவாதிகளைச் சந்தித்த பிறகே இப் பகுதியைத் தம் நூலில் சேர்த்துள்ளார் என்பதை ஒரு சில ஃபிரெஞ்சுப் பேராசிரியர்கள் காண்பித்துள்ளனர். மூன்றுவதாக, மூலதனத்தின் இயல்பு, அதன் போக்கு ஆகிய கருத்துகளையும் இயற்கைவாதிகளிடமிருந்தே பெற்றுள்ளார். இறுதியாக உழைப்பில் ஆக்க உழைப்பு, ஆக்கமில்லா உழைப்பு என்ற பாகுபாடும் இயற்கைவாதிகளின் கூட்டுறவால் ஏற்பட்ட விளைவே என்பதை நாம் அறிவோம். எனவேதான், '1776ஆம் ஆண்டிற்கு முற்றிலும் புதுமையானது என்று சொல்லுமளவிற்கு எந்தக் கருத்தும் இந் நூலில் இல்லை' என்று சும்பீட்டர் (Schumpeter) கூறினர்.

எனவே, தமக்கு முன்னர் பலர் கூறிய கருத்துகளே ஸ்மித்தின் சிந்தனையில் பல ஆண்டுகளாக உருக்கொண்டிருந்தன எனலாம். இக் கருத்துகளே அவரது சிந்தனைக்கு விருந்தாய் அமைந்தன. ஆனல், தம் நூலில் தம் முன்னோடிகளைப் பற்றி ஸ்மித் குறிப்பிடுவதுமில்லை; அவர்களிடமிருந்து கடன் வாங்கிய தாக எக் கருத்தையும் புலப்படுத்துவதுமில்லை. எவ்வளவு கருத்து களைப் பிறரிடமிருந்து பெற்றபோதிலும் அவை ஸ்மித்தின் கருத் துகளாகவே ஒளி வீசுகின்றன. தமக்குச் சிதறிக் கிடைத்த பல அறிஞர்களின் சிந்தனை முத்துக்களையெல்லாம் சேர்த்துக் கோர்த்து ஒரு அரிய முத்துமாலையாக ஆக்கியுள்ளார். அம் மாலை அவருக்கே சொந்தமானது. இவ்வாறு செய்வது எளிதன்று; பேரறிஞர்களால் மட்டுமே அது முடியும். அலெக்ஸாண்டர் கிரே குறிப்பிடுவதுபோல், 'செங்கற்கள் போலிருந்த பொருளாதாரக் கருத்துகளைப் பளிங்குக் கற்களாக மாற்றிய' மந்திரவாதி அவர். பழமையான கருத்துகளெனினும் புதுப்பொலிவுடன் அவை ஸ்மித்தின் நூலில் பிரகாசிக்கின்றன.

இவ்வளவு புகழ்பெற்ற ஸ்மித்தின் நூல் இன்றைய சமுதாயத் திற்கு ஏற்றதா என்பதையும் ஆராய்தல் நன்று. ஒரு விதத்தில் இந்நூல் அழிவே இல்லாத கருவூலம் எனலாம். தனிமனிதனின்

சுதந்திரத்தையும், நாடுகளிடையே இருக்கவேண்டிய பரஸ்பர உணர்வையும் சித்தரித்துக் காட்டுகிறது இது. இவ்விரண்டு கருத்துகளும் மக்களின் மனதில் மந்திரமாக இருந்துகொண்டே இருக்கும். எனினும், இன்றையப்பொருளாதாரஉலகம் முற்றிலும் மாறுபட்டது. அவரது காலத்திலிருந்த தவருன கருத்துகளையும் கொள்கைகளையும் தகர்த்தெறிந்துவிட்டுப் புதிய கருத்துகளையும் கொள்கைகளையும் புகுத்துவதே ஸ்மித்தின் குறிக்கோளாக இருந்தது. குறுகிய தேசிய மனப்பான்மைக்குப் பதிலாகப் பரந்த உலகக் கண்ணோட்டத்தை வலியுறுத்திஞர்; அரசே குடிமக்களின் தந்தை என்ற கருத்திற்குப் பதிலாக, மனிதனின் தனியுரிமைக் கோட்பாட்டைப் போதித்தார். அவருடைய இயற்கை வாத ஆய்வு பொருளாதாரக் கோட்பாடுகளைப் பொதுவானதாகவும், நாட்டிற்கு நாடு அல்லது காலத்திற்குக் காலம் மாறக்கூடாதவையாகவும் செய்தன. ஆனல், காலமும் சூழ்நிலையும் மாற மாற அவற்றிற்கேற்ப பொருளாதாரத் தத்துவங்களும் மாறுவதே சிறப்பு என்பது இன்றைய ஆய்வு. ஓரளவிற்கு தேசிய உணர்வோடு கூடிய பொருளாதாரக் கொள்கையே நாட்டிற்கு நன்மை தரும் என்ற மனப்பான்மையை இன்று நாம் காண்கிறோம். எனவே, பொருளாதாரக் கருத்துகள் காலத்தின் சூழ்நிலையின் பிரதிபலிப்பேயாகும்.

என்னதான் மாற்றம் இருந்தாலும் ஸ்மித்தின் நூல் மறையாத, என்றும் பொலிவு தரும் நூலாகவே இருக்கும். பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் ஆடம் ஸ்மித் என்றும் மங்காத பெயருடையவராக விளங்குவார்.

8. பயன்வழிக் கொள்கை

(Utilitarianism)

ஜெரெமி பென்தம் (1748—1832) (Jeremy Bentham)

ஆடம் ஸ்மித்திற்கும் இதரத்தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கும் இடையே இணைக்கும் பாலம்போல் பென்தம் காட்சியளிக்கிறார். உண்மையில், பென்தம் ஒரு பொருளாதார அறிஞர் அல்லர்; எனினும், அவர் கூறிய கருத்துகள் தொன்மைப் பொருளாதாரக் கட்டடத்திற்குத் தூண்கள்போல் அமைந்துள்ளன. பென்தம் ஒரு தத்துவஞானி; புகழ்பெற்ற எழுத்தாளர்; எதையும் சுயமாகச் சிந்திக்கும் திறன் பெற்றவர்; சமூகச் சீர்திருத்தவாதி. பயன் வழிக்கொள்கையை (Principle of utilirarianism) இவ்வுலகிற்கு வழங்கியவர். இத் தத்துவமே தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கு அடிப்படைத் தத்துவமாக விளங்குகிறது.

வாழ்க்கைக் குறிப்பும் வரைந்த நூல்களும்

ஜெரெமி பென்தம் 1748ஆம் ஆண்டு இலண்டனில் பிறந்தார். இவரது தந்தை செல்வாக்குடைய வழக்கறிஞர். பென்தம் சிறு வயதிலிருந்தே கூர்மையான அறிவுகொண்டவராய்த் திகழ்ந்தார். நூல்களைப்படிப்பது அவருக்குத் தேவாமிர்தம் போன்றது. பன்னிரண்டாவது வயதிலேயே ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ராணி கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரிவாழ்வு அவருக்குப் பிடிக்கவில்லை. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முறையாகக் கற்றுக்கொடுக்கவுமில்லை. எனினும் தாமாகவே முயன்று படித்துப் பட்டம் பெற்றார். பின்னர், தந்தையின் விருப்பத்திற்கிணங்க சட்டம்படிக்கத் தொடங்கினார். தன்னைப்போன்றே தன் மகனும் வழக்கறிஞராகத் திகழ்ந்து பெருமையும் புகழும் பெறவேண்டுமென்பது தந்தையின் விருப்பம். ஆனால், பென்தம் சட்டம்பயின்ற பின்னர் வழக்கறிஞராக வாழவிரும்பவில்லை. படித்துக்கொண்டே பல அரிய நூல்களை வரைந்து சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய

விரும்பினார். பேரறிஞராகத் திகழவேண்டுமென்ற நோக்கோடு தன் அறையிலேயே உட்கார்ந்து பல அறிஞர்களின் நூல்களைப் படித்தார். மான்டெஷ்க்யு (Montes quieu), ஹியூம் (Hume), பிரீஷ்டிலி (Priestley), ஹார்டிலி (Hartley), பெக்காரியா (Beccaria) ஆகியோர் எழுதிய நூல்களையெல்லாம் தாமாகவே படித்தார். ஓய்வு நேரங்களில் இசைப்பிரியரான பென்தம் இசைமன்றங்களுக்குச் சென்றுவந்தார். வாழ்க்கை முழுவதும் திருமணமாகாத தனிமனிதராகவே வாழ்ந்தார்.

விஞ்ஞான உலகிற்கு நியூடன் வழிகாட்டியாகத் திகழ்ந்ததைப் போல் நெறி உலகிற்குத் தான் ஒரு மேதையாகத் திகழவேண்டுமென்பது பென்தமின் ஆசை. எனவே, தம் வாழ்நாளில் பெரும் பகுதியை சமூகநெறிக்கும் சட்டங்களுக்குமுள்ள தொடர்பைப் பற்றிய நூல்களையே அதிகமாகப் படித்தார். இவ்வாருக, தன் வாழ்நாள் முழுவதும் நூல்களை எழுதும் வாய்ப்பும் ஆற்றலும் பெற்ற பென்தம் 1776-ல் தன் முதல் நூலான 'அரசாங்கம் பற்றிய சிந்தனைகள்' வெளியிட்டார். இந்நூலைத் தன் பெயரைக் குறிப்பிடாமலே வெளியிட்டார். பின்னர் 1789-ல் 'ஒழுக்க நெறிகளும் சட்டமுறைகளும் பற்றிய அறிமுகம்' என்னும் நூலை வெளியிட்டார். இந் நூலை 1780ஆம் ஆண்டிலேயே எழுதி முடித்திருந்தபோதிலும், அதை வெளியிட முன்வரவில்லை பென்தம். தம் நண்பர்களின் தூண்டுதலால்தான் ஒன்பது ஆண்டுகளுக்குப்பின் அதை வெளியிட்டார். இந் நூல்தான் பென்தமிற்கு நற்பெயரும் புகழும் தேடித்தந்தது. பொருளாதாரக் கருத்துகளையும் பயன்வழிக் கொள்கையையும் இந் நூலில் தான் விளக்கியுள்ளார். எனினும், இந் நூல் வெளியானபோது, ஆங்கில மக்களின் கவனம் அமெரிக்க சுதந்திரப்போரிலும் அதைப் பற்றி எழுதிய பர்க் (Burke), காட்வின் (Godwyn) அவர்களின் நூல்களிலும் லயித்திருந்தது. இதனால் ஓரளவு ஏமாற்றமடைந்த பென்தம் சிறைச்சாலைச் சீர்திருத்தத்தை எவ்வாறு செய்வது என்பதில் தன் முழுக்கவனத்தையும் செலுத்தினார். சிறைக் காவலர்கள் ஒரேசமயத்தில் எல்லாக் கைதிகளையும் கண்காணிக்கக் கூடிய வகையில் மாதிரிச் சிறையொன்றை பென்தம் அமைத்தார். சிறைக்கைதிகளுக்கு நல்வழி காட்டுவதன் வாயிலாக அவர்களை நல்லவர்களாகவும், பயனுள்ளவர்களாகவும், மாற்ற முடியுமென்பது பென்தமின் நம்பிக்கை. இந் நம்பிக்கை காரணமாகத்தான் மாதிரிச் சிறையொன்றைத் தன் செலவிலேயே கட்டினார். இவ்வாருகத் தன் செல்வத்தைச் செலவிட்ட பென்தம், தன் 54ஆம் வயதில் செல்வமின்றி, நண்பர்களின் உதவியுமின்றி, வாழ்க்கையில் ஏற்பட்ட பல ஏமாற்றத்துடன் காணப்பட்டார். ஆனால் டுமாண்ட் (Dumont)

என்னும் சுவிட்சர்லாந்து அகதியொருவர் பென்தமின் கருத்துகளை யும் கொள்கைகளையும் பெரிதும் மதித்துவந்தார். அக் கருத்துகளை யெல்லாம் உள்ளடக்கி பிரெஞ்சு மொழியில் அவர் வெளியிட்ட நூலின் வாயிலாகப் பென்தமை பிரெஞ்சு மக்களுக்கு அறிமுகப் படுத்தினர். இவ்வாருகப் பிரெஞ்சு மக்கள் மட்டுமன்றி, ஆங்கிலே யரும் பென்தமின் கருத்துகளையும் கொள்கைகளையும் மதிக்கத் தொடங்கினர்.

தனது பயன்வழிக் கொள்கைத் தத்துவத்தின் வாயிலாக, அரசாங்கச் சட்டங்களையும் அமைப்புக்களையும் திருத்தி அமைக்க முயன்றவர் பென்தம். எந்தச் சீர்திருத்தமும் 'பெருவாரியான மக்களின் பேரின்பத்தையே' குறிக்கோளாகக் கொள்ள வேண்டு மென்பது பென்தமின் கருத்து. இக் கருத்தைப் பின்னுல் தோன்றிய பல அறிஞர்கள் ஒப்புக்கொண்டு, அதனைப் பரப்புவதற்காக 'தத்துவச் சீர்திருத்தவாதிகள் குழு' ஒன்றைத் தொடங்கினர். இக் குழுவில் ஜேம்ஸ் மில், டேவிட் ரிக்கார்டோ, பிரான்சிஸ் பிளேஸ் ஆகியோா அக்கறை காட்டியது குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரக் கருத்துகள்

உண்மையில் பென்தம் ஒரு பொருளாதார அறிஞரல்லர். அதனுல் தான் பொருளாதாரச் சிந்தனை வரலாறு பற்றிய பல நூல் களில் அவரைக் காண்பதரிது. அவர் ஒரு சமூகத் தத்துவமேதை. எனவே, அவர் படித்ததும் எழுதயதும் சமூக அறிவியல்களைப் பற்றியதே. விஞ்ஞானிகள் எவ்வாறு இவ்வுலகக் காரியங்களில் அக்கறை கொண்டு, பல புதிய கண்டுபிடிப்பின் மூலம் வாழ்க்கை வசதிகளையெல்லாம் மாற்றி அமைத்துள்ளனரோ, அதேபோன்று பென்தம் சமூக அமைப்பையும் ஒழுக்க நெறியையும் மாற்றி அமைத்து மக்களுக்குப் பேரின்பம் நல்குவதில் நாட்டம் கொண் டிருந்தார்.

பென்தம் முதன்முதலில் பழமையை விரும்பும் அறிஞராகத் தான் இருந்தார். ஆனல் 1808-ல் ஜேம்ஸ் மில் அவர்களைச் சந்தித்து அவருடைய நெருங்கிய நண்பரான பின்னர் சுதந்திர வாதியாக மாறினர். அவரது நூல்கள் அனைத்தும் ஆங்கில நாட்டு அரசியல், நிருவாக அமைப்பு முறைகளையெல்லாம் திருத்தம் செய் வதற்குத் துணை புரிந்தன. சீர்திருத்தங்களில் அவர்கொண்ட மோகம் அவரை இரு தலைமுறையினரின் மதிப்பிற்கும் ஆளாக்கியது.

பென்தமின் தத்துவத்தைப் பயன்வழிக் கொள்கைத் தத்துவ மெனக் கண்டோம். இத் தத்துவத்தின்படி 'வாழ்க்கையின் குறிக்கோள், மனிதனின் இன்பமே' ஆகும் இத் தத்துவத்தை பென்தம்தான் முதன்முதலில் வலியுறுத்தினர் என்று சொல்வதற்

கில்லை. அவருக்கு முன்பே ஒரு சில ஆங்கில அறிஞர்கள் இக் கொள்கையை வலியுறுத்தியுள்ளனர். ஆனால் அவர்களனைவருமே ‘மனிதன் பெறும் இன்பத்தை அல்லது பயனைப் பெருக்குவதை’ பொதுவானதொரு கொள்கையாகத்தான் கொண்டனர். மாறாக, இக் கொள்கைக்கு அறிவியல் ரீதியில் விளக்கம் கொடுத்தவர் பென்தம்தான். மனிதன் அடையும் இன்பத்தை அளவிட்டுக்கூறும் முயற்சியில் ஈடுபட்டவரும் பென்தம் அவர்களே மனிதன் துன்பத்தை நீக்கி, இன்பத்தை அடைவதையே தன் நடவடிக்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறான் என்பது பென்தமின் பயின்வழிக் கொள்கையின் சாரமாகும். மனிதன், தான் செய்யும் காரியத்தால் விளையும் நன்மையை தீமையோடு ஒப்பிட்டு, நன்மை அதிகமாயிருந்தால்தான் அச் செயலைச் செய்ய முற்படுவான் என்பது பென்தமின் கருத்து. சான்றாக, வேலைசெய்வது என்பது பொதுவாகத் துன்பமே; எனினும் அவ் வேலையால் கிடைக்கும் பயன் அல்லது இன்பம் அதிகமாயிருந்தால்தான் அவ் வேலையை எவனும் செய்ய முன் வருவான். எனவே, தன்னலத்தையே அடிப்படையாகக் கொண்டுதான் மனிதன் செயல்களைச் செய்ய முற்படுகிறான் என்கிறார். ஆடம் ஸ்மித்தின் தன்னலக் கொள்கையை அறிவியல் ரீதியில் விளக்க முற்படுகிறார் பென்தம்.

மனிதன் பெறும் இன்ப, துன்ப உணர்ச்சிகளை பென்தம் அளவிட்டுக்கூற முற்படுகிறார். மனிதன், இயற்கையாகவேயுள்ள இன்ப, துன்ப உணர்ச்சிகளால் ஆட்டிவைக்கப்படுகிறான். நாம் என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டுமென்பதையெல்லாம் அவ்வுணர்ச்சிகளே நிருணயிக்கின்றன. மனிதன் அடையும் இன்பமோ துன்பமோ அதிகமானதா குறைவானதா என்பதை அளவிட்டுக் கூறுவதற்குக் கீழ்க்காணும் சூழ்நிலைகள் நமக்கு உதவுகின்றன என்கிறார் பென்தம். எந்தக் காரியத்தையும் மனிதன் செய்வதற்குமுன், அதனால் விளையக்கூடிய இன்பமோ துன்பமோ எவ்வளவு நேரம் நீடிக்கும், நிச்சயமாக அவ்வின்பமோ துன்பமோ, அது எவ்வளவு தீவிரமானதாக இருக்கும், உடனடியாகக் கிடைக்குமா அல்லது தாமதமாகக் கிடைக்குமா என்பதையெல்லாம் அவனது உள்ளம் எடைபோடுகிறது. அவ்வாறு எடைபோடுவதெப்படி என்பதை, நுட்பமான, ஆனால் சிக்கலான வழிவகைகளைக் கொண்டு விளக்குகிறார் பென்தம் இன்ப துன்பத்தை எடைபோடுவது எளிதல்ல. ஏனெனில் அதை எடைபோடுவதற்கென்று எந்த அளவுகோலும் கிடையாது சான்றாக, மனிதன் செய்யும் எந்தக் காரியமும் இன்பதுன்பத்தை விளைவிக்கக் கூடியதென்றால், அவ்வின்ப அல்லது துன்பத்தின் தீவிரம் அவனது உள்ளுணர்வைப் பொறுத்தது அதன் நீடிப்பு கால வரம்பைப் பொறுத்தது. எனினும் மனித உள்ளம் அளவிடும் எந்திரத்தைப்

போல் சதா வேலை செய்துகொண்டே இருக்கிறது. அவ்வாறு ஒரு செயலால் விளையக்கூடிய இன்பத்தையோ துன்பத்தையோ உள்ளம் எடைபோட்டு மனிதனைத் தூண்டுவதால்தான் அவன் ஒரு செயலைச் செய்வதா அல்லது செய்யாமல் விட்டுவிடுவதா என்று தீர்மானிக்க முடிகிறது. இதுவே பென்தமின் பயன் வழிக் கொள்கையின் விளக்கமாகும்.

ஆனால், இவ் விளக்கத்திலுள்ள குறைபாடுகளை நாம் மறந்து விடக்கூடாது. மனிதனின் உணர்ச்சி என்பது ஒரே மாதிரியானதல்ல; அது மனிதனுக்கு மனிதன், காலத்திற்கும் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது. இவைகளையெல்லாம் பென்தம் நன்கு உணர்ந்திருந்தார். எனினும், அறிவியல் ரீதியில் மனிதன் செய்யும் செயல்களுக்கு விளக்கம் தருவதற்கு வேறு வழி இல்லாததால் இன்ப துன்ப உணர்வுகளை அளவிடமுடியுமென்ற அனுமானத்தை விடாப்பிடியாகக் கொண்டார். மேலும், உள்ளுணர்வை அளவிடுவதில் பிறிதொரு சிக்கலும் உண்டு. மனிதன் செய்யும் வெவ்வேறு செயல்களிலிருந்து தோன்றும் இன்ப துன்பங்கள் நிச்சயம் மாறுபட்டதாய்த்தானிருக்கும். அவ் வேறுபாட்டை எவ்வாறு அளவிடுவது? சான்ருக, நல்ல விருந்து உண்ணுவதால், மனிதனுக்கேற்படும் இன்பமும் குதிரைப் பந்தயத்தில் அவனது குதிரை முதலாவது வந்து வெற்றிபெறுவதைக் காண்பதால் ஏற்படும் மகிழ்ச்சியும் ஒன்ருகிவிடுமா ? ஒரு சிலருக்குத் திரைப்படம் பார்ப்பதால் ஏற்படும் இன்பத்தைவிட இரவு விடுதியில் ஆடிப் பாடிக் கழிப்பதால் ஏற்படும் இன்பம் அதிகமாயிருக்கலாம். அவ்வாருயின் அவ்வின்ப உணர்வுகளையெல்லாம் அளவிடுவதெப்படி ?

இப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியில் பணம் என்னும் கருவியை நாடினர் பென்தம். பணம் ஒன்றுதான் மனிதனின் உள்ளுணர்வை அளவிடக்கூடிய அளவுகோல். திரை அரங்கிற்குச் செல்வதற்குப் பதிலாக ஒருவன் இரவு விடுதிக்குச் சென்ருல் திரைப்படத்திலிருந்து அவன் எதிர்பார்க்கும் பயனைவிட இரவு விடுதியில் அவன் பெறஇருக்கும் இன்பம் அதிகமானது என்று பொருள். எவ்வளவு அதிகமானதென்பதை அவன் இரவு விடுதியில் செலவழிக்கும் பணத்தைக் கொண்டு அளவிடலாம் என்கிருர் பென்தம். ஒரு விருந்து பசியற்றவனைவிடப் பசியுள்ளவனுக்கு அதிகப் பயனை அளிக்குமன்ருே? லாட்டரிப் பணம் கிடைத்தால் பணக்காரன் அடையும் இன்பத்தைவிட ஏழை பெறும் இன்பம் அதிகமன்ருே ? எனவே, செல்வப் பெருக்கால் மனிதன் அடையும் இன்பத்தை அறிவதற்கும் அளவிடுவதற்கும் ஒரு சில வழிவகைகளை எடுத்துரைக்கிருர் பென்தம். (1) மனிதன் அடையும் ஒவ்வொரு

வகைச் செல்வமும் அவனுக்கு வெவ்வேறு வகையில் இன்பத்தை அளிக்கின்றன. 2. மிகுந்த செல்வமும் மிதமான செல்வமுமுடைய இருவரை எடுத்துக்கொண்டால் மிகுந்த செல்வம் படைத்தோனே அதிக இன்பத்தைப் பெறுவான். 3. முன்னரே பணக்காரனுயுள்ள ஒருவனுக்கு மேலும் பணம் சேர்ந்தால், எவ்வளவு பணம் சேருகிறதோ அதைக்காட்டிலும் அவன் பெறும் இன்பம் குறைவாகத்தானிருக்கும். 4 ஏழை, பணக்காரன் என்ற பாகுபாட்டின் காரணத்தால், குறிப்பிட்ட அளவு பணமானது அவர்களிருவருக்கும் வெவ்வேறு பயனைத்தான் அளிக்கும். 5. சமுதாய மக்களிடையே அதிக வருமானம் ஏற்றத் தாழ்வு இல்லையெனில், அச் சமுதாயம் மகிழ்ச்சியுடையதாகவே இருக்கும்.

பொருளாதாரத்தில் முக்கியமான விதிகளில் ஒன்றுன குறைந்து செல் பயன் விதிக்கு எடுத்துக்காட்டாக பென்தமின் விளக்கம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ் விதியை அவர் புனையாவிட்டாலுங்கூட இதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார் எனலாம். ஒரேவிதமான பண்டம் அதிகரிக்க அதிகரிக்க அதிலிருந்து கிடைக்கும் இன்பம் குறைந்துகொண்டே செல்லும் என்பதைப் பென்தம் தெளிவாகக் கூறுகிறுர். இவ்வாருகத் தொன்மைப் பொருளாதாரத்திற்கு வேண்டிய முக்கியவான அடிப்படைக் கருத்துகளை பென்தம் வழங்கியுள்ளார். அவருடைய கொள்கைப்படி மக்கள் அனைவரும் விவேகத்துடன் தெளிந்த அறிவுடனும் ஒரு செயலிலிருந்து கிடைக்கக்கூடிய இன்பத்தையும் துன்பத்தையும் எண்ணி, ஒப்பிட்டு, அளவிட்ட பின்னரே அச் செயலைச் செய்வர் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

மக்கள் விவேகத்துடன் நடந்துகொள்ளவில்லையெனில் அது அவர்களின் அறியாமையைத்தான் புலப்படுத்துகிறது என்பது பென்தமின் நம்பிக்கை. உண்மையில் பலபேர் அறியாமை காரணத்தால்தான் இன்பத்தையும் துன்பத்தையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் துன்பப்படுகின்றனர். எனவே, மக்களின் சுயநலமும் சமுதாயத்தின் நன்மையும் ஒன்ருக இணையக்கூடிய சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென வலியுறுத்துகிருர்.

தன், பயன்வழிக் கொள்கையின் அடிப்படையில் குற்றவாளிகளின் நடவடிக்கைகளையும் ஆராய்கிருர். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை இதற்குச் சான்ருகத் தருகிருர். ஒவ்வொரு மனிதனும் இன்பத்தை நாடித்தான் செயல்களில் ஈடுபடுகிருன் என்பதை முன்னரே கண்டோம். குற்றவாளியோ தான் செய்யும் குற்றத்தினல் கிடைக்கக்கூடிய பயனையும் தண்டனையால் விளையும் துன்பத்தையும் சரிவர எடைபோடத் தெரியாததால்தான் குற்றம்

புரிகிறான். எனவே, எந்தக் குற்றத்திற்கும் அரசாங்கம் அளிக்கும் தண்டனை, குற்றத்தினால் ஏற்படும் பயனைவிட அதிகத் துன்பம் அளிப்பதாயிருக்க வேண்டுமென வாதிடுகிறார் பென்தம். குற்றவாளிகள் திருந்துவதற்கும், நல்லமுறையில் குற்றத்தின் பயனையும் தண்டனையின் துன்பத்தையும் ஒப்பிட்டு உணர்வதற்கும் அரசாங்கம் வழிவகைகள் செய்யவேண்டும்.

இவ்வாறான மனித உள்ளத்தை விளக்கிய பென்தம், தன் பயன்வழிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க நெறிகளையும் அரசாங்க அமைப்பையும் வருணிக்கின்றார். துன்பத்தை விடுத்து இன்பத்தையே நாடும் எந்த மனிதனின் நடவடிக்கையும் அவனுக்கு நல்லதாகவே இருக்கும் என்பது பென்தமின் நம்பிக்கை. எனவே, தனிமனிதனின் விருப்பமே நன்மையானது; நீடித்து நிலைக்கவேண்டியது. அவ்வாறாயின், பயன்வழிக் கொள்கை தனிமனிதனின் சுயநலத்தையே ஆதாரமாகக் கொண்டதெனலாம். அவனுக்கு எது அதிக இன்பத்தைக் கொடுக்குமோ அதுவே நல்லதாகவும் இருக்கும். எது துன்பத்தைக் கொடுக்குமோ அதையே அவன் செய்யவேண்டும்; அப்போதுதான் எது நன்மையானது எது தீயது என்பதை அவன் உணர முடியும். நல்லது எது என்பதை உணர்வதற்கு எது பயனுள்ளது, இன்பத்தைத் தரக்கூடியது நன்மையானது என்பதை அறிதல் வேண்டும். இவ்வாறாக, நல்லது, நன்மையானது, இன்பமானது, பயனுடையது என்ற சொற்களனைத்தையும் ஒரே பொருளில்தான் பயன்படுத்துகிறார் பென்தம்.

மனிதன் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்வான் என்பதை பயன்வழிக் கொள்கைதான் தீர்மானிக்கிறது என்ற முடிவுக்கு வருகிறார் பென்தம். சமுதாயம் என்பது தனிநபர்களைக் கொண்ட கூட்டமைப்பாதலால் தனிமனிதனின் பயன்வழிக் கொள்கையே அரசாங்கத்திற்கு வழிகாட்டும் தத்துவமாக அமைய வேண்டும் என்கிறார். ஏனெனில் தனிமனிதனுக்கு எது நல்லதென அறிந்துகொண்டால்தான் சமுதாயத்திற்கு நல்லது எது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். உண்மையில், தனிமனிதர்களின் இன்பத்தைக் கொண்டதுதான் சமுதாயத்தின் நன்மை. எனவே, பெருவாரியான மக்களுக்குக் கூடுமானவரை அதிக இன்பத்தைத் தருவதே அரசின் குறிக்கோளாக அமையவேண்டும்.

பயன் வழிக் கொள்கையின் முக்கியத்துவம்

பயன்வழிக் கொள்கையை அடிப்படைத் தத்துவமாகக் கொண்ட பென்தம் முக்கியமான இரண்டு முடிவுகளுக்கு வருகிறார். இவ்விரு முடிவுகளும் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று, ஆடம் ஸ்மித் போதித்துவந்த இயற்கைத் தத்துவம் என்பது தவறானதாகும். இயற்கை

வாயிலாக மனிதன் ஒரு சில உரிமைகளைப் பெறுகிறான் என்பது ஸ்மித்தின் கொள்கை. இக் கொள்கையை மூடத்தனமான தென்று கண்டிக்கிறார் பென்தம். இரண்டாவது தனி மனிதனுக்கு எது நல்லது என்பது அவனுக்குத்தான் நன்கு தெரியும் என்ற நம்பிக்கையில் அரசாங்கத்தின் தலையிடாக்கொள்கையை வலி யுறுத்துகிறார். தலையிடாக்கொள்கையை ஸ்மித்தும் வலியுறுத் தினார் எனக்கண்டோம். ஆனால், ஸ்மித்தின் கொள்கைக்கும் பென் தமின் கொள்கைக்கும் வேறுபாடு உண்டு. மனிதன், தன்னலத் தால் உந்தப்பட்டுதான் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடு கிறான் என்பதை இருவருமே நம்பினர். ஆனால், அவ்வாறு அவன் தூண்டப்படும்போது கண்ணுக்குப் புலனாகாத தெய்வீகக் கரம் ஒன்று அவனுக்கு வழி காட்டுகிறது என்பது ஸ்மித்தின் நம்பிக்கை. இதனை பென்தம் ஏற்றுக்கொள்ளவில்லை. மனிதனுக்கு என்றுமே தெய்வீக சக்தி வழிகாட்டுவதில்லை; அவனது அறிவுதான். பயன் வழிக் கொள்கை மூலம் அவனுக்குத் துணையாயிருக்கிறது என்பது பென்தமின் வாதம். இவ்வாறாக, ஆடம் ஸ்மித் பொருளாதாரத்தை ஒழுக்கநெறியோடு நோக்கினார். பென்தமோ எவ்விதக் கலப்பு மின்றி பொருளாதாரத்தைத் தூய்மையான அறிவியலாகக் கருதினார். பென்தமின் இப் பணி பொருளாதாரச் சிந்தனை வரலாற் றிலேயே சிறப்பானதொரு பணியாகும்.

அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையை பென்தம் வலியுறுத் தியதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. அரசாங்க நடவடிக் கைகள் அனைத்தும் விவேகமற்றதாயும் ஆபத்தானதாயும்தான் இருக்கும் என்பது அவரது எண்ணம். மேலும், தனி நபர்களின் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட்டு அவற்றைக் கட்டுப்படுத் தும்போது, அக் கட்டுப்பாட்டால் தனி நபர்கள் துன்ப உணர் வையே கொள்வர். மாறாக, தனிநபர்களுக்குப் பண உதவி செய்யும் அரசாங்கம் வரியை விதித்துத்தான் அதைச் செய்ய முடியும். ஆனால், வரியென்றாலே சட்டத்தின்மூலம் மக்களைப் பயமுறுத்தல் என்றுதான் பொருள். எனவே, அரசாங்கம் தலை யிடாமலிருக்கும் கொள்கையே சிறந்ததெனக் கண்டார் பென்தம்.

'பயன்' என்ற கருத்திற்கு முக்கியத்துவம் அளித்தவர் பென்தம். இக் கருத்தைக்கொண்டுதான் பின்னால் தோன்றிய ஆஸ்திரியப் பொருளாதார அறிஞர்கள் பொருள்களின் விலை நிருணயத்தை விளக்கினர். தன் பயன்வழிக் கொள்கையின் வழியாக இங்கிலாந்தின் நீதி, சட்டத் துறைகளில் பல சீர்திருத்தங் களைக் கொண்டுவர பென்தம் உதவினார்.

மனிதனின் இயல்பை ஆதாரமாகக்கொண்ட பயன்வழிக் கொள்கையின்மூலம் ரிக்கார்டோ, ஜான் ஸ்டுவர்ட் மில் ஆகி

யோரின் சிந்தனையைக் கவர்ந்தார் பென்தம். இவ்வாறாக, தான் பெரிய பொருளாதார அறிஞர்களின் சிந்தனையைத் தூண்டும் தூண்டுகோலாக விளங்கினார். எனினும், பென்தம் உருவாக்கிய மனிதனோ தன்னிச்சைகொண்டு, தன்னலத்தையே குறிக்கோளாக வைத்து, 'தான்' என்ற எண்ணம் உடையவனாகவே காணப்படுகிறான். ஆனால், மனித உள்ளம் எவ்வாறு செயல்படுகிறதென்ற பென்தமின் விளக்கத்தை நவீன உளவியல் நிபுணர் எவருமே ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

கடுவட்டிக்கு ஆதரவு

பென்தமின் பொருளாதாரக் கருத்தினைச் சித்தரிக்கும் எவரும் அவரது வட்டிக் கொள்கையைப் புறக்கணிக்க இயலாது. தனது பொருளாதாரக் கருத்துகள் அனைத்திற்குமே ஆடம்ஸ்மித்திற்குத் தான் கடமைப்பட்டிருப்பதாக பென்தமே ஒப்புக்கொண்டுள்ளார். வட்டிவாங்கும் பழக்கத்தைக் காரணம் காட்டி ஆதரித்துள்ளார் பென்தம். இன்றும் பென்தமின் கொள்கைகளைக் காணவிரும்பும் எவரும் இதனை நினைவுபடுத்திக்கொள்வர். வட்டி விகிதத்தை அரசாங்கம் ஒழுங்குபடுத்தவேண்டுமென்று ஸ்மித் விரும்பினார். இவ் விருப்பம், மனிதனின் தன்னலக் கொள்கைக்குப் புறம்பானது. எனவே, ஸ்மித்தின் தருக்கம் விபரீதமானதாகவும் தவறானதுமாகவே கருதப்பட்டது. 'பண்டங்களின் விலை எவ்வாறு இயல்பாகவே நிருணயமாகிறதோ, அதேபோன்று வட்டி விகிதமும் இயல்பாகவே நிருணயமாக வேண்டும்' என்பதை பென்தம் வலியுறுத்தினார். வட்டி விகிதத்தை நிருணயிக்கும் எந்தச் சட்டமும் குறைபாடுகள் உடையதாகத்தானிருக்கும் என்பது பென்தமின் கருத்து. அவ்வாறு சட்டம் கொண்டுவரப்பட்டால் பலர் கடனே பெற முடியாது; அவ்வாறே கடன் வாங்கினாலும் அது பாதகமாகத்தானிருக்கும். வட்டியை நிருணயிக்கும் எந்தச் சட்டமும் கடன்காரர்களைப் பல தொல்லைகளுக்கு ஆளாக்கும். கடன் கொடுத்தவர்களுக்கு நன்றிமனப்பான்மையைக்கூடக் காட்டமாட்டார்கள். எனவே, வட்டிவிகித நிருணயத்திலும் அரசாங்கம் தலையிடக்கூடாதென்றே பென்தம் நம்பினார்,

முடிவுரை: பென்தமின் பொருளாதாரக் கருத்துகள் பொதுவாக அவ்வளவு முக்கியத்துவம் உடையவையல்ல. அவரது பயன்வழிக் கொள்கை இங்கிலாந்திலிருந்த பயனற்ற சட்டங்களை நீக்குவதற்குத்தான் பயன்பட்டது. தானியச் சட்டங்களையும் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்குத் தடையாக இருந்த கட்டுப்பாடுகளையும் நீக்க ஓரளவிற்கு உதவின. ஆடம் ஸ்மித்தின் பொருளாதாரக் கருத்துகளையும் கொள்கைகளையும் பொதுவாக ஏற்றுக்

கொண்டாரெனினும், வட்டிவிகிதத்தை ஒழுங்குபடுத்தும் அவரது கொள்கையைப் புறக்கணித்தார் பென்தம். அதோடு, ஸ்மித்தின் இயற்கைத் தத்துவத்தையும் நிராகரித்தார். பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் மனிதனின் தன்னலத்தையும் சுயநல உணர்வையும் அடிப்படையாகக் கொண்டவை என்பதும், மனிதன் எப்போதுமே இன்பதுன்பத்தை உள்ளத்தில் எடைபோட்டு, விவேகமாகவே நடந்துகொள்வான் என்பதும் பென்தமின் நம்பிக்கை. தன் பயன்வழிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரச் சுதந்திரத்திற்கு வாதாடிய பெருமை என்றும் அவருக்குண்டு. மனிதனின் சுதந்திர வாதம்தான் தொன்மைப் பொருளாதார உயிர்நாடி.

9. தாமஸ் ராபர்ட் மால்தஸ் (1766-1834)

(Thomas Robert Malthus)

இங்கிலாந்தின் தொன்மைப் பொருளாதாரத்தின் முப்பெரும் தூண்களில் ஒருவர் தாமஸ் ராபர்ட் மால்தஸ். இங்கிலாந்து நாட்டில் சர்ரே (Surrey) மாவட்டதிலுள்ள ராக்கெரி (Rockery) என்னுமிடத்தில் 1766-ல் பிறந்தவர். வீட்டிற்குக் கடைசி மகன். இவரது தந்தை டேனியல் மால்தஸ் பெரிய பணக்காரர் என்று சொல்லமுடியாது; என்றாலும் நல்ல வசதி படைத்தவர். நல்ல அறிவாளியுங்கூட. பிரான்ஸ் நாட்டின் தத்துவஞானிகளான டேவிட்ஹியூம், ரூசோ (J. J. Rowseau) ஆகியோரின் நண்பர். சிறிது இடதுசாரி அரசியல் நோக்குடையவர். தாமஸ் ராபர்ட் மால்தஸ் பாதிரியாராக வேண்டுமென்பது தந்தையின் ஆசை. எனவே, நல்ல முறையில் படிக்க வேண்டுமென்பதற்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் மகனைச் சேர்த்தார். அங்கு தாமஸ் ராபர்ட் மால்தஸ் கணக்கு, கிரேக்க மொழி, இலத்தீன் மொழி ஆகியவற்றில் நன்கு பயிற்சி பெற்றுச் சிறந்த மாணவன் என்ற முறையில் பல பரிசுகளைப் பெற்றார். 1783ஆம் ஆண்டு தத்துவ இயல், வேத இயல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று பி. ஏ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றார். பின் தன் ஊர்ப்பக்கமுள்ள சிற்றூரில் பாதிரியாகப் பணி புரிந்தார். 1805-ல் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஹெயிலிபரி (Hailybury) என்னும் ஊரில் இந்திய அதிகார வர்க்கத்தினருக்கென்று நடத்திய பயிற்சிக் கல்லூரியில் பொருளாதார, வரலாற்றுப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். தன் வாழ்நாள் முழுவதும் அப்பதவியில் இருந்து சிறப்புடன் பணியாற்றினார். இங்கிலாந்தின் தொன்மைப் பொருளாதார அறிஞர்களில் மூன்றாவதாகக் கருதப்படும் டேவிட் ரிக்கார்டோ இவருடைய நெருங்கிய நண்பர்.

மால்தஸ் பாதிரியாகப் பணியாற்றியபோது, அதாவது 1798-ல் மக்கள் தொகை பற்றிய கட்டுரை' என்னும் தலைப்பில் தன்

பெயரைக் குறிப்பிடாமல் நூல் ஒன்று வெளியிட்டார். அந்நூலை எதிர்த்தோர் எண்ணிலடங்கார். எனவே, அந்நூலைச் செப்பனிட எண்ணி, மூன்றுண்டுகள் வெளிநாடுகளில் பயணம் செய்தார். ஸ்வீடன், நார்வே, ருஷியா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலுள்ள மக்கள்தொகைப் பிரச்சினைகளையெல்லாம் நேரில் கண்டறிந்தார். 1803-ல் தன் பெயருடன், நூலின் தலைப்பைச் சிறிது மாற்றி வெளியிட்டார். இது, முதல் பதிப்பைவிட விரிவானதும் மாறுபட்டதுமாகும். இவ்வாருகத் திருத்தம் செய்துசெய்து மொத்தம் ஆறு பதிப்புகளை வெளியிட்டார். இவர் எழுதிக் குவித்த கட்டுரைகளும் நூல்களும் மிகப்பல. அவற்றுள் முக்கியமானவை, 'அரசியல் பொருளாதாரத் தத்துவங்கள்', 'தானியச் சட்டங்கள்'; 'வாரம்', 'அரசியல் பொருளாதாரத்தின் இலக்கணங்கள்' முதலின. எனினும், மால்தஸ் என்றுலே மக்கள்தொகைப் பிரச்சினை என்றே எல்லாரும் பொருள் கொள்வர். எனவே, ஒரே புத்தகம் எழுதி ஒரே கருத்தை வெளியிட்டவர் என்றும் இவர் பெயர் பெற்றுள்ளார். அக் கருத்தைப்பற்றி ஆராயுமுன், எத்தகைய சூழ்நிலையில் அதனை வெளியிட்டார் என்பதைத் தெரிந்துகொள்ளல் நன்று.

சூழ்நிலை

பிற காரணங்களைவிட, இங்கிலாந்தில் அப்போதிருந்த பொருளாதார நிலையே மிக முக்கியமான காரணம். மால்தஸ் தம் நூலை எழுதுவதற்குமுன் இங்கிலாந்து நாட்டின் விவசாயம் சீர் குலைந்து, ஒரு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது. அந்நாட்டு மக்களுக்கு வேண்டிய உணவுதானியம் போதுமானதாக இல்லை. பஞ்சம் தாண்டவமாடியது. இங்கிலாந்திற்கும் பிரான்ஸிற்கும் நடந்த யுத்தம் காரணத்தால் உணவுப்பொருள் இறக்குமதி தடைப்பட்டது.

அயர்லாந்து நாட்டிலோமக்கள் மிதமிஞ்சி இருந்தனர். இதனை, புகழ்பெற்ற வரலாற்று நிபுணர் கிரீன் (Green) அழகாக வருணிக்கிருர். 'நல்லாட்சி இல்லாத அயர்லாந்து நாட்டில் வறுமை தாண்டவமாடியது; மக்கள் தொகை பெருகப் பெருக வறுமையும் கோர உருவெடுத்து அந் நாட்டை நரகமாக மாற்றிவிட்டது.' இதற்கு முக்கியக்காரணம், அயர்லாந்து நாட்டில் பல ஆண்டுகள் பயிர் விளையாமல் போனதேயாகும்.

அதோடு, இங்கிலாந்து நாட்டில் செயல்பட்ட இரவலர் சட்டமும் (Poor law) திருப்தியாக இல்லை. ஏழைகளுக்கு இச் சட்டத்தின் வாயிலாக உதவி செய்யச் செய்ய சோம்பேறித்தனமும் வறுமையும் அதிகரித்ததே தவிர, குறையவில்லை. போதாததற்கு, தொழிற் புரட்சியினுல் ஏற்பட்ட தொல்லைகள் வேறு. ஆடம் ஸ்மித் காலத்தில் இப் புரட்சி அவ்வளவாக உருவெடுக்கவில்லை. ஆனால் அப்

போது தொழிற்புரட்சியால் ஆயிரக்கணக்கான மக்கள் வேலையிழந்தனர்; கலவரம் அதிகரித்தது; வறுமையால் வாடினர்; கோர நோய்களும் மலிந்துவிட்டன.

இச் சூழ்நிலையில் மால்தஸின் எண்ணம் மக்கள் தொகைப் பிரச்சினையைப் பற்றியதாய் அமைந்ததில் வியப்பில்லை.

மால்தசுக்கு முன்னவர்கள்

மால்தஸ் புதிதாகவோ அல்லது திடுக்கிடும்படியோ ஒன்றும் எழுதிவிடவில்லை. அவருக்கு முன்பே பலர் மக்கள் தொகைப் பிரச்சினை பற்றி விவாதித்துள்ளார்கள். மான்டெஸ்க்யூ (Montesquiese) என்பவர், வசதியான வாழ்க்கை இருந்தால்தான் மக்கள் திருமணத்தைப்பற்றிச் சிந்திப்பர்; பிரசவ பயமும், அழகுபற்றிய அக்கறையும், குழந்தைகளைப் பராமரிக்கத் தயக்கமும் மக்கள் தொகை வளர்வதைத் தடுக்கின்றன என்று கூறியுள்ளார்.

மக்கள் இனம் பெருகுவது நாட்டிற்கு நன்மையே என்று வணிகவாதிகள் கருதினதாகத் தெரிகிறது. மக்கள் அதிகரிக்க அதிகரிக்க அந் நாட்டின் உற்பத்தியும் பெருகும். செல்வமும் வளரும் என்பது அவர்கள் வாதம். இதே கருத்துதான் ஜெர்மனியிலும் வளர்ந்து வலுத்தது. அரசாங்க உயர் அதிகாரிகளாக நியமனம் வேண்டுமாயின் அதற்குத் தகுதியுடையோர் திருமணமானவராய் இருத்தல் வேண்டுமென்பது ஜெர்மனி நாட்டிலிருந்த சட்டம். இவ்வாறாக, மால்தசுக்கு முன்னோடிகளில் பலர் மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஆதரவு தந்துள்ளனர்.

இயற்கைவாதிகள் ஃபிரெஞ்சுக் குடியானவர்களின் வறுமையை நீக்கும் வழிகளில் ஊக்கம் செலுத்தியவர்கள். ஆதலால், வாழ்க்கை வசதிகள் முன்னேறாமல் மக்கள் பெருகுவது கூடாது என்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் மக்கள் நெருக்கத்தைப்பற்றி இங்கிலாந்தில் விவாதங்கள் நடந்தன. ராபர்ட் வாலஸ் (Robert Wallace) என்பவர், 1753-ல் இருந்த பிறப்பு, இறப்பு விகிதங்களைக்கொண்டு மக்கள் தொகை $33\frac{1}{3}$ ஆண்டுகளுக்கு ஒருமுறை இரட்டிக்கும் என்றும், ஒரு கோடி ஆணும் பெண்ணும் 1833 ஆண்டுகளுக்குப் பின் 4120 இலட்சம் பேராகப் பெருகுவர் என்றும் கூறினார். அதோடு, மக்களுடைய தவறுகளாலும், ஒழுங்கீனத்தாலும், அரசாங்கத்தின் குறைபாடுகளாலும் மக்கள் இனப்பெருக்கம் குறைக்கப்படாமலிருந்திருந்தால், வெகு காலத்திற்கு முன்பே பூமி தாங்க முடியாத அளவிற்கு மக்கள் பெருகியிருப்பர் என்றும் சொன்னார். இந்த ஆபத்தான நிலையைத் தடுப்பதற்கு எத்தனையோ வழிகள் உள்ளன. திருமணத்தைக் குறைத்தல், சிசு அழித்தல், மலடாக்கு

தல், உணவு நிலைக்கேற்பக் குறிப்பிட்ட அளவு வசதிற்கு மேற்பட்டவர்களைக் கொன்றுவிடுதல் ஆகிய வழிகளை மக்கள் சாதாரணமாக ஒப்புக்கொள்ளமாட்டார்கள். எனவே, யுத்தமே மக்கள் தொகையைக் குறைக்கும் என்பது வாலஸின் கருத்து.

மக்கள்தொகைக் கட்டுரையை மால்தஸ் எழுதியதன் காரணத்தைப் புரிந்துகொண்டால்தான் மால்தஸை நாம் சரிவர அறிந்துகொள்ள முடியும். வாலஸின் கருத்துகளை மறுக்கும் வகையில் காட்வின் (Godwin) என்னும் அரசியல் அறிஞர் 'அரசியல் நீதி' (Political Justice 1796), 'விசாரணையாளர்' (Enquirer 1797) என்னும் நூல்களை வெளியிட்டார். இவற்றில் முதல் நூலில், மனிதன் எக் குறைவுமின்றி, நிறைவு உள்ளவனாக வாழமுடியும் என்றும், மனிதனின் துயருக்கு அரசாங்கமே காரணம் என்றும் வாதித்தார். இரண்டாவது நூலில் இக் கருத்தை அழுத்தம் திருத்தமாகக் கூறியதோடு, புதிய சில கொள்கைகளையும் சித்தரித்தார். இவை, வருங்காலம் பற்றிய இன்பக் கனவைக் கூறி மக்களை பிரமிக்கச் செய்தன. அவை, 'மனிதன் நற்குணக் குன்றாகத் திகழ்வான்; தீய குணங்கள் அறவே அழிந்துபோகும். எனவே, நீதிமன்றங்களும் சட்டங்களும் தேவையின்றி மறைந்துவிடும். பொருள்களை ஆக்கும் திறனும் வேகமும் உயரும். அதனால் மக்கள் அனைவரும் ஒரு நாளைக்கு அரை மணி நேரம் உழைத்துத் தங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வர். மற்ற நேரமெல்லாம் அவர்கள் மகிழ்ச்சியாக வாழலாம். சுருங்கக்கூறின், மண்ணுலகமே விண்ணுலகமாகிவிடும்' என்ற கற்பனைக் கனவுகண்டார் காட்வின். 'மனிதன் தன் அறிவை நிறைவுள்ளதாக ஆக்கிவிடுவான். திருமண ஆசையே அவனுக்கு வராது. சாவைக்கூட அவன் வென்றுவிடுவான்' என்றும் கூறினார் காட்வின்.

காட்வின் நூலும், அவரது கற்பனையும் நாள்தோறும் உணவருந்தும்போது தந்தை டேனியலுக்கும் மகன் தாமஸுக்கும் விவாதப் பொருளாக அமைந்தது. இவ் விவாதத்தின் விளைவே 'மக்கள் தொகை பற்றிய கட்டுரை'. இவ் விவாதத்தில் தந்தை காட்வினுக்கு ஆதரவாக அவரது கருத்துகளைப் போற்றினார். மகனோ காட்வினின் அளவற்ற நம்பிக்கையைத் தகர்க்க முற்பட்டார். இவ் விவாதமே பல நாள்கள் நீடித்தது. ஒவ்வொரு நாளும் விவாதம் முடிந்ததும், தந்தையை மறுநாள் மடக்கிவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு அன்றுடம் தன் மனத்தில் தோன்றும் கருத்துகளைக் குறித்துக் கொண்டே வந்தார் தாமஸ் மால்தஸ். இந்தக் குறிப்புகளையே 1798-ல் மக்கள் தொகைக் கொள்கை என்ற நூல் வடிவத்தில் வெளியிட்டார். அப்போது 32 வயதே நிரம்பிய,

திருமணமாகாத இளம் பருவம். இளமைப் பருவத்தில் துடுக்குடன் வாதாடவும் எழுதவும் ஆற்றல் பெற்றவர். எனவே, இதன் முதற் பதிப்பு இளமை மிடுக்குடன் எழுதப்பட்ட நூல் எனலாம். காட்வின் கனவைப் பொய்யாக்கும் தீவிர வாதத்தை இங்கே காணலாம். 1803-ல் வெளியான இரண்டாம் பதிப்பில் தீவிர வாதம் மறைந்து நிதானம் மிளிர்வதைப் பார்க்கலாம். ஒவ்வொரு பதிப்பிலும் புது மெருகு ஏற்றிக்கொண்டே போனார். இவர் நூல் வெளிவந்ததும் கதிரவன் ஒளி பட்டவுடன் மறையும் பனியைப்போல் காட்வின் கண்ட சொர்க்கம் மறைந்தது. இதனை யெல்லாம் எண்ணும்போது மால்தஸ் ஓர் அதிர்ஷ்டசாலி எனலாம். கருத்தில் புதுமை இல்லை என்றாலும், காலமும் சூழ்நிலையும் அவரது நூலைப் புகழுடையதாக மாற்றிவிட்டன.

மக்கள் தொகை பற்றிய கட்டுரை (*முதற் பதிப்பு*)

சூழ்நிலையின் காரணத்தால் முதல் பதிப்பு சர்ச்சைக்குரியதோர் சிறுநூலாக அமைந்தது. காட்வினை முறியடிப்பதற்காகத் தம் நூலில் இரண்டு சூத்திரங்களை வெளியிட்டார். ஒன்று, 'மனிதன் வாழ வேண்டுமானால் உணவு அவசியம்'. இரண்டாவது, 'மக்களின் மோக உணர்ச்சி நிலையானதொரு சக்தி. இதனால் மக்கள் எல்லையின்றிப் பெருகக்கூடும்' என்பது. இவ்விரண்டு சூத்திரங்களைக் கொண்டே காட்வினின் சொர்க்க உலகத்தைப் பொய்யாக்க முடியும் என்கிறார் மால்தஸ். இவற்றில் முதல் சூத்திரத்திற்கு விளக்கமே தேவை இல்லை. எந்நாளும் மனிதன் உணவின்றி வாழவே முடியாது. இரண்டாவது சூத்திரத்தைக் காட்வின் மறுத்தார்; எனினும் அவரது மறுப்பிற்குரிய காரணங்களை முறையாகக் கூறவில்லை. ஆண், பெண் இனக்கவர்ச்சி எக் காலத்திற்கும் பொதுவானது, நிலையானதும்கூட. மனிதன் காட்டு மிராண்டியாக வாழ்ந்த நாளிலிருந்து இன்று வரை இக் கவர்ச்சி ஒரே அளவுடையதாகவே இருந்து வந்துள்ளது. எவ்வளவுதான் மனிதனின் அறிவு விரிவடைந்தாலும், இவ்வுணர்ச்சியை அழிக்கவே முடியாது. எனவே, அறிவால் மனிதன் நிறைவு பெற்று நற்குணக்குன்றாகத் திகழ்வான் என்பது பொய். இவ்வாறாக, அறிவால் உடலுணர்ச்சிகளை அழிக்க இயலாது என்பதைக் காட்வினுக்குப் புலப்படுத்த மால்தஸ் கூறுவது; 'தத்துவ மேதைகள்கூட பல் வலியைப் பொறுமையாகத் தாங்க முடியாது' என்பது.

முதல் பதிப்பின் கருத்து எளியது. வாழ்வதற்கு அவசியமான உணவுப் பொருள்கள் அதிகரிக்கும் வேகத்தைவிட, மக்களின் இனப் பெருக்க வேகம் அதிகமானது. எனவே, மக்கள் இனப் பெருக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்தல் அவசியம். இனப் பெருக்கத்திற்குத் தடையாக துன்பம் (Misery), தீச் செயல்கள் (Vice) ஆகிய இரு சக்திகள்

உள்ளன. (இவற்றைப் பற்றிப் பின்னர் ஆராய்வோம்). இதுவே முதல் பதிப்பின் சாரமெனலாம். நூல் வெளி வந்தவுடன் இதைப் பற்றிய கிளர்ச்சியும் விவாதமும் மலிந்தன. மால்தஸைத் தூற்றியோர் பலர்; அவரது கருத்தை எதிர்த்தோர் எண்ணிலடங்கார். மால்தஸ் தம் கருத்தைக் கூறிய பிறகு அதனைச் சீர்தூக்கிப் பார்த்தார். உணர்ச்சி வேகத்தில் முதலில் எழுதிய கருத்துகளை ஒழுங்கு படுத்தவும், அனுபவ அறிவோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் பல்வேறு நாடுகளுக்குச் சென்றார். புள்ளி விவரங்களையும் புதிய பல கருத்துகளையும் கொண்டுவந்தார். அறிவு முதிர்ச்சி பெறப் பல்வேறு நூல்களை விரிவாகப் படித்தார். இதன் விளைவாக இரண்டாம் பதிப்பு 1803-ல் வெளிவந்தது. இது சில குணங்களில் முதல் பதிப்பிலிருந்து பெரிதும் மாறுபட்டிருந்தது. அவர் நடத்திய விவாதங்கள், திறனாய்வுகள் ஆகியவற்றின் பயனாகத் தம் வாதத்தின் ஒரு பகுதியை மாற்ற வேண்டியதாயிற்று. முதல் பதிப்பில் துன்பமும் தீச் செயல்களுமே இனப் பெருக்கத்திற்குத் தடையாகக் கூறப்பட்டன. ஆனால் திருமணமே ஆகாத முதியோர், தனித்திருப்பது, துன்பம் தருவதுமல்ல; தீச் செயல்களுக்கு ஆளாக்குவதுமில்லை என்று கூறி மால்தஸை எதிர்த்தனர். எனவே இரண்டாம் பதிப்பிலும் பிந்திய பதிப்புகளிலும் புலனடக்கம் (Moral restraint) என்னும் புதியதொரு தடை இருப்பதாகவும் சேர்த்துக்கொண்டார். புலனடக்கம் என்பது அறிவால் உந்தப்படுவது. எனவே, முதற் பதிப்பின் சாரமே வலுவிழந்துவிடுகிறது.

இரண்டாம் பதிப்பு

முதல் பதிப்பில் இரண்டு சூத்திரங்களைத் தந்த மால்தஸ், இரண்டாம் பதிப்பில் மூன்று கருத்துரைகளைத் தருகிறார். சூத்திரங்கள் கருத்துரைகளாக மாறுவது குறிப்பிடத்தக்கது. இம் மூன்று கருத்துகளுமே இரண்டாம் பதிப்பிலும் பிந்திய பதிப்புகளிலும் சாரமாக உள்ளன என்றால் மிகையாகாது. அவை:

(1) உணவுப் பொருள்களின் அளவால் மக்கள் தொகைக் கட்டுப்படுத்தப்படுகிறது.

(2) சக்திவாய்ந்த தடைகள் தடுக்காவிட்டால், உணவுப் பொருள்கள் அதிகரிக்கும்போது மக்கள் தொகையும் அதிகமாகும்.

(3) மக்கள்தொகை வளரும் சக்தியைக் கட்டுப்படுத்தி, அதை உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கேற்பச் சமப்படுத்தும் இத் தடைகள் மூவகைப்படும்; அவை: துன்பம், தீச்செயல்கள், புலனடக்கம்.

இவற்றில் முதல் கருத்துரையை விளக்க வேண்டிய அவசியம் இல்லை. உணவில்லையேல் வாழ்வு இல்லை. இரண்டாவது கருத்

துரை பல எண்ணங்களை வெளிப்படுத்துகிறது. அவற்றைச் சிறிது பார்ப்போம்.

ஆமை வேகம், முயல் வேகம்

இரண்டாவது கருத்துரை மிகக் கவனத்துடன் கூறப்பட்டுள்ளதாக மால்தஸ் கருதுகிறார். 'உணவுப் பொருள் அதிகரித்தால், உடனே மக்கள் தொகையும் அதிகரிக்கும்' என்று திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறார். உணவிருக்குமிடத்தில் கடவுள் மக்களைத் தருகிறார்; மக்கள் இருக்குமிடத்தில் உணவை அளிப்பதில்லை.

எனவே, இயற்கையோடு பேராடி மக்கள் உழைத்தாலன்றி, உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிக்க இயலாது. உழைப்பிற்கேற்ப உற்பத்தி பெருகுமா என்றால் அதுவும் கிடையாது. உழைப்பது மக்களுக்கு இன்பம் தருவதும் அல்ல. இவையனைத்தும் மால்தஸின் கருத்துகள். ஆனால் மக்கள்தொகை வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பதோ இனக்கவர்ச்சி. காலப்போக்கு மனதுக்கு இனியது. எனவே, மக்கள் தொகை வளர்ச்சி முயல் வேகத்திலும் உணவு உற்பத்தி ஆமை வேகத்திலும் செல்லும். இக் கருத்தைச் சிறிது ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமாயின், முதல் இரண்டு கருத்துரைகளையும் இணைத்து உண்மை காணவேண்டும்.

தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் இனப்பெருக்க சக்தி இயற்கையிலேயே அதிகம். ஆனால், அவை உயிர்வாழ வேண்டிய இடமும் உணவும் தாராளமாக இல்லை. எனவே, அவற்றின் இன வளர்ச்சி இயற்கையால் நிருணயிக்கப்பட்டுள்ள இடத்தாலும் உணவாலும் கட்டுப்படுத்தப்படுகிறது. மனிதனும் இக் கட்டுப்பாடுகளிலிருந்து தப்பமுடியாது. மனிதனும் இயற்கையால் அளிக்கப்பட்டுள்ள பாலுணர்ச்சியால் உந்தப்பட்டு இனவிருத்தி செய்கிறான். எனினும், பகுத்தறிவு அவனை அவ்வப்போது தடுத்து எண்ணச் செய்கிறது. இந்த எண்ணமின்றி மனிதன் நடந்தால் உணவு வசதியை மீறி மனித இனம் பெருகும். தடையின்றி இயற்கை பெருக்கக்கூடிய மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தையும், சாதாரண சூழ்நிலையில் மனித முயற்சியால் ஏற்படக்கூடிய உணவாக்க விகிதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மக்கள்தொகைப் பிரச்சினையின் தீவிரம் நன்கு விளங்கும். இவ்வாறு கூறியதோடு மால்தஸ் திருப்தி அடையவில்லை. கணிதத்தில், அதுவும் கேம்பிரிட்ஜ பல்கலைக் கழகத்தில், பரிசு பெற்றவர் மால்தஸ். எனவே, உணவு மக்கள்தொகை வளர்ச்சி விகிதங்கள் 25 ஆண்டுகளுக்கொருமுறை எத்தகைய அளவு வளருமென்று கணிதமுறையில் காட்டுகிறார். உணவு உற்பத்தி கூட்டெண் முறையிலும் (Arithmetic progression) மக்கள் தொகை மடிப்பெண் முறையிலும் (Geometric progression) வளரும் என்று குறிப்பிடுகிறார். இதனை விளக்கமாகச் சொன்னால்,

குறைந்து செல் விளைவு விதியின் காரணத்தால் உணவுப் பெருக்கம் 1, 2, 3, 4, 5, 6, ˜, 8, 9, என்ற கூட்டெண்முறையில் அதிகரிக்கும்போது, மக்கள் இனப்பெருக்கம் இயற்கையாக உள்ள பாலுணர்ச்சியின் காரணத்தால் 1, 2, 4, 8, 16, 32, 64, 128, 256 என்ற மடிப்பெண் முறையில் பெருகுகிறது. இக் கணக்கின்படி, இருநூறு ஆண்டுகளில் மக்கள் தொகைக்கும் உணவிற்குமுள்ள விகிதம் 256 : 9 ஆகவும், முந்நூறு ஆண்டுகளில் 4096 : 13 ஆகவும் இருக்குமென்று மால்தஸ் கூறுகிறார்.

மூவகைத் தடைகள்

இவ்வாறு மாறுபட்ட வேகத்தில் உணவும் மக்கள் தொகையும் வளர்ந்து வந்திருக்குமாயின், ஒன்று மக்கள் நிற்கக்கூட இடமின்றி பூமி முழுவதும் மக்கள் தலையாகவேதான் இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு நிகழாமல் இருந்ததற்குக் காரணங்கள் உள்ளன. அவற்றைச் சக்தி மிகுந்த தடைகள் என்கிறார் மால்தஸ். இத் தடைகள் தீச் செயல்கள் துன்பம், புலனடக்கம் என்பன. தீச் செயல்கள் கருவழித்தல், விபசாரம்; சிசுக்கொலை, போர், கொலை என்பனவாகும். இவையனைத்தையும் மனிதனே செய்கின்றான். துன்பம் என்பது இயற்கை சக்திகளின் விளைவாகும். வான் பொய்த்தல், பஞ்சம், பிணி, வைசூரி, காலரா, பிளேக் போன்ற கொள்ளை நோய்கள், பூமி அதிர்ச்சி, வெள்ளம் ஆகியவற்றை துன்பம் எனலாம். புலனடக்கம் என்பது திருமணம் செய்யாதிருத்தல், திருமணத்தைத் தள்ளிப்போடுதல், திருமணமான பின்னும் உடலின்பம் அனுபவியாமை ஆகியவை. இவற்றுள் தீச்செயல்கள் என்றுமே வெறுக்கத்தக்கவை. துன்பமோ மனிதனால் விலக்கப்படுபவை. எனவே இவ்விருவகைத் தடைகளையும் மனிதன் விரும்பமாட்டான். எஞ்சியிருப்பது புலனடக்கம். இதனை எவ்வளவு தூரம் மால்தஸ் வலியுறுத்தினார் என்பதைப் பின்னர் ஆய்வோம்.

மேற்கூறிய மூவகைத் தடைகளையும் பிரிதோர் அடிப்படையில் இருவகையாகப் பிரிக்கின்றார் மால்தஸ். (1) இறப்பு விகிதத்தை அதிகரிக்கும் இயல்புத் தடைகள் (Positive checks). 2 பிறப்பு விகிதத்தைக் குறைக்கும் தவிர்ப்புத் தடைகள். இவ்விரண்டு தடைகளில் இறப்பு விகிதத்தை அதிகரிப்பன மேற்கூறிய துன்பத்தை விளைவிக்கும் வழிகளிலும் தீச்செயல்களுமாகும். இவற்றை அறிவுள்ள மனிதன் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, திருமணம் செய்யாதிருத்தல், திருமணத்தைத் தள்ளிப் போடுதல்; திருமணமான பின்னர் உடலின்பம் நாடாதிருத்தல் முதலியன தவிர்ப்புத் தடைகளாகும். இவற்றையே மால்தஸ் விரும்பினார் என்றால் மிகை

யாகாது. இத் தடைகளில் நவீன விஞ்ஞானத் தடைகளையோ, குடும்பக் கட்டுப்பாடு வழிகளையோ மால்தஸ் சேர்க்கவில்லை.

தவிர்ப்புத் தடைகளை மேற்கொள்வது சாத்தியமா என்ற கேள்விக்கு விடையளிப்பது கடினம். அவற்றைத்தான் மேற்கொள்ளவேண்டும் என மால்தஸ் வலியுறுத்தவில்லை; எனினும், அவற்றைத்தான் விரும்பினார் என்பதை அவரது நூலை முறையாகப் படித்தவர் அறிவர். அவற்றையே விரும்பினார் என்பதற்கு ஆதாரமாக ஒன்றைமட்டும் இங்கு குறிப்பிடுவது நன்று. பெண்மணிகளுக்கு அவர் விடுத்த வேண்டுகோள் பின்வருமாறு; 'இருபத்தேழு அல்லது இருபத்தெட்டு வயதில்தான் திருமணம் செய்வது என்ற உறுதி இருக்கவேண்டுமாயின், மகளிர் அதுவரை காத்திருக்க வேண்டும்; இதனால் ஆண்கள் எவ்வளவு துன்புற்றாலும் அவ்வாறு காத்திருப்பது சாலச்சிறந்தது.' இது வயதான அன்பு மாமாவின் அறிவுரைபோல் தோன்றியது. வயதான அன்பு மாமாவின் அறிவுரைக்கு வாலிப முறுக்கேறிய இளைஞர்கள் செவிசாய்க்க மாட்டார்கள் என கிரே எடைபோடுகிறார்.

மால்தஸ் சமயப் பற்றுடன் நல்லொழுக்க நெறியில் வாழ்ந்த பாதிரியார் என்பது தெளிவு. எனினும், மால்தஸைப்போல் பழிக்கப்பட்டவரும் தூற்றப்பட்டவரும் யாருமே இல்லை. 'நெப்போலியனைவிடக் கொடுமைக்காரர். திருமணத்தை வெறுப்பவர்; இருந்தபோதிலும் திருமணம் செய்துகொண்டவர். ஏழைகளுக்கு உதவ வேண்டாமென்றவர் போரும் கொள்ளை நோயும் அடிக்கடி வரவேண்டுமென்று மன்றாடியவர். சிசுக்கொலையை ஆதரித்தவர்' என்று பலர் இவரைத் தூற்றினர். 'மக்கள்தொகைப் பெருக்கத்தை அறவே வெறுப்பவர். பல குழந்தைகள் பெற்ற தாய்மார்களைக் கொடுமையாக நடத்துபவர். சிசுக்களை விழுங்கும் பேய்' என்றெல்லாம் அவரைப்பற்றிப் பல கதைகள் உண்டு. இவரைப் பேயென்றும் மனித இனத்தை வெறுக்கும் கொடும்பாவி என்றும் கூறுவது மடமை. ஏனெனில் இவரது நூலைப் படிக்காதோர்தான் பெரும்பாலும் இவரை ஏசினர். மால்தஸைப் படிக்காமல் அவரைப்பற்றிக் கேள்விப்படுவோர்தான் பெரும்பாலும் அதிகம். 'ஆடம் ஸ்மித்தை எல்லாரும் புகழ்கிறார்கள்; ஒருவரும் படிப்பதில்லை' என்றார், 'மால்தஸை ஒருவரும் படிப்பதில்லை, எல்லாரும் ஏசுகிறார்கள்' எனலாம். அவர் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தக் கூறும் வழிவகைகள் இரண்டே. திருமணத்தைத் தள்ளிப்போடுதல், திருமணமாகாதவரை கற்புநிலையில் ஒழுகுதல். செய்த உபதேசத்தைத் தானே கடைப்பிடித்துமிருக்கிறார். முப்பத்தொன்பது வயதுவரை பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தார். மக்களுக்கேற்ப உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாது என்பது

இயற்கை விதியாகையால், உணவுக்கேற்ப மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதே நம்மால் முடிந்தது. முயலைத் தூங்கச்செய்வோமானால், ஆமை முயலை வெல்ல முடியும் என்கிறார்.

பிறப்பு விகிதத்தைக் குறைக்க மக்கள் எல்லாரும் பாடுபடாவிட்டால், மக்கள்தொகை மிஞ்சி வறுமை, பிணி, சாக்காடு முதலிய கொடுமைகள் தாண்டவமாடும். விலங்குகளைப்போல் மக்களும் பாலுணர்ச்சியின் விளைவாக 'சேருக்குள் குட்டிகள் போடும் சுண்டெலிகள்போல்' நடந்துகொள்ளக்கூடாது என்று எச்சரிக்கிறார். அவ்வாறு நடந்தால், குபேர நாடு கூட வறுமை நாடாகிவிடும் என்கிறார். இவ் வகையில் மால்தஸின் நூலுக்கு 'நாடுகளின் வறுமை இயல்பையும் காரணங்களையும்பற்றிய ஆராய்ச்சி'என்னும் தலைப்பைக் கொடுத்தால், ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வ இயல்பையும் காரணங்களையும் பற்றிய ஆராய்ச்சி' நூலுக்குச் சிறந்த மறுப்பு நூலாகிவிடும் என்கிறார் ஜேம்ஸ் பொனர் (James Bonar).

திறனாய்வு

மால்தஸின் மக்கள்தொகைக் கொள்கை எவ்வளவு தூரம் உண்மை என்பதை ஆராய்வோம். இன்றும் மால்தஸின் கொள்கையைக் குறைகூறுவோர் இருக்கின்றனர். திகைப்பூட்டும் பொருளாதார நிபுணர் என்றும், வருங்காலம்பற்றிய துன்பநோக்குடையவர் என்றும் அவரைப்பற்றிக் கூறுவது வழக்கமாகிவிட்டது. மால்தஸின் கொள்கையில் காணும் கணக்கு விவரங்களின்படி மக்கள்தொகைப் பெருக்கமும் உணவு உற்பத்தியும் இன்று கிடையாது. அன்று வட அமெரிக்காவின் மாநிலங்களில் மக்கள் தொகை 25 ஆண்டுகளுக்கொருமுறை இரட்டித்தது என்பது உண்மைதான். ஆனால், அவ்வதிகரிப்புக்கூட மக்களின் பிறப்பு விகிதத்தால் ஏற்பட்டது என்று சொல்வதைவிட, பிறநாட்டு மக்களின் குடியிறக்கத்தால் ஆனது என்று கூறுவதே உண்மை. எனினும், இக் கணக்குவிவரங்கள் வசதிக்காகவும் உண்மையை எடுத்துக்காட்டவும் கையாளப்பட்டவைகளே எனக்கொண்டால், இஃது குறையாகாது.

மால்தஸின் கொள்கை 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து இருந்த சூழ்நிலைக்குப் பொருந்துமென்றாலும் மேம்பாடான விவசாயம் நடக்கும் இந் நாட்களுக்குப் பொருந்தாது. மால்தஸ் கனவிலும் நினைக்காத அளவில் டிராக்டர்கள், இரசாயன, உரம், நல்ல தரமான விதைகள், பூச்சி மருந்து, நோய் மருந்து என்று எத்தனையோ வசதிகளைப்பெற்று விவசாயம் வெற்றி நடைபோட்டு வருகிறது. மேலும், போக்குவரத்து வசதிகளால் இன்றைய உலகம் சுருங்கிவிட்டது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள அமெரிக்க ஐக்கியநாடுகள், கனடா, ஆஸ்திரேலியா போன்ற

நாடுகள் ஐரோப்பாவின் தானியக்களஞ்சியமாகச் செயல்பட்டு வருகின்றன. இதனால் உணவுப்பஞ்சம் பறந்தோடுகிறது.

நாகரிக முன்னேற்றத்தாலும் வாழ்க்கைத்தர உயர்வாலும் பிறப்புவிகிதம் குறைந்து மக்கள்தொகை கட்டுப்படுத்தப்படுவதை நாம் அறிவோம். 19, 20ஆம் நூற்றாண்டுகளில் மேற்கத்திய நாடுகளின் வாழ்க்கைத்தர உயர்வு, பெண்கள் கல்வி வளர்ச்சி திருமணங்களை ஒத்திப்போடுதல், பெண்களின் வேலைசெய்யும் நாட்டம், குழந்தைகள் பெற்றால் அழகு குறையுமே என்ற பயம், குழந்தை வளர்ப்பிலுள்ள எரிச்சல் ஆகியவற்றின் காரணமாக இனப்பெருக்கம் வெகுவாய்க் குறைந்துள்ளது. பிரான்ஸ் நாட்டில் அளவுக்கு மிஞ்சிய பிறப்பு விகிதக்குறைப்பால் இனத்தற்கொலை நடந்துவருவதாக அறிகிறோம். ரஷ்யாவில் மக்கள்தொகைக் குறைவை நீக்க 10 குழந்தைகளுக்குமேல் பெறும் தாயாருக்கு 'வீரத்தாய்' என்ற பட்டமும், தங்கப்பதக்கமும் அளிக்கப்படுகின்றன. இதிலிருந்து மால்தஸின் கூற்று வளர்ச்சியுற்ற நாடுகளுக்குப் பொருந்தாது என்பது தெளிவு.

மக்கள்பெருக்கம்தான் வறுமைக்குக் காரணம் என்பது மால்தஸின் கருத்து. வறுமையே மக்கள் பெருக்கத்திற்குக் காரணம் என்ற கருத்து இப்போது உலவிவருகிறது. தற்போதைய மக்கள் தொகைப் பொருளாதார நிபுணர்கள் வாழ்க்கைத் தரத்துக்கும் பிள்ளைப்பேறுக்கும் நெருங்கிய தொடர்புண்டு எனச் சொல்கிறார்கள். வறுமையில் வாடும் மக்களுக்கு உலகில் ஒரே இன்பம்தான் கிடைக்கக்கூடும். அதை அடையும்போது தண்டனை மாதிரி குழந்தைகள் கருவுறுகின்றன. ஆனால் செல்வமிக்கவருக்கோ உலக இன்பங்கள் பல உண்டு. இல்வாழ்க்கை இன்பம் அவற்றில் ஒன்றுதான். ஆதலின், அவர்கள் குழந்தைகள் பெறுவது குறைகிறது. செல்வமிக்க குடும்பங்கள் சிறியதாயிருக்கின்றன என்று அறிஞர்கள் விவரிக்கின்றார்கள். இது ஓரளவிற்கு உளவியல் சார்ந்த விளக்கம். உடலியல் வாயிலாகவும் விளக்கம் தரப்படுகிறது. செல்வமிக்கவர்கள் சத்துள்ள உணவை உட்கொள்வதால், கருதரிக்கும் ஆற்றல் குறைகிறதென்றும் வறியோர் அரைப்பட்டினி கிடப்பதால் அவ்வாற்றல் அதிகரிக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. இது உண்மைதானா என்று ஆராய இதுவல்ல இடம்.

மால்தஸின் கோட்பாட்டை வன்மையாகக் கண்டித்த எட்வின் கேனன் Edwin Cannan) 'பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஒரு வாயோடு மட்டுமின்றி, இரு கைகளோடும் பிறப்பதால், மக்கள் தொகைப்பெருக்கத்தின் காரணமாக உற்பத்தி அதிகரிக்கும்' என்கிறார். இது ஓரளவிற்கே உண்மை. பிறக்கும் குழந்தையின்

கரங்கள் சுமார் 15 அல்லது 20 ஆண்டுகளுக்குப் பின்னரே உற்பத்திக்கு உதவ முடியும். ஆனால் வாய் உடனடியாகச் செயல் புரியத் தொடங்கிவிடுகிறது.

எது எவ்வாறாயினும், பின்தங்கியுள்ள ஆசிய நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள் ஆகியவற்றில் மால்தஸ் கூறிய சோதிடம் நன்றாகப் பலித்துக்கொண்டிருக்கிறது.

இறுதியாக, காட்வின் மனிதனின் அறிவாற்றலை மிகைப் படுத்திக் கூறினர்; மால்தஸோ இனவிருத்திச் சக்தியை மிகைப் படுத்திவிட்டார்.

மால்தஸின் கொள்கைகளும் ஸ்மித்தின் தத்துவங்களும்

அங்காடி : மால்தஸின் கொள்கைகளுக்கும் ஆடம் ஸ்மித்தின் தத்துவங்களுக்கும் உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும், ஆராய்ந்தோமானால், மால்தஸ் ஏன் தொன்மைப் பொருளாதார மும்மூர்த்திகளில் ஒருவராகக் கருதப்படுகிருர் என்பது விளங்கும். பண்டங்களின் விலையை ஆராய்ந்த ஸ்மித், பண்டங்களின் அளிப்பு அவற்றிற்குள்ள தேவையைப் பொருத்து நிருணயிக்கப்படும் என்று வகுத்த விதி நினைவிருக்கலாம். பொருளின் விலை கூடினால் அப் பொருள் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் என்று ஸ்மித் சான்று தந்தார். இந்த விதி எல்லாப் பொருள்களுக்கும் பொருந்தும் என்றும் வலியுறுத்தினர். அதுபோன்றே மக்கள்தொகையும் அவர்களுடைய உழைப்புக்குக் கிடைக்கும் விலையாகிய கூலியைப் பொருத்து அதிகரிக்கும் அல்லது குறையும் என்று ஸ்மித் கூறியுள்ளார். அவருடைய கூற்று வருமாறு :

'பிறபொருளைப் போலவே மனிதன் தேவைப்படும் அளவுக்கே உற்பத்தியாகிருன். இனப்பெருக்கம் மெதுவாக நடக்கும்போது, தேவை அதனை விரைவுபடுத்துகிறது; இனப்பெருக்கம் அதிகமாகி விட்டால், தேவை குறைந்து இனப்பெருக்கத்தைத் தடுத்துவிடுகிறது.'

இதே கருத்தைத்தான் மால்தஸும் தம் நூலின் பெரும்பகுதிகளில் விளக்கியிருக்கிருர். அதிகக் கூலிகொடுத்தால் அதிகத் தொழிலாளர் கிடைப்பர். குறைவாகக் கொடுத்தால் போதுமான உணவின்றி, நோய்வாய்ப்பட்டுப் பலர் மடிவர் தொழிலாளரின் எண்ணிக்கை குறையும் என்பதே மால்தஸின் எண்ணம். மாங்காய்க்கும் மனிதனுக்கும் ஒரே பொருளாதார விதிதான் என்பதைத் தெளிவாக்கியவர் மால்தஸ். இதுவே அவரைத் தொன்மைப் பொருளாதார அறிஞர்களில் ஒருவராக்குவதற்கு முதல் காரணம். அடுத்து, தொன்மைப் பொருளாதாரக் கருத்திற்கு ஆணிவேராக

இருப்பது 'உழைப்பே பொருள்களின் மதிப்பை அளவிடும் சிறந்த சாதனம்' என்பது. அதாவது, உழைப்பு மதிப்புக் கோட்பாடுதான் மிக முக்கியமான தொன்மைக் கருத்தாகும். எனவேதான், இக் கோட்பாட்டை அறிவியல் ரீதியில் விளக்கிக்கூறிய கார்ல் மார்க்ஸ் தொன்மைப் பொருளாதார அறிஞர்களில் கடைசியானவராக வும் கருதப்படுகிறுர். மால்தஸ் இக் கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டுதான் அங்காடியின் பொருள்தேக்கம் என்ற புதுமையான விளக்கத்தைத் தருகிறுர். இது இரண்டாவது காரணமாகும்.

தலையிடாக் கொள்கை

மூன்ருவது காரணம், அவர் ஸ்மித்தின் தலையிடாக்கொள்கையை வலியுறுத்தியது. பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங் கம் தலையிடக்கூடாதென்பது ஸ்மித்தின் ஆணித்தரமான கொள்கை. இக் கொள்கையை மால்தஸ் மனிதப் பெருக்கத் திற்கும் பயன்படுத்திஞர். வாழ்விற்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அதிகரித்தாலொழிய மக்கள்தொகை அதிகரிக்காது. உணவுப் பெருக்கம் ஏற்பட்டால் மக்கள் தொகை தாஞகவே அதிகரித்துவிடும். எனவே, எந்த அரசாங்கமும் மக்கள்தொகை யைப் பெருக்க முயல்வது வீண் முயற்சியாகும். தேவைக்கேற்ப மக்கள் இனம் இயல்பாகவே அமைந்துவிடுமாகையால் இதனை ஒழுங்குபடுத்த அரசாங்கம் முயலக்கூடாது. மால்தஸின் தலை யிடாக் கொள்கைக்குப் பிறிதொரு ஆதாரத்தையும்தர முடியும். அது இரவலர் சட்டம் பற்றியது. அதிக வருமானம் கிடைத்தால் இனப் பெருக்கம்செய்வது தொழிலாளர்களின் பழக்கம். அதனுல்தான் வறு மையில் வாடுகின்றனர். 'அவர்களுடைய வறுமைக்கு அவர்களே காரணம், அரசாங்கம் பொறுப்பல்ல' என்பது மால்தஸின் கூற்று எனவே, இரவலர் சட்டத்தின் மூலம் வறியோருககு உதவி செய்தால், கவலையின்றிப் பிள்ளைகளைப்பெற்றுக்கொண்டே இருப்பர். வறியவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகும். சோம்பலும் மலிவாகிவிடும் என்று கூறிய மால்தஸ் அந் நிலையைப் போக்குவதற்கு ஒரு வழியும் கூறியுள்ளார். இரவலர் சட்டத் தைப் படிப்படியாக நீக்கிவிட்டு, ஏழை மக்கள் திருமணம் செய்யும் சடங்கில், 'தம் குழந்தைகளைத் தாமே காப்பாற்றுவதாக' உறுதி மொழி எழுதித் தரும்படி அரசு ஏற்பாடு செய்யவேண்டும். இக் கொள்கைக்கும் தலையிடாக் கொள்கைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது. மால்தஸின் இக் கருத்தே அன்றைய ஆங்கிலேயர்களின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. தொழிலதிபர்களும் நிலக்கிழார்களும் இதனை வரவேற் றனர். ஏழைகளும் எளியவர்களும் மால்தஸை 'ஈரக்கமற்ற அரக்கன்' என்றனர்.

குறைந்து செல் விளைவு விதி

மால்தஸ் தம் மக்கள்தொகைக் கோட்பாட்டிற்கு ஆதரவாகக் குறைந்து செல் விளைவு விதியைப் பயன்படுத்தினார். உணவுப் பொருள் உற்பத்தி ஏன் மெதுவாகக் கூட்டெண் விகிதத்தில் அதிகரிக்கின்றது என்பதற்கு இவ் விதியையே ஆதாரமாக்கினார். நிலம் 'குறைந்துகொண்டே போகும் பயன்களைத்தான் அளிக்கும்' என்னும் இவ் விதியைக் கூறி, தொன்மை நூல் கோட்பாடுகளில் ரிக்கார்டோவுக்கு உறுதுணையாகிறார்.

பொதுவாக, ஸ்மித்தின் பொருளாதாரக் கொள்கைக்கே மால்தஸ் ஆதரவு தந்தாரெனினும், ஒரு சில இடங்களில் ஸ்மித்திற்கு நேர்மாறான கொள்கையுடையவராயும் இருந்தார் எனலாம். மக்கள்தொகைப் பெருக்கத்தால் துன்பப்பட்ட இங்கிலாந்து நாட்டிற்குத் தடையிலா வாணிபக் கொள்கையையே மால்தஸ் வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் தடையிலா வாணிபம் பொதுக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப் பட்டாலும், தானியச் சட்டங்களை மால்தஸ் ஆதரித்துப் பேசினார். இதற்குத் தகுந்த காரணம் உண்டு. தானியச் சட்டங்களின் வாயிலாக விவசாயத் துறைக்குப் பாதுகாப்பு கிடைத்தால்தான் உணவுப் பொருள்களின் விலை ஏற்றமடைந்து, அதனால் அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய விவசாயிகள் தூண்டப்படுவர் என்பது மால்தஸின் கருத்து. எனவே, தானியச் சட்டங்கள் நிரந்தரமாக இருக்கவேண்டுமென மால்தஸ் கருதியதாக நினைக்கக் கூடாது. கணிசமான அளவு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது ஆபத்து என்றும் கூறியுள்ளார்.

அடுத்து, தன்னலத்தின் பண்பால் உந்தப்பட்டு மக்கள் தொழில் செய்யும்போது பொதுநலமும் பேணிக் காக்கப்படும் என்பது ஸ்மித்தின் நம்பிக்கை இது எவ்வாறு நிகழ்கிறது என்பதை விளக்க 'கண்ணுக்குப் புலனாகாத தெய்வீகக் கரம்' என்ற கருத்தைப் புகுத்தினார். எதிலும் அவநம்பிக்கையே கொண்டிருந்த மால்தஸ் இதைக் கண்மூடித்தனமான நம்பிக்கையாகக் கருதுகிறார். புலனடக்கத்தில் மால்தசுக்கு அவ்வளவு நம்பிக்கை கிடையாது எனவே, வளர்ந்துவரும் மக்கள் தொகையைச் சரிப் படுத்த இயற்கைச் சக்திகளையே பெரிதும் நம்பினார். இச் சக்திகளோ துன்பம் தருபவை. அச் சக்திகள் செயல்படும்போது, இனப்பெருக்கம் அதிகமாகிவிட்டது; எனவே, இயற்கையே நமக்கு எச்சரிக்கை விடுக்கிறது எனப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார்.

பொருள் தேக்கக் கோட்பாடு (Theory of market gluts)

மால்தஸின் 'அரசியல்பொருளாதாரத் தத்துவங்கள்' (Principles of political economy) என்னும் நூல் 1820-ல் வெளியானது. இதே

நூல் 1836ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டது. இந் நூலில் மால்தஸ், செல்வம், விலைக் கோட்பாடு, கூலி, பணத்தின் மதிப்பு, பொருள் தேக்கக் கோட்பாடு ஆகியவற்றை விளக்குகிறார். இந் நூல் அண்மைக்காலம் வரை புறக்கணிக்கப்பட்டதெனலாம். 1935ஆம் ஆண்டு மால்தஸ் மறைந்த நூற்றாண்டின் நினைவாகக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக அதிகாரிகள் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து அதில் ஜேம்ஸ் பொனூர், சி. ஆர். ஃபே (C. R, Fay), ஜே எம். கெயின்ஸ் ஆகிய மூவரையும் பேச அழைத்திருந்தனர். முதல் இருவரும் மால்தஸின் வாழ்க்கையைப் பற்றியும், அவரது மக்கள் தொகைக் கோட்பாட்டையும் பற்றிப் பேசி முடித்தனர். கெயின்ஸ் பிரபு அவர்களோ, மால்தஸின் பொருளாதார நூலைப் பற்றிப் பேசி, மால்தஸின் நுட்பமான ஆராய்ச்சித் திறனுக்கு அவரது பொருட் தேக்கக் கோட்பாட்டைச் சான்றாகக் கூறினார். அதோடு, தாம் எழுதிய பொதுக்கோட்பாடு என்னும் நூலில் மால்தசுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார். எனவே, பொருள் தேக்கக் கோட்பாடு என்ற கருத்தும் மால்தசுக்குப் புகழைத் தேடிக் கொடுத்துள்ளது. அக் கருத்தை இங்கு ஆய்தல் நன்று.

அங்காடியில் நிலவும் தேவை, அளிப்பு ஆகிய இரு சக்திகளும் தாமாகவே ஒன்றுக்கொன்று சமன்பாட்டை அடைந்துவிடுமென்பது ஸ்மித்தின் கருத்து. ஜே. பி. ஸே. அவர்கள் அங்காடிவாதியின் (The Law of the market) வாயிலாக அதனை நிரூபித்தார். எனவே பொருளாதாரச் சக்கரம்தடையின்றிமுன்னேறிக்கொண்டே இருக்கும் என்பது இவர்களது கருத்து. இதற்கு மாறாக, மால்தஸ் நாடுகளின் பொருளாதாரம் மாறி மாறி வரும் மந்தத்தினால் சீர்குலைய நேரும் என்ற கருத்தை எண்பித்தார். இதன் வாயிலாக ஸ்மித்தின் சுதந்திரவாதக் கொள்கையில் குற்றம் கண்டுபிடித்த முதல் அறிஞர் ஆகிறார். அவரது பொருள் தேக்கக் கோட்பாட்டை அறிய ஸேயின் விதியைப் பற்றித் தெரிந்துகொள்ளல் நன்று.

ஆடம் ஸ்மித் தேவைக்கேற்ப அளிப்பு தானாகவே சரிப்படும் என்றார். இதனைத் தலைகீழாக மாற்றி ஜே. பி. ஸே தேவை அளிப்பிற்கேற்ப அமையும் என்கிறார். 'ஒவ்வொரு அளிப்பும் அதன் தேவையைத் தானே ஏற்படுத்தும்' என்பதே ஸேயின் அங்காடி விதி, பொருள்கள் பணத்திற்காக அன்றி பொருள்களுக்காகவே பரிவர்த்தனை ஆகின்றன என்றார் ஸே. இதன் மூலம் பரிவர்த்தனைச் சாதனம் மட்டுமே பணம் என்று கூறினார். ஒருவன் 10 பேனாக்களை உற்பத்தி செய்து விற்றால் அவனுக்கு ரூ. 20 கிடைக்கும். எனவே, அவனிடம் 20 ரூபாய்க்கு வாங்கும் சக்தி இருக்கும். அச் சக்தியினால் அங்காடியில் தேவை ஏற்படும்.

மற்ருருவனிடம் 20 புத்தகங்கள் இருந்தால் அவற்றை 100 ரூபாய்க்கு விற்பான். அப்போது 100 ரூபாய்க்கு வாங்கும் சக்தி இருக்கும். நாட்டு மக்கள் யாவரும் தங்கள் உற்பத்தியை எவ்வளவு தூரம் அதிகரிக்கின்ருர்களோ, அந்த அளவுக்கு அவர்களது வாங்கும் சக்தியும் தேவையும் அதிகரிக்குமென ஸே கூறினர். அவ்வாருயின், உற்பத்தியான பொருள்கள் அனைத்தும் விற்கப்படும். விற்கப்படாத பொருள்களே இராது. அதாவது, 'பொருள்களின் தேக்கம்' ஏற்படவே செய்யாது ஓரிரு பொருள்கள் வேண்டுமானல் அதிக அளவு உற்பத்தி யாகி, தேவையின்றித் தேங்கலாம். அப்போதுகூட அத் தேக்கம் நிரந்தரமானதாகாது. ஏனெனில் விற்காத அப் பொருள்களால் உற்பத்தியாளர் நட்டம் அடைவர். அவ்வுற்பத்தியில் ஈடுபட்ட காரணிகள் நட்டம் பெறும். இந் நிலையில் காரணிகளில் சில வேறு தொழில்களுக்குச் செல்லும். அதனல் உற்பத்தி குறைந்து அப் பொருள் தேவைக் கேற்பச் சமமாகும் என்ருர் ஸே. இவ்வாறு, ஓரிரண்டு பொருள்களில் தற்காலிகத் தேக்கம் ஏற்படலாமேயன்றி, எல்லாப் பொருள்களும் ஒரே சமயத்தில் நீண்ட காலம் தேங்கி இருப்பது சாத்தியமல்ல என்பதே ஸேயின் விளக்கம். இங்கு, வருமானம் அனைத்தும் நுகர்ச்சிக்காகவோ அல்லது முதலீட்டிற்காகவோ செலவழிக்கப்படுகிறது என்று அனுமானிக்கப்படுகிறது. வருமானம் பெறுவோர் சேமிக்காமல் அல்லது முடக்காமல் எல்லா வருமானத்தையும் செலவிடும் நிலையில்தான் ஸேயின் விதி உண்மையாயிருக்கும்.

இவ் விதி தவருனதென்றே மால்தஸ் கருதினர். தொழிற் புரட்சியின் காரணத்தாலும், ஆங்கிலேய – பிரெஞ்சுப் போராலும் விளைந்த பிரச்சினைகளையெல்லாம் நேரில் கண்டறிந்தவர் மால்தஸ். உற்பத்தியான பொருள்களை விற்க முடியாது துன்பப்பட்டனர் பல தொழிலதிபர்கள். உற்பத்தி செய்வதற்காக எந்திரங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டதால் இலட்சக் கணக்கான மக்கள் வேலையின்றித் தவித்தனர். எனவே, பொருள்கள் தேக்கமடைவது சாத்தியமே என உணர்ந்தார் மால்தஸ். இதனை அறிவியல் ரீதியில் விளக்கவும் முற்பட்டார்.

மால்தஸ் உழைப்பையே விலை மதிப்பிடும் சாதனமாகக் கருதினர். பொருள்களின் உற்பத்தி தொடர்ந்து நடைபெற வேண்டுமானல் அப் பொருள்களை வாங்கும் சக்தியும் மனமும் மக்களிடம் இருக்க வேண்டும். உழைப்பைக் கொண்டுதான் பொருள்கள் வாங்கவும் விற்கவும் படுகின்றன. எனவே, பொருள்களின் தேவை உழைப்பின் வழியாகவே பிறக்கிறது. இவ்வுழைப்பு ஆக்கமுள்ளதாக இருக்கலாம் அல்லது ஆக்கமற்றதாகவும் இருக்கலாம். இவ்

வாருக, உழைப்பு உற்பத்திக் காரணியாக மட்டுமன்றி, தேவையின் முக்கியப் பகுதியாகவும் உள்ளது.

எனவே, நாட்டின் தேவை சக்தி அதிகமாக இருக்க வேண்டுமாயின், உழைப்போருக்கு உகந்த கூலி தேவை. உற்பத்தியாளர்கள் கூலியைக் குறைத்தால் நாட்டின் வாங்கும் சக்தி குறைந்துவிடும். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் உழைப்பாளிகளாகவே இருக்கும்போது, கூலியைக் குறைப்பது தற்கொலைக்குச் சமம். பெரும் பெரும் எந்திரங்களைப் புகுத்தி, வேலைப் பகுப்பையும் மேற்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்து தள்ளினால் அவற்றை வாங்குவதற்குரிய சக்தி மக்களிடம் இருக்கவேண்டும். ஒரு முதலாளி மற்ற முதலாளிகளை நம்பி உற்பத்தி செய்வது இல்லை. மக்களை நம்பித்தான் உற்பத்தி செய்கின்றான். எனவே, உற்பத்திச் சக்தி நாட்டில் அதிகமாகி, வாங்கும் சக்தி குறைவாயிருந்தால் பொருள்கள் விற்பனையாகாமல் தேங்குவது நியாயமே. இவ்வாறாக, ஜே. பி. ஸே. அவர்களின் அங்காடி விதியைப் பொய்யாக்கினார் மால்தஸ்.

இவ்வாறு ஏற்படும் பொருள் தேக்கத்தை நீக்க வழியும் கண்டார் மால்தஸ். அவ் வழி முறைகள் அக் காலத்தில் நிந்திக்கப்பட்டன; மூடத்தனமானவை என்றும் கருதப்பட்டன. ஆனால் கெயின்ஸ் பிரபு அவ் வழிவகைகளை நுட்பமானதென்கிறார். அவ் வழிவகைகள்தாம் யாவை? ஒரு பகுதி மக்களை உற்பத்தி, உழைப்பு என்று பார்க்காமல் அதிகமாகச் செலவழிக்கும்படி வைக்க வேண்டும். பண்டைக்கால மன்னர்கள் நூற்றுக் கணக்கான வேலையாள்களை வைத்துச் சம்பளம் கொடுக்கவில்லையா? அதேபோன்று ஆக்கமில்லாத வகையில் செல்வந்தர்கள் செலவு செய்தால் வறுமையால் வாடும் மக்களுக்கு வருமானம் கிட்டும்; வாங்கும் சக்தி நாட்டில் உயரும். தேங்கிக்கிடக்கும் பொருள்கள் விற்பனையுமாகும். இது கெயின்ஸ் பிரபுவின் அரசாங்க முதலீட்டைப் போன்றது என்று யாரும் நினைக்கவேண்டாம். எனவே, இக் கருத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். மேலும் இந்த யோசனை அரசாங்கம் பொருளாதாரத் துறையில் தலையிடுவது அவசியமென்று கூறுவதாகவும் உள்ளது. அக் காலத்திய மக்களின் மனப்பான்மைக்கு இது பொருந்தவில்லை. எனவே, தெளிந்த அறிவுடனும், நுண்ணிய ஆராய்ச்சித் திறனுடனும் மால்தஸ் விளக்கிய மெய்யான கருத்தை யாவரும் புறக்கணித்தனர். அண்மையில் ஜே. எம். கெயின்ஸ் தமது நூலில் மக்களின் வாங்கும் சக்தியின் வளர்ச்சியையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி எழுதும்போது மால்தஸின் பொருள் தேக்கம் என்ற கருத்துக்குத் தாம் மிகவும் கடமைப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார். அதோடு, இக் கருத்தை மக்கள் புறக்கணித்ததற்கு வருந்தவும் செய்கிறார். '19ஆம் நூற்றாண்டின் பொருளாதார அறி

ஞர்கள் மட்டும் ரிக்கார்டோவிற்குப் பதிலாக மால்தஸைப் பின்பற்றி யிருந்தால், இவ்வுலகம் எவ்வளவோ செழுமையானதாயும் விவேக மானதாயும் இருந்திருக்கும்' என்கிறார்.

குத்தகை

மால்தஸ் 1815-ல் எழுதிய 'குத்தகையின் இயல்பும் வளர்ச்சியும்' என்னும் நூலில் குத்தகையைப்பற்றி விளக்கியுள்ளார். ரிக்கார்டோ வின் குத்தகைக் கோட்பாட்டின் சாரத்தை இங்கு காணலாம். விவ சாயிகள் நிலச் சுவான்களுக்கு ஏன் குத்தகை தருகிறார்கள் என்ப தற்கு மால்தஸ் தரும் காரணங்கள் வருமாறு :

வளமான நிலம் ஏராளமாக இருந்தால் நிலச்சுவான்தாருக்கு எவனும் குத்தகை தரமாட்டான். பின்னர், வளங்குறைந்த நிலம் சாகுபடியாகும்போது, அந் நிலத்தின்உற்பத்திச் செலவுக்கேற்பவே விளைபொருளின் விலை இருக்கும். இவ் விளக்கத்திலிருந்து மால்தஸ் நிலவளம் பலதரப்பட்டது என்பதையும், அதனால் கீழ்த்தர நிலத் தைப் பயிர் செய்தால் உயர்தர நிலமுடையோருக்கு இலாபம் அதி கரிக்கும் என்பதையும் அறிந்திருந்தார் எனலாம். ரிக்கார்டோ தன் கோட்பாட்டை இவ் வகையில்தான் ஆரம்பிக்கிறார். எனவே, ரிக்கார்டோவின் கோட்பாட்டிற்கு மால்தஸ் முன்னுரை தருகிறார் எனலாம்.

அடுத்து, விவசாயப் பொருள்கள் ஏன் அதிக விலைக்கு விற்கப் படுகின்றன என்பதையும் ஆய்கிறார். நிலத்தில் விளையும் பொருள் கள் அதிகமானால் மற்ற பண்டங்களைப்போல் மலிவாக விற்காது என்பது அவர் கூற்று. பிற பண்டங்களுக்கு ஏற்படும் தேவை வரையறை பெற்றது. உணவுப் பொருள்களின் தேவையோ வளர்ந்து கொண்டே போகும். ஏனெனில் உணவுப் பொருள்கள் பெருகப் பெருக மக்கள்தொகை அதிகரிக்கும். அதனால் அவற்றிற் கேற்படும் தேவையும் பெருகும். இது, அவரது மக்கள் தொகைக் கொள்கைக்குப் பொருத்தமான விளக்கம். அவ்வாறு உணவுப் பொருள்களின் விலை ஏறினால், நிலச்சுவான்கள் நல்ல இலாபம் பெறுவர். எனவே, வருங்காலத்தில் குத்தகை கூடிக்கொண்டே போகும் என்பது அவர் கருத்து.

மதிப்புரை

காட்வினுடைய மனித முன்னேற்றக் கொள்கையை மால்தஸ் கண்டித்ததாகக் கூறினோம் மக்களின் இன்னல்களுக்கு அரசாங்கம் தான் காரணம்; அரசாங்கம் மறைந்து மக்கள் நலம் பெறும் காலம் வரும் என்று காட்வின் கூறினார். மால்தஸ் இதனை மறுத்தார். மக்கள் இனப்பெருக்கத்தின் காரணமாக சமூகத்தில் துன்பங்களும் தீச் செயல்களும் என்றும் காணப்படும் என்றும், மக்கள் பெருக்கத்தைக்

குறைத்தாலன்றி விமோசனம் இல்லை என்றும், குறைப்பது கடினம் என்றும் மால்தஸ் வாதம் புரிந்தார். இதற்குப் பலவித மறுப்புகள் அவர் வாழ்நாளிலேயே வந்தன. எனினும், மால்தஸின் கொள்கையை உலகிலிருந்து களைய முடியவில்லை. இன்றும் அது அடிக்கடி ஆளப்படுகிறது. அவர் கொள்கை அக் காலத்தில் வேரூன்றியதற்குக் காரணம், அக் காலத்தியப் பொருளாதாரச் சூழ்நிலைக்கு அது பொருத்தமாக இருந்ததேயாகும். முதலாளிகளுக்கும் நிலக்கிழார்களுக்கும் அவரது விளக்கம் பாதுகாப்பாக இருந்தது. ஏற்றத்தாழ்வுடைய சமூகத்தில்தான் தனி மனிதர்கள் மக்கட் பேற்றை உரிய முறையில் குறைத்துக்கொள்வர் என்ற மால்தஸ் கொள்கை, அக் காலப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் சமூக அமைப்பையும் உறுதி செய்வதாக இருந்தது. எங்கல்ஸ் (Engels), மார்க்ஸ் ஆகியோரும் மால்தஸின் கொள்கையை முதலாளித்துவத்தை எதிர்க்கப் பயன்படுத்திக் கொண்டனர். ஆகவே, மால்தஸின் கொள்கைக்குச் செல்வாக்குக் குறைந்துவிடவில்லை.

மால்தஸ் மக்கள் தொகைப் பிரச்சினையை அறிவியல் ரீதியில் தெளிவாக ஆராய்ந்த முதல் அறிஞர் எனலாம். தன்னலமும் பொருள் திரட்டும் ஆர்வமுமே பொருளாதாரத்திற்கு ஆதாரம் என்றார் ஆடம் ஸ்மித். மால்தஸ் மக்கள் தொகையையும் ஆதாரமாகக் காட்டிப் பொருளாதார அறிவியலின் வளர்ச்சிக்கு மேலும் ஓர் அடிக்கல் நாட்டினார். ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டிற்கும் ஆரம்பமாக மால்தஸின் கொள்கை அமைந்துள்ளது.

சமூக அறிவியல்களில் மக்கள்தொகை பற்றிய அறிவியல் (Demography) ஒரு பிரிவாகும். இவ்வியலுக்கு அடிக்கல் நாட்டியவர் மால்தஸ் என்றால் மிகையாகாது. பொருளாதாரக் கொள்கையைப் புனைவதில் சிறந்தவர் ஆடம் ஸ்மித். பணவியலுக்கு வழி காட்டியவர் டேவிட் ரிக்கார்டோ என்றால், சமூகப் பொருளாதாரத்திற்கு நம்மை அழைத்துச் செல்பவர் மால்தஸ் எனலாம். பொருளாதாரம் என்ற சொல்லிற்குச் சிக்கனம் என்ற பொருள் உண்டு. அச் சிக்கனத்தை மக்கள்தொகையில் வலியுறுத்தியவர் இப் பாதிரி. இன்று எல்லா நாடுகளும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் அக்கறை கொண்டுள்ளனவென்றால் அதற்கு மால்தஸின் கொள்கையே காரணம் எனலாம்.

உயிரியல் அறிஞரான டார்வின் (Darwin) தாம் உயிரியல் பற்றிய ஆராய்ச்சியை நடத்திப் பலவிதிகளைப் புனைவதற்கு மால்தஸின் கொள்கைகளும் துணை செய்தன என்று கூறுகிறார். உயிரின வளர்ச்சிக்கும் அவற்றின் உணவின் அளவுக்கும் உள்ள தொடர்பை

ஆய்ந்து, தகுதியானவையே உயிர் வாழும் என்ற அவரது தத்துவத்திற்கும் மால்தஸின் கொள்கைக்குமுள்ள தொடர்பு தெளிவானது.

பொருள்தேக்கக் கோட்பாட்டில் வலுவுள்ள தேவையின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் உணர்ந்தவர் மால்தஸ். ஆனால் இவ்வுண்மை சமீபகாலம்வரை புகைமண்டலத்தில் மறைந்து மங்கி இருந்தது. அப் புகைமண்டலத்தைப் போக்கி அவ்வுண்மை ஒளியை உலகிற்குத் தந்தவர் ஜே. எம். கெயின்ஸ். எனவே, மால்தஸ், மக்கள்தொகைக்கொள்கையைஎழுதாமலிருந்திருந்தாலும் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் அவருக்குச் சிறப்பிடம் கிடைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

மால்தசும் நவமால்தூசியர்களும்
(Malthus and Neo-Malthusians)

மக்கள் இனப்பெருக்கத்தைக் குறைக்க வகுத்த தவிர்ப்புத் தடைகளில் நவீனக் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளை மால்தஸ் சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டோம். இக் கட்டுப்பாட்டு முறைகள் அவரது காலத்தில் இல்லை என்றும், இருந்திருந்தால் அவற்றைச் சேர்த்திருப்பார் என்றும் நவமால்தூசியர்கள் கருதுகின்றனர். மால்தஸ் கூறிய வழிவகைகள் திருமணம் செய்யாதிருத்தல், திருமணத்தை தள்ளிப்போடுதல், திருமணமான பின்னர் புலனடக்கத்தை மேற்கொள்ளல் ஆகியவையே. இவ் வழிவகைகள் அனைத்தும் சாதாரண மனிதனால் கடைப்பிடிக்க இயலாதவை. எனவே, இனப்பெருக்கத்தைக் குறைக்கச் சிறந்த வழிகள் நவீன அறுவைச் சிகிச்சை முறைகளும், கருத்தடைச் சாதனங்களுமே என்பது இவர்கள் கொள்கை. மால்தஸ் நவீன வழிவகைகளை ஆதரித்திருப்பாரா என்பதே கேள்வி. இதற்கு விடையளிக்க மால்தஸ் புலனடக்கத்தை எவ்வளவு தூரம் நம்பினார் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

தனது மக்கள்தொகைக் கொள்கை நூலின் இரண்டாம் பதிப்பில் புலனடக்கத்திற்குச் சிறப்பிடம் தந்த மால்தஸ் பிந்திய பதிப்புகளில் அதன்மீது நம்பிக்கையற்றவர்போல் காணப்படுகிறார். இரண்டாம் பதிப்பில் அவர் கூறுகிறார்: 'மக்கள்தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்கு இயற்கைக்கு மாறான, மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட எந்த வழிவகையையும் நான் கூறமாட்டேன். நான் கூறும் வழிவகைகள் அனைத்தும் அறிவுக்கும் மத போதனைகளுக்கும் உட்பட்டவை.' அதோடு, விபச்சார வகுப்பினரையும் மால்தஸ்

கண்டித்துள்ளார். திருமணத் தம்பதிகள் முறையான வழியில் உடலின்பம் கொள்வதுதான் சிறந்தது என்றும் வலியுறுத்தியுள்ளார். கருத்தரிக்காதவகையில் அவர்கள் இன்பம் துய்த்தால், அவர்களுக்கிருக்கும் உண்மையான அன்பு தளர்ந்துவிடும்; பெண்மைக்கும் அது பெருமையல்ல என்று கூறுகிருர். ஆனுல், இக் கருத்தைப் பிந்திய பதிப்புக்களில் வலியுறுத்தவில்லை. புலனடக்கத்தை மேற்கொள்வதிலுள்ள துன்பங்களையெல்லாம் உணர்ந்தவராய், 'தீங்கு விளையாத முறையில் உடலின்பம் பெறும் வழிக்கு நம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும்' என்று பின்னர் கூறுகிருர். இதுவே நவ மால்தூசியர்களின் வழிவகைகளுக்குத் தொடக்க உரையாகும்.

மால்தஸின் வழிநடப்போர் என்றும் நவீனக் குடும்பக் கட்டுப்பாட்டு வழிவகைகளுக்கு ஆதரவு தருவோர் என்றும் கருதப்படும் நவ மால்தூசியர்களில் முதல்வர் ஃபிரான்சிஸ் பிளேஸ் (Francis Place) என்பவர். 15 பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் லண்டன் நகர தையல்காரர். இவர் நவீன மால்தூசிய இயக்கத்தை 1820-ல் தொடங்கிஞர். எனினும், 1877 ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் இவ்வியக்கம் செயல்பட ஆரம்பித்தது எனலாம் இங்கிலாந்தில் ஆரம்பமான இவ்வியக்கத்தில் சார்லஸ் பிராட்லாவ் (Charles Bradlaugh) திருமதி. அன்னிபெசன்ட் (Mrs. Annie Besent) ஆகியோர் பெரும்பங்கு வகித்தனர். பின்னர், இவ்வியக்கம் அமெரிக்காவிற்கும் இதர ஐரோப்பியநாடுகளுக்கும் பரவி, இன்று உலகெங்கும் புகழ்பெற்றுள்ளது. இந் நவீன இயக்கத்திற்கு ஆங்கில மாது திருமதி. மேரி ஸ்டுப்ஸ் (Mrs. Mary Stopes), அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி. மார்க்கரெட் சாங்கர் (Mrs. Margaret Sanger) ஆகியோர் பேராதரவு தந்து அதனைப் பரப்பியுள்ளனர் எனலாம்.

நவ மால்தூசியர்களின் அடிப்படையான கருத்துகள், வாதம், வழிவகைகள் அனைத்தும் மால்தஸின் கொள்கைக்குப்புறம்பானவையாகும். நவ மால்தூசியர்களின் கருத்துப்படி, இனக் கவர்ச்சி என்பது வேறு; இனப்பெருக்க ஆசை என்பது வேறு. இவ் வேறுபாட்டை மால்தஸ் புரிந்துகொள்ளவில்லை இரண்டையும் ஒன்ருகக் கலந்து, குழப்பமாகவே அவர் பேசிஞர். உடலின்பம் கொள்ளும் ஆசை எல்லாருக்கும் இயல்பானது, பொதுவானது, உடலுறுப்புகள் தொடர்புடையது. இவ்வாசை, சமூகப் பழக்க வழக்கங்களுக்கும், ஒழுக்கச்சார்பிற்கும் அப்பாற்பட்டது. ஆனுல் குழந்தைபெறவேண்டுமென்ற ஆசையோ அவ்வாறல்ல. அது தனிப்பட்டோரின் நம்பிக்கையையும் எண்ணத்தையும் சமூகக்

கண்ணோட்டத்தையும் பொருத்தது இதற்குச் சான்றுகள் வருமாறு :

மனு நீதியில் (The Law of Manu) நம்பிக்கையுடைய பித்தர்கள் தம் குழந்தைகளின் வழியாகத் தமக்கு விண்ணுலகம் கிட்ட முடியும் என்ற நம்பிக்கையில் மக்கட் பேற்றை விரும்பலாம்; பழங் காலக் கிரேக்கர்களும் ரோமானியரும் குழந்தை பெறுவதைப் புனித மான, நாட்டுப்பற்றுடைய கடமையாகக் கருதினர். செல்வந்தர்கள் தம் செல்வத்தை அனுபவிக்கக் குழந்தைகள் வேண்டுமெனக் கருதலாம். குழந்தைகள்தாம் நமக்குச் செல்வமெனக் கருதும் ஏழை எளியோர், குடும்ப வருமானம் அதிகரிக்கவேண்டுமென்பதற்காக மக்கட் பேற்றினை நாடலாம்.

அதேசமயம் பிள்ளைகளே வேண்டாமென்று கூறுவோர் அதிக மில்லையெனினும், ஒன்றிரண்டுக்குமேல் வேண்டாமெனப் பலர் கருதலாம். பிள்ளைகளைப் சுமையாகக் கருதுவோரும் உண்டு; பிள்ளை பெற்றால் தங்கள் அழகும் கவர்ச்சியும் போய்விடுமோ என்று பயப்படும் நவநாகரிக யுவதிகளும் உளர். ஏதோ காரணத்திற்காகத் திருமணமே வேண்டாமென எண்ணுவோரும் உளர். இதைப்பற்றிய விளக்கம் அவசியமில்லை. மக்கட் பேற்று விருப்பம் நிரந்தரமானதல்ல; பொதுவானதுமல்ல; அவசியமானதுமல்ல. சமூகத்திற்கும் சூழ்நிலைக்கும், காலத்திற்கும் கண்ணோட்டத்திற்கு மேற்ப மாறுபடும். இன்று காலம் மாறிவருகிறது; கருத்தும் மாறி வருகிறது. மக்களிடையே இருந்த சமயப்பற்று மங்கியும், மூடப்பழக்கவழக்கங்களும் கண்மூடித்தனமான நம்பிக்கைகளும் தேய்ந்தும் வருகின்றன. புதியதொரு சமுதாயமே உருவாகி வருகின்ற நிலையில் புதுப்புதுக் கண்ணோட்டத்திற்கும் பழக்க வழக்கங்களுக்கும் வாய்ப்பு அதிகம். இவைகளையெல்லாம் மால்தஸ் அறிந்திருக்க முடியாது. தடையின்றி மக்கள் பாலுணர்ச்சிக்கு இடம் கொடுத்தால், மக்கள் இனம் பெருகி, பல பிரச்சினைகள் தோன்றும். இதற்கு ஒரே வழி புலனடக்கம்தான் என்றார் மால்தஸ்.

நவ மால்தூசியர்களோ அது சாத்தியமல்ல; சாத்தியமான வேறு பல வழிகள் உள்ளன என்கின்றனர். இனக்கவர்ச்சி ஆசையையும் மக்கள்பேறு ஆசையையும் இணைக்கும் வகையில், இவ்விரு ஆசைகளையும் ஒரேவழியில்தான் வெளிப்படுத்தலாம் என்ற நியதி இயற்கையானதே. எனினும் இயற்கைச் சக்திகளை வெல்லுவதே சமுதாய முன்னேற்றத்திற்கு அறிகுறி. எனவே, மேற்கூறிய ஆசைகள் இரண்டையும் தனித்தனியாகப் பிரித்து, இனக்கவர்ச்சி ஆசையை மட்டும் பூர்த்தி செய்து அதனால்

விளையக்கூடிய மக்கட் பேற்றினைத் தடுக்கும் வழிகளையே நவ மால்தூசியர்கள் சிறந்ததெனவும் சாத்தியமானதெனவும் கருதுகின்றனர்,

மேலும், மக்கட் பேற்றினை விதி என்று கருதாமல், வேண்டும் போது பெறுவதுதான் விவேகம். தாய்மாருக்கு அதற்குரிய உடல் தகுதியும் விருப்பமும் இருக்க வேண்டும். பிள்ளைகளைப் பெற்று விட்டால் மட்டும் போதாது; அவர்களை நல்ல முறையில் பேணவும் வேண்டும். இதற்குரிய பொருளாதார வசதி பெற்றோரிடமிருக்க வேண்டும். இந்நிலை இல்லையாயின் தவிர்க்க முடியாத உடலின்பத்தை அனுபவித்து, தவிர்க்கக்கூடிய மக்கட் பேற்றினை விலக்குவது மடமையல்ல; விவேகமே. இதுதான் நவ மால்தூசியர்களின் வாதம்.

இவ் வாதத்தை அடிப்படையாகக் கொண்டதே அவர்களின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம். குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரம், கல்வி, கர்ப்பத்தடை வழிவகைகள், கருவிகள், மாத்திரைகள், அறுவைச் சிகிச்சைகள் ஆகியவை அத்திட்டத்தின் பல பகுதிகள்.

மால்தஸ் உயிரோடு இன்றிருப்பாராயின் இத் திட்டத்தை ஆதரித்து, தன் தடுப்புத் தடைகளில் இப்பகுதியைச் சேர்த்திருப்பாரா என்பதே கேள்வி. இவ்வழிமுறைகளெல்லாம் ஏமாற்றுத்தனம், இயற்கைக்கு மாறானது; எனவே, தீயொழுக்கமுடையது என்றுதான் மால்தஸ் கருதுவார் என்று பிரெஞ்சுப் பொருளாதாரப் பேராசிரியர்களான ஜீட், (Gide) ரிஸ்ட் (Rist) முதலானோர் கருதுகின்றனர். ஏனெனில் மால்தஸ் இயற்கைவாதத்தில் ஊறியவர். கிறித்தவப் பாதிரியார். தத்துவ அறிவையும் பெற்றவர். இவ்வழிவகைகளுக்கெல்லாம் அவர் ஒப்பவே மாட்டார் என்பது இப் பேராசிரியர்களின் கருத்து.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தால் ஏற்படக்கூடிய சமூக, பொருளாதார, கலாச்சார விளைவுகளையோ, வேறுபல துறைகளில் ஏற்படக்கூடிய விளைவுகளையோ ஆய்வதற்கு இதுதகுந்த இடமன்று.

10. டேவிட் ரிக்கார்டோ (1772—1823)

தொன்மைப் பொருளாதார அறிஞர் மூவரில் கடைசியாக வருபவர் டேவிட் ரிக்கார்டோ. டேவிட் ரிக்கார்டோ, ஆடம் ஸ்மித்துக்கு அடுத்தபடியான சிறப்புடையவர் என்றும் தொன்மைப் பொருளாதார அறிஞர்களில் இவரே சிறந்தவர் என்றும் கூறுவர். பொருளாதார இயலுக்கு இவரையே தந்தை என்று கூறுவோரும் உண்டு. ஆனால் இக் கூற்றைப் பொருளாதார உலகம் ஏற்றுக்கொள்வதில்லை. தலைசிறந்த பொருளாதார இயலைத் திட்டவட்டமாக அமைத்தவரும் இவரே என்றும் ரிக்கார்டோ வருணிக்கப்படுகிறார். இவ்வாறு பல வருணனைகளுக்குக் காரணம், 1817-ல் அவர் எழுதிய 'பொருளாதாரக் கொள்கைகளும் வரிமுறைக் கொள்கைகளும்' (Principles of Political Economy and Taxation) ஆகும். இது பொருளாதார உலகில் செல்வாக்குப் பெற்ற நூலாகும். இந் நூலின் கருத்துகளையும் கொள்கைகளையும் அந்நாளில் போற்றினர்; அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரவும் முனைந்தனர். இந் நூல் பொருளாதார உலகில் ஒரு சில ஆண்டுகள் ஒளி வீசியது.

ரிக்கார்டோ 1772 ல் லண்டன் மாநகரில் பிறந்தார். இவரது தந்தை ஹாலந்திலிருந்து லண்டனில் வந்து குடியிறங்கிய யூத குலத்தவர். பங்கு மார்க்கெட் தரகராக செல்வம் திரட்டிய சீமான். தமது 14ஆம்வயதில்டேவிட்ரிக்கார்டோ தம்தந்தையின்தொழிலையே மேற்கொண்டு தந்தைக்கு உதவியாக இருந்தார். இத் தொழிலில் நன்கு தேர்ச்சி பெற்றுப் புகழ் பெற்றார். தன் 21 ஆம் வயதில் ஒரு கிறித்துவப் பெண்ணைக் காதலித்து, தன் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக, தானும் அம் மதத்தில் சேர்ந்து, அவளை மணந்தார். இதனால் தந்தையைப் பிரிந்து தனியாகவே அத் தொழிலைத் தொடங்கினார். திறம்படத் தொழில் நடத்தி, 36ஆம் வயதிலேயே ஒரு கோடீஸ்வரரானார்.

வங்கித் துறையிலும் பங்கு மார்க்கெட்டிலும் அனுபவமிக்கவராதலால், அவருடைய அக்கறையும் அது சம்பந்தமானதாகவே ம

இருந்தது. ஆங்கிலேய—பிரெஞ்சு யுத்தம் காரணமாக இங்கிலாந்து அரசு பணத்தை அதிகமாக அச்சடித்தது. அதனால் பணத்தின் மதிப்பு குறைந்தது. எனவே, 'பொன்னின் அதிக விலையே பணத்தின் மதிப்பு குறைந்துவிட்டதற்கு நிரூபணம்' என்ற தலைப்பில் ஒரு சிறு நூலை 1810-ல் வெளியிட்டார். பின்னர், ஒரு பெரிய பண்ணையை வாங்கி, பாராளுமன்ற அங்கத்தினரானார். திறமையுடனோ கவர்ச்சியாகவோ பேசத் தெரியாதவரெனினும், அவரது பேச்சை அங்கத்தினர்கள் விரும்பிக் கேட்டனர். 'எனது குரலைக் கேட்டவுடன் எனக்கே அதிர்ச்சியாயிருக்கிறது' என்று அவர் கூறியதுண்டு. இருபத்தேழு வயதிலேயே நல்ல செல்வம் சேர்த்தார். அப்போது, தமக்குப் படிப்பு இல்லாத குறையைப் போக்கிக்கொள்வதற்காக விஞ்ஞான நூல்களைப் படிக்க ஆரம்பித்தார். முதலில் கணக்கு நூல்களையும் ரசாயன நூல்களையும் படிக்கத் தொடங்கினார். 1799-ல் 'நாடுகளின் செல்வம்' என்ற நூலைக் கேள்விப்பட்டு அதனை வாங்கிப் படிக்கலானார். மேலும் பல நூல்களைக் கற்று, தமக்குத் தோன்றும்பொருளாதாரக் கருத்துகளைக் குறித்துவைத்துக் கொண்டுவந்தார். அவற்றைப் படித்துப் பார்த்த நண்பர்களின் கட்டாயத்திற் கிணங்கி, நூல் வடிவமாக 1817-ல் பதிப்பித்தார். அந் நூலே 'பொருளாதாரக் கொள்கைகளும் வரிமுறைக் கொள்கைகளும்' என்பது. 1821ஆம் ஆண்டு பொருளாதாரத்தொடர்புடைய பிரச்சினைகளை ஆராய்வதற்காக அரசியல் பொருளாதாரச் சங்கத்தை ஏற்படுத்தினார். 1822-ல் 'உழவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு' (Protection to Agriculture) என்னும் நூலை வெளியிட்டார். இந் நூலை வெளியிட்ட மறு ஆண்டு காலமானார்.

ரிக்கார்டோவின் 'பொருளாதாரத் தத்துவங்கள்' என்னும் நூலுக்கும் ஆடம் ஸ்மித்தின் நூலுக்கும் பல வேற்றுமைகள் உண்டு. கல்லூரிப் படிப்பின்றி, பங்கு மார்க்கெட்டில் அனுபவமும் வியக்கத்தக்க வெற்றியும் அடைந்த ரிக்கார்டோ ஒரு வங்கித் தொழிலதிபர். இவரது நூல் கற்றவர்களாலும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத இயல்புடையது. ஆடம் ஸ்மித் கல்லூரிப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். அவரது நூல் இலக்கிய நயமும், எளிமையும், சுவையும் கொண்டது. நடைமுறைச் சான்றுகளுடன் அவரது நூல் கதைபோல் அமைந்துள்ளது. ரிக்கார்டோ தருக்கமுறையில் கருத்துகளை எழுதியுள்ளார். நூலின் பொருளைப் பார்க்காமல் அமைப்பைமட்டும் பார்த்தால், ரிக்கார்டோ ஓர் எழுத்தாளரே அல்லர் என்று தோன்றும். ஆடம் ஸ்மித் உலக வாழ்க்கையை ஒட்டித் தருக்க முறையைக் குறைத்துக்கொள்கிறார். அதோடு பொருளாதார இயலின் எல்லாப் பகுதிகளையும் ஆய்கிறார். ரிக்கார்டோ தேசிய வருமானத்தை எவ்வாறு பங்கிடுவது என்ப

தையே விளக்குகிறார். மால்தஸுக்கு அவர் எழுதிய கடிதம் இதனைப் புலப்படுத்தும். 'பொருளாதார இயல் செல்வத்தின் தன்மையையும் அதன் காரணங்களையும் ஆராயும் இயல் என்று நீங்கள் கருதுகிறீர்கள். தேசிய வருமானத்தை உண்டாக்கியவர்களுக்கு எந்த முறையில் அதைப் பங்கிடுவது என்ற விதிகளைக் கண்டுபிடிக்கும் இயல் அது என்று நான் கூறுகிறேன்,' என்று எழுதியுள்ளார். இருப்பினும், ஸ்மித்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே ரிக்கார்டோவின் நூல் பெரும்பாலும் அமைந்துள்ளது.

பொருளாதாரக் கொள்கைகளும் வரி முறைக் கொள்கைகளும்

ரிக்கார்டோ பல நூல்கள் எழுதியிருப்பினும், அவரது பொருளாதார, வரிக் கொள்கைகளே நமது ஆய்விற்கேற்றதாகும். இந்நூல் விளக்கிக்கூறும் கருத்துகள் பல. அவற்றுள் பண்டங்களின் மதிப்பு, குத்தகை, கூலி, வட்டி, இலாபம், பொருளாதார வளர்ச்சி ஆகியவை முக்கியமானவையாகும்.

பொருளாதாரக் கருத்து வரலாற்றில் ரிக்கார்டோவின் பங்கை அறிந்துகொள்ள அவர் கொள்கைகளைப் படிப்பது முக்கியம். அவருடைய முக்கியமான சாதனை, பண்டங்களின் மதிப்பு, தேசிய வருமானப் பகிர்வு ஆகிய கோட்பாடுகளில்தான் புலனாகிறது எனலாம்.

பண்டங்களின் மதிப்பு

பண்டங்களின் மதிப்பு பற்றிய ஆய்வே பொருளாதார இயலின் உயிர்நாடி எனலாம். நூலில் முதல் அதிகாரத்தின் தொடக்கத்திலேயே ஆடம் ஸ்மித்தின் கூற்றைக் கூறி, அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறார். பயன் மதிப்பிற்கும் பரிவர்த்தனை மதிப்பிற்கும் உள்ள வேறுபாட்டைக் கூறிவிட்டு, பொருளாதாரத்தில் பரிவர்த்தனை மதிப்பே இடம்பெறும் என்கிறார். பின்னர், இயல்பு மதிப்புக்கும் அங்காடி மதிப்புக்குமுள்ள வேறுபாட்டைச் சுருக்கமாக ஆய்கிறார். இயல்பு மதிப்பு அங்காடிச் சக்திகள் மாறுபடுக்குமாயின், நிரந்தரமானதாயும் மாறுததாயுமிருக்கும் என்று கூறுகிறார். இதுவரை ரிக்கார்டோ தம் குருவையே பின்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பரிவர்த்தனை மதிப்புடைய பொருள்களை இரு கூறுகளாயப் பிரிக்கிறார். முதல் வகையில் நிரந்தரமான அளிப்பு அளவையுடைய கிடைப்பருமை கொண்ட அரிய சிலைகள், சிற்பப் படங்கள், நாணயங்கள் ஆகியவற்றைச் சேர்க்கிறார் இவையனைத்தும் முன்னரே உற்பத்தி செய்யப்பட்டவை. வேண்டிய போது மீண்டும் உற்பத்தி செய்யப்பட முடியாதவை, எவ்வளவு

முயற்சி எடுத்தாலும் இவற்றின் அளவை அல்லது எண்ணிக்கையை நாம் அதிகரிக்க முடியாது. இவ்வகைப் பொருள்களின் மதிப்பு அவற்றின் அருமைக்கும் தேவைக்குமேற்ப அமையும். இவ்வகைப் பொருள்கள் பொருளாதார இயலில் முக்கிய இடம் பெறுவதில்லை யாகையால் இவற்றைத் தமது ஆய்விலிருந்து நீக்கிவிடுகிறார். இவ்வாறு நீக்கியது சரியல்ல என்பது ஒருசாராரின் கருத்து இரண்டாவது வகைப் பொருள்களின் உற்பத்தியையோ வேண்டிய அளவுக்குப் பெருக்கலாம். தேவை குறைந்தால் உற்பத்தியாகும் அளவைக் குறைத்துவிடலாம்; தேவை அதிகரித்தால் உற்பத்தியாகும் அளவையும் அதிகமாக்கலாம். இவற்றை அதிகமாக உற்பத்தி செய்வதற்குக் காலதாமதமாகலாம்; என்றாலும் இவற்றை நிச்சயமாக அதிக அளவு உற்பத்தி செய்ய முடியும். இவ்வகைப் பொருள்கள்தாம் பொருளாதார ஆய்விற்கு முக்கியமாதலால், இயற்றின் இயல்பான மதிப்பு எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதைப் பற்றித்தான் ரிக்கார்டோ ஆராய்கிறார்.

இந்த ஆராய்ச்சியில் ஆடம் ஸ்மித்தைப் பின்பற்றுகிறார் ரிக்கார்டோ. பண்டைக்காலத்தில், அதாவது நிலம் உடைமையாவதற்கும் மூலதனம் திரட்டப்படுவதற்கும் முன்பு, எல்லாப் பண்டங்களின் மதிப்பும் அவற்றை உண்டாக்கிய உழைப்பைப் பொருத்திருக்கும் என்றார் ஸ்மித். இதில், ஸ்மித்திற்கும் ரிக்கார்டோவிற்கும் வேறுபாடில்லை. ஆனால் பண்டைக் காலத்தில் மட்டுமன்றி, இக்காலத்திலும் உழைப்பே பண்டங்களின் மதிப்பை அளக்கும் அளவுகோல் என்பது ரிக்கார்டோவின் வாதம். நவீன சமுதாய அமைப்பில் உழைப்பு மட்டுமன்றி, பிற உற்பத்திக் காரணிகளும் உற்பத்தியில் பங்கு கொள்கின்றன என்பதால், முதலுக்கு வட்டியும், நிலத்திற்களிக்கப்படும் வாரமும் உற்பத்திச் செலவில் அடங்கும் என்று கூறி, உழைப்பு மதிப்புக் கோட்பாட்டை ஸ்மித் கைவிட்டு விட்டார். ஆனால் ரிக்கார்டோ, குத்தகை, வட்டி ஆகியவை எவ்வகையிலும் பொருள்களின் இயல் மதிப்பை நிருணயிப்பதில் பங்கு கொள்வது கிடையாது என்று வாதித்தார். நிறைவுப் போட்டி இருக்குமாயின், எல்லாத் தொழில்களிலுமே வட்டி ஒரே விகிதமாகவே இருக்கும். குத்தகையோ விலையால் நிருணயமாகின்றதேதவிர, விலையை நிருணயிப்பதல்ல என்று கூறி, உழைப்பு மட்டுமே பண்டங்களின் மதிப்பை நிருணயிக்கும் காரணி என்கிறார். இவ் விளக்கத்தில் கார்ல் மார்க்ஸ் அவர்களுக்கு ரிக்கார்டோ வழி காட்டுவது குறிப்பிடத்தக்கது.

பல்லாயிரக் கணக்கான உழைப்பு

உழைப்பே மதிப்பின் அளவுகோல் என்னும் கொள்கை உலகியலுக்குப் பொருந்தாது என்பது ஆழ்ந்து நோக்கினால்

தெளிவாகும் எனச் சிலர் வாதாடுவர். முதலாவதாக, உழைப்பு என்பது ஒரே தன்மையுடையதன்று. அது பல்லாயிரம் வகைப் படும். குயவன், குறவன், தச்சன், நடிகன், வழக்குரைஞர் ஆகி யோரின் உழைப்பனைத்தும் எவ்வாறு ஒன்ருக முடியும்? நடிகனின் உழைப்பை மாத்திரம் எடுத்துக்கொண்டால்கூட, சிறந்த நடிகன், சுமாரான நடிகன், வில்லன், கோமாளி என்று எத்தனையோ விதம் இருக்குமே! ஒரே நடிகனை எடுத்துக்கொண்டால் கூட அவனது நடிப்புத்திறன் எல்லா நாள்களிலும் ஒன்ருயிருக்காதே? எம் மாதிரி உழைப்பு ஒரு பொது அளவுகோலாக இருக்க வேண்டு மென்பதில், உழைப்போரிடையே கூட ஒத்தகருத்து இருக்காது என்பது திண்ணம். இப் பிரச்சினையை ரிக்கார்டோ தீர்க்கும் முறை விநோதமானது.

பல்வகையான உழைப்பின் மதிப்பானது அங்காடியில் சரி செய் யப்படுகிறது என்று கூறுகிருர் ரிக்கார்டோ, ஒரு தச்சன் 8 மணி நேரம் உழைத்து ஒரு கலப்பையைச் செய்துள்ளான் என்று வைத் துக்கொள்வோம். அக் கலப்பை அங்காடியில் என்ன மதிப்புப் பெறுகிறதோ அதைக்கொண்டு தச்சனின் ஒரு மணிநேர உழைப் பின் மதிப்பைக் கணக்கிடலாம். அந்தக் கலப்பை உயர்ந்த மதிப்பைப் பெற்ருல் ஒரு மணிநேர தச்சனின் உழைப்பு மதிப்பும் உயர்வாயிருக்கும். இதேபோல் எல்லா விதமான உழைப்பாளி களின் மதிப்பையும் கணக்கிடலாம். அவ்வாறு ஒரு மணி நேர உழைப்பு மதிப்பு அங்காடியில் நிருணயமாகிவிட்டால் அது நிலை யானதாக இருக்கும் என்ருர். உழைப்பை வைத்துப் பண்டத்தின் மதிப்பை நிருணயிக்கலாம் என்பது ரிக்கார்டோவின் கொள்கை. ஆனல், இப்பொழுது பண்டத்தின் சந்தை மதிப்பைக்கொண்டு உழைப்பின் மதிப்பைக் கணக்கிடலாம் என்கிருர். இதில் எது காரணம்? எது விளைவு? மரம் முதலில் தோன்றியதா? விதை முதலில் தோன்றியதா? கோழி முந்தியதா? முட்டை முந்தியதா? என்ற பழம் பிரச்சினைதான் இங்கு தலைதூக்குகிறது. ரிக்கார்டோவின் 'அடிப் படைக்' கொள்கையில் 'அடிப்படையே' ஆட்டம் கண்டு விடு கிறது.

மூலதனத்திற்கு ஒன்றுமில்லையா?

மூலதனம் பற்றி ரிக்கார்டோ கொடுத்த விளக்கம் வருமாறு: 'மூலதனம் என்பது முந்திய உழைப்பின் விளைவே. தச்சனின் நான்கு அல்லது ஐந்து நாள்களின் உழைப்பால் தோன்றியதே கலப்பை. எனவே, இக் கலப்பை தச்சனின் உழைப்பைச் சேர்த்து வைத்ததுபோல் உருவான சாதனம். இச் சாதனம் பயன்படப் பயன்படத் தேய்ந்து கெட்டுப் போகலாம். அப்போது

உழவன் இதனை விட்டுவிட்டுப் புதியதோர் கலப்பை வாங்கவேண்டியதுதான்' இரண்டு, மூன்று, அல்லது பத்து ஆண்டுகளில் என்றாவது ஒரு நாள் இம் 'மூலதனம்' கரைந்து விடும், இதுபோன்றே உழவன் பயன்படுத்தும் விதை, உரம் ஆகியவையும். இவையும் உழைப்பின் பயனால் ஏற்பட்ட விளைவுகளே. ஆனால் கலப்பைக்கும் உரத்திற்கும் வேறுபாடு உண்டு. கலப்பை பயன்படுத்தப்பட்டுச் சில ஆண்டுகள் கழித்தே அதன் பயன் முழுவதும் அழிகிறது. இவ்வாறு நீண்ட காலம் பயன்படுத்தப்பட்டு அழியக்கூடிய உற்பத்திச் சாதனங்களை 'நிலை முதல்' (Fixed capital) என ரிக்கார்டோ கூறுகின்றார். பஞ்சு, விதை, உரம்போன்று ஒரே ஒரு முறை உபயோகப்பட்டு அழியும் சாதனங்களை 'சுழல் முதல்' (Circulating capital) என்கிறார். இவ்வகை முதல் மீண்டும் மீண்டும் ஆளப்படுவதால் சுழல்முதல் எனப்படுகிறது. இவ்விருவகை முதலுமே உழைப்பால் தோன்றியவையே. எனவே, பண்டங்களின் மதிப்பு எவ்வாறு உழைப்பைக்கொண்டு அளவிடப்படுகிறதோ அதே போல் அவற்றை உருவாக்கும் சாதனங்களின் மதிப்பும் உழைப்பாலேயே அளக்கப்படும் என்கிறார் ரிக்கார்டோ. எனவே, எல்லாக் காலங்களிலும் எல்லாவகைப் பொருள்களின் மதிப்பையும் உழைப்பைக்கொண்டே அளவிடலாம் என்னும் வாதத்திற்கு வருகிறார். எனவே மூலதனமென்பது கடந்தகால உழைப்பின் பிரதிபலிப்பே ஆகும். இதனால் அது தனிப்பட்ட பொருளாக்கச் சாதனமல்ல என்பது அவரது கருத்து. இதனால் ரிக்கார்டோ உழைப்பின் மதிப்புக் கோட்பாட்டை உலகுக்கு உருவாக்கித் தந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

உற்பத்தியில் நிலத்தின் பங்கு

பொருளாக்கத்திற்கு நிலம் இன்றியமையாதது. நிலமின்றி எந்தத் தொழிலையும் நிறுவமுடியாது. தொழிலுக்கு வேண்டிய கட்டடங்களை அமைப்பதற்கு மட்டுமன்றி, பல தொழில்களுக்குத் தேவைப்படுகின்ற கச்சாப் பொருள்களையும் நிலமே அளிக்கிறது. ரிக்கார்டோவினால் உயர்ந்த நிலையை அடைந்துள்ள உழைப்புச் சக்தியைத் தொழிலாளர் பெறவேண்டுமாயின், அதற்கு வேண்டிய உணவுப்பொருள்களை நிலமின்றிப் பெற இயலாது. எனவே, உற்பத்திசெய்யப்படும் பண்டங்களின் மதிப்பில் நிலத்திற்கும் பங்கு உண்டு என்பது நியாயம். இந்த வாதத்தை ரிக்கார்டோ ஒப்புக்கொண்டால், உழைப்பே பண்டங்களின் மதிப்பை அளவிடும் அளவுகோல் என்னும் அவருடைய அடிப்படைக் கொள்கை குன்றிவிடும். அவ்வாறு ஆகக்கூடாது என்பதற்காக ரிக்கார்டோ தமது நிலக்குத்தகைக் கோட்பாட்டை விளக்குகிறார். அவ் விளக்கத்தின் சாரம் வருமாறு: குத்தகை என்பது விலையால் நிருணயமாவதாகும்;

விலையை நிருணயிப்பதன்று என்பது. இக் கோட்பாட்டின் வழியாக்வும் 'உழைப்பே பண்டங்களின் மதிப்பை அளவிடக்கூடிய ஒரே காரணி' என்ற தனது வாதத்தை எண்பிக்க முயல்கிறார்.

குத்தகைக் கோட்பாடு (Theory of Rent)

உழைப்பே பொருள்களின் மதிப்பை அளவிடுகிறது என்ற கொள்கை நிலத்தைப் பயன் படுத்துவதற்கும், குத்தகை செலுத்துவதற்கும் எந்த அளவு பொருந்துகிறதென்பதை இப்போது ஆராய்வோம். இதனை ஆராய்ந்தோமானால், ரிக்கார்டோவின் குத்தகைக் கோட்பாடு விளங்கும். ரிக்கார்டோவின் கோட்பாடுகளில் இதுதான் மையமானது எனக் கூறமுடியாதெனினும், உலகப்புகழ் பெற்ற கோட்பாடு இதுதான். மால்தஸ் என்றால் எப்படி மக்கள் தொகை என்று பொருளோ, அதுபோன்று ரிக்கார்டோ என்றால் குத்தகை என்று பொருள். குத்தகைப் பிரச்சினையை ரிக்கார்டோ மட்டுமே கிளப்பினார் என்று கூறமுடியாது. 19ஆம் நூற்றாண்டின் பொருளாதார வரலாற்றில் இங்கிலாந்தை ஆட்டிவைத்ததே இப்பிரச்சினைதான். இப் பிரச்சினையை ரிக்கார்டோதான் முதலில் ஆராய்ந்தார் என்றும் சொல்வதற்கில்லை. உழவிற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்த இயற்கை வாதிகள் 'நிகர உற்பத்தி' என்ற பெயரில் குத்தகையை இயற்கையின் கருணைக்குச் சான்றாகக் கருதினர். ஆடம்ஸ்மித், பிறதொழில்களைவிட உழவுத் தொழில் தான் அதிக உற்பத்தியையும் ஊதியத்தையும் தரும் என்றார். இதற்கு இயற்கை வாதிகளைப் பின்பற்றி, இயற்கையின் கருணை தான் காரணம் என்றார். ஆனால் மால்தஸ் இவர்களுக்கு மாறான கொள்கை கொண்டிருந்தார். குத்தகை இயற்கையின் கருணையாலோ வளத்தாலோ ஏற்படுவதல்ல; வளக்குறைவால் ஏற்படுவது என்று வாதித்தார் என்பதை முந்திய அதிகாரத்தில் கண்டோம். ரிக்கார்டோ இயற்கை ஒரு பெரிய கருமி என்று வாதாடுபவர். முதலாவதாக வேண்டிய அளவுக்கு இயற்கை மக்களுக்கு நிலத்தை வாரி வழங்கவில்லை. அடுத்து, நிலத்தின் பரப்பளவு உலகத்தில் மிகுதியாக இருந்தாலும், செழிப்புள்ள பகுதி மிகக் குறைவு. எனவே, வளம் குறைந்த நிலங்களிலும் சாகுபடி செய்தால்தான் வளர்ந்து வரும் மக்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்ய முடியும். அவ்வாறு, வளம் குறைந்த நிலத்தில் சாகுபடி செய்தால் தானியத்தின் உற்பத்திச் செலவு அதிகமாகும். இந்த அதிகச் செலவிற்குச் சமமாக விலை இருந்தால்தான், வளம் குன்றிய நிலத்தில் சாகுபடி செய்ய முடியும். அப்படியானால் குறைந்த செலவில் சாகுபடியாகும் வளமிக்க நிலத்தையுடையோர் அதிக இலாபம் பெறுவர். அப்போது அதிக இலாபம் வருவதால் வளமிக்க நிலத்தைப் பயிர்செய்வதற்கு உழவர்களுக்கிடையில்

போட்டி ஏற்படும். இப் போட்டியினால் நிலச்சுவான்கள் அதிகக் குத்தகையை வாங்குவர். வளம் குன்றிய நிலத்திலோ சாகுபடிச் செலவும் தானிய விலையும் சரிக்குச் சரியாக இருப்பதால் அந்நிலத்திற்குக் குத்தகை கொடுக்க எவரும் முன் வரமாட்டார்கள்.

அதிர்ஷ்டவசமாக, வளமிக்க நிலச்சொந்தக்காரர்கள் குத்தகை வாங்குவது ஒரு கப்பல் வாங்குவதுபோல் ஆகும் என்றார் ரிக்கார்டோ. இந்தக் குத்தகை, தானியங்களின் உற்பத்திச் செலவில் சேர்வதில்லை. இதற்கு ரிக்கார்டோ தரும் விளக்கத்தை எடுத்துக் கொண்டால் எவ்வளவு தூரம் நம்மை கற்பனை உலகிற்கு எடுத்துச் செல்கின்றார் என்பது விளங்கும். இந்த விளக்கத்தில் 'அப்படி இருந்தால்,' 'இப்படி இருந்தால்,' 'வைத்துக்கொள்வோம்' 'யூகித்துக்கொள்வோம்' என்னும் சொற்றொடர்களை அடிக்கடி பயன் படுத்துகிறார்.

கோட்பாட்டின் விளக்கம்

நிலத்தின் செழிப்பம் மட்டும் குத்தகைக்குக் காரணமாயிருக்க முடியாது என்பது ரிக்கார்டோவின் திட்டவட்டமான வாதம் புதியதாய் கண்டுபிடிக்கப்பட்ட நாட்டில் செழிப்பான நிலம் ஏராளமாக இருந்தால், அந்நாட்டில் குடியேறிய மக்கள்வேண்டிய அளவிற்கு வளமுள்ள நிலத்தில் சாகுபடி செய்துகொள்ள முடியும். ஆனால் அங்கு மேலும் மேலும் மக்கள் குடியேறிவிட்டால் செழிப்பமான நிலத்தை மட்டும் உழுது பயிர்செய்து வேண்டிய அளவு தானியத்தைப் பெற முடியாது. செழிப்பமற்ற நிலத்தையும் உழ வேண்டியதிருக்கும். எனவே, குத்தகை தோன்றுவதற்குச் செழிப்பம் காரணமல்ல; மக்கள் பெருக்கத்தால் வளம் குறைந்த நிலத்தைச் சாகுபடி செய்யவேண்டிய அவசியமே காரணம்.

உதாரணமாக முதல்தரமான நிலத்தில் ஒரு கலம் நெல் உற்பத்தி செய்வதற்கு 40 மணிநேரம் உழைக்கவேண்டுமென வைத்துக்கொள்வோம். ஒரு கலம் நெல் ரூ. 40 என்றும் யூகித்துக் கொள்வோம். மால்தஸின் மக்கள் தொகை விதியின்படி மக்கள் இனம் பெருகிவந்தால் இரண்டாம்தர நிலத்தையும் சாகுபடி செய்ய வேண்டும். இந்த நிலத்தில் ஒருகலம் நெல்லை விளைவிப்பதற்கு 5 மணி நேர உழைப்பு அவசியம் என்று யூகித்துக்கொள்வோம். அப்போது நெல்லின் விலை ரூ. 45 ஆக உயரும். இந் நிலையில் முதல்தர நிலத்தில் விளைந்த நெல்லும் கலம் ஒன்றுக்கு ரூ. 45வீதம் விற்கப்படுமாதலால், இந் நில உரிமையாளர்களுக்குக் கலம் ஒன்றுக்கு ரூ. 5 வீகித அதிகமாகக் கிடைக்கும். மேலும் மக்கள் தொகை அதிகரித்தால் மூன்றாம்தர நிலத்தையும் சாகுபடி செய்ய வேண்டியதிருக்கும். இந் நிலத்தில் ஒரு கலம் நெல்லை விளைவிக்க 50 மணி நேர உழைப்பு அவசியமானால், நெல்லின் விலை ரூ. 50

ஆக உயரும். அப்போது, முதல்தர நிலமுடையோருக்கு ரூ. 5 எச்சமாகக் கிடைக்கும். மூன்றாம்தர நிலம் உடையோருக்குச் செலவும் வருவாயும் சரிக்குச் சமமாகும். நான்காம்தர நிலத்தையும் உழுது சாகுபடி செய்தால், மூன்றாம்தர நிலமுடையோருக்கும் கலம் ஒன்றுக்கு வருமானம் சிறிது அதிகமாகும். எனவே, நிலத்தின் செழிப்பத்தில் இருக்கிற வேறுபாட்டின் விளைவாகவே, குத்தகை தோன்றுகிறது என்கிறார் ரிக்கார்டோ. இங்கு, செலவிற்குமேல் கிடைக்கும் உபரியாகத்தான் குத்தகை கருதப்படுகிறது.

குத்தகைக்கொள்கையை விளக்குவதற்குத்தான் ரிக்கார்டோ பலதரப்பட்ட நிலம் இருப்பதாக அனுமானித்துள்ளார் என்று சிலர் குறைகூறலாம். நிலம் அனைத்தும் ஒரேமாதிரியானவை அல்ல என்பதை உழவன் நன்கு அறிவான். இந்த உண்மையைத்தான் ரிக்கார்டோ அறிவியல் ரீதியில் விளக்கியுள்ளார்.

மக்கள்தொகை பெருகும்போது இரண்டாம்தர நிலத்தையும் மூன்றாம்தர நிலத்தையும் சாகுபடி செய்வதற்குப் பதிலாக முதல்தர நிலத்திலேயே செறிந்த வேளாண்மை முறையைப் பயன்படுத்தி, உற்பத்தியை அதிகரிக்கக்கூடாதா எனக் கேட்கலாம். இம்முறையை எவ்வளவு தூரம் பயன்படுத்தினாலும் அதற்கு ஒரு வரம்பு இருக்கிறது. மேலும், முதல்தர நிலத்தில் செறிந்த வேளாண்மை முறையைப் பயன்படுத்தி 46 மணி நேரம் அதிகமாக உழைத்து, மேலும் ஒரும் கலநெல்லை விளைவிப்பதற்குப் பதிலாக, இரண்டாம்தர நிலத்தில் 45 மணிநேர உழைப்புச் செலவில் ஒரு கலம் நெல் உற்பத்தி செய்வது சாதகம்தானே !

எனவே, ரிக்கார்டோவின் குத்தகைக் கோட்பாட்டிற்குக் குறைந்து செல் விளைவு விதி ஆதாரமாக உள்ளது என்பது புலனாகிறது. மால்தஸின் மக்கள்தொகைக் கொள்கையிலும் இவ் விதி உணர்த்தப்பட்டது. ஆனால் இவ் விதியை முதலில் வெளியிட்டவர் துர்கோ ஆவர். 'செலவை இரட்டிப்பாக்கினால், விளைச்சலும் இரண்டு மடங்காகும் என்று கனவிலும் நினைக்கமுடியாது' என்பது அவர் கூற்று. ரிக்கார்டோவின் கோட்பாட்டு விளக்கத்திற்கு இவ் விதி இன்றியமையாததாகும்.

இவ்வாறாக, மக்கள்தொகை பெருகப் பெருக வளம் குன்றிய நிலத்தைச் சாகுபடி செய்வது இன்றியமையாதது. எந்த நிலத்தின் விளைச்சல் வருவாய் உற்பத்திச் செலவிற்குச் சமமாயிருக்குமோ அந்த நிலத்திற்கு வாரம் கிடைப்பதில்லை. அந்த நிலத்திற்கான உழைப்புச் செலவையும் உற்பத்தியாகும் தானிய அளவையும் கொண்டே மற்ற நிலங்களின் உபரி விளைச்சல் கணக்கிடப்படுகிறது. இங்கு, இறுதிநிலை நிலமென அழைக்கப்படும் இந் நிலத்திற்கான உழைப்புச் செலவே தானியத்தின் விலையை நிருணயிக்கிறது.

எனவே, பிற பண்டங்களைப் போலவே தானியத்தின் விலையும் உழைப்பின் அளவால் நிருணயிக்கப்படுகிறது என்று ரிக்கார்டோ வலியுறுத்தினர். குத்தகை என்பது தானியத்தின்விலையால் நிருண யிக்கப்படுகிறதேயன்றி, தானியத்தின் விலையை நிருணயிப்பதன்று. எனவே நிலத்திற்குக் குத்தகை கொடுப்பதால் தானியத்தின் விலை அதிகரிப்பதில்லை; மாறுக, தானிய விலை அதிகமாயிருப்பதால் குத்தகை கொடுக்கப்படுகிறது என்பது அவரது கூற்று. இதன் மூலம் நிலக்கிழார் குத்தகை பெறுவதும் தவறில்லை; விலை உயரும் போது குத்தகையை அதிகரிப்பதும் தவறல்ல என்பதுதான் ரிக்கார்டோவின் வாதம். இவ் வாதத்திற்கேற்ப, ரிக்கார்டோ தம் குத்தகைக் கொள்கை பற்றிய சூத்திரத்தைப் புனைந்தார்.

குத்தகைச் சூத்திரம்

ரிக்கார்டோவின் குத்தகை பற்றிய சூத்திரத்தை அவரது கூற்றிலேயே பார்ப்பது நன்று. குத்தகை என்பது, 'மண் வளத்தின் அழிக்க முடியாத இயல்பான சக்திகளைப் பயன்படுத்துவதற்காக நில விளைச்சலிலிருந்து நிலக்கிழாருக்கு அளிக்கப்படும் பகுதியாகும்.' இவ் விளக்கத்தில் இயல்பான, அழிக்க முடியாத வளம் நிலத்திற்கு இருப்பதாக ரிக்கார்டோ அனுமானித்துள்ளார். அவரது குத்தகைக் கோட்பாட்டின் விளக்கத்திற்கும் சூத்திரத்துக்குமுள்ள ஒற்றுமையைப் புரிந்துகொள்ளல் நன்று. அழிக்க முடியாத இயல்பான வளத்திற்கு அளிக்கப்படுவதே குத்தகையாயின், நிலவளத்திற்கேற்ப உற்பத்திச் செலவு மாறுவதும், அதனுல் குத்தகை மாறுவதும் இயல்புதானே. வளம் குறைந்த நிலம் சாகுபடியானுல், வளத்திற்கேற்பக் குத்தகை உயர்வதும் இயல்பே.

குறைகள்

ரிக்கார்டோவின் கோட்பாடு பொருத்தமானதாகத் தோன்றிய போதிலும் ஒப்புக்கொள்ளக்கூடியதாக இல்லை. சாதாரணமாக விவசாயிகள் முதல்தர நிலத்தை முதலிலும், கடைத் தர நிலத்தைக் கடைசியிலும் சாகுபடி செய்வர் என்பது ரிக்கார்டோவின் கருத்து. இந்த முறையை அமெரிக்க நாட்டில் குடியேறியவர்கள் கையாளவில்லை என்று மறுக்கிருர் அமெரிக்கப் பொருளாதார அறிஞரான கேரி (Carey) என்பவர். வசதியையும் பாதுகாப்பையும் முன்னிட்டு, அமெரிக்காவில் குடியேறியவர்கள் மலைச்சரிவுகளிலும் கடலோரப் பகுதிகளிலும்தான் சாகுபடி செய்தார்களே தவிர, வளமான பகுதிகளில் அல்ல என்பது கேரியின் வாதம்.

மேலும், நமது விளக்கத்தில் ஒரு கலம் நெல்லை உற்பத்தி செய்ய முதல்தர நிலத்தில் 40 மணி நேரமும், இரண்டாந்தர நிலத்தில் 45மணி நேரமும், மூன்ரும்தர நிலத்தில் 50மணி நேரமும் செலவாகுமெனக் கண்டோம். முதல்தர நிலம் மட்டும் சாகுபடியானுல்

குத்தகை கிடையாது; ஏனெனில் செலவும் விளைச்சலும் சமமாகி விடுகிறது. இரண்டாம்தர நிலம் சாகுபடி செய்யப்படும்போது அந்த நிலத்தின் தானியச் செலவுதான் விலைக்குச் சமம்; ஆனால் முதல்ரக நிலத்தின் உழைப்புச் செலவு (ரூ. 40) விலையை (ரூ. 45)விடக் குறைவு. அவ்வாருயின், முதல்தர நிலத்தில் உழைப்புச் செலவைவிட விலை அதிகமாயிருப்பதால் உழைப்பே பொருளின் விலையை நிருணயிக்கும் அளவு கோல் என்பதன் பொருள் நலிந்துவிட்டது.

நிலத்திற்கு அழியாச் சக்தியும் இயற்கை வளமும் இருப்பதனாலேயே குத்தகை தரப்படுகிறது என்ற ரிக்கார்டோவின் கூற்றில் பொருளில்லை. நீர்ப்பாசன வசதியாலும், இரசாயன உரத்தாலும், செலவான வளம் மீண்டும் செயற்கை முறையில் சேர்க்கப்படுவதை நாம் அறிவோம். எனவே, வெப்பதட்ப நிலை, இட அமைப்புப் போன்ற இயற்கை அனுகூலங்களோடு செயற்கை வளமும் சேர்க்கப் படுவதை எவரும் மறுக்க முடியாது.

ரிக்கார்டோவின் கூற்றின்படி நிலமனைத்தும் ஒரே தரமானதாக இருந்தால்கூடக் குத்தகை ஏற்படும் என்று நிச்சயமாகக் கூறலாம். விளையும் தானியங்களைவிட அதற்கேற்படும் தேவை அதிகமானால் அதன் விலை அதிகரித்து, நிலத்திற்குக் குத்தகை கிடைக்குமெனலாம். இதனை ரிக்கார்டோ ஒப்புக்கொண்டிருந்தால், தனது உழைப்பின் மதிப்புக் கோட்பாட்டைத் தானே மறுத்துவிட்டதற்கு ஒப்பாகும். நிலத்தின் வள வேறுபாட்டினால் மட்டுத் குத்தகை தோன்றுவது என்பது விவாதத்திற்காகப் புனைந்த கோட்பாடு எனலாம். நவீனக் காலத்தில் தேவைக்கேற்ப நிலம் இல்லாததே குத்தகைக்குக் காரணம் என்பதை யாவரும் அறியவர். இதைக் கிடைப்பருமைக் குத்தகை (Scarcity Rent) என்பர்.

ரிக்கார்டோ கூறுவதுபோல் 'குத்தகை விலையில் சேருவதில்லை' என்பதை எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். எல்லா உற்பத்திக் காரணிகளின் பணிக்கும் கொடுக்கப்படும் விலைதான் உற்பத்தியான பொருளின் விலை என்பது இன்றையப் பொருளாதார நிபுணர்களின் முடிவு. குத்தகையினால் விலை நிருணயமாகிறதா அல்லது விலையினால் குத்தகை நிருணயமாகிறதா என்பது வீண் வாதமே. குத்தகையும் விலையும் நிலத்திலிருந்து கிடைக்கும் பண்டங்களின் கிடைப் பருமையால் நிருணயமாகின்றன என்பதே உண்மை.

மால்தஸின் மக்கள் தொகைக்கொள்கையைவிட ரிக்கார்டோவின் குத்தகைக்கொள்கை குறைபாடுடையது எனக்கருத இடமுண்டு.

குத்தகைக்கொள்கை— விளைவுகள்

ரிக்கார்டோவின் நிலக்குத்தகைக் கொள்கை எவ்வளவுதான் குறைபாடுகள் கொண்டதாயினும், அது மிகப் புகழ்பெற்ற கொள்கையாகும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. இயற்கையின் தாராளம் பற்றிப் புகழ்பாடி, இயற்கை விதிகள் தெய்வீகமானதென்று மக்கள் நம்பி வந்தனர். அவற்றை எவரும் மறுக்க முடியாதென்றும் கருதினர். ஆனால் அவ்வெண்ணத்தையும் நம்பிக்கையையும் ரிக்கார்டோவின் கொள்கை அடியோடு புறக்கணித்து விட்டது. இயற்கையின் கருமித்தனத்தை ரிக்கார்டோ வலியுறுத்தினர். 'உன் நெற்றி வியர்வை நிலத்தில் விழப்பாடு பட்டு உன் உணவை அடைவாய்' என்று முதல் மனிதனாகிய ஆதாமுக்கு இட்ட சாபம். இன்றும் அதன் விளைவு மறைந்துவிடவில்லை என்கிறது. நிலக்கிழார்கள் அதிகமாகக் குத்தகை பெறுகின்றனர். அவர்கள் 'விதைக்காமலே அறுவடை செய்கின்றார்கள்' என்னும் ரிக்கார்டோவின் கொள்கை பொது மக்களுக்கு அவர்கள் மீது சீற்றம்கொள்ள வகை செய்தது. எனவே, தானியச்சட்டங்களை நீக்கினுல் மலிவான தானியம் இறக்குமதியாகும். நிலச்சுவான்களின் ஆதிக்கமும் குத்தகை மோகமும் மறையும் என்ற எண்ணத்துக்கும் கிளர்ச்சிக்கும் வித்திட்டது. கட்டுப்பாடில்லாத வாணிபத்தை ரிக்கார்டோ ஆதரிக்கத் துணையாயிற்று. நிலச்சொத்துரிமை என்னும் அடிப்படை உரிமையை உலுக்கிவிட்டது. பின்னுல் வந்த ஜே. எஸ். மில் குத்தகை முழுவதையும் அரசாங்கமே வரியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென விரும்பினர். ஹென்றி ஜார்ஜ் போன்ற பொருளாதார அறிஞர்கள் நிலத்தைத் தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துவதற்கும் ஏதுவாயிருந்தது. ஆடம் ஸ்மித் வருங்காலம் இன்பமயமானதாயிருக்குமெனக் கருதினர். மால்தஸ் மக்கள் தொகைப் பெருக்கால் வருங்காலம் துன்பமானதாகவே இருக்குமென வலியுறுத்தினர். மால்தஸின் நோக்கைப் பலப்படுத்தும் முறையில் ரிக்கார்டோவின் கொள்கை அமைந்தது. பொருளாதார வானிலே இக் கொள்கையால் மப்பும் மந்தாரமும் ஏற்பட்டு இருள் நிறைந்துவிடுகிறது.

கூலியும் இலாபமும் (Wages & Profits)

வருங்காலத்தை மேலும் இருள்மயமாக்கும் விதத்தில் கூலி, இலாபம், பொருளாதார வளர்ச்சி, மக்கள் தொகை ஆகிய கொள்கைகளை ரிக்கார்டோ அமைத்துள்ளார். உழைப்பின் அளவே பண்டங்களின் மதிப்பை நிருணயிக்கும் என்று பிடிவாதமாகக் கருதிய ரிக்கார்டோ, பின்னுல் முதலாளி செய்யும் முதலீட்டிற்கு இலாபமும் கொடுக்க வேண்டியது நியாயம்தான் என்று கூறுகிருர்.

எனவே, உற்பத்தித் தொழில்களிலிருந்து கிடைக்கும் வருமானம் உழைப்பாளிகளுக்கும் முதலாளிகளுக்குமிடையே பகிரப்பட வேண்டியுள்ளது.

ரிக்கார்டோவின் தலை சிறந்த கொள்கைகளில் குத்தகைக்கு அடுத்தபடியாக முக்கியமானது கூலிபற்றியதாகும். இக்கூலிக் கோட்பாடுதான் வருமானப் பகிர்வுக் கோட்பாட்டிற்கு ஆதாரமாக அமைகிறது. உழைப்பின் விலையாகிய கூலி, ரிக்கார்டோவின் பண்டவிலைக் கோட்பாட்டைப் போன்றதே. உற்பத்திக்கு அவசியமான உழைப்பின் அளவைப் பொறுத்தே உற்பத்தியாகும் பண்டங்களின் இயல்பான விலை நிருணயிக்கப்படுகிறதெனக் கண்டோம். அங்காடி விலையோ இயல்பான விலையைப்போல் நிரந்தரமாக இல்லாமல் ஏறி இறங்கிக்கொண்டே இருக்கும். எனினும், இயல்பான விலையை நோக்கியே ஏறி இறங்கும். அதுபோன்றே உழைப்பின் விலையாகிய கூலியும் இயல்பான கூலி, அங்காடிக் கூலி என இரு வகைப்படும். தொழிலாளர் அதிகமாயிருந்தால் அங்காடிக்கூலி இறங்கும்; குறைவாயிருந்தால் உயரும். இவ்வேற்ற இறக்கம் இயல்பான கூலியை ஒத்தே இருக்கும்.

இயல்பான கூலி என்றாலென்ன? ரிக்கார்டோ கருத்துப்படி, 'உழைப்பின் இயல்பான கூலி என்பது தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் ஒன்றாக வாழவும், தங்கள் இனத்தைப் பெருக்காமலும் குறைக்காமலும் ஒரே நிலையில் வைத்திருப்பதற்கும் அவசியமான கூலி' எனப்பொருள்படும். இதனைப்பிழைப்பு மட்டக்கூலி எனலாம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பலரும் இக் கூலிக் கொள்கையைத்தான் வலியுறுத்தினர். ஆனால் நடைமுறைக்கூலி என்பது மாறும் இயல்புடையது. உணவின் விலையும் அவசியப் பொருள்களின் விலையும் ஏறி இறங்குவதுபோல் நடைமுறைக் கூலியும் ஏறும் இறங்கும் தன்மையுடையது. எனினும், இயல்பான கூலியை நோக்கியே நடைமுறைக்கூலி மாறுதல் அடையும். அதாவது, நடைமுறைக்கூலி இயல்பான கூலியைவிடச் சற்று அதிகமாகவோ குறைவாகவோ இருக்க முடியுமெனினும், அவ்வளவாக மாறுதல் அடையாது. ஏனெனில் இயல்பான கூலியைக்காட்டிலும் அது குறைவாக இருந்தால், தொழிலாளர்களுக்கு வேண்டிய உணவும் இதர அவசியப் பொருள்களும் இரா. எனவே, தொழிலாளர்களில் பலர் பசி, பட்டினியால் மடிந்து விடுவர். இதனால் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து, கூலி உயர முற்படும். நடைமுறைக்கூலி உயர்வாக இருந்தால், தொழிலாளர்கள் அதிகமாகப் பிள்ளை குட்டிகளைப் பெறுவர்; இதனால் தொழிலாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து, கூலி குறைய முற்படும். இவ் விளக்

கத்தில் ரிக்கார்டோ மால்தூசிய வதியாக இருப்பது குறிப்பிடத் தக்கது. இயல்பான கூலியைச் சுருங்கக்கூறுவதாயின், உழைப் பாளிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான குறைந்த பட்சச் செலவேயாகும்.

ஆனால் இக்கொள்கையை விடாப்பிடியாகக் கொள்ளாமல் பின்னால் மாற்றிக்கொண்டார். முன்னேறும் சமுதாயத் தில் மூலதனம் பெருகப் பெருக, நடைமுறைக்கூலி இயல்பான கூலியைவிட அதிகமாயிருக்கலாம் என்கிறார். ஏனெனில் உண வையும் அவசியப்பொருள்களையும் எடுத்துக்கொண்டால் அவை நிலையானவை அல்ல. நாட்டிற்கு நாடு இவை மாறுபடலாம்; அல்லது ஒரே நாட்டில் காலத்திற்குக் காலம் மாறுபாடு அடை யலாம்.

இக் கூலிக்கோட்பாட்டை சோஷியலிசவாதிகள் பலர் எதிர்த்தனர். அவர்களில் ஜெர்மனியைச் சேர்ந்த லசேல் (Lassa'e) முக்கியமானவர். கூலி, பிழைப்பு மட்டத்திலேயே இருப்பதற்கு முதலாளித்துவ முறையே காரணம் என்பது இவர்கள் கருத்து, இக் குறையை நீக்க, தொழிலாளி முதலாளி என்ற இன வேறுபாடு அகற்றப்பட வேண்டும் என்றார் லசேல்.

மேலும், தொழிலாளி தனிப்பட்டவன் என ரிக்கார்டோ கரு தினார். முதலாளியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தொழிலாளிக்குப் பாதகமான சூழ்நிலையே இருக்கும். தொழிற்சங்கங்களை அமைத்து தொழிலாளர் தம் கூலியை உயர்த்த முடியும் என்பதை ரிக்கார்டோ உணரவில்லை. அடுத்து இக் கொள்கை மால்தஸின் மக்கள் தொகைக்கொள்கையைப் பின்னணியாகக் கொண்டது. இதனை இப்போது திருத்திக்கூறவேண்டும். உணவு கிடைக்குமென்று தெரிந்தாலே குழந்தைகள் உற்பத்தியாகிவிடும் என்ற கூற்று இப்போது அவ்வளவு உண்மையானதல்ல. வாழ்க்கைத்தரம் உயர்ந்தால் பிறப்பு விகிதம் பொதுவாகக் குறைகிறது.

ரிக்கார்டோ பங்கீட்டுக்கொள்கையைப் பற்றி விரிவாகக் கூற வில்லையெனினும், பங்கீட்டு விகிதாச்சாரம் எவ்வாறு மாறும் என்பதைக் கூறியுள்ளார். மக்கள் தொகை பெருகப் பெருக, தரம் குறைந்த நிலம் சாகுபடி செய்யப்படும்; இதனால் தானியவிலை ஏறிவிடும். உழைப்பாளிகளுக்கு அவசியமான உணவுப்பண்டங் கள் விலை உயர்ந்தால் இலாபம் குறையும். ஏனெனில் தொழில்களி லிருந்து கிடைக்கும் வருமானம் ஒரு குறிப்பிட்ட அளவே இருக்கும். இதில் கூலி விகிதம் உயர்ந்தால் இலாபம் குறைந்துதான் ஆக வேண்டும். எனினும், இலாபத்தைப் பொறுத்த வரையில், ரிக்கார்டோவின் கருத்து தெளிவாக இல்லை எனலாம். ஒரு

பொதுக்கொள்கையை ரிக்கார்டோ வலியுறுத்தியுள்ளார். எக் காரணத்தைக்கொண்டு கூலி உயர்கிறதோ, அதே காரணத்தால் இலாபம் குறையும். இன்னும் சொல்லப்போனால், கூலி உயர்வைத் தவிர, வேறு எதுவும் இலாபத்தைப் பாதிக்காது. கூலியும் இலாபமும் ஒன்றுக்கொன்று முரணானவை. நீண்டகாலக் கண்ணோட்டத்தில் பார்த்தால் பணக்கூலி உயர்ந்துகொண்டே போகும்; இலாபம் குறைந்துகொண்டே செல்லும்.

இக் கொள்கையைப் பின்னணியாகக் கொண்டு ரிக்கார்டோ எதிர்காலத்தைத் துன்பமானதாகவே கருதுகிறார். தன்னலமும் பொருள் திரட்டும் ஆர்வமும் சமுதாயத்திற்கு நன்மை பயப்பவை என்பது ஆடம் ஸ்மித்தின் வேதவாக்கு. ஆனால் ரிக்கார்டோவின் கொள்கைப்படி விரோத மனப்பான்மை வளர்ந்து பொதுநலம் பாதிக்கப்படுகிறது. நிலக்கிழார்களின் ஆசை என்ன? மக்கள் இனம் பெருகிக்கொண்டே இருக்க வேண்டும்; அதனால் மேலும் மேலும் வளமில்லாத நிலங்கள் சாகுபடியாகி, உணவின் விலை உயர வேண்டும். அப்போதுதான் குத்தகையும் அதிகரித்துக்கொண்டே செல்லும். உணவின் விலை அதிகரித்தால், அதனை அடிப்படையாகக் கொண்டே பிழைப்புக்கூலி உயரும்; கூலி உயர்ந்தால் இலாபம் குறையும். இவ்வாறாக, நிலக்கிழாரின் தன்னலம் இதரப் பொருள் உற்பத்தியாளரின் நலத்தை மட்டுமன்றி பொது மக்களின் நலத்தையும் பாதிக்கிறது. உணவுப் பண்டங்களின் விலை உயர்ந்தால் பொது மக்களின் நலம் பாதிக்கத்தானே செய்யும்; அதோடு, தானியவிலை உயர்வால் தொழிலாளரின் இலாபமோ குறைகிறது. இவ்வாறாக, தொழிலாளி-முதலாளி களின் நலன் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகிவிடுகிறது. இங்கு ரிக்கார்டோ அவர்கள் 'வர்க்கப் போர்' (Class war) ஒன்றுக்கு வித்திடுகிறார் எனலாம். தொழிலகங்களில் ரிக்கார்டோ புகுத்திய இப் போரைப் பின்னால் கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவ அமைப்பிற்கே பொதுவான வர்க்கப் போராக வரலாற்று ரீதியில் விளக்குகிறார். ஆடம் ஸ்மித் அவர்கள் எதிர்காலத்தில் எல்லாருமே இன்புற்றிருப்பர் எனக் கூறினார். ஆனால் 'துன்பமும் பூசலுமே' எதிர்காலத்தின் அம்சமாக இருக்கும் என்று ரிக்கார்டோ கருதுகிறார்.

முதலாளிகளுக்கு வரும் இலாபம் குறைந்து கொண்டே போனால், மூலதனம் திரட்டும் ஆசையோ, தொழிலில் முதலீடு செய்யவேண்டுமென்ற ஆர்வமோ அவர்களுக்கு இராது. பொருளாதார வாழ்க்கையே தளர்ச்சியடையும். உற்பத்தி குறைந்து கொண்டே வரும்; மக்கள் இனமும் வளராது; எனவே பொருளாதார வளர்ச்சியே இல்லாத நிலைதான் ஏற்படும். இவ்விதமாக, வளர்ச்சியே இல்லாத சமூகத்தை உருவாக்கியவரே ரிக்கார்டோ

தான் எனலாம். இங்கிலாந்தின் தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கு அவர் விட்டுச் சென்ற போதனை என்றுகூடச் சொல்லலாம். பின்னர் தோன்றிய ஜே. எஸ். மில் அவர்கள் இக் கருத்தையே மிக அழகாக வருணிக்கின்றார்கள்.

தடையிலா அயல்நாட்டு வாணிபம்

ரிக்கார்டோவின் சிறு நூல்களில் இரு சிறப்பான கருத்துகள் தெளிவாக உள்ளன. அவற்றில் ஒன்று அயல்நாட்டு வாணிபம் பற்றியது. பிரிதொன்று காகிதப் பண வெளியீடு பற்றியது. இக் கருத்து விளக்கங்களில் எதிர்காலம் பற்றிய துன்ப நோக்கமோ அல்லது தன்னலம் பொதுநலத்தைப் பாதிக்கும் முறையோ கிடையாது என்பது குறிப்பிடத் தக்கது. மாறாக, தடையிலா வாணிபம் இருந்தால்தான் மக்களின் தன்னல ஆர்வம் பொதுநலத்திற்கு ஆதாரமாக அமையும் என்பதை வலியுறுத்திகிறார். தடையிலா வாணிபக் கொள்கையை ஆடம் ஸ்மித்தைக் காட்டிலும் தீவிரமாக வலியுறுத்தினார் என்றால் மிகையாகாது. குத்தகை அதிகரிக்காமல் இருப்பதற்கும், தானிய விலைவாசிகளைத் தடையின்றி இறக்குமதி செய்வதுதான் என்பது ரிக்கார்டோவின் கருத்து. தடையிலா வாணிபத்தை ஆதரித்ததற்குப் பிரிதொரு காரணமும் உண்டு. இக் காரணம் இன்றைக்கும் பொருத்தமானதாகும். எல்லாப் பொருள் களையும் உண்டாக்குவதற்கேற்ற இயற்கை வளங்கள் எந்தெந்த நாடு களில் எந்தெந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கேற்ற இயற்கை வளம் உளதோ அப்பொருள்களையே அந்நாடு சிறப்பாக உற்பத்தி செய்து பிறநாடுகளுக்கு அனுப்பினால், எல்லாப் பொருள் களுமே மலிவாக எல்லாருக்குச் கிடைக்கும். இதனை பிராந்திய வேலைப் பகுப்பு என்று கூறலாம்.

ரிக்கார்டோவின் நண்பரான மால்தஸ் இக் கருத்தில் வேறு எண்ணம் கொண்டிருந்தார். பெருகிவரும் மக்கள் இனத்திற்கு வேண்டிய தானியத்தை இறக்குமதிசெய்வதைத் தவிர்த்து, தானிய இறக்குதியே கூடாதென்றார். ஆனால் ரிக்கார்டோ அவர்கள் தானிய இறக்குமதியைத் தீவிரமாகக் கொண்டுவரவேண்டு மென வலியுறுத்தினார். இங்கு, மால்தஸின் கொள்கைகளுக்கும் ரிக்கார்டோவின் கொள்கைகளுக்குமுள்ள வேறுபாட்டைக் கூறுவது நலமாயிருக்கலாம். இருவரும் ஒரே காலத்தில் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள்தாம். எனினும், இவர்களுடைய வாழ்க்கைப் பின் னணியும் கருத்துகளும் முரணானவை. மால்தஸ் கல்லூரிப் பேராசிரியர்; ரிக்கார்டோவோ ஒரு பங்கு மார்க்கெட் தரகர் பேராசிரியராக இருந்த மால்தஸ் உலகப் பிரச்சினையில் ஆர்வம் கொண்டார்; தரகராக இருந்த ரிகார்டோ கருத்துலகில் நாட்டம்

கொண்டார். மால்தஸிடம் செல்வம் இல்லை; ரிக்கார்டோவோ பெரிய கோடீஸ்வரர். சாதாரண குடும்பத்தில் பிறந்த மால்தஸ் ஏழைகளுக்குத் தரப்பட்ட உதவியை எதிர்த்தார்; பெருநிலக் கிழார்களுக்கு ஆதரவாக வாதாடினார். ஆனால் செல்வச் சீமானும் பெருநிலக்கிழாருமான ரிக்கார்டோ பொதுமக்களின் வாதியாக நிலச்சுவான்தார்களுக்குமாறாகத் தடையிலாத் தானிய இறக்கு மதிக்கு வழிகோரினார்.

ரிக்கார்டோவின் தடையிலா வாணிபக் கொள்கை வேறொரு விதத்திலும் சிறப்புடையதெனலாம். தடையிலா வாணிபம் இருந்தால்தான் எல்லா நாடுகளுக்கும் சாதகமான அல்லது பாதகமான நிலை ஏற்படாமல் சரியான நிலை ஏற்படும் என்பது. சான்றாக, ஃபிரான்ஸ் நாட்டிற்குப் பாதகமான வாணிப நிலை ஏற்பட்டால் அதற்காகத் தங்கத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பும்; அப்போது அந் நாட்டின் விலைவாசிகள் குறைந்து, இறக்குமதி செய்வதற்குப் பதிலாக ஏற்றுமதிசெய்யும் நாடாகி, அனுப்பிய தங்கத்தை மீண்டும் பெற்றுவிடும். இவ் விளக்கத்தில் வாணிபச் சரக்குகள் ஒரு நாட்டிலிருந்து வெளியானால், தங்கம் உள்ளே வருகிறது; சரக்குகள் உள்ளே வந்தால் தங்கம் வெளியே போகிறது என்ற தத்துவம் புலனாகிறது. ஆனால், பணத்தின் அளவால்தான் பொருள்களின் விலைவாசிகள் நிருணமாகின்றன என்ற அனுமானத்தின்மீது ரிக்கார்டோ இவ் விளக்கத்தைத் தருகிறார்.

காகிதப்பண வெளியீடு

பிரெஞ்சுப் புரட்சியும், ஆங்கில, பிரெஞ்சுப் போரும் நடந்த காலத்தில் வாழ்ந்தவர் ரிக்கார்டோ என்று முன்னரே கூறினோம். இப் போரின் விளைவாக இங்கிலாந்தின் அரசாங்கம் ஏராளமான காகிதப் பணத்தை அச்சிட்டு வெளியாக்கியது. இதனால் விலைவாசிகள் ஏறின; பொன்னும் வெள்ளியும் அதிக விலைக்கு விற்கப்பட்டன. இச்சூழ்நிலையில், 'பொன், வெள்ளியின் விலை உயர்வு' என்ற நூலை அவர் வெளியிட்டார். இந்நூலைப் பற்றியும் நாணயப் பிரச்சினை பற்றியும் ரிக்கார்டோ கொண்டிருந்த கருத்துகள் பற்றியும் எவ்வளவோ எழுதமுடியும்; என்றாலும் அதற்கு இது உரிய இடமல்ல. அன்றைய அவசரப் பிரச்சினையை ஆராயவே ரிக்கார்டோ இச்சிறு நூலை எழுதினார். பொன், வெள்ளிக் கட்டிகள் சர்வதேச வணிகத்தின் விளைவால் எவ்வாறு பல நாடுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதை இதில் விளக்குகிறார். பண விஷயத்தில் பணத்தின் அளவே அதன் மதிப்பை நிருணயிக்கிறது என்ற கொள்கையை உருவாக்கினார். நாணயத்தின் மதிப்பைக் குறைப்பதால் ஏற்படும் விளைவுகளையும் விவரித்துள்ளார்.

பொன்னையும் வெள்ளியையும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டு மெனக் கோரியுள்ளார். நாணயச் செலாவணி முழுவதும் காகிதப் பணமாகவே இருப்பது நல்லதென்றும், இக் காகிதப் பணத்திற்கு ஈடாகத் தங்கம் வைத்திருக்க வேண்டுமென்றும் அறிவுரை கூறி யுள்ளார். 1925ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தங்க நாணயத் தின் சிறப்பான அம்சங்களை இவர் முன்னரே கூறியுள்ளார். ரிக்கார்டோ நாணயச் செலாவணி நிபுணர் என்பதை இதற்குமேல் விவாதிக்க ஏற்ற இடமல்ல இது.

ரிக்கார்டோவின் செல்வாக்கு

ரிக்கார்டோ, போட்டியின் அடிப்படையில்தான் பொருளாதார உலகம் இயங்குகிறது எனக் கூறி, போட்டிக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இது ஆடம் ஸ்மித்தின் கொள்கையை வலிமை யடையச் செய்தது; தலையிடாக் கொள்கைக்கும் ஆதரவு தந்தது. இங்கிலாந்து நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் அரசாங்கத் தலையீடு குறைந்ததற்கும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதற்கும் ரிக்கார்டோவின் கொள்கைகள் காரணமாயிருந்தன எனலாம். 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் தானியச் சட்டங்களும் நாவாய்ச் சட்டங்களும் படிப்படியாக ரத்தாயின என்றால், அது ரிக்கார்டோ வின் கொள்கைக்கு இருந்த செல்வாக்கையே குறிக்கிறது.

'உழைப்பே பண்டத்தின் மதிப்பை நிருணயிருக்கும் அளவு கோல்' என்னும் ரிக்கார்டோவின் கொள்கை அவர் கனவிலும் நினை யாத விளைவுக்கு வித்தாகிவிட்டது. பொருளாதாரத்தைத்தவறான வழியில் திருப்பிவிட்டு, வறட்டுக் கொள்கைக்குவழி அமைத்தவர் டேவிட் ரிக்கார்டோதான் என்பது ஒருசாராரின்கருத்து எனினும், ரிக்கார்டோ மற்றவர்களைத் தன் செல்வாக்கின்கீழ் கொண்டுவந்த அளவுக்கு வேறு எவரும் கொண்டு வரவில்லை. தாம் எத்துறையில், எவரிடம்செல்வாக்குப் பெறுவோம் என்பதை ஞானக்கண் கொண்டு எண்ணிப்பார்த்திருந்தால் ரிக்கார்டோவே நடுங்கிப் போயிருப்பார். தலைசிறந்த ஆங்கில அரசியல் பொருளாதாரத்தை அழகுற அமைத் தவரும் ரிக்கார்டோதான். எனவே, அடுத்த தலைமுறையினர் ஆடம் ஸ்மித், மால்தஸ், ரிக்கார்டோ ஆகியவர்கள் கூறிய வற்றையே திரும்பத் திரும்ப கிளிப்பிள்ளைபோல் எடுத்துரைத் தனர். எனினும், ரிக்கார்டோவின் உழைப்பு மதிப்புக்கொள் கையை அடிப்படையாகக் கொண்டுதான் கார்ல் மார்க்ஸ் தம் நூல் களை எழுதினார். இதைப்போலவே, ரிக்கார்டோவின் குத்தகைக் கொள்கையை விவசாய சமதர்மத்திற்கு வழிகோலியதாகக்கொள்ள முடியும். ரிக்கார்டோவின் கூலிக்கொள்கையும் சோஷியலிஸ்டு களின் போர்க்குரலாகவே அமைகிறது. கூலியும் இலாபமும் பற்றிய

அவரது கொள்கை வர்க்கப் போராட்டத்திற்கு வித்திடுவதாகவே அமைந்துள்ளது. தலை சிறந்த சமதர்ம வாதியான கார்ல்மார்க்ஸுக்கும் அவரது வழித்தோன்றல்களுக்கும் ரிக்கார்டோதான் வழி தேடிக் கொடுத்தார் என்றால், இதனை விந்தை என்பதா அல்லது விதி என்பதா? எனவே, பொது உடைமை வாதிகளின் ஆலயத்தில் கார்ல் மார்க்ஸ், லெனின் ஆகிய இருவருக்கும் உருவச்சிலை வைப்பது அவசியமென்றால், அந்த ஆலயத்தின் ஒரு மூலையில் ரிக்கார்டோவின் உருவப்படத்தையாவது வைத்து ஆராதிக்க வேண்டியதுதான்.

மதிப்புரை

பொருளாதாரத்தைச் செயல் முறையில் விளக்காமல் பண்பியல் வாயிலாக விளக்கியவர் ரிக்கார்டோ என்று கூறுவது வழக்கம். 'அப்படியிருந்தால்', 'இப்படியிருந்தால்' என்ற அடிப்படையின்மேல் உருவான கருத்துக்கோவைதான் அவருடைய நூல் என்பதும் உண்மைதான், எனினும், ரிக்கார்டோ நடைமுறைப் பொருளாதார இயலை உருவாக்கியவர் என்று கூறுவதற்கு இடமுண்டு. அவரது காலத்தில் இருந்த பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றித்தான் அவரது வாதம் இருந்தது. ஆனால் அது வெறும் கொள்கையளவிலேயே விளக்கப்பட்டுவிட்டது. விளக்கத்திற்கு நடைமுறை ஆதாரத்தையோ அல்லது வரலாற்று ரீதியிலிருந்து சான்றையோ அவர் கொடுக்கவில்லை.

ரிக்கார்டோ வாழ்ந்த காலத்தில் இங்கிலாந்தின் பொருளாதார வாழ்க்கையில் பல முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. அரசாங்கக் கட்டுப்பாடின்றி, தனியார் பல தொழில்களைப் போட்டி போட்டு நடத்தி வந்தனர். தொழில் புரட்சியின் விளைவாகவும் மக்கள் இனப்பெருக்கத்தாலும் வறுமைப் பிணியானது பலரை வாட்டியது. பெருகி வரும் மக்களினத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் நிலச்சுவான்கள் தத்தம் பண்ணைகளை விரிவுபடுத்தினர். வளமில்லா நிலமும் சாகுபடிக்குக்கொண்டு வரப்பட்டலால் குத்தகை அதிகரித்தது; இதனால் நிலக்கிழார்களின் வருவாயும் உயர்ந்தது. தானியவிலை ஏறியதால் பாட்டாளிகளின் கூலி உயர்ந்தது; முதலாளிகளின் இலாபமோ சுருங்கியது. இந் நிலையில், வருமானத்தை உற்பத்திக் காரணிகளுக்கிடையே பகிர்வது எவ்வாறு என்ற பிரச்சினை எழுந்தது. இப் பிரச்சினையை ஆடம் ஸ்மித் விளக்கமாகக் கூறவில்லை; கூறவேண்டிய அவசியமும் இல்லை. எனவே, ஆடம் ஸ்மித் விட்டுச் சென்ற பணியையே ரிக்கார்டோ மேற்கொண்டார். உலகியலில் பெருகி நிலக்கிழாராகவும், கோடீஸ்வரத் தரகராகவும் செல்

வாக்குப் பெற்ற ரிக்கார்டோ மேற்கூறிய பிரச்சினைகளையெல்லாம் அனுபவரீதியில்தான் ஆராய்ந்தார் எனலாம். தொழிலதிபர்களின் வருவாய் எவ்வாறு நிலக்கிழார்களின் தன்னலப் பற்றுதலால் பாதிக்கப்படுகிறது என்பதையும் தொழில் முன்னேற்றம், குத்தகை அதிகரிப்பால் எப்படித் தடைபடுகிறது என்பதையும் விளக்கவே தம் நூலை எழுதினார் எனலாம்.

ரிக்கார்டோவின் பொருளாதார விளக்கம் ஸ்மித்தின் விளக்கத்திலிருந்து பெரிதும் மாறுபட்டிருந்தது. ஸ்மித் பொருள் உற்பத்தியைப் பற்றியே அதிகம் பேசினார்; தன்னலம் பொதுநலத்தைப் பேணுகிறதென்றார்; எதிர்காலம் இன்பமயமாகும் என்ற கண்ணோட்டம் கொண்டார். ரிக்கார்டோ வருமானப் பகிர்வை வலியுறுத்தினார்; மக்களிடையே பூசல் தோன்றுவதை விளக்கினார்; எதிர்காலம் துன்பமயமானதெனப் பதறினார். எனவே, ரிக்கார்டோவின் நூலைப் புரட்சியும் கலக மனப்பான்மையும் கொண்ட நூல் எனவும் சிலர் கூறுவர். படிக்காத யூதகுலத் தரகர் ஒருவரின் நூல் என்றும் வருணிப்பர். யூதகுலத்தில் தோன்றிய பொருளாதார அறிஞர்களில் ரிக்கார்டோவும் கார்ல் மார்க்சும் தலைசிறந்தவர்கள் எனினும் இருவரது நூல்களுமே படிப்பதற்குக் கடினமானவை. நாவன்மையும் எழுத்துச் சுவையுமில்லாதோர், பிறர் தங்களைத் தவறுகப் புரிந்துகொள்ள நேரிட்டால், தங்களைத் தாங்களே தெரிந்துகொள்ள வேண்டுமேயன்றி, பிறரை நொந்துகொள்ளக் கூடாது என்பதற்கு ரிக்கார்டோவின் நூலே சான்று. இருப்பினும், ரிக்கார்டோ காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் பலர் அவரையே பொருளாதார அறிவியலுக்கு வழிகாட்டியாகக் கருதினர். ரிக்கார்டோவையும் அவர் வரைந்த நூலையும் போற்றிப் புகழ்ந்த அறிஞர்களில் மால்தஸ், ஜேம்ஸ்மில், ஜே. எஸ். மில் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

இரண்டாம் பிரிவு

தொன்மைப் பொருளாதார மரபினர்

தொன்மைப் பொருளாதார அறிஞர்களான ஆடம் ஸ்மித், மால்தஸ், ரிக்கார்டோ ஆகிய மூவரும் பொருளாதாரத்தின் இயல்பு, முறை, கருத்துகள் முதலியவற்றை வரையறை செய்து ஒரு புதிய மரபினை நிலைநாட்டினர். மனிதனின் இயற்கைப் பண்புகளாகிய தன்னலம், பொருளீட்டும் ஆவல் சந்தையில் வாங்குவோர்-விற்போரிடையே ஏற்படும் போட்டி ஆகியவற்றின் வழியாக சுதந்திர வாதத்தை உருவாக்கினர். மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடக்கூடாதென்ற கொள்கையை வலியுறுத்தினர். மால்தஸின் மக்கள் தொகைக் கொள்கையும் சமுதாயத்தில் மக்களிடையே ஏற்படும் பிணக்கை உறுதிசெய்தது. கூலி உயர்ந்தால் இலாபம் குறையுமென்றும், இலாபம் கூடினால் கூலி குறையுமென்றும் கூறி, அதனால் ஏற்படும் முதலாளி-தொழிலாளி பகைமை உணர்வையும், நிலக்கிழாரின்மீது ஏனையோர் கொண்ட சீற்றத்தையும் ரிக்கார்டோவின் கொள்கை திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டியது. தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் இக் கருத்துகள் எவ்வளவு தூரம் உறுதியாக வகுக்கப்பட்டதெனில், அவர்களுக்குப் பின் இரு தலைமுறைக் காலம்வரை புதிய கருத்துகள் எதுவும் தோன்றவில்லை. சுதந்திர வாதத்தின் செல்வாக்கு அவ்வளவு தூரம் ஓங்கியிருந்தது.

ஆனால் 800ஆம் ஆண்டிலிருந்து சுமார் 50 ஆண்டுகள்வரை தொன்மைப் பொருளாதாரக் கருத்துகளை விளக்கியும் முறைப்படுத்தியும் பல நூல்கள் வெளியாயின. அவ்வாறு பழமைக் கருத்துகளை விரிவுபடுத்தியும் ஒழுங்குபடுத்தியும் எழுதிய அறிஞர்களை இப் பகுதியில் காணலாம். அவர்களில் ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ்மில் (Games mil), மெக்கல்லக் (Mc cull k), நாஸா சீனியர் (Nassau senior) ஆகியோரும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜே பி.ஸே. (J. B. Say) யும் ஜெர்மானிய நாட்டு வான் தூனனும் (Vant unen முக்கியமானவர்கள் அவர்கள் அனைவரும் புதிய கருத்து எதையும் உருவாக்கவில்லை; எனினும், பழமைக் கருத்துகளையும் கொள்கைகளையும் பரப்பிய பெருமையும் அவற்றை முறைப்படுத்திய புகழும் அவர்களைச் சார்ந்ததாகும்.

1. ஜேம்ஸ் மில் (1773-1836)

ஜேம்ஸ் மில் பொருளாதார மேதைகளில் ஒருவரான ஜான் ஸ்டுவர்ட் மில்லின் தந்தை ஆவர். இவர் ஒரு தத்துவ ஞானி; புகழ்மிக்க வரலாற்று ஆசிரியர்; பென்தமின் பயன்வழிக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்; பொருளாதார அறிஞரும்கூட. ஜேம்ஸ் மில் 1790 முதல் 1793 வரை எடின்பரோ பல்கலைக் கழகத்தில் படித்தார். 1802-ல் லண்டனிற்குச் சென்று பத்திரிகை ஆசிரியராகப் பணிபுரிந்தார். அவர் வரைந்த நூல்களில் இந்தியாவின் வரலாறு' (History of India) புகழ்மிக்கதாகும். இந்நூலை 1806-ல் தொடங்கி 1818-ல்தான் முடித்து வெளியிட்டார். இந்நூல் இன்றும் புகழ்பெற்றதொன்றாகும். ஜேம்ஸ் மில் ஒரு பெரிய வரலாற்று ஆசிரியர் என்ற பெருமையை அளித்தது இந்நூல். 1808-ல் ஜெரெமி பென்தமின் நட்பைப் பெற்ற ஜேம்ஸ் மில் அவரின் சீடர்களில் ஒருவராக மாறினார்.

ஜேம்ஸ் மில் ரிக்கார்டோவின் நெருங்கிய நண்பர். ரிக்கார்டோ எழுதிய கட்டுரைகளையும் குறிப்புகளையும் நூலாகப் பதிப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார் ஜேம்ஸ் மில். அதன் பின்னரே தனது நூலை ரிக்கார்டோ வெளியிட்டார். ஜேம்ஸ் மில் வரைந்த 'அரசியல் பொருளாதாரத்தின் சாரத்தை வடித்துத் தருகிறார். ஜேம்ஸ் மில்லைத் தனது சீடர்களில் ஒருவராகக் கூறுவதில் பெருமைப்பட்டவர் பென்தம். 'ஜேம்ஸ் மில்லுக்கு நான் ஞானத் தந்தை; ரிகார்டோவிற்கு ஞானத்தந்தையாக ஜேம்ஸ் மில் விளங்கினார்' என்பது பென்தமின் கூற்று.

பொருளாதாரத்தின் விளைவு

பொருளாதாரம் எதைப்பற்றியது என்பதை ஜேம்ஸ் மில் தனது முன்னுரையிலேயே குறிப்பிடுகிறார். அரசியல் பொருளாதாரத்தை ஏனைய அறிவியல்களோடு கலக்கவிடாமல் தனித்து ஆராய வேண்டுமென்பது அவர் கருத்து. இந் நிலையில் பொருளாதாரம்

என்பது கீழ்க்காணும் நான்கு வகைப் பிரச்சினைகளைப் பற்றியது என்பதை விளக்குகிறார்.

1. பண்டங்களின் உற்பத்தியை ஒழுங்குபடுத்தும் விதி முறைகள் யாவை?

2 உழைப்பினால் உற்பத்தியாகும் பண்டங்கள் எவ்வாறு பகிர்ந்து கொள்ளப்படுகின்றன என்பதை நிருணயிக்கும் விதிகள் யாவை?

3. எந்த அடிப்படையில் உற்பத்தியான பண்டங்கள் ஒன்றுக் கொன்று பரிமாறப்படுகின்றன?

4. பண்டங்கள் நுகரப்படுவதை ஒழுங்குபடுத்தும் விதிகள் எவையெவை?

கூலி, மக்கள்தொகை, பண்டத்தின் மதிப்பு ஆகியவைபற்றி ஜேம்ஸ்மில் கொண்ட கருத்துகள் குறிப்பிடத்தக்கவை.

கூலியும் மக்கள் தொகையும்

மூலதனம் பெருகாமலிருக்கும்போது மக்கள் தொகை அதி கரித்தால் கூலிகுறையும் என்றும், மக்கள்தொகை குறைந்தால் கூலி அதிகரிக்கும் என்றும் ஜேம்ஸ்மில் நம்பினார். மக்கள் தொகை அதிக ரிக்கின்ற விகிதத்தில் கூலியும் உயர்ந்தால் உழைப்பாளிகள் பாதிக் கப்படமாட்டார்கள். ஆனால் மூலதனத்தைக் காட்டிலும் மக்கள் தொகை வேகமாக அதிகரிக்கின்றது என்பதை அவர் காண்பித்தார். அதன் விளைவாகத்தான் ஏழைப்பாட்டாளிகள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகின்றனர் என்ற முடிவிற்கு வந்தார் மில் இவ் விளக்கத்தின் வாயிலாக, கூலி நிதிக்கோட்பாட்டை மட்டுமன்றி, மால்தஸின் மக்கள்தொகைக் கொள்கை, ரிக்கார்டோவின் பகிர்வுக் கொள்கை ஆகியவற்றையும் எவ்வித மாறுதலுமின்றி அப்படியே ஏற்றுக்கொண்டார். மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப் படுத்தாமல் ஏழைமக்களின் துன்பங்களைக் களைந்திடமுடியா தென்றார். எனவே, மக்கள் தொகைப் பெருக்கத்தை எந்தவழி களில் கட்டுப்படுத்துவது என்பதையே பெரும் பிரச்சினையாகக் கருதினார்.

பண்டங்களின் மதிப்பு

பண்டங்களின் மதிப்பு எவ்வாறு நிருணயமாகிறதென்பதை ஆய்விடத்து, தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் விளக்

கத்தை அப்படியே ஏற்றுக்கொண்டார் மில். மனிதனின் உழைப்பே பண்டங்களின் மதிப்பை அளவிடும் அளவுகோல் என்னும் தத்துவத்தை விமரிசனம் செய்யும்போது, மூலதனம் என்பது கடந்த கால உழைப்பின் கூட்டுதான் என்றும், இலாபம் என்பது முடக்கப்பட்டுள்ள உழைப்பிற்குத் தரப்படும் பங்குதான் என்றும் கூறினர். எனினும், இத் தத்துவத்தை அவரால் எண்பிக்க முடியவில்லை. மூலதனம் உற்பத்திக் காரணிகளில் ஒன்ருக இருந்த போதிலும், அது கடந்தகால உழைப்பின் படைப்புதான் என்று வலியுறுத்தினர் ஜேம்ஸ்மில். இதனுல் அறிவுக்கொவ்வாத பல முடிவுகளுக்கு அவர் வரவேண்டியிருந்தது. சான்ருக, மதுபானத்தை, குறிப்பாக ஒயினை எடுத்துக்கொண்டால் அது பழைமையாக ஆக அதன் மதிப்பு உயர்கிறது. இச் சான்றைக்கொண்டு ரிக்கார்டோவின் மதிப்புக் கோட்பாட்டைத் தவறெனப்பலர் எண்பித்தனர். ஆனல் ஜேம்ஸ்மில் ‘மதிப்பை உண்டாக்குவதில் காலத்திற்கு எவ்விதப் பங்குமில்லை’ என வாதாடினர். இவ் வாதத்தை இன்று எவருமே ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

ஜேம்ஸ் மில்லின் நூலில் எந்தக் கருத்துமே புதுமையானதல்ல. ரிக்கார்டோவின் பொருளாதார நூலில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டதின் விளைவே ஜேம்ஸ் மில்லின் நூலாகும்.

11. மெக்கல்லக் (1789—1864)

ஜான் ராம்சே மெக்கல்லக் (John Ramsay Micculloch) இங்கிலாந்திலுள்ள ஒயிட்ஹான் (Whithorn) என்னுமிடத்தில் பிறந்து, எடின்பரோ பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ருர். ஆடம் ஸ்மித்தின் ‘நாடுகளின் செல்வம்’, ரிக்கார்டோவின் ‘அரசியல் பொருளாதாரத் தத்துவங்கள்’ ஆகிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட பெருமைக்குரியவர். 1824-ல் லண்டன் நகரில் ரிக்கார்டோவின் நினைவாகச் சொற்பொழிவாற்றியவர். அச் சொற்பொழிவு ‘பிரிட்டானிகா களஞ்சியத்தில்’ Encyclopaedia Britanica) கட்டுரை வடிவில் வெளியாயிற்று. 1825-ல் சொந்தமாக ‘அரசியல் பொருளாதாரத் தத்துவங்கள்’ (Principles of Political Econom) என்ற தலைப்பில் நூலை வெளியிட்டார். அந்நூலை ஆங்கில நாட்டு அறிஞர்கள் பலர் விரும்பிப் படித்தனர். 1828ஆம் ஆண்டில் லண்டன் பல்கலைக் கழகத்தில் அரசியல் பொருளாதாரப் பேராசியராக அமர்ந்து பணியாற்றினர்.

பொருளாதாரக் கருத்துக்கள்

மெக்கல்லக் பொருளாதாரத்திலும் புள்ளி இயலிலும் புலமை பெற்றவர். ரிக்கார்டோவின் வாழ்க்கை வரலாற்றை நூலாக வெளியிட்டவர். ஜே. எஸ். மில்லின் நூல் வெளியாகும் வரை மெக்கல்லக்கின் நூலே புகழ்பெற்று விளங்கியது. ஜெர்மானிய மொழியில் மட்டுமன்றி, இத்தாலி, பிரெஞ்சு மொழிகளிலும் அவரது நூல் மொழிபெயர்க்கப்பட்டுப் பரவின. அரசியல் பொருளாதார அமைப்பிற்குச் சிறு விளக்கம் தந்து அந்நூல் புகழ் பெற்றது. ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ ஆகிய தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்துகளையும் கொள்கைகளையும் அப்படியே ஆதரித்துள்ளார். எனவே, தொன்மைப் பொருளாதாரத்தின் பிரதிபலிப்பாகவே அவரது நூல் விளங்கியது.

இயற்கையன்னை மனிதனுக்கு வேண்டிய பல பண்டங்களை அளித்துள்ளாளென்றாலும், அப் பண்டங்களுக்கெல்லாம் விலை மதிப்புக்கிடையாதென்றும், மனிதனின் உழைப்பின்றி எப்பொருளும் விலை மதிப்பைப் பெறமுடியாதென்றும், எனவே மதிப்பிற்கு மனிதனின் உழைப்பே முக்கியமென்றும் தருக்கரீதியில் வாதாடுகிறார் மெக்கல்லக். இதற்குச் சிறந்ததொரு சான்றையும் தருகிறார். ஒருவன் நதிக்கரையிலோ அல்லது பழத்தோட்டத்திலோ இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவன் முயற்சி செய்து ஆற்று நீரைப் பருகவேண்டும் அல்லது மரத்திலுள்ள பழத்தைப் பறித்து உண்ணவேண்டும். இல்லையேல் அவன் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்.' எனவே, இயற்கையன்னை எவ்வளவுதான் கருணையுள்ளம்கொண்டு நமக்கு வேண்டிய பொருள்களை அளித்திருந்தாலும், நமது முயற்சியும் உழைப்புமின்றி அப் பொருள்களால் எவ்விதப் பயனுமில்லை என்கிறார்.

மெக்கல்லக் கூலியைப்பற்றிப் பேசும்போது, 'மனிதன் தனது உடல் சக்தியை அல்லது உள்ள வலிமையை அல்லது திறமையை செலவிடுவதற்கு ஈடாகக் கொடுக்கப்படும் தொகையே கூலி' என்கிறார். எனவே, உழைப்பைக் கடினமானதென்றும் எளிதானதென்றும் பாகுபடுத்தி, அதற்கேற்பக் கூலியும் வேறுபடும் என்கிறார். அதுபோலவே திறமைக்கேற்பவும் கூலி அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும்.

உழைப்பை, பயன்தரும் உழைப்பு பயன்தரா உழைப்பெனப் பாகுபடுத்தினர் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள். அப் பாகுபாட்டை மெக்கல்லக் ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லா உழைப்புமே பயன் தரும் உழைப்புத்தான் என்கிறார். வீட்டுச் சமையல்

காரனின் உழைப்பிற்கும் ஏனைய பணியாட்களின் உழைப்பிற்கும் அடிப்படையில் வேறுபாடில்லை என்று கருதுகிறார்.

ஜேம்ஸ் மில்லைப் போன்றே மெக்கல்லக்கும் எந்தப் புதிய கருத்தையும் பொருளாதாரத்தில் புகுத்திவிடவில்லை. தொன்மைப் பொருளாதாரக் கருத்தினை வலியுறுத்தியதே அவரது பணியாகும்.

நாஸா வில்லியம் சீனியர் (1790 — 1864)

சீனியர் ஆக்ஸ்போடு பல்கலைக்கழகத்திலுள்ள மாக்டலன் கல்லூரியில் பயின்று 1815-ல் எம். ஏ., பட்டம் பெற்றவர். பின்னர், சட்டம் பயின்று, வழக்கறிஞருக்குரிய தகுதியும் பெற்றார். 1825-ல் ஆக்ஸ்போடு பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியர் பதவி உருவாக்கப்பட்டது. அப் பதவியில் 5 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்ற நியமனம் பெற்றார். மறுபடியும் 1847 முதல் 1852 வரை அப் பதவி அவருக்கே கிடைத்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பல்வேறு ராயல் கமிஷன்களில் உறுப்பினராகவும் பணிபுரிந்தார். எந்தப் பொருளையும் முழுமையாகவும் அறிவு நுட்பத்துடனும் அணுகி ஆராயும் ஆற்றல் பெற்றவர் சீனியர். டேவிட் ரிக்கார்டோவிற்குப் பின்னர் ஜே. எஸ். மில் காலம் வரை சீனியரே இங்கிலாந்தின் சிறந்த பொருளாதார அறிஞராக மதிக்கப்பட்டார் என்று சிலர் கூறுவர். அவர் வரைந்த நூல்களில் முக்கியமானது 1836-ல் வெளியான "அரசியல் பொருளாதார அறிவியலின் சிறு விளக்கம்" என்பது. இதைத் தவிர அவர் எழுதிய குறிப்புகளைக் கொண்டு 1928-ல் "தொழில் திறமையும் சமூகப் பொருளாதாரமும்" என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியானது. இந் நூலில்தான் சீனியரின் அறிவுக் கூர்மையும் சுயமாகச் சிந்திக்கும் திறனும் அறியப்படுகிறது. அவரது அரசியல் பொருளாதாரத்தைக் கற்போர் பொருளாதாரத் தத்துவங்களை எவ்வளவு சுருக்கமாகவும் இனிமையாகவும் போதிக்கிறாரென்று வியப்படைவர்.

அரசியல் பொருளாதாரத்தின் விரிவு

சீனியர் அரசியல் பொருளாதாரத்தின் அழகையும், தன்மையையும் கவர்ச்சிகரமாக வருணித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. அரசியல் பொருளாதாரம் செல்வத்தைப் பற்றிய அறிவியலேயன்றி, மனிதனின் இன்பத்தைப் பற்றியதல்ல என வரையறை செய்கிறார். இவ்வாறாகப் பொருளாதார அறிவியலின் பரப்பைச் சுருக்கிவிட்டதற்காக அவரைக் குறை கூறுவோரும் உண்டு. அதோடு, வெறும் கருத்தியல் அறிவியலாகவே பொருளாதாரத்தை

அவர் கருதியது பலரின் சினத்தைக்கூடத் தூண்டிவிட்டது. பொருளாதார அறிவியலின் தன்மையையும் விரிவையும் விளக்கு வதற்கு நான்கு சூத்திரங்களைக் கொடுத்துள்ளார். (1) குறைந்த பட்ச உழைப்பையும் தியாகத்தையும் கொண்டு நிறைந்த செல் வத்தைப் பெறுவதே மக்களின் விருப்பம். (2) மால்தஸின் மக்கள் தொகைக் கோட்பாட்டின் உண்மை. (3) செல்வத்தை உண்டாக் கும் உழைப்பு, இதரக் கருவிகள் ஆகியவற்றின் திறனை எல்லை யின்றி அதிகரிக்க முடியும்; அவ்வாறு செய்வதற்கு அவை உற் பத்தி செய்யும் பண்டங்களை மேலும் உற்பத்தி செய்யப் பயன் படுத்த வேண்டும். (4) நிலத்திற்குப் பொருத்தமான குறைந்து செல் விளைவு விதி. இந் நான்கு சூத்திரங்களையும் ஆதாரமாகக் கொண்டால் பொருளாதாரத்தைப் படிப்பது எளிது என்கிறார் சீனியர். அதுவும், சாய்வு நாற்காலியில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டு ரம்மியமான புகையிலையைப் புகைத்துக் கொண்டே பொருளாதாரத்தைக் கற்க முடியும் என்கிறார்.

பொருளாதார இயலின் தன்மையைக் கூறும்போது, அது வெறும் கருத்தியல் மட்டும்தான் என்று எடுத்துக்காட்டிவிட்டு, அது அரசியலோடும் ஒழுக்க இயலோடும் கலந்துவிடாமல் தூய்மையான தனித்த இயலாகவும் இருக்க வேண்டுமென்கிறார். அவ்வாறென்றால், பொருளாதார அறிஞர் எவரும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் யோசனை கூறுவதோ வழி வகைகளை எடுத்துக்காட்டுவதோ கூடாதென்கிறார். அவரு டைய கருத்தை நாம் ஏற்றுக்கொண்டால், பொருளாதாரத்தை அறிவு வளர்ச்சிக்காகத்தான் படிக்க வேண்டுமே தவிர, நடை முறையில் அதனால் ஏற்படக்கூடிய பயனிற்காகப் படிக்கக்கூடா தென்றாகிறது. மனிதன் கனி தரும் மரங்களை நாடாமல் வெறும் அழகிற்காக மட்டும் உள்ள மரங்களையே விரும்புவானா என்றால், அது சந்தேகமே. எனவே, சீனியரின் கொள்கைப்படி இன்று எவருமே பொருளாதாரத்தை அணுகுவது கிடையாது. வாழ்விற் கொவ்வாத வெறும் கருத்தியலாக மட்டும் பொருளாதாரத்தைக் கருதினால் அதனால் என்ன பயன?

மதிப்புக் கொள்கை

பண்டங்களின் உற்பத்திச் செலவையும் மதிப்பையும் ஆராய் கின்ற அவரது பகுதி சிறப்புப் பெற்றதாகும். பொருள்கள் வாங்கப் படுவதற்கும் விற்கப்படுவதற்குமுள்ள தகுதியே அப் பொருள் களுக்கு மதிப்பை உண்டுபண்ணுகிறது என்கிறார் சீனியர். அத் தகுதியை அடைய வேண்டுமாயின் அப் பொருள்கள் பயனுள்ளவை களாகவும், கிடைப்பருமையுடையதாயும், பரிமாற்றிக் கொள்ளக்

கூடியதாயும் இருக்கவேண்டும். பயனில்லாத பொருள்கள் என்றுமே மதிப்புடையனவாகாது என்பதை வலியுறுத்துகிறார். எனவே, சீனியரின் கருத்துப்படி பயன் தான் பண்டங்களுக்கு மதிப்பைக் கொடுக்கிறது எனலாம். எனினும், பயனுள்ள பண்டங்கள் ன்த்தும் வேண்டிய அளவிற்கு மேல் ஏராளமாகக் கிடைத்தால் அவற்றை யார் விலை கொடுத்து வாங்குவர்? எனவே, நடைமுறையில் பண்டங்களின் கிடைப்பருமைதான் அவற்றிற்கு விலை மதிப்பை ஏற்படுத்துகிறது என்ற முடிவிற்கே நாம்வர வேண்டியுள்ளது என்கிறார்.

பண்டங்களின் மதிப்பை அவற்றை உற்பத்தி செய்யத் தேவைப்படும் உழைப்பின் அளவே நிருணயிக்கின்றது என்பது ரிக்கார்டோவின் கொள்கை. இக் கொள்கை தவறானதெனக் கருதுகிறார் சீனியர். சீனியரின் விளக்கப்படி பண்டத்தின் மதிப்பை உற்பத்திச் செலவுமட்டுமின்றி அப் பண்டத்திற்குரிய தேவை—அளிப்பு ஆகிய சந்தைச்சக்திகளும் நிருணயிக்கின்றன. அப் பண்டத்தின் அளிப்பு அதன் உற்பத்திச் செலவால் கட்டுப் படுத்தப்படுகிறது. உற்பத்திச் செலவு என்பது வெறும் உழைப்பை மட்டும் குறிப்பிடுவதில்லை. எந்தப் பண்டத்தை உற்பத்திசெய்ய வேண்டுமென்றாலும் உற்பத்தி செய்வோர் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. முதலீடு செய்வதென்றால் நுகர்வைத் தவிர்த்துச் சேமித்துதான் முதலை உருவாக்க முடியும். எனவே தற்காலிகமாகத் தவிர்க்கப்படும் நுகர்வும் உற்பத்திச் செலவில் இடம் பெறும். எனவே, நுகர்ச்சியைத் தவிர்ப்பதையும் முதல் உருவாவதையும் விளக்க முற்படுகிறார் சீனியர்.

நுகர்ச்சித் தவிர்ப்பும் முதலாக்கமும் (Abstinence and capital Formation)

பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் சீனியர் அழியாப் புகழுடன் திகழ்வதற்குக் காரணம், அவர் தந்துள்ள துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடுதான் எனலாம். இக் கோட்பாடுதான் அவர் கருத்துகளில் முக்கியமானதாகவும் மையமாகவும் கருதப்படுகிறது. எந்தப் பண்டத்தின் விலையும் அதன் உற்பத்திச் செலவால் தான் நிருணயமாகிறதெனக் கண்டோம். உற்பத்திச் செலவு என்பது உழைப்பை மட்டுமன்றி, முதலாளிகளின் துய்ப்புத் தவிர்ப்பையும் குறிப்பிடுகிறது. துய்ப்புத் தவிர்ப்பென்றாலென்ன? அதற்கும் முதல் உருவாவதற்குமுள்ள தொடர்பென்ன? ஒருவன் தன்னிடமுள்ள செல்வத்தை உடனடியாக நுகர்ந்து இன்பமடையக் கூடும். ஆனால், அவன் அவ்வாறு செய்யாமல் செல்வத்தின் ஒரு

பகுதியை உற்பத்தி செய்வதற்கென்று பயன் படுத்தினால், உடனடியாக நுகர்ச்சி இன்பத்தை அடையாமல் அதனைப் பிற்காலத்திற்கெனத் தள்ளிப் போடுகிறான். அதாவது, உடனடியாக அனுபவிக்கக் கூடிய இன்பத்தை உதறித் தள்ளிவிடுகிறான். அவ்வாறு செய்வதே நுகர்ச்சித் தவிர்ப்பெனப்படும். இவ்வாறாக உடனடியாகச் செல்வத்தை நுகர்வதற்குப் பதிலாக, பின்னால் அனுபவிக்கும் நோக்கோடு அதனைச் சேமிப்பதால் முதல் ஆக்கப்படுகிறதெனலாம் மனிதனின் இத் தியாகமும் செலவில் அடங்கும் எனவே, நுகர்ச்சித் தவிர்ப்பும் மனித உழைப்புமே உற்பத்திச் செலவாகும். இச் செலவுதான் உற்பத்திப் பொருளின் அளவிற்கு ஓர் எல்லை வகுக்கிறது.

இவ்வாறு, நுகர்ச்சித் தவிர்ப்பை சீனியர் உற்பத்திக்காரணிகளில் ஒன்றாகக் கருதியது ஒரு மாபெரும் சாதனையாகும். ரிக்கார்டோ உழைப்பைமட்டுமே உற்பத்திக்காரணியாகவும் மதிப்பின் அளவுகோலாகவும் கருதினார். எனவே, உழைப்பால்தான் பண்டங்களின் மதிப்பு நிருணயிக்கப்படுகிறதென்ற கருத்து நீண்டகாலமாகவே நம்பப்பட்டது. அந் நம்பிக்கையைத் தகர்த்தெரியும் வகையில் சீனியர் நுகர்ச்சித் தவிர்ப்பு என்னும் புதியதொரு காரணியைப் புகுத்தியுள்ளார். ஒரு வேளை, நுகர்ச்சித் தவிர்ப்பு என்னும் கருத்தை ஜி. பி ஸ்குரோப் (G. P. Scrope) என்பவரிடமிருந்தே சீனியர் பெற்றிருக்கக்கூடும் என்பது ஒரு சிலர் கருத்து இது ஒரு வேளை உண்மையாக இருக்கலாம். ஏனெனில் 1833-ல் தான் வெளியிட்ட "அரசியல் பொருளாதாரத் தத்துவங்கள்" என்னும் நூலில் ஸ்குரோப் இக் கருத்தை விளக்கியுள்ளார். "ஒருவன் தனது சொத்தில் ஒரு பகுதியை உடனடியாக நுகர்ந்து இன்பமடைவதற்குப் பதிலாக, அதனைக் கொஞ்சக் காலத்திற்காவது தவிர்க்க வேண்டுமாயின் அதற்கு ஏதாவது ஈடுதேவை" என்று கூறியுள்ளார். இருந்தபோதிலும், இக் கருத்தைப் பொருளாதார இயலில் புகுத்தி, உற்பத்திச் செலவை ஆராய்ந்த பெருமை சீனியரையே சாரும் மேலும் மக்களின் நுகர்ச்சித் தவிர்ப்பிற்காகத் தரப்படும் ஈடே வட்டி என்பதை வலியுறுத்தியதும் சீனியரே. அவருடைய புகழுக்கும் பெருமைக்கும் இக் கருத்தை அவர் தம் ஆய்வில் புகுத்தியதே காரணம். எனினும், பாம்பவர்க் (Bohm Bowrtk) என்னும் ஆஸ்திரிய அறிஞர், வட்டிக்கோட்பாட்டைப் பண்டங்களின் மதிப்புக் கோட்பாட்டில் ஒரு அங்கமாக விளக்கிய காரணத்திற்காக சீனியரைக் குற்றம் சாட்டுகிறார்.

மேலும், சீனியர் மூலதனம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் நுகர்ச்சியைத் தவிர்த்தல் என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவது

குறிப்பிடத் தக்கது. மூலதனம் என்பது உயிரற்றதொரு சடப் பொருள். எனவே, அதற்குப் பதிலாக, மனிதனின் தியாக உணர்வைப் புலப்படுத்தும் 'நுகர்ச்சி இன்பத்தைத் தவிர்த்தல்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். தியாகம் செய்யும் மனிதனுக்குப் பரிசாகவே வட்டி வழங்கப்படுகிறதெனக் கொள்கிறார். இதன் வாயிலாக உற்பத்திச் செலவை மனிதப் பண்பின் செலவாகவே அவர் கருதுவது குறிப்பிடத்தக்கது.

பயன்பாடும் தேவையும்

ஒரு பண்டத்தின் மதிப்பை அதன் உற்பத்திச் செலவுதான் நிருணயிக்கிறது என்று கருதினார் சீனியர். எனினும், தேவையைப் பற்றி அவர் சிறிதும் சிந்திக்கவில்லை என்று கூறுவதற்கில்லை. ஒரு பண்டத்திற்குள்ள தேவையானது அதன் பயனைப் பொறுத்தது என்பதை நன்கு உணர்ந்தார். அதோடு, ஒரு பண்டத்தை மேலும் மேலும் அடையும்போது அதன் பயன் குறைந்துகொண்டே போகுமென்பதையும் கண்டார். 'எந்தப் பண்டமாக இருந்தாலும், அது நமக்குத் தரக்கூடிய திருப்திக்கு ஓர் எல்லை உண்டு. எனவே, நாம் அடையும் திருப்தியானது மிக வேகமாகக் குறைந்து கொண்டே செல்லும்' என்று அவர் கூறியுள்ளது, குறைந்து செல் பயன் விதியை நன்கறிந்திருந்தார் என்பதைப் புலப்படுத்துகிறது. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகிவிடும்' என்ற முதுமொழியை ஆதாரமாகக் கொண்ட இவ் விதியை சீனியர் புனையவில்லையென்றாலும், அதன் தன்மையை அறிந்திருந்தார். இருந்த போதிலும், பயனை அடிப்படையாகக் கொண்ட தேவைச் சக்தியினை வலியுறுத்தாமல், உற்பத்தியின் அளவைக் கட்டுப்படுத்தும் உற்பத்திச் செலவுதான் விலையை நிருணயிக்கிறதென அடித்துக் கூறுகிறார்.

சர்வாதீனம் (Monopoly)

பண்டத்தின் மதிப்பைப் பற்றிக் கூறும்போது, சர்வாதீனத்தையும் சீனியர் விளக்குவது குறிப்பிடத் தக்கது. உற்பத்தியாளர்களுக்கிடையே சமமான திறமையும் போட்டியும் இருப்பதே சிறந்ததெனக் கொண்டார் சீனியர். எனவே, நிறைவான போட்டியின்றி வேறெந்த நிலைமை இருந்தாலும், அது சர்வதீன வலிமையுடையதாகிவிடும். உற்பத்தியாளர் அனைவருக்கும் சமமான அளவில் உற்பத்திக் காரணிகள் இருந்தால், அப்போது சர்வாதீன வலிமை தோன்ற முடியாது. ஆனால், உற்பத்திக் காரணிகளில் முக்கியமானதும் இயற்கையால் அளிக்கப்பட்டதுமான நிலம் எல்லாரிடமும் இருப்பதில்லை. எனவே, நிலவுடைமைதான் மிகப்பெரிய சர்வாதீன உடைமையாகும். அவ்வாறாயின், நிலக்கிழார் பெரும் குத்தகை சர்வாதீன வலிமையைப் பிரதிபலிக்கிறது என்கிறார்.

குத்தகையும் கூலியும்

வளமிக்க நிலம் வேண்டிய அளவுக்கு இல்லாத காரணத்தாலும், நிலத்தில் குறைந்து செல் விளைவு விதி செயல்படுவதாலும் வளமற்ற நிலங்களைக்கூட சாகுபடி செய்யவேண்டிய அவசியமேற்படுகிறது. எனவே, வளமிக்க நிலத்தைவுடையோர் 'இலாபம்' பெறுகின்றனர் எனக் கூறுகிறார் சீனியர். வளமிக்க நிலம் ஏராளமாக இருக்குமானால் உபரி விளைச்சலோ அல்லது குத்தகையோ கிடைக்காதென வாதாடுகிறார். இவ் வாதம், ரிக்கார்டோவின் குத்தகைக் கொள்கைக்கு வக்காலத்து வாங்குவது போல் அமைகிறது.

கூலியயைப்பற்றிக் கூறும்போது, சீனியர் மில் அவர்களின் கூலி நிதிக் கோட்பாட்டின் சாரத்தையே விளக்குகிறார். 'தொழிலாளிகளுக்குக் கூலி கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்திற்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்குமுள்ள விகிதாச்சாரத்தில்தான் கூலி நிருணயமாகிறது' எனக் கூறுகிறார். எனினும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் அதிகரிப்பதற்கும் அவர்களின் கூலி உயர்வதற்கும் நிறைய வாய்ப்பு உண்டு என அவர் கூறும்போது, வருங்காலத்தைப்பற்றி அவர் நன்னம்பிக்கை கொண்டிருந்தார் என்றும்; வருங்காலம் ஒளிமயமானதாயிருக்கும் என்பதில் உறுதிகொண்டாரென்றும் தெரிகிறது.

வளர்ந்து செல் விளைவு (Increasing returns)

வருங்காலத்தை இன்பமயமாக நோக்கிய சீனியர், பொறிவழியாக்கத் தொழில்களில் வளர்ந்துசெல் விளைவு விதிதான் செயலாற்றுகிறதென நம்பியதில் வியப்பில்லை. ஆலைகளில் தொழிலாளிகளை அதிகரிக்க அதிகரிக்க உற்பத்தியும் வேகமாக அதிகரிக்குமென நம்பினார். இதற்கு விளக்கம் தரவில்லையென்றாலும், இதனை ஆதாரமாகக் கொண்டு பிறிதொரு முடிவுக்கு வருகிறார். ஆலை உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க, விலை தாழ்ந்துகொண்டே செல்லும் என்கிறார். எனவே, தொழிலாளிகளையும் எந்திர தளவாடங்களையும் அதிகமாகப் பயன்படுத்துவது சமுதாயத்திற்கு நல்லதுதான் என்ற முடிவுக்கு வந்தார்.

பணம்

சீனியர் வாழ்ந்த காலத்தில் பணத்தைப் பற்றியும் வியாபாரத்தைப் பற்றியும் பல வாதங்கள் நடைபெற்றன. எனவே, 1840-ல் பணத்தின் மதிப்பைப் பற்றி லண்டன் பல்கலைக் கழகத்தில் மூன்று

முறை விரிவாகப் பேசினார். பணம் என்பது பரிவர்த்தனை செய்வதற்கு ஏதுவான சாதனம்தான் என்பதை நிலைநாட்டினார். எனவே, தங்கமும் வெள்ளியும்தான் பணத்தின் பணியைச் செய்வதற்குகந்தவை என்றார். பணம் நீடித்திருக்கக் கூடியதாயும் நிலையானதாயும், கைமாறுவதற்குச் சுலபமானதாயும், சில்லறையாக மாற்றப்படக்கூடியதாயும் இருக்கவேண்டும். காகிதப் பணத்தை வெளியிடும்போது, அரசாங்கம் அதனைச் சரியான வழியில் ஒழுங்குபடுத்தவேண்டும் என்றார். அக் காகிதப் பணத்தை உலோக நாணயமாக மாற்றுவதற்குரிய உரிமை மக்களுக்கு அவசியம் என வாதாடினார். பணத்தின் மதிப்பு, அதன் உற்பத்திச் செலவைப் பொறுத்து அமையவேண்டுமேயன்றி, அதன் அளவையோ அல்லது பணம் சுழலும் வேகத்தையோ சார்ந்திருக்கக்கூடாது என்பது சீனியரின் கருத்து. இதன் வழியாகப் பண அளவைக் கோட்பாட்டை சீனியர் புறக்கணித்தார்.

முடிவுரை

சீனியரின் கருத்துகளையும் கொள்கைகளையும் பொதுவாக நோக்கும்போது, அவர் தொன்மைப் பொருளாதார அறிஞர்களைப் பின்பற்றியதாகவே தோன்றுகிறது. தொன்மைப் பொருளாதாரக் கொள்கையில் மையமானதாகக் கருதப்படும் தலையீடாக் கொள்கையையே சீனியரும் வலியுறுத்தினார். முதலாளித்துவ அமைப்பிற்கே ஆதரவாகவும் பேசினார். எனினும், பண்டங்களின் பயன்பாட்டை முக்கியமாக வலியுறுத்திப் பேசியதைக்கொண்டு பார்த்தால், அவர் ரிக்கார்டோவின் கொள்கையிலிருந்து விலகிச் சென்றிருப்பதாகவும், ஆஸ்திரியப் பொருளாதார அறிஞர்களுக்கு வழிகாட்டியாகவும் ஒருசிலர் கருதுவர். ஆனால், உண்மையில் ஜே. பி. சே. அவர்களைப் பின்பற்றித்தான் பயன்பாட்டுக் கொள்கையை வலியுறுத்தினாரேயன்றி, ஆஸ்திரிய அறிஞர்கள் பாதைக்கு அவர் வழிகாட்டவில்லை எனலாம். சீனியர் ஆழ்ந்து சிந்திக்கக் கூடிய கூர்மையான அறிவு பெற்றிருந்தாலும், அதனைப் பயன்படுத்திப் புதிய கருத்துகளை அவரால் உருவாக்க முடியவில்லை 'நுகர்ச்சித் தவிர்ப்பு' விளக்கத்தைத் தவிர, மற்றவையனைத்தும் தொன்மைப் பொருளாதாரக் கருத்துகளின் நகல்களாகவேதான் தோன்றுகின்றன.

4. ஜே. பி. சே. (1767—1832)

(J. B. Say)

ஜீன் பாப்டிஸ்ட் சே (Jean Baptists Say) பிரெஞ்சு நாட்டிலுள்ள லியோன்ஸ் (Lyons) நகரில் 1767 ல் பிறந்தார். முதலில்

தொழில் செய்து அதில் நல்ல அனுபவம் பெற்றார். காலேஜ்-டி-பிரான்ஸ்(College-de-France)என்னும் கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1828-ல் "நடைமுறை அரசியல் பொருளாதாரத்தின் முழுவிவரம்" (A complete course in Practical Political Econamy) என்ற நூலை வெளியிட்டார். அக் காலத்தில் அதிகமாக விற்ற நூல்களில் இது ஒன்று. ஆசிரியரின் வாழ்நாளிலேயே ஐந்து பதிப்புகள் வெளியாயின.

தொன்மைப் பொருளாதாரக் குழுவை பிரெஞ்சு நாட்டில் நிறுவியவர் சே. ஆடம் ஸ்மித்தின் "நாடுகளின் செல்வம்" என்ற நூலை பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தவர். தம்முடைய மொழி பெயர்ப்பில் அதிகார வரிசையை மாற்றி, ஒரு புது அமைப்பைத் தந்துள்ளார். பொருளாதார நூலை (1) செல்வம் ஆக்குதல், (2) பகிர்தல், (3) துய்த்தல் என மூன்று பாகங்களாக முதன் முதல் பிரித்தவர் ஜே. பி. சே. தான். முதல் பாகத்தில் நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய மூன்று சாதனங்களும் எவ்வாறு செல்வத்தை உண்டாக்குகின்றன என்பதை விளக்குகிறார். பகிர்வுப் பகுதியில் ஆக்கப்பட்ட செல்வம் எவ்வாறு நிலத்திற்கு வாரமாகவும், உழைப்புக்குக் கூலியாகவும். மூலதனத்துக்கு இலாபம் அல்லது வட்டியாகவும் பங்கிடப் படுவதைப் பற்றி விளக்கம் தருகிறார். சே உருவாக்கிய இந்த அமைப்பு பொருளாதார நூல்களிலும் பாடப் புத்தகங்களிலும் நூருண்டுகளுக்குமேல் பின்பற்றப் பட்டது. சே ஒரு பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியவர்; அரசியல்வாதி; தொழிலதிபர்; பொருளாதாரப் பேராசிரியர்.

ஸ்மித் எழுதிய நூல் அரசியல் பொருளாதாரத்தின் முக்கியமான கோட்பாடுகளைக் கொண்டது; எனினும் எவ்வித முறையுமின்றி குழப்பமான வகையில் எழுதப்பட்டது. இக் குழப்ப நிலையை நீக்கி புதிய அமைப்பில் பொருளாதார இயலைத் தந்தவர் சே. அதோடு, ஸ்மித்தின் கருத்துக்களையும் கொள்கைகளையும் முறையாக விளக்கி அவற்றைப் பிரான்ஸ் நாட்டில் பரப்பிய பெருமையும் அவரையே சாரும். இவ்விரு பணிகளையும் மிக வெற்றிகரமாகச் செய்து முடித்துப் பெருமை பெற்றவர். பொருளாதார இயலுக்கு சே செய்துள்ள பணி இதுதான் என்றும், இவ்வளவுதான் என்றும் ஒரு சிலர் கருதுவர். ஆனால், உண்மையில் பல புதிய கருத்துக்களையும் கொள்கைகளையும் சே உருவாக்கியுள்ளார். சேயின் புகழ்பெற்ற சந்தைச் சட்டம் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. சிஸ்மாண்டி (Sismonci) என்பவருடன் வாதம் செய்து, அளவுக்கு மீறிப் பண்டங்கள் உற்பத்தியாகிச் சந்தையில் தேக்கமடையும் நிலை என்றுமே ஏற்படாதென்பதை விளக்கினார் அவருடைய சந்தை விதி இவ் விளக்

கத்திற்கு மையமாக அமைந்துள்ளது. இதனைப்பற்றி பின்னர்க் கவனிக்கலாம். இப்போது, பொருளாதாரச் சிந்தனை வரலாற்றிற்கு சே அவர்கள் செய்துள்ள இதரப் பணிகளைப் பார்ப்போம்.

முதலாவதாக, இயற்கைவாதிகளின் தவருன கருத்தையும் கொள்கையையும் பொருளாதார ஆய்விலிருந்து அகற்றியவர் சேதான். பயிர்த்தொழில் ஒன்றுதான் ஆக்கமுள்ள, பயனுள்ள தொழில் என்று பறைசாற்றினர் இயற்கை வாதிகள். இக் கருத்தை ஆடம் ஸ்மித்தும் ஓரளவிற்கு ஆமோதித்தார். நீதிபதிகள், ஆசிரியர்கள், மருத்துவர், வழக்கறிஞர் போன்றவர்கள் எவ்விதமா பண்டத்தையும் உருவாக்குவதில்லையாதலால் அவர்களின் உழைப்பை ஆக்கமில்லா உழைப்பெனக் கருதினுர் ஸ்மித். பயிர்த்தொழிலில் மட்டுமே இயற்கை மனிதனேடு ஒத்துழைக்கிறதென்ற கருத்தை அப்படியே ஏற்றுக்கொண்டார். ஆனுல், சே அவர்களோ பயிர்த்தொழிலில் மட்டுமன்றி, எல்லாத்தொழில்களிலுமே இயற்கை ஒத்துழைக்கிறதென்பதை வலியுறுத்தினுர். உற்பத்தி என்ருல், புதிதாகப் பண்டங்களை ஆக்குதல் என்பதுதான் இயற்கை வாதிகளின் பொருள். ஆனுல் சே இதனை மறுதலித்தார். பண்டங்களுக்குப் பயனை அதிகரிப்பதுதான் உற்பத்தி என்பதன் பொருள என்கிறுர். மக்களின் விருப்பத்திற்கேற்பப் பண்டங்களின் வடிவத்தை மாற்றுவதிலும், வேண்டிய இடத்தில் அவற்றைக் கிடைக்கச் செய்வதும்தான் உற்பத்தி எனப்படும் என்று உறுதி செய்தார். எனவே, பண்டங்களின் மதிப்பு அவற்றின் பயனையே அடிப்படையாகக் கொண்டதாகிறது.

சேயின் மதிப்பு பற்றிய கருத்துகளைச் சுருக்கிக் கூறுவது கடினம். சுருக்கமாகக் கூறுவதாயின், அவரது காலத்தில் வாழ்ந்த ஆங்கில அறிஞர்களைவிட சே அவர்கள் 'பயன்பாட்டுக்' கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் தர விரும்பினுர். மிக நுணுக்கமாக ஆராய்ந்தால், மதிப்புக் கோட்பாட்டின் நிபுணராகவே சே விளங்கினுர் எனலாம். ஓர் இடத்தில் அவர் கூறுவது: உற்பத்திச் சாதனங்களின் விலை உற்பத்திப் பொருள்களின் விலையால் நிருணயிக்கப்படுவதில்லை; மாருக, உற்பத்தியான பொருள்களின் பயனே அவற்றின் விலையை நிருணயிக்கிறது. இக் கருத்தைப் பல இடங்களில் உறுதி செய்கிறுர்.

இரண்டாவதாக, பொருளாதார இயலின் தன்மை பற்றியும், பொருளாதார அறிஞரின் கடமை பற்றியும் சே விளக்குகிறுர். இவ்விளக்கத்தில் குருவுக்கு மிஞ்சிய சீடராகத் தோன்றுகிறுர். பொருளாதாரம் என்பது, செல்வத்தின் ஆக்கம், பகிர்வு, நுகர்ச்சிபற்றிய

விதிகளை ஆராய்கிறதெனக் கூறுகிறார். பொருளாதார விதிகளைப் பற்றி ஸ்மித் எங்குமே குறிப்பிடவில்லை. எனவே, ஆடம் ஸ்மித்தின் நூலுக்கு வெறும் விளக்கம் மட்டும் தந்து அதனைப் பரப்பாமல் அந் நூலை ஓரளவு செப்பனிடவும் துணிந்தார் சே. சேயின் கொள்கைப்படி, அரசியல் பொருளாதாரம் அடிப்படையான விதிகளை விளக்கும் வெறும் கருத்தியல்தான். எனவே, பொருளாதார நிபுணரின் கடமை, பொருளாதார நிகழ்ச்சிகளைக் கண்டு, ஆராய்ந்து, அவற்றின் தத்துவங்களை விளக்குவது மட்டும் தான். அறிவுரை கூறும் அலுவல் அவருக்குக் கிடையாதென்கிறார் சே. 1820-ல் மால்தஸுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இதனை வலியுறுத்தியுள்ளார். இவ் வகையில் தொன்மைப் பொருளாதார மரபிலிருந்து சிறிது விலகிக் காணப்படுகிறார். அரசியல்வாதிகளுக்கும், நிருவாகிகளுக்கும் துணையாகவும் வழிகாட்டியாகவும் அமையும் வகையில் நடைமுறைக்கேற்ற இயலாகவே பொருளாதாரம் இருக்க வேண்டுமென்பது மரபு. ஆடம் ஸ்மித்கூட நடைமுறைக் கேற்ற சீர்திருத்த வாதியாகவே காட்சியளித்தார். ஆனால் சே அவர்களோ பொருளாதார இயலை ஒரு கலையாகக் கருதாமல், வெறும் கருத்தாகவே நினைத்தார். இதன் வாயிலாக, ஸ்மித்தைக் காட்டிலும் சிறந்த அறிவியல் மார்க்கத்தை சே காட்டியுள்ளார் எனக் கருதுவர் சிலர்.

மூன்றாவதாக விஞ்ஞான முன்னேற்றத்தால் அரசியல் பொருளாதாரம் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்தினார் சே. ஸ்மித்தின் நூலுக்கும் சேயின் நூலுக்கும் இடைப்பட்ட காலத்தில் எவ்வளவோ புரட்சிகரமான பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. அக் காலத்தில் தோன்றிய தொழில் புரட்சி பொருளாதாரச் சிந்தனை வரலாற்றையே மாற்றி அமைத்தது. தொழில் புரட்சியின் விளைவாகத் தோன்றிய எந்திர உற்பத்தி முறையையும் அம் முறையை மேற்கொள்ளும் பொறுப்பையுடையத் தொழில் முயல்வோரின் பணிகளையும் நன்கறிந்தவர் சே. வருங்காலம் வளமுள்ளதாகவே அமையும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். அந் நம்பிக்கைக்குக் காரணமாகத் தொழில்முயல்வோர் விளங்கினர். எனவே, விவசாயத்தையும் விவசாயியையும் ஏற்றிப் போற்றிய இயற்கைவாதிகளுக்கும் ஸ்மித்துக்கும் மாறாக, பெரிய தொழில்களையும் தொழில் முயல்வோரையும் பாராட்டிப் பேசுகிறார் சே. செல்வம் உற்பத்தியாகி, பகிரப்படும் முறையைத் தீர்மானிப்பதே தொழில் முயல்வோர்தான். எனவே பொருளாதார அமைப்பில், உடலிலுள்ள இதயம் போன்ற இடத்தைத் தொழில் முயல்வோருக்குத் தருகிறார். ஒரு நாட்டின் வளர்ச்சியும் வளமும் தொழில் முயல்வோரின் கையில்தான் உள்ளதென்கிறார் சே.

தொழில் முயல்வோரைப் புகழ்ந்து பாடும்பாடல், தொழில் புரட்சியின் மேன்மையையும் தொழில் வளத்தின் முக்கியத்துவத்தையும் பிரதி பலிப்பதாக உள்ளது. தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் மூவரும் வட்டிக்கும் இலாபத்துக்கும் வேற்றுமை காணவில்லை. முதலாளிக்கு வட்டி, தொழில் முயல்வோருக்கு இலாபம் என்பது தற்காலக் கொள்கை இந்த வேற்றுமையை சே நன்கறிந்திருந்தார். முயற்சியாளர் மூலதனம் இல்லாதவர்களாயிருக்கலாம்; ஆனால், உற்பத்திச் சாதனங்களையெல்லாம் ஒன்று திரட்டி தொழிலைத் தொடங்கும் ஆற்றலும் நிருவகிக்கும் நுட்ப அறிவும் கொண்டவர்கள். பிறரிடமிருந்து மூலதனத்தைக் கடனாகப் பெற்றுத் தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களே. இவர்களின் பணிகளையும் நாட்டுக்குச் செய்யும் சேவைகளின் சிறப்பையும் சே தான் முதன் முதலில் விளக்கிய அறிஞர்.

சேயின் சந்தை விதி (Say's law of Market)

இதுவரை சேயின் தருக்கவாதத் திறமையையும் தொன்மைப் பொருளாதாரத்தை மேம்படுத்திய சேவையையும் கண்டோம். இனி, பொருளாதார இயலுக்கு அவர் அளித்துள்ள புதிய கருத்தினையும் கொள்கையையும் பார்ப்போம். சேயின் 'சந்தை விதி' விளக்கம் முதல்தரமான தொன்றாகக் கருதப்பட்டது. இவ் விளக்கம் தான் அவருக்கு என்றும் அழியாப் புகழைத் தேடித்தந்துள்ளது. அவரது சந்தைக் கொள்கைதான் அவரை மாபெரும் பொருளாதார அறிஞர்களில் ஒருவராக உயர்த்தியுள்ளது. அவரது சந்தைக் கொள்கைதான் என்ன? உற்பத்தியாகும் பண்டங்கள் சந்தையில் ஒன்றுக் கொன்று பரிமாற்றப் படுகின்றன. பணத்தின் மூலம் பொருள்கள் விற்கப்பட்டாலும் வாங்கப்பட்டாலும் பணம் என்பது ஒரு பரிவர்த்தனைச் சாதனம்தான். உண்மையில், பண்டங்களுக்குள் தான் பரிவர்த்தனை நடக்கிறது. சான்றாக, விவசாயி ஒருவன் தான் விளைவித்துள்ள நெல்லை விற்று, தனக்கு வேண்டிய துணிமணிகளை வாங்கினானென்றால், வாங்குவதற்கும் விற்பதற்கும் தான் பணம் பயன்படுகிறது. உண்மையில் பரிமாறப்படும் பண்டங்கள் நெல்லும் துணிமணியும் தான். எனவே பணம் ஒரு வண்டியைப் போன்றது. இரண்டு பண்டங்களைப் பரிவர்த்தனை செய்வதற்கு அது பயன் படுத்தப் படுகிறது அப் பரிவர்த்தனை முடிந்தவுடன், மற்ற பண்டங்களைப் பரிவர்த்தனை செய்வதற்காக அப் பணம் ஓடிக் கொண்டே இருக்கும். எனவே, உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பண்டமும் பிறபண்டங்களுக்குத் தேவையைத் தோற்றுவிக்கிறது. பிறபண்டங்கள் இருந்தால்தான் எந்தப் பண்டமும் பரிவர்த்தனை செய்யப்பட முடியும். நெல் விளைவித்த விவசாயிக்குத் தனக்கு

வேண்டிய துணிமணிகள் இருந்தால்தான் நெல்லை விற்றுத் துணி மணிகள் வாங்க முடியும். இன்றேல், நெல்லை விற்றுத் தனக்கு வேண்டிய எதையும் வாங்க இயலாமல் பணத்தை அழகு பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். ஆகவே, "ஒரு பொருள் விற்பனையாகவில்லையென்றால், அதற்குக் காரணம் பணத்தட்டுப் பாடல்ல ; மற்றப் பொருள்களின் தட்டுப்பாடுதான்' என்று சே கூறுகிறார். இக் கூற்றிலிருந்து வேறொரு கோட்பாடு முளைக்கிறது. ஒரு பொருள் உற்பத்தியாகும் அந்த விநாடியே அது வேறு பொருள்களுக்குத் தேவையை ஏற்படுத்துகிறது. எனவே, சந்தையில் விற்கமுடியாத அளவுக்குப் பொருள்கள் உற்பத்தியாகித் தேக்க நிலையை அடையாது. அதிக உற்பத்தி என்பதே நடைபெற இயலாத ஒரு காரியம். உற்பத்தியான ஏதாவதொரு பொருள் அளவுக்கு மேல் தேங்கிக் கிடக்குமாயின் அதற்குக் காரணம் வேறெந்தப் பொருளோ குறைவாக உள்ளது தான். எனவே, எந்தப் பொருளும் அளவுக்கு மேல் உற்பத்தியாகாமலிருக்க வேண்டுமானால் மற்றப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அப்போதுதான் எந்தப் பொருளும் தேக்கமின்றி, சந்தையில் பரிவர்த்தனையாகிக் கொண்டே இருக்கும். பண்டங்களின் மொத்த உற்பத்தியும் அவைகளுக்கான மொத்தத் தேவையும் ஒன்றுக் கொன்று சமமாக இருக்கும்போது பொருள் தேக்கம் எவ்வாறு ஏற்பட முடியும் ?

தமது சந்தை விதியிலிருந்து மூன்று முக்கியமான முடிவு களுக்கு வருகிறார் சே. (1) சந்தை எவ்வளவுக்கெவ்வளவு அதிக மாயும் விரிவாயும் உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு இலாபமும் அதிகமாயிருக்கும். எவ்வாறெனில், சந்தை பெரியதாயிருந்த தென்றால் தேவை அதிகமென்று பொருள். தேவை அதிகமாயிருந் தால்விலையும் அதிகமாயிருக்கும்;இலாபமும் மிகுதியாகக்கிடைக்கும். (2) ஒரு பண்டத்தின் உற்பத்தி, இதர பண்டங்களின் தேவையை அதிகரிக்குமெனின், ஒவ்வொரு உற்பத்தியாளரும் ஏனைய உற்பத்தி யாளர்களும் நிறைய உற்பத்தி செய்யவேண்டுமென்றுதான் விரும்புவர். ஒருவன் செல்வந்தனாக இருந்தால்தான் மற்றவர் களுக்கு நல்ல வாடிக்கையாளனாக இருக்கமுடியும். எனவே, ஒவ்வொருவரும் மற்றவர்கள் செல்வாக்காக வாழவேண்டுமென்று தான் விரும்புவர். அவ்வாறு விரும்பினால், சமுதாயத்தில் சகோதர மனப்பான்மை வளரும். இம் மனப்பான்மை உலகப் பொருளாதாரக் கொள்கையை மாற்றிவிடும். ஒரு நாட்டிலுள்ள விவசாயம், தொழில், வணிகம் அனைத்தும் ஒருங்கே ஓங்கி வளர்ந்து செழிப்புற வேண்டும். அகில உலகக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், எந்த நாடும் தன்னைச் சுற்றியுள்ள பிற நாடுகளும் வள

மானவையாய் இருக்கவேண்டுமென்றே விரும்பும். எனவே, வறுமையான நாடுகளுக்குப் பதிலாக வளமான நாடுகள் அருகில் இருப்பதே நன்று. (3) இறக்குமதி செய்வதால் உள்நாட்டு உற்பத்தியோ தொழிலோ எவ்விதத்திலும் பாதிக்கப்படாது. ஏனெனில், வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களை உள் நாட்டுப் பொருள்களைக் கொண்டுதானே வாங்குகின்றோம். அவ்வாறாயின், இறக்குமதி செய்யப்பட்டால்தானே ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்றுமதித் தொழில்களை ஊக்குவிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும். எனவே, சுதந்திர வாணிபத்திற்கு இதைக்காட்டிலும் வேறென்ன காரணம் வேண்டும்? இவ்வாறாக, தனது சந்தை விதியை அடிப்படையாகக் கொண்டு சுதந்திர வாணிப வாதத்தை உறுதிப்படுத்தினார் சே. சுதந்திர வாணிபமே தொன்மைப் பொருளாதாரத்தின் மூச்சு.

முடிவுரை

தொன்மைப் பொருளாதாரக் கருத்துகளையும் கொள்கைகளையும் மக்களிடையே பரவச் செய்ய வேண்டுமென விரும்பினார் சே. இதில் அமோக வெற்றியும் கண்டார். தெளிவான நடையில் தொன்மைக் கருத்துகளை முறையாக விளக்கினார். இன்றும்கூட சேயின் நூலைப் படித்து மகிழலாம். 19ஆம் நூற்றாண்டில் வேறெந்த அறிஞரையும்விட சே தான் பொருளாதாரத்தை நன்கு போதித்தார். எனினும், ரிக்கார்டோவைப் போன்றோ ஆடம் ஸ்மித்தைப் போன்றோ சே பெரிய அறிஞர் என்று கூறுவதற்கில்லை; அதே சமயம், அம் மேதைகளின் கருத்தையும் கொள்கைகளையும் பரப்பிய பணிதான் சே அவர்களுக்குண்டு என்று நினைக்கவும் கூடாது. ஏனெனில், சே இல்லையெனில் அரசியல் பொருளாதார வரலாறே வேறுவிதமாகத்தான் இருந்திருக்கும்.

V. வான் தூனன் (1783-1850)

(Von Thunen)

ஆடம் ஸ்மித்தின் "நாடுகளின் செல்வம்" 1778ஆம் ஆண்டிலேயே ஜெர்மனியில் மொழி பெயர்க்கப்பட்டது. எனினும், அந் நூலை ஜெர்மானிய அறிஞர்கள் அவ்வளவு அக்கறையாகப் படிக்கவில்லை. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் அந் நூலில் அக்கறை காட்டினர் ஜெர்மானியர்கள். இருந்தபோதிலும் பிரெஞ்சு நாட்டவரைப் போல் ஜெர்மானிய அறிஞர்கள் தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளையும் கருத்துகளையும் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. அவற்றில் பல்வேறு மாற்றங்களைச் செய்தனர்.

சிலவற்றை மறுத்தனர். எனவே, தொன்மைப் பொருளாதாரத்திற்கு இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் இருந்ததைப்போல் ஜெர்மனியில் அவ்வளவு செல்வாக்கு இல்லை. இருந்தபோதிலும், தொன்மைப் பொருளாதாரப் பிரதிநிதியாக வான் தூனன் அவர்கள் விளங்கினார்கள்.

வான் தூனன் 1783-ல் ஆல்டன்பர்க் (Oldenburg) என்னுமிடத்தில் பிறந்தார். இரண்டாவது வயதிலேயே தன் தந்தையை இழந்தார். கணக்கியலிலும், விவசாயத்திலும் ஆர்வமுள்ளவராக விளங்கினார். 1826-ல், தான் எழுதிய "'தனி அரசு'' (Isolated state) என்னும் நூலின் முதல் பாகத்தை வெளியிட்டார். 1842-ல் இரண்டாம் பாகம் வெளிவந்தது. அப்போதுதான் வான் தூனனின் பெருமையையும் அறிவையும் பாராட்டினர் ஜெர்மானிய அறிஞர்கள்.

வான் தூனன் கோட்டின் ஜன் (Gottengen) பல்கலைக்கழகத்தில் ஒரு சில மாதங்கள் பயின்றார். தனது கல்லூரித் தோழனின் தங்கையைத் திருமணம் செய்தார். மாமனாரின் அறிவுரையைக் கேட்டு ஆல்டன்பர்க்கிலிருந்த தன் பண்ணையைவிற்றுவிட்டு ரோஸ்டர்க் என்னுமிடத்தில் புதிய பண்ணையை வாங்கி, விவசாயம் செய்தார். அவரது பண்ணை எல்லாருக்கும் மாதிரிப் பண்ணையாக விளங்கியது.

ஆடம் ஸ்மித்தின் கொள்கைகளைப் பின் பற்றுபவராகவே தன்னைப் பற்றிக் கூறுகிறார். ஆனால், ஸ்மித்தின் விளக்கங்களில் பல குழப்பானவை என்பதை ஒப்புக்கொள்கிறார். இலாபத்திற்கும் வட்டிக்குமுள்ள வேறுபாட்டை ஸ்மித் உணரவில்லை. நிலத்திற்களிக்கப்படும் வாரத்தைப் பற்றி அவர் முறையாக விளக்கவில்லை. எனவே, தனது குருவின் குறைபாடுகளை நிறைவு செய்யும் வகையில்தான் தனி அரசு என்ற நூலை வெளியிட்டார் தூனன்.

விவசாயப் பரம்பரையில் தோன்றி, விவசாயத்தையே தொழிலாகக்கொண்ட தூனன், பயிர்த் தொழிலில் தான் கண்டறிந்த உண்மைகளையே தன் நூலில் விளக்குகிறார். எனவே, விவசாயப் பொருளாதாரத்தில் தான் அவர் அக்கறை காட்டினார். ஆனால், அறிவியல் ரீதியில் அவர் ஆராயும் தன்மை குறிப்பிடத்தக்கது. கணக்கியல் முறையில் நாட்டம் கொண்ட தூனன் கணக்கு விவரங்களைக் கையாண்டார். தனது வாதத்தை விளக்கும்போது கூட கணக்கிலுள்ள சூத்திரங்களைப் போல் தான் சுருக்கமாக விளக்குகிறார்.

பண்டங்களின் விலை நிருணயத்தைப்பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை. எனினும், பயன்பாட்டுக் கொள்கையினராகத்தான் அவர் கருதப்படுகிறார். தூனனுடைய கருத்துகளை ஆராயும் நிலையில் நாம் ஒன்றைமட்டும் மனதில் கொள்ள வேண்டும். அதாவது, அவர் ஒரு விவசாயப் பொருளாதார அறிஞர். எனவே தனது நூலின் முதல் பகுதியில் விவசாயப் பொருள்களின் விலை மாற்றத்தால் விவசாயம் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதையும் விவசாய அங்காடிக்கும் பயிர் செய்யப்படும் பொருள்களுக்குமுள்ள தொடர்பையும் ஆராய்கிறார். இவ்வாய்விற்காக வளமான பெரு நிலப்பகுதியின் மத்தியில் ஒரு நகரம் இருப்பதாக ஊகித்துக்கொள் கிறார். இந் நிலையில் விவசாயம் எவ்வாறு செய்யப்படுமென்பதைப் பின்வருமாறு விளக்குகிறார்.

நீடித்துப் பயன்தராத, விரைவில் கெட்டுப் போகக்கூடிய பால், பழவகைகள் போன்ற பண்டங்களை நகருக்கருகாமையில் தான் உற்பத்தி செய்ய வேண்டும். அவற்றைத் தொலைவில் உற்பத்தி செய்தால், நகருக்கு அனுப்புவது கடினம். அதற்கடுத்த பகுதியில் எரிபொருள்களுக்கும் கட்டிடத்திற்கும் பயன்படக்கூடிய மரவகைகளைப் பயிரிடவேண்டும். ஏனெனில் இம் மரங்களையெல் லாம் தொலைவிலிருந்து நகருக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் போக்குவரத்துச் செலவு அதிகமாகும். அதற்குமடுத்த பகுதியில் உணவுதானியங்கள் பயிரிடப்படும். அதையடுத்த பகுதியில் கால் நடைகள் பராமரிக்கப்படும். கடைசியாக உள்ள காட்டுப்பகுதியில் மிருகங்கள் வேட்டையாடப்படும். இவ்வாறு விவவசாயப் பண்ணை கள் எவ்விடத்தில் எவ்வாறு அமைய வேண்டுமென்பதை அவர் விளக்குவது, பொதுவாக போக்குவரத்துச் செலவை அடிப்படை யாகக்கொண்டது. இவ் வழியில் நோக்கும் போது, தொழில்களின் இட அமைப்புப் பற்றிய கொள்கைக்கு தூனன் வழிகாட்டியுள்ளார் எனலாம்.

பண்ணையின் இட அமைப்பு விளக்கத்தைக்கொண்டு நோக்கு மிடத்து, தூனன் சில இடங்களில் ரிக்கார்டோவைப் பின்பற்றினா ரென்றும், வேறு பல இடங்களில் ரிக்கார்டோவின் முடிவுகளைத் திருத்தி அமைத்தார் என்றும் கூறலாம். நகருக்கருகாமையிலுள்ள நிலத்தில் செறிந்த வேளாண்மை செய்வதைவிட தூரத்திலுள்ள நிலங்களைச் சாகுபடி செய்வது இலாபகரமானதாயிருக்கும். ஆனால் தூரத்திலுள்ள நிலங்களில் அருகிலுள்ள நிலங்களைப்போல் செறிந்த வேளான்மை செய்ய இயலாது. எனவே, எந்த அளவுவரை உழைத்தால் உயர்ந்தபட்ச விளைச்சல் கிடைக்குமென்பதை விவ சாயிகள் கண்டறிய வேண்டும். சான்றாக, உருளைக்கிழங்குச் சாகு

படியில் எத்தனை ஆள்களை வேலைக்கமர்த்த வேண்டுமென்பதைக் கணக்கிடும்போது, எத்தனையாவது ஆளின் உற்பத்தி ஆக்கம் கூலிக்குச் சமமாகிறதோ அந்த ஆளோடு நிறுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறாக, 'இறுதிநிலை' (Margin) என்ற சொல்லைப் பயன்படுத்தாமலேயே இறுதிநிலை வாதத்தை ஆதாரமாகக்கொண்ட ஆஸ்திரியப் பொருளாதாரக் குழுவினருக்கு முன்னோடியாக விளங்குகிறார் தூனன். நிலத்தின் வளத்தையே ஆதாரமாகக்கொண்டு குத்தகைக் கொள்கையை விளக்கினார் ரிக்கார்டோ. ஆனால், தூனன் நிலவளத்தை அடிப்படையாகக் கொண்டபோதிலும் இறுதிநிலை ஆக்கத்தைக்கொண்டு பகிர்வை நிருணயம் செய்கிறார்.

இவ் விளக்கத்தையே அடிப்படையாகக்கொண்டு 'இறுதிநிலை உற்பத்தியாக்கக் கோட்பாட்டின் மூலம்' கூலி நிருணயம் செய்யப் படுவதை விளக்குகிறார். நிலத்தில் குறைந்து செல் விளைவு விதி செயல்படுவதை ஒப்புக்கொள்கிறார் தூனன். எனவே, நிலத்தில் மேலும் மேலும் வேலையாள்களை அமர்த்தினால், மொத்த விளைச்சல் கூடினாலும் கூட இறுதிநிலை விளைச்சல் குறைந்து கொண்டே போகும். எனவே, இறுதிநிலை உற்பத்தி கூலிக்குச் சமமாக ஆகும்வரை வேலையாள்களை அமர்த்துவது இலாபகரமானதென் கிறார். இவ்வாறு உற்பத்தி ஆக்கம் குறைந்து செல்லும் தன்மை நிலத்திற்கு மட்டும் உரியதல்ல; மூலதனத்திலும் இறுதிநிலை ஆக்கம் குறைந்துதான் செல்லும் என்கிறார். மூலதனம் அதிகரிக்க அதிகரிக்க, அதிகரிக்கப்படும் மூலதனத்தின் அளவுக்கேற்ப உற் பத்தி ஆக்கம் இராது. எனவே, மூலதனம் அதிகரித்தால் வட்டி குறையும் என்கிறார். இவ்வாறாக, சுயமாகச் சிந்திக்கும் திறன் பெற்ற தூனன் ஆஸ்திரியப் பொருளாதார அறிஞர்களுக்கு வழி காட்டியாகத் திகழ்ந்தார்.

மற்றொரு விதத்திலும் தூனன், தொன்மைப் பொருளாதார அறிஞர்களைவிட முன்னேற்றப் பாதையில் செல்கிறார். தனது தனி அரசின் இரண்டாம் பகுதியில், மோசமான சூழ்நிலையில் குறைந்த கூலிக்காகப்பாடுபடும் பாட்டாளி மக்களை எண்ணி வருத்தமாகக் குறிப்பிடுகிறார். அரசியலிலேயே அதிக எண்ணிக்கையில் வாழும் பாட்டாளி மக்கள் அரசாங்கத்தில் பிரதிநிதிகளாக இல்லையே என வருந்துகிறார். அவர்கள் ஏராளமாக நாட்டில் இருப்பதற்குக் காரணம், இளமைத்திருமணமும் கல்வி அறிவின்மையுமே என் கிறார். எனவே, ஸ்மித் கூறியதுபோல், தொழிலாளர்களுக் கெல்லாம் அரசாங்கம் கல்வி வசதி செய்து கொடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறார். மால்தஸ் விளக்கியதைப்போல், தொழிலாளர்

களின் எண்ணிக்கை குறைந்தால்தான் அவர்களது நிலை உயரு மென்கிருர்.

கூலி உயர்வைப்பற்றியோ பாட்டாளிகளின் முன்னேற்றம் பற்றியோ சிறிதும் கவலைப்படவில்லை தொன்மைப் பொருளாதார மும்மணிகள். பிற பண்டங்களைப் போன்றுதான் உழைப்பும் ஒரு பண்டம்; எனவே, பிற பண்டங்களின் விலையை அவற்றிற்கான உழைப்புச் செலவு நிருணயிப்பது போன்றுதான் உழைப்பின் விலையான கூலியை உழைக்கும் திறனைப் படைக்கும் செலவு நிருண யிக்கிறதென்ருர் ரிக்கார்டோ. இவ் விளக்கத்தில் வான் தூனன் திருப்தி அடையவில்லை. எனவே கூலி உயர்வதற்கும் பாட்டாளி களின் நிலை முன்னேறுவதற்குமேற்ற கொள்கையை வகுத்தார்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் விளக்கத்தைக் காட்டிலும் நியாயமான முறையில் கூலி கிடைக்க வேண்டுமென் பதற்காக ஒரு கணக்கியல் வாய்பாட்டைக் கண்டுபிடிக்கிருர் தூனன். இறுதிநிலை ஆக்கத்தின் அடிப்படையில் தான் கூலி நிருணயமாவதாக முன்னர் கண்டோம். ஆனல் இறுதிநிலை ஆளை விட முந்திய ஆள்களின் ஆக்கம் அதிகமாக இருக்கிறது. அவர் களுக்கும் இறுதிநிலை ஆளின் கூலிதான் கொடுக்கப்படுகிறது. எஞ்சிய ஆக்கத்தை முதலாளிகளே எடுத்துக்கொள்கின்றனர். எனவே, எல்லா ஆள்களுக்கும் குறைந்த கூலிதான் கிடைக்கிறது. இக் கூலியை இறைவன் நிருணயிப்பதில்லை. அவ்வாருயின் முதலா ளிகளுக்குக் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியும் கூலியாகக் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு என்ன வழி? கூலி என்பது உழைப்பு என்னும் பண்டத்திற்குத் தரப்படும் விலையாக மட்டும் இருக்கக்கூடாது. தொழிலாளி, தன்னைத் திறமையாக வைத்துக் கொள்வதற்காகச் செலவிடும் செலவு, இடைவிடாமல் செலவிடும் தனது உழைப்பிற்குப் பெறும் பரிசு ஆகிய இரண்டும் சேர்ந்துதான் கூலியை நிருணயிக்க வேண்டும். அப்போதுதான் கூலி நியாய மான கூலியாக இருக்க முடியும். நியாயமான இக் கூலியைக் கண்டு பிடிக்கத் தான் தூனன் தனது வாய்ப்பாட்டைப் பயன் படுத்து கிருர். நியாயமான கூலியை √ அ ப என்னும் வாய்ப்பாட்டைக் கொண்டு கண்டு பிடிக்கலாம். இதில் அ என்பது உழைப்பாளியின் வாழ்க்கைச் செலவையும், ப என்பது அவனின் உற்பத்தித் திற னையும் குறிக்கும். வாழ்க்கைச் செலவிற்காகும் பணத்தையும் உற் பத்தித் திறனை அளவிடும் பணத்தையும்கொண்டு நியாயமான கூலியை அளவிடலாம் என்கிருர் தூனன். இவ்விதத்தில் நிருண யிக்கப்படும் கூலியைத் தான் தூனன் தனது பண்ணைத் தொழிலா ளர்களுக்குக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இவ் வாய்பாட்டை

முன்னேற்றத்தின் சின்னமாக அவர் கருதினர். அவ் வாய்பாடு தான் தனது கல்லறையில் பொறிக்கப்பட வேண்டுமெனவும் விரும்பினர்.

முடிவுரை

விவசாயப்பொருளாதாரத்திற்கு அடிக்கல் நாட்டியவர் தூனன். தொழில்களின் இட அமைப்புக் கொள்கையை முதன் முதலில் வகுத்தவரும் அவரே. தூனனுக்குப்பின் 80 ஆண்கள் கழித்து ஆல்பிரட் வெப்பர் (Alfred Weber) இக் கொள்கையை பொறி வழியாக்கத் தொழில்களில் கையாண்டு வெற்றி கண்டார் இறுதி நிலை வாதத்திற்கு வழி அமைத்தவரும் அவர்தான். எதையும் சுயமாகச் சிந்திக்கும் திறன் பெற்றவர். எனவே, பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் அவருடைய பங்கினை வரையறை செய்வது கடினம். தம் காலத்திலன்றி, பிற்காலத்தில் அறிஞர்களாக மதிக்கப்படும் பெரியவர்களின் கதி இதுதான். தூனனின் பணிகளைப் பிற்காலத்தில் தோன்றிய ஆல்பிரட் மார்ஷல் நன்கு மதிப்பிடுகிருர். தானும் அவருக்குக் கடமைப்பட்டிருப்பதாகவும் கூறுகிருர். ‘வான் தூனன் உண்மையிலேயே ஒரு பெரிய கணக்கியல் நிபுணர் நடைமுறையில் காணும் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து, அறிவியல் ரீதியில் அவற்றை எடைபோடும் திறன் கொண்டவர். எல்லாவற்றிற்கும் மேலாக ஏழைமக்கள் மீது இரக்கம்கொண்டு உதவி செய்யும் மனம் கொண்டவர். எல்லா ஆசிரியர்களையும்விடத் தூனனைத்தான் நான் அதிகமாக நேசித்தேன்.’ பொருளாதார அறிஞர்களுக்கு வேண்டிய பண்புகளெல்லாம் தூனனுக்கு இருந்தது. ‘நடைமுறையில் ஏற்பட்ட தொழில் அனுபவத்திலிருந்து பொருளாதாரக் கோட்பாட்டை உருவாக்கியவர் அவர்’ என்று ஸும்பீட்டர் கூறுகிருர்.

12 வருங்கால இன்ப நோக்குடையோர்

(The Optimists)

ஆடம் ஸ்மித்தின் கருத்துகளிலும் கொள்கைககளிலிருந்த வருங்காலத் துன்ப நோக்கினைத் தெளிவாகவும் விளக்கமாகவும் விளக்கியவர்கள் மால்தஸூம் ரிக்கார்டோவும். எனவே, தொன்மைப் பொருளாதார அறிஞர்களான இவ்விருவரையும் வருங்காலத் துன்ப நோக்குடையோர் என அழைப்பது மரபு. அவ்விருவருமே வருங்காலம் துன்பமயமானதாயிருக்குமென்பதை முறையே மக்கள் தொகைக் கொள்கை, குத்தகைக் கொள்கை ஆகியவற்றின் வழியாக எண்பிக்க முற்பட்டனர். எனவே, தொன்மைப் பொருளாதார நூல்களில் அவநம்பிக்கையை மக்களிடையே உண்டு பண்ணும் நூல்களே முதலில் தோன்றின. அவற்றை ஆங்கில நாட்டவரே எழுதியது விந்தையானது. எனினும், ஆடம் ஸ்மித்தின் இன்ப நோக்கினை வலியுறுத்தும் ஆற்றல் படைத்தவர்களும் தோன்றாமலில்லை. அவர்களில் ஹென்ரி சார்லஸ் கேரி (Henry charles carey) என்னும் அமெரிக்கப் பொருளாதார அறிஞரும் பிரெடரிக் பாஸ்டியட் (Frideric bas!iat) என்னும் பிரெஞ்சு அறிஞரும் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களிருவரும் ஆடம் ஸ்மித்தின் வருங்கால இன்ப நோக்கினை வலியுறுத்தி, அதைப் பரப்பவும் செய்தனர். அமெரிக்காவிலிருந்த ஏராளமான இயற்கை வளங்களும் தொழில் முன்னேற்றமும் கேரியை இன்ப நோக்குடையவராகச் செய்தன. அதேபோல் பாஸ்டியட்டும் இன்ப நோக்குடையவராக விளங்கியதற்குக் காரணம் உண்டு. இயற்கை வாதிகள் முதல் பிந்திய பிரெஞ்சு அறிஞர்கள்வரை இன்பநோக்குடையவர்களாகவே திகழ்ந்தனர். இயற்கை நியதியிலும், தன்னல நோக்கே பொதுநலக் குறிக்கோளை அடையச் சிறந்த வழி என்ற கொள்கையிலும் பிரெஞ்சு அறிஞர்கள் நம்பிக்கை கொண்டவர்கள். அக்காலத்தில் பிரான்ஸ் நாட்டில் பெரும்பாலோர் சிறு விவசாயிகளாகவும், வியாபாரிகளாகவும், தொழிலதிபர்களாகவுமே விளங்கினர். அனைவருமே தனிமனிதன் தனியுரிமையில் நம்பிக்கை கொண்டவர்

கள். இன்றும்கூட பிரெஞ்சு மக்களின் சுதந்திரத்தாகம் தணிந்து விடவில்லை. எனவே, பாஸ்டியட் வருங்காலம் இன்பமயமான தாகவே இருக்கும் என்று எண்ணியதில் வியப்பொன்றுமில்லை.

இவ்விரு அறிஞர்களுமே குறைந்து செல் விளைவு விதியை மறுத் தனர்; அவ் விதியை ஆதாரமாகக் கொண்ட ரிக்கார்டோவின் குத்தகைக் கொள்கையையும் மால்தஸின் மக்கள்தொகைக் கொள்கையையும் ஏசிப் பழித்தனர். இவர்களின் பணி பொருளா தார இயலுக்கு அவ்வளவு முக்கியமானதென்று கூற முடியாது. எனினும், அவநம்பிக்கை கொண்ட பொருளாதார அறிஞர்களின் கருத்தினைக் கண்டித்து, திருத்தி அமைக்கவும் வருங்காலம் இன்ப மயமானதாக இருக்கும் என்று விளக்கியதன் வாயிலாக மக்க ளிடையே நம்பிக்கையை உண்டுபண்ணவும் வழிகாட்டியவர் களாவர்.

1. கேரி (1793-1879)

அமெரிக்காவில் 18, 19ஆம் நூற்றுண்டுகளில் வளர்ந்த பொருளாதாரச் சிந்தனை அந் நாட்டின் வளத்தையும் வளர்ச்சியை யும் மட்டுமன்றி, மக்களின் சுதந்தர உணர்ச்சியையும் பிரதிபலிப்ப தாகவே அமைந்தது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக கேரியின் எண்ணங்களும் கொள்கைகளும் விளங்குகின்றன. அவ நம்பிக்கை எண்ணத்தைத் தகர்த்தெறிந்துவிட்டு, தளராத தன் னம்பிக்கையுடன் பொருளாதார எண்ணங்கள் வளர்வதற்கு வழி காட்டியவர் கேரிதான் என்றுல், அது மிகையாகாது.

வாழ்க்கைக் குறிப்பும் நூல்களும்

ஹென்ரி சார்லஸ் கேரி 1792-ல் பில்டெல்பியா (Piladelbia) என்னும் ஊரில் பிறந்தவர். இவரது தந்தையான மாத்யூ கேரி அயர்லாந்தில் பிறந்து வளர்ந்தவர். அரசியல் காரணத்தால் பிறந்த நாட்டைவிட்டு அமெரிக்காவில் குடி புகுந்தார். பிலடெல்பி யாவில் புத்தக வெளியீட்டாளராகப் புகழ்பெற்று விளங்கினுர். சார்லஸ் கேரி தன் கல்வியை முடித்த பின்னர் தந்தையின் தொழிலில் ஒரு பங்குதாரராகப் பணியாற்றினுர். அத் தொழிலில் வெற்றிகண்ட கேரி 1821-ல் அதன் முழு நிருவாகப் பொறுப்பை யும் ஏற்ருர். மிகப்பெரும் செல்வந்தராக உயர்ந்த கேரி 1835-ல் தொழில் நிருவாகத்திலிருந்து ஓய்வு பெற்று எஞ்சிய வாழ்நாள் முழு வதும் அரசியல், சமூக இயல்பற்றிய நூல்களைப் படித்தார். தன் செல்வத்தையும் கல்வி அறிவையும் மக்களின் நலனுக்காகச் செல

விடுவதில் ஆர்வம் காட்டினார். 1879-ல், தன் 86ஆம் வயதில் காலமானார்.

கேரி ஏராளமான நூல்களை எழுதியவர். அந்த அளவுக்கு நூல் எழுதியவர்கள் மிகக்குறைவு எனலாம். அவர் எழுதிய பெரு நூல்கள் பதின்மூன்று பகுதிகளாகும். சிறு நூல்களோ ஐம்பத்தேழு. இவையனைத்துமே சிறு நூல்கள் என்று சொல்வதற்கில்லை. அவர் வெளியிட்ட நூல்களில் முக்கியமானவை வருமாறு: 1835-ல் வெளியிட்ட 'கூலி விகிதம் பற்றிய கட்டுரை' (An essay on the rate of wages); 1837 முதல் 1840 வரை மூன்று பகுதிகளாக வெளியான 'அரசியல் பொருளாதாரத் தத்துவங்கள்' (Principles of political economy) 1848-ல் வெளிவந்த 'நேற்றும் இன்றும் நாளையும்' (The past, the present, and the future); 1857 முதல் 1880 வரை அவர் மூன்று பகுதிகளாக வெளியிட்ட 'சமூக அறிவியல் தத்துவங்கள்' (Priciples of social science) என்னும் நூலே மிக முக்கியமானதாகும்.

ஒரு காலத்தில் கேரி அமெரிக்காவின் அரசியல் பொருளாதாரத்திற்கே பிரதிநிதியாக விளங்கினார். அவருடைய காலத்தில் அமெரிக்காவில் மட்டுமன்றி பல ஐரோப்பிய நாடுகளிலும் அவருக்குப் பெருமதிப்பு இருந்தது. ஆனால் இங்கிலாந்தில் அவர் அவ்வளவாக மதிக்கப்படவில்லை. இன்றோ, அவரது நூல்களனைத்தும் மதிப்பிழந்துவிட்டன. காரணம், சிறு செய்திகளைக் கூடத் திரும்பத்திரும்ப கிளிப்பிள்ளைபோல் கூறுகிறார் கேரி. பொருளாதார அறிஞர் எவருமே தம் சூழ்நிலைக்கேற்பத்தான் நூல் எழுதுவர் என்ற பொதுவான உண்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குபவர் கேரி. இதனை அவரது எண்ணங்களும் கொள்கைகளும் தெளிவாகக் காட்டுகின்றன.

பண்டத்தின் மதிப்பு

கேரியின் கோட்பாடுகளில் மையமானது மதிப்புக் கோட்பாடாகும். உழைப்பு ஒன்றே பண்டங்களின் மதிப்பை அளக்கும் அளவுகோல் என்பதைப் பொதுவாக நம்பினார் கேரி. எனவே, அவரது மதிப்புக் கோட்பாட்டை உழைப்பு மதிப்புக் கோட்பாடு எனலாம். ஆனால், இக் கோட்பாட்டை கேரி பல நிபந்தனைகளுக்கும், மாறுதல்களுக்கும் அடிமையாக்கினார். இதனால், விசித்திரமான பல முடிவுகளையும் அவர் ஏற்க வேண்டியதாயிற்று. மூலதனம் தோன்றாத பண்டைக் காலத்தில் ஒரு பண்டத்தின் மதிப்பு, அதனை உண்டாக்கிய உழைப்பின் அளவையே பொறுத்திருந்தது எனக் கூறுகிறார். ஆனால் மூலதனம் தோன்றிய பின் பண்டங்களின்

மதிப்பு நிருணயத்தில் ஒரு பெரு மாற்றமே எழுந்துவிட்டதென்று விளக்குகிருர். அதாவது, மூலதனம் தோன்றியபின், மறுபடியும் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கேற்படும் செலவே மதிப்பை நிருணயமாக்குகிறது. ஆனால், சமுதாயம் முன்னேற முன்னேற பண்டங்களின் உற்பத்திச் செலவு குறைந்துகொண்டே செல்லும்; அதோடு மூலதனத்தின் மதிப்பும் இறங்கிக்கொண்டே இருக்கும். முன்னேற்றம் என்பது இயற்கைத் தடைகளையெல்லாம் மனிதன் வெல்வதில் அடங்கியிருக்கிறது. ஆகையால், மதிப்பு என்பது ''நாம் அடையவிரும்பும் பொருளைப் பெறுவதிலுள்ள தடைகளை எதிர்த்துப் போராடும் சக்தியின் ஓர் அளவுதான்'' என்கிருர் கேரி. இதிலிருந்து தெரிவது என்னவெனில், மூலதனத்தின் உதவியால் பொருள்களை உற்பத்தி செய்யும்போது, உழைப்பாளியின் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது; எனவே, உழைப்பாளியின் கூலியும் உயர்கிறது. ஆனால், பொருள்களின் மதிப்பு ஓரளவு குறைந்து கொண்டே செல்லும்.

சமுதாய முன்னேற்றமும் பகிர்வும்

மூலதனத்தைப் போன்றே நிலமும் மனிதனின் படைப்பு என்று வாதாடுகிருர் கேரி. எனவே, நிலத்திற்கென்று தனியாகக் குத்தகை கொடுக்கும் கொள்கை வேண்டியதில்லை. இயந்திரங்களின் வடிவிலுள்ள மூலதனத்தையும் கருதவேண்டும். அப்போது குத்தகையை நிலத்தின் வடிவிலுள்ள மூலதனத்திற்குக் கொடுக்கப்படும் வட்டியாகவே கொள்ளலாம். அவ்வாருயின், நிலத்தின் மதிப்பு அதனைச் செழிப்பாக்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் செலவிடப்பட்ட உழைப்பின் அளவைப் பொறுத்ததாகும். மூலதன வடிவிலுள்ள எல்லாப் பொருள்களையும் போன்று நிலமும் சமுதாய முன்னேற்றத்தின் விளைவேயாகும். அவ்வாருயின், மூலதனத்தைப் போன்றே நிலத்தின் மதிப்பும் குறைந்துகொண்டே செல்லும் ரிக்கார்டோவின் குத்தகைக் கொள்கையின் சாரம் ''இயல்பான அழிக்கமுடியாத நிலவளத்திற்குத் தரப்படும் விளைச்சலின் ஒரு பகுதிதான்'' என்பதைக் கண்டோம். கேரி இக் கொள்கையின் அடிப்படையையே தகர்க்க முயல்கிருர்; ஆனால் முடியவில்லை.

கேரியின் விளக்கத்தை ஆழ்ந்து சிந்தித்தால், சமுதாயம் எவ்விதத் தடையோ வரையறையோயின்றி முன்னேறக்கூடும் என்பது தெளிவாகும். எனவே, சமுதாய முன்னேற்றத்தில் அளவுகடந்த நம்பிக்கையுள்ளவராகக் கேரி தோன்றுகிருர். ஒரு நாட்டில் புதிதாகக் குடியேறிய மக்கள் அதிகச் சிரமப்பட்டுத்தான் தங்கள் வசதியைத் தேடமுடியும். நாளடைவில் அவர்களின் எண்ணிக்கை

அதிகரிக்க அதிகரிக்க, முன்னேற்றத்திற்கான தடைகளையெல்லாம் நீக்கும் சக்தி அதிகமாகிவிடுவதால், வாழ்க்கை வசதிகளைப் பெறுவது எளிதாகிவிடுகிறது. எனவே, புதிதாகத் தோன்றும் ஒவ்வொரு மனிதனும் இயற்கையை எதிர்த்துப் போராடக்கிடைத்த புதிய வீரனுவான் என்கிருர் கேரி. சான்ருக, தச்சன் கிடைத்தால் உழவனுக்கு வேண்டிய கலப்பை கிடைக்கிறது. அதேபோல் கொல்லன் வந்தால் சாகுபடிக் கருவிகள் கிடைக்கின்றன. எனவே மக்கள்தொகை பெருகப் பெருக வாழ்க்கை வசதிகளைப் பெறுவதும் எளிதாகிறதென்கிருர் கேரி. இவ்வாருக, புதிய நாட்டில் குடியேறிய ஒருவனுடைய கண்ணோட்டத்திலிருந்து மால்தஸின் மக்கள்தொகைக் கொள்கையையும் ரிக்கார்டோவின் குத்தகைக் கொள்கையையும் வசைமாறி பொழிந்து தூற்றுகிருர் கேரி. 'புதிய நாடு பெறும் வளர்ச்சியை இன்று நாம் கண்டு போற்றுகிறோம்; ஆனால் ரிக்கார்டோவால் அவ்வாறு செய்ய இயலவில்லை' என்ற கேரியின் கூற்று சிறப்புடையதாகும். இக் கூற்றின் அடிப்படையில் சமுதாய முன்னேற்றத்தின் விளைவுகளை ஆராய்கிருர் கேரி. சமுதாயம் முன்னேற முன்னேற, உழைப்பாளர் பெறும் கூலியும் நிலக்கிழார் உட்பட முதலாளிகள் பெறும் வருவாயும் உயர்ந்து கொண்டே செல்லும். எனினும் முதலாளிகளின் வருவாயைக் காட்டிலும் கூலி வேகமாக அதிகரிக்கும். எனவே சமுதாய முன்னேற்றம் எல்லா வகுப்பினருக்கும் சாதகமாகவும் நன்மையாகவுமே இருக்கும் என்கிருர். இது, ரிக்கார்டோ கொண்ட முடிவிற்கு முற்றிலும் முரணுனது என்பதைக் குறிப்பிடவேண்டும்.

கேரியின் இதரக் கோட்பாடுகள்

கேரியின் கோட்பாடுகளில் குத்தகை, மக்கள் தொகை, தொழில் பாதுகாப்பு பற்றிய கொள்கைகள் முக்கியமானவையாகும். இவற்றுள் தொழில் பாதுகாப்புக் கொள்கை ஆடம் ஸ்மித்தின் தடையிலா வாணிபக் கொள்கைக்கு நேர்மாருனதாகும். இதைப் பற்றிப் பின்னர் பார்க்கலாம். குத்தகைக் கொள்கையும் மக்கள் தொகைக் கொள்கையும் ரிக்கார்டோ, மால்தஸ் ஆகியோரின் கொள்கையை மறுப்பதற்காகப் புனையப்பட்டவை.

குத்தகைக் கொள்கை

தனது 'அரசியல் பொருளாதாரத் தத்துவங்கள்' என்னும் நூலில் ரிக்கார்டோவின் குத்தகைக் கொள்கையைத் தகர்த்தெறிய முற்படுகிருர் கேரி. புதிய நாடுகளில் வளமிக்க நிலங்களே முதலில் சாகுபடி செய்யப்பட்டன என்ற அனுமானத்தைக் கொண்டது ரிக்கார்டோவின் கொள்கை. இவ்வனுமானம் தவருனதென எடுத்துக்காட்டுகிருர் கேரி. முதலில் வளமற்ற நிலம்தான் சாகுபடி

செய்யப்பட்டது என்பதை அனுபவத்தின் வாயிலாக விளக்குகிறார். வளமற்ற நிலம்தான் சாகுபடிக்கு எளிதென்றும் வாதாடுகிறார். கடைசியில்தான் வளமிக்க நிலம் பயிர் செய்யப்பட்டதென்பது கேரியின் கருத்து. ரிக்கார்டோவின் கொள்கைக்கு நேர் மாறான வழியில்தான் பயிர்த்தொழில் நடைபெற்றது என்கிறார். நிலத்தை கேரி மூலதன வகையில் ஒன்றாகவே கருதினார் என்பதை முன்னரே கண்டோம். மனிதன் சாதாரண கருவிகளைத்தான் முதலில் பயன்படுத்த ஆரம்பித்தான்; பின்னர்தான் செப்பனிட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தினான் என்பதை வரலாற்று வாயிலாக விளக்க முற்படுகிறார். சான்றாக, முதலில் கல்லைப் பயன்படுத்திய மனிதன், பின்னர் இரும்பு ஆயுதங்களையும் எஃகுக் கருவிகளையும் பயன்படுத்தினான். எந்த விவசாயிக்கும் வளமுள்ள நிலமும் வளமற்ற நிலமும் இருந்தால் வளமுள்ள நிலத்தைத்தான் முதலில் சாகுபடிக்குக் கொண்டுவருவான் என்பதை எவருமே ஒப்புக் களுக்கிடையே சமமான திறமையும் போட்டியும் இருப்பதே சிறந்த கொள்வர். அமெரிக்காவில் ரைன்நதிப் பள்ளத்தாக்கில்கூட வளமான நிலம்தான் முதலில் பயிர் செய்யப்பட்டு, பின்னர்தான் வளமற்ற நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டதாக லாங்கே (Lange) கூறுகிறார்.

மேலும், உலகம் எல்லையற்றதென்றும், உழவுத்தொழிலில் குறைந்து செல்விளைவு விதி செயல்படுவதில்லையென்றும் கேரி துணிவுடன் கூறுகிறார். சாகுபடி செய்யப்படாத நிலம் என்றுமே ஏராளமாக இருந்து வருகிறது; உணவை உற்பத்தி செய்வதற் கேற்ற வளமான நிலமோ வரம்பின்றி உள்ளதென்றும் கூறுகிறார். உழைப்பின் சேமிப்புப் பெட்டகமாக இருப்பது நிலம் ஒன்றுதான். அதிலிருந்து கிடைக்கும் ஆதாயம் அதிகரித்துக்கொண்டேதான் செல்லுமேயன்றி, குறையாது என்று அழுத்தம் திருத்தமாக கேரி கூறுவது ரிக்கார்டோவின் கொள்கைக்கு மட்டுமன்றி, மால்தஸின் மக்கள் தொகைக் கொள்கைக்கும் சவாலாக உள்ளது. ஆனால் இந்தச் சவால் அர்த்தமற்றதாகும். உழைப்பையும் இதர சாதனங் களையும் எந்த அளவுக்குப் பயன்படுத்தினாலும் விளைச்சல் அந்த அளவுக்குப் பெருகாது என்பது எல்லா விவசாயிகளும் கண்ட உண்மை.

இருந்தபோதிலும், ரிக்கார்டோவின் கொள்கையை கேரி எவ்வளவு தூரம் கண்டனம் செய்தாரென்றால், ரிக்கார்டோவின் சீடர்கள் அக் கொள்கைக்கு முறையான விளக்கத்தை மேலும் தரவேண்டியதாயிற்று. நிலத்தை நல்ல நிலம், சிறந்த நிலம், மிகச் சிறந்த நிலமென அவர்கள் பாகுபடுத்தினர். ரிக்கார்டோ

வின் வாரக் கொள்கையைப் பின்னால் தோன்றிய அறிஞர்கள் செப்பனிடவேண்டிய அவசியம் ஏற்பட்டதே கேரியின் தாக்குதலால்தான். இதுவே, கேரி செய்த பணி எனலாம். எது எவ்வாறிருந்தாலும், ரிக்கார்டோவின் கொள்கையின் சாரம் என்றும் வற்றாது என்றே கூறலாம்.

மக்கள் தொகைக் கொள்கை

கேரி, மால்தஸின் மக்கள் தொகைக் கோட்பாட்டை விசித்திரமான முறையில் வாதாடி குற்றம் கூறுகிறார். அவரது முதல் வாதமே வேதாந்த அடிப்படையாகக் கொண்டது. "மக்கள் இனத்தைப் பெருக்குங்கள்; பெருக்கி உலகத்தை நிரப்புங்கள்" என்பது ஆண்டவனின் கூற்று. இக் கூற்றினை மனதில் கொண்டு மால்தஸின் கொள்கையின் சாரத்தை ஆய்கிறார். "மகப்பேறு வேண்டாம்; இனப்பெருக்கத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறுவது மால்தஸின் கொள்கை. இது ஆண்டவன் தந்த கட்டளையை மீறுவதாகும். வறுமையையும் ஏழ்மையையும் காரணம் காட்டி ஆண்டவனின் திட்டத்தை எதிர்ப்பதற்கொப்பாகும். எனவே மால்தஸின் கொள்கை, ஆண்டவனின் கட்டளையைத் தலைகீழாக மாற்றுவதாக உள்ளதென்கிறார் கேரி.

கேரியின் பிரிதொரு வாதம் அசட்டுத்தனமானது. மனிதன் உயிர் வாழ்வதற்குத் தாவரங்களையும் மிருகங்களையும் சார்ந்துள்ளான். தாவரங்களும் மிருகங்களும் மனித இனத்தைக் காட்டிலும் முயல்கள் இனவிருத்தி செய்வதில் பெயர் பெற்றவை. எனவே, வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள்கள் அனைத்தும் மால்தஸ் கூறியபடி கூட்டுத் தொடரில் பெருகுவது கிடையாது. மாறாக, மனித இனம்தான் கூட்டு விகிதத்தில் அதிகரிக்கிறது. ஆனால், மனிதன் பயன்படுத்தும் முயல், உருளைக் கிழங்கு, முள்ளங்கி போன்ற உணவுப் பொருள்கள் அனைத்தும் மனித இனத்தைக் காட்டிலும் வேகமாகப் பெருகுகின்றன. எனவே, கேரியின் வாதப்படி வேலையற்றோர் அனைவரும் முயல்களை வளர்த்து, அவ்வினத்தைப் பெருக்க வேண்டும். கேரியின் பிரிதொரு வாதம் வேடிக்கையானது; எனினும் குறிப்பிடத்தக்கது. விவசாயம் விரிவடையும்போது பூச்சி, புழுக்கள் போன்ற சிறிய உயிரினங்கள் அனைத்தும் அழிந்து குறைந்துவிடுகின்றன. இதனால், தாவரங்களுக்கு வேண்டிய கரியமில வாயு குறைந்துவிடுகிறது. இவ் வாயுவை வெளியிடுவதே உயிரினங்கள்தாம். எனவே, தாவரங்களுக்கு வேண்டிய அவ் வாயுவை மனித இனம்தான் கொடுக்கவேண்டும். அவ்வாறாயின், மனித இனம் வேகமாகப்

பெருக வேண்டும் என்கிறார் கேரி. இவ் வாதம், இயற்கையின் போக்கில் கேரி கொண்டுள்ள நம்பிக்கைக்குச் சான்றாகும்.

பிறிதொரு வாதத்தையும் கேரி கையாள்கிறார். மனிதனின் இனப்பெருக்க சக்தி மாறக்கூடியதன்று; அது நிலையானது என்பது மால்தஸின் நம்பிக்கை. இதனைத் தகர்த்தெறியும் வழியில், அச் சக்தி மாறும் இயல்புடையதென வாதாடுகிறார் கேரி. இனப் பெருக்கச் சக்திக்கும் நரம்புகளுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதென் றும், மனித இனம் பெருகப் பெருக, மலட்டுத்தன்மை அதிகரித்து இனப்பெருக்கச் சக்தி குறைந்துவிடுமென அவர் வாதாடுவது வேடிக்கையாகவே உள்ளது. எனினும் இவ் வாதத்தை அடிப்படை யாகக் கொண்டுதான் மால்தஸின் தவிர்ப்புத் தடைகளை முறியடிக்க முற்படுகிறார். இயற்கையே மனித இனப்பெருக்கைச் சரிப்படுத்தி விடும் என்பதும், எனவே சமுதாயத்திற்கு நல்லகாலம் விரைவில் கிட்டிவிடும் என்பதும் அவர் கூறும் ஜோசியம். ஆனால் ஜோசியத் தில் நம்பிக்கையுள்ளவர்கள் மிகக்குறைவுதானே!

தனது பழைய புத்தகங்களில் 'மனிதன் நிற்பதற்குக் கூட இடமில்லாத காலம் வரும்' என்பதை கேரியே ஒப்புக்கொண்டுள் ளார். ஆனால், அக் காலம் எப்போதோ வரப்போகிறது; அதைப் பற்றி மனிதன் இப்போதே கவலைகொள்ளவேண்டியதில்லை; அக் கவலையை ஆண்டவனிடமே விட்டுவிட்டு நிம்மதியாக இருக்க வேண்டியதுதான் என்று கேரி சமாதானம் கூறுவதால், எவனும் நிம்மதியடையப் போவதில்லை. எனவே, மால்தஸின் கொள்கையை யும் ரிக்கார்டோவின் கொள்கையையும் ஒன்றுக்கும் உதவாதவை களாகச் செய்வதுதான் கேரியின் நோக்கம். ஆனால், மாறாக, கேரியின் விளக்கம்தான் உதவாக்கரையான ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிட்டது.

தொழில் பாதுகாப்பு

தொழில் பாதுகாப்புக் கொள்கைக்கு கேரியையும் லிஸ்டையும் இரட்டைப் பிரதிநிதிகளாகக் கருதுவது மரபு. ஆனால் கேரியின் கொள்கை விளக்கம் உணர்ச்சிவசமானதேயன்றி, அறிவியல் முகமானதல்ல. இறக்குமதி வரியால் ஏற்படும் பிரச்சினைகளை ஆராயாமல், ஏதோ பழங்காலத்தில் காட்டில் வாழ்ந்த மனிதனைப் போல கேரி வாதாடுவது வியப்பாக உள்ளது. இறக்குமதி வரியின் வாயிலாகத்தான் தொழிலை முன்னேற்றமடையச் செய்ய முடியும் என்பது அவரது வாதம். அதோடு, இறக்குமதியின் வழியாகத் தொழிலுக்குப் பாதுகாப்பளித்தால் பொதுமக்களுக்கும் தொழிலதிபர் களுக்குமிடையே நேரடியான உறவு ஏற்படும் என்றும் கூறுகிறார்.

மாருக, வெளிநாட்டுப் பொருள்கள் தாராளமாக இறக்குமதியானால் இறக்குமதி செய்யும் வணிகர், வியாபாரி போன்றோர் உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் பிரித்துத் தாங்களே இலாபம் அடைய விரும்புவர் என்றும் வாதாடுகிறார். எனவே, கேரியின் தொழில் பாதுகாப்புக் கொள்கை 'நாட்டு மக்களிடையே ஒற்றுமையுணர்ச்சியை ஏற்படுத்தத் தோன்றிய கொள்கையே'. மேலும், தொழில் பாதுகாப்பு உள்நாட்டு அங்காடிக்கு ஊக்கம் அளிக்கிறது. அவ்வாறின்றி வெளி நாட்டுப் பொருள்களையும் அங்காடியையும் விரும்பும் ஒருவன், தன் மனைவி மக்களையெல்லாம் விட்டுப்பிரிந்து, சத்திரம் சாவடியில் தங்கி; வீண் செலவு செய்து ஒழுக்கங்கெட்ட மனிதனுக்கு ஒப்பாவான் என்று கேரி கூறுவது நமக்கு வேடிக்கையாக உள்ளது. இல்லற வாழ்க்கையின் இன்பத்தை நாடும் எவனும் உள்நாட்டுத் தொழிலையே ஆதரிப்பான் என்பது அவரின் கருத்து. தொழில் பாதுகாப்பின்றி விவசாயத்தையே நம்பி வாழும் ஒரு நாடு, தன் மண்வளத்தையே பிற நாடுகளுக்கு விற்கவேண்டிய நிலை ஏற்படும் என்று கேரி கூறுவதில் ஓரளவு உண்மையுள்ளது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

முகவுரை

கேரியின் கருத்துகளனைத்தும் அறிவியலுக்கப்பாற்பட்டவை; எனினும், பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் அவர் வகிக்கும் பங்கு முக்கியமானதாகும். தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் அவநம்பிக்கையைக் களைந்தெரியும் பணியில் அவரே வழிகாட்டியாக உள்ளார். சமுதாயத்திலுள்ள பல்வேறு மக்களிடையே பொருளாதாரச் சமரசம் உண்டென்பதை உறுதிபடுத்த அவர் செய்த முயற்சி என்றும் நிலைத்திருக்கும் என கிரே கூறுகிறார்.

11. பாஸ்டியட் (1801 – 1850)

பாஸ்டியட் 1801-ல் பிரான்ஸ் நாட்டிலுள்ள பயோனி என்னுமிடத்தில் பிறந்தவர். தனது 25ஆம் வயதிலேயே அவரது குடும்பப் பண்ணைக்குச் சொந்தக்காரராகி விட்டார். எனவே, 1844வரை உலகம் அறியாத பாமரராகத் தன் பண்ணையிலேயே வாழ்ந்தார். எனினும் அரசியலிலும் அறிவுத் துறையிலும் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தார் அதன்பின், தடையிலா வாணிபம் காரணத்தால் அவர் பல கட்டுரைகளை எழுதினார். பத்திரிகைத் துறையில் திறன்மிக்க எழுத்தாளராக விளங்கினார். இவ்வாறாக, அவரது வாழ்வில் ஒரு முக்கியத் திருப்பம் ஏற்பட்டது. 1848-ல்

அரசியல் நிருணய சபையில் உறுப்பினரானார். 1849-ல் சட்டசபை அங்கத்தினராக விளங்கினார். இறுதி ஆறு ஆண்டுக் காலம் மிகக் கடுமையாக உழைத்தார். கடும் உழைப்பின் காரணத்தால் உடல் நலங்கெட்டு இறந்தார் என்றும் கூறப்படுகிறது.

அரசியல்வாதியாக இருந்த காலத்தில் பாஸ்டியட் தொழில் பாதுகாப்பையும் சோஷியலிசத்தையும் வன்மையாகக் கண்டித்தார். ஜே. பி. சே. அவர்களின் கருத்திலும் கொள்கையிலும் நம்பிக்கைக் கொண்டவர் பாஸ்டியட். எனவே வருங்காலத்தை இன்பமாக நோக்கும் மனப்பான்மையுடன் தடையிலா வாணிபத்திற்கு ஆதரவு காட்டினார். சமுதாய மக்களிடையே பொருளாதாரப் பிணக்குகள் ஏற்படக் காரணமே கிடையாது என்று நம்பினார். அவர் வரைந்த நூல்களில் முக்கியமானது 'பொருளாதார இசைவு' (Economic Harmonies) என்பது. அவர் பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கவை. அக் கட்டுரைகளெல்லாம் 'அரசியல் பொருளாதாரக் கட்டுரைகள்' என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன.

பத்திரிகையாளராக இருந்த காரணத்தால் பாஸ்டியட் அந்நாள்களில் ஏற்பட்ட வாதங்களிலெல்லாம் பெரும் பங்கு கொண்டார். பத்திரிகையாளராக விளங்கிய பாஸ்டியட்டுக்கு ஈடு இணையுள்ளவர்கள் மிகச்சிலரே. தனக்கு விரோதமான கருத்துகளனைத்தையும் தாக்கி எழுதுவதில் வல்லவர். அவற்றை அறிவீனமான கருத்துகள் என்று நிரூபிப்பதில் தீரர். சொல்திறனும் நகைச்சுவையும் கலந்து எதிரிகளைக் குத்தி எழுதுவதில் திறன்மிக்கவர். வசை மொழியில் புலவர். எனவே, இவரைக் கொச்சை மொழிப் புலவர் எனச் சிலர் கருதியதில் தவறில்லை. இன்றுள்ள மஞ்சள் பத்திரிகை ஆசிரியர்களுக்குள்ள 'பெருமை' அவருக்கிருந்தது. அவருடைய மூளை சுறுசுறுப்புடன் இயங்கியது; எனினும் அவர் ஆழ்ந்த அறிவுடையவர் என்று கூற முடியாது.

தொழில் பாதுகாப்பு, சோஷியலிசம் ஆகியவற்றிற்கு எதிரான வாதங்கள்

பத்திரிகை உலகைக் கவர்ந்த இரண்டு முக்கியப் பிரச்சினைகளைப்பற்றி பாஸ்டியட் கூறியுள்ள கருத்துகள் முக்கியமானவை

என்று கூறுவதற்கில்லை. எனினும், குறிப்பிடத்தக்கவை. அன்றைய பிரச்சினைகளில் ஒன்று தடையிலா வாணிபமா அல்லது தொழில் பாதுகாப்பா என்னும் பிரச்சினை. பிறிதொன்று, சோஷியலிசம் வேண்டுமா என்பது. இவ்விரு பிரச்சினைகளைப் பற்றித்தான் பாஸ்டியட் சுவைபட எழுதியுள்ளார். அவர் எழுதியவையனைத்தும் மிகைப்படத் தோன்றியபோதும், இன்றும் கற்பதற்கு இனிமையாகவே உள்ளன. இதற்குச் சான்று வருமாறு: தொழில் பாதுகாப்புக் கொள்கை மூடத்தனமானதென்பதற்கு எடுத்துக்காட்டாக மெழுகுவர்த்தி உற்பத்தியாளர்கள் அரசிற்கு ஒரு மனு கொடுப்பது போல் யூகித்துக்கொண்டு அம் மனுவிலுள்ள கோரிக்கையை எடுத்துக்காட்டுகிறார். மெழுகுவர்த்தியின் ஒளிக்குப் போட்டியாக உள்ளது சூரியனின் ஒளி. எனவே, சூரியன் இல்லையெனில் மெழுகுவர்த்தி தயாரிப்பாளர் அதிக அளிவு உற்பத்தி செய்து, தம் தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும். ஆனால் சூரியனை அகற்றுவது மனிதனால் இயலாது; எனவே, சூரிய ஒளி வீட்டிலுள்ள கதவு, சன்னல் வழியாக வீட்டிற்கு ஒளி கொடுத்து, மெழுகுவர்த்தியின் பயனைப் பகலில் நீக்கிவிடுகிறது. இச் சூரியனின் போட்டியிலிருந்து பாதுகாப்பை விரும்பிய மெழுகுவர்த்தி உற்பத்தியாளர்கள், கதவு, சன்னல்கள் செய்யப்படுவதையும் வீட்டில் அவை பொருத்தப்படுவதையும் சட்டத்தின் மூலம் தடைசெய்து மெழுகுவர்த்தித் தொழிலை அரசாங்கம் பாதுகாக்கவேண்டுமென வலியுறுத்தினார்களாம். இதிலிருந்து, இயல்பான வழியில்தான் தொழில்கள் வளரவேண்டுமென்பதை வலியுறுத்துகிறார் பாஸ்டியட்.

சோஷியலிசத்தையும் தொழில் பாதுகாப்புக் கொள்கையையும் எதிர்க்கும் பாஸ்டியட் கூறும் காரணம் அடிப்படையில் ஒன்றுதான். இரண்டுமேசுரண்டலை ஆதாரமாகவும்ஆதாயமாகவும்கொண்டவை. நல்ல முறையில் தொழிலை நடத்தி இலாபம் பெற இயலாதவர்கள் பாதுகாப்பை விரும்புகின்றார்கள். தம் தொழிலுக்குப் போட்டியாக வரும் பிற நாட்டுப் பொருள்களின்மீது இறக்குமதி வரியை விதிக்கக் கோருகின்றனர். இதனால் பொது மக்கள் அதிக விலை கொடுத்து உள் நாட்டுப் பொருள்களையே வாங்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, இறக்குமதி வரியால் பொது மக்கள் சுரண்டப்படுகின்றனர்; தொழிலதிபர்கள் இலாபம் பெறுகின்றனர். இதே போன்றுதான் சோஷியலிசமும். தனி மனிதனின் கடமைகளையும் பொறுப்புக்களையும் புறக்கணிப்பதுதான் சோஷியலிசம் என்று நகைச்சுவையுடன் கூறுகிறார் பாஸ்டியட். தனது கட்டுரை ஒன்றில்

அரசாங்கம் பற்றிய விமரிசனத்தைக் கூறுகிறார். 'அரசாங்கம் என்பதே ஒரு கட்டுக் கதை. ஒவ்வொருவனும் மற்றவனுடைய செலவில் வாழ வழிவகுப்பதுதான் அரசாங்கம்' என்கிறார்.

தொழில் பாதுகாப்புக் கொள்கையையும் சோஷியலிசத்தையும் பாஸ்டியட் தாக்கிப் பேசியதற்குப் பிறிதொரு காரணமும் உண்டு. அதாவது, இவை இரண்டுமே இயற்கைக்கும் மனிதனின் இயல்புக்கும் மாறானவை. தலையிடா வாணிபத்தில் நம்பிக்கைக் கொண்ட பாஸ்டியட், ஆடம்ஸ்மித், மால்தஸ், ரிக்கார்டோ ஆகியோர் மேற்கொண்ட கொள்கையில் முரண்பாட்டைக் கண்டார். அம் முரண்பாட்டை நீக்கும் வழியில்தான் தொழில்பாதுகாப்புக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தார். சுதந்திரத்தில் தணியாத தாகம் கொண்டவராய் இயற்கை வழிச் சமுதாயத்தைக் காண விழைந்தார். தலையிடாக் கொள்கையைத் தனது மூச்சாக மதித்த அவர், அக் கொள்கையின் வழியாகத்தான் சமுதாயத்தில் எல்லா மக்களும் இசைவுடன் வாழ்வர் என எண்ணினார். ரிக்கார்டோவும் மால்தசும் விளக்கிய சமுதாயப் பூசல்கள் தோன்றா வண்ணம் தனது விளக்கத்தை அமைத்துக்கொள்கிறார் பாஸ்டியட்.

பண்டத்தின் மதிப்பு

பாஸ்டியட்டின் கோட்பாடு பயன்பாட்டிற்கும் மதிப்பிற்குமுள்ள நிரந்தரமான வேறுபாட்டையும், மதிப்பு பற்றிய விசித்திரமான கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டது. அவரது கோட்பாட்டின்படி பயன் என்பது இரு வகைப்படும். ஒன்று இரக்கமுள்ள இறைவனால் கொடுக்கப்பட்டது. பிறிதொன்று, மனிதனின் முயற்சியால் கிடைப்பது. மனிதனின் முயற்சியால் கிடைப்பதைக் காட்டிலும் இலவசமாகக் கிடைக்கும் பயனை அதிகமாக உபயோகிப்பதில்தான் மனிதனின் முன்னேற்றம் அடங்கியுள்ளது. பயன்பாடு என்னும் கருத்தை விளக்குவதற்கு அதைப் பணியோடு ஒப்பிடுகிறார் பாஸ்டியட். "ஒருவன் மற்றவனுடைய தேவையை நிறைவு செய்வதற்காக முயற்சி செய்யும்போது, அவனுக்குப் பணி செய்கிறான்" என்பது பாஸ்டியட்டின் நம்பிக்கை. அவ்வாறாயின், மற்றவனுக்குத் தனது உழைப்பை அவன் கொடுக்கிறான் என்று பொருள். எனவே, ஒருவனது பணி, மற்றவர்களின் பணிக்காகப் பரிவர்த்தனை செய்யப்படுகிறதெனக் கொள்ளலாம். சுதந்திரமாக இப் பணிகள் பரிவர்த்தனை செய்யப்பட்டால், பரிமாறப்படும் பணிகள் ஒரே மதிப்புள்ளவைகளாகத்தான் இருக்க முடியும். இதில்தான் மதிப்பின் சாரமே அடங்கியுள்ளது. ஒவ்

வொருவரும் தத்தம் பணியை மற்றவர்களின் பணிக்காக மாற்றிக் கொள்வதுதான் மதிப்பை உண்டுபண்ணுகிறதெனலாம். சான்ருக, தச்சன் தன் பணியைக் குயவனின் பணிக்காகப் பரிவர்த்தனை செய்யும்போது அவ்விரு பணிகளும் சம மதிப்புடையவையாகின்றன. இயற்கையின் வழியாக இலவசமாகக் கிடைக்கும் பண்டங்களுக்கெல்லாம் பயன் இருந்தபோதிலும் மதிப்பு கிடையாது. ஏனெனில் அப் பண்டங்களில் மனிதனின் முயற்சியோ பணியோ ஒன்றுமில்லை. எனவே, மதிப்பு என்பதே மனிதனன் பணியில்தான் அடங்கியுள்ளதென்கிருர் பாஸ்டியட். இது ரிக்கார்டோவின் உழைப்பு மதிப்புக் கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டது. எனினும், பாஸ்டியட்டின் விளக்கம் புதிரானதாகவே உள்ளது. தெளிவும் நுட்பமுமின்றி குழப்பமான வகையில் அவ் விளக்கம் அமைந்துள்ளது. இக் குழப்பமான விளக்கத்திலிருந்து முக்கியமானதொரு முடிவுக்கு வருகிருர் பாஸ்டியட். மனிதன் செய்யும் பணியின் மதிப்பு குறைவதற்கு வாய்ப்புண்டு என்கிருர். சமுதாய முன்னேற்றமும், புதியன கண்டுபிடித்தலும் அவ் வாய்ப்பை அளிக்கின்றன. எனவே, பணியின் மதிப்பு குறைந்தால் அப் பணியால் படைக்கப்பட்ட பண்டங்களின் மதிப்பும் குறைவது இயல்பு. இவ்வாருக, மனிதன் அதிக முயற்சியின்றி, எளிதாகப் பயனை அடைவதில்தான் சமுதாய முன்னேற்றம் அடங்கியுள்ளது என்ற முடிவிற்கு வருகிருர். இம் முடிவு, எதிர்காலத்தை அவர் எவ்வளவு எளிமையாகவும், இன்பமாகவும் நோக்குகிருர் என்பதையே சுட்டிக்காட்டுகிறது. சமுதாய முன்னேற்றம் என்பதற்கு, இயற்கை அளித்துள்ள இலவசப் பொருள்களை மேலும் மேலும் பயன்படுத்துவது என்பதுதான் பொருள். அப்போது, இன்றுள்ளதைக் காட்டிலும் மனிதனின் உழைப்பும் முயற்சியும் குறைந்து கொண்டேதான் செல்லும். உழைப்பாளிகள் பெரு முயற்சியின்றிப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும்.

பாஸ்டியட்டின் இன்ப நோக்கு

மேற்கூறிய விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாஸ்டியட் பல முடிவுகளுக்கு வருகிருர். இம் முடிவுகளனைத்தும் ரிக்கார்டோவின் தளர்ச்சி மனப்பான்மையைக் கண்டிப்பதாகவேயுள்ளன. பாஸ்டியட்டின் கொள்கைப்படி மேலும் மேலும் மூதலீடு அதிகரிக்கும்போது வட்டிவிகிதம் குறைந்துகொண்டே செல்லும். நிலத்திற்குத் தரப்படும் குத்தகையும் குறைந்துகொண்டே போகும். ஏனெனில், குத்தகை என்பது, ரிக்கார்டோ கூறியதுபோல் நிலத்தின் அழிக்கமுடியாத, இயற்கை வளத்தினைப் பயன்படுத்துவதற்

காகச் செலுத்தப்படும் தொகை அல்ல. முன்னரே, நிலத்தில் செய்யப்பட்ட மனிதனின் பணிக்காகச் செலுத்தப்படும் தொகை தான் குத்தகை. நீர்ப்பாசன வசதி செய்தல், வடிகால் அமைத் தல், வேலி போடுதல் போன்ற பணிகளெல்லாம் முன்னரே செய்யப்பட்டவை. இப் பணிகளையெல்லாம் செய்யும் செலவு குறைந்தால் நிலத்தின் மதிப்பும் குறைந்துவிடும். பொருள்களை உற்பத்தி செய்யும் பணி எளிதாக அமையும்போது உழைப்பாளி களுக்குக் கொடுக்கப்படும் கூலி உயர்ந்துகொண்டே செல்லும். இவ்வாருக, முதலாளிகள் பெறும் வட்டி குறைந்துகொண்டும், தொழிலாளிகள் அடையும் கூலி அதிகரித்துக்கொண்டும் சென்ருல் முதலாளி தொழிலாளி என்ற பாகுபாடும் மங்கிக்கொண்டே செல்லும். தொழிலாளியே முதலாளியாக உயர்வதற்குள்ள வாய்ப்பும் கிட்டும்.

மேற்கூறிய பாஸ்டியட்டின் முடிவுகளை நாம் ஏற்றுக்கொள்வதா யின், சமுதாயத்திலுள்ள பல்வேறு இனத்தவரும் பிணக்கமின்றி, ஒருவருக்கொருவர் பகைமையுணர்ச்சியின்றிப் பணிசெய்து எல்லா ருமே நற்பயனை அடைவர் என்று கொள்ளவேண்டும். இதனையே பாஸ்டியட்டின் விளக்கமும் வலியுறுத்துகிறது. மனிதனுக்குச் சொத்துரிமையும் சுதந்திரமும் வழங்கப்பட்டால் சமுதாயம் ஒன்று பட்டு மேம்பாடு அடையும் என்பதில் பெருநம்பிக்கை கொண்டவர் பாஸ்டியட். அவ்வுரிமைகள் இரண்டும் இருந்தால்தான் பொருளா தாரம் என்னும் பூங்காவில் ஒவ்வொருவனும், அழகுள்ளதொரு செடியாகவோ மரமாகவோ வளர்ந்து பூங்காவையே கண்கொள்ளா வண்ணம் அழகுபடுத்துவான் என்பது அவரது எண்ணம். அவ்வா ருயின், மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் எவ்விதத்திலும் தலையிடக்கூடாதென்ற கொள்கை வலியுறுத்தப்படு கிறது. அரசாங்கம் தலையிடாமலிருந்தால்தான் சமுதாயம் ஒன்று பட்டு ஒருவருக்கொருவர் பணி செய்து மகிழ்ந்திருக்க முடியும். இக் கொள்கை அடிப்படையில்தான் பாஸ்டியட் சோஷியலிசத்தையும், தொழில் பாதுகாப்புக் கொள்கையையும் இயல்பான பொருளாதார அமைப்பிற்குப் பெரும் எதிரிகளாகக் கருதினுர். அவ்வாருயின், அரசாங்கத்தின் கடமைகள்தான் என்ன? சமுதாயத்தில் அமைதி யையும் ஒழுங்கையும் நிலைபேண வேண்டும்; மக்களுக்குப் பாதுகாப் பளிப்பதோடு நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்த வேண்டும். குறிப்பிட்ட இப் பணிகளைத் தவிர வேறெந்த வேலையையும் அரசாங்கம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால், அது மனித னின் மனச்சான்றையும் திறமையையும் நசுக்கி அழித்துவிடும் எனவே, பாஸ்டியட்டின் தலையிடாக் கொள்கை, இயற்கைவாதிகள் வலியுறுத்திய கொள்கையைக் காட்டிலும் தீவிரமானதாகிறது.

உண்மையைக் கூறுமிடத்து, பிரான்ஸ்நாட்டில் பாஸ்ட்டியட் காலத்தில் வாழ்ந்த சோஷியலிஸ்டுகளின் கொள்கைகளை முறியடிக்கத்தான் தலையிடாக் கொள்கைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் அவர்.

முடிவுரை

பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் பாஸ்டியட் வகிக்கும் இடம் சிறப்பானதுமல்ல; அவரது பணி போற்றற்குரியதுமன்று. அவரது சிந்தனை ஆழ்மையானதென்றோ அறிவுக்கேற்றதென்றோ சொல்லமுடியாது. பத்திரிகையாளர்கள் அவ்வப்போதையப் பிரச்சினைகளை ஆராய்ந்து கூறுவதுபோலவே, பாஸ்டியட்டின் கருத்துகளும் கொள்கைகளும் உள்ளன. எனினும், பிரெஞ்சு சோஷியலிஸ்டுகளுக்கு எதிராக அவர் தொடுத்த வாதம் செல்வாக்குடையது. சோஷியலிசத்தை எதிர்த்த பிரெஞ்சு மக்களும் அறிஞர்களும் பாஸ்டியட்டைத் தங்கள் தலைவராகவும் வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டனர்.

மூன்றும் பிரிவு

தொன்மைப் பொருளாதார எதிர்ப்பு நூல்கள்

ஆடம் ஸ்மித், மால்தஸ், ரிக்கார்டோ ஆகிய மும்மணிகளுடன் தொன்மைப் பொருளாதாரம் ஒருவாறு முழுமைபெற்றது. இது வரை நாம் பார்த்த பொருளாதார அறிஞர்கள் யாவரும் ஏதோ ஒரு வகையில் தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்தன ரென்றாலும் அடிப்படையில் அவர்கள் அனைவரும் தொன்மைப் பொருளாதாரத்திற்கு ஆதரவு தந்தனர் என்றே கூறவேண்டும். தொன்மைப் பொருளாதார மரபினையொட்டியே அவர்கள் பல கருத்துகளையும் கொள்கைகளையும் விரிவுபடுத்தினர்.

மாறாக, தொன்மைப் பொருளாதாரத்திற்கு எதிராகப் பலர் தோன்றினர். அவர்கள் அனைவரையும் பாகுபடுத்துவது மிகக் கடினம். அவர்களின் கருத்துகளனைத்தையும் ஆய்வது அதை விடக் கடினம். எனவே, தொன்மைப் பொருளாதாரத்தின் அடிப் படைத் தத்துவங்களையும் கொள்கைகளையும் எதிர்த்த ஒருசிலரைப் பற்றி மட்டும் இப் பகுதியில் ஆராயலாம். தொன்மைப் பொருளா தார அறிஞர்கள் அனைவரும் அரசாங்கத்திற்கும் தனிநபருக்கு மிடையேயுள்ள உறவுபற்றிச் சில அனுமானங்களைக் கொண்டனர். முதலாவது, தன்னலமே மனிதனின் பொருளாதார நடவடிக்கை களுக்கெல்லாம் ஆணிவேர் என்பது அவர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. தன்னலம் பொதுநலத்தைப் பேணிக் காக்கிறது என்பது அவர்களின் வாதம். எனவே, தனிமனிதனுக்கு முழுச் சுதந்திரம் வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர். எனவே, அவர்களைச் சுதந்திரவாதிகள் என அழைப்பதும் உண்டு. சுதந்திரவாதத்தை ஆதாரமாகக் கொண்டு அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையை வலியுறுத்தினர். இச் சுதந்திரவாதத்திற்கும் அரசாங்கத் தலை யிடாக் கொள்கைக்கும் எதிராகப் பலர் தோன்றினர். அவர்களைச்

சுதந்திரவாத எதிரிகள் எனலாம். மக்களுக்கு அரசாங்கம் பாது காப்பளிக்க வேண்டுமென இவர்கள் வாதாடினர்.

அடுத்து, தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் அனைவரும் முதலாளித்துவ அமைப்பே சிறந்ததெனக் கூறினர். போட்டி மனப்பான்மையை வளர்ப்பதன் வாயிலாக முதலாளித்துவ அமைப் புத்தான் எல்லா இனத்தவருக்கும் நன்மை புரியுமென்றனர். ஆனால் 19 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தொழில் புரட்சியின் விளை வாகச் சமுதாயத்தில் வறுமையும் துயரும் தாண்டவமாடின. இதற்குக் காரணம் முதலாளித்துவ அமைப்புத்தான் என்று நம்பிய சிலர் அவ்வமைப்பைத் திருத்தியமைக்க முயன்றனர். இவர்களை சோஷியலிச வாதிகள் எனலாம். சோஷியலிச வாதிகளில் தீவிர மான, அறிவியல் வாதிகளைப்பற்றிப் பின்னர் ஆராய்வோம். இப் பகுதியில் சோஷியலிச வாதிகளுள் மிதமான திருத்தத்தை அல்லது மாற்றத்தை விரும்பியவர்கள் மட்டும் இடம் பெறுவர்.

மூன்றுவதாக, தொன்மைப் பொருளாதாரத்தின் பிறிதொரு சிறப்பு அம்சம் அனைத்து நாட்டு ஒருமைப்பாடு (Cosmopolitanism) ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டே தடையிலா வாணிபக் கொள்கையை வலியுறுத்தினர். தடையிலா வாணிபம் இருப்பதே எல்லா நாடுகளுக்கும் நன்மை என்றனர். இந்த மனப்பான்மையையும் கொள்கையையும் எதிர்த்தனர் 'தேசியவாத' அறிஞர்கள் (Nationalists). தடையிலா வாணிபத்திற்குப் பதிலாக ஒவ்வொரு நாட்டிற்குமேற்பத் தொழில் பாதுகாப்புக் கொள்கையை இவர்கள் வலியுறுத்தினர்.

நான்காவதாக, தன்னலம், முதல் திரட்டும் ஆர்வம், மக்கள் தொகை வளர்ச்சி ஆகியவையனைத்தும் இயற்கை விதிகளால் நடைபெறுகின்றன என்றனர் தொன்மைப் பொருளாதார அறிஞர் கள். இவ்வியற்கை விதிகளையெல்லாம் எதிர்த்தனர் நான்காவது பிரி வினர். இவ்வியற்கை விதிகளை ஆதாரமாகக்கொண்டு பகுத்தறிவு முறையில் பல முடிவுகளைக் கொண்டனர் தொன்மை நூலார். அவர்கள் நம்பிய இயற்கை விதிகளையும் கொண்ட முடிவுகளையும் எதிர்த்து, புள்ளிவிவரங்கள், வரலாற்று அனுபவங்கள் வாயிலாகப் பொருளாதாரம் ஆயப்பட வேண்டுமென்று வலியுறுத்தியவர்களை 'வரலாற்று வாத அறிஞர்கள்' (Historical School) என அழைப்பது மரபு. இவ்வாறு நான்கு வகையில் எழுந்த எதிர்ப்புகளை முறையாக இப் பகுதியில் ஆராய்வோம்.

13. சுதந்திரவாத மறுப்பினர்

(Individualistic Critics)

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் தனிமனிதனின் சுதந்திரத்தை ஆதாரமாகக் கொண்டே தம் கொள்கைகளை வகுத்தனர் என்பதை முன்னரே கண்டோம். சுதந்திரவாதத்தின் அடிப்படையிலேயே எல்லா நாடுகளுக்கும் பொதுவான சுதந்திர வாணிபக் கொள்கையை வலியுறுத்தினர். இக் கொள்கை நடைமுறையில் பின்பற்ற இயலாததென்பதைப் பலர் கண்டுணர்ந்தனர். அரசாங்கத்தின் தலையீடாக் கொள்கையால் சமுதாயம் பாதிக்கப்படுமென்பதையும் அறிந்தனர். எனவே, தனி மனிதனின் சுதந்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் தரக்கூடாதென வாதித்தனர். தலையீடாக் கொள்கைக்கு வரம்பு வேண்டுமெனக் கோரினர். அவ்வாறு கோரியவர்களில் லாடர்டேல் (Lauderdale), ஜான்ரே (John Rae) ஆகிய இருவரும் முக்கியமானவர்கள்.

தனிமனிதனுக்கும் அரசிற்கும் இருக்கவேண்டிய உறவு முறை பற்றி நெடுநாள்களாகவே கருத்து வேறுபாடுகள் இருந்து வந்திருக்கின்றன. வணிகவாதிகளும் ஆடம் ஸ்மித்தும் தனிமனிதனின் முழுச் சுதந்திரத்திற்காக முழு மூச்சுடன் வாதாடினார்கள். நாட்டின் பொருளாதார வளர்ச்சி தனி நபர்களின் முன்னேற்றத்தைப் பொறுத்ததென்றனர். தனிமனிதன் மேற்கொள்ளும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் நாட்டின் பொருளாதாரச் செயல்களுக்கும் எவ்வித வேறுபாடுமில்லை எனச் சுட்டிக் காட்டினர். எனவே, தனி மனிதனின் சுதந்திரமே நாட்டின் முன்னேற்றத்திற்கு நாட்டப்படும் அடிக்கல் என்ற முடிவுக்கு வந்தனர். இம் முடிவை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாதென வாதித்தவர்கள் தாம் சுதந்திரவாத எதிரிகளாகக்கருதப்படுகின்றனர்.

1. லாடர்டேல் (1759 –1830)

19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆடம் ஸ்மித்தின் அடிப்படையான பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து

வாதாடிய லாடர்டேல், ரே ஆகிய இருவருமே ஸ்மித்பிறந்த ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆடம் ஸ்மித் பகுத்தறிவின் திருவுருவாய் விளங்கியவர்; திறனும் பொதுக்கருத்தும் நிரம்பியவர். அவரைக் குற்றம் கூறும் இவர்களோ விசித்தரமான பிறவிகள்; தெளிவற்ற தனிப்போக்குடையவர்கள். கிறுக்குத் தனமாகவும் குதர்க்கமாகவும் பேசுவதில் வல்லவர்கள். இவ்விருவரில் லாடர்டேல் என்பவர் அக்காலத்தில் பேரறிஞராகத் திகழ்ந்தார். ஒரு பிரபுக்கள் சபையின் பத்திரிகையில் தம் எதிர்ப்புக் குரலை அடிக்கடி எழுப்பி வந்தார். பொருளாதார இலக்கியத்துக்கு இவர் ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கது. இவர் 1804-ல் நாட்டுச் செல்வத்தின் இயல்பு, வளர்ச்சி, அதை அதிகரிப்பதற்குரிய வழிவகைகள் பற்றிய விசாரணை' என்னும் நீண்ட தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டார். இந்நூல் 1808-ல் ஜெர்மனியிலும் பிரான்சிலும் மொழி பெயர்க்கப்பட்டது. இந் நூலின் தலைப்புத்தான் பெரியது. இதிலுள்ள கருத்துகளோ ஒரு சில தான். அவையும் சுருக்கமாகவே விளக்கப்பட்டுள்ளன. செல்வம், மூலதனம், மதிப்பீடு ஆகியவற்றைத் தன்னறிவுக்கேற்ப ஆய்கிறார் ஆசிரியர். இக் கருத்துகளை விடாப்பிடியாகவும் திறமையுடனும் எடுத்துரைக்கிறார் தம்மைப் பற்றிய விளம்பரம் ஒன்றில்' என் கருத்துகள் புதியவை மட்டுமல்ல; முன்னரேயுள்ள கருத்துகளுக்கு முற்றிலும் மாறானவையும்கூட' என்று கூறுகிறார். லாடர்டேல் கூறும் கருத்துகளின் முக்கியப் பகுதிகளை அவரது நூலின் தலைப்பே எடுத்துக்காட்டுகிறது. பொருளாதாரத்தை சமுதாயத்திலுள்ள அனைவரும் விவாதிப்பர். அறிஞரும் பாமரரும் மட்டுமன்றி, நல்லவர்களும் கெட்டவர்களும்கூட விவாதிப்பர். எனவே, பாமரரும் கெட்டவர்களும் கொண்டுள்ள தவறான எண்ணங்களும் கொள்கைகளும் பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்த கருத்துகளாகவே இருக்கும் என்கிறார் லாடர்டேல். ஆடம் ஸ்மித்தைப்பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் தீப்பொறி பறக்கின்ற சொற்களைக் கையாண்டு, கோபக்கனல் தெரிக்கக் கூறுகிறார். எடுத்ததெற்கெல்லாம் குற்றம் காண்கிறார். பொய்யான, தவறான கருத்துகளையும் கொள்கைகளையும் பரப்பியவராகவே ஆடம் ஸ்மித்தை எடைபோடுகிறார். சந்தையில் விற்கப்படும் பொம்மை என்று கூட ஆடம் ஸ்மித்தைக் குறிப்பிடுகிறார்.

தனியார் செல்வமும் பொதுச் செல்வமும்

தனியார் செல்வம் பெருகினால் நாட்டின் பொதுச் செல்வமும் வளரும் என்பது ஆடம் ஸ்மித்தின் கருத்து. இக் கருத்தை லாடர்டேல் வன்மையாகக் கண்டிக்கிறார். ஆடம் ஸ்மித் தனியார் செல்வத்தையும் பொதுச் செல்வத்தையும் குழப்பிவிட்டார் என்பது

லாடர்டேல் கூற்று. தனியார் செல்வம் வேறு; நாட்டின் பொதுச் செல்வம் என்பது வேறு என்பதை அடிப்படைத் தத்துவமாகக் கொள்கிறார் லாடர்டேல்.

நாட்டின் சொத்தைக் குறிப்பிட 'வளப்பம்' என்ற சொல்லையும் தனியார் சொத்தைக் குறிக்க 'செல்வம்' என்ற சொல்லையும் பயன் படுத்துகிறார் லாடர்டேல். மூலதனத்தைப் பற்றிய அதிகாரத்தில் ஸ்மித் பின்வருமாறு கூறுகிறார். 'தனிமனிதனின் வருமானத்தில் செலவுபோக எஞ்சிய வருமானம் அவனது சேமிப்பாகும். இச் சேமிப்பிலிருந்து தோன்றுவதுதான் மூலதனம். இவ்வாறு சேரும் தனி மனிதர்களின் மூலதனம் அனைத்தும் சேர்ந்தே சமுதாயத்தின் மூலதனமாகும்.'' ஸ்மித்தின் இக் கூற்று லாடர்டேலுக்கு வேப்பங் காயாக இருக்கிறது. தனிமனிதனின் மூலதனமும் சமுதாயத்தின் மூலதனமும் ஒன்றுக்கொன்று முரணானவை என்பது லாடர்டேலின் நம்பிக்கை. இம் முரண்பாட்டை விளக்குவதற்குப் பண்டங்களின் மதிப்பை நிருணயிக்கும் பொருளாதாரக் காட்டிற்கு நம்மை அழைக் கிறார் லாடர்டேல். பொருளாதார அறிஞர்களும் புகுந்து அவதிப் படும் அக் காட்டிற்குள் நாம் நுழைந்தால் வழி தப்பிவிடும். லாடர் டேலின் விளக்கப்படி, ஒரு பண்டத்திற்கு மதிப்பு இருக்க வேண்டு மானால் இரண்டு நிபந்தனைகள் நிறைவுபெற வேண்டும்.

முதலாவதாக, அப்பண்டம் பயனுள்ளதாகவும் மனிதன் விரும் பத்தக்கதாகவும் இருக்க வேண்டும். இரண்டாவதாக, அது கிடைப்பருமையுடையதாயும் இருத்தல் வேண்டும். ஒரு பண்டத் திற்குள்ள தேவை அப்படியேயிருக்க, அது கிடைப்பதற்கருமை யாக இருந்தால் அதன் மதிப்பு உயரும்; மாறாக, அப் பண்டம் மிகுதியாகக் கிடைத்தால் அதன் மதிப்பு குறையும். இந்த அடிப் படையில் தனியார் செல்வத்திற்கும் நாட்டின் பொதுச் செல்வத் திற்குமுள்ள வேறுபாட்டை உணர்த்த முற்படுகிறார். தனியார் செல்வத்துக்கும் பொதுச் செல்வத்திற்கும் அடிப்படைக் காரணம் சிக்கனம்தான் என்பது ஆடம் ஸ்மித்தின் கருத்து. இக் கருத்தே பொதுவாக நம்பப்பட்டு வந்தது. இக் கருத்தைத் தகர்த்தெறிய முற் படுகிறார் லாடர்டேல். பற்றாக் குறையாக உள்ள பொருள்களை அடைவதன் மூலம்தான் தனியார் சொத்தும் செல்வமும் பெருக முடியும். எனவே, பொருள்களின் கிடைப்பருமையில்தான் தனியார் அக்கறை காட்டுவர். அப்போதுதான் பொருள்களின் மதிப்பு உயர்ந்து தனியார் செல்வம் பெருகும். இப்போது இதே தத்துவத்தைப் பொதுச் செல்வத்திற்குப் பொருத்திப் பார்த்தால் அது விபரீதமாகத்தான் இருக்கும். நாட்டின் செல்வம் பெருக வேண்டுமென்பதற்காக, மக்களுக்குப் பயனுள்ள, அவசியமான

பொருள்களையெல்லாம் கிடைப்பதற்கு அருமையானவைகளாகச் செய்ய வேண்டுமென்று எவனாவது கூறினால், அவன் முட்டாளாகத் தானிருக்க வேண்டுமென வாதாடுகிறார் லாடர்டேல். சான்றாக, மக்களுக்குத் தேவையான தண்ணீர் ஒரு நாட்டில் ஏராளமாக இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந் நாட்டில் செல்வத்தைப் பெருக்குவதற்காக, அங்குள்ள தண்ணீரைப் பற்றாக்குறையாக்க வேண்டுமெனக் கூறுவது மடமையாகும். நீர்வளம் எந்த நாட்டிற்கும் இன்றியமையாதது. அந்த வளத்தைப் பற்றாக்குறையாக ஆக்கினால் நாட்டின் செல்வம் எவ்வாறு அதிகரிக்க முடியும். ஆனால் தனி மனிதனுக்குப் பற்றாக்குறையாக உள்ளதுதானே சொத்து. எனவே, தனிமனிதனின் செல்வத்திற்கும் நாட்டின் செல்வத்திற்கும் வேறு பாடு உண்டு என வாதாடுகிறார் லாடர்டேல். 'பற்றாக்குறை' என்னும் அடிப்படையில் இவ் வேறுபாடு தெளிவாகிறது.

அடுத்து, மிகுதியாகக் கிடைக்கும் அடிப்படையிலும் இவ் வேறுபாட்டைத் துடிப்புடன் புலப்படுத்துகிறார் லாடர்டேல். ஏராள மாகக் கிடைக்கும் தண்ணீரைப்போல் உணவுப் பொருள்களும் நாட்டில் மிகுதியாகக் கிடைக்கிறதெனக் கொள்வோம். நாட்டின் செல்வம் அதிகரிக்க வேண்டுமாயின் இவ்வித மிகுதியான நிலை ஏற் படாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டுமென எவனாவது கூறி னால் அவனது முட்டாள் தனத்தை என்னவென்று கூறுவது? எனினும், காற்றையும் நீரையும்போல் ஒரு பொருள் மிகுதியாகக் கிடைத்தால் அதற்கு மதிப்பேது? எனவே, எப் பொருளும் மிகுதி யாகக் கிடைத்தால் தனியார் செல்வம் குறைந்துவிடும்; ஆனால் பொதுச்செல்வம் குறைவதில்லை. எனவே, பொதுச் செல்வத்திற்கும் தனியார் வளத்திற்கும் அடிப்படையான வேறுபாடுண்டு. எந்தப் பொருளும் வேண்டிய அளவுக்குக் குறைவாகத்தானிருக்க வேண்டு மெனத் தனிமனிதன்விரும்புவான். அப்போதுதான் அப் பொருளின் விலை உயர்ந்து அவனுக்கு இலாபம் அதிகரிக்கும். ஆனால் பொதுச் செல்வம் அப்படியல்ல.

அடுத்து, லாடர்டேல் செல்வம் வளர்வதற்குரிய காரணங்களை ஆராய்கிறார். இவ்வாய்வின்போது ஸ்மித்தின் பயனிலா உழைப்பு, வேலைப்பாகுபாடு, மூலதனத்தின் பணி ஆகியவற்றைக் கண்டபடி குறை கூறுகிறார். செல்வத்தை உற்பத்தி செய்யும் காரணிகளை அதிகமாகப் பயன் படுத்துவதன் வழியாகத்தான் மேலும் செல்வத்தை அதிகரிக்க முடியுமென முடிவுகட்டுகிறார். அவ் வாறன்றி பணத்தை மிச்சம் பண்ணும் வழிவகைகளை மேற் கொண்டு செல்வத்தை அதிகரிக்க முடியாதென்று கூறி ஸ்மித்தின் கொள்கைகளை உதறித்தள்ளுகிறார். லாடர்டேலின் கொள்கைப்படி அதிகம் செலவிடுவதன் வழியாகத்தான் நாட்டின் பொதுச்செல்வம் பெருக முடியும். இதுதான் சிறந்த வழி.

மூலதனம்

ஆடம் ஸ்மித் மூலதனத்தைத் தனியொரு உற்பத்திக் காரணியாகக் கருதவில்லை. இக் காரணிக்கு முக்கியத்துவமும் அளிக்கவில்லை. எனவே இங்கும் ஸ்மித்தின் விளக்கத்திற்கு வசைமாரி பொழிகிருர் லாடர்டேல். உற்பத்தியைப் பெருக்கும் சக்தி மூலதனத்திற்கு உண்டு என்பதை இரு வகையில் காண்பிக்கின்றுர். மூலதனத்தைப் பயன் படுத்துவதால் தொழிலாளிகளின் எண்ணிக்கை குறைகிறது. எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக முதற்பொருள் கருவிகளைப் பயன் படுத்துகிறேமே அவ்வளவுக்கவ்வளவு தொழிலாளிகளின் எண்ணிக்கை குறைகிறது. எனவே தொழிலாளிகளுக்குப் பதிலாக மூலதனத்தைப் பயன் படுத்துவது சாத்தியமாகிறது. அடுத்து, மனிதனுல் செய்ய முடியாத வேலையை இயந்திரங்களால் செய்ய முடிகிறது. எனவே, இவ்விரு வகையில் மூலதனம் உற்பத்திக்கு உதவுவதால் இலாபம் மூலதனத்தை அளிப்பவர்களுக்கு ஈடாகிறது என்கிருர். இவ்வாறு மூலதனத்தின் பணியைப்பற்றி லாடர்டேல்விளக்கியது பொருளாதாரச் சிந்தனை வரலாற்றுக்கு, குறிப்பாக மூலதனம் பற்றிய பிற்கால விளக்கத்திற்குப் பெரிதும் உதவியது எனலாம்.

மூலதனம் உற்பத்தியில் இருவிதத்தில் பங்குகொள்கிறதெனின், தொழிலின் அளவும் வேலையாள்களின் எண்ணிக்கையும் மூலதனத்தின் அளவால் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனவே, வேலையாள்களுக்குப் பதிலாக எந்த அளவிற்கு மூலதனத்தைப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குத்தான் பயன்படுத்த முடியும். அதற்குமேல் மூலதனம் இருந்தால், அதனுல் பயன் ஒன்றுமில்லை எனவே, வேண்டிய அளவுக்குமேல் சேமித்து மூலதனத்தைச் சேர்ப்பது மதியீனம் எனக் கூறி ஸ்மித்தின் சேமிப்புக் கொள்கைக்கு கண்டனம் தெரிவிக்கிருர்.

பண்டங்களின் மதிப்பீடு

பண்டங்களின் விலைவாசிகள் தேவை அதிகரிப்பதாலோ அல்லது குறைவதாலோ, அளிப்பு அதிகரிப்பதாலோ குறைவதாலோ மாறுபடுகின்றன என்பதை முன்னரே கண்டோம். இவ்வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டு தேவை நெகிழ்ச்சித் தத்துவத்தை விளக்குகிருர் லாடர்டேல். உற்பத்தி அளவையும் தேவை அளவையும் ஆதாரமாகக்கொண்டு விலை நிருணயமாகிறதென்று லாடர்டேல் கூறும்போது, பண்டங்களின் பயன்பாட்டையும் உற்பத்திச் செலவையும் அவர் தம் கருத்தில் கொண்டார் என நினைக்கத் தோன்றுகிறது. எந்தப் பண்டமும் விலையுள்ளதாக மதிக்கப்பட வேண்டுமானுல்; அது கிடைப்பருமையுடையதா

மனிதனுக்குப் பயனுள்ளதாய் இருக்கவேண்டும்; அதோடு, இன்பம் தருவதாயும் அமையவேண்டும். தண்ணீர் மனிதனுக்குப் பயனும் இன்பமும் தருகிறது. எனினும், அதனை எவரும் விலை கொடுத்து வாங்குவதில்லை. ஏனெனில் அது ஏராளமாய்க் கிடைக்கிறது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் தண்ணீருக்குப் பஞ்சம் வந்து விட்டால் அதுவும் விலை மதிப்புடையதாகிவிடும். அப்போது, ஏனைய பொருள்களைப் போன்றே தண்ணீரின் விலையும் நிருணய மாகும்.

விலை நிருணயத்தைப்பற்றி விளக்கும் தருவாயில் ஆடம் ஸ்மித்தின் விலை நிருணயக் கொள்கையைத் தாக்கிப் பேசுகிறார் லாடர்டேல். உழைப்பின் அளவைக் கொண்டு பண்டத்தின் விலையை அளவிடவேண்டும் என்றார் ஸ்மித். ஆனால் உழைப்பினை அளவிடுவது கடினம். இடத்திற்கும் காலத்திற்குமேற்ப உழைப் பின் மதிப்பு மாறுபடும் என்பதை ஸ்மித்தே ஒப்புக்கொண்டார். எனவே, ஸ்மித்தின் விளக்கத்தைக் கொண்டே அவரது விலை நிருணயக் கொள்கையைத் தாக்குகிறார் லாடர்டேல்.

அடுத்து, நுகர்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய மேதையாகவும் லாடர்டேல் விளங்குகிறார். பண்டங்களின் மதிப்பு அதனை விரும்புவோர் எதிர்பார்க்கும் பயனைப் பொருத்ததென்கிறார். மக்களின் பற்றுதல் மாறினால் பண்டங்களின் விலையும் மாறும் என்கிறார். ஒரு பண்டத்தின் விலை மாறினால், அதன் விளைவாகப் பிற சில பண்டங்களின் விலைகளும் மாறலாம் என்பதை எடுத்துக் காட்டுகிறார். ஒரு பண்டத்தின் அளிப்போ அல்லது தேவையோ மாறினால், அது எவ்வாறு நுகர்ச்சியை வெவ்வேறு விதத்தில் பாதிக்கும் என்பதை இறைச்சி, மதுபானம், கடுகு ஆகிய மூன்று பண்டங்களைக் கொண்டு விளக்குகிறார். இவ் விளக்கம் தேவை நெகிழ்ச்சியின் பல்வேறு தன்மைகளைப் புலப்படுத்துகிறது.

நுகர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்த லாடர்டேல் தேவையை ஊக்குவிக்க வேண்டுமென்கிறார். தேவை விரிவடைந் தால்தான் தொழில் வளரும். வருங் காலத்தில் ஏற்படவிருக்கும் மாறுதல்கள் குறித்து அவர் கூறியது நினைவில் கொள்ளத்தக்கது.'' எங்கு பார்த்தாலும் செல்வத்தில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. நாட்டின் பொதுச் செல்வம் அதிகரிப்பதற்கு இந்த ஏற்றத்தாழ்வே முட்டுக்கட்டையாகவும் உள்ளது. எனவே, செல்வத்தைச் சரிவரப் பங்கிட்டால், மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து வளமான வாழ்வு மலரும். அதன் விளைவாக உள் நாட்டி லேயே பொருள்களுக்குள்ள தேவை அதிகரித்துக்கொண்டே

இருக்கும்.'' இக் கூற்றை நாம் எண்ணிப்பார்க்கும்போது லாடர் டேலின் கருத்தும் நம்பிக்கையும் எவ்வளவு தூரம் தற்காலத்திற் கேற்றவை என்பது புலனாகும்.

2. ஜான் ரே (1786—1873)

ஆடம்ஸ்மித்தின் பொருளாதாரத்தை வன்மையாகக் கண்டித்த வர்களில் ஜான்ரேயும் ஒருவர். ஜான்ரே ஸ்காட்லாந்தில் தோன்றியவர். முதலில் கனடாவிற்கும், பின்னர் அமெரிக்காவிற்கும் சென்று குடியேறினர். ஜான்ரேக்கும் லாடர்டேலுக்கும் பல கருத்து ஒற்றுமைகள் இருந்தன. எனினும், இவருடைய நூலில் காரசாரமான எழுத்துகள் இல்லை. இவர் வரைந்த ''அரசியல் பொருளாதாரத்தின் புதிய தத்துவங்கள்'' என்னும் நூல் 1834-ல் வெளிவந்தது. இந் நூலில், ஆடம்ஸ்மித்தின் இரண்டு அடிப்படையான அனுமானங்களை ரே தாக்குகிறர். அவற்றுள் ஒன்று தனி நபர்களின் செல்வத்தை அதிகரிப்பதன் வழியாக நாட்டின் பொதுச் செல்வத்தை அதிகரிக்க முடியும் என்பது. பிறிதொன்று மனிதனின் தன்னலம் பொது நலத்தைப் பேணுகிறதென்பது இவ்விரண்டு அனுமானங்களின் மீதே ஸ்மித் தன் பொருளாதாரக் கருத்துகளையும் கொள்கைகளையும் விளக்குகிறர். தனியார் செல்வம் பெருகுவது, ஓரளவிற்குத்தான் பொதுச் சொத்தை அதிகரிக்கும்; அந்த அளவிற்கு மேல் அதிகரிக்க இயலாதென்பதை ரே விளக்குகிறர். இவ் விளக்கத்தை ஸ்மித்தின் நூலிலேயே காணலாம் என்கிறர். நீண்ட நாள் பயன்தரக்கூடியவை என்பதற்காக சட்டி பானைகளையெல்லாம் அளவுக்கு மீறி உற்பத்தி செய்து அடுக்கி வைப்பதால் பயன் ஏது என்று ஸ்மித்தே கூறியுள்ளார் இதனையே ஆதாரமாகக் கொண்டு நாட்டு மூலதனத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்குமுள்ள தொடர்பை விளக்குகிறர் ரே. நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால்தான் மூலதனம் அதிகரிக்க முடியும். பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானல் அந் நாட்டில் புதிய கண்டுபிடிப்புகள் தோன்ற வேண்டும்; முன்னேற்றம் ஏற்படவேண்டும்.

இவ்வம்சத்தைத்தான் ரே மிக முக்கியமானதாகக் கருதுகிறர் அவர் விளக்கும் அம்சத்தின் சாரம் வருமாறு: பொதுச் செல்வம் அதிகரித்தால்தான் தனி நபர்களின் செல்வம் அதிகரிக்க முடியும். அவ்வாறன்றி, தனிப்பட்டவர்களின் செல்வம் அதிகரிப்பதால் பொதுச் செல்வம் அதிகரிக்க இயலாது. ஒருவன் செல்வந்தனகும் போது மற்றொருவன் ஏழையாகிவிடுகிறன். ஒருவன் பண்ணைக்கு மேல் பண்ணையாக வாங்கிச் சேர்த்துக்கொண்டேபோனல் அவனது

சொத்துதான் அதிகரிக்கின்றதேயன்றி நாட்டின் சொத்து சிறிது கூட அதிகரிப்பதில்லை. இதையே வேறுவிதமாகக் கூறுவதாயின், முன்னரேயுள்ள செல்வத்தின் பெரும் பகுதியை ஒருவன் அடைவதன் வழியாகத்தான் அவன் செல்வந்தனாகிறான். ஆனால், நாட்டின் செல்வமோ இல்லாதவொன்றை உருவாக்குவதன் வழியாகத்தான் அதிகரிக்க முடியும். எனவே, தனி நபர் செல்வத்திற்கும் நாட்டின் பொதுச் செல்வத்திற்கும் அடிப்படையான வேறுபாடு உண்டென்கிறார் ரே. இவ் வேறுபாட்டின் அடிப்படையில் நாட்டின் பொதுச் செல்வத்தை எவ்வாறு அதிகரிப்பது ? இதற்கு ரே காணும் ஒரே வழி, புத்தாக்கமும் புதிய கண்டுபிடிப்புகளும் தான். எனவே, புதிய கண்டுபிடிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறார். புதிய கண்டுபிடிப்பின் வழியாகத்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும்; நாட்டின் செல்வத்தையும் அதிகரிக்கமுடியும்.

அடுத்து, வேலைப் பாகுபாட்டைப் பற்றி ஆடம்ஸ்மித்கொண்டிருந்த கருத்தையும் முறியடிக்க முயல்கிறார் ரே. வேலைப் பகுப்பின் விளைவாகத்தான் புதிய கண்டுபிடிப்புகள் தோன்றுகின்றன என்பது ஸ்மித்தின் கருத்து. ஆனால், இக் கருத்து உண்மைக்குப் புறம்பானதென்றும், உண்மை நிலையைத் தலை கீழாகத் தருகிறதென்றும் ரே கூறுகிறார். ரேயின் கூற்றுப்படி, புதிய கண்டுபிடிப்புகளின் வழியாகத்தான் வேலைப் பகுப்பு சாத்தியமாகிறது. புதிய கண்டுபிடிப்புகளின் வழியாகத்தான் உற்பத்திக் கருவிகள் பல்கிப் பெருகுகின்றன. கருவிகள் பெருகினால்தான்—பல்வகைத் தொழில்கள் ஏற்பட்டால்தான் வேலைப்பகுப்பைப் புகுத்த முடியும். எனவே, வேலைப் பகுப்பின் வழியாகத்தான் புதிய கண்டுபிடிப்புக்கள் தோன்றுகின்றன என்பது தவறு. செய்யும் வேலையைத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் செய்வதுதான் வேலைப் பகுப்பு. அவ்வாறு ஒரே வேலையைச் செய்து கொண்டிருந்தால் மனிதனுக்கு உற்சாகம் இருக்காது; சலிப்புதான் ஏற்படும். உற்சாகமின்றி சலிப்புடைய எவன்தான் புதிய கண்டுபிடிப்புகளைத் தோற்றுவிக்க முடியும்? இவ்வாறாக, ரே செய்திகளை நன்கறிந்து முக்கியமானவற்றை வலியுறுத்தியுள்ளது பாராட்டத்தக்கது. ஸ்மித்தின் கருத்துப்படி முன்னேற்றத்திற்குக் காரணம் தொழில் பகுப்புதான். ஆனால் ரேயின் விளக்கப்படி முன்னேற்றம் தான் தொழில் பகுப்பிற்குக் காரணமாகிறது.

இதுவரை தனி நபரின் செல்வத்திற்கும் நாட்டின் பொதுச் செல்வத்திற்குமுள்ள வேற்றுமையைக் கண்டோம். இருப்பதை அடைவதன் வழியாகத்தான் தனியார் செல்வம் பெருகும்; ஆனால், இல்லாததை உருவாக்குவதன் மூலமே பொதுச் செல்வம் அதிகரிக்க முடியும். இவ்வேறுபாட்டிலிருந்து பிறிதொரு உண்மையை

விளக்குகிறார் ரே. தனியார் நலன் தேசிய நலனைப் பேணுவது இல்லை. இவ்விரு நலன்களுக்கும் எவ்வித ஒற்றுமையும் இல்லை. தனியார் நலன் அதிகரித்தால் தேசிய நலனும் அதிகரிக்கும் என்பதை 'புலனாகாக் கரத்தின்' வாயிலாக ஸ்மித் விளக்கினார். இவ் விளக்கத்திற்கு மறுப்பாக ரே கூறுவது குறிப்பிடத்தக்கது. சூதாடியின் முயற்சியால் அவனுக்குத்தான் பலன் கிடைக்கிறது. அது தேசிய நலனை எவ்வாறு பேண முடியும்? இதே போல் திருடனின் செய்கையில் நாட்டிற்கு என்ன பயன்? எனவே, தனி நபரின் நலன் அவனை அறியாமலே பொது நலனுக்கு இழுத்துச் செல்கிறது என்பது தவறு.

அவ்வாறாயின், அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? பெரிய சமுதாயத்தில் ஒவ்வொருவனும் தன்னை அறியாமலேயே பொதுநலனில் அக்கறை கொள்கிறான் என்பது பெருந்தவறு. பொது நலனில் அரசாங்கம் மட்டுமே அக்கறை காட்ட முடியும். எனவே, அரசாங்கத்தின் தலையீடு இன்றியமையாதது. ஆனால் தனியார் நடவடிக்கைகளில் தலையிடும் போது அரசாங்கம் விவேகமாக நடந்துகொள்ள வேண்டும். அரசாங்கம் தலையிடுவது மனித இயல்பிற்கு மாறானதெனச் சிலர் கூறலாம். தனி மனிதனின் முயற்சி இயல்பாகவே எந்த முடிவிற்குச் சமுதாயத்தை அழைத்துச் செல்லுமோ அந்த முடிவைத்தலையீடு தடுக்கிறதெனக் குறை கூறலாம். எனவே, அரசாங்கத் தலையீட்டால் தீமைதான் விளையும் என்று அவர்கள் கூறுவர். ஆனால், ரே இம் மறுப்புகளையெல்லாம் பொருட்படுத்தவில்லை. உண்மையில், அரசாங்கம் தலையிட்டால்தான் பொது நலன் காக்கப்படமுடியும் என்பதில் உறுதியான நம்பிக்கைக் கொண்டவர் ரே. இயற்கைச் சக்திகளால் சமுதாயம் உருவானது உண்மையானால், அதே இயற்கைச் சக்திகளைக் கொண்டுதான் அரசாங்கம் தோன்றியதெனலாம். சமுதாயத்திலிருந்து அரசாங்கத்தை அகற்றுவது இயலாது. எனவே, அரசாங்கத் தலையீடு இயல்பானது. ஆனால், அறிவை வளர்த்து, புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கத்தான் அரசாங்கம் தலையிடவேண்டும். இதற்கு அரசாங்கமே தொழிலை வைத்து நடத்தலாம் என்கிறார் ரே.

ரேயின் எண்ணங்களும் ஆடம்ஸ்மித்தின் கருத்துகளும் ஒன்றோடொன்று முரண்பட்டவை என்பதை இதுவரை பார்த்

தோம். ரேயின் கருத்துகள், அவருக்குப் பின் அமெரிக்காவில் தோன்றிய கேரியின் கருத்துகளோடும் ஜெர்மனியில் பிறந்த லிஸ்டின் (List) எண்ணங்களோடும் ஒத்திருக்கின்றன. அமெரிக்கச் சூழ் நிலையில் வளர்ந்த காரணத்தால் ரேயின் கருத்துகள் கேரியின் கருத்துகளோடு இணைந்திருந்தன. எனவே, கேரிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார் ரே. செல்வத்தை அதிகரிப்பதற்குப் புதிய தொழில்கள் தோன்றவேண்டுமென வலியுறுத்தினர் ரே. லிஸ்டும், தனது தொழில் பாதுகாப்புக் கொள்கையில் இதையே வலியுறுத்துகிறார். எனவே, லிஸ்டுக்கும் ரே முன்னோடியாக விளங்கினர் எனலாம்.

14. சிஸ்மாண்டி (1773—1842)

(Sismondi)

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் அடிப்படைத்தத்து வத்தை எதிர்த்த பழைமை அறிஞர்களில் சிஸ்மாண்டி மிக முக்கிய மானவர். அவர் ஒரு வரலாற்று நிபுணர்; பொருளாதார எழுத் தாளர்; சமுதாய நியதியின் அடிப்படையில் தொன்மைப் பொரு ளாதாரத்தைக் கண்டனம் செய்த அறிஞர்; பொருளாதார நட வடிக்கைகளில் அரசாங்கம் தலையிட வேண்டுமென வற்புறுத் தியவர். சட்டத்தின் வாயிலாகப் பல சீர்திருத்தங்களை விரும் பியவர். எனவே, அவரை மாபெரும் சீர்திருத்தவாதி என்று சிலர் அழைப்பர். ஆனால் அவர் சோஷியலிசவாதியாக மாறிவிடவில்லை. எனவே, சுதந்திரவாதத்திற்கு எதிராக வாதாடியவர்களில் ஒரு வராகவே சிஸ்மாண்டி விளங்குகிறார். எனினும், பொருளாதார அறிஞர்களின் வரிசையில் அவர் வகிக்கும் இடத்தைக் காண்பது மிகக்கடினம். அவர் பல கொள்கையினரோடு தொடர்புகொண் டிருந்தபோதிலும் குறிப்பிட்ட எக் கொள்கையையும் வலியுறுத்த வில்லை. எனவே பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் அவர் கொண்டுள்ள பங்கு விசித்திரமானதாகும்.

வாழ்க்கைக்குறிப்பும் சூழ்நிலையும்

சிஸ்மாண்டி 1773-ல் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவா என் னும் நகரில் பிறந்தார். தன் வாழ்நாளில் பெரும் பகுதியை இத் தாலியில் கழித்தார். அவர் ஒரு புகழ்மிக்க வியாபாரியாக வர வேண்டுமென்பது அவரது தந்தையின் விருப்பம். ஆனால் சிஸ்மாண்டியோ இலக்கியத்தில் இன்பம் கண்டார். அரசாங்க அதிகாரியாகச் சில காலம் பணியாற்றினார். ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். அதன் விளைவாக வரலாற்று நூல்களிலும் பொருளாதார ஏடுகளிலும் அவருக்கு ஆசை பிறந்தது. இவ்விரண்டிலும் பல நூல்கள் எழுதினார். அவர்

வரைந்த முதல் நூல் 'வணிகச் செல்வம்' (The commercial Wealth) என்னும் தலைப்பில் 1803-ல் வெளிவந்தது. இந் நூலில் அவர் ஆடம் ஸ்மித்தின் 'தலையிடாக்கொள்கையையும்' 'சுதந்திர வாணிபத்தையும்' ஆதரித்துப் பேசினார். தான் ஆடம் ஸ்மித்தின் சீடர்களில் ஒருவன் என்று கூறிப் பெருமைப்பட்டார். எவ்விதப் புதுமையுமின்றி, ஆடம் ஸ்மித்தின் கருத்துகளையும் கொள்கைகளையும் அப்படியே விளக்கினார். ஸ்மித்தின் கொள்கைகளைப் பிரான்ஸ் நாட்டில் பரப்புவதே தனது நோக்கம் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்தார். தன்னலம் கண்டால் பொதுநலம் காணலாம் என்பதே இவரது கொள்கையாக இருந்தது. பொருளாதாரப் பணிகளில் அரசாங்கம் தலையிடுவதால் எவ்விதப் பயனுமில்லை என்றார். மக்கள் அனைவரும் தத்தம் நலனைப் பேணி வளர்த்தால், அவர்கள் நாட்டு நலனையும் பேணுவர்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார். பிரிட்டிஷ் வியாபாரிகளை நோக்கி, 'என்ன உதவி வேண்டும்' என அரசாங்கம் கேட்டபோது, 'உதவி ஒன்றும் வேண்டாம்; தொல்லை கொடுக்காமல் இருந்தால் போதும்' என்று அவர்கள் கூறியதைப் பெருமையுடன் குறிப்பிட்டார் சிஸ்மாண்டி.

தன் முதல் நூலை எழுதிய பின்னர் பதினாறு ஆண்டுகள் வரலாறு எழுதுவதில் ஈடுபட்டிருந்தார் சிஸ்மாண்டி. அந்தப் பதினாறு ஆண்டுகளில் பொருளாதார உலகம் பெரிதும் மாறுபட்டு விட்டது. தொழில் புரட்சியின் விளைவாக இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் தொழிற்சாலை முறை வளர்ந்தது. அம்முறையால் ஏற்பட்ட பல கேடுகளைக் கண்டு கண்கலங்கினார் சிஸ்மாண்டி. வணிக வாதக் கட்டுப்பாடுகளெல்லாம் மறைந்து சுதந்திரவாதம் பட்டொளி வீசியது. தொழிலதிபர்கள் தங்கள் விருப்பப்படிப் பாட்டாளிகளை வேலை வாங்கினர். குறைந்த சம்பளத்திற்குப் பெண்களையும் சிறுவர்களையும் வேலை வாங்கினர். வேலை நேரத்திற்கோ வரம்பே இல்லை. இதனால் பாட்டாளிகளின் வறுமை அதிகரித்தது; சொல்லொணாத் துயர்பட்டனர்; வாழ்க்கைத் தரம் சீர் குலைந்தது. இயந்திரங்கள் மேலும் மேலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. இதனால் பல தொழிலாளர்கள் வேலையிழந்தனர். புரட்சியிலும் கலகத்திலும் ஈடுபட்டனர். தங்களுக்கு வேலையில்லாமல் செய்த இயந்திரங்களை நொறுக்கிவிடவும் துணிந்தனர். உழைப்பாளர் வறுமையில் உழலவேண்டிய அதே சமயம் தொழிலதிபர்கள் உற்பத்தியைப் பெருக்கினர். உற்பத்தி செய்த பொருள்கள் விற்பனையாகாமல் அங்காடியில் தேங்கிக்கிடந்தன. இதனால் பொருளாதார நிலை சீர்கெட்டது. இச் சீர்கேடும் பாட்டாளிகள் படுந்துயரும் சிஸ்மாண்டியின் கவனத்தைக் கவர்ந்தன. முதலாளித்துவ முறை

நன்கு வளர்ந்திருந்த இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் தான் பொருளாதாரச் சீர்கேடும் பாட்டாளிகளின் துயரும் அதிகமாயிருப்பதை உணர்ந்தார் சிஸ்மாண்டி. எனவே, முதலாளித்துவ அமைப்பு முதிர்ச்சி அடையக் காரணமாயிருந்த 'தலையிடாக் கொள்கையை' மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந் நிலையில் 1818ஆம் ஆண்டில் 'புதிய அரசியல் பொருளாதாரக் கொள்கைகள்' (The New Principles of Political Economy) என்னும் நூலை வெளியிட்டார். இந் நூலில் ஆடம் ஸ்மித்திடம் இவர் கொண்டிருந்த பற்றுதல் அவ்வளவாகத் தெரியவில்லை. தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் அடிப்படைத் தத்துவங்களிலிருந்து வெகு தூரம் விலகிச் சென்றுவிடுகிறுர். பொருளாதார இயலுக்கு ஒரு புதிய விளக்கத்தைத் தருகிறுர். பொருளாதாரச் சீர்கேட்டிற்கும் பாட்டாளிகளின் பெருந்துயருக்கும் என்ன காரணங்கள் என்பதை ஆராய்கிறுர். தனது புதிய பொருளாதாரக் கருத்துகளுக்கு ஆதரவாக பிரிட்டனிலும் இதர ஐரோப்பிய நாடுகளிலும் இருந்த பாட்டாளிகளின் பரிதாப நிலைகளை அணு அணுவாக ஆராய்ந்து அவற்றை 'அரசியல் பொருளாதார ஆராய்ச்சிகள்' என்னும் தலைப்பில் இரு பெரும் நூல்களாக 1837—1838-ல் வெளியிட்டார்.

மேற்கூறிய பொருளாதார நூல்களைத் தவிர, சிஸ்மாண்டி வரைந்த வரலாற்று நூல்களும் புகழ்பெற்றவை. அவற்றுள் முக்கியமானவை இரண்டு. ஒன்று 'இத்தாலிய குடியரசுகளின் வரலாறு' என்பது. இந்நூல் பதினறு பாகங்களைக் கொண்டது. அடுத்து 'பிரெஞ்சு மக்களின் வரலாறு' என்பது. இது இருபத்தொன்பது பாகங்களைக் கொண்டது. சிஸ்மாண்டி உண்மையில் ஒரு மாபெரும் வரலாற்றறிஞர். பொருளாதாரத்தில் அவருக்கு நாட்டம் ஏற்பட்டதற்குக் காரணம் அக்காலத்திய சூழ்நிலைகள் தான். எனினும் அவரது பொருளாதாரக் கருத்துகளை சிஸ்மாண்டி வெளிப்படுத்தியிருக்காவிட்டால் அரசியல் பொருளாதாரமே வேறுபட்டிருக்கும். எனவே, சிஸ்மாண்டியின் பொருளாதாரக் கருத்துகளை விரிவாக ஆராய்வது அவசியம்.

பொருளாதாரக் கருத்துகள் அரசியல் பொருளாதாரத்தின் குறிக்கோளும் வரம்பும்

சிஸ்மாண்டி தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்துகளிலிருந்து பெரிதும் விலகிவிட்டார் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். தொன்மைப் பொருளாதாரத்தின் குறிக்கோள், ஆய்வு முறை ஆகியவற்றிலிருந்து மட்டுமன்றி, முடிவுகளிலிருந்தும் மாறுபட்ட கருத்துகளுக்கு வந்துவிட்டார்.

முதலாவதாக, பொருளாதாரத்தின் குறிக்கோளை எடுத்துக் கொள்வோம். அரசியல் பொருளாதாரம் செல்வத்தைப்பற்றிய அறிவியல் என்பது தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்து. செல்வம் என்பதை மனிதனோடு தொடர்புகொண்டதாக மாற்றுகிறார். வெறும் செல்வத்தைப்பற்றிய அறிவியலாகமட்டும் பொருளாதாரம் இருக்கக்கூடாது. மனிதனைப்பற்றியதாகவும் அமையவேண்டும். மனிதனுக்காகத்தான் செல்வமேயன்றி, செல்வத்துக்காக மனிதன் அல்ல' என்பதை சிஸ்மாண்டி வலி யுறுத்துகிறார். வறியவர்கள் அதிகமாகவுள்ள எந்த நாடும் வளமிக்க நாடாக இருக்க முடியாது. மக்களின் நலனை அதிகரிப்பதற்குத்தான் செல்வம் இருக்கிறது. எனவே, மனிதனை மறந்துவிட்டு செல்வத்திற்கு மட்டும் முக்கியத்துவம் தருவது தொன்மைப் பொருளாதாரத்தின் முதல் கோணல் என்கிறார். எனவேதான், தனது நூலில் செல்வ உற்பத்திக்கு மட்டுமன்றி, அதன் பகிர்வுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறார். தொன்மைப் பொருளாதார அறிஞர்களோ செல்வ உற்பத்திக்கே முதலிடம் தந்தனர். இதனைக் குறை கூறுகின்றார் சிஸ்மாண்டி. தனது பகிர்வுப் பகுதியில் காலையிலிருந்து மாலைவரை துன்பப்பட்டு உழைக்கும் ஏழைப் பாட்டாளி மக்களுக்கென பல பக்கங்களை ஒதுக்குகிறார். மக்கள் தொகையில் பெரும்பாலரானோர் பாட்டாளி மக்கள்தாம். எனவே, தனியார் சொத்துரிமை, ஆலை உற்பத்தி, இயந்திரங்களைப் பயன்படுத்தல், போட்டியிட்டு உற்பத்தி செய்தல் ஆகிய அனைத்தும் பாட்டாளி மக்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விவரிக்கிறார் நாட்டின் செல்வம் மக்களிடையே கூடுமானவரை சமமாகப் பகிரப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார். வலுவுள்ளவர்கள் வறியவர்கள்மீது கருணைகாட்ட வேண்டும்; செல்வர்கள் ஏழைகளுக்கு இரங்க வேண்டும் என்கிறார். பொருளாதாரத்திற்குப் புதியதொரு பொருளைத் தருகிறார். 'அரசியல் பொருளாதாரம் என்பது உண்மையில் அறக்கொள்கையைப் பற்றியதாகும் மக்களின் இன்பத்தை அதிகரிக்க உதவாத எந்தக்கொள்கையும் இவ்வியலில் இடம்பெறத் தகுந்ததல்ல' என்று கூறுகிறார் சிஸ்மாண்டி.

இவ்வாறாக, பொருளாதாரத்தின் குறிக்கோள், கண்ணோட்டம் ஆகியவற்றை மாற்றி அமைக்க முயல்கிறார் சிஸ்மாண்டி. தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் விளக்கப்படி, பொருளாதாரம் செல்வ உற்பத்தியையும் பகிர்வையும் பற்றிய அறிவியலாகும். ஆனால் சிஸ்மாண்டி அவர்களோ மக்களின் உள்ளத்திற்கும் உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் தருகிறார். சிஸ்மாண்டியின் விளக்கப்படி பொருளாதாரம் மக்களின் நலனையும் இன்பத்தையும் பற்றிய சமூக அறிவியலாகிறது. சமூக நலனைப் பற்றிய

அறிவியலாகவே பொருளாதாரத்தை வருணிக்கிறார். இவ் வருணனை ஆல்பிரட் மார்ஷலையும் அவரது மாணவரான பிஃகுவையும் நமக்கு நினைவுபடுத்துகிறது. மார்ஷல் சமூக நலனையும் பிஃகு பொருளாதார நலனையும் குறிக்கோளாகக் கொண்டே பொருளாதார இயலை ஆய்ந்தனர். மேலும், சிஸ்மாண்டி பொருளாதார இயலில் நுகர்வுப் பகுதிக்கு முக்கியத்துவம் தந்தார். தொன்மைப் பொருளாதார அறிஞர்களோ செல்வ உற்பத்திப் பகுதிக்குத்தான் முக்கியத்துவம் தந்தனர்.

பொருளாதார ஆய்வுமுறை

வாலாற்றின் உதவியால் அன்றாட நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டுதான் பொருளாதாரத்தை ஆயவேண்டுமென விரும்கிறார் சிஸ்மாண்டி. இவ்வாய்வு முறையை ஓரளவு ஆடம் ஸ்மித்தும் மால்தசும் பின்பற்றியவர்கள். ஆனால் ரிக்கார்டோ பின்பற்றிய கருத்தியல் ஆய்வு முறையைக் கண்டித்தார் சிஸ்மாண்டி. சிஸ் மாண்டியின் கருத்துப்படி வரலாற்றையும் அனுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டுதான் பொருளாதார இயலை அணுக வேண்டும். இன்றேல் முதல் கோணலே முற்றும் கோணல் போல் ஆகிவிடும். வரலாற்று அடிபடையில் பொருளாதார ஆய்வு இருக்க வேண்டுமெனக் கூறும் சிஸ்மாண்டி, அவருக்குப்பின் ஜெர்மனியில் தோன்றிய வரலாற்று வாத அறிஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார் எனலாம். வரலாற்று அறிஞராகவும் பத்திரிகை எழுத்தாளராகவும் விளங்கியவர் சிஸ்மாண்டி. எனவே, பொருளாதாரத் துறையில் முன்னேற விரும்பும் நாடு அதன் சமூக, அரசியல் அமைப்புகளில் அவசியமான சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று கூறியதில் வியப்பில்லை. பொருளாதார ஆய்வு முறையில் பகுத்தறிவு முறை சிறந்ததா அல்லது தொகுத்தறிவு முறை உகந்ததா என்ற வாதத்தைத் தொடங்கி வைத்தவரே சிஸ் மாண்டிதான். தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பகுத்தறிவு முறையே சிறந்ததெனக் கருதினர். ஆனால் சிஸ்மாண்டியோ தொகுத்தறிவு முறைக்கே ஆதரவுதந்தார். இரண்டு முறைகளையுமே பின்பற்ற வேண்டு மென்பதுதான் இன்றைய அறிஞர்களின் முடிவு.

தொன்மைப் பொருளாதாரக் கருத்துகளில் சிஸ்மாண்டி கண்ட குறைகள்

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பொருள் உற்பத்தியைப்பற்றியும், போட்டியிட்டு உற்பத்தி செய்யும் முறையைப் பற்றியும், இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்வதைப்

பற்றியும் சில திடமான கருத்துகளைக் கொண்டிருந்தனர். இக் கருத்துகளையெல்லாம் கண்டனம் செய்கிறார் சிஸ்மாண்டி. பொருளாதார ஆய்வு முறையிலேயே தவறு செய்தவர்கள் தொன்மைப் பொளாதார அறிஞர்கள், எனவே, அவர்கள் தவறான கருத்துகளைக் கொண்டதிலும் ஒவ்வாத முடிவுகளை எடுத்ததிலும் வியப் பொன்றுமில்லை. உற்பத்தியாளர்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டு உற்பத்தி செய்யவேண்டுமென்றும் அப்போதுதான் உற்பத்தி அளவு பெருகுமென்றும் அவர்கள் போதித்தனர். அதோடு பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுவது மதியீனம் என்றும் முடிவு கட்டினர். இக் கருத்துகளையும் கொள்கைகளையும் ஒவ்வொன்றாகத் தாக்குகிறார் சிஸ்மாண்டி.

முதலாவதாக பொருள் உற்பத்தியை எடுத்துக் கொள்வோம். தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பொதுவாக உற்பத்திப் பெருக்கத்திற்கு ஆதரவு தந்தனர். உற்பத்தியானது சந்தைச் சக்திகளுக்கேற்ப அதிகரிக்கிறது அல்லது குறைகிறது. சந்தையில் தேவைப்படும் அளவைவிட அதிகமாக உற்பத்தியாகி விட்டால் பொருளின் விலை குறைகிறது. இதனால் பாதிக்கப்படும் உற்பத்தியாளர்கள் தம் உற்பத்தியைக் குறைத்துக் கொள்வர். மாறாக, தேவையை விட உற்பத்தி அளவு குறைந்து விட்டால் பொருளின் விலை ஏறும். அப்போது அதிகமாக உற்பத்தி செய்து இலாபம் பெற எண்ணுவர் உற்பத்தியாளர். எனவே சந்தையின் சக்திகளுக்கேற்பத் தானாகவே உற்பத்தி அமைந்து விடுகிறதென வாதித்தனர். தொன்மை நூலார் இவ் வாதத்தை அப்படியே எதிர்க்கிறார் சிஸ்மாண்டி. கட்டுப்பாடின்றி உற்பத்தியாளர்கள் போட்டியிட்டு உற்பத்தி செய்வதால் கெடுதல்தான் விளையும் என்கிறார். இத்தகைய போட்டியினால் பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்து விட்டால் அவை விலை போவதெங்கே? தேவைக்கும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருளை யார் வாங்குவார்கள்? எனவே, வேலைப் பகுப்பைக் கொண்டு அதிகமாக உற்பத்தி செய்து விட்டால் எவ்விதப் பயனும் இராது. பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வது எளிது. ஆனால் உற்பத்தியைச் சுருக்குவது கடினம். உற்பத்தியாகும் நிறுவனத்தின் அளவைக் குறைக்க முடியுமா? உற்பத்தியைக் குறைக்க வேண்டுமென்பதற்காகத் தொழிலாளிகளில் பலர் வேலைக்குப் போகாமல் நின்றுவிட முடியுமா? அவ்வாறாயின், அவர்கள் தம் வயிற்றை நிரப்புவதெப்படி? எனவே, குறைந்த சம்பளத்திற்காகவாவது அவர்கள் வேலை செய்யத் தயாராயிருப்பார்களே தவிர, வேலையை விட்டுவிட மாட்டார்கள். அதே போன்றுதான் உற்பத்தியாளரின் நிலையும். தங்கள் முதலையெல்லாம் தொழிலில் முடக்கியுள்ள தொழி

லதிபர்கள் தொழிலை மூடிவிட முடியுமா? அப்படியானால் வேறெதற்கும் பயன் படுத்த முடியாத இயந்திரங்களையும் தளவாடங்களையும் என்ன செய்வது? எனவே, உற்பத்தியாளர்களும் தொழிலில் நீடித்திருக்க வேண்டுமென்றேதான் விரும்புவர். இதன் விளைவாகத் தேவைக்கேற்ப உற்பத்தி அமையாமல் மாறுபட்டுத் தானிருக்கும். அப்படியே தேவைக்கேற்ப உற்பத்தி அளவைக் கட்டுப்படுத்த விரும்பினால் அது உடனடியாக முடியாது. வெகு நாள்கள் ஆகலாம். அதற்குள் எவ்வளவோ துன்பங்களும் கேடுகளும் விளைந்து விடும் என்கிறார் சிஸ்மாண்டி. சிஸ்மாண்டி கூறுவது அவரது காலத்தில் உண்மையாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால், இன்று உற்பத்தி பெருகிவிடாமல் தடுப்பதற்காகப் பல கார்ட்டெல்களும் (Cartes) டிரஸ்டுகளும் (Trusts) முயற்சி செய்வதை நாம் காண்கின்றோம்.

இயந்திரங்கள்

இயந்திரங்களை அதிகமாகப் பயன்படுத்துவதாலேயே உற்பத்தி அதிகமாகிறது. இதனை நன்குணர்ந்த சிஸ்மாண்டி அளவுக்கு மீறி இயந்திரங்களைப் பயன்படுத்துவதைக் கண்டிக்கிறார். அவ்வாறு இயந்திரங்களின்மீது அவருக்குள்ள வெறுப்பைக் கொண்டு அவரை இகழ்ந்தனர் சிலர். அவர் பொருளாதார அறிஞரல்லர் என்றனர் வேறு சிலர்.

இயந்திரங்களின் பயன்பாட்டைப் பொறுத்தவரை, தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருந்தனர். இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் தொழிலாளிகளில் சிலர் வேலையின்மை நிலையை அடைவர் என்பது உண்மைதான். ஆனால் பொருள்களை மலிவாக உற்பத்தி செய்யவும் விற்கவும் முடியும். அப்போது மக்களின் பணம் மிச்சமாகும். அம்மிச்சப் பணத்தைக் கொண்டு வேறுபல புதிய பொருள்களை வாங்க இயலும். அவ்வாறாயின் அப்புதிய பொருள்களுக்குத் தேவை அதிகரிக்கும். அவற்றை உற்பத்தி செய்ய மேலும் பல தொழிலாளிகள் தேவைப்படுவதால் வேலையிழந்து தவிக்கும் தொழிலாளிகள் மீண்டும் வேலையில் அமர்வர். இவ்வாதப் பொறுத்தமுடைய ஆய்வைக்கொண்டு தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் இயந்திர உற்பத்திமுறைக்குத் தம் ஆதரவைத் தந்தனர். புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கமளித்தனர். ஆனால், சிஸ்மாண்டி அவர்களோ இயந்திரங்களைப் பயன்படுத்துவதும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதும் நடைமுறையில் தீமைகளையே விளைவிக்கும் என்கிறார். மனிதன் தன் புத்திசாலித்தனத்தை இழப்பதற்கு மட்டுமன்றித் தன் உடல்நிலை கெடு

வதற்கும் இயந்திரங்களே காரணம் என்கிருர். பால்மணம் மாருப் பச்சிளங்குழந்தைகள்கூட வாழ்க்கை இன்பத்தை அடைவதற்கு முன்னரே தொழிலில் ஈடுபட்டுவிடுகின்றனர். புதிய கண்டுபிடிப்புகளாலும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதாலும் வேலைக்கமர்த்தப்படும் தொழிலாளரின் எண்ணிக்கை குறைந்துவிடுகிறது. தொழில் துறையில் முன்னேறிய நாடுகள் தம் உற்பத்திப் பொருள்களைப் பிற நாடுகளில் விற்கவேண்டியுள்ளன. இதனுல் பிறநாடுகள் தொழில் வளம்பெற முடிவதில்லை. இங்கிலாந்தின் தொழில் ஆதிக்கத்தால் ஐரோப்பிய நாடுகளனைத்தும் அவதிப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிருர். 'ஆனந்தம் ஆங்கிலேயனுக்கு; அவதி ஐரோப்பியர்களுக்கு என்கிருர்.' எனவே, புதிய கண்டுபிடிப்புகளால் மனித இனத்திற்கே சாபக்கேடுதான், இதனுல் பயனடைவோர் சிலர்; பாழடைவோர் பலர் என்கிருர். பழங்கால உற்பத்தி முறையைப் போற்றி அக் காலத்தைப் பொற்காலம் என்பதில் பெருமைப்படுகிருர் சிஸ்மாண்டி. இயந்திர உற்பத்தியால் மனிதனுக்கு ஓய்வு கிடைப்பதில்லை; அவனும் ஓர் இயந்திரம்போல் மாறிவிடுகிருன் என்கிருர்.

சுதந்திரப் போட்டி

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் தடையிலாப் போட்டிக்கு உன்னத நிலையை அளித்தனர். தடையிலாப் போட்டியால் பெரும்பாலும் நன்மைகளே விளையுமென்றனர். ஆனுல் சிஸ்மாண்டியோ, பொருள்கள் தேவைப்படுமளவிற்குப் போட்டியிட்டு உற்பத்தி செய்வது நல்லதுதான்; தேவை அளவிற்குமேல் உற்பத்தி செய்தால் உற்பத்தியாளர்கள்தாம் பாதிக்கப்படுவர். தனிமனிதன் தானுகவே உற்பத்தி செய்தால் எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும்; எவ்வளவோடு நிறுத்திக்கொள்ள வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும். ஆனுல் மற்றவர்களோடு போட்டியிட்டு உற்பத்தி செய்யும்போது, உற்பத்தி அளவு தேவையைவிட எஞ்சிவிடுகிறது. அதிக உற்பத்தி நல்லதுதான் என்று பல அறிஞர்கள் மட்டுமன்றி, அரசாங்கம்கூட நினைக்கிறது. மேலும் உற்பத்தியைப் பெருக்க முடியுமா என்பதிலேயே அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறதேயொழிய, உற்பத்தியாகும் பொருள்களுக்குத் தேவை இருக்கிறதா என்பதைச் சிறிதும் சிந்திப்பதில்லை. இவ்வுண்மையை சிஸ்மாண்டி நன்கறிந்திருந்தார். அவரது காலத்தில் அதிகமாக உற்பத்தி செய்து விற்பனை செய்யமுடியாத நிலையில் பல உற்பத்தியாளர்கள் அவதிப்பட்டனர். இதற்கான சான்றுகள் பலவற்றைத் தருகிருர் சிஸ்மாண்டி. இதனுல் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேட்டை நேரில் கண்டவர். எனவே, போட்டியிட்டு

உற்பத்தி செய்வதால் துயரும் அவதியும்தான் மிச்சமாகும் என்ற முடிவுக்கு வருகிறார்.

பொருளாதாரச் சீர்கேடு

வேண்டிய அளவுக்குமேல் பொருள்கள் உற்பத்தியானால் தொழிலாளர்களுக்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுமென் மென்பதை சிஸ்மாண்டி விளக்குகிறார். இதனால் தொழில் வள மிக்க சமுதாயம் முதலாளிகள் பாட்டாளிகளென இரு கூறுகப் பிரி கிறது. உழைத்து உழைத்து உருக்குலைந்துபோகும் பாட்டாளி மக்கள் ஒருபுறம்; உண்டு களித்துக் கொழுத்துப்போகும் முதலாளி கள் மறுபுறம் இவ்விரு இனத்தவருக்குமிடையே மனக் கசப்பு, பூசல்கள் தோன்றிவிடும். இதனால் சமுதாயத்திற்கே ஆபத்து ஏற்படலாமென எச்சரிக்கை தருகிறார் சிஸ்மாண்டி. இவ்வாருகப் பொருளாதார நிலை சீர்குலைவதற்கும் சமுதாயம் பிளவுபடுவதற்கும் காரணம் என்ன ? மித மிஞ்சிய உற்பத்திதான் என்கிறார் சிஸ் மாண்டி. உற்பத்தியான பொருள்களை வாங்குவதற்கு ஏழைப் பாட்டாளிகளிடம் பணமேது ? அவர்கள் பெறும் ஊதியமோ வயிற்றை நிரப்பக்கூடப் போதுமானதாக இல்லையே ! அவ்வாரு யின் உற்பத்தியாளர்கள் ஏன் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள் ? இக் கேள்விக்கு விடையளிக்கும் வகையில் மூன்று காரணங்களைக் காண்கிறார் சிஸ்மாண்டி. (1) அங்காடி மிக விரிவாக இருக்கும் போது தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு எவ்வளவு தேவை இருக்கிறது, தேவை எப்படி இருக்கும் என்பதை உற்பத்தி யாளர் சரியாக ஊகிக்க முடிவதில்லை. (2) தங்கள் பொருள் களுக்கு இவ்வளவுதான் தேவை இருக்கிறது என்பதை உற்பத்தி யாளர்கள் ஊகிக்க முடிந்தாலும், அந்த அளவிற்கு மட்டும் உற்பத்தி செய்வதில்லை. மாருக, தொழிலில் எவ்வளவு முதலீடு செய்துள்ளனரோ அதனை அடிப்படையாகக் கொண்டே உற் பத்தி செய்கின்றனர். அதிக முதலீடு செய்துள்ள பெரிய உற்பத்தியாளர்கள் மற்றவர்களோடு போட்டியிட்டு அதிகமாக உற்பத்தி செய்கின்றனர். உற்பத்தி செய்த பொருள்களையெல்லாம் எப்படியும் விற்றுவிடலாமெனத் தப்புக் கணக்குப் போடுகின்றனர். (3) நாட்டின் செல்வம் சமமாகப் பங்கிடப்படாததால் தொழிலாளி கள் அனைவரும் வறுமையில் உழல்கின்றனர். போதிய வருமான மில்லாத காரணத்தால் உற்பத்தியாகும் பொருள்களனைத்தையும் வாங்க இயலாதவராயுள்ளனர். சமுதாயத்தில் பெரும்பான்மை யோர் தொழிலாளிகள்தாம்.

பொருளாதாரச் சீர் கேட்டால் என்ன விளைவு ஏற்படுகிறதென் பதையும் சிஸ்மாண்டி ஆராய்கிறார். பெரும்பான்மையான தொழி

ளர்களுக்குத் தேவைப்படும் அவசியமான பொருள்களை உற்பத்தி செய்ய முடிவதில்லை. காரணம், அப் பொருள்களை வாங்குவதற்கு வேண்டிய பணம் அவர்களிடமில்லாததுதான். மாறாக, செல்வந்தர் களுக்கு வருமானம் அதிகரித்துக் கொண்டே இருப்பதால் அவசிய மில்லாத போகப் பொருள்களுக்குத்தான் தேவை விரிவடைகிறது. எனவே, போகப் பொருள்கள்தாம் அதிகமாக உற்பத்திச் செய்யப் படுகின்றன. இதனால், அவசியப் பொருள்களை உற்பத்திசெய்யும் தொழில்கள் நலிவடைந்து விடுகின்றன. போகப் பொருள்கள்களை உண்டுபண்ணும் தொழில்களோ வலுத்து விடுகின்றன. இதனால் ஏழைப்பாட்டாளிகளின் துயரம் மேலும் அதிகரித்துவிடுகிறது. மாறாக, உற்பத்தியாளர்களோ தங்களுக்குள் போட்டிப் போட்டு உற்பத்தி செய்வதால், போட்டியில் வெல்ல முடியாத ஆலை அதிபர்கள் தங்கள் தொழிலை திறமைபெற்ற அதிபர்களுக்கு விற்றுவிட நேரிடுகிறது. இதனால் சமுதாயத்தின் செல்வம் மேலும் மேலும் ஒரு சிலரிடமே குவிந்துவிடுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் சிஸ்மாண்டி. சிஸ்மாண்டியின் இக் கருத்தை அவருக்குப் பின் தோன்றிய கார்ல்மார்க்ஸ் அறிவியல் ரீதியில் விளக்க முற்பட்டார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சிஸ்மாண்டியின் பொருளாதாரச் சீர் கேட்டு விளக்கம் முழுமையானதல்ல என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். தேவைக்குமேல் உற்பத்தியானால்தான் பொருளாதாரச் சீர்கேடு தோன்றும் என்பதை அவர் வலியுறுத்துகிறார். ஆனால் போதுமான அளவு உற்பத்தி செய்யப்படாமல் மிகக் குறைவாக உற்பத்தி நடந் தாலும் அச் சீர்கேடு தோன்றுகிறது என்பதை நாம் அறிவோம். ஆனால் தொன்மைப் பொருளாதாரக் கொள்கையை ஒழித்துக் கட்டும் நோக்கத்தோடுதான் சிஸ்மாண்டி அதிக உற்பத்தி நடப்பதால் ஏற்படும் அபாயத்தைச் சுட்டிக் காட்டினார் என்று ஒரு சிலர் கருதுவர். போட்டியிட்டு உற்பத்திசெய்வதால் எந்தவித ஆபத்துமில்லை என்பது தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்து. இக் கருத்தைப் பொய்ப்பிக்கத்தான் மிகப் பெருமளவு உற்பத்தி செய்தால் ஏற்படும் பொருளாதாரச் சீர்கேட்டை சிஸ்மாண்டி ஆராய்ந்தார் என்பது இவர்களின் கருத்து. பொதுவாக தேவைக்கேற்ப உற்பத்தி அளவைக் கட்டுப்படுத்துவதுகடினம். இச் சிரமத்தினால்தான் பொருளாதாரச் சீர்கேடு ஏற்படுகிறதேயன்றி வருமான ஏற்றத்தாழ்வால் அல்ல என்பதுதான் நவீனக் கருத்து. இக் கருத்தைக் காலம் சென்ற கெயின்ஸ் பிரபுவும் ஸ்வீடன் நாட்டுப் பொருளாதார அறிஞர்களும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

சிஸ்மாண்டியின் சீர்திருத்தத் திட்டங்கள்

தனி மனிதனின் நலத்தின் வழியாகத்தான் பொது நலம் பேணப்படுகிறதென்பதும், எனவே அரசாங்கத் தலையிடாக் கொள்கையே சிறந்ததென்பதும் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் முடிவு. இம் முடிவை சிஸ்மாண்டி ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். அரசாங்கம் தலையிடாமலிருந்தால் தொழிலாளிகளின் நிலை பரிதாபத்திற்குரியதாகிவிடும். வலியவரிடமிருந்து எளியவரைக் காப்பதும், ஆதரவற்றவர்களைப் பாதுகாப்பதும், மனிதனின் தன்னலத்திற்குப் பதிலாகச் சமுதாயத்தின் பொது நலனுக்கு உறுதுணையாக இருப்பதும் அரசாங்கத்தின் கடமைகள் என்கிறார். அரசாங்கத்தின் தலையீடு அவசியமென்பதை நமது அனுபவமே கற்றுத்தருகிறது. 'நடப்பது நடக்கட்டும்' என்று விட்டுவிட்டால் எளியார் என்றுமே துன்பப்படுவர். அநீதி தாண்டவமாடும். பாட்டாளி மக்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். தொழிற்சங்கங்களை ஏற்படுத்தத் தொழிலாளிகளுக்கு உரிமை தர வேண்டும். வேலை நேரத்திற்கு ஓர் உச்சவரம்பை ஏற்படுத்த வேண்டும். தொழிலாளிக்குரிய பாதுகாப்பு முறைகளை முதலாளிகளே மேற்கொள்ளும்படி செய்ய வேண்டும். வேலையில்லாக் காலத்திலும், நோய்வாய்ப்பட்ட காலத்திலும் தொழிலாளிகளுக்குப் பண உதவி செய்ய வேண்டும் தொழில் ஆபத்தால் உடல் உறுப்புகளை இழப்போருக்கும் வேலையிலிருந்து ஓய்வு பெற்றோருக்கும் முதலாளிகளே ஈட்டுப்படி கொடுக்க வேண்டும். இதற்கான செலவையெல்லாம் முதலாளிகள்தாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமேயன்றி அரசாங்கம் அல்ல.

அடுத்து, தன்னலம் கருதும் முதலாளிகள் தொழிலை இயந்திரமயமாக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர். அரசாங்கம் இதையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டும். இயந்திரமயமாகும் தொழில் வேகத்தைக்கண்டு அஞ்சிய சிஸ்மாண்டி, தன் நண்பர்களிடம் கூறினார்: 'பொருளாதாரம் என்னும் தேர் நிலை தவறி அதி வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இது நம்மைப் படுகுழியில்தான் தள்ளிவிடும்.' எனவே, பொருள் உற்பத்தியைக் கூடுமான வரையில் தனி நபர்களே இயந்திரங்களின் உதவியின்றிச் செய்யவேண்டுமென வலியுறுத்தினார். பாட்டாளிமக்கள் படுந்துயரை நீக்க நினைத்த சிஸ்மாண்டி சோஷியலிசப் பாதையைப் பின்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, உழைப்பாளிகளையும் முதலாளிகளையும் ஒற்றுமைப்படுத்தும் திட்டத்தையே மேற்கொண்டார்.

புதிய கண்டுபிடிப்பின் பெருங்கேட்டிலிருந்து சமுதாயத்தையும் பாட்டாளிகளையும் பாதுகாக்க, புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு

அளிக்கப்படும் உரிமையை அரசாங்கம் பறித்துக்கொள்ள வேண்டுமென்கிறார். புதிய கண்டுபிடிப்புகள் அனைத்தையும் எல்லோருக்கும் அறிவித்து விட்டால் புதிதாய்க் கண்டுபிடிக்க வேண்டுமென்ற உற்சாகமோ எண்ணமோ இராது. சிஸ்மாண்டியின் இத் திட்டம் மிகப் பிற்போக்கானதாகத் தோன்றலாம். உண்மையில் அவர் பழங்காலக் குடிசைத் தொழில் அமைப்பையே சிறந்ததெனக் கொண்டாடியவர். அவ்வமைப்பில்தான் முதலாளி தொழிலாளி என்ற பாகுபாடின்றி, தொழிலாளிகளே பெரும்பாலும் முதலாளிகளாகவும் இருந்தனர். சிஸ்மாண்டியின் சீர்திருத்தங்களுக்கெல்லாம் காரணம் உண்டு; பாட்டாளி வர்க்கத்தினர் முதலாளிகளால் சுரண்டப்படுவதைத் தடுக்க முயன்றார்; தொழிலாளிகளின் துயரங்களைத் துடைக்கவே திட்டம் தீட்டினார். ஆனால் தனிமனிதனின் சுதந்திரத்தை அவர் கண்டிக்கவில்லை. தனிமனிதனின் சுதந்திரத்திற்கு ஒரு வரம்பை ஏற்படுத்த முயன்றார்.

சிஸ்மாண்டியின் சீர்திருத்தத் திட்டங்களனைத்தும் நடைமுறையில் செயல்படுத்தப்பட முடியாதவை. இவ்வுண்மையை அவரே உணர்ந்தார். பாட்டாளிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரே வழி சோஷியலிசமே என்பதை அவரது அறிவு காட்டியது. ஆனால் தனிமனிதனின் சுதந்திரத்தில் அவர் கொண்டிருந்த பற்றுதலின் விளைவாக அவரது நெஞ்சம் அதனை ஏற்க மறுத்தது. எனவே இப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண முடியாதென்பதை அவரே ஒப்புக்கொண்டார். இன்றைய சமுதாயத்தைக் காட்டிலும் சிறந்த சமுதாயத்தை எந்த மனிதனாலும் உருவாக்க முடியாதெனக் கூறுகிறார் சிஸ்மாண்டி.

மக்கள் தொகை

பாட்டாளிகளின் இன்னல்களுக்கும் துயரங்களுக்கும் அடிப்படையான காரணம், அவர்களின் இனப் பெருக்கம்தான் என்கிறார் சிஸ்மாண்டி. மக்கள் தொகைக் கொள்கையை பொருளாதார உலகிற்கு அளித்தவர் மால்தஸ். ஆனால் மால்தஸின் கொள்கைக்கு மாறான கொள்கையை விளக்குகிறார் சிஸ்மாண்டி. உணவு உற்பத்திதான் மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஓர் வரம்பை ஏற்படுத்துகிறது என்பது மால்தஸின் நம்பிக்கை. ஆனால் சிஸ்மாண்டியோ மக்கள் தொகை வளர்ச்சியை உற்பத்தியாகும் உணவு அளவு கட்டுப்படுத்தவதில்லை; உணவை வாங்கும் பணச் சக்திதான் கட்டுப்படுத்துகிறதென்கிறார். மக்களுக்கு அதிக வருமானம் கிடைத்தால் மக்களினம் பெருகுகிறது; வருமானம் குறைந்தால் இன விருத்தி தடைபடுகிறது. மக்களுக்கு அதிக வருமானம் எப்போது கிடைக்கும்? அவர்களின் உழைப்புக்கு

அதிகத் தேவை இருந்தாலதான் கூலி உயர்ந்து வருமானம் அதிகமாகும். எனவே, உழைப்புக்குள்ள தேவையே மக்களின் இன விருத்தியை நிருணயிக்கிறது எனலாம். இக் கொள்கையை ஏற்கனவே ஆடம் ஸ்மித் அவர்கள் விளக்கியுள்ளார்கள். வேலைக்குள்ள தேவையைக் காட்டிலும் வேலை நிலையாக இருக்குமா என்பதே மக்களின் இனவிருத்தியைத் தீர்மானிக்கிறதென்கிறார் சிஸ்மாண்டி. தொழிலாளிகளுக்கெல்லாம் நிலையான வேலை நிச்சயமாகக் கிடைத்தால்தான் அவர்களது வருமானமும் நிச்சயமானதாயும் நிரந்தரமானதாயுமிருக்கும். அப்போதுதான் பாட்டாளி மக்கள் மணம் புரிந்து இன்பம் துய்த்து இனத்தைப் பெருக்குவர். ஆனல் வேலை நீடித்திருக்கும் என்ற நிலை மாறி, தொழிலாளிகள் செய்தவேலையை இயந்திரங்களே செய்யத் தொடங்கி விட்டால், அவர்களின் வருமானம் நிலையற்றதாகிவிடும். அப்போது திருமணம் செய்வதும் மக்கட்பேறு காண்பதும் மோசமான விளைவைத்தான் உண்டு பண்ணும். எனவே, அடிப்படையில் மக்களின் இனவிருத்தி முதலாளிகளின் தீர்மானத்தில்தான் இருக்கிறதென்கிருர். அவர்கள் தொழிலில் இயந்திரங்களைப் புகுத்தாவிட்டால் மக்களினன் பல்கும்; மாருக, விரைவாக இயந்திரங்களைப் புகுத்திஞல் இனப் பெருக்கம் தடைப்படும். மக்கள் தொகைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பாட்டாளி மக்கள் அனைவரும் ‘ஆஸ்திக்தொரு ஆணும் ஆசைக்கொரு பெண்ணும்’ பெற்று அதோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமென்கிருர். இச் செயல்முறை சாத்தியமானதா என்பதைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. இதைக்காட்டிலும் பயங்கரமான பரிகாரத்தையும் கூடத் தருகிருர். அதாவது, வறுமையில் வாடுவோர் திருமணம் செய்வதைத் தடைசெய்ய வேண்டுமென்கிருர். எனவே, பாட்டாளியின் திருமணம்கூட முதலாளியின் கையில் தான் இருக்கிறது என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது.

சிஸ்மாண்டின்யின் செல்வாக்கு

சிஸ்மாண்டியின் நூலினை சோஷியலிச வாதிகள் மட்டுமன்றி பிறரும் விரும்பிப் படித்தனர். பொருளாதார ஆய்வு முறையில் புதியதொரு முறையைப் புகுத்தியவர் சிஸ்மாண்டி. பொருளாதார இயல் என்பது மனிதனைப்பற்றிய அறிவியலென அடித்துப் பேசியவர். எனவே, பொருளாதாரத்தின் ஆய்வு முறையிலும் குறிக்கோளிலும் திருப்பத்தை ஏற்படுத்தியதன் வழியாக எல்லாப் பொருளாதார அறிஞர்களின் கவனத்தையும் கவர்ந்தார் எனலாம். எனினும் அவருடைய செல்வாக்கு சோஷியலிச வாதிகளின் கருத்துகளிலேயே ஓங்கி மிளிர்கிறது. தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கு எதிராகக் குரல் எழுப்பிய முதல் அறிஞர் அவர். சோஷியலிச வாதிகளுக்கு வழிகாட்டி.

ஏழைப்பாட்டாளி மக்கள் மீது இரக்கம் கொண்டு, அவர்கள் வறுமைக்குக் காரணமான இயந்திர உற்பத்தி முறைக்கும் உற்பத்தியாளரின் போட்டி நிலைக்கும் கண்டனம் தெரிவித்தவர். பாட்டாளிகளை முதலாளிகள் சுரண்டி வாழ்கின்றனர் என்று கூறியதன் மூலமாக கார்ல் மார்க்ஸின் சுரண்டல் கொள்கைக்கு வழி வகுத்துக் கொடுத்தவர். வருமான ஏற்றத் தாழ்வுகளைக் கண்டனம் செய்ததன் வழியாகப் பல்வேறு சோஷியலிச வாதத்திற் அடிக்கல் நாட்டியவர். சுருங்கக்கூறின், தான் ஒரு சோஷியலிச வாதியாக இல்லாவிடினும் சோஷியலிச வாதிகளின் சிந்தனையைத் தூண்டி விட்டவரே சிஸ்மாண்டிதான். லூயி பிளாங் என்னும் சோஷியலிச வாதி சிஸ்மாண்டியின் நூல்களை விரும்பிப் படித்தார். ஜெர்மானிய சோஷியலிச வாதிகளான ராட் மெர்ட்டஸ், மார்க்ஸ் இருவருமே சிஸ்மாண்டிக்குக் கடன்பட்டவர்கள் எனலாம். இன்றைய சோஷியலிச வாதிகளும் சிஸ்மாண்டி கூறிய வாதத்தைத்தான் கூறுகின்றனர்.

அடுத்து, வரலாற்றுப் பின்னணியில் தொகுத்தறிவு முறையைப் பின்பற்றி நாம் காணும் உண்மை நிகழ்ச்சிகளை ஆராய்ந்துதான் பொருளாதார இயலை ஆயவேண்டுமென வலியுறுத்தியதன் வாயிலாக வரலாற்று வாதக்குழுவினருக்கும் முன்னோடியாகத் திகழ்கிறார் சிஸ்மாண்டி. எனினும் அவரது மனநிலை நிலையற்றதாகவே காட்சி அளிக்கிறது. தம் எதிர்ப்புக்குரலைக்காட்டி முக்கியமான பொருளாதார அறிஞராய் உயர்ந்தவர் சிஸ்மாண்டி என்று சிலர் கருதுவர். இக் கருத்து ஒருதலைப் பட்சமானதாகும். இவர் ஓர் ஒழுக்கநல வாதியேயன்றி பொருளாதார அறிஞரல்லர் என்றும் சிலர் வாதாடுவர். இவ் வாதம் சிஸ்மாண்டியின் முக்கியத்துவத்தைக் குறைப்பதாகவே உள்ளது. சிஸ்மாண்டி அவர்கள் ஆத்திரத்தில் ஓரளவு தவறான வாதத்தைப் பயன் படுத்துகிறார் என்பது உண்மைதான்; எனினும், அவரால் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றிற்குப் பயனேதுமில்லை என்று கூற இயலாது.

15. சோஷியலிச வாதம் இளம் பருவம்

அரசியல் பொருளாதாரத்தைச் சமூகப் பொருளாதாரமாக மாற்றிப் பொருளாதார இயலை விரிவுபடுத்தினர் சிஸ்மாண்டி. நாட்டின் வருமானம் சமமாகப் பகிரப்படவேண்டுமெனக் கூறினர். ஆனல் தனியார் சொத்துரிமையை அவர் கண்டிக்க வில்லை. சொத்துரிமை அவசியமென்றும் சட்டப்பூர்வமான தென்றும் கருதினர் சிஸ்மாண்டி. இவ்வாறு சிஸ்மாண்டி கூறிய அதே சமயத்தில் புனிதமானதெனப் பிறரால் கருதப்பட்ட சொத் துரிமையை முழுமூச்சுடன் ஒருசிலர் தாக்கத்தொடங்கினர். சமுதாயத்தில் ஏழை பணக்காரன் என்ற பாகுபாட்டிற்குக் காரணமே சொத்துரிமைதான் என்று வாதித்தனர். சொத்துரிமை இருப்பதாலேயே பொருள்கள் சரியான முறையில் உற்பத்தி செய் யப்படுவதில்லை; உற்பத்தியான செல்வம் முறையாகப் பகிரப் படுவதுமில்லை. ஒருசிலர் உண்டுகளிக்கவும், பலர் பட்டினி கிடக்க வும் காரணம் சொத்துரிமைதான் என்றனர். பாட்டாளிகளைச் சுரண்டி, முதலாளிகள் ஆடம்பரமாக வாழ்வதற்கும் அதுதான் கார ணம். சொத்துரிமை இருப்பதால்தான் ஒருசிலர் சோம்பேறிகளாய் வாழ்ந்து வாழ்க்கை இன்பங்களையெல்லாம் அனுபவிக்க, சொத்தே இல்லாத பலர் உழைத்து உழைத்து உருக்குலைந்து வயிற்றைக் கூடச் சரியாகக் கழுவாமல் வறுமையில் உழல்கின்றனர் என வாதித்து இவர்கள் அனைவரும் தனியார் சொத்துரிமையைத் தாக்கினர். சமதருமத்தின் அடிப்படையில் சமுதாயத்தை உருவாக்க எண்ணினர். இவர்கள் அனைவரையும் சோஷியலிச வாதிகள் என்றே அழைக்கிருேம். ஆனல் சோஷியலிச வாதி களில் பல பிரிவினர் உண்டு. சொத்துரிமையை மாற்றி அமைப் பதன் வாயிலாகச் சமதருமத்தை அடையமுடியுமென நம்பினர் சிலர். அரசாங்கத்தின் சீர்திருத்தங்களின் வாயிலாகச் சமூக நீதியை நிலைபெண முடியுமென்றனர் வேறுசிலர். இவர்களை யெல்லாம் கனவுலக சோஷியலிஸ்டுகள் என்று அழைப்பதுதான்

மரபு. இக் கனவுலக சோஷியலிசவாதிகளுக்கு மாருக, முதலாளித்துவ அமைப்பையே முறியடிக்கவேண்டுமெனக் கங்கணம் கட்டினர் சிலர். அவர்களுள் மார்க்ஸ் முக்கியமானவர். மார்க்ஸிய சோஷியலிசத்தை முதிய பருவ சோஷியலிசம் அல்லது அறிவியல் சோஷியலிசம் என்பர். இதனைப்பற்றிப் பின்னர் விரிவாக ஆராய்வோம். இங்கு முதல்பருவ சோஷியலிசவாதிகளான கனவுலக சோஷியலிஸ்டுகளே இடம்பெறுவர். இவர்களைப் பகற்கனவு காண்பவர்கள் என்று மார்க்ஸ் இழிவாகக் கூறுகிருர். எனினும், சோஷியலிச வாதத்தில் இவர்களும் இடம்பெறுவதால், இவர்களைச் சுருக்கமாகவாவது ஆராயவேண்டும். இவர்களில் முக்கியமானவர்கள் செயின்ட் சைமன் (St. Simon), அவரின் சீடர்களான சைமோனியர்கள் (Simonions), ராபர்ட் ஓவன் (Robert Owen), ஃபூரியர் (Fourier), லூயி பிளாங் (Louis Blanc), புரூதான் (Proudhon) ஆவர். இவர்கள் அனைவரும் இப் பகுதியில் இடம்பெறுகின்றனர்.

1. செயின்ட் சைமன் (1760—1825)

செயின்ட் சைமன் பிரான்ஸில் ஒரு பிரபு வமிசத்தைச் சேர்ந்தவர். 16 வயதிலேயே அமெரிக்கச் சுதந்திரப் போரில் பங்குகொண்டார். இவர்மீது சந்தேகம் கொண்ட பிரெஞ்சு அரசாங்கம் இவருக்குச் சிறைத்தண்டனை கொடுத்தது. சிறையிலிருந்து வெளிவந்தபின் புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் பித்துக்கொண்டார். செல்வந்தர்களின் உதவியோடு மிகப் பெரியதொரு வங்கியை ஏற்படுத்தி, பொதுமக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரத் திட்டமிட்டார். இவரது திருமணம விசித்திரமான தொன்று. மூன்ருண்டுகளுக்கு மட்டுமென ஒப்பந்தம் செய்து திருமணம் செய்தார். வீணுகச் செலவு செய்தார் பின்னர், திருமண வாழ்வை முறித்துவிட்டு வறுமையில் வாடினர். 1805-ல் இவரது வறுமையைக் காணமுடியாத பணியாள் ஒருவன இவருக்கு உதவி செய்தான். அப் பணியாள் இறந்தபின்னா தனை குடும்பத்திலிருந்து கிடைத்த உதவிப் பணத்தையும், சில வியாபார நண்பர்கள் அளித்த பணத்தையும் கொண்டு வாழ்க்கை நடத்தினர் அப்படியிருந்தும் அவரது வறுமை அகலவில்லை. 1823-ல் அவர் தற்கொலை செய்யக்கூட முயன்ருர் எனத் தெரியவருகிறது. அச் சமயத்தில் ரோட்ரிகஸ் என்னும் பாங்கர் ஒருவர் அவரது வாழ்க்கைக்கு வேண்டிய உதவியைச் செய்ய முன்வந்தார். இவ்வாறு மீண்டும் வாழநினைத்த செயின்ட் சைமன் 1825-ல் காலமானர். தனது வாழ்நாள் முழுவதும் மனிதசமுதாயத்திற்கு அரும்பெரும் பணியைச் செய்யவேண்டுமென்றே செயின்ட் சைமன் விரும்பினர்.

சமுதாயத்திற்கு வேண்டிய புதிய வாழ்க்கை நெறிகளைத் தனியாக வும் பிறரோடும் சேர்ந்து எழுதிய நூல்களில் வடித்துத் தருகிறார். அவரது நூல்களில் 'தொழில்' (Industry) 'தொழில் அமைப்பு முறை (The Industrial System), 'தொழில் பற்றிய வினா-விடைகள்' (Questions and Answers on Industry) ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இந் நூல்களனைத்தும் குழப்பமான கருத்துகளுடை யவை. இதனை செயின்ட் சைமனே ஒப்புக்கொண்டுள்ளார். நான் அவ்வப்போது என் ஆன்மாவால் தூண்டப்பட்டுதான் எனது கருத்துகளை எழுதுகிறேன். இக் கருத்துகள் புதிதானவை. ஆனால் இக் கருத்துகளை ஒழுங்குமுறையோடு வெளியிடும் பொறுப்பைச் சிறந்த எழுத்தாளர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

செயின்ட் சைமன் எழுதிய நூல்களனைத்தும் பிரெஞ்சுப் புரட்சிக்கும் நெப்போலியனின் போருக்கும் பின்னர் எழுதப்பட் டவை என்பது நினைவுறத்தக்கது. 18ஆம் நூற்றாண்டை ஓர் அழிவுகாலமாகக் கருதினார் செயின்ட் சைமன். எனவே, 19ஆம் நூற்றாண்டை ஓர் ஆக்கக்காலமாகவும் விடிவுகாலமாகவும் அமைக்க நினைத்தார். அவ் விடிவிற்குத் தன்னையே உதயசூரியனாக நினைத் துக்கொண்டார்.

செயின்ட் சைமனின் கருத்துகள்

மனித சமுதாயம் முன்னேறுவதும் அபிவிருத்தியடைந்து இன்புற்றிருப்பதும் நிச்சயம் என நம்பினார். இம் முன்னேற்றம் மேற்கத்திய நாடுகளில்தான் ஏற்பட முடியுமென்றும் கிழக்கத்திய நாடுகளில் ஏற்படாதென்றும் எண்ணினார். சமுதாயம் முன்னேற வேண்டுமாயின், உலகில் சமாதானமும் அமைதியும் நிலவ வேண்டும். இதற்கு, சமுதாயத்திற்கே பொதுவான சட்ட திட்டங்கள் தேவை. மேலும், சமுதாய முன்னேற்றம் கற்றறிந்த அறிஞர்கள், விஞ்ஞானிகள் கையில்தான் உள்ளது எனவே, அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேற்றப்பாதையை வகுக்கவேண்டும்.

நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்குவதன் வழியாகத்தான் சமுதாயம் முன்னேற முடியுமென நம்பினார் செயின்ட் சைமன். தொழில் வளத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய சூழ்நிலை அவசியம். மக்கள் அனைவரும் சமமானவர்களாக மதிக்கப்பட வேண்டும். எல்லாருக்கும் சம வாய்ப்பு கிடைக்க வேண்டும். மக்களிடையே எவ்வித ஏற்றத்தாழ்வோ பாகுபாடோ இருக்கக் கூடாது. தொழில் முன்னேறவேண்டுமாயின், விவசாயம், வியாபாரம், கைத்தொழில்,

ஆலைத்தொழில் அனைத்தும் பெருக வேண்டும். தொழில் அபி விருத்திதான் மக்களது நாகரிக வாழ்விற்கு அடித்தளம் என்கிறார் செயின்ட் சைமன்.

செயின்ட் சைமனின் உவமை

நவீனப் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில்களே முது கெலும்புபோன்றவை. எனவே, பிரபுக்கள், அரசியல் தலைவர்களின் சேவையைக் காட்டிலும், தொழிலதிபர்கள், பாங்கர்கள், விஞ்ஞானி கள் ஆகியோரின் பணிகள்தாம் நாட்டிற்கு அவசியம். இதனை வலியுறுத்த அவர் தரும் உவமை இலக்கிய நயம் வாய்ந்தது. 'பிரெஞ்சு நாடு திடீரென ஒருநாள் காலையில் முதல் தரமான 50 மருத்துவர்கள், 50 விஞ்ஞானிகள், 50 பாங்கர்கள், தலைசிறந்த 200 வணிகர்கள், 600 விவசாயிகள் 500 தொழிலதிபர்கள் ஆகி யோரைப் பறிகொடுத்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது என்ன நடக்கும்?' நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமான இவர்களையெல்லாம் இழந்துவிட்டால் பிரான்ஸ் நாடு உயிரற்ற சடலம்போல் காட்சிதரும். அது, விரோத நாடுகளுக் கெல்லாம் கேலிக்கூத்தாக இருக்கும். மற்ற நாடுகளுக்கெல்லாம் கீழ்த்தரமான நாடாக பிரான்ஸ் மாறிவிடும். மாறாக, 'அவர்களெல் லாம் உயிரோடிருக்க, பிரெஞ்சு நாட்டிலுள்ள அரசக்குடும்பத்தினர், அதிகாரவர்க்கத் தலைவர்களில் 50 பேர், சட்டசபை உறுப்பினர் கள், பாதிரிகள். சேனாதிபதிகள், நீதிபதிகள், அரசாங்கச் சிப்பந்திகள் அனைவரும் ஒருநாள் திடீரென இறந்துவிட்டால் என்ன நடக்கும்?' பிரெஞ்சு மக்களனைவரும் துக்கம் தாளாமல் சோகக் கண்ணீர் வடிப்பர், அவ்வளவுதான். அதனால் நாடு ஒன்றும் குடிமூழ்கிப் போய்விடாது. வேறெந்தக் கெடுதலும் ஏற் படாது.

மேற்கூறிய உவமையின் வழியாக ஒரு பேருண்மையைச் சுட்டிக்காட்டுகிறார். அரச குடும்பத்தினரும் அதிகார வர்க்கத் தினருமின்றி நாடு வாழவும் வளம்பெறவும் முடியும். ஆனால் விவசாயிகள், விஞ்ஞானிகள், தொழிலதிபர்கள், பாங்கர்கள், வணிகர்கள் முதலானோரின்றி எவரும் வாழவோ வளம்பெறவோ முடியாது. நாட்டின் செல்வத்தைச் சுரக்கும் சுரப்பியே வற்றி வதங்கிவிடும். அவர்கள்தாம் நாட்டையாளும் அதிபர்கள்.

தொழில் அடிப்படையில் சமுதாயம்

சமுதாயமே தொழிலை அடிப்படையாகக் கொண்டதாயிருக்க வேண்டுமென்கிறார். தொழிலை அடிப்படையாகக் கொண்டிருக்க

வேண்டுமாயின் எல்லா மக்களுக்கும் தொழிலுரிமையும் சம வாய்ப்பும் இருக்க வேண்டும். சம உரிமையையும் சம வாய்ப்பையும் சட்டத்தினாலோ அல்லது சமூகப் புரட்சியினாலோ ஏற்படுத்தக் கூடாது. மாறாக, தொழிலமைதியின் வாயிலாகவே அவற்றை உருவாக்க வேண்டும். தொழிலமைப்பை ஆதாரமாகக்கொண்ட புதிய சமுதாயத்தில் மக்களிடையே இன வேறுபாடோ அல்லது ஏற்றத் தாழ்வோ இருக்கக்கூடாது. பிரபுக்களுக்கும் அதிகார வர்க்கத்தினருக்கும் புதிய சமுதாயத்தில் இடம் இல்லை; பாதிரிகளுக்கும் வேலையில்லை. புதிய சமுதாயத்தில் பாடுபட்டு உழைப்போர், சோம்பேறிகள் ஆகிய இருபிரிவினர் இருப்பர். ஆனால், சோம்பேறிகளாய் வாழ்க்கை நடத்துவோர் மெதுவாக மறைந்து விடுவர். எனவே, ஏதாவது தொழில் செய்வோர் மட்டுமே அதில் நிலைத்து இருப்பர். தொழிலதிபர்கள், பாங்கர்கள், கைத்திறன் படைத்தோர் ஆகியோர் மட்டுமே வாழ்வர். இவர்களிடையே உள்ள திறமை வேறுபாட்டின் விளைவாகத் தோன்றும் வேறுபாடன்றி, வேறு எவ்வித வேறுபாடும் இராது. எல்லாரும் சமம். ஒவ்வொருவருடைய திறமைக்குமேற்பப் பலன் தரப்படும். இச் சமுதாயத்தில் தனியார் சொத்துரிமை பறிபோகாது. சொத்துரிமை நிலைத்திருக்கும். ஆனால் மக்களிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகள் மறையும்.

தொழில் அடிப்படையில் அரசாங்கம்

தொழில் அடிப்படையிலேயே அரசாங்கம் அமையவேண்டுமென்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார் செயின்ட் சைமன். இவ்வரசாங்கம் பிற அரசாங்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். பிரான்ஸ் நாடே ஒரு பெரிய தொழிற்சாலைபோல் மாற்றப்பட வேண்டும். நாட்டில் ஏற்படக்கூடிய ஒழுங்கீனம் களவு முதலிய குற்றங்களைக் கட்டுப்படுத்தச் சாதாரண சிப்பந்திகளே போதும். அவ்வாறாயின் அரசாங்கத்தின் பணிகள் தாம் யாவை? தொழிலை உயிர்நாடியாகக் கொண்ட சமுதாயத்தில் அரசாங்கத்திற்குப் பெரிய பணி ஏதுமில்லை. தொழிலாளிகள் சோம்பலின்றி வேலை செய்யுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்; தொழில் செய்வோருக்குப் பாதுகாப்பும் சுதந்திரமும் தந்து பேணவேண்டும்.

பிரான்ஸ் நாடு, செயின்ட் சைமனின் திட்டப்படி ஒரு பெரிய தொழிற்சாலையாக மாறிவிட்டதென வைத்துக் கொள்வோம். அப்போது, அரசாங்கத்தின் குறிக்கோள் எது? தொழில் முயல்வோரின் விருப்பமும் தொழிலாளர்களின் விருப்பமும் முரண்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பொதுமக்களின் விருப்பத்திற்கேற்ப

உற்பத்தி நடைபெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வளவுதான் அரசாங்கத்தின் பணிகளும் குறிக்கோளும். தொழில் அமைப்பை உருவாக்குவதற்கே அரசாங்கம் இருக்கவேண்டுமே தவிர, மக்களையும் நாட்டையும் ஆட்சி செய்வதற்காக அல்ல. அவ்வாறுயின் அரசியலுக்கு வேலையில்லையா என்று கேட்டால், செயின்ட் சைமன் அளிக்கும் பதில் சுருக்கமானது: உற்பத்தி முறையை ஒழுங்குபடுத்தும் அமைப்பாகத்தான் அரசியல் மாற வேண்டும்.

எனவே, சைமனின் விளக்கப்படி அரசாங்கத்திற்கு அதிகாரம் முக்கியமல்ல; அதற்குப்பதிலாக தொழிலமைப்புத் திறன்தான் முக்கியம். ஆணையிடுவது அரசாங்கத்தின் பணியல்ல; வழி வகுத்துக் காட்டுவதுதான் முக்கியக் கடமை. தனது கருத்தினைத் தெளிவுபடுததுவதற்கு அரசாங்கம் அமையும் முறையை எடுத்துக் காட்டுகிறார் சைமன். வியாபாரம், தொழில், விவசாயம் ஆகிய துறைகளிலிருந்து திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களைக்கொண்டு நிருவாகக் குழுவை அமைக்க வேண்டும். கைவினைஞர்களையும் பொறியியல் வல்லுநர்களையும் கொண்ட இரு குழுக்கள் கொண்டுவரும் சட்டதிட்டங்களை ஒப்புக்கொள்வதோ மறுப்பதோ நிருவாகக்குழுவின் தீர்மானத்தைப் பொறுத்தது.

மேற்கூறிய வகையில் அமைக்கப்படும் அரசாங்கம் பொருளாதாரக் குறிக்கோளையுடையதேயன்றி, அரசியல் நோக்கமுடையதன்று. பொருள்களை உற்பத்தி செய்யும் மிகப்பெரியதொரு கூட்டுச்சங்கம்போல் நாட்டை மாற்றி அமைப்பதோ அரசாங்கத்தின் முக்கியக் கடமை. அமைதியான முறையில் உற்பத்தியைப் பெருக்கி மக்களின் நலனை அதிகரிப்பதுதான் அதன் குறிக்கோள்.

மதிப்புரை

செயின்ட் சைமனின் தொழில்மயத் திட்டம் விசித்திரமான அம்சங்களையுடையது. அது எல்லாருக்கும் பொதுவானது; நிருவாகக்குழுவால் கட்டுப்படுத்தப்படுகிறது; எனவே, உயர்நிலையில் திட்டமிடப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகிறதெனலாம். எனினும், இது சோஷியலிசப் பாதையில் செல்வதில்லை. ஏனெனில் தனியார் சொத்துரிமை பறிபோவது கிடையாது. சைமனின் இக் கருத்தினைப் பின்னர் தோன்றிய ஒரு சில சோஷியலிச வாதிகள் போற்றினர். பிரான்ஸ் நாட்டில் தோன்றிய பிளாங்கும் இதர சோஷியலிச வாதிகளும் சைமனின் தொழில் மயத் திட்டத்திற்கு ஆதரவு தந்தனர். மார்க்ஸின் நண்பரும் உதவியாளருமான எங்கெல்சும் சைமனின் திட்டத்தை முக்கியமானதொரு திட்டமெனப் போற்றினர்.

எனினும், செயின்ட் சைமன் ஒரு சோஷியலிச வாதியல்ல. ஆனால் அவரது சிந்தனை, கருத்துகள், திட்டங்கள் அனைத்தும் சோஷியலிசப் பாதையில்தான் செல்கின்றன. ஏழைப்பாட்டாளிகளின் நிலையை உயர்த்துவதிலும், நாட்டின் செல்வம் கூடுமான வரை சமமாகப் பகிரப்படுவதிலும் நாட்டம் கொண்டிருந்தார் அவர். உழைப்பாளிகள், தங்கள் உழைப்பின் பயனை அப்படியே அனுபவிக்க வேண்டுமென விரும்பினார். இருப்பினும், நாட்டின் தொழில் மயத்திட்டத்தை உருவாக்கும் பொறுப்பை தொழிலாளிகளிடம் விட்டுவிடாமல் தொழில் முயல்வோருக்கே அளிக்கிறார். இவ்வமைப்பு முறையை நுணுக்கமாக ஆராய்ந்தால், இது சோஷியலிச அமைப்பாக இருக்கமுடியாது என்பதை அறியலாம்.

எது எவ்வாறிருப்பினும், தனியாருக்குச் சொத்துரிமையை வழங்கி, பாட்டாளிகளின் நிலையை உயர்த்துவது என்பது முரணான கொள்கையேயாகும். இம் முரண்பாட்டினை நீக்கி, உண்மையான சோஷியலிச சமுதாயத்தை உருவாக்கும் திட்டத்தில் தங்கள் குருவின் பாதையை விடுத்துப் புதியதொரு பாதையை அமைத்தவர்கள் சைமோனியர்களேயாவர்.

11. சைமோனியர்கள்
(Simonians)

செயின்ட் சைமனின் நூல்களை வெகு சிலரே கற்றனர். ஆனால் அவருடைய செல்வாக்கு, திறம்பெற்ற பல சீடர்களின் வாயிலாக எங்கும் பரவியது. அவருடைய சீடர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் வருமாறு; அகுஸ்தின் தியெரி (Augustin Thierry) என்பவர் சைமனின் செயலாளராகப் பணியாற்றி, அவரது வளர்ப்பு மகனாகக் கருதப்பட்டார். அகஸ்டெ கோம்ட் (Auguste comte) சைமனுக்கு நூல் எழுத உதவியவர். ஆலின்ட் ரோட்ரிகஸ் (Olinde Rodrigues) என்பவர்தான் சைமனுக்குப் பிடித்தமான சீடர். சைமன் இறந்த பின்னர் அவரது சீடர்கள் அனைவரும் சேர்ந்து 'உற்பத்தியாளர்' (The Producer) என்னும் பத்திரிகையைத்தொடங்கி, தங்களது குருவின் உபதேசங்களை நாடெங்கிலும் பரப்ப முயன்றனர். இப் பத்திரிகைக்கு அதிகமாக எழுதியவர் என்ஃபன்டின் (Enfantin) என்பவர். ஆனால் இப் பத்திரிகை ஓராண்டுக் காலம் மட்டுமே வெளிவந்தது.

1828ஆம் ஆண்டில் யூஜின் ரோட்ரிகஸ் (Eugene Rodrigues) என்பவரின் விருப்பத்திற்கிணங்கி, சைமனின் சீடர்கள் அனை

வரும் சேர்ந்து ஒரு மதக்குழுவினர்போல் அமைந்தனர். அதே சமயம் பஸார்ட் (Bazard) என்னும் சீடர் குருவின் போதனைகளைப் பொதுமக்களிடம் போதித்து வந்தார். அவரது சொற்பொழிகளைக் கேட்கப் பொதுமக்கள் மட்டுமன்றி பிரமுகர்களும் வந்தனர். இச் சொற்பொழிவுகள் 'செயின்ட் சைமன் கோட்பாடுகளின் விளக்கம்' என்னும் தலைப்பில் இரு பகுதிகளாக வெளிவந்தன. இந்நூலை எவரும் படிக்கக் கூடாதென்பது ஒரு சிலரின் கருத்து. அப்படியே படிக்க முற்பட்டால், அதன் போதனையிலிருந்து எவரும் தப்ப முடியாதென்றும் சிலர் கருதுவர். சைமோனியர்களின் போதனைகளனைத்தையும் சைமோனியனிசம் என்று அழைப்பதுமுண்டு. ஆனால் இதனை ஒரு மதப்பிரிவுபோல் அமைத்த பெருமை என்ஃபன்டைன் என்பவரையே சேரும். இதனை ஒரு பெரும் இயக்கமாகப் பரப்பி வந்ததால் பிரெஞ்சு நாட்டுப் பிரமுகர்களும் இதில் ஆர்வம் காட்டினர். எனவே, இவ்வியக்கத்திற்கு பிரெஞ்சு அரசாங்கம் தடைபோடவே, இது மெதுவாக மங்கி மறையத்தொடங்கியது. சைமோனியர்களின் போதனைகளில் முக்கியமானது சொத்துரிமையை அவர்கள் கண்டித்ததும் கூட்டுடைமையை (Collectivism) ஆதரித்ததும்தான். இப் போதனையின் மூலம் குருவுக்கு மிஞ்சிய சீடர்களானார்கள். சொத்துரிமையை அவர்கள் கண்டித்த விதமும் பொதுவுடைமையை ஆதரித்த தன்மையுமே பொருளாதாரச் சிந்தனையில் சிறப்பிடம் பெறுகின்றன.

சொத்துரிமைக்கு எதிரான வாதம்

சைமோனியர்களின் போதனைகளெல்லாம் தனியார் சொத்துரிமையைக் கண்டிப்பதாகவே உள்ளன. தனி நபரின் சொத்துரிமை என்பது, மனிதனின் இயல்பான உரிமைகளில் ஒன்று என்பது இயற்கைவாதிகளின் நம்பிக்கை. தொன்மைப் பொருளாதார இலக்கியங்களிலும் சொத்துரிமையே மையமாக விளங்கியது. ஆனால், இவ்வுரிமையை சைமோனியர்கள் மிக வன்மையாகக் கண்டித்தனர். இவ்வுரிமைக்கு விரோதமாக அவர்கள் இருமுனைப் போரில் ஈடுபட்டனர். பொருள் உற்பத்தியின் முனையிலிருந்தும் வருமானப் பகிர்வு முனையிலிருந்தும் சொத்துரிமைக்கு விரோதமாக வாதித்தனர். பொருள் உற்பத்தி சமுதாயத்திற்குப் பயனுள்ளதாக இருக்கவேண்டும். ஆனால், சொத்துரிமையின் வாயிலாக சமுதாயத்திற்குப் பயனுள்ள பொருள்கள் உத்பத்தியாவதற்குப் பதிலாகப் பயனில்லாப் பொருள்களே உற்பத்தி செய்யப்படுகின்றன. அடுத்து, நாட்டு வருமானத்தை மக்களிடையே பகிரும்போது சமூக நீதியே குறிக்கோளாக இருக்கவேண்டும். ஆனால், சொத்துரிமை இக் குறிக்கோளையே பாதிக்கிறது. எனவே, உற்பத்தியின்

நோக்கமும் வருமானப் பகிர்வின் குறிக்கோளும் சொத்துரிமையால் பாழாகிவிடுகின்றன என்பதை மெய்ப்பிப்பதையே முழுமூச்சாகக் கொண்டனர் சைமோனியர்கள்.

செயின்ட் சைமன் தனிநபரின் சொத்துரிமையைக் கண்டிக்கவில்லை. மூலதனம் சேர்க்கவேண்டுமாயின், ஓரளவிற்காவது கஷ்டப்பட்டுச் சேர்த்த மூலதனத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில் அதற்கு இலாபம் இருக்கவேண்டியது நியாயம்தான் என்றார் சைமன். இக் கருத்தை நிந்தித்தனர் சைமனின் சீடர்கள். சொத்து என்பது பெரும்பாலும் நிலம், மூலதனம் ஆகியவற்றின் வடிவில்தான் உள்ளது. இவை உற்பத்திக்கு உதவும் சாதனங்கள் தான். இச் சாதனங்களை ஒருசிலர்மட்டும் வைத்து உரிமை கொண்டாடுவது அநீதியாகும். உழைப்பாளிக்கு இச் சாதனங்கள் இல்லாததால்தான் தன் உழைப்பின் பலனை முதலாளிகளோடு பகிர்ந்து கொள்ளவேண்டியவனாகிறான். உற்பத்தியாகும் பொருளின் பெரு மதிப்பை வட்டி, குத்தகை என்னும் பெயரில் முதலாளிகள் எடுத்துக்கொள்கின்றனர். இது உழைப்பாளிகளை முதலாளிகள் சுரண்டி வாழ்வதற்கு ஒப்பாகும். முதலாளிகள் முதலாளிகளாகவும் தொழிலாளிகள் தொழிலாளிகளாகவுமே இருப்பதற்குக் காரணம் வாரிசுரிமைச் சட்டம்தான். எனவே, வாரிசுரிமைச் சட்டமும் நீக்கப்படவேண்டுமென வாதிப்பர் சைமோனியர்கள்.

மனிதனை மனிதன் சுரண்டிவாழும் பழக்கம் சமுதாய அமைப்பிலுள்ள பெருங்கேடு என்பது சைமோனியர்களின் கருத்து. இச் சுரண்டலுக்குச் சொத்துரிமையே காரணம் என்பது அவர்களின் நம்பிக்கை. கார்ல்மார்க்ஸ் சுரண்டி வாழ்வது முதலாளித்துவ அமைப்போடு ஒட்டிப் பிறந்த ஒரு நோய் என்று கூறுவார். எனவே, முதலாளித்துவ அமைப்பு நீங்கிவிட்டால், சுரண்டலும் ஒழிந்துவிடும் என்பது மார்க்ஸின் முடிவு இதனைக் காண்பிக்கும் நோக்கத்தோடு உழைப்பின் மதிப்புக் கோட்பாட்டைப் புனைந்தவர் மார்க்ஸ். ஆனால் சைமோனியர்களோ மதிப்புக் கோட்பாட்டில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. உழைப்பதால் கிடைக்கும் ஊதிய வருமானத்திற்கும் சொத்தின் வழியாகக் கிடைக்கும் வருவாய்க்கும் உள்ள வேறுபாட்டைத்தான் சுட்டிக்காட்டினர். எனவே, உழைப்பின் மூலமே எல்லாரும் வருவாயைப் பெற வேண்டுமென விரும்பினர்.

தனி நபரின் சொத்துரிமைதான் மனிதனுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்து, உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் செல்வத்தை அதிகரிக்க உதவும் என்று தொன்மைப் பொருளாதார வாதிகள் வாதித்தனர். இயற்கைவாதிகளும் இவ்வாறே

நினைத்தனர். எனவேதான் அவர்களனைவரும் தனியார் சொத்துரிமைக்கு வக்காலத்து வாங்கினர். ஆனால், சைமோனியர்களோ, தனியார் சொத்துரிமை இருந்தால் மக்களிடையே சமமான முறையில் வருமானம் பகிரப்படாது; சமூகத்திற்குப் பயனுள்ள பொருள்கள் உற்பத்தியுமாகாது என்று வாதித்தனர். எனவே, உற்பத்தியின் குறிக்கோள், பகிர்வின் நியதி ஆகிய இரு அடிப்படைகளில் சொத்துரிமைக்கு முடிவுகட்ட முயன்றனர்.

பொருள்களை உற்பத்தி செய்வதன் நோக்கம், திறமையாகவும் மலிவாகவும் உற்பத்தி செய்து மக்களுக்கு அளிப்பதுதான். எனவே, உற்பத்திக்கு உதவும் சாதனங்களனைத்தும் திறமைமிக்கவர்களிடம் இருப்பதுதான் நியாயம். ஆனால், வாரிசுரிமைச் சட்டத்தின் வாயிலாகத் தந்தையின் சொத்து பிள்ளைகளுக்குக் கைமாறும்போது, சொத்தை அடையும் பிள்ளைகள் திறமைமிக்கவர்களாக இருப்பதில்லை. எனவே, திறமையாக உற்பத்தி செய்து சமுதாயத்திற்கும் பயனுள்ளவர்களாக அவர்களால் இருக்க முடியாது. ஏதோ செல்வந்தர்கள் குடும்பத்தில் பிறந்துவிட்ட காரணத்திற்காகச் சமுதாயத்திற்குச் செய்யவேண்டிய பெரும் பொறுப்புள்ள பணியை அவர்களிடம் விட்டுவிடுவது அநீதி. எனவே, சைமோனியர்கள் சொத்துரிமை, வாரிசுரிமை ஆகிய இரண்டையுமே ஒழித்துக் கட்டக் கங்கணம் கட்டினர். உற்பத்தியில் ஏற்படும் சிக்கல்களுக்கும் சீர்கேடுகளுக்கும் அடிப்படைக் காரணம் சொத்துரிமைதான் என்பது அவர்களின் முடிவு.

பொதுவாக, சொத்துரிமையைத் தாக்கும் அனைவரும் வரலாற்று அடிப்படையில் அவ்வுரிமை எவ்வாறு தோன்றியது, எவ்வாறு மாறுபட்டு வந்துள்ளது, எப்படி அது மறைய வேண்டுமென்பதையும் காண்பிக்க முயற்சிசெய்வர். மார்க்ஸ்கூட வரலாற்று அடிப்படையில்தான் முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் விளக்கினர். சைமோனியர்கள் இதற்கு விதிவிலக்கன்று. வரலாற்று அடிப்படையில் சொத்துரிமைபற்றி அவர்கள் விளக்கியது குறிப்பிடத்தக்கது. சொத்துரிமை என்பது சமுதாயத்தில் நாம் காணும் ஒரு நிகழ்ச்சி. சமுதாய நிகழ்ச்சிகள் அனைத்தும் முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டவை. சமுதாயம் முன்னேற முன்னேற சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், நிறுவனங்கள், கருத்துகள் அனைத்துமே மாறிவிடுகின்றன அல்லது மறைகின்றன. மாற்றம்தான் முன்னேற்றத்தின் சின்னம். சொத்துரிமையே இதற்குச் சான்று. பழங்காலத்தில் நிலத்தையும் கருவிகளையும் மட்டுமன்றி அடிமைகள் என அழைக்கப்பட்ட மக்களையும் மனிதன் தன் சொத்தாகக் கருதினன். ஆனால், நாளடைவில்

சமுதாயம் சிறிது முன்னேறியபின் ஆண்டான்-அடிமை என்ற உறவு முறிந்தது; அடிமைகளை விலைகொடுத்து வாங்கி உரிமை கொண்டாடும் பழக்கமும் மறைந்து, சடப்பொருள்கள் மீது மட்டுமே மனிதன் உரிமை கொண்டாட முடியுமென்ற நிலை வந்தது. செல்வந்தர்கள் தங்கள் விருப்பம்போல் செல்வத்தை எவருக்கும் வழங்கும் நிலை ஏற்பட்டது. பின்னர், அதுவும் மறைந்து, தலை மகனுக்குத்தான் சொத்து முழுவதும் சேர வேண்டும் என்ற சட்டமும் வந்தது. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னர், பிள்ளைகள் அனைவருக்கும் சமமாகச் சொத்தைப் பிரித்தளிக்க வேண்டுமென்ற நிலை பிரான்ஸில் ஏற்பட்டுவிட்டது. அடுத்து, உழைக்கும் பாட்டாளிகளுக்குத்தான் உற்பத்திச் சாதனங்களனைத்தும் உடைமையாகவேண்டுமென்ற நிலை வரப்போகிறது என்றனர் சைமோனியர்கள். அந் நிலையை உருவாக்கச் சீர்திருத்தம் வேண்டுமென்றும் அவர்கள் கோரினர். உழைக்கும் ஒவ்வொரு பாட்டாளிக்கும் மூலதனச் சாதனங்கள் இருக்கவேண்டும்; அவை அனைத்திற்கும் உரிமையுள்ளதாக அரசாங்கம் அமையவேண்டும். இதுவே சைமோனியர்களின் குறிக்கோள். இக் குறிக்கோளை அடைய முடியுமென அவர்கள் நம்பினர். அது தானகவே ஏற்படும் என்றும் எண்ணினர். வரலாற்று அடிப்படையில் சமுதாயம் வளர்ந்து முன்னேற முன்னேற இம் மாற்றம் தானகவே ஏற்படும் என்பது அவர்களின் நம்பிக்கை. மார்க்ஸும் வரலாற்று அடிப்படையில் முதலாளித்துவ அமைப்பின் போக்கை ஆராய்ந்தார் என்று முன்னரே குறிப்பிட்டோம். ஆனல் அவர் முதலாளித்துவத் தோற்றத்தையும் வளர்ச்சியையும் வரலாற்று அடிப்படையில் மாறும் அமைப்பாகக் கொண்டாரெனினும், அவ்வமைப்பை முறியடிக்கப் புரட்சி தேவை என்றார். சைமோனியர்களோ மத வாதிகள்; புரட்சியில் நம்பிக்கை இல்லாதோர். எனவே, புரட்சி இன்றியே சொத்துரிமை தானக மறைந்துவிடுமென்றனர்.

சைமோனியர்களின் கூட்டுடைமை

தனி நபரின் சொத்துரிமை நீங்கி விட்டால் வாரிசுரிமை தானகவே செத்துவிடும். அப்படியானல் சொத்துரிமையை எவ்வாறு அகற்றுவது? அரசு மட்டுமே எல்லாச் சொத்துகளுக்கும் உரிமையுள்ளதாக ஆக்கிவிட வேண்டும். அப்படிச் செய்துவிட்டால் நாட்டின் பொது நலத்தை மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு, எப்படி எப்படிச் சொத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டுமோ அப்படிப் பகிர்ந்தளிக்கும். வேலைசெய்ய முன்வருவோர் அனைவருக்கும் வேண்டிய உற்பத்திச் சாதனங்களைக் கொடுக்கும். அவ்வாருயின், வேலை செய்வோர் மட்டுமே நாட்டில் வாழ முடியும். அரசிற்கு

உடைமையான சொத்துக்களனைத்தையும் 'தொழில் பாதுகாவலர்' (Industrial Generals) நிருவகிப்பர். இதுவே சைமோனியர்கள் வகுத்த கூட்டுடைமையின் சாரம்.

சைமோனியர்கள் வகுத்த கூட்டுடைமை முறை புதுமையானது. பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும் திட்டமிட்டுச் செயல்படுத்தும் பணியையும் அரசே மேற்கொள்ள வேண்டும். உழைக்க முன் வருவோர் அனைவருக்கும் உற்பத்திச் சாதனங்களைப் பெறுவதில் சமவாய்ப்பு இருக்க வேண்டும். சாதனங்கள் இல்லாததால் உழைப்பாளிகள் சுரண்டப்படும் நிலை இருக்கக்கூடாது. சாதனங்கள் இருப்பதால் முதலாளிகள் சோம்பித்திரியும் நிலையும் கூடாது. உண்மையில் தொழிலாளி, முதலாளி என்ற பாகுபாட்டிற்கே இடமில்லை. சைமோனியர்களின் கூட்டுடைமை எளிதானதுமாகும் ஆனால், கூட்டுடைமை அமைப்பில் சொத்தை நிருவகிக்கும் பொறுப்பைத் தொழில் பாதுகாவலர் ஏற்றுக்கொள்வர் எனக் கூறும் சைமோனியர்கள், அவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற விளக்கத்தைத் தரவில்லை. தனி நபர்கள் தங்கள் சொத்தை அரசிடம் ஒப்படைக்கச் செய்வதெப்படி? அவர்களைப் பயமுறுத்தியா? அல்லது அவ்வாறு செய்யுமாறு வேண்டுதல் விடுத்தா? இதற்கும் சைமோனியர்கள் முறையான விளக்கம் ஏதும் தரவில்லை. இது, அவர்களது திட்டத்தில் காணப்படும் பெருங்குறையாகும்,

சைமோனியர்களின் முக்கியத்துவம்

சைமோனியர்களின் கருத்துகளும் திட்டங்களும் நடைமுறைக் கேற்றவை என்று சொல்வதற்குமில்லை; அல்லது நடைமுறையில் அமுல்படுத்தக்கூடியவை என்று கூறவும் முடியாது. அவர்கள் வகுத்த சோஷியலிசப் பாதை பொதுமக்களுக்கானதல்ல; கல்வி அறிவும் பண்பாடும் கொண்டவர்களுக்கே அப்பாதை தெரியும். அவர்கள் கூறிய கூட்டுடைமை அமைப்பு இன்றைய வங்கி அமைப்பு முறைக்கு ஒத்தது. சேமிப்பவர்கள் கொடுக்கவும் யுக்தியுடன் பயன்படுத்தக்கூடியவர்கள் பெறவும் வாய்ப்பை அளிப்பதே வங்கி முறை, அதுபோலவே கூட்டுடைமை அமைப்பும் தனியார் சொத்துக்களையெல்லாம் பெற்று, அதனைத் திறமையுடன் பயன்படுத்தக்கூடிய பாட்டாளி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கிறது.

முதலாளித்துவ அமைப்பில் தனியார் சொத்துரிமை என்பது இதயம் போன்றது. எனினும் அவ்வமைப்பில் திறமையாகப் பொருள் உற்பத்தி நடைபெறுவதுமில்லை; ஆக்கப்பட்ட செல்வம்

நியாயமான முறையில் பங்கிடப்படுவதுமில்லை. இவ்விரண்டு குறைகளையும் ஒரே வழியில் நீக்கவேண்டுமென்ற துடிப்பில் பிறந்ததுதான் கூட்டுடைமை. கூட்டுடைமையில் மட்டும்தான் தேவைக் கேற்பவும் திறமையாகவும் பொருள் உற்பத்தி நடைபெற முடியுமென்றனர் சைமோனியர்கள். அவர்களுடைய சிந்தனை தற்காலத் திற்கும்கூடப் பொருத்தமானதென நினைப்பர் சிலர். எனினும், சைமோனியர்களின் திட்டம் தெளிவானதெனக் கூற முடியாது. இருந்தும், அவர்கள் கூறிய சுரண்டல் கொள்கை சோஷியலிச வாதத்தின் ஆயுதமாக அமைந்துவிட்டது.

சமூக அமைப்பு என்பது வேறு; அரசியல் பொருளாதாரம் என்பது வேறு. இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாட்டைத் தொன்மைப் பொருளாதார நிபுணர்கள் உணரவில்லை. சொத்துரிமை என்பது சமுதாய அமைப்பிலுள்ள ஒரு உண்மை. சொத்தை எவ்வாறு பகிர்வது, எப்படிப் பயன்படுத்துவது என்பதைக் கூற வேண்டியது அரசியல் பொருளாதாரத்தின் கடமை. ஆனால் சொத்துரிமையால் தோன்றும் சீர்கேடான விளைவுகளை எவருமே இதுவரை விவாதிக்கவில்லை. அதனை முதன்முதலாக எடுத்துக் கூறிய பெருமை சைமோனியர்களையே சேரும். இறுதியாக, சொத்துரிமை இருப்பதால் தனிநபரின் சம்பாத்தியக் குறிக்கோள் எவ்வாறு பொதுநலனைப் பாதிக்கிறது என்பதையும் விளக்கிக் கூறியவர்கள் சைமோனியர்களேயாவர். மனிதனின் தன்னலத் திற்கும் சமுதாயத்தின் பொதுநலத்திற்குமுள்ள முரண்பாடு முதலாளித்துவ அமைப்பில் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. இம் முரண்பாட்டை நீக்குவதே சோஷியலிசத்தின் முயற்சி. இம் முயற்சிக்கு முன்னோடிகளாக விளங்கினர் சைமோனியர்கள். எனவே, தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் கண்ட அரசியல் பொருளாதாரத்திற்கும் சோஷியலிசத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ளதைப்போல் வேறுபாடு உள்ளது. இவ் வேறுபாட்டையும் சைமோனியர்களே தெளிவாக்கினர்.

16. கூட்டுச்சங்க சோஷியலிஸ்டுகள்

(Associative Socialists)

முதலாளித்துவ அமைப்பிலுள்ள குறைகளை நீக்க எளிதான தொரு திட்டத்தை வகுத்தனர் சிலர். பலபேர் ஒன்று பட்டுக் கூட்டுறவு முறையில் பொருள் உற்பத்தி செய்து, அவற்றைத் தமக்குள் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் முதலாளி—தொழிலாளி என்ற பாகுபாடு நீங்கி விடும். பொருளாதார ஏற்றத்தாழ்வும் மறைந்து விடும். இவ்வாறாக, சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கூட்டுறவு முறையில் மிக எளிதாக நீக்கிவிடலாமென நம்பியவர்களைக் கூட்டுச்சங்க சோஷியலிஸ்டுகள் என அழைப்பது மரபு. ஆனால் அவர்கள் அனைவரும் ஒரேவிதமான சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென நினைக்க வில்லை ஒரு சிலர் பொருள் உற்பத்தி செய்யும் சங்கங்களை விரும்பினர். வேறுசிலர் நுகர்வோர் உற்பத்தியாளர் என இரு இனத்தவருக்கும் பொதுவான சங்கங்கள் அமைக்க வேண்டு மென்றனர். எனவே அவர்களுடைய திட்டங்கள் பல் வேறானவை யாகும் எனினும், எல்லாத் திட்டங்களுக்கும் பொதுவாகச் சில பண் புகள் இருந்தன. அவை வருமாறு :

ஒவ்வொரு மனிதனும் தானாகவே முன் வந்து சங்கத்தை அமைக்க வேண்டுமேயன்றி, எவரையும் கட்டாயப்படுத்தக் கூடாது. சைமோனியர்களும் கார்ல் மார்க்ஸும் கட்டாயப் படுத்து வதில் நம்பிக்கை கொண்டவர்கள். நாட்டின் சொத்து அனைத்தை யும் பொதுவுடைமையாக்க வேண்டுமென விரும்பினர். ஆனால் கூட்டுச்சங்க சோஷியலிஸ்டுகள் கூட்டுறவு அமைப்பின் வழியாக தொழிலாளி முதலாளி என்ற பாகு பாட்டையும், தொழிலாளியைச் சுரண்டி முதலாளி இலாபம் பெறும் பழக்கத்தையும் அகற்றத்தான் எண்ணினர்.

கூட்டுறவு சோஷியலிஸ்டுகள் மனிதனின் சுதந்திரத்திலும் உரிமையிலும் நம்பிக்கை கொண்டவர்கள். முதாலாளித்துவ

அமைப்பில் எல்லாருக்கும் சமமான உரிமையோ சுதந்திரமோ கிடையாது என நினைத்தனர். எனவே. முதலாளித்துவ அமைப்பிற்குப் பதிலாகக் கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தினுல் எல்லாரும் சம வாய்ப்பைப் பெற முடியமெனக் கருதினர். வருங் காலச் சமுதாயத்தின் முன்னேற்றம் கூட்டுறவில்தான் உள்ள தென்பதை எண்பிக்க சிலர் நடைமுறைக்கொவ்வாத திட்டங் களைத்தீட்டி அவற்றைச் செயல்படுத்தலாமெனக் கனவு கண்டனர். எனவே, இவர்களைக் 'கனவுலக சோஷியலிஸ்டுகள்' (Uropisn Socialists) என அழைப்பதுமுண்டு. இவர்கள் அனைவரும் சமுதாயத்தின் சூழ்நிலையை மாற்றி அமைத்து, முதலாளித்துவ அமைப்பின் குறைகளையெல்லாம் நீக்க முடியுமென எண்ணினர். அவ்வாறு எண்ணியவர்களில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ராபர்ட் ஓவன், பிரான்ஸ் நாட்டவர்களான சார்லஸ் ஃபூரியர், லூயி பிளாங், பியர் ஜோஸப் புருதான் ஆகியோர் முக்கியமானவர் கள். அவர்களின் கருத்துகளையும் திட்டங்களையும் ஓரளவிற்காவது விளக்கமாக ஆராய்வது அவசியம்

1. ராபர்ட் ஓவன் (1771—1858)

(Robert Owen)

ராபர்ட் ஓவன் சோஷியலிசத்தின் தந்தையெனப் பெயர் பெற்றவர். கனவுலக சோஷியலிசத்தின் திருவுருவம். ராபர்ட் ஓவன் இங்கிலாந்திலுள்ள நியூடவுன் என்னுமிடத்தில் 1771—ல் பிறந்தார். பஞ்சாலைத் தொழிலில் வேலை பயின்றபின், தந்தை யிடமிருந்து 100 பவுன்கள் கடனுகப் பெற்று, சொந்தமாக மாக ஒரு சிறு பட்டறைத் தொழில் ஆரம்பித்தார். தொழில்திறமை நிறைந்த ராபர்ட் ஓவனை லட்சுமி தானுகவே வந்தடைந்தாள். நியூலானுர்க் (New Lanark) ஆலையில் பங்குதாரராகவும் இயக்கு நராகவும் உயர்ந்தார். ஒரு சில ஆண்டுகளில் அந்த ஆலையின் அதிபரா்கவும் ஆகிவிட்டார். அவ்வாலையின் பழைய சொந்தக் காரரான டேலின் (Dale) மகளையே மணம் செய்து கொண்டார் அந்த ஆலையில் அவர் செய்த சீர்திருத்தங்களை உலகமே போற்றியது வேலையிலிருந்த சிறுவர்களை நீக்கிவிட்டு அவர் களுக்குக் கல்வி வசதி செய்து கொடுத்தார். வேலை நேரத்தைக் குறைத்தார். வேலை செய்வோருக்கு வீடுகள் கட்டித்தந்தார். ஆலையைச் சுத்தமாகவும் அழகாகவும் அவர் வைத்திருந்தவிதம், உலகப்பிரமுகர்கள் பலருக்கு விந்தையாக இருந்தது. அவர்களில் சிலர் நேரிலேயே வந்து நியூலானுர்க்கைப் பார்த்து மகிழ்ந்தனர். நியூலானுர்க் என்ருல் ராபர்ட் ஓவன் ராபர்ட் ஓவன் என்ருல் நியூலா

னூர்க் என்று பொருள்படுமளவிற்கு அந்த ஆலை அதிசய இடமாகக் காட்சி அளித்தது. தனது ஆலைத் தொழிலாளிகளுக்கு வேண்டிய வசதிகளனைத்தையும் செய்து தந்தார் ஓவன்.

ஏழைத் தொழிலாளிகள்மீது இரக்கம் நிறைந்தவர் ஓவன். தொழிலாளருக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்யும் பொருட்டு 1825-ல் ஸ்காட்லாந்து நாட்டில் ஆர்பிஸ்டன் என்ற ஊரிலும் அமெரிக்காவில் இந்தியானு மாநிலத்திலுள்ள நியூ ஹார்மனியிலும் (New hormony) மாதிரிக் கிராமங்களை அமைத்தார். அக் கிராமமக்கள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யப் பெருஞ்செலவு செய்து பரிசோதனைகள் நடத்தினர். 'மக்களின் துயரங்களைப் போக்க ஒரே வழிதான் இருக்கிறது. அது கூட்டுறவுதான்' என்பது இவரது சித்தாந்தம். ஆனால் கூட்டுறவு முறையில் அமைத்த பண்ணைகள் வெற்றிபெறவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த ராபர்ட் ஓவன் தனது வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திக் கொண்டார். தனது கூட்டுறவுச் சித்தாந்தத்தைப் பரப்புவதற்காக 'நேர்மையான புதிய உலகம்' (New moral world) என்னும் நூலை எழுதினர். அதே தலைப்பில் 1834 ஆம் ஆண்டில் பத்திரிகை ஒன்றைத் தொடங்கினர். தொழிற்சங்க வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டினர். அவருடைய கூட்டுறவுச் சித்தாந்தத்தின் அடிப்படையில் 844-ல் 'ராக்டேல் முன்னோடிகள்' (Rochdale poineers) என அழைக்கப்படும் கம்பள நெசவுத் தொழிலாளர் சிலர் கூட்டுறவுப் பண்டக சாலையை ஏற்படுத்தினர் உலகில் இன்று முக்கியத்துவமடைந்துள்ள கூட்டுறவு இயக்கம் ராக்டேல் முன்னோடிகளால் ஆரம்பிக்கப்பட்டதுதான். எனவே, கூட்டுறவு இயக்கத்தின் வழியாக ராபர்ட் ஓவன் பெருமைப்படுத்தப்பட்டார்.

ராபர்ட் ஓவன் ஒரு பெரிய எழுத்தாளரல்லர். ஆனால் தன் வாழ்வையும் செல்வத்தையும் கூட்டுறவு இயக்கத்திற்காகவும், தொழிலாளர்களின் நல்வாழ்விற்காகவும் சோஷியலிசக் கொள்கையைச் செயல்படுத்துவதற்காகவும் செலவிட்ட செம்மல் அவர். ஒரு பெரிய தியாகி. உலகில் என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்வதற்குப் பாடுபட்டவர். எனவே, அவரை வெறும் கூட்டுறவு சோஷியலிசவாதியாக மட்டும் கருதக்கூடாது. தன்னைப்போல் பிற ஆலை அதிபர்களும் தொழிலாளிகளின் நலனுக்காகப் பாடுபடவேண்டுமெனத் தூண்டியவர் ஓவன். தொழிற்சாலை சுத்தமாகவும் வசதியாகவும் நல்ல இயந்திரங்களையும் கொண்டதாக இருந்தால்தான் தொழிலாளிகள் உற்சாகமாக வேலை செய்வர் என்ற உண்மையை நிரூபித்துக்

காட்டியவர். இதர ஆலை அதிபர்களும் இவ்வுண்மையை உணர வேண்டுமெனத் தூண்டியவர். ஆனால் அவரது முயற்சிகளனைத்தும் தோல்வியடைந்தன. எனவே, தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்க அரசாங்கம் சட்டம் இயற்றவேண்டுமெனப் பாடுபட்டார். முதலாளிகள் தொழிலாளரின் நலனில் அக்கறைகாட்டாத காரணத்தால் பல நாட்டு அரசாங்கங்களுக்கும் மனுச்செய்து தொழிலாளர் நலனைப் பேண விரும்பினார். அம் முயற்சியிலும் அவருக்குத் தோல்வியே கிட்டியது. எனவே, சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்குப் புதியதொரு மார்க்கத்தைக் கண்டார். அதுதான் கூட்டுறவுச் சங்கங்கள். அச் சங்கங்களை அமைப்பதன் வழியாகச் சமுதாயச் சூழ்நிலையை மாற்றமுடியுமென நம்பினார் ஓவன்.

புதிய சூழ்நிலையை உருவாக்கும் திட்டம்

ராபர்ட் ஓவன், மகிழ்ச்சி அடைவதுதான் மனிதனின் குறிக்கோள் என நம்பினார். சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வதே சமூக இலட்சியம். எனவே, மனிதன் தனியாகவும் கூட்டாகவும் அந்த இலட்சியத்தை அடையவேண்டுமானால் கூட்டுச் சங்கங்கள் அவசியமென்பதை வலியுறுத்தினார் ஓவன். உலகில் எங்கு பார்த்தாலும் மக்கள் துன்பப்படுவதைக் கண்டார். அதற்குச் சூழ்நிலைதான் காரணம் என்றார். அச் சூழ்நிலையை மாற்றவேண்டுமாயின் மக்களுக்குக் கல்வி அவசியம். சமுதாய மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படை கல்விதான் என்பது ஓவனின் கருத்து. அதோடு, சுற்றுப்புறங்களையும் அழகுற அமைக்க வேண்டுமென எண்ணினார். இவ்வெண்ணத்தால்தான் தொழிலாளிகளுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் அழகுறச் செய்து தந்தார். மனிதன் சூழ்நிலையின் படைப்பே என்பது அவரது கருத்து. அவன் மகிழ்ச்சியாயும் நிம்மதியாயும் வாழ்வதற்குச் சூழ்நிலையே காரணமென்றார். எனவே சூழ்நிலையை மாற்றுவதன் வழியாக மனிதனின் வாழ்வை மலரச்செய்ய முடியுமென்றார். அவ்வாறாயின், மனிதன் நல்லவனாகவோ ஒழுக்கம் கெட்டவனாகவோ வாழ்வது அவனுடைய குற்றமல்ல ; சூழ்நிலையின் குற்றம்தான். இவ்வாறு எண்ணியே மதபோதனைகளையெல்லாம் அற்பத்தனமானதென்றும் மூடத்தனமானதென்றும் நம்பினார். இதனால்தான் மதப்பற்றுடைய பல ஆங்கிலேயர்கள் அவரை வெறுத்தனர்.

சூழ்நிலையே மனிதனின் திறமைக்கும் சோம்பேறித்தனத்திற்கும் காரணம் என்றார் ஓவன். எனவே, திறமைக்கேற்பத்

தொழிலாளிகளுக்குக் கூலி கொடுக்கும் பழக்கத்தை வெறுத்தார். வேலைக்கேற்ற கூலிதான் கொடுக்கவேண்டுமேயன்றி, திறமைக் கேற்ற கூலி அல்ல என்பது அவரது கொள்கை. வேலைக்கேற்ற கூலியை எவ்வாறு நிருணயிப்பது என்ற விளக்கத்தில் மிக முக்கிய மானதொரு முடிவுக்கு வருகிறார். அதாவது இலாபம் பெறுவது என்பது அநீதியான பழக்கமாகும். எனவே, அதனை ஒழுத்துக்கட்ட வேண்டும்.

இலாப ஒழிப்பு

சூழ்நிலையை மாற்றவேண்டுமாயின், முதலில் இலாபத்தை ஒழிக்கவேண்டுமென்று கருதினார் ஓவன். சமுதாய அநீதிக்கு அடிப்படையானது இலாபம் பெறும் பழக்கமே. இலாபம் பெறு வதைப்போல் பாவமான செயல் வேறொன்றுமில்லை. இச் செயலா லேயே மனித இனம் நாசமாகிவிட்டது. இலாபம் என்றாலென்ன? அடக்கச் செலவைக் காட்டிலும் அதிகமான விலைதானே இலாபம்! செலவைக் காட்டிலும் உயர்ந்த விலையில் விற்பது அநீதியல்லவா? அடக்கச் செலவை ஒத்துத்தானே விலை அமையவேண்டும். அது தானே நியாயவிலை; நியாய விலையைக்காட்டிலும் அதிக விலைக்கு விற்பது அநியாயமட்டுமல்ல; அபாயமானதுமாகும். இலாபத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு உற்பத்தியாளர்கள் போட்டிபோட்டு உற்பத்திச் செய்வதால்தானே மிதமிஞ்சிய உற் பத்தி ஏற்பட்டுப் பொருளாதாரம் சீர்கேடு அடைகிறது?

எனவே, இலாபத்தை ஒழிப்பதுதான் முதல் பிரச்சினை என் கிறார் ஓவன். உற்பத்தியாளர்களிடையே முழுமையான போட்டி இருந்தால் இலாபம் தானாகவே மறைந்து விடுமென்றனர் தொன் மைப் பொருளாதார அறிஞர்கள். ஆனால் இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் ஓவன். போட்டியே இலாபத்திற்கு மூலகாரணம் என்பது ஓவனின் கருத்து. எனவே, இலாபம் ஒழிக்கப்பட வேண்டுமானால், போட்டியை முதலில் ஒழித்துக்கட்ட வேண்டும். போட்டி என்னும் மரம்தான் இலாபம் என்ற கனியைத் தருகிறது. விலக்கப்பட்ட கனியைத்தரும் மரத்தை வெட்டி வீழ்த்துவதுதான் முறை.

போட்டியை ஒழித்துக்கட்டிவிட்டால் போதுமா? இல்லை. அதற்குப் பதிலாகப் புதியதொரு முறையைப் புகுத்தவேண்டும். 'மலிவாக வாங்கவேண்டும்; கிராக்கியுடன் விற்கவேண்டும்' என் பது மனிதனின் ஆசை. இந்த ஆசைகளெல்லாம் ஏற்படாவண் ணம் ஏதாவதொரு கூட்டு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். இலாபம் என்பதை அளவிடுவதற்குப் பணத்தை அல்லது பொன்

லைப் பயன்படுத்துகிறோம். அடக்கச் செலவைக்காட்டிலும் அதிக விலைக்கு விற்பதற்குப் பணம்தான் கருவியாகப் பயன்படுத்தப் படுகிறது. எனவே, பணப் புழக்கத்தையும் நாட்டிலிருந்து விரட்ட வேண்டும். இதற்கு ஒரே வழி, உழைப்பினைக்கொண்டு பொருள்களை மதிப்பிடுவதுதான். உழைப்பை அளவிடுவதற்கென்று புதிய தொரு வழியைக் கண்டு பிடித்தார் ஓவன்.

சமமான உழைப்பின் பரிவர்த்தனை (Equirable Labour Exchange)

பணத்திற்குப் பதிலாக வேறொரு கருவியைத் தேடும் வழியில் ரிக்கார்டோவின் மதிப்புக்கொள்கைக்கு வருகிறார் ஓவன். பண்டங்களின் மதிப்பு மனிதனின் உழைப்பால் உருவானதாகும். எனவே, அம் மதிப்பை அளவிடுவதற்கு உழைப்பே சிறந்த சாதனம். இவ்வாறாக, ஓவன் அவர்கள் ரிக்கார்டோவின் மதிப்புக் கொள்கையை ஒப்புக்கொள்கிறார்; எனினும் இக் கொள்கையி லிருந்து எடுக்கும் முடிவுகள் புதுமையானவை. உழைக்கும் ஒவ்வொரு பாட்டாளிக்கும் அவன் உழைத்த நேரத்தைக் கணக்கிட்டு, அதற்கேற்ப உழைப்புப் பத்திரம் (Labour Notes) வழங்கப்பட வேண்டும். இவ்வாறாக வேலை செய்த அனைவரிடமும் உழைப்புப் பத்திரமிருக்கும்போது, அதைக்கொண்டு தங்களுக்கு வேண்டிய பிறபொருள்களை அவர்கள் வாங்கவேண்டும். இதன் வழியாக சம நேரத்தில் உற்பத்தியான பண்டங்களே பரிவர்த்தனை செய்யப் படும். சான்றாக, ஒரு மீட்டர் துணியை நெய்வதற்கு ஒருவன் 8 மணி நேரம் உழைத்தால் 8 மணி நேரத்திற்கான உழைப்புப் பத்திரத்தை அவன் பெறுவான். அப் பத்திரத்தைக்கொண்டு 8 மணி நேரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட செருப்பையோ தானியத்தையோ அவன் வாங்குவான். எனவே, ஒருவன் செய்யும் 8 மணி நேர வேலை மற்றொருவனின் 8 மணி நேர வேலைக்குச் சமமாகி விடுகிறது. அப்போது எவருக்கும் இலாபமும் இருக்காது, இழப்பும் ஏற்படாது. பணமும் புழக்கத்திலிருந்து நீங்கிவிடும்.

இவ்வாறாக பணத்தை வெறுத்துத் தள்ளிய ராபர்ட் ஓவன் அதற்குப் பதிலாக உழைப்புப் பத்திரத்தைப் புகுத்த விரும்பினார். உழைப்புப் பத்திரம் என்பது அவர் கண்டுபிடித்த புதிய சாதனையாகும். இப் புதிய கண்டுபிடிப்பு மகத்தானது மட்டுமல்ல; புதுமையானதும்கூட. மெக்ஸிகோவிலும் பெருவிலுமுள்ள தங்கச் சுரங்கங்களின் கண்டுபிடிப்பினைக் காட்டிலும் உழைப்புப் பத்திரத்தைக் கண்டுபிடித்தது மேலானது என்று ஓவனே பெருமைப்பட்டுக் கொள்கிறார். இக் கண்டுபிடிப்பைப் பிற சோஷியலிச வாதிகளும் பெருமையாகப் பேசுவதுண்டு. ஆனால் இதன் வழியாக மட்டும் பொதுவுடைமையை நாம் அடைந்துவிட முடியுமா? எல்லாரும்

சமமான கூலியைப் பெற முடியுமா? சமத்துவம் என்ற நிலை ஏற்பட்டு விடுமா? திறமைசாலி ஒருவன் 4 மணி நேரத்தில் ஒரு மீட்டர் துணியை நெய்து 4 மணி நேரத்திற்கான உழைப்புப் பத்திரத்தைப் பெறுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அதே நேரத்தில் அத் துணியை நெய்வதற்குச் சாதாரணமான தொழிலாளி 8 மணி நேரம் வேலை செய்து 8 மணி நேரத்திற்கான உழைப்புப் பத்திரத்தைப் பெறுகிறான் என்றால், திறமைக்குத் தண்டனைதான் கொடுக்கப்படுவதாக நினைக்க வேண்டியுள்ளது. அப்படியானால், எவருமே திறமையாக வேலைசெய்ய மாட்டார்கள்.

அடுத்து, உழைப்புப் பத்திரங்களைப் புகுத்துவதன் வழியாகப் பணப்புழக்கத்தை ஒழித்து விட முடியுமா? இதனைக் கண்டறிய ஓவன் ஒரு பரிசோதனை நடத்தியது குறிப்பிடத்தக்கது. லண்டனில் தேசிய சம உழைப்புப் பரிவர்த்தனை (National Equirable Labour Exchange) என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார் ஓவன். இது ஒரு கூட்டிறவுச் சங்கம் போன்றது. இதில் அங்கத்தினர்களாகச் சேரும் அனைவரும், அவரவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை இச் சங்கத்தில் கொடுக்க வேண்டும். அப் பொருள்களை எவ்வளவு நேரத்தில் உற்பத்தி செய்தனரோ அந்த நேரத்திற்கேற்ப அவர்களுக்கு உழைப்புப் பத்திரம் வழங்கப்பட்டதோடு அந்த நேரத்திற்கேற்ப அப் பொருள்களின் விலையும் குறிப்பிடப்பட்டது. ஒருவன் 8 மணி நேரத்தில் ஒரு ஜோடி செருப்பை உற்பத்தி செய்திருந்தால் அந்தச் செருப்பின் விலை 8 மணி நேர உழைப்புப் பத்திரமாகும். அப் பத்திரத்தைக் கொண்டு அவன் 8 மணி நேரத்தில்உற்பத்தி செய்யப்பட்ட வேறு எந்தப் பொருளையும் வாங்க முடியும். இவ்வாறாக, ஒவ்வொருவனும் தன் உழைப்புக் கேற்ற பொருள்களை வாங்கவும் இலாபமின்றி அப் பொருள்களைப் பரிவர்த்தனை செய்யவும் முடிந்தது. ஆனால்.அங்கத்தினர்களில பெரும்பாலானோர் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை அதிகநேரம் உழைத்து உற்பத்தி செய்ததாகப் பொய் சொல்லி அதிக நேர உழைப்புப்பத்திரங்களைப் பெற்றனர். சான்றாக, ஒரு நாளில் கலப்பை செய்த தச்சன், அதனைச் செய்ய இரண்டு நாளானதென்று கூறி இரண்டு நாளுக்குரிய உழைப்புப் பத்திரத்தைப் பெற்றான். கலப்பையின் விலை ஒரு நாள் உழைப்புச் செலவால் நிருணயிக்கப்பட்டது. இக்குறையை நீக்க, உற்பத்திப் பொருள்களின் விலையை நிருணயிக்கப் அனுபவமிக்க பல அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். அவர்கள் ஒரு மணி நேர

உழைப்பிற்கு ஆறு பென்ஸ் வீதம் பொருள்களின் விலையையும் உழைப்பின் விலையையும் நிருணயித்தனர். இது ஓவனின் அடிப் படைக் கொள்கைக்கு முரணானதாக அமைந்தது. பொருள்களின் விலை உழைப்புச் செலவால் நிருணயிக்கப்படுவதற்குப் பதிலாகப் பொருள்களின் அங்காடி விலையைக் கொண்டு உழைப்புச் செலவு நிருணயமானது. அதோடு, தரமில்லாத பொருள்களையும் விலை போகாத பண்டங்களையும் கொண்டுவந்து குவித்தனர் தொழி லாளர். இவ்வாறாக, உழைப்புப் பத்திரங்களுக்கு கிராக்கி ஏற் பட்டது. அவைகளை வாங்கவும் விற்கவும் கள்ளச்சந்தை தோன்றி யது. ஓவனின் திட்டம் முறியடிக்கப்பட்டுவிட்டது. இங்கும் ஓவன் பெருந்தோல்வி கண்டார்.

இலாப நோக்கத்தை ஒழித்துக்கட்ட ஓவன் கொண்டுவந்த திட்டம் ஒழிந்தபோதிலும் அவரது குறிக்கோள் மறைந்துவிட வில்லை. இலாபத்தை அகற்றிடத் தோன்றியுள்ள பலவிதமான கூட்டுறவுப் பண்டகசாலைகளே இதற்குச் சான்று. எனவே, கூட்டுறவு இயக்கத்திற்கு ஓவன் செய்துள்ள சேவை மகத்தான தாகும். உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் நேரடியாகத் தொடர்பு கொள்ளச் செய்வதுதான் கூட்டுறவுப் பண்டக சாலை களின் நோக்கம், இதன் வழியாகத் தரகர்கள் மட்டுமன்றி, இலாப நோக்கமும் நீங்கிவிடுகின்றது. அப்படியே இலாபத்திற்கு விற்கப் பட்டாலும் அந்த இலாபத்தொகை மறுபடியும் பண்டங்களை வாங்கி யோருக்கே பகிரப்படுகிறது.

எனவே ஓவனைக் கூட்டுறவு இயக்கத்தோடு சேர்த்துப் பேசுவதே வழக்கமாகிவிட்டது. உண்மையில் ஓவன் விரும்பியது கூட்டுறவு அல்ல; சோஷியலிசம்தான் அவரது அடிப்படையான குறிக்கோள். அவருடைய நூல்களில் கூட்டுறவு என்ற சொல்லைக் காண்பதரிது. ஆனால் "சோஷியலிசம் என்றாலென்ன?" என்ற தலைப்பில் அவர் வெளியிட்ட நூலில் சோஷியலிசம் என்ற சொல்லை முதன் முறையாகப் பயன் படுத்தியது ஓவன்தான் என்ற உண்மையை அறிய வருகிறோம். அவர் வகுத்த சோஷியலிசம் மிதமானதாகும். எனவே, பிரிட்டன் நாட்டின் மிதமான சோஷிய லத்தின் தந்தையாகவே ஓவன் மதிக்கப்படுகிறார். கார்ல் மார்க்சைப் போல் தீவிரமான சோஷியலிசத்தை அவர் விரும்ப வில்லை. தனியார் சொத்துரிமையை ஒழித்துக்கட்டத் திட்டம்

தீட்டவில்லை; அல்லது பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே பகைமை உணர்ச்சியைத் தூண்டி இரு இனத்த வரையும் மோதவிடவில்லை. மாறுக, இரு இனத்தவரும் ஒன்று பட்டு வாழ வேண்டுமென்றே அவர் விரும்பினர். "கூட்டு வாழ்வே இலட்சிய வாழ்வு" என்று கனவு கண்டார். அவரது கனவை நினைவாக்கவும் முயன்றார். பிற சோஷியலிச வாதி களினின்று முற்றிலும் மாறுபட்டவர் ஓவன். தனது கருத்துகளைக் கூறிய தோடு மட்டுமன்றி, அவற்றைச் செயல் படுத்தவும் முயன்ற மேதை அவர். எனவே, சோஷியலிச வாலாற்றில் ராபர்ட் ஓவனின் கருத்துகள் மட்டுமன்றி, அவரது வாழ்க்கையே முக்கிய இடம் வகிக்கிறதெனலாம். அவருடைய வாழ்க்கைதான் அவரது சோஷியலிசம் என்று கூடச் சிலர் நினைப்பர். அவர் எந்த நூலையும் எழுதாமலிருந்திருந்தால்கூட, சோஷியலிஸ வறலாற்றில் அவரது பெயர் சிறப்பிடம் பெற்றிருக்கும்.

11. சார்லஸ் ஃபூரியர் (1772-1837)

(Charles Fourier)

சோஷியலிச வரலாற்றில் சார்லஸ் ஃபூரியர் வகிக்கும் பங்கு விசித்திரமானது. ஃபூரியர் பிரான்ஸ் நாட்டிலுள்ள பசான்கன் (Basancon) என்னுமிடத்தில் 1772-ல் பிறந்தார். இவரது தந்தை ஒரு துணிக்கடைக்காரர். எனவே, ஃபூரியர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். பள்ளிப் படிப்பு முடிந்த பின் தொழில் விஷயமாக பெல்ஜியம், ஜெர்மனி, ஹாலந்து ஆகிய நாடுகளைச் சுற்றினவர். பல நாடுகள் சுற்றித் திரும்பிய பின், 1793-ல் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் காரணத்தால் தந்தையிடமிருந்து பெற்ற சொத்து அனைத்தையும் இழந்தார். இரண்டாண்டுகள் பட்டாளத்தில் பணியாற்றினர். பின்னர், எஞ்சிய வாழ்நாள் முழுவதும் திருமணமின்றி, தனியாக ஒரு விடுதியில் வாழ்ந்தார். அவ்வப்போது கிடைத்த வேலையைச் செய்து வயிறு வளர்த்தார். திட்டவட்டமான வருவாயும் பொறுப்புமின்றி, வாழ்க்கையில் வெறுப்புற்ற ஃபூரியர் 1837ஆம் ஆண்டில் காலமானர்.

இதுதான் ஃபூரியரின் வாழ்க்கைக் குறிப்பு. எனினும், அவரது வாழ்க்கையில் நடந்த இரண்டு சம்பவங்கள் இங்குக் குறிப்பிடத்தக்கவை. சிறு பையனாக தந்தையின் கடையில் இருந்த சமயம், வாடிக்கையாளர் ஒருவரிடம் வியாபார விஷயத்தில் பொய் சொல்லக்கூடாதென்று தெரியாமல் உண்மை பேசிவிட்டாராம். அதற்காகத் தந்தையிடம் திட்டும் வசவும் வாங்கினர். அச் சிறு வயதிலேயே வியாபாரம் என்பது பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்த தொழில் என்பதை உணர்ந்து அதன் மீது வெறுப்புக் கொண்டார். பின்னர் பல ஆண்டுகள் கழித்து மர்ஷெய்ல்ஸ் (Marseilles) என்னுமிடத்தில் வேலை செய்தபோது பிறிதொரு நிகழ்ச்சியும் நடந்தது. அரிசி வியாபாரி ஒருவர், அதிக விலைக்கு விற்கலாமென்று அரிசியைப் பதுக்கி வைத்திருந்தார். நாளடைவில் அந்த அரிசி முழுதும் கெட்டுவிடவே, நள்ளிரவில் அவையனைத்தையும் கடலில் கொட்டிவிட்டார். இதற்கு ஃபூரியரும் உடந்தையாக

இருக்க வேண்டியிருந்தது. ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் பட்டினியால் வாடும்போது, உணவுப் பொருளை வியாபாரிகள் இவ்வாறு வீணாக்கியதைக்கண்ட ஃபூரியர் வியாபாரத்தின் மீது மேலும் வெறுப்பை ஏற்படுத்திக்கொண்டார். அதனை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று சபதம் எடுத்துக்கொண்டார். தனது சபதத்தை அவரால் நிறைவேற்றமுடியவில்லையென்றாலும் இவ்விரு நிகழ்ச்சிகளும் அவரது சிந்தனையைத் தூண்டிவிட்டவைகளாகும்.

ஃபூரியர் கற்றறிந்த மேதையல்லர்; எனவே, எந்த வகையிலும் முக்கியமானவராகக் கருதப்படவில்லை. இருப்பினும் அவர் கடைப்பிடித்த கொள்கை, யாரிடமும் அதிகமாய்ப் பேசாமல் மவுன மாய் இருப்பதுதான். உலகம், நாகரிகம் என்னும் இருண்ட போர் வையில் மூழ்கிக் கிடக்கிறதென்றும், அந்த இருளைப் போக்கி ஒளி யைத் தருவதுதான் தனது பணியென்றும் அவரே கூறியுள்ளார். கடவுளைப் பற்றிய அவரது எண்ணங்கள் முரட்டுத்தனமானவை. கடவுள் இரக்கக் குணமும் தயாளப் பண்பும் நிறைந்தவர். மனிதனுக்கு அவர் அளித்துள்ள எண்ணங்களும் ஆசைகளும் புனிதமானவை. அவற்றையெல்லாம் மனிதன் அனுபவிக்க வேண்டும் என்பது ஃபூரியரின் குழந்தைத்தனமான நம்பிக்கை.

ஃபூரியரின் பொருளாதாரக் கருத்துகளை இரு பெரும் பிரிவு களாகப் பிரிக்கலாம். ஒன்று, நாகரிகம் என்னும் பெயரில் வளர்ந்துள்ள பழக்க வழக்கங்களையும் நிறுவனங்களையும் ஒழித்துக் கட்டுவதில் அவர் கொண்ட ஆர்வம்; மற்றொன்று அவற்றிற்குப் பதிலாகப் புதிய பொருளாதார அமைப்பினை உருவாக்க அவர் வகுத்த திட்டம். நாகரிகம் என்னும் பெயரில் உலகமே இருண்டு கிடக்கிறது. பொய்யும் பித்தலாட்டமும் மக்களிடையே மலிந்து விட்டன. நேர்மையும் கண்ணியமும் மங்கிவிட்டன. வாழ்க்கை யில் முன்னேற வேண்டுமாயின் பொய்யும் பித்தலாட்டமும்தான் நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகள். நேர்மையுடன் கண்ணியமாக வாழ்ந்தால் வாழ்க்கையில் தோல்விதான் ஏற்படும். இதுதான் இன்றைய நாகரிகத்தின் போதனை. இப் போதனையின் அடிப்படையிலேயே வியாபாரிகள் பணம் திரட்டிச் செல்வாக்குடன் வாழ்கின்றனர்.

வியாபாரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது ஃபூரியர் இடைக் காலத்திய மதக் கருத்திற்கே முக்கியத்துவம் தருகிறார். எந்த வியாபாரியும் இறைவனுக்குப் பிரியமுள்ளவனாக இருக்க முடியாது. வியாபாரம் தான் இன்றைய நாகரிகத்தின் சாபக் கேடு. தில்லு முல்லுகளே அதன் பண்புகள். சமுதாயத்தினரால் வெறுத்து ஒதுக்கப்படவேண்டிய வியாபாரி, சமுதாயத்திலேயே செல்வாக்கு

மிக்கக் குடிமகனுக உயர்ந்துவிட்டான். உற்பத்தியாளர்களுக்கும் பொது மக்களுக்கும் பணியாளாக இருக்கவேண்டியவன் வியாபாரி. ஆனுல் அவ்விரு இனத்தவரையுமே ஏமாற்றி உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டான். நாகரிக வாழ்வுதான் இதற்குக் காரணம்.

இவ்வாருக, சமுதாயத்திலுள்ள குறைபாடுகளுக்கும் அநீதிகளுக்கும் நாகரீக வாழ்வுதான் காரணம் என்ற முடிவுக்கு வந்தார் ஃபூரியர். எனவே, சமுதாயச் சீர்கேட்டை ஒழிப்பதற்கு அவர் வகுத்த வழி எளிமையானது. கடவுளைத்தான் மனிதன் நம்ப வேண்டுமேயன்றி, தத்துவமேதைகளையல்ல. கடவுள் நமக்களித்துள்ள உணர்ச்சிகளையெல்லாம் நெறிமுறையில் கட்டுப்படுத்தக் கூடாது. ஒழுக்கம் என்ற நினைவே மனத்திலிருந்து அகல வேண்டும். நமது உணர்ச்சிகளின் வழியாகத்தான் கடவுள் நம்மை ஆள்கிருர். அவ்வுணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது கடவுளை நிந்திப்பதற்கு ஒப்பாகும். கடவுள் நல்லவர்; அவர் நமக்கு பலவித உணர்ச்சிகளைக் கொடுத்துள்ளார்; அவற்றை நாம் வெளிக்காட்டவேண்டுமென்பதுதான் அவரது எண்ணம்.

கடவுள் நமக்கு ஒரே விதமான ஆசையைக் கொடுக்கவில்லை. பலவித ஆசைகளை அளித்துள்ளார். எனவே, ஒரே வகையான வாழ்வோ ஒரே மனைவியுடன் குடும்பம் நடத்துவதோ அவரது திட்டமல்ல. அவ்வாறிருந்தால் நமக்குச் சலிப்பை ஏற்றுக் கொள்ளும் பண்பை அவர் கொடுத்திருப்பார். தன்னிச்சைப்படி மனிதன் வாழவேண்டுமென்பதற்காகத்தான் அவர் பலவித இச்சைகளை இசைவுடன் தந்துள்ளார். எனவே, இறைவனின் திட்டப்படி நமது ஆசா பாசங்களைக் கட்டுப்படுத்தாமல் வாழவேண்டுமாயின், இன்றுள்ள சமுதாய வாழ்வையும் குடும்ப வாழ்வையும் துறந்து புதிய வாழ்வு வாழவேண்டும். அப்புதிய வாழ்விற்கு ஃபூரியர் வகுத்துள்ள திட்டம்தான் சோஷியலிச வரலாற்றிற்கு அவர் செய்துள்ள சேவையாகும்.

'பாலங்ஸ்' அல்லது கூட்டு வாழ்வு (Phalanx or Phalanstire)

தொழிலாளர் அனைவரும் கூட்டுறவு முறையில் ஒன்றுபட்டு ஒரே இடத்தில் வாழ வேண்டுமென்பதற்காக, ஃபூரியர் தனது கற்பனைச் சக்தியால் உருவாக்கிய திட்டம்தான் 'பாலங்ஸ்' எனப்படும். இத் திட்டத்தின்படி, 'பாலங்ஸ்' என்பது எல்லா வசதிகளையும்கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் போன்றது சுமார் 300 அல்லது 400 குடும்பங்கள் ஒரே இடத்தில் வாழும் வகையில் அமைக்கப்பட்டது. அவரவர்களுடைய தகுதிக்கும் நிலைமைக்கு ஏற்ப 'பாலங்ஸில்' வசதி செய்து தரப்படும். வசதியான அறை

கள் முதல் சாதாரண அறைகள் வரை அங்கு இருக்கும். அதே போல் அவரவர்களுடைய பணவசதிக்கேற்பப் பலவகையான சுவை உணவுகள் தரப்படும். இது, வெளித்தோற்றத்தில் ஏறக் குறைய ஒரு பெரிய உல்லாசப் பயண விடுதியைப் போன்றது. அங்கு எவ்விதமான கட்டுப்பாடும் இராது.

பாலங்ஸில் பல குடும்பத்தினர் ஒன்றாக உண்டு, வாழ்ந்து, மகிழ்ந்திருப்பது பொதுவுடைமைத் தத்துவத்தைப் பிரதிபலிப்பது போலத் தோன்றலாம். ஆனால், உண்மையில் பாலங்ஸில் வாழ் வதால் சுதந்திரம் பறிபோவதில்லை. அனைவரும் மனம்போன போக்கில், விருப்பமான நேரத்தில் விருப்பமான உணவை உண்டு விருப்பமான வேலையைச் செய்து, விருப்பமானவர்களோடு கூடி மகிழ்ந்திருப்பர். அவ்வாறு, ஒரே இடத்தில் 300 அல்லது 400 குடும்பத்தினர் ஒன்றாக வாழ்வதால் சிக்கனமாய் வாழவும் முடியும். ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒவ்வொரு வீட்டில், ஒவ்வொரு சமைய லறையில் ஒவ்வொரு அடுப்பில் சமைத்துச் சாப்பிடுவதற்குப் பதிலாக எல்லோரும் சேர்ந்து ஒரே இடத்தில் சமைத்துச் சாப் பிட்டால் பண்டபாத்திரங்கள், அடுப்பு, விறகு எல்லாம் மிச்சப்படு மல்லவா? அப்போது 'நான்' 'எனது' குடும்பம் என்றில்லாமல் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து ஒருவரையொருவர் அறிந்து, பலரு டைய பண்புகளுக்குமேற்ப ஒவ்வொருவரும் இசைந்து வாழும் பாக்கியம் கிடைக்கும். எல்லாரும் எல்லாரிடமும் இன்புற்று வாழும் வாய்ப்பு கிட்டும். ஃபூரியர் வகுத்த திட்டம் இன்று ஓரளவிற்கு அமெரிக்காவில் செயல்பட்டு வருகிறது. திருமண மாகாதவர்கள் மட்டுமன்றி, இளம் தம்பதிகளும் வீட்டில் வாழ்வதை விட விடுதிகளில் வாழ்வதே சிக்கனமானதென நினைக்கின்றனர். விடுதி வாழ்வையே விரும்புகின்றனர். ஆனால் ஃபூரியர் கூறியபடி மனம்போல் வாழ்வதில்லை.

ஒருங்கிணைந்த கூட்டுறவு Integral Co-operation)

ஃபூரியரின் திட்டப்படி, பாலங்ஸ் என்பது வெறும் உணவு விடுதியல்ல; அதைச் சேர்ந்த அங்கத்தினர்கள் வேலை செய்து வேண்டியதை உற்பத்திசெய்யவும் வேண்டும். அவ்வாறாயின் எழில் நிறைந்த செழிப்பமான இடத்தில்தான் பாலங்ஸ் அமைய வேண்டும். ஒவ்வொரு பாலங்ஸைச் சுற்றிலும் சுமார் 400 ஏக்கர் நிலம் இருக்கவேண்டும். பண்ணைகளும் பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கருவிகளும் தேவை. அதோடு வேறுபல நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கேற்ற தொழிற்சாலைகளும் இருக்கவேண்டும். அங்கத்தினர்களுக்குத் தேவைப்படும் எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகளைத்

தும் வேண்டும். எனவே, பாலங்ஸை கூட்டுப்பங்குக் கம்பெனி களைப்போல் அமைப்பது சிறந்தது. முதலாளிகள் தங்கள் முதலை அர்ப்பணம் செய்யவேண்டும்; தொழிலாளர்கள் தங்கள் உழைப் பைத்தரத் தயாராயிருக்கவேண்டும். பாலங்ஸின் அங்கத் தினர்கள் நிருவாகத்திறனுடைய சிலரைத் தேர்ந்தெடுத்து எல்லா நிருவாகப் பொறுப்பையும் அவர்களிடமே விட்டுவிடவேண்டும். பாலங்ஸின் இலாபத்தில் $\frac{1}{3}$ பங்கு முதலாளிகளுக்கும் $\frac{5}{12}$ பங்கு தொழிலாளருக்கும், நிருவாகிகளுக்கு $\frac{3}{12}$ பங்கும் கொடுக்கப்பட வேண்டுமென விரும்பினார் ஃபூரியர்.

அவர் வகுத்த 'பாலங்ஸின்' நோக்கம், சமுதாயத்தின் முக்கிய மான பிரச்சினையைத் தீர்ப்பது எவ்வாறு என்பதைச் சுட்டிக்காட்டு கிறது. அதாவது, கூலிக்காக வேலைசெய்யும் தொழிலாளரைக் கூட்டுறவுச் சொந்தக்காரராக ஆக்குவதே அக் குறிக்கோள். எனவே, தொழிலாளர் பெறும் வருமானம் வெறும் கூலியாகமட்டும் இருக்கக்கூடாது; பாலங்ஸின் உரிமையாளர்களென்ற முறையிலும் இலாபம் பெறவேண்டும். இக் கொள்கையை நாம் சிந்துத்துப் பார்த்தால், இது விசித்திரமானது மட்டுமல்ல; சிக்கலானதும் கூட என்பது தெளிவாகும். நவீன சமுதாயத்தில் தொழிலாளர்களிடம் மூலதனமிருப்பதில்லை; முதலாளிகள் வேலை செய்வதில்லை. ஆனால் ஃபூரியர் காண விரும்பிய கற்பனையான 'பாலங்ஸில்' தொழிலாளி முதலாளி என்ற பாகுபாடின்றி இரு இனத்தவரும் ஒற்றுமையாய் வாழவேண்டும். இதற்கு முதலாளிகளை வேலை செய்யவும் தூண்ட வேண்டும்; தொழிலாளிகளுக்கு மூலதனம் தரவேண்டும். இதையே ஃபூரியர் விரும்பினார். இதற்காகத்தான் தனது கற்பனை வாயி லாகப் மிகப்பெரியதொரு திட்டத்தை 'பாலங்ஸ்' என்னும் பெயரில் தீட்டினார். தொழிலாளிகளுக்கு மூலதனம் கொடுப்பது என்பது எளிதாயிருக்கலாம். ஆனால் முதலாளிகளை வேலைசெய்யத் தூண்டுவ தெப்படி ?

கவர்ச்சியான வேலை

தொழிலாளி; முதலாளி என்ற பாகுபாடின்றி, எல்லாரும் ஒற்றுமையாய் வேலைசெய்ய வேண்டுமாயின் வேலையைக் கவர்ச்சி யானதாக மாற்றவேண்டும். இதுவே ஃபூரியரின் திட்டத்தில் கருவூலமாக அமைவது. எங்கு பார்த்தாலும் வேண்டா வெறுப் பாகத்தான் தொழிலாளர் வேலை செய்கின்றனர். காரணம், சம்பா திக்க வேண்டுமென்பதற்காக, அல்லது வேறு வழியில்லாத காரணத்திற்காக அவர்கள் வேலை செய்வதுதான். அல்லது வேலை செய்வதை அவர்கள் கடமையாகக் கருதுவதுதான். ஆனால் ஃபூரியரின் இலட்சியம் என்னவெனில், பிழைக்க வேண்டுமென்

பதற்காகவோ அல்லது கடமைக்காகவோ எவரும் வேலைசெய்யக் கூடாது. எல்லாருக்கும் அவரவர்களுக்கு வேண்டிய அன்றாட வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டால் அவர்கள் நிர்ப்பந்தத்தின் காரணத்தால் வேலை செய்யாமல், தங்கள் விருப்பம்போல் வேலை செய்வர். சுவையான நடன நிகழ்ச்சிக்குச் செல்வதுபோல் அனைவரும் வேலைக்குச் செல்ல வேண்டும். அப்படியானால் அவர்கள் செய்யும் வேலை பிடித்தமானதாக இருக்கவேண்டும்.

ஒவ்வொருவரும் தத்தம் வேலையை விரும்பிச் செய்யவேண்டும். அவ்வாறாயின் வேலையை விருப்பமானதாகச் செய்வதெப்படி? வேலையின்மீது மக்கள் மோகம் கொள்ளுமாறு செய்வதெப்படி? மக்கள் வேலையை விரும்பவேண்டுமானால் அவர்களது விருப்பப்படி வேலைசெய்ய விட்டுவிடவேண்டும். விருப்பமான வேலையைச் செய்யும்போது எவருக்கும் சலிப்பு ஏற்படக் கூடாது. எனவே, சலிப்பு ஏற்படும்வரை எவருமே ஒரு வேலையைத் தொடர்ந்து செய்யக்கூடாது. எந்த வேலையையும் எவருமே இரண்டுமணி நேரத்திற்குமேல் செய்யக்கூடாது. ஒரு வேலையில் சலிப்பு ஏற்பட்டுவிட்டால், தனக்குப் பிடித்தமான வேறொரு வேலையைச் செய்யவேண்டும். இவ்வாறு ஒருவன் பல வேலைகளை மாறி மாறி தன்விருப்பம்போல் செய்தால் சலிப்பே ஏற்படாது. அதோடு, மகிழ்ச்சியுடன் வேலைசெய்ய வேண்டுமானால் வேலை செய்வோருக்கிடையே நல்ல போட்டியை ஏற்படுத்த வேண்டும். எனவே வேலை செய்வோரைப் பல குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவும் பிற குழுக்களோடு போட்டியிட்டு ஆடிப்பாடி வேலைசெய்ய வேண்டும். இவ்வாறு தொழில்களை அமைத்தால் மக்களுக்குள் ஒற்றுமையும் பாசமும் மலர்ந்து ஒருவரையொருவர் வெறுப்பதற்குப் பதிலாக நேசிக்கத் தொடங்குவர். தங்கள் விருப்பப்படி வேலை செய்தால் உற்பத்தி பெருகும். உழைப்பாளிகளிடையே உற்சாகம் பொங்கும். இதுதான் ஃபூரியரின் திட்டம்.

இத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்தோடு இதற்கு ஓர் விளம்பரம் கொடுத்தார் ஃபூரியர். எவராவது பெரிய முதலாளி தானே முன்வந்து பணம் கொடுத்தால் இதனை நிறைவேற்றிக் காட்டுவேன் என்றார். தன்னைத் தேடிவரும் முதலாளி ஏமாறக் கூடாதென்பதற்காக ஒரு நேரத்தைக் குறிப்பிட்டு அந்த முதலாளியை எதிர்பார்த்து வாசலில் காத்துக்கிடந்தார். நாள் தவறாமல் குறிப்பிட்ட நேரத்தில் வழிமேல் விழி வைத்துக் காத்து ஏமாற்றம் கொண்ட ஃபூரியரை இவ்வுலகத்தை ஆளும் பெரிய முதலாளியே (கடவுளே) அழைத்துச் சென்று விட்டார்.

ஃபூரியரின் கருத்துகளில் வேறு இரண்டு முக்கியமானவை. ஆனால் அவை பொருளாதாரத் தொடர்புடையவை அல்ல. எனவே அவற்றை விரிவாக இங்கு ஆராயத் தேவையில்லை. அவற்றுள் ஒன்று திருமணம் பற்றியதாகும். திருமணம் என்பது நாகரிக வாழ்வின் விளைவாகும். திருமணம் செய்யாமல் இன்றுள்ள ஹிப்பிகள்போல் வாழ்வதே இறைவனின் திட்டம் என்கிறார். அப்போதுதான் இறைவன் தந்துள்ள ஆசாபாசங்களையெல்லாம் நாம் முழுமையாகத் திருப்திபடுத்த முடியும். அதோடு, திருமணம் செய்யும் ஒவ்வொருவரும் தன்னைப்பற்றியும், மனைவி குழந்தைகளைப் பற்றியும்தான் கவலைப்படுவர். நாட்டைப்பற்றி எள்ளளவும் சிந்திக்கமாட்டார்கள்: எனவே, மனிதனின் சுயநலத்திற்குக் காரணமே திருமணம்தான் என்கிறார். திருமணத்தை வெறுத்த ஃபூரியர் திருமணமாகாத தனிக்கட்டையாகவே வாழ்ந்தது விவேகமானதெனச் சிலர் கூறுவர். பெண்களுக்கு அதிக உரிமை வேண்டுமென வாதாடினார் ஃபூரியர். அவர்களை அடிமைகளாகவும் வீட்டு வேலைக்காரிகளாகவும் வைத்துக்கொள்ளாமல் தங்கள் விருப்பம்போல் வாழ அவர்களுக்கும் உரிமை வேண்டுமென்றார்.

அவரது இரண்டாவது முக்கியக் கருத்து சிறுவர்களின் கல்வியைப் பற்றியதாகும். நாகரிக உலகில் பெரியவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆறு அல்லது ஏழு வயதில்தான் கல்வி கற்றுக் கொடுக்க ஆரம்பிக்கின்றனர். அதுவும் வெறும் ஏட்டுப்படிப்புத் தான் சொல்லித் தருகின்றனர். ஆனால் ஃபூரியர் இரண்டு வயதிலேயே கல்வியை ஆரம்பிக்க வேண்டுமென்கிறார். அதுவும் குழந்தைகளின் பண்புகளுக்கேற்பத் தொழில் கல்வியே சிறந்ததென்கிறார். அதோடு, குழந்தைகளின் சுவை அறிவையும் நுகரும் பண்பையும் வளர்க்க அவர்களுக்குச் சமையல் கலை அவசியம் என்கிறார். செவிக்குணவாகவும் பார்வைக்கு இனிதாகவும் உள்ள கச்சேரி, நடனம் ஆகிய கலைகளையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டுமென்கிறார்.

முடிவுரை

ஃபூரியரின் கருத்துகளும் கொள்கைகளும் செல்வாக்கு மிக்கவை. குறிப்பாக, பிரான்ஸ் நாட்டிலிருந்த தனியுரிமைக் கோட்பாடு தளர்வதற்கு அவரது கருத்துகள் உதவின. அடுத்து, கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு அவரது எண்ணங்கள் பேருதவி செய்துள்ளன. ஃபூரியரின் 'பாலங்ஸ்', கூட்டுறவு இயக்கத்தில் ஒரு பரிசோதனையாகவே விளங்கியது. மக்கள் நெருக்கடி நிறைந்த லண்டன், பாரிஸ், நியூயார்க் ஆகிய நகரங்களில் பல குடித்தினர் விடுதிகளில் வாழ்வது சார்லஸ் ஃபூரியரின் கருத்தினைப் பிரதிபலிக்

கிறது. எனினும், அவரது கடவுள் நம்பிக்கை குழந்தைத்தன மானது. அந்த நம்பிக்கையில் அவர் கூறும் 'மனம்போல் வாழ்வு, என்ற மந்திரம் முட்டாள்தனமானது என்று சொல்ல முடியாவிட் டாலும் விவேகமற்றது. அறியாமையின் நலன்களையும் தீமைகளை யும் ஒருங்கேபெற்று அதனால் ஏற்படும் விளைவுகளுக்குச் சான்றாக விளங்குபவர் ஃபூரியர்.

லூயி பிளாங் (1813—1882)
(Louis Blanc)

லூயி பிளாங் பிரான்ஸ் நாட்டிலுள்ள மத்ரித் (Madrid) என்னுமிடத்தில் பிறந்து பாரிஸ் மாநகரத்தில் கல்வி பயின்றார். படிப்பு முடிந்ததும் அரசியலில் தீவிரமான பங்கு கொண்டார். புகழ் பெற்ற பத்திரிகை ஆசிரியராகத் தனது 26ஆம் வயதிலேயே பெயர் எடுத்தார். ஒரு சிறந்த வரலாற்று ஆசிரியராகவும் விளங் கினார். இதற்கு அவர் எழுதிய "பிரெஞ்சுப் புரட்சியின் வரலாறு" என்ற நூலே சான்று. 1841ஆம் ஆண்டில் 'உழைப்பாளிகளின் அமைப்பு முறை" என்னும் பொருளாதார நூலை வெளியிட்டார். இதில் அவர் கூறும் கருத்துகள் முன்னரே "சமூக முன்னேற்றம் பற்றிய மதிப்புரை" என்னும் தலைப்பில் பல கட்டுரைகளாக வெளி வந்தன. அவர் வெளியிட்ட நூலுக்குப் பொது மக்கள் பேராதரவு தந்தனர். தொழிலாளிகள் அதனைப் போற்றிப் புகழ்ந்தனர். இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் இந் நூலின் எளிமை யானதும் சுவையானதுமான நடை ஒரு காரணம். சுருக்கமாகவும் அழுத்தந்திருத்தமாகவும் அமைந்துள்ள வசனங்கள் வேறொரு காரணம். அடுத்து, அந் நூலில் பொருளாதார உலகிலுள்ள போட்டி முறையை அவர் இழித்துக் கூறுவதும் பிறிதொரு காரண மாகும். அந் நூலைப் படிக்காதவரோ அதனைப் பற்றிப் பேசாத வரோ பிரான்ஸில் ஒருவருமில்லை எனலாம் அந் நூல் அடுத் தடுத்து பதிப்பிக்கப்பட்டு வெளியானது. ஆனால் அந் நூலில் செயின்ட் சைமன், சிஸ்மாண்டி, ஃபூரியர் ஆகியோரின் கருத்து களைத்தான் விளக்கினாரேயன்றி சொந்தமாக எதுவுமில்லை. ஏழைப் பாட்டாளி மக்கள் பட்ட பாட்டினைத்தான் அதிகமாக வருணித்துள் ளார். எனவே, அவரைப் பாட்டாளிகளின் எதிரொலியாகக் கூடக் கருதினர். பிரெஞ்சு சோஷியலிச நூல்களில் முக்கியமானதாக அந் நூல் கருதப்பட்டது. அந் நூலில் கேள்விக் குறிகளும் வியப்புக் குறிகளுமே அதிகமாக இருந்தன.

அந் நூலின் வெற்றிக்கு அக் காலத்திய பிரெஞ்சுச் சூழ்நிலை களே முக்கியக் காரணமெனலாம். அதோடு அவர் வகுத்துள்ள

சோஷியலிசம் கனவுலகக் கற்பனை சோஷியலிசமாக இல்லாமல் பட்டாளிகளின் சோஷியலிசமாகவே புலப்பட்டது.

போட்டிக்கு ஒரு சாட்டை அடி

உற்பத்தியாளரிடையேயுள்ள போட்டியே பொருளாதார நோய்களுக்கெல்லாம் மூல காரணம் என்கிறார் பிளாங். ஆயிரக் கணக்கான மக்கள் வறுமையில் வாடுவதற்கும் ஒழுக்கம் கெட்டு சீர்கெட்டு வாழ்வதற்கும் போட்டியே காரணம். இவ்வுண்மையை விளக்குவதற்கு அதிகாரபூர்வமான பல புள்ளி விவரங்களைத் தருகிறார். எனவே, சமூகச் சீர்கேடுகளையெல்லாம் ஒழித்துக் கட்டுவதற்கு ஒரே வழிதான் உண்டு. போட்டியை விலக்கவேண்டும். அதற்குப் பதிலாகக் கூட்டுறவு அடிப்படையில் புதியதொரு சமுதாயத்தை உருவாக்கவேண்டும். இதுதான் சமூக நோய்க்கு அவர் கண்ட ஒரே மருந்து.

சமூகப் பட்டறைகள் (Social workshops)

லூயி பிளாங்க் நியூ ஹார்மனியையோ அல்லது பாலங்ஸ்ஸையோ உருவாக்காமல் சமூகப் பட்டறையொன்றையே விரும்பினார். இது ஒரு பொருளை உற்பத்தி செய்வோர் அமைக்கும் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் போன்றது ஆனால் இதில் உறுப்பினர்களாய்ச் சேரும் அனைவரும் ஒருவரோடொருவர் சமமானவர்; அதோடு, தாங்களாகவே பட்டறை நிருவாகத்தை மேற்கொள்பவர்கள். இவ் வகையில் நுகர்வோரையும் உற்பத்தியாளரையும் ஒன்றுபடுத்த வகுக்கப்பட்ட ஓவனின் திட்டத்திலிருந்தும் ஃபூரியரின் திட்டத்திலிருந்தும் இது மாறுபட்டதாகும் உற்பத்தியாளர் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதுதான் பிளாங்கின் திட்டம். எனவே, இது மிக எளிமையானதாகும்.

கூட்டுறவு முறையில் சமூகப் பட்டறையொன்றைத் தொடங்கி விட்டால் சமூகமே ஒன்றுபட்டுக் கூட்டாக அமைந்துவிடுமென்கிறார் பிளாங். அவருடைய திட்டம் தெளிவானதாயுமில்லை; முறையாகவும் விளக்கப்படவில்லை. சமூகப் பட்டறையைத் தொடங்கினால் போதுமெனக் கூறுகிறாரேயன்றி, எதிர்காலத்தில் சமுதாயம் எப்படியிருக்கும் என்பதை அவர் கனவு காணவில்லை. எனவே, செயல்படுத்துவதற்கு எளிமையான அவரது திட்டம் வெற்றிபெற்றதில் வியப்பொன்றுமில்லை. பிளாங்கின் திட்டப்படி, அரசாங்கத்திடமிருந்து கடனாகப் பணத்தைப் பெற்று, ஒரு சமூக வங்கியைப்போல் பட்டறையைத் தொடங்கவேண்டும். இப் பட்டறையிலிருந்து

தொழிலாளர் அனைவரும் தத்தமக்கு வேண்டிய மூலதனத்தைப் பெறவேண்டும். தொழிலாளர் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ளவேண்டுமென்பதற்காக, கல்வி முறையை மாற்றிப் புதிய முறையைப் புகுத்தவேண்டுமென்கிருர். இவ்வாருக, பிற கனவுலக சோஷியலிச வாதிகளைப் போல் பிளாங்கும் புதிய சூழ்நிலையை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுகிருர்.

சமூகப் பட்டறையைத் தொடங்கியவுடன் அதன் நிருவாகப் பொறுப்பை ஓராண்டிற்கு அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன்பின் உறுப்பினர்களே தங்களுக்குள் திறமைமிக்கவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலம் நிருவாகம் செய்துகொள்ள வேண்டும். பட்டறைக்குக் கிடைக்கும் வருமானத்தை மூன்று பிரிவாகப் பிரித்து, ஒரு பகுதியை உறுப்பினர்களிடையே பகிர்ந்துகொள்ளவேண்டும். வேருெரு பகுதி முதியோர், நோய் வாய்ப்பட்டோர், முடம் போன்றவர்களுக்காகச் செலவிட வேண்டும். எஞ்சிய பகுதியைக்கொண்டு புதிய உற்பத்திக் கருவிகளை வாங்கி, சங்கத்திற்குப் புதிதாய் வரும் அங்கத்தினர்களுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டும்.

பிளாங்கின் சமூகப்பட்டறை நிருவாகம், அங்கத்தினர்களைக் கொண்டே நடை பெறுவதால், அது இன்றைய தொழிற்சாலை நிருவாகத்திலிருந்து மாறுபட்டதாகும். கூட்டுறவு முறையில் நிருவகிக்கப்படும் தொழிற்சாலை அல்லது பட்டறை தனியார் நிருவகிக்கும் தொழிற்சாலைகளைச் சிதறடிக்க வேண்டும். அதாவது கூட்டுறவுத் தொழிற்சாலை சிக்கனமான வழியிலும் திறமையான முறையிலும் நிருவகிக்கப்பட்டு, தனியார் தொழிற்சாலைகளோடு போட்டியிட்டு முன்னேற வேண்டும். அப்போது, தனியார் தொழிற்சாலைகள் மறைந்து கூட்டுறவுத் தொழிற்சாலைகளே நிலவும். இவ்வாருக, தனியார் தொழிற்சாலைகளோடு போட்டியிடுவதன் வழியாகவே போட்டியை ஒழித்துக் கட்ட வேண்டுமென்கிருர் பிளாங். இவ்வாருக, எல்லாத் தொழிற்சாலைகளும் கூட்டுறவு முறையில் அமைந்து விட்டால், அவைகள் ஒன்ருேடொன்று போட்டியிடுவதற்குப் பதிலாக, ஒன்றுக்கொன்று உதவியாய்ச் செயல்படுமென்கிருர் பிளாங். சமூகத்தில் போட்டி மனப்பான்மை மறைந்துவிடும். சமூக வாழ்வு ஒழுக்கமானதாயும் நிறைவானதாயும் அமையும். இதுவே பிளாங்கின் திட்டம்.

இத் திட்டத்தைச் செயல்படுத்த பிரமாதமாக எதுவும் தேவையில்லை. அரசாங்கம் கொஞ்சம் முயற்சி செய்தால் போதும்; கூட்டுறவுத் தொழிற்சாலையைத் தொடங்க சிறிய மூலதனம்

கிடைத்தால் போதும் என்கிறார் பிளாங். பிளாங்கின் திட்டம் ஏனைய கனவுலக சோஷியலிச வாதிகளின் திட்டங்களிலிருந்து மாறுபட்டதாகும். மற்றவர்களெல்லாம் மக்களே முயற்சி செய்து கூட்டுறவு வாழ்வைத் தொடங்க வேண்டுமெனக் கூறினார்கள். ஆனால் பிளாங் அரசாங்கத்தின் முயற்சிதேவை; அதன் தலையீடின்றி கூட்டுறவுத் தொழிலைத் தொடங்குவது கடினம் என்கிறார். மக்கள் தங்கள் சேமிப்பின் மூலம் கூட்டுறவுத் தொழிற் சாலையைத் தொடங்குவது கடினம்; எனவே, அரசாங்கமே முதலீடு செய்வதற்கு வேண்டிய மூலதனத்தைத் தரவேண்டும். அதோடு, எந்தப் புதிய அமைப்பை உருவாக்க வேண்டுமானாலும் அதற்கு வலிமையும் அதிகாரமும் தேவை. இவை இரண்டும் அரசாங்கத் திடமே உள்ளன. எனவே, அரசாங்கம் முயன்று, இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைக்கு உயிர்கொடுத்தால் போதும். பின்பு எல்லாம் தானாகவே நடைபெறும். இதைத்தான் இன்று நாம் கூட்டுறவுச் சங்கங்களில் காண்கின்றோம். அரசாங்கத்தின் உதவியும் கண் காணிப்புமின்றி, எந்தக் கூட்டுறவு உற்பத்தி யாளர் சங்கமும் நடைபெறுவது இல்லை. எனவே, ஏழை மக்களுக்குப் பண உதவி செய்யக்கூடிய வங்கியாக அரசாங்கம் அமைய வேண்டும். இவ்வாறாக, அரசாங்கத்தின் துணையையும் முயற்சியையும் நாடிய முதல் சோஷியலிசவாதியாகத் திகழ்ந்தார் பிளாங். சமூக நோய்க்கு அவர் கண்ட காரணம் மிகச் சாதாரண மானது; அந் நோயைத் தீர்க்க அவர் கண்ட வழி அதைவிட எளிதானது.

முடிவுரை

பிளாங், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தந்தையென மதிக்கப்படுபவர். சோஷியலிச வரலாற்றிலும் முக்கிய இடம் வகிப்பவர். கனவுலக சோஷியலிசத்தை பாட்டாளிகளின் சோஷியலிசமாக மாற்றுவதில் அவரது கருத்துகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பிரெஞ்சுப் புரட்சி தொடங்கிய காலம் தொட்டு 1830ஆம் ஆண்டுவரை பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் கட்டுப் பாடில்லாத சுதந்திரத்தையே தமது குறிக்கோளாகக் கொண்டனர். இதனால் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பெரும் பிளவு ஏற்பட்டது. இப் பிளவைப் போக்க இருவரையும் இணைக்கும் விதத்தில் கனவுலக சோஷியலிஸ்டுகள் ஒரு சில திட்டங்களை வகுத்தனர். ஆனால் பிளாங் காண விரும்பும் பாட்டாளி சோஷியலிசம் தொழிலாளருக்கு மட்டும் வகுக்கப்பட்டதாகும். சோஷியலிச சமுதாயத்தை அமைப்பதில் அரசாங்கமும் பங்கு கொள்ள வேண்டு மென்று வலியுறுத்திய முதல் சோஷியலிஸ்டு பிளாங்தான்.

ஃபியர் ஜோஸப் புரூதான் (1809—1865)

(Pierre Joseps Proudhon)

பியர் ஜோஸப் புரூதான் 1809-ல் பிரான்ஸிலுள்ள பெசான்கன் (Besancon) என்னுமிடத்தில் பிறந்தார், அவருடைய தந்தை மதுபானம் காய்ச்சும் தொழிலைச் செய்துவந்தார். புரூதான் இளமையிலிருந்தே வறுமையில் வாடினார். இதனைத் தன் வாழ்நாள் முழுவதும் அவர் மறக்கவேயில்லை. வசதியில்லாத காரணத்தால் கல்லூரியில் சேர்ந்து படிக்க இயலாத புரூதான் தனது பத்தொன்பதாவது வயதிலேயே அச்சகம் ஒன்றில் வேலைக்கமர்ந்தார். முதலில் அச்சுக் கோக்கும் வேலையையும் பின்னர் அச்சானதைச் சரிபார்க்கும் வேலையையும் செய்தார். அச்சகத்தில் பணியாற்றிய அவருக்குப் பல நூல்களைக் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் பல கருத்துகள், சில சமயம் முரண்பட்ட கருத்துகள் அவர் மனதில் பதிந்தன. அரசியல் பொருளாதாரத்தில் ஆர்வம் கொண்ட புரூதான், அவ்வியலைமேலும் படிப்பதற்குரிய வாய்ப்பைப் பெற்றார். 1840-ல் தனது 'சொத்து என்பதென்ன?' (What is Property) என்னும் முதல் நூலை வெளியிட்டார். அடுத்து, 'வறியவர்களின் தத்துவம்' (The philosophy of misery) என்னும் நூலை 1846-ல் வெளியிட்டார். இந் நூலில் தனக்கு முந்திய சோஷியலிச வாதிகளின் திட்டங்களையெல்லாம் குறைகூறிக், கண்டித்தார். ஆனால் இந்நூலை கார்ல் மார்க்ஸ் கடுமையாகத் தாக்கியதன் விளைவாக இருவருக்குமிடையே இருந்துவந்த நட்பு முறிவடைந்தது.

புரூதான் 1848-ல் நடந்த பிரெஞ்சுப் புரட்சியில் கலந்து கொள்ளவில்லையெனினும், புரட்சி செய்த பொதுமக்களுக்கு ஆதரவாகப் பத்திரிகையொன்றை நடத்தினார். அரசாங்கத்தின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் தாக்கி எழுதினார். அதனால் பிரெஞ்சு அரசாங்கம் அப் பத்திரிகைக்குத் தடைபோட்டதுடன் புரூதானுக்கு மூன்றாண்டுகள் சிறைத்தண்டனையும் கொடுத்தது. சிறையிலிருந்து விடுதலை பெற்றதும் மீண்டும் புரட்சிகரமான கருத்துகளை வெளியிட்டு வந்தார். 185-ல் பெல்ஜியம் நாட்டிற்குச் சென்று தஞ்சமடைந்தார். 860-ல் பாரிஸ் நகருக்குத் திரும்பி, சில ஆண்டுகளுக்குப் பின் மரணமடைந்தார். புரூதான் எழுதிக் குவித்த நூல்களும் கட்டுரைகளும் பல. அவற்றுள் சில மட்டும் அவரது மரணத்திற்குப் பின் வெளிவந்தன. நீதியைப்பற்றிய அவரது நூல் அரசியல், பொருளாதாரக் கருத்துகளையும் பொதுவான சில எண்ணங்களையும் கொண்ட பெரியதொரு நூலாகும்.

சொத்து என்பதென்ன ?

பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் புரூதான் வகிக்கும் இடம் தெளிவானதல்ல. எனினும், இதர சோஷியலிசவாதிகளைப்போல் தனியார் சொத்துரிமையைத் தாக்கிப் பேசினர். சொத்து என்பதென்ன என்னும் கேள்விக்கு அவர் அளிக்கும் விடை சுருக்கமானது. 'களவுதான் சொத்தாகும்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறர். மனிதன் வலிமையும் செல்வாக்கும் பெறுவதற்கும் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு தோன்றிப் புரட்சி ஏற்படுவதற்கும் மூல காரணமானது சொத்து. சமூகச் சீர்கேட்டிற்கும் அநியாயத்திற்கும் அடிப்படையானது சொத்துதான். எனவே, சொத்துரிமையைக் கண்டிக்கும் பணியில் ஈடுபடுகிறர் புரூதான். இயற்கைவாதிகள் சொத்துரிமை புனிதமானதென்றும் இயல்பானதென்றும் கூறி அவ்வுரிமையை நிலைநாட்டப் பல விளக்கங்களைத் தந்தனர். அவர்கள் கொடுத்த ஒவ்வொரு விளக்கத்தையும் தவருனதென எண்பிக்க முயல்கிறர் புரூதான்.

சொத்து வைத்திருப்பவர்கள் உழைக்காமலேயே வருமானம் பெறுகின்றனர். மற்றவர்களின் உழைப்பால் விளைந்த உற்பத்தியில் பங்கு எடுக்கின்றனர். உழைப்பு ஒன்றுதான் பொருள்களை ஆக்கவல்லது. உழைப்பின்றி, நிலமோ மூலதனமோ ஒன்றுக்கும் உதவாது. எனவே, மற்றவர்களின் உழைப்பால் தோன்றும் பலனை அனுபவிக்கும் உரிமையை வழங்குவதுதான் சொத்துரிமை. குத்தகை, வட்டி, இலாபம் என்னும் பல்வேறு பெயர்களில் முதலாளிகள் பெறும் வருமானம் உண்மையில் தொழிலாளிக்கே உரியது மற்றவர்களுக்குரியதை எடுத்துக் கொள்வது அநீதிமட்டுமல்ல; களவுமாகும். புரூதான் சொத்துரிமையைத் தாக்கிப் பேசுவதில் புதுமையொன்றுமில்லை. அவருக்கு முன்னர் எத்தனையோ பேர் சொத்துரிமையைக் கண்டித்துள்ளனர். ஆனல் புரூதான் கண்டிக்கும் விதமும் தொனியும் சிறப்பானவை.

சோஷியலிசத்திற்கும் கண்டனம்

தனியார் சொத்துரிமையைக் கண்டிக்கும் பலர் சோஷியலிச சமுதாயத்தையே எண்ணிப் பார்ப்பர். புரூதானுக்கு முன்னோடிகளாக விளங்கிய பல சோஷியலிச வாதிகளும் அவ்வாறே எண்ணினர். ஆனல் புரூதான் சோஷியலிசத்திற்கும் கண்டனம் தெரிவிக்கிறர். புரூதானைப்போல் எவருமே சோஷியலிசவாதிகளை வன்மையாகக் கண்டித்திருக்கமுடியாது. சைமோனியர்களை அவர் திட்டிய விதம் அவர்களை மீண்டும் தலையெடுக்கவிடாமல் செய்துவிட்டது. ஃபூரியரின் பாலங்ஸ் முறையைப் பெருமபுதிரெனத்

திட்டுகிறார். கம்யூனிஸ்டுகளைக் கண்டு எரிச்சல் பட்டார். 'சோஷியலிசம் என்பது ஒன்றுமேயில்லை; அது ஒன்றுமில்லாமல் தான் எப்போதுமிருக்கும்' என்கிறார். இருக்கின்ற பொருளாதார அமைப்பு முறைகளையெல்லாம் ஒழித்துக்கட்ட வேண்டுமென புருதான் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் சோஷியலிச வாதி களின் கனவு அதுதான். போட்டிக்குப் பதிலாகத் தொழிலாளரின் கூட்டுறவை ஆதரிப்பர் சோஷியலிசவாதிகள்; தனியார் சொத்துரி மையை ஒழித்துவிட்டுப் பொது உரிமையை நிலைநாட்ட விரும்புவர். ஆனால் புருதான் இவைகளிலெல்லாம் நம்பிக்கை கொண்டவரல்லர்.

கூட்டுறவும் சோஷியலிசமும் மனிதனின் சுதந்திரத்திற்கு எதிரானவை என்பது புருதானின் கருத்து. சுதந்திரம் என்பது சிறப்பான, ஒப்பிடமுடியாததொரு பொருளாதாரச் சக்தியாகும். முழுமையான அரசியல் வாழ்விற்குக் குடிமகனின் சுதந்திர உணர்வு எவ்வளவு முக்கியமோ, அதேபோல் முழுமையான பொருளாதார வாழ்விற்கு கட்டுப்பாடில்லாத தொழிலாளர்களின் உரிமை முக்கியமானதென்கிறார். எனவே, பொதுவுடைமையை அவர் புறக்கணித்ததில் வியப்பொன்றுமில்லை. தனியார் சொத்துரி மையினால் மட்டுமன்றி, பொதுவுடைமையிலும் ஏற்றத்தாழ்வு உள்ளது. வேண்டுமானால் அந்த ஏற்றத்தாழ்வு வேறுவிதமாக இருக்கலாம். சொத்துரிமை இருப்பதால் வலியவர்கள் எளியவர் களைக் கொடுமைப்படுத்துவர் என்றால் பொதுவுடைமையில் எளிய வர்கள் வலியவர்களைத் துன்புறுத்துவர் என்கிறார். அதோடு, வறுமையில் வாடும் பாமர மக்களுக்குத்தான் பொதுவுடைமை ஒரு மதம்போல் தோன்றுகிறது. இவ்வாறாக, தனியார் சொத்துரி மையையும் பொதுவுடைமையையும் ஒரே நேரத்தில் புருதான் கண்டிப்பது வேடிக்கையாகத் தோன்றலாம். உண்மையில் புருதான் விரும்பியது, தனியார் சொத்துரிமையால் எவரும் பாதிக்கப்படக் கூடாதென்பதுதான். அப்படியானால் அவ்வுரிமை எல்லாருக்கும் கிடைக்கும்படிச் செய்யவேண்டும்.

சுதந்திரமும் சமூக நீதியும்

சமூக நீதியின் மீது புருதான் கொண்டிருந்த மோகம் சொத்து ரிமையைக் கண்டிக்கச் செய்தது; சுதந்திரத்தில் கொண்டதாகம் சோஷியலிசத்தைத் தாங்க வற்புறுத்தியது. எனவே, அவர் உருவாக்க நினைத்த சமுதாயத்தில் சுதந்திரமும் சமூக நீதியும் நிலைபெறவேண்டுமென விரும்பினார். சமூக நீதி என்பது சமத் துவத்தையும் சகோதர மனப்பான்மையும் ஆதாரமாகக் கொண்டது. சுதந்திரம் என்பது மனிதன் எண்ணும் எண்ணத்தில் மட்டுமன்றி,

பேச்சிலும், எழுத்திலுமுள்ள உரிமையையும், தொழில், வியாபாரம் செய்யும் உரிமையையும், தனது உழைப்பின் பயனைத் தன் விருப்பப்படி அனுபவிக்கும் உரிமையையும் கொண்டது. எனவே, மனிதனுக்கு இருக்கவேண்டிய சுதந்திரத்தையும் சமுதாயம் கடைப்பிடிக்க வேண்டிய நீதி முறையையும் பேணக்கூடிய புதியதொரு சமுதாயத்தை உருவாக்க நினைத்தார் புருதான். சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் உதவியாய் இருக்க வேண்டுமென்பதே அவரது குறிக்கோள். 'மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டுமென நீ விரும்புவாயோ, அதனை நீ மற்றவர்களுக்குச் செய்'. இதுதான் அவரது குறிக்கோளின் சாரம். இக்குறிக்கோளை அடையப் புதியதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். சொத்துரிமையும் சமூக நீதியும் ஒன்றுபடவேண்டுமானால் சொத்தில்லாதவர்களுக்கு உற்பத்திச் சாதனங்களை வழங்கவேண்டும். அவ்வாறு வழங்குவதற்கு பரிமாற்ற வங்கியை (Exchange Bank) நிறுவ வேண்டுமென விரும்பினார்.

புருதானின் புதிய பொருளாதார அமைப்பைப் புரிந்துகொள்வது எளிதன்று. சொத்தை வைத்துக்கொண்டு சோம்பேறிகளாய் உழைக்காமல் எவருமே வருமானம் பெறக்கூடாது. அதே நேரத்தில் சொத்துரிமையையும் பறித்துவிடக்கூடாது. உழைப்பதற்கும் பரிவர்த்தனை செய்வதற்கும் மனிதனுக்கு முழுச் சுதந்திரம் இருக்க வேண்டும். இப் பிரச்சினை வட்டவடிவமான படத்தைச் சதுர வடிவமாக ஆக்குவது எப்படி என்பதைப் போன்றது.

சொத்துரிமையை எதிர்த்த சோஷியலிச வாதிகள் அனைவரும் அவ்வுரிமையால் பொருள் உற்பத்தியும் பங்கீடும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதையே ஆராய்ந்தனர். ஆனால் புருதான் பண்டங்களின் பரிமாற்றம் எவ்வாறு பாதிக்கப்படுகின்றதென்பதில் கவனம் செலுத்துகிறார். சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் தத்தம் உற்பத்திப் பொருள்களை பரிமாறிக்கொள்ளும்போது, ஒருவருக்கொருவர் சேவைசெய்யும் அடிப்படையில் மாற்றிக்கொள்ள வேண்டுமென்கிறார் புருதான். இதைப்பற்றி அவர் அதிகமாக விளக்கவில்லை.

உழைப்பே விலையை நிருணயிருக்கிறது

சொத்துரிமை இருப்பதால் முதலாளிகள் தொழிலாளிகளைச் சுரண்டுகின்றனர் என்பது புருதானின் நம்பிக்கை. பொருள்களின் உற்பத்தியில் கிடைக்கும் வருவாயில் ஒரு சிறு பகுதியை மட்டும் கூலியாகத் தொழிலாளருக்குக் கொடுத்துவிட்டு எஞ்சிய பெரும் பகுதியை முதலாளிகளே எடுத்துக்கொள்கின்றனர். வேலைப்பாகுபாட்டையும் இதர வழிவகைகளையும் மேற்கொண்டு தொழிலாளி

களைக் கூட்டமாக வேலை வாங்குகின்றனர். சான்றாக, 1000 தொழிலாளிகள் கூட்டாக வேலை செய்தால் அவர்கள் செய்யும் மொத்த உற்பத்தி அதிகமாயிருக்கும். ஆனால், அந்த உற்பத்தியின் அடிப்படையில் முதலாளிகள் கூலி கொடுப்பதில்லை. மாறாக 1000 பேரும் தனித்தனியாக உற்பத்தி செய்தால் ஒவ்வொருவரும் எவ்வளவு உற்பத்தி செய்வரோ, அந்த உற்பத்தியின் அளவைக் கொண்டுதான் கூலியை நிருணயம் செய்கின்றனர். இவ்வாறு செய்வதால் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் அடிப்படையில் கூலியைப் பெறவேண்டிய தொழிலாளிகள், அதைக் காட்டிலும் குறைவான கூலியையே பெறுகின்றனர். எஞ்சியதையெல்லாம் முதலாளிகளே எடுத்துக்கொள்கின்றனர் என்பது புருதானின் வாதம். இவ் வாதத்தின் வழியாக உபரி மதிப்புக் கருத்திற்கு வருகிறார். இக் கருத்தைப் பின்னர் தோன்றிய கார்ல் மார்க்ஸ் 'உபரி மதிப்புக் கொள்கை' என்று ஆராய்கிறார். எனவே, மார்க்ஸின் உபரி மதிப்புக் கொள்கைக்கு முன்னோடியாக புருதானின் விளக்கம் அமைகிறது. அவ்வாறாயின், பொருள்களின் விலையை எவ்வாறு நிருணயிப்பது ? பொருள்களை வாங்குவோரும் விற்போரும் பாதிக்கப்படாத வகையில் உழைப்பின் அடிப்படையில் விலையை நிருணயிக்க வேண்டுமென்கிறார் புருதான். யார் அவ்வாறு விலையை நிருணயிப்பது என்பதைப் பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை. பொருள்களுக்குள்ள தேவை, அளிப்பு ஆகிய சக்திகளைக் கொண்டு விலைதானாகவே நிருணயமாகிக் கொள்ளலாமா வென்றால் அதுவும் கூடாதென்கிறார். அவ்வாறு நிருணயமானால் யாருக்காவது சாதகமோ அல்லது பாதகமோ ஏற்பட்டுவிடும். அப்போது சமூக நீதியும் சமத்துவத் தத்துவமும் புறக்கணிக்கப் என்கிறார். அரசாங்கம் நிருணயிக்கலாமா வென்றால் அதுவும் கூடாது. ஏனெனில் எந்தக் காரியத்திலும் அரசாங்கம் தலையிடக்கூடாதென்ற கொள்கையை உடையவர் புருதான். அரசாங்கமே அவசியமில்லை; இருக்கவும் கூடாது என்பதுதான் அவரது அடிப்படையான தத்துவம். இவ்வாறாக, அரசாங்கத் தலையீடின்றி, சமுதாய நீதியையும் மக்களின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகளையும் எவ்வாறு நிலை பேண முடியும் ? இதற்கு புருதான் வகுத்த வழி எளிமையானது பரிமாற்ற வங்கிகளை ஏற்படுத்தினால் எல்லாம் சரியாகிவிடுமென் கிறார்.

பரிமாற்ற வங்கி

முதலாளிகளிடம் மூலதனம் இருக்கும்போது தொழிலாளி களிடம் அது இல்லையானால் தொழிலாளிகளை முதலாளிகள் சுரண்டுவது எளிதாகிவிடுகிறதென எண்ணினார் புருதான். எனவே,

ஒருவரையொருவர் சுரண்டி வாழ்வதற்கு அனுகூலமாயும் அடிப்படையாயும் இருப்பது மூலதனம்தான். எல்லாருக்கும் வேண்டிய அளவு மூலதனம்கிடைக்கும்படிச் செய்துவிட்டால்எவருமே சுரண்டி வாழ இயலாது. சமூக நீதியும் சமத்துவமும் தானே தோன்றி விடுமெனக் கருதினர். இது ஒரு புதுமையான கருத்தாகும். ஏனைய சோஷியலிசவாதிகள் பொருள் உற்பத்தி, செல்வப்பங்கீடு ஆகியவற்றின் அடிப்படையில் சுரண்டி வாழும் பழக்கம் ஏற்படுவதாக எண்ணினர். எனவே, உற்பத்தியையும் பங்கீட்டையும் ஒழுங்குபடுத்தி அல்லது சீர்திருத்தி சமத்துவ சமுதாயத்தை உருவாக்க எண்ணினர். ஆனால் புரூதான் பரிமாற்றம்தான் சமுதாய ஏற்றத்தாழ்விற்கும் அநீதிக்கும் காரணமென எண்ணினர். எனவே, பரிமாற்ற வங்கியை உருவாக்கத் திட்டமிட்டார். எல்லாருக்கும் வட்டியின்றி வேண்டிய அளவு கடன் கொடுக்க ஏற்பாடு செய்தால் மூலதனமில்லாத தொழிலாளிகளும் முதலாளிகளாகி விடலாமென நம்பினர்.

பரிமாற்ற வங்கி என்பது ஒரு பெரிய தேசிய வங்கியாகும். நாணயத்தாள் அச்சிட்டு வெளியிடும் உரிமையை இவ் வங்கிக்குக் கொடுத்துவிட வேண்டும் என்கிறார் புரூதான். அது வெளியிடும் நாணயத்தாளை எல்லாரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ் வங்கியிடமிருந்து கடன் பெற விரும்புவோர் வட்டி கொடுக்க வேண்டியதில்லை. தான் உற்பத்தி செய்யும் பொருள்களையோ அல்லது தன்னிடமுள்ள வேறு ஏதாவது பொருளையோ வங்கியிடம் வைத்துவிட்டு, அதற்கேற்பக் கடன் பெறலாம். ஒன்றுமே இல்லாதவர்கள் வெறும் வாக்குறுதிப் பத்திரத்தை (Promisary note) எழுதித்தந்துவிட்டு அதன் பேரில் கடன் பெறலாம். இந்த வங்கி வெளியிடும் நாணயத்தாள்களைக் கொண்டுதான் நாட்டின் பரிவர்த்தனைகளனைத்தும் நடைபெற வேண்டும். நாட்டின் வியாபாரத் தேவைகளுக்கேற்பத்தான் இவ் வங்கி நாணயத்தாள்களை வெளிட வேண்டும் இந் நாணயத்தாள்கள் ஏறக்குறைய மாற்று உண்டியல்களுக்கு (Wills of Exchange) ஒப்பானவை. அவற்றில் வங்கியின் நிருவாகி கையொப்பமிட்டிருப்பார். ஆனால் இவ்வங்கியின் வாடிக்கையாளர்களிடையே மட்டுமே அவை கைமாறிக் கொண்டிருக்கும் நாட்டிலுள்ள அனைவருமே இவ் வங்கியின் வாடிக்கையாளர்களாக இருக்க வேண்டுமென்பது புரூதானின் ஆசை. இவ் வங்கி வெளியிடும் நாணயத்தாள்களை எல்லாரும் ஏற்றுக்கொண்டால் நாட்டில் நடமாடும் பணமனைத்தும் மறைந்து விடும். தங்க, வெள்ளி நாணயங்களுக்குத் தேவையே இருக்காது. எனவே, புரூதானின் பரிமாற்ற வங்கித் திட்டத்தைப் பலர் வரவேற்றனர்.

தனது திட்டத்தை புருதான் 1848-ல் இருந்த பிரெஞ்சு நாட்டுச் சட்ட மன்றத்தின் வழியாக அமுலாக்க விரும்பினார். ஆனால் சட்டமன்றத்தினர் இத் திட்டத்தை ஆதிரிக்கவில்லை. இதனால் ஏமாற்றம் கொண்ட புருதான் 1849ஆம் ஆண்டு மக்களின் வங்கியை (Peoples Bank) ஆரம்பித்தார். அவ் வங்கியை பரிமாற்ற வங்கித் திட்டத்தினின்று மாறுபட்டதாகும். ஏறக் குறைய 18,000 பிராங்குகளைக் கடனாக வாங்கி அவ் வங்கியை ஆரம்பித்தார். அதிலிருந்து கடன் பெறுவோரிடமிருந்து 2 சத விகித வட்டி வசூலித்தார், வட்டி ¾ சதவிகிதமாகக் குறைக்கப் படுமென்றும் அறிவித்தார். அவ் வங்கி ஏனைய வங்கிகளைப் போலவே ஆரம்பிக்கப்பட்டது. வட்டி மட்டும் குறைவு. ஆனால் ஆரம்பித்த ஒரு சில மாதங்களில் அவ்வங்கி திவாலாகிவிட்டது. எனவே, அது மூடப்பட்டுவிட்டதாக புருதான் அறிவித்தார். அதிலிருந்து பரிமாற்ற வங்கியின் வழியாகச் சமுதாயத்தையே மாற்றிவிடலாமென்ற எண்ணமும் புருதானின் மனத்திலிருந்து மறைந்தது.

முடிவுரை

புருதான் சுதந்திர உரிமையை அகற்ற வேண்டுமென்றும் விரும்பவில்லை. பொதுவுடைமையையும் வரவேற்கவில்லை. எனவே, சோஷியலிசவாதிகளின் அணியில் அவரை எந்த இடத்தில் நிறுத்துவது என்பது கடினமான பிரச்சினையாகும். தனியாரின் சொத்துரிமையைக் கண்டிக்க விரும்பாத புருதான் குத்தகை, வட்டி, இலாபம் ஆகியவற்றை மட்டும் கண்டித்தது விசித்திரமான தாகும். இதனை ஏற்றுக்கொள்ளாத கார்ல்மார்க்ஸ் புருதானை ஒரு 'குட்டி முதலாளி' என்று கேலியாகக் குறிப்பிடுகிறார். புருதானை கனவுலக சோஷியலிஸ்ட் என்றோ, அல்லது கூட்டுறவு சோஷியலிச வாதி என்றோ அழைக்க முடியாது. அதே சமயம் அவர் பொது உடைமை வாதியும் அல்லர். அவ்வாறாயின், அவர் பொருளாதாரத் திற்குச் செய்த பணிதான் என்ன? அரசாங்கமே இருக்கக்கூடா தெனக் கூறியதுதான். அவ்வாறு கூறியதன் வழியாக அரசாங்க வழி சோஷியலிஸ்டுகளுக்கு (State Socialists) நேர்மாறானவராகிறார். எனவே, சோஷியலிச வாதிகள் எவருமே அவரது கொள்கைகளை யும் திட்டங்களையும் வரவேற்கவில்லை. அவர்கள் அனைவரும் மார்க்ஸிய சோஷியலிசத்தில்தான் மயங்கி இருந்தனர். எனினும், பிரெஞ்சு நாட்டில் அவருக்குப் பின் தோன்றிய சில சோஷியலிச வாதிகள் புருதானின் கருத்துகளையும் திட்டத்தையும் பரிசீலனை செய்து ஆதரித்ததன் வழியாக அவர் சோஷியலிச வாதிகளுள் ஒருவராகக் கருதப்பட்டார். பிரெஞ்சுப் புரட்சியின் குறிக்கோளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு முழு ஆதரவு தந்தவர் புருதான். எல்லாவற்றிற்கும் மேலாக, அரசாங்கமே வேண்டாமெனக் கருதுவோருக்கு அவர் ஒரு குரு.

17. தேசியவாதம்

(Nationalism)

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஆடம்ஸ்மித்தின் கொள்கைகளே ஐரோப்பா முழுவதும் செல்வாக்குப் பெற்றிருந்தன. அக் கொள்கைகள் வீறு நடைபோட்டுச் சென்று கொண்டிருந்த வேளையில் பலர் அக் கொள்கைகளுக்குத் தடை போட்டனர். சோஷியலிச வாதிகளும் சுதந்திரக் கொள்கையை எதிர்த்தோரும் ஸ்மித்தின் குறுகிய பொருளாதார ஆய்வைக் கண்டித்தனர். தங்கள் எதிர்ப்பின் மூலம் பொருளாதார ஆய்விற்குப் புது வழியைக் காண்பித்தனர். பொருளாதாரத்தையே விரிவு படுத்தினர். அப்படியிருந்தும் தொன்மைப் பொருளாதாரக் கொள்கையான தடையிலா வாணிபம் மட்டும் எவ்வித எதிர்ப்புமின்றிப் பொருளாதார உலகில் ஏற்றமும் சிறப்பும் பெற்றுச் செயல் பட்டு வந்தது. தடையிலா வாணிபத்தை ஒரு புனிதமான கொள்கையாகவே பாவித்தனர் உலக அறிஞர்கள். இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் மட்டுமன்றி, ரஷ்யாவிலும் பிரான்ஸிலும் அக் கொள்கை சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஆடம்ஸ்மித்தின் பிற கொள்கைகளை எதிர்த்த சோஷியலிச வாதிகளும் தடையிலா வாணிபக் கொள்கையைப் பற்றிக் கவலைப்படவில்லை.

ஆனால் 19ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியிலிருந்த பொருளாதாரச் சூழ்நிலை தடையிலா வாணிபக் கொள்கைக்குச் சாதகமாக இல்லை. எனவே இக் கொள்கைக்கு எதிராகச் சில அறிஞர்கள் தோன்றினர். ஜெர்மனியில் மட்டுமன்றி அமெரிக்காவிலும் இக் கொள்கைக்கு எதிர்ப்பு எழுந்தது. இந்த எதிர்ப்புக் குரலை எழுப்பியோரை தேசீயவாதிகள் என அழைப்பது வழக்கம். தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகள் உலகம் முழுவதற்கும் பொருத்தமானதெனச் சுட்டிக்காட்டினர் தொன்மை அறிஞர்கள். ஆனால் தேசியவாதிகளோ பொருளாதார ஆய்வும் கொள்கைகளும் ஒவ்வொரு நாட்டிற்குமேற்ப அமைய வேண்டுமென வாதாடினர். நடைமுறையில்

தடையிலா வாணிபத்திற்கு மாறான தொழில் பாதுகாப்புக்கொள்கையை வலியுறுத்தினர். அவ்வாறு பாதுகாப்புக் கொள்கையை வலியுறுத்தியவர்களில் பிரடரிக் லிஸ்ட் (Frederich List) என்பவர் முக்கியமானவர்.

தேசிய வாதிகள் (The Nationalists)

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் தனிமனிதனுக்கே எல்லா உரிமைகளையும் வழங்கினர். தனிமனிதனின் நலத்தைப் பெருக்கும் எல்லா வழிகளும் பொது நலனையும் அதிகரிக்கும் என்றனர். எனவே, உள்நாட்டுப் பொருளாதாரத் துறையில் மட்டுமன்றி அயல் நாட்டு வாணிபத்திலும் அரசாங்கம் தலையிடக்கூடாதென்றனர். உலக நாடுகளுக்கிடையே நடக்கும் வாணிபத்தில் எவ்விதத் தடையுமில்லாமலிருந்தால்தான் ஒவ்வொரு நாடும் தனது இயற்கை வளத்தையும் வசதிகளையும் செவ்வையாகப் பயன்படுத்தி உலகின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியுமென்றனர். சுருங்கக் கூறின், உலகம் முழுவதும் ஓரே பொருளாதார அமைப்பின்கீழ் இயங்கவேண்டுமெனத் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் விரும்பினர்.

தேசியவாதப் பொருளாதார அறிஞர்களோ ஒவ்வொரு நாடும் தத்தம் பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள வேண்டுமென வாதாடினர். எல்லா நாடுகளும் தொழில் வளர்ச்சியில் சமமாக இருப்பதில்லை. எல்லா நாடுகளும் சமமாக இருந்தால்தான் உலகப் பொருளாதாரம் என்பது உருவாக முடியுமென்றனர். எனவே, ஒவ்வொரு நாடும் தத்தம் பொருளாதார முன்னேற்றத்தில்தான் முதற்கண் அக்கறை கொள்ள வேண்டுமென்றனர்.

இத்தகைய தேசியப் பொருளாதாரத்தைப் பல நாட்டினரும் பலசமயங்களில் விளக்கியுள்ளனர். இவர்களில் லாடர்டேல் பிரபு ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர் தனியார் செல்வத்துக்கும் பொதுச் செல்வத்துக்குமுள்ள வேறுபாட்டினை வலியுறுத்தினர். ஆடம் முல்லர் (Adam muller) ஜெர்மானியர்; தேசியமுன்னேற்றமே முக்கியமானதென்றும், அம் முன்னேற்றத்திற்கு மக்களின் பண்பாடும் வளர்ச்சியும் முக்கியமெனக் கூறினர். ஜான் ரே ஸ்காட்லாந்தில் பிறந்து அமெரிக்காவில் குடியேறியவர். இவர் நாட்டின் வளர்ச்சிக்குப் புதிய செல்வத்தை ஆக்கவேண்டுமென வற்புறுத்தினர். மேத்யூ கேரி அமெரிக்கப் பொருளாதார அறிஞர். இவர் ஆடம் ஸ்மித்தின் தலையிடாக் கொள்கையைத் தாக்கிவிட்டு, அமெரிக்கப் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழில் பாதுகாப்பு அவசியமென வாதாடியவர்.

இவர்கள் எல்லாரையும்விட மிக்க புகழ்பெற்ற தேசியவாதப் பொருளாதார அறிஞர் பிரடரிக் லிஸ்ட். இவரைப்பற்றி விரிவாக ஆய்வது அவசியம்.

பிரடரிக் லிஸ்ட் *(1789-1848)*

பிரடரிக் லிஸ்ட் ஜெர்மனி நாட்டில் வர்ட்டம்பர்க் என்னும் மாநிலத்தில் 1689-ல் பிறந்தார். இவரது தந்தை தோல் பதனிடும் தொழிலாளி. தனது இளமைப் பருவத்தில் அரசாங்கப் பணியாளராயும் பத்திரிகை ஆசிரியராயும் வேலை பார்த்தார். பின்னர் டுபிங்கன் (Tubingen) பல்கலைக் கழகத்தில் அரசியல், நிருவாகப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அப்போது அரசாங்க நிருவாகத்துக்கும் பொருளாதாரத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை உணர்ந்தார். அக் காலத்தில் ஜெர்மனி பல மாநிலங்களைக் கொண்டதொரு கூட்டாட்சி நாடாக விளங்கியது. ஆனால் மாநிலங்களுக்கிடையே ஒற்றுமையின்றி, ஒவ்வொரு மாநிலமும் தன்னிச்சைப்படி வர்த்தகக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இதனால் மாநிலங்களுக்கிடையே நடைபெற்ற வியாபாரத்தில் பல சிக்கல்கள் தோன்றின. ஒவ்வொரு மாநிலமும் பிற மாநிலங்களிலிருந்துவரும் பொருள்களின்மீது வெவ்வேறு வரிகளையும் தீர்வைகளையும் விதித்தது. ஆனால், அதேசமயம் வெளிநாடுகளிலிருந்து ஜெர்மனிக்கு இறக்குமதியாகும் பண்டங்கள் எவ்விதத் தடையுமின்றி வந்து குவிந்தன. இதனால் ஜெர்மனி நாட்டு ஆலை அதிபர்களும் வியாபாரிகளும் பாதிக்கப்பட்டனர். எனவே, லிஸ்டின் முயற்சியால் 1819-ல் ஜெர்மானிய ஆலை அதிபர்கள், வியாபாரிகள் ஒன்றுகூடி பிராங்போர்டில் ஒரு பொதுச் சங்கத்தை அமைத்தனர். மாநிலங்களுக்கிடையே நடைபெற்ற வியாபாரத்தின்மீது வரிகளே கூடாதென்றும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு இறக்குமதி வரி விதிக்கவேண்டுமென்றும் இச் சங்கம் வலியுறுத்தி வந்தது. அச்சமயம் ஜெர்மனி நாட்டுப் பாராளுமன்றத்தில் உதவித் தலைவராகப் பணியாற்றினார் லிஸ்ட். தனது பொருளாதாரக் கொள்கை மற்ற அரசியல்வாதிகளுக்குப் பிடிக்காத காரணத்தால் அப் பதவியை அவர் துறந்தார். பிரான்ஸ், சுவிட்ஜர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சுற்றிவிட்டு அமெரிக்காவில் குடியேறினார். அப்போது அமெரிக்க நாட்டு அரசாங்கம் தொழில் பாதுகாப்புக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. அதனால் அந் நாட்டுத் தொழில்கள் விரைந்து முன்னேறின. அமெரிக்காவில் பல தொழிலதிபர்களுடனும் லிஸ்ட் நெருங்கிப் பழகினார். அந் நாட்டில் பெரிய விவசாயியாகவும், தொழிலதிபராகவும், பத்திரிகை ஆசிரியராகவும், சுரங்க முதலாளி

யாகவும் லிஸ்ட் விளங்கினார். தம் நாடு முன்னேறவேண்டுமென்பதற்காக அயல்நாட்டுப் பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவேண்டுமென்ற கொள்கை அமெரிக்க நாட்டுத் தலைவர்கள் உள்ளத்தில் ஊறிக்கிடந்தது. அக் கொள்கையை நிறைவேற்ற அவர்கள் அரும்பாடுபட்டனர். அதையெல்லாம் லிஸ்ட் நேரிலேயே கண்டுணர்ந்தார். ஜெர்மனியிலிருந்தபோது அவர் உள்ளத்தில் உருவாகியிருந்த கொள்கைக்கு அமெரிக்க நாடு விளக்கம் தந்தது எனவே, 1827-ல் அமெரிக்கப் பொருளாதாரச் சாரம் (Outline of American political economy) என்ற நூலை வெளியிட்டார்.

லிஸ்ட் அமெரிக்காவில் பெற்ற அனுபவம் அவரது, நாட்டுப்பற்றை மேலும் ஊக்குவித்தது. தனது நாடும் தொழில் துறையில் முன்னேற வேண்டுமென்ற ஆர்வம் பொங்கியது. மிகவும் பின்தங்கிய விவசாய நாடாக இருந்த ஜெர்மனியை உன்னத நிலைக்கு உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு 1832-ல் ஜெர்மனிக்குத் திரும்பி வந்தார். 18 1-ல் தனது புகழ் பெற்ற 'தேசிய முறைப் பொருளாதாரம்' (Nationalist System of Political Economy)என்னும் நூலை வெளியிட்டார். இந் நூல் அவரது வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டதெனலாம். தேசியவாத நூல்களிலேயே இந் நூல்தான் சிறந்ததாக மதிப்பிடப்படுகிறது. ஜெர்மனியின் முன்னேற்றம் அதன் தொழில் வளர்ச்சியில்தான் அடங்கியுள்ளது என்பதே இந் நூலின் கருத்தாகும். இந் நூல் மக்களின் எண்ணங்களுக்கும் ஆவலுக்குமேற்பத் தக்க சூழ்நிலையில் வெளியானது. ஜெர்மனியின் முன்னேற்றச் சின்னமான தொழில் வளர்ச்சியின்றி குழந்தைப்பருவத்தில் உள்ளது. அதனை நாம் ஊக்குவித்து வளர்க்கவில்லையெனில், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் மலிவான பொருள்களின் போட்டியினால் அது மடிந்துவிடும். அவ்வாறு நடைபெறக்கூடாது என்பதே லிஸ்டின் வேண்டுகோள். இந் நூல் வெளியான ஐந்து ஆண்டுகளுக்குள் வாழ்க்கையில் வெறுப்புற்றிருந்த லிஸ்டு தற்கொலை செய்துகொண்டு தம் வாழ்வை முடித்துக் கொண்டார்.

தேசிய முறைப் பொருளாதாரம்

ஜெர்மனி நாடானது அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பல துண்டுபட்ட மாநிலங்களைக் கொண்டதாக இருந்தது. வெளிநாட்டுப் பொருள்கள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி இறக்குமதியாகிக் கொண்டிருந்தன. ஆனால் மாநிலங்களுக்கிடையே பொருள்கள் விற்பனையாகாதபடி ஒவ்வொரு மாநிலமும் சுங்கவரியை விதித்துவந்தது. இதனால் ஜெர்மன் தொழிலே நசிந்துவிடுமோ என்ற பயம் நிலவி வந்தது. எனவே, ஜெர்மன் தொழி

லதிபர்களும் வணிகர்களும் தத்தம் தொழிலிலும் வியாபாரத்திலும் அக்கறை காட்டி இந் நிலையை மாற்ற வேண்டுமென்று லிஸ்ட் விரும்பினார். அரசியல் துறையில் மட்டுமன்றி, பொருளாதாரத் துறையிலும் ஜெர்மனி ஒன்றுபடவேண்டுமென வலியுறுத்தினார். இதனை நிரூபிப்பதற்கு வரலாற்றுச் சான்றுகளையும் புள்ளி விவரங்களையும் தந்து தனது நூலை உயிருள்ள ஒரு காவியமாகவே ஆக்கினார். இக் காவியம் ஜெர்மனியின் வருங்கால முன்னேற்றத்தைப் பிரதிபலிப்பதாய் அமைந்தது.

தேசியக்கொள்கை

உலகம் அனைத்தும் ஒரே பொருளாதார அமைப்பைக் கொண்டது என்பது ஆடம் ஸ்மித்தின் அடிப்படைக்கொள்கை. ஆனால் எல்லா நாடுகளும் பொருளாதாரத் துறையில் சமமாக இருந்தால்தான் அந்த இலட்சியத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியும் என்கிறார் லிஸ்ட். ஆனால் நாட்டிற்கு நாடு அரசியல் அமைப்பிலும் பொருளாதார வளர்ச்சியிலும் வேறுபாடுடையதாயிருக்கும்போது அந்த இலட்சியத்தை நாம் அலட்சியம் செய்ய வேண்டியது தான். மனிதனின் சுயநலநோக்கத்தோடு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பொதுநலமும் பேணப்படும் என்பது ஸ்மித்தின் முடிவு ஆனால் தனிமனிதனின் சுபிட்சம் அவன் வாழும் நாட்டின் அரசாங்கக் கொள்கைகளைச் சார்ந்ததாகும் என்கிறார் லிஸ்ட். அரசாங்கத்தின் ஆதரவின்றி எவரும் முன்னேற முடியாதென்பதற்குச் சான்றாகப் பல நாடுகளைச் சுட்டிக் காண்பிக்கிறார் சமூக, அரசியல் அமைப்புகள் சாதகமாக இருந்தால்தான் மக்கள் வளமான வாழ்க்கை வாழமுடியும். அவ்வாறன்றி நாட்டிற்கு நாடு வேறுபட்டிருந்தால் வளமிக்க நாடுகள் ஏழைகளைச் சுரண்டி வாழவேமுற்படும். எனவே, தனிமனிதனுக்கும் உலகுக்குமிடையே நாடு என்று இருப்பதை நாம் மறந்துவிடலாகாது. எல்லா நாடுகளும் வளமைப்பாதையில் முன்னேறுதபோது உலகப்பொருளாதார அமைப்புப் பற்றி பேசுவதில் பொருளில்லை. எனவே, தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்துப்படி, பொருளாதாரம் என்பது பொதுவானதொரு இயலன்று; அது நாட்டுக்கு நாடு மாறுபட்டதாய் இருக்க வேண்டும் என்பது லிஸ்டின் முடிவு.

பொருளாதார வளர்ச்சி நிலைகள்

ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் ஐந்து பருவங்கள் இருப்பதாக லிஸ்ட் கூறுகிறார். அவை முறையே, (1) காட்டுமிராண்டிப் பருவம், (2) ஆடுமாடு மேய்க்கும் பருவம், (3) விவசாயப் பருவம், (4) விவசாயப் பொறிவழித் தொழில் பருவம்

(5) விவசாய, பொறிவழித் தொழில், வணிகப் பருவம் எனப்படும். இவற்றில் இறுதிப் பருவத்தை ஒரு நாடு அடைந்த பின்னரே அயல் நாட்டு வணிகத் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் அந் நாடு நீக்கவேண்டும் என்று லிஸ்ட் கூறுகிறார். அப்போதுதான் அந்நாடு இயல்பான பொருளாதார நிலையை அடைந்துவிட்டதாகக் கருதப்படும். அந் நிலையை அடைந்துள்ள ஒரே நாடு இங்கிலாந்து தான் என்கிறார். பிரான்ஸ் நாடு நான்காவது பருவத்திலிருந்து ஐந்தாம் பருவத்திற்கு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பது லிஸ்டின் கருத்து. ஆனால், ஜெர்மனி நாடோ மூன்றும் பருவம் முடிந்து நான்காம் பருவத்தை ஆரம்பித்துள்ளது. முதல் மூன்று பருவங்களிலும் உள்ள நாட்டவர் புதியவழிகளைக் கண்டுபிடிப்பதற்கும், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் போதிய சக்தியும் ஆர்வமும் இல்லாதிருப்பர்; பொதுவாக அறியாமையிலேயே உழன்று கொண்டிருப்பர் என்பது லிஸ்டின் கருத்து. பொறிவழியாக்கத் தொழில் தொடங்கிய நாடுகள் அயல் நாட்டுப் பொருள்கள் இறக்குமதியாவதைத் தடுக்கக் காப்பு வரிகள் விதிகள் வேண்டும். கடைசியாகத் தொழில் துறையில் தேர்ச்சி அடைந்த பின், முன்னேறிய பிற நாடுகளுடன் சரிநிகராக ஆனபின் காப்புவரியேயின்றி வணிகம் செய்யும் தகுதியை அடைந்து விடும். இவ்வாறாக, நாட்டு வளர்ச்சியில் சில பருவங்களில்தான் காப்பு வரிகளும் வணிகக் கட்டுப்பாடுகளும் அவசியம்; ஆனால் இறுதியில் அவை நீக்கப்பட வேண்டியவைதான் என்று கூறுகிறார் லிஸ்ட். எனவே, லிஸ்ட் தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளை முற்றும் வெறுப்பவரல்லர்.

எனினும் பொருளாதார வளர்ச்சியில் ஒரு நாடு கடைசிப் பருவத்தை அடையவேண்டுமாயின், பொறிவழியாக்கத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கேற்ற மிதமான வெப்ப தட்ப நிலை இருக்கவேண்டும்; ஏராளமான இயற்கை வளங்களும் தேவை; அதோடு அந்நாடு பரந்த வியாபாரத்தலங்களையும் கொண்டிருக்க வேண்டும் என லிஸ்ட் கருதுகிறார். இவையனைத்தும் ஜெர்மனியிடம் உள்ளது. ஆனால் போதிய பரப்பளவு மட்டும் கிடையாது இதனால் டென்மார்க்கும் ஹாலந்தும் ஜெர்மனியைச் சேர்ந்த பகுதிகளென்று லிஸ்ட் கருதினார். இவ்வாறாக, எல்லா வசதிகளும் ஜெர்மனியிடம் இருப்பதால் அந்நாடு கடைசிப் பருவத்தை எளிதாக அடைந்துவிடலாமென நினைத்தார்.

இவ்வாறாக, காப்பு வரிகள், வணிபக் கட்டுப்பாடுகள் மூலமாக ஒரு நாடு வளர்ச்சியடைந்து இறுதிப் பருவத்தை அடைந்து விடமுடியுமென லிஸ்ட் நம்பினார். ஆனால், காப்புவரிக் கொள்கை அல்லது தடையிலா வாணிபக் கொள்கை நிலையாகக் கடைப்

பிடிக்கப்படவேண்டுமென அவர் ஒரு போதும் எண்ணியதில்லை. 'ஒவ்வொரு நாடும் தனது வளர்ச்சிப் பருவத்தைப் பொறுத்துத் தமது கொள்கைகளை மாற்றிக்கொள்ளவேண்டும் அல்லது திருத்திக் கொள்ளவேண்டும்' என்பதே லிஸ்டின் முடிவு.

உற்பத்திச் சக்திகள்

ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் உற்பத்திச் சக்திகளில் தான் உண்டு; அது கொண்டுள்ள செல்வத்தில் அல்ல என்பதை லிஸ்டு அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். 'செல்வத்தை உண்டாக்கக் கூடிய சக்தியே செல்வத்தைவிட முக்கியமானது' என்கிறார். ஆடம் ஸ்மித் செல்வத்தையும் அதன் மதிப்பையும் பற்றித்தான் பேசுகிறாரேயன்றி, செல்வத்தை உண்டாக்கும் சக்தியைப் பற்றி அவர் ஒன்றும் கூறவில்லையென்று லிஸ்ட் குறை கூறுகின்றார். செல்வத்திற்கும் அதனை உண்டாக்கும் சக்திக்குமுள்ள வேறுபாட்டைச் சுவையானதொரு உதாரணத்தால் விளக்குகிறார். "சமமான சொத்தும் வருமானமும் உள்ள இரண்டு தந்தைகள் இருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் ஐந்து பிள்ளைகள் உள்ளனர். ஒருவர் தனது பிள்ளைகளை வயலில் பாடுபட ஏற்பாடு செய்துவிட்டு, தான் சேமித்த பணத்தை வட்டிக்கு விடுகிறார். மற்றவர் தனது பிள்ளைகளுக்கு நல்ல கல்வி யளிப்பதில் தனது வருமானத்தைச் செலவிடுகிறார். இவ்விரு தந்தையரும் இறக்கும் தருவாயில் அவர்களின் செல்வ நிலையைக் கணக்கிட்டால் முன்னவரே தனது பிள்ளைகளுக்கு நிறையச் சொத்தை விட்டுச்சென்றவராகக் கருதவேண்டும். ஆனால், பின்னவர் தம் மக்கள் வருங்காலத்தில் நிறையச் சம்பாதிக்கக் கூடிய கல்வி வசதியை அளித்துள்ளார். அவர்கள் வருங் காலத்தில் பெரும் செல்வந்தர் ஆவர். எனவே, முன்னவர் செல்வத்தின் மதிப்பில் உயர்ந்தவர். ஆனால் செல்வத்தை உண்டாக்கும் சக்திகளில் பின்னவர் தான் கெட்டிக்காரர்."

எனவே, ஒரு நாட்டின் உற்பத்திச் சக்திகளைப் பெருக்குவது அரசாங்கத்தின் கடமையாகும். அரசியலிலிருந்து பொருளாதாரத்தை விலக்குவது ஆபத்தானது என லிஸ்ட் கருதுகிறார். அரசாங்கம் தலையிடாமல் சுதந்திரமாக வாணிபம் நடைபெற்றால், அது கொள்ளையடிப்போருக்கும் எத்தர்களுக்கும் தான் சாதகமாக இருக்குமே தவிர வணிகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் அல்ல எனவே, அரசாங்கத்தின் பணி ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதல்ல. தமது நாட்டின் உற்பத்திச் சக்திகள் யாவை? அவற்றை எவ்வாறு அதிகரிப்பது? எப்படிப் பாதுகாப்பது? என்பதெல்லாம் அரசாங்கத்திற்குத்தான் புரியும்; அல்லது தெரிந்திருக்க வேண்டும் என வாதாடுகிறார் லிஸ்ட். நிற்க

அரசாங்கம் தலையிடாமலிருந்தால் ஒரு நாட்டின் விவசாயம், இதரத் தொழில்கள், வாணிபம் அனைத்தும் ஒரே சீராக வளரா. எல்லாத்துறைகளிலும் சீராக வளரும் நாடே செல்வாக்குமிக்க நாடாக இருக்க முடியும். அவ்வாறன்றி, விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கும் நாடு கையில்லாத முடவனைப் போல்தான் இருக்கும். விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கிற நாட்டு மக்கள் நாகரிகமின்றி, மூட நம்பிக்கையும் மந்தமான மூளையும் பழமைப்பற்று முள்ளவர்களாகவே இருப்பர். மாருக, தொழில் துறையில் முன்னேறியுள்ள நாட்டவர் சுறுசுறுப்பாயும் புதியன கண்டு பிடிப்பதில் ஆர்வம் கொண்டு, கலைகளை வளர்க்கவும் விஞ்ஞானத்தைப் போற்றவும் திறன்மிக்கவர்களாய் விளங்குவர் என்கிருர் லிஸ்ட். இவ் விளக்கத்தின் அடிப்படையில் லிஸ்டை நோக்கினுல், அவர் வணிக வாதிகளின் கருத்தினை ஏற்றுக்கொண்டவராகவே தெரியும். இயற்கை வாதிகளுக்குப் பரம விரோதியாகக் காட்சியளிக்கிருர்.

செல்வத்தை உற்பத்தி செய்யும் சக்திகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, இயற்கை வளங்கள், கலை, விஞ்ஞானம் ஆகியவற்றை மட்டுமன்றி, வேறுபலவற்றையும் குறிப்பிடுகிருர் லிஸ்ட். அவற்றுள் கிருத்துவ மதம், ஒரு தாரம் உடைமை, அடிமை ஒழிப்பு பண்ணையாள் முறை ஒழிப்பு, பரம்பரை உரிமை, அச்சு இயந்திரம், அஞ்சல் முறை, நாள்காட்டிகள், கடிகாரங்கள், காவற்படை, போக்குவரத்துச் சாதனங்கள் முக்கியமானவை அதோடு, முன்னோர்களிடமிருந்து நாம் பெறும் பயிற்சியும் உற்பத்திச்சக்தியை ஊக்குவிக்குமென்கிருர்.

தொழில் பாதுகாப்பு

தொழில் வளர்ச்சியை விரும்பும் நாடு என்ன செய்யவேண்டும்? ஒன்றும் செய்யக்கூடாது என்பது தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் கண்ட முடிவு. ஒரு நாடு இயல்பான முறையில் வளர்ந்து வந்தால் அது தானுகவே தொழில் வளர்ச்சியை அடைந்துவிடும் என்பது அவர்களின் கொள்கை. ஆனுல் அதற்குப் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருக்கும். எனவே லிஸ்ட் கூறும் வழி, குறிப்பிட்டதொரு காலத்திற்குள் தொழில் வளர்ச்சியில் முதிர்ச்சியை அடைய விரும்பும் நாடு அதற்கான முறையில் திட்டமிட்டுச் செயல் புரிய வேண்டுமென்பதுதான். தானுகவே தொழில் வளர்ச்சி ஏற்படட்டும் என்று நினைக்கக்கூடாது என்பதைச் சுவையானதொரு சான்றின் வழியாக விளக்குகிருர் லிஸ்ட். ‘ஒரு இடத்திலுள்ள விதை வித்துக்களெல்லாம் காற்றில் பறந்து பிரிதொரு இடத்தில் சேர்ந்து, தரிசாகக் கிடந்த அவ்விடத்தை அழகிய சோலைவனமாக மாற்ற முடியும் என்பது நமக்குத் தெரியும். அதற்காகக் காற்று வரட்டுமெனக் காத்திருக்கலாமோ? காற்றை

நாமே உருவாக்க வேண்டியதுதான்.'' எனவே, தொழில் முன்னேற்றம் தானுகவே ஏற்படட்டும் என்று காத்திருப்பது அறிவீனமென்ருர் லிஸ்ட். தொழில் துறையில் முன்னேறியுள்ள நாட்டின் பெருமையை அடுக்கிக்கொண்டே போகிருர். அந் நாட்டு விஞ்ஞானிகள் பாராட்டப்பெறுவர்; அறிஞர்கள் புகழும் பரிசும் பெறுவர்; இறைவன் தந்துள்ள கொடையான நேரத்தையும் காலத்தையும் நன்கு பயன்படுத்துவர். இவ்வாறு லிஸ்ட் பாடும் புகழை நாம் இங்கு விளக்கத் தேவையில்லை.

காப்புவரிக் கொள்கையின் அம்சங்கள்

லிஸ்ட் தனது காப்புவரிக் கொள்கையின் அம்சங்களைப் பின்வருமாறு தெளிவு படுத்தியுள்ளார்.

1. விவசாயத் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்தோடு இறக்குமதி வரிகளை விதிக்கலாகாது. அவ்வாறு விதித்தால் விபரீதமான விளைவுகளே ஏற்படும். உணவு தானியங்களின் விலை ஏறி வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும். தொழிலாளிகளுக்கு அதிகக் கூலி கொடுக்க நேரிடும். அப்போது தொழில் வளர்ச்சியே பாதிக்கப்படும். எனவே, உணவு தானியஏற்றுமதி, இறக்குமதியில் எவ்விதக் கட்டுப்பாடும் இருக்கக்கூடாது என்பது லிஸ்டின் கொள்கை. பிரிட்டன் நாடு தானியச் சங்டத்தின் வாயிலாக ஜெர்மனியிலிருந்து இறக்குமதியான உணவு தானியங்களைக் கட்டுப்படுத்தியது. இதனுல் ஜெர்மனி விவசாயம் பாதிக்கப்பட்டது. எனவே, பிரிட்டன் நாடு தனது சட்டத்தை நீக்கிவிடவேண்டும் என்பது லிஸ்டின் குறிக்கோள். அதோடு, விவசாய முன்னேற்றம் பிற தொழில்களின் வளர்ச்சியைச் சார்ந்தது என்பது அவரது நம்பிக்கை. பிற தொழில்கள் வளர்ச்சி அடைந்தால்தான் நிலத்தின் மதிப்பும் விவசாயப் பண்டங்களின் விலைவாசிகளும் உயர்ந்து விவசாயிகளுக்கு நல்ல இலாபத்தைத் தரும்.

2. ஒரு நாடு தொழில் வளர்ச்சிக்குரிய அறிவைப் பெற வேண்டுமென்ற குறிக்கோளோடுதான் காப்புவரிகளை விதிக்க வேண்டும். அவ்வறிவைப் பெற இயலாத நாடுகள் காப்புவரிக் கொள்கையை நாடக்கூடாது. ஏனெனில் தொழில் வளர்ச்சிக்கு, அது சம்மந்தப்பட்ட அறிவு அடிப்படையான தேவையாகும். தொழில் அறிவும் முதிர்ச்சியும் பெற்றுள்ள இங்கிலாந்து நாட்டிற்கு இக் கொள்கை அவசியமல்ல.

3. ஒருசில நாடுகள் தொழில் துறையில் முன்னேறியும் வேறு சில நாடுகள் பின்தங்கியும் இருக்கும்போது, பின் தங்கிய நாட்டுத்

தொழில்கள் முன்னேறிய நாட்டுத் தொழில்களோடு போட்டி போட்டு முன்னேற முடியாத நிலை இருக்கலாம். அப்போதுதான் அந் நாடுகள் காப்புவரிக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். அக் கொள்கையின் வாயிலாக முன்னேறிய பின்னர் அதனை நீக்கி விடவேண்டும்.

4. தொழில் முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் மட்டுமே காப்புவரிகளை விதிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு விரும்பும் நாடுகளில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வளமும் சக்திகளும் இருப்பது அவசியம்.

5. எல்லாத் தொழில்களும் ஒரே மாதிரியான பாதுகாப்பைப் பெறக்கூடாது. மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களையும், நாட்டின் பொருளாதாரச் சுதந்திரத்திற்கு அடிப்படையான பொருள்களையும் உற்பத்தி செய்யும் தொழில்களுக்குத்தான் முக்கிய பாதுகாப்புத் தேவை. அதோடு, நாட்டின் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் தொழில்களுக்கும் அதிக மதிப்புடைய பண்டங்களை ஆக்கும் தொழில்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இவ்வகைப் பாதுகாப்புக் கொள்கையின் மூலம் வருங்காலத் தலைமுறையினர் நன்மை பெறுவர் என்பது திண்ணம். வருங்காலச் சந்ததியார் நன்மையடையும் பொருட்டு, இன்றைய தலைமுறையினர் சிறிது தியாகம் செய்து துன்பப்பட வேண்டியுள்ளனர். இது தேசியக் கடனால் ஏற்படும் விளைவுகளுக்கு நேர்மாறானவையாகும். ஒரு நாடு கடன் வாங்கிக்கொண்டே போனால் அந் நாட்டவர் அப்போதைக்கு நல்ல வசதிகளை பெறுவர். ஆனால் கடனைத் திருப்பித் தரவேண்டிய பிந்திய தலைமுறைக்கு அது பெரும் சுமையாயிருக்கும்.

லிஸ்டைப் பொறுத்தவரையில் காப்புவரிக் கொள்கை என்பது ஒரு தற்காலிகமான கொள்கையேயாகும் அக் கொள்கையைக் கடைப்பிடிக்க விரும்பும் நாடுகளுக்குப்பல நிபந்தனைகளை அவர் விதிக்கிறார். எனவே, எவ்வாறு ஆடம் ஸ்மித் பூரணமானசுதந்திர வாதத்தை ஆதரிக்கவில்லையோ, அதே போன்று லிஸ்ட் முழுமையான காப்புவரிக் கொள்கைவாதியல்லர்.

ஒப்புமை

ஆடம் ஸ்மித்தும் ஜே. பி. ஸேயும் வணிகவாதக் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தனர் என்பதை முன்னமே கண்டோம்.

ஆனால் லீஸ்ட் வணிகவாதக் கொள்கைக்கு ஆதரவு காட்டினார் என ஒருசிலர் கருதுவர். வணிகவாதிகளை இரு பெரும் பிரிவினராகப் பிரித்து, அதில் ஒரு பிரிவினரோடு லிஸ்டை ஒப்பிடுவது வழக்கம். அதாவது, தொழில் அறிவையும் நுட்பத்தையும் ஆதாரமாகக் கொண்ட தொழில்களை வளர்க்க வேண்டுமென்பது ஒருசில வணிக வாதிகளின் கொள்கை. இதற்குச் சிறந்த பிரதிநிதியாக விளங்கியவர் கால்பர்ட். வேறு சில வணிகவாதிகள் அயல் நாட்டு வாணிப மிச்சத்தையே குறிக்கோளாகக் கொண்டனர். இவ்விரு பிரிவினர்களில் லிஸ்ட் முதல் வகையைச் சார்ந்த வணிகவாதிபோல் விளங்கினார் என்று சிலர் கூறுவர். ஆனால் அவ் வணிக வாதிகளுக்கும் லிஸ்டுக்கும் முக்கியமான வேறுபாடு உண்டு. தொழில் பாதுகாப்புக் கொள்கையை நிலையானதாகவும் விவசாயம் உள்பட எல்லாத் தொழில்களுக்கும் அமுல்படுத்த வேண்டியதாகவும் கருதினர் வணிக வாதிகள். ஆனால் லிஸ்ட் அதைத் தற்காலிகமானதாகவும் விவசாயத் தொழிலுக்கு ஒவ்வாததாகவும் கருதினார்.

லிஸ்டின் காப்புவரிக் கொள்கைக்கும் தற்காலக் கொள்கைக்கும் கூட வேறுபாடுகள் உள்ளன. பொருளாதாரத் துறையில் தன்னிறைவு பெற வேண்டுமென்பதுதான் தற்காலக் காப்புவரிக் கொள்கையாளரின் கொள்கை. மேலும், தாய்நாட்டுப் பற்றுதலின் அடிப்படையில் ஒரு நாடு பொருளாதாரச் சுதந்திரத்தை அடைய வேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டது தற்காலக் கொள்கை. பிறநாட்டுப் போட்டியிலிருந்து உள்நாட்டுத் தொழில்களை நிலையாகப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் தற்காலக் கொள்கையினருக்கு உண்டு. ஆனால் லிஸ்டின் கொள்கை தற்காலிகமானதென்பதை நாம் அறிவோம். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இறுதிப் பருவத்தை அடையும் நோக்கையுடையது லிஸ்டின் கொள்கை. அப் பருவத்தை அடைந்த பின்னர் தடையிலா வாணிபக் கொள்கையே சிறந்ததென்பது அவரின் கருத்து.

முடிவுரை

பொருளாதார இயலை அரசியலும் தேசியமும் கலந்த இயலாக ஆக்கினார் லிஸ்ட். அமெரிக்கக் காப்புவரிக் கொள்கையின் தந்தையாக மதிக்கப்படுபவர். அவருடைய கொள்கையைக் கடைப்பிடிக்க ஜெர்மனி காலதாமதம் செய்தது; எனினும், ஜெர்மனியின் ஒருங்கிணைப்பிற்காக வாழ்வையே தியாகம் செய்த பெரும் அறிஞராகவே மதிக்கப்பட்டார். முதலாளித்துவ அமைப்பிற்கு ஆடம் ஸ்மித்தும் ரிக்கார்டோவும் அடிக்கல் நாட்டினர் என்றால், ஜெர்மனியின் பிற்போக்கான பொருளாதார நிலைமையின் காரணத்தால்

தேசியப் பொருளாதாரத்தை உருவாக்கிய சிற்பி என லிஸ்டைக் கருதலாம். லிஸ்ட் ஒரு நாட்டின் கடந்தகால வரலாற்றை அடிப் படையாகக் கொண்டு வருங்கால வளத்திற்கு வழிகாட்டியதன் வாயிலாக வரலாற்றுவாதப் பொருளாதார அறிஞர்களுக்கு முன் னோடியாகத் திகழ்ந்தார் எனலாம்.

ஆடம் ஸ்மித்தும் ரிக்கார்டோவும் தலைசிறந்த பொருளாதாரக் கோட்பாடுகளை உருவாக்கிய மேதைகள் ஆவர். அவர்களோடு லிஸ்டை ஒப்பிட்டுப் பேச முடியாது. எனினும், நடைமுறைக்கேற்ற பொருளாதாரக் கொள்கையை வகுத்துத் தந்த சிற்பி லிஸ்ட். ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் எந்தெந்த நிபந்தனைகள் அந் நாட்டில் இருக்க வேண்டுமென்பதைப் படம் பிடித்துக் காட்டு வதுபோல் விளக்கிய பெருமை லிஸ்டைச் சாரும். அந்த நிபந்தனை களை ஆதாரமாகக் கொண்டே அயல் நாட்டு வாணிபத்தை ஆய்ந் தார் லிஸிட். இது பொருளாதார இயலுக்கு அவர் செய்த பெரும் பணியாகும்.

18. வரலாற்றுவாதக் குழுவினர்

(Historical School)

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பகுத்தறிவு முறையைப் பின்பற்றியதன் வழியாக உலகிற்கே பொதுவான சில பொருளாதாரக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் புனைந்தனர். அவர்கள் மேற்கொண்ட பகுத்தறிவு முறைக்கும் கொள்கைகளுக்கும் 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஜெர்மனியில் மட்டுமன்றி பிரிட்டனிலும் எதிர்ப்பு எழுந்தது. அவ்வாறு எதிர்ப்புத்தெரிவித்த அறிஞர்களை வரலாற்று வாதிகள் என அழைக்கின்றோம். ஜெர்மனியில் தோன்றிய எதிர்ப்பே வலுவானதாயும் செல்வாக்கு மிக்கதாயும் இருந்தது. ஜெர்மானிய வரலாற்று வாதிகளை இரு குழுக்களாகப் பிரிப்பது வழக்கம். ராஸ்கர் (Roscher), ஹில்டிபிரன்ட் (Hildebrand), நீஸ் (Knies) ஆகிய மூவரும் 'முதியோர் குழுவின்' (Older School) பேரறிஞர்கள். இக் குழுவினர் தொன்மைப்பொருளாதார ஆய்வு முறையையும் கொள்கைகளையும் குற்றங் கூறி கடுமையாகத் தாக்கினர். ஆனால் அக் குற்றங்களையும் குறைகளையும் நீக்க எந்த வழியையும் காட்டவில்லை. 1870-க்குப்பின் ஷ்மாலர் (Schmoller) என்னும் ஜெர்மானிய அறிஞரின் தலைமையில் 'இளையோர் குழு' (Younger School) தோன்றியது. இக் குழுவினர் தொன்மைப் பொருளாதார ஆய்வு முறையைக் குறைகூறியதோடு மட்டுமன்றி, அம் முறைக்குப் பதிலாக வரலாற்று அடிப்படையில் தொகுத்தறி முறையை வலியுறுத்தினர். ஆடம் ஸ்மித்தின் நூலும் ரிக்கார்டோவின் நூலும் வெளிவந்த சில ஆண்டுகளில் சமுதாய வரலாறு வெகுவாக மாறிவிட்டது. எனவே, அவர்களின் கொள்கைகள் காலத்திற்கொவ்வாதவையாகி விட்டன என்று வாதாடினர் வரலாற்றுவாதிகள். மனிதனின் வளர்ச்சிக்கும் சமுதாய மாற்றத்திற்குமேற்பப் பொருளாதாரக் கொள்கைகளையும் கோட்பாட்டினையும் மாற்றி அமைக்க வேண்டுமென்றனர். பல்வேறு மாறுதல்களுக்குட்பட்ட சமுதாயத்தில் மாற்றமில்லாத, நிரந்தரமான, உலகிற்கே பொதுவான கொள்கைகள் இருக்கமுடியாதென்றனர்.

வரலாற்று வாதச் சூழ்நிலைகள்

வரலாற்று வாதிகளின் எதிர்ப்பையும் கருத்துகளையும் அறிவதற்குமுன் அவர்கள் காலத்திய சூழ்நிலைகளைத் தெரிந்துகொள்ளுதல் அவசியம். ஜெர்மனி நாட்டிலிருந்த பொருளாதாரச் சூழ்நிலைதான் தொன்மைப் பொருளாதாரத்தின் செல்வாக்குக் குறைவதற்குக் காரணமாயிருந்தது. பொருளாதாரத்துறையில் அந்நாடு மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்தது. தொழில் முன்னேற்றமும் முதிர்ச்சியும் பெற்றிருந்த ஆங்கில நாட்டின் பண்டங்கள் ஜெர்மனி நாட்டில் மலிவாக விற்கப்பட்டன. இதனால் உள்நாட்டுத் தொழிலதிபர்கள் திணறினர். அவர்களது தொழில்களும் நசுக்கப்பட்டன. அதனால் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வகுத்த தலையிடாக்கொள்கையும் தடையிலா வெளிநாட்டு வாணிபக்கொள்கையும் ஜெர்மனியின் தொழில் வளர்ச்சிக்குப் பெருந்தடைகளாயிருந்தன. ஆங்கில நாட்டிற்குகந்த தடையிலா வாணிபக் கொள்கை ஜெர்மனி நாட்டிற்குப் பெருங்கேடு விளைவித்தது. இதனால் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் ஜெர்மானிய அறிஞர்கள் வெறுத்தனர்.

மேலும், பொருளாதாரக்கொள்கைகள் சமூக நிலைமைகளோடும் வரலாற்று நிகழ்ச்சிகளோடும் நெருங்கிய தொடர்புடையன என்பதைப் பல ஜெர்மானிய அறிஞர்கள் விளக்கினர். இவ் விளக்கத்திற்குப் புகழ்பெற்றவர் சிஸ்மாண்டி. பொருளாதார இயலை ஒழுக்க அறிவியலின் ஒரு கிளையாகவே கருதினார் சிஸ்மாண்டி. நிற்க, ஹெகல் (Hegal) என்னும் புகழ்பெற்ற தத்துவமேதை 'எல்லா உயிரினங்களுக்கும் வளர்ச்சியே உயிர் நாடி. இந்த இயற்கை விதி உயிரினங்களுக்கு மட்டுமன்றி, அரசியல், கலை, சமுதாயம், பொருளாதாரம் ஆகியவற்றிற்கும் பொருந்தும். எனவே, உலகிலுள்ள அனைத்தும் மாறும், வளரும் இயல்புடையன' என்ற உண்மையை விளக்கினார். ஜெர்மானிய இளைஞர் குழு இதனைக் கற்றது மட்டுமன்றி, வேதவாக்குபோல் இதனைப் போற்றி மகிழ்ந்தது. இந்நிலையில் ரிக்கார்டோ வகுத்த தொன்மைப் பொருளாதாரத்தில் மலிந்து கிடந்த எடுகோள்கள் (Assumptions) அனைத்தும் எவ்வித மாற்றமும் இல்லாத சமுதாயத்தையே வற்புறுத்தின. 'மக்கள் தொகை, வருமானநிலை, விஞ்ஞான அறிவு, பற்றுதல்கள் ஆகியவை மாறவில்லையென்று வைத்துக்கொள்வோம் என்பதே தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பாடும் பல்லவி. இப் பல்லவியை வெறுத்தனர் வரலாற்று வாதிகள். தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் காணவிரும்பிய உலகம் உண்மையில் கிடையாதென்றனர்.

1 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பெர்லின் பல்கலைக் கழகத்தில் சட்டப் பேராசிரியராக விளங்கிய சேவிக்னி (Savigny) என்பவரும் ஹெகலின் தத்துவத்தை ஆதரித்துப் பேசினுர். மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதுதான் சட்டம் என்பது அவரது விளக்கம். மக்களின் பண்பாடு மாற மாற சட்டமும் மாற வேண்டுமென்பது அவர் கண்ட முடிவு. எனவே, மாற்றமும் வளர்ச்சியும் ஜெர்மானிய அறிஞர்களின் நூல்களில் ஊடுருவிச் சென்ற கருத்துகளாகும். இக் கருத்தினை அப்படியே ஏற்றுக் கொண்டு, அதனைப் பொருளாதாரக் கோட்பாட்டிலும் கொள்கையிலும் புகுத்த வேண்டுமென்பதே வரலாற்று வாதிகளின் விருப்பம். இவ்வாருக, எல்லாம் மாறும் இயல்புடையதென்ற ஹெகலின் தத்துவத்தில் கொண்ட மோகமும், பொருளாதார விதிகளும் கொள்கைகளும் உலகிற்கே பொதுவானவையென்ற தொன்மைப் பொருளாதாரப் போதனையின் மீது கொண்ட வெறுப்புமே வரலாற்றுவாதிகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தன.

I முதியோர் குழுவினர்

(1) வில்ஹெல்ம் ராஸ்கர் (1817—1896)

(Wilhelm Roscher)

ராஸ்கர், கோட்டின்கன் (Gottiugen) பெர்லின் (Berlin) பலகலைக் கழகங்களில் சட்டமும் தத்துவமும் கற்ற மேதை. 50 ஆண்டுகள் பேராசிரியராகப் பணி புரிந்தவர். இவரை வரலாற்று வாதத்தின் தந்தை எனலாம். இவர் 1843-ல் 'வரலாற்று முறையில் அரசியல் பொருளாதாரம் பற்றிய சொற்பொழிவுகளின் சுருக்கம்' (Outline of Lectures on Political Economy according to the Historioal Method) என்னும் நூலை வெளியிட்டார். இந்நூலில் வரலாற்று முறைதான் பொருளாதார ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது என வலியுறுத்தியுள்ளார். சமுதாய வாழ்விற்கு இன்றியமையாத சட்டம், அரசியல், நாகரிக வாழ்வின் வரலாறு ஆகிய நூல்களோடு பொருளாதாரம் நெருங்கிய தொடர்புடையது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார். சமுதாயம் படிப்படியாக முன்னேறுகிறதென்றும், அம் முன்னேற்ற வரலாற்றைப் பொருளாதார அறிஞர்கள் புறக்கணிக்கக் கூடாதெனக் கூறுகிறுர். பொருளாதாரக் கோட்பாட்டைப் புனைவதற்கும் கொள்கைகளை வகுப்பதற்கும் கடந்த கால வரலாற்றில் நாம் காணும் நிகழ்ச்சிகளும் சான்றுகளும் துணைபுரிகின்றன, சான்ருக, இங்கிலாந்து நாட்டிற்கும் ஜெர்மனிக்கும் எத்தனையோ விதமான சமூக, பொரு

ளாதார வேறுபாடுகளும் பண்பாட்டு வேறுபாடுகளும் உள்ளன. எனவே, அவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டே இவ்விரு நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பது ராஸ்கரின் முடிவு.

ராஸ்கர் வரைந்த நூல்களில் வேறு இரண்டும் முக்கிய மானவை. அவற்றில் 'அரசியல் பொருளாதார அமைப்பு' என்பது 5 பகுதிகளைக்கொண்டது. அடுத்தது 'ஜெர்மனியின் அரசியல் பொருளாதார வரலாறு' என்னும் தலைப்பைக்கொண்டது. இவற்றுள் முதல் நூல் வரலாற்றுவாத அடிப்படையில் எழுதப் பட்டது. இந்நூலில் ராஸ்கர் வணிக வாதம், பிறநாட்டு வணிக ஒப்பந்தங்கள், வங்கி முறை ஆகியவை இடைக்காலத்திலிருந்து எவ்வாறு வளர்ச்சியுற்று மாறி மாறி வந்துள்ளன என்பதை விளக்கு கிறார். அவை வளர்ச்சியுற்றதால் ஜெர்மனி நாடு என்னென்ன நன்மைகளை அடைந்துள்ளது என்பதையும் விளக்குகிறார். இரண்டாவது நூலில் அதே வரலாற்றுவாத முறையைப் பின்பற்றி, எவ்வாறு ஜெர்மானிய அறிஞர்களின் கருத்துகளும் கொள்கை களும் காலத்திற்கும் சூழ்நிலைக்குமேற்ப மாறி மாறி வந்துள்ளன என்பதை வருணிக்கிறார். எனவே, ராஸ்கரின் நூல் அரசியல் பொருளாதாரம் பற்றியது என்பதைவிட வரலாற்று முறைப் பொருளாதாரம் பற்றியது என்றே கூறலாம். ராஸ்கரின் அறிவு ஆழமானது. அவர் பொருளாதாரத்திற்குச் செய்துள்ள சேவையை உலகெங்கிலுமிருக்கும் அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். ராஸ்கர் தான் வரலாற்று வாதப் பொருளாதார அறிஞர்களில் முதல்வர். வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் பின்னணியாகக் கொண்டே பொருளாதார இயலை ஆராயவேண்டுமென வலியுறுத்திய மேதை.

(ii) புரூனோ ஹில்டிபிராண்டு (1812—1878)
(Bruno Hildebrand)

ஹில்டிபிரான்டு ஒரு பொருளாதார அறிஞரும் வரலாற்று மேதையும் ஆவார். இவர் 40 ஆண்டுகளுக்கு மேல் பேராசிரிய ராகப் பணிபுரிந்தவர். இவர் வரைந்த நூல்களில் முக்கியமானது 'இன்றைய, நாளையத் தேசியப் பொருளாதாரம்' என்னும் தலைப்பை யுடையது. தொன்மைப் பொருளாதாரத்தை ராஸ்கரை விடக் கடுமையாகத் தாக்குகிறார் இவர். தனிமனிதனின் நலனில்தான் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் அக்கறை காட்டினர் என்பது முதல் குற்றம்; பொருளாதார விதி முறைகளை எல்லாச் சமுதாயத்திற்கும் பொதுவானதாகக் கருதியது இரண்டாம் குற்ற

மென்று அவர்களின் குற்றங்களை வரிசைப்படுத்திக் கூறுகிறார். பண்பாட்டு அடிப்படையில் சமுதாய வரலாறும் அமைப்பும் மாறி மாறியுள்ளன. அவற்றின் அடிப்படையில் பொருளாதார விதிகளையும் கொள்கைகளையும் அமைத்தால்தான் அவை நடைமுறைக் கேற்றவையாயிருக்கும் என்பது ஹில்டிபிராண்டின் முடிவு. பல்வேறு நாடுகளின் மாறுபட்ட பொருளாதார வளர்ச்சியினை ஆராய்வதே பொருளாதார இயலின் குறிக்கோள் என்கிறார். ஹில்டிபிராண்டு சமூக வரலாற்றினை மூன்றுவகை நாகரிக நிலைகளாகப் பிரித்துக்காட்டியிருக்கும் முறை பொருளாதார இலக்கியத்தில் புகழ் பெற்றவை. அவை முறையே பண்டமாற்றுப் பொருளாதாரம் (Barter Economy), பணமுறைப் பொருளாதாரம் (Money Economy) நாணய முறைப் பொருளாதாரம் (Credit Economy) ஆகும். சோஷியலிச வாதத்தை இவர் தாக்கியிருக்கும் முறை சிறப்பானதாகும். ஆனால் தொன்மைப் பொருளாதார அறிஞர்களை இவர் முறையாகக் கற்றவர் என்று கூற முடியாது.

(iii) கால் நிஸ் (1821-1898)
(Karl Kniss)

முதியோர் குழுவினரில் நிஸ்தான் தொன்மைப் பொருளாதாரத்தை மிக வன்மையாகக் கண்டித்தவர். இவரது நூல்களில் 'வரலாற்றுவாத நோக்கில் அரசியல் பொருளாதாரம்' என்பது முக்கியமானது. பொருளாதாரக் கோட்பாடுகள் எல்லா நாட்டிற்கும் எல்லாக் காலத்திற்கும் பொதுவானவையுமன்று; நிலையானவையுமல்ல என்கிறார் நிஸ் அவை காலத்திற்குக் காலம் நாட்டிற்கு நாடு மாறும் இயல்புடையன. எனவே, வரலாற்று முறையைப் பின்பற்றித்தான் பொருளாதார இயலை அணுக வேண்டுமேயன்றி, பகுத்தறி முறையையல்ல என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். எந்தப் பொருளாதார அமைப்பும் முதிர்ச்சியடைந்ததென்றோ நிலையானதென்றோ கூற முடியாது. இன்று அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் நாம் காணும் பொருளாதார அமைப்புகளும் மாறும்இயல்புடையன என்றார். சமூக, பொருளாதார அமைப்புக்களும் நிறுவனங்களும் மாறும்போதெல்லாம் பொருளாதார இயலின் ஆய்வு முறையையும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது நிஸின் கருத்து.

II. இளையோர் குழுவினர்

கஸ்டோ ஸ்மாலர் (1838-1917)

(Gustav Schmoller)

கஸ்டோ ஷ்மாலர் புகழ்மிக்கதொரு ஜெர்மானியப் பொருளாதார அறிஞர். பெர்லின் பல்கலைக் கழகத்தில் ஏறுக்குறைய 30 ஆண்டுகள் பேராசிரியராகப் பணி புரிந்து புகழ்பெற்றவர். பல கட்டுரைகளை எழுதிப் பெயர் பெற்றவர். இவர் வரைந்த நூல்களில் இரண்டு பாகங்களைக் கொண்ட 'பொதுப் பொருளாதாரக் கோட்பாட்டின் சுருக்கம்' (The outline of general economic theory) என்னும் நூல் சிறப்பானது. வரலாற்றுவாத முறையில் பொருளாதார இயல் அமையவேண்டுமென்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இந்நூல் அமைந்துள்ளது. இளையோர் குழுவிற்குத் தலைவராக விளங்கிய ஷ்மாலர் 1870-ல் புதிய வரலாற்றுவாதத்தைத் தொடங்கினார். இக் குழுவினரின் கருத்துப்படி, முதியோர் குழுவினர் தமது திறமையனைத்தையும் தொன்மைப் பொருளாதாரத்தைத் தாக்குவதில் செலவிட்டனரேயன்றி, புதிய வழிகள் ஒன்றும் வகுக்கவில்லை. இக் குறையை நீக்க ஷ்மாலர் அரும்பாடுபட்டார். இவருடைய தலைமையில் பல சீடர்கள் பல்வேறு நாடுகளின் புவி அமைப்பு, மக்கள் இனம் (ethnology), மக்கள் உளப்பான்மை (pschology) போன்ற பல இயல்புகளைப் பற்றித் தொகுத்து ஆராய்வதில் ஈடுபட்டனர். இதன் அடிப்படையில் எழுதப்பட்ட நாட்டுப் பொருளாதார நூல்கள் பல. எனினும், தொகுத்தறி முறையில் திட்டவட்டமான பொருளாதாரக் கோட்பாடுகளை எவருமே வகுக்கவில்லை. இவர்கள் எழுதிய நூல்களினால் ஏற்பட்ட நன்மை ஒன்றுண்டு. அதாவது, பொருளாதார வரலாறு என்னும் ஆய்வு தோன்றுவதற்கு அவை காரணமாயிருந்தன. இந்த அளவுக்கு ஷ்மாலர், வரலாற்றுவாதம் சிறப்புறத் தொண்டாற்றினார். எனினும், அவர் பகுத்தறி முறையைப் புறக்கணிக்க விரும்பவில்லை. 'நடப்பதற்கு எவ்வாறு வலது இடது கால்கள் வேவையோ, அதேபோல் பொருளாதார ஆராய்ச்சிக்கு பகுத்தறி முறையும் தேவை' என்பது ஷ்மாலரின் புகழ்பெற்ற கூற்று.

1889ஆம் ஆண்டிற்குப்பின் வரலாற்று வாதம் தொன்மைப் பொருளாதாரம் தோன்றிய ஆங்கில நாட்டிலும் தோன்றியது. ஆங்கில நாட்டு வரலாற்று வாதிகளில் ரிச்சர்ட் ஜோன்ஸ் (Richord jones), இங்கிரம் (Ingram), பேஜாட் (Bagchot), அர்னல்ட் டாயின்பீ (Arnold toynhce) குறிப்பிடத்பிக்கவர்கள். ஜோன்ஸ்

ரிக்கார்டோவின் எடுகோள்களை உலகிற்குப் பொருந்தாதவை என இழித்துரைத்தார். தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளையும் தவறுகளையும் வரலாற்றுவாதிகள் தாக்கிய முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது பேஜ்காட்டின் விளக்கம். தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் உண்மையான மனிதர்களை விட்டு விட்டுத் தங்கள் கற்பனையால் உருவாக்கிய மனிதர்களைப் பற்றிப் பேசுகிறார்கள். அம் மனிதர்களை உலகில் நாம் எங்கும் காணமுடியாது. தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் ஆராயும் சமுதாயம் விநோதமானதாகும். குறுகிய மனப்பான்மையில் வரையறுக்கப்பட்ட உலகமாகும். நாகரிக வளர்ச்சியில் பல போக்குடைய சமுதாயத்திற்கு அவர்கள் தரும் கோட்பாடுகள் பொருந்தாது. ஆங்கில நாட்டைப்போல் தொழிலிலும் வாணிபத்திலும் முன்னேறியுள்ள நாடுகளுக்கே அவை பொருந்தும்.'

வரலாற்றுவாதத்தின் சாரம்தான் என்ன ?

வரலாற்றுவாதிகளின் பொதுவான பணிகளை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். (1) தொன்மைப் பொருளாதாரத்தை அவர்கள் குறைகூறியது ; (2) அக் குறைகளை நீக்க அவர்கள் கண்ட வழிகள்.

தொன்மைப் பொருளாதாரத்தில் அவர்கள் காணும் குறைகள் மூன்று ; (1) உலகிற்கே பொதுவான பொருளாதார விதிகளைப் புனைந்தது ; (2) மனிதனின் சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்ட அவர்களது விளக்கம் தவறான மக்கள் உள்ளப் பான்மையையே சுட்டிக்காட்டுகிறது ; (3) பகுத்தறி முறையை மட்டும் அவர்கள் பின்பற்றியது.

நாட்டிற்கு நாடு எல்லாத் துறைகளிலும் வேறுபாடுகள் இருக்கும்போது பொருளாதார விதிகளையும் சட்டங்களையும் எல்லா நாடுகளுக்கும் பொதுவானதாகக் கருதமுடியாது. ஒவ்வொரு நாட்டின் நிலைமைக்கும் சூழ்நிலைக்குமேற்பவே பொருளாதார விதிகளும் கொள்கைகளும் அமையவேண்டுமென வலியுறுத்தினர். ஏனைய விஞ்ஞான அறிவியல்களில் உள்ளதைப்போல் பொருளாதார விதிகள் நிலையானவையல்ல ; அவையனைத்தும் பல நிபந்தனைகளுக்குட்பட்டவை என்பதை நிஸ் வலியுறுத்தினார். ஆனால் ஆல்பிரட் மார்ஷல் விஞ்ஞான அறிவியல் விதிகளும் நிபந்தனைக்குட்பட்டவை ; மாறும் இயல்புடையவை என்று வலியுறுத்திவிட்டு, பொருளாதார விதிகள் மனிதனின் நடவடிக்கைகளைப்பற்றியதாகையால் அவை ஏனைய விதிகளைப்போல் அவ்வளவு நிலையானவையல்ல என்று கூறுகிறார். எனவே

பொருளாதார விதிகள் மக்களது நடவடிக்கைகளைப்பற்றிய போக்கினைக் கூறும் கூற்றுக்களே என்று கூறி விளக்கம் தருகிறார்.

அடுத்து, மனிதன் தன்னல உணர்ச்சியால் மட்டுமே தூண்டப்பட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகிறான் என்பது தொன்மைப் பொருளாதார எடுகோளாகும். இந்த எடுகோளையும் வரலாற்று வாதிகள் தாக்கினர். நாட்டுப்பற்று, தாய் தந்தையர், உறவினரிடமுள்ள பற்று, தியாக மனப்பான்மை முதலியவற்றாலும் மனிதன் தூண்டப்படுகிறான் என்பதை வரலாற்றிவாதிகள் வலியுறுத்தினர். எனவே, மனிதனைப் பிற நற்பண்புகளற்ற 'பொருளாதார மனிதனாகவே' (Economic man) உருவாக்கி, அத்தகைய மனிதனையே தமது ஆய்விற்கு ஆதாரமாகக் கொண்டனர் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள். இவ்வாறு உலக நடைமுறைக்கு முரண்பாடான மனிதனை உருவாக்கியது சிறிதும் பயனற்றது என்பது ராஸ்கரின் கருத்து இவ் வகையான விவாதத்திற்கும் மார்ஷல்தான் முடிவு கண்டார். ஆல்பிரட் வரலாற்று வாதிகள் உணர்த்தும் உண்மையான மனிதனைப்பற்றியதே பொருளாதார அறிவியல். ஆனால் மனிதனின் பிற நற்பண்புகளையெல்லாம் நாம் அளவிடமுடியாது ; எனவே, தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட மனிதனின் பொருளீட்டும் ஆர்வத்தை பணம் என்னும் கருவியால் அளவிடமுடியும். ஆகவே, மனிதனின் பண்புகளில் அளவிடக்கூடிய பண்பையே பொருளாதாரம் ஆய்கிறது என்ற முடிவுக்கு வருகிறார் மார்ஷல்.

மூன்றாவதாக, வெறும் கருத்தியலை மட்டும் உருவாக்கும் நோக்கத்தோடு பகுத்தறி முறையை மேற்கொண்டனர் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள். இம்முறை உண்மையான உலகைப் புறக்கணிக்கிறதென்பது வரலாற்றுவாதிகளின் கருத்து. உண்மை உலகில் நாம் காணும் நிகழ்ச்சிகளையும் கடந்தகால வரலாற்றையும் அடிப்படையாகக் கொண்டு தொகுத்தறி முறையிலேயே பொருளாதார இயலை அணுக வேண்டுமென வலியுறுத்தினர். இவ்வாறாக, பகுத்தறி முறையா அல்லது தொகுத்தறி முறையா என்ற வாதத்திற்கு நவீனப் பொருளாதார அறிஞர்கள் ஒரு முடிவு கட்டினர். இரண்டு முறைகளுமே அவசியமானதென பரீடோ (Parito)வும் மார்ஷலும் வலியுறுத்துகின்றனர். எனவே, பொருளாதார அறிஞர்கள் எந்த முறையைப் பின்பற்றவேண்டும் என்ற விவாதத்தில் தங்களது நேரத்தை வீணாக்க வேண்டாமென அறிவுரை கூறுகிறார் பரீடோ.

தொன்மைப் பொருளாதாரத்தில் கண்ட குறைகளை நீக்க இளையோர் குழுவினர் பாடுபட்டனர் என்பதை முன்னரே கண்டோம். தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் ஏதோ ஓர் இயந்திரத்தின் பல பாகங்களையும் அவைகளின் இயக்கத்தையும் ஆராய்வதுபோல் சமுதாயத்தை மாற்றமில்லாததாகக் கற்பனை செய்துகொண்டு

PUBLIC

பொருளாதார நடவடிக்கைகளை ஆராய்ந்தனர் என்பது வரலாற்று வாதிகள் கண்ட குறை. தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வகுத்த கூலி, குத்தகை, வட்டி, விலை நிருணயம் ஆகிய கோட்பாடு களனைத்தும் இயக்கமும் வளர்ச்சியுமில்லாத சமுதாயத்திற்கே பொருந்தும். இயக்கமும் வளர்ச்சியுமுள்ள சமுதாயத்திற்கு அவைகள் பொருந்தா. ஆனால் நடைமுறையில் சமுதாயம் மாறி, வளரும் இயல்புடையது. மக்கள் சமுதாயம் ஆட்டுமந்தை யல்ல. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை இயற்கை வளங்கள், விஞ்ஞான முன்னேற்றம், கலையார்வம், மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், அரசாங்க அமைப்புமுறை போன்ற பல சக்திகள் நிருணயிக்கின்றன. இச் சக்திகளின் விளைவாகச் சூழ்நிலையும் பொருளாதார நிறுவனங்களும் எப்போதும் மாறிக்கொண்டே இருக் கின்றன. எனவே, பொருளாதார உலகம் இயக்கமுடையதொன்று. அவ்வியக்கத்தால் காலத்திற்கேற்பப் பல சமுதாயங்கள் பல்வேருக மாறி வளர்ச்சியுறுகின்றன. இதுவே உண்மையான உலகம். இவ்வுலகை உருவாக்கி, மாறும் உலகிற்கேற்பப் பொருளாதார நியதி களும் கொள்கைகளும் மாறவேண்டுமென வலியுறுத்தியவர்கள் வரலாற்றுவாதிகள்.

மேலும், இன்றைய சமுதாயச் சூழ்நிலை திடீரெனத் தோன்றி விடவில்லை. நாகரிக வளர்ச்சியினல் சமுதாய வரலாற்றில் படிப் படியாக மாறுதல்கள் உண்டாகி இன்றைய சமுதாயம் உருவாகியுள்ளது. இதுவும் நிலையானதல்ல. எனவே, சமூகப் பிரச்சினைகளையும் பொருளாதாரப் பிரச்சினைகளையும் முழுமையாக ஆராய வரலாறு அவசியம். இதரச் சமூக அறிவியல்களின் அறிவும் தேவை. சான்ருக, நமது விருப்பம், கண்ணேட்டம், நாம் பயன் கொள்ளும் பொருள்கள் யாவும் மாறி வருகின்றன. இதனை விளக்குவதற்கு புவிஇயல், வரலாறு, உளவியல் ஆகியுவற்றின் தெளிவான அறிவு தேவை. எனவே, பொருளாதார வளர்ச்சி வரலாறின்றி அவ்விடலை முறையாக ஆராய இயலாது என்று வர லாற்றுவாதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இவ்வாருக, புதியபொருளாதாரக் கோட்பாட்டினை வரலாற்று வாதிகள் புனையவில்லை என்றாலும், தொன்மைப் பொருளாதார ஆய்வுமுறை, கோட்பாடுகள், கொள்கைகள் ஆகியவற்றை மறு பரிசீலனை செய்யவேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டினர். காலத்திற்கும் சூழ்நிலைக்கு மேற்ப அவை மாறும் இயல்புடையதென வற்புறுத்தினர். பொருளாதார உலகம் சலனமற்றதல்ல; எப்போதும் மாறும் இயல்புடையது என்ற பேருண்மையை வலியுறுத்திய பெருமை வரலாற்று வாதிகளையே சாரும்.

நான்காம் பிரிவு

தொன்மைப் பொருளாதாரப் புனர்விளக்கம்

தொன்மைப் பொருளாதாரத்தை எதிர்த்து நூல் எழுதியோர் பலர். அவர்களில் சிலர் தொன்மைப் பொருளாதாரச் சுதந்திர வாதத்தைக் கண்டித்தனர். வேறு சிலர் முதலாளித்துவ அமைப்பிற்குப் பதிலாகச் சோஷியலிச அமைப்பை நாடினர். இந்நிலையில் தொன்மைப் பொருளாதாரம் வீறுநடை போட இயலாமல் நொந்து வாடியது. அவ் வாட்டதைதைப் போக்கி, அதற்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் தோன்றியவர் ஜே. எஸ் மில். தொன்மைப் பொருளாதாரக் கருத்துகளையெல்லாம் ஒன்று திரட்டி, ஒழுங்கு படுத்தி விரிவுபடுத்த எண்ணினர் மில். எனினும் பிரெஞ்சு நாட்டுச் சோஷியலிச வாதிகளின் கருத்துகளில் மோகம் கொண்டவராய்ப் பல சீர்திருத்தங்களை விரும்பினர். அச் சீர்திருத்தங்களின் வாயிலாக வறியோரின் வாட்டத்தைப் போக்க எண்ணினர். ஆனல் அச்சீர்திருத்தங்களனைத்தும் மனிதனின் சுதந்திரத்தைப் பறித்துவிடுமே என்றும் அஞ்சினர். எனவே, சீர்திருத்தங்களினல் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வகுத்த சுதந்திரப்பாதை அழிந்து விடாத வகையில் தொன்மைப் பொருளாதாரத்திற்குப் புனர் விளக்கம் தந்தார் மில்.

19. ஜே. எஸ். மில் (1806-1673)

ஆடம் ஸ்மித் பொருளாதாரத்தின் தந்தையென்றால், ஜான் ஸ்வேர்ட் மில் (John Sruart Mlli) ஆடம் ஸ்மித்தின் நேர் வாரிசு எனலாம். சென்ற நூற்றாண்டின் மத்தியில் தொன்மைப் பொருளா தாரக் கருத்துகளனைத்தையும் ஒருங்கிணைத்து, சீர்படுத்தி முறைப் படுத்திய பெருமை ஜான் ஸ்வேர்ட் மில்லையே சேரும். ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ, மால்தஸ் ஆகிய தொன்மைப் பொளாதார அறிஞர்களின் கருத்துகளைத் தெள்ளத் தெளிவாகத் தொகுத் துரைத்தவர் மில்.

19ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற அறிஞர்களில் தலை சிறந்தவர் ஜே. எஸ். மில். சரித்திர ஆசிரியர்; தத்துவ ஞானி; ரிக்கார்டோவின் நண்பர்; 'பெரும்பாலான மக்கள் இன்புறச் செய்வதே' அரசின் நோக்கமென்னும் கொள்கையை வகுத்த தத்துவ ஞானியான பென்தம் என்பவர் இவருக்கும் இவரது தந்தை ஜேம்ஸ் மில்லுக்கும் நெருங்கிய நண்பர்.

ஜே. எஸ். மில் 1806ஆம் ஆண்டு மே திங்கள் 20ஆம் நாள் லண்டன் மாநகரில் பிறந்தார். தந்தையின் கல்வித் திட்டப்படிக் கற்று பெரும் மதிப்பைத் தேடித் தந்தார். மூன்று வயதில் கிரேக்க மொழியையும், நான்கு வயதில் லத்தீன் மொழியையும் கற்க ஆரம்பித்தார். பிளேட்டோவின் இலக்கிய நூல்களையும், லத்தீன் மொழியில் இருந்த இலக்கியங்களையும் கற்றபின் பன்னி ரண்டாவது வயதில் தருக்க நூலைக் கற்றார். ஏழு வயதிலிருந்து பத்து வயதுவரை தந்தையுடன் ஒவ்வொரு நாளும் மாலையில் வெளியே உலாவச் செல்வது வழக்கம். அவ்வாறு உலவி வரும் போது முந்திய நாள் கற்றதைத் தந்தைக்கு விளக்கிக் கூறி வந்தார் தனையன்.

லத்தீன் கிரேக்க மொழிகளையும் தருக்க நூல், வரலாற்று நூல் களையும் கற்ற பின் தன் பதின்மூன்றாவது வயதில் பொருளாதார இயலைக்கற்க முனைந்தார். முதலில் ரிக்கார்டோவின் பொருளாதாரக்

கொள்கைகளையும், பின்னர் ஸ்மித்தின் நூலையும் கற்றார். பதி மூன்றாவது வயதில் பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றார். அப்போது பாரிஸ் மாநகரில் வாழ்ந்து வந்த ஜே. பி. ஸே அவர்களைக் கண்டு கருத்துகளைப் பரிமாறிக் கொள்வது வழக்கமாயிற்று. இவ்வாறாக, தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் அடிச்சுவட்டையே மில் பின்பற்றினார். அவர் வகுத்த வழிகளிலும், கொள்கைகளிலும் என்றும் அசைக்க முடியாத நம்பிக்கை உருவாயிற்று.

1821ஆம் ஆண்டு, பதினைந்து வயதுப் பருவத்தில் இங்கிலாந்து திரும்பிய மில் ரோமானியச் சட்ட நூல்களையும் ஆங்கிலச் சட்டங்களையும் கற்கத் தொடங்கினார். இத் தருவாயில்தான் பென்தம் அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சட்டம் பயிலும் போது மில்லின் ஆர்வம் பிரெஞ்சு நாட்டு சட்ட நிபுணரான டுமாண்ட் (Dumont) அவர்களின் நூலைக் கற்கத் தூண்டியது. இந் நூல் அவரது அறிவியல் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது என்று அவரே கூறுகிறார். பிரெஞ்சு நாட்டு சோஷியலிச வாதிகளான புனித சைமன் அவர்களின் வழித் தோன்றல்களின் கொள்கைகள் மில்லைக் கவர்ந்தன. இந் நிலையில் பென்தம் அவர்களின் கொள்கையில் மில்லுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லாமல் போயிற்று. தம் மனைவியின் செல்வாக்கிற்கிணங்க சோஷயலிசத்தில் பற்றுக்கொள்ள முற்பட்டார். எனினும், ஒரு பூரண சோஷியலிச வாதியாக மாறவில்லை' பின்னால் தனக்கு மனைவியாக அமைந்த, முன்னாள் திரு டெய்லர் அவர்களின் துணைவியாக இருந்த திருமதி ஜான் டெய்லர் அவர்களின் உதவியால்தான் தம் நூல்களை எழுதியதாகக் குறிப்பிடுகிறார் மில். அவளுடன் ஏற்பட்ட தொடர்பைக் குறித்து "என் வாழ்க்கையிலேயே சொல்லொணாப் பெருமையுடைய நட்பு இது" என்று கூறுகிறார். தான் எழுதிய "சுதந்திரம்" என்ற புகழ் பெற்ற நூல் என்றும் மறையாது என்று கூறும் மில் அதற்குக் காரணம், அந் நூலை எழுத அவள் செய்த உதவியே என்கிறார். 22ஆம் வயதில் அப் பெண்மணியோடு தொடர்பு கொண்டார். பின்னர் 43ஆம் வயதில் தான் அவளுடைய கணவர் இறந்த பின், அவளைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களின் ஜோடிப்பொருத்தம் ஈடு இணையற்றது.

1823-ல் கிழக்கிந்தியக் கம்பெனியில் வேலைக்கமர்ந்தார். 1858 வரை இக் கம்பெனியில் பணியாற்ற நேர்ந்ததை ஒரு அதிர்ஷ்டமாகவே கருதுகிறார். பல முக்கியத் தொழிலதிபர்களோடும் வணிகப் பிரமுகர்களோடும் நெருங்கிப் பழகும் வாய்ப்பை இவ்வேலை அளித்தது. 1858 முதல் 1868 வரை பாராளுமன்றச் சுயேச்சை

உறுப்பினராக இருந்தார். பெண்களுக்கும் தொழிலாளிகளுக்கும் வாக்குரிமை வேண்டுமென அப்போதே வாதாடியுள்ளார்.

சூழ்நிலைகள்

டாக்டர் குவெஸ்னே, துர்கோ, ஆடம் ஸ்மித் ஆகியோரின் நூல்களைப் படித்து விட்டு மில்லின் நூலைக் கற்ருேமாளுல் ஒரு புதுயுகமே தோன்றியிருப்பதாகத் தெரியும். பொருளாதாரத்தின் எளிமையும், இளம் பருவமும் கடந்து, முதிர்ச்சியும் பக்குவமும் சேர்ந்த பருவத்தை அடைகிறது. இதற்கு, பொருளாதார நிலைமை களில் ஏற்பட்ட மாறுதல்களே காரணம். ஆடம் ஸ்மித் காலத்தில் தொடங்கிய தொழிற்புரட்சி மில்காலத்தில் முதிர்ச்சி அடைந்து விட்டது. சிறுசிறு தொழிலகங்களில் முதலாளிகளின் கண் காணிப்பில் வேலை செய்த காலம் மறைந்து, ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் ஒன்ருகச் சேர்ந்து வேலை செய்யும் தொழிற்சாலை முறை தோன்றி விட்டது. சின்னஞ்சிறு கருவிகளையும் எளிதான சாதனங்களையும் பயன் படுத்திய காலம் மறைந்து, பெரிய எந்திரங் களையும் நுட்பம் நிறைந்த சாதனங்களையும் உபயோகப்படுத்தும் காலம் தோன்றிவிட்டது. பெண்கள் என்றும் குழந்தைகள் என்றும் பாராமல் 15 மணி, 16 மணி நேரம் வரை தொழிற்சாலைகளில் முதலாளிகள் வேலை வாங்கினர். தொழிலாளி, முதலாளிகளிடையே பகைமையுணர்ச்சி தலைதூக்க ஆரம்பித்தது. மக்கள் தொகையும் விரைவாக வளர்ந்து வந்தது. இதனுல் நிலச்சுவான்களின் சொத்துக்களுக்கு மதிப்பு அதிகமாகி விட்டது. மற்றவர்களின் நலத்தைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், தங்கள் குத்தகை வருவாயிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தனர். கார்லைல், ரஸ்கின் போன்ற எழுத்தறிஞர்கள் இந் நிலையைப் பார்த்துத்தான் பொருளாதார இயலை ''பணப்பேயின் வேதவாக்கு'' என்றனர் போலும். ஆடம் ஸ்மித் அவர்கள் நிலச்சுவான்களின் தன்னலமற்ற தியாக மனப்பான்மையைப் போற்றினுர் என்ருல், இப்போது அவர் களின் சுயநலச் சுரண்டல்களிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. இதற்கு அரசாங்கம் தானே முயற்சி செய்ய வேண்டும்!

ஸ்மித் அவர்கள் இயற்கைச் சக்திகளையும் சூழ்நிலைகளையும் கருணை வடிவுள்ள, தெய்வீகக் குணங்கள் நிறைந்தவைகளாகக் கருதினுர். மிகவும் புகழ்பெற்ற பிரெஞ்சுத் தத்துவ மேதை ரூசோ அவர்களும் இந்த எண்ணத்திற்குத் தூபமிட்டார். எனவே, இயற்கைச் சக்திகளையும் விதிகளையும் அவற்றின் போக்கிலேயே விட்டுவிட வேண்டுமென வலியுறுத்தினர். ஆனுல், மில் அவர் களின் காலத்தில் இயற்கை ஈவு இரக்க மில்லாத அரக்கனுகவே

கருதப்பட்டது. இயற்கைச் சக்திகளை வெல்லுவதே முன்னேற்றத்திற்கான அறிகுறி, நாகரிகத்தின் சின்னம் என்று மக்கள் கருதினர். எனவே, இயற்கை இயற்கை என்று சொல்லி ஒரு சிலர் வசதியாகவும், ஆயிரக்கணக்கானோர் பசி பட்டினியால் மடியவும் விட்டுவிடக் கூடாது, மனித சமுதாயத்தில் ஒரே நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்டுவது அவசியம். இது அரசாங்கத்தின் கையில் தான் இருக்கிறது.

ஜே. எஸ், மில்லின் பிறப்பு, வளர்ப்பு, அறிவு, ஞானம், எல்லாவற்றிக்கும் மேலாக மக்கள் நன்கு வாழ வேண்டுமென்ற நல்லெண்ணம் அவரை ஒரு பொருளாதார நூலை எழுதத் தூண்டியது. அதன் விளைவுதான் 1848-ல் வெளியான பொருளாதார இயலின் கொள்கைகள்'' என்னும் நூல். இதில் தம் காலம் வரை எழுந்துள்ள புதுப்புதுக் கருத்துகளையெல்லாம் ஒன்று கூட்டி ஆடம் ஸ்மித்தின் நூலிற்கு ஒரு விளக்கம் கொடுக்கலாம் என்று திட்டமிட்டிருந்தார். ஆனால் அவர் எழுதியதோ ரிக்கார்டோ நூலுக்குத் தெளிவுரையான நூலாகி விட்டது என்பது அறிஞர்களின் எண்ணம். இந் நூலின் பிறிதொரு குணம்; முதல் பாதியில் ஸ்மித் ரிக்கார்டோ, மால்தஸின் கருத்துகளை விரித்து, தெளிவாக விளக்கப்படுகிறது. பின் பகுதியில் மக்களின் துயரைத்துடைத்து ஏழை எளிய தொழிலாளிகளின் இன்னலைப் போக்க இனியும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுவது உகந்ததல்ல என்று கூறுவது. அவருக்கு சோஷியலிசத் தத்துவத்தில் திடீர்மோகம் ஏற்பட்டு விட்டது போல் தோன்றும்படி எழுதுகிறார். அதேசமயம் அவருக்குத் தனி மனிதனின் சுதந்திரத்தில் உள்ள பக்தி அரசாங்கத் தலையீட்டை வெறுக்கச்செய்கிறது. எனவே, ஓர்சமயம் பொருளாதாரச்சமத்துவம் வேண்டுமென்பார்; அதற்காகப் பளுவான வருமான வரி முதலியன விதிக்க வேண்டுமென்பார்; மறு சமயம் வருமானவரி, சொத்துவரியெல்லாம் தனிமனிதனின் சுதந்திரத்தை அறுக்கும் ரம்பம் என்பார். இருமனத்துடன் தலையிடாக் கொள்கையை ஆதரித்தும் எதிர்த்தும் வாதாடுவது இந் நூலின் சிறப்பு அம்சமாகிவிட்டது. காரணம் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்திலேயே ஊறித்திளைத்தவர் மில். எனவே அவர்களின் கொள்கையை முற்றிலும் புறக்கணிக்க அவர் மனம் இடம் கொடுக்கவில்லை. ஆனால் அதே சமயம் பொருளாதார அநீதியைக் கண்டிக்கவும் சீர்படுத்தவும் அவர் தயங்கவில்லை. எனவே, இவ்விரு கருத்துலகங்களுக்கும் நடுவில் மில் காட்சியளிக்கிறார். தொன்மைப் பொருளாதார இயலை நிறைவு செய்தவரும் மில்தான்; அப் பொருளாதார இயல் குன்றிப் போகக் காரணமாயிருந்தவரும் அவரே.

ஜே. எஸ். மில்லின் நூல்கள்

தனது 16ஆம் வயதிலேயே மில் பல பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதத் தொடங்கி விட்டார். அவர் கட்டுரைகள் பெரும்பாலும் பொருளாதாரம், பேச்சு, கருத்துச் சுதந்திரம் பற்றியவைகளே. அவர் எழுதிய முக்கியமான நூல்களில் முதலாவது வெளி வந்தது ''தருக்க இயல் முறை'' என்பதாகும். இந்நூல் 1843-ல் வெளிவந்தது. தருக்க நூல்களில் மிகச் சிறந்த நூலாக இன்றும் கருதப்படுகிறது இது. தீர்வுகாணாத பல பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிய கட்டுரைகளையெல்லாம் தொகுத்து 1844-ல் வெளியிட்டார். நமக்குத் தேவையான ''பொருளாதாரத்தின் தத்துவங்கள் என்னும் நூலை 1848-ல் வெளியிட்டார். பின்னர், 'சுதந்திரம்' 'பிரதிநிதித்துவ அரசாங்கம்' ஆகிய நூல்கள் வெளி வந்தன.

பொருளாதார இயலின் தத்துவங்கள்

1848ஆம் ஆண்டில், மில் தனது ''பொருளாதார இயலின் தத்துவங்கள்'' என்னும் நூலை வெளியிட்டார். இந் நூல் சுமார் 30 ஆண்டுகளில் ஈடு இணையற்றதாகத் திகழ்ந்தது. தொன்மைப் பொருளாதார இயல் உச்ச நிலையை அடைந்தது இந் நூலில்தான். அதற்கு முன் தோன்றிய அறிஞர்களின் கருத்துகளை ஒன்று திரட்டி அழகிய நடையில் கூறுவது இந்நூல். செல்வத்தின் இயல்பையும், அச்செல்வம் உற்பத்தியாகும் விதிகளையும், பகிரப் படுகின்ற வழி முறைகளையும் விளக்கிக் கூறுவதே பொருளாதார இயலின் பொறுப்பு என்கிறார் மில். இதே கருத்தினைத் திருவள்ளுவரும் ''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு'' என்று பொருளியலில் கூறியுள்ளார். இந்நூல் ஐந்து பெரும் பகுதிகளைக் கொண்டது. உற்பத்தி, பகிர்வு, பரிவர்த்தனை, சமூக முன்னேற்றத்தில் உற்பத்தியிலும் பகிர்விலும் ஏற்படும் மாறுதல்கள், அரசாங்கத்தின் கடமைகள் ஆகியவை அந்த ஐந்து பிரிவுகளாகும். இன்று சாதாரணமாகப் பொருளாதார நூலிலுள்ள அமைப்பையும் பாகுபாட்டையும் இந்த நூலில் காணலாம்.

மில் தனது நூலில், பிற நாட்டு வாணிபக் கொள்கையைத் தவிர, புதிய கொள்கை ஏதும் வகுக்கவில்லை என்பது உண்மை. எனினும், தொன்மைப் பொருளாதார இயலைப் பளிங்கு மாளிகையாக அமைத்த சிற்பி அவர். அவரது புது விளக்கத்தைப் புரிந்து கொள்ள அவரது முக்கிய கருத்துகளைச் சுருக்கமாக ஆராய்வோம்.

நாட்டின் செல்வம் என்பது வேறு; தனி நபரின் செல்வம் வேறு என்பதை முறையாக விளக்கியவர் மில். வணிகவாதிகளின் கருத்தையும் கொள்கையையும் வன்மையாகக் கண்டித்த மில், சில நாடுகள் செல்வமிகுந்ததாயும், வேறு சில நாடுகள் வறுமை மிக்கதாயும் இருப்பதற்குரிய காரணங்களையும் விளக்குகிறார். இவ் விளக்கத்திற்கு ஆதாரமாகப் பொருள் உற்பத்தி விதிகளையும் வருமானப் பகிர்வு விதிகளையும் சுட்டிக்காட்டுகிறார். இவ் விளக்கத்தைப் பின்னர் அறியலாம்.

பண்டங்களின் மதிப்பு

பொருளாதார இயலில் பண்டங்களின் மதிப்பு எவ்வாறு நிருணயமாகிறது என்பதே மையமான பிரச்சினை. இப் பிரச்சினைக்கு விளக்கம் தரும் வகையில் பண்டங்களை மூன்று இனங்களாகப் பிரித்தார் மில். சில பண்டங்கள் முன்னரே உற்பத்தியாகி விட்டவை. அவற்றை மீண்டும் உற்பத்தி செய்ய இயலாது. உலகப் புகழ் பெற்ற சிற்பங்களையும், பிற கலைச் செல்வங்களையும் இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். இவ்விதப் பண்டங்களின் மதிப்பு அவற்றின் அளவால் மட்டுமன்றி அவற்றிற்கான தேவையாலும் நிருணயமாகிறதென்கிறார். இங்கு அப் பண்டங்களின் உற்பத்திச் செலவு முக்கியமன்று. இவ் வகைப் பண்டங்கள் பொருளாதார ஆய்விற்கு முக்கியமன்று என்கிறார்.

அடுத்து, வேண்டியபோது செலவு செய்து உற்பத்தி செய்யக் கூடிய பண்டங்களை இரண்டாவது இனத்தில் சேர்க்கிறார். ஆடை அணிகலன்கள், பேனா, பற்பசை போன்ற பண்டங்களை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். இவ்வகைப் பண்டங்களுக்கு இருவகை மதிப்பு உண்டு. ஒன்று அவற்றின் இயல்பான மதிப்பு; மற்றொன்று சந்தை மதிப்பு. பின்னது தேவை சக்தியாலும் அளிப்பு சக்தியாலும் நிருணயமாவதால் மாறும் இயல்புடையது. ஆனால் நிலையாக இருக்கக்கூடிய இயல்பான மதிப்பு அவற்றின் உற்பத்திச் செலவால் நிருணயமாகிறது. எனவே, ரிக்கார்டோவின் கோட்பாட்டை மில் விரிவுபடுத்தி, முறையானதாக அமைக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது. உற்பத்திச் செலவால் மதிப்பு நிருணயமாகிறதென்றால் அளிப்பு சக்தியே பிரதானம் என்பது பொருள். உற்பத்திச் செலவில் கூலி, குத்தகை, இலாபம் (வட்டி) ஆகிய அனைத்தும் அடங்கும் என்கிறார்.

வேறு சில பண்டங்களை வேண்டியபோது உற்பத்தி செய்ய முடியும்; எனினும், அவற்றை உற்பத்தி செய்வதற்கான செலவு அதிகரித்துக்கொண்டே செல்லும். விவசாயப் பொருள்களை இதற்

குச் சான்ருகக் கொடுக்கலாம். இவ்வகைப் பண்டங்களின் மதிப்பைப் பற்றிக் கூறுவது கடினம். இருப்பினும், இவற்றைத் தேவைக்கேற்ப உற்பத்தி செய்யும்போது ஏற்படும் அதிகபட்சச் செலவே இவற்றின் மதிப்பை நிருணயிக்கிறதெனலாம்.

பகிர்வுக் கொள்கை

நாட்டின் வருமானம் உற்பத்திக் காரணிகளுக்கிடையே எவ்வாறு பகிரப்படுகிறதென்ற விளக்கத்தில் மில் தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளையே வலியுறுத்துகிருர்.

குத்தகைக் கொள்கை

ரிக்கார்டோவின் குத்தகைக் கொள்கையின் தத்துவத்தை மில் அப்படியே வலியுறுத்துகின்ருர். மிக மோசமான நிலத்தில் விளையும் விளைச்சலைவிட, அதே செலவில் வளமான நிலம் தரும் பலன் அதிகமாயிருக்கும். எவ்வளவு அதிகமாயிருக்குமோ அதுவே வளமான நிலத்திற்கான குத்தகையாகும் என்கிருர். வெறும் நில வளத்தை மட்டும் ஆதாரமாகக் கொள்ளாது, நிலம் இருக்கும் இடத்தின் அமைப்பையும் மில் முக்கியமானதாகக் கருதுகிருர். எனவே, குத்தகை என்பது நிலத்தின் வள வேறுபாட்டாலும், இடத்தின் மாறுதலாலும் நிருணயிக்கப்படுவதாகும். பல பயன்களையுடைய நிலமாக இருக்குமெனின், குத்தகை விலையைப் பாதிக்கக் கூடுமென்று கூறுவதன் மூலம் ரிக்கார்டோவின் கோட்பாட்டிற்குத் திருத்தம் கொண்டுவருகிருர்.

ஆடம் ஸ்மித்தைப் போலவே மில்லும் நிலக்கிழாரைச் சர்வாதீன வலிமையுள்ளவராகக் கருதுகிருர். இச் சர்வாதீன வலிமையின் காரணத்தால்தான் குத்தகைப் பிரச்சினையே எழுகிறது. எல்லாருக்கும் வேண்டிய அளவு நிலம் கிடைக்குமாயின், குத்தகை என்ற பேச்சுக்கே இடம் இராது. நிலக்கிழாரின் தன்னலக் குணம் பொதுமக்களின் நலனைப் பாதிக்கின்றது என்று ரிக்கார்டோ கருதினுர். ஆனால், மில் அவ்வாறு கருதாவிட்டாலும், விவசாய உற்பத்தி முறையில் திடீரென ஏற்படும் முன்னேற்றங்களை நிலக்கிழார் விரும்ப மாட்டார் என்கிருர். அது அவர்கள் பெறும் குத்தகையைப் பாதிக்கும் என்பதே இதற்கு அடிப்படையான காரணம்.

கூலிக் கொள்கை

மிகப் புகழ்பெற்ற கூலி நிதிக் கொள்கையை வகுத்தவர் மில் என்றே யாவரும் கூறுவர். இக் கொள்கையை அவர் ஆதரித்துப் பேசினுர் என்ற காரணத்தால், இது அவருடைய கொள்கை

யாகவே கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் இக் கொள்கையின் சாரத்தை மால்தஸிடமும் சீனியரிடமும் காணலாம். கூலி விகிதமானது ஒரு நாட்டின் கூலி நிதியின் அளவைப் பொறுத்தே அமைகிறது என்பதே இக் கொள்கையின் விளக்கம். சாதாரணமாக, கூலி என்பது தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் அவர்களுக்கிருக்கும் தேவையையும் பொறுத்து அமையும். இதனை காப்டன் (Cobden) அவர்கள் சுவையாகக் கூறுகிறார். ஒரு முதலாளியைத் தேடி இரண்டு கூலியாள்கள் சென்றால் கூலி குறையும்; ஒரு கூலியாளைத் தேடி இரண்டு முதலாளிகள் போனால் கூலி உயரும். அதாவது, உழைப்பாளிகளின் எண்ணிக்கைக்கும் கூலி கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதிக்குமுள்ள விகிதாச்சாரத்தைப் பொறுத்தே கூலி விகிதம் நிருணயமாகும். அவ்வாறாயின், கூலி அதிகரிக்க வேண்டுமானால், ஒன்று கூலி நிதி அதிகமாகவேண்டும்; அல்லது கூலிக்கு வருகிற தொழிலாளரின் எண்ணிக்கை குறைய வேண்டும். இக் கொள்கையை மக்கள் தொகை குறைய வேண்டுமென்பதற்காகவே மில் வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது.

மக்கள் தொகை குறைந்தால்தான் கூலி விகிதம் உயருமென்பது மில்லின் அசைக்க முடியாத நம்பிக்கை. இது, மால்தஸின் மக்கள் தொகைக் கொள்கைமீது மில் கொண்டிருந்த பற்றுதலை எடுத்துக் காட்டுகிறது. அடிப்படையான உணவுப் பிரச்சினையின் காரணத்தால் மக்கள் தொகை பெருகுவது பயங்கரமானதாகவே இருக்குமென மில் கருதினார். அதோடு, பொருளாதார இயலில் மிக முக்கியமானதெனக் கருதப்படும் குறைந்து செல் விளைவு விதியிலும் நம்பிக்கை கொண்டிருந்தார். எனவே, மக்கள் தொகைப் பெருக்கத்தை மால்தஸைவிட வன்மையாகக் கண்டித்தார். அளவுக்கு மிஞ்சிப் பிள்ளைகளைப் பெறுவது காட்டுமிராண்டித்தனமென்றும், குடிகாரச் செயலை ஒத்ததென்றும் அவர் கனல் தெறிக்கக் கூறுகிறார். இதிலிருந்து ரிக்கார்டோவின் குத்தகைக் கோட்பாட்டை மட்டுமன்றி மால்தஸின் மக்கள் தொகைக் கோட்பாட்டையும் மில் வலியுறுத்துவது வெளிப்படையாகத் தெரிகிறது.

இலாபக் கொள்கை

இலாபம் என்பது கூலியோடு நெருங்கிய தொடர்புடையது என்பது மில்லின் கருத்து. சீனியர் வகுத்த துய்ப்புத் தவிர்ப்புக் கொள்கையை அப்படியே ஏற்றுக் கொண்ட போதிலும், துய்ப்புத் தவிர்ப்பு என்பது மொத்த இலாபத்தில் ஒரு பகுதியே என்கிறார். மொத்த இலாபத்தில் தொழில் முயல்வோர் மேற்கொள்ளும் ஆபத்துக்களுக்கும் மேற்பார்வையிடும் பணிக்கும் கொடுக்கப் படவேண்டிய சன்மானமும் அடங்கும். எனவே, துய்ப்புத் தவிர்ப்

பிற்காகக் கொடுக்கப்படும் ஊக்கத் தொகையே இலாபம் என்பது தவறு. இலாபம் உற்பத்தியாகும் பொருள்களின் அளவைப் பொறுத்தும் அமையும் என்பது மில்லின் கருத்து. இதிலிருந்து ரிக்கார்டோவின் இலாப—கூலித் தொடர்பை மில் மனதில் கொண்டார் என்பது தெளிவாகிறது. இலாபம் கூலியைப் பொறுத்து அமையும். கூலி அதிகமானுல் இலாபம் குறையும்; கூலி குறைந்தால் இலாபம் அதிகரிக்கும் என்ருர் மில். சீனியரின் கொள்கையையும் ரிக்கார்டோவின் கொள்கையையும் ஆதாரமாகக் கொண்டு, மில் இலாபக் கொள்கையை விளக்குவது விசித்திரமானது. இவ்விரு கொள்கைகளும் ஒன்றுக்கொன்று முரணுனவை. சீனியரின் கொள்கையை மட்டும் விரிவுபடுத்தியிருந்தால் மில்லின் இலாபக் கொள்கை விளக்கம் தெளிவானதாக இருந்திருக்கும். ஆனுல் ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ ஆகியோரின்மீது மில் கொண்டிருந்த நம்பிக்கை காரணத்தால் ரிக்கார்டோவின் கொள்கையைத் தவிர்க்க முடியவில்லை.

தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளும் மில்லின் கொள்கைகளும்

இதுவரை மில்லின் முக்கியமான கொள்கைகளை ஆராய்ந்தோம். இக் கொள்கைகள் பெரும்பாலும் தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு நிறைவான விளக்கம் தருவதாகவே அமைந்துள்ளன. எனினும், தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து மில் ஓரளவு பிரிந்து சென்ருர் என்பது ஒரு சிலரின் கருத்து. எவ்வளவு தூரம் பிரிந்து சென்ருர் என்பதை ஆராயவேண்டுமாயின், தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் அடிப்படையான தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு மில்லின் கொள்கைகளை ஆராய்வது அவசியம்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் இயற்கை விதிகளின் மீது அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டவர்கள். இவ்வித இயற்கை விதிகளே பொருளாதார இயலை ஓர் அறிவியலாக அமைக்கின்றன என்பதும் அவர்கள் கருத்து. ஆனுல் இயற்கை வாதிகளைப் போல் இவ் விதிகள் தெய்வீகமானவை, முடிவானவை என்று அவர்கள் கருதவில்லை. இவ்விதிகளில் முக்கியமானவை வருமாறு :

தன்னலம்

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னலம் என்பது இயல்பானது. தான் நன்ருக வாழவேண்டும்; மிகுந்த பொருள் திரட்ட வேண்டும் என்பது இத் தன்னலப் பண்பின் பிரதிபலிப்பாகும்.

இத் தன்னலப் பண்பானது மனிதனின் உடன் பிறப்பு. இது எல்லாருக்கும் எல்லா நாடுகளுக்கும் பொதுவானது; நிரந்தமானது. இவ் விதியின்மீது கொண்ட நம்பிக்கையின் காரணத்தால் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் தனி மனிதத் தத்துவ ஞானிகள் என்றும் அறியப்படுவர்.

போட்டி மனப்பான்மை

தனக்கு எது நல்லது என்பதைத் தனி மனிதன் தான் நன்கு அறிந்து கொள்ள முடியுமாயின், ஒவ்வொருவனும் தத்தமக்குப் பிடித்தமான தொழிலைச் செய்வதற்கும், தனக்குப் பொறுத்தமான தொழிலில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பை அளிப்பதுதான் சிறந்த வழியெனத் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வற்புறுத்தினர். தனியுரிமை என்பது தனி மனிதனின் முழுச் சுதந்திரத்தைச் சுட்டிக்காட்டுகிறது. எனவே, தொன்மைப் பொருளாதார அறிஞரைச் சுதந்திரக் கொள்கையுடையோர் என்றும் கூறுவர். இக் கொள்கையின் வாயிலாகத் தலையிடாக் கொள்கை எந்தெந்தத் துறைகளில் சிறந்ததோ அவற்றில் இக் கொள்கையைக் கடைப்பிடிப்பது நல்லதென்றனர். மில் அவர்களும் இக் கொள்கைக்குப் பேராதரவு தந்தார். இக் கொள்கையை எதிர்ப்பவனைக் காட்டிலும் இதைக் கடைப்பிடிப்பவனே உண்மை நெறிக்குத் தோழன் என்பது மில்லின் கருத்து. எனவே, அரசாங்கம் தனிமனிதன் மேற்கொள்ளும் எந்தப் பொருளாதார நடவடிக்கைகளிலும் தலையிடக் கூடாது என்பதே அவர்களின் நடைமுறைக் கொள்கை.

ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்தமான தொழிலைப் போட்டி போட்டுச் செய்வது என்பது மனித இயல்பு. போட்டி மனப்பான்மையே இயற்கையின் வாயிலாக உருப்பெற்ற பண்பு. பொருளாதாரத் துறையில் தடையில்லாத போட்டியிருந்தால் தான் உற்பத்தியாளருக்கும் நல்லது; நுகர்வோருக்கும் சிறந்தது. உற்பத்தியாளர் போட்டியிட்டுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வர்; நுகர்வோருக்கும் அப் பொருள்கள் வேண்டிய அளவு மலிவாகக் கிடைக்கும். நியாயமும் நியதியும் நிலைக்கும் என்பது தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் வாதம். 'சுதந்திரம்' என்னும் அரசியல் நூலை எழுதிய மில், அரசியல் மட்டும் சுதந்திரத்தை விரும்பவில்லை. பொருளாதாரத் துறையிலும் அதனை வலியுறுத்தினார். எந்தெந்த வழிகளிலெல்லாம் சுதந்திரக் கொள்கையைக் கடைப்பிடிக்க முடியுமோ அவ் வழிகளிலெல்லாம் அதனைக் கடைப்பிடிப்பது நன்மையே என்று கூறியுள்ளார். எனவே, மில் சோஷியலிசக் கொள்கையை வன்மையாகக் கண்டிப்பார் என

எதிர்பார்க்கலாம். போட்டி மனப்பான்மைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் சோஷியலிச வாதிகளின் கொள்கையைத் தான் வன்மையாக எதிர்ப்பதாகக் கூறியுள்ளார்.

தேவை, அளிப்பு விதி

பண்டங்களின் விலையும், அவற்றை உற்பத்தி செய்யும் காரணிகளின் விலையும் எவ்வாறு நிருணயமாகின்றன என்பதற்குத் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் சுருக்கமாகப் பின்வருமாறு விளக்கம் தந்தனர் : தேவை விரிவடைந்தால் விலை ஏறும்; சுருங்கினுல் விலை இறங்கும்; அளிப்பு அதிகரித்தால் விலை குறையும்; குறைந்தால் விலை அதிகரிக்கும். எனவே, தேவை, அளிப்பு ஆகியவற்றின் சக்திகளே விலையை நிருணயிக்கின்றன என்பது அவ்வறிஞர்களின் நம்பிக்கை. மில், இவ் விளக்கம் முழுமையற்றதென்ருர். தேவை, அளிப்பு ஆகிய இரண்டும் விலையை நிருணயிப்பது உண்மை; ஆனுல் தேவையையும் அளிப்பையும் நிருணயிப்பது விலைதானே என்று கூறி, விலைக் கொள்கைக்கே புதியதொரு விளக்கம் தந்தார். தேவை, அளிப்பு, விலை ஆகிய மூன்றும் ஒன்ருேடொன்று நெருங்கிய தொடர்புடையவை. இவை மூன்றில் எது எதனை நிருணயிக்கிறது என்று திட்டவட்டமாகக் கூற இயலாதென்ருர். பழைய விளக்கத்திற்கு புதுமெருகேற்றும் மில், தேவையும் அளிப்பும் ஒன்றுக்கொன்று சமமாகும் நிலையில் விலை நிருணயமாகின்றது என்கிருர். இது தேவை, அளிப்பு விதிக்கு வலிமையும் தெளிவும் கொடுக்கிறது.

எனினும், இவ் விளக்கம் விலை ஏன் மாறுகிறது என்பதைத் தான் புலப்படுத்துகிறதே தவிர, விலை பற்றிய கருத்தை உணர்த்தவில்லை. அப்படியிருந்தும், விலையைப் பற்றிய விவாதத்திற்கே இனி இடமில்லை என்றும், அது முழுமையாக விளக்கப்பட்டுவிட்டதென்றும் மில் கூறியுள்ளார். ஆனுல் அது இன்றும் முழுமையாகவில்லை என்பது நாம் அறிந்ததே.

தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளில் மால்தஸின் மக்கள்தொகைக் கொள்கையும் ரிக்கார்டோவின் குத்தகைக் கொள்கையும் முக்கியமானவை. இவற்றை மில் அப்படியே ஏற்றுக் கொண்டார் என்பதை முன்னரே கண்டோம்.

இவ் விதிகளும் கொள்கைகளும் எல்லா நாடுகளுக்கும். மக்களுக்கும் பொதுவானவை; நிலையானவை. எக்காலத்திலும் இவை மாருதவை என்பது தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்து. மனிதனின் பொதுப் பண்பும் அவசியமான

தேவையும் என்றும் மாறுவதில்லை. அவ்வாறாயின், அவற்றை ஆதாரமாகக் கொண்ட இவ் விதிகளும் மாறாதவை என்று கருதினார். தன்னலப் பண்பால் பொதுநலம் பெரும்பாலும் பேணப்படுகிறது என்றும் நம்பினார். மில் அவர்களும் இவ் விதிகளையும் கொள்கைகளையும் வலியுறுத்தியதோடு, அவற்றிற்குப் புது விளக்கம் தந்து பெருமைப்படுத்தினார். ஆனால் தம் பொருளாதாரக் கொள்கை நூலின் பிந்திய பதிப்புகளிலும் இதர நூல்களிலும் சோஷியலிசக் கொள்கைகளுக்கு ஆதரவு தருவதுபோலவும் அரசாங்கத் தலையீட்டை விரும்பியதுபோலவும் எழுதியுள்ளார். இதனால் தொன்மைப் பொருளாதாரக் கருத்துகளும் கொள்கைகளும் சிறிது சிதைவுற்றன என்று ஒருசிலர் வாதாடுவர். இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நாம் உணர்ந்துகொள்ள அவரது பிற்காலக் கருத்தினையும் கொள்கைகளையும் தெரிந்துகொள்வது அவசியம்.

இருவகை விதிகள்

பொருளாதார விதிகள் அனைத்தும் இயற்கையானவை. எனவே, எல்லா இடத்திற்கும் பொதுவானவை, நிலையானவை என்பது தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் நம்பிக்கை. இதனை மில் அவர்கள் மறுத்தார்கள். பொருளாக்க விதிகள் என்பவை வேறு, செல்வப் பங்கீட்டு விதிகள் என்பவை வேறு என்று கூறுகிறார். பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள உழைப்பின் விளைவு இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டது. சான்றாக, குறைந்து செல்விளைவுவிதி ஓர் இயற்கை விதி. இவ்விதமான இயற்கை விதிகளை மனிதன் மாற்றவும் முடியாது, திருத்தி அமைக்கவும் இயலாது. இதேபோன்று மனிதனின் இயற்கைப் பண்புகளும் அவற்றை ஆதாரமாகக் கொண்ட விதிகளும் இயல்பானவை. மனிதனின் தன்னலம், பொருளீட்ட வேண்டும் என்ற ஆசை, இனக்கவர்ச்சி ஆகிய பண்புகள் பொதுவானவை, நிலையானவை. இவற்றை அடிப்படையாகக் கொண்ட விதிகளும் இயல்பானவை. இவற்றைப்பற்றித்தான் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பொதுவாக ஆராய்ந்தனர். எப்படிப் பார்த்தாலும், பொருளாக்கத் தொடர்புடைய விதிகள் அனைத்தும் இயற்கைச் சக்திகளால் கட்டுப்படுத்தப்பட்டவை. ஆனால் உற்பத்தி செய்த செல்வத்தைப் பங்கிடும் துறையில் இயற்கை விதிகள் இடம்பெறுவதில்லை. உழைப்பாளிகளுக்குக் கொடுக்கப்படும் கூலி, நிலக் குத்தகை, வட்டி, இலாபம் ஆகியவற்றை இயற்கை விதிகள் நிர்ணயிப்பதில்லை. இவற்றை மனிதன் இயற்றும் சட்டங்களே நிர்ணயிக்கின்றன. எனவே, இச் சட்டங்கள் எத்தனையோ விதங்களில் மாறலாம், அவற்றை மனிதன் மாற்றவும் முடியும். எனவே, செல்வப் பங்கீடு என்பது ஒரு நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களை

யும் அரசாங்கத்தையும் பொறுத்தது. பங்கீட்டு விதிகள் நாட்டிற்கு நாடு காலத்திற்குக் காலம் மாறக்கூடியவை என்று மில் கூறுகிறார். இவ்வகையில் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் முடிவிற்கும் மில்லின் முடிவிற்கும் முரண்பாடு ஏற்படுகிறது. ஸ்மித், ரிக்கார்டோ, மால்தஸ் ஆகியோர் கூறிய தத்துவம் வேறு. கூலி, குத்தகை, வட்டி, இலாபம் ஆகிய உற்பத்திக் கருவிகளின் பங்குகளும் மாற்ற முடியாத இயற்கை விதிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன என்றனர். மில் இதனை நன்கு உணர்ந்திருந்தார். எனினும், தம்மைச் சுற்றி எங்கும் ஏழைத்தொழிலாளர் படும் துன்பங்களும் வேதனைகளும் அவரது உள்ளத்தை உருக்கியது. அதனை நீக்கவேண்டுமென்ற குறிக்கோளோடு ஒரு சீர்திருத்தவாதியாக மாறுகிறார். பங்கீட்டு விதிகளும் பொருளாக்க விதிகளைப் போன்று இயற்கை விதிகளாக இருக்குமென்றால் அவரின் சீர்திருத்தத் திட்டத்திற்கு வாய்ப்பு ஏது? எனவே, பொருளாக்க விதிகள் மட்டுமே இயற்கை விதிகள்; பங்கீட்டு விதிகள் மனிதனால் மாற்றியமைக்கக் கூடியவை என்றார். ஆனால், உண்மையில் மில்லின் பாகுபாடு தவறானதாகும். பொருளாதார இயலில் உற்பத்தியும் பங்கீடும் ஒன்றையொன்று சார்ந்தவை. பொருள் ஆக்க விதிகள் என்றும், பங்கீட்டு விதிகள் என்றும் தனித்தனியாகப் பாகுபடுத்திப் பேசுவது பொருளாதார இயலின் தன்மையையே பாதிக்கிறது. என்றாலும் இப் பாகுபாட்டையே தனது முக்கியப் பணியாக மில் கருதினார்.

மில்லின் சீர்திருத்தத் திட்டம்

பொருளாதாரச் சீர்திருத்தத்திற்கு வழி ஏற்படுத்திய மில் அச் சீர்திருத்தத்தைப் பல முறைகளில் கொண்டுவருகிறார். இச்சீர்திருத்தத் திட்டங்கள் அனைத்தும் தொன்மைப் பொருளாதார மரபுக்கு முரணானவை என்று நினைக்கத் தோன்றுகிறது, 'தனி மனிதனின் சுதந்திரமான செயல்களைப் பாதிக்காமல் பூமியிலுள்ள எல்லா இயற்கை வளங்களையும் சமூகத்தின் பொது உடைமைகளாக்க வேண்டும்; அதோடு, உற்பத்தியான செல்வத்தை எல்லாரும் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்.' இதுவே மில்லின் சீர்திருத்தக் கொள்கை. இக் கொள்கையைச் செயல்படுத்த மூன்று முக்கியமான வழிகளைக் காண்பிக்கின்றார். (1) உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளிகளும் தொழிலாளிகளும் ஒன்றுபட்டு பங்காளிகள் போல் வேலைசெய்யவேண்டும். இதற்கு கூலி முறையை அடியோடு ஒழிப்பது அவசியம். (2) நிலத்திலிருந்து வரும் குத்தகை நிலக்கிழாருக்குச் சொந்தமல்ல. இதனை எல்லாரும் அனுபவிக்கவேண்டும். அவ்வாறாயின் குத்தகையே இல்லாத வகையில் நிலத்தின்மீது பளுவான வரியை விதிக்கவேண்டும்.

(3) ஏழை பணக்காரர் என்ற பாகுபாட்டை ஒழிக்க வாரிசுரிமைச் சட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இம் மூன்று வழிகளிலும் சீர்திருத்தத்தை ஏற்படுத்தும்போது தனி மனிதனின் சுதந்திரம் பெரிதும் பாதிக்கப்படலாகாது. இதுவே மில்லின் சீர்திருத்தத் திட்டத்தின் சாரம். இத் திட்டத்தைச் சுருக்கமாக விளக்குவது அவசியம்.

1. கூலிக்காக மட்டும் உழைக்கும் தொழிலாளர் தமது உழைப்பின் முழுப் பயனையும் அனுபவிக்க முடியவில்லை. எனவே, கூலி முறையை ஒழித்தாலன்றி, அவர்களின் வறுமையை நீக்க இயலாது இதற்கு, முதலாளிகளும் தொழிலாளிகளும் ஒன்று சேர்ந்து அன்பினால் இணைந்த பங்காளிகள் போல் பாடுபடும் வகையில் ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்தவேண்டுமென்பார் மில். தொழிலாளர், நிருவாகத்தில் பங்குபெற வேண்டும். இதற்கு, ஆலையின் மூலதனம் பொதுவானதாக்கப்பட்டு, முதலாளிகளும் தொழிலாளிகளும் ஒன்றுசேர்ந்து நிருவாகிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை கையாளப்பட வேண்டும். இத் திட்டம் கூட்டுறவுத் திட்டத்தை ஒத்திருக்கிறது. இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் கூட்டுறவு உற்பத்தி முறை தொடங்கப்பட்டதை மில் நன்கு அறிவார். அம் முறை தோல்வி அடைந்தபோதிலும், தம் திட்டம் நிறைவேற வேண்டுமென்பதே மில்லின் விருப்பம்.

2. நிலக்கிழார் பெறும் குத்தகை இயற்கையின் விளைவு என்பது ரிக்கார்டோவின் கருத்து. மில் இதனை ஒப்புக்கொள்ளவில்லை. குத்தகை பெறுவதே அநீதி என்றும், தனியுரிமைக் கோட்பாட்டிற்கு மாறானது என்றும் மில் கருதினார். தனது உழைப்பின் பயனைத் தான் அனுபவிப்பதே தனியுரிமைக் கோட்பாட்டின் சாரம். ஆனால் நிலக்கிழார் பெறும் குத்தகையோ அவர்களது உழைப்பின் விளைவல்ல. குத்தகை என்பதை இயற்கைவாதிகள் இயற்கையின் பரிசு என்றனர்; ரிக்கார்டோவும் மால்தசும் மக்கள் பெருக்கத்தின் விளைவு என்றனர். சீனியர் சாதகமான சூழ்நிலையின் விளைவு என்றார். எப்படிக் கருதினாலும் குத்தகை உழைப்பின் படைப்பல்ல என்பது மில்லின் வாதம். எனவே, உழைப்பால் ஏற்படாத விளைச்சல் பொதுமக்களுக்குரியதேயன்றி நிலக்கிழாருக்கல்ல என்பது அவரது முடிவு. அவ்வாறாயின், குத்தகையை எல்லாரும் பயன் கொள்ளும் முறையில் நிலத்தின் மீது அரசாங்கம் வரி விதித்து, குத்தகையை நிலக்கிழார் அனுபவிக்காது செய்ய வேண்டும். குத்தகை அதிகரித்தால் வரியும் அதிகமாக வேண்டும். இச் சீர்திருத்தக் கொள்கை மிக நுட்பமானது; தந்தையிடமிருந்து இதனைக் கற்றுக்கொண்டார் மில். இப் புரட்சிகரமான சீர்திருத்தத்தைப் படிப்படியாக அமுல்படுத்த வேண்டுமே

யன்றி, அவசரப்பட்டு உடனடியாகக் கொண்டு வரக்கூடாதென்று மில் கூறுகிறுர். பெரும் பண்ணைகளைச் சிறியனவாக்கி, சிறு சிறு குடியானவர்களுக்குச் சொந்தமாக்கிவிட்டால் அவர்களே சாகுபடி செய்வர். நிலக்கிழார் முறை ஒழிந்து விடும். குடியானவர் நன்ருகப் பாடுபடுவர். விளைச்சலும் பெருகும் என்று வாதாடுகிருர் மில். இக் கொள்கையைப் பின்பற்றியே சிறு பண்ணைச் சட்டங்களை இங்கிலாந்து அரசாங்கம் நிறைவேற்றிப் பெரு நிலக்கிழார் முறையை ஒழித்தது போலும்.

3. தாங்கள் சம்பாதிக்காத சொத்தைத் தம் முன்னேர் வழியாக அடைவதற்கு வாரிசுரிமைச் சட்டம் வழி செய்கிறது. இச் சட்டத்தை மில் வன்மையாக எதிர்த்தார். பழங்காலச் சட்டமெனப் பழித்துரைத்தார். இச் சட்டம்தான் ஏழை பணக்காரர் என்ற பாகுபாட்டை நிலையுறச் செய்கிறது ஏதோ பிறப்பின் காரணத்தால் மக்களிடையே சமத்துவத்தை ஒழித்து ஏற்றத் தாழ்வை ஏற்படுத்துகிறது. ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இருக்கும்போது ஏழை எவ்வளவுதான் திறமையுள்ளவனுக இருந்தாலும் பணக்காரனேடு போட்டியிட இயலாது. எனவே, இச் சட்டத்தை வேரோடு அகற்றுவதே சிறந்ததெனப் படலாம். ஆனல், தனி மனிதனின் சுதந்திரத்தைப் பேண வேண்டுமே ? தான் திரட்டிய செல்வத்தைத் தன்னிச்சைப்படி தன் பிள்ளைகளுக்கு அளிப்பது சுதந்திரவாதத்தின் அடிப்படைக் கொள்கையாயிற்றே. எனவே, தனிமனிதனின் சுதந்திரத்தைப் பாதிக்காமல் சமூக அநீதியை அகற்ற மில் நுட்பமானதொரு வழியைக் கண்டார். பிள்ளைகளுக்குச் சொத்தை வழங்கும் முறையை ஒழிக்காமல் அச் சொத்திற்கு ஒரு உச்சவரம்பை அரசாங்கம் நிருணயிக்கவேண்டுமென்ருர். இப் பிரச்சினை இன்னும் சில நாடுகளில் முக்கியத்துவம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மில் ஒரு சோஷியலிச வாதியா ?

மில்லின் சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளை நினைக்கும்போது அவர் ஒரு சோஷியலிசவாதியா என்ற வினு தானுகவே எழுகிறது. இவ் வினுவிற்கு விடை தருவது எளிதன்று. மில்லின் சோஷியலிச நாட்டத்தை அறிய விரும்பினுல், அவரது அடிப்படையான நோக்கத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். இயன்றவரை எல்லா மக்களும் பலவிதமான நலன்களையும் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமென்பதே அவரது அடிப்படை நோக்கம். இந் நோக்கத்தைத் தனி நபர் சொத்துரிமையைக் கொண்ட பொருளாதார அமைப்பு நிறைவுறச் செய்யுமாயின் அவ் வமைப்பை நிலை பேண

வேண்டுமென்கிறார். தனது பொருளாதாரக் கொள்கையின் முதல் பதிப்பில் தனியார் செத்துரிமையைப் போற்றிப் பேசிவிட்டு, பிந்திய பதிப்புக்களிலும் இதர நூல்களிலும் தனது கருத்தை மாற்றிக்கொள்கிறார் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். எவ்வளவு தூரம் சோஷியலிசக் கொள்கையை ஆதரித்தார் என்று சொல்வதற்கில்லை. தனது பொருளாதாரக் கொள்கையின் முதல் பதிப்பைப் பிரஞ்சுப் புரட்சிக்கு முன்னரே வெளியிட்டு விட்டார். அதன் பின்னரே சோஷியலிசக் கருத்துகளும் கொள்கைகளும் பரவின. அவற்றையும் ஓரளவு ஏற்றுக் கொண்டே சமூகச் சீர்த்திருத்தத் திட்டத்தை உருவாக்கினார். இத் திட்டத்தைத் தனி மனிதனின் சுதந்திரம் என்ற அடிப்படையில் வகுத்தார். எனவே, அவரது சோஷியலிசம் சுதந்திர வாதத்தின்மீது தோன்றியதே. சோஷியலிச வாதத்தில் மயங்கிச் சிக்கிய மில் சுதந்திரக் கோட்டையையும் காப்பாற்ற எண்ணினார். எனவே அவரது சீர்திருத்தம் புரட்சிகரமானதாக இல்லாமல் சாத்வீகமானதாகக் காட்சியளிக்கிறது. அவர் விரும்பிய சீர்திருத்தங்கள், பெரும் பண்ணைகளைச் சிறு சிறு புலங்களாகச் செய்வது; தொழிலாளரையும் முதலாளிகளையும் இணைத்து பங்காளிகளாக்குவது. இவற்றிலும் தனிமனிதனின் சுதந்திர ஒளி வீசுவதைக் காணலாம். பளுவான வருமான வரி விதித்து ஏழை, பணக்காரன் என்ற பாகுபாட்டை ஒழித்துக்கட்ட நினைப்பார் ஆனால், அவ்வாறு செய்தால் தனி மனிதனின் சுதந்திர உரிமைகள் பறிபோய்விடுமே என்று அஞ்சுவார். சமூகச் சீர்திருத்தத்தை அவர் உள்ளம் விரும்பியது ஆனால் தனி மனிதனின் சுதந்திரம் பாதிக்கப்படுமே என்று அவர் அறிவு கூறிற்று. இறுதியில் அவரது அறிவு உள்ளத்தை வென்று விட்டதெனலாம். அதிக வருமானம் பெறுவோர்மீது பளுவான வரியை விதிப்பதால் தொழிலும் பொருளாக்கமும் சீர்கெட்டுவிடும் என்பதை அவரே கூறுகிறார். தனி மனிதனின் சுதந்திரச் சின்னமாகிய சொத்துரிமையைத் தனது சீர்திருத்தத் திட்டம் சீர்குலைக்கக் கூடாது என்ற முடிவிற்கு வருகிறார். எனவே அவர் கனவு காணும் சோஷியலிச வாதியாகவோ அல்லது மார்க்ஸிய சோஷியலிச வாதியாகவோ மாறவில்லை.

இவ்வாறாக, மில் இருதலைப்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்தார். தம் நண்பர்களாகிய பென்தம், ரிக்கார்டோ, தந்தை ஜேம்ஸ் மில் ஆகியோரின் கொள்கைகளை இளமையிலேயே கற்றதனால் அவை அவர் மனதில் அழியாமல் நின்று விட்டன. அவற்றை விளக்குவதும் விரிவாக்குவது அவரது முதல் பணியாக இருந்தது. தனக்கு வயது ஏற ஏற சோஷியலிச வாதத்தில் இறங்கிவிடுகிறார். எனவே, மில் தொன்மைப் பொருளாதார அறிஞர் வகுத்த

சுதந்திர வாதத்தை உச்சக்கட்டத்திற்கேற்றுகிறார்; அதேசமயம் தனது சீர்திருத்த கொள்கையால் தொன்மைப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியையும் தொடங்கிவைக்கிறார் என்று சிலர் கருதுவர்.

முதலும் அதன் வளர்ச்சியும்

பொருள்களை உற்பத்தி செய்வதற்கு இயற்கை வளமும் உழைப்பும் தேவை. நாகரிகமடையாத காட்டில் வாழும் மக்களுக்கு இவ்விரண்டும் போதும். நாகரிக வளர்ச்சியுடைய நாட்டில் வாழும் மக்களுக்கு முதல் முக்கியமானது. மில் முதலை 'நிலைத்த முதல்' என்றும் 'புரளும் முதல்' என்றும் பாகுபடுத்தினார். உற்பத்தி சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டு, உடனடியாகப் பயனை இழக்காத பொருள்களை நிலைத்த முதல் என விளக்கினார். கட்டிடங்கள், எந்திரங்கள், சாதனங்கள் ஆகியவை பயன்படுத்தினவுடன் தம் பயனை இழந்துவிடுவதில்லை. எனவே, இவற்றை நிலைத்த முதலுக்குச் சான்றுகளாகக் கொள்ளலாம்; மாறாக, ஒரு முறை பயன்பட்டபின் மறுமுறையும் பயன்படுத்த முடியாத முதலை 'புரளும் முதல்' என்கிறார். கச்சாப் பொருள்கள், உழைப்பாளிகளுக்குக் கொடுத்த கூலி ஆகியவை இதற்குச் சான்றாகும். ஆனால் இருவகை முதலும் உபயோகப்படுத்தப்பட்டுக் கடைசியில் அழிந்து போகக்கூடியவை என்கிறார். நிலைத்த முதலோ நீண்டகாலம் பயன் தந்து அழியக்கூடியது புரளும் முதல் உடனடியாக அழிந்துவிடுகிறது. எனவே, அவற்றைப் புதுப்பிப்பதிலும் சேகரித்து வைப்பதிலும் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். இல்லையேல் எந்த நாடும் முன்னேற முடியாது. முதலைப்பற்றி மில் கொண்டிருந்த கருத்துகள் பொருளாதார இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளன. முதல் வளர்ச்சியின்றி தொழில் வளர முடியாது. முதல் வளர வேண்டுமாயின் சேமிப்பு அவசியம். சேமிப்பு என்பது நிகழ்கால நுகர்ச்சியைத் தவிர்ப்பதில் அடங்கியுள்ளது. சேமிக்கும் பழக்கத்தைத் தூண்டும் வகையில் ஹாலந்து நாட்டு மக்களையும் இங்கிலாந்தின் மக்களையும் ஒப்பிட்டுப் பேசுகிறார் மில். வணிகவாதிகள் அதிகமாக இருந்த ஹாலந்தில் பெரும்பாலானோர் சேமித்துச் சேர்த்துவைக்கும் பழக்கம் கொண்டிருந்தனர். ஆனால் இங்கிலாந்திலோ பெரும் பணக்காரர்கள் வேலை ஒன்றும் செய்யாது வெட்டிச் செலவு செய்துவந்தனர். எனவே, இங்கிலாந்தைவிட ஹாலந்தில் சேமிப்பு அதிகமாயிருந்ததென ஹாலந்தைப் போற்றுகிறார்.

தொழிற்சங்கமும் தொழிலாளர் கல்வியும்

கூலி நிதிக் கொள்கையில் தீவிரமான நம்பிக்கை கொண்டிருந்த காலத்தில் தொழிற்சங்கங்கள் எந்த முறையைக் கையாண்

டாலும் கூலி நிதியைக் கொஞ்சம்கூட உயர்த்த முடியாது. எனவே கூலியும் சிறிதுகூட உயராது என்றார். கூலி உயரவேண்டுமாயின் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளரின் எண்ணிக்கை குறைவது தான் வழி என்றார். ஆனால், கூலி நிதிக்கொள்கையைக் கைவிட்ட பின்னர், தொழிற்சங்கங்கள் போராடி கூலியை உயர்த்த முடியும் எனக் கூறியுள்ளார். தொழிலாளர் போட்டியிட்டு வேலைக்கு வரும் போது, முதலாளிகள் கூலியைக் குறைத்தால் தொழிற்சங்கங்கள் கூலியை உயர்த்தப் போராடி வெற்றிபெற முடியும். அதே போன்று, தங்கள் உற்பத்தித் திறனை தொழிலாளர் அதிகரித்துக் கொண்டால் கூலியை உயர்த்த முடியும்.

உற்பத்தித் திறனை அதிகரிக்கவேண்டுமாயின், தொழிலாளருக்குக் கல்வி அவசியம். தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைப்பதற்குத் தொழிலாளரிடம் வசதி போதாது. எனவே, அரசாங்கமே அவர்களுக்குக் கல்வி வசதியை அளிக்க வேண்டுமென மில் வற்புறுத்தினார். கல்வி முறை வாழ்க்கைக்குத் துணைசெய்யும் வகையில் அமையவேண்டுமென்பது அவரின் கருத்து.

தொழிலாளருக்குக் கல்வி வசதி மட்டும் போதாது. அரசியலில் அவர்கள் ஈடுபடுமாறு செய்வது அவசியம். எனவே, வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வேண்டுமென மில் வாதாடினார். அரசியலில் அடிபட்டால்தான் பொதுக்காரியங்களில் அவர்களுக்கு அக்கறை ஏற்படும் என்று மில் கூறினார்.

வேலைப் பகுப்பு

ஆடம் ஸ்மித்தைப் போலவே மில்லும் வேலைப் பகுப்பின் முக்கியத்துவத்தையும், அதன் நன்மை தீமைகளையும் விளக்கியுள்ளார். சீட்டாடுவதற்குப் பயன்படுத்தப்படும் சீட்டுகளை உற்பத்தி செய்வது 70 சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதை வேலைப் பகுப்பிற்கும் சான்றாகச் சுட்டிக்காட்டுகிறார். ஒவ்வொருவரும் தத்தம் திறமைக்கேற்ற வேலையில் அமர்த்தப்படுவதற்கு வேலைப் பகுப்பு வாய்ப்பு அளிக்கிறதெனக் கூறினார். ஒவ்வொருவரும் தத்தம் திறமைக்கேற்ற வேலையைச் செய்வதால் உற்பத்தி பெருகுகிறதென்றும் எடுத்துரைத்தார். இவ்வேலைப் பகுப்பிற்கு அங்காடியின் விரிவும் வேலையின் தன்மையும் எல்லை வகுக்கின்றன என்கிறார். உற்பத்தி பெருகி, பெருமளவானால் ஏற்படும் நன்மை தீமைகளையும் மில் விவரித்துள்ளார்.

வளர்ச்சி நின்ற சமுதாயம்

'சேமிப்பு அதிகமானல் முதல் பெருகும்; முதல் பெருகினல் செல்வம் குவியும் என்பது ஆடம் ஸ்மித்தின் இன்பக்கனவு. இவ்வாறு செல்வம் வளர்வதற்கு எல்லையில்லையா என்று கேட்கிருர் மில். இதற்கு நிச்சயமாக எல்லை உண்டு என்பதை மிக அருமையாக விளக்குகிருர். இவ் விளக்கத்தில் பொருளாதாரம், இலக்கியம், தத்துவம் ஆகிய மூன்றும் பின்னிப் பின்னி மின்னுகின்றன. இயற்கைச் செல்வங்களனைத்தும் பயன் படுத்தப்பட்டு விட்டால், தொழில் முயற்சியும் நிருவாகமும் சிறப்புக் கட்டத்கின் உச்ச நிலையை அடைந்து விடும் அதன்பின் தொழில் வளர்வதற்கும் முன்னேறுவதற்கும் வாய்ப்பு ஏது? யாவருக்கும் வேலை எல்லாருக்கும் சுக வாழ்வு கிடைத்த பின் பொருளாதாரப் பிரச்சினைக்குத்தான் இடமேது? மக்கள்தொகை வளர்ச்சியும் தொழில் முன்னேற்றமும் சம நிலையை அடைந்தபின், அதிக ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடுஎப்படி இருக்கமுடியும்? வளர்ச்சிபெற்றுவரும் சமுதாயம்வளர்ச்சிக்கே வாய்ப்பில்லாத சமுதாயம் என்னும் இறுதிக் கட்டத்தை நோக்கியே முன்னேறுகிறது என்ருர் மில். பொருளாதாரத்துறையில் தான் முன்னேற்றத்திற்கு எல்லையுண்டே தவிர, பிற துறைகளில் வாய்ப்பு இருந்து கொண்டு தானிருக்கும். மக்களின் ஒழுக்கம், பண்பாடு, தத்துவஞானம் ஆகிய துறைகளில் மக்கள்வளர்ச்சியடைந்து கொண்டே இருப்பர். எவ்வித சமூகப் பிரச்சினையும் இல்லாத நிலையில் மக்கள் மகிழ்ச்சியும் இன்பமும் நிறைந்த வாழ்க்கையில் ஊறித்திகழ்வர் என்ற நினைப்பில் மில் ஆனந்தம் அடைகிருர்.

அயல் நாட்டு வாணிபம்

தடையிலா வாணிபம் நடைபெறும்போது சிக்கனமாகப் பொருள்கள் உற்பத்தியாகி, எல்லா நாடுகளுக்கும் மலிவாகக் கிடைக்கும் என்பதை ஸ்மித்தும் ரிக்கார்டோவும் எண்பித்தனர். இவ்வுண்மையைத் ''தராதரச் செலவுக் கோட்பாடு (Theory of comparative cost) என்று கூறுவர். இக் கோட்பாட்டை மில் விரிவு படுத்தினர். பிற நாடுகள் மலிவாக உற்பத்தி செய்யும் பண்டங்களை இறக்குமதி செய்வதால் ஒரு நாட்டிற்கு உழைப்பும் மூலதனமும் மிச்சம் ஆவதை விளக்கிக் கூறினர். ஒரு நாடு, தனக்குச் சாதகமான ஒரு பொருளையும், மற்ருெரு நாடு பிறிதொரு பொருளையும் உற்பத்தி செய்து பரிவர்த்தனை செய்யும் போது இவ்விரு நாட்டுத் தேவையும் எவ்வாறு ஒன்றுக்கொன்று சமமாகிறது என்

பதை மில் வலியுறுத்தினார். அப்போது, ஏற்றுமதியும் இறக்குமதியும் சமமாகி எந்த நாடும் பாதிக்கப்படாத நிலை ஏற்படும், எனவே, பொன்னும் வெள்ளியும் பண்டமாற்று நடைபெறுவதை எளிமையாகவே பயன்படுத்தப் படுகின்றனவே தவிர, அவை ஒரு நாட்டில் குவிய வேண்டுமென்பதற்கல்ல என்றார். அயல் நாட்டு வாணிபத்தின் வாயிலாகப் பல்வேறு நாட்டு மக்களின் தேவை தீவிரமாகப் புலப்படுகிறதென்ற உண்மையை மில் வலியுறுத்தினார். இதனால் அவரது விளக்கம் ரிக்கார்டோவின் விளக்கத்தைக் காட்டிலும் சிறப்படைகிறது.

உள் நாட்டுப் பொருள்களைப் பாதுகாப்பதற்கென்று இறக்குமதிப் பொருள்களின் மீது வரிவிதிக்கும் கொள்கையை மில் வன்மையாகக் கண்டித்தார். புதிய நாடுகளிலும், புதுத் தொழில்களை முன்னேற்ற விரும்பும் நாடுகளிலும் இக் கொள்கை அவசியமானதாயிருக்கலாம். எனினும் இக் கொள்கையைத் தற்காலிகமாகத்தான் செயல்படுத்த வேண்டுமேதவிர, நிலையாக அமுல் படுத்துவது உலகப் பொருளாதார உறவைக் கெடுக்கும் என்பது மில்லின் நம்பிக்கை. தொன்மைப் பொருளாதாரக் கொள்கைளில் சிறப்பிடம் பெற்றுள்ள தடையிலா வாணிபக் கொள்கை மில்லினால் மேலும் சிறப்புப் பெறுகிறதெனலாம்.

மில்லின் கருத்துகளும் கொள்கைகளும் பலப்பல. அவற்றுள் அவசியமானதும் முக்கியமானதுமே இதுவரை விளக்கப்பட்டன. எல்லாவற்றையும் விளக்கிக்கூற இங்கு இடமில்லை.

மதிப்புரை

தொன்மைப் பொருளாதாரக் கருத்தினைத் தெளிவான மொழியில், இலக்கிய நயத்துடன் எடுத்து விளக்கிய பெருமை மில்லையே சேரும். மில், பென்தம் அவர்களின் தத்துவத்தில் நாட்ட முள்ளவர்; தடையிலா வாணிபமும் தனிமனிதனின் சுதந்திரமும் அவரது மூக்சு. எனவே, இக் கொள்கைகளையுடைய அவரது நூல் மார்சல் (Marshall) அவர்களின் பொருளாதாரத் தத்துவங்கள் வெளியாகும் வரை பாட நூலாகவே இங்கிலாந்து நாட்டில் மதிக்கப் பெற்றது. தனக்கு முன் தோன்றிய பொருளாதாரக் கொள்கைகளுக்குச் சிறப்பிடம் தந்தவர் மில். தனக்குப் பின்னால் வரப்போகும் புதுக் கொள்கைகளுக்கு வித்திட்டவரும் அவரே. இரு முரண்பாடான கருத்துலகிற்கு நடுவே காட்சியளிக்கிறார் மில் என்பர் சிலர். எவருமே மறுக்க முடியாத வகையில் மில்லின் கொள்கைகள் நிறைவும் புதுமையும் பெற்றுப் பொலிவுடன் பிரகாசித்தன. தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கொள்கைகளிலிருந்து பெரிதும் பிறழா

மல் பொருளாதார இயலின் வரம்பை விரிவுபடுத்தியவர் மில். தலை யிடாக் கொள்கையை வலியுறுத்திஞரெனினும், மக்களின் பெரு மகிழ்ச்சிக்காக அரசாங்கம் பொருளாதார நடவடிக்கைகளில் தலை யிடுவது அவசியமென வலியுறுத்திஞர்.

இருப்பினும், பொருளாதார இயலின் இதயமாக மதிக்கப்படும் மதிப்புப் பிரச்சினையை முழுமையாக விளக்கவில்லை. அதைப்பற்றி மில் கூறும் சொற்கள் அவரது மன நிறைவையும் மகிழ்வையும் காட்டுகிறதேதவிர, கூரிய அறிவையோ புலமையையோ காட்ட வில்லை. ''பண்ட மதிப்பை நிருணயிக்கும் சக்திகள் முழுமையாக விளக்கப்பட்டு விட்டன. தற்கால அறிஞரோ, அல்லது வருங்கால நிபுணரே இப்பிரச்சினையைப் பற்றிப் புதிதாகக் கூற வேண்டிய கருத்து ஒன்றுமில்லை. இது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தி.'' ஆனுல் இன்றும் இப்பிரச்சினை புதிரானதாகவே உள்ளது. இருப்பினும் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் அவர் விட்டுச் சென்ற கருத் தோவியங்கள் என்றும் அழியாதவை, பொருளாதார இயலுக்கு முற்றிலும் புதிய கருத்துகளையோ கொள்கைகளையோ அவர் விளக்க வில்லை; எனினும், பொருளாதார இயலுக்கும் சமூக இயலுக்குமுள்ள தொடர்பினை வலியுறுத்தி, சமூகக் கொள்கையை வகுத்ததன் வாயிலாக மில் என்றும் போற்றப்படும் பெருமைக்குரியவராகி விட்டார்.

ஐந்தாம் பிரிவு

சோஷியலிசவாதம் முதிய பருவம்

சோஷியலிசவாதத்தின் இளமைப்பருவத்தை முன்னரே கண்டோம். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோஷியலிசம் பாட்டாளிகளின் இயக்கமாக மலர்ந்தது.

ஜெர்மனியில் ராட்பர்ட்டஸ் (Rodbertus), லசேல் (Lassalle) ஆகிய இருவரும் பாட்டாளிகளின் நிலையை உயர்த்துவது அரசின் பொறுப்பென வாதாடினர். எனவே, அவர்கள் வகுத்த சோஷிய லிசத்தை அரசுசார்சோஷியலிசம் (State Socialism) என்பது மரபு.

கார்ல் மார்க்ஸும் எஞ்சல்ஸும் சேர்ந்து புரட்சிகரமான சோஷியலிச இயக்கத்திற்கு அறிவியல் ரீதியில் வழிவகுத்தனர். இதனால் மார்க்ஸிசம் என்றால் அறிவியல் சோஷியலிசம் என்று பொருள். முதலாளித்துவ அமைப்பு அழிவது உறுதி என்றும், பாட்டாளிகளின் புரட்சியினால் சோஷியலிசம் உருவாவது திண்ணம் என்றும் மார்க்ஸ் விளக்குகிறார். மார்க்ஸிசமே கம்யூனிச இயக் கத்திற்கு அடித்தளமாக அமைந்தது.

மார்க்ஸிய சோஷியலிசத்திற்கு மாறான சோஷியலிசம் பல்வேறு நாடுகளில் தோன்றியது. சோஷியலிசம் எவ்விதப் புரட்சியுமின்றித் தானாகவே ஏற்படுமெனச் சில ஜெர்மானிய அறிஞர்கள் கருதினர். அவர்கள் விரும்பிய சோஷியலிசத்தை சீர்திருத்த சோஷியலிசம் என்பர். அரசாங்கமேயன்றிப் பாட்டாளிகள் ஒன்றுபட்டு சோஷிய லிசத்தை அமைக்கமுடியுமென சில பிரெஞ்சு அறிஞர்கள் கருதினர். இவ்வகையான சோஷியலிசம் சிண்டிக்கலிஸம் (Syndicalism) என அழைக்கப்படுகிறது. ஆங்கில நாட்டு அறிஞர்கள் சமுதா யத்தின் நிலையை உயர்த்துவதற்குச் சீர்திருத்தமும் கல்வியுமே வழியென நம்பினர். அவர்களது சோஷியலிசத்தை ஃபேபியனிசம் என அழைப்பது வழக்கம்.

இவ்வாறாக, 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய பல வகையான சோஷியலிசம் இப் பகுதியில் இடம்பெறுகிறது.

20. அரசுசார் சோஷியலிசம்

(State Socialism)

19ஆம் நூற்றுண்டின் இறுதியில் ஜெர்மனியில் தோன்றிய பல அறிஞர்கள் அரசாங்கம் பல சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தால் சோஷியலிச சமுதாயம் உருவாகிவிடுமென நம்பினர். நியாயத்தின் அடிப்படையில் பாட்டாளிகளின் நிலையை உயர்த்த வேண்டுமென அவர்கள் வாதாடினர். ஆனல் சொத்துரிமையை அவர்கள் அழிக்க விரும்பவில்லை; சமூகச் சீர்திருத்தங்களை மட்டுமே நாடினர். எனவே, அவர்களை சோஷியலிஸ்டுகள் என அழைப்பது பொருத்தமற்றது. அவர்களில் ராபர்ட்டசும், லசேலும் தான் முக்கியமானவர்கள். தொன்மைப் பொருளாதாரம் போதித்த தலையிடாக் கொள்கையையும் பிரான்ஸ் நாட்டில் தோன்றிய கனவுலக சோஷியலிசத்தையும் இவர்கள் வன்மையாகக் கண்டித்தனர்.

அரசுசார் சோஷியலிசம் என்பது பொருளாதார அடிப்படையிலோ அல்லது அரசியல் நோக்கத்திலோ அமைந்தது அல்ல. அது அறநெறியின் வேரில் தழைத்த அமைப்பாகும். தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வகுத்த தலையிடாக் கொள்கைக்கு முன்னரே பல எதிர்ப்புகள் தோன்றின. அரசின் வழியாகப் பல சமூகச் சீர்திருத்தங்களை விரும்பிய இவர்களும் அக் கொள்கையைத் தவிர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அதோடு, ஏழைப்பாட்டாளிகளின் நிலையை உயர்த்துவது அரசாங்கத்தின் கடமையென்றும் சமூக நியதியென்றும் நம்பினர். இவ்வாறு அரசின் வழியாக சோஷியலிச சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டவர்களில் ராட்பர்ட்டஸ் என்பவரும் லசேலும் குறிப்பிடத்தக்கவர்கள்.

(i) ராட்பர்ட்டஸ் (1805—1875)

ஜோஹன் கார்ல் ராட்பர்ட்டஸ் ஜெர்மானியப் பேரறிஞர்களில் ஒருவர். அவர் வரைந்த நூல்களில் 'நமது பொருளாதார நிலைமை' (Our economic Condition) 'சாதாரண வேலை நேரம்' (The Normal Working Day) ஆகிய இரண்டும் முக்கியமானவை. எனினும் இந் நூல்களில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை அறிஞர்கள். பல ஆண்டுகளுக்குப் பின்னர் லசேல் இந் நூல்களைப்பற்றிப் பெருமையாகக் குறிப்பிட்டு, ராட்பர்ட்டஸின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் தந்தார். அதன் பின்னரே ராட்பர்ட்டஸ் சிறந்ததொரு அறிஞராக மதிக்கப்பட்டார். தொன்மைப் பொருளாதாரத்திற்கு ரிக்கார்டோ எவ்வளவு முக்கியமானவரோ அதேபோல் ஜெர்மானிய சோஷியலிசத்திற்கு ராட்பர்ட்டஸ் முக்கியமானவர் எனச் சிலர் கருதுவர். ஜெர்மானிய சோஷியலிச இயக்கத்தில் என்றும் மங்காத புகழைப் பெற்றவர் ராட்பர்ட்டஸ்.

அரசின் தலையீட்டின் அவசியம்

ஆடம் ஸ்மித்தின் கருத்துப்படி சமுதாயம் என்பது வேலைப் பாகுபாட்டை ஆதாரமாகக்கொண்டதொரு தொகுப்பாகும். இக் கருத்தை ராபர்ட்டஸ் அப்படியே ஏற்றுக்கொண்டார். சமுதாய நலன் பேணப்படவேண்டுமாயின் மூன்று முக்கிய நிபந்தனைகள் அவசியமென்பதை இருவருமே ஒப்புக்கொண்டனர். (1) சமுதாயத்தின் தேவைக்கேற்ப உற்பத்தி அமையவேண்டும்; (2) இருக்கின்ற இயற்கை வளத்தின் அளவுக்கு உற்பத்தி நடைபெற வேண்டும்; (3) உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு நியாயமான முறையில் உற்பத்திப் பொருள்கள் பகிரப்படவேண்டும்.

தனி மனிதனுக்கு முழுச் சுதந்திரம் கொடுக்கப்பட்டால், இம் மூன்று நிபந்தனைகளும் நிறைவேறிவிடுமெனத் தொன்மைப் பொருளாதார நிபுணர்கள் கருதினர். ஆனால் இக் கருத்தை ராபர்ட்டஸ் மறுத்தார் அரசு தலையிடவில்லையென்றால், அதிகமாகப் பொருள்கள் உற்பத்ியாகிப் பொருளாதாரச் சீர்கேட்டை விளைவிக்கும்; உற்பத்தியில் பங்குபெறுவோரிடையே பூசல்கள் உருவாகும்; ஏழைமக்கள் சுரண்டப்படுவர் எனப் பயந்தார். எனவே, எல்லாம் சமூகமாக நடைபெறவேண்டுமாயின் அரசாங்கம் தலையிடவேண்டுமென வலியுறுத்தினர். சமுதாயம் உடல் என்றால் அரசு அவ்வுடலின் முக்கிய உறுப்பாகும். எனவே, அவ்வுறுப்பைப் பேணுவதும் வலுவுள்ளதாக்குவதும் அவசியம் என்றார். அது நலிந்துவிட்டதென்றால், சமுதாயம் என்னும் உடலே பாதிக்கப்படும்

எனவே, அரசின் தலையீடு இன்றியமையாதது என்பது ராட்பர்ட்டஸின் கருத்து. சமுதாயத்திற்கு அவசியமான பொருள்கள்தான் உற்பத்தி செய்யப்படவேண்டுமேயன்றி, சமுதாயத்திலுள்ள ஒரு வகுப்பினருக்குத் தேவைப்படும் பொருள்கள் அல்ல. அவ்வாருயின், உற்பத்தியை ஒழுங்குபடுத்தும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கூலிக்கொள்கை

ரிக்கார்டோ வகுத்த கூலிக் கோட்பாட்டை அப்படியே ஏற்றுக் கொண்டார் ராட்பர்ட்டஸ். உழைப்பாளிகள் தங்கள் பிழைப்புக்கு வேண்டிய கூலியை மட்டுமே பெறுவர். சமுதாயம் எவ்வளவுதான் முன்னேறினாலும் கூலிமட்டம் உயராமலிருப்பதை ராட்பர்ட்டஸ் விரும்பவில்லை. தேசிய வருமானம் உயரும் அளவிற்குக் கூலி உயராமலிருப்பதை அவர் கண்டு வருந்தினார். இதற்குக் காரணமான முதலாளித்துவ அமைப்பை அவர் அப்படியே ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்.

தேசிய வருமானம் உயர்ந்து, தொழிலாளிகளின் கூலி உயரவில்லையென்றால் பாட்டாளிகளின் பொருள் வாங்கும் திறன் குறைந்துவிடும். எனவே, பாட்டாளிகளுக்கு வேண்டிய நுகர்வுப் பொருள்களுக்குப் பதிலாகச் செல்வந்தர்களுக்கு வேண்டிய போகப் பொருள்கள்தான் உற்பத்தியாகும். இதனால் பொருளாதாரச் சீர்கேடு ஏற்படுவது உறுதி என்கிறார் ராட்பர்ட்டஸ்.

பண்டங்கள் அனைத்தும் உழைப்பால்தான் உற்பத்தியாகின்றன என்று ராட்பர்ட்டஸ் நம்பினார். மூலதனம் என்பது கடந்த கால உழைப்பின் விளைவுதான் என்றார். எனினும், மார்க்ஸைப் போல், உழைப்புத்தான் மதிப்பை நிருணயிக்கிறது என்று கூறவில்லை; அதை மறுக்கவுமில்லை. இருப்பினும், உழைப்பாளிகளின் நிலையை உயர்த்தப் பாடுபட்டார். அதற்கு அரசாங்கத்தைப் பயன்படுத்த வேண்டுமென்றும் விரும்பினார்.

சமூக மேம்பாடு

முதலாளித்துவ அமைப்பில் உற்பத்தியான செல்வப் பங்கீட்டு முறையைக் குற்றம் கூறினார் ராட்பர்ட்டஸ். உற்பத்திச் சாதனங்களனைத்தும் சமுதாயம் முழுவதற்கும் சொந்தமாக ஆகவேண்டுமென விரும்பினார். சொத்துக்களெல்லாம் தானாகவே சமுதாயம் முழுவதற்கும் சொந்தமாக வேண்டும். அப்போதுதான் உழைப்பின்றி எவரும் வருமானம் பெற இயலாது. 'ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும்; உழைப்பிற்கேற்ற வருவாயைப் பெற வேண்டும்'

என்பதுதான் ராட்பர்ட்டஸின் குறிக்கோள். நாட்டின் சொத்து அனைத்தும் சமுதாயத்தை வந்தடைவதற்கு ஆறு அல்லது ஏழு நூற்றாண்டுகளாகலாம் என்பது அவரின் கணக்கு. அதுவரை தற்காலிகமான சில நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். பண்டங்களின் விலையை அதில் செலவிடப்பட்ட உழைப்பின் அளவைக் கணக்கிட்டு நிருணயிக்கவேண்டும். பாட்டாளிகளின் உழைப்பு நேரத்தைச் சட்டத்தின்மூலம் வரையறை செய்யவேண்டும். ஆனால் தனி நபரின் சுதந்திரத்தை அகற்றிவிடக்கூடாது. தனிநபரின் நலனையும் பொதுமக்களின் நலனையும் பேணும் வகையில் அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென விரும்பினார் ராட்பர்ட்டஸ்.

ராட்பர்ட்டசும் மார்க்சும்

மார்க்ஸியக் கருத்துகளையும் ராட்பர்ட்டஸின் கருத்துகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பல ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் நாம் அறியலாம். உழைப்பாளிகளின் நிலையை உயர்த்தவேண்டுமாயின் சோஷியலிச சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென இருவருமே நம்பினர். சமுதாயம் படிப்படியாக மாறுதல் பெற்றுப் புதியதொரு சமூக அமைப்பை அடையும் என்பதில் இருவரும் நம்பிக்கை கொண்டனர். முதலாளித்துவ அமைப்பிலுள்ள குறைகளே சோஷியலிச சமுதாயம் உருவாகக் காரணங்கள் என்பது இருவரின் முடிவு. எனினும் இவ்விருவரின் கருத்துகளிலும் அடிப்படையான வேறுபாடுகளும் உள்ளன.

மார்க்ஸிய சோஷியலிசம் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டது. எனவே, பொருளாதாரக் காரணங்களைக் கொண்டது. ராட்பர்ட்டஸின் சோஷியலிசமோ பிரெஞ்சு நாட்டின் கனவுலக சோஷியலிசத்தில் நம்பிக்கை கொண்டது. சமூக நீதியையும் நெறியையும் அடிப்படையாகக் கொண்டது. அரசாங்கம் மேற்கொள்ளும் சமூகச் சீர்திருத்தங்களின் வாயிலாக சோஷியலிச சமுதாயத்தை உருவாக்க முடியுமென நம்பினார் ராட்பர்ட்டஸ். பாட்டாளிகள் புரட்சி செய்து அரசியல் அதிகாரத்தைப் பிடித்து அச் சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென அவர் விரும்பவில்லை. ஆனால் மார்க்ஸ் அரசாங்கத்தின்மீது நம்பிக்கையற்றவர். அரசாங்கம் என்பது குறிப்பிட்ட சமுதாய இனத்தவரின் நலனைப் பிரதிபலிக்கும் நிறுவனம்தான் என்பது மார்க்ஸின் கொள்கை. எனவே, பாட்டாளிகள் அனைவரும் ஒன்றுபட்டு, புரட்சியின் வாயிலாக முதலாளித்துவ அமைப்பிற்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டுமென விரும்பினார். இவ்வாறாக, மார்க்ஸிய சோஷியலிசம் புரட்சிகரமானதாகிறது.

(ii) லசேல் (1826—1864)

பெர்டினண்ட் லசேல் ராட்பர்ட்டஸைப்போல் அவ்வளவு கருத்தியல் வாதியல்ல. பாட்டாளி மக்களின் தலைவர்; கிளர்ச்சி மனப்பான்மையுள்ளவர். பெர்லின் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய லசேல் மார்க்ஸிய இயக்கத்தில் சேர்ந்தார். 1848ஆம் ஆண்டில் நடந்த புரட்சியிலும் பங்கு கொண்டார். 1862-ல் ஜெர்மனி நாட்டுத் தொழிலாளர் சங்கத்தைத் தொடங்கினர். பெரும்புகழுடன் வாழ்ந்த லசேல் 1864-ல் காலமானர். அவர் ஆற்றிய மேடைச் சொற்பொழிவுகள், எழுதிய கட்டுரைகள் பலப்பல. அவற்றிலிருந்தே நாம் அவரின் கருத்துகளை அறிய முடியும்.

பொருளாதாரக் கருத்துகள்

ராட்பர்ட்டஸ், மார்க்ஸ் ஆகிய இருவரின் கருத்துகளையும் லசேல் பரப்பி வந்தார். தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வகுத்த முதலாளித்துவ அமைப்பில் இரு பெருங் குறைகளைக் கண்டார் லசேல். (i) உழைப்பாளிகளுக்குக் கொடுக்கப்படும் பிழைப்புக்கூலி, அவர்களை முன்னேற விடாமல் தடுக்கிறது; (2) வருங் காலத்தில் இருக்கப் போகும் தேவையை உற்பத்தியாளர்கள் யூகமாய்க் கணக்கிட்டு உற்பத்தி செய்வதால்தான் பொருளாதாரச் சீர்கேடுகள், பஞ்சம், போர் போன்ற துயரங்கள் சமுதாயத்தைப் பாதிக்கின்றன. உற்பத்தியாளர்கள் உண்மையான தேவை நிலையை அறிந்துகொள்ள முடியாது. எனவே, முதலாளித்துவ அமைப்பின் இப் பெருங் குறைகளைப் போக்குவது அரசின் கடமை. படிப்படியாகத் தனியார் சொத்துரிமையை அரசு ஒழிக்கப் பாடுபட வேண்டும். அரசாங்கமே கடன் கொடுத்துப் பல கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, அவற்றை மேற்பார்க்க வேண்டும்.

முதலாளித்துவ அமைப்பில் அரசு என்பது தனியார் சொத்துரிமைக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பளிக்கும் பதிலாளாகவே இருக்கிறது என்பது லசேலின் கருத்து. எனவே, அது முதலாளிகளின் மீதுதான் அக்கறை கொள்கிறதேயன்றி, தொழிலாளிகளைப் பாதுகாப்பதில்லை. ஆனல் அரசின் உண்மையான பணி அதுவன்று. பொருளாதார, சமூக நிலையை உயர்த்துவதே அதன் கடமை. எனவே, செல்வந்தர்களின் செல்வாக்கைக் குறைத்து ஏழைத் தொழிலாளிகளின் நிலையை உயர்த்துவதன் வழியாகச் சமுதாய ஏற்றத் தாழ்வைப் போக்க வேண்டும்.

அரசாங்கம் இப் பணிகளைச் செய்யுமாறு தூண்டப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் ஜெர்மானியத் தொழிலாளர் சங்கத்தை

ஆரம்பித்தார் லசேல். இச் சங்கம்தான் ஜெர்மானியச் சமூகக் குடியரசுக்கட்சி தோன்றக் காரணமாயிருந்தது. அக் கட்சியின் குறிக்கோள்கள் இரண்டு: (1) தொழிலாளர்களின் ஓட்டுரிமைக்காகப் பாடுபடுவது. (இக் குறிக்கோளை ராட்பர்ட்டஸ் ஏற்றுக் கொள்ளவில்லை; அவரது கருத்துப்படி தொழிலாளர் சங்கம் அரசியல் சார்பற்றதாக இருக்க வேண்டும்.) (2) உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமெனக் கோருவது. உண்மையில் லசேலின் அரசியல் எதிரியான டெலிட்ச் (Delitxh) என்பவர் 1849-ல் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கி விட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. இதனால் லசேலை ஓர் அரசியல் வாதியாகவே அனைவரும் கருதினர்.

ராட்பர்ட்டஸ், லசேல் ஆகியோரின் கருத்துகளை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு ஜெர்மானிய அறிஞர்கள் பலர் 1872-ல் ஒரு மாநாட்டைக் கூட்டினர். இக் கூட்டத்தில் ஜெர்மன் நாட்டுப் பொருளாதார அறிஞர்கள், சட்டவல்லுநர்கள், பேராசிரியர்கள், அரசியல்வாதிகள் பலர் கலந்து கொண்டனர். அவர்கள்தான் சோஷியலிச சமுதாயத்தை உருவாக்கப் பல திட்டங்களைத் தீட்டினர். எனவே, அரசு சார் சோஷியலிசத்தை "அறிஞர்களின் சோஷியலிசம்" (Socialism of the chair) என்றும் அழைப்பதுண்டு.

முக்கிய அம்சங்கள்

1872-ல் கூடிய அறிஞர்களின் மாநாட்டில் வாக்னர் (Wagner) தான் முக்கியப் பங்கு கொண்டார். நாகரிக வாழ்வில் சமுதாயம் முழுவதும் முன்னேற வேண்டும்; அதற்கேற்ற கல்வி முறையை அளிப்பதுதான் அரசின் கடமையென முடிவு செய்தனர். நாட்டில் வறுமை தாண்டவமாடினால், அதற்கு அரசாங்கமே பொறுப்பு. எனவே, தனி மனிதனின் சுதந்திரமும் சொத்துரிமையும் சமூக நலத்திற்கு ஏற்றவையன்று என வாதாடினர். இவ் வுரிமைகள் இருப்பதால்தான் பொருளாதாரச் சீர்கேடும் சமுதாய வறுமையும் தோன்றுகின்றன. சமூக நலனை முன்னிட்டு உற்பத்தியாளரிடையே யுள்ள தீவிரமான போட்டியைக் கட்டுப்படுத்த வேண்டும். தொழிலாளிகளுக்குப் பேரம் பேசும் சக்தி குறைவாயிருப்பதால் தொழிலாளிகளும் முதலாளிகளும் ஒப்பந்த முறையில் கூலியை நிருணயிக்கும் பழக்கம் அகற்றப்பட வேண்டும். சமுதாய வளர்ச்சிக்கேற்ப அரசாங்கத்தின் பொருளாதாரப் பணிகளும் விரிவாக வேண்டும். சுருக்கமாகக் கூற வேண்டுமாயின், தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கொள்கைக்கு நேர்மாறான கொள்கையை அரசு சார் சோஷியலிச வாதிகள் வகுத்தனர்.

முடிவுரை

அரசு சார் சோஷியலிசம் அவ்வளவாகச் செல்வாக்குப் பெற வில்லை. புரட்சிகரமான சோஷியலிசம்தான் ஜெர்மனியில் ஊக்கம் பெற்று வளர்ந்தது. ஏனெனில், அதுவே பாட்டாளிகளின் இயக்க மாய் மலிர்ந்தது. இருப்பினும் அரசு சார் சோஷியலிசத்தின் செல் வாக்கு ஓரளவிற்கு ஜெர்மனியில் ஓங்கி இருந்தது. தொழிலாளிகள் நோய் உற்றபோது, ஓய்வு எடுத்தபின் அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யும் திட்டத்தை பிஸ்மார்க் (Bismark) கொண்டு வந்தார்.

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் பிரான்ஸிலும் இங்கிலாந் திலும் தொழிலாளரின் நலனைப் பாதுகாக்கும் பல திட்டங்களை அந் நாட்டு அரசாங்கங்கள் கொண்டுவந்துள்ளன. எனவே, அரசின் வழியாகச் சோஷியலிச சமுதாயத்தை உருவாக்கும் திட்டம் பல நாடுகளில் இன்று செயல்படுவதற்கு இச் சோஷியலிசவாதிகளே காரணம் எனலாம். 19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தொன் மைப் பொருளாதாரக் கொள்கையே செல்வாக்குப் பெற்றிருந்தது; ஆனால் அரசாங்கத் தலையீட்டுக் கொள்கையே சிறந்ததென்பதை கடந்த நூற்றுண்டின் இறுதியிலிருந்தே அறிஞர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

21. அறிவியல் சோஷியலிசம்

(Scientific Socialism)

கார்ல் மார்க்ஸ் (1818—1883)

சோஷியலிசவாத முதல் பருவம் தென்றல் பருவம். இப் பருவத்தில் வாழ்ந்த சோஷியலிச வாதிகள் பகற்கனவுக்காரர்கள். சோஷியலிசப் பாணியில் சிறிய சங்கங்களை அமைப்பதன் வாயிலாக சோஷியலிச சமுதாயத்தை உருவாக்கமுடியுமென மனப்பால் குடித்தவர்கள். கூட்டுறவு அமைப்பால் உலகிலுள்ள வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் நீக்கிவிட முடியுமென நம்பினோர் சிலர். ஓரிரு சட்டங்களின் வாயிலாக முதலாளித்துவ அமைப்பின் முறைகளையெல்லாம் நீக்கிவிடலாமென நினைத்தனர் வேறுசிலர். சமூகப் புரட்சி ஏதுமின்றிப் பொருளாதார அமைப்பையே மாற்றிவிடலாமென இவர்கள் கருதினர். ஆனால், சுதந்திரவாதிகள் உருவாக்கிய முதலாளித்துவ அமைப்பிலேயே சோஷியலிச வித்துக்கள் உள்ளனவென்றும் வருங்காலத்தில் இவ் வித்துக்களே முளைவிட்டுப் பெரு மரமாக வளருமென்றும் ஆராய்ந்துகாட்டிய பெருமை கார்ல் மார்க்ஸையே சேரும். இதுவரை வெறும் கருத்தளவிலிருந்த சோஷியலிச வாதத்தைச் செயல்முறைக்கேற்ப உருவாக்கியதன் வாயிலாக சோஷியலிசத்தின் தந்தையெனப் பெயர்பெற்றவர் கார்ல் மார்க்ஸ். சோஷியலிசம் பொருளாதாரக் கோட்பாடுகளில் ஒன்றாக மதிக்கப்படுவதற்கும் வாதப் பொருத்தமுடையதாக அமைந்ததற்கும் கார்ல்மார்க்ஸ் அவர்களே காரணம். சோஷியலிசம் என்பது 'கற்பனையானது' என்ற கேலியிலிருந்து விடுவிக்கப்பட்ட 'அறிவியல் சோஷியலிசமாக' மலர்ந்ததற்குக் காரணமும் மார்க்ஸ்தான்.

வாழ்க்கைக் குறிப்பு

மார்க்ஸைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின், அவரது வாழ்க்கையையும் குணத்தையும் அறிந்துகொள்வது அவசியம்

கார்ல் ஹென்ரிக் மார்க்ஸ் (Karl Heinrich Marx) 1818ஆம் ஆண்டு மே திங்கள் 5ஆம் நாள் ஜெர்மனியிலுள்ள டிரியர் (Trier) என்னுமிடத்தில் தோன்றினர். பெற்றோர்கள் இருவரும் யூத மதக் குருக்கள் பரம்பரையினர். அவருக்கு ஆறு வயது நடந்தபோது, அவர் குடும்பம் யூத மதத்தைவிட்டுக் கிருத்துவ சமயத்தைத் தழுவியது சொந்த ஊரிலேயே பள்ளிப்படிப்பை முடித்த மார்க்ஸ் பான் (Bonn) பல்கலைக்கழகத்தில் ஓராண்டும், பின்னர் பெர்லின் பல்கலைக் கழகத்தில் சிறிது காலமும் பயின்றார். 1838-ல் தன் தந்தை மறைந்தபின் ஜீன (Gena) பல்கலைக்கழகத்தில் பயின்று டாக்டர் பட்டம் பெற்றார். மாணவப் பருவத்திலேயே அவர் புரட்சியாளராக இருந்த காரணத்தால், டாக்டர் பட்டம் பெற்றும் அவர் எதிர்பார்த்த பேராசிரியர் பதவி கிடைக்கவில்லை. இதனல் ஏற்பட்ட ஏமாற்றத்துடன் பத்திரிகைத் தொழிலை மேற்கொண்டார். 'ரேனிஷ் டைம்ஸ்' (Rhcnish Times) என்னும் பத்திரிகை ஆசிரியராக முதன் முதலில் பணிபுரிந்தார். தொழிலாளரின் உரிமைக்காகப் போராடியதன் காரணத்தால் அரசாங்கம் அப்பத்திரிகைக்குத் தடை உத்தரவு போட்டு நிறுத்திவிட்டது. இக்கட்டான இந்நிலையில் தனவந்தர் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஜுலியா ஜென்னி (Julia Jenny) என்னும் பெண்ணை 1843-ல் திருமணம் செய்தார். திருமணமாகி ஐந்துமாத காலத்திற்குப்பின் தொழில் தேடி பிரான்ஸ் நாட்டுத் தலைநகரான பாரிசுக்குச் சென்றார். அங்கு இடதுசாரிப் பத்திரிகை ஒன்றின் துணை ஆசிரியராகப் பணியாற்றினர். 1844ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், பின்னல் தனது வாழ்க்கை நண்பராகவும், கூட்டு ஆசிரியராகவும், உற்றுழி உதவுபவராகவும் திகழவிருக்கும் தொழிலதிபர் பிரடரிக் எஞ்சல்ஸின் (Frederick Engels) நட்பு ஏற்பட்டது. பிரான்ஸ் நாட்டில்கூட மார்க்ஸால் நீண்டநாள் வாழ்க்கை நடத்த இயலவில்லை. ஜெர்மானிய அரசாங்கத்தின் தூண்டுதலினல் பிரெஞ்சு அரசாங்கம் 1845-ல் மார்க்ஸை நாடு கடத்தியது. நாடுகடத்தப்பட்டவுடன் பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸல்ஸ் நகருக்குச் சென்றார். எஞ்சல்ஸும் அங்கு வந்து சேர்ந்தார். இருவரும் சேர்ந்து ஆராய்ச்சியிலும் எழுதுவதிலும் ஈடுபட்டனர். 1848-ல் ஜெர்மனியில் நடந்த புரட்சியில் பங்கு கொள்வதற்காக இருவரும் அங்கே சென்றனர். புரட்சி தோல்வியுறவே இருவரும் ஆங்கில நாட்டில் அடைக்கலம் புகுந்தனர். அன்றுமுதல் 1883-ல் காலமாகும்வரை லண்டனிலேயே தங்கிவிட்டார் கார்ல் மார்க்ஸ். லண்டன் மியூசியத்திலுள்ள உலகப் புகழ்பெற்ற நூல் நிலையத்தில் அல்லும் பகலும் நூல்களைக் கற்று ஆராய்ந்து வந்தார். நூல் நிலையம் திறக்கும் நேரம் முதல் மூடும் நேரம்வரை நூல்களைப் படித்து வந்தார் எனத் தெரிகிறது.

வசதியான குடும்பத்தில் பிறந்தவர் மார்க்ஸ். ஆனால் வேலை கிடையாது; வருமானத்திற்கும் வழியில்லை. மனைவியோ தனவந்தர் குடும்பத்தைச் சேர்ந்தவர். பெண் குழந்தை ஜென்னியின்மீது அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார். மனைவியிடம் மரியாதையும் பற்றுதலும் கொண்டவர். தனது மனைவி செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர் என்பதில் மார்க்ஸுக்கு மட்டற்ற மகிழ்ச்சி, தனது பேரன்பிற்குரிய மனைவியையும் குழந்தைகளையும் காப்பாற்ற மார்க்ஸ் அவர்களால் இயலவில்லை. இந்நிலையில் மார்க்ஸின் குடும்பச் சக்கரமே எஞ்சல்ஸின் உதவியால்தான் சுழன்றது ஆண்டொன்றுக்கு 350 பவுன் கொடுத்து மார்க்ஸின் குடும்பத்தைக் காப்பாற்றியவரே எஞ்சல்ஸ்தான். தனது நண்பர் ஒருவருக்காக எல்லாவற்றையுமே தியாகம் செய்தவர் எஞ்சல்ஸ். இருந்தும் மார்க்ஸின் குடும்பக் கௌரவமே பாதிக்கப்படுமளவிற்கு வறுமைவாட்டியது. தனது மனைவியும் குழந்தைகளும் உடல் நலமின்றிப் படுக்கையிலிருந்த சமயம் எஞ்சல்ஸுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதம் உள்ளத்தை நெகிழச் செய்யும். "டாக்டரை வரவழைக்கக்கூட என்னிடம் பணமில்லை. கடந்த ஏழெட்டு நாட்களாக வெறும் ரொட்டியையும் உருளைக் கிழங்கையும்தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்; இப்போது அவைகளையும் வாங்க இயலாத நிலை ஏற்பட்டு விட்டது." இவ்வாறு எழுதியது மார்க்ஸின் குடும்ப நிலையைப் புலப்படுத்துகிறது. இவ் வாழ்க்கைவரலாறு மார்க்ஸ் நூலிலுள்ள கருத்துகளை நன்கு உணர உதவும்

மார்க்ஸின் நூல்கள்

மார்க்ஸ் தனித்தும் கூட்டாகச் சேர்ந்தும் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் முக்கியமான இரண்டை மட்டும் இங்கு குறிப்பிடலாம். முதலாவதாக "கம்யூனிசப் பிரகடனம்" (Communist Manisfesto) என்பது, 1848-ல் நண்பர் எஞ்சல்சுடன் கூட்டாக வெளியிட்டது லண்டனிலிருந்த கம்யூனிஸக் குழுவிற்கான திட்டங்களைத் தீட்டும் பணியில் இப்பிரகடனம் வெளியானது. கனல் கக்கும் இவ் வேடு இருபத்திரண்டு பக்கங்களைக் கொண்டது. சுவை மிக்கது. சோஷியலிச வாதத்தின் அடிபடைக் கருத்துகளையுடையது. இரண்டாவது தலை சிறந்த அவருடைய "மூலதனம்" என்னும் நூல். மூன்று பாகங்களைக்கொண்ட இந்நூல் பாட்டாளிகளின் 'வேதநூல்' எனப்படும். முதல்பாகத்தை 1867-ல் மார்க்ஸ் வெளியிட்டார். பிற இரண்டு பாகங்களும் அவர் இறந்த பின்னர் எஞ்சல்ஸ் அவர்களால் தொகுக்கப்பட்டு வெளிவந்தன. 1885-ல் இரண்டாம் பாகமும் 1894-ல் மூன்றும் பாகமும் வெளிவந்தன. எஞ்சியிருந்த மார்க்ஸின் குறிப்புகளை ஒரேபாகமாக வெளியிட

ஏஞ்சல்ஸ் திட்டமிட்டிருந்தார். ஆனால் தம் திட்டத்தை நிறைவேற்றுமுன்னரே எஞ்சல்ஸ் காலமானார். எனவே, அவற்றையெல்லாம் ஒன்றுதிரட்டி 'உபரி மதிப்புக்கொள்கை' (Theory of Surplus value) என்னும் தலைப்பில் ஜெர்மானிய சோஷியலிசக் கட்சிப் பத்திரிகை ஆசிரியர் கவுட்ஸ்கி 1904-ல் நான்காம் பாகமாக வெளியிட்டார். இவ்விரண்டு நூல்களைத்தவிர சிறு நூல்கள் பலவற்றை மார்க்ஸ் எழுதியுள்ளார். 1859-ல் 'பொருளாதார நூலின் விமர்சனம்' என்னும் தலைப்பில் சிறு நூல் ஒன்றை மார்க்ஸ் வெளியிட்டார். இது தவிர, பிரஸல்ஸில் இருந்தபோது 'தத்துவத்தின் வறுமை என்ற நூலை வெளியிட்டார். இது மார்க்ஸின் நண்பராயிருந்த புருடன் எழுதிய 'வறுமையின் தத்துவம்' என்ற நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டதாகும். இருப்பினும் இவரது நூல்களில் சிறப்புற்றவை இரண்டு மட்டுமே. இவற்றில் 'மூலதனம் என்னும் நூல் கரடுமுரடானது. சுமார் 40 ஆண்டுகள் சிந்தித்து ஆராய்ந்து எழுதப்பட்டது. அதனை ஓர் இலக்கியக்காடு என்று கூடச் சொல்லலாம். அந்தக் காட்டுக்குள் வழி தவறித் தவிப்பவர் பலர். இத்தனை நூல்களையும் கற்றவர் உண்டா என்பது ஐயப் பாட்டிற்குரியது. அவற்றைக் கற்பதும் அவசியமில்லை என்பது சிலர் கருத்து. எனினும், மார்க்ஸின் ''மூலதனம்'' என்னும் நூலின் இரண்டு பாகங்களையும் கம்யூனிசப் பிரகடனத்தையும் அவசியம் படிக்க வேண்டுமென்பதைப் பலரும் ஒப்புக் கொள்வர். எனவே, மார்க்ஸிஸம் என்று சுருக்கமாக அழைக்கப்படும் மார்க்ஸின் சோஷியலிச வாதத்தை விளக்கும் போது இவ்விரண்டு நூல்களிலுமுள்ள கருத்துகளும் சான்றுகளும் ஒன்றேடொன்று பின்னிச் செல்கின்றன.

மார்க்ஸைப் பற்றி நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் சில. அவர் ஆழ்ந்து அகன்ற கல்வி அறிவு பெற்றவர். தத்துவ நூலில் டாக்டர் பட்டம் பெற்ற பேரறிஞர். புரட்சிப் பொருளாதாரத்தின் குரு. அரசியல் காரணத்தால் நாடுகடத்தப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியோடு வறுமை, துன்பம், பொறுமை சந்தேகம் ஆகியவையும் சேர்ந்து மார்க்ஸின் எண்ணத்தை கலக்கமடையச் செய்தன. எனவே அவரது நூல்கள் குழப்பம் நிறைந்த மனநிலையைப் பிரதிபலிப்பதில் ஆச்சரியமில்லை. வெறுப்பும் வெறியுணர்ச்சியும் கொண்ட மார்க்ஸ் அஹிம்சா வழியை வெளிப்படையாகக் கண்டித்தவர். மார்க்ஸ் சமூக இயல் பேரறிஞரும் ஆவர். வரலாற்று இயலின் நுட்பமுணர்ந்த மேதையுங்கூட. இறுதியாகப் பொருளாதார ஞானமும் வருங்காலத்தைப் பற்றிக் கூறும் வல்லமையும் பெற்றவர். இனி, மார்க்ஸின் கருத்துகளையும் கொள்கைகளையும் சுருக்கமாக ஆய்வோம்.

மார்க்ஸின் தத்துவம்

மார்க்ஸ் வெறும் மேடைப் பேச்சாளரல்லர். ஆழ்ந்து பரந்த கல்வி ஞானம் பெற்றவர். எதையும் சுயமாகச் சிந்திக்கும் திறன் படைத்தவர். இங்கிலாந்து நாட்டில் முதலாளித்துவ அமைப்பின் தீய போக்கைக் கண்ணுல் கண்டவர். சிறந்த தத்துவ ஞானி. ஒருவேளை அவருடைய சூழ்நிலை வேறுவிதமாக அமைந்திருந்தால் சிறந்த தத்துவப் பேராசிரியராக விளங்கியிருப்பார் பல்கலைக் கழகத்தில் கற்றுவந்த நாட்களில் ஜெர்மானிய தத்துவ மேதை (George William Frederich Hegel) இவர் உள்ளத்தைக் கவர்ந்தார். 18ஆம் நூற்றுண்டின் இறுதிவரை ஜெர்மானிய தத்துவ ஞானிகள் அனைவரும் இவ்வுலகமும் மக்கள் சமுதாயமும் என்றும் மாருமல் அப்படியே நிலையாய் இருக்குமென நம்பி வந்தனர். ஆனுல், ஹெகல் வளர்ச்சியிலும் மாற்றத்திலும் நம்பிக்கைகொண்டவர். சமுதாய முன்னேற்றமே அவரது தத்துவத்தின் நம்பிக்கையும் குறிக்கோளுமாகும் 'எல்லாவற்றிற்கும் வளர்ச்சியுண்டு. அந்த நியதிக்கு மனித சமுதாயம் விலக்கல்ல. வளர்ச்சி என்பது வாதம், எதிர் வாதம், புனர்வாதம் ஆகிய மூன்று இயக்கங்களால் ஏற்படுகிறது. வாதம் என்பது குறிப்பிட்டதொரு காலத்தில் இருப்பது எந்த வாதத்திற்கும் எதிர் வாதம் இருப்பது இயல்பு இவ்விரண்டும் ஒன்ருேடொன்று மோதும்போது அதன் விளைவாகப் புனர்வாதம் தோன்றும். இப்புனர் வாதத்திற்கு எதிரான வாதம் நாளடைவில் தோன்றி இரண்டும் மோதும். இவ்வாருக வாதமும் எதிர்வாதமும் மோத புனர்வாதம் தோன்றுவதும் அதற்கு எதிர்வாதம் தோன்றி மோதுவதும் இயல்பு'' என ஹெகல் கூறினுர். இவ்வாருகக் குறிப்பிட்டதொரு காலத்தில் ஒரு கருத்து இருப்பதும், அக் கருத்துக்கு நாளடைவில் மாருன கருத்து தோன்றுவதும், இவ்விரண்டும் ஒன்ருேடொன்று மோதும்போது புதுக் கருத்து தோன்றுவதும் இயல்பு என்பதே ஹெகலின் வாதம். இத் தத்துவ ஞானம் கல்லூரி மாணவர்களிடையே ஓர் இன்ப வெறியைக் கிளப்பிற்று. ''இளைஞர் ஹெகலிய இயக்கம்'' தொடங்கப்பட்டது. அவ்வியக்கத்தில் பங்கு கொள்வதுதான் மாணவர்களுக்கு நாகரிகம் எனவும் நம்பப்பட்டது. அதில் கார்ல்மார்க்ஸ் ஓர் உறுப்பினராஞர் இந்த ஹெகல் தத்துவம் மார்க்ஸுக்கு அமிர்தம் போன்றது. ஆனுல் இத் தத்துவத்தை மார்க்ஸ் தன் கொள்கைக் கேற்பத் தலைகீழாக மாற்றினுர். ஹெகல், கருத்தே நிலையானது, உண்மையானதென நம்பினுர். மார்க்ஸோ சடப் பொருளே உண்மையெனக் கொண்டார். பொருளின்றிக் கருத்து உருவாக இயலாதென எண்ணினுர். பச்சை நிறமுள்ள பொருளிருந்தால் தானே பச்சை நிறமென்ற கருத்து உருவாக முடியும். எனவே, உலகில் நாம்

பார்ப்பதும் நடப்பதுமே முக்கியமெனக் கொண்டார் மார்க்ஸ். எனவே, கருத்துகள் ஒன்றோடொன்று பின்னி மோதுவதில்லை. உலகில் நடக்கும் எதிர்மறையான காரியங்களே ஒன்றோடொன்று மோதிப் புது நிலையை உண்டாக்குகிறதெனக் கொண்டார் மார்க்ஸ். எது எவ்வாறிருப்பினும், ஹெகலின் தத்துவத்தைப் போன்றே மார்க்ஸின் தத்துவமும் வாதப் பொருத்தமுடையதாகும் ஒரு வகையில் மார்க்ஸ் குருவுக்கு மிஞ்சிய சீடரானுர் எனலாம். ஹெகலின் கருத்துக்குத் தம் வாத முறைக் கருத்து நேர்மாறனது என்று சொல்லாமல் சொன்னுர். பின்னுல் தான் விளக்கப் போகும் வர்க்கப் போருக்கு ஆதாரமாக இந்தத் தத்துவத்தைப் பயன் படுத்தினுர்.

வரலாறு பற்றிய மார்க்ஸின் விளக்கம்

தனது தத்துவ விளக்கத்தை ஆதாரமாகக் கொண்டு மார்க்ஸ் வரலாற்றை விளக்க முற்பட்டார். சமுதாய வரலாற்றை விளக்க மார்க்ஸ் முற்பட்டதேன்? பொதுவாகக் கூறவேண்டுமாயின், வருங் காலத்தைப் பற்றி எடுத்துரைக்கவே அவர் வரலாற்று விளக்கத்தில் ஈடுபட்டார். முதலாளித்துவ அமைப்பை வெளிப்படையாக வெறுத் தவர் மார்க்ஸ். எனவே, இவ்வமைப்பு எவ்வாறு தோன்றியது என் பதை வரலாற்றின் வாயிலாகக் காண்பித்துவிட்டால் அதன் முடிவு எவ்வாறு இருக்குமென்பதைச் சுட்டிக் காட்டும் முயற்சியில் வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கை எழுந்தது. மார்க்ஸின் வரலாற்று விளக்கம் வெறும் விளக்கம் மட்டுமல்ல; வரலாற்றையே உருவாக்கு வதாயும் அமைந்தது.

நாகரிக உலகம் பல்வேறு மாறுதல்களை அடைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் பொருளாதரா அமைப்பில், குறிப்பாக பொருளாதார உற்பத்தி முறையில் ஏற்பட்ட மாறுதல்கள் என்பது மார்க்ஸின் கருத்து. உற்பத்தி முறையில் மாறுதல் ஏற்படும் போதெல்லாம் அதற்கேற்பச் சமூக அமைப்புகளிலும் சட்டத்துறை, அரசாங்கம், அரசியல் அமைப்பு ஆகியவற்றிலும் முக்கியமான மாறுதல் ஏற்படுமென்பது மார்க்ஸின் அசைக்க முடியாத நம் பிக்கை. மக்களின் எண்ணங்கள் கூட மாறிவிடுகிறதென்றுர். சுருங்கக் கூறின், மனித வாழ்க்கைவரலாற்றிற்கே அடிப்படை யானது பொருளாதார நடவடிக்கையாகும். எனவே, கலை, சமயம், சட்டம் ஆகியவற்ருல் பொருளாதார மாறுதல்கள் ஏற்படுகின்றன என்று கூறுவது தவறு. மாருக, அவையனைத்துமே பொருளாதார மாறுதல்களால்தான் மாறியமைந்து வளர்கின்றன. இதையே எஞ்சல்ஸ் அவர்களும் கூறினுர்கள். மார்க்ஸின் சவ அடக்கத்தின்

போது எஙகலஸ வருமாறு கூறினா "மனிதன அரசியல, விஞஞா னம, கலை, மதம ஆகியவறறில அககறைகொளள வேணடுமாயின, முதறகண அவனுககு உணண உணவும, உடுகக உடையும, இருகக வீடும இருததல வேணடுமெனற சாதாரண உணமையைப புலபபடுததியவா மாாகஸதான எனறா எனவே சமுதாயததில ஏறபடும மாறுதலகள அனைததும ஏதோ தததுவ வாதததால நிகழவதிலலை, மாறாக, பொருளாதாரச சூழநிலையில ஏறபடும மாறுதலகளாலேயே ஏறபடுகினறன இவவாறாக, மனித சமுதாய வளாசசியே பொருளாதார அமைபபைப பொறுதத தாகும இவ விளககததில ஓரளவு உணமையுளளதெனபதை எவரும மறுகக இயலாது துருககியாகளுககு விரோதமாக ஜெருசலேமிலும வெனிஸிலும நடைபெறற வாததகததைப பாது காபபதறகுததானே சிலுவைபபோா மூணடது இஙகிலாநதின வரிககொளகையை எதிாததுததானே அமெரிககாகள சுதநதிரப போா முழககம செயதனா வரலாறறு நிகழசசிகளில பெரும பாலானவை பொருளாதார நோககததிலதான இயஙகியுளளன இவவுணமையை மாாகஸுககு முனபு எவருமே வலியுறுததவிலலை பொருளாதார அமைபபும உறபததி முறையும காலததிறகுக காலம மாறி வநதுளளன பணடைக கறகாலததில கறகளே ஆககக கருவியாக இருநதன அதறகேறபவே சமுதாய அமைபபுமிருந தது ஆடுமாடு மேயதத காலததிலோ சமுதாயம அதறகேறற வாறு மாறிறறு அதேபோல நிலததை உழுது பயிாசெயத காலத திலும, குடிசைத தொழில காலததிலும மககளின சமுதாய அமைபபு காலததிறகேறற கோலம பூணடு, ஆலைத தொழிலமைப பைக கொணட இக காலததில அத தொழிலமைபபிறகேறபச சமுதாயம மாறியுளளதைக காணலாம சமுதாய அமைபபுமடடு மனறி, கலாசசாரமும பழகக வழககஙகளும உறபததி முறை யைப பொறுதது மாறிவநதுளளன எனவே, மககள பொருளீட டும வகையும வழியுமே சமூகததின பொருளாதார அமைபபை நிருணயிககுமெனலாம பொருளாதார அமைபபே அரசியல, சடடதிடடஙகள, மதம, பணபாடு, விஞஞானம, கலை, இலககியம முதலிய எலலாத துறைகளின அமைபபையும பாதிககும இதையே ஜே ஏ சுமபீடடா எனற அமெரிககப பொருளாதார அறிஞா சிறபபாக எடுததுககாடடியுளளாா பொருளாதார அமைபபு எபபோதும மாறிககொணடேயுளளது கறகாலம, வேடடைக காலம, ஆடுமாடு மேயதத காலம, பயிாததொழில காலம, கைத தறிககாலம, விசைததறிககாலம எனறு ஒனறிலிருநது பிறிதொனறு தானாகவே வளாநது வநதிருககிறது எனபதே அவாது முதல கருதது இநதப பொருளாதார மாறுதலகள பிற துறைகளிலும மாறறஙகளை உணடாககுகினறன எனபது இரணடாம கருதது

இவை முற்றிலும் உண்மையல்ல. பொருளாதார மாறுதல்களே வரலாற்று விளக்கத்திற்கு அடிப்படையானவை என்பது ஓரளவு தான் உண்மையே தவிர, முற்றிலும் உண்மையெனக் கொள்வதற்கில்லை என்பதைப் பின்வருமாறு விளக்குவர் பல அறிஞர்கள்.

உண்மையில் வரலாறு வெறும் பொருளாதார மாற்றங்களை மட்டுமன்றிப் பிற சக்திகளையும் பொறுத்ததாகும். வயிற்றை நிரப்புவதே மனிதனின் குறிக்கோளன்று. பற்று, பந்தபாசம், எழுச்சி, இனிய உணர்ச்சி, அன்பு ஆகியவையனைத்தும் மனிதனைப் பல்வேறு செயல்களில் ஈடுபடுத்துகின்றன. வரலாற்று ஏடுகளிலே பொருளாதாரமற்ற வேறு பல சக்திகளும் இடம் பெற்றுள்ளன. பேரரசை நிறுவவேண்டுமென்ற வெறி பொருளாதார அமைப்பையே பெரிதும் மாற்றியுள்ளதை நாம் அறிவோம். புதிய சமயத் தலைவர்களின் சோதனைகள் அரபு மக்களின் வாழ்க்கை நெறியை மட்டுமன்றிப் பொருளாதார அமைப்பையும் பாதித்துள்ளன. மறுமலர்ச்சிக் காலத்திலும் சரி, இக் காலத்திலும் சரி இலாபம் கருதி மட்டும் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டதில்லை. சந்திரனை நோக்கி 'ராக்கெட்டைச்' செலுத்தும் அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் எந்தப் பொருளாதார நோக்கத்தோடு இம் முயற்சியில் ஈடுபடுகின்றனர்? அறிவின் வளர்ச்சியும் விஞ்ஞான முன்னேற்றமும் இதுவரை புதிராக இருந்ததைப் புலப்படுத்த வேண்டுமென்ற ஆர்வமும்தானே இதற்கெல்லாம் காரணம்.

புவியியலமைப்பு, சூழ்நிலை, வெப்ப தட்பநிலை, மண்வளம், இயற்கை வளம் ஆகிய அனைத்தும் மக்களின் பொருளாதார வாழ்க்கையை உருவாக்கும் சக்திகளே. இவையனைத்தும் ஒரு நாட்டின் வரலாற்றையே நிருணயிருக்கும் சக்திகளுமாகும். இன வேற்றுமையுணர்ச்சியும் காதல் மனமும் எத்தனையோ வரலாற்றை உருவாக்கியுள்ளதை நாம் அறிவோம். டிரோஜன் போர் மூண்டதற்குக் காரணம், பேரிஸ் என்னும் கட்டழகன் ஹெலன் என்ற பேரழகியைக் கடத்திச் சென்றதாலல்லவோ. அந்தோனி, கிளியோபாட்ராவைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டதால் ரோம் பேரரசின் வரலாறே மாறிவிட்டதே. ஒருவேளை கிளியோபாட்ராவின் மூக்கு மட்டும் சப்பையாக இருந்திருந்தால் மார்க் அந்தோனி அவளைக் காதலித்திருக்கலாம். அப்போது ரோம் பேரரசின் தலைவிதியே வேறுவிதமாக இருந்திருக்கும். அவ்வாறுயின், ஹெலனும் கிளியோபாட்ராவும் பொருளாதாரக் காரணிகளின் பிரதிபலிப்பு என்று கொள்ளமுடியுமா? எனவே, வரலாற்றை உருவாக்கும் காரணங்களும் சக்திகளும் எத்தனையோ இருக்க, பொருளாதாரச் சக்தியை மட்டும் கொண்டு வரலாற்றை விளக்குவது குருடர் சிலர் யானையை விவரிக்கும் கதையைப்

போல் அமைந்துவிடும். இருட்டில் கருப்புப் பூனையைத் தேடுவதற்கு ஒப்பாகும். வரலாற்றை விளக்கவேண்டுமாயின் கருத்து சார்பற்ற துறவிபோல் இருத்தல் நன்று. ஏனெனில் அது பல்வேறு காரணிகளால் உருவாகிறது. அவற்றுள் ஒன்றே பொருளாதாரச் சக்தி. அதுவே காரணமென வாதாடுவது அறிவுடைமையன்று. இவ் வரலாற்று விளக்கம் பொருள்சார் விளக்கமெனப் பொதுவாக நம்பப்படுகிறது. எனவேதான் ஜி. டி. எச். கோல் (G. D. H. Cole) என்னும் மார்க்ஸியவாதி இதற்கு 'உண்மையான விளக்கம்' என மறுபெயர் சூட்ட முயன்றுள்ளார்.

வகுப்புப் போராட்டம்

மார்க்ஸின் வரலாற்று விளக்கம் வகுப்புப் போராட்டக் கோட்பாட்டிற்கு ஆதாரமாகவும் பின்னணியாகவும் புனையப்பட்டதென்ருல் மிகையாகாது. இவ் வகுப்புப் போராட்டத்தை ஆதாரமாகக் கொண்டே முதலாளித்துவ அமைப்பின் முடிவிற்கும், சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்கும் மார்க்ஸ் முயன்ருர். வகுப்புப் போர் என்பது ஒன்றும் புதிதல்ல. உலகம் தோன்றியதிலிருந்து இன்றுவரை எப்பொழுதும் சமூகம் பிளவுபட்டு இரண்டு கூருகி, ஒன்ருேடொன்று மோதிப் போரிட்டதை வரலாற்றில் காணலாம். சமுதாயம் பல வகுப்பினர்களாகப் பிரிந்ததும் இல்லை; பிரியப் போவதும் இல்லை, எக் காலத்திலும் இரண்டே வகுப்புகளும் ஒன்றையொன்று பகைத்து வந்துள்ளன என்பது மார்க்ஸின் வாதம். இதனை விளக்கி அணிசெய்யும் வகையில் மார்க்ஸும் எஞ்சல்ஸும் கம்யூனிஸப் பிரகடனத்தில் பின்வருமாறு விவரிக்கின்றனர்: 'சமூக வரலாறு என்பது வகுப்புப் போராட்டத்தின் வரலாறேயன்றி வேறில்லை. சுதந்திர மனிதனும் அடிமையும், பட்ரீஷியனும் பிளிபியனும் (ரோமாபுரிப் பிரபுக்களும் பாமரரும்), ஜமீன்தாரும் குத்தகைக் குடிமக்களும், தொழில் வினைஞனும் தொழில் பயில்வோனும்—சுருங்கக்கூறின், கொடுமைப்படுத்துவோனும் கொடுமைக்குள்ளாவோனும்—எப்பொழுதும் ஒருவருக்கொருவர் எதிராக நின்று சில சமயங்களில் வெளிப்படையாகவும், சில சமயங்களில் மறைமுகமாகவும் இடைவிடாது போரிட்டுக்கொண்டே வந்திருக்கின்றனர். இத்தகைய போரின் விளைவாக சமூகம் புரட்சிகரமான மாறுதலை அடைந்திருக்கிறது அல்லது இரு வகுப்பினருமே நாசமாகியிருக்கின்றனர்.' நாம் முன்னரே கூறியதுபோல் இவ் விளக்கத்திற்கு ஹெகலின் தத்துவமே ஆதாரமாக அமைந்துள்ளது.

வகுப்புப் போராட்டம் எப்பொழுதுமே இருந்து வந்திருக்கிறது; எனினும், முதலாளித்துவ அமைப்பிலுள்ள போராட்டமோ மிகத்

தெளிவானது மட்டுமன்றி, கோரமானதுமாகும் என மார்க்ஸ் வாதாடு கிறார். நவீனக் காலத்திலுள்ள முதலாளித்துவ அமைப்பில் சமுதாயம் முதலாளிகள், பாட்டாளிகள் என இரு கூறுகப் பிளவு பட்டு ஒன்றுக்கொன்று எதிராகச் செயல்படுகிறதென்றார். முதலாளி கள் பாட்டாளிகள் என்ற சொற்களின் பொருளை விளக்கும் வகை யில், பணம் படைத்தோர், நிலமுடையோர், ஆலை அதிபதிகள் ஆகிய அனைவரும் முதலாளிகள் என்றும், எவ்விதச் சொத்துக்கும் உரிமையின்றித் தங்களின் உழைப்பை விற்று ஊதியம் பெற்று வயிற் றைக் கழுவும் நிலையிலுள்ளோர் பாட்டாளிகள் என்றும் வரையறுக் கின்றார். இன்றைய சமுதாயத்தில் முதலாளிகள் பாட்டாளிகளென இரு வகுப்பினர் மட்டும் இருப்பதில்லை. எத்தனையோ விதமான நடுத்தர வகுப்பினர் உள்ளனர். இதனை மார்க்ஸும் எஞ்சல்ஸும் நன்கு அறிவர். ஆனால் நடுத்தர வகுப்பினரைப் பற்றி அவர்கள் அவ்வளவாக அக்கறைகொள்ளவில்லை. காரணம், நடுத்தர வகுப் பினர் அனைவருமே என்றாவதொரு நாள் பாட்டாளிகளாகி விடுவர் என்பது அவர்களின் நம்பிக்கை. பாட்டாளிகள் நடுத்தர வகுப்பின ராகவோ அல்லது முதலாளிகளாகவோ ஒரு போதும் உயர முடியாது. மாறாக, சமுதாயத்தில் உயர்ந்துள்ளவர்கள் சரிவுற்றுத் தாழ்ந்த நிலைக்கு வருவதுதான் சாத்தியமென்றனர்.

முதலாளி—பாட்டாளி வர்க்கப் போர் இன்று நேற்று தொடங் கியதல்ல. நிலமானிய முறை சிதைவுற்ற போதிலிருந்தே நடந்து வருகிறது. நிலமானிய முறை சிதைவுற்றபோதுதான் ஒரு சிலர் தந்திரமாகவும் பலாத்காரமாகவும் பொது மக்களின் நிலத்தையும் அரசுக்குரிமையான நிலபுலன்களையும் திருச்சபைக்குச் சொந்த மான சொத்துக்களையும் கைப்பற்றி அவற்றைத் தம் உடைமை களாக்கிக் கொண்டனர். முதலாளிகள் என்ற வகுப்பினர் தோன்றி யதே பலாத்கார முறையில்தான். அன்றையிலிருந்து அவர்கள் தொழிலாளிகளைச் சுரண்டியே வாழ்ந்து வந்திருக்கின்றனர். தகாத, தீய, பலாத்கார முறையில் சொத்தைச் சேர்த்தவர்கள் அதே முறையில் சொத்தை இழக்க நேரிடும் என்பதைக் காண் பிப்பதற்காகவே மார்க்ஸ் வகுப்புப் போர்க் கோட்பாட்டைப் புனைந் தார் போலும். உழைப்பாளிகளைச் சுரண்டி வாழும் முதலாளி களும் நடுத்தர வகுப்பினரும் தங்கள் கையால் பாடுபடாமல், உடலை வருத்தாது உண்டு களிப்பவர்கள். அவர்களில் சிறிய அளவில் சொத்துள்ள நடுத்தர வகுப்பினர் சிறு நிலக்கிழார், கடைக்காரர், சில்லரை வியாபாரிகள், கைவினைஞர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் பெருந்தொழிலதிபருடனோ வணிகருடனோ போட்டியிட முடியாது. நட்டமடைந்து நாளடைவில் பாட்டாளி மக்களாகிவிடுவர். தொழில் நுட்பம் கொண்ட நெசவாளர், தட்டார்

போன்றவர்கள், பெரும் எந்திர சாதனங்களோடு போட்டியிட முடியாத நிலையில் சீர்குலைந்து பாட்டாளிகளாகிவிடுவர். இப்படிப் பாட்டாளி வர்க்கத்தில் பல துறைகளிலிருந்தும் பெருவாரியான மக்கள் வந்து சேர்கின்றனர்.

முதலாளித்துவ அமைப்பில் நடக்கும் தொழில், வர்க்கம் ஆகியவற்றில் நிலவும் கடும் போட்டியினால் நடுத்தர வகுப்பினர் மறைந்து கொண்டே போவார்கள். "சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்கும்" என்ற இயற்கை விதியானது முதலாளித்துவ அமைப்பில் எவ்விதக் கட்டுப்பாடுமின்றிச் செயல்பட்டு வருகிறது. காலப் போக்கில் ஒரு சிலர் மட்டும் நாட்டிலுள்ள பொருளாக்கச் சாதனங்கள் அனைத்திற்கும் உரிமையாளராகி விடுவர். மற்ற அனைவரும் அவர்களின் உத்தரவுப்படி அவர்கள் போடும் கூலி, வேலை நேரம் முதலிய நிபந்தனைகளுக்குட்பட்டுப் பாடுபட்டு வயிறு வளர்க்கும் சாதாரணப் பாட்டாளி மக்களாகி விடுவர். சொத்துடையோர் ஒரு புறம்; எவ்விதச் சொத்துமில்லாதோர் மற்றொரு புறம். உண்டு களிப்போம் ஒரு புறம்; உழைத்து உழைத்து உடல் நலிவோர் மற்றொரு புறம். சுரண்டி வாழ்வோர் ஒரு புறம்; சுரண்டப்படுவோர் மற்றொரு புறம். ஒரு சில கொழுத்த பணக்காரர் ஒரு புறம்; வறுமையில் வாடும் கோடிக்கணக்கான ஏழைகள் மற்றொருபுறம். நாளடைவில் முதலாளிகளின் கொடுமை வரையரையின்றித் தலைவிரித்தாடும். சுரண்டப்படும் பாட்டாளி இனத்தவர் கடல் போல் கொந்தளித்தெழுவர். எந்த முறைகளில் பிறர் சொத்துக்களைக் கைப்பற்றி முதலாளிகள் ஆயினரோ அதே வழி வகைகளைக் கடைப்பிடித்து அவர்களின் ஆலைகளையும் சொத்துக்களையும் பாட்டாளிகள் கைப்பற்றுவர். தனியார் சொத்தாக இருந்த அனைத்தும் சமுதாயத்தின் பொதுச் சொத்தாக மாறும். முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாடே இல்லாத புதியதொரு சமுதாயம் உருவாகும். இதுவே மார்க்ஸ் கூறும் வகுப்புப் போராட்டத்தின் தன்மையும் விளைவுமாகும்.

வகுப்புப் போராட்டம் என்பது உண்மைக்கு அப்பாற்பட்ட கோட்பாடெனப் பலர் கருதுவர். சமுதாயம் மார்க்ஸ் கூறுவது போல் எப்போதும் இரண்டாகப் பிளவுபட்டுப் போரில் ஈடுபட்டிருப்பதில்லை. சமுதாயத்தில் இரண்டு வகுப்புகள் மட்டுமன்றி, பல்வேறு வகுப்புகள் ஏணிப்படிகள் போல் இருக்கின்றன. ஒவ்வொரு படியிலிருப்பவர்களும் தத்தமக்கு உயர்ந்த படியிலுள்ளவர்களைப் போல் ஆக வேண்டுமென எண்ணி முயன்று வருகிறார்கள். தமக்கு மேலேயுள்ளவர்களைக் கண்டு பொறாமை கொண்டு அவர்களை நாசப்படுத்த நினைப்பதில்லை. மாறாக, அவர்களைப் போல் தாங்களும் முன்னேற வேண்டுமென்றே விரும்புவர். போட்டி

மனப்பான்மையைவிட பின்பற்றும் மனப் போக்கே சிறப்புப் பெறுகிறது. இதனல் வகுப்புப் போராட்டம் மார்க்ஸ் கூறியதைப்போல் கடுமையாக இருப்பதில்லை. மேலும், பொருளாதாரம், சொத்து ஆகிய காரணங்கள் சமுதாயத்தை இரு கூறுகளாகப் பிரித்தாலும், மதம், பண்பாடு, பாசம், கலையரங்கு, விளையாட்டு முதலியன அவ்விரு வகுப்பினரையும் ஒன்று சேர்த்துவிடுகின்றன. அமெரிக்கப் பொருளாதார அறிஞர் தார்ஸ்டீன் வெப்லன் (Thorsteion R. Veblen) 'அண்டை வீட்டுக்காரர் போல் தானும் வாழ வேண்டுமென்ற விருப்பம் மனிதனுக்கு இயல்பானது' என்று வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சொத்தை வைத்துக் கொண்டு முதலாளிகள் பாட்டாளிகள் என்று பாகுபடுத்துவது உசிதமல்ல என்று பிளாட்ஜெட் கூறுகிருர். சொத்தே இல்லாத சிலர் சொத்துள்ள பலரைவிட அதிக வருமானம் பெறுவதை நாம் அறிவோம். மார்க்ஸ் தனது விளக்கத்தால் வர்க்கத்தையும் வகுப்பு வெறியையும் தூண்டிவிட்டார் என்று ரஸல் (Russel) கூறுகிருர். எது எவ்வாறிருப்பினும் தனது கோட்பாட்டிற்கும் குறிக்கோளுக்குமேற்ப மார்க்ஸ் வரலாற்று விளக்கத்தையும் வகுப்புப் போரின் தன்மையையும் உருவாக்கினுர் என்ருல் மிகையாகாது.

மதிப்புக் கோட்பாடு

முதலாளித்துவ அமைப்பில் பாட்டாளிகளைச் சுரண்டித்தான் முதலாளிகள் வாழ்கின்றனர் என்பது மார்க்ஸின் கருத்து. எவ்வாறு சுரண்டப்படுகின்றனர் என்பதை அறிந்து கொள்வதற்குமுன் மார்க்ஸின் மதிப்புக் கோட்பாட்டைப் புரிந்துகொள்ளுதல் அவசியம். மார்க்ஸின் மதிப்புக் கோட்பாடு உழைப்புவாதத்தை ஆதாரமாகக் கொண்டது. இவ் வாதம் முழுவதிலும் மார்க்ஸ் தொன்மைப் பொருளாதார அறிஞர்களில் ஒருவரான டேவிட் ரிக்கார்டோவைப் பின்பற்றி முடிவு காண்கிருர். எனவே, தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கு எதிராகத் தோன்றிய மார்க்ஸ் அவர்களின் சீடனுகத் திகழ்வது விசித்திரமானது. சோஷியலிச வாதத்தின் தந்தையெனப் போற்றப்படும் மார்க்ஸ் தொன்மைப் பொருளாதாரத்தின் இறுதி மேதையாகவும் கருதப்படுகிருர். மார்க்ஸின் மதிப்புக் கோட்பாடு ரிக்கார்டோவின் கோட்பாட்டின் விளக்கமே எனலாம். எனவே, தொன்மைப் பொருளாதார மரத்தில் தோன்றிய கிளையே மார்க்ஸின் மதிப்புக் கோட்பாடு. ஆனுல், இக் கிளையில் தோன்றிய பூக்கள், காய்கள், கனிகள் அனைத்தும் மரத்தின் இயல்புக்கு மாருனவையாகவே காட்சி அளித்தன. ரிக்கார்டோ இக் கோட்பாட்டைப் பல மாறுதல்களுக்கு உட்படுத்தினுர். ஆனுல் மார்க்ஸோ மாற்றி

யமைக்க இயலாத, சுரண்டல் கொள்கைக்குக் காவலனாக இக் கோட்பாட்டைப் பயன்படுத்துகிறார்.

இனி, மார்க்ஸின் மதிப்புக் கோட்பாடு என்னவென்பதை ஆராய்வோம். பொருளாதார மரபுப்படி மதிப்பை உபயோக மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு என்று இருவகையாகப் பிரிக்கிறார் மார்க்ஸ். பின்னர், பரிவர்த்தனை மதிப்பை அங்காடி மதிப்பென்றும் இயல்பு மதிப்பென்றும் பிரித்தாய்கிறார். அங்காடி மதிப்பு சந்தை சக்திகளான தேவை, அளிப்பு ஆகியவற்றால் நிருணயிக்கப்படுகிற தென்கிறார். இவையனைத்தும் பொருளாதார மரபினையொட்டியே விளக்கப்படுகின்றன. ஆனால் பண்டத்தின் இயல்பு மதிப்பை ஆயும்போது மார்க்ஸ் புரட்சிகரமான விளக்கத்தைத் தருகிறார். மனிதனின் உழைப்பே பண்டங்களின் இயல்பான மதிப்பை உண்டாக்கும் கருவி என்றும், அளக்கும் கோல் என்றும் கூறியதோடு நிறுத்திவிடாமல், உழைப்புத்தான் பண்ட மதிப்பு என்று வலி யுறுத்துகிறார். பரிவர்த்தனை மதிப்புள்ள எல்லாப் பண்டங்களுக்கும் பொதுவாக இருப்பது உழைப்பு ஒன்றுதான். அவைகளுடைய மணம், வண்ணம், சுவை, அளவு, நிறம் ஆகிய எதுவும் பொதுவான பண்பல்ல. எனவே, எல்லாப் பண்டங்களுக்கும் பொதுவாக இருக் கும் உழைப்பே அவற்றின் பரிவர்த்தனை மதிப்பை நிருணயிக்கும் அளவுகோல் என்பது மார்க்ஸின் வாதம். ஒரு கிலோ உருளைக் கிழங்கு, இரண்டு கிலோ வெங்காயத்திற்குச் சமம் என்று வைத்துக் கொள்வோம். உருவம், தன்மை, பயன், நிறம் ஆகியவற்றில் இவ் விரண்டிற்கும் அதிக மாறுதல்கள் உள்ளன. அவ்வாறாயின் இவை இரண்டும் சமமெனக் கொள்வதெப்படி? இக் கேள்விக்கு விடை யளிக்கும் வகையில் தம் கொள்கையை விளக்குகிறார் மார்க்ஸ். ஒரு கிலோ உருளைக்கிழங்கு, இரண்டு கிலோ வெங்காயம் ஆகிய இரண் டையும் உற்பத்தி செய்வதற்கு ஒரே அளவு உழைப்புத் தேவைப் படுவதால் இரண்டும் சமமென்கிறார் மார்க்ஸ்.

மேலும், ஒரு பண்டத்தின் மதிப்பு, அதனை உற்பத்தி செய்வ தற்குத் தேவைப்படும் உழைப்பால் மட்டும் நிருணயிக்கப்படுவ தில்லை. அதனை உற்பத்தி செய்வதற்குத் தேவையான கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றை உண்டுபண்ணத் தேவைப்படும் உழைப் பின் அளவாலும் நிருணயிக்கப் படுகிறதென்கிறார் மார்க்ஸ். உருளைக் கிழங்கை விளைவிக்கத் தேவைப்படும் உழைப்பின் அளவோடு, அதற்குத் தேவையான உரம், கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றை உண்டுபண்ண அவசியமான உழைப்பின் அளவையும் சேர்க்க வேண்டுமென்று கூறுகிறார். ஒரு பண்டத்தை உற்பத்திச் செய்வ தற்கு நேரடியாகத் தேவைப்படும் உழைப்பையும், அதோடு தொடர்

புடைய பிற உழைப்பையும் எவ்வாறு அளவிடுவது என்பது கடினம், எனினும், மார்க்ஸ், தான் கொண்ட கொள்கையிலிருந்து சிறிதும் பிறழாமல் விளக்குவது விநோதமாகவே உள்ளது.

சமூகத்திற்கு அவசியமான உழைப்பு

எந்தப் பண்டத்திற்கும் குறிப்பிட்டதொரு காலத்தில் ஒரே ஓர் இயல்பான மதிப்பே இருக்கமுடியும். ஆனால் அப் பண்டத்தை உற்பத்திசெய்வோர் பல்வேறு உழைப்பு அளவைச் செலவிட்டிருக்கலாம். உதாரணமாக, ஒரேவிதமான பேனாவை ஒருசிலர் 8 மணி நேரத்தில் செய்து முடிக்கலாம்; வேறு சிலர் 10 மணி நேரம் எடுக்கலாம். அவ்வாறாயின் எந்த உழைப்பு நேரத்தைக் கொண்டு அதன் மதிப்பை அளவிடுவது? இக் கேள்விக்கு விடையளிக்கும் முறையில் சமூகத்திற்கு அவசியமான உழைப்பு (Socially necessary labour) என்ற கருத்தை மார்க்ஸ் புகுத்துகிறார். ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குச் சமூகக் கண்ணோட்டத்திலிருந்து எவ்வளவு நேர உழைப்புத் தேவையோ அதுவே சமூகத்திற்கு அவசியமான உழைப்பு எனப்படும். சாதாரணத் திறன் படைத்த தொழிலாளி, பொதுவாக எவ்வளவு நேரத்தில் ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வானோ அதுவே சமூகத்திற்கு அவசியமான உழைப்பு என்று மார்க்ஸ் விவரிக்கின்றார்.

வெவ்வேறு திறனுடைய உழைப்பு

குறிப்பிட்டதொரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குப் பல்வேறு திறனுடைய உழைப்பு வெவ்வேறு அளவில் தேவைப்படலாம். திறனில்லாத சாதாரண உழைப்பு சில மணி நேரமும் திறனுடைய சில வகை உழைப்புப் பல மணி நேரமும், மிகத் திறனுடைய உழைப்பு ஒரு சில மணி நேரமும் தேவைப் படுகிறதெனக் கொள்வோம். இவ்வாறு திறன் வேறுபாடுடைய பல்வேறு வகையான உழைப்பையெல்லாம் எவ்வாறு அளவிட்டு அப் பண்டத்தின் மதிப்பை அளவிடுவது என்பது கடுமையான பிரச்சினை. இதற்கு மார்க்ஸ் கொடுக்கும் விளக்கம் புதிரானது. பண்டங்களின் மதிப்பை உழைப்பின் அளவால் தான் நிருணயிக்கவேண்டுமேயன்றி அதன் தன்மையில் அல்ல என்கிறார். எனவே, சாதாரண உழைப்பிற்கும் திறனுடைய உழைப்பிற்குமுள்ள தொடர்பினைக் கணக்கிட்டு அளவிட வேண்டுமென்கிறார். சான்றாக, ஒரு என்ஜினியரின் ஒரு மணி நேர உழைப்பு, ஆலைத் தொழிலாளியின் மூன்று மணி நேரஉழைப்புகுச் சமமென்று வைத்துக் கொள்ளலாம்; வணிகரின் இரண்டு மணி நேர உழைப்புக்கு ஈடானது என்று கொள்ளலாம். இவ்வாறாக, பலவகைப்பட்ட உழைப்பைக் கணக்கின் வாயிலாக ஒரு வகை உழைப்பிற்குக் கொண்டு வந்து அளவிட வேண்டுமென்

பதே மார்க்ஸின் வாதம். சாதாரண உழைப்பிற்கும் திறன் படைத்த உழைப்பிற்கும் அவ்வளவாக வேறுபாடு இல்லை என்பது அவரின் கருத்து. பின்னது முன்னதைவிடச் சில மடங்கு அதிகம்; அவ்வளவே. எந்த உழைப்பைச் சாதாரண உழைப்பாகக் கொள்வது? இது. திட்டவட்டமாக வரையறுத்துக் கூற முடியாத தொரு புதிர் என பிளாட்ஜெட் கருதுகிறார். அடுத்து, இன்னின்ன விகிதத்தில் பெருக்க வேண்டும் என்பது எல்லாரும் ஒப்புக்கொள்ள முடியாத பிறிதொரு புதிர். இவ்வாறாக, மார்க்ஸின் மதிப்புக் கோட்பாடு அவசியமற்ற, திகைப்பூட்டும் பலமான வாதங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதை பிளாட்ஜெட் காட்டுகிறார்.

உழைப்பே பண்டங்களின் மதிப்பினை நிருணயிக்கும் அளவு கோல் என்ற கொள்கையை விடாப் பிடியாகக் கொண்ட மார்க்ஸ் நிலத்தையும் முதலையும் உற்பத்திக் காரணிகளாகக் கருதினாலும், அவை மதிப்பை நிருணயிப்பதில்லை என்கிறார். நிலமும் இதர இயற்கைச் சாதனங்களும் பயன் மதிப்புடையவையே; பரிவர்த்தனை மதிப்புடையவை அல்ல என்கிறார். மனிதனின் உழைப்புச் செலுத்தப் படாத எந்தப் பொருளும் பரிவர்த்தனை மதிப்பற்றது. என்பது அவரின் எடுகோள். முதலும் பண்டத்தின் மதிப்பை நிருணயிப்பதன்று. காரணம், அது கடந்த கால உழைப்பின் சின்னமேயன்றி, தனித்ததோர் உற்பத்திக்காரணி அல்ல என்று வாதாடுகிறார் மார்க்ஸ். ஆனால் நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இயற்கையான புல்வெளிகள், பயிரே செய்யப்படாத செழிப்பான நிலங்கள் ஆகியவற்றிற்கு பரிவர்த்தனை மதிப்பு இருக்கத் தான் செய்கின்றன. தேவையை நோக்க அவற்றின் அளிப்பு குறைவாக இருக்கின்ற காரணத்தால் அவற்றிற்கு விலை ஏற்படுகிறது என்பதை எல்லாருமே ஒப்புக் கொள்வர். ஆனால் மார்க்ஸோ அவற்றிற்குப் பரிவர்த்தனை மதிப்பு இல்லை என்று கூறுகிறார்.

மேலும், பரிவர்த்தனை மதிப்பை நிருணயிக்கும் சக்திகளில் தேவைச் சக்தியைப் புறக்கணிக்கா விட்டாலும்கூட, அதற்கு முக்கியத்துவம் அளிக்காதது பெரும் குறையே. உபயோக மதிப் பின்றி எந்தப் பொருளுக்கும் பரிவர்த்தனை மதிப்பு இல்லை என்று ஒப்புக்கொண்ட மார்க்ஸ், பண்டத்தின் பயன்பாட்டை ஆதாரமாகக் கொண்ட தேவைச் சக்தியைப் புறக்கணித்தது விசித்திரமானது.

இதுவரை, பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு அதில் புதைந் துள்ள உழைப்பின் அளவால் மட்டுமே நிருணயமாகிறதென்று மார்க்ஸ் வலியுறுத்துகிறார் என்று கண்டோம். எந்த விதத்திலும் பயன்தர இயலாதவகையில் உழைப்பை வீணாக்கிச் சில பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவென்று கொள்வோம். உட்காரு

வதற்கு அருகதையற்ற நாற்காலியைத் தச்சன் ஒருவன் 15 நாள் உழைப்பில் செய்தால்' அது எந்த மதிப்பையும் பெற இயலாது. எனவே, உழைப்பின் மதிப்புக் கோட்பாடு அரைகுறையானதே யன்றி, முழுமையானதல்ல.

மார்க்ஸின் பகிர்வுக் கொள்கை

மனிதனின் உழைப்பே பண்டங்களின் மதிப்பை அளவிடும் அளவுகோல் என்பதை ஒப்புக்கொள்வோமாயின், மார்க்ஸின் பகிர்வுக் கொள்கையையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். பண்டங்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் அனைத்தும் உழைப்பாளிகளுக்கே செல்லவேண்டும் என்கிறார் மார்க்ஸ். ஆனால் நடைமுறையில் அவ் வருவாயில் ஒரு பகுதியை மட்டுமே உழைப்பாளிகள் பெறுகின்றனர். எஞ்சியதை வாரம், வட்டி, இலாபம் என்ற பெயரில் முதலாளிகளே எடுத்துக்கொள்கின்றனர். முதலாளிகளுக்குக் கிடைக்கும் இவ் வருவாய் உபரி வருவாயாகும் என மார்க்ஸ் வாதாடுகிறார்.

கூலி நிருணயம்

தொன்மைப் பொருளாதாரக் கூலிக் கொள்கையைக் குறை கூறிவிட்டு, மார்க்ஸ் புதியதொரு கொள்கையை வகுக்கிறார். தொழிலாளிகளின் உழைப்புச் சக்திக்காகக் கொடுக்கப்படும் விலையே கூலி என்பது மார்க்ஸின் கருத்து. பிற பண்டங்களைப் போன்றே உழைப்புச் சக்தியும் ஒரு பண்டமாகும். எனவே உழைப்புச் சக்தியை உண்டுபண்ணத் தேவைப்படும் உழைப்பின் அளவால்தான் கூலி நிருணயமாகிறதென்கிறார் மார்க்ஸ். ஆலையில் வேலை செய்யும் தொழிலாளி, தனது உழைப்புச் சக்தியைச் செலவிடுகிறான். அச் சக்தியை மீண்டும் பெறுவதற்கு அவனுக்கு உணவு, உடை, உறைவிடம் அவசியம். அவசியமான இவற்றைப் பெறுவதற்கு அவன் எவ்வளவு நேரம் உழைக்க வேண்டுமோ அவ்வுழைப்பே உழைப்புச் சக்திக்கு ஈடான நேரமாகும். அதிக நேரம் உழைத்தால் அவன் உபரி மதிப்பை உண்டுபண்ணி முதலாளிக்குக் கொடுக்கிறான் என்பது மார்க்ஸின் வாதம். இந் நிலையில் மார்க்ஸின் பகிர்வுக் கொள்கை, அவரது மதிப்புக் கோட்பாட்டிற்கு வாதப் பொருத்தமுடையதாய் அமைந்துவிடுகிறது. எனினும், மதிப்புக் கொள்கையைப் போன்றே பகிர்வுக் கொள்கையும் குறைபாடுகளுடையதாகிறது. மதிப்புக் கொள்கையை ஆதாரமாகக் கொண்ட பகிர்வுக் கொள்கை, முன்னதன் குறைபாடுகளைச் சுமந்து செல்வதில் வியப்பில்லை.

நாட்டு வருமானத்தை கூலி, உபரி மதிப்பு என்று இரு கூறுக மட்டும் பிரித்து, தனது சுரண்டல் கொள்கைக்கு ஏற்றதாக அமைக் கிருர் மார்க்ஸ்.

உபரி மதிப்புக் கொள்கை

மார்க்ஸின் உபரி மதிப்புக் கொள்கை, மதிப்புக்கொள்கை, கூலிக் கொள்கை ஆகிய இரு தூண்களின் மீது கட்டப்பட்ட வளைவு போன்றது. இக் கொள்கையை வகுப்பதிலும் மார்க்ஸ் தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிருர். ரிக்கார் டோவின் பிழைப்புக் கூலிக்கொள்கையும் மால்தஸின் மக்கள் தொகைக் கொள்கையும் மார்க்ஸின் உபரி மதிப்புக் கொள்கையைத் தாங்கும் இரு தூண்கள். எனவே, மார்க்ஸியப் பொருளாதாரம் தொன்மைப் பொருளாதாரத்தின் தொடர்ச்சியேயன்றி வேறில்லை என்று கூறுவதிலும் நியாயம் உண்டு.

மார்க்ஸின் உபரி மதிப்புக் கொள்கை பல்வேறு அனுமானங் களைக் கொண்டது. முதலாவதாக, உழைப்பாளிகள் அனைவரும் சுதந்திரமனிதர்களேயன்றி, அடிமைகள் அல்லர். தங்களது உழைப் பின் சக்தியை விற்பதற்கு உழைப்பாளிகளுக்கு முழுச் சுதந்திரம் உண்டு. இரண்டாவது, தொழிலாளிகளுக்கு வேண்டிய மூலதன மும் நிலமும் கிடையாது. அப்படி மூலதனம் இல்லாததால்தான் தங்களின் உழைப்புச் சக்தியை முதலாளிகளுக்கு விற்கின்றனர். மூன்ருவது, உழைப்பாளிகள், தங்களது உழைப்புச் சக்தியை விற்பதன் மூலம் அச் சக்தியைப் பயன்படுத்தும் உரிமையை முதலாளிகளுக்கே விட்டுவிடுகின்றனர். எனவே, உழைப்பின் சக்தியால் விளையும் உற்பத்தியனைத்தும் முதலாளிகளுக்கே சேர்ந்து விடுகிறது. இந்நிலையில், தொழிலாளிகள் வேலை செய்யும்போது, தாங்கள் இழக்கும் சக்தியை மீண்டும் பெறுவதற்கு அவசியமான கூலியை மட்டுமே பெறுகின்றனர். இதனை பிழைப்பு மட்டக்கூலி எனலாம். இவ்வாறு, தாங்கள் பிழைப்பதற்கு வேண்டிய அவசிய மான பொருள்களை வாங்குவதற்கு உழைப்பாளிகள் நாள் ஒன்றுக்கு 5 மணி நேரம் மட்டும் வேலைசெய்தால் போதுமென வைத்துக் கொள்வோம். 5 மணி நேரம் மட்டும் அவர்கள் வேலை செய்தால் வேலைக் கேற்ற கூலி கிடைத்துவிடுகிறது; அப்போது உபரிமதிப் புக்கே இடமில்லை. ஆனால் அவர்கள் எத்தனை மணி நேரம் ஒரு நாளைக்கு வேலைசெய்ய வேண்டுமென்பதை முதலாளிகளே தீர் மானிக்கின்றனர். 5 மணி நேரத்திற்குப் பதிலாக 10 மணி நேரம் முதலாளிகள்வேலை வாங்குவதாக வைத்துக்கொள்வோம் இப்போது பிழைப்புக்கு வேண்டிய 5 மணி நேரக் கூலியை மட்டுமே தொழி லாளர் பெறுவர். எஞ்சிய 5 மணி நேர உற்பத்தியிலிருந்து கிடைக்

கும் வருவாய் முதலாளிகளுக்குச் சென்றுவிடுகிறது. இவ் வருவாயை உபரி மதிப்பென அழைக்கிருர் மார்க்ஸ்.

உபரி மதிப்பை அதிகரிப்பதற்காக முதாலாளிகள் பலவகையில் முயல்கின்றனர் என்று மார்க்ஸ் கருதுகிருர். ஒன்று, தொழிலாளிகளின் வேலே நேரந்தை அதிகரிப்பதன் வழியாக உபரிமதிப்பைப் பெருகின்றனர். ஒரு வேளை, இந்த வழிவகையே புகழ்பெற்றதாக இருந்திருக்கக் கூடுமென்பதற்குச் சான்ருக, வேலே நேரத்தை அதிகரிப்பதனுல் ஏற்படும் விளைவுகளைப் பற்றி மார்க்ஸ் பல பக்கங்களில் விளக்குகிருர். இரண்டு, பெருமளவில் இயந்தியங்களைப் புகுத்தி வேலேயாள்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் உபரிமதிப்பு பெருக்கப் படுகிறது' இறுதியாக, துரிதமாக வேலே வாங்குவதன் மூலமும் முதலாளிகள் தங்கள் உபரி மதிப்பை அதிகரிக்கின்றனர்.

மேற்கூறிய மூன்று உபாயங்களைத் தவிர, உழைப்பாளிகளின் கூலியைக் குறைப்பதன் வாயிலாகவும் உபரி மதிப்பினை அதிகரிக்கலாமென மார்க்ஸ் விளக்குகிருர். தொழிலாளிகளின் பிழைப்புக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், துணிமணிகள் ஆகியவற்றின் விலே குறைந்தால் கூலியைக் குறைக்கலாம். நவீன முறையில் சாகுபடி செய்து உணவுப் பொருள்களின் விளைச்சலே அதிகரித்தால் வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களின் விலே குறையும். அப்போது, முதலாளிகள் பிழைப்புக் கூலியைக் குறைக்க முடியுமெனக் கூறுகிருர் மார்க்ஸ். இவ்வழிவகைகளனைத்தும் முதலாளித்துவ முறை முதிர்ச்சியடையும் போது அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு, உபரி மதிப்பு உயர்ந்து கொண்டே செல்வதற்குத் துணை செய்யுமெனக் கூறுகிருர். அதோடு, ஆலேயில் தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் இடைவேளை நேரத்தைக் குறைப்பதன் வாயிலாகவும், குறைந்த கூலிக்கு உழைக்கக் கூடிய பெண்கள், சிறுவர்களை அதிகமாக வேலேக்கமர்த்துவதன் வாயிலாகவும் முதலாளிகள் தங்கள் உபரி மதிப்பை மிகுதியாகச் சம்பாதிக்கக்கூடுமென மார்க்ஸ் கருதுகிருர்.

முதாளித்துவ அமைப்பில் உபரி மதிப்புக் கொள்கையைத் தவிர்க்க முடியாததோர் அம்சமாகவே மார்க்ஸ் வாதிக்கிருர். தொழிலாளிகளைச் சுரண்டி முதலாளிகள் வாழவேண்டிய நிர்ப்பந்தம் முதலாளித்துவ அமைப்பால் ஏற்படுகிறது. எனவே, முதலாளித்துவ அமைப்பே மோசமானது என்று மார்க்ஸ் கருதிஞரேயன்றி, முதலாளிகளைக் குறை கூறியதில்லே. முதலாளிகள் தொழிலாளரைச் சுரண்டித்தான் வாழ முடியும்; இது முதலாளித்துவ அமைப்பின் சாபக்கேடு.

இந்த உபரி மதிப்புக் கொள்கையின் தன்மையைப் பலர் தவருகப் புரிந்து கொள்கின்றனர். இக் கொள்கையை விளக்கும் போது ''முதலாளிகள் தொழிலாளிகளை ஏமாற்றி, அவர்களின் கூலியைக் குறைத்து, அவர்களைச் சுரண்டி வாழ்கின்றனர்,' என்று பலர் கருதுகின்றனர்' ஆனல் மார்க்ஸ் அவ்வாறு ஒரு போதும் நினைத்ததில்லை, முதலாளிகள் கொடும் பாவிகள், பேராசைப் பித்தர்கள், கல் நெஞ்சம் கொண்டவர்கள் என்று மார்க்ஸ் என்றும் கூறியதில்லை. முதாலாளித்துவ அமைப்பைத்தான் கண்டித்தாரேயன்றி, முதலாளிகளை அவர் வெறுக்கவில்லை.

மாருத முதலும் மாறும் முதலும்

எந்த நிறுவனத்திற்கும் மாருத முதல், மாறும் முதல் என இரு வகை முதல் உண்டு என்று மார்க்ஸ் ஒப்புக்கொள்கிருர். மாருத முதல் என்பது நிறுவனத்தின் கட்டடங்கள், எந்திரங்கள், தளவாடங்கள், கருவிகள் முதலியனவற்றைக் குறிக்கும். அதாவது உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் முதற் கருவிப் பொருள்கள் அனைத்தும் மாருத முதலில் அடங்கும். உற்பத்தி செய்யப்படும்போது இதன் மதிப்பு மாருமல் நிலையாயிருப்பதால் இது மாருத முதல் எனப் படும் என்கிருர் மார்க்ஸ். மேலும், இது கடந்தகால உழைப்பின் படைப்பாதலால், உபரி மதிப்பை உண்டுபண்ண இயலாது. எந்த எந்திர தளவாடமும் குறிப்பிட்ட காலம்வரைதான் பயன்படும். சான்ருக, 10 ஆண்டுகள்தான் பயன்படும் என்று வைத்துக் கொண்டால், அந்த 10 ஆண்டுகளுக்குப் பின் புதிய எந்திர தளவாடங்கள் தேவைப்படும். அவற்றை வாங்குவதற்கு எவ்வளவு நிதி தேவையோ அதைமட்டுமே எந்திர தளவாடங்களின் பயனிலிருந்து பெறமுடியும்.

மாறும் முதல் என்பது தொழிலாளர்களுக்குக் கூலி கொடுப்பதற்கென்று ஒதுக்கப்பட்ட நிதியாகும். அவர்களின் பிழைப்புக்கு அவசியமான அளவே கூலி கிடைக்கும். ஆனல் அவர்கள் உற்பத்தி செய்யும் பண்டத்தின் மதிப்போ அதிகம். எனவே, முதலாளிகளுக்குக் கிடைக்கும் உபரி மதிப்பு மாறும் முதலிலிருந்தே கிடைக்கிறது. முதலாளிகள் எவ்வளவுக்கெவ்வளவு மாறும முதலை அதிகரிக்கின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு உபரி மதிப்பும் அதிகமாகும்.

உபரி மதிப்பு விகிதமும் இலாப விகிதமும்

மேற்கூறிய விளக்கத்தை ஆதாரமாகக் கொண்டு மார்க்ஸ் உபரி மதிப்பு விகிதத்தையும் இலாப விகிதத்தையும் கணக்கிடுகிருர். குறிப்பிட்டதோர் ஆண்டில் செலவிடப்படும் மாறும் முதலில் உபரி

மதிப்பு எத்தனை சதவிகிதம் என்பதைக் கணக்கிட்டால் உபரிமதிப்பு விகிதம் கிட்டும். மாருக, மாருத முதலும் மாறும் முதலும் சேர்ந்த மொத்த முதலில் உபரி மதிப்பு எத்தனை சதவிகிதம் என்று கணக்கிட்டால் இலாப விகிதம் கிடைக்கும்.

மாருத முதல் மாறும் முதல் என்ற பாகுபாடும் உபரிமதிப்பு விகிதம், இலாப விகிதம் என்ற வேறுபாடும் மார்க்ஸை முக்கியமானதொரு முடிவுக்கு இழுத்துச்சென்றன. அதாவது, தொழில் விரிவடையும்போது மாருத முதலே அதிகமாக்கப்படும்; எனவே, இலாப விகிதம் குறைந்துகொண்டே செல்லும். உபரி மதிப்பு விகிதமோ $\left(\frac{\text{உபரி மதிப்பு}}{\text{மாறும் முதல்}}\right)$ அதிகரிக்கலாம் அல்லது அப்படியே நிலையாயிருக்கலாம். ஆனல் இலாப விகிதம் $\left(\frac{\text{உபரி மதிப்பு}}{\text{மொத்த முதல்}}\right)$ அவசியம் குறைந்தாக வேண்டும். எனவே, தொழிலை விருத்தி செய்வது முதலாளிகளுக்கே கெடுதலை உண்டுபண்ணும் என்று மார்க்ஸ் முடிவு கட்டுகிருர். இந்த முடிவு அவர் வகுத்த சோஷியலிச வாதத்தின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று.

முதலாளிகள் தொழிலை அபிவிருத்தி செய்யும்போது மாருத முதலை அதிகரிப்பதால் உபரி மதிப்பு அதிகரிப்பதில்லை. மாறும் முதலை அதிகமாக்கினுல் உபரி மதிப்பு சுரக்கிறது. இவ்விரு முடிவுகளும் தருக்க ரீதியில் சரியானவை. ஆனல் நடைமுறையில் சிறிதும் பொருத்தமற்றவை. தொழிலதிபர்களோ இயந்திரம் போன்ற மாருத முதலையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் கனரக இயந்திரங்களைப் புகுத்துகின்றனர். அதிக இலாபத்தையும் பெறுகின்றனர். எனவே, மார்க்ஸின் கொள்கை உண்மைக்குப் புறம்பானதாகிறது. எந்தத் தொழில் நிறுவனத்தைப் பார்த்தாலும் அங்கு மாருத முதலே அதிகமாக உள்ளது. ஆனல் இலாபமோ குறைந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. எனவே, இயந்திரத்தை அதிகமாகப் பயன்படுத்தும் முதலாளி, தான் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிருன் என்று மார்க்ஸ் குறிப்பிடுவது சரியாகப்படவில்லை இயந்திரங்களால் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர் என்பது மார்க்ஸின் கருத்து. தொழிலாளர் வேலை இழப்பதற்கும் கைத் தொழில்கள் நாசமடைவதற்கும் இயந்திரங்களே காரணம் என்கிருர் மார்க்ஸ். வெளித் தோற்றத்திற்கு நன்மை பயப்பவைபோலும் உண்மையில் தீமை விளைவிக்கக்கூடியதாயும் உள்ள இயந்திரங்களை ட்ரோஜன் யுத்தத்தின்போது பயன்படுத்தப்பட்ட மரக் குதிரைக்கு ஒப்பிடலாம். ஆனல்

இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளும் சிக்கல்களும் இன்றும் விவாதத்திற்குரியவை என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும்.

வருங்காலம் பற்றிய முன்னறிவிப்பு

முதலாளித்துவ அமைப்பு எவ்வாறு தோன்றியது, எப்படிச் செயல்பட்டது என்பதை மட்டுமன்றி, வருங்காலத்தில் அது எவ்வாறு மடியும் என்பதைப் பற்றியும் மார்க்ஸ் விளக்குகிறார். வருங்காலத்தில் முதலாளித்துவ அமைப்பு எப்படிச் சீர்கெட்டு மடியும் என்பதை மார்க்ஸ் பின்வருமாறு வருணிக்கிறார்.

வர்த்தகச் சுழல்

வர்த்தகச் சுழல் என்பது முதலாளித்துவ அமைப்பின் உடலில் ஒட்டிய நோய் என்பது மார்க்ஸின் கருத்து முதலாளித்துவ அமைப்பின் வரலாற்றில் பொருளாதார நிகழ்ச்சிகள் அனைத்தும் சீராக நடைபெற இயலாது. பொருளாதார அமைப்பு சீர்கெடுவதும், சீர்படுவதும் மாறி மாறி அமைகிறது. ஒரு காலத்தில் பண்டங்களின் விலைவாசிகள் ஏறி, உற்பத்தி பெருகி, இலாபமும் மிகுதியாகிறது. இது போன்று விரைவாக வளருவதை வீக்கம் என்பர். ஓரளவு வளர்ச்சிக்குப் பின், பொருள் தேக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் தாழ்ந்து, உற்பத்தி சுருங்கி, இழப்பு ஏற்படும். இதனைப் பொருளாதார மந்தம் என்பர். இம் மந்த காலத்தில் திறமையற்ற தொழில் நிறுவனங்கள் மூடப்படும். தொழிலாளர் பலர் வேலை இழப்பர். சிறிது காலத்திற்குப் பின் விலை வாசிகள் மறுபடியும் ஏற ஆரம்பித்து, பொருளாதார வீக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறு வீக்கமும் மந்தமும் மாறி மாறித் தோன்றுவதை வர்த்தகச் சுழல் என்பர்.

இவ் வர்த்தகச் சுழலின் இயல்பையும் போக்கினையும் பற்றி மார்க்ஸ் வெளிப்படையாகக் கூறவில்லை. எனினும், அவரது நூல்களைக் கூர்ந்து படித்தால் இக் கருத்துகளை நாம் கண்டுணரலாம். முதலாளித்துவ அமைப்பில் பண்டங்களின் ஆக்க சக்திக்கும் அவற்றை வாங்கி அனுபவிக்கும் சக்திக்கும் முரண்பாடு இருப்பதாக மார்க்ஸ் சுட்டிக்காட்டுகிறார். பண்டத்தை உற்பத்தி செய்யும் முதலாளிகள் மிகப்பெரிய ஆலைகளை அமைத்துப் பெருவாரியாக உற்பத்தி செய்கின்றனர். ஆனால் அவற்றை வாங்கி நுகர்வதற்குப் பொது மக்களிடம் போதுமான வசதி இல்லை, ஏனெனில் பெரும்பாலோர் ஏழைத் தொழிலாளிகள். அவர்கள் பெறும் கூலியோ தங்கள் வயிற்றைக் கழுவத்தான் போதுமானது. இந் நிலையில் ஆக்க சக்திக்கும் நுகர்வு சக்திக்கும் முரண்பாடு ஏற்பட்டு வர்த்தகச் சுழல் தோன்றுகிறது என்கிறார் மார்க்ஸ்.

பொருளாதார மந்த காலத்தில் சிறு தொழிலதிபர்கள் நசுக்கப் படுவர். பெரும் தொழிலதிபர்கள் மட்டுமே தொழிலில் நிலைத்திருக்க முடியும் இவ்வாறு மந்தம் ஏற்படும் போதெல்லாம் போட்டியிட முடியாத சிறு தொழிலதிபர்களும் திறமையற்றோரும் தம் தொழிலை விட்டுச் சாதாரண உழைப்பாளிகள் நிலைக்கு வருவர். இவ்வாறாக, தொழிலதிபர்களின் எண்ணிக்கைக் குறைந்து சர்வாதீன நிலை ஏற்படும். சர்வாதீன நிலையிலுள்ள தொழிலதிபர்கள் தங்கள் தொழிலை விரிவுபடுத்தி மேலும் மேலும் இயந்திரங்களை அதிகமாகப் பயன்படுத்துவர். இதனால் வேலை வாய்ப்பு குறைந்து, வேலை யில்லாப் பாட்டாளிகளின் படை உருவாகும். பாட்டாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவாய் குறைந்தால் அவர்கள் மனக் கசப்படைவர். தங்களை இந் நிலைக்கு ஆளாக்கிய இயந்திரங்களை நொறுக்குவர். அவைகளைப் புகுத்திய முதலாளிகளுக்கு விரோத மாகக் கிளர்ச்சியில் ஈடுபடும் மனப்பான்மை வளரும்.

இவ்வாறு விளக்கப்படும் வர்த்தகச் சுழலின் தன்மையும் விளைவுகளும் உண்மையா என்ற கேள்வி எழுகிறது. வர்த்தகச் சுழல் எதனால் ஏற்படுகிறது என்பதற்கு முழுமையான விளக்கம் இன்றும் இல்லை. தொழிலாளரின் வறுமையால் ஏற்படுகிற தென்கிறார் மார்க்ஸ். இது ஓரளவிற்கே உண்மை.

முதல் குவிதல் கொள்கை (Principle of concentration of capital)

முதலாளித்துவ அமைப்பு முதிர்ச்சியடையும்போது சமுதாயத் தின் முதல் ஒரு சில முதலாளிகளிடம் மட்டுமே குவிந்துவிடுமென மார்க்ஸ் கூறுகிறார். வியாபார மந்தம் அடிக்கடி ஏற்படுமென முன்னர் கண்டோம். ஒவ்வொரு மந்தத்தின் போதும் சிறு முதலாளிகள் தம். தொழிலை நடத்த இயலாமல் பெரிய முதலாளி களுக்கு விற்றுவிடலாம்; அல்லது பெரிய முதலாளிகள் சிறு முதலாளிகளின் தொழிலை ஏலத்திற்குக் கொண்டு வந்து அவர்களை நொடிக்கச் செய்யலாம். எனவே, மந்தம் ஏற்படும்போதெல்லாம் சிறிய முதலாளிகள் மறைந்து பெரிய முதலாளிகள் மேலும் பெரும் முதலாளிகளாக ஆகிவிடுவர். சிறிய மீன்களைப் பெரிய மீன்கள் விழுங்குவதுபோல் சிறு முதலாளிகளைப் பெரு முதலாளிகள் தோற் கடிப்பர். கடைசியில் முதலனைத்தும் ஒரு சில முதலாளிகளிடமே குவியும். அவர்கள் ஏகபோக உரிமையாளர்களாக மாறுவர். புதிய உற்பத்தி முறைகளைப் புகுத்துவதிலும் ஈடுபடுவர். வெளி நாடுகளி லும் முதலீடு செய்வர். பண்டங்களை மலிவாகவும் திறமையாகவும் உற்பத்தி செய்வதற்கென்று மேலும் மேலும் இயந்திரங்களைப் புகுத்துவர். இதனால் வேலையில்லாதோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்லும்.

முதலாளித்துவ அமைப்பில் போட்டியே உயிர்நாடி என்று தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் கருதினர். சமமான சக்தியுள்ளவர்களிடையே இப் போட்டி நடைபெறுமென்றும் அவர்கள் கூறினர். ஆனால், போட்டி குறைந்து, மறைந்து தனி யுரிமை, ஏகபோகம் என்றெல்லாம் முதலாளித்துவத்தின் போக்கு மாறும் என்று வருங்காலத்தைப்பற்றி ஆய்ந்த பெருமை மார்க்ஸையே சேரும். அவர் கூறிய இக் கருத்து ஒரு சில நாடு களில் உண்மையாகிவிட்டது. ஜெர்மனியில் கார்ட்டெல்களும் அமெரிக்காவில் டிரஸ்டுகளும் புகழ்பெற்று, மார்க்ஸின் கூற்றை மெய்ப்பித்துவிட்டன. மார்க்ஸுக்குமுன் எவருமே முதலாளித்துவத் தின் வருங்காலத்தைப் பற்றி ஆராய்ந்ததில்லை எனக்கூறலாம். முதலாளித்துவ அமைப்பில் முதல் பெருகி ஒரு சிலரிடம் மட்டும் குவிந்துவிடுமென அவர் கூறியதில் உண்மையிருப்பினும், அவர் கூறிய முறைப்படி குவிந்துவிடவில்லை என்பதைப் பலரும் ஒப்புக் கொள்வர். கூட்டுக் கம்பெனி முறையுள்ள இந்நாளில் முதலுக் குரியவர்கள் பல ஆயிரம்பேர்; ஒரு சிலர் அல்ல. எனினும், கம்பெனியை நடத்தும் அதிகாரம் ஒரு சிலரிடம் மட்டுமே குவிந் துள்ளது. எது எவ்வாறிருப்பினும், முதலாளித்துவ அமைப்பு முதிர்ச்சியடையும்போது பல மாறுதல்கள் நடந்துகொண்டே யிருக்கும். அமைதியோ, நிலையான வாழ்க்கையோ இருக்காது என்று அவர் கூறியது உண்மையென்றே தோன்றுகிறது.

பாட்டாளிகளின் துன்ப வளர்ச்சி

முதல் ஒரு சிலரிடம் மட்டும் குவிவதால், முதலாளிகள் அம் முதலை இயந்திரங்களைப் புகுத்துவதில் செலவிடுவர் என்றும், அதனால் பலர் வேலையிழப்பர் என்றும் கண்டோம். மக்கள் தொகைப் பெருக்கத்தினால் தொழிலாளிகளின் எண்ணிக்கை ஒரு புறம் அதிகரிக்க, இயந்திரங்களைப் புகுத்துவதால் வேலையில்லா தோரின் எண்ணிக்கை மறுபுறம் அதிகரிக்கும்போது, வேலையில்லா தவரின் படையே தோன்றும். இந் நிலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த கூலியே கிட்டும். வேலை யின்றித் தவிப்போர் வறுமையில் வாடுவர்; சொல்லொணாத் துன் பத்தில் துயரப்படுவர். இந் நிலைமைக்கு ஆதாரக்கிய முதலாளித்து வத்தின்மீது வெறுப்புக்கொள்வர்; உலகமே துயரக்கடல்போல் தோன்றும். மனக்கசப்பு, புரட்சி மனப்பான்மையை அவர்கள் உள்ளத்தில் ஏற்படுத்தும். இப் புரட்சி சோஷியலிசத்தின் தோற்றத் திற்கு இன்றியமையாதது என்பது மார்க்ஸின் கொள்கை.

முதலாளித்துவத்தின் வீழ்ச்சி

முதலாளித்துவ அமைப்பிலுள்ள முரண்பாடுகள் அவ் வமைப்பையே அழித்துவிடுமென மார்க்ஸ் கூறுகிறார். வேலை

யில்லாதவர் படை பெருகிக்கொண்டே போகும்போது அவர்கள் துன்பக் கடலில் தவிப்பர். வேலை செய்வோர் தம் வயிற்றுப் பிழைப்புக்கு வேண்டிய கூலியை மட்டுமே பெறுவர். இவர்கள் அனைவரும் கடுகளவு சொத்துகூட இல்லாத பாட்டாளிகள். வறுமையில் உழலும் பாட்டாளிகளின் படை ஒருபுறமிருக்க, நாட்டின் சொத்து, பொருளாக்கச் சாதனங்களனைத்தையும் உரிமையாக்கிக்கொண்ட முதலாளிகள் மறுபுறம் இருப்பர். இவ்வாறு சமூகம் இரு கூறுகப் பிளவுபட்டு இருக்கும்போது, சகிக்க முடியாத இன்னல்களுக்குட்பட்ட பாட்டாளி வகுப்பினர் ஒன்று சேர்ந்து, முதலாளிகளுக்கு விரோதமாகக் கொதித்தெழுவர். அவர்களின் சொத்துக்களையெல்லாம் கைப்பற்றி அவற்றை நாட்டின் பொதுவுடைமையாக மாற்றுவர். முதலாளித்துவம் சரிந்துவிழும். முதலாளித்துவ அமைப்பைக் குழிதோண்டிப் புதைத்த பின்னர் சோஷியலிச சமுதாயம் உருவாகும். இது பாட்டாளிகளின் ஏகாதிபத்தியமாக மிளிரும் என்கிறுர் மார்க்ஸ்.

சமுதாயப் புரட்சி

முதலாளித்துவ அமைப்பு வீழ்ச்சியடைவதை எவரும் தவிர்க்க முடியாதென்பது மார்க்ஸின் முடிவு. ஏனெனில், முதலாளிகளே தங்களைக் குழிதோண்டிப் புதைக்கக் கூடிய சக்தி வாய்ந்த பாட்டாளிகளை உருவாக்கி வருகின்றனர். எனவே, அளவிலா இன்னல்களுக்குட்பட்ட பாட்டாளிகள் இப் பயங்கரமான புரட்சியில் ஈடுபடுவது இன்றியமையாதது. அவர்கள் நடத்தும் புரட்சியைக் கண்டு முதலாளிகள் நடுநடுங்கிக் கதிகலங்க வேண்டும் என மார்க்ஸ் கூறுவது அவரை ஒரு புரட்சியாளராகவே காட்டுகிறது. ‘உலகப் பாட்டாளி மக்களே! விழித்தெழுந்து ஒன்று சேருங்கள். நீங்கள் ஒன்று சேர்ந்து கம்யூனிசக் கட்சியில் சேருவதால், உங்கள் கால் விலங்கைத் தவிர வேறென்றையும் இழக்க வேண்டியதில்லை. உலகனைத்தையும் வெல்ல உங்களுக்கு வாய்ப்பு உண்டு’ என்ற புகழ்பெற்ற வாசகத்துடன் ‘கம்யூனிசப் பிரகடனம்’ முடிவடைவதை நோக்கும்போது மார்க்ஸ் புரட்சியை விரும்பினர் என்பதில் ஐயமில்லை. மேலும், பலாத்கார முறையிலேயே முதலாளிகள் தங்கள் சொத்தை அடைந்தனர்; அதே முறையிலேயே அச் சொத்தை அவர்கள் இழக்க வேண்டுமென மார்க்ஸ் முடிவு செய்கிறுர். ‘வாளை எடுத்து, வாளால் உயிர் வாழ்வோன், அவ்வாளாலேயே மடிவதுதான் நியாயம்’ என்ற தத்துவத்தில் அவர் நம்பிக்கை கொண்டவர். எனவே, மார்க்ஸ் புரட்சியை விரும்பினர் என்பதற்குச் சந்தேகமில்லை. இப் புரட்சி இங்கிலாந்து நாட்டிலோ அல்லது ஜெர்மனியிலோதான் முதலில் ஏற்படும் என்று மார்க்ஸ் கூறியுள்ளார். ஆனல் அவர் எதிர்பார்த்த புரட்சியோ, எதிர்பார்த்த காரணத்

திற்காக இல்லாமல், எதிர்நோக்கிய முறைப்படியுமின்றி ரஷ்யாவில் ஏற்பட்டது.

முழுமையான கம்யூனிசம்

புரட்சி முடிவடைந்தபின் என்ன நடக்குமென்பதையும் மார்க்ஸ் விவரித்துள்ளார். முதலாளிகளின் ஆதிக்கமும் ஆட்சியும் மறைந்து பாட்டாளிகளின் ஆதிக்கம் தோன்றும். தனியார் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும். எந்தவித வேறுபாடுமின்றி எல்லாரும் பாடுபடுவர். திறமைக்கேற்ற ஊதியத்தைப் பெறுவர். அதனால் ஏற்படும் வருமான ஏற்றத்தாழ்வு அதிகமாக இராது. பாட்டாளிகளின் ஆட்சியும் ஆதிக்கமும் நிலையானதல்ல. நிறைவான கம்யூனிசத்தை ஏற்படுத்துவதற்காகத் தற்காலிகமாக அமைவதே அவ்வாட்சி. அவ் வாட்சியின்போது, மக்கள் அனைவரும் முதலாளித்தவ அமைப்பின் அம்சங்களையெல்லாம் மறந்து முதலாளித்துவம் என்ருலென்ன என்பதைக் கூடத் தெரியாத அளவிற்கு நாட்டின் நன்மைக்காகப் பாடுபடுவர். நற்பண்புகளனைத்தையும் பெறுவர். வேறுபாட்டை மறப்பர்; எல்லாம் ஒழுங்காக நடைபெறும். ஒவ்வொருவரும் தத்தம் தேவைக்கேற்ப ஊதியம் பெறுவர். இந் நிலையில் சுரண்டலுக்கோ ஆதிகத்திற்கோ இடமிருக்காது. எனவே, அரசாங்கமே அவசியமில்லை என்ற நிலை ஏற்பட்டு அரசு தானாகவே மறைந்து விடும். இவ்வுலகம் சொர்க்கலோகமாகக் காட்சி யளிக்கும் என்று கற்பனையாகக் கூறுகிருர் மார்க்ஸ். இதைப்பற்றி விரிவாக ஆய்வதற்கு இங்கு அவசியமில்லை.

மதிப்புரை

மார்க்ஸைப் பலவிதமாக மதிப்பிடுவது வழக்கமாகிவிட்டது மார்க்ஸ் ஒரு பெரிய அறிவுக்கடல்; பாட்டாளிகளின் பாதுகாவலன்; நல்ல வழிகாட்டி என்று கூறுவோர் பலர். மார்க்ஸின் போதனைகள் வெறியையும் கிளர்ச்சியையும் தூண்டுபவை. எனவே, அவர் அறிவாளியல்லர்; பெரிய கலகக்காரர் என்று கூறுவோரும் உண்டு. கட்சிப் பிரச்சாரத்திற்காக மார்க்ஸைப்பற்றி வெளியாகும் நூல்களைப் படிக்காமல் அறிவியல் ரீதியில் மார்க்ஸின் நூல்களைப் படித்தால் அவரைச் சரிவரப் புரிந்து கொள்ளலாம். அவரை எவராலும் சரியாகப் புரிந்துகொள்ள இயலாது என்று வாதிப்போரும் உண்டு.

மார்க்ஸியத்தில் காணும் குறைபாடுகளைப் பலர் எடுத்துக்காட்டியிருக்கிருர்கள். உதாரணமாக, 'மார்க்ஸின் மதிப்பு, உபரி மதிப்புக்கோட்பாடுகள் பொருளாதார உண்மைகள் என்பதைவிடச் சமூக அரசியல் முழக்கங்களாகவே மதிக்கப்படுகின்றன' என்று

திரு பீர் (Beer) கூறுகின்றார். திரு லாஸ்கி கூறுவதாவது: மார்க்ஸின் மதிப்புக் கோட்பாடு 'அறிவியல் தன்மைக்கு அப்பாற்பட்டது; உண்மைக்குப் புறம்பானது! அக் கோட்பாட்டின் விளக்கம் புரியாதது மட்டுமல்ல முறையானதுமல்ல.' பொருளாதார அமைப்பே சமூக அமைப்பை நிருணயிக்கும் காரணம் என்று கூறி, வருங்கால நிகழ்ச்சிகளைப்பற்றி மார்க்ஸ் சோதிடம் கூறுவது ஆபத்தானது. வகுப்புப் போர் அவரது கொள்கைகளில் தலைமையானது. தலையிடாக்கொள்கை என்றும் நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையில் முதலாளித்துவத்தின் வருங்காலத்தைப்பற்றி வருணிக்கிறார் மார்க்ஸ். ஆனால், சமூகச் சீர்திருத்தம், தொழிலாளர் பாதுகாப்பு, கடும் போட்டிக்குத் தடையாக உள்ள சட்டதிட்டங்கள் ஆகியவற்றின் மூலம் மார்க்ஸ் வருணித்துள்ள ஆபத்துக்கள் பெரிதும் மங்கிவிட்டன. எனவே, மார்க்ஸ் வகுத்த வழியில் முதலாளித்துவம் செல்லவில்லை. அவர் கண்ட இலட்சிய சமுதாயம் எங்கும் உருவாகிவிடவில்லை. மார்க்ஸிசம் என்ற பெயரில் பல பாவங்கள் சில நாடுகளில் செய்யப்படுகின்றன. ஆனால், மார்க்ஸிசம் என்பது வேறு; லெனினிசம் வேறு, ஸ்டாலினிசம் வேறு என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். மேலும், அரசாங்கக் கட்டுப்பாடுகளின் வழியாக முதலாளித்துவ அமைப்பின் தவறுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. தொழிற்சங்கங்களின் மூலம் தொழிலாளர்கள் தங்கள் கூலியை உயர்த்தி வாழ்க்கைத்தரத்தை அதிகரித்துள்ளனர். முதலாளிகளின்மீது பகைமையுணர்ச்சி கொள்வதற்குப் பதிலாக, அவர்களைப் பின்பற்றித் தாமும் முன்னேறவேண்டுமென்ற எண்ணத்தைத் தொழிலாளர் பெற்றுள்ளனர். முதலாளிகளோடு தொழிலாளரும் சேர்ந்து நிருவாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அதிசயம் இன்று அமெரிக்காவில் மலர்ந்துவிட்டது. இதையெல்லாம் மார்க்ஸ் எதிர்பார்க்கவில்லை.

மார்க்ஸ், தனது கொள்கைகளின்மூலம் அரசியல் பொருளாதாரத்தை அரசியல் முழக்கமாக மாற்றியவர் என்று சிலர் கருதுவர். 'பாட்டாளி மக்களே! ஒன்றுசேருங்கள்' என்னும் மார்க்ஸின் அறைகூவல் புரட்சி மனப்பான்மையை உண்டுபண்ணியது. மார்க்ஸிசத் தத்துவத்தை அழிவுச் சக்தியாகக் கருதுவோரும் உளர். எனவே, மார்க்ஸியம் அறிவுக்கொவ்வாத போதனையே என்பது அவர்கள் கருத்து.

மார்க்ஸுக்கு முந்திய சோஷியலிஸ்டுகள் கனிவான உள்ளம் படைத்தவர்கள். மார்க்ஸோ, வெறுப்பு, பொருமை, எரிச்சல் ஆகியவற்றைத் தூண்டி விடுபவர். மார்க்ஸின் சோஷியலிசம் பாட்டாளிகளுக்குரிய பகட்டான சோஷியலிசமாகும். எனவே,

ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மட்டும் உரியது. முந்திய சோஷியலிசம் உயர்ந்த பரந்த நோக்க முடையது. மார்க்ஸ் புரியாத புதிராகப் பலருக்குத் தோன்றினாலும்; சோஷலிச வரலாற்றில் அவர் ஓர் உயர்ந்த சக்தியாக விளங்கினார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

மார்க்ஸின் நூல்கள் புலப்படுத்தும் உண்மைகளை யாரும் புறக்கணிக்க முடியாது; முதலாளித்துவம் முதிர்ச்சியடையும் போது போட்டி நலிந்து தனியுரிமைக் கார்ப்பரேஷன்கள் தோன்றும் என மார்க்ஸ் கூறினார். தொன்மைப் பொருளாதார மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய அறிஞர்கள் பலர் இதனை ஒப்புக்கொண்டு, பல நூல்களை எழுதியுள்ளனர். வர்த்தகச் சுழல் என்னும் நோய் முதலாளித்துவத்தின் உடன்பிறப்பு என்ற உண்மையை வலியுறுத்தியவர் மார்க்ஸ்தான். பிற்காலத்தில் தோன்றிய பேரறிஞர்கள் இப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் தந்துள்ளனர். இதனை உணர்வதற்கு வழிகாட்டியாக மார்க்ஸ் விளங்கினார் என்றால் மிகையாகாது. முதலாளித்துவம் என்பது உலகம் முடியும்வரை நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார அமைப்பு என்பது தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்து. இதனைப் பொய்ப்பித்த பெருமை மார்க்ஸுக்கு உண்டு. முதலாளித்துவ அமைப்பு மாறக்கூடிய சக்தியையும் வளரக்கூடிய வல்லமையும் பெற்றது என்று மார்க்ஸ் கூறுகிறார். எனவே, நவீன வளர்ச்சிப் பொருளாதாரத்திற்கு அடிக்கல் நாட்டியவர் மார்க்ஸ். வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முக்கியத்துவம் தந்து, அதன் விபரீத விளைவுகளை ஆராய்ந்ததன் வழியாக முதலாளித்துவ நாடுகளுக்கு எச்சரிக்கை ஒலி எழுப்பியவர் மார்க்ஸ். இன்றும் இது தீர்வு காணமுடியாத, எல்லாரின் கவனத்தையும் ஈர்க்கக்கூடிய பிரச்சினையாகவே இருக்கிறது.

மார்க்ஸ் சுயமாக எந்தக் கருத்தையும் கூறிவிடவில்லை என்று பலர் வாதிப்பர். ஒருவேளை அது உண்மையாகவும் இருக்கலாம். எனினும் அது முக்கியமானதல்ல. இசை மேதை ஒருவர் கூறுவது போல் 'தொனியைப்பற்றிக் கவலையில்லை; ஆனால் அத் தொனியைக் கொண்டு எவ்வாறு இசை அமைக்கிறோம் என்பதுதான் முக்கியம். அதேபோல் மார்க்ஸின் கருத்துகள் யாருடையது என்பது முக்கியமல்ல; அக் கருத்துகளைக் கொண்டு அவர் என்ன செய்தார் என்பதே முக்கியம். இதனை விளக்கும் முறையில். 'பல சூளைகளிலிருந்து செங்கற்களைப் பெற்ற போதிலும், அவற்றைக் கொண்டு தான் விரும்பிய கட்டடத்தைக் கட்டி முடித்த சிற்பி மார்க்ஸ்' என்று அறிஞர்கள் கருதுவர்.

உலகிலுள்ள எதுவும் நிலையானதல்ல; மாறக்கூடியது, வளரக்கூடியது என்ற கருத்தை மார்க்ஸுக்கு வழங்கியவர் ஹெகல். பிரெஞ்சு

சோஷியலிஸ்டுகளிடமிருந்து 'வர்க்கப் போர்' என்ற கருத்தைத் தெரிந்து கொண்டார். எல்லாவற்றிற்கும் மேலாக, தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கு மார்க்ஸ் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார். தொன்மைப் பொருளாதார நூல்களை எவருமே மார்க்ஸைப் போல் கற்றிருக்க முடியாது. அவருடைய ஆய்வு தொன்மைப் பொருளாதார ஆய்வின் ஒரு பகுதியே என்பதை முன்னரே கண்டோம். எனவே, மார்க்ஸ் சோஷியலிச நூலுக்கு முகவுரை எழுதினார் என்று சொல்வதைவிட, தொன்மைப் பொருளாதார நூலுக்கு முடிவுரை எழுதினார் என்று கூறுவதே மேல் எனலாம்.

அமெரிக்கப் பொருளாதார மேதை செலிக்மன் கூறுவதுபோல், 'பொருளாதார வரலாற்றில் ரிக்கார்டோவிற்கு அடுத்தபடியாக மார்க்ஸ்தான் சக்திவாய்ந்த, புகழ்பெற்ற ஞானி' அறிவியல் ரீதியில் சோஷியலிசத்தை ஆராய்ந்த பெரிய மேதை கார்ல் மார்க்ஸ் தான். ஏசுவைப்போல் மார்க்ஸும் ஒரு மதகுரு என மதிப்பிடுவோரும் உண்டு. மார்க்ஸிஸம் என்றாலே வேதம் என நம்புவோரும் உளர். மார்க்ஸின் 'முதல்' என்னும் நூல் என்றும் மங்காதது. மார்க்ஸியவாதியான லோரியா இந் நூலை உயர்வாக மதிப்பிடுகிறார் 'பிற எந்த நூலும் இதற்கு இணையாகாது; இது அதிசயமானது மட்டுமல்ல, தெய்வீகமானதும்கூட' என்று புகழ்பாடுகிறார். அதே சமயம், இந் நூலைப் பழிப்போர் 'வாழ்நாள் முழுதும் தன் சக்தியை வீணாக்கியதற்குச் சான்றாக இந் நூல் விளங்குகிறது' என்பர்.

21 நவ-மார்க்ஸிசம்

(Neo-marzifm)

மார்க்ஸிய சோஷியலிசம் உருவானபின், மார்க்ஸியக் கோட்பாடுகளைப் பலர் குறை கூறினர். ஐரோப்பாவில் பல நாடுகளில் மார்க்ஸிசத்திற்கு எதிரான பல இயக்கங்கள் தோன்றின. மார்க்சும் எஞ்சல்சும் சேர்ந்து வகுத்த சோஷியலிசப் பாதை புரட்சிகரமானது. பாட்டாளி மக்கள் ஒன்று பட்டு முதலாளித்துவ அமைப்பிலுள்ள அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டுப் பாட்டாளிகளின் அரசை உருவாக்க வேண்டுமென்பதே மார்க்ஸின் குறிக்கோள். ஆனல் புரட்சிகரமான மார்க்ஸிய சோஷியலிசத்திற்கு எதிராக, சோஷியலிசம் படிப்படியாகத் தானுகவே உருவாக வேண்டுமென விரும்பினேர் பலர். அவர்கள் காட்டிய சோஷியலிசத்தை நவ மார்க்ஸிசம் எனக் கூறுவது மரபு. ஆனல் இவ்வகைச் சோஷியலிசம் நாட்டிற்கு நாடு வெவ்வேறு பெயரால் அழைக்கப்பட்டது. ஜெர்மனியில் அது சீர்திருத்தவாத சோஷியலிசமென்றும், இங்கிலாந்தில் ஃபேபியனிசம் எனவும், பிரான்ஸில் சிண்டிகலிசம் என்றும் அழைக்கப்பட்டது. இவ்வதிகாரத்தில் இந்த மூன்று வகை சோஷிலிசமும் இடம் பெறுகின்றன.

(i) சீர்திருத்த சோஷியலிசம்

19ஆம் நூற்ருண்டின் இறுதியில் மார்க்ஸிய சோஷியலிசத்திற்கு எதிரான சோஷியலிசக் கருத்துகளை ஜெர்மானிய அறிஞர்கள் பலர் உருவாக்கினர். எட்வர்டு பெர்ன்ஸ்டீன் (Edward Bernstein) என்னும் ஜெர்மானிய அறிஞர்தான் அக் கருத்துகளை முதலில் உருவாக்கியவர். பெர்ன்ஸ்டீன் (1850-1932) எஞ்சல்ஸின் நண்பர். முதலில் புரட்சியில் தீவிர ஆர்வர் காட்டியவர் பின்னர் புரட்சி மனப்பான்மையைக் கைவிட்டு விட்டுப் படிப்படியாகச் சோஷியலிசம் உருவாக வேண்டுமென்பதில் நம்பிக்கை கொண்டார். புரட்சியாளராக இருந்த போது ஜெர்மானிய

சாங்கம் இவரை நாடு கடத்தியது. 1888-ல் லண்டனுக்குச் சென்றவர். 1809-வரை அங்கேயே தங்கிவிட்டார் 1899-ல் ''படிப்படியாக வளரும் சோஷியலிசம்'' (Evolurimary socialism) என்னும் நூலை வெளியிட்டார். 1900-ல் தாய்நாடு திரும்பிய பெர்ன்ஸ்டீன் சமூகக் குடியரசுக் கட்சியை அமைப்பதில் ஈடுபட்டார். மார்க்ஸிய சோஷியலிசவாதியான காட்ஸ்கி (Kaursky) யுடன் நீண்ட நாள்கள் வாதத்தில் ஈடுபட்டார். மார்க்ஸியக் கருத்துகளையும் கோட்பாடுகளையும் எதிர்த்து வந்த பெர்ன்ஸ்டீன் கட்சியில் சொம்பாட் (Sornbapt), குரோஸ் (Groce) ஆகியோரும் சேர்ந்தனர். சீர்திருத்த சோஷியலிச வாதத்தில் இவர்களும் பங்கு கொண்டனர்.

பெர்ன்ஸ்டீன் என்றாலே மார்க்ஸின் எதிரி என்றுதான் பொருள். மார்க்ஸிசத்தை ஒழித்துக் கட்டுவதையே குறிக்கோளாகக் கருதினார். எனினும் அவரால் அதனை ஒழித்துக்கட்ட முடியவில்லை. போரிலும் புரட்சியிலும் ஊறிய மார்க்ஸியக் கொள்கைக்கு மாறாக, மக்களுக்கு அறிவையூட்டி சோஷியலிசத்தைக் காண முயன்றவர் பெர்ன்ஸ்டீன். பாட்டாளிகளின் துயரையும் வறியோரின் இன்னலையும் சிறிது சிறிதாக நீக்கினால் படிப்படியாகச் சோஷியலிசம் தானாகவே உருவாகும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்.

மார்க்ஸியத்தின் மீது குற்றச்சாட்டு

பெர்ன்ஸ்டீனும் அவரது கொள்கையினரும் மார்க்ஸியத் தத்துவங்களைக் குறை கூறினர். மார்க்ஸியக் கோட்பாடுகளில் மையமானதாகக் கருதப்படுவது உழைப்புவாதக் கோட்பாடுதான். பண்டங்களின் மதிப்பை உழைப்பே நிருணயிக்கிறதென்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே மார்க்ஸ் தனது பொருளாதாரத்தை அமைத்தார். ஆனால் இக் கோட்பாட்டை இவர்கள் தாக்கினர். இக் கோட்பாட்டை மார்க்ஸ் கருத்தியல் ரீதியிலேயே புனைந்தார்; எனவே நடை முறைக்கொவ்வாத இக் கோட்பாட்டால் எவ்விதப் பயனுமில்லை என்றனர். அதோடு இக் கோட்பாட்டை மார்க்ஸ் கூறியவிதம் சிக்கலானதாயும் குழப்பமானதாயுமுள்ளது என்பது இவர்களது வாதம். இக் கோட்பாடு குழப்பமானதாயிருப்பதற்கு ஒரு முக்கியக் காரணம் உண்டு. கம்யூனிசப் பிரகடனத்தில் இக் கோட்பாடு இல்லை; வேறு எல்லாக் கோட்பாடுகளும் உள்ளன. எனவே, இக் கோட்பாட்டை மார்க்ஸ் பின்னர் உருவாக்கியிருக்க வேண்டுமென்பது இவர்கள் வாதம், சீர்திருத்த சோஷியலிஸ்டுகள் இறுதிநிலை வாதத்திலும், தேவை அளிப்புச் சக்திகளால் நிருணயமாகும் விலைக் கோட்பாட்டிலும் நம்பிக்கைக் கொண்டவர்கள்

எனவே, மார்க்ஸின் கோட்பாட்டைப் புறக்கணித்ததில் வியப்பொன்றுமில்லை.

முதலாளித்துவ அமைப்பில் சமுதாயம் முதலாளிகள்-பாட்டாளிகளென இரு பெரும் கூறுகளாகப் பிளவுபட்டு நிற்கிறதென்பது மார்க்ஸின் முடிவு. சீர்திருத்த சோஷியலிச வாதிகள் இம் முடிவை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். வர்க்கச் சண்டை என்பது முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே மட்டும் தோன்றுவதில்லை. முதலாளிகளுக்கிடையேயும் பிணக்கம் உண்டு. பெரிய முதலாளிகளுக்கும் சிறிய முதலாளிகளுக்குமிடையே கசப்பு மனப்பான்மை இருக்கலாம்; ஒரு தொழிலுக்கும் மற்றொரு தொழிலுக்குமிடையே பிணக்கம் இருக்கலாம். தொழிலாளிகளுக்கிடையேயும் பிணக்கம் ஏற்படுவதுண்டு; மதிமிக்கத் தொழிலாளர், சாதாரணத் தொழிலாளர் என இருவகையினரிடையேயும் மனக்கசப்பு ஏற்படலாம். எனவே, பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்குமே சண்டை வர வேண்டுமென்ற நியதி இல்லை.

தனது வர்க்கப்போர்க் கோட்பாட்டை வலுப்படுத்தும் முறையில் கார்ல் மார்க்ஸ் முதல் குவியும் கோட்பாட்டை விளக்கினர். அதாவது முதலாளித்துவ அமைப்பில் மூலதனமனைத்தும் ஒருசில முதலாளிகளிடமே குவிந்துவிடுமென்பது மார்க்ஸின் வாதம். ஆனல் நடைமுறையில் மூலதனம் ஒருசிலரிடம் மட்டும் குவிவதற்குப் பதிலாக பங்குக் கம்பெனிகளின் (Joint stock Company) வாயிலாகப் பலரிடம் பரவிவிடுவதைச் சீர்திருத்தவாதிகள் அறிந்தனர். அதேசமயம் பாட்டாளிகளின் கூலியும் உயர்ந்து அவர்களது வாழ்க்கைத்தரம் முன்னேறுவதையும் உணர்ந்தனர். எனவே, மார்க்ஸின் முதல் குவிப்புக் கோட்பாட்டையும் தாக்கினர்.

பெர்ன்ஸ்டீன், மார்க்ஸின் வரலாற்று விளக்கத்தையும் நடைமுறைக் கொவ்வாததெனப் புறக்கணித்தார். வரலாருனது பொருளாதார அடிப்படையில் மட்டும் உருவாவதில்லை என்பது பெர்ன்ஸ்டீனின் வாதம். இவ்வாருக, மார்க்ஸின் கோட்பாடுகளையெல்லாம் குறைகூறிய சீர்திருத்த வாதிகள் முதலாளித்துவத்தின் முடிவுபற்றி மார்க்ஸ் கொண்ட கோட்பாட்டையும் புறக்கணித்தனர். முதலாளித்துவ அமைப்பில் கூட்டுறவு முறையிலும் சிறிய அளவிலும் தொழில்கள் பரவலாகிய காலம் அது. இதனல் நடுத்தர வகுப்பினரின் எண்ணிக்கை அதிகரித்தது; அதோடு சமுதாயம் நிலைபேணப்படுவதற்கு நடுத்தர வகுப்பினரின் திடமான நிலை உதவியது. எனவே, முதலாளித்துவ அமைப்பு ஒழியாதென சீர்திருத்த வாதிகள் நம்பினர்.

இச் சூழ்நிலையில் பெர்ன்ஸ்டீன் தனிமனிதனின் சுதந்திரத்தில் மட்டுமன்றி, மக்களாட்சியிலும் நம்பிக்கைக்கொண்டார். சோஷிய லிச அமைப்பிற்கு மக்களாட்சியே உகந்ததென்றார். ஒருவேளை அவர் இன்று நாம் கொண்டுள்ள ஜனநாயக சோஷியலிசத்தில் நம்பிக்கை கொண்டிருந்திருக்கலாம். மக்களிடையேயுள்ள வருமான ஏற்றத்தாழ்வுகளைச் சமூகச் சீர்திருத்தங்களின் வாயிலாகமக்க ளாட்சியின் அடிப்படையில் குறைக்கமுடியுமென நினைத்தார்.

நடைமுறைக் கொள்கைகள்

மார்க்ஸ் கூறியபடி புரட்சியின் வாயிலாக சோஷியலிச சமுதா யம் உருவாக முடியாதென நம்பின சீர்திருத்தவாதிகள் சமூகச் சீர் திருத்தங்களையே தம் குறிக்கோளாகக் கொண்டனர். முதலா ளித்துவ அமைப்பிலிருந்த குற்றங்குறைகளையெல்லாம் நீக்கும் வகையில் எல்லா நாடுகளிலும் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இதைக்கண்ட பெர்ன்ஸ்டீன் சமூகச் சீர்திருத்தங் களைத் துரிதப்படுத்தும் வகையில் தொழிற்சங்கங்கள் அமைய வேண்டுமென விரும்பினார். அரசியல் நோக்கத்திற்காக அச் சங்கங்கள் பாடுபடுவது வீணான வேலையெனக் கருதினார். புரட்சியின் வாயிலாக அரசியல் அமைப்பை மாற்றினால் மட்டும் சமுதாயம் முன்னேறிவிடாது. சுய ஆட்சிக்கொள்கையின் அடிப் படையில் தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டுச் சட்டங்களின் வாயிலாகத் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்வதே சிறந்தவழி. இதற்குத்தான் தொழிற்சங்கங்கள் பாடுபடவேண்டுமென வாதாடி னார் பெர்ன்ஸ்டீன்.

இவ்வடிப்படையில் ஜெர்மானியக் குடியரசுக் கட்சியின் இலட்சியத்தை உருவாக்கினார். 'குடியாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் பொருளாதாரச் சீர்திருத்தங்களை அமுலாக்குவதன் வழியாகச் சமுதாய அமைப்பை மாற்றுவதே' குடியரசுக் கட்சி யினரின் இலட்சியமாக இருக்கவேண்டுமென்றார். பாராளுமன்றச் சட்டங்களின் வாயிலாகவே சமூக முன்னேற்றத்தை அடையவும் சமூக நலன்களைப் பெருக்கவும் விரும்பினர் சீர்திருத்தவாதிகள். பொதுமக்களுக்குப் பயன்தரும் தொழில்களனைத்தையும் மக்கள் கூட்டுறவு முறையில் நடத்தவேண்டுமென்று விரும்பினர். நிலச் சீர்திருத்தங்களின் வாயிலாகச் சிறுசிறு சொந்தப் பண்ணை முறையைக் கொண்டுவர எண்ணம் கொண்டனர். சுருக்கமாகக் கூறினால், அமைதியானமுறையில் புரட்சி ஏதுமின்றிப் படிப்படியாகச் சோஷியலிச சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதே சீர் திருத்த வாதிகளின் நோக்கமாகும்.

சீர்திருத்த சோஷியலிசத்தின் முக்கியத்துவம்

உண்மையில் சீர்திருத்தச் சோஷியலிசம் என்பது மார்க்ஸிய சோஷியலிசத்தின் மறுப்பு எனலாம். எனவே, இதனை நவ மார்க்ஸிசம் எனக் கருதலாம். நடைமுறையில் 1900 ஆம் ஆண்டு முதல் 1914 வரை மார்க்ஸிய வாதிகளுக்கும் சீர்திருத்த வாதிகளுக்குமிடையே கருத்துப் போர் மூண்டது. மார்க்ஸிய வாதிகளின் பிரதிநிதிகளாக காட்ஸ்கியும் ரோசா லக்ஸம்பர்க்கும் (Rosa Luxemburg) சீர்திருத்தவாதிகளின் பிரதிநிதியாக பெர்ன்ஸ்டீனும் வாதாடினர். இவ் வாக்குவாதம் சோஷியலிசச் சிந்தனை வரலாற்றில் முக்கியமானதாகும். இவ் வாக்குவாத அடிப்படையிலேயே ஜெர்மனியின் தொழிற்சங்கம் மார்க்ஸியப் பிரிவு, மார்க்ஸியத்திற்கு எதிரான பிரிவு, என இரண்டாகப் பிளவுபட்டது.

(ii) ஃபேபியனிசம்

(Fabianism)

ஜெர்மனியில் உருவெடுத்த சீர்திருத்த சோஷியலிசத்தைப் போன்று இங்கிலாந்தில் தோன்றிய சோஷியலிச இயக்கம் ஃபேபியனிசம் என அழைக்கப்படுகிறது. ஃபேபியன் சங்கம், 'ஃபேபியன்' என்ற சொல்லை ஏன் பயன்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. கார்த்தேஜின் (Carthage) தளபதியான ஹனிபாலை (Hannibal)த் தோற்கடிக்க ஃபேபியஸ் (Fabius) என்னும் ரோமாபுரித் தளபதி ஒரு திட்டமிட்டார். அதாவது வெளிப்படையாகப் போர் தொடுக்காமல், மறைமுகமான பல வழிவகைகளைக் கடைப்பிடித்து ஹனிபாலைத் தோற்கடிப்பதுதான் அத் திட்டம். அதேபோல் ஃபேபியன்களும் முதலாளித்துவ அமைப்பிற்கு விரோதமாகக் கிளர்ச்சியோ புரட்சியோ செய்யாமல் அமைதியான முறையில் விளம்பரங்களின் வாயிலாக அவ்வமைப்பிற்கு முடிவுகட்டிவிட்டுப் புதிய சோஷியலிச சமுதாயத்தை உருவாக்க நினைத்தனர். பெர்னார்டுஷா தான் எழுதிய 'ஃபேபியன் கட்டுரைகள்' (Fabian Essays) என்னும் நூலின் முன்னுரையில் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். 'ஃபேபியனிசம் என்பதன் முக்கியக் குறிக்கோள். நடுத்தர வகுப்பினர் கொண்டுள்ள சந்தேகங்களையெல்லாம் விளம்பரத்தின் வாயிலாக நீக்கிவிட்டு, சோஷியலிசக் கொள்கைகளைப் பரப்புவதுதான்' எனக் கூறுகிறார். எனவே, பழமையில் பற்றுள்ளோரும் புரட்சியில் அவநம்பிக்கை கொண்டோரும் தத்தம் சுதந்திரத்தை இழந்துவிடாமல் சோஷியலிச சமுதாயத்தில் வாழ வகை செய்வதே ஃபேபியனிசம் எனத் தெளிவுபடுத்துகிறார்.

ஃபேபியனிசத்தின் தோற்றம்

19ஆம் நூற்றுண்டின் இறுதியில் ஆங்கில நாட்டிலிருந்த சமூகச் சூழ்நிலைகளே ஃபேபியனிசம் தோன்றக் காரணம் எனலாம். ஆலைத் தொழிலாளர்கள் அனைவரும் நல்ல ஊதியம் பெற்று, ஓரளவிற்கு வசதியாக வாழ்ந்தனர். ஆலைச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. அதன் வாயிலாக முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தந்தனர். தொழிற்சங்கங்களும் கூட்டுறவு இயக்கமும் நன்கு வளர்ச்சியடைந்து தொழிலாளர்களின் நலனைப் பேணின. முதலாளி, தொழிலாளிகளுக்கிடையே இருந்த பிணக்கம் மறைந்துகொண்டு வந்தது. இந்நிலையில் மார்க்ஸிய சோஷியலிசத்தின் தத்துவங்களுக்கும் கொள்கைகளுக்கும் இடமில்லாமல் போயின. எனவே, லண்டனைச் சேர்ந்த எட்வர்டு பீஸ் (Edward peace), பாட்மோர் (Podmore), பெர்ஸிவல் சுப் (Prcival chubb) என்னும் மூவரும் சமூகச் சீர்திருத்தங்களைத் துரிதப்படுத்தும் எண்ணத்துடன் 1883, அக்டோபர் 24ஆம் நாள் ஃபேபியன் சங்கத்தைத் தொடங்கினர். இச் சங்கத்தின் திட்டத்தை டாக்டர் பர்ன்ஸ் கிப்சன் (Dr. Burns Gibson) தயாரித்தார். இத்திட்டத்தின் நோக்கம், மக்களின் அறியாமையை நீக்கி, நல்ல குடிமக்களாக உருவாக்குவதே.

ஃபேபியனிசத்தின் வளர்ச்சி

ஃபேபியன் சங்கம் தொடங்கப்பட்ட புதிதில் அறிஞர்கள் மட்டுமே இதில் சேரலாமென்று வரையறை செய்தனர். 1884இல் ஆங்கில நாட்டுப் பேரறிஞரான ஜார்ஜ் பெர்னார்டுஷா (George Bernard Shaw) இச் சங்கத்தில் சேர்ந்தார். அவரைத் தொடர்ந்து பல அறிஞர்கள் இதில் உறுப்பினர்களாயினர். அவர்களில் கிரஹாம் வாலஸ் (Graham Wallas) சிட்னி வெப் (Sidney Webb), சிட்னி ஆலிவர் (Sidney Oliver) குறிப்பிடத்தக்கவர்கள். ஓரிரு ஆண்டுகளில் ஆங்கில அறிஞர்கள் பலர் உறுப்பினராயினர். வரலாற்று மேதையான எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells), ராம்சே மெக்டொனல்டு (Ramsay Macdonald) திருமதி அன்னிபெஸன்ட் (Mrs. Annie Besant) ஆகியோரும் இச்சங்கத்தில் உறுப்பினர்களானர்கள். ஜி. டி. எச். கோலும் (G. D. H. Cole) இச் சங்கத்தால் கவரப்பட்டார். இவ்வாறாக, ஃபேபியன் சோஷியலிச இயக்கம் நடுத்தர வகுப்பினரைச் சேர்ந்த அறிஞர்களின் இயக்கமாய் உருவெடுத்தது.

ஃபேபியனிசம் வரலாற்று அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் மலர்ந்த சோஷியலிசமாகும். இக் கருத்தை சிட்னி வெப் அவர்களும் பெர்னர்டு ஷா அவர்களும் எழுதிய

ஃபேபியன் கட்டுரைகளில் காணலாம். இச் சங்க உறுப்பினர்கள் கட்டுரைகளும் பிரசுரங்களுமாக எழுதி வெளியிட்டனர். இக் கட்டுரைகளின் வாயிலாக நடுத்தர வகுப்பினரின் மனதைக் கவர்ந்தனர். மக்களுக்கு சோஷியலிசப் பாதையைச் சுமூகமான வழியில் காட்டவும், சோஷியலிச நன்மைகளை வலியுறுத்தவும் இக் கட்டுரைகள் உதவின. வெறும் கட்டுரைகளின் வாயிலாக மட்டும் சோஷியலிசத்தைப் பரப்பவில்லை இவர்கள். கூட்டங்களைக் கூட்டியும் மாநாட்டு ஏற்பாடுகளைச் செய்தும் சோஷியலிசக் கொள்கையைப் பரப்பினர். எனவே, ஃபேபியன் சோஷியலிசம் என்பது அரசியல் சார்பற்ற அறிவாளிகளின் சோஷியலிசமாகும்.

ஃபேபியன் சோஷியலிஸ்டுகளின் பிரச்சாரத்தின் சாரம் இது தான் : அதாவது, தொழில்களுக்குத் தேவையான மூலதனமனைத்தும் படிப்படியாக சமூகத்திற்குக் கைமாற வேண்டும்; தொழில்களனைத்தையும் சமூகமே நிருவகித்தால் நிருவாகம் திறமையானதாக இருக்கும். சமூகத்தில் இம் மாபெரும் மாறுதலை அமைதியான முறையில் செய்வதே இச் சங்கத்தின் குறிக்கோளும் கடமையுமாகும். இதற்காகத்தான் இச் சங்கத்தினர் கூட்டங்களைக் கூட்டி, கட்டுரைகளை வெளியிட்டு ஆங்கில நாட்டு மக்கள் சோஷியலிச அமைப்பில் அக்கறைக் கொள்ளும்படிச் செய்தனர். பாராளுமன்றத் தேர்தலில் சோஷியலிஸ்டுகளுக்கே ஆதரவுதருமாறு வாக்காளர்களைத் தூண்டினர். தனி நபர்களின் சொத்துக்களனைத்தும் பொது மக்களின் சொத்துக்களாக மாறவேண்டும், மாறமுடியுமென நம்பிக்கை கொண்டனர் ஃபேபியன் சோஷியலிஸ்டுகள்.

ஃபேபியன் சங்கம் வரிசைப்படுத்தி வெளியிட்ட கட்டுரைகளிலெல்லாம் எழுபதாவது எண்ணுள்ள கட்டுரையே முக்கியமானதெனலாம். இதில்தான் இச் சங்கத்தின் குறிக்கோளும் கடமையும் முறையாக விளக்கப்பட்டுள்ளன. சோஷியலிச வாதிகளையே பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து குடியாட்சித் தத்துவத்தின் வழியாகவே சோஷியலிசச் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதே இக் கட்டுரையின் சாரம். உழைப்பாளிக்குக் கூலி கொடுக்கும் முறையை ஒழிக்க வேண்டுமென இச் சங்கத்தினர் நினைக்கவில்லை. மாறாக, அவர்களுக்கு வேண்டிய அளவு படிதர வேண்டுமென வற்புறுத்தினர்.

ஜி. டி. எச். கோல் நுட்பமான ஆய்வுத்திறன் கொண்டவர். எனவே, சோஷியலிச சம்பந்தமான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இவ்வாராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக 'புதிய ஃபேபியன் ஆராய்ச்சிக் குழு'வை ஃபேபியன் சங்கத்தினர் தொடங்கினர். இக் குழு 1932 முதல் 1934 வரை சுமார் 42 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டது.

ஃபேபியன் சங்கம் இங்கிலாந்தின் தொழிலாளர் கட்சி தோன்றுவதற்குப் பெருந்துணை செய்துள்ளதென்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். அதோடு, இச் சங்கம் தோற்றுவித்த பல அமைப்புகளிலும் நிறுவனங்களிலும் முக்கியமானதாகக் குறிப்பிடத் தக்கது 1940-ல் தோன்றிய "ஃபேபியன் பன்னாட்டுக் குழு" (Fabian International Bureau). இக் குழுவின் நோக்கங்கள் மூன்று : (1) பன்னாட்டுப் பிரச்சினைகளைப் பற்றி ஆய்வது, (2) பல நாட்டவர்கள் நேரடியாகத் தொடர்புகொண்டு வாதிப்பது. இதன் வாயிலாக சோஷியலிச வாதிகளின் கூட்டுறவை ஏற்படுத்துவது. (3) உலக விவகாரங்களில் சோஷியலிசக் கொள்கை செல்வாக்கு அடையுமாறு செய்வது.

ஃபேபியன் சோஷியலிசம் அரசியல் சார்பற்ற அறிஞர்கள் சோஷியலிசம் என்பதை முன்னரே குறிப்பிட்டோம் அரசியல் சார்பற்றதெனினும், ஃபேபியன் அங்கத்தினர்கள் தனிப்பட்ட முறையில் அரசியல், சமூக வாழ்க்கையில் ஈடுபடலாம். ஃபேபியன் தத்துவங்களை அப்படியே எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டு மென்ற நியதியுமில்லை. உறுப்பினர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படலாம். இதையெல்லாம் ஃபேபியன் சங்கம் அனுமதித்தது.

ஃபேபியன் சோஷியலிசப் பொருளாதாரம்

ஃபேபியின் சோஷியலிசப் பொருளாதாரக் கோட்பாடுகளைப் புனைந்தவர்களில் பெர்னார்டுஷாவும் சிட்னி வெப்பும் முக்கிய மானவர்கள். சிட்னி வெப் மார்க்ஸின் உழைப்பு மதிப்புக் கோட் பாட்டைப் புறக்கணித்தார். உற்பத்திச் சாதனங்களனைத்தும் சமு தாயத்திற்கே சொந்தமானவையாக வேண்டுமென வலியுறுத் தினர். ரிக்கார்டோவின் குத்தகைக் கோட்பாட்டை ஆதார மாகக் கொண்டு, குத்தகை அனைத்தையும் அரசாங்கமே பறித்துக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தினர். நிலச்சுவான்தார்கள் மட்டும் குத்தகை பெற்று அனுபவிப்பது சமூக நீதியெனக் கருதினர். இதே போல் முதலாளிகள் வட்டி வாங்குவதும் அநீதியெனக் கருதிய சிட்னி வெப் அதையும் அரசாங்கம் பறிமுதல் செய்ய வேண்டுமென்றார், நிலத்திற்கான குத்தகை எவ்வாறு இறுதி நிலை நிலத்தின் விளைச்சலுக்கும் அதிகமானதாகக் கருதப்படுகிறதோ, அதேபோல் இறுதி நிலை மூலதனம் அளிக்கும் உற்பத்தியாக்கத்தை விட அதிக உற்பத்தியே வட்டியாகுமென வாதித்தனர் ஃபேபியின்கள். இறுதிநிலைத் தொழிலாளியின் உற்பத்தி ஆக்கத்தை விட அதிக உற்பத்தித்திறன் கொண்ட உழைப்பாளி தன் திறமைக் காகத்தான் அதிகக் கூலியைப் பெறுகிறான். உழைப்பாளி களிடையே திறமை வேறுபாடு தோன்றக் காரணம் அவர்களின்

சூழ்நிலைதான். வசதியான குடும்பத்தில் பிறந்தவர்கள் கல்வியும் பயிற்சியும் பெற முடிகிறது; ஆனால், ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்களுக்குப் படிக்க வசதி இல்லை. எனவே, தொழிலாளரின் திறமைகூட சொத்துரிமையின் அடிப்படையில் தான் எழுகின்றது என வாதித்தனர். எனவே, இவ்வாறு எழும் வருமான ஏற்றத்தாழ்வைக் குறைக்க வேண்டுமாயின் அதிக வருவாய் பெறும் மக்களின் உபரி வருவாயை அரசாங்கம் பறிமுதல் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால்தான் தனியார் சொத்துக்களனைத்தும் சமூகச் சொத்துக்களாக மாறுமெனக் கருதினர் ஃபேபியன்கள்.

மேலும், பொதுப் பயன் தொழில்களனைத்தையும் அரசே ஏற்று நடத்த வேண்டும். தனியார் நடத்தும் இதரத் தொழில்களைக் கூட அரசாங்கம் ஒழுங்குபடுத்தவேண்டும். ஃபேபியன்களின் இக் கொள்கையை நோக்கும்போது ஜெர்மனியில் வாழ்ந்த அரசுசார் சோஷியலிசக் கொள்கையே நம் நினைவுக்கு வருகிறது.

ஃபேபியன் சோஷியலிசப் பண்புகள்

வருங்காலத்தில் சமுதாயம் சுபிட்சமடையவேண்டுமென விரும்பும் அனைவரும் பாராளுமன்ற முறையில் கொண்டுவரப்படும் சீர்திருத்த முறையில்தான் நம்பிக்கை கொள்வர் என்பது ஃபேபியன்களின் கருத்து. அவ்வாறு சமூகம் மாறுதல் அடையவேண்டுமாயின் புரட்சியில் ஈடுபடாமல் படிப்படியாகத்தான் மாறும் என்றும் நம்பினர். அச் சமுதாய மாற்றத்தை எவரும் இயல்பிற்குப் புறம்பானதாகக் கருதக் கூடாது.

புருதான் என்னும் சோஷியலிசவாதியைப்போல் பெர்னார்டு ஷாவும் 'சொத்து என்றாலே களவுதான் என்று பொருள்' என நம்பினார். எனினும், புரட்சியின் வாயிலாகச் சொத்துரிமையை முறியடிக்க விரும்பவில்லை. சொத்திலிருந்து கிடைக்கும் வருவாயை ஒரேயடியாக அரசாங்கம் பறிக்காமல் கொஞ்சம் கொஞ்சமாகப் பறிமுதல் செய்ய வேண்டுமென்றார். ஷாவின் இக் கொள்கை அமெரிக்கப் பொருளாதார அறிஞரான ஹென்றி ஜார்ஜின் கொள்கையை நினைவுபடுத்துகிறது. சொத்து வைத்திருப்போர் அதிக வருவாய் பெற வேண்டுமென்று குறைந்த கூலி கொடுப்பதையும் கூலியாள்களுக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்துவதையும் ஷா வெறுத்தார்.

செல்வந்தர்கள் வாழ்வது நாட்டுக்குக் கேடு என்பது ஷாவின் கருத்து. ஏனெனில், செல்வம் பெருகப் பெருக அவர்கள் ஆடம்பர

வாழ்க்கையில் மோகம் கொள்வர்; மாருக, ஏழைகள் வறுமையில் உழல்வர். எனவே, வருமான ஏற்றத்தாழ்வைப் படிப்படியாகச் சமூகமான வழியில் நீக்குவதே சோஷியலிசத்தின் கொள்கையாக இருக்க வேண்டுமென்பது ஷாவின் கருத்து முதலாளித்துவ அமைப்பில் ஒரு வகுப்பினர் வேலை செய்வதும் மற்ருெரு வகுப்பினர் வேலையின்றி உல்லாச வாழ்க்கை நடத்துவதும் அநீதியாகுமென ஷா கூறுகிருர். எனவே, எல்லாருக்கும் சமமான வருவாய் கிடைக்கும்படிச் செய்வது சோஷியலிசத்தின் கடமையாகும். இதனைச் செய்யவேண்டுமானல் எல்லாருக்கும் நல்ல வாழ்க்கைத் தரம் கிடைக்கும் வகையில் உற்பத்தியை ஒழுங்குபடுத்தவேண்டும். கடினமாக உழைப்பவர்களுக்கு உற்சாகம் கொடுத்தால்தான் உற்பத்தி அதிகமாகும். இவ்வாறு ஷா அவர்கள் வாதாடினுர்கள்.

ஃபேபியன் சோஷியலிசம் இரண்டாவது உலகப்போரின் போது இங்கிலாந்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. யுத்தத்தின் போது பொருள் உற்பத்தியிலும் விநியோகத்திலும் கட்டுப்பாடு அவசியமென்பதை வலியுறுத்தினர். வருமான வரி உயர்விகிதத்தில் இருக்கவேண்டுமெனக் கோரினர். சுரங்கத்தொழில், தபால், ரயில்வே, கப்பல் போக்குவரத்து ஆகிய தொழில்களைத் தேசியமய மாக்கவேண்டுமெனக் கருதினர். முதலாளிகள் அனைவரும் தங்க ளிடமுள்ள சொத்துக்களை அரசாங்கத்திடம் பதிவு செய்யவேண்டு மென்றனர். உழைக்கத் தகுதியுடைய ஒவ்வொருவரும் சமூக நன்மையைக் கருதி உழைக்க முன்வரவேண்டுமென்பது அவர் களின் முக்கியக் கோரிக்கை

ஃபேபியன் சோஷியலிசமும் மார்க்ஸிசமும்

மார்க்ஸிய சோஷியலிசம் வர்க்கப்போரின் அடிப்படையில் உருவானது என்பதை முன்னரே கண்டோம். ஆனல் ஃபேபிய னிசமோ மக்களின் சம உரிமையிலும் குடியாட்சித் தத்துவத்திலும் ஊறியது. இதனை வலியுறுத்தும் வகையில் சிட்னி வெப் கூறுவதா வது. 'அரசியலமைப்பில் குடியாட்சி இலட்சியமாயிருப்பதைப் போல பொருளாதார அமைப்பில் ஜனநாயக சோஷியலிசமே இலட்சியம்.' இனவெறியை வெறுத்த ஃபேபியன்கள் பொது நலனில் அக்கறை கொண்டவர்கள். எல்லா இனத்தவருக்கும் சம உரிமையும் சம வாய்ப்பும் கிடைக்கவேண்டுமெனக் கோரினர். மார்க்ஸியக் கொள்கைப்படி சோஷியலிசம் பாட்டாளி மக்களுக்கே நலன் அளிப்பதாய் அமைகிறது; ஆனல் எல்லாரும் நன்மை யடையவேண்டுமென்பதே ஃபேபியனிசத்தின் கொள்கை. பாட்டாளிகளின் புரட்சியே மார்க்ஸிய சோஷியலிசத்திற்கு வழி.

மாருக, ஃபேபியனிசமோ படிப்படியாக மெதுவாக, அதுவும் அறிவின் வழியில் சோஷியலிசத்தை அடையவேண்டுமென்பது. முதலாளிகள் அனைவரும் தன்னலத்திற்காகத் தொழில் நடத்தாமல் பொதுநலத்திற்காகப் பாடுபடவேண்டுமென வலியுறுத்துகிறது ஃபேபியனிசம். அதே சமயம் அரசாங்கம் எல்லாருக்கும் பாதுகாப் பளிக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது.

மார்க்ஸிய சோஷியலிசம் பொருளாதார அடிப்படையில் தரப் படும் வரலாற்று விளக்கத்தில் உருவானது. ஆனால் சமுதாயப் புனரமைப்பில் நம்பிக்கை கொண்ட ஃபேபியனிசம் நெறிவழியில் வீறுநடை போடுகிறது. மார்க்ஸியவாதிகள் அனைவரும் ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். எனவே, மார்க்ஸிசம் அரசியல் சார்புடையது. மாருக, ஃபேபியன் சோஷிய லிஸ்டுகளோ ஒரே கட்சியினரல்லர்; எந்தக் கட்சியின் கொள்கை யையும் அவர்கள் பின்பற்றலாம். எனவே, இது அரசியல் சார் பற்றது.

மார்க்ஸிய சோஷியலிசம் 'ஒரு சிலரிடமே செல்வம் குவிவதே முதலாளித்துவ அமைப்பின் போக்கு; எனவே முதலாளித் துவம் ஒழிந்து அதற்குப் பதிலாகச் சோஷியலிசச் சமுதாயம் உருவாக வேண்டும்' என்கிறது. ஆனால் ஃபேபியன்களோ முதலாளித்துவ அமைப்பிலுள்ள ஏற்றத் தாழ்வைக் குறைத்து விட்டால் சோஷியலிசம் தானாகவே மலர்ந்துவிடுமென்கின்றனர். அவ்வாறு சோஷியலிசம் மலர்வதற்குவளர்விகித வரிக்கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும். அதோடு சோஷியலிச அமைப்பு உருவாவதற்கு வேண்டிய சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவர வேண்டும். தொழிற்சங்கங்கள் பரவவேண்டும். கூட்டுறவு இயக்கம் வளரவேண்டும்; பல தொழில்கள் தேசியமய மாக வேண்டும். இவையே ஃபேபியன்களின் கொள்கைகள். கடந்த நூற்றுண்டில் பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சி ஃபேபியன்கள் வகுத்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண் டது என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

ஃபேபியன் சோஷியலிஸ்டுகள் அறிவியல் ரீதியில் புதிய பொரு ளாதாரக் கோட்பாடு எதையும் புனையவில்லை. நாட்டின் பொருளா தார வாழ்க்கை முழுவதும் அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்டதாக இருக்க வேண்டுமென்பதே அவர்களது இலட்சியம். எனவே, ஜெர்மனியில் தோன்றிய அரசுசார் சோஷியலிசத்தின் பிரதிபலிப்பே ஃபேபியனிசம் என்று சிலர் கருதுவர். இறுதி நிலை வாத

அடிப்படையில் உருவானதே ஃபேபியன் சோஷியலிசம் எனக் கருதுவோரும் உளர். தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட வகுப்பினரின் நலனை நோக்கித் தொன்மைப் பொருளாதாரம் நடை போட்டதென்றால், எல்லாருடைய நன்மையையும் கருதி பொதுநல அடிப்படையில் எழுந்ததே ஃபேபியனிசம் எனலாம்.

(iii) சிண்டிக்கலிசம்
(Syndicalism)

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொழிற் சங்கங்களின் வாயிலாகச் சோஷியலிசத்தை உருவாக்க முடியுமெனப் பிரெஞ்சு அறிஞர்கள் பலர் கருதினர். இவ்வகை சோஷியலிசமே சிண்டிக்கலிசம் என அழைக்கப்படுகிறது. பிரெஞ்சு மொழியில் 'சிண்டிகேட்' என்ற சொல் தொழிற்சங்கத்தையே உணர்த்தும். எனவே, தொழிற் சங்கங்கள் புரட்சி செய்து உருவாக்கும் சோஷியலிசமே சிண்டிக்கலிசம் எனக் கருதப்படுகிறது. இக் கொள்கையோடுதான் 1895-ல் பிரான்ஸ் நாட்டில் 'உழைப்பாளிகளின் பொதுக் கூட்டமைப்பு' (General Confederation of Labour) என்னும் மிகப்பெரியதொரு சிண்டிகேட் ஆரம்பிக்கப்பட்டது. சிண்டிக்கலிசம் அரசியல் சார்பற்றதெனினும் புரட்சித் தன்மை வாய்ந்தது. பொது வேலை நிறுத்தம் என்னும் பயங்கரமான ஆயுதத்தைப் பயன்படுத்தி தொழிற்சங்கங்கள் சிண்டிக்கலிசத்தை உருவாக்க முடியுமென நம்பினர் சிலர். அவர்களில் ஜார்ஜ் சொரல் (George Soral), பெர்டினன்ட் பொலந்திர் (Ferdinand Pollentier) ஆகிய இருவரும் முக்கியமானவர்கள்.

சிண்டிக்கலிசம் தோன்றக் காரணங்கள்

பிரான்ஸில் தோன்றிய சிண்டிக்கலிசத்திற்கு அடிப்படைக் காரணங்கள் இரண்டு: ஒன்று, பிரெஞ்சு மக்கள் தனி மனிதனின் சுதந்திரத்தில் கொண்டிருந்த அளவற்ற பற்றுதல்; இரண்டு, பிரான்ஸ் நாட்டவர் அரசின்மீது கொண்ட நம்பிக்கையின்மை. 18, 19ஆம் நூற்றாண்டுகளின் பிரெஞ்சு நாட்டு வரலாறே புரட்சியில்தான் அடங்கியிருந்தது. மார்க்ஸியக் கொள்கையையும் பொதுவுடைமைக் கோட்பாட்டையும் அந் நாட்டவர் வெறுத்தனர். காரணம் அவர்கள் அனைவருமே மனிதனின் முழுச் சுதந்திரத்தில் ஊறியவர்கள். அவர்களின் மனப்போக்கு தன்னிச்சையையே பிரதிபலிக்கும்

பிரான்ஸில் அமைக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் அனைத்தும் சிறியவை. எனவே, தொழிற்சங்கங்களுக்குப்போதுமான நிதி வசதியில்லை. எனவே, தொழிற்சங்கங்களுக்கிருந்த ஒரே ஆயுதம் பொது வேலை நிறுத்தமே. பொது வேலை நிறுத்தத்தையே தனது தத்துவமாக ஏற்றுக்கொண்டது தொழிலாளர்களின் பொதுக் கூட்டமைப்பு.

சிண்டிக்கலிசம் தோன்றப் பிறிதொரு காரணம், பிரான்சு நாட்டவர் அரசின்மீது கொண்டிருந்த வெறுப்பும் அரசேவேண்டியதில்லை என்ற எண்ணமும்தான். பிரான்சு நாட்டுச் சிந்தனை வரலாற்றில் புருதான் போன்ற எத்தனையோ அறிஞர்கள் அரசே இருக்கக்கூடாதென வாதித்தனர். அதிகாரவர்க்கத்தின்மீது வெறுப்புக்கொண்ட இவர்கள் அதிகாரவர்க்கத்தையே அடிப்படையாகக் கொண்ட அரசை நிந்தித்ததில் வியப்பொன்றுமில்லை. அரசு என்பது இயல்பான அமைப்பல்ல என்பது இவர்களது வாதம். ஆனால் சமுதாயமோ இயல்பாகவும் தானாகவும் வளர்ந்ததோர் அமைப்பாகும். இயல்பான அமைப்பைக் கொண்ட சமுதாயத்திற்கு இயல்பற்ற அரசு ஒவ்வாதென்றனர். எனவே, அரசை ஒழிக்க வேண்டுமென விரும்பினர். அரசு என்றாலே ஏதாவதொரு வகுப்பினரின் நலனில்தான் அக்கறை காட்டும் என்பது இவர்களது விளக்கம். அரசாங்கத்தை ஒழித்துவிட்டு, இயல்பான முறையில் சமுதாயத்தினர் பல சங்கங்களை அமைத்து, தங்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து பகிர்ந்துகொள்ளவேண்டுமென்றனர். சமுதாயத்தில் அமைக்கப்படும் சங்கங்கள் 'நல்லெண்ணம்', 'உறுதி', ஒருவருக்கொருவர் உதவி' என்னும் மூன்று தத்துவங்களைக் கொண்டிருக்க வேண்டும். பொருள் உற்பத்திக்கென்று தனிச் சங்கங்களும் பொருள் விநியோகத்திற்குத் தனிச் சங்கங்களும் இருக்க வேண்டும். சான்றாக, விவசாயப் பொருள்கள், கைத்திறன் பொருள்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யத் தனிச் சங்கங்களும் மக்களுக்கு வேண்டிய பிற பணிகளைச் செய்வதற்குத் தனிச் சங்கமும் இருக்கவேண்டும். இதேபோல் சமுதாயத்திற்குத் தேவைப்படும் உணவுப் பொருள்கள், வீட்டு வசதிகள், மின்சாரம் முதலியவற்றை விநியோகம் செய்வதற்குத் தனிக் கூட்டுறவு சங்கங்கள் அமைய வேண்டும். இவ்வாறு அரசாங்கத்திற்குப் பதிலாகப் பல்வேறு சங்கங்கள் அமைந்துவிட்டால் அவையனைத்தும் ஒன்றுக்கொன்று போட்டியின்றி, ஒன்றையொன்று கலந்து ஆலோசித்துத் தத்தம் பணிகளைச் சுமுகமாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் எந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளும் நாட்டில் தோன்றாது என்பதை அரசியலற்ற நிலையை விரும்பினோர் கூறினர். இந் நிலை உருவாக வேண்டுமாயின், அரசைமட்டும் ஒழித்துக்கட்டினால்

போதாது; தனியார் சொத்துரிமையையும் ஒழிக்க வேண்டும். இவ்விரண்டையும் ஒழித்துக்கட்ட புரட்சி தேவை என்று வாதித்தனர். இந்த வாதத்தின் அடிப்படையில் தோன்றியதே சிண்டிக்கலிசம்.

சிண்டிக்கலிச அமைப்பு தொழிற்சங்கத்தை ஆதாரமாகக் கொண்டது என்பதை முன்னரே கண்டோம். எனவே, வருங்காலப் புதிய சமுதாயத்தின் வளர்ச்சியே தொழிற் சங்கத்தின் கையில்தான் இருக்கிறதென வலியுறுத்தினர் சிண்டிக்கலிஸ்டுகள். தொழிற் சங்கங்களின் தொழிலாளிகள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்கலாம்; அரசியல்வாதிகளுக்கும் அறிஞர்களுக்கும் அதில் இடமில்லை. தொழிலாளிகள்மட்டும் இருந்தால்தான், அனைவரும் தொழிலாளிகள் என்ற உணர்ச்சி ஏற்படும்; அவ்வுணர்ச்சி இருந்தால் அவர்களுள் ஒற்றுமை தோன்றும். ஒற்றுமை இருந்தால்தான் முதலாளித்துவ அமைப்பை எதிர்த்துப் போராட முடியும். எனவே, சிண்டிக்கலிசம் என்பது புரட்சிகரமான தொழிற்சங்க அமைப்பைக் கொண்டது என்பது வெளிப்படை. முதலாளிகளுக்கு எதிராகப் பாட்டாளிகள் தொடுக்கும் யுத்தமே சிண்டிக்கலிசத்தின் தொடக்கமும் முடிவுமாகும். எனவே, இந்த முதலாளி—பாட்டாளி என்ற பகைமையுணர்வு நாளுக்கு நாள் வளர வேண்டும். முதலாளிகள் — பாட்டாளிகள் என்ற இரு வகுப்பினரின் உணர்ச்சி, எண்ணம், செயல்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. முன்னேற விரும்பும் பாட்டாளி இனத்தவர் முதலாளிகளைப் பகைவர்களாகவே கருத வேண்டும்.

சிண்டிக்கலிஸ்டுகள் எக் காரணத்தைக் கொண்டும் அரசை நம்பக் கூடாது. ஏனெனில் அரசு எப்போதும் முதலாளிகளின் சார்பாகவே இருக்கும். எனவே அரசை ஒழித்துக் கட்டுவதும் அவர்களது குறிக்கோள். எதையும் நேரடியாகச் செய்யும் துணிவு வேண்டும். அடிதடி, சண்டை சச்சரவு, கலகம் ஆகியவற்றில் ஈடுபட்டால்தான் காட்டுமிராண்டித்தனமான முதலாளித்துவ அமைப்பை ஒழித்துக்கட்டி நாகரிக சிண்டிக்கலிச அமைப்பை உருவாக்க முடியும். தொழிலாளிகள் செய்யும் கலகத்திற்கு அவர்களுக்கு ஆயுதம் தேவை; பொது வேலை நிறுத்தமே சக்தி வாய்ந்த ஆயுதமென சிண்டிக்கலிஸ்டுகள் கருதினர். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற இதனைக் காட்டிலும் சிறந்த வழியில்லை வேலை நிறுத்தம் செய்தால் தான் உற்பத்தி தடைப்பட்டுப் பல சிக்கல்கள் தோன்றும்; வேலை நிறுத்தம் வெற்றியடைந்து விட்டால் நாடே குட்டிச் சுவராகி விடும்; முதலாளித்துவ அமைப்பும் மறைந்து விடுமெனக் கருதினர் பல சிண்டிக்கலிஸ்டுகள். ஆனால்

சிண்டிக்கலிஸ்டுகளின் தலைவரான சோரல் (Sorel) வேலை நிறுத்தம் வெற்றி பெறுமா என்பதில் ஐயம் கொண்டவர்; எனினும் வேலை நிறுத்தம் ஒன்றே வழி, வேறு வழி இல்லை என்று நம்பினார். வேலை நிறுத்தம் என்றாலே முதலாளிகள் கதி கலங்கி விடுவர்; வேலை நிறுத்தம் செய்யாமலிருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய முன்வருவர் என்பது சோரலின் நம்பிக்கை' எனவே, பொது வேலை நிறுத்தம் முதளாளிகளின் உள்ளத்தை மாற்றக் கூடிய திறனுடையது என்று சிண்டிக்கலிஸ்டுகள் நம்பினர். நாட்டிலுள்ள எல்லாத் தொழிலாளிகளும் ஒன்று சேர்ந்து ஒரே சமயத்தில் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்பதே சிண்டிக்கலிஸ்டுகளின் திட்டம்.

சிண்டிக்கலிசமும் மார்க்ஸிசமும்

சிண்டிக்கலிசத்தின் இயல்புகளிலிருந்து அதற்கும் மார்க்ஸிசத்திற்குமுள்ள பல ஒற்றுமை, வேற்றுமைகளை எளிதாக அறிந்து கொள்ள முடியும். பிரான்ஸில் தோன்றிய சிண்டிக்கலிசம் மார்க்ஸிசத்தின் மறு பிறப்பு என்று சிலர் கருதுவர். எனவே, முதலில் இவ்விரண்டிற்குமுள்ள பொதுக் குணங்களைக் கவனிப்போம். 1) இரண்டுமே தத்தம் குறிக்கோளை அடையும் வழி புரட்சி ஒன்று தான் என்கின்றன. சிண்டிக்கலிசத்தின் பொது வேலை நிறுத்தத்தைப் பொருளாதாரப் புரட்சி எனலாம்; மார்க்ஸியப் புரட்சி அரசியல் புரட்சியாகும். 2) இரண்டுமே பாட்டாளிகளின் இயக்கங்கள். 3) அரசு ஒழிய வேண்டுமென்பதும், முதலாளித்துவ அமைப்பு ஒழிக்கப்பட வேண்டுமென்பதும் இரண்டிற்கும் பொதுவான தத்துவங்கள். 4) இரண்டுமே வர்க்கப் போரின் கருத்தை ஆதாரமாகக் கொண்டவை. 5) பாட்டாளிகள் ஒன்று பட்டு நேரடியாகவே புரட்சியில் ஈடுபட வேண்டுமென்பதை இரண்டுமே வலியுறுத்துகின்றன.

இருந்த போதிலும் இவ்விருவகைச் சோஷியலிச அமைப்புக்களிலும் பல வேறுபாடுகள் உள்ளன என்பதை மறந்து விடக் கூடாது' 1) மார்க்ஸியத் தத்துவப்படி அரசியல் புரட்சி தவிர்க்கப் பட முடியாததொன்று. என்வே அரசியல் விழிப்புணர்ச்சியையும் அரசியல் நட வடிக்கைகளையும் அது வலியுறுத்துகிறது. சிண்டிக்கலிசமோ அரசியல் நடவடிக்கைகளைப் புறக்கணிக்கும் இயக்கமாகும். 2) மார்க்ஸிஸக் கொள்கை வரலாற்று விளக்க அடிப்படையில் உருவானது. சிண்டிக்கலிசமோ சமத்துவம் என்ற நெறி வழியின் அடிப்படையில் உருவான புரட்சியை வலியுறுத்துகிறது. 3) சிண்டிக்கலிசம் பயன்படுத்தும் ஆயுதம் பொது வேலை நிறுத்தம் எனப்படும் மாயையாகும். மார்க்ஸ் வேலை நிறுத்த மந்திரத்தில்

நம்பிக்கையற்றவர். (4) சிண்டிக்கலிசத் தத்துவத்தின்படி எவ்வித அரசியலமைப்பும் இருக்கக்கூடாது. ஆனால் மார்க்ஸ், பாட்டாளிகளின் அரசை உறவாக்குவதில் ஆர்வம் காட்டினார். கம்யூனிசம் முதிர்ச்சியடைந்த பின்னரே. எவ்விதப் பயனுமில்லாததாய், அரசு மறைந்து விடும் என்கிறார்.) தனிமனிதனின் சுதந்திரத்தில் அளவு கடந்த மோகம் கொண்டது சிண்டிக்கலிசம். ஆனால் மார்க்ஸ் சுதந்திரத்தில் நம்பிக்கையற்றவர். பொருளாதாரத் துறையில் கூட்டமைப்பை வலியுறுத்தியவர்.

சிண்டிக்கலிசம் அறிவுக்கொவ்வாத, அறிவுக்கு மாறான இயக்கம் எனக் கருதப்படுகிறது. அரசுசார் சோஷியலிசத்தையும் குடியரசையும் வெறுத்து, பாட்டாளிகள் நேரடியாகவே போராட வேண்டுமென்பதே சிண்டிக்கலிசத்தின் தத்துவம். எனவே பிரெஞ்சு நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் இரண்டாகப் பிளவுபட்டுள்ளன. சிண்டிக்கலிச வாதிகள், மார்க்ஸிய வாதிகள் என்று தொழிலாளர்கள் பிளவுபட்டுள்ளனர். இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் சிண்டிக்கலிச வாதிகளின் செல்வாக்கு மங்கிக் கொண்டே வருகிறது. மார்க்ஸிய வாதிகளே அதிக செல்வாக்குடையவர்களாக வளர்ந்துள்ளனர்.

இருந்த போதிலும், பாராளுமன்ற நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்ட சோஷியலிசத்திற்குப் போட்டியாக சிண்டிக்லிசம் மலர்ந்தது என்பதைப் புறக்கணிக்கக்கூடாது. பிரான்ஸ் நாட்டில் தோன்றிய சிண்டிக்கலிசத்தின் பிரதிபலிப்பாக ஆங்கில நாட்டில் கில்டு சோஷியலிசம் (Guitd Socialism) உருவாகியது. அதோடு, ஸ்பெயின், இத்தாலி, அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள தொழிற்கட்சிகளிடமும் அதன் செல்வாக்கு பரவியதெனலாம்.

ஆறும் பிரிவு

தொன்மைப் பொருளாதார மறு பரிசீலனை

தொன்மைப் பொருளாதாரத்திற்குத் தோன்றிய எதிர்ப்பின் காரணத்தால், அது சீர்குலைந்துவிட்டதுபோல் தோன்றியது. 19ஆம் நூற்றுண்டின் இறுதியில் தொன்மைப் பொருளாதாரத்திற்குத் துணைசெய்யும் வகையில் தோன்றியதே இறுதிநிலை வாதம். ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த பொருளாதார அறிஞர்கள் மூவர் பொருளாதார ஆய்வைப் புதியதொரு வழிக்குத் திருப்பினர். தொடக்கத்தில் இவ்வழி தொன்மைப் பொருளாதாரத்திற்கு எதிராகச் செல்வதுபோல் தோன்றியதால் இதனை 'இறுதிநிலைப் புரட்சி' என்பர் சிலர். எனினும், முடிவில் இது தொன்மைப் பொருளாதாரத்திற்குத் துணையான வழியாகவே அமைந்தது.

23. இறுதிநிலை வாதம்
(Marginalism)

பொருளாதார அறிவியலில் பண்டங்களின் விலைக் கோட்பாடே உடலுக்கு இதயம் போன்றது. பண்டங்களின் மதிப்பு எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதை விளக்குவதே பொருளாதார அறிஞரின் கடமையும் பணியுமாகும். எனவே, 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இக் கடமையிலும் பணியிலும் பலர் அக்கறை கொண்டனர். தங்களுக்குமுன் தோன்றிய பேரறிஞர்கள் வகுத்த கோட்பாட்டைத் துருவித்துருவி ஆராய்ந்தனர். ஆடம் ஸ்மித் அவர்களின் விளக்கத்தையும் அவரைப் பின்பற்றிய ரிக்கார்டோவின் கோட்பாட்டையும், அக் கோட்பாட்டையே ஆதாரமாகக் கொண்டு முதலாளித்துவ அமைப்பிற்கே முடிவுகட்ட வேண்டுமெனத் திட்டமிட்ட மார்க்ஸின் கோட்பாட்டையும் குறைகூறினர்.

பண்டைக் காலத்தில் பண்டங்களின் மதிப்பு அவற்றை உண்டாக்கச் செலவழியும் உழைப்பினாலும், தொழிற்புரட்சிக்குப் பின்னர் அவற்றின் அடக்கச் செலவினாலும் நிருணயிக்கப்படுகிறதென ஸ்மித் விளக்கினார். ரிக்கார்டோ காலத்திலும் உழைப்பின் அளவே பண்டங்களின் மதிப்பை நிருணயம் செய்கிறதென அழுத்தம் திருத்தமாகக் கொண்டு 'பண்டங்களின் மதிப்பு உழைப்பால் மட்டும் நிருணயிக்கப்படுவதால், அவற்றின் விலை முழுவதும் தொழிலாளிகளுக்கே செல்ல வேண்டும்' என மார்க்ஸ் கருதினார். ஆனால் முதலாளிகள் விலையில் ஒரு பகுதியை மட்டும் தொழிலாளருக்குக் கொடுத்துவிட்டு எஞ்சியதைத் தாமே எடுத்துக்கொள்கின்றனர். இச்சுரண்டலுக்கு முதலாளித்துவ அமைப்பே காரணம். எனவே, அவ்வமைப்பை ஒழித்துவிட்டுப் புதிய சோஷியலிச அமைப்பை உருவாக்க வேண்டுமென வாதித்தார்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களும் கார்ல் மார்க்சும் வகுத்த உழைப்பின் மதிப்புக் கோட்பாட்டிற்கு எதிராகக் கிளம்பியதே இறுதிநிலை வாதமாகும். பண்டங்களின் மதிப்பு அவற்றின்

மீதுள்ள நுகர்வோரின் விருப்பத்தைப் பொறுத்தது என்பதே இறுதிநிலை வாதத்தின் சாரமாகும். இவ் வாதத்திற்கு விளக்கம் தந்தவர்கள் கார்ல் மெங்கர் (Karl Menger), வான் வீசர் (Von Weiser), பாம் பாவர்க் (Bohm Bawerk) ஆகிய மூன்று ஆஸ்திரியப் பொருளாதார அறிஞர்கள். இம் மூவரையும் சேர்த்து ஆஸ்திரியக் குழு (Auotrian School) என அழைப்பது வழக்கம்.

பண்டங்கள் பயனுள்ளவையாயிருப்பதாலேயே மக்கள் அவைகளை விரும்புகின்றனர். அவற்றின் பயனை மக்களின் உள்ளமே அறிய முடியும். எனவே, ஆஸ்திரியக் குழுவினரை 'உளவியல் பொருளாதார அறிஞர்கள்' என்றும் அழைக்கலாம். அவ்வாறுயின் பண்டத்தின் மதிப்பை நிருணயிப்பது அதன் பயனேயன்றி உற்பத்திச் செலவல்ல என்று வாதாடினர் ஆஸ்திரியக் குழுவினர். பண்டங்கள் மனிதனின் தேவையை நிறைவு செய்வதற்காகத் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, மனிதனுக்காகத் தான் பண்டங்களேயன்றி, பண்டங்களுக்காக மனிதனல்ல என்கிறது. இவ்வாறாக, பண்டத்தின் மதிப்பு, அதன் பயனையும், பயன் அதனை விரும்பும் மனிதனின் உள்ளத்தையும் பொறுத்த தெனக் கூறி, மனிதனுக்கே முக்கியத்துவம் தந்தனர்.

இவ் வகையில் தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கும் ஆஸ்திரியக் குழுவினருக்கும் சில ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம். தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் மனிதனின் தன்னலத்தில் அக்கறை கொண்டவர்கள் அதே விதத்தில்தான் ஆஸ்திரியக் குழுவினரும் மனிதனின் தன்னலத்தை ஆதாரமாகக் கொண்டு பண்டங்களின் மதிப்புக் கோட்பாட்டை விளக்கினர். பயனுள்ள பண்டங்களை விரும்புவதும் தீமை விளைவிக்கும் பொருள்களை வெறுப்பதும் மனித இயல்பு. ஒரு பண்டத்தின் பயன் ஒருவருக்கொருவர் மாறுபடும். எனவே, பண்டத்தின் பயனையும் மனித உள்ளத்தையும் கொண்டு மதிப்பை விளக்கியதன் வழியாக, தனிமனிதனின் நலத்தில் அக்கறை கொண்டவர்களாகவே ஆஸ்திரியக் குழுவினர் விளங்கினர் எனலாம். இதனால் ஆஸ்திரியக் குழுவினரை தொன்மைப் பொருளாதாரத்திற்கு ஒரு வகையில் புத்துயிர் கொடுத்தவர்களெனச் சிலர் கருதுவர். மதிப்புக் கோட்பாட்டில் மட்டுமே அவர்கள் தொன்மைப் பொருளாதாரத்திலிருந்து விலகியவர்களாவர்.

1. முன்னோடிகள் (Foreunners)

மனிதன் விருப்பத்தைப் பொறுத்தே பண்டங்களின் விலை நிருணயமாகிறது என்ற கருத்தை ஆஸ்திரியக் குழு தோன்று

முன்னரே பல அறிஞர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களில் பிரான்ஸைச் சேர்ந்த வால்ரஸ் (Walras), ஜெர்மானிய அறிஞர் கோசன் (Gossen), ஆங்கில நாட்டு ஜெவான்ஸ் (Jevons) ஆகியோர் முக்கியமானவர்கள். அவர்களைப்பற்றி இங்கு சுருக்கமாக வாயினும் கூறுவது அவசியம். அவர்களுக்கு முன்னரும் ஆர்ச் பிஷப் வேட்லி (Archibishop Whately) பயன்பாடே பண்டங்களின் மதிப்பை நிருணயிக்கிறதென்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார். 'முத்துச் சிப்பிகளுக்கு மிகுதியான பயன் இருப்பதாலேயே மக்கள் முத்துக்குளிப்பில் ஈடுபடுகிறார்கள் எனவே, அவற்றின் மதிப்பு முத்துக் குளிப்போரின் உழைப்பால் ஏற்படுவதன்று' என்பது வேட்லின் சான்று. இதே கருத்தை ஆக்ஸ்பர்டு பல்கலைக் கழகப் பேராசிரியராயிருந்த லாயிட் (Lloyd) வலியுறுத்தியுள்ளார். 'உணவே இல்லாத ஒருவன் பிடியளவு உணவைக் கண்டவுடன் அதனைத் தன் உயிருக்கு மேலாக மதிக்கின்றான்; ஆனால் அவனுக்குக் கிடைக்கும் உணவு அதிகரிக்க அதிகரிக்க அவன் அவ்வளவாக அதனை மதிப்பதில்லை' என்பது லாயிட்டின் உதாரணம். இவ்வாறாக பண்டங்களின் மதிப்பு நம் உள்ளத்தின் உணர்வைப் பொறுத்தது என்கிறார் லாயிட். இப்போது, ஆஸ்திரியக் குழுவுக்கு முன்னோடிகளாக விளங்கிய மூன்று அறிஞர்களின் கருத்தைச் சுருக்கமாகக் காண்போம்.

i) அகஸ்டஸ் வால்ரஸ் (1801—1866)

அகஸ்டஸ் வால்ரஸ் பாரிஸ் பல்கலைக்கழகப் பேராசிரியராய்ப் பணியாற்றியவர். இவர் 183ட-ல் 'செல்வத்தின் இயல்பும் அதன் மதிப்பும்' என்ற நூலை வெளியிட்டார். அந்நூலில் பயனுள்ள பொருள்களுக்கே மதிப்பு ஏற்படுகிறதென்று கூறுகிறார். ஆனால் அப்பயனுள்ள பொருள் கிடைப்பருமையுடையதாகவும் இருக்கவேண்டுமென வலியுறுத்தினார். சூரிய ஒளி பயனுள்ளதெனினும், அது வேண்டிய அளவுக்குமேல் கிடைப்பதால், அதற்கு மதிப்பு ஏற்படுவதில்லை என்ற சான்றைக்கொண்டு, பயனும் கிடைப்பருமையுமே பண்டத்தின் மதிப்பை நிருணயிக்கின்றன என்று விளக்குகிறார்.

(ii) கோசன் (1810–1858)

கோசன் அவர்களை இறுதிநிலை வாதத்தின் சிறந்த முன்னோடியாகக் கருதலாம். 1954-ல் மக்களிடையே நடைபெறும் பரிவர்த்தனைச் சட்டங்கள்' என்னும் நூலை வெளியிட்டார். இந்நூலை எவருமே விரும்பி வாங்கவில்லை. காரணம், இந்நூல் கணக்கியலை

அதிக அதிகமாகப் பயன் கொண்டது. மக்களின் குறிக்கோள் இவ்வுலக இன்பங்களையெல்லாம் அனுபவிப்பதே என்று கோசன் கூறுவதைக் கவனித்தால் பென்தமையே அவர் மிஞ்சி விடுவதுபோல் தெரியும். இன்பமும் துன்பமும் கலந்த இவ் வாழ்க்கையில் இன்பத்தை மட்டும் அனுபவிக்கவே மனிதன் விரும்புகிறான் என்று கூறுகிறார். இன்பம் பற்றிய ஆய்வின் வழியாக மூன்று முக்கியமான விதிகளைப் புனைகிறார் கோசன். அவை:

1. பயன்தரும் பொருள்களை மனிதன் அடிக்கடி நுகரும்போது உச்சநிலைப் பயனை அவன் அடைவான். அதன் பின்னரும் நுகர்ந்தால் அவன் அடையும் பயன் குறைந்துவிடும். இவ் விதியில் கோசன் குறைந்துசெல் இறுதிநிலைப் பயன் விதியின் (The Law of diminishing marginal utility) சாரத்தைத் தருகிறார்.

2. பல பயன்களை ஒரே நேரத்தில் அனுபவிக்க விரும்பும் மனிதன், ஒவ்வொரு பொருளின் பயனையும் முழுமையாக அனுபவிக்க முடியாது; ஏனவே, ஒவ்வொரு பொருளிலிருந்தும் கிடைக்கும் இறுதி நிலைப்பயன் சமமாகும்வரை அப் பொருள்களை அனுபவிப்பான் என்கிறார். இது, 'சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின்' (The Law of Equi-marginal utility) சாரமாகும்.

3. பயனுள்ள புதிய பொருளை அல்லது முன்னரேயுள்ள பொருளுக்குப் புதிய பயனைக் கண்டுபிடிக்கும்போதெல்லாம் மனிதன் அனுபவிக்கும் இன்பம் அதிகமாகும். எனவே, புதியதைக் கண்டுபிடிப்பவனை வாழ்த்துகிறார்.

கோசன் பண்டங்களைப் பல தரமாகப் பிரித்து அவற்றின் மதிப்பை ஆராய்ந்தார். நுகர்வுப் பண்டங்கள், நிறைவுப் பண்டங்கள், உற்பத்திப் பண்டங்கள் எனப் பல இனமாகப் பிரித்து அவற்றின் மதிப்பை வெகு நுணுக்கமாக ஆராய்ந்தார். இவ்வாய்வு பிற்காலத்தில் கார்ல் மென்ஜரின் ஆய்வுக்கு ஏற்றதாக அமைந்தது.

(iii) ஜெவான்ஸ்

ஆஸ்திரியக் குழுவினர் காலத்தில் ஆங்கில நாட்டில் இறுதிநிலைக் கருத்தைத் தனிமையாக உருவாக்கிய பெருமைக்குரியவர் ஜெவான்ஸ். கார்ல் மென்ஜர் அவர்களின் நூல் வெளியான அதே ஆண்டில் (1871) ஜெவான்ஸ் எழுதிய 'அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடு' என்ற நூலும் வெளி வந்தது. இருவரின் கருத்து

களும் ஏறக்குறைய ஒன்றே. எனவே, இறுதி நிலை வாதிகளில் ஜெவான்ஸ் முக்கிய இடம் வகிக்கிறார். 'ஒரு பண்டத்தின் விலை அதன் பயன்பாட்டையே பொறுத்தது' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார் ஜெவான்ஸ். குறைந்து செல்பயன்விதியின் அடிப்படையில் பரிமாற்ற விதியினைப் புனைகிறார்.

இவ்வாறாக, ஆஸ்திரியக் குழுவினருக்கு முன்பே பல அறிஞர்கள் இறுதி நிலைப் பயன் என்னும் கருத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தனர். அவர்களோடு, அவர்களுக்குப் பின் தோன்றிய பரீட்டோ (Pareto) என்னும் இத்தாலிய அறிஞர், ஸ்வீடன் நாட்டு அறிஞரான காசல் (Cassel) ஆகியோரையும் சேர்த்து, 'கணக்கியல் குழுவினர்' (Mathematical school) என அழைப்பது மரபு. ஏனெனில் இவர்கள் அனைவரும் கணக்கியலைத் தத்தம் நூலில் அதிகமாகப் பயன்படுத்தினர். ஆஸ்திரியக் குழுவினரை உளவியல் குழுவினர் என்றும் அழைப்பர் என்பதை முன்னரே கண்டோம். எனவே, அவர்களைப்பற்றித் தனியாகவும் விரிவாகவும் ஆராய்வது அவசியம்.

2. ஆஸ்திரியக் குழுவினர்

கார்ல் மெங்கர், வான் வீசர், பாம்பாவர்க் ஆகிய மூவரும் ஆஸ்திரியப் பொருளாதார அறிஞர்களில் முக்கியமானவர்கள். இவர்கள் அனைவரும் ஒருவருக்குப் பின் ஒருவராக வியன்னா பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றியவர்கள். இவர்கள் மூவரும் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வகுத்த மதிப்புக் கோட்பாட்டைப் புறக்கணித்தவர்கள். 'பண்டங்களின் மதிப்பு அவற்றின் இறுதி நிலைப் பயன்பாட்டையே பொறுத்தது' என்பதே இம் மூவரின் கருத்து. அதோடு, உற்பத்தியில் பயன்படுத்தப்படும் சாதனங்களின் மதிப்பு, அவற்றின் உதவியால் உண்டாக்கப்படும் நுகர்ச்சிப் பண்டங்களின் மதிப்பைப் பொறுத்தது என்ற பிறிதொரு உண்மையையும் இவர்கள் விளக்கினார்கள். இம் மூவரும் ஒரே பொருளாதாரப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். ஒரே குறிக்கோள் கொண்டவர்கள்; ஒரே உளவியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு வாதித்தவர்கள். ஒரே கோணத்திலிருந்து, அதாவது, நுகர்வோரின் மனப்பான்மையிலிருந்து மதிப்புப் பிரச்சினையை ஆராய முற்பட்டவர்கள். இவர்கள் மூவரின் சாதனைகளையும் ஒன்றாகத் தொகுத்து விளக்குவது சாத்தியமே; எனினும், அவர்களின் கருத்துகளைத் தனித்தனியாகப் பிரிந்து ஆராய்வதே வழக்கம்.

1. கார்ல் மெங்கர் (1840—1921)

கார்ல் மெங்கர், கால்ஸியாவிலுள்ள நியூ சாண்டஸ் என்னுமிடத்தில் 1840-ல் பிறந்தார். பிரேக், வியன்னு ஆகிய பல்கலைக் கழகங்களில் சட்டம் பயின்ற பின்னர் பொருளாதார நூல்களைப் படிக்கத் தொடங்கினர். கிராகோ (Cracow) பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றபின் அரசாங்க வேலையில் அமர்ந்தார். 1871-ல் தனது பொருளாதாரத்தின் தத்துவங்கள் என்னும் நூலை வெளியிட்டு, பொருளாதார அறிஞர் என்ற புகழும் பெயரும் பெற்றுர். இதனுல் 1873-ல் வியன்னு பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராக நியமனம் பெற்றுர். பொருளாதார உயர் பட்டப் படிப்பிற்கும் ஆராய்ச்சிக்கும் வியன்னு பல்கலைக்கழகம் பெயர்பெற்றதற்கு மெங்கரே காரணம். 1900-ல் ஆஸ்திரிய பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1903-ல் தன் பேராசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று, எஞ்சிய காலத்தைப் படிப்பிலும், ஆராய்ச்சியிலும் கழித்துப் பல்வேறு நூல்களை எழுதினர்.

மெங்கர் காலத்தில் ஷ்மாலரின் முயற்சியின் விளைவாக வரலாற்று வாதமே பொருளாதார உலகில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இதனுல் ஜெர்மனியைப் பொருளாதார அறிஞர்கள் வரலாற்று வாதத்தின் அடிப்படையில் பல சீர்திருத்தங்களையும் அரசியல் நிருவாக மாற்றத்தையும் கோரிவந்தனர். இந் நிலையில் கார்ல் மெங்கர் ஷ்மாலரின் வரலாற்று வாதத்திற்கு எதிரான பகுத்தறி முறையைப் பரப்ப முயன்றனர். பண்டங்களின் பயன் என்பதன் அடிப்படையில் பொருளாதார விதிகளையும் கொள்கைகளையும் உருவாக்க முடியும் என்றுர். பகுத்தறிவு முறையில் உருவாக்கப்படும் இவ் விதிகளும் கொள்கைகளும் எல்லா நாட்டிற்கும் எக் காலத்திற்கும் பொருந்துமென முடிவு கட்டினுர்.

மெங்கரின் பொருளாதாரத் தத்துவங்கள்

ஆஸ்திரியக் குழுவினரின் தலைவராக மதிக்கப்பட்ட மெங்கர் தனது 31ஆம் வயதிலேயே பொருளாதாரத் தத்துவங்கள் என்னும் நூலை எழுதிவிட்டார். அவர் வரைந்த நூல்கள் மிகச் சிலவே; எனினும், இறுதி நிலை வாதத்தில் மங்காத பெயரை உடையவர். இந் நூல் வரலாற்று வாதத்திற்கு எதிரான பகுத்தறி முறையைக் கொண்டது; எனினும், இந்நூலை மெங்கர் அவர்கள் ராஷ்கருக்கு அர்ப்பணம் செய்திருப்பது விந்தையே.

பொருள்களின் இயல்புகள்

மனிதனின் விருப்பத்தை நிறைவு செய்யும் அனைத்தையும் பொருள்களாகவே கருதினுர் மெங்கர். பொருள் என்று எதுவும்

அழைக்கப்பட வேண்டுமாயின், அதற்கு நான்கு பண்புகள் இருக்க வேண்டுமென்கிருர். (1) அதனை மனிதன் விரும்ப வேண்டும்; (2) அவ் விருப்பத்தை நிறைவு செய்யக்கூடிய பண்புகள் அதனிடம் இருக்க வேண்டும்; (3) விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய பண்பை மனிதன் உணர்ந்திருக்க வேண்டும்; (4) விருப்பத்தைத் திருப்தி செய்யும் வகையில் அது விற்பனை செய்யப்படவும் வேண்டும். இந் நான்கு இயல்புகளில் ஒன்று இல்லாவிட்டாலும் அதனைப் பண்டமென்றே பொருள் என்றே அழைக்க முடியாதென் கிருர் மெங்கர்.

மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்வதே பண்டங்களின் அடிப்படையான பண்பு என்பது மெங்கரின் கருத்து. இக் கருத்தை ஆதாரமாகக் கொண்டு பொருள்களை வரிசைப் படுத்துகிருர். மனிதனின் விருப்பத்தை நேரடியாகவும் உடனடியாகவும் திருப்தி செய்யக்கூடிய பண்டங்கள் முதல் வரிசையில் வைக்கப்படுகின்றன. உணவு, ரொட்டி, ஆடை ஆகிய அனைத்தும் முதல் வரிசைப் பண்டங்களாகும். அவற்றை உற்பத்திச் செய்வதற்கு எத்தனையோ பொருள்கள் தேவைப்படுகின்றன. அவற்றை மனிதன் உடனடியாக நுகர முடியுமா? 'அவ்வாறு நுகர்வதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பதைப் பொறுத்து அவற்றை வரிசைப்படுத்தலாம். சான்ருக, ரொட்டி முதல் வரிசைப் பண்டமெனின், மாவு இரண்டாம் வரிசையிலும், கோதுமை மூன்ரும் வரிசையிலும் இடம் பெறும். கோதுமை உண்டாவதற்குப் பயன்படுத்தப்படும் நிலம், கலப்பை, விதை, உரம் ஆகியவை நான்கு, ஐந்து என்ற வரிசைகளில் வைக்கப்படும், கலப்பைக்கு வேண்டிய மரம், இரும்பு என்று எத்தனையோ வகைப் பண்டங்கள் இருக்கின்றன. அவற்றை நம் கற்பனைத் திறமைக்கேற்ப வரிசைப் படுத்திக்கொள்ளலாம். ஆனுல் இப் பொருள்களுக்கேற்படும் தேவை, ரொட்டிக்கு ஏற்படும் தேவையைப்பொறுத்தது. அதாவது, நுகர்வுப் பொருள்களின் பயனையும் தேவையையும் பொறுத்தே அவற்றை உற்பத்தி செய்யப் பயன்படும் இதர பொருள்களின் பயனும் தேவையும் அமைகின்றன. எனவே, நுகர்வுப் பொருள்களின் மதிப்பே உற்பத்திப் பொருள்களின் மதிப்பை நிருணயிக்கிறது. பருத்தி ஆடைக்குப் பயனும் தேவையும் மதிப்பும் இருப்பதனுலேயே பருத்திக்குப் பயனும் தேவையும் மதிப்பும் உண்டாகிறது.

தேவையும் பண்டங்களும்

மனிதன் உயிர் வாழவும் நல்வாழ்வு நடத்தவும் பல பண்டங்கள் தேவைப்படுகின்றன. இன்றைய சமுதாயத்தில் அப் பண்டங்களெல்லாம் எப்போதும் உற்பத்தியாகிக்கொண்டே இருக்கின்றன

அவற்றிற்கான தேவையை எதிர்பார்த்து, முன்கூட்டியே உற்பத்தி செய்கின்றனர். இவ்வாறு உற்பத்தியாகும் பண்டங்களில் நுகர்வுப் பண்டங்களுக்கு மட்டுமே நேரடித்தேவை உள்ளது. அவற்றையே நுகர்வோர் நாடுகின்றனர். ஆனால் தேவைப்படும் பண்டங்கள் அனைத்தும் வேண்டிய அளவுக்கு உற்பத்தியாவதில்லை. எல்லா மக்களின் தேவைக்கும் வேண்டிய அளவு இல்லாத உற்பத்திசெய்ய முடியாத பொருள்களையே பொருளாதாரத்தில் ஆய்கிறோம். எனவே, மக்களின் விருப்பத்தீவிரத்திற்கேற்ப அவசியமான பொருள்களே நுகரப்படுகின்றன. அவ்வாறு நுகரும்போது ஒவ்வொருவரும் உச்சபயனை அடைய விரும்புகின்றனர்.

அவ்வாறு கிடைக்கின்ற பொருள்களைக் கொண்டு மனிதன் தன் வாழ்க்கையை அமைக்கும்போது பொருளாதார வாழ்வே இடம்பெறுகிறது. அப்போது, தேவையைக் காட்டிலும் சில பொருள்களின் அளிப்பு குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கலாம். தேவையைக் காட்டிலும் அளிப்பு குறைவாக இருக்கின்ற நிலையே சாதாரணமாக ஏற்படுகிறது. அப்போது அப்பொருள்களைச் சிக்கனமாகவும் உச்சநிலைப் பயனை அளிக்கும் வகையிலும் பயன்படுத்த வேண்டியுள்ளது என்கிறார் மெங்கர். ஒரு பண்டத்திற்குள்ள தேவை மக்கள் தொகை மாற்றம், விருப்பத்தில் ஏற்படும் மாறுதல், அப் பண்டம் அவசியமானதா என்பதில் மக்கள் கொண்டுள்ள அறிவு ஆகிய பல்வேறு காரணங்களால் மாறலாம் என்பதை மெங்கர் உணர்கிறார்.

மதிப்புக் கோட்பாடு

மேற்கூறிய விளக்கத்தை ஆதாரமாகக் கொண்டு மதிப்புக் கோட்பாட்டை ஆய்கிறார் மெங்கர். பயன்பாடே பரிவர்த்தனை மதிப்பின் உயிர்நாடி என்பது மெங்கரின் கொள்கை. ஆனால் நாம் பயன்படுத்தும் எல்லாப் பொருள்களுக்கும் ஓரேவிதமான பயன்பாடு இருப்பதில்லை, சில பொருள்கள் நமக்கு இன்றியமையாதவை; நமது உயிரைக் காப்பவை. அவற்றின் பயன்பாடு மிக அதிகமாக இருக்கும். வேறு சில பொருள்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவையல்ல; எனினும் அவை நமக்குச் சில வசதிகளைக் கொடுக்கும் பயனையுடையவை. அவற்றின் பயன்பாடு அவசியப் பொருள்களைப்போல் அவ்வளவு அதிகமாக இராது. சான்றாக, மேஜை நாற்காலிகள் நமக்கு அளிக்கும் பயன், உணவு கொடுக்கும் பயனைவிடக் குறைவே. அடுத்து வேறு சில பொருள்கள் போகப்பொருள்கள்: அவற்றின் பயன்பாடு மேலும் குறைவாக இருக்கலாம். இவ்வாறு, பயன் என்பது பண்டத்திற்குப் பண்டம் வேறுபடுகிறது.

மேலும் ஒரே பண்டம் ஆளுக்கு ஆள் வெவ்வேறு பயனுடைய தாகவும் உள்ளது. தேயிலை எல்லாருக்கும் ஒரேவிதமான பயனை யுடையதன்று. விரும்பி அருந்துவோருக்கு அதிகப் பயனையும், ஏதோ பழக்கத்தினுல் பயன்படுத்துவோருக்குக் குறைந்த பயனையும் தருகிறது. தேயிலையை வெறுப்பவருக்கு அதனுல் எவ்விதப் பயனுமில்லை. எனவே, எந்தப் பொருளும் ஒரேவிதமான பயனை எல்லாருக்கும் தருவதில்லை. விரும்பி அருந்துவோருக்குக்கூட தேயிலை ஒரேவிதமான பயனை எப்போதும் அளிப்பதில்லை. அதன் பயன் காலத்திற்குக் காலம் மாறும் இயல்படையது. ஒருவன் ஒரே நேரத்தில் விரும்பி தேநீரை அருந்திக்கொண்டே செல்லும்போது எல்லாக் 'கப்' தேநீரும் ஒரேவிதமான பயனைக் கொடுப்பதில்லை. முதல் 'கப்' அளிக்கும் பயன் அதிகமாகவும், அதற்கடுத்த 'கப்' பின் பயன் குறைவாகவும் ஆகிறது. தொடர்ந்து 4, 5 கப் என்று அருந்திக்கொண்டே போனுல் அதன் பயன் படிப்படியாகக் குறைந்துகொண்டே போய்த் தெவிட்டல் நிலையையும், பின்னர் குமட்டல் நிலையையும் ஏற்படுத்தலாம். அளவுக்கு மிஞ்சினுல் அமிர் தமும் நஞ்சாகுமல்லவா ? எனவே, எந்தப் பொருளின் பயனும், அப்பொருளை அதிகரிக்க அதிகரிக்க, குறைந்துகொண்டே செல்லும் இயல்புடையது என்பதைப் பல சான்றுகளின் மூலம் எண்பிக் கிருர் மெங்கர். எனவே, எப் பண்டத்தின் மதிப்பும் அதன்மீது மனிதன் கொண்டுள்ள விருப்பத்தின் தீவிரத்தைப் பொறுத்தது என்பது மெங்கரின் முடிவு. இத் தீவிரத்தை 'இறுதிநிலைப் பயனின்' போக்கினைக் கொண்டு அறியலாம் என்கிருர்.

அடுத்து, ஒரே பொருளுக்குப் பலவிதமான பயன்கள் இருக்கும் போது, அதன் மதிப்பு எவ்வாறு நிருணயமகிறது என்பதை விளக்கு கிருர் மெங்கர். அப்பொருள் தாராளமாகக் கிடைத்தால் அதனை எல்லா உபயோகத்திற்கும் பயன்படுத்துகிருேம்' குறைவாகக் கிடைத்தால் முக்கியமான காரியங்களுக்கு மட்டும் அதைப் பயன் படுத்திப் பிற காரியங்களுக்குப் பயன்படுத்துவதை நிறுத்திக்கொள் கிருேம். எந்தக் காரியங்களுக்கும் பயன்படுத்தாமல் விடுகிருேமோ அக் காரியங்கள் நமக்களிக்கும் திருப்தியே அப் பொருளின் மதிப்பை நிருணயிக்கிறதென்கிருர். இதற்குச் சான்ருக ராபின்சன் குருசோவைச் சுட்டிக்காட்டுகிருர். தானியம் தாராளமாகக் கிடைக்கும்போது ராபின்சன் குருசோ ஒரு நாய், ஒரு கிளி, புரு ஆகியவற்றைப் பேணி இன்பமடையலாம். ஒரு மூட்டை தானி யம் குறைந்துவிட்டால் கிளியைக் காப்பாற்ற முடியாதென நினைத்து அதைக் கொன்றுவிட்டால், தானியத்தின் மதிப்பு, கிளியோடு பேசி அடையும் இன்பத்தால் நிருணயிக்கப்படுகிறதெனலாம் என்கிருர்.

அவ்வாருயின், கிளியைக் காட்டிலும் நாய், புரு முக்கியமானவை யென்பது வெளிப்படை.

இதுவரை நுகர்வுப் பொருள்களின் மதிப்பை மட்டுமே ஆராய்ந்தோம். ஆனல் அப் பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் சாதனங்களின் மதிப்பு எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது? இக் கேள்விக்கு மெங்கர் அளிக்கும் பதில் விசித்திரமானது. நெல்லின் பயனைப் பொறுத்தே நெல் விளைவிக்கத் துணை புரியும் நிலம், உரம், ஏர் ஆகியவற்றின் பயன் நிருணயமாகிறது. அவ்வாருயின் நிலத்தின் மதிப்பை, உரத்தின் மதிப்பைத் தனித் தனியாக அறிந்துகொள்வதெப்படி? உரம் பயன்படுத்தினுல் எவ்வளவு நெல் விளைகிறது? அதனைப் பயன்படுத்தாவிட்டால் விளைச்சல் எவ்வளவு குறைகிறது என்பதைக் கணக்கிட்டுக் குறைவாக விளையும் நெல்லின் மதிப்பைக் கொண்டு உரத்தின் மதிப்பை -றியலாமென்கிருர். சான்ருக, 10 மூட்டை உரம் போட்டு 40 மூட்டை நெல் விளைவிக்கிருன் விவசாயி என்று வைத்துக் கொள்வோம். உரமே போடாவிட்டால் விளைச்சல் 30 மூட்டையாக இருந்தால் ஒவ்வொரு மூட்டை உரத்தின் மதிப்பும் ஒரு மூட்டை நெல்லுக்குச் சமம். நிலத்தின் மதிப்பை எவ்வாறு அறிவது? நிலத்தைப் பயன்படுத்தாமல் நெல் சாகுபடி செய்ய முடிந்தால்தானே அதனை அறிய முடியும்? எனவே, முதல் வரிசைப் பண்டங்களின் மதிப்புக்கு மெங்கரின் விளக்கம் திருப்திகரமானதாக இருந்தாலும், இரண்டாவது, மூன்ருவது வரிசைப் பண்டங்களின் விளக்கம் ஒப்புக்கொள்ள முடியாததாகிறது.

மெங்கர் 'இறுதிநிலை என்ற சொல்லைப் பயன் படுத்தாதது குறிப்பிடத்தக்கது. எனினும் அதன் பொருளை உணர்ந்திருந்தார். இச் சொல்லைப் பயன் படுத்திய பெருமை வான் வீசரைச் சாரும்.

(ii) வான் வீசர் (1851-1926)

வியன்ன பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற வீசர் மெங்கருக்குப் பின்னர் அப்பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் பணியாற்றினுர். மெங்கரின் மகளைத் திருமணம் செய்து அவரது மருமகனும் ஆனுர். முதல் உலகப் போரின் போது ஆஸ்திரிய நாட்டு வணிக அமைச்சராகவும் பொறுப்பேற்ருர். அவர் வரைந்த நூல்களில் குறிப்பிடத் தக்கவை இரண்டு: ஒன்று இயல்பான மதிப்பு என்ற தலைப்பில் 1889-ல் வெளியானது; பிறிதொன்று 1914-ல் வெளியான 'சமூகப் பொருளாதாரக் கோட்பாடு ன்பது.

வரலாற்று நூல்களில் மிக்க ஆர்வம் கொண்ட வீசர், சமூக நடவடிக்கைகளைப் பற்றிய விதிகளைக் காணப் பொருளாதார ஆய்வே சிறந்ததென நம்பி மெங்கரின் தத்துவத்தைப் படித்தார். மெங்கரின் கருத்துகள் அவருக்குப் பிடித்திருந்தன. எனவே, மெங்கரைப் பின் பற்றியே தம் பொருளாதார நூல்களை வடித்தார். ஒரு பொருளின் உண்மையான செலவுக்குப் புதிய விளக்கம் தந்தார். குறிப்பிட்ட அளவு சாதனங்களைக் கொண்டு ஒரு மீட்டர் துணி நெய்ய முடியுமெனக் கொள்வோம்; அப்போது அதே சாதனங்களைக் கொண்டு வேறு என்ன பொருளை உற்பத்தி செய்திருக்க முடியுமோ அதுவே ஒரு மீட்டர் துணியின் உண்மைச் செலவெனக் கொண்டார். அதுபோல், ஒரு குறிப்பிட்ட பொருளின் உண்மையான பயனையும் மதிப்பிட்டார். ஒரு ரூபாயைக் கொண்டு ஒரு ஆப்பிள் பழம் அல்லது ஒரு டஜன் வாழைப்பழம் வாங்க முடியுமெனின், ஒரு ஆப்பிள் பழத்தின் உண்மைச் செலவு ஒரு டஜன் வாழைப்பழம் ஆகும். இச் செலவை இன்றைய அறிஞர்கள் 'பிறவாய்ப்புப் பெறுமானம்' (Opportunity Cost) என்றழைப்பர்.

மெங்கரைப் போலவே வீசரும் கருத்தியல் ரீதியில் பகுத்தறி முறையைப் பின் பற்றினர். மெங்கரின் கருத்துகளில் நம்பிக்கை கொண்ட வீசர் பண்டத்தின் பயன்பாடே அதன் மதிப்பை நிருணயிக்கிறதென அழுத்தம் திருத்தமாகக் கூறினர், 'உழைப்பே பண்டத்தின் மதிப்பை அளவிடும் அளவுகோல்' என்றதொன்மைக் கோட்பாட்டைக் கண்டித்து, அதற்குப் பதிலாக இறுதி நிலைப் பயன் கோட்பாட்டை வலியுயுறுத்தினர்.

நுகர்ச்சிப் பொருள்களை உண்டாக்க உதவும் உற்பத்திப் பொருள்களின் மதிப்பை நன்கு விளக்கிய பெருமை வீசரைச் சேரும். அவரது விளக்கத்தை பிரதிபலிப்புக் கோட்பாடு (Theory of imputation) என்பர். அதாவது, உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு, அவை உண்டு பண்ணும் நுகர்ச்சிப் பொருள்களின் மதிப்பைப் பிரதிபலிக்கிறது என்பதே இதன் பொருள். சான்ருக, துணியின் மதிப்பு குறைவாக இருந்தால் அதனை உற்பத்தி செய்யத் தேவைப்படும் பருத்தி, இயந்திரம், உழைப்பு ஆகியவற்றின் மதிப்பும் குறைந்து விடும். இது சாதாரண நிகழ்ச்சியும் உண்மையுமாகும். எனவே, முதற் கருவிப் பொருள்களின் (Capital Goods) மதிப்பு, நுகர்ச்சிப் பொருள்களின் மதிப்பின் பிரதிபலிப்பே என்பது வீசரின் வாதம்.

பிரதி பலிப்புக் கோட்பாடு

வீசரின் பிரதிபலிப்புக் கோட்பாட்டை உற்று நோக்கினுல் அது பகிர்வுக் கோட்டாடு தான் என்பது தெளிவாகும். உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு எவ்வாறு நிருணயிக்கப்படுகிறதென்பதும் உற்பத்தியில் காரணிகள் பெறும் பங்கு எவ்வளவு என்பதும் ஒன்று தான். பங்கீட்டுக் கொள்கையைப் பொறுத்த வரை மெங்கரின் விளக்கம் சரியல்ல என்பதை வீசர் ஒப்புக்கொள்கிருர். உற்பத்திக் காரணிகளில் ஏதாவதொன்றைப் பயன்படுத்தாமல் இருந்தால் மொத்த உற்பத்தி எவ்வளவு குறையுமோ அவ்வளவு பொருளின் மதிப்பும் பயன் படுத்தாத காரணியின் மதிப்பிற்கு இணையாகும் என்பது மெங்கரின் விளக்கம். இவ் விளக்கத்தின் படி பங்கீட்டால் மொத்த உற்பத்தி மதிப்பைவிட காரணிகளின் மதிப்பு அதிகமாகிவிடுமென்பது வீசரின் வாதம்

வான் வீசர் அளிக்கும் விளக்கம், மெங்கரின் விளக்கத்திலிருந்து சிறிது மாறு பட்டதாகும். ஒரு முதற் பொருள் கருவியை உபயோகிப்பதால் உற்பத்தி எவ்வளவு அதிகரிக்குமோ அதுவே அந்தக் கருவியின் உற்பத்தி மதிப்பாகும் என்கிருர். சான்ருக 10 மூட்டை உரத்தைப் பயன் படுத்தி ஒரு ஏக்கர் நிலத்தில் 40 மூட்டை நெல்லை விளைவிக்க முடியுமென வைத்துக் கொள்வோம். இப்போது 11 மூட்டை உரத்தைப் போட்டு 45 மூட்டை நெல் அறுவடை செய்தால் 1 மூட்டை உரத்தின் மதிப்பு 2 மூட்டை நெல்லின் விலைக்குச் சமமெனக் கொள்ளலாம் என்பது வீசரின் விளக்கம். இந்த விளக்கமும் தவருன தென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்வர். பங்கீட்டுக் கோட்பாட்டை விளக்கும் முயற்சியில் இறுதிநிலைவாதிகள் தோற்றுவிட்டனர் என்றே கருத வேண்டியுள்ளது.

சமூகப் பொருளாதாரம்

தனது 'சமூகப் பொருளாதாரம்' என்னும் நூலில் வீசர் புதிய சில கருத்துகளைத் தந்துள்ளார். பொருளாதாரக் கோட்பாடுகளையும் சமுதாய வாழ்க்கையையும் இணைக்கும் வகையில் இக் கருத்துகள் அமைகின்றன. பண்டங்களை மூன்று இனமாகப் பிரித்தார். அதாவது: (1) ஏழைகளும் பணக்காரர் உட்பட எல்லாரும் பயன்படுத்தும் அவசியப் பண்டங்கள்; (2) பணக்காரர் மட்டும்டும் பயன் படுத்தும் போகப் பண்டங்கள்; (3) நடுத்தர வகுப்பினர் பயன் படுத்தும் வசதிப் பண்டங்கள். இவ்வாருக, மக்களினத்தின் அடிப்படையில் பண்டங்களை வகைப்படுத்தியிருப்பது இனப் போராட்டக் கருத்தைப் பிரதிபலிக்கிறது.

ஒரு நாடு தொழில் துறையில் முன்னேற, முன்னேற அந் நாட்டுச் சமுதாய வாழ்வு சீர்குலைகிறதென்பது வீசரின் கருத்து. வருமான ஏற்றத் தாழ்வு தோன்றுவதற்குத் தொழில் மயமே பெருமளவு காரணமாகும் என்கிறார். எனவே, தொழிற்சங்கங்கள் முதலாளிகளோடு சண்டை போடாமல் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்தப் பாடுபட வேண்டுமென்கிறார். அதோடு, மக்களின் தேவைக்கேற்பப் பொருள்கள் உற்பத்தியாகக்கூடாது; அவர்களுக்கு அவசியமான பண்டங்களை உற்பத்தி செய்வதே சிறந்ததென்பது வீசரின் கருத்து.

(iii) பாம் பாவர்க் (1851—1914)

வீசரின் மைத்துனரான பாம் பாவர்க் வியன்னா பல்கலைக் கழகத்தில் சட்டமும், லீப்சிக் (Leipzic), ஜென்னா (Jena) ஆகிய பல்கலைக் கழகங்களில் அரசியல் பொருளாதாரமும் படித்தவர். 1895-ல் ஆஸ்திரிய நிதி அமைச்சராகப் பணியாற்றினார். 1904-ல் வியன்னாவில் பேராசிரியராகச் சேர்ந்தார். அவர் வரைந்த நூல்களில் இரண்டு நம் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளன. 'மூலதனத்தின் வட்டி' (Capital Interest) என்ற நூலை 1884-ல் வெளியிட்டார். இந் நூலில் பாம் பாவர்க் வட்டிபற்றிய பழைய கோட்பாடுகள் அனைத்தையும் சிறந்த முறையில் ஆராய்ந்து, அவற்றின் குறைகளைச் சுட்டிக் காட்டியதன் வாயிலாகப் பெயரும் புகழும் பெற்றார். அடுத்து, 1889 ல் அவர் வெளியிட்ட 'மூலதனம் பற்றிய இயல்புக் கோட்பாடு' (The Positive Theory of Capital) நூல் உலகப் புகழ் பெற்ற நூலாகும். இந் நூலின் வழியாக ஆஸ்திரியக் குழுவினரின் நிலையையே உயர்த்திவிட்டார் பாம் பாவர்க். பாம் பாவர்க்கின் கருத்துகளில் வட்டி பற்றிய கோட்பாடே முதன்மையானது. ஏனையவை அனைத்தும் மெங்கர், வீசர் ஆகியோரின் கருத்தினையொட்டியதேயாகும். எனினும், பாம் பாவர்க்கின் கருத்துகளில் அனைவரும் அடிக்கடி மேற்கோள் காட்டும் கருத்துகள் இரண்டு உள்ளன. ஒன்று 'இறுதி நிலை இணை' (Marginal Pair) என்பது; பிறிதொன்று வட்டி பற்றியது.

'இறுதி நிலை இணை'

அங்காடியில் ஒரு பண்டத்தின் விலை எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதை விளக்குவதற்கு பாம் பாவர்க் 'இறுதி நிலை இணை' என்ற கருத்தைப் பயன்படுத்துகிறார். இக் கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கு அவர் தரும் உதாரணத்தையே நாமும் எடுத்துக்கொள்வோம். குதிரைச் சந்தையில் பத்துபேர் ஆளுக்கொரு குதிரை வாங்க வந்திருப்பதாகவும், ஆனால் அங்கு 8 பேர்

தான் ஆளுக்கொரு குதிரையை விற்க வந்திருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அந்த 8 குதிரைகளும் ஒரே தரமானவை என்றும் யூகித்துக்கொள்வோம். குதிரை வாங்க விரும்பும் ஒவ்வொருவரும் இன்னின்ன விலைக்கே வாங்க வேண்டுமென நினைக்கலாம். அந்தந்த விலையை வாங்குவோரின் சொந்த விலை எனலாம். சான்றாக, ஒருவன் ரூ. 280-க்கு மேல் வாங்கக்கூடாதென விரும்பலாம். எனவே, அவன் கொடுக்க விரும்பும் அதிகபட்ச விலை 300 ரூபாய்தான். அதற்கும் குறைவாகக் கொடுத்து வாங்கினால் அவன் மகிழ்ச்சியடையலாம். அதேபோல் மற்றொருவனின் சொந்த விலை ரூ. 280 ஆக இருக்கலாம். இதேபோல் குதிரை வாங்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் அவரவரின் மனநிலைக் கேற்ப ஒவ்வொரு சொந்த விலை இருக்கும். இதேபோல் விற்கவரும் ஒவ்வொருவரும் இந்தெந்த விலைக்கே விற்க வேண்டுமெனக் கருதலாம். ஒருவன் ரூ. 100க்கும் குறைவாக விற்கக் கூடாதெனக் கருதலாம். மற்றொருவன் ரூ. 110க்குக் குறைவாக விற்கக் கூடாதென நினைக்கலாம். இவ்வாறு விற்கவரும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சொந்த விலை இருக்கும். அந்த விலைக்குக் கீழ் விற்கக்கூடாதென அவர்கள் நினைப்பதால் அவ் விலையைக் குறைந்தபட்ச விலை எனக் கொள்ளலாம். இவ்வாறாக, குதிரை வாங்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சொந்த, அதிகப்பட்ச விலையுண்டு. விற்க விரும்புவோர் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்ச விலை ஒன்றிருக்கும். இதனைக் குறிப்பிடக் கீழ்க்காணும் அட்டவணை உதவியாயிருக்கும்.

வாங்குபவன்	அவனது விலை (இந்த விலைக்கும் குறைவாக எந்த விலையிலும் வாங்கலாம்)	விற்பவன்	அவனதுவிலை (இந்த விலைக்கும் அதிகமாக எந்த விலைக்கும் விற்கலாம்)
	ரூபாய்		ரூபாய்
வா 1	300	வி 1	100
வா 2	280	வி 2	110
வா 3	260	வி 3	150
வா 4	240	வி 4	170
வா 5	220	வி 5	200
	——		——
வா 6	210	வி 6	215
வா 7	200	வி 7	210
வா 8	180	வி 8	250
வா 9	170		
வா 10	.50		

சந்தையின் சூழ்நிலை இவ்வாறிருந்தால் அதிக விலை கொடுத்து வாங்க விரும்பும் முதல் ஆள் ரூ. 300 கொடுக்கத் தயாராயிருப்ப தால் எவருமே அவருக்கு விற்கத் தயங்கமாட்டார்கள். ஆனால் சந்தையில் 100 ரூபாய்க்கும் குதிரை கிடைக்கிறது. எனவே, விற்போரும் வாங்குவோரும் தமக்குள் போட்டியிடுவதால் எந்த விலை சந்தையில் நிருணயமாகும்? வாங்க விரும்பும் 5-வது ஆள் ரூ. 220க்கும் குறைவாக வாங்க விரும்புகிறார் என்பது தெளிவு. விற்க விரும்பும் 5-வது ஆள் ரூ: 200-க்கும் அதிகமாக விற்க விழை கிறார். எனவே, இவர்களிருவரும் பேரம் நடத்தி எந்த விலையை நிருணயிக்கின்றனரோ அந்த விலையில் குதிரைகள் வாங்கப் படும் அல்லது விற்கப்படும். எனவே 5-வது விற்போரையும் வாங்குவோரையும் 'இறுதி நிலை இணை' எனலாம். அவ்வாறாயின் 5 குதிரைகள் மட்டுமே சந்தையில் விற்பனையாகும்.

வட்டிக் கொள்கை

பாம் பாவர்க்கின் இரண்டாவது முக்கியமான கருத்து வட்டி பற்றியது. வட்டி ஏன் வசூலிக்கப்படுகிறது என்பதற்கு உளவியல் சார்ந்த விளக்கத்தைத் தருகிறார். இன்றைக்குக் கையிலுள்ள 106 ரூபாய் அடுத்த ஆண்டு கைக்கு வரப்போகும் 100 ரூபாயை விட அதிக மதிப்புடையதாகவே எல்லாரும் கருதுவர். இன்றைக் குள்ள 100 ரூபாய் வரும் ஆண்டில் 105 அல்லது 119 ரூபாய்க்குச் சமமாகும் என்று நினைப்பது மனித இயல்பு. ஏனெனில் இன்றைக்குக் கையிலிருப்பது உறுதியான பணம். அடுத்த ஆண்டு வரப்போவதோ நிச்சயமற்றது. இதனால் வருங்கால வருவாயைவிட இன்றைய வருவாய்க்கே நாம் அதிக மதிப்புத் தருகிறோம். கையி லுள்ள ஒரு புறா புதரிலுள்ள இரண்டு புறாக்களுக்குத்தான் சம மாகுமே தவிர புதரிலுள்ள ஒரு புறாவும் கையிலுள்ள ஒரு புறாவும் சமமாகா. நிகழ் காலத்திற்கு அதிக மதிப்பும் வருங்காலத் திற்குக் குறைந்த மதிப்பும் தருவது மனித இயல்பு. எனவே நிச்சயமான இன்றைய பண்டங்களைக் கொடுத்து, நிச்சயமற்ற எதிர் காலப் பண்டத்தை அடையவேண்டுமானால் அதற்குத் தூண்டு கோள் அவசியம். இத் தூண்டுகோளே வட்டி எனப்படும். இன்றைக்கு ரூ. 100 அளிக்கக்கூடிய பயனை அடுத்த ஆண்டு அதே 100 ரூபாய் அளிக்காது என்றே மக்கள் நம்புகின்றனர். இம்மனப் போக்குக் காரணத்தால்தான் 100 ரூபாய் கடன்பெற விரும்புவோர் அடுத்த அண்டில் 110 ரூபாயாகத் திருப்பிக் கொடுக்க முன்வருகின் றனர். அதேபோல் முதலாளியும் இன்று கையிலுள்ள 110 அல்லது 115 ரூபாயாகச் சம்பாதிக்க முடியும். அவ்வாறு அவன் செய்யா மல் 100 ரூபாயைக் கடனாகக் கொடுத்தால் 110 அல்லது

115 ரூபாய் திரும்பி வரவேண்டுமென எதிர்பார்ப்பான். இவ்வாறு பாம் பாவர்க் விளக்கிய வட்டிக்கொள்கையை உளவியல் சார்ந்த கொள்கை என்பர்.

சுற்றுவழி உற்பத்தி முறை (Round-about producution)

பண்டைக் காலத்திய மனிதர்கள் பெரும்பாலும் தங்கள் கையாலேயே வேலை செய்தனர். மீனவர்கள் தங்கள் கைகளாலேயே மீன் பிடித்தனர். இவ்வாறு செய்யும் உற்பத்தியை நேரடியான முறை என்பர். ஆனால் இம் முறையில் அதிக அளவு உற்பத்தி செய்ய இயலாது. சான்றாக மீனவர்களுக்கு வலையும் படகும் இருந்தால் அதிக மீன்களைப் பிடிக்க இயலும். படகும் வலையும்; உற்பத்திச் சாதனங்கள். இச் சாதனங்களைச் செய்வதற்கு ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள்கூட ஆகலாம். அதுவரை மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லாமல் வலையையும் படகையும் செய்ய வேண்டும். அல்லது அவற்றைச் செய்து தரும் மற்றவர்களுக்கு அதற்கு ஈடாகப் பொருள்தர வேண்டும் எப்படிப் பார்த்தாலும் வலையையும் படகையும் செய்ய வேண்டுமானால் நேரத்தை ஒதுக்கவேண்டும். எனவே, முதற் கருவிப் பொருள்களைக்கொண்டு உற்பத்தி செய்யும் முறையை சுற்று வழி முறை என்கிறார் பாம் பாவர்க். நேரடியாக மீனைப் பிடிப்பதற்குப் பதிலாக நேரத்தையும் பணத்தையும் செலவிட்டுப் படகையும் வலையையும் செய்து, பின்னர் மீன் பிடிப்பது சுற்று வழி முறை தானே! ஆனால் இம் முறையினால் காலதாமதம் ஆனாலும் உற்பத்தி பன்மடங்கு பெருகும் என்ற உண்மையை விளக்கிய பெருமை பாம் பாவர்க்கையே சேரும்.

முடிவுரை

பண்டங்களின் மதிப்பு அவற்றை உற்பத்தி செய்யத் தேவைப்படும் உழைப்பின் அளவைப் பொறுத்தது என்றனர் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள். இக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவ அமைப்பு முறைக்கே முடிவு கட்ட எண்ணினர். ஆனால் ஆஸ்திரியக் குழுவினர் பண்டத்தின் பயனே அதன் மதிப்பை நிருணயிக்கும் அளவுகோல் என்றனர். குறைந்து செல் பயன் விதியின் அடிப்படையில் சம இறுதி நிலைப் பயன் விதியை வகுத்து நுகர்வோரின் உச்சநிலைத் திருப்தியை ஆராய்ந்தனர். இதன் வாயிலாகத் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாட்டிற்கு மாறாக 'இறுதி நிலைப் பயன்' அடிப்படையில் பண்டங்களின் மதிப்பு நிருணயமாவதாக வாதாடினர். எனவே அவர்கள் வாதத்தை 'இறுதிநிலை வாதப் புரட்சி, (marginal

Revolution) என்று ஒரு சிலர் கூறினர். ஆனால் உண்மையில் ஆஸ்திரியக் குழுவினர் கார்ல் மார்க்ஸின் பொருளாதாரத்திற்கு விரோதமாகத்தான் இறுதி நிலை வாதத்தைப் பிரித்தனர். மார்க்ஸியக் கோட்பாடுகளை முறியடிக்கும் நோக்கத்தோடு தான் பாம் பாவர்க் அவர்கள் 1886-ல் "கார்ல் மார்க்ஸும் அவரது பொருளாதார அமைப்பிற்கு முடிவும்" (Karl mark and the close of His System) என்னும் நூலை வெளியிட்டார். இந் நூலில் மார்க்ஸிம் வாதத்திற்கே தான் முடிவு கட்டி விட்டதாகவும் இனிமேல் அவரது வாதமே தலைகாட்டாதென்றும் கூறியுள்ளார். எனவே, ஆஸ்திரியக் குழுவினரைத் தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கு எதிரானவர்களாகக் கருதுவதே சிறந்தது. மேலும் தொன்மை அறிஞர்களின் பொருளாதாரக் கொள்கைகளான தலையிடாக் கொள்கை, தனிமனிதனின் சுதந்திர உரிமை ஆகியவற்றை ஆஸ்திரியக் குழுவினர் குறை கூறியதே இல்லை.

மேலும், இறுதி வாதக் கோட்பாடுகளையும் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடுகளையும் இணைத்து ஆல்பிரட் மார்ஷல் தொன்மைப் பொருளாதார மறு மலர்ச்சியை ஏற்படுத்தினர். இதிலிருந்து தொன்மைப் பொருளாதாரத்திற்குத் துணையாகத்தான் இறுதி நிலை வாதம் கருதப்பட வேண்டுமென்பது தெளிவாகிறது. 'இறுதி நிலை; என்னும் கருத்து இன்றைய பொருளாதார ஆய்வின் முக்கியமான கருவியாகக் கருதப்படுகிறது. இதனைத் தந்து உதவிய பெருமை ஆஸ்திரியக் குழுவினரைச் சேரும்.

தொழில் புரட்சிக்குப் பின் ஏராளமான பொருள்கள் பேரளவில் உற்பத்தியாகி, சிற்சில சமயங்களில் விற்பனையின்றித் தேங்கிக் கிடந்த காலத்தில் தோன்றியவர்கள் இறுதி நிலை வாதிகள். எனவே, உற்பத்தியைப் பற்றி அவர்கள் அதிகம் பேசாமல், உற்பத்தியான பொருள்களை நுகர்வதெப்படி என்பதில் மட்டும் அக்கறை காட்டினர். எனவே, 'உண்டு களிப்போரின் உள்ளப் போக்கை மட்டும் சுட்டிக் காட்டி முடிவு கட்டுபவர்கள்' என்றும் "வெறும் நுகர்ச்சிப் பொருளாதார அறிஞர்கள்" என்றும் இவர்களைப் பலர் பழித்துரைத்தனர்.

நாட்டின் வளம், மக்கள்தொகை வளர்ச்சி, நிலத்தின் கருமைத் தனம், தேசிய வருமானத்தைப் பங்கிடும் முறை ஆகியவை போன்ற மாபெரும் பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்ந்தனர் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள். ஆனால் இறுதி நிலை வாதிகளோ பண்டமதிப்புப் பிரச்சினைக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்து தேவை, அளிப்பு ஆகியவற்றின் சமநிலை என்னும் சுழல்

காற்றில் பொருளாதார இயலைச் செலுத்திவிட்டனர் என்றும் சிலர் குறைகூறுவர். இது பெரும்பாலும் உண்மையே, தொன்மைப் பொருளாதார அறிஞர்கள், தம் காலத்தியப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முறையில் ஆராய்ந்தனர். ஆனால் ஆஸ்திரியக் குழுவினரோ வெறும் கருத்தியல் ரீதியில் பகுத்தறி முறையைப் பின்பற்றிப் பயனையும் அதனை அடிப்படையாகக்கொண்ட தேவையையும் மட்டுமே ஆராய்கின்றனர். எனவே, தராசிலுள்ள முள்ளை ஓர் ஓரமாகச் சாய்த்துவிட்டனர் என்றும் குறைகூறப்படுகின்றனர். எனினும், மதிப்பீட்டுக் கொள்கையில் மனிதனின் விருப்பத்திற்கே முக்கியத்துவம் தந்ததன் வாயிலாகப் பொருளாதார ஆய்வை விரிவுபடுத்திய பெருமை இறுதிநிலை வாதிகளுக்கு என்றும் உண்டு.

ஏழாம் பிரிவு

நவீனப் பொருளாதாரம்

தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடுகளையும் இறுதி நிலை வாதக் கோட்பாடுகளையும் ஒன்றாக இணைத்துத் தொன்மைப் பொருளாதாரத்திற்குப் புத்துயிர் கொடுத்த பெருமை ஆங்கில நாட்டு அறிஞரான ஆல்பிரட் மார்ஷலைச் சேரும். அவரது 'பொருளாதாரத் தத்துவங்கள்' அண்மைக் காலம்வரை எல்லா நாட்டவராலும் போற்றப்பட்ட நூலாகும். தொன்மைப் பொருளாதார ஆய்விற்கு ஸ்மித்தின் நூல் மையமாக இருந்ததைப் போல் நவீனப் பொருளாதார விளக்கத்திற்கு மார்ஷலின் நூலே நடுநாயகமாக விளங்குகிறது. மார்ஷலின் நூல் தொன்மைப் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமைக்குரியது. மார்ஷல் 'பயன்பாடு' என்னும் கருத்தை ஆதாரமாகக் கொண்டு தேவை விதியைப் புனைந்தார். அதற்குப் புனர் விளக்கமாக இன்று சம நோக்குக் கோடுகளின் (Indifference curves) ஆய்வுமுறை வளர்ந்துள்ளது. இதனை விளக்குவதற்கு இங்கு இடமில்லை.

அடுத்து, மார்ஷலின் சிறந்த மாணவர்களில் ஒருவரான பிகு என்பவர் பொருளாதாரத்தின் குறிக்கோள் மக்களின் நலனை அதிகரிப்பதே என்ற வாதத்தைத் தொடங்கினார். அவரது காலத்திலிருந்து இன்றுவரை பல பொருளாதார அறிஞர்கள் மக்களின் நலத்தின் இயல்பையும் அதனை அளவிடும் முறையையும் ஆய்ந்து வந்துள்ளனர். இவ்வாய்வை 'நலப் பொருளாதார' ஆய்வு என்பர்.

நவீனப் பொருளாதாரத்தில் 'அமைப்பு வாதப் பொருளாதாரமும்' முக்கிய இடம் பெறுகிறது. இது அமெரிக்காவில் அண்மையில் தோன்றிய புது வகை ஆய்வாகும். மக்களின் பொருளாதார

நடவடிக்கைகள் அவர்களது பழக்க வழக்கங்களாலும் சமூக, அரசியல், பொருளாதார அமைப்புக்களாலும் நிருணயமாகின்றன என்பதை வலியுறுத்துவதே அமைப்பு வாதப் பொருளாதாரம் ஆகும். இப் பொருளாதார ஆய்வைத் தொடங்கிய பெருமை தார்ஸ்டீன் வெப்லனைச் சாரும்.

இறுதியாகக் காலஞ்சென்ற ஜே. எம். கெயின்ஸ் பிரபு அவர்கள் 1836-ல் 'பொதுக் கோட்பாடு' என்னும் புரட்சிகரமான நூலை வெளியிட்டதன் வாயிலாகப் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் ஒரு புது யுகத்தை ஏற்படுத்தியுள்ளார். தொன்மைப் பொருளாதாரக் கருத்துகளுக்கும் கொள்கைகளுக்கும் மாறான கருத்துகளையும் கொள்கைகளையும் கெயின்ஸ் விளக்கியுள்ளார். எனவே, அவரது பொருளாதாரத்தைப் 'புதுப் பொருளாதாரம்' என அழைப்பது வழக்கம். கெயின்ஸின் பொருளாதார ஆய்வை ஆதரித்தும் எதிர்த்தும் பல நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

24. தொன்மைப் பொருளாதார மறுமலர்ச்சி

(New-Classical Economics)

ஆல்பிரட் மார்ஷல்
(Alfred Marshall)

தொன்மைப் பொருளாதாரக் கருத்துகளும் கொள்கைகளும் பல ஆண்டுகள் செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும் அவற்றை எதிர்த்தோர் ஏராளம்; தூற்றியோர் பலர். நாட்டுப் பற்றின் அடிப் படையில் 'நாட்டுப் பொருளாதார' நூல் எழுதிய பிரடெரிக் லிஸ்ட் தொன்மைப் பொருளாதார அறிஞரின் அனைத்து நாட்டுப் பொருளா தார நோக்கினை வன்மையாகக் கண்டித்தார். ராஸ்கர், ஷ்மாலர் போன்ற வரலாற்றுவாதப் பேரறிஞர்கள் தொன்மைப் பொருளா தார இயலின் அடிப்படையையே பழித்தனர். சோஷியலிச வாதி களோ தொன்மைப் பொருளாதாரத் தத்துவங்களையே குறை கூறினர்; அவற்றிற்குப் பதிலாகப் புதிய தத்துவங்களையும் கொள் கைகளையும் பறை சாற்றினர். இறுதி நிலை வாதிகள் பண்டத்தின் மதிப்பை நிருணயிப்பது அதன் பயனே என்றனர்; அதன் உற் பத்திச் செலவு அல்ல என்று மறுத்தனர். ஜே. எஸ். மில் அவர்கள் பொருளாக்கத் துறைக்கு ஒருவகை விதிகள் என்றும், பங்கீட்டுத் துறைக்கு வேறு வகை விதிகள் என்றும் பாகுபடுத்தியது பொருளா தார இயலை இரு கூறுகளாக்கியது. பொருளாதாரம் அறிவியலாக மதிக்கப்பட வேண்டுமாயின் அதன் பல்வேறு பகுதிகளுக்கும் பொதுவான விதிகள் அவசியம். அவையில்லையேல் பொருளா தாரம் பக்குவமற்ற இயலாகவே கருதப்படும்.

தமது நூலை 1848-ல் மில் வெளியிட்ட பின்னர் பொருளாதார உலகமே பல முக்கிய மாறுதல்களால் பாதிக்கப்பட்டிருந்தது.

விஞ்ஞான வளர்ச்சியும் உற்பத்தித் துறையில் புகுத்தப்பட்ட புதிய முறைகளும் பல பொருளாதாரப் பிரச்சினைகளை உருவாக்கின. புதிய கண்டுபிடிப்புக்களும் எந்திரமயமான தொழிற்சாலைகளும் புதிய பல தொழில் சிக்கல்களுக்கு வழிவகுத்தன. அடிக்கடி ஏற்பட்ட வர்த்தகச்சுழற்சிகள் உற்பத்தியாளரை மட்டுமன்றி, நுகர்வோரையும் பாதித்தன.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் தலையிடாக் கொள்கையால் விளையும் தீமைகளை அரசாங்கம் உணர்ந்தது. கட்டுப்பாடில்லாத போட்டியினால் பல தொழிலதிபர்களும் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டனர். தொழிற் சங்கங்கள் தோன்றி தனியுரிமைக் கொள்கையை நசுக்கின. வறுமை, வேலையின்மை என்னும் சமூக நோய்கள் பெரும்பாலான மக்களை வாட்டின. இவ் வாட்டத்தைப் போக்கத் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வழி ஏதும் கூறவில்லை. எனவே, தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகள் காலத்திற்கொவ்வாதவை என்றும் புறக்கணிக்கப் படவேண்டியவை என்றும் மக்கள் நம்பினர் ஒவ்வொரு தலை முறைக்கும் புதுப்புதுப் பிரச்சினைகளும் சிக்கல்களும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். அவற்றைத் தீர்த்து வைப்பதே அந்தந்தத் தலைமுறையினரின் கடமை. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய புதுப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளின் குறைகளை நீக்கி, காலத்திற்கேற்ப அவற்றை மாற்றி அமைப்பதற்கு ஆற்றல் மிக்க அறிஞர் ஒருவர் தேவைப் பட்டார். இத்தேவையைப் பூர்த்திசெய்து, தொன்மைப் பொரு ளாதாரத்திற்குப் புத்துயிர் அளிக்கத் தோன்றிய பேரறிஞர்தான் ஆல்பிரட் மார்ஷல்.

வாழ்க்கைக் குறிப்பு

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வழிவந்த ஆல்பிரட் மார்ஷல் 1842ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26ஆம் நாள் இங்கி லாந்திலுள்ள கிளப்ஹாம் (Clapham) என்னுமிடத்தில் பிறந்தார். இவரது தந்தை இங்கிலாந்து தலைமை வங்கியின் (Bank of England) நிதித்துறை அதிகாரியாகப் பணியாற்றினார். தன் மகன் பாதிரி யாகப் புகழ்பெற வேண்டுமென்று தந்தை விரும்பினார். எனவே, தொன்மை இலக்கியங்களையே ஆல்பிரட் மார்ஷல் படிக்க வேண்டு மென்பது தந்தையின் விருப்பம். மகனோ கணிதத்தில் ஆர்வம் கொண்டு இலக்கிய நூல்களை உதறித்தள்ளினார். பள்ளி மாணவனா யிருந்தபொழுதே கணிதம் என்றால் மார்ஷலுக்குத் தேவாமிர்தம்.

தெருவில் போய்க்கொண்டிருக்கும்போதே கடினமான யூக்லிட் (Euclid) சூத்திரங்களுக்கு மனக்கணக்கில் விடை கண்டுபிடிப்பது வழக்கமாம். கணக்கும் சதுரங்க ஆட்டமும் (Chess) தந்தையால் விலக்கப்பட்டிருந்தன. ஆனால் விலக்கப்பட்ட கனி கவர்வதைப் போல் இவ்விரண்டுமே மார்ஷலைக் கவர்ந்தன.

தன் மாமனாரின் துணையாலும், தன் திறமைக்குக் கிடைத்த பரிசுத் தொகையாலும் தூண்டப்பட்டு மார்ஷல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்குக் கணித நூல் பயின்று சிறப்புடன் தேறினார். அங்கேயே கணித நூல் ஆசிரியராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். பாதிரியாகப் பணியாற்றும் ஆர்வம் இல்லாதபோதிலும், அவர் சிறந்த ஒழுக்கம் உடையவர்; கிறித்துவப் பண்பு நிறைந்தவர். அவருடைய கனிந்த உள்ளம் நாட்டு மக்களின் வறுமையைக் கண்டு நெகிழ்ந்தது. வறுமையை ஒழிப்பதில் அவருக்குப் பேரார்வம் ஏற்பட்டது. வறுமைப் பிணியை அகற்றுவது எப்படி என்று விவாதிக்கும்போது அவர் நண்பர் ஒருவர் ஜே. எஸ். மில்லின் நூலைப் படிக்கச் சொன்னார். அப்போதிருந்தே பொருளாதார இலக்கியங்களைக் கற்கத் தொடங்கினார். ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ போன்ற அறிஞர்களின் நூல்களைக் கற்றார்.

1868ஆம் ஆண்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலுள்ள ஜான்கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றத் தொடங்கிய மார்ஷல் ஒன்பது ஆண்டுகள் அப் பணியைத் திறம்படச் செய்தார். 1875-ல் 'புதிய நாடுகளின் தொழில் பாதுகாப்புப் பிரச்சினைகளை' ஆராய அமெரிக்காவிற்குச் சென்றார். இங்கிலாந்து திரும்பியதும், அமெரிக்கப் பொருளாதார நிலைமைகள் பற்றிக் கட்டுரை எழுதினார். இதில் அமெரிக்கா மிகப் புகழ்பெற்ற நாடாக முன்னேறு வதற்குரிய வாய்ப்பைப் பெறக் கூடுமென்றும் கூறினார். அச்சமயத்தில் தான் குமாரி மேரி பேலி (Miss Mary paley) என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இப் பெண் மார்ஷலின் மாணவி. நியூஹம் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர் திருமணமாகி 47 ஆண்டுகள் இருவரும் ஒற்றுமையாய் ஒருவருக்கொருவர் துணை செய்து இலட்சியத் தம்பதிகளாக வாழ்ந்தனர்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகச் சட்டப்படி திருமணமான காரணத்தால் மார்ஷலுக்குக் கொடுக்கப்பட்ட வேலையும் உதவித் தொகையும் ரத்து செய்யப் பட்டன. எனவே, பிரிஸ்டல் நகரின் கல்லூரி ஒன்றில் கல்லூரி முதல்வராகவும் பொருளாதாரப் பேராசிரியராகவும் அமர்ந்தார். பல் வேறு அலுவல்கள் காரணமாக உடல் நலம் குன்றிய மார்ஷல் அவ் வேலையை 188:-ல் ராஜி

ளுமா செய்தார். இத்தாலியிலுள்ள ஆல்ப்ஸ் மலைச் சரிவில் ஓராண்டுக் காலம் ஓய்வு எடுத்த பின்னர், மறுபடியும் பிரிஸ்டல் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். 1883-ல் உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ் போர்ட் பல்கலைக் கழகப் பேராசியரும் வரலாற்று நிபுணருமான அர்னால்ட் டாயன்பி (Arnold Toynbee) காலமானதால், அவ்ரது நண்பரின் உதவியால் மார்ஷலுக்கு ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகத்திலேயே வேலை கிடைத்தது. ஈராண்டுக் காலம் அங்குப்பணியாற்றிய பின்னர் தன் தாய்ப் பல்கலைக் கழகத்திற்கே சென்று பொருளாதாரப் பேராசிரியராக 23 ஆண்டுகள் பணியாற்றினார். 1908-ல் ஓய்வு பெற்ற பின்னும் அவர் காலமாகும் வரை பொருளாதார ஆராச்சித் துறையில் பணி புரிந்து வந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலேயே 30 ஆண்டுகள் தொடர்ந்து வாழ்ந்து வந்தார். பல கல்லூரி மாணவர்களுக்குப் பண உதவி செய்தார். அவர் இல்லத்திலிருந்த பெரிய நூல் நிலையத்தையும், தாம் எழுதிய நூல்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தையும், தமது சொத்தையும் அவர் காலதிற்குப் பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துக்கே அன்பளிபாகத் தந்த வள்ளல் இவர்.

மார்ஷலின் நூல்கள்

ஆல்பிரட் மார்ஷல் எழுதிய நூல்கள் பல. இவற்றை எழுதுவதற்குத் துணையாக இருந்தவர் அவர் மனைவி மேரி பாலி. 1878-ல் மார்ஷல் எழுதிய 'தொழில் துறைப் பொருளாதாரம்' (Economics of Industry) என்னும் சிறு நூலைத் தம் மனைவியோடு சேர்ந்து கூட்டாக எழுதினார். பொருளாதார இயலைக் கற்க ஆரம்பித்தவுடனே மார்ஷலின் எண்ணத்தில் பற்பலப் பொருளாதாரக் கருத்துகள் உருவெடுத்தன. உலகப் புகழ் பெற்ற "பொருளாதாரத் தத்துவங்கள்" (Principles of Economics) என்ற நூலைப் பல ஆண்டுகளாக எழுதித்திருத்தி 1890-ல் வெளியிட்டார். அவருடைய பெரிய நூல்களில் ஒன்றாகிய "தொழிலும் வாணிபமும்" (Industry and Trade) 1918-ல் வெளியானது. இறுதியாக, 1922-ல் பிறிதொரு பெருநூலை "பணம், கடன், வாணிகம்" (Money, credit and commerce) என்ற தலைப்பில் வெளியிட்டார். 1891-94-ல் தொழிலாளர் நிலையை ஆராய நியமிக்கபட்ட ராயல் கமிஷனிலும், 1893-ல் வறியோர், வயோதிகர் நிலையை ஆராய நியமிக்கப்பட்ட ராயல் கமிஷனிலும் உறுப்பினராகப் பணியாற்றினார். இக் கமிஷனின்கள் வெளியிட்ட அறிக்கைகளைத் தயார் செய்வதற்கு மார்ஷல் உதவினார்.

பொருளாதாரக் கருத்துகளைத் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துரைக்க வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர் மார்ஷல்.

PUBLIC

தனது நூலின் ஏதாவதொரு பகுதியைப் பற்றி யாராவது குறை கூறினால் மனம் தாள மாட்டார். எனினும், அவர் மீது கோபம் கொள்ளாமல், ஒரு வேளை தான் எழுதிய முறை தவறாக இருக்குமோவென்று, அதனைத் திருத்தி வெளியிடுவார். இறுதி நிலைக் கருத்துகள் அவர் உள்ளத்தில் பல ஆண்டுகள் கருவுற்றிருந்தன. எனினும் அவற்றைப் பிழையின்றி வெளியிட வேண்டுமென்பதற்காகக் காலம் தாழ்த்திக்கொண்டே வந்தார். இக் கருத்துகளை முதன் முதலில் ஜெவான்ஸ் வெளியிட்டுவிட்டார். எனவே, மார்ஷலின் நூல் வெளியானபோது அது எவ்விதப் பரபரப்பையும் உண்டாக்கவில்லை. பணம், கடன், வணிகம் பற்றிய நூல் வெளிவருவதற்குச் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னரே இவை பற்றிய கருத்துகளை மார்ஷல் சிந்திக்க முற்பட்டார். எனினும், தனது 80ஆம் வயதில்தான் அவற்றை நூலாக வெளியிட்டார். இவ்வாறு காலம் தாழ்த்தி வெளியிட்டது தனக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்ததெனக் கெயின்ஸ் குறைபட்டுக் கொள்கிறார். இந் நூலில் மார்ஷல் புதுமையான பல கருத்துகளை வெளியிட்டாரெனினும், அவை 50 ஆண்டுகளுக்கு முன்னரே வெளிவந்திருந்தால் பெரும் பயன் அளித்திருக்கும் என்பது கெயின்ஸின் கருத்து.

பொருளாதாரத் தத்துவங்கள்

அவருடைய நூல்களில் சிறந்தவை மூன்று: 'தத்துவங்கள்', 'தொழிலும் வாணிபமும்', 'பணம், கடன், வணிகம்' இவற்றில் தலை சிறந்ததும் நமது ஆய்விற்குகந்ததும் 'பொருளாதாரத் தத்துவங்கள்' தான். இந் நூலின் முதல் பதிப்பு 1890-ல் வெளியானபோது மார்ஷலுக்கு 48 வயது. இதனை வெளியிடுவதற்குமுன் சுமார் 25 ஆண்டுகள் பொருளாதாரத் தத்துவங்களை மனதில் எண்ணி எண்ணி, தம் கருத்துகளையெல்லாம் குறிப்பெடுத்துக்கொண்டு வந்தார். இந் நூலின் முதல் பதிப்பிற்கும் 1920-ல் வெளியான எட்டாம் பதிப்பிற்கும் அவ்வளவு அதிகமான வேறுபாடுகள் கிடையா. எனவே, இந் நூலை அவர் வெளியிட்டபோது, பல ஆண்டுகள் சிந்தித்ததன் பயனாக அது முழுமையும், முதிர்ச்சியும் பெற்று, நயமானதாகக் காட்சி அளித்தது. இது வெளி வருமுன், ரிக்கார்டோ, மில் ஆகியோரின் நூல்களே பொருளாதார உலகில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன. ரிக்கார்டோவின் கோட்பாடுகளையெல்லாம் மார்ஷல் கணித வடிவத்தில் உருவாக்கி வெளியிட்டதன் காரணத்தால் மார்ஷலின் நூலே பொருளாதார அரங்கில் செல்வாக்குடன் பிரகாசித்தது.

இறுதிப் பதிப்பாக வெளியான தத்துவங்கள் 870 பக்கங்கள் கொண்டது.. அதிலுள்ள ஆறு பகுதிகளில் முதல் பகுதி முன்னுரையாகும். இரண்டாவது பகுதி அடிப்படைக் கருத்துகளை விளக்கு

கிறது. மூன்றும் பகுதி விருப்பங்களையும் அவற்றின் திருப்தியை யும் ஆராய்கிறது. நான்காம் பகுதி உற்பத்திச் சாதனங்களைப் பற்றியது. ஐந்தாம் பகுதியில் தேவை, அளிப்பு, விலை நிருணயம் பற்றி ஆராய்கிருர். இறுதிப் பகுதியில் தேசிய வருமானப் பங்கீடு விளக்கப்படுகிறது.

வரையறையும் விதிகளும்

தன்னலமே பொருளாக்கத்திற்கு அடிப்படையான பண்பு என்றும், தன்னலத்தைப் பேணி வளர்த்தால் பொதுநலம் தானகவே வளரும் என்றும் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் கருதினர். மனிதனுக்குப் பொருளாதார நோக்கம் ஒன்றே பிரதானமெனப் பகன்ருர் டேவிட் ரிக்கார்டோ. இதனல் பொருளாதார இயல் பல வசைமொழிகளுக்கு ஆளானது. தியாக மனப்பான்மை, தேசியப் பற்று, சமயப்பற்று ஆகிய நற்பண்புகளையெல்லாம் புறக்கணித்து விட்டு, மனிதனின் தன்னலப் பண்பை மட்டும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் ஓர் அறிவியலா? சுயநலப் பேயை ஆரா யும் ஆய்வை எவ்வாறு சகித்துக்கொள்வது என்றெல்லாம் கார்லைல், ரஸ்கின் போன்ற இலக்கிய மேதைகள் கூறினர். இம் மாதிரிப் பரவிய தவருன கருத்துகளை நீக்கும் வகையில் மார்ஷல் பொருளா தார இயலுக்கு விளக்கம் தந்தார். பொருளாதார இயல் சாதாரண மனிதனின் அன்ருட வாழ்க்கையைப் பற்றிய அறிவியல். நல்வாழ் விற்குத் தேவையான பொருள்களை எப்படிப் பெறுவது? எவ்வகை யில் பயன்படுத்துவது என்பதில் தொடர்புடைய நடவடிக்கைகளைப் பற்றி அது ஆய்கிறது. எனவே, ‘ஒருபுறம் அது செல்வத்தைப் பற்றிய ஆய்வு; ஆனல் அதைவிட முக்கியமாக மனிதனைப் பற்றிய ஆய்வின் ஒரு பகுதியுமாகும்’ இது மார்ஷலின் கூற்று. மனிதன் பலவித நோக்கங்களையும் உணர்ச்சிகளையும் உடையவன். பொருள் தேடும் ஒரே நோக்கத்தில் மட்டும் மனிதன் வாழ்வதில்லை. எல்லாப் பண்பும் நோக்கமும் கொண்ட மனிதனைப் பற்றியே பொருளாதாரம் ஆய்கிறதெனினும், அவற்றையெல்லாம் அளவிடுவது கடினம். பணத்தால் அளவிடக்கூடிய மனிதனின் நோக்கத்தை மட்டும் பொருளாதாரம் ஆய்கிறது. பணம், மனிதனின் பொருள்சார் நோக் கத்தைத் திட்டவட்டமாக அளக்க முடியாதெனினும், வேறு அள வீட்டுக் கருவி இல்லாத காரணத்தால், பணத்தையே அளவிடும் கருவியாகக் கொள்ளலாம் என்பது மார்ஷலின் விளக்கம். இவ் விளக்கம் தந்த பின்னரே மனிதன் தன்னலப் பேய்’, ‘பொருளா தாரம் பண்புள்ள மனிதர்கள் படிப்பதற்கு அருகதையற்றது’ என்ற கருத்துகள் நீங்கின.

பொருளாதாரம் ஓர் அறிவியல் என்னும் கருத்தை உறுதி செய் தவர் மார்ஷல். பொதுவாக, மக்களின் பொருளாதார நடவடிக்கை

களிலுள்ள பொதுக் குணத்தை வலியுறுத்தினர். ஆனால் மனிதப் பண்பும் இயல்பும் மாறும் இயல்புடையதாகையால் பொருளாதாரம் அறிவியலிலிருந்து மாறுபட்டதென்பதையும் விளக்கினர். எனவே, பொருளாதார விதிகள் பொருளாதார நடவடிக்கைகளைப் ப்பற்றிய கூற்றுக்களே என்றார். வாழ்க்கையின் குறிக்கோளையோ அல்லது நோக்கத்தின் தன்மையையோ ஆராய்வது பொருளாதார இயலுக்கு அப்பாற்பட்டதென்றும் கூறினர். ஒவ்வொரு தலைமுறை யினருக்கும் ஏற்படுகின்ற சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பாடுபடு வதே பொருளாதார இயலின் நோக்கம். எனவே, பொருளாதாரம் வெறும் படிப்பிற்காக மட்டும் ஏற்பட்டதன்று; சமூகப் பிரச்சினைகளை ஆராயவும் அவற்றிற்குத் தீர்வு காணவும் வழிவகைகளைக் கூறும் நடைமுறை இயலும் ஆகும் என்பது மார்ஷலின் கருத்து.

மனித விருப்பம்

தொன்மைப் மொருளாதார அறிஞர்கள் உற்பத்திக்குமட்டும் சிறப்பிடம் தந்து நுகர்ச்சியைப் புறக்கணித்தனர். மனிதன் பொருள்களை அனுபவித்து இன்பம் அடைவதற்கே அவை உற்பத்தியாகின்றன. எனவே, மனிதனின் விருப்பத்தையும் அவன் இயல்பையும் மார்ஷல் விளக்கிக் கூறினார். பொருள்களை வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்றும், சௌகரியமானவை, போகப் பொருள்கள் என்றும் பாகுபடுத்தி அவற்றின் தராதரப் பயனை விளக்கினர். பொருளாதார நடவடிக்கைகளின் தொடக்க மும் முடிவும் நுகர்ச்சியிலேயே அடங்கியிருக்கிறதென்று கூறி, நுகர்ச்சிப் பகுதியையே முதலில் ஆராய்ந்தார்.

பதிலீட்டு விதி

மனிதனின் விருப்பத்தை நிறைவேற்றப் பல பொருள்கள் இருக்குமாயின் அவற்றில் மலிவானதைக்கொண்டு நிறை வேற்றுவதே இயல்பு. குளிர்பானம் அருந்த எத்தனையோ வகைப் பானங்கள் உள்ளன. ரோஸ்மில்க்கின் விலை அன்னாசிப்பழரசத்தின் விலையைவிட மலிவாக இருந்தால் ரோஸ்மில்க்கையே மக்கள் அதிக மாக நாடுவர். குறைந்த விலைப் பொருள்களைக்கொண்டு தேவையை நிறைவேற்றும் செயலைப் பதிலீட்டு விதியாக மார்ஷல் வகுத்தார். இவ்விதி நுகர்ச்சித் துறையில் மட்டுமன்றிப் பொருளாக்கத் துறை யிலும் காணப்படுவதாகும். பொருள் உற்பத்தி முறை தற்காலத்தில் மிகவும் சிக்கலானதாகக் காணப்படுகிறது. உற்பத்திச் சாதனங்களை யெல்லாம் தொழில் முயல்வோர் கட்டுப்படுத்த முடியும் எனவே, எச் சாதனங்கள் மலிவாகவும் இலாபகரமானதாகவும் உள்ளதோ அவற்றை அதிகமாகப் பயன்படுத்தி, கிராக்கியானவற்றை

குறைத்துக்கொள்வதை நாம் பார்க்கிறோம். தொழிலாளர் கூலி அதிகமாயிருந்தால், தொழில் முயல்வோர் விலை மிகுந்த மனித உழைப்பிற்குப் பதிலாக எந்திரங்களை நிறுவுவர். இதற்கு, அமெரிக்கத் தொழிலமைப்பு சிறந்ததொரு சான்றாகும்.

நுகர்வோர் உபரி

பொருளாதார இயலில் மார்ஷல் புகுத்தியுள்ள பல ஆராய்ச்சிக் கருவிகளில் நுகர்வோர் உபரி ஒன்றாகும். பொருளின் பயன் பாட்டிற்கும் விலைக்குமுள்ள தொடர்பினை ஆராய்ந்த மார்ஷல் இக் கருத்தை முதன்முறையாகப் புகுத்தினார். ஒருவன் தான் விரும்பும் பொருளுக்கு என்ன விலை கொடுக்கத் தயாராயிருக்கின்றானோ அவ் விலையைவிட அதிகமாகக் கொடுத்து அப்பொருளை வாங்க மாட்டான். எனவே, கொடுப்பதற்குத் தயாராக இருக்கும் விலைக்கும் உண்மையில் கொடுக்கும் விலைக்குமுள்ள வேறுபாட்டை நுகர்வோர் உபரி என அழைக்கலாம். பேனா வாங்க விரும்பும் ஒருவன், நல்ல பேனாவின் விலை ரூ. 10 இருக்குமென நினைக்கிறான். ஆனால் அவன் விரும்பிய பேனா கடையில் ரூ. 5-க்குக் கிடைக்கிறது. அப்படியானால் அவனுக்கு ரூ. 5 மிச்சமாகிறது. இம்மாதிரி கிடைக்கும் மிச்சத்தையே நுகர்வோர் உபரி என்று மார்ஷல் குறிப்பிடுகிறார்.

மார்ஷலின் இக் கருத்தை ஒரு மாயக்கருத்தென்றும், நுகர்வோர் உபரி என்பது கற்பனையானதென்றும் பேராசிரியர் நிக்கல்சன் (Prof. Nicholson) கூறினார். "நூறு பவுன் வருமானத்தின் பயன் பாடு ஆயிரம் பவுன் பெறுமானமுள்ளது என்று சொல்வதால் என்ன பயன்" என்று நிக்கல்சன் கேட்டார். இதற்கு மார்ஷல் கூறிய விளக்கம் வருமாறு: இப்படிச் சொல்வதன் பயன் நுகர்வோர் சூழ்நிலை வேறுபாட்டை உணர்த்துவதாகும். மத்திய ஆஃப்ரிக்க வாழ்க்கையையும் இங்கிலாந்து வாழ்க்கையையும் ஒப்பிட நேர்ந்தால், அப்போது இங்கிலாந்தில் கிடைக்கும் பல பொருள்கள் ஆஃப்ரிக்காவில் கிடைப்பதில்லையாகையால், அங்குள்ள ஒருவனுக்கு 1000 பவுன் வருமானம் இருந்தாலும், அவன் இங்கி லாந்தில் 300 பவுனைக்கொண்டு பெறக்கூடிய நலனைக்கூட அடைய மாட்டான். எனவே, நுகர்வோர் உபரி என்பது வாழ்க்கைச் சூழ் நிலையைப் பொறுத்தது. இதனை மேலும் விளக்க மார்ஷல் வேறு சில சான்றுகளையும் தந்தார். இவ்வாராய்ச்சிக் கருவி வரிவிதிப்பு முறை யிலும் உற்பத்தித் துறையிலும் பெரும் பயனுள்ளதாக விளங்குகிறது.

தேவை நெகிழ்ச்சி

பொருள்களின் விலைகள் சிறிது மாறினால் அவற்றிற்கான தேவை மாறுவது இயல்பு. ஆனால் எல்லாப் பொருள்களுக்கும்

தேவை ஒரே அளவில் மாறுவதில்லை. சில பொருள்களின் விலை சிறிது ஏறினாலும் அவற்றிற்கான தேவை பெரிதும் குறைந்து விடுகிறது. வேறு சில பொருள்களின் விலை கணிசமாக ஏறினாலும் அவற்றிற்கான தேவை அவ்வளவாகக் குறைவதில்லை. எனவே, தேவை நெகிழ்ச்சி பலவிதப் பண்டங்களுக்குப் பல்வேறு அளவு களில் காணப்படுகிறது என்பது மார்ஷலின் கருத்து. உப்பின் விலை குறைந்தாலும் தேவை அளவு அதிகரிப்பதில்லை. எனவே, உப்பின் தேவை நெகிழ்ச்சி அற்பமே எனக் கொள்ளவேண்டும். தேவை நெகிழ்ச்சியின்மைக்கு உப்பு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். துணிமணிகள், பட்டு, தங்கம் போன்ற பொருள்களின் விலை குறைந்தால், இவற்றின் தேவை அளவு அதிகரிக்கும். எனவே இவைகளுக்குத் தேவை நெகிழ்ச்சி மிகுதியாக இருக்கிறது. இக் கருத்து வரிவிதிப்பு முறைக்கும் உற்பத்தித் துறைக்கும் பெரிதும் பயனுள்ளதாகும். மார்ஷல் கணிதமேதை என்ற முறையில் தேவை நெகிழ்ச்சியை அளவிடும் சூத்திரத்தையும் கொடுத்துள்ளார். தேவை நெகிழ்ச்சி என்ற கருத்து புதியதெனினும், அதனை அவர் எவருமே ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் இதனைப் புகுத்தி யுள்ளார். மார்ஷல் கண்டுபிடித்த பொருளாதார ஆராய்ச்சிக் கருவிகளிலெல்லாம் தேவைநெகிழ்ச்சியே பெரும் பயனுள்ளதென கெயின்ஸ் கூறியுள்ளார்.

உற்பத்திக் காரணிகள்

உற்பத்திக் காரணிகளை நிலம், உழைப்பு, மூலதனம் என்று பாகுபடுத்துவதே வழக்கத்தில் இருந்தது. மார்ஷல் இயற்கையும் மனிதனுமே முக்கியமான மூலக்காரணிகள் என்கிறார். முதலும் தொழிலமைப்பும் மூலக்காரணிகளின் வழியாகத் தோன்றியவை என்பது மார்ஷலின் கருத்து.

குறைந்துசெல் விளைவு விதி

குறைந்துசெல் விளைவு விதி மிகப் பழமையானதெனினும், மார்ஷல் இதற்குப் புதுவிளக்கம் தந்து, இவ் விதியை எவ்வாறு மனிதன் தற்காலிகமாகச் செயலற்றதாக ஆக்கமுடியுமென விளக்குகிறார். பயிர்த்தொழிலில் முன்னேற்றம் இருந்தாலொழிய, நிலத்தில் செல விடும் உழைப்பிற்கும் மூலதனத்திற்குமேற்ப விளைச்சல் பெருகாது என்பது மார்ஷலின் விளக்கம். எனினும், முன்னேற்றமடைந் துள்ள நாடுகளில் உற்பத்திச் செலவை இருமடங்காக்கி, நிலத்தின் விளைச்சலையும் இருமடங்காக அதிகரிக்கலாம். ஆனால் இது தற்காலிகமான அதிகரிப்பே. இவ்வாறு அதிகரிப்பதற்கும் ஓர் வரம்பு உண்டு. நிலத்தின் விளைச்சல் மண் வளத்தையும் விளையும் பயிரின் இயல்பையும் பொருத்ததாகும் என்றார். இயல்பான,

அழிக்க முடியாத இயற்கை வளம் என்ற ரிக்கார்டோவின் கருத்தைத் திருத்தி அமைத்தார் மார்ஷல். மண்ணின் வளம் நிரந்தரமானதன்று; காலத்திற்கும் இடத்திற்குமேற்ப மாறும் இயல்புடையது என்று கூறினுர் மார்ஷல். இவ் விதியானது நிலத்தில் மட்டுமன்றிச் சுரங்கத் தொழிலிலும் செயல்படுகிறதென்பது அவர் கருத்து.

மக்கள் தொகைக் கருத்து

மக்கள் தொகைப் பிரச்சினை மிகப் பழமையானதென மார்ஷல் கூறினுர். மக்கள் தொகைக் கொள்கையை வகுத்த மால்தஸ் மூன்று சூத்திரங்களை ஆதாரமாகக் கொண்டு விளக்கினுர் என்பதை முன்னரே கண்டோம். இவற்றில் முதல் சூத்திரம் மட்டுமே உண்மையானது; பிற இரண்டும் நாகரிக வளர்ச்சியினுல் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டன என்று மார்ஷல் கூறினுர். மக்கள் தொகை இனப்பெருக்கத்தால் மட்டுமன்றி, குடியிறக்கத்தாலும் அதிகரிக்கலாம். இனப்பெருக்கத்திற்குக் காரணமாகிய திருமணம் மக்களின் பொருளாதார வசதிகளையும் வெப்பதட்ப நிலையையும் சார்ந்தது என்பது மார்ஷலின் கருத்து. உடல்நலம் கொண்ட பெரிய குடும்பமே நாட்டிற்குப் பயன் தருவது என்பது அவரது நம்பிக்கை. பெரிய குடும்பத்தில்தான் திறமையும் அறிவும் மிக்க மக்கள் இருப்பர் என்று கூறினுர் மார்ஷல். இது மால்தஸின் கருத்திற்கு முற்றிலும் வேறுபட்டது. மால்தஸே பெரிய குடும்பத்தில் பிறந்தவர்தான்; பதினுறு பிள்ளைகளில் கடைசி மகன் மால்தஸ். ஒருவேளை மார்ஷல் கூறும் கருத்திற்கு மால்தஸே எடுத்துக்காட்டாக இருக்கிருர் போலும்.

மதிப்பு நிருணயம்

மார்ஷலின் பொருளாதாரத் தத்துவங்கள் விலை நிருணயத்தை மையமாகக் கொண்டவை. தேவை, அளிப்பு ஆகிய இரு சக்திகளும் ஒன்றுக்கொன்று சமமாகும் சமநிலைப் பிரச்சினையாகவே விலை நிருணயத்தைக் கருதினுர். தொன்மைப் பொருளாதார நிபுணர்கள் பொருள்களின் அடக்கச் செலவே விலையை நிருணயிக்கும் மூல காரணம் என்றனர். எனவே, அளிப்புச் சக்திக்கே முதலிடம் தந்தனர். இறுதிநிலை அறிஞர்களோ பொருள்களின் பயன்பாடே விலையை நிருணயிக்கிறதென்று கூறி, தேவைச் சக்தியை வலியுறுத்தினர். இவ்விரண்டு முரண்பாடான கொள்கைகளிலுமுள்ள குறைகளை நீக்கி, தேவை, அளிப்பு ஆகிய இரு சக்திகளுக்குமே முக்கியத்துவம் தந்தார் மார்ஷல். தேவை என்பது ஒரு பண்டத்தை வாங்கத் தயாராயுள்ள மக்களின் விருப்பத்தீவிரத்தால் அமைவதாகும். வாங்க விரும்பும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு

விலை கொடுக்கத் தயாராயிருப்பர். இவ் விலையை வாங்கல் விலை எனலாம். இது பண்டத்தின் இறுதி நிலைப்பயனையும் பணத்தின் இறுதி நிலைப்பயனையும் சமப்படுத்தும் சாதனம் என்றூர். எனவே, தேவை, குறைந்து செல் இறுதி நிலைப்பயன்பாட்டு விதியை ஆதார மாகக் கொண்டதாகும். இதுபோல் விற்பனையாளருக்கும் பல்வேறு விற்பனை விலையுண்டு. இவ் விலை பணத்தின் இறுதி நிலைப்பயனை யும் உற்பத்திச் செலவுகளையும் பிரதிபலிப்பதாகும்.

தேவை விலையும் அளிப்பு விலையும் ஒன்றுக்கொன்று சமமா கின்ற சமநிலையிலேயே விலை நிருணயமாகிறதென்று மார்ஷல் விளக்கிஞர். தேவைக்கோடு, அளிப்புக் கோடு ஆகியவற்றைப் பயன்படுத்திஞல் இவ்விரு கோடுகளும் ஒன்றையொன்று வெட்டு கின்ற இடத்தில் விலை நிருணயிக்கப்படுகிறதெனபது மார்ஷலின் கூற்று. இதனை எளிமையாக விளக்குவதற்குக் கத்தரிக்கோலின் சான்றைத் தருகிறூர். ஒரு காகிதத்தையோ துணியையோ வெட்ட வேண்டுமாயின், கத்தரிக்கோலிலுள்ள இரண்டு முனைகளும் அவசியம். இவ்விரண்டு முனைகளும் ஒன்றுக்கொன்று எதிர்த் திசை யில் நகர்ந்தே வெட்டமுடியும். ஒரு முனை மட்டும் வெட்ட இயலாது. அதேபோல், விலையை நிருணயிப்பதற்கு அளிப்பு, தேவை ஆகிய இரு சக்திகளும் அவசியம். தேவை மட்டுமோ அல்லது அளிப்பு மட்டுமோ தனித்து விலையை நிருணயம் செய்ய இயலாது. இவ்விரு சக்திகளும் ஒன்றுக்கொன்று நேர்மாருன இயல்புடையனவென்று மார்ஷல் விளக்கிஞர்.

மேலும், அளிப்பு, தேவை, விலை ஆகிய மூன்றும் ஒன்றை யொன்று பாதிக்கக்கூடியவை என்றூர். அளிப்பு அதிகமாஞல் விலை குறைந்து தேவை விரிகிறது; குறைந்தால் விலை உயர்ந்து தேவை சுருங்குகிறது. தேவை அதிகமாஞல் விலை ஏறுகிறது; குறைந்தால் விலை தாழ்கிறது. விலை ஏறிஞல் அளிப்பு அதிகரிக் கிறது; தேவை குறைகிறது. விலை தாழ்ந்தால் அளிப்பு குறை கிறது, தேவை அதிகரிக்கிறது. எனவே, அளிப்பு, தேவை, விலை மூன்றும் ஒன்ருெடொன்று பிணைக்கப்பட்ட தொடர்புடையவை என்பதைத் தெளிவாக விளக்குகிறூர். இவை சந்தையில் செய லாற்றும் முறை சிக்கலானது. எனவே மதிப்பு நிருணயப் பிரச் சினையை எளிய முறையில் விளக்க முடியாது என்ற முடிவிற்கு வருகிறூர்.

மதிப்பு நிருணயமும் கால அளவு அம்சமும்

மதிப்பு நிருணயப் பிரச்சினையை எளிதாக்குவதற்கும், அங்காடி விலைக்கும் இயல்பான விலைக்குமுள்ள வேறுபாட்டை விளக்குவதற்

கும் மார்ஷல் கால அளவு அம்சத்தைப் புகுத்தினர். கால அளவை நீண்டகாலம், குறுங்காலம் எனப் பாகுபடுத்தினர். நீண்டகாலம் என்பது, தேவைக்கேற்பப் பொருள்களின் உற்பத்தியைச் சரிக்கட்டுவதற்குத் தேவைப்படும் காலமாகும். குறுங்காலத்தில் தேவை அதிகரித்தாலோ குறைந்தாலோ அதன் அளிப்பு மாருமல் அப்படியே இருக்கும். அதனை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியாத காலத்தைக் குறுங்காலம் என்றூர்.

கடலிலுள்ள மீன்கள் அனைத்தும் அணுகுண்டுச் சோதனையால் நஞ்சுள்ளவைகளாக ஆகிவிடுவதாக வைத்துக்கொள்வோம். மீன் சாப்பிடுபவர்கள் புலால் சாப்பிட விரும்புவதாகவும் கொள்வோம். இந் நிலையில் புலாலுக்குத் தேவை 500 கிலோவாக உயர்வதாகக் கொண்டால், அன்றுடம் அங்காடிக்கு வழக்கமாக வரும் 200 கிலோ புலாலுக்குக் கிராக்கி அதிகரித்து ஒரு கிலோ ரூ. 7-க்கு விற்ற புலால் ரூ. 12-க்குக்கூட விற்கப்படலாம். இதனுல் புலால் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் அதிக இலாபம் பெறுவர். அங்காடியின் விலை ஏறிவிட்டதால் அதிக அளவு புலாலை உடனடியாக விற்பனைக்குக் கொண்டுவர இயலாது. எனவே, அங்காடி விலை பெரும்பாலும் தேவைச் சக்தியால் நிருணயிக்கப்படுகிறதென்றூர். அதாவது, குறுகிய காலத்தில் ‘பயன்பாடு அல்லது தேவைச் சக்தியே’ விலையை நிருணயிக்கிறது. புலால் விலை ஏறி அதிக இலாபம் பெறும் வியாபாரிகளும் ஆட்டு மந்தை வைத்திருப்போரும் அதிக அளவுப் புலாலை அங்காடிக்குக் கொண்டுவர விரும்புவர். ஆட்டு மந்தையை விரிவாக்கவும் புலாலின் அளிப்பைத் தேவைக்கேற்ப அதிகரிக்கவும் மூன்று மாதங்களாகலாம். ஒரே மாதத்தில் 1000 கிலோ, 2 மாதத்தில் 2000 கிலோ, மூன்று மாதத்தில் 3000 கிலோவென்று புலாலின் அளிப்பு அதிகரித்தால் அங்காடி விலை படிப்படியாக இறங்கி, கடைசியில் தேவைப்படும் புலாலின் அளவும் வழங்கப்படும் அளவும் சமமாகின்றது. இந்நிலையில் புலாலின் விலை அடக்கச்செலவிற்குச் சமமாகிறது. எனவே, நீண்டகாலத்தில் அடக்கச்செலவே பொருள்களின் இயல்பான விலையை நிருணயிக்கிறதென்று மார்ஷல் கூறினர்.

சுருங்கக்கூறின், குறுகியகால அங்காடியில் பயன்பாடு விலையை நிருணயிக்கிறது; நீண்டகால அங்காடியில் அடக்கச்செலவு மதிப்பை நிருணயிக்கிறது. இவ்வாருக, அங்காடியின் கால அளவில், நீண்டகால அங்காடி, குறுங்கால அங்காடி என்னும் பாகுபாட்டைப் புகுத்தி, விலை, அளிப்பு, தேவை ஆகிய மூன்றின் தொடர்புகளையும் முறையாகவும் தெளிவாகவும் விளக்கிய முதல் அறிஞர் மார்ஷலே. இவ்வாருக, அடக்கச்செலவுக்கோட்பாட்டிற்கும் பயன்பாட்டுக்கோட்பாட்டிற்கும் உள்ள முரண்பாட்டை

நீக்கி இரண்டையும் ஒன்ருகஇணைத்து விட்டார். இந்த இணைப்பை ஒரு மாபெரும் சாதனை எனலாம். ஏனெனில் விலைக் கொள்கையில் ஓர் ஒருமைப்பாட்டையே மார்ஷல் ஏற்படுத்திவிட்டார்.

மார்ஷலின் பங்கீட்டுக் கோட்பாடு

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பொருளாக்கத் துறையில் மனிதனுல் மாற்ற முடியாத இயற்கை விதிகள் செயல்படுகின்றன என்றனர். பங்கீட்டுத் துறையில் கூலி, குத்தகை, இலாபம் முதலியன மக்கள் இயற்றும் சட்டங்களால் நிருணயிக்கப்படுகின்றன வென்று ஜே. எஸ். மில் கூறினுர். ஆனுல் இக் கூற்றை ஆஸ்திரியப் பொருளாதார அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நுகர்வுப் பண்டங்களின் மதிப்பு எவ்வாறு அவற்றின் பயன்பாட்பாட்டால் நிருணயிக்கப்படுகிறதோ, அதுபோலவே அவற்றை உற்பத்தி செய்யும் காரணிகளின் மதிப்பும் நிருணயிக்கப்படும் என்றனர். ஆனுல் காரணிகளின் பயன்பாடு அவை உற்பத்தி செய்யும் நுகர்வுப் பண்டங்களின் பயன்பாட்டைப் பொறுத்தது. எனவே, காரணிகளின் மதிப்பு, நுகர்வுப் பண்டங்களின் பயன்பாட்டைச் சார்ந்தது என்று வாதாடினர். மார்ஷல் இறுதி நிலை வாதிகளின் விளக்கத்திற்கேற்பப் பங்கீட்டுக் கோட்பாட்டை அமைக்கின்ருர். பண்டங்களின் மதிப்புக் கோட்பாட்டையே உற்பத்திக் காரணிகளின் மதிப்பு விளக்கத்திற்கும் பொருத்துகிருர். இதனுல் பண்டங்களின் விலைகள் வேறு சக்திகளாலும், அவற்றை உற்பத்தி செய்யும் காரணிகளின் விலைகள் வேறு சக்திகளாலும் நிருணயிக்கப்படுகின்றன என்ற முரண்பாடான விளக்கம் நீங்குகிறது.

நீண்ட காலத்தில் பண்டங்களைப் போலவே காரணிகளின் மதிப்பும் அவற்றின் உற்பத்திச் செலவால் நிருணயிக்கப்படுகின்றன; இது நிலத்தைத் தவிர, பிற காரணிகளுக்குப் பொருந்தும் விளக்கமாகும். ஆனுல், குறுகியகால விலை நிருணயத்தை ஆராயும்போது ஆஸ்திரியப் பொருளாதார அறிஞரின் விளக்கத்திற்கேற்பத் தம் கோட்பாட்டை அமைத்துக் கொள்கிருர். காரணிகளின் இறுதிநிலை உற்பத்தி ஆக்கமே அவற்றின் விலையை நிருணயம் செய்கின்றன. இதற்குச் சான்ருக உழைப்பாளிகளின் கூலியை எடுத்துக்கொள்வோம். வயலில் ஒருவன் மட்டும் பாடுபட்டால் 20 கலம் நெல் விளைகிறதெனக் கொள்வோம். இரண்டுபேர் உழைத்தால் 30 கலம் நெல் கிடைக்கலாம். மூன்றுபேர் பாடுபட்டால் 38 கலம் நெல்லும் நான்குபேர் உழைத்தால் 42 கலமும் விளைகிறதென்ருல், 2-வது, 3-வது, 4-வது ஆட்களின் உற்பத்தித் திறனின் மதிப்பு முறையே 10 கலம், 8 கலம், 4 கலம் என்ருகும். இப்பொழுது நான்கு பேரும் ஒரே திறமை, ஊக்கமுடையோர் எனக் கொண்டால், அனைவருக்குமே

ஒரே கூலி கொடுக்க வேண்டும். நான்காவது ஆள் இறுதி நிலை ஆள் என்று கொண்டால் அவனுக்குக் கிடைக்கும் கூலி 4 கலம் நெல். இதே கூலியையே மற்ற மூவரும் பெறுவர். எனவே, கூலியை நிருணயிப்பது கூலியாள்களின் இறுதிநிலை ஆக்கம் என்ருகிறது. இறுதிநிலைப் பயன் எப்படி நுகர்வுப் பண்டங்களின் விலையை நிருணயிக்கிறதோ, அதேபோல் உற்பத்திக் காரணிகளின் விலையை அவற்றின் இறுதி நிலைத் திறன் நிருணயிக்கிறதெனலாம். கூலி மட்டுமன்றி, நிலத்தின் வாரம், மூலதனத்தின் வட்டி ஆகியவையும் இறுதி நிலை உற்பத்தித் திறனாலேயே நிருணயிக்கப்படுகிறதென்ருர் மார்ஷல்.

பொருளாதாரத் துறையிலும் பங்கீட்டுத் துறையிலும் வெவ்வேறு விதிகள் செயலாற்றுகின்றன என்று இருந்த நிலை மார்ஷலின் விளக்கத்தினால் மறைகிறது. இரு துறைகளிலுமே இறுதி நிலைக் கொள்கையே செயல்படுகிறதென்பது புலனாகிறது. எனவே, எல்லாத் துறையிலும் ஒரே மாதிரியான விதிகளே இயங்குகின்றன என்ற உண்மையைப் புலப்படுத்தியதன் வாயிலாகப் பொருளாதாரத்தை முழுமையானதோர் அறிவியலாக மார்ஷல் அமைத்தார் எனலாம். அவருடைய மாபெரும் சாதனைகளில் இதுவும் ஒன்று.

பொதுவாகக் கூறுமிடத்து உற்பத்திக் காரணிகளின் விலை அவற்றின் அளிப்பு அளவாலும் அவற்றிற்கேற்படும் தேவை அளவாலும் நிருணயமாகின்றது. நீண்ட காலத்தில், காரணிகளின் அளிப்பு அவற்றிற்கான உற்பத்திச் செலவைச் சார்ந்தது. நிலத்திற்கு உற்பத்திச் செலவில்லையாதலால் நிலத்தை இவ்வாய்விலிருந்து மார்ஷல் ஒதுக்கிவிடுகிருர். காரணிகளின் தேவை அளவு அவற்றின் இறுதி நிலை உற்பத்தி ஆக்கத்தைச் சார்ந்ததென்று மார்ஷல் கூறுகிருர்.

முதன்மைச்செலவும் துணைச் செலவும் (Prime and Supplimentary cost)

ஒரு பொருளின் உற்பத்திச் செலவை இரு இனங்களாகப் பிரிக்கலாம். உற்பத்திக்கு நேரடியாகச் செய்யப்படும் செலவை மார்ஷல் முதன்மைச்செலவு என்ருர். சான்ருக, பருத்தி நெசவாலையில் பஞ்சு, நூல், தொழிலாளர் கூலி ஆகியவை முதன்மைச் செலவு. உற்பத்தி அதிகரிக்க வேண்டுமாயின், முதன்மைச் செலவையும் அதிகரிக்க வேண்டும். அதாவது, உற்பத்தியின் அளவுக்கேற்ப முதன்மைச் செலவு மாறும். மாருக, முதலீட்டிற்கான வட்டி ஆலைப் பாதுகாப்பாளர் கூலி, அலுவலக ஊழியர்களின் சம்பளம் போன்ற செலவுகள் உற்பத்தியின் அளவைச் சார்ந்தவை அல்ல உற்பத்தியின் அளவுக்கேற்ப இச் செலவு மாறுவதில்லை. இச் செலவை துணைச் செலவு என்று மார்ஷல் கூறினர்.

அகச்சிக்கனமும் புறச்சிக்கனமும்

எந்தத் தொழிலிலும் பொதுவாகப் பல ஆலைகள் இருக்கும். அவையனைத்தும் ஒரே அளவாகவோ ஒரே மாதிரியாகவோ இருக்காது. பெரிய ஆலைகளில் உயர்தர எந்திரங்களையும், பயிற்சி பெற்ற தொழிலாளரையும் அமர்த்த முடியும். கச்சாப் பொருள்களை மலிவாக வாங்கவும் சாத்தியமாகிறது. அவற்றால் ஏற்படும் சிக்கனங்கள் பிற ஆலைகளுக்குக் கிடைக்காது. இச் சிக்கனங்களை மார்ஷல் அகச் சிக்கனங்கள் என்றார்.

ஒரே இடத்தில் பல ஆலைகள் இருக்குமானால் அவ்வாலைகளுக்கெல்லாம் பொதுவான பல நன்மைகள் இருக்கும். போக்குவரத்து வசதி, வங்கி வசதி, ஆலை எந்திரங்களைப் பழுதுபார்க்கும் வசதி, தொழிலாளர்களின் பயிற்சி, அங்காடி நிலைபற்றிய செய்திகள் ஆகிய வசதிகளால் எல்லா ஆலைகளுக்குமே சிக்கனம் ஏற்படுவதுண்டு. இவ்வாறு, சூழ்நிலையால் ஏற்படும் வசதிகள் எல்லா ஆலைகளுக்கும் பொதுவானவை. இவற்றை மார்ஷல் புறச்சிக்கனங்கள் என்றார்.

போலிவாரம் (Quasi rent)

எதிர்பாராத சூழ்நிலையின் காரணத்தால் ஏதாவதொரு பொருளின் அளிப்பு, தேவையைவிடக் குறைவாயிருந்தாலோ அல்லது அளிப்பைவிடத் தேவை அதிகமாக இருந்தாலோ அப் பொருளின் விலை தற்காலிகமாக உயரும். இதனால் சாதாரண இலாபத்தைவிட அதிக இலாபம் கிட்டும். இவ்வாறு ஏற்படும் எதிர்பாராத இலாபத்தை மார்ஷல் போலிவாரம் என்றார். சான்றாக, திடீரென ஒரு நாட்டின் குடியரசுத்தலைவர் இறந்துவிட்டால் அந்நாட்டவர் துக்கதினத்தை அனுசரிப்பர். துக்கதினத்தை அனுசரிக்கக் கருப்புத்துணி அவசியமானால் அத் துணியை உடனடியாக உற்பத்தி செய்ய இயலாது. எனவே, கருப்புத் துணியின் தேவை அதிகரித்து,அதன் விலை உயரும். இதனால் அத் துணி வியாபாரிகளுக்கு எச்சமாக இலாபம் கிடைக்கும். இவ்வாறு எச்சமாகக் கிடைக்கும் தற்காலிக இலாபத்தைப் போலிவாரம் எனலாம் என்று மார்ஷல் கூறினார்.

மாதிரி நிறுவனம் (Representative firm)

விலை நிருணய விளக்கத்தில் மாதிரி நிறுவனம் என்ற கருத்தை மார்ஷல் புகுத்தினார். ஒரு பொருளின் இயல்பான விலையைத் தீர்மானிப்பதற்காக இக் கருத்து புகுத்தப்பட்டது. ஒரு தொழிலிலுள்ள பல நிறுவனங்கள் வெவ்வேறு சராசரிச் செலவில் பொருளை உற்பத்தி

செய்யும்போது எந்த நிறுவனத்தின் சராசரிச் செலவைக் கணக்கிடுவது என்ற சந்தேகத்தைத் தீர்ப்பதற்காகவே மார்ஷல் இக் கருத்தைப் புகுத்தினார். அவரின் விளக்கப்படி 'நீண்ட காலத்தில் ஓரளவு வெற்றியுடன், சுமாரான மேற்பார்வையில், ஓரளவு அகச் சிக்கனங்களும் புறச்சிக்கனங்களும் பெற்று, முடிந்த அளவு உற்பத்திசெய்து, நல்லமுறையில் விற்பனைசெய்யும் நிறுவனமே மாதிரி நிறுவனமாகும். இத்தகைய நிருவனத்தைக் கண்டுபிடிப்பது மிகக் கடினம் என்று பின்னால் வந்த பொருளாதார அறிஞர்கள் இக் கருத்தில் குறை கண்டனர்.

மார்ஷலின் ஆய்வுமுறை

மார்ஷல் ஒரு கணித மேதை என்றாலும் பொருளாதார இயலில் கணித முறையைக் கையாளவில்லை. கணித முறைகளை அடிக் குறிப்பில்தான் தந்தார். பொருளாதார இயலுக்கு இம் முறை அவசியமல்ல என்பதே அவரது கருத்து. கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது மட்டும் கணித முறையைக் கையாண்டார். கட்டடம் கட்டுவதற்குச் சாரம் அமைப்பது போலவே கணிதமுறை பொருளாதாரஇயலில் பயன் படுத்தப்பட்டது மார்ஷல் பெரும்பாலும் உளவியல் வழி முறையையே கையாண்டார்.

பொருளாதாரம், பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய அறிவியலாக இருக்க வேண்டுமென்றே மார்ஷல் விரும்பினார். ஆனால் பொருளாதாரத்துறை எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது. மக்கள் தொகை, மக்களின் விருப்பம், தேவை, விஞ்ஞான வளர்ச்சி, பொருளாக்க வழி முறைகள் ஆகிய அனைத்தும் மாறிக்கொண்டும் வளர்ந்து கொண்டும் இருப்பதால், பொருளாதார இயல் வளர்ச்சியே முக்கியக் குறிக்கோளாக இருக்க வேண்டுமெனக் கருதினார். மாறும் எல்லாச் சக்திகளையும் ஒரே நேரத்தில் ஆராய முடியாதாகையால் ஒவ்வொரு சக்தியையும் தனித்தனியாக ஆராய்ந்தார். இதற்கு, மற்றவை மாறாதிருந்தால் (Other things being equal) என்ற நிலையை அவர் உருவாக்க வேண்டியிருந்தது. நுகர்வோன், உற்பத்தியாளன் எவ்வாறு செயல்படுகிறான் என்பதைத் தனித்தனியாகப் பிரித்து ஆராய்ந்தார். தொழில், வணிக அலுவல்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பிரித்து அணு அணுவாக ஆராய்ந்தார். எனவே, மார்ஷலின் நூலை அணு நிலைப் பொருளாதார நூல் என்பர்.

மார்ஷலின் செல்வாக்கு :

மார்ஷலின் செல்வாக்கு 1935ஆம் ஆண்டுவரை நீடித்தது. அதுவரை பொருளாதார உலகில் ஆட்சி செய்த பெரிய மேதை

யாகவே விளங்கினுர். இங்கிலாந்தின் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் அவருடைய மாணவர்களே பெரும்பாலும் பேரா சிரியர்களாயிருந்தனர். மார்ஷல் பணியாற்றிய கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் உலகப்புகழ் பெற்றதாயிற்று. பின்னுல் உலகப் புகழ்வாய்ந்த பொருளாதார அறிஞர்களான ஏ. சி. பிகு, ஜே.எம். கெயின்ஸ், டென்னிஸ் ராபர்ட்சன், ஆர். எ. ப் ஹராட் திருமதி ஜோன். ராபின்சன் முதலானேர் மார்ஷலின் மாணவர் களே. அவரது நூலை ஆதாரமாகக் கொண்டு பல பொருளாதார ஆய்வுகள் தோன்றின. இவரால் தோற்றுவிக்கப்பட்ட கேம் பிரிட்ஜ் பொருளாதாரக்குழு பொருளாதார இயலைத் தனிப்பாடமாகப் பல கல்லூரிகளில் ஏற்படுத்தியது. மார்ஷல் ஆரம்பித்த ராயல் பொருளாதாரக் கழகத்தால் வெளியிடப்படும் பொருளாதார இதழ் உலகிலேயே தலை சிறந்த பொருளாதார வெளியீடாக மதிக்கப் படுகிறது.

மதிப்புரை

மார்ஷலின் 'பொருளாதாரத் தத்துவங்கள்' தனிச் சிறப்பு வாய்ந்தவை. பழைய கருத்துகளையும் கொள்கைகளையும் தற் காலத்திற்கேற்பத் தொகுத்துச் சீர்படுத்திய செம்மல் மார்ஷல். அவரது கொள்கைகளை ஆராய்ந்து வரவேற்ற பல அறிஞர்களும் சீடர்களும் அவரைப் பொருளாதார மறுமலர்ச்சியின் தந்தை எனப் பாராட்டினர். அவருடைய கல்வியும், தொழில், வாணிபம், வங்கிச் செலாவணித் துறைகளைப் பற்றிய நுண்ணறிவும் வேறு எந்தப் பொருளாதார அறிஞருக்கும் இருந்ததாகக் கூற முடியாது. அவர் பொருளாதார அறிஞர் மட்டுமல்லர்; வரலாற்று நிபுணர்; அரசியல் ஞானி; தத்தவப் பேரறிஞர்; கணித மேதை. இத்தகைய பரந்த அறிவும் நுட்பமான ஆய்வுத்திறனும் அவர் மேற்கொண்ட பொறுப்பை வெற்றிகரமாகச் சாதிக்க உதவின. சிதறிச் சிதைந்து கிடந்த பொருளாதாரக் கொள்கைகளையும் ஒன்று திரட்டிப் பெரிய தொரு அறிவியலாகப் பொருளாதார இயலை மாற்றி அமைத்த பெருமை மார்ஷலையே சேரும்.

மார்ஷல் பொருளாதார இயலுக்குப் புதுப் புது ஆராய்ச்சிக் கருவிகளைத் தந்துதவிய பெருமகன். தேவை நெகழ்ச்சி, நுகர் வோர் உபரி, பதிலீட்டு விதி, முதன்மைச் செலவு, துணைச்செலவு, அகச்சிக்கனங்கள், புறச்சிக்கனங்கள், போலிவாரம், மாதிரி நிறு வனம், சமநிலை ஆகிய புதுக் கருத்துகள் தற்காலத்திலும் பெரு மளவில் பயன்படும் சிந்தனைக் கருவிகளாகும். பண்டங்களின் விலை நிருணயத்தில் பல ஆண்டுகள் இருந்து வந்து முரண்பாடான கருத்துகளெல்லாம் மறையும் விதத்தில் தேவை, அளிப்பு ஆகிய

வற்றின் சம நிலையைக் கொண்டு புதியதொரு விளக்கம் தந்தவர். அவருடைய மதிப்பு நிருணயக் கொள்கையும், பகிர்வுக் கொள்கையும், முழுமையும் நிறைவும் பெற்று முக்கியத்துவம் பெற்றன

உண்மை எது என்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தவர் மார்ஷல். உண்மை என்னும் செங்கல்களைக் கொண்டு தன் பகுத்தறிவின் உழைப்பால் பொருளாதார அறிவியல் என்னும் கட்டடத்தை அழகுற அமைத்த சிற்பி அவர். அவருடைய நூல் என்றும் மங்காத பொலிவுடன் கூடிய பொருளாதார இலக்கிய நூல்களில் ஒன்றாக உயர்வு பெற்றுள்ளது. பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில், மதிப்பு நிருணயக் கொள்கைக்கும் பங்கீட்டுக் கொள்கைக்கும் தொடர்பினை ஏற்படுத்திப் பொருளாதார இயல் வளர வழிகாட்டிய செம்மலாக மார்ஷல் மதிக்கப்படுகிறார். இவ்வளவு உயரிய பண்புகளையும் ஆற்றலையும் கொண்ட மார்ஷல் எல்லாரிடமும் பணிவு காட்டியது மறக்க இயலாதது.

25. நலப்பொருளாதாரம்

(Welfare Economics)

பொருளாதார இலக்கியத்தில் சமூக நலன்பற்றிய விளக்கங்கள் பல உள்ளன. இதனை நலப் பொருளாதாரம் என்று கூறுவது மரபு. பொருளாதார நூல்களிலும் விவாதங்களிலும் அதிகமாகப் பயன் படுத்தப்படும் சொல் இதுவே. எனினும், நலப் பொருளாதாரம் என்றுலென்ன என்பதை எவரும் திட்டவட்டமாகக் கூறியதில்லை. ஒரு நாடு பின்பற்றும் பொருளாதாரக் கொள்கைகளின் குறிக்கோள் பற்றியதே நலப் பொருளாதாரம் எனச் சிலர் கூறுவர். அக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதால் சமுதாயத்திற்கு என்ன விளைவு கள் ஏற்படுகின்றன என்பதை ஆய்வதே நலப் பொருளாதாரம் என்று வேறு சிலர் கூறுவர். பொருளாதாரம் என்ற சொல்லைப் போல் நலப் பொருளாதாரம் என்பதும் இன்னும் சரியாக வரை யறுக்கப்படாததாகும்.

நலப் பொருளாதாரம் என்பது பொருளாதார நலனைப் பற்றியதா அல்லது சமூக நலனைப் பற்றியதா என்பதில் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன. பொருளாதார நலன் என்பது வேறு சமூக நலன் என்பது வேறு என்று சிலர் கருதுவர். சமூக நல னில் ஒரு பிரிவுவே பொருளாதார நலன் எனக் கூறுவர் வேறு சிலர். சமூக நலனும், பொருளாதார நலனும் ஒன்றே எனக் கருது வோரும் உளர். இவ்வாறு கருதும் சிலர் மனிதனின் சுதந்திரம், உள்ளுணர்வு, குடும்பம், சொத்து என்று பாராமல் அரசாங்கம் பொது நலனை எண்ணிக் கொள்கைகளை வகுக்கவேண்டுமென்பர். அவ்வாறு கூறுவோரில் ஏ. சி. பிகு (A. C. Pigou) முக்கிய மானவர்.

நலப் பொருளாதாரம் என்ற சொல்லை முதன் முதலில் பயன் படுத்தியவர் பிகுதான். “நலம் பற்றிய பொருளாதாரம்” (The Economics of welfare) என்னும் தலைப்பில் 1920-ல் ஒரு நூலை வெளி

யிட்டார். இந் நூல் வெளியாகுமுன், 'திருப்தி', 'மகிழ்ச்சி' என்ற சொற்களே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. மகிழ்ச்சி, திருப்தி என்னும் சொற்கள் நெறியியல் பொருளில்தான் பயன் படுத்தப்பட்டன. பயன் வழிக் கொள்கையினர் இப் பொருளில் தான் அச் சொற்களைப் பயன்படுத்தினர். ஆனால், பொருளாதார இயலில் அறநெறிக்கு இடமில்லை எனக் கருதிய அறிஞர்கள் அவ் வியலின் தொடர்பை அகற்றினர். மக்களின் நலன் உயர என்ன செய்யவேண்டும், எதையெதைச் செய்தால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதிலேயே நலப் பொருளாதாரம் அடங்கியிருக்கிறது. இவ் வகையில் இது, பொருளாதாரம் என்ன என்பதை மட்டும் ஆராயும் "இயல்புப் பொருளாதாரத்திலிருந்து (Positive Economics) வேறுபட்டதாகும். என்ன கொள்கையைப் பின்பற்றினால் சமுதா யத்திற்கு நல்லது என்பதைத் தீர்மானிக்க வேண்டுமாயின் அற வியலை நாம் புறக்கணிக்க இயலாது. எனவே, நலப் பொருளா தாரம் அறவியல் அடிப்படையில் ஆயப்படுகிறதென்பதை இன்று எல்லாரும் ஒப்புக்கொள்வர். சிலர் ஆடம் ஸ்மித்தின் காலத்திலி ருந்தே நலப் பொருளாதாரம் தோன்றியுள்ளது என்று கூறுவர். இது முற்றிலும் தவறு. ஏனெனில் ஆடம் ஸ்மித்தின் பொருளா தாரம் செல்வத்தைப்பற்றியதேயன்றி, நலனைப் பற்றியதல்ல. அது மகிழ்ச்சி பற்றிய பொருளாதாரமே. நலன் பற்றிய பொருளாதார ஆய்வு பிகூ காலத்திலிருந்தே தொடங்கியது.

நலப் பொருளாதாரம் என்பது பொருளாதாரக் கொள்கைகள் எந்தெந்த அடிப்படையில், எந்தக் குறிக்கோளோடு வகுக்கப்பட வேண்டும் என்பது பற்றிய ஆய்வாகும். இது பொருளாதார இயலின் ஒரு பகுதியாகும். இது மருத்துவ இயலைப் போன்றது. மேலும், பொருளாதார நலன் என்பது ஒரு நாட்டு மக்களின் நலன் பற்றியதாகவோ அல்லது பல்வேறு நாட்டவரின் நலன் பற்றியதா கவோ இருக்கலாம். பிறநாட்டு வாணிபத்தால் ஏற்படும் நலன் களை நாம் ஆராயும்போது, பல்வேறு நாட்டவரின் நலன் அடிப் படையிலேயே ஆய்கிறோம். அரசாங்கம் விதிக்கும் பல்வேறு வரி களின் விளைவுகளும், தரும் பணமானியத்தால் தோன்றும் விளைவு களும் நலப் பொருளாதார ஆய்வில் இடம் பெறும்.

நவீனப் பொருளாதார ஆய்வானது நுகர்வையும், பயனையும், இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்ட தேவையையும் ஆதாரமாகக் கொண்டது. தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் செல்வத்தைப் பற்றியே ஆராய்ந்தனர். ஆனால் இன்று செல்வத் திற்குப் பதிலாக, மக்களின் நலனுக்கே முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. மக்களின் பொருளாதார நலனை அதிகரிக்கும் எண்ணம்

கொண்ட ஒரு சிலர் தொழில்களையெல்லாம் சமூகக் கட்டுப் பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்பர். அப்போதுதான் மனிதனை மனிதன் சுரண்டி வாழும் நிலை அகலும் என்பது அவர் களின் வாதம்.

நலப் பொருளாதாரம் இருவகையாக ஆராயப் படுகிறது. ஆல்பிரட் மார்ஷல் காலம் தொட்டு, ஹாப்சன் (Hobson) பிஃகு ஆர். ஜி. ஹாட்ரி (R. G, Hawtrey) காலம்வரை இருந்த ஆய்வை 'பழைய நலப் பொருளாதாரம்' (Old welfare Economics) என்பர். பரீட்டோ (Pareto), ஜே. ஆர். ஹிக்ஸ், லிட்டில் (Little) போன் றோரின் ஆய்வை "புது நலப் பொருளாதாரம்" (New welfare Economics) என்பர். பழைய நலப் பொருளாதாரத்தின் பிரதி நிதியாக விலங்கியவர் பிஃகு. எனவே, அவரது ஆய்வை முறை யாகவும் சுருக்கமாகவும் விளக்கியபின் புதுநலப் பொருளாதாரத்தை ஆய்வது நன்று.

ஆர்தர் செஸில் பிஃகு (1877-1957)

(Arthur cecil pigou)

ஆல்பிரட் மார்ஷலுக்கு மிகப்பிடித்தமான மாணவராக விளங்கியவர் பிஃகு. மார்ஷலுக்குப்பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகச் சுமார் 35 ஆண்டுகள் (1908 முதல் 1943 வரை) பணியாற்றியவர். கெயின்ஸின் "பொதுக் கோட்பாடு" தோன்றிய 1936ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தின் சிறந்த பொருளாதார அறிஞராக விளங்கியவர். மார்ஷல் வகுத்த பொருளாதார வழியையே பின்பற்றினர். எனினும், தன் ஆசிரியவாழ்வின் பெரும்பகுதியை நலப் பொருளாதார' ஆய்விலேயே செலவிட்டார். 1912-ல் "செல்வமும் நலனும்" (Wealth and welfare) என்னும் நூலை வெளியிட்டார். இந் நூலையே விரிவுபடுத்தி, 1920-ல் 'நலம் பற்றிய பொருளாதாரம்' என்னும் தலைப்பில் வெளியிட்டார். வேறு பல நூல்களையும் பிஃகு எழுதியுள்ளாரென்றாலும் நமது ஆய்விற்கு இந்த ஒரு நூலே போதுமானது.

நலம் பற்றிய பொருளாதாரம்

பிஃகுவின் பொருளாதாரத்தை ஆயுமுன் சமூக நலனுக்கும் பொருளாதார நலனுக்குமுள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ளல் அவசியம். பயன்வழிக் கொள்கையின் தலைவராக மதிக்கப் பெற்ற பென்தம், தனி நபர்கள் பெறும் இன்பத்தின் மொத்தமே

சமுதாய நலன் என்று கூறினர். ஆனால் பிஃகு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பொருளாதார நலன் என்பது வேறு, சமூக நலன் என்பது வேறு என்று கருதினர் பிஃகு. ஒரு மரத்திலுள்ள முக்கியமான கிளைபோன்று, சமூக நலத்தின் ஒரு பகுதியே பொருளாதார நலன் என்கிறார். அவ்வாறாயின், சமுதாய நலனில் எதனைப் பொருளாதார நலன் எனக் கருதுவது; சமுதாயம் அடையும் நலனில் எதையெல்லாம் பணம் என்னும் அளவு கோலால் நேரடியாகவோ மறை முகமாகவோ அளவிட முடியுமோ அவையே பொருளாதார நலன் என்கிறார் பிஃகு. அவ்வாறாயின் பணத்தோடு தொடர்புடைய நலன் மட்டுமே பொருளாதார ஆய்வில் இடம் பெறும் என்றாகிறது. எனவே, ஒரு நாட்டின் பொருளாதார நலன் அதன் தேசிய வருமானத்தோடு தொடர்புடையது மட்டுமல்ல; தேசிய வருமானமே பொருளாதார நலனையே நிருணயிக்கிறதென்பது பிஃகுவின் முடிவு. தேசிய வருமானம் அதிகரிப்பதால் மட்டும் பொருளாதார நலன் உயர்ந்து விடாது; அது முறையாகப் பகிரப்படவும் வேண்டுமென்கிறார்.

தனி மனிதன் எவ்வாறு உச்ச நிலைத்திருப்தியை அடைய விரும்புகின்றானோ, அதேபோல் சமுதாயமும் உச்சநிலைத் திருப்தியை அடைய விரும்புகிறது. வருங்காலத்தில் ஏற்படக்கூடிய திருப்தி எவ்வளவுதான் நிச்சயமானதாக இருந்தபோதிலும் இன்றைய திருப்தியைப் பெறுவதற்கே மனிதன் விரும்புகிறான். எனவே, வருங்காலத் தேவையை நிறைவு செய்வதற்கென்றும் இன்றைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கென்றும் சாதனங்களைப் பங்கிடும்போது இன்றைய தேவைக்கே அதிக முக்கியத்துவம் தருகிறான். இன்றைய பொருளாதாரச் சாதனங்களைப் பயன்படுத்தும்போது தனி நபருக்குக் கிடைக்கும் இறுதிநிலை நிகர உற்பத்தியும் சமுதாயம் பெறும் இறுதிநிலை நிகர உற்பத்தியும் சமமாக இருந்தால்தான் தேசிய வருமானம் உச்சமாக இருக்கும். அதாவது, தனி நபர் பெறும் இறுதிநிலை நிகர உற்பத்தியின் மொத்தமே சமுதாயத்தின் இறுதிநிலை நிகர உற்பத்தியாகும். மேலும் மேலும் சாதனங்களைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் அதிகப்படியான உற்பத்தியே இறுதிநிலை நிகர உற்பத்தியாகும. தனி நபரின் இறுநிலை உற்பத்தியைவிட சமுதாய இறுதிநிலை உற்பத்தி அதிகமாகவோ குறைவாகவோ இருக்கலாம். குறைந்த அளவு சாதனங்களைப் பயன்படுத்தி அதிக அளவு இறுதிநிலை உற்பத்தியைத் தனிநபர் பெற்றால் அப் பண்டத்தின் விலை குறைவாக இருக்கும். அப்போது சமுதாயத்திற்கு அதிக நலன் கிட்டும். அதாவது, குறைந்த செலவில் ஒரு பொருளை உற்பத்தி செய்ய முடியுமாயின், அது சமுதாயத்திற்கு நிறைந்த நலனை அளிக்கும்.

ஒரு நாட்டின் பொருளாதார நலனை அதிகரிப்பது அரசாங்கத்தின் கடமை என்பது பிகுவின் கருத்து. வருங்கால நலனை முன்னிட்டு, சாதனங்களையெல்லாம் இன்றைய தேவைகளைமட்டும் பூர்த்தி செய்யப் பயன்படுத்தக் கூடாது. எனவே, வருங்காலத்திற்கெனச் சாதனங்களைப் பயன்படுத்துவது அரசின் கடமை. அதோடு பொருளாதார நலனை அதிகரிக்க விரும்பும் அசாங்கம் எல்லாருக்கும் ஒரே விதமான வரியை விதிக்கக்கூடாது. செல்வர்களுக்கு அதிக வரி விதிக்க வேண்டும். செல்வர்கள் அவசியமற்ற பொருள்களை வாங்கி உல்லாச வாழ்க்கை நடத்த விரும்புவர். எனவே, அவர்களின்மீது அதிக வரியை விதிப்பதால், அவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். ஆனால் ஏழைகளின்மீது வரி விதிக்கும் போது, அவசியமான பொருள்களைக்கூட அவர்களால் வாங்க இயலாது. எனவே, செல்வர்களிடமுள்ள மிகுதியான பணத்தை அரசாங்கம் வரியாகப் பெற்று, அதனை ஏழைகளுக்காகச் செலவிட்டால் நாட்டின் பொருளாதார நலன் அதிகரிக்கும். ஏழைகளின் வருவாய் உயர்ந்தால்தான் சமூக நலன் அதிகரிக்கும். ஆனால், ஏழைகளின் வருவாயை உயர்த்துவதற்காக, நாட்டின் வருவாய் குறைந்துவிடும் முறைகளில் செல்வர்களின் வருவாயைக் குறைக்கக்கூடாது. நாட்டு வருவாய் உயர உயர ஏழைகளின் வாழ்க்கைத் தரமும் உயர வேண்டும்.

நாட்டின் பொருளாதார நலனை அதிகரிப்பதற்கு வேறொரு வழியையும் காட்டுகிறார் பிகு. அதாவது, குறைந்து செல் விளைவு விதியிலும் மாறாச் செலவு விதியிலும் இயங்கும் தொழில்களிடையே, சமமான போட்டியை அரசாங்கம் ஊக்குவிக்கவேண்டும். வளர்ந்து செல் விளைவு விதியின் அடிப்படையில் இயங்கும் தொழில்களை அரசாங்கம் தலையிட்டுக் கட்டுப்படுத்தவேண்டும். சர்வாதீனத் தொழில்களில் அரசாங்கம் தலையிட்டால் என்னென்ன விளைவுகள் ஏற்படுமென்பதையும், அரசாங்கமே தொழில்களை நடத்தினால் ஏற்படும் நன்மை, தீமைகளையும் விரிவாக ஆய்கிறார் பிகு. கூட்டுறவு இயக்கம், தேசிய வருமானப்பகிர்வை மாற்றுதல், தொழிலாளர், முதலாளிகளுக்கிடையே சமரச உறவை ஏற்படுத்தல் வேலை நிலைமைகளை மேம்படுத்தல் ஆகியவற்றால் ஏற்படும் நன்மைகளையும் தெளிவாகக் கூறுகிறார். இதனால் எவ்வளவு தூரம் பொருளாதாரநலன் மேம்படும் அல்லது சீர்குலையும் என்பதையெல்லாம் விளக்கமாகக் காட்டுகிறார்.

முதலாளித்துவ அமைப்பைப் படிப்படியாகச் சீர்படுத்தல்

முதலாளித்துவ அமைப்பில் மக்களிடையே அதிக வருமான ஏற்றத்தாழ்வு தோன்றுவதை உணர்ந்த பிகு அதனைக் குறைத்து

மக்களின் பொருளாதார நலனை உயர்த்துவதற்கு வழி வகுக்கிறார். ஆனால், அவ் வழி அவரைச் சமதருமஅமைப்பிற்கு இழுத்துச் செல்கிறது. மக்களின் தீவிரமான தேவைகளை நிறைவேற்றுவதற்கும், வேலையின்மையைக் குறைத்து மக்களின் வருவாயை உயர்த்துவதற்கும், வருமான ஏற்றத் தாழ்வைக் குறைத்துப் பொருளாதார நலனை அதிகரிப்பதற்கும் சோஷியலிசஅமைப்பே சிறந்ததென்கிறார். முதலாளித்துவ அமைப்பில்தான் பற்றுள்ளவராக விளங்கினார் பிஃகு; எனினும், வேலையின்மை நோயைத் தீர்க்கும் முறையில் சோஷியலிச அமைப்பே உகந்தது என்பது அவரது முடிவு. நாட்டின் சாதனங்களனைத்தும் உச்சமான நலனை அளிக்கும் வகையில் பயன்படுத்தப்படவேண்டும். இதற்குப் பொருளாதாரத் திட்டம் அவசியம். ஆனால், திட்டமிட்டுச் செயல்படுவது எளிதன்று. என்றாலும், முதலாளித்துவ அமைப்பு படிப்படியாக மாறி மக்களின் பொருளாதார நலனை உயர்த்தும் வகையில் செயல்படவேண்டும் என்பது பிஃகுவின் முடிவு.

நாட்டின் பொருளாதார நலனை அதிகரிக்கும் வகையில் பிஃகு செய்திருக்கும் சிபாரிசுகள் பலப்பல. அவற்றுள் முக்கியமானவை வருமாறு: வருமான வரி வளர் விகிதத்தில் இருக்கவேண்டும். வருமான ஏற்றத் தாழ்வுக்குக் காரணமான சொத்தைக் குறைக்கும் வழியில் சொத்துரிமைவரி விதிக்கப்படவேண்டும். பாதுகாப்புத் தொழில், நிலக்கரிச் சுரங்கத் தொழில், இரயில்வே போக்குவரத்து முதலியனவற்றை தேசியமயமாக்க வேண்டும். தேசியமயமான தொழில்கள் நல்லமுறையில் நடைபெற்றால், படிப்படியாக முக்கியமான பிற தொழில்களையும் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் இங்கிலாந்தின் தலைமை வங்கியைப் பொதுத்துறையினர் நடத்த வேண்டும்; அப்போதுதான் தொழில், வாணிபம் ஆகியவற்றின் நிலைமைகளுக்கேற்ப வங்கிக் கொள்கையை அமுல்படுத்தி வணிகச் சுழலை ஒழிக்கவோ கட்டுப்படுத்தவோ முடியும்.

மதிப்புரை

மார்ஷலின் 'நுகர்வோர் உபரி' என்னும் கருத்திலிருந்து தோன்றியதே பிஃகுவின் நலப் பொருளாதாரம். இப் பொருளாதார ஆய்வின் வழியாகக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்குப் பெருமைத் தேடித்தந்தார் பிஃகு. தனது ஆசிரியரான மார்ஷலின் விருப்பத்திற்கிணங்க அப் பல்கலைக்கழகத்தை உயர் நிலைக்குக் கொண்டு வந்தார். பயன்வழிக்கொள்கையினரின் குறிக்கோளான 'பெருவாரியான மக்கள் கூடுமானவரை நன்மைபெற வேண்டும்' என்பதை அடிப்படையாகக் கொண்டு நலப் பொருளாதாரத்தை உருவாக்கினார். பணக்காரனிடமுள்ள ஒரு ரூபாயின்

இறுதிநிலைப் பயன் ஏழையிடமுள்ள ரூபாயின் இறுதி நிலைப் பயனைவிட மிகக் குறைவு என்ற தத்துவத்தில், ரூபாயின் இறுதி நிலைப் பயன் இயன்றவரை எல்லாருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்ற தத்துவத்தைத் தனது நூலின் வாயிலாக வலியுறுத்தினார். வறியவர்களின் வறுமையை நீக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமானால், வேலையின்மையைப் போக்குவதும் வருமான ஏற்றத்தாழ்வைக் குறைப்பதுமே வழியென நம்பினார். இதற்கு, சோஷியலிச அமைப்பை ஓரளவிற்காவது ஏற்றுக்கொள்வதே சிறந்ததெனக் கருதினார்.

மக்கள் பெறும் நலனை பணத்தைக் கொண்டு அளவிட முடியும் என்ற நம்பிக்கையில் தோன்றியதே பிஃகுவின் நலப் பொருளாதாரம். ஆனால், நலனை எவ்விதத்திலும் அளவிடமுடியாது என்பது தற்காலப் பொருளாதார அறிஞர்களின் கருத்து. சான்றாக, செல்வர்களின் மீது விதிக்கப்படும் வரியினால் அவர்கள் தங்கள் வருவாயில் ஒரு பகுதியைச் செலவிட்டு இன்பம் பெறக்கூடிய வாய்ப்பை இழக்கின்றனர். வரியினால் கிடைக்கும் வருமானத்தை அரசாங்கம் ஏழைகளின் நலனுக்காகச் செலவிடும்போது, ஏழைகள் இன்பம் பெறுகின்றனர் என வைத்துக்கொள்வோம். செல்வந்தர்களின் இழப்பு, வறியவர்களின் நலன் இவ்விரண்டையும் பணத்தைக்கொண்டு அளவிடமுடியாது. ஆனால், அவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். இதுவே தற்காலக் கருத்து. அடுத்து நலப் பொருளாதாரம் என்பது மக்களின் மகிழச்சியைப் பற்றியதென பிஃகு கருதுகிறார். ஆனால் மகிழ்ச்சி என்பது அவரவர்களின் மன நிலையைப் பிரதிபலிக்கிறது. மன நிலை மனிதனுக்கு மனிதன், இடத்திற்கு இடம், காலத்திற்கேற்ப மாறும் இயல்புடையது. அதனை நிலையானதாகக் கொண்டு அளவிட முயல்வது வீணான செயல் என்பது தற்காலக் கருத்து. எனவே, இவ்விரண்டு குறைகளையும் நீக்கும் வகையில் புதுநலப் பொருளாதாரம் அமைகிறது எனலாம்.

புது நலப் பொருளாதாரம்

இதுவரை பிஃகுவின் நலப் பொருளாதாரத்தை விரிவாக ஆராய்ந்தோம். இவ்வாய்வு, பயன்பாட்டைப் பணத்தால் அளவிட முடியும் என்ற அடிப்படையில் தோன்றியதாகும். ஆனால், பண்டத்தைப் பயன்படுத்துவதால் மனிதன் அடையும் பயனை அல்லது தருப்தியை ஒன்று, இரண்டு என்று அளவிட முடியாது. ஒருவகைப் பண்டத்தை அல்லது பிறிதொருவகைப் பண்டத்தைப் பயன்படுத்துவதால் மனிதன் எந்த நிலையிலிருப்பான் என்பதை ஒப்பிட்டுத்தான் கூற முடியும். இதனை எண்பிக்கும் வகையில்

பரீட்டோ சமநோக்குக்கோடுகளைப் பயன்படுத்தி மனிதனின் தராதர நிலையை ஒப்பிட்டு ஆய்கிருர். சமநோக்குக் கோடு மேலே செல்லச் செல்ல நுகர்வோனின் திருப்திமட்டமும் உயர்கிறது. உச்ச நிலையிலுள்ள சமநோக்குக் கோட்டில்தான் மனிதனின் திருப்தி மட்டமும் உச்சமாக இருக்கும். இவ்வாறு, சம நோக்குக் கோடுகளைப் பிரயோகித்து தனிமனிதனின் நலத்தையும் சமுதாய நலத்தையும் ஆராய்ந்தார் பரீட்டோ.

பரீட்டோ காலத்திற்குப்பின் நலப்பொருளாதார ஆய்வு பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நலன் என்னும் சொல்லை உபயோகித்து நலப் பொருளாதார ஆய்வை மேற்கொண்டனர் ஒரு சிலர். சமூக நியதியின் அடிப்படையில் நாட்டின் வருமானம் பகிரப்பட வேண்டுமென இவர்கள் வலியுறுத்துவர். இவர்களுக்கு மாருக, திருப்தி ஏற்படும் காரணங்களை ஆதாரமெனக் கொண்டு நலப் பொருளாதாரத்தை ஆய்வர் வேறு சிலர். இவர்களின் கருத்துப்படி, நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் எவ்வித வருமான ஏற்றத்தாழ்வுமின்றி, ஒரே விதமான வருவாயைப் பெற வேண்டும். அப்போதுதான் சமுதாய நலன் உச்ச நிலையை அடையும். இவ்விருவகையினருமே உற்பத்தி நிலையையும் பகிர்வு நிலைமையும் உத்தமமானதாக இருக்க வேண்டுமென்பர். இவ்விருவகை ஆய்வையும் ஏற்றுக்கொள்ளாமல் புதியதொரு மூன்ருவது வகை நலப் பொருளாதார ஆய்வை விரும்புவோரும் உண்டு. அவர்களது ஆய்வைப் பார்க்குமுன், பரீட்டோவின் ஆய்வு இலட்சியத்தைச் சுருக்கமாகக் கூறவேண்டும். பரீட்டோவின் ஆய்வுப்படி பல்வேறு துறைகளிடையே உற்பத்திக் காரணங்களை சிறப்பான வகையில் பகிர்ந்தால்தான் பொருள் உற்பத்தி சிறப்பானதாக இருக்கும். அதோடு, தொழிலில் கடைபிடிக்கப்படும் வேலைப் பகுப்பும், சாதனங்களைப் பயன்படுத்தலும் சிறப்பானதாக அமைய வேண்டும். இவற்றையெல்லாம் பின்வரும் சூத்திரங்களாகத் தொகுக்கலாம்.

(1) ஒரு பொருளைக் கொடுத்துப் பிறிதொரு பொருளைப் பெறும் போது, எந்த விகிதத்தில் அவ்விரு பொருள்களும் பரிமாறப் படுகிறதோ அதனை இறுதிநிலைப் பதிலீட்டு விகிதம் என்கிருர் பரீட்டோ. இவ்விறுதி நிலைப் பதிலீட்டு விகிதப் பரிவர்த்தனை செய்யும் இருவருக்கும் ஒரே விகிதமாக இருக்க வேண்டும். (2) ஒரே வகையான சாதனங்களைப் பயன்படுத்தி, ஒரே வகையான பொருளை உற்பத்தி செய்யும்போது, ஒரு சாதனத்திற்கும் பிறிதொரு சாதனத்திற்குமுள்ள மாற்று விகிதம் அப் பொருளை உற்பத்தி செய்வோர் அனைவருக்கும் ஒன்ருக இருக்க வேண்டும். (3) இரண்டு பொருள்களின் இறுதி நிலைப் பதிலீட்டு விகிதம் தனிப்படபட்வர்களுக்கு

மட்டுமன்றிச் சமுதாயத்தினர் அனைவருக்குமே ஒரே விகிதமாக இருக்கவேண்டும். (4) மக்கள் வேலை செய்வதும் ஓய்வு எடுப்பதும் இயல்பு. மேலும் ஒரு மணி நேரம் வேலை செய்தால், எவ்வளவு நேர ஓய்வை அவர்கள் தியாகம் செய்ய வேண்டுமென்பதையும் இறுதி நிலைப் பதிலீட்டு விகிதமாகக் கணிக்கலாம். இப் பதிலீட்டு விகிதமானது தனிப்பட்டவர்களுக்கு மட்டுமன்றிச் சமுதாயத்தினர் அனைவருக்குமே ஒன்றாக இருக்க வேண்டும்.

இப்போது, புதுநலப் பொருளாதாரத்தை ஆய்ந்த மூன்றாவது வகைக் குழுவினருக்கு வருவோம். இக் குழுவில் முக்கிய இடம் பெறுவோர் நிக்கொலஸ் கால்டர் (Necholas Kaldar), ஜே ஆர். ஹிக்ஸ், சிட்டோவிஸ்கி (Scitovaky) ஆகியோர். சமுதாயத்தினர் உயர்ந்த நிலைமையை அடைவதற்குப் பொருத்தமான வழிவகைகளைத் தந்தவர்கள் இவர்களே. மற்றவர்களைப்போல் கற்பனையான வழிவகைகளைத் தராமல் சாத்தியமான வழிவகைகளை இவர்கள் காட்டினர். இவர்களின் கருத்துகளையும் வழிவகைகளையும் விரிவாக ஆராய இங்கு இடமில்லை. எனவே, இவர்களின் குறிக்கோள்களையும் வழிவகைகளையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

புது நலப் பொருளாதாரம் மூன்று குறிக்கோள்களைக் கொண்டது. அவை முறையே: (1) செல்வம் என்ற சொல்லின் கருத்தைத் தெளிவாக விளக்குவதும், அதை அளவிடக் கூடியதாக வகுப்பதும். (2) அரசின் பொருளாதாரக் கொள்கை எவ்வாறு அமைய வேண்டுமென்பதை விளக்குவது. அக் கொள்கைகள் பொருளாதார அடிப்படையில் சரியானவைகளாய் இருக்கலாம்; ஆனால், அரசியல், ஒழுக்க இயல் அடிப்படையில் விரும்பப்படாதவையாய் இருக்கக் கூடும். (3) கூடுமானவரை நெறியியலுக்குத் தொடர்பில்லாத வழிவகைகளைக் கூறுவது. இவ் வழிவகைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகளுக்கு ஆதாரமாக அமையச் செய்வது.

மேற்கூறிய மூன்று குறிக்கோள்களில் முதலாவது குறிக்கோளைப் பற்றி விளக்கிய போல்டிங் (Boulding) கூறுவதாவது: பொருளாதார ஆய்வு உற்பத்தியாளர், நுகர்வோர், விற்போர், வாங்குவோர் என்று தனித்தனியானதன்று. சமுதாயத்திலுள்ள அனைவரையும் ஒருமுகமாக நோக்குவதே நலப் பொருளாதாரம். அதேபோல், உற்பத்தியாகி, பரிவர்த்தனையின்மூலம் பகிரப்பட்டு நுகரப்படும் பொருள்களைச் சடப் பொருள்கள் என்றும் சடப்பொருள் அல்லாதவை என்றும் பாகுபடுத்தாமல் எல்லாப் பொருள்களைப் பற்றியும் ஒரே நோக்காக ஆயவேண்டும். அப்படியென்றால், ஒரு நாட்டின் வருமானம் 2 ஆண்டுகளில் 10 சதவிகிதம் அதிகரிக்குமென்றால், அந் நாட்டு மக்களின் நலனும் அதே 10 சதவிகிதம் உயர்ந்துவிட்ட

தாகக் கருதலாம். இரண்டாவது குறிக்கோள் சமுதாயத்தினர் அடையக்கூடிய உயர்ந்த பட்சப் பயன்நிலையைப் பற்றியது. அதிக பட்சப் பயனை அளிப்பதே நலப் பொருளாதாரத்தின் பணி. தனிப்பட்ட ஒவ்வொருவரும் பெறக்கூடிய பயனை முடிந்தவரை அதிகமாக்கிவிட்டால் சமுதாயத்தின் பயனே உச்ச நிலையை அடைந்து விட்டது எனலாம்.

மூன்றாவது குறிக்கோளான அரசாங்கக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஒரு சில முக்கியமான கருத்துகளை எண்ணிப் பார்க்கவேண்டும், (1) கூடுமானவரை அரசாங்கம் விதிக்கும் வரிகளனைத்தும் இறுதிநிலைக் கருத்து அடிப்படையில் இல்லாமல் அமைய வேண்டும். அதாவது வரிகளனைத்தும் 'மொத்தம் இவ்வளவு பணம் வரி' என்ற அடிப்படையில் இருக்கவேண்டும். (2) எந்த ஒரு பொருளுக்கும் ஒரே விலையே என்ற அடிப்படையில் அங்காடி நிறைவுள்ளதாக அமையவேண்டும். அப்போதுதான் எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும் பொருளாதாரச் சக்திகள் சீர்பட்டுச் சமநிலை ஏற்படும். அப்போது ஒவ்வொருவரும் பெறக் கூடிய இலாபமோ நன்மையோ உச்சமானதாக இருக்கும். (3) ஒரு சில சோஷியலிசவாதிகள் சோஷியலிசப் பொருளாதாரத்திற்கு விளக்கம் தந்துள்ளனர். இவ்வகை விளக்கம் தந்தவர்களில் ஆஸ்கர் லாங்கே (Oscar Lange) குறிப்பிடத்தக்கவர். முதலாளித்துவ அமைப்பில் நிறைவான போட்டி என்றுமே ஏற்படாதெனை அவர் கருதுகிறார். எனவே, நலப் பொருளாதாரத்தின் இலட்சிய நிலையை அடையக்கூடிய வாய்ப்பு முதலாளித்துவ அமைப்பில் இல்லையென்ற முடிவுக்கு வருகிறார். எனவே, பொருளாதாரத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்ட சோஷியலிச அமைப்பில் தான் நலப் பொருளாதாரக் குறிக்கோள் ஈடேறும் என்பது அவரது எண்ணம்.

குறைபாடுகள்

புதுநலப் பொருளாதார ஆய்வு பல குறைபாடுகளைக் கொண்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அக் குறைபாடுகளில் முக்கியமானதாகக் குறிப்பிடத் தக்கவை வருமாறு: ( ) ஒன்றுக்குப் பதிலாகப் பிறிதொன்றை விரும்பும் மனப்பான்மை மக்களிடம் நிலையாக இருப்பதாக இவ்வாய்வு உய்த்தறிகிறது. சான்றாக, 4 வாழைப்பழங்களுக்குப் பதிலாக 1 ஆரஞ்சுப் பழத்தை இன்று விரும்பும் மனிதன் அடுத்த ஆண்டும் விரும்பவேண்டியதில்லை. ஆரஞ்சுப்பழம் அல்லது வாழைப் பழத்தின் உற்பத்திநிலை அடுத்த ஆண்டு மாறிவிடலாம்; அதனால் அவற்றின் விலைகள் மாறலாம். அதோடு, அம் மனிதனின் பொருளாதார நிலையும் மன நிலையும்

மாறிவிடக் கூடும். எனவே, மாருத விருப்பத் தரத்தின் அடிப் படையில் நலப் பொருளாதாரத்தை ஆய்வது குறைபாடுடைய தோடு சிக்கலானதுமாகும். இதேபோல் உற்பத்தித் துறையில் ஒரு காரணிக்குப் பதிலாகப் பிறிதொரு காரணியைப் பதிலீடு செய்யும் விகிதம் தொழில் நுட்பத்தைப் பொறுத்ததாகும். தொழில் நுட்பம் மாறும்போது காரணிகளின் பதிலீட்டு விகிதமும் மாறி விடுவது இயல்பு. (2) இறுதிநிலே என்பது எல்லா நிலேகளேயும் விடச் சிறந்தாகக் கருதப்படுகிறது. ஆனுல் உண்மையில் ஆயிரக் கணக்கான நிலேகளில் இறுதி நிலேமட்டம்தான் மேலானது என்று கூறுவதற்கில்லே. (3) தனிமனிதனின் விருப்பத்தரவு நிலே எத் தனேயோ சூழ்நிலேகளேயும் விலேவாசிகளேயும் பொறுத்தது. இவை யனேத்தும் மாறும் இயல்புடையன. எனவே, மனிதனின் விருப்பத் தர நிலேயை அடிப்படையாகக் கொண்ட புதுநலப் பொருளா தார ஆய்வு ஒப்புக்கொள்ளக் கூடியதாக இல்லே.

முடிவுரை

மேற்கூறிய பல்வேறு குறைபாடுகளேக் கொண்டதெனினும், புதுநலப் பொருளாதாரஆய்வு பயனற்றதெனக் கூறமுடியாது. டாக்டர் லிட்டில் (Dr. Little) எழுதிய 'நலப் பொருளாதாரத் திறனுய்வு' (A Crltique of welfare economics) என்னும் நூலில் அவர் தரும் விமரிசனம் வருமாறு: 'அங்காடியில் நிலவும் விலே யைக் காட்டிலும் பண்டங்களின் உற்பத்திச் செலவு ஏறிவிடக் கூடாது என்பதை வலியுறுத்தும் நலப் பொருளாதார ஆய்வு, நடைமுறைக்கேற்றதே. என்ன செய்யவேண்டும், எந்தக் கொள்கையை அரசு கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்குத் ஓரளவு வழியைக் காட்டும் நலப் பொருளாதாரம் நிச்சயம் பயன்தரும் வகையில் அமைந்துள்ளது.' இன்றையப் பொருளாதார ஆய்வில் நலப்பொருளாதாரம் முக்கியப் பங்கு கொள்கிறது என்பதை மறுக்கவோ மறைக்கவோ இயலாது.

26. அமைப்பு வாதப் பொருளாதாரம்

(Institutional Economics)

அமைப்பு வாதப் பொருளாதாரம் என்பது, 20ஆம் நூற்றுண்டில் அமெரிக்காவில் தோன்றியதாகும். தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடுகளைப் புறக்கணித்துவிட்டு, வரலாற்றுச் சான்றுகளையும் சமுதாயப் பழக்கவழக்கங்களையும் ஆதாரமாகக்கொண்டு உருவானதே அமைப்புவாதப் பொருளாதாரம். இது ஜெர்மனியில் தோன்றிய வரலாற்றுவாதப் பொருளாதாரத்தைப்போல் தோன்றினும், அடிப்படையில் வேறுபட்டதாகும். வரலாற்றுவாதிகளைக் காட்டிலும் புரட்சிகரமான மாறுதல்களை விரும்பினர் அமைப்புவாதிகள். அமெரிக்காவில் தோன்றிய முக்கியமான பொருளாதாரக் குழுவினரில் முதன்மையானவர்கள் அமைப்புவாதக் குழுவினர். இக் குழுவின் தலைவராக மதிக்கப்படும் தார்ஸ்டீன் வெப்லன் (Thorstein Veblen) உண்மையிலேயே ஒரு முதன்மையான அமெரிக்கப் பொருளாதார ஞானி. வெப்லனுக்கு அடுத்தபடியாக இக் குழுவில் இடம் வகிப்பவர்கள் ஜான் ஆர். காமன்ஸ் (John R. Commons), மிட்செல் (Mitchell) ஆகிய இருவரும் ஆவர். அமைப்பு வாதக்குழுவினர் அனைவரும் ஒரேவிதமான கருத்தினையோ கோட்பாட்டையோ புனைந்தனர் என்று கூறுவதற்கில்லை. குறிப்பாக, வெப்லன் நுணுக்கமான புதிய பல கருத்துகளை வெளியிட்டாரெனினும் அவையனைத்தும் தெளிவற்றுக் குழப்பமாகவே காட்சியளிக்கின்றன.

தார்ஸ்டீன் வெப்லன் (1857—1929)

அமைப்பு வாதப் பொருளாதாரத்தை முதன்முதலில் உருவாக்கியவர் வெப்லன். இவர் அமெரிக்காவிலுள்ள விஸ்கான்ஸின் என்னும் இடத்தில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் நார்வேயிலிருந்து அமெரிக்காவில் வந்து குடியேறியவர்கள். வெப்லன் தனது 23ஆம் வயதில் கார்லிடன் (Carleton) கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். ஜே. பி. கிளார்க்கிற்குப் பிடித்தமான மாணவராக

விளங்கினார். பின்னர் 1884-ல் யேல் (Yale) பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். டாக்டர் பட்டம் பெற்றும் ஏழு ஆண்டு கள் வேலையின்றி இருந்தார். சிக்காகோ பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டபோது பொருளாதாரத் துணைப் பேராசிரியர் பதவி கிடைத்தது. இப் பதவியிலும் அவரால் நீடித்திருக்க இயல வில்லை. தன்னுடன் பணிபுரிந்த பேராசிரியர்களை மதிக்காமல் விநோதமான உடை அணிந்து, விநோதமான சொற்களைப் பிறருக் குச் சரிவரக் கேட்காமல் மெதுவாக விரிவுரை ஆற்றுவது அவரது வழக்கம். எந்த மாணவருக்கும் தேர்வில் C கிரேடிற்கும் அதிகமாகக் கொடுப்பதுமில்லை. மாணவரோடு தகாத உறவுகள் கொண்ட காரணத்தால் எப் பல்கலைக்கழகத்திலும் நிலை யாகப் பணியாற்றவில்லை. துணைப் பேராசிரியர் பதவியை விட உயர்ந்த பதவியும் கிட்டவில்லை. சுருக்கமாகக் கூறுமிடத்து, வெப்லனின் வாழ்க்கை பெருந்தோல்வியாகவும் ஏமாற்றமுமாகவே அமைந்தது. எதையும், எவரையும் குறைகூறும் பழக்கமுடைய வெப்லனின் வாழ்க்கை நிறைவு பெறாததில் வியப்பொன்றுமில்லை. சிக்காகோப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்தபோது 'அரசியல் பொருளாதார ஏட்டின் (Journal of Political Economy) ஆசிரியராக இருந்தார். 1899-ல் அவருடைய 'உல்லாச வகுப்பினரின் கோட் பாடு' (The Theory of the Leisurl Class) என்னும் நூல் வெளி யாயிற்று. இந் நூல் அவருக்குப் பெரும் புகழைத் தந்தது. எனவே, சிக்காகோவில் துணைப் பேராசிரியர் பதவியை இழந்த வெப்லன் ஸ்டான்போர்டில் வேலைக்கமர்ந்தார். இங்கு அவருக்கு அதிக ஊதியம் கொடுக்கப்பட்டது. எனினும் சிக்காகோ பல்கலைக் கழகத்தில் இருந்ததுபோலவே இங்கும் அவர் நடந்து கொண்டார். எனவே, இந்த வேலையும் பறிபோயிற்று. பின்னர் மிஸ்ஸோரி (Missouri) பல்கலைக் கழகத்தில் நண்பரின் உதவியுடன் வேலைக்கு அமர்ந்தார். அப்போதுதான் 1914-ல் 'வேலைத் திறனின் உள்ளு ணர்வும் தொழில் கலையின் நிலையும்' என்ற நூலை வெளியிட்டார். இந் நூல் வெளியாவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன் 'தொழில் துணிவின் கோட்பாடு' என்னும் நூலையும் வெளியிட்டிருந்தார். எனவே, வெப்லனின் பொருளாதாரக் கருத்துகளை அறிந்து கொள்ள இம் மூன்று நூற்களுமே போதும்.

பொருளாதார எடுகோள்களின் குறை

வெப்லனின் கருத்துகளை இரு பகுதியாகப் பிரிக்கலாம்: (1) அவரது காலத்திலும் அவருக்கு முந்தியும் இருந்த பொருளாதார எடுகோள்களைக் குறைகூறும் பகுதி; (2) அவரது சொந்த எடு கோள்களைக் கூறும் பகுதி.

பொருளாதாரச் சிந்தனையும் வாதமும் தலையோங்கியிருந்த காலத்தில் வாழ்ந்தவர் வெப்லன். எனவே, அக் காலத்தியப் பொருளாதாரச் சிந்தனையும் கருத்துகளும் இயக்கமற்ற பொருளாதாரச் சமநிலையைப் பற்றியதாக இருந்ததால், அவ்வாய்வைக் குறை கூறினர். பொருளாதாரம் என்பது உயிரியல்போல் எப்போதும் வளரும் தன்மையுடையது என்பது வெப்லனின் கருத்து. ஆனால் தொன்மைப் பொருளாதாரக் காலம்தொட்டு இதனை எவருமே உணரவில்லை என்பது வெப்லனின் குற்றச்சாட்டு. தொன்மைப் பொருளாதார அறிஞர்களும் அவர்களைப் பின்பற்றியோரும் 'இயல்பான' அல்லது 'இயற்கை நியதியான' உலகை யூகம்செய்து பொருளாதார நடவடிக்கைகளை ஆராய்ந்தனர். இந்த ஆய்வின் அடிப்படையில் கருத்தியல் அடிப்படையிலும் தருக்க முறையிலும் பல விதிகளைப் புனைந்தனர். தொன்மைநூல் மறுமலர்ச்சியாளர்களும் இக் குறையைத் தவிர்க்கவில்லை. வரலாற்றுவாத அறிஞர்களும் இறுதிநிலை வாதிகளுமே தவறான அடிப்படையிலேயே பொருளாதாரத்தை ஆய்ந்தனர். ஓரளவிற்கு அறிவியல் அடிப்படையில் பொருளாதார ஆய்வை மேற்கொண்டவர் மார்ஷல்தான் என்கிறார் வெப்லன். இருந்தபோதிலும், எல்லா அறிஞர்களும் தவறான எடுகோள்களை மேற்கொண்டதன் விளைவாகப் பண்டங்களின் இயல்பான விலையை மட்டும் முக்கியமாகக் கருதினர். அவர்களது தருக்கம் சிறப்பானதாக இருந்தாலும் முடிவுகளனைத்தும் தவறானவையாகி விட்டன. பொருளாதார உலகின் மாறும் தன்மையைப் புறக்கணித்துவிட்டனர். ஆனால், உண்மை உலகம் எப்போதும் மாறிக்கொண்டே இருப்பதால், அவர்களது ஆய்வும் முடிவும் உலக நடப்பிற்கொவ்வாத ஏட்டுச்சுரைக்காய் ஆகிவிட்டது என்கிறார் வெப்லன். பொருளாதார மாற்றத்தை அடிப்படையாகக்கொண்ட கார்ல் மார்க்ஸின் ஆய்வைப் போற்றுகிறார். கார்ல்மார்க்ஸுக்கும் வெப்லனுக்குமுள்ள ஒற்றுமையைப் பின்னர் ஆராய்வோம்.

அமைப்பும் நிறுவனமும்

சமுதாயத்திலுள்ள பல்வேறு அமைப்புகள் எவ்வாறு தோன்றின என்பதை ஆராய்ந்தால், மக்களின் பழக்கவழக்கங்கள், பற்றுதல்கள், எண்ணங்கள் அனைத்தும் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அறிந்துகொள்ள முடியுமென்கிறார் வெப்லன். இவ்வாறு அமைந்துள்ள அமைப்புகளின் பிரதிபலிப்பே நாகரிகம் என்பது அவரின் கருத்து. இன்றைய சமுதாய அமைப்பு முறைகள் யாவும் பண்பாட்டு வளர்ச்சியின் நிலையையே குறிப்பிடுகிறதென்பதை உளவியல், சமூகவியல் அடிப்படையில் காண்பிக்கிறார்.

இவ்வாறு வளர்ந்துவரும் சமூக, பொருளாதார அமைப்புகளை புறச் சூழ்நிலையும் மக்களின் உள்ளத்தின் பண்புமே நிருணயிக்

கின்றன. மக்களின் பண்புகளும் சூழ்நிலைகளும் வளர வளர அமைப்புகளும் வளரும். பொருளாதார உலகில் தொழில் முறை என்பது எப்போதும் மாறும் இயல்புடையது. இம் மாற்றமே பொருளாதார அமைப்பை உருவாக்குகிறது. மனிதனின் உணர்ச்சிகள், எண்ணங்கள், செயல்கள் யாவும் ஒரேமாதிரியாகவே இருக்கும்; அதாவது, ஒன்றுக்கொன்று முரண்படாது. எனினும், இவையனைத்தும் மாறும் இயல்புடையன.

டார்வின் உயிரின வளர்ச்சிவிதியைக் கண்டுபிடித்தார். அவ்விதி சமுதாயத்திற்கும் பொருந்தும் என்கிறார் வெப்லன். முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சி காரணமாக தொழிற்சாலை அமைப்பும் வியாபார முறையும் முக்கியமானவைகளாக ஆகிவிட்டன. இவ்விரு அமைப்புகளையும் ஆதாரமாகக் கொண்டே மக்களிடையே பலவிதமான பொருளாதார எண்ணங்களும் நடவடிக்கைகளும் அமைந்துவிட்டன. போட்டி மனப்பான்மை, சொத்துரிமை, விலை நிருணயமாகும் முறை, வங்கிகள், பணம், கடன், இலாபம் போன்ற பல பொருளாதார அமைப்புமுறைகள் இவ்விரு அமைப்புகளையே ஆதாரமாகக் கொண்டவை என்கிறார் வெப்லன். இவ்விரு அமைப்புகளும் அவற்றையொட்டிய பிற பொருளாதார நிறுவனங்களும் எப்போதும் மாறும் இயல்புடையன என்பது வெப்லனின் நம்பிக்கை. பொருளாதார நிறுவனங்கள், அமைப்புகளின் வளர்ச்சித் தன்மையை வேறுபல காரணங்களும் நிருணயிக்கக்கூடும். அக் காரணங்களில் குறிப்பாக, மக்கள் தொகை வளர்ச்சி, சூழ்நிலை, செல்வர்களின் சோம்பேறித்தன ஆசை, கலப்புத் திருமணம், வெப்பதட்பநிலை ஆகியவை முக்கியமானவை என்கிறார் வெப்லன். உண்மையில், சமூக அமைப்பிலுள்ள பல்வேறு நிறுவனங்களும் அமைப்புகளும் எவ்வாறு நிருணயமாகின்றன என்பதற்குத் திட்டவட்டமான தத்துவத்தைக் கொண்டு விளக்கமுடியாதென்கிறார்.

உல்லாச வகுப்பினரின் கோட்பாடு

உல்லாசவகுப்பினர் கோட்பாட்டின் வாயிலாக எல்லாருடைய கவனத்தையும் கவர்கிறார் வெப்லன். தொன்மைப் பொருளாதார அறிஞர்களும், அவர்கள் வழிவந்தோரும் மனிதன் சிந்தித்துச் செயல்படும் இயல்புடையவன் என்பதைப் பொருளாதாரத் தத்துவமாகக் கொண்டு 'பொருளாசை மனிதனை' உருவாக்கினர். இவ்வாறு கற்பனையால் உருவாக்கிய மனிதனுக்கு மாறாக, நடைமுறையிலுள்ள செல்வ மனிதனைச் சுட்டிக்காட்டித் தொன்மைப் பொருளாதார முடிவை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் வெப்லன். மேலும், செல்வர்களின் வதப்பு எவ்வாறு அமைந்-

துள்ளது, அதனால் ஏற்படும் சமூகப் பொருளாதார விளைவுகள் யாவை என்பதையும் விளக்குகிறார். 'மலிவான விலையில் தரமான பொருளை வாங்கு', 'குறைந்த அளவு முயற்சியால் நிறைந்த இன்பத்தைத் தேடு' என்பது பொருளாதார அறிவுரை. ஆனால் செல்வர்களுக்கு அவ்வறிவுரை ஒவ்வாததாகிவிடுகிறது என்கிறார் வெப்லன்.

செல்வர்கள் உல்லாச வாழ்க்கை நடத்துவதே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். சொத்து மிகுதியாக இருக்கின்ற காரணத்தால் வேலை செய்யக்கூடாதென எண்ணுகின்றனர். ஆடம்பர வாழ்க்கையில் மோகம் கொண்டு வீணாகச் செலவிடுகின்றனர். வகை வகையான ஆடைகளை அணிகின்றனர். பயனுள்ள பொருள்களுக்குப் பதிலாகப் பகட்டான பொருள்களையே வாங்குகின்றனர். பயனுள்ள கல்விக்குப் பதிலாகப் பகட்டான கல்வி கற்கின்றனர். இவ்வாறாக, அவர்களது பழக்க வழக்கங்கள் அமைந்துவிடுவதால், அதற்கேற்பப் பொருளாக்கம் நடைபெற வேண்டியதாகிவிடுகிறது. அவர்களது உல்லாச வாழ்க்கையை நடுத்தர வகுப்பினரும் பின்பற்ற விழைகின்றனர். இதன் விளைவாகப் பொருளாதார உற்பத்தி முறை, நிறுவனங்கள், அமைப்புகள் யாவும் செல்வர்களின் பழக்க வழக்கங்களுக்கேற்ப அமைந்துவிடுகின்றன. இதனால் நாட்டின் பொருளாதார நிலை சீர்கெடுகிறதென்கிறார் வெப்லன். சுருக்கமாகக் கூறினால், இந் நூலில் வெப்லன் செல்வந்தர்களின் பழக்க வழக்கங்களைக் கடுமையாகத் தாக்குகிறார். ஆனால், அவர்களைப் புகழ்வதுபோல் தாக்குவது வாசகர்களின் கவனத்தைக் கவரும் இயல்புடையது. அவர்களின் ஆடை அலங்காரம், குடிப் பழக்கம், நாடு சுற்றும் வெறி ஆகிய பண்புகளையும் பழக்கங்களையும் காட்டுமிராண்டித்தனமானதென இழிந்துரைக்கிறார்.

கார்ப்பரேசன்கள் (Corporations)

வெப்லன், தனது 'தொழில் அமைப்பு முறை' என்னும் நூலின் வழியாகப் பொருளாதார அறிஞர்களுக்குப் பயனுள்ள பல புதிய கருத்துகளை அளிக்கிறார். அமெரிக்க முதலாளித்துவ அமைப்பில் பெருவாரியான தொழில்கள் கார்ப்பரேசன்கள் என்ற பெயரில் பேரளவில் அமைந்திருப்பதன் நோக்கத்தையும் விளைவுகளையும் வெப்லன் வருணிக்கும்முறை புதுமையானதுமட்டுமல்ல, புரட்சியானதுமாகும். கார்ப்பரேசன்களின் அளவும் உற்பத்தி முறையும் அவை அவை பயன்படுத்தும் இயந்திர தளவாடங்களைப் பொறுத்ததாகும். அவற்றின் அடிப்படையிலேயே மக்களின் பற்றுதல்கள், உற்பத்திமுறைகள், பண்டங்களின் தரம் அமைந்து விடுகின்றன என்பது வெப்லனின் தத்துவம். இவ்வாறு பெரிய கார்ப்பரேசன்

கள் உருவாவதற்குச் செலாவணி முறையே காரணம் என்பது வெப்லனின் கருத்து. பெருவாரியான இயந்திரங்களைப் பயன் படுத்தினால் பெருமளவில் மலிவாகப் பண்டங்கள் உற்பத்தியாகும் என்பது பொருளாதார அறிஞர்களின் வாதம். ஆனால் வெப்லன் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுமக்களுக்கு நன்மையாக இருக்கவேண்டிய பேரளவு உற்பத்தி முறையைத் தொழிலதிபர்கள் தங்களது நன்மைக்காக மாற்றிவிடுகின்றனர் என்கிறார். கார்ப்ப ரேசன் அமைப்பு முறையால் தனிமனிதரின் சொத்துக்கள் கூட்டுச் சொத்தாகிவிடுகிறது. இதனால் பெரிய செல்வந்தர்களுக்கும் சாதாரண செல்வந்தர்களிக்குமிடையே பூசல்கள் தோன்றுகின் றன; அதோடு பொருள் உற்பத்தியாகும் நிலையங்களில் இல்லாத செல்வந்தர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே பிணக்கம் தோன்றுகிறது. இதனால் சமுதாயம் இரு பிரிவாகப் பிளவுபட்டு விடுகிறது. உழைப்பாளிகள், செல்வச் சோம்பேறிகள் என மக்கள் பிளவுபடுவதால், உற்பத்திமுறை மேம்பாடு அடைய அடைய இப் பிளவும் அதிகரிக்கிறது. அதனால் மக்களின் எண்ணங்களும் செயல் களும் அதற்கேற்ப மாறிவிடுகின்றன என்கிறார் வெப்லன்.

உற்பத்தியாளர்களிடையே முழுமையான போட்டி இருக்கு மானால் தொழிலதிபர்களோ அல்லது உற்பத்தியாளர்களோ தங்கள் விருப்பப்படி உற்பத்தியைக் கட்டுப்படுத்தமுடியாது. ஆனால் கார்ப்பரேஷன் முறை வந்த பின் நிறைவுப் போட்டி மங்கிவிட்டது. இம்முறையில் கார்ப்பரேசன்களின் அளவே அவற்றின் திறனை நிருணயிக்கும் சக்தியாக மாறிவிடுகிறது. திறனுள்ள பெரிய கார்ப்பரேசன் தங்கள் செல்வாக்கையும் வலிமையும் பயன்படுத்திச் சிறிய கார்ப்பரேசன்களை அழிக்கவும் நசுக்கவும் விழுங்கவும் முயல் கின்றன. இதனால் சமுதாயத்தில் குறிப்பாக உற்பத்தித் துறை யில் புதுமையானதொரு போட்டி ஏற்படுகிறது. "மூலதனம் உள்ளவர்கள் இல்லாதவர்களிடையே போட்டியிருப்பதற்குப் பதிலாக, அதிக மூலதனம் உடையவர்கள் குறைந்த மூலதனம் உடையவர்களிடையே போட்டி ஏற்பட்டுவிடுகிறது" என்கிறார் வெப்லன். இவ்வாறாக, தொழிலமைப்பு முறை போட்டியின் போக்கையும் இயல்பையும் மாற்றிவிடுகிறது.

தொழில் செய்முறை

முதாலாளித்துவ அமைப்பில் தொழிற்சாலைகளின் இயல்பை யும் அளவையும் நிருணயிக்கும் சக்திகள் இயந்திர உற்பத்தி முறையும் இலாபம் பெறும் நோக்கதிற்காக முதலீடு செய்வதுமே என்பதை வலியுறுத்துகிறார் வெப்லன். இதனை அடிப்படையாகக் கொண்டு பொருள் உற்பத்தி செய்யும் நோக்கம் வேறு.

இலாபம் திரட்டும் எண்ணம் வேறு என்பதைக் காண்பிக்கிறார். இவ் வேறுபாடே வெப்லன் தந்துள்ள புதுமையான, முக்கியமான விளக்கமும் பணியும் எனலாம். தொழிலதிபர்கள் மலிவாக உற்பத்தி செய்து இலாபம் பெற எண்ணுவது இல்லை. பங்குகளை வாங்கியும் விற்றுமே அதிக இலாபம் பெறுகின்றனர். அதாவது பங்கு அங்காடியில் (Share market) ஊக வாணிகம் (Speculation) செய்து இலாபமடைகின்றனர். பொருள்களை உற்பத்திசெய்யும் பணியை நிருவாகிகள், என்ஜினியர்கள், விஞ்ஞானிகள் ஆகியோரிடம் விட்டு விடுகின்றனர். இதன் வாயிலாகப் பொருள் உற்பத்தி செய்யும் பணியும் இலாபம் அடையும் நோக்கமும் வேறுபட்டு விடுகிறதென்கிறார். எனவே, தரமான பொருள்களைத் திறமையாக உற்பத்தி செய்து இலாபம் பெறும் எண்ணம் மறைந்து விடுகிறது. அதோடு, தொழில்களுக்குச் சொந்தக்காரர்கள் வேறாகவும் உள்ளனர். இதனால் சாதனங்கள் வீணாக்கப் படுவதோடு, பொருளாதார மந்தமும் வேலையின்மையும் ஏற்படுகின்றன என்கிறார் வெப்லன். உற்பத்தி செய்வோர் சமுதாயத்திற்குப் பயனுள்ள பொருள்களுக்குப் பதிலாகப் பகட்டான தேவையுடைய பண்டங்களையே உற்பத்தி செய்கின்றனர்.

வணிகச் சுழல்

நிதி திரட்டுவதையும் தொழில் நடத்துவதையும் அடிப்படையாகக் கொண்ட நவீன முதலாளித்துவ அமைப்பில் பண்டங்களை உற்பத்தி செய்வோர் வேறாகவும் ஊகவணிகத்தின் வாயிலாக இலாபம் திரட்ட முயல்வோர் வேறாகவும் இருக்கின்றனர் என்பதை வெப்லன் உணர்ந்தார். இதனாலே பொருளாதார நடவடிக்கைகள் சீர்கெட்டு வணிகச்சுழல் ஏற்படுகிறதென்கிறார். செழிப்பமான காலத்தில் தொழிலதிபர்கள் மிகுதியாகக் கடனை வாங்கித் தொழிலை விரிவு செய்து இலாபம் பெற முயல்கின்றனர். இதனால் வட்டி விகிதம் உயர்ந்துவிடுகிறது. அளவற்ற உற்பத்தித் திறன் ஏற்பட்டுப் பொருள் தேக்கம் கண்டு இலாபம் குறைந்துவிடுகிறது. இதனால் ஏமாற்றமும் தோல்வி மனப்பான்மையும் கொண்டு தொழிலதிபர்கள் கடன் வாங்கத் தயங்குகின்றனர். வாங்கிய கடனையும் திருப்பித் தர இயலாத நிலை ஏற்பட்டுப் பொருளாதார மந்தம் தோன்றுகிறது.

அங்காடியில் பண்டங்களுக்குள்ள தேவையைக் கண்டுணராமல் அதிகமாக உற்பத்தி செய்வதாலேயே பொருள் தேக்கம் உண்டாகிறதென்பது வெப்லனின் கருத்து. இப் பொருள் தேக்கம் இருக்கும்போது, மேலும் உற்பத்தித் திறன் கொண்ட நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்வதால் நிலைமை மேலும் மோசமாகிவிடுகிறது. இதனால் முதலாளித்துவ அமைப்பே ஆட்டம் கண்டு விடுகிறது.

வெப்லனும் மார்க்ஸும்

வெப்லனுடைய கருத்துகளையெல்லாம் மனக்கண் முன் வைத்துப் பார்த்தால் அவை கார்ல்மார்க்ஸைத் தான் நமக்கு நினைவூட்டும். ஆனால் மார்க்ஸின் கோட்பாடுகளை வெறுத்தவர் வெப்லன். தொன்மைப் பொருளாதார ஆணிவேரிலிருந்து தோன்றியதே மார்க்ஸியப் பொருளாதாரம். எனவே, கருத்தியல் அடிப்படையில்தருக்க முறையைக்கொண்டது. எனினும், பொருளாதாரக்காரணிகளே சமுதாயத்திலுள்ள பிற அமைப்புகளை உருவாக்குகின்றன என்பதை இருவருமே சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், பொருளாதார சார்பற்ற காரணிகள் பொருளாதார அமைப்பை உருவாக்கக்கூடும் என்பதை வெப்லன் ஒப்புக்கொள்கிறார்; மார்க்ஸ் இதனை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார். இருவருமே சமுதாய அமைப்பில் அக்கறை கொண்டவர்கள். சொத்துரிமைக்கும் பிற பொருளாதார விளைவுகளுக்குமுள்ள தொடர்பை இருவருமே விளக்குகின்றனர். பொருளாதார வளர்ச்சியைப் பற்றி இருவருமே ஆய்ந்தனர். எனினும் பொருளாதார வளர்ச்சியின் ஒரு நிலையில் முதலாளித்துவம் மறைந்து சோஷியலிசம் தோன்றுமென்ற முடிவுக்கு வந்தார் மார்க்ஸ். வெப்லனோ எவ்வித முடிவுக்கும் வரவில்லை.

மதிப்புரை

பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் வெப்லனுக்கு எந்த இடத்தை ஒதுக்குவது என்பதைத் தெரிந்துகொள்வது கடினம். அவருடைய அறிவு விசாலமானது; அவர் வரைந்த நூல்களோ பொருளாதாரத்தை மட்டும் பற்றியதல்ல. எனவே, அவரை ஒரு சமூக அறிவியல் மேதை என்றே கருதவேண்டியுள்ளது. வெறும் பொருளாதார ஞானி அல்லர். 26 மொழிகள் அறிந்த வெப்லன், எழுத்தாற்றலும் பெற்றவர். தனது அமைப்பு வாதத்தின் வாயிலாகப் பொருளாதார அறிவியலுக்குப் புது மெருகேற்றினார். ஆனால் எக் கோட்பாட்டையும் முழுமையாக ஆராயத் தவறி விட்டார்.

பொருளாதார அமைப்புகளும் நிறுவனங்களும் படிப்படியாக மாறும் இயல்புடையதாகையால் பொருளாதார இயலும் வளரும் தன்மையுடையதென வலியுறுத்திய மேதை வெப்லன் தான். எனவே, வருங்காலத்தில் பொருளாதார அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதை அவர் ஆயவில்லை. உற்பத்திமுறை மாறமாற பொருளாதார அமைப்புகள் மட்டுமன்றி, மக்களின் எண்ணமும் பழக்க வழக்கங்களும் மாறுமென வலியுறுத்தி, அமைப்பு வாதப் பொருளாதாரத்திற்கு அடிக்கல் நட்டியவர்.

எனினும் வெப்லனின் செல்வாக்கு இன்று மறைந்துவிட்டது. ரூஸ்வெல்டின் புதிய திட்டத்தை உருவாக்குவதற்குப் பல அமைப்பு வாதப் பொருளாதார அறிஞர்கள் வரவழைக்கப்பட்டனர். இரண்டாவது உலகப்போர் தோன்றியவரை பல அமெரிக்க இளைஞர்கள் வெப்லனின் கருத்தில் மயங்கி இருந்தனர். ஆனால், கெயின்ஸின் "பொதுக் கோட்பாடு" வெளியானதும் அவர்களின் மயக்கம் தெளிந்தது. பல அமெரிக்க மாணவர்கள் கெயின்ஸின் சீடர்களாக மாறினர்.

காமன்ஸ் (1862—1945)

காமன்ஸ், ஓஹியோ மாநிலத்தில் பிறந்து, ஓபர்லின் (Oberlin) பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்றவர். விஸ்கான்ஸின் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றார். பேராசிரியராகப் பணியாற்றிய போதும் ஓய்வுபெற்ற பின்பும் பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்டார். அவருடைய நூல்களில் இங்கு குறிப்பிடத்தக்கவை மூன்று : (1) 'தொழிற் சங்கமும் தொழிலாளரின் பிரச்சினைகளும்' (1905), (2) "அமெரிக்காவில் குடியிறங்கும் இனத்தவர்" (1907), (3) "அமைப்பு வாதப் பொருளாதாரம்" (1934).

பொருளாதார அமைப்புகள்

சமுதாயத்திலுள்ள அமைப்புகள் யாவும் படிப்படியாக வளரும் இயல்புடையன என்பதை காமன்ஸ் ஒப்புக்கொள்கிறார். பொருளாதார அமைப்புகள் இதற்கு விதிவிலக்கல்ல. சான்றாக, முதலாளித்துவ அமைப்பு என்பது நிலமானிய முறையிலிருந்து படிப்படியாக வளர்ந்ததாகும். தனியார் சொத்துரிமையும் பண்டைக்காலத்திலிருந்தே சிறிது சிறிதாக வளர்ந்து, மாறுபட்டு வந்துள்ளது. இவ்வமைப்புகளைப் பாதுகாப்பதும் பேணுவதும் அரசின் கடமை. நீதிமன்றங்களே இவற்றை நேரடியாகப் பேணி வந்துள்ளன. அரசும் நீதிமன்றமும் கூட காலத்திற்கேற்ப வளர்ச்சியுற்றே அமைகின்றன என்கிறார் காமன்ஸ். தனி மனிதன் நடவடிக்கைகளைச் சமுதாயம் ஒழுங்குபடுத்தும் நோக்கத்தோடுதான் பொருளாதார அமைப்புகள் உருவாகின்றன.

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள், தன்னல நடவடிக்கையே பொது நலனைப் பேணுகிறதெனக் கூறினர். ஆனால் காமன்ஸ் இதனை ஏற்றுக்கொள்ளாமல் தன்னல நடவடிக்கைகளால் சமுதாயத்தில் பிணக்கம் ஏற்படுகிறதென்பதை வலியுறுத்துகிறார். முதலாளித்துவ அமைப்பு தோன்றுவதற்குக் காரணமாயிருந்த தத்துவம், உளவியல் பண்பு ஆகியவற்றை காமன்ஸ் வருணிக்கிறார். மனித

னின் உரிமை, கடமை, சுதந்திரம் ஆகிய அடிப்படையிலேயே முதலாளித்துவ அமைப்பு உருவாகியுள்ளது. அடிப்படை மாற மாற முதலாளித்துவ அமைப்பும் மாறும் இயல்புடையது என்கிறார். தொன்மைப் பொருளாதார அறிஞர்களும் தன்னல வாதிகளும் மனிதனின் செயலால் தோன்றும் பயனையும் முயற்சியையும் ஒப்பிட்டுப் பண்டங்களின் விலையை மட்டும் ஆராய்ந்தது பெருங்குற்றம் என்கிறார் காமன்ஸ். மனிதன் தனித்து பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. பிறரோடு கூட்டாகவோ அல்லது சேர்ந்தோ செயல்படுகிறான் என்பதை காமன்ஸ் வலியுறுத்தினார். அதனால்தான் பொருளாதார அமைப்புகளே தோன்றின என்ற முடிவுக்கும் வருகிறார்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களைப்போல் பகுத்தறி முறையில் கருத்தியலாக ஆராயாமல், வரலாற்றுப் பின்னணியில் நடைமுறைக்கேற்ற வகையில் தொகுத்தறி ஆய்வு முறையைக் கையாண்டார் காமன்ஸ். பொருளாதாரக் கோட்பாடுகள் சமுதாயத்திற்கு எவ் வகையில் பயனுள்ளவை என்ற ஆய்வில் நாட்டம் கொண்டார். சமுதாயத்திலுள்ள மக்கள் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்வதால் தனி மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளைமட்டும் ஆய்வதில் பயனில்லை; சமுதாயத்திலுள்ள அமைப்புகளையே ஆய வேண்டுமெனக் கருதினார்.

பொருளாதாரப் பரிவர்த்தனை

காமன்ஸ், பொருளாதாரப் பரிவர்த்தனைகளை மூன்று வகையாகப் பாகுபடுத்தியுள்ளார். அவை: (1) பேரம் பேசி நடைபெறும் பரிவர்த்தனை, (2) நிருவாகப் பரிவத்தனை (Managerial transactions), (3) பங்கீட்டுப் பரிவர்த்தனை (Rationing transactions). பண்டங்களை வாங்குவோரும் விற்போரும் நடத்துகிற பரிவர்த்தனை பேரம் பேசும் அடிப்படையைக் கொண்டது. தொழில் நிருவாகி, தனக்குக்கீழ் பணி புரிவோரோடு செய்யும் பரிவர்த்தனை நிருவாகப் பரிவர்த்தனையாகும். இப் பரிவர்த்தனை அரசாங்கச் சட்டதிட்டங்களுக்குட்பட்டதாகும். பங்கீட்டுப் பரிவர்த்தனையில் மூவகையினர் ஈடுபடுகின்றனர். அதிகார வர்க்கத்தினர், அவ்வதிகாரத்திற்குட்பட்டவர்கள், அந்த அதிகாரம் சரியான முறையில் பயன்படுத்தப் படுகிறதா என்பதைப் பரிசீலனை செய்யும் நீதி மன்றம்.

நடக்கும் தொழில் கோட்பாடு (Theory of going Concern)

காமன்ஸ், நடக்கும் தொழில் பற்றிய புதியதொரு கோட்பாட்டைத் தருகிறார். நடக்கும் தொழில் அனைத்தும் ஒருவகை அமைப்பிற்குட்பட்டவை. கடந்தகால நிலை, இன்றைய உற்பத்திமுறை,

வருங்காலத்தில் அதன் செழிப்ப நிலை ஆகியவையே இவ்வமைப்பை நிருணயிக்கின்றன. தொழிலில் எந்திர தளவாடங்களைக் கொண்ட நிறுவனமும் உற்பத்தியாகி விற்பனையாகும் பண்டங்களும் முக்கிய மானவை. எந்திர தளவாடங்களின் அமைப்பு தொழில் நுட்பத்தையும், அவை உற்பத்தி செய்யும் திறமையையும் பிரதிபலிக்கின்றன. பொருள் உற்பத்தி பண்டங்களை விற்றுப் பணமாக்கக் கூடிய தன்மையைப் பிரதிபலிக்கிறது. இவ்விரண்டிற்கும் சரியான பொருத்தம் இருந்தால்தான் தொழில் சீராக நடக்கும் என்பது காமன்ஸின் கருத்து.

பொதுப் பணியில் உழைப்பு

நாட்டின் பொருளாதார அமைப்பில் உழைப்பிற்கு முக்கியத்துவம் தந்தார் காமன்ஸ். தொழிலாளிகளின் உள்ளுணர்வையும் கார்ப்பரேசன்களின் நிருவாக முறையையும் ஆதாரமாகக்கொண்டு, வருங்காலத்தில் பொருளாதாரச்சீர்கேடு ஏற்படும் வாய்ப்பு குறைவே என்ற முடிவுக்கு வருகிறார். அமெரிக்க உழைப்பாளிகளின் நிலை உயர்வதற்குப் பாடுபட்டார். பொதுமக்களின் சேவைக்கு உழைப்பாளிகளின் பணியே முக்கியமெனக் கருதி, உழைப்பாளி களின் நல்லெண்ணத்தைத் தொழில் நிருவாகிகள் கவர வேண்டு மென்கிறார். தங்கள் தொழிலின் முக்கியத்துவத்தை உணருவதற்குத் தொழிலாளிகளுக்குப் பயிற்சி அவசியமென வலியுறுத்துகிறார் காமன்ஸ். தொழிலாளி—முதலாளிகளுக்கிடையே சச்சரவு ஏற்படாமலிருக்க அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டுமென்கிறார்.

பொருளாதார அமைப்புகள்

முதலாளித்துவம், கம்யூனிஸம், ஃபாஸிசம் ஆகிய மூன்று வகைப் பொருளாதார அமைப்புகளும் முறையே அமெரிக்கா, ரஷ்யா, இத்தாலி ஆகிய நாடுகளில் செயல்பட்டதைக்கொண்டு அவற்றில் எது சிறந்ததெனக் கூறமுடியாமல் தவிக்கிறார் காமன்ஸ். இருந்தபோதிலும், கம்யூனிசமும் ஃபாஸிசமும் மனிதனின் சுதந்திரத்தைப் பறித்துவிடுவதால் அவை நல்லதல்ல என்கிறார். அதோடு, மனிதன் தன் திறமைக்கேற்ப வேலை செய்யும் சூழ் நிலையை அவை உருவாக்குவதில்லை என்கிறார். மக்கள் பயத்துடன் வேலைசெய்யும்போது தம் திறமை முழுவதையும் வெளிக்காட்ட முடியாதென்கிறார்.

கார்ல்மார்க்ஸின் தத்துவங்களில் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு தொழிலாளிகளின் கூலி உயரவேண்டுமென வலியுறுத்தினார். இதற்காகத் தொழிற்சங்கங்கள் பாடுபடவேண்டுமென்கிறார்.

இதனைக்கொண்டு அவரை சோஷியலிச வாதி எனச் சிலர் கூறுவர். ஆனால் உண்மையில் அவர் சோஷியலிசவாதியல்லர். தொழிற் சங்கங்களை அவர் ஊக்குவித்தபோதிலும் சோஷியலிசப் பாதைக்குச் சென்றுவிடவில்லை.

முடிவுரை

உழைப்பாளிகளின் உயர்வில் அக்கறைகொண்ட காமன்ஸ் உழைப்பாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் சண்டை ஏற்படக் கூடாது; அப்படியே ஏற்பட்டாலும் அதனைச் சமரசமாகத் தீர்த்து வைக்கவேண்டுமென வலியுறுத்தியவர் காமன்ஸ். அமெரிக்காவில் நீதிமன்றங்களும் சட்டத்துறையினரும் பொருளாதார அமைப்பில் கொண்டுள்ள பங்கினைச் சுட்டிக்காட்டுகிறார். தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்தியல் ஆய்வு முறையையும் வரலாற்றுவாதிகளின் ஆய்வு முறையையும் இணைத்து புதிய முறையில் பொருளாதாரத்தை ஆய்ந்தவர். காமன்ஸ் புதிய பொருளாதாரக் கோட்பாடு எதையும் புனையவில்லையென்றாலும் பழைய கோட்பாடுகளுக்குப் புதிய மெருகேற்றினார் எனலாம்.

மிட்ச்செல் (1874–1948)

மிட்ச்செல் சிக்காகோ பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். 1913 முதல் 1944 வரை கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர்; தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றியவர். அமெரிக்காவின் பல்வேறு குழுக்களில் உறுப்பினராக இருந்தவர். 1930, 1934-ஆம் ஆண்டுகளில் முறையே ஆக்ஸ்போர்டு, கலிஃபோர்னியா பல்கலைக்கழகங்களுக்குச் சென்று உரையாற்றியவர். இவரது நூல்கள் எண்ணிலடங்கா. இவரது அறிவின் ஆழ்மையையும் கூர்மையையும் அறிந்த பல அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் இவருக்குப் பல கௌரவப்பட்டங்களை அளித்துப் பெருமைப்படுத்தின.

அமைப்பு வாத ஆய்வு

மிட்ச்செலின் ஆய்வுமுறை வெப்லனின் முறையை ஒட்டியது. சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் ஆதாயத்திற்காக மட்டும் செயல்படுவது இல்லை. பல உணர்ச்சிகள் அவர்களது செயல்களுக்குக் காரணமாகின்றன. இவ்வுணர்ச்சிகள் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றன. எனினும், ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களின் பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் நிலையானதாகவே

அமைந்துவிடுகின்றன. சிலர் பிறவியிலேயே திறமையுள்ளவர்களாக உள்ளனர். கலையார்வம், எழுத்து வல்லமை, பேச்சுத்திறமை, மதப்பற்றுதல் ஆகியவை மனிதனின் நடவடிக்கையைப் பாதிக்கக் கூடியவை. மனிதனின் எண்ணங்கள், கருத்துகள், நடவடிக்கைகள் யாவும் சமுதாயத்திற்கு ஏற்றவையாயிருந்தால் அவையனைத்தும் நிலையான அமைப்பை அடைந்துவிடுகின்றன.

சமுதாயத்தின் அமைப்புகளே மக்களின் பழக்க வழக்கங்களை நிருணயிக்கும் சக்திகள் என்பது மிட்ச்செலின் கருத்து சமுதாய அமைப்பை மனிதனின் அறிவும் கடந்தகாலப் பழக்க வழக்கங்களும் சேர்ந்து உருவாக்குகின்றன. மனிதனின் திறமையை அவனது நடவடிக்கைகளைக் கொண்டே அறிந்து விடலாம். சமுதாயத்தின் பொருளாதார அமைப்புகளை பணப் புழக்கம், வங்கி வளர்ச்சி, தொழிலாளரின் நிலைமை ஆகியவை நிருணயிக்கின்றன. எனவே, பொருளாதார ஆய்வுமுறை, சமுதாயத்தின் அமைப்மையும் வரலாற்றையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்கிறார் மிட்ச்செல். இவ்வாய்வு முறையைக் கொண்டே மனிதனின் நடவடிக்கைகளை உயிர் நாடியாகக் கொண்ட பொருளாதார இயலை வளர்க்க முடியும்.

பொருளாதார வழிகாட்டிக் கொள்கை

நவீன சமுதாயத்தில் பொருளாதார அமைப்பை நிருணயிக்கும் சக்தி தொழில் முயல்வோரையே சாரும் என்பது மிட்ச்செலின் நம்பிக்கை. பொருத்தமான விகிதத்தில் பயன்படுத்தி, அவற்றை வீணாக்காமல் சமுதாயத்திற்கு வேண்டிய பண்டங்களையெல்லாம் உற்பத்தி செய்யும் அரும்பணியைத் தொழில் முயல்வோரே புரிகின்றனர். இதையே பொருளாதார வழிகாட்டிக் கொள்கை என்கிறார். ஆனால் கார்ப்பரேசன்களை அமைத்துப் பண்டங்களை உற்பத்தி செய்யும்போது தொழில் உரிமையாளர்கள் வேறாகவும் நிருவாகிகள் வேறாகவும் ஆகி விடுகின்றனர். தொழிலை நடத்தும் பொறுப்பு ஒரு சில நிருவாகிகள் கையில் குவிந்து விடுகிறது. அப்போது அவர்கள், தங்கள் சுயநலத்திற்காகவே தொழிலை நடத்துவர்; உரிமையாளர்களைப் பற்றிக் கவலைக்கொள்ளார். இதனால்தான் பொருளாதாரச் சீர்கேடு தோன்றுகிறதென்பது மிட்ச்செலின் வாதம்.

பொருளாதாரத் திட்டமும் நலனும்

மக்களின் பொருளாதார நலனை அதிகரிப்பதற்காகத் திட்டமிடும் போது இரண்டு அடிபடைத் தத்துவங்களை ஆதாரமாகக் கொள்ள வேண்டுமென்கிறார் மிட்ச்செல். ஒன்று, பொருளாதார

நலன் எத்தன்மை வாய்ந்தது, அத் தன்மையை நிருணயிக்கும் சக்திகள் யாவை என்பது. பொருளாதார நலனை அதிகரிக்கும் வழி வகைகள் மற்றொன்றாகும். பொருளாதார அறிவியல் மக்களின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றியதாகையால், மக்களின் நலனுக்கே முக்ககியத்துவம் தர வேண்டு மென்பது அவரது கருத்து. ஆனால் தொன்மைப் பொருளாதார அறிஞர்களோ செல்வத்துக்கே முதலிடம் தந்துவிட்டனர் என்று வருந்துகிறார். மக்களின் பொருளாதார நலம் ஏராளமான பொருள் உற்பத்தியை மட்டும் பொறுத்ததல்ல. பொருளாதார நடவடிக்கைகளை ஊக்கத்துடன் செய்யும் வகையில் தொழிலாளரின் நிலைமையையும் சார்ந்ததாகும்.

உலகப் பொருளாதார மந்தத்திலிருந்து பொருளாதார அமைப்பைச் சீர்படுத்துவதற்காகத் தீட்டப்பட்ட அமெரிக்காவின் புதிய திட்டத்தை வானளாவப் புகழ்கிறார் மிட்ச்செல். திட்டமிடுவது தொழிலதிபர்களின் பொறுப்புமட்டுமல்ல; அரசும் அதனை மேற் கொள்ள வேண்டுமென்கிறார். கூட்டங்களில் பேசியபோதெல்லாம் திட்டத்தையே வலியுறுத்தி வந்தார். திட்டமின்றிப் பொருளாதார அமைப்பைப நிலைபேண முடியாதென்றார்.

வணிகச் சுழல்

வணிகமானது சீராக நடைபெறுவது இல்லை. சில சமயம் செழிப்ப நிலையும் வேறு சமயம் மந்த நிலையும் அடைகிறது. மந்தநிலையிலி ருந்து புத்துயிர் பெற்று விரிவடைந்து வீக்க நிலையையும், பின்னர் தளர்ச்சியுற்று, சுருங்கி மந்த நிலையையும் அடைகிறது. இவ்வாறு ஒரு நிலையிலிருந்து தானாகவே அடுத்த நிலையை அடைந்துவிடுறது. இவ்வாறு வணிக நிலை மாறி மாறிச் சுழன்று கொண்டிருப்பதற்குப் பலகாரணங்கள் உள்ளன. வணிகம் விரிவடைவதற்கும் சுருங்கு வதற்கும் அடிப்படைக் காரணங்கள் நாட்டின் அரசியல் நிலைமை, வங்கிக் கொள்கையிலும் பணக் கொள்கையிலும் ஏற்படும் மாறு தல்கள், புதிய உற்பத்தி முறைகள், உலக விவகாரங்கள் ஆகியவை களே ஆகும். வணிகச் சுழலால் எல்லாத் தொழில்களும் ஒரே வகை யாகப் பாதிக்கப்படுவதில்லை. சில தொழில்கள் உடனடியாகவும் அதிகமாகவும் பாதிக்கப்படுகின்றன; வேறு சில மெதுவாகவும் லேசாகவும் பாதிக்கப்படுகின்றன.

வீழ்ச்சியிலிருந்து புத்துயிர் பெற்றவுடன் விலைவாசிகள் ஏறு கின்றன; அதிக இலாபம் பெறும் நோக்கத்தோடு உற்பத்தி யாளர்கள் ஏராளமாக உற்பத்திச் செய்து பொருள்களைக் குவித்து விடுகின்றனர். தேவை விரிவடையும் போது, உற்பத்தி பெருகிறது; வேலைவாய்ப்பும் விரிவடைகிறது. தொழிலதிபர்கள் அதிக

முதலீடு செய்து பெருவாரியான இயந்திரங்களை வாங்கி இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய ஆசைப்படுகின்றனர். இதனால் உற்பத்திச் செலவு படிப்படியாக அதிகரித்து விடுகிறது. பணத்திற்கு முடக்கம் ஏற்படுகிறது. பின்னர் சீர் கேடு தானாகவே ஏற்பட்டு விடுகிறது. இவ்வாறாக, வணிகச்சுழலில் பல் வேறு நிலைமைகள் தாமாகவே ஏற்படுகின்றன என்பதை காண்பித்துள்ளார் மிட்ச்செல்.

முடிவுரை

வணிகச் சுழலின் தன்மையையும் போக்கையும் மிட்ச்செல் நுணுக்கமாக ஆராய்ந்ததோடு, அவற்றிற்கும் சமுதாயத்திலுள்ள பொருளாதார சமூக, அரசியல் அமைப்புகளுக்கும் தொடர்பையும் காண்கிறார். அவரது வணிகச்சுழல் விளக்கம் உலகப் புகழ் வாய்ந்தது. மார்ஷலின் 'தத்துவங்களும்' வெளியாகி கெயின்ஸின் 'பொதுக்கோட்பாடு' தோன்றும் வரை வேறு எவருமே மிட்ச்செல்லைப் போல் புகழுடன் விளங்கியதில்லை.

பொருளாதார இயலைப் பகுத்தறி முறை ஆய்விலிருந்து விடுவித்துப் புதியதொரு ஆய்வு முறையைப் புகுத்திய பெருமைக்குரியவர்களில் மிட்ச்செல் என்றும் மங்காத புகழுடன் விளங்குவார் என்பது சில அறிஞர்களின் கருத்து. அமைப்புவாத அடிப்படையில் பொருளாதார இயலை ஆய்ந்து, அதன் விரிவையும் நோக்கத்தையும் விரிவாக்கிய பெருமை என்றும் இவருக்குண்டு.

27. புதுப் பொருளாதாரம்
(New Economics)

ஜான் மேனார்டு கெயின்ஸ் (1883—1946)
(John Maynard Keynes)

கடந்த முப்பது ஆண்டுகளாகப் புதிய முறையில் பொருளாதாரத்தை அணுகும் பணி நடந்துவருவதை நாம் அறிவோம். இதற்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர் ஜான் மேனார்டு கெயின்ஸ் தான். அவருடைய கருத்துகளையும் கொள்கைகளையும் புதுமையானவைகளாகவும் புரட்சிகாரமானவையாயும் அறிஞர்கள் பலர் கருதினர். எனவே கெயின்ஸின் பொருளாதாரத்தைப் புதுப் பொருளாதாரம் என்றும் கெயின்ஸின் புரட்சிப் பொருளாதாரம் என்றும் பலர் கருதுவர். அவருடைய பொருளாதாரத்தைப் பலர் குறை கூறுவர்; வேறு சிலர் புகழ்ந்து பாடுவர். இன்றும் அவரைப் பின்பற்றிப் பல நூல்கள் வெளி வருகின்றன. தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளின் உயிர் நாடியாகக் கருதப்பட்ட தலையிடாக் கொள்கையையும் தடையிலா வாணிபக் கொள்கையையும் உதறித் தள்ளி விட்டுப் புதுக்கொள்கையைப் புகுத்தியதன்வழியாக இருபதாம் நூற்றுண்டின் சிறந்த பொருளாதார நிபுணராக மதிக்கப்படுபவர் கெயின்ஸ்.

வாழ்க்கைக் குறிப்பு

ஜான் மேனார்டு கெயின்ஸ் 1883-ல் ஜுன் 5-ஆம் நாள்கேம்பிரிட்ஜ் நகரில் ஜான் நெவில் கெயின்ஸின் மூத்த புதல்வனாகப் பிறந்தார். ஜான் நெவில் கெயின்ஸ் 1911ஆம் ஆண்டுவரை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பணியாற்றினார். தொன்மைப் பொருளாதார மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த ஆல்பிரட் மார்ஷல் இவரது மாணவர். கல்லூரி நடத்துவதில் புகழ் பெற்ற அறிஞர் இவர். மேனார்டுகென்யின்ஸின் தாய் கேம்பிரிட்ஜ் நகர மேயராகப் பணியாற்றினார். பெற்றோர் இருவருமே இங்கி

லாந்தில் நன்கு மதிக்கப்பெற்ற அறிஞர் பரம்பரையில் தோன்றியவர்கள். மேனார்டு கெயின்ஸ் கேம்பிரிட்ஜ் நகரிலேயே தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். பின்னர் உபகாரச் சம்பளம் பெற்று ஈட்டன் (Eton) பொதுப் பள்ளியில் படித்தார். பள்ளியில் படிக்கும்போதே கணிதத்தில் சிறந்த மாணவராக விளங்கினார். பின்னர் 1902-ல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசர் கல்லூரியில் (King's College) சேர்ந்தார். பொருளாதாரத் துறையில் சிறந்த மேதைகளாக விளங்கிய J. H. கிளப்ஹாம் (J. H. Clapham), R. G. ஹாட்ரி (R. G. Hawtry), A. C. பிகூ (A. C. Pigou) ஆகியோர் அக் காலத்தில் அரசர் கல்லூரி மாணவர்களாக இருந்தனர். மேனார்டு கெயின்சுக்கு அதுவரை கணிதத்தில் இருந்த ஆர்வம் தத்துவ நூல்களிலும் அரசியல் நூல்களிலும் திரும்பியது. பிரிட்டிஷ் அரசாங்க நிருவாக அதிகாரிகள் தேர்வில் (British Civil Service) கலந்துகொள்ள விரும்பினார் கெயின்ஸ். அதற்கு முக்கிய பாடமான பொருளாதார இயலைப் படிப்பதற்காக ஆல்பிரட் மார்ஷலின் மாணவரானார். தேர்வில் மற்ற பாடங்களிலெல்லாம் முதல் மதிப்பெண் பெற்ற கெயின்ஸ் பொருளாதாரத்தில் மிகக் குறைந்த மதிப்பெண்களையே பெற்றார். இருந்தபோதிலும் தேர்வு எழுதிய மாணவர்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுத் தேறினார். இவருடைய ஆசிரியர்கள் அனைவரும் இவரையே சிறந்த மாணவராகக் கருதினர். அறிவில் சிறந்த இளைஞர்கள் சேர்ந்து நிறுவிய 'புளூம்ஸ்பரி குழுவில்' (Bloomsbury Group) சிறந்த உறுப்பினராக இருந்தார்.

கல்வி முடிந்ததும் இந்திய அலுவலகத்தில் (Indian Office) இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். இந்திய அலுவலகத்தில் அதிக வேலையில்லாத காரணத்தால் தினத்தாள்கள் வாசிப்பதிலும் புகை பிடிப்பதிலுமே அதிக நேரம் செலவிட்டார். அலுவலக வேலை அலுத்துவிட்ட காரணத்தால் ஆல்பிரட் மார்ஷலின் அறிவுரைப்படி கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். அவருக்கு ஊதியமாகத் தனது பணத்திலிருந்தே வருடத்திற்கு 100 பவுன் கொடுத்தார் மார்ஷல். 1912-ல் 28ஆம் வயதிலேயே ஆல்பிரட் மார்ஷல் அவர்களால் தொடங்கப்பெற்று உலகப் புகழ் பெற்ற 'பொருளாதார இதழுக்கு' கெயின்ஸ் ஆசிரியரானார். இப்பணியைச் சிறந்த முறையில் புரிந்த கெயின்ஸ், ராயல் பொருளாதாரக் குழுவின் செயலாளராகவும் நியமனம் பெற்றார். முதல் உலகப் போர் மூண்டபின் அரசாங்க நிதித் துறையில் பதவி ஏற்று, அயல் நாட்டுச் செலாவணிச் சிக்கல்களை ஆராய்வதில் ஈடுபட்டார். 1913-ல் அவர் எழுதிய முதல் நூலான 'இந்தியச் செலாவணியும் நிதியும்' வெளியானது. இதில் பொன் பரிவர்த்தனைத் திட்டத்தை (Gold Exchange Standard) மிக அழகாக விளக்கியுள்ளார்.

அதோடு, பணக் கொள்கைகளில் நிருவகிக்கப்படும் செலாவணிக் கொள்கையே (Managed currency) சிறந்ததென்பதை விளக்கியுள்ளார். இந் நூலை அக் காலத்திலேயே பலர் பாராட்டினர்.

முதல் உலகப் போருக்குப் பின்னர் 1919-ல் வெர்சயில்ஸில் நடந்த சமாதான மாநாட்டில் இங்கிலாந்தின் பிரதிநிதிகளில் ஒருவராகக் கெயின்ஸ் கலந்துகொண்டார். முதல் உலகப் போரில்வெற்றி பெற்ற நாடுகள், ஜெர்மனி அதிக நட்ட ஈட்டுத்தொகை கொடுக்க வேண்டுமென வற்புறுத்தின. ஆனால், கெயின்ஸ் இக் கொடுமையை எதிர்த்து வாதாடினார். வெற்றிபெற முடியவில்லை. இதனால் மனமுடைந்து தம் வேலையை உதறித்தள்ளினார். லண்டனுக்குத் திரும்பியதும் "சமாதான உடன் படிக்கையின் பொருளாதார விளைவுகள்" (Economic Consequences of the Peace) என்ற நூலை வெளியிட்டார். இந் நூலில் ஜெர்மனி கொடுக்க வேண்டிய நட்ட ஈட்டை அந்நாடு கொடுக்க இயலாதென வாதாடினார்.

அரசாங்கப் பதவியை உதறித்தள்ளிய கெயின்ஸ் மீண்டும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். பேராசிரியராக இருந்துகொண்டே ஒரு பெரிய இன்சூரன்ஸ் கம்பெனியின் தலைவர் பொறுப்பையும் ஏற்றார். 1920ஆம் ஆண்டிலிருந்து "நேஷன்" என்ற பத்திரிகைக்குக் கட்டுரைகளும் எழுதிவந்தார். அக் கட்டுரைகளில் தொன்மைப் பொருளாதாரத் தலையிடாக் கொள்கையைக் கண்டித்து, பொருளாதார வாழ்க்கையில் அரசாங்கம் தலையிட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தினார். 19 3-ல் அவருடைய "பணமுறைச் சீர்திருத்தம் (A Tract on Monefary Reforms) என்ற நூல் வெளியானது. இந் நூலில் சில முக்கியமான சீர்திருத்தக் கொள்கைகளை விளக்கினார். ஆனால் அவற்றை அறிஞர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. எனினும் சில ஆண்டுகளுக்குப் பின் அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர். அச் சீர்திருத்தக் கொள்கைகள் அவரது சிந்தனையின் போக்கை அறிந்துகொள்ளத் துணை செய்யும். நிருவகிக்கப்பட்ட செலாவணி முறையே சிறந்தது; அதனை உடனடியாக அமுலாக்கவேண்டும் என்றது முதல் சீர்திருத்தக்கொள்கை. அடுத்து பொன் நாணயத் திட்டம் பல குறைபாடுகளையுடையது. எனவே அத் திட்டத்தைக் கைவிடவேண்டுமென்பது. இறுதியாக, நாட்டின் மைய வங்கிப் பணிகளையும் பொறுப்புகளையும் அதிகப்படுத்த வேண்டும் என்பது

இன்சூரன்ஸ் கம்பெனியின் தலைவராகவும், பொருளாதார இதழின் ஆசிரியராகவும், அரசியலில் பற்றுள்ளவராகவும் விளங்கிய கெயின்ஸ் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பணியைச் செவ்வையாகச் செய்யமுடியவில்லை. இலண்டனிலேயே தங்கி

யிருந்து, வாரத்திற்கொருமுறை மட்டும் கேம்பிரிட்ஜ் சென்று சொற்பொழிவாற்றினர். அரசியல் பொருளாதாரக் குழுவில் மாணவர்களைக் கட்டுரைகள் எழுதச் சொல்லி மேற்பார்வையிட்டும் வந்தார். பேராசிரியராய் இருந்துகொண்டே இன்சூரன்ஸ் தொழிலையும் நடத்தி இலட்சாதிபதியானர் கெயின்ஸ்.

அவர் எழுதிய உலகப் புகழ்பெற்ற நூலைப் பற்றிக் கூறுமுன் அவரது வாழ்க்கைக் குறிப்பை முடித்துக் கொள்வது நன்று. இரண்டாம் உலகப் போர் தொடங்கியவுடன் மீண்டும் கெயின்ஸ் பொறுப்புமிக்க அரசாங்கப் பதவியில் அமர்ந்தார். போர்க்காலத்தில் ஏற்பட்ட பணவீக்கம் (Inflation), அயல் நாட்டுச் செலாவணியின் பற்றுக்குறை ஆகிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்பட்டார் கெயின்ஸ். போர் முடிந்தபின், அனைத்து நாட்டுச் செலாவணி முறையைச் சீர்படுத்தி, உலக வாணிபம் பெருகவும், உலக மக்கள் நன்மை பெறவும் அரும்பாடுபட்டார். பிரிட்டன் உட்ஸ் இரட்டையர் (Bretton woods Twins) என ஆசையாக அழைக்கப்படும் அனைத்து நாட்டுச் செலாவணி நிதியையும் (International Monetary Fund) உலக வங்கியும் (World Bank) நிறுவுவதில் பெருந்தொண்டாற்றினர்.

1925ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4ஆம் தேதி கெயின்ஸின் வாழ்வில் முக்கியமானதொரு நாளாகும். அந் நாளில்தான் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அன்றுதான் ரஷிய நடனத்தில் புகழ்பெற்ற லீடியா லொபக்கோவா (Lydia lopokoua) என்னும் அழகியை கெயின்ஸ் திருமணம் செய்துகொண்டார். இதுகாறும் இளமைத் துடிப்புடன் பல நூல்களை கெயின்ஸ் எழுதியிருந்தபோதிலும், 1925க்குப் பின்னரே அவரது சிந்தனை முதிர்ச்சி பெற்று, அறிஞரின் பண்புகளைப் பெற்றது. இதற்கு முக்கியக் காரணம் அவரது மனைவியே எனலாம். திருமணத்திற்குப் பின்னரே அவர் பல அலுவல்களைக் குறைத்துக்கொண்டு பொருளாதார அறிவியல் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டினர். இதற்கு முன் அவர் எழுதிய நூல்கள் அனைத்தும் அந்தந்தச் சமயத்தில் தோன்றிய பிரச்சினைகளைப் பற்றியதாகவே இருந்தன. ஆனல் 1930-ல் அவர் வெளியிட்ட 'பணம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை' (A Treatise on Money) என்னும் நூல் பல சிறப்புகளைக் கொண்டதாகும். பொருளாதார அறிவியலின் அடிப்படையில் ஒரு சிறந்த நூல் எழுதவேண்டுமென்ற கெயின்ஸின் ஆவலை இந் நூல் பிரதிபலிக்கிறது. இந் நூலில் சேமிப்புக்கும் முதலீட்டிற்குமுள்ள தொடர்பையும், இவ்விரண்டிற்குமிடையே தோன்றக்கூடிய வேறுபாட்டையும் கெயின்ஸ் விளக்குகிறர். அதோடு

பணக் கொள்கைக்கும் வட்டி விகிதத்திற்குமுள்ள தொடர்பையும், அத் தொடர்பால் வேலை வாய்ப்பு எவ்வாறு பாதிக்கப்படுகிறதென் பதையும் இந் நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார். எனினும் 1936-ல் அவர் வெளியிட்ட புரட்சிகரமான நூல், இந் நூலின் பெருமையை மங்கவைத்து விட்டது.

கெயின்ஸின் 'பொதுக் கோட்பாடு' (Keyne's General Theory)

1936-ல் கெயின்ஸ் தனது புரட்சிகரமான 'வேலை வாய்ப்பு, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு' (The General Theory of Employment, Interest and Money) என்னும் நூலை வெளியிட்டார். இந் நூல் வெளிவந்ததும் உலக அறிஞர்களே வியந்து இந் நூலைப் பாராட்டினர். இந் நூலின் வெற்றிக்கு அக் காலத்திய சூழ்நிலையே காரணமெனலாம். 1930-ல் உலகெங்கும் பரவிய பொருளாதார மந்தம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பெருந்துயரையும் உண்டாக்கியது. அடிக்கடி ஏற்படும் வேலையில் லாப் பிரச்சினையைத் தவிர்ப்பதெப்படி என்பது பெரும் புதிராக இருந்தது. பொருளாதார அறிஞர்கள், அரசியல்வாதிகள், தொழி லதிபர்கள் ஆகிய அனைவருக்குமே இப் பிரச்சினை பெரும் பிரச்சினை யாக இருந்தது. விலையைக் குறைக்கவேண்டும், கூலியைக் குறைக்கவேண்டும், தேவையைப் பெருக்கவேண்டுமெனக் கூறி விட்டால் போதாது. அவ்வாறு செய்தால் எவ்வாறு வேலை வாய்ப்பு தோன்றும் என்பதை அறிவியல் ரீதியில் காண்பிக்க வேண்டும். அப்போதுதான் அரசியல்வாதிகளும் அறிஞர்களும் ஒப்புக்கொள்வர். இப் பணியைச் சிறப்புடன் செய்ததன்வாயிலாகப் பெரும் புகழுக்குரியவரானர் கெயின்ஸ். ஆனல், பிற நூல்களை யெல்லாம் எளிமையாக, இனிய நடையில் எழுதிய கெயின்ஸ், இந் நூலைமட்டும் சிறிது கடினமான நடையில் எழுதியுள்ளார். இதனை ஆசிரியர்களுக்கே எழுதியதாக இந் நூலின் முன்னுரையில் குறிப் பிட்டுமுள்ளார். வேண்டுமென்றே இந் நூலைக் கடினமாக எழுதி யுள்ளதாகச் சிலர் கருதுவர்.

அணுநிலை ஆராய்ச்சிப் பொருளாதாரமும் அண்டநிலை ஆராய்ச்சிப் பொருளாதாரமும் (Micro Economics and Macro Economics)

தொன்மைப் பொருளாதாரக் காலம்தொட்டு உலகப் பொருளா தார மந்தகாலம்வரை எல்லாப் பொருளாதார அறிஞர்களும் தனி மனிதனின் தேவை, நுகர்ச்சி, தனி நிறுவனத்தின் முதலீடு, உற்பத்தி, தனிப்பட்ட பொருளின் அளிப்பு நிலை, அடக்கச் செலவு, விலை என்று அணு அணுவாகப்பிரித்து நாட்டின் பொருளாதாரத்தை ஆராய்ந்தனர். இந்த அணுநிலை ஆராய்ச்சியின் விளைவாக, பண்

டங்களின் விலைவாசிகளும் தொழிலாளரின் கூலியும் தாமாகவே சமநிலையை அடையும் என்றனர். விலைவாசிகளிலும் கூலியிலும் மாற்றம் ஏற்பட்டால், அது வணிகச்சுழலின் காரணத்தால்தான் ஏற்படும்; எனவே தற்காலிகமானதாகத்தான் பொருளாதாரச் சீர் கேடு தோன்றும் என்றனர். பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடாமலிருந்தால் தற்காலிகமான சீர்கேடு தானாகவே சரியாகிச் சீர்பட்டுவிடுமென்றனர். அரசாங்கத் தலையீடின்றி, தொழில்கள் அனைத்தும் தாமகவே வளர்ந்த தென்றால், அதனால் பொருள்கள் மலிவாகவும் ஏராளமாகவும் உற்பத்தியாகும்; எனவே சமுதாயமே நற்பயன் பெறும் என்றனர். இதனை நிரூபிக்கும் வகையில் 19ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியிலிருந்து தொழில் வளர்ச்சியின் வேகத்தினால் ஆங்கில நாட்டில் மட்டுமின்றி வேறு சில நாடுகளிலும் பொருளாதார நிலை உயர்ந்து வந்தது.

ஆனால் 1930-ல் உலகமனைத்தும் பொருளாதார மந்தத்தில் சிக்கியவுடன் அந்த நம்பிக்கை மறைந்தது. பொருளாதார நிலை எந்த நிமிடமும் சரிந்து விடலாம் என்ற அச்சம் எங்கும் பரவியது. இந் நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை அணு அணுவாகப் பிரித்து ஆய்வது பயனற்றது என்பதை கெயின்ஸ் உணர்ந்தார். பொருளாதாரச் சீர்குலைவைத் தடுப்பதெப்படி? பொருளாதார நிலையை உயர்த்துவதெப்படி என்ற பிரச்சினைகள் எழுந்தன. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வழியில் தோன்றியது கெயின்ஸின் நூல். எனவே, நாட்டின் முழுப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் சக்திகளை மொத்தமாக ஆயும் நூலாக அது அமைந்தது. தேசிய மொத்தவருமானம், நுகர்ச்சி, சேமிப்பு, முதலீடு, வேலை வாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அச் சக்திகளை ஆராய்கிறார். இவ்வாராய்ச்சி தொன்மைப் பொருளாதார ஆராய்ச்சி நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பொருளாதார அமைப்பும் நடவடிக்கைகளும் சீராகச் செயல்பட வேண்டுமாயின் அரசாங்கத் தலையீடு அவசியம் என்பதை கெயின்ஸ் வலியுறுத்தினார்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் அணுநிலை ஆய்வு பண்டங்களின் விலைவாசிகளைப் பற்றிய கோட்பாடுகளை மட்டும் பற்றியது. ஆனால் கெயின்ஸின் அண்ட நிலை ஆய்வு, பொருளாதாரச் சீர்கேட்டைத் தடுக்கவும், வேலை நிறைவை ஏற்படுத்தவும் அரசாங்கம் செய்யவேண்டிய முதலீட்டைப் பற்றிய கொள்கையைப் பற்றியது. பொருளாதார அமைப்பை மனித உடலுக்கு ஒப்பிடுவோமாயின், தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் உடலிலுள்ள உறுப்புகள் ஒவ்வொன்றும் எவ்வாறு இயங்கு

கின்றன என்பதை மட்டுமே ஆராய்ந்தார்கள் எனலாம். ஆனால் கெயின்ஸ் உடல் முழுவதையும் பரிசோதித்து, எவ்வாறு ஓர் உறுப்பு பிற உறுப்புகளோடு தொடர்புடையது என்பதையும், ஏதாவதோர் உறுப்பு சீர்கெட்டால் அது உடல்முழுவதையும் எவ்வாறு பாதிக்கிறதென்பதையும் அச் சீர்கேட்டைத் தடுப்ப தெப்படி என்பதையும் ஆய்கிறார் எனலாம். பொருளாதார அமைப்பு மூன்று முக்கியமான கூறுகளைக்கொண்டது. அவை முறையே ஒரு நாட்டின் மொத்தநுகர்ச்சி, மொத்தமுதலீடு, மொத்தச்செலவீடு ஆகும். இவை ஒவ்வொன்றும் மற்றவை யோடு சங்கிலிபோல் பின்னப்பட்டவை என்பது கெயின் ஸின் முடிவு. இவை ஒவ்வொன்றையும் முறையாக ஆராய்ந்தால் தான் பொருளாதாரச் சீர்கேட்டிற்கான காரணங்களை ஆயவும் அதை நீக்கும் வழிவகைகளைத் தெரிந்து கொள்ளவும் முடியும்.

வேலை நிறைவுக் கொள்கை

கெயின்ஸின் வேலை நிறைவுக் கொள்கையை ஆராயுமுன் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கொள்கையைத் தெரிந்து கொள்ள வேண்டும். பொருளாதாரச் சக்திகள் எவ்விதக் கட்டுப் பாடுமின்றித் தாமாகவே இயங்கினால் எல்லா மக்களுக்கும் முழுவேலை கிடைக்கும், இவ்வேலைநிறைவு உடனடியாக ஏற்படாவிட்டாலும் விரைவில் ஏற்படும் என்று வாதாடினர் தொன்மை நூலார். ஆனால் கெயின்ஸ் இதனை மறுக்கிறார். வேலை நிறைவு தானாகவே ஏற்படாது; வணிகச் சுழலின் காரணத்தால் பொருளாதார மந்த மும் வேலையின்மையும் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே இருக் கும் என்கிறார். இதனை விளக்கும் வகையில் நாட்டின் மொத்த நுகர்ச்சி, முதலீடு, செலவீடு ஆகியவற்றை ஆய்கிறார்.

நுகர்ச்சி விதி

வேலையின்மை ஏன் தோன்றுகிறது என்ற அடிப்படைக் கேள் விக்கு கெயின்ஸ் அளிக்கும் பதில், 'பண்டங்களுக்குள்ள தேவைச் சக்தி குறைவாக இருப்பதுதான்.' போதுமான அளவு இருக்கும் தேவையைப் 'பயனுள்ள தேவை' (Effective demand) என்கிறார். பண்டங்களின்மீது ஆசை இருக்கலாம்; ஆனால் அவற்றை வாங்கப் பணமில்லையென்றால் அது பயனுள்ள தேவையாகாது. வாங்கும் சக்தியுள்ள தேவையே பயனுள்ள தேவை எனப்படும். இதனை அடிப்படையாகக்கொண்டு நுகர்ச்சி விதியை ஆராய்கிறார். ஒரு நாட்டின் வருமானம் அதிகரிக்கும்பொழுது, அவ்வதிகரிப்பிற்கேற்ப மக்களின் தேவையும் நுகர்ச்சியும் அதிகரிப்பதில்லை என்பதுதே நுகர்ச்சி விதியின் சாரம். வருமான அதிகரிப்புக்கும் குறைவாகவே நுகர்ச்சி அதிகரிக்கிறது. வருமானம் அதிகரித்தால் தேவை

யும் நுகர்ச்சியும் அதிகரிக்கும்; ஆனால் வருமான அதிகரிப்பு எவ்வளவோ அவ்வளவிற்கு நுகர்ச்சி அதிகரிப்பதில்லை. நாடு முழுவதிலும் உள்ள தேவை அல்லது நுகர்ச்சி, நாட்டு மக்களின் வருமானம் முழுவதையும் செலவழித்தால் நாட்டின் வாங்கும் சக்தி நிறைவுள்ளதாயிருக்கும். நாட்டு மக்கள் மூன்று வகையினர். வறியவர்கள் தங்கள் வருமானம் முழுவதையும் நுகர்வுப் பொருள்களில் செலவிடுவர். ஆனால் நடுத்தர வகுப்பினரும் செல்வந்தரும் தங்கள் வருமானம் முழுவதையும் நுகர்வுப் பொருள்களில் செலவிடுவதில்லை. எனவே, வருமானத்தைக் காட்டிலும் நுகர்ச்சி குறைவாகத்தானிருக்கும். நுகர்ச்சி என்பது மக்களின் பழக்க வழக்கங்களைப் பொறுத்தது. இப் பழக்கவழக்கங்கள் குறுகிய காலத்தில் மாறுவதில்லை. எனவே 'நுகர்ச்சி நாட்டம்' (Poopentlty to consume) எனலாம் மக்களின் நுகர்ச்சி நாட்டம் பொருளாதார அமைப்பில் முக்கியமானதாகும். மக்களின் நுகர்ச்சி மாறுமலிருக்கும்போது, அதிகமாகக் கிடைக்கும் வருமானத்தைச் சேமித்து முதலீடு செய்தால்தான் நாட்டின் உற்பத்தி அதிகரிக்கும்; மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிட்டும். நடுத்தர வகுப்பினரும் செல்வந்தர்களும் தங்கள் வருமானம் முழுவதையும் நுகர்வுப் பொருள்களில் செலவிடாமல், ஒரு பகுதியைச் சேமித்து மூலதனம் சேர்க்கின்றனர். அவர்களின் மூலதனம் முதலீடு செய்யப்பட்டால்தான் பயனுள்ள தேவையைப் படைக்கவும், வேலை நிறைவை விளைவிக்கவும் முடியும். ஆனால் அவர்கள் செய்யும் முதலீட்டுச் செலவோ வேண்டியபோது வேண்டுமளவுக்கு நடைபெறுவதில்லை. முதலீட்டுச் செலவு என்பது பங்கு மார்க்கெட்டில் பங்கு வாங்குவதல்ல. மாறாக, புதிய ஆலைகள், ரயில் பாதைகள், சுரங்கங்கள் முதலியவற்றை உண்டாக்குவதற்காகச் செய்யப்படும் செலவையே குறிக்கும். எனவே, நுகர்ச்சிக்காகச் செய்யப்படும் செலவு மாறாமல் அப்படியேயிருக்க, பயனுள்ள தேவை நிறைவு பெறவேண்டுமானால் எஞ்சியுள்ள வருமானத்தை முதலீட்டில் செலவழிக்க வேண்டும்.

முதலீட்டை ஊக்குவிக்கும் காரணிகள்

வேலை வாய்ப்பைப் பாதிக்கக்கூடிய முதலீட்டைப் பற்றியும் விவரமாகக் குறிப்பிடுகிறார் கெயின்ஸ். சேமித்த பணமனைத்தையும் மக்கள் வங்கியில் போட்டுவிட்டால் முதலீடு பெருகாது. அப்பணத்தைத் தொழிலதிபர்களும் தொழில் முயல்வோரும் கடனாகப் பெற்று புதிய தொழில்களை ஆரம்பிக்கவேண்டும், அல்லது பழைய தொழில்களையே அபிவிருத்தி செய்யவேண்டும். வங்கியில் எவ்வளவுதான் பணமிருந்தாலும் முதலீடு பெருகவேண்டுமென்ற நியதி இல்லை. முதலீடு பெருக வேண்டுமென்றால், அதற்கு இரண்டு

நிபந்தனைகள் உள்ளன. முதலீடு செய்வதன் வாயிலாகத் தொழிலதிபர்கள் எதிர்பார்க்கும் இலாபம் ஒன்று. இதனை 'இலாபம் எதிர்பார்க்கும் கொள்கை' என்கிறார் கெயின்ஸ். மற்றொன்று கடனாகப் பெறும் முதலுக்குக் கொடுக்கவேண்டிய வட்டி விகிதமாகும். இவ்விரண்டுமே முதலீட்டை நிருணயிக்கும் இரு சக்திகள் என்கிறார் கெயின்ஸ். இவ்விரண்டையும் தெளிவாக அறிந்துகொள்ளல் அவசியம்.

மூலதனம் தரக்கூடிய இலாப எதிர்நோக்கு (Efficiency of Capital)

முதலீடு செய்வதன் வழியாக நல்ல இலாபம் கிடைக்குமெனத் தொழிலதிபர்கள் எதிர்பார்க்க வேண்டும். அவ்வாறு இலாபத்தை எதிர்பார்க்கும் தன்மை தொழிலதிபர்களின் மனத்தில் தோன்றும் ஓர் உள்ள நிலையாகும். இதனை ஓர் அகப்பண்பு என்று கெயின்ஸ் கூறுகிறார். இந்த அகப்பண்பை எவருமே மாற்ற முடியாது. எனவே, அரசாங்கம் இத் துறையில் தலையிடாமல் இருப்பதே நல்லது என்பது கெயின்ஸின் முடிவு. இன்று செய்யும் முதலீடு வருங்காலத்தில் எவ்வளவு இலாபம் தரக்கூடியதாக இருக்கும் என்பது எத்தனையோ சூழ்நிலைகளைப் பொறுத்தது. அவற்றுள் சில அகநிலைச் சூழ்நிலைகள்; மற்றவை புறநிலைச் சூழ்நிலைகள். அவற்றையெல்லாம் வரிசைப்படுத்தி எவராலும் கூறமுடியாது. ஆனால், ஒரே ஒரு புறநிலைச் சூழ்நிலையைமட்டும் எளிதாக அறிந்து கொள்ளலாம். வாங்கும் கடனுக்கு வட்டி குறைவாக இருந்தால் சில தொழில்கள் இலாபம் தரக்கூடும்; வட்டி அதிகமாக இருந்தால் அவை இழப்பையே தரும். எனவே, முதலீடு இலாப எதிர்பார்ப்பையும் வட்டிவிகிதத்தையும் பொறுத்ததென்கிறார் கெயின்ஸ்.

ரொக்கப் பணத்தின்மீது ஆசை (Liquidity preference)

கெயின்ஸின் வட்டிக் கோட்பாட்டை ஆராயுமுன், சம்பிரதாயக் கோட்பாடுகளை அவர் குறைகூறுவதைச் சுருக்கமாகவாவது தெரிந்துகொள்ள வேண்டும். முதலாளித்துவ அமைப்பில் வட்டி எவ்வாறு நிருணயமாகிறது என்பதைப் பல்வேறு கோட்பாடுகளின் வாயிலாக நடைமுறை அறிஞர்கள் விளக்கினர். முதல் உண்டாவதற்கு ஓரளவு நுகர்ச்சியைத் தியாகம்செய்து சேமிக்கவேண்டுமென்ற அடிப்படையில் 'துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாட்டை' சீனியர் விளக்கினார். இதனை மாற்றி, 'காத்திருத்தலே' முதல் உருவாகக் காரணம் என்றார் மார்ஷல். எனவே, 'காத்திருத்தலுக்கு'த் தரப்படும் ஈடுதான் வட்டி என்பது மார்ஷலின் விளக்கம். இது வட்டி நிருணயமாகும் கொள்கைக்குச் சரியான விளக்கமன்று

என்பது கெயின்ஸின் முடிவு. அடுத்து, மார்ஷலைப் பின்பற்றிய தொன்மை நூல் மறுமலர்ச்சிப் பொருளாதார அறிஞர்கள், பிற பண்டங்களின் விலையைப்போன்றே 'மூலதனத்தில் அளிப்பு—தேவை நிலை'யால் வட்டி நிருணயமாகிறதென்றனர். ஆனால் பணமோ ஒரு நிலையான அளவில் இருப்பதன்று; அரசியல், வங்கிக் கொள்கையால் அதன் அளிப்புநிலை மாறலாம். எனவே, அளிப்பு—தேவை நிலையைக் கொண்டு வகுக்கப்பட்ட வட்டிக் கோட்பாடும் தவறானதெனக் கொண்டார் கெயின்ஸ். இறுதியாக, வருங்காலப் பொருள்களைவிட, இன்றைய பொருள்களை விரும்புவதால்தான் வட்டி எழுகிறது என்பது ஃபிஷரின் (Fisher) கோட்பாடு, ஆனால், இதனையும் கெயின்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறாக, நடைமுறைக் கோட்பாடுகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு, கெயின்ஸ் ரொக்கப் பணத்தின்மீதுள்ள விருப்பக் கோட்பாட்டை' விளக்குகிறார். மக்கள் தங்கள் வருமானம் முழுவதையும் நுகர்வுப் பொருள்களில் செலவு செய்யாமல் ஒரு பகுதியை ரொக்கமாக வைத்திருக்கவே விரும்புகின்றனர் என்பது கெயின்ஸின் அடிப்படைத் தத்துவம். இத் தத்துவம் மக்களின் உளநிலை சார்ந்ததாகும். சேமிப்பைப் பல வகையில் முடக்குவதைவிட ரொக்கமாகக் கைவசம் வைத்திருப்பதே நல்லதென மக்கள் கருதுகின்றனர். அப் பணத்தை நிலம் அல்லது பங்கு மார்க்கெட்டில் விற்கப்படும் பங்கு அல்லது வீட்டை வாங்கச் செலவழித்தால் அப் பணம் இறுகிவிடுகிறது. ஆனால், நினைத்த நேரத்தில் பணம் வேண்டுமானால் அவற்றை விற்று உடனடியாகப் பணத்தைப் பெற முடியாது. எனவே, கையில் ரொக்கமாக வைத்திருப்பதே நல்லதென மக்கள் கருதுகின்றனர். இலாபம் தரக்கூடிய வகையில் பணத்தை முதலீடு செய்வதற்குப் பதிலாக மக்கள் பணத்தை ஏன் ரொக்கமாக வைத்திருக்கவேண்டும்? இக் கேள்விக்கு மூன்று காரணங்களைக் காட்டி விடைதருகிறார் கெயின்ஸ். (1) அன்றாடம் செய்யவேண்டிய செலவிற்கு ரொக்கமாகப் பணம் தேவைப்படுவதால் ரொக்கப் பணத்தை மக்கள் விரும்புகின்றனர். இதனை, அன்றாடச் செலவின் நோக்கம் (Transaction motive) எனலாம். இந் நோக்கத்திற்காக வைத்திருக்கும் ரொக்கப் பணத்தின் அளவு மக்களின் வருமானத்தையும், வருமானம் பெறும் ஒரு தேதிக்கும் மற்றொரு தேதிக்குமுள்ள இடைவெளிக் காலத்தையும் பொறுத்தது. (2) எதிர்பாராதவிதமாய் ஏற்படக்கூடிய நோய், நொடி, விபத்து போன்ற காரியங்களுக்காக ரொக்கப் பணம் தேவைப்படலாம். இதற்கென வைத்திருக்கும் ரொக்கப் பணத்தின் நோக்கத்தை எச்சரிக்கை நோக்கம் (Precautionary motive) என்கிறார். (3) ஊக வாணிகம் செய்து இலாபம் அடைய விரும்பும் ஊக வணிக நோக்கத்தோடும் மக்கள் ரொக்கப் பணத்தை விரும்பலாம்.

இறுதியாகக் கூறிய ஊக வணிக நோக்கத்தை அறிந்து கொள்ள வேண்டுமாயின், முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் மக்கள் பங்குகளை வாங்கி விற்கும் பழக்கத்தை மனதில் கொள்ள வேண்டும். வருங்காலத்தில் வட்டிவிகிதம் குறையுமென மக்கள் எதிர்பார்த்தால் பங்குகளை வாங்குவதில் முனைவர். அவ்வாறு செய்தால்தான் அவர்களுக்கு இலாபம். இவ்வாறு இன்று பங்குகளை வாங்கிப் பின்னால் விற்க நினைக்கும் நடவடிக்கையை ஊக வணிகம் என்பர். இவ்வாறாக, வட்டி அதிகமாக இருந்தால் ஊக வணிகத்திற்காக வைத்திருக்கும் ரொக்கப்பணத்தை மக்கள் கடனாகத்தர முன்வருவர். ஆனால், முதல் இரண்டு நோக்கங்களுடன் வைத்திருக்கும் ரொக்கப்பணத்தைக் கடனாகத் தரமாட்டார்கள். எனவே, ரொக்கப் பணத்தின்மீதுள்ள விருப்பத்தை மக்கள் துறப்பதற்கு ஈடாகத் தரும் தொகையே வட்டி என்று கெயின்ஸ் விளக்கம் தருகிறார். வட்டி விகிதம் உயர்வாயிருந்தால் ஊக வணிகத்திற்கென வைத்திருக்கும் ரொக்கப் பணம் குறைந்து விடும்; வட்டி விகிதம் குறைவாக இருந்தால் ரொக்கப் பண ஆசை அதிகரித்துவிடும். இவ்வாறாக, ரொக்கப் பணத்தின் மீதுள்ள விருப்பத்திற்கும் வட்டி விகிதத்திற்குமுள்ள தொடர்பை கெயின்ஸ் அறிவியல் அடிப்படையில் விளக்குகிறார்.

அடுத்து, வட்டி விகிதத்தைநிருணயிக்கும்இரண்டுமுக்கியமான சக்திகளை ஆராய்கிறார் கெயின்ஸ். இவ்விரண்டில் ஒன்று மக்களின் உள்ளத்தைச் சார்ந்ததாகும். அதாவது ரொக்கமாகப் பணம் வைத்திருக்கவேண்டுமென்ற மக்களின் ஆசை. இவ்வாசை அவரவர்களின் மனப் பக்குவத்தைப் பொறுத்தது. இம் மனநிலையை மாற்றுவது கடினம். இரண்டாவது சக்தி புறச்சக்தியாகும். அதாவது நாட்டில் புழக்கத்திலுள்ள பணத்தின் அளவும் வட்டியை நிருணயிக்கக் கூடியது. புழக்கத்திலுள்ள பணத்தைப் பெருக்குவதற்கு இரு வழிகள் உள்ளன என்கிறார் கெயின்ஸ். நாட்டிலுள்ள பொருளாக்கச் செயல்களும் நடவடிக்கைகளும் அதிகரித்தால் தேசிய உற்பத்தியும் வருமானமும் அதிகமாகும். இதனால் நாட்டிற்குத் தேவைப்படும் செலாவணி அதிகமாகும்; அதற்கேற்பப் பணப் புழக்கமும் அதிகமாகும். இவ்வாறாகப் பணப் புழக்கம் அதிகரிப்பது இயல்பானதாகும். ஆனால், இயல்பான இவ் வழிக்கு மாறாகச் செயற்கை வழியிலும் பணப் புழக்கத்தை அதிகரிக்கலாம். நாட்டின் பொருளாக்க நிலை எப்படி இருந்தாலும் பற்றாக்குறை நிதியாக்கத்தை (deficit financing) அரசாங்கம் பின்பற்றுவதால் புழக்கத்திலுள்ள பணத்தின் அளவை அதிகரிக்கலாம்; அல்லது மைய வங்கி கடன் தரும் கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் தளர்த்துவதன் வாயிலாகவும் வங்கிச் செலாவணியைப் பெருக்கலாம்.

கெயின்ஸின் வட்டிக்கோட்பாட்டின் விளைவுகள்

கெயின்ஸின் வட்டிக் கோட்பாட்டை ஆய்ந்தால், வட்டி என்பது மொத்தச் செலாவணியிலும் ரொக்கப் பணத்தின் மீதுள்ள விருப்பத்தாலும் நிருணயிக்கப்படுகிறதென்பது தெளிவாகத் தெரியும். ரொக்கப் பணத்தின்மீது மக்கள் கொண்டுள்ள விருப்பம் அவர்களது மனப்பான்மையை எளிதில் மாற்றிவிடமுடியாது. எனவே, வட்டியை நிருணயிக்கக்கூடிய பிறிதொரு காரணியான செயற்கை நிலையை மாற்றுவது எளிது ; செயற்கை முறையில் பணப் புழக்கத்தை அதிகரிப்பதன் வாயிலாக வட்டி விகிதத்தைக் குறைக்கலாம். இதுவே கெயின்ஸ் காட்டும் புரட்சிகரமான வழி. பயனுள்ள தேவையை நிறைவு செய்யும் வகையில் மக்கள் நுகர்ச்சிப் பொருள்களின்மீது செலவிடும் பணத்தை அதிகரிக்கமுடியாதென்பதை முன்னரே கண்டோம். எனவே, முதலீட்டில் செலவிடும் பணத்தை அதிகரிக்கமுடியுமென்ற முடிவு ஏற்படுகிறது. தொழிலதிபர்களின் இலாப எதிர்பார்ப்பு கவர்ச்சியானதாக அமையும் வகையில் வட்டி விகிதத்தைக் குறைப்பது சாத்தியமாகிறது. வட்டி விகிதம் குறைந்தால் சில தொழில்கள் இலாபம் பெறக்கூடும். முன்னரே இலாபம் தரும் தொழில்கள் அதிக இலாபத்தைத் தரக்கூடும். இவ்வாறுகக் கெயின்ஸின் ஆராய்ச்சியின் பயனுக வட்டிவிகிதத்தைக்குறைப்பதுசாத்தியமானதாகிறது. எனவே, சீர்கெட்டிருக்கும் பொருளாதார நிலையைச் சீர்படுத்துவதற்குக் கெயின்ஸ் காட்டும் வழிவகைகள் புதுமையானவை மட்டுமல்ல, புரட்சிகரமானவையும் கூட. அதாவது, வங்கிச் செலாவணிக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியும், பற்றுக் குறை நிதியாக்கத்தைப் பின்பற்றியும் பணப்புழக்கத்தைப் பெருக்கி வட்டி விகிதத்தைக் குறைத்து, இலாப எதிர்பார்ப்பை அதிகரித்து, பயனுள்ள தேவை நிலையை நிறைவு செய்யலாம் என்பதே அவர் காட்டும் வழி.

ஆனல், வங்கிச் செலாவணிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, பற்றுக்குறை நிதி ஆக்கத்தைக் கடைப்பிடித்து, வட்டி விகிதத்தைக் குறைத்தால்கூட தனியார் முதலீடு செய்யத் தயங்கலாம். உலகப் பொருளாதார மந்தத்தின்போது அமெரிக்காவில் வட்டி விகிதம் குறைவாக இருந்தும், தொழிலதிபர்கள் முதலீடு செய்ய முன்வரவில்லை. இச் சூழ்நிலையில் தான் ரூஸ்வெல்டின் (Rooswelt) புதிய திட்டம் (New deal) உருவாயிற்று. இத் திட்டத்திற்கு கெயின்ஸ் பெரிதும் உதவினர். இத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் பொதுத் துறையில் பெருவாரியாக முதலீடு செய்தது. இவ்வாறுக, தனியார் முதலீடு செய்யத் தயங்கினுல் அரசாங்கமே வேண்டிய

அளவு முதலீடு செய்ய வேண்டுமென்பதே கெயின்ஸின் கோட்பாடு.

இதுவரை கெயின்ஸின் கோட்பாடுகளைத் தனித்தனியாக ஆராய்ந்தோம். முதலாளித்துவ அமைப்பில் பொருளாதார நிலை சீர்கெட்டுவிட்டால் ஏற்படும் இன்னல்களை எவ்வாறு நீக்குவது என்பதையும் கண்டோம். ஆனால், கெயின்ஸின் கோட்பாடு களனைத்தும் ஒன்றோடொன்று இணைந்தவை என்பதையும் அறிய வேண்டும். அதற்கு அவர் கையாண்ட ஒரு சில முக்கியமான ஆராய்ச்சிக் கருவிகளை இப்போது கவனிப்போம்.

சேமிப்பு முதலீட்டுச் சமநிலை

ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பை முழுமையாக ஆராயும் கெயின்ஸ் சேமிப்பும் முதலீடும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் என்ற முடிவிற்கு வருகிறார். நுகர்ச்சிப் பொருள்களுக்காகச் செல வழித்தது போக எஞ்சிய வருமானமே சேமிப்பு என்பதை நாம் அறிவோம். நாட்டின் மொத்த வருமானம் என்பதும், மொத்தப் பொருள் உற்பத்தி என்பதும் ஒன்றே. நாட்டின் வருமானம் முழு வதும் செலவழிக்கப்பட்டால் அதனை நாட்டின் மொத்தச் செலவீடு எனலாம். நாட்டின் மொத்தச் செலவீடே நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை அங்காடி விலையில் வாங்கக்கூடிய சக்தி வாய்ந்தது. மொத்தச் செலவில் ஒரு பகுதி நுகர்ச்சிக்கென்றும் எஞ்சிய பகுதி முதலீட்டிற்கென்றும் செலவிடப்படும். இவ்வாறாக ஆராய்ந்து கண்டுபிடித்த முடிவுகளைச் சமநிலைச் சூத்திரங்களாகத் தருகிறார் கெயின்ஸ்.

நாட்டின் வருமானம் =
நாட்டின் உற்பத்திப் பொருள்களின் மதிப்பு

நாட்டின் வருமானம் =
நாட்டின் நுகர்வுச் செலவு + முதலீட்டுச் செலவு
அதாவது $Y = C + I$

சேமிப்பு = வருமானம் − செலவீடு

அதாவது $S = Y - C$

எனவே, சேமிப்பு = முதலீடு

அதாவது $S = I$

இந்தச் சூத்திரங்களில் Y நாட்டு வருமானத்தையும், C நுகர்ச்சி யையும், I முதலீட்டையும், S சேமிப்பையும் குறிப்பிடும்.

சேமிப்பும் முதலீடும் ஒன்றுக்கொன்று சமம் என்பதைக் கெயின்ஸ் பின்வருமாறு விளக்குகிறார். சேமிப்பு வருமானத்தைப் பொறுத்தது என்பதும், தனியார் வருமானம் நாட்டின் வருமானத்தைச் சார்ந்தது என்பதும் வெளிப்படை. தனி நபர்கள் பெறும் வருமானத்தில் எவ்வளவு நுகர்ச்சிப் பொருள்களில் செலவிடப்படுமென்பது அவரவர்களின் வாழ்கைத்தரத்தைப் பொறுத்தது. செலவழித்ததுபோக எஞ்சிய வருமானத்தை அவர்கள் சேமிப்பர். சான்றாக வருமானத்தில் 85 சதவிகிதத்தைச் செலவழித்துவிட்டு 15 சதவிகிதம் சேமிக்கின்றனர் என்று வைத்துக் கொள்வோம். மக்களின் செலவீடு அவர்களின் வாழ்க்கைத்தரத்தைப் பொறுத்ததால், குறுகிய காலத்தில் அவர்களது செலவீடு மாறுவதில்லை. இப்போது, மக்களின் வருமானம் 10 சதவிகிதம் உயர்வதாக வைத்துக் கொள்வோம். வருமானம் 10 சதவிகிதம் உயர்ந்து விட்டதால் செலவும் 10 சதவிகிதம் உயராது. மாறாக, 2 அல்லது 3 சதவிகிதமே உயரும்; எஞ்சியது சேமிக்கப்படும். எனவே, வருமானம் உயர உயர சேமிப்பு அதிகரித்துக் கொண்டே செல்லும் எனலாம்.

இந் நிலையில் சேமிப்பிற்கும் முதலீட்டிற்குமுள்ள தொடர்புதான் என்ன? சேமிப்பு, வருமானத்தைச் சார்ந்ததெனக் கண்டோம். ஆனால் முதலீடு வருமானத்தைப் பொறுத்ததன்று. மாறாக, முதலீடு எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும். தொழில் நுட்ப முன்னேற்றம், மக்கள் தொகை, இயற்கை—செயற்கை வளங்கள் ஆகியவற்றைச் சார்ந்தது. முதலீடு செய்பவர்கள் வேறு; சேமிப்பவர்கள் வேறு; எவ்வளவு சேமிப்பு நாட்டில் உள்ளது என்பது முதலீடு செய்பவர்களுக்குத் தெரியாது. அப்படியானால் சேமிப்பும் முதலீடும் எவ்வாறு சமமாகும்?

இத்தகைய சமநிலை எவ்வாறு ஏற்படுகிறதென்பதை ஒரு உதாரணத்தால் விளக்கலாம். ஒரு நாட்டின் தேசிய வருமானம் 100 என வைத்துக்கொள்வோம். அதில் 90 நுகர்வுச் செலவு, 10 முதலீட்டுச் செலவு என்றும் கொள்வோம். இந் நிலையில் தொழிலதிபர்கள் முதலீட்டை 20 ஆக அதிகரித்தால் சேமிப்பும் முதலீடும் வேறுபட்டு விடுகிறது. பின்னர் எவ்வாறு இரண்டும் சமமாகும் என்பதைக் கவனிப்போம். தொழிலதிபர்கள் அதிக முதலீடு செய்யும்போது, அம் முதலீடு, வேலையில் அமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு அதிக வருமானத்தை அளிக்கும். அல்லது அவர்கள் முதற்கருவிகளை வாங்குவதில் செலவிட்டால், அக் கருவிகளை உற்பத்தி செய்வோர் அதிக வருமானத்தைப் பெறுவர். அதிக வருமானம் அடையும் ஒவ்வொருவரும் அதிகரித்துள்ள வருவாயில் பாதியை நுகர்ச்சிப் பொருள்களின்மீது செலவழித்து, எஞ்சிய பாதியை

சேமிக்கின்றனர் எனக் கொள்வோம். அப்படியானுல் அதிகரித்துள்ள 20 வருமானத்தில் 10 நுகர்ச்சிக்கும் 10 சேமிப்புக்கும் செல்கிறது. இதனுல் சேமிப்பு 10-லிருந்து 20-க்கு அதிகரித்துவிடுகிறது. இவ்வாருக சேமிப்பும் முதலீடும் சமமாகிவிடுகிறது.

சேமிப்பும் முதலீடும் சமமாகும் என்ற கெயின்ஸின் கோட்பாட்டைப் பலர் குறை கூறுவதுண்டு. சேமிப்பெல்லாம் பதுக்கப்பட்டுவிட்டால் சேமிப்பும் முதலீடும் ஒன்ருகாது என்பது அவர்களின் வாதம். முன்னேறிய நாடுகளில் சேமிப்பு முடக்கப்படுவதில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டால், கெயின்ஸின் சமநிலைக் கோட்பாடு சரியென்றே தோன்றும்.

முதலீடு பெருக்கிக் கோட்பாடு (Theory of Investment Multiplier)

குறிப்பிட்ட அளவு முதலீட்டின் விளைவாக வருமானம் எந்த அளவுக்கு அதிகரிக்கிறது என்பதை விளக்குவதே முதலீடு பெருக்கிக்கோட்பாடாகும். அல்லது முதலீட்டிற்கும் வருமான அதிகரிப்புக்கும் உள்ள இணைப்பைக் கூறும் ராசி (function) ஆகும். குறிப்பிட்ட அளவு முதலீடு செய்தால், வருமானம் அதைவிடப் பன்மடங்கு அதிகரிக்கும் என்பதை இக் கோட்பாட்டின் வாயிலாக விளக்குகிருர் கெயின்ஸ். குளத்தில் ஒரு கல்லைப்போட்டால் அலைகள் வந்துகொண்டேயிருப்பதைப்போல் சிறு அளவு முதலீடு செய்தாலும் வருமானம் பெருகிக்கொண்டே போகும். சான்ருக, ஒரு நாட்டின் முதலீட்டுச் செலவு 10 எனக்கொள்வோம். இது, தொழிலதிபர் அமர்த்தும் தொழிலாளிகளுக்கு வருமானமாகும். இந்த 10 வருமானத்தில் 8 செலவு செய்து எஞ்சிய 2-ஐச் சேமிக்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். தொழிலாளிகள் செய்யும் செலவு 8-நுகர்வுப் பண்டங்கள் ஆக்குவோருக்கு வருமானமாகும். அந்த 8-ல் 6·40—ஐ அவர்கள் செலவிட்டு 1·60-ஐச் சேமிப்பர். இவ்வாறு முதலில் செய்த முதலீட்டுச் செலவானது பலசாரார் கையில் வருமானமாகவும் சேமிப்பாகவும் பரவிக்கொண்டே செல்கிறது. இவ்வாறு 2, 3, 4ஆம் சுற்றுநிலைகளில் கீழ்க்காணும் முறையில் குறியியல் கணக்குமுறைப்படி வருமானம் 50 ஆகப் பெருகும்.

$$10+8+6\tfrac{2}{5}+5\cdot12 \quad \ldots \quad \ldots \quad 50$$

இவ்வுதாரணத்தில் நுகர்வுச் செலவு வருமானத்தில் $\frac{4}{5}$ ஆகக் கருதப்படுகிறது. எனவே சேமிப்பு $\frac{1}{5}$ ஆகும். சேமிப்பு ராசியான $\frac{1}{5}$-ஐத் தலைகீழாகப்போட்டால், அதுவே முதலீடு பெருக்கியின் அளவாகும் என்பது கெயின்ஸ் கண்ட முடிவு. சேமிப்பு ராசி $\frac{1}{5}$ என்ருல் வருமானம் $\frac{5}{1}$ ஆகப் பெருகும். இதுதான் முதலீடு பெருக்கியின் விளைவு எனலாம்.

இவ்வாறாக, முதலீட்டுச் செலவு பெருகி, வருமானத்தைப் பெருக்குவது ஒரு கொடையாகவே கொள்ளவேண்டும். ஏனெனில் பயனுள்ள தேவையை அதிகப்படுத்துவதற்கு முதலிட்டுச் செலவை அதிகரிப்பது ஒன்றே வழி. எனவே, முதலீட்டுச் செலவு பெருமளவில் இருக்கவேண்டுமென அவசியமில்லை. முதலீட்டுச் செலவைப்போல் பன்மடங்கு வருமானம் பெருகுவதால் முதலாளித்துவத்தின் கொடுநோயான வேலையின்மையைத் தீர்க்கும் அருமருந்தாக முதலீடு பெருக்கி என்னும் கருவி அமைந்துவிடுகிறது.

வணிகச் சுழல்

முதலாளித்துவ அமைப்பில் வணிகம் ஒரே சீராக நடைபெறுவதில்லை. சிலசமயம் வணிகம் அபிவிருத்தியடைந்தும் வேறு சில சமயம் சீர்கெட்டும் மாறிமாறி அமைகிறது. கெயின்ஸ் இவ் வணிகச்சுழலுக்குக் காரணம் என்னவென்பதை ஆராய்வதில் முனைந்தார். தொழிலதிபர்கள் தாங்கள் செய்யும் முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கும் இலாபம் குறைவாக இருப்பதே இதற்குக் காரணம் என்கிறார். இக் காரணத்தோடு வேறு இரண்டையும் ஆராய்ந்தார். அவற்றுள் ஒன்று மக்களின் நுகர்ச்சி நாட்டம்; பிறிதொன்று ரொக்கத்தின்மீது அவர்கள் கொண்டுள்ள நாட்டம். ஆனால், இவை இரண்டும் சாதாரணமாக நிலையானவைகளாகவே இருக்கும். எனவே, மாறும் இயல்புடைய இலாப எதிர்பார்ப்பே வணிகச்சுழலுக்குக் காரணம் என்பது கெயின்ஸின் முடிவு முதலீடு பெருக்கியின் வழியாக எவ்வாறு வருமானம் பன்மடங்காகப் பெருகுகிறதென்பதை முன்னர் கண்டோம். அதோடு, ஒரு சிறு முதலீட்டின் வாயிலாகப் பொருளாதார நடவடிக்கைகளும் விரிவடையும். எனவே, உற்பத்தி தொடர்ந்து பெருகவேண்டுமானால் முதலீடு படிப்படியாக அதிகரித்துக்கொண்டே செல்லவேண்டும். எனவே, வணிகச் சுழலுக்குக் காரணம், முதலீட்டை ஊக்குவிக்கக் கூடிய இலாப எதிர்நோக்குத் தளர்வதேயன்றி, வட்டி அதிகரிப்பதனால் அல்ல என்பது கெயின்ஸ் கண்ட முடிவு.

வணிகச்சுழல் எப்படி ஏற்படுகிறது? இக் கேள்விக்கு கெயின்ஸ் அளிக்கும் விளக்கம் வருமாறு: தொழில்கள் அபிவிருத்தியடைந்து நல்ல இலாபத்தைத் தருமெனத் தொழிலதிபர்கள் எதிர்பார்க்கும்போது, அதிக முதலீடு செய்வர். தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பும் அதிகரிக்கிறது. ஆனால், தொழில்கள் முன்னேறி இறுதிக் கட்டத்தை அடைந்தபின், மேலும் புதிய முதற் கருவிப்பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் அவற்றில் முதலீடு செய்வதற்கும் செலவு அதிகரித்து விடுகிறது. இதனால் தொழிலதிபர்கள் எதிர்பார்க்கும் இலாபம் குறைந்து விடுமோ என அச்சம்

தோன்றுகிறது. மேலும் முதலீடு செய்ய அவர்கள் தயக்கம் கொள்வர். இச் சூழ்நிலையில், தொழிலதிபர்கள் போட்டியிட்டு உற்பத்தி செய்து குவித்த பொருள்கள் அங்காடியில் தேக்கம் அடைகிறது. வியாபார மந்தம் தோன்றிவிடுகிறது. எனவே, வணிகச் சுழலுக்குக் கெயின்ஸ் கண்ட மருந்து இலாப எதிர் நோக்கை உச்சக் கட்டத்தில் வைத்திருக்கவேண்டுமென்பதுதான்.

பணக்கொள்கைக் குறிக்கோள்

ஒருநாடு பின்பற்றும் பணக்கொள்கையின் குறிக்கோள் எதுவாக இருக்கவேண்டும்? இக் கேள்விக்குப் பலர் பலவிதமான விடைகளைத் தந்தனர். பொருள்களின் விலைவாசிகள் ஏறாமல் இறங்காமல் நிலையாக இருக்கவேண்டுமென்பதே பணக் கொள்கையின் குறிக்கோள் என்றனர் சிலர். வேறுசிலரோ நாட்டின் வருமானத்தை நிலைபேணச் செய்வதே முக்கியம் என்றனர். தொழில் செய்வதற்கு வேண்டிய பணம் மலிவாகக் கிடைக்கும்படிச் செய்வதே குறிக்கோளாக இருக்கவேண்டுமென வாதாடினர் பலர். இவ்வாறாக, கெயின்ஸ் காலத்தவரும் அவருக்குமுன் தோன்றிய அறிஞர்களும் பணக் கொள்கையின் குறிக்கோளைப் பற்றிப் பலவிதமாகக் கூறினர். ஆனால், கெயின்ஸின் விளக்கப்படி நாட்டில் அவ்வப்போது தோன்றக்கூடிய வணிகச் சுழலைத் தவிர்ப்பதும், மொத்த முதலீட்டையும் சேமிப்பையும் ஒன்றுக்கொன்று சமமாக நிலைபேணச் செய்வதுமே பணக்கொள்கையின் குறிக்கோள்.' இக் குறிகோளைப் பின்பற்றினால் வேலை நிறைவு ஏற்படும்; விலைவாசிகளும் நிலைபெறும்.

வேலை நிறைவை ஏற்படுத்தக்கூடிய வகையில் முதலீடும் சமமாகிவிட்டால், பொருளாதாரப் பிரச்சினைகளே தோன்றாது என்பது கெயின்ஸ் கண்ட முடிவு. இம் முடிவை இன்றைய பொருளாதார அறிஞர்களில் பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர். வேலை நிறைவு என்றால், எல்லாரும் வேலைசெய்யும் நிலை என்று பொருளல்ல கெயின்ஸின் விளக்கப்படி வேலை செய்யத் தகுதியுடையோரில் சிலர் விருப்பமில்லாமல் இருக்கலாம்; வேறு சிலர் வேலைப் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கலாம்; மேலும் சிலர் ஒரு வேலை பிடிக்காமல் வேறு வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கலாம். எனவே, தொழிலாளர்களில் 95 அல்லது 97 சதவிகித்தினர் வேலையில் அமர்ந்துவிட்டனரென்றால் அதுவே வேலை நிறைவாகும் என்பது கெயின்ஸின் விளக்கம்.

பொது நிதிக் கொள்கை

கெயின்ஸின் கொள்கைகளில் சில இன்றும் பல நாடுகளால் பின்பற்றப்படுகின்றன. அவருடைய நிதிக் கொள்கையைப்

பின்பற்றாத நாடுகளே இல்லை என்றும் கூறலாம். அக் கொள்கைதான் என்ன? பொருளாதார அமைப்பு வாட்டமான நிலையிலிருக்கும்போது அதற்குப் புது ஊட்டம் கொடுக்கும் வகையில் அரசாங்கம் முதலீடு செய்யவேண்டும் என்பதுதான். அணைகள், சாலைகள், பாலங்கள், மின் நிலையங்கள் போன்றவற்றை அரசாங்கம் அமைக்க வேண்டும். அப்போது தான் வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். மக்களின் வருவாய் அதிகரித்து, பண்டங்களுக்குள்ள தேவை பெருகும். தேவை அதிகரித்துள்ளதைக் காணும் தொழிலதிபர்களும் அதிக முதலீடு செய்யத் தூண்டப்படுவர். இவ்வாறாக, தொடக்கத்தில் அரசாங்கம் செய்த முதலீட்டின் வாயிலாக மந்தநிலை மறைந்து, வேலை நிறைவு ஏற்படும்; பொருளாதார நிலையும் சீர்பெறும்.

அரசாங்கம் முதலீடு செய்ய வேண்டுமென்றால், பணத்திற்கு எங்கே போவது? இதற்கு கெயின்ஸ் அளிக்கும் விடை, பற்றாக் குறை நிதியை உருவாக்க வேண்டுமென்பதே. மந்த நிலை மறையும்வரை அரசாங்கம் பற்றாக்குறை நிதியாக்கத்தின் வாயிலாக முதலீடு செய்ய வெண்டும். பற்றாக்குறை நிதியாக்கத்தால் விலைவாசிகள் உயர்ந்து விடும்; என்றாலும் பயப்படத் தேவையில்லை. ஓரளவிற்குமேல் விலைவாசிகள் உயராமல் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். செல்வர்கள், ஏழைகள் என்ற பாகுபாட்டைக் குறைக்கும் வகையிலும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் முறையிலும் அரசாங்கம் பல வளர் விகித வரிகளை விதிக்க வேண்டுமென்கிறார் கெயின்ஸ். அதோடு, வங்கிச் செலாவணியையும் வட்டி விகிதத்தையும் அரசாங்கம் ஒழுங்குபடுத்த வேண்டுமென்பது அவர் கண்ட முடிவு.

கெயின்ஸூம் தொன்மைப் பொருளாதாரமும்

கெயின்சின் பொருளாதாரக் கருத்துகளும் கொள்கைகளும் தொன்மைப் பொருளாதாரம் வகுத்த வழியிலேயே நடை போடுகின்றன என்று வாதாடுவோரும் உளர். அதே சமயம் தொன்மைப் பொருளாதார அமைப்பிலிருந்து கெயின்ஸின் புதுப் பொருளாதாரம் வேறுபட்டதென வாதாடுவோரும் உள்ளனர். வணிகவாதமின்றி ஆடம் ஸ்மித்தைப் புரிந்துகொள்ள இயலாதென்பதை முன்னர் கண்டோம். அதேபோல் தொன்மைப் பொருளாதாரமின்றி கெயின்ஸின் புதுப் பொருளாதாரத்தை அறிந்து கொள்வது கடினம். இவ்விரண்டிற்குமுள்ள ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் தெளிவாகப் புரிந்து கொள்ளல் அவசியம்.

முதலாவது, கெயின்ஸ் தொன்மைப் பொருளாதார மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த மார்ஷலின் மாணவர் என்பதை மறந்துவிடக் கூடாது. அடுத்து, சுமார் 20 ஆண்டுகளுக்குமேல் மறுமலர்ச்சிப் பொருளாதாரப் பேராசிரியராகக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். எனவே, கெயின்ஸின் வாழ்க்கையில் முற்பகுதி முழுவதும் தொன்மை நூலாரின் போதனையில் ஈடுபாடுகொண்டதாகும். (1) அரசாங்கம் தலையிடாமலிருந்தால் வேலைநிறைவு தானாகவே ஏற்பட்டுவிடுமெனக்கொண்டனர் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள். ஆனால், கெயின்ஸ் வேலை நிறைவு தோன்ற அரசாங்கத் தலையீடு அவசியமென வலியுறுத்துகிறார். (2) ஜே. பி. சேயின் அங்காடி விதியை அடிப்படையாகக் கொண்டது தொன்மைப் பொருளாதாரம் 'உற்பத்தியாகும் ஒவ்வொரு பொருளும் பிற பொருள்களுக்குத் தேவையைப் படைக்கிறது' என்பது சேயின் விதி. இவ் விதிப்படி விற்கமுடியாத அளவுக்குப் பொருள்கள் உற்பத்தியாகா என்பது சே கண்ட முடிவு. ஆனால் இம் முடிவை கெயின்ஸ் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். இவ்விதி பண்டமாற்று முறை இருந்த பழங்காலப் பொருளாதார அமைப்பிற்கே பொருந்தும். பணம் புழக்கத்திற்கு வந்த பின் பொருளாதார அமைப்பே வேறுபட்டுவிடுகிறதென்கிறார் கெயின்ஸ். (3) தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் வேலை நிறைவுக் கொள்கையில் நம்பிக்கைக் கொண்டவர்கள். குறுகிய காலத்தில் வேலையின்மை ஏற்பட்டாலும் நீண்ட காலத்தில் தானாகவே வேலை நிறைவு ஏற்பட்டுவிடுமென நம்பினர். ஆனால் கெயின்ஸ் வேலை நிறைவு தானாகவே ஏற்படாதென வாதாடுகிறார். (4) பொருளாதாரத்தின் குறிக்கோளை ஆராய்ந்து தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் 'தேசிய வருமானப் பகிர்வுக்கே' முக்கியத்துவம் தந்தனர். ஆனால், கெயின்ஸ் வேலை நிறைவை ஏற்படுத்துவதே பொருளாதார ஆய்வின் குறிக்கோள் என்கிறார். (5) தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பண்டங்கள், அவற்றை உற்பத்தி செய்யும் சாதனங்கள் ஆகியவற்றின் மதிப்பைத் தனியாக ஆராய்ந்தனர். பொருளாதார ஏற்றத்தாழ்வு, வேலையின்மை, பொருள் தேக்கம் ஆகியவற்றைத் தனியாக விளக்கினர். ஆனால், இவ் விருவகைப் பிரச்சினைகளும் ஒன்றோடொன்று இணைந்தவை என்பதை எண்பிக்கிறார் கெயின்ஸ். (6) தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் ஆய்வு நீண்டகாலச் சமநிலையைப்பற்றியதாகும். ஆனால், 'நீண்ட காலத்தில் நாமெல்லாம் மடிந்து போவோமே' என்று கருதிய கெயின்ஸ் குறுகிய காலச் சமநிலையையே ஆராய்கிறார். (7) வட்டி விகிதம்தான் சேமிப்பையும் முதலீட்டையும் சமப்படுத்துகிறதெனத் தொன்மை நூலார் வாதாடினர். ஆனால் இச் சமநிலையை ஏற்படுத்துவது வட்டி விகிதமல்ல, வருமான நிலைதான் என்கிறார் கெயின்ஸ்.

மேற்கூறிய கருத்துகளையெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது கெயின்ஸின் 'பொதுக்கோட்பாடு' தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கோட்பாடுகளிலிருந்து மாறுபட்டது மட்டுமல்ல, அம் மாறுதல்கள் புரட்சிகரமானவை என்பதும் வெளிப்படை; எனவே, கெயின்ஸின் பொருளாதாரத்தை 'கெயின்ஸின் புரட்சி' (Keynesian Revolution) என்று ஒரு சாரார் கூறுவர்.

இதுவரை கெயின்ஸின் புதுப் பொருளாதாரத்தைச் சுருக்கமாகக் கண்டோம். அதிலும் முக்கியமான கோட்பாடுகளை மட்டுமே விளக்கினோம். ஆனால் கெயின்ஸ் எழுப்பிய பிரச்சினைகளும் அவற்றிற்கு அவர் தரும் விளக்கங்களும் விடைகளும் எத்தனையோ உள்ளன. அவற்றையெல்லாம் ஆராய இங்கு இடமில்லை.

கெயின்ஸின் ஆராய்ச்சிக் கருவிகள்

கெயின்ஸ் புரட்சிகரமான நூலை எழுதியிருந்தாலும், அவரது கோட்பாடுகளனைத்தும் புதியவை அல்ல. பயனுள்ள தேவை என்னும் கருத்தை, மால்தஸின் பொருள் தேக்கம் என்னும் விளக்கத்தில் காணலாம். வணிக வாதிகளின் கோட்பாடுகளை கெயின்ஸ் முழுமையாக ஆதரித்துள்ளார். அதற்கென ஓர் அதிகாரத்தையே தம் நூலில் ஒதுக்கியுள்ளார். வட்டி விகிதம் குறைவாக இருந்தால் தொழிலதிபர்கள் முதலீடு செய்யத் தூண்டப்படுவர்; அதிகமாக இருந்தால் பொருளாதார வளர்ச்சி குன்றிவிடும். எனவே, வட்டி விகிதத்தை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு அரசினுடையது என்று வணிகவாதிகள் வலியுறுத்தினர். இதனை அப்படியே அங்கீகரித்துள்ளார் கெயின்ஸ். வணிகவாதிகளுக்கும் கெயின்ஸுக்குமுள்ள ஒற்றுமையை வணிக வாதத்திலேயே குறிப்பிட்டுள்ளோம். சேமிப்பு முதலீட்டுச் சமநிலை என்னும் கோட்பாடு கெயின்ஸுக்கு முன்னுலேயே ஸ்வீடன் நாட்டுப் பொருளாதார அறிஞர் நட்விக்செல் (Knute Wicksell) அவர்களால் ஆராயப்பட்டுள்ளது. எனவே, விக்செல்லை கெயின்ஸின் முன்னேடியாகச் சிலர் கருதுவர்.

எனினும், கெயின்ஸ் கண்டுபிடித்த புத்தம் புதிய கோட்பாடுகளும் ஆராய்ச்சிக் கருவிகளும் அந் நூலில் உள்ளன ரொக்கப் பணத்தின்மீது கொண்டுள்ள ஆர்வம் என்னும் தத்துவம் அவருடைய புதிய தத்துவமாகும். எல்லாவற்றையும்விடப் பொருளாதார ஆய்வில் தனித்தனியாக இருந்த பல கருத்துகளையும் கோட்பாடுகளையும் ஒருங்கிணைத்த பெருமை கெயின்ஸுக்கு என்றும் உண்டு. முதலாளித்துவ அமைப்பிலும் தொன்மைப் பொருளாதாரத்திலும் அவர் கண்ட குறைபாடுகள் பல. அவற்றையெல்லாம் நீக்கி முதலாளித்துவ அமைப்பைச் சீர்படுத்த முடியுமென அவர் நம்பினர். அந்

நம்பிக்கையின் விளைவே 'பொதுக் கோட்பாடு' முதலாளித்துவம் அழிந்துவிடுமோ என்று பயந்த அரசியல்வாதிகள், பொருளாதார அறிஞர்கள், தொழிலதிபர்கள் அனைவருக்கும் இந் நூல் ஓர் அரிய சஞ்சீவியாகத் துலங்குகிறது.

கெயின்ஸ் மந்தகால அறிஞரா? (Was Keynes a Depression Economist?)

கெயின்ஸின் பொருளாதாரத்தை அண்ட நிலைப் பொருளாதாரம், நுகர்ச்சிப் பொருளாதாரம், முதலீட்டுப் பொருளாதாரம், இலாப எதிர் நோக்குப் பொருளாதாரம் எனப் பல்வேறாக அழைப்பதுண்டு. ஆனால் அவரது நூல் எல்லாவற்றையும்பற்றிய பொது நூலாகும். எனினும், கெயின்ஸை ஒரு மந்தகால அறிஞர் எனக் கருதுவோரும் உண்டு. ஜே. ஆர். ஹிக்ஸ் அவர்கள், 'கெயின்ஸின் பொருளாதாரம் வேலையின்மையையும் மந்தகாலத்தையும்பற்றிய பொருளாதாரமே யன்றி, வேலை வாய்ப்பையும் சுபிட்சத்தையும் பற்றியதல்ல' என்று கருதுகிறார். இக் கருத்தை சும் பீட்டர் அவர்களும் ஆதரித்துள்ளார். உலகப் பொருளாதார மந்தகாலத்தில், எவ்வாறு மந்தத்தை நீக்கிப் பொருளாதார அமைப்பிற்குப் புத்துயிர் அளித்து, வேலை நிறைவை ஏற்படுத்துவது என்பதே கெயின்ஸ் எழுதிய 'பொதுக் கோட்பாட்டின்' நோக்கமாகும். ஆனால் அதற்காக அவரை மந்தகால அறிஞராகக் கருதுவது தவறு. இதனை எண்பிக்கும் வகையில் 1940-ல் கெயின்ஸின் 'போர்ச் செலவை எப்படிச் சரிக்கட்டுவது' (How to Pay for the war) என்னும் நூல் வெளிவந்தது போலும்! இரண்டாவது போரின்போது வெளியானது இந் நூல். அவ்வாறு வெளியானபோது இருந்த பொருளாதாரச் சூழ்நிலை மந்த காலத்திய சூழ்நிலைக்கு நேர் மாறானதாகும். யுத்தத் தளவாடங்களில் பெருமளவு முதலீடு செய்யப்பட்டது. நாட்டில் பண வீக்கம் ஏற்பட்டது. பயனுள்ள தேவை வேண்டிய அளவுக்குமேல் வெளிப்பட்டது. விலைவாசிகள் வானளாவ ஏறிக்கொண்டே சென்றன. இச் சூழ்நிலையில் கட்டாயச் சேமிப்பு (Eosced savings) என்னும் திட்டத்தை வகுத்தார் கெயின்ஸ். அளவுக்கு மிஞ்சிய பணவீக்கத்தையும் தேவையையும் கட்டுப்படுத்த இதுதான் சிறந்த வழியெனக் கருதினார். வேலை நிறைவு ஏற்படு முன்பே விலைவாசிகள் வேகமாக உயர்வது ஆபத்தானது என்பதை விளக்கினார் கெயின்ஸ். எனவே, பணச் சுருக்கமும் பொருளாதார மந்தமும் உள்ள நிலையைச் சமாளிப்பதெப்படி என்பதைப் 'பொதுக் கோட்பாட்டில்' விளக்கிய கெயின்ஸ், பண வீக்கமும் பொருளாதார வளமும் அளவுக்கு மீறினால், அந் நிலையைச் சமாளிப்பதெப்படி என்றும் ஆராய்ந்துள்ளார். எனவே, கெயின்ஸை மந்தப் பொருளாதார நிபுணர் என அழைப்பது பொருத்தமற்றது.

மதிப்புரை

இருபதாம் நூற்றுண்டு வழங்கிய தலை சிறந்த பொருளாதார மேதை கெயின்ஸ். ஆல்பிரட் மார்ஷலைப்போல் பொருளாதார அறிஞர்களின் நன்மதிப்பையும் ரிக்கார்டோவைப்போல் அரசியல் செல்வாக்கும் பெற்று விளங்கியவர். ஒப்பிடமுடியாத கூரிய அறிவும் ஆழ்ந்த அனுபவமும் பெற்ற கெயின்ஸ் பொருளாதார இயலுக்கு அளித்துள்ள ஆராய்ச்சிக் கருவிகள் பல. மக்களின் பொருள் வாங்கும் சக்தியின் முக்கியத்துவம், முதலீட்டின் விளைவு, வேலையின்மையைப் போக்க அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், தொழிலதிபர்கள் எதிர்பார்க்கும் இலாபம், சேமிப்பு—முதலீட்டின் சமநிலை ஆகிய பல ஆராய்ச்சிக் கருவிகளின் வாயிலாகப் புதிய பொருளாதாரத்தை அமைத்த ஞானி. வாடிக்கையாளருக்குப் பிடித்தமான ஆடையைத் தைத்துக் கொடுக்கும் தையல்காரன் போல் பொருளாதார உலகிற்குப் பொருத்தமான பொருளாதாரக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் புனைந்த கலைஞர் கெயின்ஸ்.

வேலையின்மையும் வணிகச் சுழலும் முதலாளித்துவ அமைப்பின் உடன்பிறந்த நோய்கள். இந் நோய்களால் முதலாளித்துவமே செத்துவிடுமெனச் சோதிடம் கூறினார் மார்க்ஸ். ஆனால், இந் நோய்களைக் குணப்படுத்தி முதலாளித்துவ அமைப்பை வாழவைக்க வழி காட்டினார் கெயின்ஸ் அவ் வழி சிறந்த வழியென்றும் சொல்வதற்கில்லை. சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் உள்ள சமநிலையைத் தெளிவாக விளக்கவில்லை கெயின்ஸ். பற்றுக்குறை நிதியாக்கத்தின் வழியாக வேலையின்மையை விரட்ட முடியுமென நம்பினார். ஆனால், பிரிட்டனும் அமெரிக்காவும் இவ்வுபாயத்தைக் கடைப்பிடித்து வெற்றி காண முடியவில்லை. எனினும், இவ்வுபாயத்தை இன்றும் பல நாடுகள் மேற்கொள்கின்றன. பொதுத்துறையில் அரசாங்கம் செய்யும் முதலீடு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வருகிறது. பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கியதில் கெயின்ஸைப் போல் வேறு எவருமே இவ்வளவு செல்வாக்குப் பெறவில்லை எனலாம் கெயின்ஸ், அரசாங்கத்திலும் பல்கலைக்கழகத்திலும் பல சிறந்த பதவிகள் வகித்தவர். அப் பதவிகள் வகித்தபோது தீர்க்க முடியாதப் பொருளாதாரப் பிரச்சினைகளெனக் கருதப்பட்ட பல சிக்கல்களை நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றிற்குத் தீர்வுகாணும் வழியில் பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டார். நாட்டிற்கும் உலகப் பொருளாதாரத்திற்கும் அவர் செய்த பணியைப் பாராட்டிப் பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு 'பிரபு'ப் பட்டத்தை வழங்கியது

பொருளாதாரச் சிந்தனைக்குப் புது மெருகேற்றி, இதுவரை இருந்துவந்த சிந்தனைப் பாதையைச் செப்பனிட்டு, பொருளாதார உலகின் சுபிட்சத்திற்குப் புதுவழி முறைகளையும் வகுத்துத்தந்த கலைஞர் கெயின்ஸ். தனி மனிதனின் சுதந்திரக் கொள்கையைப் புறக்கணிக்காமல், அதே சமயம் சோஷியலிசக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமலும் அரிய, ஆனால் பயனுள்ள கொள்கைகளை வகுத்த நிபுணர். அவரது 'பொதுக் கோட்பாடே' இதற்குச் சான்று. இந் நூல் கடினமாக எழுதப்பட்டு, சிக்கலான அமைப்பைக் கொண்டதுதான். எனினும், ஆடம் ஸ்மித்தின் நூலுக்கு ஒப்பான சிறப்பை உடையது.

எட்டாம் பிரிவு

இந்தியப் பொருளாதாரச் சிந்தனை

பழங்காலக் கிரேக்க நாட்டுச் சிந்தனையைப் போன்றே இந்தியச் சிந்தனையும் இருந்ததெனலாம். பண்டைக்கால இந்தியாவில் மக்களின் வாழ்க்கைமுறை, ஒழுக்கநெறி முறையால் ஒடுக்கப்பட்டிருந்தது. எனவே, பொருளாதாரக் கருத்துகளும் வாழ்க்கை நெறிமுறையைப் பிரதிபலிப்பதாகவே அமைந்தன. அக் காலத்திய மக்களின் வாழ்க்கை எளிமையானது. பொருளாதார முன்னேற்றம் இல்லாத, நிலையான வாழ்க்கையே நடத்தினர். இதனால் அவர்களின் பொருளாதாரச் சிந்தனையும் நிலையான, எளிய வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக அமைந்ததில் வியப்பொன்றுமில்லை.

பண்டைக்காலத்தில் எவ்விதச் சலனமுமின்றி இருந்த பொருளாதார வாழ்க்கை 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட பொருளாதார மாறுதல்களின் விளைவாக மாறி அமைந்தது. அந்நியர் ஆட்சியிலிருந்த காரணத்தால் இந்தியப் பொருளாதார வாழ்க்கை முன்னேற்றமின்றித் தடைப்பட்டிருந்ததைப் பல அறிஞர்கள் உணர்ந்தனர். ஆங்கில நாட்டுப் பொருளாதார வாழ்க்கையின் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்ட அந்நிய அரசு இந்தியப் பொருளாதார வாழ்க்கை முறையை அக் குறிக்கோளை அடைவதற்கான வகையில் ஒழுங்குபடுத்தியது. இந்திய வறுமைக்கு ஆங்கில அரசே காரணம் என்பதை உணர்ந்த நமது அறிஞர்கள் சிலர் தத்தம் கருத்தைப் புதிய முறையில் விளக்கினர். 20 ஆம் நூற்றாண்டில்தான் பொருளாதார இயலும் கருத்துகளும் வளரத்தொடங்கின. இக் கருத்துகளை நவீனச் சிந்தனையாகத் தனி அதிகாரம் ஒன்றில் விளக்குவோம்.

நவீனச் சிந்தனையில் காந்திஜியின் கருத்து புதுமையானதாகவும் புரட்சிகரமானதாயும் உள்ளது. பலாத்கார முறையைக் கண்டித்து, பொருளாதார வளர்ச்சியைப் பரவலாக்கவேண்டுமென்ற குறிக்கோளைக்கொண்டு காந்திஜி விளக்கிய பொருளாதாரக் கருத்துகளைத் தனியாக விளக்குவது மரபு. எனவே, காந்தியின் சிந்தனைக்குத் தனியோர் அதிகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

28. பழங்காலச் சிந்தனை

பழங்காலப் பொருளாதாரச் சிந்தனை நமக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. நமது முன்னோர்களின் வாழ்க்கைமுறை எவ்வாறிருந்தது என்பதையும், எந்தக் குறிக்கோளோடு அந்தவிதமான வாழ்க்கை முறையை அவர்கள் வகுத்தனர் என்பதையும் அறிந்து கொண்டால்தான் பண்டைக்கால வாழ்க்கையைப்பற்றிய பல்வேறு கருத்துகளை முறையாக ஆய முடியும். மாக்ஸ் முல்லர் (Max muller) எழுதிய 'இந்தியா நமக்குக் கற்பிக்கும் படிப்பினை என்ன?' என்னும் நூலில், பழங்கால இந்தியர்களுக்கு இந்து மதம், தத்துவம், சமஸ்கிருத மொழி ஆகிய இம் மூன்றைத் தவிர வேறொன்றும் தெரியாதெனக் குறைகூறியுள்ளார். கோசா (Coasa) அவர்கள் வரைந்த 'அரசியல் பொருளாதாரத்திற்கு ஓர் அறிமுகம்' என்னும் நூலில் ஐரோப்பியர்கள்தான் முறையான பொருளாதாரச் சிந்தனையாளர்கள் என்றும், பொருளாதாரக் கருத்துகளனைத்தும் ஐரோப்பாவில்தான் தோன்றின என்றும் அடித்துக் கூறுகிறார். இந்தியாவைப்பற்றி அவர் கூறியிருப்பது வியப்பாக உள்ளது. 'இந்தியாவின் மத நூல்களில்தான் பழங்காலப் பொருளாதாரக் கருத்துகள் அடங்கியுள்ளன. அவையனைத்தும் எவ்விதப் பயனுமில்லாதவை.' இவ்வாறு பல்வேறு கருத்துகள் நமது பண்டைக் காலப் பொருளாதார வாழ்வையொட்டி எழுந்துள்ளன. இவை அனைத்தும் எவ்வளவு தூரம் உண்மை என்பதைக் கண்டறியப் பழங்காலப் பொருளாதாரக் கருத்துகளைச் சுருக்கமாகவாவது ஆராய்வது அவசியம்.

பழங்காலச் சிந்தனைக்கு ஆதாரங்கள்

பழங்காலப் பொருளாதாரச் சிந்தனையை அறிந்துகொள்வதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவற்றை இங்குக் குறிப்பிடவேண்டும். (1) நான்கு மறைகளை முறையாக விளக்கும் வேதங்கள் (Vedas) (2) இவ் வேதங்களுக்கு விளக்கம் தரும் நூல்களான உபநிடதங்களும் (Upanishads) பிராமணங்களும், (3) இராமாயணமும் மகாபாரதமும்; இவை இரண்டினையும் 'காப்பி

யங்களாகக் கொள்வர். (4) அறநூல்களும் நெறி நூல்களும் (Dharma and Niti Shastras) (5) சட்ட விளக்கங்கள் (6) புத்தரின் பிறப்பு வரலாற்றைக் கூறும் கல்வெட்டுகள் (Jataks).

மேற்கூறிய ஆதாரங்களிலெல்லாம் அதிகாரப்பூர்வமானது வேதங்களே. அதாவது, இருக்கு வேதம் (Rig Ved), சாம வேதம் (Sama Ved), யஜுர் வேதம் (Yajur Ved), அதர்வண வேதம் (Azharu Ved) ஆகிய நான்கு வேதங்களும் ஆகும். வேதங்களிலுள்ள பாடல்கள் பண்டைக் காலத்தில் நம்நாட்டிலிருந்த அமைப்புக்களையும் மக்களின் சிந்தனைகளையும் பிரதிபலிப்பதாக உள்ளன. பொருளாதாரச் சிந்தனைச் செறிவை நாம் உபநிடதங்களிலும் பிராமணங்களிலும் காணலாம். மனுநீதி, சுக்ரநீதி போன்ற நீதி நூல்களில் பண்டைக்காலத்திற்கேற்ற பொருளாதாரக் கருத்துகள் மிகுதியாக உள்ளன.

கௌடில்யரின் (சாணக்கியரின்) அர்த்த சாத்திரம்

எல்லா நூல்களிலும் முக்கியமானதாகக் கருதப்படுவது கௌடில்யரின் அர்த்தசாத்திரமே. கௌடில்யருக்கு சாணக்கியர், விஷ்ணுகுப்தர் என்ற வேறு இருபெயர்களும் உள்ளன. இவர் கிமு. 4ஆம் நூற்றாண்டில் இந்தியப் பேரரசை ஆண்ட சந்திரகுப்த மௌரியரின் அரசசபையில் முதன்மந்திரியாகப் பணியாற்றினார். அவருக்குமுன் இருந்த அரசாங்கக் கொள்கைகளையெல்லாம் தொகுத்து அர்த்தசாத்திரம் என்ற தலைப்பில் மிகப்பெரிய நூலை எழுதினார். இந்நூல் 430 பக்கங்களையும் 15 அதிகாரங்களையும் கொண்டது. எக் காலத்தவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரசியல் பொருளாதாரச் சித்தாந்தங்களை இந் நூலில் காணலாம்.

அர்த்தசாத்திரமென்றால் நடைமுறைக்கொள்கை என்று பொருள். அக் கொள்கைகளை மதச்சார்பற்றதாக ஆக்கிய பெருமைக்குரியவர் கௌடில்யர். அவரது கருத்துப்படி அரசின் கொள்கைகள் அனைத்தும் குடிமக்களின் பொருளாதார நன்மையையே குறிக்கோளாகக்கொண்டிருக்கவேண்டும். நாட்டின் இயற்கை வளங்களையெல்லாம் முறையாகப் பயன்படுத்தவேண்டியது அரசின் கடமையாகும். இவ்வாறு அரசின் பொருளாதாரப் பணிகளை முறையாக விளக்கினார் கௌடில்யர். இதனை விரிவாகப் பின்னர்க் காண்போம்.

பொருளாதார நடவடிக்கைகளை விரிவாகக் கூறும் ஸ்மிருதிகள் (Smritis) முக்கியமானவை என்பது குறிப்பிடத்தக்கது. இவைதவிர,

பண்டைக்காலப் பாடல்கள், நாடகங்கள், புராணங்களிலும் பொருளாதாரக் கருத்துகள் பரவிக்கிடக்கின்றன.

வேதங்களும் காப்பியங்களும்

வேதங்களும் காப்பியங்களும் எப்பொழுது எழுதப்பட்டன என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. எனினும், கி. மு. 20ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டு வரைதான் நான்கு வேதங்களும் தோன்றின என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். இந் நான்கு வேதங்களும், அவற்றை விளக்குகின்ற உபநிடதங்களும் பிராமணங்களும் நெறிமுறையிலும் சமய அடிப்படையிலும் சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்றன. வேதங்களில் நான்கு வருணங்கள், நான்கு ஆச்ரமங்கள்பற்றிய கோட்பாட்டைக் காணலாம். இக் கோட்பாட்டின்படி சமுதாயத்தினர் நான்கு வகுப்பினராகப் பாகுபடுத்தப்பட்டனர்: (1) பிராமணர்கள்—இவர்கள் இந்து மத அறிஞர்களாகவும் போதனையாளர்களாகவும் இருக்க வேண்டியவர்கள். (2) க்ஷத்திரியர்—இவர்கள் நாட்டை ஆளுகின்றவர்களாயும், காப்பாளர்களாயும் இருந்தவர்கள் (3) வைசியர்–இவர்கள் வணிகர்களாயும் வியாபாரிகளாயும் இருந்தவர்கள். (4) சூத்திரர் இவர்கள் உடலால் உழைத்து வாழ்ந்தவர்கள். இந் நான்கு இனத்தவரும் தத்தம் தொழிலைத்தான் செய்ய வேண்டுமென வேதங்கள் வலியுறுத்தின. வேலையின் அடிப்படையில் தோன்றிய இச் சமூகப் பாகுபாடு நாளடைவில் பிறப்பின் அடிப்படையைக் கொண்டதாகவும், அவரவர்கள் தத்தம் குலத் தொழிலைத்தான் செய்யவேண்டுமென்ற அடிப்படையிலும் மாறிவிட்டது ஒவ்வொருவரும் சமுதாயத்தில் அவரவருக்குக் கொடுக்கப்பட்ட மதிப்பை பேணி, தொழிலை முறையாகச் செய்தால்தான் விமோசனம் கிடைக்கும் என்றும் வேதங்கள் வலியுறுத்தின. பண்டைக்கால கிரேக்க அறிஞரான பிளேடோ, கிரேக்க சமுதாயத்தை அவரவர்களின் இயல்பிற்கும் திறமைக்குமேற்ப மூன்று பிரிவாகப் பிரித்தார். ஆனால், வேதங்களோ திறமையையும் இயல்பையும் புறக்கணித்து வேலைப் பகுப்பு என்ற அடிப்படையில் சமுதாயத்தைப் பிரித்துப் பாழ்படுத்தி விட்டன என்பதை எல்லாரும் அறிவர்.

பழம் பெரும் காப்பியங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டும் நன்னெறி அடிப்படையில் மக்களின் வாழ்க்கை முறையை விளக்குகின்றன. வேதங்களைப் போன்று காப்பியங்களும் சமுதாயப் பிரிவினையை வலியுறுத்தின.

இப்போது பண்டைக்கால இந்தியாவில் நிலவிவந்த பொருளாதாரக் கருத்துகளையும் ஆய்வோம்.

உழவுத்தொழில், வணிகத்தொழில், நான்கு வேதங்கள் அடங்கிய வர்தா (Varta)

அர்த்த சாத்திரத்தை ஆயுர்வேதம், தனுஷ் வேதம் போன்ற உப வேதமும் அதர்வ வேதமும் கொண்ட நூலாகச் சிலர் கருதுவர். வர்தா என்னும் சொல்லே அக் காலத்தில் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டது. வர்தா என்றால் விவசாயம், கால்நடை வளர்ப்பு, வணிகம் ஆகிய மூன்று தொழில்களையும் கொண்ட தேசியப் பொருளாதாரம் என்பர். வர்தா தான் நாட்டின் பொருளாதார வாழ்விற்கு முக்கியமானதாகக் கருதப்பட்டது. அதன் வழியாகவே தானியங்களும் கால்நடைகளும் அபிவிருத்தி அடைந்தன. நாளடைவில் கைத்திறன் கொண்ட வேலையும் வட்டிக்குப் பணம் கொடுத்தலும் வர்தாவில் சேர்க்கப்பட்டன. வர்தா அல்லது தேசியப் பொருளாதாரம் இல்லையென்றால் உலகமே அழிந்துவிடுமென நம்பினர். எனவே, தேசியப் பொருளாதார அமைப்பைப்பற்றி அரசன் நன்கு தெரிந்துவைத்திருக்க வேண்டுமென எண்ணினர். நிலையான ஆட்சிக்கு அடிப்படையானது நிலையான பொருளாதார வாழ்க்கையே என்பதை மகாபாரதம் வலியுறுத்துகிறது.

வார்தாவைக்காட்டிலும் முக்கியமானதாகவும் செல்வாக்கானதாகவும் கருதப்பட்டது அர்த்த சாத்திரம்தான். அர்த்த சாத்திரம் அரசியல், பொருளாதாரம், சட்டம் ஆகிய மூன்றினைப்பற்றிய தொகுப்பாகும் மன்னர்களின் ஆட்சிமுறைக்கும் கொள்கைகளுக்கும் ஆதாரமாக விளங்கியது அர்த்தசாத்திரம்தான் சமுதாயத்திலுள்ள அமைப்புகளும் பழக்க வழக்கங்களும் சீரான முறையில் அமைய வேண்டுமானால் பொருளாதார முன்னேற்றம் அவசியம் என்பதை அர்த்த சாத்திரம் வலியுறுத்தியது.

விவசாயம், கால்நடைகளின் முக்கியத்துவம்

பண்டைக்கால அறிஞர்கள் விவசாயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் கால்நடைகளின் அவசியத்தைப்பற்றியும் நன்கு அறிந்திருந்தனர். கால்நடைகளின்றி விவசாயம் செழிக்கமுடியாதென்பதை உணர்ந்திருந்தனர். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அதன் விவசாயமே அடிப்படை என்பதை அறிந்திருந்தனர். எனவே, தொழில்களுக்கும் மேலான தொழிலாகப் பயிர்த்தொழிலே மதிக்கப்பட்டது. வேத காலத்தில் பயிர்த் தொழில் வைசியருக்குமட்டுமே உரித்தானதாகக் கருதப்பட்டது. எனினும், சூத்திரர்களும் அத் தொழிலில் ஈடுபடலாமென்று இருந்தது. ஆனால், பிராமணர்கள் ஏர் பிடிக்கக்கூடாது; நிலம் மட்டும் வைத்திருக்கலாம்; அந் நிலத்தில் பிராமணர்கள் பாடுபடக்கூடாது என்ற சட்டம் விசித்திரமானதாகும்.

சமுதாயத்தில் யார் பிராமணர்கள், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்பது அவரவர்கள் செய்யும் தொழிலைப் பொறுத்ததே யன்றி, அவரவர்களின் பிறப்பைச் சார்ந்ததல்ல என்று சங்கராச்சாரியர் கூறியுள்ளார். பண்டைக்காலச் சமுதாயத்தினர் பயிர்த் தொழிலின் நுணுக்கங்களையெல்லாம் நன்கறிந்திருந்தனர். விவசாயத்தின் அருமையையும் பெருமையையும் உணர்ந்து அத் தொழிலை நன்கு வளர்த்தனர் என்பதை அர்த்த சாத்திரம், சுக்ர நீதி, ஸ்மிருதிகள் ஆகியவற்றில் காணலாம். சிறு பண்ணை, பெரிய பண்ணை முறைகள், அகல உழுதல் — ஆழ உழுதல், ஒரே நிலத்தில் தானியங்களை மாற்றிமாற்றிச் சாகுபடி செய்யும் முறை ஆகியவையனைத்தும் அவர்கள் அறிந்தவைதான். நிலத்திற்கு உரமிடுதல், பயிர்களைத் தாக்கும் நோய்கள், அந் நோய்களைக் குணப்படுத்தும் வகைகள் ஆகியவைகளையும் அவர்கள் அறிந்திருந்தனர். கால்வாய், ஏரி, ஆறுகள் ஆகியவற்றின் வழியாகப் பாசன வசதிகளைச் செய்தனர். கால்நடைகளைப் பராமரிக்கும் வகையையும் நிலங்களைப் பங்குபோட்டுத் துண்டாக்குவதால் ஏற்படும் கேடுகளையும் தெரிந்திருந்தனர். பண்டைக் காலத்திய அரசாங்கத்தின் வருவாயில் பெரும்பகுதி நிலவரி மூலமாகவே கிடைத்தது.

கரடுமுரடான நிலங்களையெல்லாம் பண்படுத்தியும் தரிசாகக் கிடந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து தந்தும் அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவி செய்தது. பெரு நிலக்கிழார்கள் தங்கள் நிலத்தைச் சாகுபடி செய்யாமல் வீணாக வைத்திருந்தால் அந் நிலங்களையெல்லாம் அரசாங்கம் உழுவோருக்குப் பகிர்ந்தளித்தது. நிலத்தின் வளத்தைக் கொண்டே அதன் விலையை நிருணயித்தனர்; வியாபாரிகள் விவசாயிகளை ஏமாற்றிக்கொடுமைப் படுத்தாமலிருக்கும் பொருட்டு அரசாங்கமே விவசாயப் பொருள்களுக்கு நியாயமான விலையை நிருணயம் செய்தது.

பண்டைக்கால அறிஞர்கள் விவசாய உழைப்பாளிகளை மட்டும் ஆக்கமுள்ளவர்கள் எனக் கருதாமல், எல்லா உழைப்பாளிகளையும் ஆக்கமுள்ளவர்களாகவே கருதினர். ஆனால், எந்தக் குறிக்கோளோடு உழைத்தனரோ அக் குறிக்கோள் நிறைவேறவில்லையென்றால், அவ் உழைப்பைமட்டும் வீணானதாகக் கருதினர். விவசாயம், வியாபாரம் போன்ற தொழில்களைச் செய்யும்போது ஆண்களுக்குப் பெண்கள் உதவிபுரிய வேண்டும் என்பதை கௌடில்யர் வலியுறுத்தினர்.

வியாபாரம்

தொழில் நடத்தத் தேவைப்படும் மூலதனத்தை வியாபாரத்தின் வாயிலாகத் திரட்டினர். நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்யவும் தங்கமும் வெள்ளியும்தான் உகந்த சாதனங்களாக அக் காலத்தில் விளங்கின. ஆனால், போருக்குத் தேவைப்படும் பணமனைத்தும் அரசாங்கத்தின் கருவூலத்தில் இருந்தது. இதனால் மக்களுக்குத் தேவையான பணத்திற்கு அதிகக் கிராக்கி ஏற்பட்டது என்று ஒரு சிலர் கருதுவர். எனினும், வியாபாரத்தை அரசாங்கம் ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியத்தை அர்த்த சாத்திரத்தில் கௌடில்யர் விளக்கியுள்ளார். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வியாபாரம் முக்கியமானதென்பதைத் தர்ம சாத்திரமும் ஸ்மிருதுகளும் வலியுறுத்தின. வியாபாரம் செழித்தோங்க போக்குவரத்துச் சாதனங்கள் அவசியம் என்பதையும், அவ் வசதிகளை அரசாங்கமே செய்துதர வேண்டு மென்பதையும் பண்டைக்கால அறிஞர்கள் அறிந்திருந்தனர். அக்காலத்தில் நாடெங்கிலும் சுதந்திர வாணிபமே நிலவியது. அரசாங்க வருவாய் அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் சுங்கத் தீர்வை, வழிச்சுங்கம் முதலியன விதிக்கப்பட்டன. சர்வாதீன வலிமையுள்ள தொழில்களை அரசாங்கமே நடத்த வேண்டுமென விரும்பினர். உள்ளூர்த் தேவைகளை நிறைவேற்றிய பின்னர், பண்டங்கள் எச்சமாக இருந்தால்தான் அவை விற்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள்தொகையும் அடிமைகளும்

நாட்டின் மக்கள் தொகை அளவுக்குமீறி வளர்ந்து விடக் கூடாதென்பதற்காக இக்கால அறிஞர்கள் குடும்பத் திட்டத்தை வலியுறுத்தி வருவதை நாம் அறிவோம். ஆனால், பண்டைக் காலத்தில் இதைப்பற்றி எவருமே கவலைப்பட்டதில்லை. பெற்றோர் மிகுதியாகப் பிள்ளைப் பேறு பெற வேண்டுமென வேதங்கள் கூறின. பிள்ளைப்பேற்றை இறைவனின் வரப் பிரசாதமாகக் கருதினர் பண்டைக்கால இந்தியர்கள். அக் காலத்தில் மருத்துவ வசதிக் குறைவின் காரணத்தாலும், அடிக்கடி சிற்றரசுக்களிடையே போர் ஏற்பட்டதாலும் மக்கள் தொகை மிதமிஞ்சி வளர முடியவில்லை.

பண்டைக்கால இந்தியாவில் நமது முன்னோர்கள் அடிமைகளை வைத்து வேலை வாங்கினர். ஆனால், அடிமைகளைத் தம் குடுத்தினராக மதித்து, நல்ல முறையில் பேணிவந்தனர். ஒரு குடும்பத்தில் அடிமையாக வேலை செய்தவன் தனக்கென்று சொத்தோ வருமானமோ இன்றி, நம்பிக்கையுடன் ஊழியம் செய்தான். பரம்பரையாக அடிமைகளாகவே இருக்கவேண்டிய நிலை அவ

னுக்கு இருந்தது. எனினும் அடிமைகளுக்கும் முதலாளிகளுக்கும் எவ்விதக் குரோத மனப்பான்மையும் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

சொத்துரிமை

நமது பண்டைக்கால அறிஞர்கள் தனியார் சொத்துரிமையை ஆதரித்தனர். வேதகாலத்தில் நிலமனைத்தும் தனிப்பட்டவர்களுக்கும் குடும்பத்தினருக்குமே சொந்தமாயிருந்தது. நிலத்தை விற்பதற்கும் வாரிசுகளுக்கு வழங்குவதற்கும் அவர்களுக்கு உரிமை இருந்தது. நிலத்தைப் பங்கிடவும், நிலத்திலிருந்தும் வியாபாரத்திலிருந்தும் கிடைத்த வருமானத்தை அனுபவிக்கவும் அவர்களுக்குச் சட்டப்பூர்வமான உரிமை இருந்தது. ஆனால், நிலத்தை நாசம் செய்வதையும், ஒருவர் நிலத்தை மற்றொருவர் அபகரிப்பதையும் அரசாங்கம் தடுத்தது. சில சந்தர்ப்பங்களில் தனியார் நிலத்தை அரசாங்கம் பிடுங்கிக் கொள்ளலாம் என்றும் சட்டம் இருந்தது. ஆனால், பிராமணர்கள்மட்டும் இச் சட்டத்திலிருந்து விதிவிலக்குப் பெற்றிருந்தது.

கடனும் வட்டியும்

மூலதனம் உற்பத்தி ஆக்கமுடையதாகக் கருதப்பட்டது பண்டைக்கால இந்தியர்களால். எனவே, கிரேக்க நாட்டு அறிஞர்களைப் போலன்றி, நம்நாட்டு அறிஞர்கள் கொடுத்த கடனுக்கு வட்டி பெறுவது நியாயம்தான் என்றனர். ஆனால், சொத்தை அடமானம் வைத்துக் கடன்பெற்றால், அக் கடனுக்கு வட்டி வாங்குவது தடுக்கப்பட்டது. வட்டி விகிதம் நிலையானதாயில்லாமல், கடன் பெறுவோரின் ஜாதி, அவரது நிலைமை, கடனின் நோக்கம் ஆகியவற்றிற்கேற்ப மாறும் இயல்புடையதாயிருந்தது. ஆனால் வட்டி விகிதத்தை அரசாங்கம் ஒழுங்குபடுத்தவேண்டுமென கௌடில்யர் விரும்பினார்.

அரசின் கடமைகள்

பொருளாதாரத் துறையில் அரசின் கடமைகள் என்னென்னவென்பதை அக்கால அறிஞர்கள் வலியுறுத்தினர். ஜாதி அடிப்படையில் ஒவ்வொருவரும் தத்தம் தொழிலை நடத்தப் பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டது. உயர்ந்த ஜாதியினராகக் கருதப்பட்ட பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் வட்டி வாங்குவதைத் தடை செய்தது. வியாபாரத்தில் நியாயம் இருக்கவேண்டுமென்பதற்காக தவறான அளவையும் எடையையும் வியாபாரிகள் பயன்படுத்தாமல் அரசு பார்த்துக்கொண்டது. அவ்வாறு பயன்படுத்துவோரையும் கலப்படம் செய்து பண்டங்களை விற்போரையும் அரசு

தண்டித்தது. நியாய விலையைக் காட்டிலும் அதிகமான அல்லது குறைவான விலைக்குப் பண்டங்கள் விற்கப்படுவதைத் தடை செய்தது. விவசாயிகளுக்குக் கடன்தரும் பொறுப்பை அரசாங்கம் ஏற்று வந்தது. தொழிலாளரின் கூலியையும் வேலை நிலைமைகளையும் ஒழுங்குபடுத்தியது.

பொது நிதியியல்

அரசாங்க வருமானம் பெரும்பாலும் வரிகளின் வாயிலாகவே கிடைத்தது. அரசிற்கு வரி கொடுக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் கடமை என்பது தற்காலத்துக் கருத்து. ஆனால், அக்காலத்தில் அரசாங்கம் வரிப்பணத்தையெல்லாம் முறையின்றிச் செலவழிக்கக்கூடாது என்பது சட்டம். எனவே, பயனுள்ள வழியில்தான் அரசு, பணத்தைச் செலவிடவேண்டுமென்பதற்காக வரிப்பணத்தின் நோக்கத்தை அரசாங்கம் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டுமென பண்டைக்கால அறிஞர்கள் வலியுறுத்தினர். இந்துமத விதிமுறைகளை அடிப்படையாகக்கொண்டே வரி விகிதங்கள் நிருணயிக்கப்பட்டன. நாட்டின் பாதுகாப்புப் பணிகளுக்கும் பொதுப் பணிகளுக்கும் அரசாங்கத்திற்குத் தரப்படும் ஊதியமாகத்தான் வரிகள் கொடுக்கப்பட்டன.

தேனீக்கள் மலரிலிருந்து தேன் சேகரிப்பதைப்போல் மக்களுக்கு எவ்விதத் தொல்லையுமில்லாமல் வரி வசூலிக்கப்படவேண்டுமென்பதை மகாபாரதம் கூறுகிறது. அரசாங்கத்திற்கு மிகுந்த வருமானம் இருக்கவேண்டுமெனக் கருதினார் கௌடில்யர். எனவே, அரசாங்கம் வியாபாரம், தொழில், சுரங்க வேலை, மீன் பிடித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட வேண்டுமென்றார். ஆனால், சுக்ர நீதியோ அரசன் தனது வருமானத்திற்கேற்பச் செலவைக் கட்டுப்படுத்த வேண்டுமென வலியுறுத்தியது. கௌடில்டரின் கருத்துப்படி, அரசாங்கத்தின் செலவு, வருமானத்தைவிட அதிகமாகிவிட்டால் மக்களிடமிருந்து கடன் வாங்கலாம். அக் கடனை மக்கள் தரும்படி வற்புறுத்தலாம். ஆனால், எந்த அரசும் அவ்வாறு வற்புறுத்திக் கடன் பெறவில்லை.

வரிகளின் மூலம் கிடைக்கும் அரசாங்க வருவாயை மூன்று இனமாகப் பாகுபடுத்தினர் கௌடில்யர் : (1) நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின்மீது விதிக்கப்படும் வரி வருவாய் (2) தலைநகரில் உண்டாக்கப்படும் பொருள்களின்மீது விதிக்கப்படும் வரிகளின் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் (3) இறக்குமதி, ஏற்றுமதி வரிகளின் வழியாகக் கிடைக்கும் வருவாய், நாட்டிற்குத் தேவையற்ற ஆடம்பரப் பொருள்களின்மீது அதிக இறக்குமதி வரி இருக்க

வேண்டுமென்பது அவரின் கருத்து. அப் பொருள்களின் இறக்குமதியையும் உபயோகத்தையும் கட்டுப்படுத்த வேண்டுமென்பதே அவரது நோக்கம். வரிகள் அனைத்தும் மக்களின் வருமானத்தையும் வசதியையும் அடிப்படையாகக் கொண்டதாயிருக்க வேண்டுமென்பதையும், அரசாங்க வருவாய்-செலவுக் கணக்கைச் சரிபார்க்க அதிகாரிகள் இருக்கவேண்டுமென்பதையும் அர்த்தசாத்திரமும் சுக்ர நீதியும் வலியுறுத்தின.

மக்களின் நலம் பேணும் அரசு

எல்லா அரசாங்கங்களும் மக்களின் நலத்தில் அக்கறை கொள்ளவேண்டுமென்றே பண்டைய அறிஞர்கள் விரும்பினார்கள். வியாபாரத்தையும் பயிர்த் தொழிலையும் ஊக்குவிக்க அரசாங்கம் பண உதவி செய்ய வேண்டும். நீர்ப்பாசன வசதிகளைச் செய்து தருவதோடு கால்நடைப் பராமரிப்பிலும் அரசாங்கம் அக்கறை காட்டவேண்டும். சமுதாய நலனைப் பேணவும் நியாயத்தை நிலை நாட்டவும் பஞ்சாயத்துக்களும் நீதி மன்றங்களும் இருக்க வேண்டும். சுக்ராச்சாரியா அரசை நன்கு வளர்ந்து முதிர்ந்த ஒரு மரத்தோடு ஒப்பிடுகிறார். அரசு என்பது மரமெனின், அரசன் அதன் ஆணிவேர்; ஆலோசகர்களும் அமைச்சர்களும் அதன் கிளைகள்; படைபலம் அதன் பூக்கள்; மக்களே அதன் பழங்கள். 'அரசன் எவ்வழியோ, அவ்வழி மக்களும்' என்ற முதுமொழிக்கேற்ப அரசு நடைபெறவேண்டுமென்றே நமது முன்னோர்கள் விரும்பினர். மன்னன் முறையாக ஆட்சி செய்தால் தான் நாடு செழிக்கும் என நம்பினர்.

இன்றுள்ள சமுதாய நலத்திட்டத்தைப்போல் விரிவான திட்டம் அந் நாள்களில் கிடையாது. எனினும், கௌடில்யர் இத் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்தார். வறுமையில் வாடுவோருக்கும் முதியோருக்கும் அரசு பாதுகாப்பளிக்க வேண்டுமென அவர் வற்புறுத்தினர். அவர்களுக்கென்று அபாய நிலையங்களும் வறியோர் இல்லங்களும் அமைக்க வேண்டுமென்பது கௌடில்யரின் கருத்து. வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதையும் அரசின் பணியாகக் கருதினர்.

முடிவுரை

பண்டைக்காலத்தில் கிரேக்க நாட்டுப் பொருளாதாரச் சிந்தனையைப் போன்று இந்தியாவிலும் பொருளாதாரக் கருத்துகள் அங்கும் இங்குமாகச் சிதறிக்கிடந்தன. அரசியல், நெறியியல், தத்துவம் ஆகிய மூன்றுமே முககியமானதாகக் கருதப்பட்டன

இம் மூன்றின் கண்ணோட்டத்திலிருந்தே முற்கால அறிஞர்கள் பொருளாதாரக் கருத்துகளை ஆராய்ந்தனர். மக்களின் பொருளாதார வாழ்க்கையே இந்து மதத்தின் போதனைகளாலும் ஆசாரங்களாலும் நிருணயமாயின. பழங்கால இந்தியர்கள் 'கர்மக் கோட்பாட்டில்' ஊறியவர்கள். தீவினை, நல்வினை ஆகியவற்றின் காரணமாகத் தோன்றும் விளைவுகளாகவே வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களைக் கருதினர். நான்கு வருணங்கள்பற்றிய நம்பிக்கை சமுதாயத்தை இறுகப் பிடித்திருந்தது. எவ்வித மாறுதல்களும் இன்றி நிலையாக அமைந்தது மக்களின் வாழ்க்கை முறை. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு கொண்டுள்ளதாக விளங்கியது.

இவ்வகைச் சமுதாயம் எவ்விதப் பொருளாதார மாற்றமுமின்றி, 18ஆம் நூற்றுண்டுவரை அப்படியே இருந்தது. அரசியல் துறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும் மக்களின் பொருளாதார வாழ்க்கை நிலையாயிருந்தது. எனவே, பொருளாதாரக் கருத்துகளைப் புதிய முறையில் சிந்திக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. 19ஆம் நூற்றுண்டின் மத்தியில் ஆங்கில ஆதிக்கத்தின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களின் காரணத்தால் புதிய சிந்தனைகள் உருவாயின. அதுவரை இந்தியப் பொருளாதார வாழ்வும், சிந்தனையும் அசைவின்றி நிலையாகவே இருந்தன.

29. இந்தியப் பொருளாதாரத் தோற்றம்

நம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைப்பற்றிய சிந்தனை 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தொடங்கியதெனலாம். இந்தியாவின் வறுமைக்குக் காரணங்கள் யாவை என்பதை ஆய்ந்தோர் பலர். அவர்களில் தாதாபாய் நவ்ரோஜி (Dadabhai Naoroji), ரமேஸ் சந்திரா டட் (Ramesh Chandra Dutt), மகாதேவ கோவிந்த ரானடே (Mahadev Govind Renade) ஆகிய மூவரும் முக்கியமானவர். இம் மூவரும் இந்தியப் பொருளாதார ஆய்விற்கு அடிக்கல் நாட்டினர் என்றல் மிகையாகாது. இவர்களுக்குப் பின்னர் கோபால கிருஷ்ண கோகலே, பிரிஜ் நாராயண் ஆகிய பலரும் இந்தியப் பொருளாதார ஆய்வில் முக்கியப் பங்குகொண்டனர். மகாத்மா காந்தியின் பொருளாதாரக் கருத்துகள் ஏராளமானவை. எனவே, காந்தியின் சிந்தனையைப்பற்றி விரிவாகத் தனியொரு அதிகாரத்தில் ஆய்வது நன்று. இவ்வதிகாரத்தில் இந்தியப் பொருளாதார ஆய்வைத் தொடங்கிய முக்கியமான சிலருக்கே இடம் உண்டு.

சூழ்நிலைகள்

இந்தியப் பொருளாதார ஆய்வைத் தொடங்கிய அறிஞர்களின் கருத்துகளை ஆராயுமுன் அவர்கள் வாழ்ந்த காலத்திய சூழ்நிலையைச் சுருக்கமாகக் குறிப்பிடுவது அவசியம். அந்நிய ஆட்சியில் அடிமைப்பட்டிருந்த நமது பரந்த பாரத நாட்டை விடுவிப்பதற்காக இந்திய தேசிய காங்கிரஸ் என்ற இயக்கம் தொடங்கியது. நம் மக்களுக்கு இதனல் விழிப்புணர்ச்சியும் நாட்டுப்பற்றும் ஏற்பட்டது. அயல் நாட்டிற்குச் சென்று கல்வி கற்ற இந்திய அறிஞர்களில் பலர் அந் நாடுகளெல்லாம் சுதந்திர அரசாங்கத்தின் வாயிலாகப் பொருளாதார முன்னேற்றப் பாதையில் செருக்குநடை போட்டுக் கொண்டிருந்ததைக் கண்டுணர்ந்தனர். மேலும் அரசாங்க ஊழியர்களுக்கென்று இங்கு புகுத்தப்பட்ட ஆங்கிலக் கல்விமுறை படித்தவர்களிடையே அரசியல், பொருளாதார இலட்சியங்களைப் புகட்டியது.

இதனால் கல்வி கற்றோர் பலர் அரசியல், பொருளாதாரச் சுதந்திரத்தை நாமும் பெற வேண்டுமென எழுச்சி கொண்டு எழுந்தனர்

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியப் பொருளாதார நிலை மிகவும் பின்தங்கியிருந்தது. இந்திய அரசாங்கம் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்ததன் காரணத்தால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எவ்வித முயற்சியும் செய்யவில்லை. நாடெங்கிலும் இரயில்வே போக்குவரத்து வசதியை ஏற்படுத்த அயல்நாட்டுப் பொருள்களை மலிவாக விற்பனை செய்தனர். நம் நாட்டுக் கச்சாப் பொருள்களை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்தனர். இதனால் நாடெங்கும் வெளிநாட்டுப் பொருள்களே விற்பனையாயின; உள்நாட்டுத் தொழில்கள் நலிந்து நாசமாயின. ஆங்கில நாட்டின் நன்மையை உத்தேசித்தே இங்கு ஆட்சி நடந்தது. பஞ்சங்கள் அடிக்கடி தோன்றி, நாட்டின் பொருளாதார வாழ்க்கையைப் பாழ்படுத்தின. மக்கள் வறுமையில் வாடினர். எனவே, நம் நாட்டு அறிஞர்கள் பலர் நமது பொருளாதார அமைப்பையே மாற்றி அமைக்க வேண்டுமென வற்புறுத்தினர். மக்களின் வறுமைக்குக் காரணம் அந்நிய ஆட்சியும், அவர்கள் வகுத்த பொருளாதாரக் கொள்கையும் தான் என்று வாதாடினர். அவ்வாறு வாதாடியோரில் நவ்ரோஜி, டட், ரனேட் போன்றோர் முக்கியமானவர்கள்.

(i) தாதாபாய் நவ்ரோஜி (1815—1906)

நவ்ரோஜி பம்பாயைச் சேர்ந்த பார்சிக் குடும்பத்தில் 1815-ல் பிறந்தார். எல்பின்ஸ்டன் கல்லூரியில் முதல் இந்தியப் பேராசிரியராகப் பணியாற்றினார். பின்னர் சிறிது காலம் வழக்கறிஞராக இருந்து, பல்வேறு சமூகப் பணியில் ஈடுபட்டார். அரசியலிலும் சமூகத்திலும் செல்வாக்குப் பெற்றார். தேசியக் காங்கிரஸின் தலைவராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். கடைசியில் இங்கிலாந்து நாட்டிலேயே குடியேறி, பாராளுமன்ற உறுப்பினரானார். இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினர்களில் முதல் இந்திய உறுப்பினர் இவரே. இலண்டனிலிருந்த காமா கம்பெனியின் பங்குதாரரானார். இலண்டனில் தொழில் நடத்திய முதல் இந்தியரும் இவரே. காமா கம்பெனியிலிருந்து விலகியபின் சொந்தமாக தாதாபாய் நவ்ரோஜி கம்பெனியை ஆரம்பித்தார். பிரிட்டிஷ் மக்கள் இவரை 'இந்தியாவின் பெருமைக்குரிய முதல் மனிதர்' என அழைத்தனர். இவர் வரைந்த 'இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் சார்பற்ற அரசும்' (Poverty and un-British Rule in India) என்னும் நூல் 1901-ல் வெளியாயிற்று. இந் நூலில்தான் அவரது பொருளாதாரக் கருத்துகள் நிறைந்திருக்கின்றன.

வறுமைப் பிரச்சினை

இந்தியா அந்நியர் ஆட்சியில் வறுமை நாடாகிவிட்டதென்பதை நவ்ரோஜி உணர்ந்தார். இந்தியாவின் தேசிய வருமானம் அக்காலத்தில் மிகக் குறைவாயிருந்தது. 'இந்தியன் எக்கானமிஸ்ட்' என்ற இதழில் அக் காலத்தியத் தேசிய வருமானம் கணக்கிடப்பட்டு வெளியாயிற்று. மக்களின் தலா வருமானமும்கணக்கிடப்பட்டு வெளிவர வேண்டுமென வாதாடினார் நவ்ரோஜி. அவரது கணக்கெடுப் பின்படி இந்தியாவின் தலா வருமானம் 1867 முதல் 1870 வரை ஆண்டொன்றுக்கு ரூ. 20 மட்டும்தான். சாதாரணக் கூலியாள்கள் விவசாய உழைப்பாளி, அரசாங்கப் பணியாள் ஆகியோரின் தேவையையும் உடல் நலத்தையும் ஆதாரமாகக் கொண்டு குறைந்த பட்சம் ஆளுக்கு ரூ. 34 வருமானமாவது கிடைக்க வேண்டுமெனக் கணக்கிட்டார். நடுத்தர வகுப்பினரும் செல்வரும் அதிக வருமானத்தைப் பெற சாதாரண எளிய வகுப்பினருக்கு வயிற்றைக் கழுவும் அளவுக்குக்கூட வருமானம் இல்லையென்ற முடிவுக்கு வந்தார். அவரது கணக்கெடுப்பில் பல குறைபாடுகள் இருந்த போதிலும் தேசிய வருமானக் கணக்கெடுப்பை முதலில் தொடங்கிய அறிஞராக அவர் மதிக்கப்பட்டார்.

அக் காலத்தில் இந்திய ஏற்றுமதி மிகக் குறைவாயிருந்தது வறுமையின் சின்னமாக விளங்கியது அதோடு, மக்களின் வாழ்க்கைத்தரம் மிகத் தாழ்வாக இருந்தது. அடிக்கடி பஞ்சம் ஏற்பட்டது. இதையெல்லாம் ஆதாரமாகக்கொண்டு இந்தியா வறுமைநாடாகிவிட்டதென வாதித்தார் நவ்ரோஜி.

பொது நிதியியல்

நவ்ரோஜியின் கணக்கெடுப்பின்படி இங்கிலாந்தின் தேசிய வருமானத்தில் 8 சதவிகிதம்தான் வரியாக விதிக்கப்பட்டது. ஆனல், இந்தியாவின் வருமானத்தில் 15 சதவிகிதம் வரியாக அரசிற்குச் சென்றது. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் ஆட்சியில் பாரபட்சமாக நடந்துகொண்டதெனக் குற்றம் சாட்டினர். அதோடு, மான்செஸ்டரிலிருந்து இறக்குமதியான துணிமணிகளுக்கெல்லாம் இறக்குமதித் தீர்வை இல்லை; இதனல் இந்தியாவில் புதியதாய் ஆரம்பிக்கப்பட்ட நெசவுத் தொழில்கள் பாதிக்கப்பட்டன. எனவே, இந்திய அரசாங்கத்தை அவர் குறைகூறினர்.

இந்திய அரசாங்கம் பெருமளவில் நிருவாகச் செலவு செய்ததே வறுமைக்குக் காரணமென வாதாடினர். நாட்டின் பாதுகாப்பென்ற

பெயரில் அரசாங்கம் அளவுக்குமிஞ்சிய பாதுகாப்புச் செலவு செய்தது. ஆனால், ஆங்கிலநாடு பிற ஐரோப்பிய நாடுகளுடனே போர் தொடுத்தது. எனவே, சுயநலத்திற்காக அதிக அளவில் பாதுகாப்புச்செலவைச் செய்ததைக் குறைகூறினார். இச் செலவால் இந்திய அரசாங்கம் பெருமளவில் கடன்பட்டுவிட்டது. இக் கடனுக்கு அதிக வட்டியையும் வசூலித்தது. இதனால்தான் நாடு வறுமையாகிவிட்டதென வாதாடினார் நவ்ரோஜி. அதோடு, பிரிட்டனின் நலனை உத்தேசித்துதான் இந்தியாவில் இரயில்போக்கு வரத்து ஏற்படுத்தப்பட்டதென்றார். இரயில்வேயில் உயர்பதவியை வகித்தவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்கள். இந்தியர்களோ சாதாரண குமாஸ்தாக்களாகவும் பணியாள்களாகவுமே அமர்த்தப் பட்டனர். இதனால் இரயில்வேயிலிருந்து கிடைத்த பலன்கள் அனைத்தும் இங்கிலாந்திற்குச் செல்ல, ரயில்வே அடைந்த நட்டத்தைமட்டும் இந்தியர்கள் ஏற்கவேண்டியிருந்தது இந் நிலைமையை வன்மையாகக் கண்டித்தார் நவ்ரோஜி.

சுரண்டல் கொள்கை (Drain Theory)

இங்கிலாந்து நாடு இந்தியாவின் செல்வத்தையெல்லாம் சுரண் டிக்கொண்டு போய்விட்டதாகக் கருதினார் நவ்ரோஜி. இக் கோட்பாடே சுரண்டல் கோட்பாடாகக் கருதப்படுகிறது. இக் கோட்பாட்டின்படி இந்தியாவின் வருவாயில் பெரும்பகுதி ஐரோப்பிய மக்களுக்கு வட்டியாகவும், ஊதியமாகவும், ஓய்வுச் சம்பளமாகவும் இங்கிலாந்திற்குச் சென்றுவிட்டன என்று கூறினார். அரசாங்கச் செலவு இந்தியாவிலும் இங்கிலாந்திலும் வளர்ந்து கொண்டே போகிறது; இதனால் பாதிக்கப்படுவோர் இந்தியர்களே என்றார். நம்நாட்டிலிருந்து இங்கிலாந்திற்குச் சென்ற செல்வம் 1835-ல் 3 மில்லியன் பவுன்களாக இருந்து 1900-ல் 30 மில்லியன் பவுன்களாக அதிகரித்துவிட்டதென எடுத்துக் காட்டினார். இந்தியாவை வறுமையில் ஆழ்த்திவிட்டு இங்கிலாந்து செல்வச் செருக்குடன் வாழ்கிறதெனச் சுட்டிக்காட்டினார். இவ் வுண்மையை ஆங்கிலநாட்டு அறிஞர்களே ஒப்புக்கொண்டனர். சான்றாக, ஜே. எஸ். மில் அவர்கள் 'இந்திய பொருளாதாரத்தின் குருதியை உறிஞ்சிவிட்டது இங்கிலாந்து' எனக் குறைகூறினார். இக்கூற்றை மேற்கோளாகக்கொண்டு அந்நிய ஆட்சியையும் ஆதிக்கத்தையும் வெறுத்தார் நவ்ரோஜி.

இங்கிலாந்தின் மக்கள் சபையில் சொற்பொழிவாற்றிய நவ்ரோஜி, இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிருவா கத்தைக் குறைகூறினார். கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபாரத் தால் இந்தியாவின் உள்நாட்டு வியாபாரமே செத்துவிட்டதெனக் கலங்கினார்.

இந்தியாவின் வறுமையை நீக்குவதெப்படி ?

இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குச் செல்லும் செல்வம் தடுக்கப்பட்டால்தான் இந்தியாவிற்கு விமோசனம் கிடைக்குமென்றும் முன்னேற முடியுமென்றும் கருதினார் நவ்ரோஜி. இந்தியாவில் பணிபுரியும் அந்நியநாட்டவரின் எண்ணிக்கை குறையவேண்டுமென்றும், அந்நியர்களுக்குப் பதிலாக இந்தியர்களே நிருவாகப் பணியில் ஈடுபடவேண்டும் வாதாடினார். அவ்வாறு செய்தாலே நிருவாகச்செலவும் இந்திய அரசாங்கத்தின் கடனும் குறையுமெனக் கூறினார். இந்தியாவில் பணிபுரிந்த ஆங்கில அதிகாரிகளுக்கு மிகுதியாகச் சம்பளம் கொடுக்கப்பட்டதால் அவர்களுக்கு ஓய்வுச்சம்பளம் அவசியமில்லையென வாதாடினார்.

மதிப்புரை

இந்தியாவின் பொருளாதாரச் சிந்தனை முறைக்கு வழிவகுத்தவர் நவ்ரோஜியே என்றால் மிகையாகாது. நாட்டின் பொருளாதார நிலையை அறிந்துகொள்ளும் இலக்காகத் தேசிய வருமானத்தைக் கணக்கிட்ட முதல் மேதை அவர். தேசிய அடிப்படையில் பொருளாதார ஆய்வை மேற்கொண்ட அவரை இந்தியத் தேசவாதிகளின் தந்தை எனச் சிலர் கூறுவர். அவருடைய சுரண்டல் கோட்பாடு இந்தியப் பொருளாதாரச் சிந்தனையில் முக்கிய இடம் பெற்றுள்ளது. எனினும், இக் கோட்பாட்டை டட், ரனேட் போன்ற அறிஞர்கள் குறைகூறியுள்ளனர். இக் கோட்பாடு ஒருமுகமானதென்பது அவர்களின் கருத்து.

(ii) ரமேஷ் சந்திரடட் (1848-1909)

ரமேஷ் சந்திர டட் 1848-ல் கல்கத்தாவில் பிறந்தார், இவரது குடும்பத்தினர் அனைவரும் நன்கு படித்துப் புகழ் பெற்றவர்கள். 1869-ல் டட் இந்திய நிருவாகத் துறையில் சேர்ந்து சிறிது காலம் பணியாற்றினார். 1883-ல் மாவட்ட நீதிபதியானார் தலைவராக பணியாற்றினார். பின்னர் லண்டன் பல்கலைக் கழகத்தில் வரலாற்று விரிவுரையாளரானார். அப்போதுதான் அவர் எழுதிய 'இந்தியாவின் பொருளாதார வரலாறு' என்னும் நூலை இரண்டு பகுதிகளாய் வெளியிட்டார். 1890-ல் 'இந்தியாவின் பஞ்சங்கள்' என்னும் சிறு நூல் ஒன்றையும் வரைந்தார். டட் ஒரு சிறந்த தேசியவாதி. தேசியப் பற்றுள்ள காரணத்தால் அவர் பெரும் புகழும் பெற்று வளமாய் வாழ்ந்தார்.

இந்திய வறுமைக்குக் காரணங்கள்

டட் அரசியலும் பொருளாதாரமும் ஒன்றையொன்று சார்ந்தவை என்பதில் நம்பிக்கை கொண்டவர். சமுதாய அமைப்பும் பொருளாதார நிலையும் அடிக்கடி மாறும் இயல்புடையவை என்ற கருத்துடையவர். எனவே, இந்தியாவின் வறுமைக்கு அரசியல் கண்ணோட்டத்தில் விளக்கம் தருகிறார். மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடக்கூடாதெனக் கருதிய போதிலும், அவர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அரசு அமைய வேண்டுமென எண்ணினார்.

இந்தியப் பொருளாதார ஆய்வில் அக்கறைகொண்ட டட் மக்களின் பயங்கரமான வறுமை நிலைக்குக் காரணங்களை ஆராய்வதில் ஈடுபட்டார், இந்தியாவில் அடிக்கடி தோன்றிய பஞ்சங்கள், நாட்டின் உற்பத்தி மிகக் குறைவாயிருத்தல், ஒவ்வாத நிலவரிச் சட்டங்கள், உள்நாட்டுச் சிறுதொழில்களும் குடிசைத் தொழில்களும் நலிந்து விட்டமைஆகியவைதான் வறுமைக்கே முக்கியகாரணங்கள் என்றார். மக்கள் தொகை அதிகரிப்பதும், விவசாயப் பொருள்களின் விலைவாசிகள் மிகத் தாழ்வாயிருந்ததும், இந்திய அரசாங்கம் அமுலாக்கிய நிலவுடைமைச் சட்டங்களும்தான் பயிர்த் தொழில் தோன்றுவதற்கும் விவசாயிகள் மிக மோசமான வாழ்க்கைத்தரத்தை அடைந்ததற்கும் அடிப்படைக் காரணங்கள் என்றார். இந்தியாவின் பொருளாதார வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு இக் காரணங்களையெல்லாம் புள்ளி விவரங்களோடு விளக்கினார். இந்தியாவின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் தடையாக இருப்பது நாட்டின் விவசாய அமைப்பு முறைதான் என்று அழுத்தம் திருத்தமாக விளக்கினார். பிரிட்டனில் அல்லது அயர்லாந்தில் உள்ள வரியைக் காட்டிலும்இந்தியாவில் இருந்த வரி 40 சதவிகிதம் அதிகம் என்பதைச் சுட்டிக் காட்டி வரி முறையும் நாட்டின் வறுமைக்குக் காரணமாகும் என்று விளக்கினார். வரி மிகவும் அதிகமாயிருந்ததற்குக் காரணம் அரசாங்கத்தின் வீணான நிருவாகச்செலவே என்றார். பிரிட்டனின் பாராளுமன்றமும் கிழக்கிந்தியக் கம்பெனியும் சுயநல நோக்கத்தோடு செயல்பட்டதன் விளைவாக இந்தியத் தொழில்கள் குன்றிப் போனதுடன் நாட்டின் செல்வமே வற்றிப் போனதென்கிறார்.

வறுமையை நீக்குவதெப்படி ?

இந்திய மக்களின் வறுமையை நீக்க டட் வகுத்த வழிமுறைகள் பல. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு : குடிசைத் தொழில்களுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டும் ; புதுத்தொழில்கள்

பலவற்றை நிறுவவேண்டும். அப்போதுதான் மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரித்து அவர்களின் வருமானம் உயரும். பருவ மழையை மட்டும் நம்பியிருக்கும் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்துதரவேண்டும். அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவையும் நிருவாகச்செலவையும் குறைக்கவேண்டும். பொதுக் கடனின் வட்டிவிகிதத்தையும் குறைத்தல் அவசியம். இங்கிலாந்திலிருந்து வாங்கப்படும் யுத்தத்தளவாடங்களையும் பிற அலுவலகப் பொருள்களையும் குறைத்துக்கொள்ளவேண்டும். இந்தியாவின் பணம் வெளிநாட்டிற்குச் செல்லாமல் தடுக்கும்பொருட்டு ஆங்கிலநாட்டு அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, அவர்களுக்குப் பதிலாக இந்தியர்களை வேலைக்கமர்த்தவேண்டும்.

டட் வாழ்ந்த காலத்தில் நிலவரி நிலையற்றதாயும் அதிகமானதாயும் இருந்தது. எனவே, நிலவரிச் சீர்திருத்தம் வேண்டுமென அவர் வாதாடினார். நிலையான வரிச் சட்டம் அமுலாக்கப்படாத இடங்களிலெல்லாம் 50 சதவிகிதத்திற்குமேல் நிலத் தீர்வை இருக்கக்கூடாதென்றார். நேரடியாக நிலத்தீர்வை வசூலிக்கப்படும் பகுதிகளில் மொத்த உற்பத்தியில் 20 சதவிகிதமே வசூலிக்கப்பட வேண்டுமென்றார். விவசாயப் பொருள்களின்விலைவாசிகள் கூடினால் தான் நிலத் தீர்வையை அதிகரிக்க வேண்டும். இவ் வகையில் விதிக்கப்படும் நிலத்தீர்வை குறைந்த பட்சம் 30 ஆண்டுகளுக்காவது அமுலில் இருக்க வேண்டும்; அதை அடிக்கடி மாற்றக் கூடாது. அடிக்கடித் தீர்வையை மாற்றினால் உழவர்கள் துன்பப் படுவர்.

முடிவுரை

டட் அவர்கள் வகுத்த பொருளாதார அமைப்பு, பொருளாதாரத்தை மட்டுமன்றி, அரசியல், வரலாறு, சட்டம் ஆகியவற்றையும் அடிப்படையாகக் கொண்டது. இந்தியர்களின் வறுமைக்குக் காரணங்கள் என்னென்ன என்பதை முழுமையாக ஆராய்ந்த பெருமை அவருக்கு என்றும் உண்டு. இந்தியாவின் பொருளாதார வாழ்வைச் சித்தரிக்கும் வகையில் அவர் எழுதிய பொருளாதார வரலாறு என்றும் மங்காத ஒன்றாகும். அரசாங்க நிருவாகத்தில் பணியாற்றியவர் டட். எனவே, நடைமுறைக்கேற்ற வகையில் அவர் தரும் சீர்திருத்தத் திட்டம் பெருமைக்குரியது. பட்டி தொட்டிகளில் வாழும் பாமர விவசாயிகளின் வருமானம் உயர்ந்தால்தான் நாட்டில் செழிப்பம் ஏற்படுமென்று கருதினார். அயல்நாட்டு மூலதனத்தைக் கொண்டு ஆலைத்தொழில் தொடங்குவதை விரும்பவில்லை. பஞ்சாயத்தை ஒழித்து வறுமையை நிலையாக விரட்டி அடிக்க வேண்டுமாயின், பயிர்த் தொழிலை மட்டுமன்றிக் கிராமத் தொழில்களையும்

ஊக்குவிக்க வேண்டுமெனக் கருதினார். இக் கருத்து இன்றும்கூட ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருப்பது அவரது ஆழ்ந்த அறிவுக்கும் விசாலமான அனுபவத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

(iii) மகாதேவ கோவிந்த ரானடே (1842—1901)

ரனடே கல்வியில் பற்றுடையவர். எதையும் சுயமாகச் சிந்திக்கும் திறன்பெற்றவர். 1864-ல் பம்பாய் பல்கலைக்கழகத்தில் பொருளாதார விரிவுரையாளராக அமர்ந்தார். பின்னர் ஒருசில ஆண்டுகள் வழக்கறிஞராக விளங்கினார். பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் சிலகாலம் பணியாற்றினார். ரானடே இந்தியாவின் சுதந்திர இயக்கத்தில் பேரார்வம் மிக்கவர்; நாட்டுப்பற்றுடன் பாடுபட்ட மேதை. 1898-ல் ‘இந்திய அரசியல் பொருளாதாரக் கட்டுரைகள்’ என்னும் தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டார். இந் நூலில்தான் அவரது பொருளாதாரக் கருத்துகள் மிளிர்கின்றன.

ரானடேவின் பொருளாதாரக் கருத்துகள்

ரானடே ஆங்கிலநாட்டுத் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் ஆய்வுமுறையைக் குற்றம்சாட்டினார். அவர்களது ஆய்வு முழுவதும் மாற்றமில்லாத சமுதாயத்திற்கே பொருந்தும். அவர்களின் அனுமானங்களும் முடிவுகளும் நடைமுறைக்கு ஒவ்வாதவை. தனிமனிதனை மையமாகக்கொண்ட தொன்மைப் பொருளாதார ஆய்வு இந்திய நிலைமைக்கு ஏற்றதன்று. இந்தியாவில் தனிமனிதன் முக்கியமல்ல; குடும்பமே முக்கியம். அதோடு, ஜாதி, மத வேறுபாடுடைய சமுதாயத்தைக்கொண்டது. எனவே, தொன்மை நூலாரின் முடிவுகள் ஆங்கில நாட்டிற்கு ஏற்றதேயன்றி, இந்தியாவிற்கன்று என்பது ரானடேவின் கருத்து. ஆடம் முல்லர், பிரடெரிக் லிஸ்ட் ஆகியோரின் ஆய்வில் நம்பிக்கைகொண்டவர் ரானடே. எனவே, பொருள் ஆக்கசக்தியைப் பல்வேறு காரணிகள் நிருணயிக்கின்றன என்பதில் நம்பிக்கைக்கொண்டு, மக்களின் பொருளாதார விழிப்புணர்ச்சிக்கு முக்கியம் தந்தார். ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார அமைப்புகளையும் வரலாற்றையும் ஒப்பிட்டு ஆராய்ந்த ரானடே, வரலாற்று அடிப்படையில் பொருளாதார ஆய்வை மேற்கொள்ளுவதே சிறந்ததென்ற முடிவிற்கு வந்தார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சிக்கலான பல்வேறு நிலைமைகளைப் பொறுத்தது என்பது ரானடேவின் வாதம். இந்தியாவிலுள்ள அரசியல் நிலைமை, பொருளாதார, சமூக அமைப்புகளை

பொருளாதார வளர்ச்சியை நிருணயிக்கும் சக்திகள் என்ருர். எனவே, அவ்வமைப்புகளை மாற்றி அமைக்காமல், இந்தியா முன்னேறமுடியாது. உண்மையில், பொருளாதாரத் திட்டத்தை ஆதாரமாகக்கொண்டுதான் இந்தியா முன்னேற முடியுமென்பது அவரது நம்பிக்கை. நம்நாட்டிற்கு மக்களின் நலனைப் பேணி வளர்க்கின்ற அரசே ஏற்றதென்பது அவரது முடிவு.

இந்திய வறுமைக்குக் காரணங்கள்

நவ்ரோஜியும் டட்டும் இந்தியாவில் வறுமை நிறைந்துவிட்ட தென்பதை வலியுறுத்த முயன்ருர்கள். ஆனுல், ரனேட் அவ்வித முயற்சியில் ஈடுபடாமல் வறுமை இருப்பதை ஒப்புக்கொண்டார். எனினும், வறுமைக்குக் காரணம் அந்நிய ஆட்சியல்ல என்பது அவரது எண்ணம். வறுமை என்பது இந்தியாவில் பரம்பரையாக இருந்துவருவது ஆங்கிலேயர்களின் ஆட்சியால் அது அதிகரித்து விட்டது என்ருர் ரனேட்.

நம்நாட்டின் வறுமைக்குப் பல காரணங்களைச் சுட்டிக் காட்டினுர் ரனேட். வறுமைக்கு மூலகாரணம், இந்திய விவசா யத்தையே நம்பி வாழ்வதுதான். இதற்கு அரசாங்கத்தின் வணிகக்கொள்கையும் ஓரளவு காரணமாகும். இரயில் போக்கு வரத்தை அதிகரித்து, தடையிலா வாணிபக்கொள்கையின் வாயிலாக இந்தியாவிலுள்ள மூலப்பொருள்களையெல்லாம் இங்கி லாந்துக்கு அனுப்புமாறு அரசாங்கம் தூண்டிவிட்டது. தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்துவிட்ட பிரிட்டனேடு போட்டி யிடும் வகையில் தொழில்கள் இங்கு வளரமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது. தொழில் வளத்திற்கு ஆதாரமான வங்கி வசதிகளும் கடன்தரும் வசதிகளும் நமதுநாட்டில் இல்லை. அரசாங்கம் கடைப் பிடித்த நிலத்தீர்வைக் கொள்கையும் தவருனதென்பதை ரனேட் சுட்டிக்காட்டுகிருர். நிலவரிகள் கெடுபிடியான முறையில் வசூலிக் கப்பட்டன.

வறுமையைப் போக்கும் வழிவகைகள்

நாட்டின் வறுமை நீங்கவேண்டுமாயின், தீவிரமான பொருளா தாரச் சீர்திருத்தங்கள் தேவை. இச் சீர்திருத்தங்களைச் செய்வது அரசாங்கத்தின் பொறுப்பு. நாட்டில் தொழில் வளம் பெருகினுல் தான் வறுமை ஒழியும் என்று கூறுகிருர் ரனேட். எனவே, தொழி லுக்குத் தேவைப்படும் மூலதனத்தைப் பெருக்க அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். அதோடு, தொழில்களை நடத்துவதற்கு வழி காட்டுவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். வங்கிகள் தொழில் களுக்குக் கடன் கொடுக்கும் முறையை அரசாங்கம் மாற்றி

அமைக்கவேண்டும். நில அடமானத்தின் பேரில் வங்கிகள் கடன் தர முன்வரவேண்டும். அதோடு, மக்கள் நெருக்கம் அதிகமாயுள்ள பகுதியிலிருந்து இட நெருக்கடியில்லாத சுகாதாரமான பகுதிகளில் மக்கள் குடியேற வழி செய்ய வேண்டும்.

அரசாங்கத்தின் நில உடைமை, வரிக் கொள்கைகளும் மாற வேண்டுமெனக் கருதினர் ரனேட். எல்லா இடங்களிலும் நிரந்தர மான ரயத்வாரி முறையே நிலவ வேண்டும். நில வரியை 20 அல்லது 30 ஆண்டுகொளுக்கொருமுறை மறுபரிசீலனை செய்ய வேண்டும். நிலத்திலிருந்து கிடைக்கும் நிகர இலாபத்தில் பாதி மட்டுமே வரியாக நிருணயிக்கப்படவேண்டுமெனக் கருதினர் ரானடே. உழவர்கள் தானியமாகவே வரியைச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படவேண்டும்.

மதிப்புரை

இந்தியப் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் ரானடே மிக முக்கியமான இடத்தை வகிக்கிறர். முந்திய இருவரையும் விடத் தெளிவான சிந்தனையுடையவர் ரானடே. வறுமையின் காரணங்களை முழுமையாக ஆராய்ந்ததோடு மட்டுமன்றி அவ் வறுமையைப் போக்கப் பல்வேறு வழிவகைகளைத் தருகிறர். அவரது வழிவகை களில் பல தற்போது நிறைவேறியுள்ளன. அவரது கருத்தின்படி நில அடமான வங்கிகள் நாடெங்கும் தொடங்கப்பட்டுள்ளன.

பொருளாதாரப் பிரச்சினைகளை அரசியலோடு குழப்பாமல் அறிவி யல் அடிப்படையில் ஆராய்ந்த பெருமைக்குரியவர் ரனேட். நவ்ரோஜியும் டட்டும் அந்நிய ஆட்சியே நமது பொருளாதாரப் பிரச்சினை களுக்கெல்லாம் மூலகாரணம் என நம்பினர். அடிமைத் தளையிலி ருந்து விடுதலை பெற்றுவிட்டால் இந்தியா வளமடைந்துவிடு மென்றனர். ஆனல் ரனேட் நமது பொருளாதாரப் பிரச்சினைகள னைத்தும் பரம்பரையாகவே வளர்ந்துவந்துள்ளன என்று எடுத்துக் காட்டுகிறர்.

'இந்திய அரசியல் பொருளாதாரம்' என்ற சொற்களை முதன் முதலில் பயன்படுத்திய பெருமையும் இவருக்குண்டு. பொருளா தாரக் கருத்துகளும் கொள்கைகளும் உலகிற்கே பொதுவானவை என்ற தொன்மைப் பொருளாதார முடிவைக் குறைகூறிய ரனேட், லிஸ்டைப் பின்பற்றி நாட்டின் அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆய்ந்து முடிவு கண்டார், எனவே, இவரைச் சிறந்த தேசியவாதி என்றுமட்டும் கருதாமல் நமது நாட்டில் தோன்றிய முதன்மையான பொருளாதார நிபுணராகவும் கொள்ளலாம்.

(iv) கோபால கிருஷ்ண கோகலே (1866 – 1915)

(Gopala Krishna Gokhale)

நமது நாட்டின் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் இடம் பெறுவோர் பலர். எல்லாரையும்பற்றி ஆய்வதற்கு இங்கு இடமில்லை. எனினும், கோகலேயின் பொருளாதாரக் கருத்துகளின்றி நமது ஆய்வு முழுமையாகாது. எனவே, சுருக்கமாகவாவது அவரைப்பற்றி அறிந்துகொள்ளல் அவசியம்.

கோகலே பூனாவிலுள்ள டெக்கான் கல்லூரியிலும், பம்பாயிலுள்ள எல்பின்ஸ்டன் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்றவர். 1896 முதல் 1902 வரை பூனாவில் ஃபெர்கூசன் கல்லூரியில் வரலாறும் பொருளாதாரமும் கற்பித்தார். 1912-ல் பொதுப்பணி அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் கமிஷனில் உறுப்பினரானார். பல முறை இங்கிலாந்து நாட்டுக்குச் சென்றார். கோகலே சில காலம்தான் வாழ்ந்தாரெனினும் அவரது வாழ்க்கை பெருமைக்குரியதாகும். 18 வயதிலேயே படித்துப் பட்டம் பெற்று, 20 வயதில் பேராசிரியரானார். 29ஆம் வயதில் இந்திய தேசிய காங்கிரஸின் செயலாளராகப் பணிபுரிந்தார். 36ஆம் வயதில் அதன் தலைவர் பதவிக்கு உயர்ந்தார். மகாத்மா காந்தி 1896-ல் தான் கோகலேயை முதன்முதலில் சந்தித்தார். பார்த்தவுடன் நண்பராகி, கோகலேயைப் பற்றி அவர் குறிப்பிட்டது சிறப்பிற்குரியது. ‘கோகலேதான் எனக்குப் பிடித்தமான அரசியல் நண்பர். பளிங்குபோல் தூய்மையும், செம்மறி ஆடுபோல் சாந்தமும், சிங்கம் போல் வீரமும் நிறைந்தவர்’ என காந்தி கூறியுள்ளார்.

கோகலேயின் கருத்துகள்

கோகலே ரானடேவின் சீடர். அவருடைய பொருளாதாரக் கருத்துகள் பல சீர்திருத்தங்களுக்கு அடித்தளமாக அமைந்தன. 1896-ல் அரசாங்க நிதியில் 1·5 மில்லியன் பவுன் பற்றாக்குறை ஏற்பட்டது. இதைச் சமாளிக்க உப்புவரியை உயர்த்த எண்ணியது அரசாங்கம். ஆனால், கோகலே இதற்குப் பலமான எதிர்ப்புத் தெரிவித்தார். நிருவாகச் செலவைக் குறைத்தால் அதிகாரிகள் கோபம் கொள்வர் என்ற காரணத்திற்காக பாமர இந்தியர்களின்மீது வரியைப் போடுவதும், அதிகரிப்பதும் அநீதியெனப் பொங்கி எழுந்தார். லங்காஷயரிலிருந்து வந்த துணிமணிகளின் மீது விதிக்கப்பட்ட 5 சதவிகித இறக்குமதியை 1879-ல் அரசாங்கம் ரத்து செய்தது. அதை ஈடுகட்ட இந்திய ஆலைத்

துணிமணிகளின் மீது $3\frac{1}{2}$ சதவிகித ஆயத் தீர்வை விதித்தனர். இதனால் உள்நாட்டுத் தொழில்களை நசித்து லங்காஷையர் தொழில்களுக்கு ஊக்கம் ஏற்பட்டது. தேசியப் பற்றுடைய கோகலே இதைக் கண்டு சீறி எழுந்தார். ஆங்கிலேயர்களின் வசதியை முன்னிட்டு இந்தியர்கள் தியாகம் செய்யவேண்டிய வகையில் அமைந்த அரசாங்கக் கொள்கையைக் கண்டித்தார்.

நிலத் தீர்வைக் கொள்கையையும், கோகலே குறைகூறியது குறிப்பிடத்தக்கது. நிலத் தீர்வை சம்பந்தப்பட்ட விதிகள் நிலையானதாயும் தெளிவானதாயுமிருக்க வேண்டுமென வாதித்தார். விவசாயிகளே நேரடியாக வரி செலுத்தும் ரயத்வாரி முறையில் மொத்த உற்பத்தியில் 20 சதவிகிதத்திற்குமேல் வரி விதிக்கக்கூடாதென வலியுறுத்தினர்.

பொது நிதியும் சீர்த்திருத்தமும்

நவ்ரோஜி அவர்கள் பொதுநிதிச் சீர்த்திருத்தத்திற்காக மக்கள் சபையில் வாதாடினர் என்பதை முன்னரே கண்டோம். அவ் வாதத்தின் விளைவாக பிரிட்டிஷ் அரசாங்கம் பொது நிதி நிருவாகத்தை அறிந்துகொள்ள ராயல் கமிஷன் ஒன்றை 1895-ல் ஏற்படுத்தியது. அந்தக் குழுவின் விசாரணையில் கோகலே கலந்து கொண்டார். அந்தக் குழுவிற்குப் பல கருத்துகளை எடுத்துக் கூறினர். அரசாங்க வரவு செலவைக் கட்டுப்படுத்த வலுவான அமைப்புமுறை இந்தியாவில் இல்லை; ஆனால், இங்கிலாந்தில் பாராளுமன்றம் உள்ளது என்றார். எனவே, இங்கிலாந்தில் வரி செலுத்துவோர் அரசாங்க வரவு செலவைப் பரிசீலனை செய்ய முடியும். இதனால் இந்திய அரசாங்கம் கேட்பாரின்றிப் பட்டாளத்திற்கென்றும் கண்ணை மூடிச் செலவு செய்கிறதெனக் குற்றம்சாட்டினர். இந்தியக் காலாள்படையைத் தன் சாம்ராஜிய நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிறது இங்கிலாந்து. ஆனால் காலாள் படையின் செலவனைத்தையும் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. இதனால் இந்தியாவில் வரி செலுத்தம் பொது மக்களுக்குத்தான் இழப்பு என வாதாடினர்.

இந்திய ஆட்சிப் பொறுப்பை இங்கிலாந்து அரசாங்கம் ஏற்றுக்கொண்டதிலிருந்து இந்தியாவின் வடக்கு, வடகிழக்கு எல்லைகளைப் பாதுக்காக்கும் நோக்கத்தில் இந்திய அரசாங்கம் ஏராளமான வீண் செலவு செய்து விட்டதெனக் கூறினர் கோகலே. சான்றாக, சிப்பாய்க் கலகத்திற்கு முந்திய ஒரு சில ஆண்டுகளில் இந்திய அரசின் சாரசரி செலவு ஆண்டொன்றுக்கு ரூ 30 கோடியாகத்தான் இருந்தது. ஆனால் அதற்குபின் சராசரி வருடத்திற்கு ரூ. 75 கோடி செலவழிந்துள்ளது என்று எடுத்துக்காட்டினர். இதில் ஏறக்

குறைய ரூ 25 கோடியைப் பாதுகாப்பிற்கென்று செலவிட்டுள்ளது. அதாவது, அரசாங்கத்தின் மொத்தச் செலவில் 35 சதவிகிதம் பாதுகாப்பிற்கென்று செலவிடப்பட்டது வீண் செலவென வாதாடினார் கோகலே. ஆனால் கோகலேயின் வாதத்தையெல்லாம் குழுவிலிருந்த பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மதிப்புரை

கோகலேயின் கருத்துகளிலெல்லாம் முக்கியமானதும் சிறப்பானதுமான கருத்து ஒன்று உண்டு. அதாவது, இந்திய அரசாங்கத்தின் வருவாய் செலவைக் கட்டுபடுத்தவும் ஒழுங்குபடுத்தவும் வேண்டும் என்பதுதான். இந்திய அரசாங்க வருமானத்தை இந்தியாவில் செலவிட வேண்டுமேயன்றி வேறெங்கும் செலவிடக் கூடாதென வாதித்தார். மாநிலங்களுக்கெல்லாம் அதிக அதிகாரம் வேண்டுமென்றும் அப்போதுதான் அரசாங்க வருவாய் நாட்டு மக்களின் நலனுக்காகச் செலவிடப்படுமென்றும் கூறினார். அவ்வாறன்றி தன்னலத்தையே அடிப்படையாகக்கொண்டு அரசாங்கம் செலவழித்தால் பட்டாளத்தை விரிவு படுத்தவும் பலப்படுத்தவும்தான் அது செலவிடுமேயன்றி, மக்களின் நல்வாழ்வுக்காகச் செலவிடாதென வாதாடினார்.

இங்கிலாந்திலிருந்து ஏராளமான துணிமணிகள் இறக்குமதியாவதைக் கண்டித்தார். இதனால் இங்குள்ள நெசவுத் தொழில்கள் நசுங்கிப் போவதோடு ஆயிரக்கணக்காக நெசவாளிகள் வேலையில்லாமல் தவிக்கும் நிலையும் ஏற்பட்டு விட்டதென விளக்கம் தந்தார். இந்திய அரசாங்கம் பட்டாளச் செலவைக் குறைத்துக் கொண்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக அதிகம் செலவிட வேண்டுமென்பது கோகலேயின் கருத்து. இவ்வாறு இந்திய அரசாங்க வருவாய் செலவைக் குறைகூறியதன் வாயிலாக, அரசாங்கம் தனது நிதிக் கொள்கையைச் சீர்திருத்திக் கொள்ள கோகலே பேருதவி செய்தார் எனலாம்.

30. காந்தியப் பொருளாதாரம்

(Gandhian Economics)

காந்தியின் பொருளாதாரக் கருத்துகளையும் அவரது சீடர்களின் கருத்துகளையும் சேர்த்து காந்தியப் பொருளாதாரம் என அழைப்பது மரபு. காந்தி உண்மையில் பொருளாதார அறிஞரல்லர். அவர் ஒரு சிறந்த அரசியல் தலைவர்; ஒப்பற்ற வழிகாட்டி. இந்தியாவின் சுதந்திரத்திற்காகச் சத்தியத்தையும் அஹிம்சையையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தி புதுமையானமுறையில் வெற்றி கண்ட செம்மல். மேற்கு நாடுகளின் பொருளாதாரக் கருத்துகளுக்கு மாறான புதிய பல கருத்துகளை இப் பாரத நாட்டிற்கு விட்டுச் சென்ற மேதை. அவருடைய புதுமையான கருத்துகள் நமது பொருளாதாரக் கொள்கையிலும் சிந்தனையிலும் பரவிக் கிடக்கின்றன. அண்மையில் அவருடைய கருத்துகளையெல்லாம் ஜே. சி. குமரப்பா ஒன்று திரட்டி அவற்றிற்குப் புது மெருகேற்றியுள்ளார். வருங்காலம் அமைதியாகவும் நிலையாகவும் இருக்கும் வகையில் இக் கருத்துகள் அமைந்துள்ளன. எனவே, காந்தியின் கருத்துகளைத் தனியொரு அதிகாரத்தில் ஆய்வது மரபாகிவிட்டது.

வாழ்க்கைக் குறிப்பும் நூல்களும்

மோகன்தாஸ்கரம்சந்த் காந்தி(1869–1948) 1869ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ஆம் நாள் போர்பந்தர் என்னுமிடத்தில் பிறந்தார். வசதிமிக்க குடும்பத்தில் பிறந்த காந்தி இங்கிலாந்து நாட்டில் சட்டம் பயின்று வழக்கறிஞரானார். தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று வழக்கறிஞராகப் பணியாற்றினார். அங்கிருந்த இந்தியர்கள் கொடுமையாக நடத்தப்பட்டதைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து, அக் கொடுமையை நீக்க ஓர் அரசியல் இயக்கத்தைத் தொடங்கி வெற்றி கண்டார். கிருத்துவ பைபிளையும் டால்ஸ்டாய், ரஸ்கின் போன்ற அறிஞர்களின் நூல்களையும் விரும்பிப் படித்து, அரசியல் இயக்கத்திற்கு ஆதாரமாக அஹிம்சை, சத்தியாக்கிரகம் என்னும் இரு தத்துவங்களை உருவாக்கினர்.

1906-ல் இந்தியாவிற்குத் திரும்பிய காந்தி இந்திய தேசிய காங்கிரசிற்குப் புதுவாழ்வு தந்து நாட்டின் அரசியல் தலைவரானார். அஹிம்சா இயக்கத்தைத் தொடங்கி, அதன் வழியாக இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பாடுபட்டார். 1921-ல் ஒத்துழையாமை இயக்கத்தையும் 1930-ல் சத்தியாக்கிரகத்தையும் தொடங்கினார். 1942-ல் அவரது தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்டவேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அரசியல் கைதியாகப் பலமுறை சிறை சென்றார் காந்தி. 1947 ஆகஸ்டு திங்கள் 15ஆம் நாள் நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித்தந்த அவர், அதன் பின்னர் அரசியலில் ஈடுபட மனமின்றி அரசியல்வாதிகளுக்கு ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் விளங்கினார். 1948 ஜனவரி 30ஆம் நாள் வழக்கமான இறைவழிபாட்டிற்குச் சென்ற காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார்.

காந்தி எழுதிய நூல்களும் கட்டுரைகளும் பல. அதோடு தனது சுய சரிதையை இரண்டு பகுதிகளாகவும் வெளியிட்டார். அதற்கு 'சத்திய சோதனை' என்ற தலைப்புக் கொடுத்தார். மேலும், 'இளைய பாரதம்' 'ஹரிஜன்' என்னும் ஏடுகளையும் நடத்தினார். இவை அனைத்திலும் அவரது பொருளாதாரக் கருத்துகளைக் காணலாம். எனினும், அவரது பொருளாதாரக் கருத்துகளைச் சித்தரிக்கும் வேறு இரண்டு சிறு நூல்களும் உள்ளன. 1933-ல் வெளியான 'முற்றிலும் சுதேசி' என்பதொன்று; 'உருப்படியான திட்டம்' (1941) என்பது பிறிதொன்று. காந்தியின் கருத்துகளை அறிய வேறு பல நூல்களும் உதவும். அவற்றுள் முக்கியமானவை; ஜே சி. குமரப்பா எழுதிய 'காந்தியப் பொருளாதாரச் சிந்தனை', 'அரசியல் நிதியும் நமது வறுமையும்', 'கிராம இயக்கமேன்?' என்பன. அதோடு, அன்ஜாரியா எழுதிய 'காந்தியப் பொருளாதாரம் பற்றிய கட்டுரை', சீதாராமையர் வரைந்த 'கதர்', மசானி எழுதிய 'சோஷியலிச மறுபரிசீலனை' ஆகியவையும் குறிப்பிடத்தக்கவை.

காந்தியின் சிந்தனையை உருவாக்கிய சக்திகள்

காந்தியின் சிந்தனையை உருவாக்கிய சக்திகள் பல. ரஷ்ய மேதையான டால்ஸ்டாயின் நூல்களைப் பயின்று காந்தி சமத்துவம், எளிமை, பாசமற்ற வாழ்வுஎன்ற கருத்துகளைத்தெரிந்துகொண்டார். ரஸ்கின் வரைந்த 'கடைசி மனிதன்வரை' என்னும் நூலிலிருந்து மக்களின் நலத்தை உயர்த்துவதுதான் அரசின் குறிக்கோள் என்ற தத்துவத்தை உணர்ந்தார். இந்துமதக் குருக்களான கபீர், நானக் போன்றோரின் நூல்களும் இந்து மறைநூலான உபநிடதங்கள், கீதை ஆகியவையும் அவரது உள்ளத்தைச் செப்பனிட்

டன. எனவேதான் வறுமையை நீக்கும் வகையில் கிராமத் தொழிலுக்கும் குடிசைத் தொழிலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, கிராமப்புனரமைப்புத் திட்டத்தை உருவாக்கினர்.

காந்தியின் பொருளாதாரச் சிந்தனை பொருளாதார இயல்பு

பொருளாதார இயல் நெறியியலோடு பின்னப்பட்ட அறிவியல் என்பதை காந்தி வலியுறுத்தினர். எனவே, பொருளாதாரக் கருத்துகளும் கொள்கைகளும் நெறியியலை ஆதாரமாகக் கொள்ள வேண்டுமென்பது அவரது கருத்து. மக்களின் ஒழுக்கம் கெட்டு விடாமல் அவர்களின் நலனை அதிகரிப்பதே, பொருளாதாரக் குறிக்கோள் என்றார். ஒழுக்கத்தைப் புறக்கணித்துவிட்டுச் செல்வப் பெருக்கையே குறிக்கோளாகக் கொண்ட மேல்நாட்டுப் பொருளாதார ஆய்வை வெறுத்து ஒதுக்கினர். மக்களின் நலனையே மையமாகக் கொண்ட நலப்பொருளாதாரத்தை ஒத்தது காந்தியப் பொருளாதாரம்.

அடிப்படை அனுமானங்கள்

காந்தியப் பொருளாதாரம் சில அடிப்படையான அனுமானங்களில் உருவாயிற்று. எனவே, அவ்வனுமானங்களைச் சுருக்கமாக வாவது அறிந்து கொள்ளல் அவசியம்.

மனிதப் பண்பே முக்கியம்

மக்களிடையே நடந்துவரும் பொருளாதார நடவடிக்கைளுக் கெல்லாம் அடிப்படைக் காரணம், பணம் திரட்டுவதே என்பது தொன்மை நூலாரின் கருத்து. இக் கருத்தை மகாத்மா காந்தி வெறுத்தார். பணத்திற்கு அதிக மதிப்புக் கொடுத்து மனிதப் பண்புகளை இழப்பது கேவலம். எனவே, மக்களிடையே போட்டியும் பணத்தாசையும் இருப்பதற்குப் பதிலாக அன்பு, கூட்டுறவு ஆகிய பண்புகளின் அடிப்படையில்தான். பொருளாதார நடவடிக்கைகள் செயல்பட வேண்டும். பொருளாதார அமைப்புகளுக்கெல்லாம் மக்களின் நல்லொழுக்கப் பண்பும் ஆன்மீகக் குணமும்தான் அடிப் படையாக இருக்க வேண்டுமென காந்தி கருதினர்.

அஹிம்சை (பலாத்காரமின்மை)

மனிதன் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் ஓரளவு பலாத்கார முறை இருப்பதைக்கண்டு மனம் நெகிழ்ந்தார் காந்தி. எனவே, அதனைக் குறைக்கும் வகையில் சத்தியம், அஹிம்சை என்னும் இரு தத்துவங்களை உருவாக்கினர். தனி மனிதனுடைய செயல்களுக்கும் சமுதாய நடவடிக்கைகளுக்கும் இத் தத்துவங்களே ஆணி வேராக அமைய வேண்டுமென விரும்பினர். வாழ்க்கையின் குறிக்

கோள் மட்டுமன்றி, அக் குறிக்கோளை அடையும் வழிகளும் புனித மானவையாயிருக்க வேண்டும். நல்ல குறிக்கோளை அடைய தீய வழிகளை மேற்கொள்வது ஆபத்தானதும் கேவலமானதுமாகும். எனவே, பொருளாதார வாழ்வை மாற்றி அமைக்க விரும்பும் ஒவ்வொருவரும் நேர்மையான வழிகளைப் பலாத்காரமின்றிப் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தினர். அப்போதுதான் ஒருவனை ஒருவன் சுரண்டிவாழும் பழக்கமும், பொறுமையால் பலாத்காரத்தில் ஈடுபடும் வழக்கமும் நீங்கும் என்பது அவரது கருத்து. உண்மையான பொருளாதார வாழ்வின் குறிக்கோள் சமுதாயத்தில் நீதியையும் ஒழுக்கப் பண்புகளையும் நிலைநிறுத்துவதே. எனவே, அன்பு வழியில் மக்களின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து வறுமையை விரட்ட வேண்டுமென அறிவுரை வழங்கினர்.

எளிமையான வாழ்வு

ஆடம்பர வாழ்வையும் வசதியையும் உதறித் தள்ளிவிட்டு, அனைவரும் எளிமையாக 'வாழவேண்டும் என வலியுறுத்தினர் காந்தி. ஆடம்பர, வசதியான வாழ்விற்கு அடிப்படைக் காரணம் மக்களின் ஆயிரக்கணக்கான விருப்பங்களே. எனவே, அவசியமற்ற விருப்பங்களையெல்லாம் மக்கள் கட்டுப்படுத்தி, இன்றியமையாதனவற்றைமட்டும் பயன்படுத்தி, நிலையான மன நிறைவைப் பெறவேண்டும். மேற்கத்திய நாடுகள் ஆடம்பர வாழ்க்கையில் மோகம் கொண்டு ஏராளமான பொருள்களை இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்து மனிதனின் ஆசாபாசங்களைத் தூண்டி விட்டதை எண்ணி மனம் நொந்தார். 'உயர்ந்த உள்ளமும் எளிமையான வாழ்வும்தான்' அவரது சித்தாந்தம். மனிதன் தன் ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்துவதிலேயே மன அமைதியும் நிறைவும் கொள்ள முடியும் என்பது அவரது எண்ணமும் வாழ்க்கை முறையும் ஆகும்.

உற்பத்தித்துறையில் பேராலைகளை நிறுவி, இயந்திரங்களைப் பயன்படுத்திப் பெருமளவில் பொருள்களை உற்பத்தி செய்யும் முறையை காந்தி ஏற்றுக்கொள்ளவில்லை. இம் முறையே மனிதனின் ஆசாபாசங்களை அதிகரிக்கின்றது எனக் கருதினர். நவீன உற்பத்தி முறையினால் தோன்றியுள்ள நாகரிக வாழ்க்கையில் ஏமாற்றமும், பலாத்காரமும் பூசல்களுமே காணப்படுகின்றன. எனவே, பேரளவில் இயந்திரங்களைப் புகுத்துவதை விரும்பாத காந்தி, இயன்றவரை அவற்றின் பிரயோகத்தைக் குறைத்துக் கொண்டு மக்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டுமெனக் கருதினர்.

தொழில்களைப் பரவலாக்கல்

தொழில்கள் ஒருசில இடங்களிலும் ஒருசிலரிடமும் குவிந்துவிட்டால், மக்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்து விடுமெனக் கருதினார் காந்தி. அதோடு, எல்லா இடங்களுக்கும் வேண்டிய பொருள்கள் எளிதில் கிடைக்கா; மக்கள் அவதிப்படுவர். எனவே, அந்தந்த இடத்திற்குத் தேவைப்படும் பொருள்களை ஆங்காங்கே உற்பத்தி செய்து சுயதேவையை மக்கள் தாங்களாகவே நிறைவேற்றிக்கொள்ளவேண்டுமெனக் கருதினார். அப்போதுதான் மக்களின் பண்புகளெல்லாம் பேணப்படும். எனவே, குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் காந்தி விரும்பினார் எனலாம். சிறு அளவில் அமைக்க முடியாத கனரகத் தொழில்களை அவர் வெறுக்கவில்லை. ஆனால், அத் தொழில்களால் குடிசைத் தொழில்கள் நசித்துவிடக் கூடாதென்றே விரும்பினார்

பொறுப்புணர்ச்சி

மக்களிடையே பெருமளவில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருந்தால், முதலாளிகள், கூலிகள் என்ற பாகுபாடு தோன்றி, சமுதாயப் புரட்சியே ஏற்பட்டுவிடலாம். எனவே, புரட்சியை விரும்பாத காந்தி முதலாளிகளுக்குத் தரும் வேண்டுகோள் ஒன்றுண்டு. அதாவது, முதலாளிகள் அடைந்துள்ள சொத்தனைத்தும் பிறரின் உழைப்பைக் கொண்டதென்பதை அவர்கள் உணரவேண்டும். சமூகச் சொத்தனைத்துக்கும் அவர்கள் பாதுகாவலர்களாக உள்ளனர். எனவே, அச் சொத்துகளைத் தங்களுக்காகமட்டும் பயன்படுத்தாமல் பிறருடைய நலனுக்காகவும் அவர்கள் பயன்படுத்தவேண்டும். இவ்வாறு பொறுப்புடன் அவர்கள் நடந்துகொண்டால்தான் ஏழை எளியவர்களின் நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பெறுவர். செல்வர்களும் ஏழைகளும் ஒன்றுபட்டு எவ்விதப் பிணக்குமின்றி ஒற்றுமையாயும் சுமூகமாயும் வாழ முடியும். அப்போது எவ்விதச் சமூகப் புரட்சியும் ஏற்படாது. இவ்வாறு கூறிய காந்தியடிகள் முதலாளிகளின் செல்வத்தையெல்லாம் பறிமுதல் செய்யக் கூடாதென வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது.

காந்தியின் பொருளாதாரத் தத்துவத்தின் சாரம் வருமாறு: வறுமையே மக்களின் பண்பையும் ஒழுக்கத்தையும் கெடுக்கும் கொடிய நோய். அதே சமயம், வாழ்க்கையில் எல்லாவற்றையும் அனுபவிக்க விரும்பி, மேலும் சம்பாதிக்க விரும்புவதும் நன்றன்று. செல்வம் பெருகப் பெருகச் செருக்கு ஏற்படும். செல்வர்களுக்கும் வறியோருக்குமிடையே மனக்கசப்பு, பூசல் தோன்றி புரட்சி ஏற்படக் கூடும். எனவே, ஒவ்வொருவரும் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவற்றை மட்டும் நாட வேண்டும். வசதியையும் ஆடம்பரத்தையும் குறைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாசையே

ஏற்பாடதவாறு மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது அவசியம். உழைப்பு என்பது புனிதமானது; உயர்வானதும் கூட. எனவே, அனைவரும் உழைக்க வேண்டும். உழைப்பை மிச்சம் பண்ணக் கூடிய வழிவகைகளெல்லாம் மனிதப் பண்பையும் ஒழுக்கத்தையும் கெடுத்துவிடும்; எனவே, அவற்றைக் கூடுமானவரை குறைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன் நற்பண்புகளை யெல்லாம் வளர்க்கக் கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். இதற்கு அரசாங்கத்தை நம்பக் கூடாது. ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய அனைத்தையும் இயன்றவரை தானே தேடிக்கொள்ள வேண்டும். கிராமங்களே அரசியல், பொருளாதார அமைப்பு களுக்கு அடித்தளங்கள். அவற்றின் அமைப்பையும் வாழ்க்கை முறையையும் பொறுத்தே நாட்டின் அமைப்பும் வாழ்வும் அமையும்.

காந்தியின் பொருளாதார அமைப்பு

மேற் கூறிய பொருளாதாரச் சித்தாந்தத்தின் அடிப்படையில் காந்தியடிகள் தமது பொருளாதார அமைப்புமுறையை வகுத்தார். பல்வேறு பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் புனரமைப்புத் திட்டங்களையும் கூறினார். நாட்டின் வறுமையை விரட்டியடிக்க, நாட்டின் அடித்தளமான கிராமங்களிலுள்ள வறுமையை ஒழித்துக் கட்ட வேண்டும். இதற்குக் கிராமங்களைப் புதிய அடிப்படையில் உருவாக்க வேண்டும். கிராம மக்கள் அனைவரும் ஒருவருக் கொருவர் உதவிசெய்யும் வகையில் தொழில் அமையவேண்டும். கிராமத் தொழில்களும் கதர்த் தொழிலும் அபிவிருத்தியாகும் வகை யில் கிராமவாசிகள் ஒத்துழைக்க வேண்டும். ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவுள்ளதாக அமைய வேண்டுமாயின், கிராமத் தொழில்கள் அவசியம். அதோடு, ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகள், மருத்துவ மனை, இறைவழிக்கூடம் இருக்கவேண்டும். காந்தி எழுதிய கட்டுரை களிலெல்லாம் 'கைராட்டையே ஆயுதம், கதராடையே சோபிதம்' என்ற பல்லவியை நாம் காணலாம். கிராமவாசிகள் ஓய்வுநேரத்தை வீணாக்காமல், பயனுள்ள வகையில் கழிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தும் சின்னமாகக் கைராட்டை மதிக்கப்பட வேண்டு மென்றார்.

கிராமத்தொழில் இயக்கத்தைத் தொடங்கிய காந்தி, எல்லா கிராமங்களிலும் பலவகையான குடிசைத் தொழில்கள் வளரவேண்டு மென வலியுறுத்தினார். பாய், கூடை பின்னல், சர்க்கரை, வெல்லம் செய்தல், எண்ணெய் தயாரித்தல், தோல் பதனிடல், தேனி வளர்த் தல் போன்ற தொழில்கள் கிராமங்களில் விரிவடைய வேண்டும். இத் தொழில்களை வளர்ப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப

உதவியையும் அமைக்கின்ற முறையையும் எடுத்துக் கூறும் பணியையும் புரிவதற்காக அகில இந்திய நெசவாளர் சங்கத்தையும், அகில இந்தியக் கிராமத் தொழில் சங்கத்தையும் காந்தி உருவாக்கினார். நாட்டுப்பற்றுள்ள அனைவரும் கதராடையையே அணிய வேண்டுமென உத்தரவிட்டார். இவை தவிர, கிராமங்களனைத்தும் எளிமையாயும் அழகாயும் அமைய வேண்டும் என்றும், ஒவ்வொரு கிராமத்தின் விவகாரங்களைக் கவனிக்க கிராமப் பஞ்சாயத்து அவசியமென்றும் வலியுறுத்தினார். கிராமங்களின் முதுகெலும்பாக உள்ள பயிர்த்தொழில் முன்னேறினால்தான் வறுமை நீங்குமென்றார். அக்காலத்திலிருந்த தீண்டாமைப் பழக்கம் இறைவனுக்கும் மனிதனுக்கும் விரோதமாக இழைக்கப்படும் பாவச் செயலெனப் பழித்துரைத்தார். இந்து மதத்தின் உயிர்நாடியையே ஒழித்துக் கட்டும் தீச்செயலென்றார். தீண்டாமையே இந்துமதம் என்றால், அம் மதமே விரைவில் ஒழியட்டுமென இறைவனை மன்றாடினார்.

காபி, தேயிலை, மது அருந்தும் பழக்கத்தைப் பயங்கரமான விளைவுகளுடையதாகக் கருதினார். இவற்றை அருந்துவதால் உடல் நலம் மட்டுமன்றி, பணமும் வீணாகிறது. குடிப்பழக்கமுடையவன் தாய், தங்கை, மனைவி ஆகியோரின் வேறுபாட்டைக் கூடத் தெரிந்துகொள்ள இயலாமல் மயங்கிவிடுகிறான். பல பாவச் செயல்களைப் புரியத் துணிந்து விடுகிறான். குடும்பத்தை நடுத்தெருவில் நிறுத்திவிடுகிறான். குடிப் பழக்கத்தை வெறுத்து ஒதுக்கிய காந்தி உடல் நலத்திற்காகக் குடிக்கவேண்டிய அவசிய நிலையை உணர்ந்தார். எனினும் குடிப்பழக்கம் பாவச் செயல் என்றே பொதுவாகக் கருதினார். இந்தியா ஆயிரக்கணக்கான குடிகாரர்களைக் கொண்டிருப்பதைவிட பிச்சைக்கார நாடாகத் திகழ்வதேமேல் எனக் கூறி, குடிப்பழக்கத்தை மிருகத்தனமானதெனக் கூறினார்.

காந்தியும் மார்க்சும்

காந்தி பலாத்காரத்தை விரும்பாத ஒரு பொதுவுடைமைவாதியெனப் பலர் கருதுவர். அவருக்குப் பல பொதுவுடைமை நண்பர்களும் சோஷியலிச நண்பர்களும் இருந்தனர். அவர்களிடம் பேசும்போதெல்லாம் தன்னை ஒரு சிறந்த சமதர்மவாதியாகவோ பொதுவுடைமைவாதியாகவோ கூறிக்கொள்வதில் பெருமைப்பட்டார். கார்ல்மார்க்ஸைப்போலவே காந்தியும் சமுதாயத்திலுள்ள ஏழை எளியவர்கள், பாமரர், கடுந்துயர்பட்டோர், இழிவாகக் கருதப்பட்டோர் ஆகியோரின் உயர்வுக்காகப் பாடுபட்டார். இருவருமே சமுதாயச் சொத்தில் ஏழை எளியவர்களும் பங்குபெற வேண்டுமென வாதித்தனர். எனினும் சோஷியலிச சமுதாயத்தை உருவாக்க எண்ணிய மார்க்ஸ் பலாத்காரப் புரட்சியைக் கருவி

யாகக் கொண்டார்; ஆனால், காந்தியோ அன்பு வழியையும் அஹிம்சை என்னும் ஆயுதத்தையும் கையாண்டார். மேலும், மார்க்ஸ் வர்க்கப்போர், பாட்டாளிகளின் வர்க்கப்போர், பாட்டாளி களின் சர்வாதிகாரம், ஆக்க சக்திகளையெல்லாம் தேசியமயமாக்கு தல் ஆகியவற்றில் நம்பிக்கைக் கொண்டவர். காந்தியோ, தொழில் களையெல்லாம் பரவலாக்கி, முதலாளிகள் தங்கள் கடமைகளை யுணர்ந்து நல்ல வழியில் செயல்படவேண்டுமென விரும்பினார். சுருக்கமாகக் கூறவேண்டுமாயின் இலட்சிய சமுதாயத்தை உருவாக்குவதையே காந்தி குறிக்கோளாகக் கொண்டார்.

மேற்கத்திய நாட்டறிஞர்கள் விரும்பிய சோஷியலிசத்தையோ, பொதுவுடைமையையோ காந்தியடிகள் நாடவில்லை. ரஷியாவி லுள்ள பொதுவுடைமை அமைப்பு இந்தியாவிற்கு ஏற்றதல்ல என்றார். பலாத்காரமின்றி முதலாளிகள், தொழிலாளிகள், நிலக் கிழார், நிலம் உழுவோர் ஆகியோர் அனைவரும் ஒன்றுபட்டு உரு வாக்கக்கூடிய சோஷியலிசத்தையோ பொதுவுடைமையையோ தான் விரும்பினார். அவர் விரும்பிய சோஷியலிசம் மனிதனின் சுதந்திர உரிமையை ஆதாரமாகக்கொண்டது. ஏனைய வகைகளோ மனிதனின் சுதந்திரத்தைப் பறிப்பதில் மோகம் கொண்டவை.

'சர்வோதய இயக்கம்'

ரஸ்கின் வரைந்த 'கடைசிநாள் வரை' (Until this last) என்னும் நூல்தான் காந்தியின் வாழ்க்கைமுறையை முற்றிலும் மாற்றியதென்பர். அந்நூலை காந்தியே குஜராத்தில் மொழி பெயர்த்து 'சர்வோதயம்' என்னும் தலைப்புக் கொடுத்தார். சர்வோ தயம் என்றால், அனைவருக்கும் நலம் என்று பொருள். எல்லாரும் நலமுடன் இருந்தால்தான் ஒவ்வொருவரும் நலமுடன் வாழமுடியும் என்று நம்பினார். சர்வோதயம் என்றால், தூய்மையையும் உண்மை யையும் அடிப்படையாகக்கொண்ட மக்களாட்சி என விரித்துரைத் தார் காந்தி. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் உள்நாட்டுப் பொருள்களையே பயன்படுத்தவேண்டும். உண்மையை வழிகாட்டி யாகக் கொள்ளவேண்டும். கிராமத் தொழில்களையே அடிப்படை யாகக் கொண்டு நாட்டின் பொருளாதாரம் அமையவேண்டும். ஆலைத் தொழில்கள் மக்களின் எளிமையையும் உள்ளப் பண்பையும் கெடுத்துவிடும். எனவே, அவைகளைக் கூடுமானவரை குறைத்துக் கொள்ளவேண்டும். அத் தொழில்களைத் தேசியமாக்கிச் சமுதாயக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். மக்களிடையே வருமான ஏற்றத்தாழ்வின்றி, அனைவரும் சகோதரர்கள்போல் நடந்துகொள்ளவேண்டும். எந்த உயிரினத்திற்கும் தீங்கு இழைக்கக்கூடாது. வறுமை, சோம்பல், பயம், நோய் தொடி

ஆகிய அனைத்தையும் அகற்றவேண்டும். இவ்விதச் சர்வோதய சமுதாயத்தை உருவாக்கச் சர்வோதய நம்பிக்கைகொண்ட சமூக சேவை செய்வோர் தேவை. அவர்கள் அனைவரும் பாரபட்சமின்றி எல்லாரிடமும் அன்பாய்ப் பழகவேண்டும். எனவே, சர்வோதயம் என்பது மனிதன் வாழவேண்டிய வழிமுறைகளைக் கொண்ட சித்தாந்தம் எனலாம்.

மதிப்புரை

காந்தியின் பொருளாதாரம் நடைமுறைப் பொருளாதாரத்தினின்று முற்றிலும் வேறுபட்டது என்பது தெளிவு. காந்தியப் பொருளாதாரத்தில் நடைமுறைப் பொருளாதாரக் கோட்பாடுகளையோ கொள்கைகளையோ காணமுடியாது. காரணம், காந்தியடிகள் பொருளாதார இயலைக் கற்றதில்லை. ஆடம் ஸ்மித், ஆல்பிரட் மார்ஷல், கெயின்ஸ் ஆகியோரின் கருத்துகளை அறியாதவர். எனவே, பொருளாதாரப் பரம்பரையில் காந்திக்கு இடமில்லை.

காந்தியின் பொருளாதாரக் கருத்துகளை மதிப்பிடல் எளிதன்று. அவரது அடிப்படைத் தத்துவங்களான எளிமை, அஹிம்சை, சத்தியம், ஒழுக்கம் ஆகியவற்றைக்கொண்ட வாழ்க்கை முறையை நாம் ஏற்றுக்கொண்டால் அவரது கருத்துகளையும் ஒப்புக்கொள்ள வேண்டும். நவீனப் பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து நோக்கினால் அவரது கருத்துகள் பத்தாம்பசலித்தனமானவையாய்க் காட்சி அளிக்கும். பொது நிதியியல், உலக வாணிபம், பொருளாதாரத் திட்டம், பணமுறை போன்ற தற்காலப் பிரச்சினைகள் எதையும் காந்தி ஆராயவில்லை. காந்தியப் பொருளாதாரத்தை எந்த நாட்டிலும் காணமுடியாது. மக்களின் மனத்தையெல்லாம் மாற்றி, அன்பு முறையில் சத்தியம், அஹிம்சை என்னும் தத்துவங்களைக் கொண்டு ஓர் இலட்சியப் பொருளாதார அமைப்பை உருவாக்க எண்ணினர் காந்தி.

காந்தியப் பொருளாதாரத்திற்கும் சோஷியலிசத்திற்குமுள்ள தொடர்பு விசித்திரமானதாகும். தான் ஒரு சமதர்மவாதி என்பதை காந்தியே ஒப்புக்கொண்டார். ஆனால், அவரது சர்வோதய இலட்சியம் நமது பாரதத்தின் பழங்காலப் பொதுவாழ்வையே பிரதிபலிக்கிறது. இன்றுள்ள சமதர்ம அமைப்பைக்கொண்டு நோக்குமிடத்து அவரை ஒரு சமதர்மவாதியாக ஏற்பதற்கில்லை. தனியார் சொத்துரிமையை அவர் எதிர்க்கவில்லை. மாறாக, முதலாளிகள் அனைவரும் பொதுச்சொத்தின் பாதுகாவலர்கள் என்றமுறையில்

தொழிலாளரின் நன்மைக்காகப் பாடுபடவேண்டுமென்கிறார். நமது நாட்டின் சமதர்மவாதிகளான ஜெ. பி. கிருபளானி, ஜெய்பிரகாஷ் நாராயண், லோகியா முதலியோர் காந்தி வகுத்த இலட்சிய சோஷியலிசத்தை அப்படியே ஏற்றுக்கொண்டனர். மார்க்ஸிய சோஷியலிசம் மேலைநாடுகளுக்கேயன்றி, இந்தியாவிற்கேற்றதல்ல என்கின்றனர். சமதர்மத் தத்துவத்தையும் காந்தியத்தையும் இணைப்பதே பிரஜா சோஷியலிசம் என்றனர்.

முடிவுரை

இந்தியப் பொருளாதார அமைப்பில் காந்தியின் கருத்துகளுக்கும் தத்துவங்களுக்கும் அவ்வளவாக இடமில்லையென்றே சொல்லவேண்டும். காந்தியடிகள் மாபெரும் அரசியல் தலைவர், நம் பாரதத்தின் தந்தை. ஆனால், பொருளாதார ஞானி அல்லர். எனவே, நமது பொருளாதாரக் கொள்கைகளில் காந்தியின் கருத்துகளுக்குத் திட்டத்தில் இடம் கொடுக்கவில்லை. கிராமங்களனைத்தும் சுயநிறைவுள்ளவைகளாக மாறவேண்டுமென விரும்பிய காந்தி, அதற்குக் கிராம மக்களே ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டுமென்றார். 'ஆனால், நமது திட்டத்தின்கீழ்ச் செயல்படும் சமுதாய அபிவிருத்தித் திட்டம் பிறநாட்டு மூலதனத்தையும் பயன்படுத்துகிறது மேலும், இன்றைய அரசாங்கம் ஓரளவு கைத்தறிக்கும் கதர்த்தொழிலுக்கும் முக்கியத்துவம் கொடுத்துவருகிறது. எனினும், வேலையின்மையை அகற்றுவதற்கும் அரசியல் நோக்கத்திற்காகவுமே இத் தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

BIBLIOGRAPHY

1. Alexander Gray : The Development of Economic Doctrine
2. Alexander Gray : Socialist Tradition
3. J. F. Bell : A History of Economic Thought
4. C. D. H. Cole : What Markx Really Meant
5. Dudley Dillard : The Economics of John Maynard Keynes
6. Edwin Cannan : Review of Economic Theory
7. Eric Roll : History of Economic Thought
8. Gide and Rist : A History of Economic Doctrines
9. P. K. Gopalakrishnan : Development of Economic Ideas in India
10. L. H. Haney : History of Economic Thought
11. A. H. Hansen : A Guide to Keynes
12. Hearnshaw : A Survey of Socialism
13. Heckscher : Mercantilism
14. R. L. Heilbroner : The worldly Philosophers
15. E. Heimann : History of Economic Doctrines
16. Jocob viner : Studies in The Theory of International Trade
17. James Bonar : Malthus and His work
18. Klein : The Keynesian Revolution
19. J. C. Kumarappa : Gandhian Economic Thought
20. R. W. Meek : Tho Economics of Physiocracy
21. A. E. Monroe : Early Economic Thought
22. P. C. Newman : The Development of Economic Thought
23. A. C. Pigou : Memorials of Alfred Marshall
24. K. V. Rangaswami Iyengar : Aspects of Ancient Indian Economic Thought
25. Robert Lekachman : A History of Economic Ideas
26. Schumpeter : History of Economic Analysis
27. Seligman : Main Currents in Modern conomies
28. K. T. Shaw : Ancient Foundations of Economic in India
29. Spiegel : The Development of Economic Thought
30. O. H. Tayler : A History of Economic Thought.

கலைச் சொற்கள்

(ஆங்கிலம் — தமிழ்)

A

Abstinence theory	—	துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு
Acceleration principle	—	வேக வளர்ச்சி விதி
Accumulation of capital	—	முதல் திரட்சி
Agricultural school	—	விவசாயப் பள்ளி
Applied economics	—	வினைவியல் பொருளாதாரம்
Arithamatic ratio	—	கூட்டல் விகிதம்
Associative socialists	—	கூட்டுச் சங்க சோஷியலிஸ்டுகள்
Assumption	—	எடு கோள்
Austrian school	—	ஆஸ்திரியப் பள்ளி

B

Bank rate	—	வங்கி விகிதம்
Birth rate	—	பிறப்பு விகிதம்
Bounties	—	மானியம்
Bourgeoisie	—	முதலாளி வர்க்கத்தினர்
Bullionism	—	பொன் வாதம்
Bullionists	—	பொன் வாதிகள்
Bussiness cycle	—	வியாபாரச் சகடம்
Buyers' price	—	வாங்குவோர் விலை

C

Canons of taxation	—	வரி விதிப்பு விதிகள்
Capital	—	முதல்
Capitlism	—	முதலாளித்துவம்
Capital goods	—	முதற் கருவிகள்

Capital levy — மூலதன வரி
Central planning — மையத் திட்டம்
Cheap money — மலிவான பணம்
Cheap money policy — மலிவான பணக்கொள்கை
Circulating capital — சுழல் முதல்
Circulation of wealth — செல்வ ஓட்டம்
City state — நகராட்சி
Classical economics — தொன்மைப் பொருளாதாரம்
Classical economists — தொன்மைப் பொருளாதார அறிஞர்கள்
Class war — வர்க்கப் போர்
Colbertism — கால்பர்ட்டிசம்
Collectivism — பொதுவுரிமை
Commercial capitalism — வணிக முதலாளித்துவம்
Cnmmercial regulation — வணிகக் கட்டுப்பாடு
Commodity — பண்டம்
Communist Manifesto — கம்யூனிசப் பிரகடனம்
Communism — பொதுவுடைமை
Consumer — நுகர்வோர்
Consumer's surplus — நுகர்வோர் உபரி
Consumption — நுகர்ச்சி
Consumption goods — நுகர்ச்சிப் பண்டங்கள்
Constant capital — மாறுத முதல்
Consumption expenditure — நுகர்வுச் செலவு
Consumption schedule — நுகர்வுப் பட்டியல்
Conventional economics — சம்பிரதாயப் பொருளாதாரம்
Corn laws — தானியச் சட்டங்கள்
Corporation — கார்ப்பரேஷன்
Cost of production — உற்பத்திச் செலவு
Cost of production theory — உற்பத்திச்செலவுக் கோட்பாடு
Customs duty — சுங்கவரி

D

Dear money policy — கிராக்கிப் பணக் கொள்கை
Death rate — இறப்பு விகிதம்
Decentralisation — தொழில் பரவலாக்கல்
Deductive method — பகுத்தறிமுறை
Deficit financing — பற்றுக்குறை நிதியாக்கம்
Depression — மந்தம்

Dictatorship of proletariat — பாட்டாளிகளின் ஏகாதிபத்தியம்
Distribution — பகிர்வு
Division of labour — வேலைப் பகுப்பு
Drain theory — சுரண்டல் கொள்கை
Dynamic economics — சலனப் பொருளாதாரம்

E

Economics — சிக்கனங்கள்
Economic crisis — பொருளாதாரச் சீர்கேடு
Economic Development — பொருளாதார வளர்ச்சி
Economic history — பொருளாதார வரலாறு
Economic Journal — பொருளாதார இதழ்
Economic liberty — பொருளாதாரச் சுதந்திரம்
Economic man — பொருளாதார மனிதன்
Economic principles — பொருளாதாரத் தத்துவங்கள்
Economic rent — பொருளாதார வாரம்
Economic systems — பொருளாதார அமைப்பு முறைகள்
Economie table — பொருளாதாரப் பட்டியல்
Economic welfare — பொருளாதார நலன்
Effective demand — வலுவான தேவை
Elasticity of demand — தேவை நெகிழ்ச்சி
Entrepreneur — தொழில் முயல்வோர்
Equilibrium — சமநிலை
Equilibrium Economics — சமநிலைப் பொருளாதாரம்
Exchange bank — பரிவர்த்தனை வங்கி
Exploitation — சுரண்டல்
Exploitation theory — சுரண்டல் கோட்பாடு
External economics — புறச்சிக்கனங்கள்

F

Fabian society — ஃபேபியன் சங்கம்
Fabian socialism — ஃபேபியன் சோஷியலிசம்
Fair price — நியாய விலை
Favourable balance of trade — வணிக மிச்சம்
Feudal system — நிலமானிய முறை
Financial reform — நிதிச் சீர்திருத்தம்
Fiscal policy — நிதிக் கொள்கை

Fixed capital — நிலை முதல்
Forced labour — கட்டாய வேலை
Forced saving — கட்டாயச் சேமிப்பு
Foreign trade — வெளி நாட்டு வாணிபம்
Form utility — வடிவப் பயன்
Free competition — சுதந்திரப் போட்டி
Free goods — இலவசப் பொருள்கள்
Freedom of contract — ஒப்பந்த உரிமை
Free Trade — சுதந்திர வாணிபம்
Full employment — வேலை நிறைவு

G

General strike — பொது வேலை நிறுத்தம்
General theory — பொதுக் கோட்பாடு
Geometrical ratio — பெருக்கல் விகிதம்
Goods — பொருள்கள்
Great depression — பெரும் பொருளாதார மந்தம்
Growth economics — வளர்ச்சிப் பொருளாதாரம்
Guild socialism — கில்டு சோஷியலிசம்

H

Historical economics — வரலாற்று வாதப் பொருளாதாரம்
Historical interpretation — வரலாற்று முறை விளக்கம்
Historical method — வரலாற்று முறை
Historical school — வரலாற்று வாதப் பள்ளி

I

Imperfect competition — நிறை குறைந்த போட்டி
Imperialism — ஏகாதிபத்தியம்
Income motive — வருவாய் நோக்கம்
Individualist — தனியுரிமை வாதி
Individualism — தனியுரிமை
Inductive method — தொகுத்தறி முறை
Industrial capitalism — தொழில் முதலாளித்துவம்
Industrial fluctuation — தொழில் ஏற்ற இறக்கம்
Industrial Reserve Army — வேலையில்லாதோர் படை
Inheritance — வாரிசுரிமை
Institutional Economics — அமைப்பு வாதப் பொருளாதாரம்

Instruments of Production	—	பொருளாக்கக் கருவிகள்
Internal Economics	—	அகச் சிக்கனங்கள்
Internal Trade	—	உள் நாட்டு வணிகம்
International Economics	—	பன்னாட்டுப் பொருளாதாரம்
International Monetary Funds	—	பன்னாட்டுப் பண நிதி
International Trade	—	பன்னாட்டு வாணிபம்
Investment	—	முதலீடு
Investment Multiplier	—	முதலீட்டுப் பெருக்கி
Invisible hand	—	புலனாகாக்கரம்

J

Just Price	—	நியாய விலை

K

Keynesian Revelution	—	கெயின்சின் புரட்சி

L

Labour	—	உழைப்பு
Labour Party	—	தொழிற் கட்சி
Labour Power	—	உழைப்புச் சக்தி
Labour time	—	உழைப்பு நேரம்
Labour theory of value	—	உழைப்பின் மதிப்புக்கோட்பாடு
Labour Welfare	—	தொழிலாளர் நலன்
Laissez-Fair	—	தலையிடாக் கொள்கை
Law Diminishing Returns	—	குறைந்து செல் விளைவு விதி
Law of substitution	—	பதிலீட்டு விதி
Liberalism	—	சுதந்திர வாதம்
Liberal school	—	சுதந்திரவாதப் பள்ளி
Liquidity preference	—	ரொக்க விருப்பம்
Long preiod	—	நெடுங்காலம்

M

Macro economics	—	அண்ட நிலைப் பொருளாதாரம்
Managed currency	—	நிருவகிக்கப்படும் செலாவணி முறை
Manufactures	—	பொறி செய் பொருள்கள்
Margin	—	இறுதி நிலை
Marginal utillity	—	இறுதி நிலைப் பயன்
Marginal efficiency of capital	—	முதலின் இறுதி நிலைத் திறன்

Market forces — சந்தைச் சக்திகள்
Market price — சந்தை விலை
Marginalism — இறுதி நிலை வாதம்
Marginalists — இறுதிநிலை வாதிகள்
Marginal pairy — இறுதிநிலை இணைகள்
Marginal product — இறுதி நிலை உற்பத்தி
Marginal revolution — இறுதி நிலைப் புரட்சி
Market glut — பொருள்தேக்கம்
Mathematical economics — கணித வழிப் பொருளாதாரம்
Mathematical school — கணித வழிப் பள்ளி
Marxism — மார்க்ஸிஸம்
Mercantilism — வணிக வாதம்
Mercantilists — வணிக வாதிகள்
Micro economics — அணு நிலைப் பொருளாதாரம்
Monetary policy — பணக்கொள்கை
Money wage — பணக் கூலி
Money income — பண வருமானம்
Monopoly — சர்வாதீனம்
Moral Restraint — புலனடக்கம்

N

Nationalism — தேசிய வாதம்
Nationalist School — தேசிய வாதப் பள்ளி
National Consumption — தேசிய நுகர்ச்சி
National Expenditure — தேசிய செலவு
National Income — தேசிய வருமானம்
Naturalism — இயற்கைத்தன்மை
Natural Laws — இயற்கைச் சட்டங்கள்
Natural Order — இயற்கை நியதி
Natural Price — இயல்பான விலை
Natural Right — இயற்கையுரிமை
National Eqeitable Labour Exchange — தேசிய சம உழைப்புப் பறிமாற்றம்
National States — தேசிய அரசுகள்
National Policy — தேசியக் கொள்கை
National Income Analysis — தேசிய வருமானச் கணக்கு ஆய்வு
Navigation Acts — நாவாய்ச் சட்டங்கள்
Neo-Classicism — தொன்மைப் பொருளாதார மறுமலர்ச்சி
Neo-Malthusian — நவ மால்தஸ்

Neo-Mercantilism — புதிய வணிக வாதம்
Net Product — நிகர உற்பத்தி
Non-reproductive — மீண்டும் உற்பத்தி செய்ய இயலாத
Non-Violent Economy — அஹிம்சை வாதப் பொருளாதாரம்
Normal Profit — இயல்பான இலாபம்

O

Occupations — தொழில்கள்
Optimism — இன்ப நோக்கு
Optimists — இன்ப நோக்குடையோர்
Optimum theory of Population — உத்தம மக்கள் தொகைக் கோட்பாடு
Over-Production — மிதமிஞ்சிய உற்பத்தி

P

Paradox of Value — மதிப்பு முரண்பாடு
Per Capita Income — தலா வருமானம்
Perfect Competion — நிறைவுப் போட்டி
Pessimism — துன்ப நோக்கு
Pessimists — துன்ப நோக்குடையோர்
Phalanx — ஃபாலங்ஸ்
Physiocracy — இயற்கை வாதம்
Physiocrats — இயற்கை வாதிகள்
Place Utility — இடப் பயன்
Political Economy — அரசியல் பொருளாதாரம்
Poor Laws — இரவலர் சட்டங்கள்
Positive Checks — இயல்புத் தடைகள்
Practical Policies — நடைமுறைக் கொள்கைகள்
Precautionary motive — எச்சரிக்கை நோக்கம்
Preventive Checks — தவிர்ப்புத் தடைகள்
Prime Cost — முதன்மைச் செலவு
Principle of Concentration of Capital — முதல் குவிதல் தத்துவம்
Principle of Economics — பொருளாதாரத் தத்துவங்கள்
Principle of Population — மக்கள் தொகைத் தத்துவம்
Private Property — தனியார் சொத்துரிமை
Producer's goods — ஆக்கப் பொருள்கள்

Productive labour — பயன் தரும் உழைப்பு
Productive power — ஆக்க சக்தி
Profit — இலாபம்
Prohibition — தடை உத்தரவு
Proletariat — பாட்டாளிகள்
Propensity to consume — நுகர்வு நாட்டம்
Protection — பாதுகாப்பு
Psychological school — உளவியல் வாதப் பள்ளி
Public debt — பொதுக் கடன்
Public finance — பொது நிதி
Pnblic utility — பொதுப் பயன்

Q

Quantity of Money — பண அளவு
Quantity theory of Money — பண அளவுக் கோட்பாடு
Quasi-rent — நிலையற்ற வாரம்

R

Raw material — கச்சாப் பொருள்
Real income — உண்மை வருமானம்
Real wage — உண்மைக் கூலி
Reformism — சீர்திருத்தவாதம்
Renaissance — மறுமலர்ச்சி
Rent — குத்தகை
Representative firm — மாதிரி நிறுவனம்
Restrictions — கட்டுப்பாடுகள்
Revenue — வருவாய்
Round about Process — சுற்று வழிமுறை

S

Say's Law of Market — ஸேயின் அங்காடி விதி
Scientific Socialism — அறிவியல் சோஷியலிசம்
Secular stagnation — நீண்ட காலத் தேக்கம்
Self-interest — தன்னலம்
Sellers' Price — விற்போர் விலை
Service — பணி
Short Period — குறுங்காலம்
Single tax system — ஒற்றை வரித் திட்டம்
Slavery — அடிமை முறை

Socialism	—	சோஷியலிசம்
Socially necessary labour	—	சமூக நலனுக்கு அவசியமான உழைப்பு
Social Security	—	சமூகப் பாதுகாப்பு
Social welfare	—	சமூக நலன்
Speculation	—	ஊக வணிகம்
Speculative motive	—	ஊக வணிக நோக்கம்
Standard of living	—	வாழ்க்கைத் தரம்
Static economics	—	அசலனப் பொருளாதாரம்
State Intervention	—	அரசாங்கத் தலையீடு
State socialism	—	அரசாங்க சோஷியலிசம்
Stationary State	—	தேக்க நிலை அரசு
Substitution	—	பதிலீடு
Subjective economics	—	உளவழிப் பொருளாதாரம்
Subjective factor	—	அகப் பண்பு
Subsistence theory of Wages	—	பிழைப்புக் கூலிக் கொள்கை
Supplementary Cost	—	துணைச் செலவு
Surplus value	—	உபரி மதிப்பு
Syndicalism	—	சிண்டிக்கலிசம்

T

Trade	—	வணிகம்
Transactive motive	—	அன்றாடச் செலவு நோக்கம்
Theory of Capital Accumulation	—	முதல் திரட்டும் கொள்கை
Theory of employment	—	வேலைக் கோட்பாடு
Theory of interest	—	வட்டிக் கோட்பாடு
Theory of Leisure Class	—	உல்லாச வகுப்பினர் கொள்கை
Theory of Population	—	மக்கள் தொகைக் கோட்பாடு
Theory of rent	—	குத்தகைக் கோட்பாடு
Theory of value	—	மதிப்புக் கோட்பாடு
Time utility	—	காலப்பயன்
Total utility	—	மொத்தப் பயன்பாடு

U

Under developed Countries	—	பின்தங்கிய நாடுகள்
Unemployment	—	வேலையின்மை
Uuproductive labour	—	பயன்தரா உழைப்பு

Utility — பயன்
Utilitarianism — பயன்வழிக் கொள்கை
Utopian socialism — கனவுலக சோஷியலிசம்

V

Value-in-use — பயன் மதிப்பு
Value-in-exchange — பரிவர்த்தனை மதிப்பு
Value determination — மதிப்பு நிருணயம்
Variable Capital — மாறும் முதல்
Valuntary saving — தன்னிச்சைச் சேமிப்பு

W

Wage Fund theory — கூலி நிதிக் கோட்பாடு
Welfare economics — நலப் பொருளாதாரம்
Welfare state — நலம் பேணும் அரசு
World Bank — உலக வங்கி